உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவசமயாசாரியராகிய

ஸ்ரீமத்

# மாணிக்கவாசகசுவாமிகள்

ஸ்ரீநடராஜன்முன்னிலையில்

திருவாய்மலர்ந்தருளிய

தமிழ்வேதமாகிய

# திருவாசகம்.

மூலமும்-உரையும்.

---

இஃது

நெ. முருகேசமுதலியாரவர்களிடம்

பாடம்கேட்டவாறு

பர். மாசிலாமணிமுதலியாரால்

ஒருவாறு உரையெழுதப்பட்டு,

சென்னை:

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1907

8-00

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அடியேன் கருத்து.

ஸ்ரீமத்-மணிக்கவாசக சுவாமிகள் திருவாய் மலர்ந்தருள, ஆநந்த நடராஜப்பெருமான் திருக்கரத்தாலெழுதப்பட்டுக் கருங்கல்மனத்தினையுங்கசிவுறச் செய்யுந் திருமுறையாகிய வேதசாரமான வித்திருவாசகமானது திராவிட வேதமென்பதுலகப்பிரசித்தம். இவ்வரிய நூலுக்குச் சிற்சிலவாண்டுகட்கு முந்தி யொருவர் பதவுரையியற்றி வெளியிட்டனர்; அப்பதவுரை சிறிது கடினமாயிருத்தலினாலும், சிற்சிலவிடங்களில் நேரே பொருள் கிரகிக்கக்கூடாமலிருத்தலினாலும், சிற்சிலவிடங்களிற் சாம்பிரதாயம் மாறுபட்டிருத்தலினாலும், அத்தகைய வழுக்களை யொருவாறு நீக்கி, தக்க வித்வசிரோன்மணிகளை யடுத்துப் பற்பல சந்தேகங்களை நிவர்த்திசெய்துகொண்டு அத்தகைய வித்வான்களுதவியினையே பெரும்பாலு மேற்று, சிவசுப்ரமணியர் திருவருட்பாங்கை முன்னிட்டு, அடியேனது சிற்றறிவுக் கெட்டியவளவு இவ்வுரை யெழுதத்துணிந்து முடிவு செய்யப்பெற்றேன். இதனை யச்சிடத்துணிந்து (7) ஏழு வருடங்களாகப் பற்பலவச்சேந்திரச்சாலைத்தலைவர்களாலு மின்றியமையாது நேர்ந்த விடையூறுகள் கணக்கற்றன. பின்னர், ஸ்ரீமத் - சிவசுப்பிரமணியசுவாமிகளருட்பேற்றலன்றி யிவ்வரிய நூலை யச்சிட்டு முடிவுபெறுதற்கரிதென்றறிக. இதன்றி, இவ்வரிய நூலிற்குச் சரியொற்றவுரை ஆக்கியோனேற்ற சுவாமிகள் இம்மண்ணின்மீது வந்துரைத்தாலொழிய, மற்றேனையோர்கள் செய்யும் உரை உரையல்லவென்று சரதமாய்ப் புகல்வேன். இதிலடியேனையறியாது நேர்ந்திருக்கும் சொற்பிழை, பொருட்பிழைகளிருக்கின் மன்னிக்கும்படி யடியார்கட்குத் தலைவணங்கி கேட்டுக்கொள்ளுகிறேன். பொன்னம்பலம் திருவடிவாழ்க.

அடிமைத் தொண்டு பூண்டொழுகும்,

பா. மாசிலாமணி.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்வேதமாகிய

# திருவாசகம்

## மூலமும் உரையும்.

### நூற்சிறப்பு.

நேரிசைவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
யல்லலறுத் தானந்த மாக்கியதே - யெல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்
றிருவா சகமென்னுந் தேன்.

(இதனது பதப்பொருள்)

எல்லை மருவா = (இத்துணைப்பெற்றியதென்னும்) வரையறுத்தலைப் பொருத, நெறி=மோட்சசாதன வழியை, அளிக்கும்=(நினைப்பவர்க்கு) எளிதிற் கொடுக்கும், வாதவூர்=திருவாதவூரின்கண் ணவதரித்தருளிய, எம் கோன்=எமது தலைவராகிய மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளிய, திருவாசகம் என்னும் தேன்=திருவாசகமென்று சொல்லப்படுந் தேனானது, தொல்லை=பழமையாகிய, இரும்=பெரிய, பிறவி=பிறவிகடோறும், சூழும்=வந்தடைகின்ற, தளை = ஆணவாதியமலபந்தங்களை, நீக்கி=சேதித்து, அல்லல்=அதனால்வருந் துன்பங்களையும், அறுத்து=அறவேயொழித்து, ஆனந்தம் ஆக்கியது = நிரதிசயானந்தத்தை யுண்டாக்கியது. (எ-று.)

(கருத்துரை.)

தன்னை நினைப்பவரது பிறவித்துன்பங்களை யறவே யொழிக்குந் திருவாதவூரி லவதரித்தருளிய, வாதவூரடிகளது திருவாய்மலரி னின்றெழுந்த திருவாசகமென்னுந் தேனானது, அனாதியாக வெம்மைப்பற்றி நின்ற, பிறவிக்கேது

வாகிய ஆணவாதிய பஞ்சபாசங்களையு, மவற்றாலுண்டாகுந் துன்பங்களையும், ஒருங்கே யொழித்து நிரதிசயானந்தத்தை யெமக்கு விளைவித்த தென்பதாம்.

(விசேடவுரை.)

திருவாசகமென்னுந் தேன், பிறவித்தளையைச் சேதித்து, அல்லலையறுத்து, ஆனந்தமாக்கியதென முடிக்க.

பிறவி யென்றது, தொல்லை யிரும்பிறவி என்றது, அனாதி செயற்கையானமைந்த, ஆணவாதியவைம்மலங் காரணமாக, வின்னகாலத்த திந்துணையளவினதென வரையறைப்படாது தொடர்ந்து வருதலின். தளை என்றது, அப்பிறவிக்குக் காரணமாகிய அவாமுதலியபந்தங்களை, இதனை, "அவாவென்பவெல்லாவுயிர்க்குமெஞ்ஞான்றுந் தவாப்பிறப்பீனும்வித்து" எனவும், "பூட்டியதளையோபொன்ற நசைத்தளை" எனவும் வருவனவற்றாற் காண்க. தளை யென்றது, சூழுந்தளை என்றது, கீழ்ச்சென்ற சனனங்கடோறு நின்ற விருவினைச் சேடங்கள் விடாதுதொடர்ந்துபற்றுதலை. அல்லலென்றது, அவ்வினை காரணமாக வருமின்பதுன்பங்களை, இதனை இன்ப நனிசெய் நல்வினையாலிறப்பி னிறந்தவுடம்பினிடைத், துன்பமதுசெய்தீயவினை தோன்றுமத்தீ வினைமாய்வின், முன்புசெயுநல்வினை வருமிம் முறையாலி ரண்டுமொறிவரு,மென்பவுலகி லொண்பகலு மிரவுமாறி வருதல்போல், என்றமேதாவியர் வசனத்தானுமுணர்க. ஆனந்தமாக்கியது என்றது, ஆத்மானந்தம், விஷயானந்தம், வித்யானந்தம், யோகானந்தம், அத்துவிதானந்தமென்னும் ஆனந்த பஞ்சகங்களினுஞ் சிறந்து, சிந்தையுமனனுஞ் செல்லா நிலைமைத்தாய் விளங்கும் மோட்சானந்தமாகிய நிரதிசயானந்தத்தை விளைவித்தலை.

எல்லை மருவாநெறி என்றதை, மேற்கண்டபடி திருவாதவூருக்கு விசேடணமாக்காது, தேனின் தொழிலாகக்கொண்டு, திருவாசகமென்னுந் தேனானது, தளையைச் சேதித்து, அல்லலையொழித்து ஆனந்தத்தை விளைவித்ததுமன்றி யெல்லை மருவாநெறியாகிய மோட்சசாதனத்தையுந் தருமென வியைப்பினுமமையும். எங்கோன் என்றது, மாணிக்கவாசகர் அறிவாற் சிவனே என்பது திண்ணமாதலானும், அன்றியும், சிவபெருமான், ஆனமகோடிகள் விதிவிலக்குகளையுணர்ந்தொழுகுவான்விரும்பியனுக்கிரகித்தவேதங்களோ யாவரும் ஒப்பப்பயிலும் சம்பிரதாய மின்மையின் அவ்வேதப்பொருளை யாவருமெளிதிலோதி யுணர்ந்துய்யுமாறு, திருவாசகமென்னுந் தமிழ்வேதத்தை யனுக்கிரகித்தவராதலானுமென்க. இதனைத் "தேவர்குறளுந்திருநான்மறைமுடிவும் மூவர்தமிழுமுனிமொழியுங் —கோவைத்திருவாசகமுந் திருமூலர்சொல்லு, மொருவாசகமென்றுணர்" என்னுந் திருவாக்கானும், வேதத்தினும் இத்திருவாசகமாகிய தமிழ் வேதமே சிறப்புடைத்தென்னலை, "திருவார் பெருந்துறைச்செழுமலர்க்குருந்தி, னீழல்வாயுண்ட நிகரிலானந்தத், தேன்றேக் கெறியுஞ்செய்யமாணிக்க, வாசகன் புகன்றமதுர வாசகம், யாவருமோது மியற்கைத் தாதலிற், பொற்கல நிகர்க்கும் பூசுரர் நான்மறை, மட்கல நிகர்க்கும் மதுரவாசக, மோதின் முத்தியுறுபயன், வேதமோதின் மெய்ப்பயனறமே என்பதானுமுணர்க.

வாசகமென்னுது — திருவாசகமென்றது, திருவாசகம், தமிழ்வேத முடிபாகிய வுபநிடத மென்றுயர்ந்தோராற் கொள்ளப்படுதலானும், அதனருமை நோக்கி சச்சிதானந்த ஸ்வரூபராகிய சிவபெருமானே தனது திருக்கரங்களாலெழுதிக்கைச்சாத்திடப்பெற்ற பெருமையையுடைய தாதலானும், அதனதுயர்வுதோன்ற திருவென்னும் அடை கொடுத்தோதினர். திரு=என்பது கண்டாரால் விரும்பப்படுந் தன்மை நோக்கத்தை. அதாவது, யாவனொருவன் யாதொரு பொருளைக்கண்டானோ, அக்கண்டவற்கு அப்பொருண் மேற்சென்ற விருப்பத்தோடே கூடிய வழகென்பது திரண்டபொருள். இதனை "திருவளர் தாமரை சீர்வளர்காவிகளீசர்தில்லை" யென்னுந் திருக்கோவையாரானுமுணர்க. தேன் என்றது, இனிமை நோக்கி என்க. மாணிக்கவாசகர் திருப்பெருந்துறையிற் குருந்தமர நிழலிலிருந்தனுபவித்த சிவானந்தப்பெருக்கானெழுந்தவாசகமாதலின், அச்சிறப்புதோன்றத் தேனென வுருவகித்துரைத்தார். தேனுக்குத் தளையறுக்குந் தொழில்வாய்த்தமை நோக்கி வியந்துரைத்தார் என்பதை, எ என்னும் வியப்பிடைச்சொல் விளக்கிநின்றது.

## நூற்சிறப்பு
முற்றிற்று

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# மாணிக்கவாசக சுவாமிகள்

அருளிச்செய்த

# திருவாசகம்.

## சிவபுராணம்.

சிவனதநாதிமுறைமையானபழமை.

அதாவது

சிவனது அருவநிலைமை கூறுதல்.

திருப்பெருந்துறையி லருளிச்செய்யப்பட்டது.

கலிவெண்பா.

திருச்சிற்றம்பலம்.

நமச்சிவாயவா அழ்கநாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதுமென்னெஞ்சி னீங்காதான்றாள் வாழ்க
கோகழியாண்ட குருமணி தன்றாள் வாழ்க
ஆகம மாகிநின் றண்ணிப் பான்றாள் வாழ்க
ஏகனநேக னிறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள்வெல்க
புறத்தார்க்குச்சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவாருண்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவாரோங்கு விக்குஞ்சீரோன்கழல்வெல்க
ஈசனடி போற்றியெந்தையடிபோற்றி
தேசனடி போற்றிசிவன் சேவடிபோற்றி
நேயத்தேநின்றநிமல னடிபோற்றி
மாயப்பிறப்பறுக்குமன்ன னடிபோற்றி
சீரார்பெருந்துறைநந்தேவ னடிபோற்றி

யாராதவின்பமருளு மலைபோற்றி
சிவனவனென்சிந்தையுணின்றவதனு
லவனருளாலேயவன்றாள்வணங்கிச்
சிந்தைமகிழச்சிவ புராணந்தன்னை
முந்தைவினைமுழுதுமோயவுரைப்பனியான்
கண்ணுதலான்றன்கருணைக்கண்காட்டவந்தெய்தி
யெண்ணுதற்கெட்டாவெழிலார்கழலிறைஞ்சி
விண்ணிறைந்துமண்ணிறைந்துமிக்காய்விளங்கொளியா
யெண்ணிறந்தெல்லையிலாதானேநின்பெருஞ்சீர்
பொல்லாவினையேன்புகழுமாறொன்றறியேன்
புல்லாகிப்பூடாய்ப்புழுவாய்மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாக் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்றவித்தாவரசங்கமத்து
ளெல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேனெம்பெருமான்
மெய்யேயுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றே
னுய்யவென்னுள்ளத்துளோங்கார மாய்நின்ற
மெய்யாவிமலாவிடைப்பாகாவேதங்க
ளையாவெனவோங்கியாழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாதணியாயியமானனாம் விமலா
பொய்யாயினவெல்லாம் போயகலவந்தருளி
மெய்ஞ்ஞானமாகிமிளிர்கின்ற மெய்ச்சுடரே
யெஞ்ஞானமில்லாதேனின் பப்பெருமானே
யஞ்ஞானந்தன்னைய கல்விக்கு நல்லறிவே
யாக்கமளவிறுதியில்லாயனைத் துலகு
மாக்குவாய்காப்பாயழிப்பாயருடருவாய்
போக்குவாயென்னைப்புகுவிப்பாய் நின்றொழும்பி
னாற்றத்தினேரியாய்சேயாய் நணியானே
மாற்றமனங்கழியநின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற்போலச்
சிறந்தடியார்சிந்தனையுட்டே னூறிநின்று
பிறந்தபிறப்பறுக்கு மெங்கள்பெருமா
னிறங்களோரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாயெம்பெருமான் வல் வினையேன்றன்னை

மறைந்திடமூடிய மாயவிருளை
யறம்பாவமென்னுமருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல்போர்த்தெங்கும்புழுவழுக்குமூடி
மலஞ்சோருமொன்பதுவாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச்செய்ய
விலங்குமனத்தால் விமலாவுனக்குக்
கலந்தவன்பாகிக் கசிந்துள்ளுருகு
நலந்தானிலாதசிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல்வந்தருளிநீள்கழல்கள் காட்டி
நாயிற்கடையாய்க்கிடந்த வடியேற்குத்
தாயிற்சிறந்ததயாவான தத்துவனே
மாசற்றசோதிமலர்ந்த மலர்ச்சுடரே
தேசனேதேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப்பாரிக்கு மாரியனே
நேசவருள்புரிந்துநெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராதுநின்ற பெருங்கருணைப் பேராறே
யாராவமுதேயளவிலாப் பெம்மானே
யோராதாருள்ளத்தொளிக்கு மொளியானே
நீராயுருக்கியென்னாருயிராய் நின்றானே
யின்பமுந்துன்பமுமில்லானே யுள்ளானே
யன்பருக்கன்பனேயாவையுமாயல்லையுமாஞ்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
யாதியனே யந்தநடுவாகி யல்லானே
யீர்த்தென்னையாட்கொண்டவெந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தி
னோக்கரியநோக்கே நுணுக்கரியநுண்ணுணர்வே
போக்கும்வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங்காவலனேகாண்பரிய பேரொளியே
யாற்றின்பவெள்ளமேயத்தாமிக்காய் நின்ற
தோற்றச்சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம்வையகத்தின் வெவ்வேறேவந்தறிவாந்
தேற்றனேதேற்றத்தெளிவேயென் சிந்தனையு
ளூற்றானவுண்ணாரமுதே யுடையானே
வேற்றுவிகாரவிடக்குடம்பினுட் கிடப்ப
வாற்றேனெம்மையாவரனே யோவென்றென்று

போற்றிப்புகழ்ந்திருந்துபொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்துவினைப்பிறவி சாராமே
கள்ளப்புலக்குரம்பைகட்டழிக்க வல்லானே
நள்ளிருளினட்டம்பயின்றாடு நாதனே
தில்லையுட்கூத்தனேதென்பாண்டி நாட்டானே
யல்லற்பிறவியறுப்பானே யோவென்று
சொல்லற்கரியானைச்சொல்லித் திருவடிகீழ்ச்
சொல்லிய பாட்டின்பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர்சிவபுரத்தினுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோருமேத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்.

(ப - ரை.) நமச்சிவாய வாழ்க=திருவைந்தெழுத்தும் வாழ்வதாக, நாதன்=அவ்வைந்தெழுத்தின் பொருளாய்விளங்கு மிறைவனது, தாள்=உபயசரணங்களும், வாழ்க=வாழ்வதாக, இமைபொழுதும்=ஓரிமையளவு காலமும், என்=அடியேனது, நெஞ்சில்=மனத்தினின்றும், நீங்காதான்=பிரியாதவனது, தாள்=திருவடிகள், வாழ்க=வாழ்வதாக, கோகழி=திருவாவடுதுறையி லெழுந்தருளி, ஆண்ட=அடியேனை ஆட்கொண்டருளிய, குருமணிதன்=ஆசார்யஸ்ரேஷ்டனது, தாள்=திருவடிகள், வாழ்க=வாழ்வதாக, ஆகமம்ஆகி=சிவாகமப்பொருளாய், நின்று=விளங்கி, அண்ணிப்பான்=(அச்சிவாகமமுறைமையி னருச்சிப்பவர்க்கு, அவர் நினைத்தவடிவா யெழுந்தருளி) உடனே அனுக்கிரகிப்பவனாகிய கடவளது, தாள்=திருவடிகள், வாழ்க=வாழ்வதாக, ஏகன்=ஒன்றாய் விளங்குபவனும், அநேகன்=பலவாய் விளங்குபவனும் ஆகிய, இறைவன்=கடவுளது, அடி=திருவடிகள், வாழ்க=வாழ்வதாக, வேகம்=(அடியேனை அநாதியாகத் தொடர்ந்துவரும்) ஆணவாதிய மல வீக்கத்தை, கெடுத்து=அறவே யொழித்து, ஆண்ட=(அடியேனை) ஆண்டருளிய, வேந்தன்=முழுமுதற்கடவுளது, அடி=திருவடிகள், வெல்க=வெற்றியடைக, பிறப்பு=எனது பிறவித்தளையை, அறுக்கும்=சேதிக்கின்ற, பிஞ்ஞகன்றன்=சடாபாரத்தையுடைய சிவபெருமானது, பெய்கழல்கள்=வீரகண்டையணிந்ததிருவடிகள், வெல்க=வெற்றியடைக, புறத்தார்க்கு = அன்பரல்லாதவர்க்கு, சேயோன்தன் = தூரமாயிருப்பவனது, பூம்=அழகிய, கழல்கள்=திருவடிகள், வெல்க=வெற்றியடைக, கரம்=இரண்டு கைகளையும், குவிவார்=சிரசின்மே லஞ்சலியாகவைத்து வணங்குமடியார்கள், உள்மகிழும்= (கண்டு) மனமகிழும்படியான, கோன்=இறைவனது, கழல்கள்=திருவடிகள், வெல்க=வெற்றியடைக, சிரம்=தமது தலையால், குவிவார்=வணங்கப்பட்ட மெய்யடியார்களை ஓங்குவிக்கும்=உயர்ந்த மோட்சபதவிலிருத்துகின்ற, சீரோன்=பெருமையையுடைய கடவுளது, கழல்=திருவடிகள், வெல்க=வெற்றியடைக, ஈசன்=பரமேஸ்வரனது, அடி=திருவடிகட்கு, போற்றி=தோத்திரம், எந்தை=எமதையனாகிய கடவுளது, அடி=

திருவடிகட்கு, போற்றி=தோத்திரம், தேசன்=ஜோதிஸ்வரூபனாகிய கடவுளது, அடி=திருவடிகட்கு, போற்றி=தோத்திரம், சிவன்=சிவபெருமானது, சேவடி=மலர்போலுஞ் செவந்த திருவடிகட்கு, போற்றி=தோத்திரம், நேயத்து=(அன்பராது) பத்தியாகியவலையிலேசிக்கி, நின்ற=நிலைபெற்றுநின்ற, நிமலன்=மலரகிதனாகியசிவபெருமானது, அடி=திருவடிகட்கு, போற்றி=தோத்திரம். மாயம்=மாயாகாரியமாகிய, பிறப்பு=பிறவிப்பிணியை, அறுக்கும்=கெடுக்கின்ற, மன்னன்=இறைவனது, அடி=திருவடிகட்கு, போற்றி=தோத்திரம், சீர்=சிறப்பு, ஆர்=பொருந்திய, பெருந்துறை=திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளும், நம்=நமது, தேவன்=கடவுளது, அடி=திருவடிகட்கு, போற்றி=தோத்திரம், ஆராத=(எக்காலத்தும்) தெவிட்டாத, இன்பம்=பேரின்பசுகத்தை, அருளும்=மெய்யன்பர்க்குதவுகின்ற, மலை=மலைபோலுங் கிருபையையுடைய கடவுளுக்கு, போற்றி=தோத்திரம், சிவன்=சிவபெருமானாகிய, அவன்=அப்பேரருளாளன், என்=அடியேனது, சிந்தையுள்—மனத்தின் கண், நின்ற அதனால்=நிலைபெற்றிருந்தமையால், அவன்=அக்கடவுளது, அருளால்=திருவருளினாலே, அவன்=அக்கடவுளின், தாள்=திருவடிகளை, வணங்கி=தொழுது, சிந்தை=அவனது திருவுள்ளம், மகிழ=உவக்கும்படி, சிவபுராணந் தன்னை=சிவனது நாதியான முறைமையை, முந்தை=கீழ்ச்சென்ற அனந்தசன் மங்கடோறு மனுபவித்தெஞ்சி நின்ற, வினைமுழுதும்=சஞ்சித பிராரத்தகன்மங்களனைத்தும், ஓய=விட்டொழியும்படி, யான்=அடியேன்=உரைப்பன்=சொல்வேன், கண்ணுதலான் தன்=நெற்றிக்கண்களையுடையோனாகியசிவபெருமானது=கருணை கண்=திருவருளாகியநேத்திரமானது, காட்ட=வழிகாட்ட, வந்து=அவ்வழியே வந்து, எய்தி=அடைந்து, எண்ணுதற்கு=(வாக்கினாற் சொல்வதற்கேயன்றி) மனத்தானினைத்தற்கும், எட்டா=முடியாத, எழிலார்=அழகுபொருந்திய, கழல், அவனது ஸ்ரீபாதங்களை இறைஞ்சி=வணங்கி, விண்=விண்ணுலக முழுவதும், நிறைந்து=வியாபித்து, மண்=மண்ணுலக முழுவதும், நிறைந்து=வியாபித்து (அவ்வளவிலடங்காமல்) மிக்காய்=(அவைகட்கும்) மேற்பட்டு நின்றவனே, விளங்கு=சரிப்பின்றி விளங்குகின்ற, ஒளியாய்=அக்கினிப்பிழம்பாய் நின்றவனே, எண்=அளவைகளை, இறந்து=கடந்து, எல்லை இலாதானே=வரம்பற்றிருப்பவனே, நின்=உன்னுடைய, பெரும் சீர்=மிகுந்த கீர்த்தியை, பொல்லா=கொடிய, வினையேன்=தீவினையுடையேனாகிய யான், புகழும் ஆறு=புகழ்ந்து துதிக்கும் வழி (இன்னதென்று) ஒன்று=சிறிதும், அறியேன்=தெரிகிலேன், புல் ஆகி=புற்களாகியும், பூடு ஆய்=பூண்டுகளாகியும், புழு ஆய்=புழுக்களாகியும், மரம் ஆகி=விருட்சங்களாகியும், பல்=பலவகைப்பட்ட, மிருகமாகி=மிருகங்களாகியும், பறவையாய்=பட்சிகளாகியும், பாம்பு ஆகி=பாம்புகளாகியும், கல் ஆய்=கற்களாகியும், மனிதர் ஆய்=மானுடர்களாகியும், பேய் ஆய்=பேய்களாகியும், கணங்களாய்=கணர்களாகியும், வல்=வலிமையையுடைய, அசுரர் ஆகி=அசுரர்களாகியும், முனிவர் ஆய=முனிவர்களாகியும், தேவர் ஆய்=தேவர்களாகியும், செல்லாநின்ற=நடவாநின்ற, இ=இந்த, தாவரசங்கமத்துள்=நிலையியற்

பொருளும் இயங்கியற் பொருளுமாகிய இருவகைப் பொருள்களுள்ளே, எல்லாப் பிறப்பும்=எல்லாப் பிறவிகளினும், பிறந்து=உற்பவித்து, இளைத்தேன்=மிகவும் மெலிவடைந்தேன், எம்பெருமான்=எமது பெருமானே, மெய்யே=சத்தியமாகவே, இன்று=இப்பொழுது, உன்=உன்னுடைய, பொன் பொன்போலுயர்ந்த, அடிகள்=திருவடிகளை, கண்டு=சேவித்து, வீடு = மோட்ச வழியை, உற்றேன்=அடைந்தேன், உய்ய=அடியேனுஜ்ஜீவிக்க வேண்டி, என்=எனது, உள்ளத்துள்=மனத்தில், ஓங்காரமாய்நின்ற=பிரணவாகாரமாய் விளங்கிய, மெய்யா=நித்தியனே, விமலா=நிர்மலனே, விடைப்பாகா=இடபாரூடனே, வேதங்கள்=வேதங்களெல்லாம், ஐயாஎன=ஐயனேஎன்று துதிக்க, ஓங்கி=உயர்ந்து, ஆழ்ந்து=ஆழ்ந்து, அகன்ற=விசாலித்த, நுண்ணியனே=சூக்குமவடிவானவனே, வெய்யாய்=வெப்பத்தையுடையவனே, தணியாய்=தட்பமாயிருப்பவனே, இயமானன்ஆம்=ஆன்மவடிவாய் விளங்கும், விமலா=பரிசுத்தனே, பொய் ஆயின எல்லாம்=பொய்யாகத்தோன்றுமிச்சக வாழ்வனைத்தும், போய் அகல=அகன்றுபோமாறு, வந்து அருளி=எழுந்தருளிவந்து, மெய் ஞானம் ஆகி=உண்மைஞான வடிவாகி, மிளிர்கின்ற=விளங்குகின்ற, மெய்=நித்தியமாகிய, சுடரே=ஜோதிஸ்வரூபமானவனே, எ=எவ்வளவும், ஞானம் அறிவு, இல்லாதேன்=இல்லாதவனாகிய எனக்கு, இன்பம்=பேரின்பத்தை யருளுகின்ற, பெருமானே=சிவபெருமானே, அஞ்ஞானந்தன்னை = மாயாகாரியமாகிய அஞ்ஞானத்தை, அகல்விக்கும்=போக்கியருளுகின்ற, நல் அறிவே=பரஞான வடிவனே, ஆக்கம்=தோற்றமும், அளவு=எல்லையும், இறுதி=முடிவும், இல்லாய்=இல்லாதவனே, அனைத்து உலகும்=சகல லோகங்களையும், ஆக்குவாய்=சிருஷ்டிப்பாய், காப்பாய்=இரட்சிப்பாய்=அழிப்பாய்=சங்கரிப்பாய், அருள்தருவாய்=அநுக்ரஹிப்பாய், போக்குவாய்=பிறவி நோயை ஒழிப்பாய், என்னை=அடியேனை, நின்=உனது, தொழும்பில்=பணிவிடையில், புகுவிப்பாய்=பிரவேசிக்கச் செய்வாய், ஆற்றத்தில்=உன்னையடையும் வழியில், நேரியாய்=செம்மையாகிய நெறியைத் தருபவனே, சேயாய்=உன்னை வணங்காதவர்க்குத் தூரமாயிருப்பவனே, நணியானே=உன்னையடைந்தவர்க்கு விரைந்து அநுக்கிரகிப்பவனே, மாற்றம்=சொல்லுக்கும், மனம்=மனத்திற்கும், கழிய நின்ற=(எட்டாமல்) அதீதப்பட்டு நின்ற, மறையோனே=இரகசியப் பொருளானவனே, கறந்த பாலொடு=கறந்த பாலுடனே, கன்னல்=கருப்பஞ்சாற்றையும், நெய்=நெய்யையும், கலந்தாற்போல்=சேர்த்ததுபோல, சிறந்த=விசேஷித்த, அடியார்=அன்புடையவரது, சிந்தனையுள்=மனத்தினுள்ளே, தேன் ஊறிநின்று=தேன்போலச் சுரந்துநின்று, பிறந்த=யானெடுத்த, பிறப்பு=சனனத்தை, அறுக்கும்=ஒழிக்கின்ற, எங்கள் பெருமான்=எமது பெருமானே, ஓர்=ஒப்பற்ற, ஐந்து நிறங்கள்=(சிருட்டியாதி பஞ்சகிருத்திய காரணமாகிய) ஐந்துருவங்களை, உடையாய்=கொண்டவனே, விண்ணோர்கள்=தேவர் குழாங்கள், ஏத்த=ஸ்தோத்திரஞ்செய்ய, மறைந்து இருந்தாய்=(அவர்களுக்குத் தோன்றாமல்) கரந்து நின்றவனே, எம்பெருமான்=எமது பிரானே, வல்வினையேன் தன்னை=கொடிய வினைகளையுடையேனாகிய என்னை, மறைந்திட=மறையும்படி, மூடிய=கவிந்த, மாய

இருளை, மியாமலமாகிய விருட்டை, அறம்=தருமமும், பாவம்=பாவமும் என்னும்=என்கிற, அரும்=அரிதாகிய, கயிற்றால்=பாசத்தினால், கட்டி=யாத்து, புறம்=வெளியே, தோல் போர்த்து=தோலினால்மூடி, எங்கும்=எவ்விடத்தும் நிறைந்துள்ள, புழு=புழுக்களையும், அழுக்கு=அழுக்குகளையும், மூடி=மறைத்து, மலஞ்சோரும்=மலம் ஒழுகுகின்ற, ஒன்பது வாயில்=நவத்வாரங்களையுடைய, குடிலை=சிறுவீடாகிய தேகத்தை, மலங்க=வருந்தும்படி, புலன் ஐந்தும்=பஞ்சேந்திரியங்களும், வஞ்சனைசெய்ய=வஞ்சகஞ் செய்ய, விலங்கு=மிருகத்தை யொத்த, மனத்தால்=மனத்தினால், விமலா=மலரகிதனே, உனக்கு=உன் பொருட்டு, கலந்த அன்பாகி=அன்புடையவனாய், உள்=மனம், கசிந்து=கரைந்து, உருகும்=உருகுகின்ற, நலம் தான்=நன்மையாயினும், இலாத=இல்லாத, சிறியேற்கு=சிறியவனாகிய என் நிமித்தம், இரங்கி=மனமிரங்கியருளி, நிலந்தன்மேல்=பூமியின்மேல், வந்தருளி=எழுந்தருளி வந்து, நீள்=நீண்ட, கழல்கள்=திருவடிகளை, காட்டி=காண்பித்து, நாயின்=நாயைப் பார்க்கிலும், கடையாய் கிடந்த=இழிஞனாயிருந்த, அடியேற்கு=அடியேனுக்கு, தாயில் = தாயினும், சிறந்த = மேன்மையான, தயாஆன = தயையுடையவனாகிய, தத்துவனே=உண்மையானவனே, மாசு அற்ற=களங்கமில்லாத, சோதி=ஒளி, மலர்ந்த=விரிந்த, மலர்சுடரே=மிகுந்தவொளியுருவனே, தேசனே=புகழ்ச்சி விளக்க முடையவனே, தேன்=தேன்போலு மினிய குணங்களையுடையானே, ஆர் அமுதே=அரிய தேவாமிர்தமே, சிவபுரனே=ஸ்ரீகைலாசவாசனே, பாசம் ஆம் பற்று=பஞ்சபாசத் தொடர்பை, அற்று=அறச்செய்து, பாரிக்கும்=காத்தருளுகின்ற, ஆரியனே=ஆசாரியனே, நேசம்=அன்போடு, அருள்புரிந்து=கிருபைசெய்து, நெஞ்சில் = என் மனத்திலுள்ள, வஞ்சம்=வஞ்சனைகள், கெட=அழிய, பேராது=விட்டுநீங்காமல், நின்ற=நிலைபெற்ற, பெருங்கருணை=பெரியகிருபையாகிய, பேர் ஆறே=பெரிய நதியே, ஆரா அமுதே=தெவிட்டாத வமுதமே, அளவு இல்லா=அனந்தகல்யாண குணங்களையுடைய, பெம்மானே=பெருமானே, ஓராதார்=ஆராய்ந்தறியாதவரது, உள்ளத்து=மனத்துள், ஒளிக்கும்=மறைகின்ற, ஒளியானே=தேஜோரூபனே, நீராய்=என்மனத்தை நீராக, உருக்கி=உருகச்செய்து, என் = எனது, ஆர் உயிர் ஆய்=அரியவுயிராகி, நின்றானே=நின்றவனே, இன்பமும்=(தனக்கென) ஓர்சுகமும், துன்பமும்=துக்கமும், இல்லானே=இல்லாதவனே, உள்ளானே=(அன்பர் விஷயத்தில் ஆசைகளை) யுடையவனே, அன்பருக்கு = அடியார்களிடத்து, அன்பனே=மிகுந்த அன்பையுடையவனே, யாவையும் ஆய்=எல்லாப்பொருள்களுமாகி, அல்லையும் ஆய்=அவையனைத்து மல்லாதவனுமாகிய, சோதியனே=தேஜோமயனே, துன் இருளே=மிகுந்த அந்தகாரமானவனே, தோன்றா=யாவரானு முணரப்படாத, பெருமையனே=பெருமையுடையவனே, ஆதியனே=அண்டகோடிகட்கெல்லாம் முதலானவனே, அந்தம்=இறுதியும், நடு ஆகி=நடுவுமாகியும், அல்லானே=அவைகளல்லாதவனுமா யிருப்பவனே, என்னை=தமியேனை, ஈர்த்து=வலிய இழுத்து, ஆட்கொண்ட=ஆண்டுகொண்டருளிய, எந்தை = எமது தந்தையாகிய, பெருமானே = கடவுளே,

கூர்த்த=கூரிய, மெய்ஞானத்தால் = மெய்யறிவினால், கொண்டு = சேர்ந்து, உணர்வார்தம்=அறிபவருடைய, கருத்தின்=கருத்தினாலும், நோக்கு=நோக்குதற்கு, அரிய=அரிதாகிய, நோக்கே=காட்சியே, நுணுக்கு=நுட்பமாய், அரிய=தெரிதற்கரிதாகிய, நுண் = நுட்பமாகிய. உணர்வே = ஞானவுருவானவனே, போக்கும்=மகாப் பிரளயகாலத்தி லழிதலும், வரவும்=சிருட்டிகாலத்துண்டாதலும்,புணர்வும்=அவற்றின் சம்பந்தமும், இல்லா=இல்லாத புண்ணியனே=தருமவடிவானவனே, காக்கும்=எம்மை யிரட்சிக்கும், எம்=எமது, காவலனே=இரட்சகனே, காண்பு=காணுதற்கு, அரிய=எட்டாத, பேர் ஒளியே=பெரிய ஒளியே, ஆற்று=அடியவர்க் கனுக்கிரகிக்கின்ற, இன்ப வெள்ளமே=பேரானந்தப் பெருக்கே, அத்தா=எமது பரமபிதாவே, மிக்காய்நின்ற=உயர்ந்த, தோற்றம்=காட்சியையுடைய, சுடர் ஒளியாய்=விளங்குகின்ற வொளியாகி, சொல்லாத=வாக்கினாற் சொல்லற்கரிய, நுண்ணுணர்வாய்=நுண்ணறிவாகி, மாற்றம் ஆம் = வேறுபாட்டை யுடையதாகிய, வையகத்தில்=பூமியில், வெவ்வேறே வந்து=வெவ்வேறுருவாய் வந்து, அறிவு ஆம்= (மெய்ஞ்ஞானிகளால்) அறியக்கூடிய, தேற்றனே=நிச்சயப்பொருளானவனே, தேற்றத்தெளிவே=தெளிவுக்குட்டெளிவே, என்=எனது, சிந்தனையுள்=மனத்தில், ஊற்று ஆன=ஊற்றுநீர்ப்பெருக்கையொத்த, உண்=உண்ணுதற்குரிய, ஆர் அமுதே=அரிய அமிர்தம்போன்றவனே, உடையானே = என்னை அடிமையாகக் கொண்டவனே, வேற்றுவிகாரம் = பலவேறு விகாரங்களையுடைய, விடக்கு = மாமிசசம்பந்தமாகிய, உடம்பினுள்=சரீரத்தில், கிடப்ப = தங்கியிருப்பதற்கு, ஆற்றேன்=மனந்தாளேன், எம் ஐயா=எமதையனே, அரனே=சங்காரகர்த்தனே, ஓ என்று என்று = ஓ வென்று பலகால் முறையிட்டு, போற்றி = வணங்கி, புகழ்ந்து இருந்து=உனது கீர்த்தியைப் பலகாற்புகழ்ந்து, பொய்கெட்டு= (அப்புகழ்ச்சிப் பயனால்) பொய்யாகிப் விடையவாதனைகளை யொழித்து, மெய் ஆனார்=மெய்ஞ்ஞானவடிவாய் நின்றவர்கள், மீட்டு=திரும்பவும், இங்குவந்து = இவ்வுலகின்கண்வந்து, வினை பிறவி=வினை காரணமாக வரும் பிறவியை, சாராமே=சாராமல், கள்ளம்=வஞ்சனையைச் செய்கின்ற, புலம் = ஐம்புலன்களுக் கிடமாகிய, குரம்பை=சரீரத்தினாலுண்டாகும், கட்டு=பாசபந்தங்களை, அழிக்கவல்லானே, நசிப்பிக்க வல்லவனே, நள் இருளில்=நடு ராத்திரியில், நட்டம்=திருநடனம், பயின்று ஆடும்=பழகி ஆடுகின்ற, நாதனே=நாதத்துவத்தின் முடிவானவனே, தில்லையுள்= தில்லை வனமாகிய சிதம்பரத்தில், கூத்தனே=(பஞ்சகிர்த்திய) நடனஞ் செய்பவனே, தென்=அழகிய, பாண்டி நாட்டானே; பாண்டிவளநாட்டையுடையவனே, அல்லல்=துன்பத்தைத் தருகிற, பிறவி=பிறவியை, அறுப்பானே=ஒழிப்பவனே, ஓ என்று=ஓ வென்று கூச்சலிட்டு, சொல்லற்கு=வாக்கினாற் சொல்லுதற்கும், அறியானை=அறியவனை, சொல்லி=பலகாற் புகழ்ந்து, திருவடிக்கீழ்=அவனது ஸ்ரீபாதங்களில், சொல்லிய=சாத்தியருளிய,பாட்டின்=சொன்மாலையின், பொருள்=ஞானார்த்தத்தை, உணர்ந்து=அறிந்து, சொல்லுவார்=சொல்ல வல்லவர்களான, பல்லோரும்=பலரும், சிவபுரத்தின் உள் ஆர்=சிவலோகத்தில் வாழ்கின்ற, சிவன் = சிவபெருமானது, அடிக்கீழ்=திருவடியின்

கீழ், பணிந்து=யாவரும் வணங்கி, ஏத்த=துதிக்க, செல்வர்=சென்று வாழ்ந்திருக்கப் பெறுவர், (எ-று.)

## விசேடவுரை.

நமச்சிவாய வாழ்கவென ஸ்ரீபஞ்சாட்சரத்தை முற்கூறிப், பின்னர், அப்பஞ்சாட்சரப் பொருளாயமைந்த சிவபெருமானை, நாதனென்றெடுத்துக் கூறியது, வாச்சிய மான்மியத்தினும் வாசகமான்மியமே சிறப்புடைத்தென் றறிவித்தற்கென்க. குருமணி=தேசிகரத்ன மெனினு மமையும், ஆகமமாகிநின்று அண்ணிப்பான் என்றது, "வேதங்கிடந்து தடுமாறும் வஞ்சவெளி" எனவும், "எழுதருமறை கடேறு மிறைவனை" எனவும், "வேதங்களையாவென வோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" எனவும் போந்த ப்ரயோகங்களால் வேதங்களே யின்னமும் இறைவனது திருவடிப் பேற்றிற் கருகமில்லா துழல்வதாய் ஏற்படுதலின் அவ்வேதத்தினும் ஆகமமே சிறப்புடைத் தென்பதை விளக்கி நின்றது. ஆகமம், ஆ=பசு, க=பதி, ம=பாசம், எனவே, பதிபசு பாசங்களாகிய திரிபதார்த்த லட்சணங்களை யுணர்த்து நூலென்பது பொருள். புறத்தார்க்கு என்றது, அகப்புறம், புறம், புறப்புறம் என்னு முக்கூற்றுப் புறச்சமயத்தவர்க் கெனினும் பொருந்தும். ஓங்காரமாய் நின்ற மெய்யனென்றதை, "ஆதிதனிலோமென்னும் பதமதாகு மந்தமதிற் சிவாயவொலி யணைந்துநிற்கும், ஓதியவா றெழுத்திணையு முடைத்தே யிந்த வோமென்னும் பதப்பொருடா னுயிர்கட்கெல்லாம், போதகனும் பொருவிலியாய் நிற்குமீசன் பொருந்துமவன் சத்திவித மைந்து மற்றை, ஏதமிலா வஞ்செழுத்தின் பொருளையெண்ணி லிருபயனு முயிரடையு மிவற்றாலென்றும்" எனவும், "புக்கிறைவன் றனை வணங்கி நிகழ்ந்தவெலாம் விண்ணப்பஞ் செய்யப் பூந்தேன், நக்க நறுந்தொடை யிதழிக் கடவுளவர் தமை நோக்கி நவில்வானென்னே, டக்கமலன் விரவியவா நம்மை யுனம்புதல்வனையு மன்றே யா, மிக்க புகழ்ச்சுருதி யெல்லாம் பிரணவத்தின் பொருளாக விளங்குமாறே" எனவும் வருவனவற்றாற் காண்க. நிறங்களோரைந்துடையாயென்றது, சிருஷ்டி, திதி, சம்ஹாரம், திரோபவம், அநுக்ரகமென்னும் பஞ்சகிர்த்தியங் காரணமாகப், பிரமன், விஷ்ணு, உருத்திரன், மஹேஸ்வரன், சதாசிவம், என்னும் பஞ்சமூர்த்திகளாய் விளங்கி நிற்றலை.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

இரண்டாவது

# கீர்த்தித்திருவகவல்.

அதாவது

சிவனது திருவருட்புகழ்ச்சி முறைமை.

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

தில்லைமூதூராடியதிருவடி
பல்லுயிரெல்லாம்பயின்றனனாகி
யெண்ணில்பல்குணமெழில்பெறவிளங்கி
மண்ணும்விண்ணும்வானோருலகுந்
துன்னியகல்விதோற்றியுமழித்து
மென்னுடையிருளையேறத்துரந்து
மடியாருள்ளத்தன்புமீதூரக்
குடியாக்கொண்டகொள்கையுஞ்சிறப்பு
மன்னுமாமலைமகேந்திரமதனிற்
சொன்னவாகமந்தோற்றுவித்தருளியுங்
கல்லாடத்துக்கலந்தினிதருளி
நல்லாளோடுநயப்புறவெய்தியும்
பஞ்சப்பள்ளியிற்பான்மொழிதன்னொடு
மெஞ்சாதீண்டுமின்னருள்விளைத்துங்
கிராதவேடமொடுகிஞ்சுகவாயவள்
விராவுகொங்கைநற்றடம்படிந்துங்
கேவேடராகிக்கெளிறதுபடுத்து
மாவேட்டாகியவாகமம்வாங்கியு
மற்றவைதம்மைமகேந்திரத்திருந்
துற்றவைம்முகங்களாற்பணித்தருளியு
நந்தம்பாடியினான்மறையோனா

யந்தமிலாரியனாயமர்ந்தருளியும்
வேறுவேறுருவும்வேறுவேறியற்கையு
நூறுநூறாயிரமியல்பினதாகி
யேறுடையீசனிப்புவனியையுய்யக்
கூறுடைமங்கையுந்தானும்வந்தருளிக்
குதிரையைக்கொண்டுகுடநாடதன்மிசைச்
சதுர்படச்சாத்தாய்தானெழுந்தருளியும்
வேலம்புத்தூர்விட்டேறருளிக்
கோலம்பொலிவுகாட்டியகொள்கையுந்
தர்ப்பணமதனிற்சாந்தம்புத்தூர்
விற்பொருவேடற்கீந்தவிளைவு
மொக்கணியருளியமுழுத்தழன்மேனி
சொக்கதாகக்காட்டியதொன்மையு
மரியொடுபிரமற்களவறியொண்ணா
நரியைக்குதிரையாக்கியநன்மையு
மாண்டுகொண்டருளவழகுறுதிருவடி
பாண்டியன்றனக்குப்பரிமாவிற்
றீண்டுகனகமிசையப்பெறாஅ
தாண்டானெங்கோனருள்வழியிருப்பத்
தூண்டுசோதிதோற்றியதொன்மையு
மந்தணனாகியாண்டுகொண்டருளி
யிந்திரஞாலங்காட்டியவியல்பு
மதுரைப்பெருநன்மாநகரிருந்து
குதிரைச்சேவகனாகியகொள்கையு
மாங்கதுதன்னிலடியவட்காகப்
பாங்காய்மண்சுமந்தருளியபரிசு
முத்தரகோசமங்கையுளிருந்து
வித்தகவேடங்காட்டியவியல்பும்
பூவணமதனிற்பொலிந்திருந்தருளித்
தூவணமேனிகாட்டியதொன்மையும்
வாதவூரினில்வந்தினிதருளிப்
பாதச்சிலம்பொலிகாட்டியபண்புந்
திருவார்பெருந்துறைச்செல்வனாகிக்
கருவார்சோதியிற்கரந்தகள்ளமும்
பூவலமதனிற்பொலிந்தினிதருளிப்

பாவநாசமாக்கியபரிசுந்
தண்ணீர்ப்பந்தர்சயம்பெறவைத்து
நன்னீர்ச்சேவகனாகியநன்மையும்
விருந்தினனாகிவெண்காடதனிற்
குருந்தின்கீழன்றிருந்தகொள்கையும்
பட்டமங்கையிற்பாங்காயிருந்தங்
கட்டமாசித்தியருளியவதுவும்
வேடுவனாகிவேண்டுருக்கொண்டு
காடதுதன்னிற்கரந்தகள்ளமு
மெய்க்காட்டிட்டுவேண்டுருக்கொண்டு
தக்கானொருவனாகியதன்மையு
மோரியூரினுகந்தினிதருளிப்
பாரிரும்பாலகனாகியபரிசும்
பாண்டூர்தன்னிலீண்டவிருந்துந்
தேவூர்த்தென்பாற்றிகழ்தருதீவிற்
கோவார்கோலங்கொண்டகொள்கையுந்
தேனமர்சோலைத்திருவாரூரின்
ஞானந்தன்னைநல்கியநன்மையு
மிடைமருததனிலீண்டவிருந்து
படிமப்பாதம்வைத்தவப்பரிசு
மேகம்பத்தினியல்பாயிருந்து
பாகம்பெண்ணோடாயினபரிசுந்
திருவாஞ்சியத்திற்சீர்பெறவிருந்து
மருவார்குழலியொடுமகிழ்ந்தவண்ணமுஞ்
சேவகனாகித்திண்சிலையேந்திப்
பாவகம்பலபலகாட்டியபரிசுங்
கடம்பூர்தன்னிலிடம்பெறவிருந்து
மீங்கோய்மலையிலெழிலதுகாட்டியு
மையாறதனிற்சைவனாகியுந்
துருத்திதன்னிலருத்தியோடிருந்துந்
திருப்பனையூரில்விருப்பனாகியுங்
கழுமலமதனிற்காட்சிகொடுத்துங்
கழுக்குன்றதனில்வழுக்காதிருந்தும்
புறம்பயமதனிலறம்பலவருளியுங்
குற்றாலத்துக்குறியாயிருந்து

தேவதேவன் = மகாதேவனது, திருப்பெயராகவும் = திருநாமமாகவும், இருள் =மாயையாகியவிருட்டை, கடிந்து=நீக்கி, அருளிய = அடியேனுக்குக் கிருபைசெய்தருளிய, இன்பவூர்தி=ஆனந்தவூர்தி, அருளியபெருமை=அருள்செய்தபெருமை, அருள்மலைஆகவும்=திருவருள்மலையாகவும், எபெருந்தன்மையும்=எப்படிப்பட்டபெருந்தன்மையையும், எ எவர்திறமும்=எவ்வகைப்பட்ட திறத்தினையும், அபரிசுஅதனால்=அவ்வர்தன்மைகளால், ஆண்டுகொண்டருளி =ஆட்கொண்டருளி, நாயினேனை=நாய்போல்வேனை, நலமலி=நன்மைமிகுந்த, தில்லையுள்=திருத்தில்லையின்கண், கோலம்=அழகு, ஆர்தரு=நிறைந்த, பொதுவினில்=அம்பலத்தில், வருகஎன=வருகவென்று, ஏல=ஏற்க, என்னை=அடியேனை ஈங்கு=இவ்விடத்தே, ஒழித்தருளி=நீக்கியருளி, அன்று = அன்று, உடன்சென்ற = தன்னோடுகூடச்சென்ற, அருள்பெறும் = திருவருளைப்பெற்ற, அடியவர்=அடியார்கள், ஒன்றஒன்ற=பொருந்தப்பொருந்த, உடன்கலந்து அருளியும்=அவருடன் சேர்ந்தருளியும், எய்தவந்திலாதார்=அடையவராதவர்கள், எரியில்பாயவும்=தீயிற்பாயவும், மாலதுஆகி = ஆசைகொண்டு, மயக்கமாகியும்=மயங்கியும், பூதலம்அதனில்=பூமியின்மேல், வீழ்ந்து=விழுந்து, புரண்டு=புரண்டு, அலறியும்=அலறியும், கால்=காலால், விசைத்து=வேகங்கொண்டு, ஓடி = சென்று, கடல்புக=கடலில்விழ, மண்டி=நெருங்கி, நாதநாதஎன்று = தலைவனே தலைவனே என்று, அழுது அரற்றி=அழுதுசத்தி, பாதம்எய்தினர்=திருவடியையடைந்தவர்கள், பாதம்எய்தவும்=திருவடியையடையவும், பதஞ்சலிக்கு=பதஞ்சலிமுனிவருக்கு, அருளிய=கிருபைசெய்த, பரமநாடகஎன்று=ஆனந்தக்கூத்தனே என்று, இசம்=மனம், சலிப்புஎய்த=கலக்கத்தால்வருந்த, நின்று = இருந்து, எங்கினர்=ஏக்கமுற்றிருந்தவர், ஏங்கவும்=ஏக்கமடையவும், எழில்பெறும்=அழகைக்கொண்ட, இமயத்து=இமயமலையின், இயல்புஉடை = தன்மையையுடைய, அம்=அழகிய, பொன்=பொன்மயமாய், பொலிதரு = விளங்குகின்ற, புலியூர்பொதுவினில் = தில்லையம்பலத்தினில், நடம்நவில் = நடனஞ்செய்த, கனிதரு=கொவ்வைக்கனிபோன்ற, செவ்வாய்=சிவந்தவாயினையுடைய, உமையொடு=உமாதேவியோடு, காளிக்கு = காளிமாதேவிக்கும், அருளிய = அருள்செய்த, திருமுகத்து=திருமுகத்தில், அழகுஉறு=அழகுபொருந்திய, சிறுநகை இறைவன் புன்னகையினையுடைய, இறைவன் =எம்பெருமான், ஈண்டிய = தன் திருவடியை சரணகக்கொண்ட, அடியவரோடும்=அடியார்களுடனே, ஒலிதரு=ஒலிக்கின்ற, உயர்கைலை = ஊழிதோறுமழியாமல் வளர்ந்தேறுகிற கைலைமலைக்கு, உரியோன்=உரியோன், பொலிதரு=விளங்குகின்ற, புலியூர்=திருப்புலியூரின்கண், இனிது=இனிதாக, புக்கு அருளினன்=புகுந்தருளினன். (எ-று,)

## விசேடவுரை.

ஏகம்பத்தினியல்பாயிருந்து, பாகம் பெண்ணோடாயின பரிசுமென்றதை, காஞ்சிப்புராணம் அருணாசலபுராண முதலியவற்றானும், விருந்தினனாகி வெண்காடதனிற் குருந்தின்கீழன்றிருந்த கொள்கையுமென்றதை - திருத்தொண்டர் புராணத்துள் சிறுத்தொண்டநாயனார் புராணத்தானும், வேடுவனாகி வேண்டு

ருக்கொண்டு காடதுதன்னிற் கரந்தகள்ளமும் என்றதை, திருமுருகன் பூண்டிப்புராணம், சுந்தரர் வேடுபறி முதலியவற்றானும் சேவகனாகித் திண்சிலையேந்திப், பாவகம் பலபலகாட்டிய பரிசும்என்றதை, திருவிளையாடல் மெய்க்காட்டிட்ட படலத்தானும், கனிதரு செவ்வாயுமையொடுகாளிக் கருளிய திருமுகத்தென்றதை திருவாலங்காட்டுப் புராணத்தானும், குற்றாலத்துக் குறியாயிருந்தமென்றதை, திருக்குற்றாலப் புராணத்தானுமுணர்க. மொக்கணியருளிய முழுத்தழன் மேனிஎன்றதில், மொக்கணி, தோற்பைஎனவும் பொருள்கூறுவர்.

கேவேடராகிக் கெளிறதுப்படுத்து மாவேட்டாகிய வாகமம்வாங்கியுமென்றது=கைலாயத்தில் சிவபெருமான், வேதார்த்தங்களை உமாதேவியாருக் குபதேசித்த காலையில், அதில் சிரத்தையையாது கேட்டவுமாதேவியை, இழிந்தபரதவர் மகளாகுகவெனச் சபிக்க, அதைக்கேட்டுமாதேவி வருந்துகையில், எம்பெருமான் பெண்ணே யாதொன்றுமஞ்சற்க, நீ பரதவற்கு மகளாய் வளருநாளில் நாம் வந்து உன்னைத் திருமணம்புரிவோமென்று விடைதந்தனர். அது சங்கதி விநாயகரறிந்து சிவபிரானிடம்வந்து இப்புத்தகங்களாலன்றோ இவ்விபரீதம் விளைந்ததனவென்று அவர்க்கெதிரிலிருந்தவேதாகமங்களையுஅவரதுகரத்திலிருந்த சிவஞானபோதத்தையும் எடுத்து சமுத்திரத்திலெறிந்தனர், பின்னர் சிவபெருமான் உமாதேவிகருக் கட்டளையிட்டபடி மீன்வலைஞனாகச் சென்று உமாதேவியை மணந்து, ஞானகோசங்களையு கொண்டுவந்தனரென்பதை திருவிளையாடற்புராணம் வலைவீசின படலத்தானுணர்க.

மற்றவைதம்மை மகேந்திரத்திருந்துற்ற வைம்முகங்களாற் பணிந்தருளியமென்றது, ஸ்ரீ மகாகைலாயத்தில் ப்ரணவாரதி ருத்திராந்தராகிய அறுபத்தறுவருக்கும் உபதேசித்தற்பொருட்டு, தனது தற்புருஷாதி பஞ்சமுகங்களினின்றும், காமிகாதிஇருபத்தெட்டு சிவாகமங்களையும் தோற்றுத்தனராதலின்,

குதிரைச்சேவகனாகிய கொள்கையுமென்றதை, திருவிளையாடல் நரிபரியாக்கியபடலத்தானும், மண்சுமந்தருளிய பரிசுமென்றதை, மண்சுமந்தபடலத்தானும், உத்தரகோசமங்கையுளிருந்து வித்தகவேடங்காட்டிய வியல்புமென்றதை=வலைவீசினபடலத்தானும், பூவணமதனிற் பொலிந்திருந்தருளித் தூவணமேனிகாட்டிய தொன்மையுமென்றதை - இரசவாதம்செய்த படலத்தானும், தண்ணீர்ப்பந்தல் சயம்பெறவைத்து,நன்னீர்ச்சேவகனாகிய நன்மையுமென்றதை, தண்ணீர்ப்பந்தல்வைத்த படலத்தானும், பட்டமங்கையிற் பாங்காயிருந்தங், கட்டமாசித்தியருளிய பரிசுமென்றதை - அட்டமாசித்தியுபதேசித்த படலத்தானும், மெய்க்காட்டிட்டு வேண்டுருக்கொண்டுதக்கானொருவனாகிய தன்மையுமென்றதை, மெய்க்காட்டிட்ட படலத்தானும்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மூன்றாவது

# திருவண்டப்பகுதி.

ஐக்கியத்திற்சூக்குமத்தை வியந்தது.

இணைக்குறளாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

அண்டப்பகுதியினுண்டைப்பிறக்க
மளப்பருந்தன்மைவளப்பெருங்காட்சி
யொன்றனுக்கொன்றுநின்றெழில்பகரி
னூற்றொருகோடியின்மேற்படவிரிந்தன
வின்னுழைக்கதிரின்றுன்னணுப்புரையச்
சிறியவாகப்பெரியோன்றெரியின்
வேதியன்றொகையொடுமாலவன்மிகுதியுந்
தோற்றமுஞ்சிறப்புமீற்றொடுபுணரிய
மாப்பேரூழியுநீக்கமுநிலையுஞ்
சூக்கமொடுதூலத்துச்சூறைமாருதத்
தெறியதுவளியின்
கொட்கப்பெயர்க்குங்குழகன்முழுவதும்
படைப்போற்படைக்கும்பழையோன்படைத்தவை
காப்போற்காக்குங்கடவுள்காப்பவை
கரப்போன்கரப்பவைகருதாக்

கருத்துடைக்கடவுடிருத்தகு
மறுவகைச்சமயத்தறுவகையோர்க்கும்
வீடுபேறாய்நின்றவிண்ணோர்பகுதி
கீடம்புரையுங்கிழவோனாடொறு
மருக்கனிற்சோதியமைத்தோன்றிருத்தகு
மதியிற்றண்மைவைத்தோன்றிண்டிறற்
றீயின்வெம்மைசெய்தோன்பொய்தீர்
வானிற்கலப்புவைத்தோன்மேதகு
காலினூக்கங்கண்டோனிழறிகழ்
நீரிலின்சுவைநிகழ்ந்தோன்வெளிப்பட
மண்ணிற்றிண்மைவைத்தோனென்றென்
றெனைப்பலகோடியெனைப்பலபிறவு
மனைத்தனைத்தவ்வயினடைத்தோனஃதான்று
முன்னோன்காண்கமுழுதோன்காண்க
தன்னேரில்லோன்றானேகாண்க
வேனத்தொல்லெயிறணிந்தோன்காண்க
கானப்புலியுரியரையோன்காண்க
நீற்றோன்காண்கநினைதொறுநினைதொறு
மாற்றேன்காண்கவந்தோகெடுவே
னின்னிசைவீணையிலிசைந்தோன்காண்க
வன்னதொன்றவ்வயினறிந்தோன்காண்க
பரமன்காண்கபழையோன்காண்க
பிரமன்மால்காணாப்பெரியோன்காண்க
வற்புதன்காண்கவநேகன்காண்க
சொற்பதங்கடந்ததொல்லோன்காண்க
சித்தமுஞ்செல்லாச்சேட்சியன்காண்க
பத்திவலையிற்படுவோன்காண்க
வொருவனென்னுமொருவன்காண்க
விரிபொழின்முழுதாய்விரிந்தோன்காண்க
வணுத்தருந்தன்மையிலையோன்காண்க
விணைப்பரும்பெருமையிலீசன்காண்க
வரியதிலரியவரியோன்காண்க
மருவியெப்பொருளும்வளர்ப்போன்காண்க
நூலுணர்வுணராநுண்ணியோன்காண்க
மேலொடுகீழாய்விரிந்தோன்காண்க

வந்தமுமாதியுமகன்றோன்காண்க
பந்தமும்வீடும்படைப்போன்காண்க
நிற்பதுஞ்செல்வதுமானோன்காண்க
கற்பமுமிறுதியுங்கண்டோன்காண்க
யாவரும்பெறவுறுமீசன்காண்க
தேவருமறியாச்சிவனேகாண்க
பெண்ணாணலியெனும்பெற்றியன்காண்க
கண்ணாலியானுங்கண்டேன்காண்க
வருணனிசுரக்குமமுதேகாண்க
கருணையின்பெருமைகண்டேன்காண்க
புவனியிற்சேவடிதீண்டினன்காண்க
சிவனெனயானுந்தேறினன்காண்க
வவனெனையாட்கொண்டருளினன்காண்க
குவளைக்கண்ணிகூறன்காண்க
வவளுந்தானுமுடனேகாண்க
பரமானந்தப்பழங்கடலதுவே
கருமாமுகிலிற்றோன்றித்
திருவார்பெருந்துறைவரையிலேறித்
திருத்தகுமின்னொளிதிசைதிசைவிரிய
வைம்புலப்பந்தனைவாளரவிரிய
வெந்துயர்க்கோடைமாத்தலைகரப்ப
நீடெழிற்றோன்றிவாளொளிமிளிர
வெந்தம்பிறவியிற்கோபமிகுத்து
முரசெறிந்துமாப்பெருங்கருணையின்முழங்கிப்
பூப்புரையஞ்சலிகாந்தள்காட்ட
வெஞ்சாவின்னருணுண்டுளிகொள்ளச்
செஞ்சுடர்வெள்ளந்திசைதிசைதெவிட்ட, வரையுறக்
கேதக்குட்டங்கையறவோங்கி
யிருமுச்சமயத்தொருபேய்த்தேரினை
நீர்நசைதரவருநெடுங்கண்மான்கணந்
தவப்பெருவாயிடைப்பருகித்தளர்வொடு
மவப்பெருந்தாபநீங்காதசைந்தன
வாயிடைவானப்பேரியாற்றகவயிற்
பாய்ந்தெழுந்தின்பப்பெருஞ்சுழிகொழித்துச்
சுழித்தெம்பந்தமாக்கரைபொருதலைத்திடித்

தூழூழோங்கியநங்க
ளிருவினைமாமரம்வேர்பறித்தெழுந்
துருவவருணீரோட்டாவருவரைச்
சந்தின்வான்சிறைகட்டிமட்டவிழ்
வெறிமலர்க்குளவாய்கோலிநிறையகின்
மாப்புகைக்கரைசேர்வண்டுடைக்குளத்தின்
மீக்கொளமேன்மேன்மகிழ்தலினோக்கி
யருச்சனைவயலுளன்புவித்திட்டுத்
தொண்டவுழவராரத்தந்த
வண்டத்தரும்பெறன்மேகன்வாழ்க
கரும்பணக்கச்சைக்கடவுள்வாழ்க
வருந்தவர்க்கருளுமாதிவாழ்க
வச்சந்தவிர்த்தசேவகன்வாழ்க
நிச்சலுமீர்த்தாட்கொள்வோன்வாழ்க
சூழிருந்துன்பந்துடைப்போன்வாழ்க
வெய்தினர்க்காரமுதளிப்போன்வாழ்க
கூரிருட்கூத்தொடுகுனிப்போன்வாழ்க
பேரமைத்தோளிகாதலன்வாழ்க
வேதிலர்க்கேதிலெம்மிறைவன்வாழ்க
காதலர்க்கெய்ப்பினில்வைப்புவாழ்க
நச்சரவாட்டியநம்பன்போற்றி
பிச்செமையேற்றியபெரியோன்போற்றி
நீற்றொடுதோற்றவல்லோன்போற்றி, நாற்றிசை
நடப்பனநடாஅய்க்கிடப்பனகிடாஅய்
நிற்பனநிறீஇச்
சொற்பதங்கடந்ததொல்லோ
னுள்ளத்துணர்ச்சியிற்கொள்ளவும்படாஅன்
கண்முதற்புலனாற்காட்சியுமில்லோன்
விண்முதற்பூதம்வெளிப்படவகுத்தோன்
பூவினாற்றம்போன்றுயர்ந்தெங்கு
மொழிவறநிறைந்துமேவியபெருமை
யின்றெனக்கெளிவந்தருளி
யழிதருமாக்கையொழியச்செய்த, வொண்பொரு
ளின்றெனக்கெளிவந்திருந்தனன்போற்றி
யளிதருமாக்கைசெய்தோன்போற்றி

யூற்றிருந்துள்ளங்களிப்போன்போற்றி
யாற்றாவின்பமலர்ந்தலைசெய்யப்
போற்றாவாக்கையைப்பொறுத்தல்புகலேன்
மரகதக்குவாஅன்மாமணிப்பிறக்க
மின்னொளிகொண்டபொன்னொளிதிகழத்
திசைமுகன்சென்றுதேடினர்க்கொளித்து
முறையுளியொற்றிமுயன்றவர்க்கொளித்து
மொற்றுமைகொண்டுநோக்குமுள்ளத்
துற்றவர்வருந்தவுறைப்பவர்க்கொளித்து
மறைத்திறநோக்கிவருந்தினர்க்கொளித்து
மித்தந்திரத்திற்காண்டுமென்றிருந்தோர்க்
கத்தந்திரத்தினவ்வயினொளித்து
முனிவறநோக்கிநனிவரக்கௌவி
யாணெனத்தோன்றியலியெனப்பெயர்ந்து
வாணுதற்பெண்ணெனவொளித்துஞ்சேண்வயி
னைம்புலன்செலவிடுத்தருவரைதொறும்போய்த்
துற்றவைதுறந்தவெற்றுயிராக்கை
யருந்தவர்காட்சியுட்டிருந்தவொளித்து
மொன்றுண்டில்லையென்றறிவொளித்தும்
பண்டேபயிற்றொறுமின்றேபயிற்றொறு
மொளிக்குஞ்சோரனைக்கண்டனம்
மார்மினார்மினாண்மலர்ப்பிணையலிற்
றாடளையிடுமின்
சுற்றுமின்சூழ்மின்றொடர்மின்விடேன்மின்
பற்றுமினென்றவர்பற்றுமுற்றொளித்துந்
தன்னேரில்லோன்றானேயானதன்மை
யென்னேரனையோர்கேட்கவந்தியம்பி
யறைகூவியாட்கொண்டருளி
மறையோர்கோலங்காட்டியருளலு
முளையாவன்பெண்புருகவோலமிட்
டலைகடற்றிரையினார்த்தார்த்தோங்கித்
தலைதடுமாறாவீழ்ந்துபுரண்டலறிப்
பித்தரின்மயங்கிமத்தரின்மதித்து
நாட்டவர்மருளவுங்கேட்டவர்வியப்பவுங்
கடக்களிறேற்றாத்தடப்பெருமதத்தி

ஞற்றேனுகவவயவஞ்சுவைதரு
கோற்றேன்கொண்டுசெய்தன
னேற்றார்மூதூரெழினகையெரியின்
வீழ்வித்தாங்கன்
றருட்பெருந்தீயினடியோமடிக்குடி
லொருத்தரும்வழாமையொடிக்கினன்
றடக்கையினெல்லிக்கனியெனக்காயினன்
சொல்லுவதறியேன்வாழிமுறையோ
தரியேனுயேன்றனெனைச்செய்தது
தெரியேனுவாசெத்தேனடியேற்
கருளியதறியேன்பருகியுமாரேன்
விழுங்கியுமொல்லகில்லேன்
செழுந்தண்பாற்கடற்றிரைபுரைவித்
துவாக்கடனள்ளுநீருள்ளகந்ததும்ப
வாக்கிறந்தமுதமயிர்க்காறுறுந்
தேக்கிடச்செய்தனன்கொடியேனூன்றழை
குரம்பைதோறுநாயுடலகத்தே
குரம்பைகொண்டின்றேன்பாய்த்திரம்பிய
வற்புதமானவமுததாரைக
ளெற்புத்துளைதொறுமேற்றினனுருகுவ
துள்ளங்கொண்டோருருச்செய்தாங்கெனக்
கள்ளூறாக்கையமைத்தனனொள்ளிய
கன்னற்கனிதேர்களிறெனக்கடைமுறை
யென்னையுமிருப்பதாக்கினனென்னிற்
கருணைவான்றேன்கலக்க
வருளொடுபராவமுதாக்கினன்
பிறமன்மாலறியாப்பெற்றியோனே.

திருச்சிற்றம்பலம்.

(ப - ரை.) அண்டப்பகுதியின்=அண்டப்பிரிவுகளோடுகூடிய, உண்டை=பூகோளககோளங்களின், பிறக்கம் = விளக்கமானது, அளப்பருந்தன்மை=அளத்தற்கரிதாகிய தன்மையையும், வளம்=வளப்பத்தையுடைய, பெரும்=பெரிய, காட்சி = தோற்றத்தினையு முடையதாய, ஒன்றனுக்கொன்று = ஒன்றுக்கொன்று, நின்ற=தொடர்ந்துநின்ற, எழில் = அழகினை, பகரில் = எடுத்துச்சொல்லுமிடத்து, நூற்றொருகோடியின்=நூற்றொருகோடியினும், மேற்பட=அதிகப்பட, விரிந்தன = பரந்திருந்தன, (ஆயினுமவைகள்) இல் = வீட்டுக்கூரையின்கண், நுழை=நுழைகின்ற, கதிரின் = சூரியகிரணத்திற் காணப்படுகின்ற, துன்=நெருங்கிய, அணு=அணுக்களை, புரைய=ஒப்பாக, சிறியஆக=

சிறியனவாக, பெரியோள்=தான்பெரியவனுயிருப்பவன், தெரியின் = ஆராயு
மிடத்து, வேதியன்=பிரமர்களின், தொகையொடு=கூட்டத்தோடு, மாலவன்
=விஷ்ணுக்களின், மிகுதியும்=பெருக்கமும், தோற்றமும் = உலகசிருட்டியு ,
சிறப்பும் = ரட்சகப்பெருமையும், சிற்றெடுபுணரிய = முடிவுபெறவருகின்ற,
மாப்பேரூழியும்=மிகவும்பெரிதாகிய சர்வசம்ஹாரகாலத்தினும், நீக்கமும்=நீங்
குதலும், நிலையும் = நிலைபெற்றிருத்தலும், சூக்கமொடு = சூக்குமதேகத்தொடு,
தூலத்து=தூலதேகங்களும், சூறைமாருதத்து = சூறைக்காற்றின், எறியது=
சுழற்சியிலகப்பட்ட, வளியின் = இளங்தென்றற்காற்றைப்போல, கொட்க=
சுழலபெயர்க்கும், நிலைபெயரச் செய்கின்ற குழகன் = அழகினையுடையவன்,
முழுவதும்=சகலாண்டங்களையும், படைப்போன் = படைப்பவனுகிய (பிரம
தேவனையும்,) படைக்கும்=உற்பவப்பிக்கின்ற, பழயோன் = அநாதிமலமுத்தன்,
படைத்தவை=சிருஷ்டிப்பொருள்களனைத்தையும், காப்போன்=இரட்சிப்பவனு
கிய திருமாலையும், காக்கும்=காத்தருளுகின்ற, கடவுள்=தேவன், காப்பவை=
இவ்வாறுகாக்கப்பட்ட பொருகளை, கரப்போன்=சங்கரிப்பவன், கரப்பவை=
இவ்வாறுசங்கரிக்கப்பட்ட பொருள்களை, கருதா=மீட்டும்பிறவியை யடைவிக்
கினையாத, கருத்துடை = ஜீவகாருண்ய நிறைந்த மனத்தினையுடைய, கட
வுள்=முழுமுதற்பிரான், திருதகும்=அழகுபொருந்திய, அறுவகைச்சமயத்து=
அறுவகைப்பட்ட சமயங்களையுடைய, அறுவகையோர்க்கும் = உட்சமயிகளாறு
பேருக்கும், வீடுபேராய்நின்று=முத்திப்பேராய்விளங்கிய, விண்ணோர்பகுதி=அரி
பிரமாதிதேவவருக்கங்களனைத்தும், கீடம்= (தன்பெருமைக்குமுன் ஒருசிறிய)
புழுவை, புரையும் = நிகர்க்கின்ற, கிழவோன் = மேன்மைக்குறியவன், நாள்
தொறும்=தினந்தோறும், அருக்கனில்=சூரியனிடத்து, சோதி=பிரகாசத்தை,
அமைத்தோன்=அமைத்தவன், திருதகு=அழகுபொருந்திய, மதியில்=சந்திர
னிடத்து, தண்மை=குளிர்ச்சியை, வைத்தோன்=அமைத்தவன், திண்=பல
மும், திறல்=வெற்றியுமுடைய, தீயில்=அக்கினியில், வெம்மை = வெப்பத்
தை, செய்தோன்=படைத்தவன், பொய்தீர்=பொய்மைநீங்கிய (உண்மையரிய)
வானில்=ஆகாயத்தில், கலப்பு=வியாபிக்குந் தன்மையை, வைத்தோன்=உண்
டாக்கினவன், மேதகு=மேன்மையுடைய, காலில்=காற்றினிடத்து, ஊக்கம்=
விரைந்துசெல்லும்வன்மையை, கண்டோன்=அமைத்தவன்,நிழல்திகழ்=குளிர்
மையுடைய, நீரில்=ஜலத்தில், இன்=இனிய, சுவை=மதுரத்தை, நிகழ்ந்தோ
ன்=பொருந்தச்செய்தவன், வெளிப்பட=யாவருமறியும்படி, மண்ணில்=பூமியி
னிடத்து, திண்மை=(சராசரப்பொருள்களனைத்தையுந்தாங்கும்) வல்லமையை,
வைத்தோன்=அமைத்தவன், என்று என்று=என்றுபலவகையானுஞ்சொல்லப்
பட்டன, எனை=எத்தனை, பலகோடி=பலகோடிகளுள்ளனவோ, எனை=எத்தனை,
பிறவியும்=பலவாகியபிறவிகளுள்ளனவோ, அனைத்துஅனைத்து =அத்தனை
யத்தனைப்பொருள்களையும், அவ்வயின்= (அவைகட்குரிய) அவ்வவ்விடங்களி
ல் அடைத்தோன்=அமைத்தவன், அஃதான்று=அதுவேயல்லாமல், முன்னோ
ன்=அநாதியாயுள்ளவன், காண்க=நீயறிவாயாக, முழுதோன்=எல்லாப்பொரு
ளுமாய் விளங்குபவன், காண்க—.,தன்=தனக்கு, நேர்=ஒப்பு, இல்லோன்
இல்லாதவன், (தான்-எ-அசை) காண்க—ஏனம்= (விஷ்ணுவாகிய) பன்றியி

னது. தொல்=முதிர்ந்த, எயிறு = தந்தங்களை, அணிந்தோன் = தரித்தவன், காண்க—கானம்=காட்டிலசிக்கின்ற, புலி=புலியினது, உரி=தோலை, அரையோன்=அரையிலணிந்தவன், காண்க—, நீற்றோன் = திருவெண்ணீற்றையணிந்தவன், காண்க—. நினைதொறும் நினைதொறும்=யான் நினைக்குந்தோறும் நினைக்குந்தோறும், ஆற்றேன் = அவனதுபிரிவைப்பொறேன், காண்க—, அந்தோ=ஐயோ, கெடுவேன்=அழிவேன், இன்=இனிய, இசையாய்=நாதமாய், வீணையில்=வீணையென்னும்நரம்புக்கருவியில், இசைந்தோன்=இசைந்துநிற்பவன், காண்க—, அன்னது=அத்தன்மையதாகிய, ஒன்று=ஒன்றை, அவ்வயின்=அவவிடத்து, அறிந்தோன்=உணர்ந்தவன், காண்க—, பரமன்=மேலானவன், காண்க—. பழயோன்=அநாதியாயுள்ளவன், காண்க—. பிரமன்=பிரமதேவனும், மால்=திருமாலும், காணா=பார்க்கவொண்ணாத, பெரியோன்=பெருமையையுடையவன், காண்க—, அற்புதன் = ஞானவடிவானவன், காண்க—, அநேகன்=பலவருவங்களாயிருப்பவன், காண்க—, சொல்பதம்=சொல்லளவையை, கடந்த=மீறிய, தொல்லோன்=பழமையானவன், காண்க—, சித்தமும்=மனமும், செல்லா=சென்றறியவொண்ணாத, சேட்சியன்=தூரமாயிருப்பவன், காண்க—, பத்தி=அன்பாகிய, வலையில்=கண்ணியில், படுவோன்=சிக்குபவன், காண்க—, ஒருவன்=ஒப்பற்றவன், என்னும்=என்று (யாவரும்புகழத்தக்க) ஒருவன்=தனிமுதலாய் நிற்பவன், காண்க—, விரி=பரந்த, பொழில் முழுதும்—உலகமுழுவதும், ஆய்=ஆகி, விரிந்தோன்=வியாபித்தவன், காண்க—, அணுதரும் தன்மையில்=அணுத்தன்மையினும், ஐயோன்=நுட்பமானவன், காண்க—, இணைப்பு=ஒப்பிடுதற்கு, அரு=அருமையாகிய, பெருமையில்=பெருமையால், ஈசன்=தலைவன், காண்க—, அரியதில்=அருமையான பொருள்களுக்குள்ளே, அரிய அரியோன்=மிகவுமருமையானவன், காண்க—, மருவி=ஒவ்வொன்றிலும் பொருந்தி, எப்பொருளும்=எல்லாப்பொருள்களையும், வளர்ப்போன்=வளர்ப்பவன், காண்க—, நூலுணர்வு=சாஸ்திரஞானத்தாலும், உணரா=அறியப்படாத, நுண்ணியன்=நுட்பத்தையுடையவன், காண்க—, மேலொடுகீழாய் = உள்ளும்புறம்புமாய், விரிந்தோன் = (எல்லாப்பொருள்களிலும்) வியாபித்திருப்பவன், காண்க—, அந்தமும்=ஒடுக்கமும், ஆதியும்=தோற்றமும், அகன்றோன் = நீங்கினவன், காண்க—. பந்தமும் = (பிறவிக்கேதுவாகிய) பாசபந்தங்களையும், வீடும்=மோட்சத்தையும், படைப்போன்= (அவரவர்வினைக்கிடாக) அநுக்கிரகிப்பவன், காண்க—, நிற்பதும் = தாவரப்பொருள்களும் செல்வதும்=சங்கமப்பொருள்களும், ஆனவன் = ஆகிநின்றவன், காண்க— கற்பமும்=கற்பமாகியகால அளவையும், இறுதியும்=அவற்றின் முடிவுகளையும் கண்டோன் = கண்டவன், காண்க—, யாவரும் = எல்லாச் சமயத்தவரும் பெற= (தத்தங்கடவுளராகக்கொண்டு) அடைய, உறும்= (அவரவர் நினைத்த வடிவாய்வந்து) வந்தருளுகின்ற, ஈசன் = தலைவனானவன், காண்க—. தேவரும்=கடவுளரும், அறியா=தேடியறியாத, சிவன்=மங்களகரமானவன், காண்க—, பெண்=பெண்ணும், ஆண்=ஆணும், அலி=அலியும், என்னும்=என்று சொல்லப்படும், பெற்றியன்=தன்மையுடையவன், காண்க—, கண்ணால்=கண்களால், யானும்=நானும், கண்டேன்=பார்த்தேன், காண்க—, அருள் = தி

ருளே, நனி=மிகவும்,சுரக்கும்=சுரந்தருளிய, அமுதே=அமிர்தமே, காண்க—,
நணையின்=தனதருட்சத்தியின், பெருமை=ஆற்றலை, கண்டோன்=அறிந்த
ன், காண்க—, புவனியில்=பூமியில்,சேவடி=திருவடி,தீண்டினன்=பொருந்த
பெற்றவன், காண்க—, சிவன்என= (இத்தகயோனைச்) சிவபெருமானென்று,
ானும்=நானும், தேறினன் = தெளிந்தனன், காண்க—, அவன்=அத்தகுபெரு
ான், எனை=அடியேனை, ஆட்கொண்டு = அடிமையாகச்செய்து, அருளினன்
கருணைபாலித்தனன், காண்க—, குவளை=நீலோற்பலப்போலும், கண்ணி =
ண்களையுடைய வுமாதேவியை, கூறன் = இடப்பாகத்திலுடையவன், கா
ாக—, அவளும்=அத்தகைய உமாதேவியாரும், தானும் = தானாகியஇறைவ
வம், உடனே = உடன்பட்டிருக்க, (அவ்வுடன்பாடு) பரமானந்தம் = பேரா
ந்தமாகிய, பழங்கடல் = பெருங்கடலாயிற்றுஅதுவே, கரு=கருமையாகிய,
ா = பெரிய, முகிலின் = மேகத்தைப்போல, தோன்றி = எழுந்தருளி,
ிரு = அழகு, ஆர் = பொருந்திய, பெருந்துறை = திருப்பெருந்துறைஎன்
ற, வரையில் = மலையின்மேல், ஏறி = ஏறி, திருத்தகு = அழகுபொருந்
ிய, மின்ஒளி = ஒளியாகியமின்னல், திசைதிசை = திக்குகள்தோறும்,
ிரிய=பரவ, ஐம்புலம்=பஞ்சேந்திரியங்களாலுண்டாகிற, பந்தனை = ஆசையா
ய, வாள்=ஒளிபொருந்திய, அரவு=பாம்புகள், இரிய = ஓடவும், வெம்=வெப்
த்தையுடைய, துயர்=பிறவிநோயென்கிற, கோடை=வெயிலானது, மா=பெ
ய, தலை=தன்தலையைக்காட்டாமல், கரப்ப=ஒளிக்கவும்,நீடு=மிகுந்த, எழில்=
ழகுநிறைந்த, தோன்றி=செங்காந்தண்மலர்கள், வாள்ஒளி = மிகுந்தவொளி
யை, மிளிர=வீசவும், எம்தம்=எமது, பிறவியின் = பிறவிகளாகிய, கோபம்=
ந்திரயக்கோபப்பூச்சிகள், மிகுத்து=அதிகரிக்க, முரசு=பேரிகையைப்போல,
றிந்து=அதிர்ந்து, மாபெரும் = மிகவும்பெரிய, கருணையின் = கருணையோடு,
ழங்கி=முழங்கி, பூபுரை = தாமரைப்பூவின்குவிவைப்போன்ற,. அஞ்சலி=
விவை, காந்தள் = காந்தளின்பேரரும்புகள், காட்ட = காட்டவும், எஞ்சா=
றைவுபடாது, இன்=இனிய, அருள்=அருளாகிய, நுண்=நுட்பமாகிய, துளி
காள்ள=துளிகளுண்டாகவும், செம்=செவ்விய, சுடர்வெள்ளம்=ஒளிப்பெருக்
மானது, திசைதிசை=திசைகள்தோறும், தெவிட்ட = தேக்கவும், வரையுற=
லைபோற்பொருந்த, கேதம்=துன்பமாகிய, குட்டம்=குளம், கையற=அறவே
யாழிய, ஓங்கி=உயர்ந்து, இருமுச்சமயத்து=ஆறுசமயங்களாகிய, ஒரு=ஒப்ப
ற, பேய்த்தேரினை=கானல்நீரை, நீர்நசை = நீர்வேட்கையானது, தர=உண்
ாக, (அதனால்)வரும்=ஜலாதாரத்தைநாடிவந்த, நெடும்=நீண்ட, கண்=கண்க
ளயுடைய,மான்=மானினது, கணம்=கூட்டங்கள், தவம்=தவமாகிய, பெரும்=
பரிய, வாயிடை=வாயினால், பருகி=உண்டு, தளர்வொடும் = தளர்ச்சியோடும்,
வம்=வீணாகிய, பெருந்தாபம் = மிகுந்தநீர்வேட்கை, நீங்காது = நீங்காமல்,
சைந்தன=வருந்தினவாகவும், ஆயிடை = அவ்விடத்து, வானம் = வானமா
ிய, பேர்=பெரிய, ஆறு = ஆற்றினது, அகம்வயின் = உள்ளே, பாய்ந்தெழு
து=மூழ்கிஎழுந்து, இன்பம்=ஆனந்தமென்னும், பெரும்=பெரிய, சுழி=நீர்
சுழிகளை, கொழித்து=எறிந்து, சுழித்து=சுழற்சியடைந்து, எம்=எமது, பந்
ம்=ஆசையாகிய, மா=பெரிய, கரை=கரையை, பொருதி = மோதி, அலைத்து

இடித்து=அசைத்திடித்து, ஊழ்ஊழ்ஓங்கிய=ஒவ்வொருபிறவியினும்விதிவசத்தான்விருத்தியடைந்த, நங்கள் = நமது, இருவினை = நல்வினைதீவினையாகிய மா=பெரிய, மரம்=மரத்தை, வேர் = வேரோடு, பறித்துஎழுந்து = பிடுங்கிக்கொண்டெழுந்து, உருவ=முழுமையும், அருள் = திருவருளாகிய, நீர்=நீரை, ஓட்டா=ஓடச்செய்து, அரு=கிடைத்தற்கரிய, வரை = மலைகளிலுண்டாகிய, சந்தின்=சந்தனமரங்களால், வான்=பெரிய, சிறைகட்டி = அணையைக்கோலி, மட்டவிழ்=தேனைச்சிந்துகின்ற, வெறி=வாசனைதங்கிய, மலர் = மலர்கணிறைந்த, குளம்=வாய்குளங்களினிடங்களை, கோலி=வளைத்து, நிறை=மணம்நிறைந்த, அகில்=அகிற்கட்டைகளின், மாபுகை = பெரும்புகையோடுகூடிய, கரை=கரைகளை, அணை=சேர்ந்த, வண்டு=வண்டுகளை, உடை=உடைய, குளத்தின்=குளத்தில், மீக்கொள=அதிகரிக்க, மேன்மேல் = மேலுமேலும், மகிழ்தலின்=மகிழ்தலைப்போல, நோக்கி=பார்த்து, அருச்சனை=அர்ச்சனையாகிய, வயலுள்=விளைநிலத்தில், அன்பு=பத்தியாகிய, வித்து=விதையை, இட்டு = விதைத்து, தொண்டஉழவர்=அடியார்களாகியஉழவர்கள், ஆர=உண்ணும்படி, தந்த=கொடுத்த, அண்டத்து = சிதாகாயத்திலுள்ள, அரும்பெறல் = பெறுதற்கரிய, மேகன் = மேகம்போல்பவன், வாழ்க—, கரும்=கருமையாகிய, பணம்=படத்தையுடையபாம்பாகிய, கச்சை=கச்சையைக்கட்டிய, கடவுள்=கடவுளானவர், வாழ்க—, அருந்தவர்க்கு=அரியதவத்தையுடையவருக்கு, அருளும் = கிருபைசெய்கின்ற, ஆதி = முதல்வன், வாழ்க—, அச்சம் = (புனர்சன்மமுண்டோவென்னும்) அச்சத்தை, தவிர்த்த=நீக்கியருளிய, சேவகன் = சுத்தவீரனாகியகடவுள், வாழ்க—, நிச்சலும் = நாள்தோறும், ஈர்த்து=தனதுதிருவருளால்வலித்து, ஆட்கொள்வோன்=ஆண்டுகொள்பவன், வாழ்க—, சூழ்=வளைந்துகொண்ட, இரு=பெரிய, துன்பம் = பிறவித்துன்பங்களை, துடைப்போன் = ஒழித்தருள்பவன், வாழ்க—, எய்தினர்க்கு = தன்னைநாடிவந்தடைந்தவர்க்கு, ஆர் = நிறைந்த, அமுது=சருணாமிர்தத்தை, அளிப்போன்=தருபவன், வாழ்க—, கூர்இருள் = (சர்வசங்காரகாலமாகிய) பெரியஇருளில், கூத்தொடுகுளிப்போன் = ஆனந்தத்தாண்டவம்புரிபவன், வாழ்க—, பேர்=பெரிய, அமை=மூங்கிலினடியையொத்த, தோளி=தோள்களையுடையஉமாதேவியின், காதலன்=தலைவன், வாழ்க—, ஏதிலர்க்கு = தன்னைவணங்காதவர்க்கு, ஏதில் = அயலவனாய்நிற்கும், இறைவன்=கடவுள், வாழ்க—, காதலர்க்கு=அன்பினர்கட்கு, எய்ப்பினில்=இளைத்தகாலத்தில், வைப்பு = நிட்சேபம்போலுதவிசெய்பவன், வாழ்க—, நச்சு=விஷத்தையுடைய, அரவு=பாம்பினை, ஆட்டிய=அசைக்கின்ற, நம்பன்=நமதுபிரானாகியகடவுளுக்கு, போற்றி—, எம்மை=எமக்கு, பிச்சு=பித்து, ஏற்றிய=உண்டாக்கிய, பெரியோன் = மகாதேவனக்குபோற்றி—, நீற்றொரு=(சர்வசங்காரகாலத்தில் அரிப்பிரமாதி சராசரப்பொருள்களனைத்தையும் பாலநேத்திரத்தால்தகித்து, அச்சாம்பலாகிய) திருவெண்ணீற்றுப்பூச்சுடனே, தோற்ற=தோன்ற, வல்லோன் = வல்லவனாகியசிவபெருமானுக்கு, போற்றி—, நாற்றிசை=நான்குதிக்கிலும், நடப்பன=நடப்பவற்றை, நடாஅய் = நடத்துவித்து, கிடப்பன=கிடப்பவற்றை, கிடாஅய்=கிடத்தி, நிற்பன=நிற்பவற்றை, நிறீஇ=நிறுத்தி, சொல்பதம்=சொல்லளவையைக், கடந்த=இகந்த, தொல்லோன்=அனாதி

மலமுத்தன், உள்ளத்து=உள்ளமாகிய, உணர்ச்சியின் = அறிவினால், கொள்ளவும்படாஅன்=அறியக்கூடாதவன், கண்முதல்=கண்முதலாகிய, புலனால்=பஞ்சேந்திரியங்களினாலும்,காட்சியும்=அறியப்படுந்தன்மையும், இல்லோன்=இல்லாதவன், விண்முதல்=ஆகாயமுதலிய, பூதம் = பஞ்சமகாபூதங்களும், வெளிப்பட=தனது திருவருளால்தோன்ற, வகுத்தோன்=படைத்தவன், பூவில்=மலரினிடத்துண்டாகிய, நாற்றம்போன்று=வாசனையைப்போல, உயர்ந்து = ஓங்கி, எங்கும்=எல்லாப்பொருள்களினிடத்தும், ஒழிவுஅற = நீக்கமில்லாமல், நிறைந்து=வியாபித்து, மேவிய = பொருந்திய, பெருமை = மேன்மையையுடைய கடவுள், இன்று = இப்போது, எனக்கு = அடியேனுக்கு, எளிவந்து=(ஆசாரிய திருக்கோலமாய் எளிதிலெழுந்தருளி, அருளி = திருவருள் புரிந்து, அழிதரும் = அழிதற்குரிய, ஆக்கை = சரீரத்தை, ஒழியச்செய்த = மீட்டும்வராவகை நீக்கியருளிய, ஒண்பொருள் = சிறந்தபொருளானவன், இன்று = இப்பொழுது, எனக்கு = அடியேனுக்கு, எளிவந்திருந்தனன் = எளிதில்வந் தனுக்கிரகித்தனன், (அத்தகையோனுக்கு) போற்றி—, அளிதரும் = கனிந்தழிகின்ற, ஆக்கை = இவ்வுடம்பை, செய்தோன்=படைத்தவனுக்கு, போற்றி—, உள்ளம்= (அடியார்களது) மனத்தின்கண்ணே, ஊற்றிருந்து= (ஊற்றுநீர்போலத்) திருவருள்சுரந்து நின்று, களிப்போன்=களிப்பவன்பொருட்டு, போற்றி—, ஆற்றா=தாங்கவொண்ணாத, இன்பம் =ஆனந்தசாகரம், அலர்ந்து=பரவி, அலைசெய்ய=அலைகள்வீசாநிற்க, போற்றா =அதைப்பாதுகாவாத, ஆக்கையை=சரீரத்தை, பொறுத்தல் = வீணாகச்சுமத்தலை, புகலேன்=யான்தக்கதென்றுசொல்லேன், மரகதம்=மரகதமணியின், குவால்=கூட்டமும், மாமணி=மாணிக்கமணியின், பிறக்கம்=மிகுதியும், மின்=மின்னலைப்போல, ஒளிகொண்ட=ஒளியை வீசுகின்ற, பொன்ஒளி=பொன்னினது பிரகாசமும், திகழ=விளங்கவும், திசைமுகன்=நான்குதிக்குகளினிடத்தும், சென்று=போய், தேடினர்க்கு = தேடுகின்றவர்க்கு, ஒளித்தும் = மறைந்தும், முறையுளி = முறைமையாக, போற்றி = தொழுது, முயன்றவர்க்கு = முயற்சிற்றவர்க்கு, ஒளித்தும் = மறைந்தும், ஒற்றுமைகொண்டு = மனமொருமித்து, நோக்கும்=பார்க்கின்ற, உள்ளத்து = மனத்தையுடையவராய், உற்றவர்=அடைந்தவர்கள், வருந்த=மனம்வருந்தும்படி, உணர்த்தவர்க்கு = கடுஞ்சொல்சொல்பவர்கட்கு, ஒளித்தும்=மறைந்தும், மறை=வேதங்களின், திறம் = கூறுபாட்டை, நோக்கி = பலகாலாராய்ந்து, வருந்தினர்க்கு= (உண்மை விளங்காமல்) வருந்துகின்றவர்க்கு, ஒளித்தும் = மறைத்தும், இ = இந்த, தந்திரத்தில் = உபாயத்தால், காண்டும் = காண்போம், என்று = என்று நினைத்து, இருந்தோர்க்கு=இருந்தவர்களுக்கு, அ=அந்த, தந்திரத்தின்=உபாயத்தாலேயே, அவ்வயின்=அவர் நினைத்தவிடத்தில், ஒளித்தும்=மறைந்தும், முனிவு = வெறுப்பானது, அற=நீங்க, நோக்கி=பார்த்து, நனி=மிகவும், வரக்கவ்வி = வரப்பற்றி, ஆண்என=ஆணென்றுசொல்லும்படி, தோன்றி=விளங்கி, அலியென = பேடென்றுசொல்லும்படி, பெயர்ந்து = சஞ்சரித்து, வாள்=ஒளிபொருந்திய, நுதல்=நெற்றியையுடைய, பெண்என=பெண்ணென்று சொ

ல்லும்படி, ஒளித்தும்=மறைந்தும், சேண் = தூரமான, வயின் = இடத்தில், ஐம்புலன்=பஞ்சேந்திரியங்களையும், செல = செல்லும்படி, விடுத்து = விட்டு, அரு=அரிய, வரைதொறும்=மலைகள்தோறும், போய்=சென்று, துற்றவை = ஆகாரமுதலியவைகளை, துறந்த=நீங்கிய, வெறு = வெறுமையாகிய, உயிர் = உயிரையுடைய, ஆக்கை=சரீரத்தையுடைய, அரும்=அரிய, தவர்=தவசிகளுடைய, காட்சியுள்=அறிவினுள், திருந்த=திருத்தமாக, ஒளித்தும்=மறைந்தும், ஒன்று=ஒருபொருள், உண்டு=உளது, இல்லை=இலது, என்றென்று=அறிந்து சொல்லுகின்ற, அறிவு=அறிவுக்கும், ஒளித்தும்=மறைந்தும், பண்டு=ஆதிமுதல், பயில்தொறும்=பழகுந்தோறும், இன்று=இப்பொழுது, பயில்தொறும் =பழகுந்தோறும், ஒளிக்கும்=மறைகின்ற (சுபாவமுடைய) சோரனை=கள்வனை, கண்டனம்= பார்த்தோம், ஆர்மின் = ஆரவாரஞ்செய்யுங்கள், ஆர்மின் நாண்மலர் = அன்றலர்ந்தமலர்களாற்சமைத்த, பிணையலின் = மாலைகளால், தாள் = அவனது திருவடியை, தளையிடுமின்=கட்டுங்கள், சுற்றுமின் = நன்றாயிருக்கிச் சுற்றுங்கள், சூழ்மின் = சூழ்ந்துகொள்ளுங்கள், தொடர்மின் = பின்தொடர்ந்துசெல்லுங்கள், விடேன்மின் = விடாதேயுங்கள், பற்றுமின் = பிடித்துக்கொள்ளுங்கள், என்றனர் = என்று சொல்பவர்களுடைய, பற்று = பற்றுக்குஎட்டாமல், முற்று ஒளித்தும் = அறவேயொளித்தும், தன் = தனக்கு, நேர் = ஒப்பானவர்கள், இல்லோன்=வேறொருவருமில்லாதவன், தானேஆனதன்மை = அவ்வுவமைப் பொருளுந்தானேயாயிருந்த தன்மையை, என்நேர்அனையோர்=என்போன்றவர்கள், கேட்க=கேட்கும்படி, வந்துஇயம்பி=வந்துசொல்லி, அறைகூவி=வலிந்தழைத்து, ஆட்கொண்டுஅருளி=அடிமைகொண்டருளி, மறையோர்கோலம்=வேதியர்கோலத்தை, காட்டிஅருளலும்=காட்டினமாத்திரத்தில், உளையா=மனம்வருந்தி, அன்பு= மெய்யன்பினால், என்புஉருக=எலும்பும் உருகும்படி, ஓலம்இட்டு=முறையிட்டு, அலை=அலைகின்ற, கடல்=கடலின்கணுண்டாகிய, திரையின் =அலைகளைப் போல, ஆர்த்துஆர்த்து=இரைந்திரைந்து, ஓங்கி =மேலெழுந்து, தலை = தலையானது, தடுமாறு=தடுமாறி, வீழ்ந்து= விழுந்து, புரண்டு = புரண்டு, அலறி =கூச்சலிட்டு, பித்தரின்= பித்தர்களைப்போல, மயங்கி = மயக்கமடைந்து, மத்தரின்=உன்மத்தங்கொண்டவர்களைப்போல, மதித்து = மதித்து, நாட்டவர் = நாட்டிலுள்ளவர், மருளவும்=மயக்கமடையவும், கேட்டவர் = கேட்டவர்கள், வியப்பவும்=ஆச்சரியப்படவும், கடம்= மதநீரைப்பொழிகின்ற, களிறு = ஆண்யானைகளும், எற்றா=தாங்கப்பெறாத, தடம்பெருமதத்தின் = மிகவும்பெரியமதத்தினால், ஆற்றேன்ஆக= நான் பொறுக்காதவனாக, சுவை= இனியசுவையை, தரு=கொண்ட, கோல்தேன்கொண்டு = கொம்புத்தேனைக்கொண்டு, அவயவம் செய்தனன்=உறுப்புக்களைச் செய்யப்பட்டவன், எற்றார் = எதிர்த்தவர்களுடைய, மூதூர் = பழையவூரை, எழில்=அழகிய, நகை=சிரிப்பாகிய, எரியின்=நெருப்பினால், வீழ்வித்து=நீறாகிவிழச்செய்து, ஆங்குஅன்று = அக்காலத்தில், அருள்=திருவருளாகிய, பெரும்= பெரிய, தீயில் =நெருப்பில், அடியோம்= அடியோங்களாகிய, அடிக்குடில் = தன்அடிமைக்குடிகளில், ஒருத்த

ரும்=ஒருவராகிலும், வழாமல் = நவருமல், ஒடுக்கினன்= ஒடுக்கிக்கொண்டனன், தடம் = பெரிய, கையில்=கையின்கணுள்ள, நெல்லிக்கனி= நெல்லிக்கனிபோல, எனக்கு=அடியேனுக்கு, ஆயினன் = கிடைத்தான், சொல்லுவது= இதைப்பற்றிச்சொல்லவேண்டியதை, அறியேன்= அறிகிலேன், வாழிமுறையோ=வாழுதல்முறைமையோ, நாயேன் = நாயையொத்த நான், தமியேன்= இனிகணமேனும்பொறேன், தான்=அவன், என்னை=அடியேனை, செய்தது = செய்தவிதத்தை, தெரியேன்=அறியேன், ஆவா = ஐயோ, செத்தேன்= இறந்துஒழிந்தேன், அடியேற்கு=அடியேனுக்கு, அருளியது = திருவருள்புரிந்தவிதத்தை, அறியேன் = இன்னபடியென்றறிகிலேன், பருகியும் = உண்டும், ஆரேன்=திருப்தியடையேன், விழுங்கியும் =விழுங்கியும், ஒல்லகில்லேன் = அமைகிலேன், செழு=செழுமையாகிய, தண்=குளிர்ந்த, பாற்கடல் = திருப்பாற்கடலின், திரை=அலைகளை, புரைவித்து, ஒப்பாகச்செய்து, உவா=பூரணசந்திரன்உதயமாகின்ற பௌர்ணமைகாலத்தில்பெருகும், கடல் =சமுத்திரத்தில், நள்ளும்=பொருந்திய, நீர்=நீர்போல, உள் அகம் =மனத்தினுள்ளே, ததும்ப=ததும்ப, வாக்கு=சொல், இறந்து = கடந்து, அமுதம் =அமிர்தமானது, மயிர்க்கால்தொறும்=மயிர்க்கால்கள்தோறும், தேக்கிடச்செய்தனன் = தேங்கும்படிசெய்தனன், கொடியேன்=கொடியேனது, ஊன்தழை = பருத்தமாமிசபிண்டமாகிய, குரம்பைதோறும்=இதற்குமுன்னெடுத்ததேகங்களெல்லாவற்றையும் விட, நாய்=நாயினேனது, உடல்அகத்தே= இவ்வுடம்பின்கண்ணே, குரம்பைகொண்டு=சிறுகுடிலாகக்கொண்டு, இன்=இனிய, தேன் = தேனை, பாய்த்தி=பாயச்செய்து, நிரம்பிய = நிறைந்த, அற்புதமான = ஆச்சரியமான, அமுததாரைகள்=அமிர்ததாரைகளை, எற்பு=எலும்புகளின், துளைதொறும் = துளைகடோறும், ஏற்றினன் = ஏறச்செய்தனன், உருகுவது=உருகுவதாகிய, உள்ளங்கொண்டு=மனத்தைக்கொண்டு, ஓர்=ஒரு, உரு = வடிவத்தை, செய்தாங்கு=செய்ததுபோல, எனக்கு=அடியேனுக்கு, அள் = மிகுதியும், உளறு = உருகுகின்ற, ஆக்கை= உடம்பை, அமைத்தனன் = செய்தான், ஒள்ளிய = ஒளிபொருந்திய, கன்னல்=கரும்பையும், கனி =விளாங்கனியையும், தேர் = தேடித்திரிகின்ற, களிறுஎன=மதயானையைப்போல, கடைமுறை=இறுதிக்காலத்தில், என்னையும் = அடியேனையும், இருப்பது = இறுமாந்திருக்கும்பொருளாக, ஆக்கினன்=செய்தனன், என்னின் = என்னிடத்தில், கருணை = திருவருளாகிய, வான்=உயர்ந்த, தேன் = தேனனது, கலக்க = விரவிப்பாயும்படி, அருளொடுபராவு=அன்போடுகூடிய, அமுதாக்கினன் = அமிர்தமாக்கிக்கொண்டனன், பிரமன்=பிரமதேவனும், மால்=விஷ்ணுவும், அறியா = தேடியுங்காணுத. பெற்றியோன்=பெருந்தன்மையுடைய சிவபெருமான், ஏ-அசை, எ-று.

## விசேடவுரை.

அறுவகைச்சமயத் தறுவகையோர் என்றது - பற்பலபேதப்பட வழங்கும் சமயகோடியினுள், வைதிக சமயமாகிய, சைவம், வைஷ்ணவம், சாக்தம், சௌரம், காணபதம், கௌமாரம் என்னும் அறுசமயத்தவர்களை, வீடுபேறுய்

நின்றகிழவோன் என்பதை - "யாதொருதெய்வங் கொண்டீரத்தெய்வமாகியெங்கள், மாதொருபாகனார்தாம் வருவர்" என்னும், உமாபதிசிவாசாரியர் திருவாக்கானு முணர்க. அணுத்தருந்தன்மை யிலையோன் - என்றதை, "அண்டங்களெல்லாமணுவாகவணுக்களெல்லா மண்டங்களாகப் பெரிதாய்ச் சிறிதாயினானும்" என்னும் பரஞ்சோதிமுனிவர்வாக்கினும், "அணுவுக்கணுவா யப்பாலுக்கப்பாலாய்" என்ற ஔவையார் திருவாக்கினுமுணர்க. ஆக்கை - இது, யாக்கை என்பதன் திரிபு. யாக்கை — மகாமாயையென்பதொரு சத்திகன்மவசத்துக் கீடாகப்பூவின்மணத்தைக் காற்றுகொடுவந் தறிவிக்குமாறுபோலக் கன்மங்களுக்கான வனுபோகக்கருத்தை யவத்தா காலத்திலே யுண்டாக்கிக் கருவற்றாகவந்த ஆன்மாவச் சுக்கில சுரோணிதங்களிலே கூட்டிக் கட்டிவிக்கையால் யாக்கைஎன்று பெயராயிற்று. திசைமுகன்சென்று தேடினர்க்கொளித்தும், என்றதற்கு - போய்த்தேடின பிரம விஷ்ணுக்களுக் கொளித்து மெனப்பொருள் கூறுவாருமுளர். மத்தரின் மறித்து எனப்பாடபேதங் கொள்ளின், உன்மத்தரைப்போலத் தடைபட்டு எனப்பொருளுரைத்துக் கொள்க. ஏனத்தொல்லையி றணிந்தோனென்றது, சோமுகாசுரன் இப்பூமியைப் பாய்போற் சுருட்டிக்கொண்டு பாதாளமேசெல்ல, அதுகாலை விஷ்ணுதேவர் சுவேதவாரக வடிவாகச் சென்று அவனைச் சங்கரித்து பூமியை முன்போனிறுத்தி, அந்த இறுமாப்பினால் மதர்த்துத்திரிந்த ஞான்று சிவபெருமா னவ்வாருகத்தின் வலியையடக்கி அதன் தந்தங்களைப்பறித் தணிந்தனரென்பதை ஸ்காந்தபுராணத்துட் காண்க. கானப்புலியுரியரையோனென்றது - தாருகவன முனிவர் சிவபெருமான் மேல்விடுத்த வியாக்கிரமத்தை யழித்ததன் சருமத்தை ஆடையாகத்தரித்தமையை. இன்னிசை வீணையிலிசைந்தோனென்றது -கைலாயமலையை அடியோடு பெயர்த்தெடுத்த இராவணன் கர்வபங்கப்படும்படி, சிவபெருமான் தனது காற்பெருவிரனுதியாலம்மலையையழுத்த, அம்மலையின்கீழ் அகப்பட்டுவருந்திய அவ்விராவணன், தனது சிரங்களிலொன்றை வீணையாகக்கொண்டு சாமவேதத்தோத்திரம்புரிய, அதற்குளமகிழ்ந்து அவனுக்குத் திருவருள் சுரந்தமையை. கரும்பணக்கச்சைக் கடவுள் என்றது, சிவபெருமானணிந்துள்ள சர்ப்பங்கள் யாகத்தீயிற் பிறந்தனவாதலின் தேகங் கருநிறமடைந்துள்ளனவென்க. இதனை "மிடற்றில் விடமுடையீரும் மிடற்றைநக்கி - மிடற்றில் விடங்கொண்டவாறே - மிடற்றகத்து - மைத்தாமிருள்போலும் வண்ணங்கரிதாளோ, பைத்தாடு நும்மார்பிற்பாம்பு" என்னுமற்புதத் திருவருந்தாதியானுணர்க. ஏற்றூர் மூதூரெழினகையெரியின் மூழ்வித்தென்றது - திரிபுரசங்காரஞ் செய்தமையை,

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நான்காவது

# போற்றித்திருவகவல்.

## சத்திநூற்பத்தி.

நிலைமண்டிலவாசிரியப்பா.

திருச்சிற்றம்பலம்.

நான்முகன்முதலாவானவர்தொழுதெழ
வீரடியாலேமூவுலகளந்து
நாற்றிசைமுனிவருமைம்புலன்மலரப்
போற்றிசெய்கதிர்முடித்திருநெடுமாலன்
றடிமுடியறியுமாதரவதனிற்
கடுமுரணேனமாகிமுன்கலந்
தேழ்தலமுருவவிடந்துபின்னெய்த
தூழிமுதல்வசயசயவென்று
வழுத்தியுங்காணாமலரடியிணைகள்
வழுத்துதற்கெளிதாய்வார்கடலுலகினில்
யானைமுதலாவெறும்பீறாய
வூனமில்யோனியினுள்வினைபிழைத்து
மானுடப்பிறப்பினுண்மாதாவுதரத்
தீனமில்கிருமிச்செருவினில்பிழைத்து
மொருமதித்தான்றியினிருமையிற்பிழைத்து
மிருமதிவிளைவினொருமையிற்பிழைத்து
மும்மதிதன்னுளம்மதம்பிழைத்து
மீரிருதிங்களிற்பேரிருள்பிழைத்து
மஞ்சுதிங்களின்முஞ்சுதல்பிழைத்து
மாறுதிங்களினூறலர்பிழைத்து

மேழுதிங்களிற்றாழ்புவிபிழைத்து
மெட்டுத்திங்களிற்கட்டமும்பிழைத்து
மொன்பதில்வருதருதுன்பமும்பிழைத்துந்
தக்கதசமதிதாயொடுதான்படுந்
துக்கசாகரத்துயரிடைப்பிழைத்து
மாண்டுகடோறுமடைந்தவக்காலை
யீண்டியுமிருத்தியுமெனைப்பலபிழைத்துங்
காலைமலமொடுகடும்பகற்பசிநிசி
வேலைநித்திரையாத்திரைபிழைத்துங்
கருங்குழற்செவ்வாய்வெண்ணகைக்கார்மயி
லொருங்கியசாயனெருங்கியுண்மதர்த்துக்
கச்சறநிமிர்ந்துகதிர்த்துமுன்பணைத்
தெய்த்திடைவருந்தவெழுந்துபுடைபரந்
தீர்க்கிடைபோகாவிளமுலைமாதர்தங்
கூர்த்தநயனக்கொள்ளையிற்பிழைத்தும்
பித்தவுலகர்பெருந்துறைப்பரப்பினுண்
மத்தக்களிறெனுமவாவிடைபிழைத்துங்
கல்வியென்னும்பல்கடற்பிழைத்துஞ்
செல்வமென்னுமல்லலிற்பிழைத்து
நல்குரவென்னுந்தொல்விடம்பிழைத்தும்
புல்வரம்பாயபலதுறைபிழைத்துந்
தெய்வமென்பதோர்சித்தமுண்டாகி
முனிவிலாததோர்பொருளதுகருதலு
மாறுகோடிமாயாசத்திகள்
வேறுவேறுதம்மாயைகடொடங்கின
வாத்தமானாயலவர்கூடி
நாத்திகம்பேசிநாத்தழும்பேறினர்
சுற்றமென்னுந்தொல்பசுக்குழாங்கள்
பற்றியழைத்துப்பதறினர்பெருகவும்
விரதமேபரமாகவேதியருஞ்
சரதமாகவேசாத்திரங்காட்டினர்
சமயவாதிகடத்தமதங்களே
யமைவதாகவரற்றிமலைந்தனர்
மிண்டியமாயாவாதமென்னுஞ்
சண்டமாருதஞ்சுழித்தடித்தாஅர்த்

துலோகாயதனெனுமொண்டிறற்பாம்பின்
கலாபேதத்தகடுவிடமெய்தி
யதிற்பெருமாயையெனைப்பலசூழவுந்
தப்பாமேதாம்பிடித்ததுசலியாத்
தழலதுகண்டமெழுகதுபோலத்
தொழுதுளமுருகியழுதுடல்கம்பித்
தாடியுமலறியும்பாடியும்பரவியுங்
கொடிறும்பேதையுங்கொண்டதுவிடாதெனும்
படியேயாகிநல்லிடையறாவன்பிற்
பசுமரத்தாணியறைந்தாற்போலக்
கசிவதுபெருகிக்கடலெனமறுகி
யகங்குழைந்தனுகுலமாய்மெய்விதிர்த்துச்
சகம்பேயென்றுதம்மைச்சிரிப்ப
நாணதுவொழிந்துநாடவர்பழித்துரை
பூணதுவாகக்கோணுதலின்றிச்
சதுரிழந்தறிமால்கொண்டுசாருங்
கதியதுபரமாவதிசயமாகக்
கற்றாமனமெனக்கதறியும்பதறியு
மற்றோர்தெய்வங்கனவிலுநினையா
தருபரத்தொருவனவனியில்வந்து
குருபரனாகியருளியபெருமையைச்
சிறுமையென்றிகழாதேதிருவடியிணையைப்
பிறிவினையறியாநிழலதுபோல
முன்பின்னாகிமுனியாதத்திசை
யென்புநைந்துருகிநெக்குநெக்கேங்கி
யன்பெனுமாறுகரையதுபுரள
நன்புலனொன்றிநாதவென்றரற்றி
யுரைதடுமாறியுரோமஞ்சிலிர்ப்பக்
கரமலர்மொட்டித்திருதயமலரக்
கண்களிகூரநுண்டுளியரும்பச்
சாயாவன்பினைநாடொறுந்தழைப்பவர்
தாயேயாகிவளர்த்தனைபோற்றி
மெய்தருவேதியனாகிவினைகெடக்
கைதரவல்லகடவுள்போற்றி
யாடகமதுரையரசேபோற்றி

கூடலிலங்குகுருமணிபோற்றி
தென்றில்லைமன்றினுளாடிபோற்றி
யின்றெனக்காரமுதானாய்போற்றி
மூவாநான்மறைமுதல்வாபோற்றி
சேவார்வெல்கொடிச்சிவனேபோற்றி
மின்னாருருவவிகிர்தாபோற்றி
கன்னாருரித்தகனியேபோற்றி
காவாய்கனகக்குன்றேபோற்றி
யாவாவென்றனக்கருளாய்போற்றி
படைப்பாய்காப்பாய்துடைப்பாய்போற்றி
யிடரைக்களையுமெந்தாய்போற்றி
யீசபோற்றியிறைவபோற்றி
தேசப்பளிங்கின்றிரளேபோற்றி
யரைசேபோற்றியமுதேபோற்றி
விரைசேர்சரணவிகிர்தாபோற்றி
வேதிபோற்றிவிமலாபோற்றி
யாதிபோற்றியறிவேபோற்றி
கதியேபோற்றிகனியேபோற்றி
நதிசேர்செஞ்சடைநம்பாபோற்றி
யுடையாய்போற்றியுணர்வேபோற்றி
கடையேனடிமைகண்டாய்போற்றி
யையாபோற்றியணுவேபோற்றி
சைவாபோற்றிதலைவாபோற்றி
குறியேபோற்றிகுணமேபோற்றி
நெறியேபோற்றிநினைவேபோற்றி
வானோர்க்கரியமருந்தேபோற்றி
யேனோர்க்கெளியவிறைவாபோற்றி
மூவேழ்சுற்றமுரணுறுநரகிடை
யாழாமேயருளரசேபோற்றி
தோழாபோற்றிதுணைவாபோற்றி
வாழ்வேபோற்றியென்வைப்பேபோற்றி
முத்தாபோற்றிமுதல்வாபோற்றி
யத்தாபோற்றியரனேபோற்றி
யுரையுணர்விறந்தவொருவபோற்றி
விரிகடலுலகின்விளைவேபோற்றி

யருமையிலெளியவழகேபோற்றி
கருமுகிலாகியகண்ணேபோற்றி
மன்னியதிருவருண்மலையேபோற்றி
யென்னையுமொருவனாக்கியிருங்கழற்
சென்னியில்வைத்தசேவகபோற்றி
தொழுதகைதுன்பந்துடைப்பாய்போற்றி
யழிவிலாவானந்தவாரிபோற்றி
யழிவதுமாவதுங்கடந்தாய்போற்றி
முழுவதுமிறந்தமுதல்வாபோற்றி
மானேர்நோக்கிமணாளாபோற்றி
வானகத்தமரர்தாயேபோற்றி
பாரிடையைந்தாய்ப்பரந்தாய்போற்றி
நீரிடைநான்காய்நிகழ்ந்தாய்போற்றி
தீயிடைமூன்றாய்த்திகழ்ந்தாய்போற்றி
வளியிடையிரண்டாய்மகிழ்ந்தாய்போற்றி
வெளியிடையொன்றாய்விளைந்தாய்போற்றி
யளிபவருள்ளத்தமுதேபோற்றி
கனவிலுந்தேவர்க்கரியாய்போற்றி
நனவிலுநாயேற்கருளினைபோற்றி
யிடைமருதுறையுமெந்தாய்போற்றி
சடையிடைக்கங்கைதரித்தாய்போற்றி
யாரூரமர்ந்தவரசேபோற்றி
சீரார்திருவையாறாபோற்றி
யண்ணாமலையெம்மண்ணாபோற்றி
கண்ணாரமுதக்கடலேபோற்றி
யேகம்பத்துறையெந்தாய்போற்றி
பாகம்பெண்ணுருவானாய்போற்றி
பராய்த்துறைமேவியபரனேபோற்றி
சிராப்பள்ளிமேவியசிவனேபோற்றி
மற்றோர்பற்றிங்கறியேன்போற்றி
குற்றாலத்தெங்கூத்தாபோற்றி
கோகழிமேவியகோவேபோற்றி
யீங்கோய்மலையெந்தாய்போற்றி
பாங்கார்பழனத்தழகாபோற்றி
கடம்பூர்மேவியவிடங்காபோற்றி

யடைந்தவர்க்கருளுமப்பாபோற்றி
யித்திதன்னின்கீழிருமூவர்க்
கத்திக்கருளியவரசேபோற்றி
தென்னாடுடையசிவனேபோற்றி
யெந்நாட்டவர்க்குமிறைவாபோற்றி
யேனக்குருளைக்கருளினைபோற்றி
மானக்கயிலைமலையாய்போற்றி
யருளிடவேண்டுமம்மான்போற்றி
யிருள்கெடவருளுமிறைவாபோற்றி
தளர்ந்தேனடியேனமியேன்போற்றி
களங்கொளக்கருதவருளாய்போற்றி
யஞ்சேலென்றிங்கருளாய்போற்றி
நஞ்சேயமுதாநயந்தாய்போற்றி
யத்தாபோற்றியையாபோற்றி
நித்தாபோற்றிநிமலாபோற்றி
பத்தாபோற்றிபவனேபோற்றி
பெரியாய்போற்றிபிரானேபோற்றி
யரியாய்போற்றியமலாபோற்றி
மறையோர்கோலநெறியேபோற்றி
முறையோதரியேன்முதல்வாபோற்றி
யுறவேபோற்றியுயிரேபோற்றி
சிறவேபோற்றிசிவமேபோற்றி
மஞ்சாபோற்றிமணாளாபோற்றி
பஞ்சேரடியாள்பங்காபோற்றி
யலந்தேனாயேனடியேன்போற்றி
யிலங்குசுடரெம்மீசாபோற்றி
கவைத்தலைமேவியகண்ணேபோற்றி
குவைப்பதிமலிந்தகோவேபோற்றி
மலைநாடுடையமன்னேபோற்றி
கலையாரரிகேசரியாய்போற்றி
திருக்கழுக்குன்றிற்செல்வாபோற்றி
பொருப்பமர்பூவணத்தரனேபோற்றி
யருவமுமுருவமுமானாய்போற்றி
மருவியகருணைமலையேபோற்றி
துரியமுமிறந்தசுடரேபோற்றி

தெரிவரிதாகியதெளிவேபோற்றி
தோளாமுத்தச்சுடரேபோற்றி
யாளானவர்கட்கன்பாபோற்றி
யாராவமுதேயருளேபோற்றி
பேராயிரமுடைப்பெம்மான்போற்றி
தாளியறுகின்றாராய்போற்றி
நீளொளியாகியநிருத்தாபோற்றி
சந்தனச்சாந்தின்சுந்தரபோற்றி
சிந்தனைக்கரியசிவமேபோற்றி
மந்திரமாமலைமேயாய்போற்றி
யெந்தமையுய்யக்கொள்வாய்போற்றி
புலிமுலைபுல்வாய்க்கருளினைபோற்றி
யலைகடன்மீமிசைநடந்தாய்போற்றி
கருங்குருவிக்கன்றருளினைபோற்றி
யிரும்புலன்புலரவிசைந்தனைபோற்றி
படியுறப்பயின்றபாவகபோற்றி
யடியொடுநடுவீறானாய்போற்றி
நரகொடுசுவர்க்கநானிலம்போற்றி
பரகதிபாண்டியற்கருளினைபோற்றி
யொழிவறநிறைந்தவொருவபோற்றி
செழுமலர்ச்சிவபுரத்தரசேபோற்றி
கழுநீர்மாலைக்கடவுள்போற்றி
தொழுவார்மையறுணிப்பாய்போற்றி
பிழைப்புவாய்ப்பொன்றறியாநாயேன்
குழைத்தசொன்மாலைகொண்டருள்போற்றி
புரம்பலவெரித்தபுராணபோற்றி
பரம்பரஞ்சோதிப்பரனேபோற்றி
போற்றிபோற்றிபுயங்கப்பெருமான்
போற்றிபோற்றிபுராணகாரண
போற்றிபோற்றிசயசயபோற்றி.

திருச்சிற்றம்பலம்.

(ப-ரை.) நான்முகன் = நான்குதிருமுகங்களையுடைய பிரமதேவன், முதலா = முதலாகிய, வானவர் = தேவர்களெல்லோரும், தொழுதெழ = வணங்குநிற்க, ஈர் அடியால் = இரண்டுதிருவடிகளைக்கொண்டு, மூவுலகம் = மூன்றுஉலகங்களையும் அளந்து—, நால்திசை = நான்குதிக்கிலுமுள்ள, முனிவரும் = தேவர்களும்

ஐம்புலன்=தமது பஞ்சேந்திரியங்களும், மலர = மகிழும்படி, போற்றிசெய் = வணங்குகின்ற, கதிர்=கிரணங்களையுடைய, முடி=திருமுடியமைந்த, திருநெடுமால் = அழகிய திருமால், அன்று = அக்கினிமலையாய்நின்றநாளில், அடி = அடியையும், முடி=முடியையும், அறியும் = அறியவேண்டுமென்கிற, ஆதரவு அதனில் = விருப்பத்தினால், கடு=வேகமும், முரண்=வலிமையுமுள்ள, ஏனம் ஆகி=வராகமாகி, முன்கலந்து=முன்வந்து, ஏழ்தலம்=ஏழுலகங்களும், உருவ= ஊடுருவும்படி, இடந்து = பூமியைத்தோண்டிச்சென்று, பின் = பின்பு, எய்த்து=இளைத்து, ஊழிமுதல்வனே = படைப்புக்காலத்திற்கு முற்பட்டவனே, சயசயவென்று=வெற்றியடைக வெற்றியடைகவென்று, வழுத்தியும் =துதித்தும், காணா=தரிசிக்கப்பெறாத, மலர்=தாமரைமலர்போன்ற, அடியிணை=உபய பாதங்கள், வழுத்துதற்கு = எம்போலியர் துதித்தற்கு, எளிதாய் = எளிதாகி, வார்=நீண்ட, கடல்=கடலாற்சூழப்பட்ட, உலகினில்=உலகத்தில், ஆனைமுதலா=யானையேமுதலாக, எறும்பு = எறும்புகள், ஈறு ஆய = இறுதியாகவுள்ள, ஊனம்இல்=ஊனமில்லாத, யோனியினுள்=(எண்பத்திநான்குலட்சம்) யோனி பேதங்களில், வினை = செய்தவினைகளுக்கீடாகத்தங்கியிருந்து, பிழைத்தும்= தப்பியும், மானுடப்பிறப்பினுள்=மனிதப்பிறப்பில், மாதாவுதரத்து=தாய்வயிற்றில், ஈனம்இல்=குறைவில்லாத, கிருமி=புழுக்களின், செருவினில்=போருக்கு, பிழைத்தும் = தப்பியும், ஒருமதிதான்றியின் = முதலாவதுமாதத்தின், இருமையில்=நிறைவில், பிழைத்தும்—, இருமதி = இரண்டாவதுமாதத்தின், விளைவின்=நிகழ்ச்சியில், ஒருமையில்பிழைத்தும்=ஒருமைப்பாட்டில்தப்பியும், மும்மதிதன்னுள்=மூன்றாவதுமாதத்தில் உண்டாகின்ற, அம்மதம்=அந்தமதப் பெருக்குக்கு, பிழைத்தும்—, ஈர்இருதிங்களில் = நான்காம்மாதத்தில், பேர்இருள்=பெரியஇருளுக்கு, பிழைத்தும்—, ஐந்துதிங்களில் = ஐந்தாவதுமாதத்தில், முஞ்சுதல்=சாதலினின்றும், பிழைத்தும்—, ஆறுதிங்களில் = ஆறாவது மாதத்திலுண்டாகிற, உளறு = துன்பத்திற்கும், அலர் = பழிக்கும், பிழைத்தும்—, எழுதிங்களில்=ஏழாவதுமாதத்தில், தாழ்=தாழ்ந்த, புவி=உலகத்தில், பிழைத்தும்—, எட்டுதிங்களில் = எட்டாவதுமாதத்தில் உண்டாகிற, கஷ்டமும்=பிரயாசையிலும், பிழைத்தும்—, ஒன்பதில்=ஒன்பதாமாசத்தில், வருதரு=வருகிற, துன்பமும்=துன்பத்திற்கும், பிழைத்தும்—, தக்க = தகுதியாகிய, தசமதி=பத்தாமாதத்தில், தாயொடு=தாயுடன், தான்படும்=தானனுபவிக்கின்ற, துக்கசாகரம்=துன்பக்கடலிலாழ்கின்ற, துயரிடை = துன்பங்களிலிருந்து, பிழைத்தும்—, ஆண்டுகள்தோறும் = வருடங்களெல்லாம், அடைந்த= நிரப்பின, அக்காலை = பிரசவகாலத்தில், ஈண்டியும்=(யோனித்துவாரத்தால்) நெருங்கியும், இருத்தியும்=இருக்கச்செய்தும், எனை = மற்றும், பல=பலதுன்பங்களுக்கு, பிழைத்தும்—, காலை=விடியற்காலையில், மலமொடு=மலவுபாதியோடு, கடும்பகல்=மத்தியான்னகாலத்தில், பசி=பசியினின்றும், நிசிவேலை= இரவில், நித்திரை=தூக்கத்தினின்றும், யாத்திரை = பற்றும்பலசஞ்சாரங்களினின்றும், பிழைத்தும்—, கரும் = கருமையாகிய, குழல்=அளகபாரத்தை, செவ்வாய்=சிவந்தவாயையுடைய, வெண்நகை = வெள்ளைத்தந்தபந்திகளையும்,

கார்=கார்காலத்திலுவக்கின்ற, மயில்=மயிலானது, ஒருங்கிய=கண்டொதுங்கப்பெற்ற, சாயல் = தோற்றத்தையும், நெருங்கி=இடைவெளியின்றி அடர்ந்து, உள்மதர்த்து = உள்ளேகனத்து, கச்சுஅற = வார்க்கட்டறும்படி, நிமிர்ந்து = இறுமாந்து, கதிர்த்து = ஒளியையுடையனவாகி, முன் = முன்னே, பணைத்து=பருத்து, இடை = இடையானது, எய்த்து=இளைத்து, வருந்த = வருந்தும்படி, எழுந்து = விம்மி, புடைபரந்து = சுற்றிடங்களைக்கவர்ந்து, ஈர்க்கு=சிறுதுரும்பும், இடைபோகா = நடுவேநுழையப்பெறாத, இளமுலை=முற்றாதமுலைகளையுமுடைய, மாதர்=பெண்களது, கூர்த்த=கூர்மைதங்கிய, நயனம்=கண்களின், கொள்ளையில்=கூட்டத்தில், பிழைத்தும்—, பித்தஉலகில்=மயக்கத்தையுடைய வுலகிலுள்ளவர்வகுத்த, பெருந்துறை=மிகவும்விரிந்தபற்பலபேதங்களுள், மத்தம்=உன்மத்தங்கொண்ட, களிறுஎன்னும்=யானையெனஉவமித்துச்சொல்லத்தக்க, அவாஇடை=ஆசைகளுக்கு, பிழைத்தும்—, கல்விஎன்னும் = கல்வியென்கிற, பல்கடல் = பலகடல்களினின்றும், பிழைத்தும்—, செல்வம்என்னும்=ஐஸ்வரியமென்கிற, அல்லலில்=துயரத்தினின்றும், பிழைத்தும்—, நல்குரவுஎன்னும் = வருமையென்கிற, தொல் = பழமையாகிய, விஷம்=விஷத்தினின்றும், பிழைத்தும்—, புல்வரம்புஆய = தாழ்ந்தசமயங்களாகிய, பல்துறை = பலதுறைகளினும், பிழைத்தும்—, தெய்வம்என்பது=தெய்வமுண்டென்பதாகிய, ஓர் = ஒரு, சித்தமுண்டாகி = நினைப்புண்டாகி, முனிவு=வெறுப்பு, இலாதது = அற்றதாகிய, ஓர் = ஒரு, பொருளது=பொருளை, கருதலும் = நினைத்தலும், ஆறுகோடி = ஆறுகோடியாகிய, மாயாசத்திகள்=மகாமாயைகள், வேறுவேறு=வெவ்வேறாயுள்ள, யாயைகள்=தம்முடையமாயைகளை, தொடங்கின—, ஆத்தம்ஆனோர் = நட்பாயிருந்தவரும், அயலவர்=அயலாயினோரும், கூடி= ஒன்றுசேர்ந்து, நாஸ்திகம்பேசி = நாஸ்திகவாதம்செய்து, நா=நாவில், தழும்பு=தடிப்பு, எறினர் = ஏறப்பெற்றார்கள், சுற்றம்என்னும்=உறவினர்என்கிற, தொல்=பழமையாகிய, பசுகுழாங்கள்=பசுக்கூட்டங்கள், பற்றி=தொடர்ந்து, அழைத்து=அழைத்து, பதறினர்=பதறினவர்களாய், பெருகவு—, விரதமே = பலவகைப்பட்டவிரதங்களையே, பரம்ஆக=மேலானதாக, வேதியரும்=மறையவர்களும், சரதம்ஆகவே=உண்மையாகவே, சாத்திரம்காட்டினர்=சாஸ்திரகற்பிதஞ்செய்துவைத்தனர், சமயவாதிகள் = சமயமேமேலானதென்று வாதிப்பவர்கள், தத்தம்=தங்கள்தங்கள், மதங்களே = சமயங்களை, அமைவதாக = (பரத்துவநிச்சயம்) பொருந்துவதாக, அரற்றி = பல்காற்சொல்லி, மலைந்தனர்=போர்செய்தார்கள், மிண்டிய=நெருங்கிய, மாயாவாதம்என்னும்=மாயாவாதமென்கிற, சண்டமாருதம் = பெருங்காற்றானது, சுழித்துஅடித்து=சுழன்றுவீசி, ஆர்த்து=ஆரவாரித்து, உலோகாயதன்என்னும்=உலோகாயதனென்கிற, ஒள்=ஒள்ளிய, திறல்=சயங்கொண்ட, பாம்பின்=பாம்பினது, லாபேதத்த=சாஸ்திரவிகற்பமமைந்த, கடு=கடிய, விஷம்=விஷத்தையடைந்து, அதின்=அதனால், பல=பலவகைப்பட்ட, பெரு=பெரிய, மாயை=மாயைகள், என்னை=அடியேனை, சூழவும்=சூழ்ந்துகொள்ளவும், தப்பாமே=(இவற்றாற்சிறிதும்) மனத்தளர்ச்சியடையாமல், தாம்=தாம், (அல்லது அசைபெனினும்பொருந்தும்) பிடித்தது=கொண்டகொள்கையில், சலியா=மனஞ்சலித்துவிட்டு

விடாமல், தழல்=நெருப்பை, கண்ட=சேர்ந்த, மெழுகுபோல = மெழுகைப் போல, தொழுது=வணங்கி, உள்ளம்=மனம், உருகி=கரைந்து, அழுது—, உடல்=தேகம், கம்பித்து = நடுங்கி, ஆடியும் = ஆனந்தக்கூத்தாடியும், அலறியும்=அரற்றுதல்செய்தும், பாடியும்=பாடுதல்செய்தும், பரவியும்=வழிபட்டும், கொடிறும்=குறடும், பேதையும் = மூடனும், கொண்டது = தான்பிடித்தபிடியை, விடாதுஎனும்படியே = விடாதென்று சொல்லுகிற பழமொழிப்படி, ஆகி=ஆய், நல்=நல்ல, இடைஅறா=நடுவேநீங்காத, அன்பின் = அன்பினால், பசுமரத்து=பச்சைமரத்தில், ஆணி=ஆணியை, அறைந்தாற்போல=அடித்தது போல,கசிவுபெருகி=மனவுருக்கம்பெருகி, கடல்என=கடல்போல, மறுகி=மயக்கமடைந்து, அகம்=மனம், குழைந்து=தளர்ந்து, அநுகுலமாய்=அதற்கிணங்கி, மெய்=தேகம், விதிர்த்து=நடுக்கமடைந்து, சகம்=உலகமானது, பேய்என்று= பேய்போன்றவனென்று,தம்மைச்சிரிப்ப=தம்மைச்சிரிக்கும்படி,நாணது=வெட்கத்தை, ஒழித்து=விட்டு, நாடவர்=உலகத்தார், பழித்து=இகழ்ந்து, உரை= சொல்லுஞ்சொற்களை, பூண்ஆக=ஆபாணமாகக்கொண்டு,கோணுதல்=மனக்கோணல், இன்றி=இல்லாமல், சதுர்=வல்லமையை, இழந்து = ஒழித்து, அறி= அறியத்தக்க, மால்=மயக்கத்தை, கொண்டு=அடைந்து, சாரும்=தாம்அடைகின்ற, கதியது=பரகதியையே, பரமம்=மேலான, அதிசயமாக=ஆச்சரியமாகக் கொண்டு, கற்றா=கன்றையுடையபசுவின், மனம்என = மனத்தைப்போல, கதறியும்=கூவியும், பதறியும்=தேகம்நடுங்கியும், மற்றுஓர்தெய்வம்=(சிவபெருமானையன்றி) வேறொருஅநித்தியதேவர்களை, கனவிலும் = ஸ்வப்பனத்திலும், நினையாது=நினையாமல், அரு = சொல்லுதற்கரிய, பரத்து = பரத்துவத்தையுடைய, ஒருவன்=ஒப்பற்றசிவபெருமான், குருபரன்ஆகி=மேலானஞாநாசாரியத் திருமேனிகொண்டு, அவனியில் = பூமியில், வந்து = எழுந்தருளிவந்து, அருளிய=உபதேசித்தருளிய, பெருமையை=மேன்மையை, சிறுமைஎன்று=அற்பமென்று, இகழாது=இகழாமல், திருவடிஇணையை=அவனதுபயபாதங்களை, பிறிவினை=பிரிவென்பதை, அறியா=ஒருகாலத்திலுமறியாத, நிழலதுபோல= சாயாத்தோற்றத்தைப்போல, முன்பின்ஆகி=முன்னும்பின்னுமாய்,முனியாது= வெறுப்படையாமல், அத்திசை = ஆசாரியனெழுந்தருளி அநுக்கிரகித்ததிசையை, என்பு=எலும்பும், நைந்து=இளகும்படி = உருகி=மனங்கரைந்து, நெக்குநெக்கு=நெகிழ்ந்துநெகிழ்ந்து, ஏங்கி=இரங்கி, அன்புஎன்னும்=அன்பென்றுசொல்லப்படுகிற, ஆறு = நதியானது, கரைபுரள = கரையைக்கடந்துவர, நன்=நல்ல, புலன் = பஞ்சேந்திரியங்களும், ஒன்றி = ஒருமைப்பட்டு, நாதஎன்று=இறைவனேயென்று, அரற்றி=அலறி, உரை=சொற்கள், தடுமாறி=தடுமாற்றமடைய, உரோமம்=மயிர்கள், சிலிர்ப்ப=குச்செறிய, கரம்=கைகளாகிய மலர்=மலர்களை, மொட்டித்து=குவித்து, இருதயம்=மனமானது, மலர=சந்தோஷத்தினால்விகசிக்க, கண்=கண்கள், களிகூர=ஆனந்தமடைய, (அதனால்) நுண்=நுண்ணிய, துளி=ஆனந்தபாஷ்பம், அரும்ப = உண்டாக, சாயா=கெடாத, அன்பினை=அன்பை, நாள்தொறும்=நாடோறும், தழைப்பவர்=வளர்ப்பவர்கட்கு, தாயேஆகி=தாயாகி, வளர்த்தனை=வளர்த்தாய், போற்றி=உனக்கு

வணக்கம், மெய்=உண்மைநிலையை, தரு=எனக்குபதேசித்தருளிய, வேதியன் ஆகி=வைதிகப்பிராமணனாகி, வினைகெட = எனது இருவினைப்பகுதியுமறவே யொழிய, கைதரவல்ல = கைகொடுத்துதவவல்ல, கடவுள்=கடவுளுக்கு, போற்றி—, ஆடு அகம்=கான்மாறியாடியருளுமிடமாகிய, மதுரைக்கு=மதுராநகரத்திற்கு, அரசே = அரசனாகிய சோமசுந்தரக்கடவுளே, போற்றி—, கூடல்= திருவாலவாயில், இலங்கு=விளங்காநின்ற, குருமணி = ஒளிநிறைந்தமாணிக்கமே, போற்றி—, தென்=அழகிய, தில்லை=தில்லைவனமாகிய, (சிதம்பரக்ஷேத்திரத்தில் விளங்கும்)மன்றினுள் = கனகசபையின்கண் = ஆடி=நடனஞ்செய்பவனே, போற்றி—, இன்று=தற்சமயம், எனக்கு=அடியேனுக்கு, ஆர்=கிடைத்தற்கரிய, அமுது ஆனாய்=அமிர்தமானவனே, போற்றி—, மூவா=கெடாத நான்மறை=சதுர்வேதங்களாலுமறியப்படாத, முதல்வா=முதல்வனே, போற்றி—, சேஆர் = இடபரூபமாய்விளங்கும், வெல் = வெற்றியைத்தரும், கொடி=கொடியையுடைய, சிவனே = சிவபிரானே, போற்றி—, மின் ஆர்= ஒளிபொருந்திய, உருவம்=வடிவத்தையுடைய, விகிர்தா=வேறுபாட்டோடுகூடினவனே, போற்றி—, கல் = கருங்கல்லில், நார்உரித்த=நாருரித்தெடுத்த, கனியே =கனிக்கொப்பானவனே, போற்றி—, கனகக்குன்றே=பொன்மலைபோன்றவனே, காவாய் =காத்தருளுவாய், போற்றி—, ஆவா=ஐயோவென்றிரக்கமுற்று, எனக்கு=அடியேனுக்கு, அருளாய்=திருவருள்புரிவாயாக, போற்றி= அதற்காகவணக்கம், படைப்பாய்=எல்லாப்பொருள்களையும் சிருஷ்டிக்குநிமித்தம் பிரமதேவனிடத்து பவர்என்னுந் திருப்பெயர்கொண்ட திஷ்டித்துநின்றவனே, காப்பாய்=யாவற்றையுங் காத்தருளும்பொருட்டு விஷ்ணுதேவரிடத்து, மிருடாஎன்னுந் திருநாமங்கொண்ட திஷ்டித்துநின்றவனே, துடைப்பாய்= சங்காரகிருத்தியங் காரணமாகவுருத்திர தேவரிடத்து அரன்என்னுந்திருநாமங் கொண்டதிஷ்டித்து நின்றவனே, போறறி—, இடரை=பிறவித்துன்பத்தைத், களையும்=வேரோடறுத்தருளுகின்ற, எந்தாய் = எமதுதந்தையே, போற்றி—, ஈச=ஈசனே, போற்றி—, இறைவ=தலைவனே, போற்றி—, தேசு=ஒளியையும், அ=அழகினையுமுடைய, பளிங்கின்=கண்ணாடியின், திரளே=பிழம்பே, போற்றி—, அரைசே = வேந்தனே, போற்றி—, அமுதே = அமிர்தமே, போற்றி—, விரைசேர்=நறுமணங்கமழும், சரணம்=திருவடிகளையுடைய, விகிர்தா=அன்புருவனே, போற்றி—, வேதி=வேதியனே, போற்றி—, விமலா= மலரகிதனே, போற்றி—, ஆதி = முதற்பொருளாய்நின்றவனே, போற்றி—, அறிவே=அறிவுருவனே, போற்றி—, கதியே = முத்திப்பேறாய்நின்றவனே, போற்றி—, கனியே=முக்கனிபோன்றினிப்பவனே, போற்றி—, நதி = கங்காநதியானது, சேர்=தங்கிய, செம்=செவந்த, சடை = ஜடாமகுடத்தையுடைய, நம்பா=நம்பனே, போற்றி—, உடையாய் = சராசராத்மகனே, போற்றி—, உணர்வே=அறிவுக்கறிவாய் விளங்குபவனே, போற்றி—, கடையேனை=கடைப்பட்டவனாகியநான், அடிமை = உனக்கடிமைப்பட்டவனென்று, கண்டாய்= உணர்ந்தவனே, போற்றி—, ஐயா=ஐயனே, போற்றி—, அணுவே=அணுவுக்கணுவானவனே, போற்றி—, சைவா=சைவத்திருமேனிகொண்டவனே,

போற்றி—, தலைவா=முதல்வனே, போற்றி—, குறியே = இலிங்கவடிவானவனே, போற்றி—, குணமே = ஷாட்குண்ணியனே, போற்றி—, நெறியே=யாவர்க்குமோட்சவழியைக்காட்டுபவனே, போற்றி—, நினைவே=எண்ணமே, போற்றி—, வானோர்க்கு = அரிப்பிரமாதிதேவர்களுக்கும், அரிய = எட்டொணாத, மருந்தே = அமிர்தமே, போற்றி—, ஏனோர்க்கு = மற்றையோர்க்கு, எளிய=காண்டற்கெளிதாய்நின்ற, இறைவா=தலைவனே, போற்றி—, மூவேழ்சுற்றம்=இருபத்தோருதலைமுறையிலுள்ள உறவினரும், முரண்=வலிமை, உறு=பொருந்திய, நரகிடை = நரகத்தில், ஆழாமே = வீழ்ந்தழுந்தாமல், அருள்=எனக்குத்திருவருள்பாலித்த, அரசே = அரசனே, போற்றி—, தோழா=அன்பர்க்குநண்பனே, போற்றி—, துணைவா = சகாயமானவனே, போற்றி—, வாழ்வே = பேரின்பவாழ்க்கையைத்தருபவனே, போற்றி—, என்=எனது, வைப்பே = நிட்சேபமானவனே, போற்றி—, முத்தா = மலநாசனே, போற்றி—, முதல்வா=முதல்வனே, போற்றி—, அத்தா = தந்தையே, போற்றி—, அரனே=சர்வசங்காரம்புரிபவனே, போற்றி—, உரை=சொல்லையும், உணர்வு=அறிவையும், இறந்த = கடந்துநின்ற, ஒருவ = தனிமைக்கடவுளே, போற்றி—, விரி=பரந்த, கடல்=கடலாற்சூழப்பட்ட, உலகின்=உலகத்திற்கு, விளைவே=உற்பத்திஸ்தானமானவனே, போற்றி—, அருமைஇல்=மெய்யன்பராலறிதற்கருமையாயிராமல், எளிய=எளிமையாய்வந்தருளும், அழகே = அழகனே, போற்றி—, கரு=கரிய, முகிலாகிய = மேகத்தைப்போல பிரதியுபகாரம் நாடாமலருள்செய்கின்ற, கண்ணே = நேத்திரசமானமானவனே, போற்றி—, மன்னிய=நிலைபெற்ற, திருவருள்=திருவருளாகிய, மலையே=மலைபோன்றவனே, போற்றி—, என்னையும்=அடியேனையும், ஒருவனாக்கி=உனதுமெய்யன்பருளொருவனாகச்செய்து, சென்னியில் = எனது சிரசில், இருங்கழல்=பெரிதாகியதிருவடியை, வைத்த = சாத்தியருளிய, சேவக = சேவகனே, போற்றி—, தொழுதகை=யாவரும்தொழப்படுமேன்மையமைந்து, துன்பம் = அவரவர்துயரங்களை, துடைப்பாய்=ஒழிப்பவனே, போற்றி—, அழிவுஇல்லா = கெடுதலில்லாத, ஆனந்தவாரி = சுகக்கடலே. போற்றி—, அழிவதும் = கெடுதியையும், ஆவதும் = தோற்றத்தையும், கடந்தாய் = கடந்தவனே, போற்றி—, முழுவதும்=எல்லாஅளவையையும், இறந்த=கடந்துஅதீதப்பட்டுநின்ற, முதல்வா=முதல்வனே, போற்றி—, மான் = மானினதுபார்வையை, நேர் = ஒத்த, நோக்கி=நோக்கத்தையுடையஉமாதேவியின், மணாளா=மணவாளனே, போற்றி—, வானகத்து=தேவருலகில்வசிக்கும், அமரர்=தேவர்களுக்கு, தாயே=தாய்போல்விளங்கும்மகாதேவனே, போற்றி—, பாரிடை=பூமியில், ஐந்தாய்=அம்மண்முதலியபஞ்சபூதங்களாய், பரந்தாய்=வியாபித்தவனே, போற்றி—, நீர்இடை=நீரினிடத்தில், நான்காய் = பிருதிவுநீங்கிய நான்குபூதங்களாய், திகழ்ந்தாய்=வியாபித்தவனே, போற்றி—, தீயிடை=நெருப்பின்கண், மூன்றாய் = (மண்ணுநீரும்நீங்கிய) மூன்றுபூதங்களாய், திகழ்ந்தாய் = விளங்கினவனே, போற்றி—, வளிஇடை=காற்றின்கண், இரண்டாய் = மண்ணுதிமூன்றுமொழிந்த இரண்டுபூதங்களாய், மகிழ்ந்தாய் = மகிழ்ந்துநின்றவனே, போற்றி—, வெளி

யிடை=ஆகாயத்தின்கண், ஒன்றாய்=மண்ணுதிநான்குமொழிந்த ஒருபூதமாய், விளைந்தாய்=விளைந்தவனே, போற்றி—, அளிபவர்=மனங்கனிந்துருகுமடியவர்கள், உள்ளத்து=மனத்தின்கண், அமுதே = அமிர்தமே, போற்றி—, கனவிலும்=சொப்பனத்திலும், தேவர்க்கு=தேவர்களுக்கு, அரியாய் = அருமையாயிருப்பவனே, போற்றி—, நனவிலும்=சாக்கிரத்திலும், நாயேற்கு=நாய்போன்றவெனக்கு, அருளினை = திருவருள்புரிந்தவனே, போற்றி—, இடைமருது=திருவிடைமருதூரில், உறையும்=வீற்றிருந்தருளுகின்ற, எந்தாய்=எந்தையே, போற்றி—, சடைஇடை=ஜடாபாரத்தில், கங்கை=கங்காநதியை, தரித்தாய்=அணிந்தவனே, போற்றி—, ஆரூர்அமர்ந்த = திருவாரூரிலெழுந்தருளிய, அரசே=அரசனே, போற்றி—, சீர்ஆர்=சிறப்பமைந்த, திருவையாறு = திருவையாற்றையுடையவனே, போற்றி—, அண்ணமலை=திருவண்ணமலையிலெழுந்தருளிய, எம்=எமது, அண்ணு=தந்தையே, போற்றி—, கண்ஆர் = பெருமைநிறைந்த, அமுதக்கடலே=அமிர்தசாகரமே, போற்றி—, ஏகம்பத்து=திருவேகம்பத்தில், உறை = வசிக்கின்ற, எந்தாய் = எந்தையே, போற்றி—, பாகம்=இடப்பாகம், பெண்ணுருஆனாய்=பெண்வடிவானவனே, போற்றி—, பராய்த்துறை=திருப்பராயத்துறையில், மேவிய=எழுந்தருளிய, பரனே = பரமனே, போற்றி—, சிராப்பள்ளி = திருச்சிராப்பள்ளியில், மேவிய = விளங்கிய, சிவனே=சிவபெருமானே, போற்றி—, மற்று=வேறு, ஓர்=ஒரு, பற்று=ஆதாரத்தை, இங்கு, இவ்விடத்து, அறியேன்=உணர்ந்திலேன், போற்றி—, குற்றாலத்து=திருக்குற்றாலத்தில்அமர்ந்திருக்கிற, எம்=எமது, கூத்தா = திருவிளையாடலையுடையவனே, போற்றி—, கோகழி=திருவாவடுதுறையில், மேவிய=தங்கிய, கோவே=இறைவனே, போற்றி—, ஈங்கோய்மலை=திருவீங்கோய்மலையையுடைய, எம்=எமது, எந்தாய்=தந்தையே, போற்றி—, பாங்குஆர்=அழகுபொருந்திய, பழனத்து = திருப்பழனப்பதியில் வீற்றிருக்கின்ற, அழகா = அழகனே, போற்றி—, கடம்பூர்=திருக்கடம்பூரில், மேவிய=பொருந்திய, விடங்கா=உளிபடாத்திருமேனியுடையவனே, போற்றி—, அடைந்தவர்க்கு=அடுத்தவர்களுக்கு, அருளும்=திருவருள்புரிகின்ற, அப்பா = அப்பனே, போற்றி—, இத்திதன்னின்கீழ் = (பத்துத்துவர்மரங்களிலொன்றாகிய) இத்திமரத்தின்கீழ், இருமூவர்க்கு=அறுவருக்கும், அத்திக்கு=யானைக்கும், அருளிய=திருவருள்புரிந்த, அரசே=அரசனே, போற்றி—, தென்நாடுஉடைய = தென்பாண்டிநாட்டையரசாண்டருளிய, சிவனே=சிவபெருமானே, போற்றி—, எந்நாட்டவர்க்கும்=எந்நாட்டினர்க்கும், இறைவா=தலைவனே, போற்றி—, ஏனக்குருளைக்கு=பன்றிக்குட்டிகளுக்கு, அருளினை = பால்கொடுத்தனுக்கிரகித்தருளினவனே, போற்றி—, மானம்=பெருமைபொருந்திய, கைலைமலையாய்=ஸ்ரீகைலாசபர்வதவாசனே, போற்றி—, அருளிடவேண்டும் = திருவருள்புரியவேண்டும், அம்மான்=அழகியமகானே, போற்றி—, இருள்=அஞ்ஞானவிருள், கெட=கெடும்படி, அருளும்=அருள்புரிகின்ற, இறைவா=இறைவனே, போற்றி—, தனியேன் = ஓராதாரமுமின்றித்தனித்தவனாகிய, அடியேன் = அடியேன், தளர்ந்தேன் = சோர்வடைந்திருக்கின்றவனாகியநான், போற்றி = போற்றிசெய்கிறேன், களங்கொள=மனத்தின்கண்ணே, கருத=உனதுதிருவடிகளைச்சிந்திக்க,

அருளாய்=திருவருள்புரிவாயென, போற்றி - போற்றுகின்றனன், அஞ்சேல் என்று=பயப்படாதேயென்று, இங்கு=இவ்விடத்து, அருளாய் = அருள்செய்வாய், போற்றி—, நஞ்சே=விஷத்தையே, அமுதா=அமுதமாக, நயந்தாய்=விரும்பினவனே, போற்றி—, அத்தா = தந்தையே, போற்றி—, ஐயா=ஐயனே, போற்றி—, நித்தா = நித்தியனே, போற்றி—, நிமலா = பரிசுத்தனே, போற்றி— .பத்தா=பத்தனே, போற்றி—, பவனே=சிருஷ்டிகர்த்தனே, போற்றி—, பெரியாய் = பெரியோனே, போற்றி—, பிரானே = பெருமானே, போற்றி—, அரியாய்=யாவர்க்குமெட்டாதவனே, போற்றி—, அமலா = மலரகிதனே, போற்றி—, மறையோர்=வேதியரது, கோலம் = திருக்கோலமாகவெழுந்தருளிவந் தனுக்கிரகித்த, நெறியே=நீதியே, போற்றி—, முறையோ=உனக்கேஅபயம், தரியேன்=இனிபொறேன், முதல்வா=முதல்வனே, போற்றி—, உறவே = சுற்றமே, போற்றி—, உயிரே = உயிர்க்குயிரானவனே, போற்றி—, சிறவே=சிறப்புடையவனே, போற்றி—, சிவமே=சிவபெருமானே, போற்றி—, மஞ்சா=அழகனே, போற்றி—, மணாளா=மணவாளனே, போற்றி—, பஞ்சு=இலத்தகமூட்டிய, ஏர்=அழகிய, அடியாள் = பாதங்களையுடைய உமாதேவியின், பங்கா=பாகத்தையுடையவனே, போற்றி—, அலந்தேன்=துன்பப்பட்டேனா, நாயேன் அடியேன் = நாய்போன்றஅடியேன், போற்றி—, இலங்கு=விளங்குகின்ற, சுடர்=சோதிமயமாகிய, எம்=எமது, ஈசா=ஈசனே, போற்றி—, சுரிவத்தலை=பற்பலவடிவாக நிற்றலை, மேவிய=பொருந்திய, கண்ணே=கண்போலு மருமையயானவனே, போற்றி—, குவை = கூட்டமாகிய, பதி=திவ்யக்ஷேத்திரங்களில், மலிந்த=நிறைந்துவிளங்கிய, கோவே=வேந்தனே, போற்றி—, மலைநாடு=மலைநாட்டை, உடைய=உடைத்தாயிருக்கிற, மன்னே=அரசனே, போற்றி—, கலைஆர்=கலைகள்நிரம்பிய, அரி=திருமாலுக்கு, கேசரியாய்=சிங்கம்போன்றவனே, போற்றி—, திருக்கழுக்குன்றில்=கழுகாசலத்தில் விளங்காநின்ற, செல்வா=செல்வனே, போற்றி—, பொருப்பமர்=மலைகளமைந்த, பூவணத்து=திருப்பூவணத்தி லெழுந்தருளிய, அரனே=சிவபெருமானே, போற்றி—, அருவமும்=அரூபமும், உருவமும்=ரூபமும், ஆனாய்=ஆனவனே, போற்றி—, மருவிய=பொருந்திய, கருணைமலையே = திருவருண்மலையே, போற்றி—, துரியமும்=துரியஸ்தானத்தையும், இறந்த = கடந்த, சுடரே=துரியாதீதப்பொருளானவனே, போற்றி—, தெரிவு=தெரிந்துகொள்ளல், அரிதாகிய=அருமையாகிய, தெளிவே=விளக்கமே, போற்றி—, தோளா—தொளைபடாத, முத்தம் முத்தம்=முத்தினது, சுடரே = பிரகாசமே, போற்றி—, ஆள் ஆனவர்க்கு=அடிமைப்பட்டவர்கட்கு, அன்பா = அன்பனே, போற்றி—, ஆராஅமுதே=தெவிட்டாதவமுதமே, அருளே=திருவருட்படிவனே, போற்றி—, பேர்=திருநாமங்கள், ஆயிரமுடைய, ஆயிரமுள்ள, பெம்மான்=பெருமானே, போற்றி—, தாளிஅறுகின் = கொடியறுகினாற்றொடுத்த, தாராய் = மாலையையுடையவனே, போற்றி—, நீள் = நீண்ட, ஒளியாகிய=சோதிஸ்வரூபமாகிய, நிருத்த=நடராஜனே, போற்றி—, சந்தனச்சாந்தின்=சந்தனக்குழம்பணிந்த, சுந்தர=அழகனே, போற்றி—, சிந்தனைக்கரிய=நினைக்

கவொண்ணுத, சிவமே=சிவபிரானே, போற்றி—, மந்திரமா=வீடாச, மலை = கைலாசமலையை, மேயாய்=பொருந்தினவனே, போற்றி---, எந்தமை = எம்மை, உய்ய = உச்சிவிக்கும்படி, கொள்வாய் = கொள்வோனே, போற்றி—, புலிமுலை=புலிமுலையை, புல்வாய்க்கு=மான்கன்றுக்கு, அருளினை=கொடுத்தவனே, போற்றி—, அலை=அசையாநின்ற, கடல்மிசை=கடலின்மேல், நடந்தாய்=நடந்தவனே, போற்றி—, கருங்குருவிக்கு=கரிக்குருவிக்கு, அன்று = அந்நாளில், அருளினை=மிர்த்திஞ்சய மந்திரோபதேசஞ் செய்தவனே, போற்றி—, இரும்=பெரிய, புலன்=இந்திரியங்கள், புலா=அவிய, இசைந்தனை=சனகாதியர்காணயோகத்திருந்தவனே, போற்றி—, படி=பூமியில், உற=திருவடிகள்பொருந்த, பயின்ற = நாடகம்புரிந்தருளிய, பாவக = சங்காரகர்த்தனே, போற்றி—, அடியொடு=ஆதியோடு, நடு=மத்யமும், ஈறு=அந்தமும், ஆனாய்=ஆனவனே, போற்றி—, நரகொடு=நரகலோகத்துடன், சுவர்க்கம்=சுவர்க்கலோகத்திலும், நால்நிலம்=பூலோகத்திலும், புகாமல்=மீளவும் போய்ப்பிறவாமல், பரகதி=மோட்சவீட்டை, பாண்டியற்கு = வரகுணபாண்டியனுக்கு, அருளினை=கிருபைசெய்தவனே, போற்றி---, ஒழிவுஅறநிறைந்த=எங்கும் நீக்கமறநிறைந்த, ஒருவ=தனித்தலைமைக்கடவுளே, போற்றி—, செழு=செழுமையாகிய, மலர்=மலர்ச்சோலைகள் சூழ்ந்த, சிவபுரத்துஅரசே=சிவபுரத்துக்குத்தலைவனே, போற்றி—, புகழுநீர்மாலை=செங்கல்வமாலையணிந்த, கடவுள்=கடவுளே, போற்றி---, தொழுவார்=வணங்குபவருடைய, மையல் = மயக்கத்தை, துணிப்பாய்=அறுப்பவனே, போற்றி—, பிழைப்பு=பிழைத்தலும், வாய்ப்பு=பேறும்ஆகிய விவற்றுள், ஒன்று=ஒன்றையும், அறியா= அறிந்துகொள்ளாத, நாயேன்=நாய்போல்பவனது, குழைத்த=மனங்குழைந்துசொன்ன, சொல்மாலை=சொல்லாலாகிய மாலையை, கொண்டருள் = கொண்டருள்பவனே, போற்றி—, புரம்பல=திரிபுரங்களை, எரித்த=சிரித்தெரித்த, புராண = படியோனே, போற்றி—, பரம்பரம்=மேலான, சோதி = ஒளியை, பரனே = மேலோனே, போற்றி—, போற்றி---, போற்றி---, புயங்கப்பெருமான்=சர்ப்பாபரணத்தைத்தரித்தவனே, போற்றிபோற்றி---, புராண=புராதனமாகிய, காரண=மூலகாரணனே, போற்றிபோற்றி—, சயசய=வெற்றியுண்டாக, போற்றி—. (எ-று.)

## விசேடவுரை.

ஈரடியாலே மூவுலகளந்தென்றது - மகாபலிச் சக்கிரவர்த்தியின் பொருட்டு வாமனனாயெழுந்தருளி மூன்றடி மண்யாசித்துப் பின்னர், திரிவிக்கிரம அவதாரங்கொண்டு பூமியை ஓரடியாகவும், ஆகாயத்தை ஓரடியாகவும், அளந்து நின்றவொரு அடிக்கு இடமில்லாமல் அம்மகாபலியின் சிரசில்வைத்தழுத்தி அவனைப் பாதாளலோகத்தில் சேர்த்து அங்கிருந்து சிரஞ்சீவியாயரசாளச்செய்தமையை. ஊனமில்யோனியென்றது - "ஊர்வபதினொன் றொன்பதுமாநுடம், நீர்பறவைநாற்காலோர்பப்பத்தாம், சீரிய - பந்தமில்தேவர் பதினுன்கயன்படைத்த, முந்துசீர்த்தாவரநாலைந்து" என்னும் எண்பத்துநான்கிலட்சம் யோனிபேதங்களை, ஒருமதிதான்றியி னருமையில்பிழைத்து மென்றதற்கு - ஒருமாதத்தி

ன் கழிவின் மிகுதியில் தப்பியும் என்பதும் பொருள். கொடிறும்பேதையுமெ றவிடத்து, கொடிறு என்பதற்குப் பேயெனப்பொருள் கூறுவதுமொன் தோழாபோற்றி என்றதை, சிவபெருமான் தன்னிடத்தன்பு பாராட்டிய சுந் மூர்த்தி சுவாமிகளுக்கு நீ தோழராயிருந்தனரென்பதும், அது பற்றியே, சுந் ரமூர்த்தி சுவாமிகளுக்குத் தம்பிரான் தோழரெனப் பெயர்வழங்குகின்றதென் பதும் திருத்தொண்டர் புராணத்துட்காண்க. குவைப்பதிமேவிய கோவேயென் பதில்-குவைப்பதி என வோர்ப்தியுளதென்பாருமுளர். மந்திரமாமலை என்பத ற்கு, மந்தரபர்வதமென்பது மொன்று.

திருச்சிற்றம்பலம்.

உ.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சதகம்.

பத்திவைராக்கிய விசித்திரம்.

அதாவது.

* பத்துவகையாக விரட்சித்த முறைமை.

திருப்பெருந்துறையி லருளிச்செய்யப்பட்டது.

## க - வது மெய்யுணர்தல்.

அதாவது.

தேகாதிப்பிரபஞ்சங்க ளித்தன்மையவென வறிந்து நீங்குதல்.

திருச்சிற்றம்பலம்.

### கட்டளைக்கலித்துறை.

மெய்தானரும்பிவிதிர்விதிர்த்துன்விரையார்கழற்கென்
கைதான்றலைவைத்துக்கண்ணீர்ததும்பிவெதும்பியுள்ளம்
பொய்தான்றவிர்ந்துன்னைப்போற்றிசயசயபோற்றியென்னும்
கைதானெகிழவிடேனுடையாயென்னைக்கண்டுகொள்ளே.

(ப-ரை) உடையாய் - என்னையாட்கொண்டவனே, உன் - உனது, விரை ஆர்-வாசனைநிறைந்த, கழற்கு-திருவடியைப்பெறுதற்கு, என்மெய் அரும்பி-என் தேகம் புளகித்து, விதிர்விதிர்த்து - நடு நடுங்கி, கைதலைவைத்து-கைகளைத்தலையின்மேல்வைத்து, கண்ணீர்ததும்பி-கண்களில் நீரரும்பி, உள்ளம் வெதும்பி - மனம்புழுங்கி, பொய்தவிர்ந்து-பொய்யொழுக்கத்தினின்று நீங்கி, உன்னை - உண்மைப்பொருளாகிய உன்னைக்குறித்து, போற்றி - போற்றி, சயசயபோற்றி - சயசயபோற்றி, என்னும்-என்று வழிபடுகின்ற, கை - ஒழுக்கத்தை, நெகிழவிடேன்-நான் தளரவிடேன், (ஆதலால்) என்னை-எனது நிலைமையை, கண்டு - நீ பார்த்து, கொள் - (உன் அடியாருள் ஒருவனாக) ஏற்றுக்கொள்வாயாக. எ - று.

---

* பத்துவகையாக ரட்சித்த முறைமையென்றதை இத் திருச்சதகத்தின் ஒவ்வொருபத்தின் றலைப்புகளிற் காட்டிய இயல்வகைகளா னுணர்க.

(க - ரை;) உடையவனே! உன் திருவடியைப் பெறும் பொருட்டு நான் என் மனமொழிமெய்களாகிய முக்கரணங்களாலும் உன்னை வழிபடுதலிற் சோர்வடையேன், ஆதலால் என் நிலைமையை நோக்கி என்னை உன் அடியாருள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்பதாம்,

(வி - ரை) பொய்யாகியவுடம்பை மெய்யென்றது மங்கலம் தான் நான்கும் ஈற்றேகாரமும் அசைநிலைகள். கழல் ஆண்மக்கள் கொடையாலும் வீரத்தாலும் காலில் அணியும் வீரகண்டை, ஆதலால் அதுதன்னையணிந்த திருவடியையுணர்த்திற்றெனக் கொள்ளினும் பொருந்தும். இறைவனுக்குக் கொடையாவது முத்தியாகிய அழியாச் செல்வத்தைக் கொடுத்தல், வீரமாவது அடுத்தவராது பல பிறவித்தொகையாகிய பகையை வென்று அவரைக் காத்தல். விரையார் கழல் என்றது அடியாரிடும் மலர்களால் நறுமணங்கமழ்தலை.

"விண்ணுஞ்செலவறி வெறியார்கழல்"

என்னும் திருக்கோவையார் உ௫௬ - வது செய்யுள் விசேடவுரையில் "எல்லாப்பொருள்களையும் கடந்து நின்றனவாயினும், அன்பர்க்கண்மையவாய், அவரிட்ட நறுமலரான் வெறி கமழு மென்பது தோன்றவெறியார்கழல் என்றார்" எனக் கூறியிருத்தல் காண்க. இவ்வாறன்றி இயற்கை மணந்தங்கிய திருவடியெனினு மாம்; இது, "நறுமலராய் நாறுமலர்ச்சேவடி" என்னும் வாகீசர் திருவதிகை வீரட்டானம் திருவடித் திருத்தாண்டகம் அ- வது செய்யுளால் இனிது விளங்கும். "மெய்தானரும்பி" என்பதற்கு உடம்பு தானாகவேபொடித்து என்றலுமாம். விதிர்விதிர்த்து என்னுமடுக்கு மிகுதியாய் நடுங்கி என்னும்பொருளது. "உன்கழல்" என்றும், "என்கைதலைவைத்து" என்றும் கூறியது இறைவன் உடையவனும் தாம் உடைமையும் ஆதலை விளக்கற் கென்க. இறைவன் அவயவம் பலவற்றுள்ளும் "விரையார் கழற்கு" எனத் திருவடியைச் சிறப்பித்தது ஆன்மாக்களுக்கு அதுவல்லது வேறு புகலிட மில்லாமையா லெனக்கொள்க. இது "இறுமாந்திருப்பன்கொலோ ஈசன் பல்கணத் தெண்ணப்பட்டுச் - சிறுமானேந்தி தன் சேவடிக்கீழ்ச்சென் றங்கிறு மாந்திருப்பன்கொலோ" என்றும், "சார்ந்தார்கட்கெல்லாஞ் சரணாமடி" என்றும், "பற்றற்றார் பற்றும்பவளவடி" என்றும், கூறிய மேலோர் திருவாக்குக்களாலும் விளங்கும். போற்றி - வணக்கம் இதனை வடநூலார் நமஸ்காரம் என்பர். சயஎன்பது வெல்க என்னும் பொருளது. சயசய என்னும் அடுக்கு மிகுதிப்பொருளது. இன்னதை உடையாய் என்னாமையால் இயங்கியற்பொருள் நிலையியற்பொருள் ஆகிய எல்லாவற்றையும் உடையவனே எனப் பொருளுரைக்கலாயிற்று. மெய் அரும்புதல், கைதலைவைத்தல், கண்ணீர் ததும்புதல் என்பவை காயத்தின் தொழில்களாகையாலும் உள்ளம்வெதும்பல், பொய் தவிர்தல் என்பவை மனத்தின் தொழில்களாகையாலும்; சயசயபோற்றி என்பது வாக்கின் தொழிலாகையாலும், முக்கரணங்களாலும் வழிபடாநின்றேன் என்றபடி இதனை, வேர்க்குங் கண்ணீர்ததும்புங் கம்பித்துமெய்நடுங்கும்-வார்த்தை நழுவுமனம் பதறும்-கார்க்கதமாய்-காந்து மூரோ

மாஞ்சலியாடுங் காதலித்தார்க், கேய்ந்தகுணமாமிவை யெட்டும். என்றுந் திருவாக்கானுமறிக. "கண்டுகொள்" என்பதற்கு எழுவாயாகிய நீ யென்பதும், விடேன் என்பதற்கு எழுவாயாகிய நான் என்பதும் வருவித் துரைக்கப்பட்டன. வெதும்பல் வாடலாதலால் அதனை உடம்பின் தொழிலாகக்கொண்டு பொய்தவிர்தலை உள்ளத்தின் தொழிலாகக் கொண்டாலும் பொருந்தும். இறைவன் முற்றுணர்ச்சியுள்ளோனாதலால் "கண்டு" என்றருளினர். பொய் - பொய்யொழுக்கம் எனினும்பொருந்தும். பொய்ப்பொருள் எனக்கொண்டு பிரபஞ்சம் எனினும் அமையும். பொய்யைவிட்டுமெய்யைப்பற்றுதல் சகுதியாதலால் "பொய்தான் றவிர்ந்துன்னைப் போற்றி சயசய போற்றியென்னுங் கைதானெகிழவிடேன்" என்றருளினர். கைதலைவைத்தலாவது - கைகளைக் கூப்பிச்சிரமேல் வைத்து அஞ்சலித்தல். (க)

கொள்ளேன்புரந்தரன்மாலயன்வாழ்வுகுடிகெடினும்
நள்ளேனினதடியாரொடல்லானரகம்புகினும்
எள்ளேன்றிருவருளாலேயிருக்கப்பெறினிறைவா
உள்ளேன்பிறதெய்வமுன்னையல்லாதெங்களுத்தமனே.

(ப - ரை.) எங்கள் உத்தமனே - எங்கள் மேலோனே, இறைவா - தலைவனே, திருவருளாலே இருக்கப்பெறின் - உன்திருவருளோடு கூடி யிருக்கப் பெறுவேனாயின், புரந்தரன் - இந்திரனும், மால் - திருமாலும், அயன் - பிரமனும் (ஆகிய இவர்களுடைய) வாழ்வு - பெரும்பதவிகளையும், கொள்ளேன் - ஒரு பொருளாக என்மனத்திற் கொள்ளமாட்டேன், குடிகெடினும் - என் குடிமுழுதும் நசித்தாலும், நினது அடியாரொடு அல்லால் - உன் அடியாரோடன்றி, நள்ளேன் - (பிறரோடு) சிநேகியேன், நரகம் புகினும் - நரகத்திற் புகுந்தாலும், எள்ளேன் - அதனை யிகழமாட்டேன், உன்னை அல்லாது - உன்னையன்றி, பிறதெய்வம் - வேறு தெய்வங்களை, உள்ளேன் - மனத்தாலும் நினைக்கமாட்டேன். எ - று.

(க - ரை.) கடவுளே ! யான் உன் திருவருளைப் பெற்றால்,இந்திரன் முதலியோருடைய பதவிகளையும் மதிக்கமாட்டேன்,என் குடிகெட்டாலும் உன் அன்பரோடன்றிப் பிறரோடு சிநேகியேன், நரகம்புகினும் அதனை யிகழமாட்டேன், உன்னையன்றி வேறு தெய்வங்களை நினைக்கவுமாட்டேன் என்பதாம்.

(வி - ரை) உத்தமன் என்பது உத்-தமன்எனப் பிரிக்கப்பட்டு, கடந்த தமத்தை யுடையவன் எனப் பொருள்படுவதோர் வடசொல், ஆகலின் மூலப்பகுதியாகிய பேரிருளைக் கடந்து நின்றவன் என்பது கருத்து, இது "கடக்கும்பவத்தர்" என்றாற்போல்வது. உத்-தாண்டப்பட்ட, தமன் - இருளையுடையவன், தமம் - இருள். இறைவன் - இறைமைத்தன்மையை யுடையவன். அதாவது ஆன்மாக்களைப் படைத்தலும், காத்தலும், அழித்தலும், மறைத்தலும், அநுக்கிரகித்தலும் ஆகிய பஞ்சகிருத்தியங்களையும் நடத்தவல்ல முதன்மை பெற்

திருப்போன். புரந்தரன் வடமொழி, இதற்குப் பகைவருரை யழிப்பவன் எனப்பொருள் கூறுவரந்நூலுடையார், மால்-அன்பரிடத்தன்பு செய்பவன், அன்பர்க்குத் தன்மீது ஆசையுண்டாக்குவோன் அல்லது மயக்கத்தை யுடையவன் என்பதுமொன்று. அயன்-அஜன் என்னும் வடமொழித்திரிபு. இதற்குப் பொருள் பிறப்பில்லாதவன் என்பது. பிறப்புள்ளவனை இவ்வாறு கூறியது மங்கலவழக்கு. நள்ளல் - சிநேகித்தல். நாகம் - பாதாளலோகத்தில் பாவிகள் சேரும் இடம். அது அள்ளல், ரௌரவம், கும்பிபாகம், கூடசாலம், செந்துத்தானம், பூதி, மாபூதி என எழுவகைப்பட்டிருக்கும். இன்னும் பலவேறு வகைப்பட்ட நரகங்களுமுண்டென்பர். உள்ளல் - நினைத்தல், இது மனத்தின் தொழில், வாக்கும் காயமும் இதன்வழியே நிகழ்வனவாதலால் தலைமைபற்றி உள்ளேன். என இதன்தொழிலைக்கூறினர், கூறவே இனம்பற்றி வாக்கினால் வாழ்த்தேன் காயத்தால் வணங்கேன் எனக் கூறினதாகவுங்கொள்க புரந்தரன், அயன், என்பவர்க்கிடையே சிறப்புநோக்கித்திருமாலை வைத்தருளினர். எள்ளல் - இகழ்தல். இந்திரன முதலிய இறையவர் வாழ்வையும் மதியேன் என்றமையால் மற்றையர்வாழ்வை மதியாமைதானே பெறப்படும், வாழ்வு என்பதனீற்றில் உயர்வு சிறப்பும்மை தொக்கது, இறந்தது தழீஇய உம்மை தொக்கதெனினு மமையும். கெடினும் புகினும் என்னும் உம்மைகள் இழிவு சிறப்பும்மைகள். இந்திரன் முதலிய இறையவர் வாழ்வுகள் அழியுமியல்பினவாய் மீண்டும்பிறவியைத் தருவன, ஆதலால், "கொள்ளேன் புரந்தன் மாலயன்வாழ்வு" எனவும், அடியாருறவு வீடுபேற்றுக்கு ஏதுவாதலால், "குடிகெடினும் நள்ளேனினதடியா ரொடல்லால்" எனவும், இறைவனது திருவருளாற் கிடைக்கப் பெற்றது நன்றேயாயினும் தீதேயாயினும் பனமுவந்தேற்றுக் கொள்ளல் வேண்டுமாதலால், "நரகம் புகினுமெள்ளேன் றிருவருளாலே யிருக்கப்பெறின்" எனவும். உத்தமனைவிட்டு அதமரைவழிபடல் நன்றன் றாதலால், "உள்ளேன் பிறதெய்வமுன்னையல்லா தெங்களுத்தமனே" எனவும் கூறினர், பிறதெய்வ மென்றது - அரிப்பிரமாதியவநித்திய தேவர்களை. பெறின் என்பது பெறலருமை மையைவிளக்கி நின்றது. உத்தமனாதலால் இறைவனாயினா னென்பது தோன்ற "உத்தமனே இறைவா" என்றார். (௨)

உத்தமனத்தனுடையானடியேநினைந்துருகி
மத்தமனத்தொடுமாலிவனென்னமனநினைவில்
ஒத்தனவொத்தனசொல்லிடவூரூர்திரிந்தெவரும்
தத்தமனத்தனபேசவெஞ்ஞான்றுகொல்சாவதுவே.

(ப - ரை.) உத்தமன் - மேலானவனும், அத்தன் - எமது தந்தையும், உடையான் - என்னை ஆட்கொண்டவனும் ஆகிய இறைவனது, அடியே - திருவடிகளையே, நினைந்து உருகி - கருதி மனமுருகி, மத்தமனத்தொடு - உன்மத்தங்கொண்ட மனத்துடன் கூடிய, மால் இவன் - பித்தனிவன், என - என்று கண்டோர் சால்லவும், ஊர்ஊர் திரிந்து - ஊர்தோறுமலைந்து, மனநினைவில் - அவரவர் மனக் கருத்துக்கு, ஒத்தன ஒத்தனசொல்லிட - பொருந்தன வாகிய பல சொற்களை

சொல்லவும், எவரும் - யாவரும், தத்தம் மனத்தனபேச - தங்கள் தங்கள்மனத்துக்கிசைந்தவற்றைப் பேசவும், (அதனைக்கேட்டு) சாவது - மனமிறக்கப் பெறுவது, என்ஞான்றுகொல் - எக்காலமோ, எ - று.

(க - ரை.) உத்தமனும் எமது தந்தையுமாகிய சிவபெருமானது திருவடியையே நினைந்துருகி, உன்மத்தனாகி, உலகத்தார் பித்த னென்றென்னை இகழும்படி நான் செயலற்றிருப்பது எந்நாளோ என்பதாம்.

(வி - ரை.) அத்தன் - ஆன்மகோடிகட்குத் தந்தையாயுள்ளவன். அத்தம் பொருளாதலால் வேதாகமப்பொருளா யிருப்பவன் என்றும், அத்தம பொன்னாதலால் எனக்குப் பொற்குவையா யிருப்பவன் என்றும் கூறலுமாம். அடியே என்னும் ஏகாரம் தேற்றம், பிரிநிலையெனினுமாம். நினைந்து என்னாது நினைந்துருகி என்றது இடைவிடாமல் நினைந்து என்றபடி. மத்தம் - உன்மத்தம், மால்- மயக்கம், அது மயக்கமுடையவனை யுணர்த்திற்று. "மனநினைவிலொத்தன வொத்தனசொல்லிட" என்றது தம் மூரவர் சொல்லும்சொல்லை, "தத்த மனத்தனபேச" என்றது பிறவூரவர் சொல்லுஞ் சொல்லை, ஊரூர் என்றது ஊர் தோறும் என்றபடி. சாதல் - தொழிலற்றிருத்தல். கொல் - அசைநிலை யெனினுமாம். (ரு)

சாவமுன்னாட்டக்கன்வேள்வித்தகர்தின்றுநஞ்சமஞ்சி
ஆவவெந்தாயென்றவிதாவிடுநம்மவரவரே
மூவரென்றேயெம்பிரானொடுமெண்ணிவிண்ணாண்டுமண்மேல்
தேவரென்றேயிறுமாந்தென்னபாவந்திரிதவரே.

(ப - ரை.) முன்னாள் - முற்காலத்தில், தக்கன் - தசப்பிரமர்களு ளொருவனாகிய தக்கனவன், சாவ - இறக்கும்படி, வேள்வித்தகர்தின்று - யாகத்தில் கொல்லப்பட்ட ஆட்டைத் தின்று, நஞ்சம் அஞ்சி - பாற்கடலிற்றோன்றியவிஷத்துக்குப்பயந்து, ஆவ - ஐயோ, எந்தாய் என்று - எந்தையேயென்று, அவிதாஇடும் - அபயமிட்ட, நம்மவர் - நம்மவராகிய, அவரே- அவர்கள்தாமோ, (இப்போது) எம்பிரானொடும் - எம்பெருமானோடும், மூவர் என்று எண்ணி - திரிமூர்த்தி வரிசையிலெண்ணப்பட்டு, விண்ஆண்டு - விண்ணுலகையாண்டு, மண்மேல் - மண்ணுலகில், தேவர் என்று-தேவரென்று சொல்லும்படி, இறுமாந்து திரிதவர் - செருக்கடைந்து திரிகின்ற இறைவர்கள், என்ன பாவம் - (இவர்கள் இவ்வாறு இறுமாந்து திரிவதற்குக் காரணம்) என்னபாவமோ· எ - று.

(க - ரை.) முற்காலத்தில் தக்கன்சாவ, யாகத்தில் கொல்லப்பட்ட ஆட்டையுண்டு, பாற்கடலிற்றோன்றிய விஷத்துக்கு அஞ்சி, எந்தையேயென்று முறையிட்ட நம்மவர்தாமோ, எம்மிறைவனோடு மூவர் என்று எண்ணப்பட்டு, தம்முலகங்களையாண்டு, மண்ணுலகிலும் தேவரென்று சொல்லும்படி, கர்வித்துத் திரியாநின்ற தலைமையுடையவர்கள், இதென்ன பாவம் என்பதாம்.

(வி - ரை.) தக்கன்வேள்வி சாவ என்பதற்கு தக்கன் இறக்க யாகம் அழிய எனப் பொருள் கூறலுமாம். தகர் - ஆடு, இது ஈண்டுப் பசுவை என்னும் பொருடந்து நின்றது. வேள்வித்தகர் - யாகப்பசு. வேள்வித்தகர் என்றதனால்செய்தது அஜமேதம் என்பது பெறப்பட்டது. நஞ்சம் அஞ்சி என்பதனை நஞ்சத்தையஞ்சி நஞ்சத்துக்கஞ்சி என இரண்டனுருபாயினும் நான்கனுருபாயினும் விரித்துரைத்துக் கொள்ளலாம். ஆவ - இரக்கக்குறிப்பு - அவிதாவிடல் - முறையிடுதல், நம்மவரே பதில் ஏற்றேகாரம்வினா, இது இழிவைக்குறித்தது. "மூவரென்றேயெம்பிரானொடுமெண்ணி" என்றமையால், நம்மவர் திரிதவர் என்றது பிரமவிட்டுணுக்களை. இறுமாத்தல் - அகங்கரித்தல்.

சாவமுன்னாட்டக்கன் வேள்வித்தகர் தின்று என்றது :—தக்கன் சிவபெருமானையொழிந்தே மற்றத்தேவர்களை வைத்துக் கொண்டுயாகஞ்செய்தனன். இதை நாரதமுனிவர் சிவபெருமானுக்கறிவிக்க, உமாதேவியார் தன்தந்தை செய்யும் யாகத்தைக்காணப்போக விடைகேட்க, அவர் வேண்டாமென்று தடுத்தும் மீண்டுங் கணவனை வருந்திக் கேட்டமையால், அச்சிவபெருமான் போக விடை கொடுத்தனர். அங்கு உமாதேவியார் சென்றபோது, அத் தக்கன் தன்னையும் தன் கணவனையும் அவமதித்துப் பேசினமையால் உமாதேவியார் கோபங்கொண்டு அவ்விடம்விட்டு நீங்கி யடைந்து நடந்த செய்தியை யுணர்த்தி அவன் யாகத்தை யழிக்கவேண்டுமெனச் சிவபெருமானை வேண்டினள்; அப்போது சிவபெருமான் தக்கன் யாகத்தையழிக்க வெண்ணினவுடன் தமதுவிருபாட்சத்தினின்றும் வீரபத்திரர் பிறந்து, அந்த யாகசாலையிலிருந்த தேவர்களில் சூரியனைப்பல்லை யுடைத்தும், சந்திரனை நிலத்தில் தேய்த்தும், இந்திரனைத் தோள் நெரித்தும் இப்படிப் பலபடியாக அவமானஞ் செய்தது மன்றி, தக்கனையும் தலையையறுத்து யாகத்தையும் நிர்மூலமாக அழித்தமையை.

நஞ்ச மஞ்சி என்றது :—தேவர்களும் இராக்கதர்களும் இடைவிடாது போர்புரிந்து வருகையில் அவ்விருதிறவரும் தமக்கு மரணம் நேரிடாமலிருக்க அமிர்தபானம் செய்ய எண்ணிப் பிரமனிடஞ் சென்று தமதெண்ணத்தைத் தெரிவிக்கப் பிரமனுமவர்களோடு திருமாலிடஞ் சென்று வணங்கிப் பாற்கடல் கடைந்து அமிர்தம் தந்தருளும்படி வேண்டினர். திருமால் கருடனால் மந்தரமலையைக் கொண்டுவந்து பாற்கடலில் மத்தாக நாட்டி அதற்கு வாசுகி யென்னும் பாம்பை தாம்பாகப்பூட்டி, ஒருபுறம் தேவர்களும் ஒருபுறம் அசுரரும் நின்று கடையச் செய்தனர். அவ்வாறு கடையுநாள், அவ்வாசுகி வருத்தம் பொறுமல் விஷத்தைக் கக்கியது. அவ்விஷம் அங்குள்ள எவரையுங் கொல்ல வெழுகையில் அக்கொடிய விஷத்துக்கு அஞ்சிப் பிரமன் முதலிய எல்லாத் தேவர்களும் சிவபெருமானைச் சரணடைந்தனர். சிவபெருமானும் சரண் புகுந்த அத்தேவரைக் காக்கும் பொருட்டு அவ்விஷத்தை உண்டு விஷ்ணுவாகிய தேவர்களைக் காத்தமைக் கடையாளமாகத் தமது கண்டத்தில் நிறுத்தினர். அதனால் காளகண்டமாயிற்று. (௪)

தவமேபுரிந்திலன்றண்மலரிட்டுமுட்டாதிறைஞ்சேன்
அவமேபிறந்தவருவினையேனுனக்கன்பருள்ளாம்
சிவமேபெறுந்திருவெய்திற்றிலேனின்றிருவடிக்காம்
பவமேயருளுகண்டாயடியேற்கெம்பரம்பரனே.

(ப - ரை.) தவமே - தவத்தையோ, புரிந்திலன் - செய்திலேன், தண்மலர் இட்டு - குளிர்ந்த மலர்களால் அருச்சித்து, முட்டாது இறைஞ்சேன் - குறைபாடின்றி வணங்கேன், அவமேபிறந்த - வீணாகவே தோன்றிய, அரு-பிறர் செய்தற்கரிய, வினையேன் - பாவகன்மத்தை யுடையேன், உனக்கு அன்பர் உள் ஆம் - உன்னன்பராயினாரோடு சேரத்தக்க, சிவம் - மங்களத்தை, பெறும் - அடைதற்குரிய, திரு - செல்வத்தை, எய்திற்றிலேன் - அடைந்திலேன், (ஆதலால்) எம்பரம்பரனே - எமது மேலோர்க்கும் மேலோனே, அடியேற்கு - தொண்டனாகிய எனக்கு, நின் திருவடிக்கு ஆம் - உன் திருவடிக்காளாதற்குரிய, பவமே அருள் - பிறவியையே கொடுத்தருள் வாயாக, எ - று.

(க - ரை.) தவமுதலியவற்றைச் செய்யாத பயனில் பிறவியிற் பிறந்தேனாதலால், இனியாயினும் உன் திருவடிக் கன்புசெய்தற்குரிய சிறந்த பிறவி பிறக்கும்படி அடியேனுக்குக் கிருபை செய்யவேண்டும் என்பதாம்.

(வி - ரை.) தவம் - தவசு, அதாவது மனம் பஞ்சேந்திரியங்களின் வழியே செல்லாது நிற்றற்பொருட்டு விரதங்களால் உணவுகுறைத்தல், கோடைக்காலத்து வெயிலில் நிற்றல், மழைக்காலத்தும் பனிக்காலத்தும் நீரில் நிற்றல் முதலியவற்றைச் செய்து, அச்செய்கைகளால் தம்முயிர்க் குண்டாகுந் துன்பங்களைச் சகித்துப், பிற வுயிர்களைக் காத்தல். இதனை, "உற்றநோய்நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை - அற்றேதவத்திற்குரு" என்னுந் திருக்குறளா லறிக. தன் - சாதிவிசேடணம். முட்டாது என்பதனை மலரிடுதற்கும் கூட்டுக. முட்டாது மலரிடுதலாவது - நியமித்துக்கொண்ட தொகையிற் குறைவற்றனவும், புட்ப விதிப்படி குற்றமில்லனவும் ஆகிய மலர்களைக் கொண்டருச்சித்தல். முட்டாது இறைஞ்சுதலாவது விதிப்படி கை கால் நெற்றி மார்பு தோள் என்னும் எட்டுறுப்பும் நிலந்தோய வீழ்ந்து வணங்குதல். அடியார் நடுவிலிருத்தல், முத்தியாகிய பெருஞ்செல்வத்தைத் தருதலால், "அன்பருள்ளாஞ் சிவமே பெறுந்திருவெய்திற்றிலேன்" என்றார். "அவமே பிறந்தவருவினையேன்" என்றது தவமுதலிய வற்றைச் செய்யாமையா லென்க. (௫)

பரந்துபல்லாய்மலரிட்டுமுட்டாதடியேயிறைஞ்சி
இரந்தவெல்லாமெமக்கேபெறலாமென்னுமன்பருள்ளம்
கரந்துநில்லாக்கள்வனேநின்றன்வார்கழற்கன்பெனக்கும்
நிரந்தரமாயருளாய்நின்னையேத்தமுழுவதுமே.

(ப - ரை.) பரந்து - பரவி, பல் - பலவகையான், ஆய் - ஆராய்ந்து எடுக்கப்பட்ட, மலர் - மலர்களை, இட்டு - உன் திருவடிகளிற்சாத்தி, முட்டாது - குறைவுபடாமல், அடியே இறைஞ்சி - உன் திருவடிகளையே வணங்கி, இரக்த எல்லாம் - வேண்டினவைவையெல்லாம், எமக்கே பெறல்ஆம் - எங்களுக்கே பெறக்கூடும், என்னும் - என்று நிச்சயித்த, அன்பர் - அடியார்களுடைய, உள்ளம் - மனத்தை, கரந்து நில்லா - ஒளித்து மற்றோரிடத்தில் நில்லாத, கள்வனே - கள்வா, முழுவதும் நின்னை எத்த - பூர்ணமாக உன்னைத் துதிக்க, எனக்கும் - அடியேனுக்கும் நின்றன்வார் கழற்கு - உன் நெடிய கழலையணிந்த திருவடிகளுக்குச் செய்யவேண்டிய, அன்பு - அன்பை, நிரந்தரமாய் அருளாய்- எப்பொழுதுமருள் செய்வாயாக. எ - று.

(க - ரை.) அன்பர்க்கெளியவனாகிய சிவபெருமானே, நான் உன் திருவடிக் கன்பு செய்யுமாறு கிருபை செய்தல்வேண்டும் என்பதாம்,

(வி - ரை.) பல்மலர் என்றது - கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பு, நிலப்பூ என்னும் நால்வகை மலரினை. ஆய்தலாவது - ஈரிலை கீழுறவிருந்து பூத்தல், புழுக்கடி, எடுத்துவைத் தலர்தல், பழம்பூவாதல், எருக்கிலை ஆமணக்கிலையினிற் பொதிதல், உடுத்த புடைவையிலுங் கையிலுங் கொணர்தல், உதிர்தல், அரையின் கீழாதல், எச்சந்தாக்கல், சிலந்தி கூடுகட்டல், மயிர்சுற்றல், இரவிலெடுத்தல், நீரிலமிழ்தல், புறங்காட்டிலெய்தல், எச்சிலாதல், குளியாதெடுத்தல் முதலிய தோஷங்களில்லாதனவாக ஆராய்தல் எனினும் அல்லது, வில்வமொடு கொன்றைமலர் சங்கரற்கு நேயம் என்றபடி சிவபெருமானுக்குரிய மலர் இன்னதென வாராய்தலெனினு மொக்கும், வார்கழல் என்றார் தம்மைக் கருது மன்பர் எவ்விடத்தினராயினும் அவ்விடத் தவர்கட் கணித்தாய்ச் செல்லுதனோக்கி அன்பருள்ளங் கரந்து நில்லா என்றதனால் அன்பரல்லாதா ருள்ளத்தில் கரந்துநிற்றல் பெறப்பட்டது. அன்பர்மனத்தில் வெளிப்பட்டு நிற்றலும், அன்பரல்லாதார் மனத்தில் மறைந்து நிற்றலும் ஆகிய இருதன்மைய னாதலால் கள்வனே என்றார். அன்பெனக்கு நிரந்தரமாய் அருளாயென்றிரந்தது, துதித்தற்கு அன்பே காரணமென்றுணர்த்தற்கென்க. முழுதும் என்றதற்கேற்ப "நிரந்தரமாய்" என்றார், எனக்கும் என்பது இழிவு சிறப்பும்மை. பரத்தல் - பரவுதல். இடுதல் இங்கு அருச்சித்தற்பொருளது. இரந்த வெல்லாம் என்றது இம்மையின்பம் மறுமையின்பம் மோக்ஷவின்பம் என்பவற்றை. எல்லாம் என்றது எஞ்சாமைப்பொருட்டு. (சு)

முழுவதுங்கண்டவனைப்படைத்தான்முடிசாய்த்துமுன்னாள்
செழுமலர்கொண்டெங்குந்தேடவப்பாலனிப்பாலெம்பிரான்
கழுதொடுகாட்டிடைநாடகமாடிக்கதியிலியாய்
உழுவையின்றோலுடுத்துன்மத்தமேல்கொண்டுழிதருமே.

(ப - ரை.) முழுவதும் - உலகங்களையும், அவற்றினுள்ள சராசரப்பொருள்களையும், கண்டவனை - சிருட்டித்தவனாகிய பிரமனை, படைத்தான் - உந்திக்கமலத்துத் தோற்றுவித்தவனாகிய விட்டுணுவும், முடிசாய்த்து - தலைவணங்கி, முன்நாள் - முற்காலத்தில், செழுமலர்கொண்டு - செழுமையாகிய மலர்களைக் கையிலேந்திக்கொண்டு, எங்கும்தேட - எவ்விடத்தும் தேடாநிற்க, அப்பாலன் - அப்பாற்பட்டிருந்தவனாகிய, எம்பிரான் - எமது பரமசிவன், இப்பால் - இவ்வுலகத்தில், காட்டிடை - மயானத்தில், கழுதொடு - பிசாசங்களோடு கூடி, நாடகம் ஆடி - நடனஞ்செய்து, கதியிலியாய் - ஆதாரமில்லாதவனாகி, உழுவையின் தோல் உடுத்து - புலித்தோலைத் தரித்து, உன்மத்தம் மேல்கொண்டு - மதோன்மத்தனாய், உழிதரும் - சஞ்சரியாநிற்பன், ஏ - இதென்ன ஆச்சரியம். எ - று.

(க - ரை.) முற்காலத்தில் திருமால் மலர்களைக்கொண்டு அருச்சிக்கத் தேடியும் காண்பதற்கரியனானவன், இப்போது மயானத்தில் பேயோடாடுகின்றான், இதென்ன வியப்பு என்பதாம்.

(வி - ரை.) விட்டுணு அருச்சிக்கத் தேடினபோது மறைந்துநின்ற பெருமான் இப்போது எம்போல்வார் கண்டுய்ய நாடகமாடி நின்றான் இதுஎன்ன வியப்பென்றாராயிற்று. திருமால்தேட மறைந்திருந்தவன் எம்போல்வார்க்குக் காணப்பட்டமை வியப்புக்குக் காரணம். கதியிலி - வேறு ஆதாரவில்லாதவன். முழுவதும் என்றது ஐம்பூதவகையாலாகிய உலக முழுதும் என்றபடி. காண்டல் - படைத்தல், படைத்தான் என்பதனீற்றில் உயர்வு சிறப்பும்மை தொகுத்தல். ஈற்றேகாரம் வியப்பு. கதியிலியாய் என்றதற்கேற்ப "உழுவையின்றோலுடுத்து" என்றார். காடு என்றமையால் இடுகாடு சுடுகாடு என்னுமிரண்டுங் கொள்ளக்கிடப்பினும் சுடுகாட்டைக் கொள்வதே சிறப்புடைத்து.

உழுவைத் தோலுடுத்தென்றது:— தாருகாவனத்தில் சிவபிரான் தம்மை மதியாத தாருகவனத்து முனிவர்களின் பத்தினிகள் கற்பிற்சிறந்தோமென்றிறுமாப் படைய, அதுகாலையில் சிவபெருமான் பிக்ஷாடனகோலமாய் வந்து கற்பழிக்க, அது பொறாது அம்முனிவர்கள் சிவபெருமானைக் கொல்லயாகஞ்செய்து அவ்வியாகத்தில் தோன்றிய சர்ப்பம், புலி, சூலம், மான், பூதம், துடி, நகுவெண்டலை, தீ இவைகளை அப்பெருமான்மேல் விடுக்கப், பெருமானும் அவற்றின் வலியடக்கி அணி முதலிய அலங்காரப் பொருள்களாகத் தரித்தனர் என்பதை. ()

உழிதருகாலுங்கனலும்புனலொடுமண்ணும்விண்ணும்
இழிதருகாலமெக்காலம்வருவதுவந்ததற்பின்
உழிதருகாலத்தவுன்னடியேன்செய்தவல்வினையைக்
கழிதருகாலமுமாயவைகாத்தெம்மைக்காப்பவனே.

(ப - ரை.) உழிதரு - சஞ்சரிக்கிற, காலும் - வாயுவும், கனலும் - நெருப்பும், புனலொடு - நீருடன், மண்ணும் விண்ணும் - பூமியும் ஆகாயமும், இழி

தரு - அழிகின்ற, காலம் - சர்வசங்கார காலமானது, எக்காலம் வருவது - எக்காலத்துண்டாவது, வந்ததற்பின் - அவ்விறுதிக்காலமுண்டான பின்பும், உழிதரு - நிலைத்திருக்கின்ற, கால் - காலதத்துவத்திற்கு, அத்த - தலைவனே, உன் அடியேன் - உன்தொண்டனேன், செய்த - பண்ணின, வல்வினையை - வலியவினைகளை, கழிதரு - நீக்கியருளுக, காலமும் ஆய் - காலதத்துவங்களுமாகி, அவை காத்து - அவைகளைக் காத்து, எமமை - எங்களையும், காப்பவனே - காக்கின்ற இறைவனே. எ - று.

(க - ரை.) உலகத் தோற்றக் கேடுகளுக்கு முன்னும் பின்னும் உள்ளவனாகிய உனக்கு, என் வலியவினையை நீக்கியருளுதல் அரிதன்று என்பதாம்.

(வி - ரை) உழிதரல் - சுழலல், திரிதல். இதற்குப் பகுதி உழிதா, உழிதருகாலத்த என்பதற்கு நிலைத்திருக்கிற காலதத்துவத்தை யுடையவனே எனினுமாம். இறைவன் காலதத்துவ முதலியவற்றுக்கும் நியாமகன் ஆகையால் இவ்வாறு கூறலாயிற்று. எனவே எக்காலத்துமுள்ளவன் என்பது பொருள், இதனை,

மூப்பானிளையவன் முன்னவன் பின்னவன் முப்புரங்கள்
வீப்பான் வியன்றில்லையானருளால் விரிநீருலகம்
காப்பான் பிரியக்கருதுகின்றார் நமர்கார்க்கயற்கட்
பூப்பானலமொளிரும் புரிதாழ்குழற் பூங்கொடியே.

என்னுந் திருக்கோவையாராலு முணர்க. கழிதா என்னும் முதனிலை கழிதருஎன விகாரப்பட்டு வியங்கோட் பொருளில் வந்தது.

கனலுதல் - சுடுதல், காய்தல், கனலுந் தொழிலுடையவைதக் கனலென்றது, முதனிலைத் தொழிலாகுபெயர். வல்வினை - இறைவன் திருவருளாலன்றிப் போக்கப்படாத வினை. எம்மைக் காப்பவனே என்றது ஆன்மகோடிகளையெல்லாம் உளப்படுத்தற் கென்க. (அ)

பவனெம்பிரான்பனிமாமதிக்கண்ணிவிண்ணோர்பெருமான்
சிவனெம்பிரானென்னையாண்டுகொண்டானென்சிறுமைகண்டும்
அவனெம்பிரானென்னநானடியேனென்ன விப்பரிசே
புவனெம்பிரான்றெரியும்பரிசாவதியம்புகவே.

(ப - ரை.) பவன் - பவனென்னுந் திருநாமமுள்ளவன், எம்பிரான் - எமக்கு உபகாரசீலன், பனி - குளிர்ச்சி பொருந்திய, மா - பெருமையமைந்த, மதிக்கண்ணி - சந்திரனாகிய மாலையை யணிந்தவன், விண்ணோர் பெருமான் - தேவர் பெருமான், சிவன் - சிவனென்னும் பெயருடையவன், எம்பிரான் - எமக்குபகார சீலன், புவன் எம்பிரான் - சுயம்புவாகிய எம்பெருமான், என் சிறுமை கண்டும் - என் தாழ்வைபறிந்தும், என்னை ஆண்டுகொண்டான் -

என்னை யாண்டுகொண்டருளினன், (ஆதலால்) அவன் - அவனே, எம்பிரான் என்ன - எமக்குத் தலைவனென்றும், நான் அடியேன் என்ன - நான் அடியவன் என்றும், இப்பரிசே - இவ்வாறே, தெரியும் பரிசுஆவது - தெரியுந் தன்மையை, இயம்புக - சொல்லுக. எ - று.

(க - ரை.) உலகங்களுக்கு முதற்காரணனுகவும் தேவர் பெருமானுகவும் இருக்கின்ற இறைவன் என் சிறுமையைப் பார்த்தும் என்னை யாண்டுகொண்டருளினன், இதற்குக் காரண மென்னையோ நீங்கள் சொல்லுங்கள் என்பதாம்.

(வி - ரை.) பவன - எல்லாம் தன்னிடத்துப் பிறத்தலையுடையவன், எனவே - பிரமனது ஹிருதயத்தை யதிட்டித்து நின்று சிருட்டித்தொழிலைப் புரிபவன் என்பது பொருள். "தாரென்ன வோங்குஞ் சடைமுடிமேற் றனித் திங்கள் வைத்த" எனப்பிறவிடங்களிலுங் கூறுதற்கேற்ப இங்கும் மதிக் கண்ணி என்றார். நீலவேணி, புஸ்தகபாணி, சுகவாணி என்பனபோல மதிக்கண்ணியும் உடையானை யுணர்த்திற்று. அன்றி மதிக்கண்ணியைத் தரித்த விண்ணோர் பெருமான் என்றியைத் துரைப்பினு மமையும். விண் ணோர் பெருமான் ஒருசொல். விண்ணோர் பெருமான் என்றதில் தாமொழி ந்து நிற்றலை யஞ்சி எம்பிரான் என்றார். சிவன - மங்களகரன். அறிஞர் மனங்கள் தன்னிடத்திருக்கப் பெற்றவன். அறிஞர் மனங்களில் சென்று தங் குவோன் எனப் பலபொருள் தருவதோர் வடசொல். என் சிறுமை கண்டும் என்னை யாண்டுகொண்டா னாதலால் அவன் ஆண்டான், நான் அடிமை என் னும் விவகாரம் வெளியாயிற்று. புவன் - சுயம்பு, தானே யுண்டானவன். எக்காலத்தும் குறையாத ஒளியை யுடையவன் என்றும், எல்லாப் பொருள்களை யும் தோன்றுவிப்போன் என்றும் கூறுவர். மதி இங்கு ஒரு கலையாகிய சந் திரனை யுணர்த்திற்று. பூமாலைபோல வளைந்திருத்தலால் மதியைக் கண்ணி யென்றார். பிரான் - உபகார குணமுள்ளவன். இவ்விடத்து உபகாரகுணம் யாதெனின், எல்லாப் பொருள்களும் தன்னிடத்தே தோன்றுவதற்குரிய மூல காரணன் தமது சிறுமை நோக்காது ஆட்கொண்டமை,

மதிக்கண்ணி யென்றது:—தக்கனுடைய புத்திரிகளாகிய அசுவினி முதலிய இருபத்தேழு பெண்களையும் மணம் புரிந்துகொண்ட சந்திரன் அவர் களில் உரோகணியினிடத்து மாத்திரம் மிக்க காதல்கொண்டு அவளுடனே எப்போதும் கூடிக்களித்திருக்க, இச்செய்தியைத் தன் புதல்வியராலுணர்ந்த தக்கன் சந்திரனைநோக்கி, உன் கலைகள் குறைக எனச்சபிக்க, அச்சாபத்தால் சந்திரன் பதினைந்து கலைகளும் குறைந்தபோது மற்றோர்கலையையும் இழக்க வரும் எனப்பயந்து சிவபெருமானைச் சரணமடைந்தான். அப்பெருமான் இரங்கி ஒற்றைக்கலையோடுங் கூடிய சந்திரனைத்தமது சடாபாரத்திலணிந்து மீண்டும் கலைகள் வளரும்படி அநுக்கிரகித்தமையை. (௬)

புகவேதகேனுனக்கன்பருள்யானென்பொல்லாமணியே
தகவேயெனையுனக்காட்கொண்டதன்மையெப்புன்மையரை
மிகவேயுயர்த்திவிண்ணோரைப்பணித்தியண்ணாவமுதே
நகவேதகுமெம்பிரானென்னைநீசெய்தநாடகமே.

(ப - ரை.) என் பொல்லாமணியே - என் தொளைபடா மாணிக்கமே, யான் - நான், உனக்கு அன்பர் உள் - உன்னன்பருக்கிடையே, புகவே தகேன் - பிரவேசிக்கவும் தகுதியில்லேன், (அங்ஙனமாக) என்னை - அடியேனை, உனக்கு ஆட்கொண்ட தன்மை - உனக்காளாக்கிக்கொண்ட தன்மையானது, தகவே - தகுதியோ, எப்புன்மையரை - எவ்வகைத் தாழ்ந்தவரையும், மிக உயர்த்தி - மிகவும் உயர்வித்து, விண்ணோரைப்பணித்தி - தேவர்களை அவரைப் பணியச் செய்கிறாய், அண்ணா - அத்தனே, அமுதே - அமிர்தமே, எம்பிரான் - எம்பிரானே, என்னை நீ செய்த நாடகம் - என்னை நீ செய்த கூத்து, நகவேதகும் - நகைப்பதற் குரியதேயாகும். எ - று.

(க - ரை.) எம்பிரானே ! உன்னடியார் கூட்டத்தில் பிரவேசிக்கவும் தகுதியில்லாத என்னை யாண்டருளினதை நோக்கினால் சிரிக்குந் தகுதியுடைத் தென்பதாம்.

(வி - ரை.) பொள்ளல் - தொளைத்தல், பொள்ளாமணி - தொளைக்காத மணி (முழுமணி) அது வடநூலார் மதம்பற்றிப் பொல்லாமணியென வந்தது. வடநூலார் மதமாவது லகர ளகரங்களை வேற்றுமையின்றி வழங்கல். மணியென்பது நவமணிகளுக்கும் பொதுவாயினும், இவ்விடத்து மாணிக்கத்துக் காயிற்று. இதனை "சூளாமணி யும்பர்க்காயவன்" என்னும் திருக்கோவையார் ௪௪-ம் செய்யுளுரையில் காணலாம். அண்ணா என்பதற்கு - எட்டாதவென்பொருளுரைப்பினுமமையும். உயர்ந்ததைத் தாழ்த்தலும் தாழ்ந்ததை உயர்த்தலும் இறைவனது சுதந்திரத்துவம், சர்வசக்தித்வம் என்பவற்றி னியல்பாமென்க. உன்னடியாரோடு கூடியிருக்குந் தகுதியிலேனாயினும், அவரவையிற் புகவுந் தகுதியிலேன் என்றற்கு, "புகவேதகேனுனக் கன்பருள்" என்றார். "தாழச்செய்தார் முடிதன்னடிக் கீழ்வைத்தவரை விண்ணோர் சூழச் செய்தான்" என்றதற்சேற்ப இங்கும், "புன்மையரை மிகவே யுயர்த்தி விண்ணோரைப் பணித்தி" என்றார். அடியார் கூட்டத்திற் புகவுந் தகுதியற்ற என்னை யாண்டருளினதை நோக்கு மிடத்து நகும் தகுதியுடைத்து என்றற்கு, "என்னை நீ செய்த நாடகம் நகவேதகும்" என்றார். (௫௦)

## உ-வது அறிவுறுத்தல்.

அதாவது
பொறிபோட்ட காட்டுதல்; அருள்தரிசனம், குருதரிசனம்
முதலியவற்றை யறிவித்தல்.

### தரவு கொச்சகக் கலிப்பா.

நாடகத்தா லுன்னடியார்போ னடித்துநானடுவே
வீடகத்தேபுகுந்திடுவான்மிகப்பெரிதும்விரைகின்றேன்
ஆடகச்சீர்மணிக்குன்றேயிடையறாவன்புனக்கென்
னூடகத்தேநின்றுருகத்தந்தருளெம்முடையானே.

(ப-ரை) எம் - எம்மை, உடையானே - அநாதியாகவே அடிமைகளாக வுடையவனே, நாடகத்தால் - உண்மையன்பு சிறிதுமில்லேனாயினும் என் மனமறிய, உன் அடியார்போல் நடித்து - உன்னன்பர்போலப் பாவனை காட்டி, நடுவே - (உனக்காட்படுந்தன்மை யெனக்குச் சிறிதுமில்லாதிருக்க) அவ்வன்பர்களின் நடுவிலே, வீடு அகத்தே புகுந்திடுவான் - முத்தியுலகத்தில் பிரவேசிக்க, நான் மிக பெரிதும் விரைகின்றேன் - நான் மிகுதியும் துரிதப்படுகின்றேன், சீர் - சிறப்பமைந்த, ஆடகக் (குன்றே) - பொன்மலையே, மணிக்குன்றே - மாணிக்க மலையே, உனக்கு - உன் விஷயமாக, இடையறா - விட்டு நீங்காத, அன்பு - அன்பானது, என அகத்தூடு - என் மனத்தின்கண், நின்று - நிலைபெற்று, உருக - (அவ்வன்புகாரணமாக) மனங்கரையும்படி, தந்து அருள் - கருணை செய்தருளாய் எ - று

(க-ரை.) நான் உன்னிடத்துச் சிறிதுமன்பில்லாதவனா யிருந்தும் உன், அடியார்போல நடித்து முத்தியுலகத்திற் செல்லும்பொருட்டுத் துரிதப்படாநின்றேன், ஆதலால் இனியாயினும் உன்னிடத் தன்பு செய்யும்படி எனக்குக் கிருபைசெய்ய வேண்டும் என்பதாம்.

(வி-ரை.) நாடகம் வீடகம் என்பன, "காடக மிறந்தார்க்கே" என்றாற்போல் டகரம் இரட்டாது வந்தன. எனக்கொண்டு நாட்டினகம், வீட்டினகம் எனப்பொருள் கோடலாம். அல்லது நாடகத்தால் - வஞ்சகமாகிய நடிப்பால் எனினுமாம். தனக் காட்படுந்தன்மை யெனக்குண்டாவதற்கு முன்னே என்னை யாண்டருளினன் என்றற்குத் திருக்கோவையாரில், "என்னை முன் ஆளவுமுடையான்" என்றாற்போல, ஈண்டும், நடுவே என்றார். மிகப்பெரிது ஒருபொருட்பன்மொழி. "பொன்பணைத் தன்னவிறை" ஆதலால், ஆடகக்குன்றேயெனவும், "மாணிக்கக்கூத்தன்" ஆதலால், மாணிக்கக்குன்றேயெனவும் கூறினார். இவை யிரண்டும் உருவகம்; இடையறா வன்புக்குக் காரணம் அவனருளேயாதலால், 'இடையறாவன் புனக்கென்னூடகத்தே நின்றுருகத் தந்தருள்' என்றார். உனக்கு என்னும் நான்கனுருபு ஏழாவதாய் இடப்பொரு

ளுணர்த்தியது. தந்தருள் என்பதில் அருள் ஈவோனுயர்வு குறிக்கும் விகுதி, வினைய அடியார்களையும் தம்மோடுகூட்டி எம் எனவும், இறைவன் உடையவனும் உயிர்கள் உடைமையுமாதலை விளக்க உடையாய் எனவும் கூறினார். மோட்சசாதனத்துக்குரிய உன்னடியாரிருக்க, அவ்வுரிமை யொன்றுமில்லாத நான் அவர்களுக்கு நடுவில் விரைவது தகுதியன்றென்பார். "உன்னடியார் போனடித்து நானடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்" என்றாரெனினுமாம். (சுக)

யானேதும்பிறப்பஞ்சேனிறப்பதனுக்கென்கடவேன்
வானேயும்பெறில்வேண்டேன்மண்ணாள்வான்மதித்துமிரேன்
தேனேயுமலர்க்கொன்றைச்சிவனேயெம்பெருமானெம்
மானேயுன்னருள்பெறுநாளென்றென்றேவருந்துவனே.

(ப - ரை) யான் - நான், எதும் - சிறிதும், பிறப்பு அஞ்சேன் - பிறவித்துன்பத்துக்குப் பயப்படேன், இறப்பு அதனுக்கு - இறத்தற்றுன்பமாகிய அதற்கு, என் கடவேன் - யாதுசெய்யக் கடவேன், வான்வயும் - சுவர்க்காதி போகங்களாயினும், பெறில் - அடையப்படுவதாயிருப்பின், வேண்டேன் - விரும்பேன், மண் ஆள்வான் - மண்ணுலகை அரசாளவும், மதித்தும் இரேன் - நினைத்துமிரேன், தேன் எயும் - தேன்பொருந்திய, கொன்றைமலர் - கொன்றைமலர் மாலையையணிந்த, சிவனே - மங்களகரனே, எம்பெருமான் - எம்மிறைவனாகிய, எம்மானே - எம்பெரியோனே, உன் அருள்பெறும்நாள் - உனது திருவருளைப் பெறுங்காலம், என்றுஎன்று - எக்காலமோவென்று, வருந்துவன் - வருந்தாநின்றேன். எ - று.

(க - ரை.) நான் பிறவித்துன்பங்களுக்கு அஞ்சேன், ஆயினும் இறப்புத்துன்பத்துக்கு அஞ்சுகின்றேன், மண்ணுலக விண்ணுலக ஆட்சிகளையும் விரும்பேன், உன் திருவருளுக்கு உரியேனாகுங் காலம் எக்காலமோ வென்று வருந்துவேன், ஆதலால் என்பிறவியை ஒழித்தருளவேண்டும் என்பதாம்.

(வி - ரை.) பிறத்தற் றுன்பத்தினும் இறத்தற் றுன்பம் பெரிதாதலால் "இறப்பதனுக்கென் கடவேன்" என்றார். பிறத்தற்றுன்பம் கருப்பாசயத்திற் கட்டுண்டிருத்தல், நீரிலமிழ்தல், சாடராக்கியாற் சுடப்படுதல், பிரசூதவாயு முறித்துத்தள்ளல், யோனித்துவாரத்தி னெருக்குண்ணல் முதலியன. இறத்தற்றுன்பம் - ஐம்பூதகுதி, பித்தப்பகுதி, உணர்வு, பொறி இவைகள் தத்தம் நிலைகலங்கல், நாவறட்சி, நெஞ்சம் பறையடித்தல், காலரை உயிர்கண்டஞ்சல் முதலியன. இதனை, "இந்த மாவிறப்பிற்றுன்பம் பவத்துன்பத் தெண்மடங்கே" எனவும், "மரணவேதனையாவராலறியலாம் மயங்கி யைம்புலனந்தச், கரணம் யாவையுங்கலக்கிட வருந்துயர் கடவுளே யறிகிற்பான்" எனவும் வரும்பிரமாணங்களாலறிக. எயும் - எனினும் என்பதன மரூஉ. உம்மை உயர்வு சிறப்பு. கொன்றைமலர் என்பது மலர்க்கொன்றை எனசொல் முன்பின்னாக மாறிநின்றது.

பெருமான் - மான் விகுதிபெற்ற ஆன்பாற் படர்க்கைப் பெயர். எம்மான் - எம் மவன் என்பதன் சிதைவு, அன்றி மான்மகான் என்னும் வடமொழிச் சிதைவு என்னலுமாம். மகான் - பெரியோன். மண்விண்ணுளும் வளப்பெரு வாழ்வினும் அண்ணல் திருவருளடைந் துயல் ஏற்றமாதலால், "வானேயும் பெறில்வேண்டேன் மண்ணாள்வான் மதித்துமிரேன், உன்னருள் பெறுநாளென் றென்றே வருந்துவனே" என்றார். என்றே என்பதினீற்றேகாரம் ஐயப்பொருளது. (கஉ)

வருந்துவனின்மலர்ப்பாதமவைகாண்பானுயடியே
இருந்துநலமலர்புனையேனேத்தேனுத்தழும்பேறப்
பொருந்தியபொற்சிலைகுனித்தாயருளமுதம்புரியாயேல்
வருந்துவனற்றமியேன்மற்றென்னேநானுமாறே.

(ப - ரை.) வருந்துவல் - வருந்துவேன், நின் மலர்பாதம் அவைகாண்பான் - உன்தாமரைமலர் போன்ற திருவடிகளைக்காணும் பொருட்டு, நாயடியேன் - நாயினேன், இருந்தும்-தநுகரணங்களோடு கூடியிறவாதிருந்தும், நல்ல மலர் புனையேன் - உன் திருவடிகளுக்கு கந்தமலர்களைச் சூட்டேன், நாதழும்பு ஏற - நாவினிடத்துத் தழும்புண்டாக, எத்தேன் - தோத்திரஞ்செய்கிலேன், பொருந்திய - அமைந்த, பொன் - மேருமலையை, சிலை குனித்தாய் - வில்லாக வளைத்தவனே, அருள் அமுதம் புரியாய் ஏல்-உன் திருவருளாகிய அமிர்தத்தைக் கொடாவிடின், நல்தமியேன்-மிகத்தனியேனுகிய நான், வருந்துவன் - வருந்துவேன், மற்று - (அவ்வாறு) வருந்தாமல், நான் ஆம்ஆறு - நான் உனக்குரியவனுகும்வகை, என் - யாது. எ - று.

(க - ரை.) நான் உன் திருவடியைக் காணும்பொருட்டு மலர்பறித்துச்சூட்டேன், நாத்தழும்பேறத் துதியேன், இது காரணமாக நீ உன் அருளாகிய அமிர்தத்தை தந்தருளாயானுல், நான் வருந்துவதேயன்றி உனக்காளாகும் விதம் யாது என்பதாம்.

(வி - ரை.) நல்மலர் என்றது நிர்த்தோஷமான மலர்களை. புரிதல் ஈண்டு ஈதற்பொருளது. நற்றமியேன் என்புழி நன்மை மிகுதியை யுணர்த்திற்று, நல்ல மழை நல்லவெயில் என்பவற்றிற்போல. பாதத்துக்கு உவமையாதற் குரியது தாமரைமலரே யாதலால் மலர்ப்பாதம் என்பதில் மலர் அத்தாமரையையே யுணர்த்திற்று. "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனி" "பொன்னார்மேனியனே" "பொன்பணைத் தன்னவிறை" என்றபடி பொன்மேனியுடையவனுதலால் பொன்வில்லைவளைத்தலே பொருத்தமாகும் என்பார், "பொருந்திய பொற்சிலை குனித்தாய்" என்றார்.

பொற்சிலைகுனித்தா யென்றது:—தாரகாசுரனது புத்திரர்களான வித்யுந்மாலி, தாரகாக்ஷன், கமலாக்ஷன் என்னும் மூன்று அசுரர்கள் மிகுந்த தவஞ்செய்து அசுரத் தச்சனுகிய மயனென்பவனுல் சுவர்க்க மத்திய பாதாளமாகிய மூன்றுலகங்களிலும் அந்தரத்திற் சஞ்சரிக்கத்தக்க இரும்பு, வெள்ளி, பொன்இவற்றால்

செய்யப்பட்ட மூன்று பட்டணங்களையும் முறையே பெற்று, தம்மினத்தாராகிய பல அசுரர்களைக் கூட்டிக்கொண்டு, அந்தரத்திற் செல்லும் அந்நகரங்களுடனே தாம் நினைத்த இடங்களிற்சென்று, அங்குள்ளவரைக் கொன்று திரியாநிற்குங் காலத்தில், அவர்களுடைய கொடுமைக் கஞ்சி முறையிட்ட தேவர் முதலியோரது முறைபாட்டுக்குச் சிவபெருமான் இரங்கிச் சந்திர சூரியர்கள் சக்கரங்களாகவும், வேதங்கள் குதிரைகளாகவும், பிரமன் சாரதியாகவும், அமைந்தபூமியாகிய இரதத்தின்மேல்ஏறி, மேருவை வில்லாக வளைத்துக்கொண்டு, அதற்கு ஆதிசேஷனாகிய நாரியமைத்து, வாயுவைச் சிறகாகவும் திருமாலைக் கூர்வாயாகவும் கொண்டு அக்கினியாகிய அம்பைத் தொடுத் தெய்யமுயல்கையில், சந்திரன்முதலிய தேவர்கள் தந்தம் ஆற்றலால் திரிபுரங்களை அழித்தலாகிய இக்காரியம் முற்றுப்பெறுகின்றதென்று இறுமாப்புக் கொண்டதைச் சிவபெருமான் உணர்ந்து அத்தேர்த்தட்டில் தனது காற்பெருவிரலையூன்ற, அவ்விரதம் பொடியாய் நொறுங்கி விழ, உடனே திருமாலாகிய விடையின்மேலிருந்து புந்நகைசெய்து அந்நகையால் திரிபுரவாசியர்கள் தமது முப்புரங்களோடு எரிந்து சாம்பராயினர் என்பது. (கரு)

ஆமாறுன்றிருவடிக்கேயகங்குழையேனன்புருகேன்
பூமாலைபுனைந்தேத்தேன்புகழ்ந்துரையேன்புத்தேளிர்
கோமானின்றிருக்கோயிறூகேன்மெழுகேன்கூத்தாடேன்
சாமாறேவிரைகின்றேன்சதுராலேசார்வானே.

(ப - ரை.) சதுரால் - மெய்யறிவுடையோர் தமதுசதுரம் பாட்டினால், சார்வான் ஏ - அடையப்படுவனே, உன் - உனது, திருவடிக்கே-ஸ்ரீபாதங்களுக்கே, ஆம்ஆறு - நான் அடிமையாகும்படி, அகம்குழையேன் - மனங்கனியேன், அன்பு உருகேன் - அன்பினாலுருகேன், பூமாலை புனைந்து - மலர்மாலையைக்கொடலங்கரித்து, ஏத்தேன் - துதியேன், புகழ்ந்துஉரையேன் - புகழ்ந்துபேசேன், புத்தேளிர்கோமான் - தேவர் பெருமானே, நின் திருக்கோயில் - உன் திருக்கோயிலை, தூகேன் - திருவலகிடேன், மெழுகேன் - திருமெழுக்கிடேன், கூத்தாடேன் - (உன் சந்நிதியில் நின்று ஆனந்தக்) கூத்தாடேன், சாமாறே விரைகின்றேன் - சாகும்வண்ணமே விரையாநின்றேன். எ - று.

(க - ரை.) அறிஞரால்றியப் படுவோனே! உன் திருவடிக்கு ஆளாகும் பொருட்டு மனமுருகுதல் முதலியவும் செய்யேன்; ஆயினும் இந்த உலகவாழ்வைநீக்கி உன் திருவடியைப்பெற விரும்புகிறேன், உன் பெருங்கருணையால் அடியேனது எண்ணத்தை நிறைவேற்றவேண்டும் என்பதாம்.

(வி - ரை.) சதுர்- முக்கரணங்களுக்கு மெட்டாத இறைவனை யறிந்செய்தும் சதுரப்பாடு (சாமர்த்தியம்). அறிவு எனினுமாம். குழைதல் - இளகுதல். உருகுதல் - நீர்போல நெகிழ்தல். புகழ்ந்துரைத்தல் - சொல்லாற்புகழ்தல். ஏத்தல் - பாமாலை சூட்டல். புத்தேளிர் - தேவர் தூகல் - அலகிடல் (விளக்கல்). மெழுகுதல் - கோமயத்தால் நிலம் பூசுதல். கோமயம் - பசுஞ்சாணம்.

சாதல் - உடம்பைவிட்டு நீங்குதல். திருவடிப்பேற்றுக்குத் தடையா யிருப்பது உடம்பாதலால் "சாமாறே விரைகின்றேன்" என்றார். புனைதல் - தொடுத்தல் எனினும் பொருந்தும். புத்தேளிர் கோமான்என்றது எல்லாத்தேவரினு மேற்பட்டு மாஹாதேவனென்னும் பெயரோடு சிற்றலைவிளக்கற்கென்க. (கச)

வானாகிமண்ணாகிவளியாகியொளியாகி
ஊனாகியுயிராகியுண்மையுமாயின்மையுமாய்க்
கோனாகியானெனதென்றவரவரைக்கூத்தாட்டு
வானாகிநின்றாயையென்சொல்லிவாழ்த்துவனே.

(ப - ரை.) வான் ஆகி - ஆகாயமாகி, மண் ஆகி - பிருதுவியாகி, வளி ஆகி - காற்றாகி, ஒளி ஆகி - தீயாகி, ஊன் ஆகி - உடம்பாகி, உயிர் ஆகி - (அந்த வுடம்பில்தங்கும்) உயிராகி, உண்மையும் ஆய் - மெய்யுமாகி, இன்மையும் ஆய் - பொய்யுமாகி, கோன் ஆகி - முதல்வனாகி, அவர் அவரை - ஒவ்வொருவரையும், யான் எனது என்று - யான் எனது என்று சொல்லாநின்ற அகங்கார மமகாரங்களில் மயக்குவித்துக், கூத்தாட்டுவான் ஆகி - கூத்தாடச் செய்வோனாகி, நின்றாயை - நின்றவனை, என்சொல்லி வாழ்த்துவன் - யாதுசொல்லிப் புகழ்வேன். எ - று.

(க - ரை.) ஆகாயமுதலாகிய எல்லாப்பொருள்களாகியும், அவற்றின் உண்மை யின்மைகளாகியும், அவற்றாலுலவுந் தேசிக்கா அகங்காரமமகாரங்களிற் செல்லவடுத்துக்கூத்தாடச் செய்பவனுமாகிய உன்னைஎன்சொல்லிப் புகழ்வேன் என்பதாம்.

(வி - ரை.) "அகரவுயிர்போ லறிவாகியெங்கும் நிகரிலிறை நிற்குநிறைந்து" என்கிறபடியே, எவ்விடத்தும், எக்காலத்தும், எப்பொருளினும் இறைவன் நிறைந்து நிற்றலால் 'வானாகி" எனத்தொடங்கி, "என் சொல்லி வாழ்த்துவனே" என முடித்தார். கோன் என்றமையால் இறைவற்குத் தலைமையும். கூத்தாட்டுவான் என்றமையால் சுதந்திரத்துவமும், ஆன்மாவுக்குப் பாரதந்திரியமும் கொள்ளப்படும். யான் அகங்காரம். எனது மமகாரம். இவற்றை முறையே அகப்பற்று புறப்பற்றுஎனவுங் கூறுவர். மெய்யர்க்கு உண்மையாயும் பொய்யர்க்கு இன்மையாயும் விளங்குகின்றமையால் "உண்மையுமா யின்மையுமாய்" என்றார். ஒளியையுடைய தீயை ஒளி யென்றார். அன்றியும் சோமசூர்யாக்கினி களாயெனினும் பொருந்தும். ஏனைய பூதங்களின் தோற்ற வொடுக்கங்களுக்கிடமா யிருத்தலால் வானை முதற்கட்கூறினர். ஒருபொருளேயிவ்வாறு பலபொருளாதல் இயையுமோவெனின், "கோனாகியானென தென்றவரவரைக் கூத்தாட்டுகின்ற சர்வசக்தியுள்ள சுதந்திரனாதலால் இயையுமென்க. சுதந்திரத்துவம்-தன்வயத்தனாதல். அவரவரை எனத்தலைமைபற்றி உயர்திணையைக் கூறினாரேனும் அஃறிணையும் கொள்ளப்படும். (கரு)

வாழ்த்துவதும்வானவர்கடாம்வாழ்வான்மனநின்பால்
தாழ்த்துவதுந்தாமுயர்ந்துதம்மையெல்லாந்தொழவேண்டிச்
சூழ்த்துமதுகரமுரலுந்தாரோயைநாயடியேன்
பாழ்த்தபிறப்பறுத்திடுவான்யானுமுன்னைப்பரவுவனே.

(ப - ரை.) மதுகரம் - வண்டுகள், சூழ்த்துமுரலும் - சூழ்ந்தொலிக்கின்ற, தாரோய் உன்னை - மலர்மாலையை யணிந்தவனாகிய உன்னை, வானவர்கள் - தேவர்கள், வாழ்த்துவதும் - உன்னைத்துதித்தலும், தாம்வாழ்வான் - தாங்கள் சுக வாழ்க்கை வாழும் பொருட்டே, மனம்நின்பால் தாழ்த்துவதும் - மனத்தை யுன்னிடத்துத் தங்கப்பண்ணுவதும், தாம் உயர்ந்து - தாங்கள் உயர்வையடைந்து, தம்மை - தங்களை, எல்லாம் தொழவேண்டி - யாவரும் வணங்கவிரும்பியே, நாயடியேன்யானும் - நாயடியேன் ஆகிய நானோவெனில், பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் - பாழாகிய பிறவித்தளையை யறுக்கும் பொருட்டு, பரவுவன் - துதித்து வணங்குகின்றேன், எ - று.

(க - ரை.) தேவர் உன்னைத் துதிப்பது தாம் உயர்வடைந்து தம்மை எல்லாருந்தொழ விரும்பியேயாம்; யான் அப்படி யின்றி என் பிறவித்தளையை யறுத்துக்கொள்ள விரும்பியே உன்னைத் துதிக்கின்றேன் என்பதாம்.

(வி - ரை.) வான் - விண், வானவர் - விண்ணுலகத்தார், அவர் இந்திரன் பிரமன் விஷ்ணு, முதலானோர். வாழ்தல் - தேவபோகங்களைப் பெற்றிருத்தல். தாழ்த்துதல் - பணிவித்தல், மது - தேன், கரம் - செய்வது, மதுகரம் - தேனைச்சேர்ப்பது. அறுத்திடுவான் என்றதற்கேற்ப பிறவியைத் தளையாக்கி யுரைக்கலாயிற்று. தாரோயை என்பதில் ஐசாரியை. பயனடைவோன் பயனளிப்பவனை வாழ்த்துத லியல்பாதலால், தாம் வாழ்வான் வாழ்த்துவதும் என்றார். மனநின்பால்தாழ்த்துவதும் என்னுந்தொடரை, மன்ன - நின்பால் - தாழ்த்துவதும் எனப்பிரித்து இறைவனே உன்னிடத்தெமது மனத்தையுஞ் சிரத்தையுந் தாழப் பண்ணுவதும் எனப் பொருளுரைத்தலுங் கூடும். சூழ்த்து - வலித்தல் விகாரம். (கசு)

பரவுவாரிமையோர்கள்பாடுவனநால்வேதம்
குரவுவார்குழன்மடவாள்கூறுடையாளொருபாகம்
விரவுவார்மெய்யன்பினடியார்கண்மேன்மேலுன்
அரவுவார்கழலிணைகள்காண்பாரோவரியானே.

(ப - ரை.) இமையோர் - தேவர்கள், பரவுவார் - வாழ்த்திவழிபடாநிற்பர், நால்வேதம் - நான்குவேதங்களும், பாடுவன - உன் புகழைப் பாடுவனவாயிருந்தன; குரவு - குராமலரையணிந்த, வார் - நீண்ட, குழல்மடவாள் - கூந்தலையுடையவுமாதேவியார், ஒருபாகம் கூறு உடையாள் - ஒரு புறத்தைக் கூறு

கொண்டவளாயிரா நின்றாள், மெய்யன்பின் அடியார்கள் - உண்மையன்பினையுடைய அடியார்கள், மேல்மேல் - மேலுமேலும், விரவுவார் - குழாங்கூடித் திரள்வாராயிராநின்றார்கள், (இவ்வாறிருந்தும்,) அரியானே - மனாதிகட்கரியவனே, அரவு - அராவிய, உன் வார்கழல் இணைகள் - உன் நீண்ட வீரக்கழலையணிந்த திருவடிகளை, காண்பு - காண்டற்குரியர், ஆரோ - யாவரோ, (ஒருவருமில்லை.) எ - று.

(க - ரை.) கடவுளே! உன் அருமையைநோக்கித் தேவர்கள் உன்னை வணங்குகின்றனர், வேதங்கள் புகழாநின்றன, உமாதேவி ஒருபாகத்தைவிட்டு நீங்காதிருக்கின்றனள், மெய்யடியார்கள் கூடித் தரிசியாநின்றனர். யானோ ஒன்றுஞ்செய்திலேன், ஆயினும் என்னை உன் பெருங்கருணையால் ஆட்கொள்ளவேண்டும் என்பதாம்.

(வி - ரை.) அரியான் - மநோவாக்குக் காயங்களென்கிற முக்கரணங்களுக்கு மெட்டாதவன். உமாதேவி மலையரையன் மகளாதலால் "குரவுவார்குழன் மடவாள் என்றார்" நிலவளம் போதரற்கு. அரவு - சாதிவிசேடணம். இமையாதவரை இமையோர் என்றது மங்கலம். வேதங்கள் எண்ணிறந்தனவாயினும் பயிற்சிமிகுதியால் நால்வேதம் என்றார். நால்வேதம் பாடுதலாவது. எல்லாத்தேவரினும் சிறந்தவன் எனப் புகழ்தல் மடவாள் - இளமையுள்ளவள். மடப்பம் - இளமை. அன்றிப் பெண்குணம் நான்கினுள் ஒன்று எனினுமாம். குரவு - நறுமணம் எனினுமாம். மேன்மேல் - மிகுதியாக. ஓ - அசை. தேவர் முதலானோர் உன் கழலிணைகள் காண்பாரோ, மெய்யன்பினடியார்கள் விரவுவார் என்றியைத்துக் கூறலும் பொருந்தும்.

கூறுடையாளொருபாகம் என்றது:—பிருங்கி முனிவர் சிவபிரானை மாத்திரம் வலம் வருவதைக் கண்ட உமாதேவியார் தம் நாயகனை நோக்கி முனிவர் என்னை வலம் வராமைக்குக் காரணம் யாதென்று கேட்க, சிவபெருமான் இஷ்டசித்தி பெற விரும்புவோர் உன்னையும், மோக்ஷத்தைப் பெற விரும்புவோர் என்னையும் வலம் வருவார் என்றார். அஃதுணர்ந்த உமாதேவியாரும் சிவபெருமானோடு பிரியாதிருக்கத் தவஞ்செய்து இடப்பாகம் பெற்றமையை.

(கஎ)

அரியானேயாவர்க்குமம்பரவாவம்பலத்தெம்
பெரியானேசிறியேனையாட்கொண்டபெய்கழற்கீழ்
விரையார்ந்தமலர்தூவேன்வியந்தலறேனயந்துருகேன்
தரியேனுனுமாறென்சாவேனுன்சாவேனே.

(ப - ரை.) அரியானே யாவர்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும் காணுதற்கரியவனே, அம்பரவா - சிதாகாயத்தையுடையவனே, அம்பலத்து எம்பெரியானே - பொன்னம்பலத்தினடிக்கின்ற எம்பெரியோனே, சிறியேனை ஆள்

கொண்ட - சிறியவனாகிய வென்னை யாட்கொண்டருளிய, பெய்கழல்கீழ் - திருவடிகளின்மீது, விரைஆர்ந்த-மணம் நிரம்பிய, மலர்தூவேன் - மலர்களைச் சொரியேன், வியந்து - உன் பெருங்கருணையைப் புகழ்ந்து, அலறேன் - பேரொலிசெய்யேன், நயந்து - விரும்பி, உருகேன் - மனமுருகேன், தரியேன் - (இவைகளைச் செய்யாமல்) உயிர் தரித்துமிரேன், நானும் ஆறுஎன் - அடியேன் உய்யும் வழியாது, நான் சாவேன் சாவேன் - நான் இறப்பேன் இறப்பேன். எ - று.

(க - ரை.) கடவுளே ! சிறியேனை ஆட்கொண்டருளின உன் திருவடியை அருச்சித்தல் முதலியவற்றைச் செய்து பிழைக்கும் வகையறியாமல் உயிர் வாழ்தலினும் யான் இறப்பதே தகுதியென்பதாம்.

(வி - ரை.) இறைவன் சிதாகாசஸ்வரூபனாயினும், திருச்சிற்றம்பலத்தின்கண் எம்மனோர்க் கெளிவந்தான் என்பார், "அம்பரவா அம்பலத் தெம் பெரியானே" என்றார். இறைவனது பெருமையை நோக்கத், தான் அரச்சிறியனாதலால் தன்னைச் சிறியேன் என்றார். பெய்கழல்-இடப்பட்ட வீரகண்டையையுடைய திருவடி. இது "பெய்வளை" யென்றாற்போல்வது. அறவும் பெரியனாகிய நீ, அறவும் சிறியவனாகிய என்னை யாட்கொண்டதற்கு, மலர் தூவல் முதலியவைகளை நன்றிபாராட்டலாகச் செய்திலேனாதலால் நானிறந்து படுவதே நன்றென்றற்கு "நான் சாவேன் சாவேன்" என்றிரங்கினார். மலர் தூவல் காயத்தின்றொழில், அலறுதல் வாக்கின்றொழில் உருகுதல் மனத்தின்றொழில், உன்னை முக்கரணங்களானும் வழிபடல்வேண்டுமென்பது கருத்து.

வேனில்வேண்மலர்க்கணைக்கும்வெண்ணகைச்செவ்வாய்க்கரிய
பானலார்கண்ணியர்க்கும்பதைத்துருகும்பாழ்நெஞ்சே
ஊனெலாநின்றுருகப்புகுந்தாண்டானின்றுபோய்
வானுளான்காணாய்நீமாளாவாழ்கின்றாயே.

(ப - ரை.) வேனில்வேள் - வசந்தகாலமன்மதனது, மலர்கணைக்கும் - புஷ்ப்பாணங்களுக்கும், வெள்நகை - வெள்ளிய பற்களையும், செவ்வாய் - செவந்த வாயினையும், கரியபானல்ஆர் - கருங்குவளை மலரின்தன்மை பொருந்திய, கண்ணியர்க்கும்-கண்களையுமுடைய மங்கையர்க்கும், பதைத்து உருகும்-துடித்துருகாநின்ற, பாழ்நெஞ்சே-அவலமாகிய மனமே, ஊன்எல்லாம்-உடம்பு முழுதும், நின்றுஉருக - உருகிநிற்குமாறு, புகுந்து - (நாமிருக்குமிடம் தேடி) வந்து, ஆண்டான்-எம்மையாண்டருளின இறைவன், இன்றுபோய் - இன்று நம்மைவிட்டு நீங்கி, வான்உளான் - பரமாகாயத்திலிருக்கின்றனன், காணாய்நீ - அவனைக்காணாதவனாகிய நீ, (அதை நினைந்து) மாளாது - இறந்துபடாமல், வாழ்கின்றாயே - உயிர்வாழ்கின்றனையே. (அதனாலென்ன பயன்) எ - று.

(க - ரை.) நெஞ்சமே ! மன்மதன்கணைக்கும், மாதர்க்கும் பதைத்துருகாநின்ற நீ, இறைவனது பிரிவுக்காற்றாதுருகி யிறந்தாயில்லை, ஆதலால் நீ பயனடையா தொழிகின்றனையென்பதாம்.

(வி - ரை.) மன்மதனுக்கு வேனிற்காலம் மிகச் சிறந்ததாகையால் "வேனில்வேள்" என்றார். மன்மதன் பாணங்கள் ஐந்து அவை - தாமரை, மா, அசோகு, முல்லை, நீலம் என்பன, இவற்றைமுறையே உன்மத்தம், மதநம், சம்போகம், சந்தாபம், வசிகரணம் என்பர் வடநூலார். இவை போய்ப்படும் இடங்கள் முறையே நெஞ்சு, தனம், விழி, சிரம், குய்யம் என்பன. இவைசெய்யும் அவத்தைகள், முறையே நினைப்புண்டாதல், பசலைபோர்த்தல், உண்டிவெறுத்தல் கிடத்தல், சாவுக்குச்சரியான மூர்ச்சையடைதல் என்பன. இவற்றை சுப்பிரயோகம், விப்பிர யோகம், சோகம், மோகம், மரணம் என்பர் வடநூலார். இதனை, "மெய்ப்பாட்டியல்வகை மேதகவுரைப்பின், மெய்க்கட்பட்டு விளங்கியதோற்றஞ், செவ்விதிற்றெரிந்து செப்பின்மற்றதுவே, சுப்பிரயோகம் விப்பிரயோகஞ், சோகமோக மரணமென்னு, மைவகைக்கணையி னுக்கிய காமம், பையவுருகிடப் படருமவற்றுட் சுப்பிரயோகம் சொல்லுங்கினைப்பும், விப்பிரயோகம் வெய்துயிர்ப்பெறிதல், சோகம்வெப்புஞ் சோறுண்ணாமையு, மோகமயக்கமு மொழிபலபிதற்றலு, மரணமணங்கலு மானுருமென்ப, ரரணஞ்சான்ற வறிவினோரே யென்னுந்தொல்காப் பியத்தானறிக. இவற்றின் விரிவெல்லாம் மதநாகமங்களிற் காண்க. நின்றுருக என்பதனை உருகிநிற்க என மாறுக. இன்று போய் வானுளான் என்றமையால் ஆண்டது அன்று என்பது பெறப்பட்டது. அது திருப்பெருந்துறையில் குருந்தமரநிழலில் குருமூர்த்தமா யெழுந்தருளி யாட்கொண்டநாள். இறைவனைக் காணாது உயிர்வாழ்கின்றமையால் பாழ்நெஞ்சேயென்றார், இறைவன் ஆகாயத்தில்மறைந்தமையால் வானுளான் என்றார். மாளாது என்பது மாளா என ஈறுதொக்கலாயிற்று. மன்மதன் பாணப் பிரயோகஞ் செய்த பின்னர் உயிர்களுக்கு மாதர்மேல் விருப்ப முண்டாதல் இயல்பாதலால், "வேனில்வேண்மலர்க்கணைக்கும் வெண்ணகைச் செவ்வாய்க்கரிய பானலார் கண்ணியர்க்கும்" எனக்காரண காரியமுறை பிறழாது வைத்தார்.

வாழ்கின்றாய்வாழாதநெஞ்சமேவல்வினைப்பட்
டாழ்கின்றாயாழாமற்காப்பானையேத்தாதே
சூழ்கின்றாய்கேடுனக்குச்சொல்கின்றேன்பல்காலும்
வீழ்கின்றாய்நீயவலக்கடலாயவெள்ளத்தே.

(ப - ரை.) வாழ்கின்றாய் - பொய்வாழ்வுவாழ்கின்றனை, வாழாத-நித்திய வாழ்வைப்பெற்று வாழாத, நெஞ்சமே - மனமே, வல்வினைப்பட்டு-வலியவினை யிலகப்பட்டு, ஆழ்கின்றாய் - அழுந்துகின்றனை, ஆழாமல் - அழுந்தாமல், காப்பானை - நம்மை யெடுத்தாண்டருள்பவனை, ஏத்தாதே - துதியாமல், உனக்குக் கேடுசூழ்கின்றாய் - உனக்குக் கெடுதிபயக்கும் வினையையே எண்ணுகின்றனை, பல்காலும் சொல்கின்றேன்-பலமுறையும் நான் சொல்லாநின்றேன், (அவ்வாறு சொல்லியும்) அவலக்கடல் ஆயவெள்ளத்து - துன்பமாகிய சாகரத்தில், நீ வீழ்கின்றாய் - நீ விழுந்தழுந்துகின்றனை, (உன்னறியாமைக் கென்செய்வேன்.

(க - ரை.) நெஞ்சமே! யான் பலதரஞ்சொல்லியும் இறைவனை வழிபட்டுய்யாமல் உனக்கு நீயே கேடுசூழ்ந்து துன்பக்கடலில்விழுந்து அழுந்துகின்றாய், உன் அறியாமைக்கு நான் என்செய்வேன் என்பதாம்.

(வி - ரை.) ஆழ்கின்றாய் ஆழாமல் என்னும் வினைகளுக்கேற்ப வினையைக் கடலாக்கி யுரைக்கலாயிற்று. கேடுசூழ்தல் - கேடடைய நினைத்தல், வாழ்கின்றாய் - முற்றெச்சம். (உ0)

திருச்சிற்றம்பலம்.

## ரு-வது சுட்டறுத்தல்.

ஆதாவது
தன் செயலற்றுநிற்றல்.

எண்சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

வெள்ளந்தாழ்விரிசடையாய்விடையாய்விண்ணோர்
பெருமானேயெனக்கேட்டுவேட்டநெஞ்சாய்ப்
பள்ளந்தாழுறுபுனலிற்கீழ்மேலாகப்
பதைத்துருகுமவர்நிற்கவென்னையாண்டாய்க்
குள்ளந்தாணின்றுச்சியளவுநெஞ்சா
யுருகாதாலுடம்பெல்லாங்கண்ணாயண்ணா
வெள்ளந்தான்பாயாதாநெஞ்சங்கல்லாங்
கண்ணிணையுமரமாந்தீவினையினேற்கே.

(ப - ரை.) வெள்ளம் - ஆகாயகங்கையைத் தரித்த, தாழ் - தாழ்ந்து, விரி - பரந்த, சடையாய்-சடையை யுடையவனே, விடையாய் - இடபவாகனத்தையுடையவனே, விண்ணோர்பெருமானே - தேவாதி தேவனே, என - என்று உன் மெய்யடியார்சொல்ல, கேட்டு - கேட்டு, வேட்டநெஞ்சு ஆய் - விருப்பங்கொண்ட மனமுடையராய், பள்ளம் தாழ் உறுபுனலின் - பள்ளத்திற்சென்று வீழ்கின்ற நீர்போல, கீழ்மேல் ஆக பதைத்து - கீழ்மேலாம்படி பதைத்து, உருகுமவர் நிற்க - உருகா நின்றவர்களிருக்க, என்னை ஆண்டாய்க்கு - என்னையாட்கொண்டருளின வுன்பொருட்டு, உள்ளந்தாள் நின்று - உள்ளங்கால் முதல், உச்சி அளவும் - உச்சிவரையும், நெஞ்சுஆய் - நெஞ்சின்றன்மையடைந்து, உருகாதால் - உருகாமையாலும், உடம்பு எல்லாம் - உடல் முழுதும், கண் ஆய் - கண்களாகப்பெற்று, அண்ணா - நெருங்கமுடியாத, வெள்ளம்பாயாதால் - நீர்பெருகிப் பாயாமையாலும், தீவினையினேற்கு - தீவினையையுடைய எனக்கு, நெஞ்சம் கல்ஆம் - மனம் கல்லாகும், கண் இணையும் - இருகண்களும், மரம்ஆம்=மரமாகும். எ - று.

(க - ரை.) உன் மெய்யன்பரிருக்க என்னைத் தடுத்தாட்கொண்ட உன் பெருங்கருணையை நினைந்து மனமுருகிக் கண்ணீர் பெருக்கேன், இதற்குக் காரணம் என் தீவினையேயாம் என்பதாம்.

(வி - ரை.) கீழ்மேலாதல் - முறைமாறல். கல்லாம் மரமாம் என்றமையால் ஒப்பிட்டதன்று. கல்லாலியன்றதேயாம், மரத்தானியன்றனவே யாம் என்றாராயிற்று. அண்ணா! விளி யெனினுமாம். உரியாரிருக்க உரிமையிலேனை யாண்டருளினவுன் பெருங்கருணையை நினைந்துருகச் சிறிய இடத்தையுடைய இந்த நெஞ்சும் பற்றாது, நீர் பெருக்க இந்த இரண்டு கண்களும் பற்றா என்றற்கு, "உள்ளந்தாளின் றுச்சியளவு நெஞ்சாய்" எனவும், "உடம்பெல்லாங் கண்ணாய்" எனவும் கூறினார். வெள்ளம் இங்கு கங்கையை யுணர்த்திற்று. அது அடங்குதற்குரிய இடமுடையது என்றற்கு, "தாழ் விரிசடையாய்" என்றார். சடையாய், விடையாய், பெருமானே என்று பிறர் கூறக் கேட்டலும் மனமுருகாநின்ற அடியாரிருக்க, சிறியேனை ஆண்டருளின உன் பெருங்கருணையை நினைந்து உள்ளங்கால்முதல் உச்சியளவும் நெஞ்சாகப் பெற்றுருகவேண்டும், உடம்பெல்லாம் கண்களாகப் பெற்று நீர் பெருக்கவேண்டும், அப்படி செய்யாமையால் என் மனம் கல்லாற் செய்யப்பட்டதோ, என் கண்கள் மரத்தாற் செய்யப்பட்டனவோ வென்றாராயிற்று.

வெள்ளந்தாழ் விரிசடை என்றது:—சூரியவமிசத் தரசர்களில் ஒருவனாகிய பகீரதன் கபில முனிவருடைய சாபத்தால் சாம்பராய்ப்போன தமது மூதாதைகள் நற்கதி யடையும்பொருட்டுச் சிவபெருமானை நோக்கி தவஞ்செய்து சுவர்க்கத்திலிருந்து கங்கையைப் பூமிக்குக் கொண்டுவருகையில் அதன் வேகத்தைத் தடுப்பதற்காகச் சிவபெருமான் தமது சடையில் அதை வைத்தருளினமையை. (உக)

வினையிலேகிடந்தேனைப்புகுந்துநின்று
போதுநான்வினைக்கேடனென்பாய்போல
இனையனுனென்றுன்னையறிவித்தென்னை
யாட்கொண்டெம்பிரானானாய்க்கிரும்பின்பாவை
அனையநான்பாடேனின்றுடேனந்தோ
வலறிடேனுலறிடேனாவிசோரேன்
முனைவனேமுறையோநானானவாறு
முடிவறியேன்முதலந்தமாயினானே.

(ப - ரை.) வினையிலே கிடந்தேனை - இருவினையால் வரும் பாசத்தால் பிணிப்புண்டு கிடந்தவென்னை, புகுந்து - வலாத்காரமாய் வந்து என் மனத்தில் நுழைந்து, நின்று - நிலைபெற்றிருந்து, போது - வா, நான் வினைக்கேடன் - நான் அடுத்தவர்களின் வினைத்துயரை யொழிப்பவன், என்பாய்போல - என்று சொல்வாய்போல, நான் இனையன்-நான் இத்தன்மையேன், என்று - என்று,

உன்னை அறிவித்து - உன்னை யுள்ளவாறெனக்குணர்த்தி, என்னை ஆட்கொண்டு - என்னை யடிமைகொண்டு, எம்பிரான் ஆனாய்க்கு - எமது தலைவனாகிய வுன்பொருட்டு, இரும்பின்பாவை அனையநான் - இரும்பினாற்செய்த பாவை போன்ற யான், பாடேன் - பாடுதல் செய்யேன், நின்றுஆடேன்-நின்று ஆடுதல் செய்யேன், அந்தோ - ஐயோ, அலறிடேன் - அரற்றுதல் செய்யேன், உலறிடேன் - வாய்வெருவுதல்செய்யேன், ஆவிசோரேன் - உயிர்வாடுதல்செய்யேன், முனைவனே - தலைவனே, முறையோ - முறையோ, நான்ஆனஆறு - நான் இப்படியாயிருக்கு முறைமையின், முடிவு அறியேன் - முடிவினை அறிந்திலேன், முதல் அந்தம் ஆயினானே - முதலும் இறுதியுமாயிருப்பவனே. எ-று.

(க - ரை.) வலியவந்து என்னையும் உன்னையும் நானுணருமாறு எனக்குணர்த்தி என்னையடிமைகொண்ட உன்னைப்பாடுதல் முதலாயினசெய்யேன். நான் ஆம்வழியும் அழியும்வழியும் இன்னதென்று அறியேன், உனக்கே அபயம் என்பதாம்.

(வி - ரை.) "இருவினைப் பாசக்கயிற்றின் வழி" எனப்பிறவிடத்து மிவ்வாறு கூறப்படுதலின் வினையைக் கயிறாக்கியும் கிடந்தேனை யென்புழிதொழில் நிகழாமை பெறப்படுதலின் பிணிப்புண்டுகிடந்த என்னையெனவும் உரைக்கலாயிற்று. முதலந்தமாயினானே என்பதற்கேற்ப, "முன்னவன் பின்னவன்" என்றார் திருக்கோவையாரினும். இரும்பின்பாவை-இரும்பினாற் செய்யப்பட்ட பாவை. உலறுதல் - வற்றுதல் எனினுமாம். (உஉ)

ஆயநான் மறையவனுநீயேயாத
 லறிந்தியானியாவரினுங்கடையனாய
நாயினேனாதலையுநோக்கிக்கண்டு
 நாதனேநானுனக்கோரன்பனென்பேன்
ஆயினேனாதலாலாண்டுகொண்டா
 யடியார்தாமில்லையேயன்றிமற்றோர்
பேயனேனிதுதானின்பெருமையன்றே
 யெம்பெருமானென்சொல்லிப்பேசுகேனே.

(ப - ரை.) ஆய-ஆராயுமிடத்து, நான் மறையவனும் - நான்கு வேதங்களாலும் சொல்லப்பட்டவனும், நீயே ஆதல் அறிந்து-நீயேயாயிருத்தலைத் தெரிந்துகொண்டு, யான் - நான், யாவரினும் கடையன் ஆய-எல்லாரினும் கீழ்ப்பட்டவனாகிய, நாயினேன் ஆதலையும் - நாய்போல்பவனாயிருத்தலையும், நோக்கிக் கண்டு - எனக்குள் ஆராய்ந்துபார்த்து, நாதனே - இறைவனே, நான் - அடியேன், உனக்கு - தேவரீருக்கு, ஓர் அன்பன் என்பேன் ஆயினேன் - ஒரு அன்பன் என்று நினைப்பேனாயினேன், ஆதலால் - ஆகையால், ஆண்டுகொண்டாய் - ட்கொண்டருளினை, அன்றி - அடியேனை அல்லது, அடியார் இல்லையே =

(உனக்குவேறு) அடியார்களில்லையோ, மற்று ஓர் பேயனேன்-நான் வேறொரு பேயின்தன்மை யுடையேன், இதுதான் - (இப்படிப்பட்ட என்னையடிமைகொண்ட) இத்தன்மையே, நின்பெருமைஅன்றே - உன்பெருமை அல்லவா, எம்பெருமான் - எம்பெருமானே, என் சொல்லிப் பேசுகேன் - (உன் பெருமையை) நான் என்னென்றுசொல்லித் துதிப்பேன். எ - று.

(க -ரை.) நான்குவேதப் பிரதிபாத்தியனுயிருப்பவன் நீ யென்பதையும் யாவரினும் இழிந்தவன் நான் என்பதையும் அறிந்து உனக்கு நானும் ஓரடியவன் என்றேனாதலால் ஆண்டுகொண்டனை. அவ்வளவேயன்றி உனக்கு அடியாரில்லாத குறையினாலன்று. உன் பெருந்தன்மையைக் குறித்து நான் என் சொல்லிப் புகழ்வேன் என்பதாம்.

(வி - ரை) நான் மறையவன் - வேதியன் எனினுமாம். இறைவன் பிராமணத்திருமேனி கொண்டுவந்து இவரை யாட்கொண்டருளின செய்தி இவரது புராணத்தால் நன்கு விளங்கும், மற்றோர் பேயன் என்றது மாறுபட்டவுருக்கொண்ட பேயன் என்றபடி, பேய் அன்னேன் எனப்பிரித்துப் பேயையொப்பேன் எனினுமாம். பேயனேனாதலால் உன் பெருமையையும் என் சிறுமையையும் அறிந்திலேன் என்றுயிறறு என் சொல்லிப் பேசுகேன் என்றது, இறைவனது தன்மை மேன்மைகள் ஒருவராலெடுத்துப் பேசுதற் கியையாவென்பது துணர்த்தற்கு. இது, "அவன் பூங்கழல் பேசத்திருவார்த்தையிற் பெருநீளம்" என்னும் திருக்கோவையாரால் உணரப்படும், மறை - அந்தணரல்லாதார்க்கு மறுக்கப்பட்டது, அறமுதலிய நாற்பொருளும் மறைந்திருத்தற்கிடமாயிருப்பது எனினுமமையும். (உ௬)

பேசிற்றாமீசனேயெந்தாயெந்தை
  பெருமானேயென்றென்றேபேசிப்பேசிப்
பூசிற்றான்றிருநீறேநிறையப்பூசிப்
  போற்றியெம்பெருமானேயென்றுபின்றா
நேசத்தாற்பிறப்பிறப்பைக்கடந்தார்தம்மை
  யாண்டானேயவாவெள்ளக்கள்வனேனை
மாசற்றமணிக்குன்றேயெந்தாயந்தோ
  வென்னைநீயாட்கொண்டவண்ணந்தானே.

(ப - ரை.) பேசில் - சொல்லப்புகின், ஈசனே - சர்வேசுவரனே, என் தாய் - என் தந்தையே, எந்தை பெருமானே-எந்தைக்கும் பெரியோனே, என்றுஎன்றே பேசிபேசி - என்று பலகாலுஞ்சொல்லி, பூசின்-தரிப்பதானால், திருநீறே நிறைய பூசி - திருநீற்றையே உடம்புமுழுதும் உத்தூளனஞ்செய்து, போற்றி நமஸ்காரம், எம்பெருமானேயென்று - எம்மிறைவனே யென்று, பின்றாநேசத்தால்-பின்னிடாத அன்பினால், பிறப்பு இறப்பை - பிறப்பையும் இறப்பையும், கடந்தார்தம்மை - தாண்டினவர்களை, ஆண்டானே - ஆண்டருளின

வனே, மாசுஅற்ற - குற்றமற்ற, மணிகுன்றே-மாணிக்கமலையே, எந்தாய் - எந்தையே, அந்தோ - ஐயோ, அவாவெள்ளம் - ஆசைக்கடலிலமிழ்கின்ற, கள்வனேனை-சோரனாகிய என்னை, நீ ஆட்கொண்டவண்ணம் - நீ யாட்கொண்டருளின பிரகாரம், என்னே - என்ன. எ - று.

(க - ரை.) இறைவனே! அடியார்களுக்குக் கிருபைபுரியும் இயல்பினையுடைய நீ, உன்னிடத்து, அன்பில்லாத வென்னை யாண்டருளினது மிகவும் ஆச்சரியப்படத்தக்கதா யிருக்கின்றது என்பதாம்.

(வி - ரை.) தம்மைக்கள்வனென்றது - இறைவனது பொருளாகிய ஆன்மாவைத் தாமாகவும் உடம்பைத் தமாகவுங் கருதியிருந்தமையால். நேசத்தால் என்பதில் ஆல் மூன்றும்வேற்றுமைக் கருவிப்பொருளது. ஈசன் - ஐசுவரியத்தையுடையவன், ஐசுவரியமாவது அண்டங்களையு மண்டசராசரப் பொருள்களையுந் தன்னுடைமையாகப்பெற்று, அவற்றைத் தான் உடையவனாயிருத்தல். பின்றல் - பின்னிடல். அன்பையே பற்றுக்கோடாகக் கொண்டு சனனமரணங்களைக் கடந்தவராதலால் அன்பரை "நேசத்தாற் பிறப்பிறப்பைக் கடந்தார்" என்றார். அந்தோ - அதிசய விரக்கச்சொல். (உச)

வண்ணந்தான்சேயதன்றுவெளிதேயன்ற
    னேகனேகனணுவணுவிலிறந்தாயென்றங்
கெண்ணந்தான்றடுமாறியிமையோர்கூட்ட
    மெய்துமாறறியாதவெந்தாயுன்றன்
வண்ணந்தானதுகாட்டிவடிவுகாட்டி
    மலர்க்கழல்களவைகாட்டிவழியற்றேனைத்
திண்ணந்தான்பிறவாமற்காத்தாட்கொண்டா
    யெம்பெருமானென்சொல்லிச்சிந்திக்கேனே.

(ப - ரை.) இமையோர் கூட்டம் - தேவசமூகங்கள், வண்ணந்தான் - நிறந்தான், சேயதுஅன்று - செம்மை நிறமுடையதும் அல்ல, வெளிதே - வெண்மைநிறத்ததா, அன்று - அதுவுமல்ல, அநேகன் - பற்பல வுருவாயிருப்பவன், ஏகன் - ஒன்றுந்தன்மையன், அணு - அணுரூபமானவன், அணுவில் இறந்தாய் - அணுவினுமிகச் சிறியவனாயிருப்பவன், என்று - என்று பலவாறு வாயாற்சொல்லி, அங்கு - அவ்வாறே, எண்ணம் தடுமாறி - நினைவுங் கலங்கி, எய்தும் ஆறு அறியாத - உன்னையடையும்வழி யின்னதென்றறியப் படாத, எந்தாய் - எமது பரமபிதாவே, உன்றன் வண்ணம் அதுகாட்டி - உன் நிறம் இத்தன்மையதெனக் காட்டி, வடிவுகாட்டி - உன் திருவுருவைக் காட்டி, மலர்க்கழல்கள் அவைகாட்டி - தாமரைமலர்போன்ற திருவடிகளையுங் காட்டி, வழிஅற்றேனை - உய்யும்வகை இன்னதென்றறியாத என்னை, திண்ணந்தான் - திடமாகவே, பிறவாமல் - மீண்டும் பிறவாதவண்ணம்,

காத்து - தடுத்து, ஆட்கொண்டாய் - அடிமைகொண்டாய், எம்பெருமான் - எம்மிறைவனே, என் சொல்லி சிந்திக்கேன் - உன் பெருங்கருணையை யாதென்று வாயாற்சொல்லி மனத்தாற் சிந்திப்பேன். எ - று.

(க - ரை.) தேவர்கள் உன் நிற முதலானவற்றை அறியாமல் மனங் கலங்கி நிற்க, என்னைத் தடுத்தாட்கொண்டனையே, உனது பெருங்கருணைத் திறத்தைக்குறித்து என்னென்று புகழ்வேன், என்னென்று நினைப்பேன்! என்பதாம்.

(வி - ரை.) அறியாதவண்ணம் என இயையும். அது அவை எனச் செய்யுட்சுட்டாற் கூறினார், அவற்றின்பெருமை யறிவரி தென்றற்கு. எண்ணம் என மேல் வருவதால் என்று என்பதற்கு வாயாற்சொல்லியெனப் பொருளுரைக்கப்பட்டது. தேவர் கூட்டங்களே எய்யுமாறறியாதாயின், யானறிய வல்லேனோ, அல்லேன், ஆயினும், எத்தாயும் எம்பெருமானுமா யுள்ளாயாதலால், உன்றன் வண்ணமுதலானவற்றைக் காட்டித் தடுத்தாட்கொண்டாயென்பது கருத்து. வண்ணம் இறைவனது திவ்யான்ம சொரூபம். வடிவு - அருளுரையா யெழுந்தருளின காலத்துக்கொண்ட மானுடத் திருவுரு. வண்ணமது என்றதில் - அது, பகுதிப்பொருள் விகுதி. (உரு)

சிந்தனைநின்றனக்காக்கிநாயினேன்றன்
கண்ணிணைநின்திருப்பாதப்போதுக்காக்கி
வந்தனையுமம்மலர்க்கேயாக்கிவாக்குன்
மணிவார்த்தைக்காக்கியைம்புலன்களார
வந்தனையாட்கொண்டுள்ளேபுகுந்தவிச்சை
மாலமுதப்பெருங்கடலேமலையேயுன்னைத்
தந்தனைசெந்தாமரைக்காடனையமேனித்
தனிச்சுடரேயிரண்டுமிலித்தனியனேற்கே.

(ப - ரை) நாயினேன் தன் - நாயையொத்தவனாகிய வெனது, சிந்தனை - நினைப்பை, நின்தனக்காக்கி - உன் விஷயத்திற்குரியதாக்கி, கண்ணிணை - கண்களிரண்டையும், நின் திருப்பாதப்போதுக்கு ஆக்கி - உன் திருவடிமலரின் விஷயமாக்கி, வந்தனையும் - வணக்கத்தையும், அம்மலர்க்கே ஆக்கி - அந்தத் திருவடிமலரின் விஷயமேயாக்கி, வாக்கு - வாக்கை, உன் மணிவார்த்தைக்கு ஆக்கி - உன் திருவார்த்தையின் விஷயமாக்கி, ஐம்புலன்கள் ஆர - என்னுடைய பஞ்சேந்திரியங்களானும் நுகரும்படி, வந்தனை - வந்து, ஆட்கொண்டு - அடிமைகொண்டு, உள்ளே புகுந்த - என் மனத்திற் பிரவேசித்த, விச்சை - வித்தையையுடைய, மால் அமுதக்கடலே - பெரிய அமிர்தசாகரமே, மலையே - பொன் மலையே, செந்தாமரைக்காடு அனையமேனி - செந்தாமரை மலர்க்காட்டையொத்த திருமேனியையுடைய, தனிச்சுடரே - ஒப்பற்றவொளியே, இரண்டும் இல் - இகபரமிரண்டுமற்ற, இத்தமியனேற்கு - இந்தத் தமியேனுக்கு, உன்னைத் தந்தனை - உன்னைக் கொடுத்தாய் (உன் பெருங்கருணையிருந்தவாறு என்) எ - று.

(க - ரை.) கடவுளே! இம்மைமறுமைகளின் வகையின்னதென்றறியாத என்மனம் முதலியவற்றை உனக்குரியனவாகச் செய்து என்னை அடிமைகொண்ட உன் பெருங்குணத்தை என்னென்று புகழ்வேன் என்பதாம்.

(வி - ரை.) ஐம்புலன்களார வந்தனை என்றது - ஐம்பொறிகளாலும் நுகர்தற்குரிய திருவருட்படிவமாகி வந்த அருளிறைவடிவத்தை. இரண்டிமிலேற்கு, தன்னைத்தந்து என்னுட் புகுந்ததொரு மாயவித்தையேயென்பார், "உள்ளேபுகுந்த விச்சை" என்றார். அமுதக்கடல் - பாற்கடலென்றலுமொன்று. திருமுகமுதலியவை செந்தாமரை மலர்கள் போலுதலால் "செந்தாமரைக்காடு அனையமேனி" என்றார். மலையென்றது - சலிப்பின்மைநோக்கி. திருவார்த்தை - இறைவனது கல்யாணகுணப்ரதாபம். என் மனம் உன்னையே நினைக்கும்படி செய்க என்றற்குச் "சிந்தனை நின்றனக்காக்கி" என்றும். என் இரு கண்களும் உன் திருவடியையே நோக்கச் செய்க என்றற்கு "கண்ணிணை நின்திருப்பாதப்போதுக்காக்கி" என்றும், அத்திருவடியையே நான் வணங்கச் செய்க என்றற்கு "வந்தனையு மம்மலர்க்கேயாக்கி" என்றும், என்வாய் உன் திருவார்த்தையையே பேசச்செய்க என்றற்கு "வாக்குன்மணி வார்த்தைக்காக்கி" என்றும் கூறியருளினர். புலன் என்றது இங்குப் பஞ்சேந்திரியங்களுக்காயிற்று. பஞ்சேந்திரியமாவது, மெய், வாய், கண், மூக்கு, செவி என்பன. இவ்வைந்திலும் இறைவனை நுகர்தலாவது, ஸ்பரிசித்தல், சுவைத்தல், காண்டல், வாசனையறிதல், கேட்டல் என்பனவற்றால் அநுபவித்தல். வந்தனை என்பது வந்து எனப்பொருள் படுதலால் முற்றெச்சம். நா ஒன்றற்கே இனிமைதரும் அமுதக்கடலை இழித்தற்கும், ஐம்பொறிகளுக்கும் மனத்துக்கும் இனிதாதலை உணர்த்தற்கும் "மாலமுதப் பெருங்கடலே" என்றார். ஒளியுடைப் பொருள்கள் சோம சூர்யாக்னியென்னு முச்சுடரினும் மிக்க ஒளியுருவன் ஆதலால், "தனிச்சுடரே" என்றார். வித்தை என்பது விச்சையென நின்றது. மால் அமுதம் என்பவற்றை மலைக்கும் விசேடணமாக்கி அமுதமலையே யெனினும் பொருந்தும், எவ்வாறெனில், இறைவனது திருமேனி திருவெண்ணீற்றால் பூசப்பட்டு வெண்ணிறமுடைய அமுதத்தானியன்றதோர் மலையெனத் தோன்றலின். ஏ - வியப்பிடைச்சொல். (உசு)

தனியனேன் பெரும்பிறவிப்பௌவத்தெவ்வத்
தடந்திரையாலெற்றுண்டுபற்றொன்றின்றிக்
கனியைநேர்துவர்வாயாரென்னுங்காலாற்
கலக்குண்டுகாமவான் சுறவின்வாய்ப்பட்
டினியென்னேயுய்யுமாறென்றென்றெண்ணி
யஞ்செழுத்தின்புணைபிடித்துக்கிடக்கின்றேனை
முனைவனேமுதலந்தமில்லாமல்லற்
கரைகாட்டியாட்கொண்டாய்மூர்க்கனேற்கே.

(ப - ரை.) தனியனேன் - தனியே ஆகி, பிறவி - பிறவியாகிய, பெருவெள்ளத்து - பெரிய சமுத்திரத்தில், எவ்வம் - இருவினைத் துன்பமாகிய, தடம் திரையால் - பெரிய அலைகளால், எற்றுண்டு - மோதப்பட்டு, பற்று ஒன்று இன்றி - வேறு ஓர் ஆதாரமுமில்லாமல், கனியைநேர் - கொவ்வைக்கனியை நிகர்த்த, துவர்வாயார் என்னும் - பவளம்போன்ற வாயினையுடையாராகிய மாதரென்கிற, காலால் - பெருங்காற்றால், கலக்குண்டு - கலக்கப்பட்டு, காமம் - காமமென்கிற, வான்சுறவின் - பெருஞ்சுறவினது, வாய்ப்பட்டு - வாயிலகப்பட்டு, இனிஉய்யும் ஆறு என்னே - இனி பிழைக்கும்வழி யாதோ, என்று என்று எண்ணி - என்று பலமுறை சிந்தித்து, அஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின்றேன் - ஸ்ரீபஞ்சாக்ஷரமாகிய மரக்கலத்தைத் துணையாகப் பற்றிக்கொண்டு கிடக்கின்றேன், மூர்க்கனேற்கு - (வேறு சற்குணங்கள் சிறிதுமில்லாத) மூர்க்கனாகிய எனக்கு, ஐ - அழகிய, முனைவனே - தலைவனே, முதல் அந்தம் இல்லா - முதலிறுதிகளில்லாத, மல்லல் - வளப்பொருந்திய, கரை - மோக்ஷக்கரையை, காட்டி ஆட்கொண்டாய் - காட்டி யடிமைகொண்டருளினாய், (நின் பெருங்கருணை யிருந்தவாறென்.) எ - று.

(க - ரை.) தனியனாய்ச் சனனசாகரத்தில் விழுந்து, பலவகைத்துன்பங்களாகிய அலைகளால் மொதுண்டு, மற்றோருதவியுமின்றி பெண்கள் என்னும் பெருங்காற்றாற் கலங்கி, காமமாகிய பெரிய சுறாமீனின் வாயிற்சிக்கி, இனிப் பிழைக்கும்வழி யாதென்று சிந்தித்து, உன் * ஐந்தெழுத்தாகிய புணையைப் பற்றிக் கிடக்கின்ற என்னை முத்தியாகிய கரையிலேற்றி ஆட்கொண்டருளினை என்பதாம்.

(வி - ரை). தனியனேனென்றது - இருவினைக்கீடா யமைந்தவிவ்வுடலெடுக்கத்தில் தந்தைதாயரும் விட்டொழிதலால். பிறவிப்பெரும் வெள்ளம் என்பதைப் "பிறவிப்பெருங்கடல்" என்றார் தேவரும். வாய் - அதரம். அஞ்செழுத்தின் என்பதில் இன் அல்வழிச் சாரியை. திரையாலெற்றுண்ணல் முதலியவற்றால் தளர்ந்திருப்பவனாதலால், புணைபிடித்தன் மாத்திரையேயன்றி அதனைச் செலுத்தும் வலியின்றிக்கிடந்தேன் என்றற்குப் "புணைபிடித்துக் கிடக்கின்றேன்" என்றார். முத்தியினுமிக்க தொன்றின்மையின், மல்லற்கரையாயிற்று. மூர்க்கனேற்கு முத்திக்கரை காட்டல் சுதந்திரனாகிய உனக்கன்றி பரதந்திரராகிய வேனையர்க்குக் கூடாதென்றற்கு "முனைவன்" என்றார். மரமுதலியவற்றாற் செய்யப்பட்ட புணையைப்பிறரெல்லாம் பற்ற, நான் எழுத்தாற் செய்யப்பட்ட புணையைப்பற்றினே னென்று தமக்குப் பஞ்சாக்ஷரத்திலுள்ள மன வுறுதியை வெளியிட்டவாறு காண்க. முத்திக்குத் தோற்றக்கேடுகள்

* உயிர்களுக்குநற்றுணையாய் எல்லா நன்மைகளும் செய்யவல்லது ஸ்ரீபஞ்சாக்ஷர மென்பதற்கு "சொற்றுணைவேதியன் சோதிவானவன், பொற்றுணை திருந்தடிபொருந்தகைதொழக்,கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்,நற்றுணையாவது நமச்சிவாயவே." என்னும் வாகீசர் திருப்பதிகமே சான்று, மற்றும் வருவனவற்றானு முணர்க.

இல்லாமையால், அதனை "முதலந்தமில்லா" என்றார். ஸ்ரீ பஞ்சாக்ஷரமாகிய புணையைப் பிடித்தல் ஒன்றேயன்றி, இறைவனடியார்க்குரிய இலக்கணங்கள் முற்றுங்கிரம்பப் பெற்றிலேன் என்றற்கு "மூர்க்கனேற்கு" என்றார். (௨௭)

கேட்டாருமறியாதான்கேடொன்றில்லான்
  கிளையிலான்கேளாதேயெல்லாங்கேட்டான்
நாட்டார்கள்விழித்திருப்பஞாலத்துள்ளே
  நாயினுக்குத்தவிசிட்டுநாயினேற்கே
காட்டாதனவெல்லாங்காட்டிப்பின்னுங்
  கேளாதனவெல்லாங்கேட்பித்தென்னை
மீட்டேயும்பிறவாமற்காத்தாட்கொண்டா
  னெம்பெருமான்செய்திட்டவிச்சைதானே.

(ப - ரை.) ஆரும் - யாவரும், கேட்டு அறியாதான் - கேட்டறியாதவன், கேடுஒன்று இல்லான் - அழிவு சிறிதுமில்லாதவன், கிளை இல்லான் - உறவினரில்லாதவன், கேளாதே - கேளாமலே, எல்லாம் கேட்டான் - எல்லாவற்றையும் கேட்டவன், நாட்டார்கள் விழித்திருப்ப - நாட்டிலுள்ளார் பார்த்திருக்க, ஞாலத்துள்ளே - உலகத்தில், நாயினுக்கு - நாய்க்கு, தவிசு இட்டு - ஆசநமிட்டு, நாயினேற்கு - நாயினேனுக்கு, காட்டாதன எல்லாம்காட்டி - காட்டக் கூடாதவைகளையெல்லாம் காட்டி, பின்னும் - மேலும், கேளாதன எல்லாம் கேட்பித்து - கேட்கக்கூடாதவைகளையெல்லாம் கேட்பித்து, என்னை - அடியேனை மீட்டேயும் - மறுபடியும், பிறவாமல் - பிறவாவண்ணம், காத்து ஆட்கொண்டான் - தடுத்தாட் கொண்டான், (இது) எம்பெருமான் - எம்மிறைவன், செய்திட்ட - செய்தருளிய, விச்சைதான் ஏ - மாயவித்தைதானென்ன வியப்பு. எ - று.

(க - ரை.) ஒருவராலும் இன்னபடித்தானவனெனக் கேட்டறியாதவனும், தனக்கொரு அழிவில்லாதவனும், உறவில்லாதவனும், கேளாமலே எல்லாம் கேட்பவனும் ஆகிய இறைவன், என்சிறுமைநோக்காது நாய்க்குத் தவிசிட்டாற் போலத் தன்னருகிலிருத்தி, காட்டுதற்கரிய தன் உண்மை நிலையைக் காட்டி, நான் இதுவரையிலுங் கேட்காத வேதசிவாகமங்களின் பொருள்களை ஐயமறக்கேட்பித்து, மீட்டும் நான் பிறவாமல் என்னைத்தடுத்தாட்கொண்டான். இது ஒருவித்தையேயாம் என்பதாம்.

(வி - ரை.) கேட்டாருமறியாதான் என்றதற்கு - அழியுந்தன்மையராகிய யாவற்று மறியப்படாதவன் என்றலுமொன்று. இறைவன் தன்னுண்மை நிலை முதலியவற்றைக்காட்டி, வேதசிவாகமாதிகளினுட்பொருள்களை யெல்லா முணர்த்தி, மீட்டும் பிறவாமல் தடுத்தாண்டமையால், காட்டாதன வெல்லாங் காட்டிப் பின்னுங் கேளாதனவெல்லாங் கேட்பித்தென்னை மீட்டேயும் பிறவாமற் காத்தாட்கொண்டான்" என்றார். "நாயினுக்குத் தவிசிட்டு" என்றது

இறைவனது பெருமையும் தமது சிறுமையும் தோன்றுதற்கென்க. ஓன்று - சிறிது என்னும் பொருளது. விழித்தல் - பார்த்தல். ஞாலம் - உலகு. தவிசு - ஆசநம். ஏ - வியப்பின்கண்வந்தது. (உஅ)

விச்சைதானிதுவொப்பதுண்டோகேட்கின்
மிகுகாதலடியார்தம்மடியனுக்கி
அச்சந்தீர்த்தாட்கொண்டானமுதமூறி
யகநெகவேபுகுந்தாண்டானன்புகூர
வச்சனுண்பெண்ணலியாகாசமாகி
யாரழலாயந்தமாயப்பானின்ற
செச்சைமாமலர்புரையுமேனியெங்கள்
சிவபெருமானெம்பெருமான்றேவர்கோவே.

(ப - ரை.) கேட்கின் - கேட்குமிடத்து, இதுஒப்பது - இதைநிகர்ப்பதாகிய, விச்சைதான்உண்டோ - ஒரு வித்தைதானுமுளதோ, (இல்லை)மிகுகாதல்- அதிகவிருப்பத்தை யுடைய, அடியார்தம் அடியன் ஆக்கி - தமதடியார்க் கடிய னுக்கி, அச்சம்தீர்த்து - பிறவியச்சத்தைத் தவிர்த்து, ஆட்கொண்டான் - அடிமைகொண்டான், (மேலும்) அமுதம்ஊறி - அமுதம்பெருகி, அகம்நெக - மனம் உருக, புகுந்து - வலியவந்து, ஆண்டான் - ஆண்டருளினன், அன்புகூர - யாவரேனு மன்புடையவராய்த்தேடப்புகின், அச்சன் - சூக்ஷமரூபமாயுள்ளவன், ஆண் - ஆணுருவும், பெண் - பெண்ணுருவம், அலி - அலியுருவும், ஆகாசம் - ஆகாயமும், ஆகி - தானே ஆகி, ஆர்ஆழல்ஆய் - நிறைந்த அக்கினியாகி, அந்தம் ஆய் - முடிவாகி, அப்பால்நின்ற - அப்பாலும் நிலைபெற்றிருந்த, செச்சை - வெட்சியினது, மா - அழகிய, மலர் - மலரை, புரையும் - நிகர்க்கின்ற, மேனி - திருமேனியையுடைய, எங்கள் சிவபெருமான் - எங்கள் சிவபிரான், எம்பெருமான் - எம்மிறைவன், தேவர்கோ - தேவர்பிரான். எ - று.

(க - ரை.) ஆண் பெண் அலி என்னும் உருவங்களில்லாதவனுய் ஐம்பூத பெரும் வுருவினனுய், அவற்றுக்குக் காரணமாகிய மூலப்பிரகிருதியாய் அதனையும் கடந்துநின்ற சிவபெருமான் சிறியேனைத் தன்னடியனுக்கிப் பிறவித்துன் பம் நீங்கும்வண்ணம் ஆட்கொண்டருளி, என்மனமுருகும்படி அதனுள்ளே நுழைந்து நிலைத்திருந்தான். உலகத்தில் இதுபோன்ற வித்தையொன் றுண் டோ என்பதாம்.

(வி - ரை.) தேவர்கோ புகுந்தாண்டான் எனவியையும். விச்சைதானிது வொப்பதுண்டோ கேட்கின் என்றது - இதனையொப்பதாகிய வித்தை யொன் றுண்டாகக்கட்புலனு லறியாமையே யன்றி செவிப்புலனுலு மறியாமையை. கேட்கின் உண்டோ என்றவினு காணுமையேயன்றிக் கேளாமையையும் உண ர்த்த வந்தது. அச்சம் - பிறப்பிறப்புத் துன்பத்துக்கஞ்சுதல், ஒருபொருள் கிடைத்தால் அதனை முந்தி அடுத்தவர்க்குக் கொடுத்துப் பிறகு தாம் நுகர்வது

பெருங் குணத்தாரியல் பாதலால், இறைவன் என்னைமுந்தித் தன்னடியார்க் கடியனுக்குப் பிறகு தனக்காட் கொண்டான் என்றற்கு, "அடியார் தம்மடி யனுக்கி யச்சந்தீர்த்தாட்கொண் டான முதமூறியகநெஞ்சவே புகுந்தாண்டான்" என்றும், அடியார்க்குந் தமக்கும் பொருத்தந்தோன்ற, "அன்புகூர" என்றும் அருளிச்செய்தார். இதனை, "தன் சீரடியார்குலம் பணிகொள்ள வென்னைக் கொடுத்தோன்" என்னுந் திருக்கோவை யாரானுமுணர்க. அந்தம் என்றது மூலப்பிரகிருதியை. அப்பால் என்றது அதற்கப்புறத்ததாகிய முத்தியுலகை. நின்ற என்றது இறைவனது நிலைபேற்றையும், அதனாலே முத்தியுலகினது நிலைபேற்றையும் உணர்த்தற்கு. மருமலர் - தாமரைமலர். "செந்தாமரைக் காடனையமேனி" என உகூ-ம் பாடலிற் கூறியதற்கும் இதற்கும் பொருத்த முண்மை காண்க, அச்சந்தீர்த் தாட்கொண்டானென்றதில் அச்சம் - சனன மரணங்களுக் கஞ்சுதல். (உக)

தேவர்கோவறியாததேவதேவன்
செழும்பொழில்கள்பயந்துகாத்தழிக்குமற்றை
மூவர்கோனாய்நின்றமுதல்வன்மூர்த்தி
மூதாதைமாதாளும்பாகத்தெந்தை
யாவர்கோனென்னையும்வந்தாண்டுகொண்டான்
யாமார்க்குங்குடியல்லோம்யாதுமஞ்சோம்
மேவினோமவனடியாரடியாரோடு
மேன்மேலுங்குடைந்தாடியாடுவோமே.

(ப - ரை) தேவர் - சாமாநிய தேவர்களும், கோ - அவர்களுக்கரசனாகிய இந்திரனும், அறியாத - உணரக்கூடாத, தேவதேவன் - மகாதேவன், செழும் பொழில்கள் - செழுமையாகிய வுலகங்களை, பயந்து - சிருஷ்டித்து, காத்து - ரக்ஷித்து, அழிக்கும் - அழிக்கின்ற, மற்றை - ஏனையோராகிய, மூவர் - மும் மூர்த்திகளுக்கும், கோன் ஆய் நின்ற - தலைவனாய் நின்ற, முதல்வன் - தனக்கு மேலொரு கடவுளில்லாதவன், மூர்த்தி - அட்டமூர்த்தமாயிருப்பவன், மூதாதை - (எல்லோர்க்கும்) பாட்டன், மாது ஆளும் பாகத்து - உமாதேவியாலாளப் படுகின்ற பங்கினையுடைய, எந்தை - எமது பரமபிதா, யாவர்கோன் - வேறுள்ள எல்லாருக்கும் தலைவன், வந்து - (இத்தகைய பெரியோன்) வலியவந்து, என்னையும்- மிகச்சிறியனாகிய என்னையும், ஆண்டுகொண்டான் - ஆட்கொண்டருளி னன், (ஆதலால் இனி) யாம் - நாம், ஆர்க்கும் - எவர்களுக்கும், குடியல்லோம்- குடியடிமையாகேம், யாதும் அஞ்சோம் - எதற்கும் பயப்படோம், அவன் - அவ்விறைவனது, அடியார் அடியாரோடு - அடியார்க்கடியருடன், மேவினோம் - கூடினோம், மேன்மேலும் - மேலுமேலும், குடைந்து - ஆநந்தசாகரத் தில் மூழ்கி, ஆடி ஆடுவோம் - பலகாலும் கூத்தாடுவோம். எ - று.

(க - ரை.) இறைவன் தானே யெழுந்தருளி என் சிறுமையை நினையா மல் என்னைத் தடுத்தாட்கொண்டமையால், இனி நாம் யார்க்கும் குடிகளல்லோம்;

எதற்கும் பயப்படோம்; அவனது அடியார்க்கடியாரோடு சேர்ந்தோம்; மேன்மேலும் ஆநந்தசாகரத்திற குடைந்தாடுவோம் என்பதாம்.

(வி - ரை.) மூவர் - பிரம விட்டுணு உருத்திரர்கள். கோன் - தலைவன். பாகம் என்றாராயினும் இடப்பாகமெனக் கொள்க. மாதாளும் பாக மதுவாதலால் யாது மஞ்சோம் என்பதற்குச் சிறிது மஞ்சோம் எனினுமமையும். அட்டமூர்த்தமாவது, பிருதுவ, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டுருவினை. (கூ௦)

திருச்சிற்றம்பலம்.

## ௪ - வது ஆத்துமசுத்தி.

அதாவது

அநுபவத்தழுந்தல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

ஆடுகின்றிலைகூத்துடையான்கழற்கன்பிலையென்புருகிப்
பாடுகின்றிலைபதைப்பதுஞ்செய்கிலைபணிகிலைபாதமலர்
சூடுகின்றிலைசூட்டுகின்றதுமிலைதுணையிலிபிணநெஞ்சே
தேடுகின்றிலைதெருவுதோறலறிலைசெய்வதொன்றறியேனே.

(ப - ரை.) துணையிலி - பேதைமையில் இணையிலியாகிய, பிணநெஞ்சே - சவம்போன்ற மனமே, உடையான் கழற்கு - உன்னையடிமையாகக் கொண்டவனது திருவடியை யடைதற்பொருட்டு, கூத்துஆடுகின்றிலை - அன்பினால் கூத்தாடா நின்றனையில்லை, அன்பு இல்லை - அக்கூத்துக்குக் காரணமாகிய அன்பு உன்னிடத்துடையாயில்லை, என்பு உருகி - எலும்பு நெகிழப்பெற்று, பாடுகின்றிலை - துதிபாடுதலுஞ் செய்திலை, பதைப்பதும் செய்கிலை - பதைத்தலுஞ் செய்தாயில்லை, பணிகிலை - வணங்குகின்றாயில்லை, பாதமலர் - இறைவனது திருவடித்தாமரை மலரை, சூடுகின்றிலை - தரிக்கின்றாயில்லை, சூட்டுகின்றதும் இல்லை - அத்திருவடிகளுக்குப் (பூமாலைகளை) சூட்டுவதும் செய்தாயில்லை, தேடுகின்றிலை - (அவ்விறைவன் எங்குளனென்று) தேடுதல் செய்தாயில்லை, தெருவுதோறு - தெருக்கள்தோறும், அலறிலை - அலறித்திரிந்தாயில்லை, (எனக்குத் துணையாயிருத்தற்குரிய நீ யிவ்வாறாயினபின்) செய்வதொன்று அறியேன் - (யான் உஜ்ஜீவிப்பதற்குச்)செய்யவேண்டுவதாகிய ஓருபாயமு மறிந்திலேன்.

(க - ரை.) நெஞ்சே! உன்னை ஆட்கொண்டருளிய சிவபெருமானது திருவடிக்கு அன்புசெய்கின்றிலை, அவ்வன்பின் மிகுதியால் கூத்தாடுதல் முதலிய

காரியங்களுஞ் செய்கின்றிலை. நீ இவ்வாறானபின்பு நான் செய்யும் வகையொன்றும் அறிந்திலேன் என்பதாம்.

(வி - ரை) ஆடுதல் முதலிய சற்காரியங்கள் அன்புகாரணமாக உண்டாவன வாதலால், காரணத்தை முன் வைக்கவேண்டியிருக்க "ஆடுகின்றிலை" எனக்காரியத்தை முற்கூறினது செய்யுள்நடை யாதலாலும் அந்தாதித் தொடையாதலாலும் என்க. "பாதமலர் சூடுகின்றிலை" என்பதற்குத் திருவடியில் அடியார்களிட்ட மலரைச் சூடுகின்றிலை யென்றுரைத்தலுமாம். திருவடியாகிய மலரில் மலரைச் சூட்டுதல் பொருந்தமாதலால் அதனை யடுத்துச் சூட்டுகின்றது மிலை என்றார். மேல் பிணநெஞ்சே யென்றாராதலால் துணையிலி யென்றது இழிவினால் ஒப்பின்மையை விளக்கி நின்றது. பிணநெஞ்சே யென்றது பயனின்மையைக் குறித்தது. (நக)

அறிவிலாதவெனைப்புகுந் தாண்டுகொண்ட றிவதையருளிமேல்
நெறியெலாம்புலமாக்கியவெந்தையைப்பந்தனையறுப்பானைப்
பிறிவிலாதவின்னருள்கள்பெற்றிருந் துமாறுடுதிபிணநெஞ்சே
கிறியெலாமிகக்கீழ்ப்படுத்தாய்கெடுத்தாயென்னைக்கெடுமாறே.

(ப - ரை.) பிணநெஞ்சே - சவமனமே, அறிவு இல்லாத-ஞானமில்லாத, என்னை - அடியேனை, புகுந்து ஆண்டுகொண்டு - வலிய எழுந்தருளியாண்டுகொண்டு, அறிவதை அருளி - அறியவேண்டுவதாகிய ஞானத்தை யருள்செய்து, மேல்நெறி எல்லாம் - மேலாகிய மார்க்கங்களை யெல்லாம், புலம்ஆக்கிய - எனக்கு வெளிப்படுத்திய, எந்தையை - எமது பிதாவை, பந்தனை அறுப்பானை - பிறவித்தளையைச் சேதிப்பவனை, பிறிவுஇல்லாத - நீக்கமற்ற, இன் அருள்கள் - இனிய திருவருள்களை, பெற்று இருந்தும் - அடைந்திருந்தும், மாறுடுதி - (சிந்தியாது) தடுமாறுகின்றாய், கிறிஎல்லாம் - பொய்நடைகளெல்லாம், மிக - மிகமிகச்செய்து, (அதனைச்செய்து) என்னை கீழ்ப்படுத்தாய் - என்னைத் தாழ்வுபடுத்தினாய், கெடுமாறு கெடுத்தாய் - யான் அடியோடும் கெடும்வண்ணங் கெடுத்துவிட்டாய். எ - று.

(க - ரை) நெஞ்சே! அறிவில்லாத என்னைத் தானே வலியவந் தாண்டருளி மேலாகிய நெறிகளை யெல்லாம் எனக்குப் புலப்படுத்தினவனும், என் பிறவித்தளையை அறுப்பவனும் ஆகிய சிவபெருமானை நினையாமல் மாறுபடுகின்றனை, யாதலால் என்னைக் கெடுத்துவிட்டாய் என்பதாம்.

(வி - ரை.) மேல்நெறி யென்றது மோட்சசாதனவழியை. புலமாக்குதல் - அறிவித்தல். கிறி - பொய். கிறியெலாம் மிக என்றமையால் மெய்யெலாம் குறைய என்றாராயிற்று. கெடுமாறு கெடுத்தலாவது - கெடுத்தற்குரிய வுபாயத்தாற் கெடுத்தல். என்னைக் கெடுத்து நீயும் கெடுகின்றனை யென்றதற்குப் பிணநெஞ்சே யென்றிழித்துக் கூறினார். இறைவனது அருள் பெற்றும் இவ்

வாறு நீ தடுமாற்றமடைதல் உனக்குத் தகுதி யன்றென்று வற்புறுத்தியவாறு லபடியாக அருள்செய்தமையால் அருள்கள் எனப் பன்மையாற் கூறினர். பி லனெஞ்சே என்றதற்கு யாதொரு பிரயோசனமு மில்லாத நெஞ்சே யென்பது மொன்று.

மாறிநின்றெனைக்கெடக்கிடந்தனையையெம்மதியிலிமடநெஞ்சே
தேறுகின்றிலமினியுனைச்சிக்கெனச்சிவனவன்றிரடோண்மேல்
நீறுநின்றதுகண்டனையாயினுநெக்கிலையிக்காயம்
கீறுகின்றிலைகெடுவதுன்பரிசிதுகேட்கவுங்கில்லேனே.

(ப - ரை.) எம்மதியிலிமடநெஞ்சே - எம்மறிவிலியாகிய பேதைமனமே, என்னை மாறிநின்று - என்னைப்பகைத்து நின்று, கெடக்கிடந்தனையை - கெடுமாறு கிடந்தாயொழிந்தாய், இனி - இனி, உன்னை - உன்னை, சிக்கென - உறுதியாக, தேறுகின்றிலம் - தெளிகின்றிலேம், சிவன் - சிவனாகிய, அவன் - அப்பெருமானது, திரள் - திரண்ட, தோள்மேல் - புயங்களின் மீதணிந்த, * நீறு நின்றது - திருவெண்ணீறு நிலைபெற்றிரா நின்றதை, கண்டனை - அறிந்தாய், ஆயினும் - ஆனாலும், நெக்கிலை - மனவுருக்கமடைந்தாயில்லை, இக்காயம் கீறுகின்றிலை - இந்த வுடம்பை யழிக்கின்றிலை, உன்பரிசு-உன்தன்மை, கெடுவது - கேட்டுக் கேதுவாயிருக்கின்றது, இதுகேட்கவும் கில்லேன் - இதுகேட்கவுஞ் சம்மதியேன். எ - று.

(க - ரை.) அறிவில்லாத நெஞ்சே, நீ யென்னோடு மாறுபட்டு என்னை இவ்வாறு கெடுத்த உன்னெண்ணத்தை உறுதியாகத்தெளிந்திலேன், சிவபெருமானது திரண்ட தோளின்மீதுள்ள திருவெண்ணீற்றி னழகைத் தரிசித்தும் இன்னமும் உருகினையில்லை, இந்தப் பாழுடம்பைக் கிழித்திலை, உன்தன்மையை கேட்கவும் சகியேன் என்பதாம்.

(வி - ரை.) சிவபெருமானது திரண்ட தோளும் திருநீற்றழகும் யாவருடைய கண்ணையும் மனத்தையும் கவருந்தன்மைய வாதலால் அவற்றைக்கண்டும் நீ யுருகாமலும் இவ்வுடம்பைக் கீறாமலும் இருந்தனை, உன் தன்மை கெடுதிக்கே யுரியது, அதனைக் கேட்கவும் சகியேன் என்றற்கு, "சிவனவன்றிர

* திருநீற்றின் பெருமையை யுலகோருக்குத் தோற்றும்வண்ணம் வாகீசர் அருளிச்செய்த திருநீற்றுப்பதிகம் இங்கே எடுத்துக் காட்டப்பட்டது.

"மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்றிருவாலவாயான்றிருநீறே."

மற்றும் வருவனவற்றானு முணர்க.

(௧)

திருச்சிற்றம்பலம்.

டோன் மேனீறு நின்றது கண்டனையாயினும் நெக்கிலையிக் காயங் கீறுகின்றிலை கெடுவதுன் பரிசிது கேட்கவுங்கில்லேன்" என்றார். நீறுகின்றது என்றது, எக்காலத்தும் அழிவின்றி மேன்மையுற்றிருத்தலை. மதியிலி நெஞ்சே என இயையும். கில்ஆற்றற் பொருண்மையை யுணர்த்துவ தாதலால், கேட்டுச்சகிக்கும் ஆற்றலுடையேனல்லேன் என்றார் எனக்கொள்க. கீறுதல்-பிளத்தல். (கூங)

கிற்றவா மனமே கெடுவாயுடையா னடிநாயேனை
விற்றெலா மிகவாள்வதற் குரியவன் விரைமலர்த்திருப்பாத
முற்றிலா விளந்தளிர் பிரிந்திருந்து நீயுண்டன வெல்லாமுன்
அற்றவா றுநின்னறிவு நின் பெருமையு மளவறுக்கில்லேனே.

(ப - ரை.) கில்தவா - விஷயங்களிற் செல்லும் வலிமை கெடாத, மனமே - நெஞ்சமே, கெடுவாய் - நீ கெடக்கடவை, உடையான் - என்னையடிமையாகவுடைய கடவுள், அடி நாயேனை - அடிமையாகிய நாயேனை, விற்று - விலைப்படுத்தி, எல்லாம் - எவ்வகையானும், மிக ஆள்வதற்கு - மிகுதியும் ஆண்டருள்வதற்கு, உரியவன் - உரிமையுடையவன், (அவனது) விரைமலர் - மணந்தங்கிய தாமரைமலர் போன்ற, திருப்பாதம் - திருவடியாகிய, முற்றிலா இளந்தளிர் - முதிராத இளந்தளிரை, பிரிந்து இருந்து - நீங்கியிருந்து, நீ உண்டன எல்லாம் நீ யநுபவித்தனவாகிய துன்பவின்பங்களெல்லாம், முன் அற்ற ஆறும் - முன்பே அற்றொழிந்தவாற்றையும், நின் அறிவும் - உன்னறிவையும், நின்பெருமையும் - உன் மேன்மையையும், அளவு அறுக்கில்லேன் - அளந்து வரையறுக்கும் ஆற்றலுடையேனல்லேன். எ - று.

(க - ரை.) மனமே! இறைவனது திருவடியைப் பிரிந்து நீ யநுபவித்த விடய வின்பங்களையும், அவை அழிந்த விதத்தையும், உன் அறிவையும், உன் பெருமையையும் அளவுசெய்ய வல்லேனல்லேன் என்பதாம்.

(வி - ரை.) கிற்றவா மனமே யென்றதற்கு - கிற்று அவாம், மனமே எனப்பிரித்து, வேண்டும் பொருள்களின்மேல் ஆசைவைத்துழலும் மனமே எனப்பொருள் கூறினுமமையும். கெடுவாய் முன்னிலைக்கண் வந்த வியப்பிடைச்சொல். கொள்ளவும் கொடுக்கவும் உரியவன் என்றற்கு, "விற்றெலா மிக வாள்வதற் குரியவன்" என்றார். தளிர் என்றது திருவடியை, அது தளிர் போலச் செவந்தும் மென்மையாயும் அழகுவாய்ந்தும் இருத்தலால் என்க. இளந்தளிர் என்றதன்மேலும் முற்றிலா விளந்தளிர் என்றது மிகவும் இளந்தளிர் என்றற்கு. அளவு - வரையறை. (கூச)

அளவறுப்பதற் கரியவ னிமையவர்க் கடியவர்க் கெளியானம்
களவறுத்துநின் றாண்டமை கருத்தினுட் கசிந்துணர்ந் திருந்தேயும்

உளகறுத்துனை நினைந்துளம்பெருங்களன்செய்ததுமிலைநெஞ்சே
பளகறுத்துடையான்கழல்பணிந்திலைபரகதிபுகுவானே.

(ப - ரை.) இமையவர்க்கு - தேவர்களுக்கு, அளவு அறுப்பதற்கு - இத்தனைப் பெரியோனென்றறிந்து சொல்வதற்கு, அரியவன் - அருமையானவன் அடியவர்க்கு - (தனது) அடியார்களுக்கு, எளியான் - எளிதாயிருப்பவன், நம் களவு - நமது கள்ளவழியை, அறுத்து - சேதித்து, நின்று - நிலைபெற்றிருந்து, ஆண்டமை - ஆண்டருளினமையை, கருத்தினுள் - மனத்தின்கண், கசிந்து - நெகிழ்ந்து, உணர்ந்திருந்தேயும் - நன்றாக அறிந்திருந்தும், உள - உன்னையொழிந்துள்ள எல்லாப் பொருள்களையும், கறுத்து - கோபித்து, உன்னை நினைந்துளம் - உன்னையே யெமக்குத் துணைப்பொருளாகக் கருதியிராநின்றேம், பெருகளன் செய்ததும் இல்லை - உன்னைப் பெருவஞ்சகஞ் செய்ததுமில்லை, நெஞ்சே - மனமே, பரகதிபுகுவான் - முத்தி உலகிற் புகும்பொருட்டு, பளகு அறுத்து - குற்றங்களை நீக்கி, உடையான்கழல் - உடையவனது திருவடியை, பணிந்திலை - நீ வணங்கினாயில்லை. எ - று.

(க - ரை.) நெஞ்சே! தேவர்களும் அளவிட்டுச் சொல்லுதற்கரியவன், அடியார்க்கெளியன், அத்தன்மையனாகிய இறைவன் நம்மையோர் பொருளாக்கி நமது குற்றங்களை நீக்கி ஆண்டருளினமையை அறிந்திருந்தும், பரகதியடைதற்பொருட்டு அவனது திருவடியை வணங்கினாயில்லை, உன் றன்மையிருந்தவாறென்னை யென்பதாம்.

(வி - ரை.) களவு - கள்ளம். அறுத்தல் - அழித்தல். பளகு-குற்றம். பரகதி - மேலாகியகதி, அது முத்தி. புகுவான் வினையெச்சம். ஆண்டமை - ஆண்டருளின தன்மை. அடியவர்க் கெளியனென்றதை, "அடியார்க்கெளியன் சிற்றம்பலவன் கொறறங் குடியார்க்கெழுதிய கைச்சீட்டுப் - படியின் மிசை, பெற்றான் சாம்பானுக்குப் பேதமறத் தீக்கைசெய்து, முத்திக்கொடுக்க முறை" யென்றும் திருவம்பலமுடையின் திருவாக்கானுமுணர்க. (௩௫)

புகுவதாவதும்போதரவில்லதும்பொன்னகர்புகப்போதற்
குகுவதாவதுமெந்தையெம்பிரானென்னையாண்டவன்கழற்கன்பு
நெகுவதாவதுநித்தலுமமுதொடுதேனொடுபால்கட்டி
மிகுவதாவதுமின்றெனின்மற்றிதற்கென்செய்கேன்வினையேனே.

(ப - ரை.) புகுவது ஆவதும் - செல்லுதற் குரியதும், போதரவு இல்லதும் - மீட்டும் வருதலில்லாததும், பொன்நகர் - அழகிய சிவலோகமே, புகப்போதற்கு -அதையடையச் செல்வதற்கு, உகுவது ஆவதும் - மனம் நெகிழ்வதும், எந்தை எம்பிரான் - எந்தையாகிய எம்பெருமானும், என்னை ஆண்டவன்-என்னை ஆட்கொண்டருளினவனுமாகிய இறைவனது, கழற்கு - திருவடிகளின்மீது, அன்பு நெகுவது ஆவதும் - அன்பு காரணமாக நெக்குருகுதலும்,

நித்தலும் - தினந்தோறும், அமுதொடு தேனொடு பால்கட்டி - அமுதுடனும் தேனுடனுங் கூடிய பால் கட்டியினும், மிகுவது ஆவதும் - மேம்படுவதும் ஆகிய ப்ரம்பொருளினின்பம் கிடைப்பதும், இன்று எனின் - (எனக்கு) இல்லையெனின், வினையேன் - தீவினையை யுடையேனாகிய நான், இதற்கு மற்று என் செய்வேன் - இதற்கு வேறென்ன செய்யக்கடவேன். எ - று.

(சு - ரை.) நெஞ்சே! முத்தியுலகில் புகுதற்கு இறைவன் திருவடிக் கன்புசெய்தல் முதலிய குணங்கள் உன்னிடத்தில் ஒன்றும் இல்லை, யாதலால் நான் எவ்வாறு உய்வேன் என்பதாம்.

(வி - ரை.) புகுதற்குரியதும் புகுந்தபின் மீளுதல் இல்லாததும் ஆகையால் முத்திக்குப் "புகுலதாவதும் போதரவில்லதும்" என்னும் அடைகொடுத்தார். பொன் - அழகு, சிவபுரத்தின் மிக்க அழகுள்ளது ஒன்றில்லாமையால் அதனைப் "பொன்னகர்" என்றார். நெஞ்சே, உன்னைத் திருத்தும் வலியிலேன் என்றதற்கு, "இதற்கென்செய்கேன்" என்றார். வினையேன் என்றது தீவினையை யுடையேன் என்றபடி. உருவது நெகுவது என்றது முறையே மன நெகிழ்ச்சி, ஆன்ம நெகிழ்ச்சிகளை. (கூசு)

வினையென்போலுடையார்பிறராருடையானடிநாயேனைத்
தினையின்பாகமும்பிறிவதுதிருக்குறிப்பன்றுமற்றதனாலே
முனைவன்பாதநன்மலர்பிரிந்திருந்துநான்முட்டிலேன்றலைகீறேன்
இனையன்பாவனையிரும்புகன்மனஞ்செவியின்னதென்றறியேனே.

(ப - ரை.) என்போல் - அடியேனைப்போல, வினைஉடையார் பிறர்யார் தீவினையையுடையவர் பிறர் யாருளர், (ஒருவருமிலர் ஆயினும்) உடையான் இறைவன், அடி நாயேனை - நாய்போன்றஅடியேனை, தினையின் பாகமும் - ஒருசிறு தினையளவும், பிறிவது - பிரிந்திருப்பது, திருக்குறிப்பு அன்று - அவனுக்கு திருவுள மல்ல, அதனாலே - அதைக்கொண்டு, முனைவன் - இறைவனது, பாதம் - திருவடியாகிய, நல்மலர் - தாமரைமலரை, பிரிந்திருந்தும் - என்மனம் நீங்கியிருந்தும், நான்- யான், தலை முட்டிலேன் - (அதைப்பெறுதற்கருமை நோக்கி) தலையைக் கன் முதலியவற்றில் மோதிக் கொள்கிலேன், கீறேன்-பிளந்து கொள்கிலேன், (ஆதலால்) இனையன் - இத்தன்மையேனாகிய அடியேனுடைய, பாவனை - சிந்தனை, இரும்பு - இரும்பாகும், மனம் - மனமானது, கல் - கல்லாகும், செவி - காது, இன்னது என்று அறியேன் - இன்னதென்று (உவமித்துச்) சொல்ல அறிந்திலேன். எ - று.

(சு - ரை.) இறைவனது திருவடியைக் கணமேனும் பிரிந்திருக்கச் சகியாமல் முட்டிக்கொள்ளுதல், தலை கீறுதல் முதலியவற்றைச் செய்திலேன், ஆதலால் என் பாவனை இரும்பை நிகர்க்கும், மனம் கல்லை நிகர்க்கும், செவியின்னதை நிகர்க்குமென்று சொல்ல அறியேன் என்பதாம்.

(வி - ரை.) வினை என்றது - தீவினையை. ஆர் என்ற வினா இன்மை குறித்த தாதலால் ஒருவருமில்லை யென்றபடி. தினை சிறுமைக்குக் காட்டுவதோ ரளவை, இதனை "தினைத்துணை நன்றிசெயினும் பனைத்துணையாக் கொள்வார் பயன்றெறிவார்" என்னுந் திருக்குறளுக்குத் தினைபனை யென்பன "சிறுமை பெருமைகளுக் கெடுத்துக் காட்டுவதோ ரளவை" என்னும் பரிமேலழகருரையானுமறிக. பிறவியாகிய பெருங்கடலை நீந்துதற்கு மரக்கலம்போல்வ தாதலால் இறைவனது திருவடியைப் "பாதநன்மலர்" என்றார். "கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன் - நற்றாடொழா அரெனின்" என்னுந் திருக்குறளுரையில் நல்தாள் என்பதற்கு இவ்வாறு பொருள் கூறல்காண்க. (கூஎ)

> ஏனையாவருமெய்திடலுற்றமற்றின்னதென்றறியாத
> தேனையானெயைக்கரும்பினின்றேறலைச்சிவனை யென்சிவலோகக்
> கோனைமானனநோக்கிதன்கூறனைக்குறுகிலேனெடுங்காலம்
> ஊனையானிருந்தோம்புகின்றேன்கெடுவேனுயிரோயாதே.

(ப - ரை.) ஏனையாவரும் - (அடியரல்லாத) மற்றைய ரெல்லாரும், எய்திடல் உற்று - அடையத்தொடங்கி, இன்னது என்று அறியாத - இத்தன்மைய தென்றுணராத, தேனை - தேனை, ஆன் நெய்யை - பசுவினது நெய்யை, கரும்பின் - கரும்பினது, இன் தேறலை - இனிய சாற்றை, சிவனை - சிவபெருமானை, சிவலோகக்கோனை - சிவலோகத்துக்குத் தலைவனை, மான் அன - மானினது நோக்கத்தை யொத்த, நோக்கி தன் - நோக்கத்தையுடைய உமாதேவியின், கூறனை - பாகத்தையுடையவனை, நெடுங்காலம் குறுகிலேன் - நெடுங்காலமாக அடைந்திலேன், (மற்றென் செயா நின்றேனெனின்) யான் இருந்து - நான் உயிரோடிருந்துகொண்டு, ஊனை ஓம்புகின்றேன் - ஊனாலாகிய உடம்பைப் பாதுகாவா நின்றேன், கெடுவேன் உயிர் ஓயாதே - இவ்வாறு கெடுபவனாகிய எனது பிராணன் அழியாதோ. எ - று.

(க - ரை.) இறைவனை யடையாமல் இப்பொய்யுடம்பைக் காத்திருந்தேன், இவ்வாறு வீணேகாலங் கழித்தவனாகிய என் உயிர் அழிந்தொழியாதோ என்பதாம்.

(வி - ரை.) மற்று - அசை. தேன்முதல் மானனநோக்கி தன் கூறன் இறுதியாகச் சொல்லப்பட்டவை ஒன்றற் கொன்றினிமையிற் சிறந்த பொருள்களாதலால், தேன் எனத்தொடங்கி, "மானன் நோக்கி தன் கூறனை" என முடித்தார். இத்தன்மையனை அடையமுயலாது முடைநாற்ற முதலியன பொருந்தி மின்போலத் தோன்றியழியு மியல்பினை யுடைய உடலைப் பாதுகாவாநின்றேன், இதென்ன அறியாமையென் றிரங்கினாராயிற்று. ஏனை யாவரும் என்றது பிரமன் முதலியதேவர்களை, தேனும் கரும்பின் தேறலும் நாவிற்குச் சுவை பயப்படுதேயன்றி உடம்பிலுள்ள சத்ததாதுக்களுக்கும் உறுதியைத் தருகின்ற நெய்போலச் சிறந்தன அல்லாமையால் அதனை அச்சிறப்பு நோக்கி இடையேவைத்தார் எனினு மமையும். அதினும் பசுவின் நெய் சிறந்ததாதலால்

"ஆனையை" என்றருளினர். ஊன் - தசை. அது மிகுதிபற்றி உடம்பை யுணர்த்திற்று. பெறுதற்கரிய மானுடப்பிறவியைப் பெற்றும் அதனால் அடைதற்குரிய மோக்ஷ இன்பத்தை அடைய முயலாது நெடுநாள் வீணே கழித்தேன் என்பதற்கு "நெடுங்கால மூனையானிருந்தோம் புகின்றேன் கெடுவேன் உயிர் ஓயாதே" என்றார். (கஅ)

ஒய்விலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்தாடந்து
நாயிலாகிய குலத்தினுங்கடைப்படுமென்னைநன்னெறிகாட்டித்
தாயிலாகியவின்னருள்புரிந்தவென்றலைவனைநனிகாணேன்
தீயில்வீழ்கிலேன் றிண்வரையுருள்கிலேன் செழுங்கடல்புகுவேனே

(ப - ரை.) ஒய்வு இல்லாதன - அழிவில்லாதனவும், உவமனில் இறந்தன - உவமைப் பொருள்களினின்றும் நீங்கினவுமாகிய, ஒள் - ஒளிபொருந்திய, மலர் - தாமரை மலரையொத்த, தாள் தந்து - திருவடிப்பேற்றைக் கொடுத்து, நாயில் ஆகிய குலத்தினும் - நாய்க்குலத்தினும், கடைப்படும்-இழிவாகிய, என்னை - அடியேனுக்கு, நல்நெறிகாட்டி - சன்மார்க்கத்தை யநுக்கிரகித்து, தாயில் ஆகிய - தாயினிடத்துண்டாகிய, இன் அருள்புரிந்த - இனிய அருள்போன்ற திருவருளை (யென்னிடத்துச்) செய்த, என் தலைவனை - என் பரமபதியை, நனிகாணேன் - மிகுதியுங் காணுதவனுகிய நான், தீயில் வீழ்கிலேன் - நெருப்பில் வீழ்ந்திலேன், திண்வரை உருள்கிலேன்-திண்ணிய மலைமேலிருந்துருள்கிலேன், (ஆதலால்) செழுங்கடல் புகுவேனே - செழுமையாகிய கடலிலாயினும் வீழ்ந்திறப்பேனே, அதுவும் செய்கிலேன். எ - று.

(க - ரை.) கெடுதியில்லாததும் ஒப்பற்றதும் ஆகிய தன் திருவடியை அருள்செய்து நாயினும் கடைப்பட்டவனுகிய என்னை நல்வழிகாட்டி ஆண்டருளி, தாயைப்பார்க்கிலும் சிறந்த அருள்செய்த இறைவனைத் தரிசியாத நான் தீப்பாய்தல் முதலியவற்றைச் செய்திலேன், என் மன வலியிருந்தவா றென்னை யென்பதாம்.

(வி - ரை.) ஒய்விலாதன, உவமனிலிறந்தன இரண்டும் தாளுக்குவிசேடணம், தீப்பாய்தல் முதலிய மூன்றும் துயரைப் பொறுக்கல் ஆற்றுதவர் உயிர் விடுதற்குச் செய்யும் தொழில்கள். தாள் என மேல் வருதலால் மலர்தாமரை மலராயிற்று. தந்தையினும் தாய் மிகவும் அன்புடையள் ஆகையால் இறைவன் அருளைத் "தாயிலாகிய வின்னருள்" என்றார். (கக)

வேனில்வேள்கணைகிழித்திடமதிசுடுமதுதனைநினையாதே
மானிலாவியநோக்கியர்படிறிடைமத்திடுதயிராகித்
தேனிலாவியதிருவருள்புரிந்தவென்சிவனகர்புகப்போகேன்
ஊனிலாவியையோட்புதற்பொருட்டினுமுண்டுடுத்திருந்தேனே.

(ப - ரை.) வேனில்வேள் - வசந்தகால மன்மதனது, சரோ - புஷ்பபாணம், கிழித்திட - மனமாகிய இடங்களைப் பிளந்திட, மதி - சந்திரனும், சுமேதுதனே - சுடுவதை, நினையாதே - எண்ணாமல், மான்நிலாவிய - மானினது பார்வையானது நிலைபெற்ற, நோக்கியர் - பார்வையையுடைய பெண்களது, படிறு இடை - வஞ்சனையினிடத்துச் சிக்கி, மத்து இடுதயிர் ஆகி - மத்தினாலுடைபட்டத் தயிரைப்போலக் கலங்கி, தேன்நிலாவிய - தேன்போலும் இனிமைத் தன்மைதங்கிய, திருவருள் - திருவருளை, புரிந்த - என்னிடத்துச்செய்த, என் சிவன் - என் சிவபெருமானது, நகர் - சிவபுறத்திற்குள், புகப்போகேன்-நுழையப் போகின்றிலேனாகி, ஊனில் - உடம்பில், ஆவியை - பிராணனை, ஓம்புதற்பொருட்டு - (வைத்துப்) பாதுகாக்கும் நிமித்தம், இன்னும் - இன்னமும், உண்டு உடுத்து இருந்தேன் - உண்டுமுடுத்து மிருந்தனன். எ - று

(க - ரை.) மாதர் மயக்கத்துழன்ற என்னை ஆட்கொண்டருளின சிவபெருமானது சிவபுரத்தை யடையாமல், உடம்பையும் உயிரையும் காப்பாற்றும் பொருட்டு இன்னமும் உண்டும் உடுத்தும் இருந்தேன் என்பதாம்.

(வி - ரை.) சிவபெருமானது திருவருளுக்குப் பெருந்தடை மாதர் மயக்கம் என்பது இதனால் நன்குணர்க. உண்டுடுத்தலும் அவர் பொருட்டேயென்க. படிறு - பொய்யொழுக்கம், மத்திடுதயிர் - மனச்சுழற்சிக் கெடுத்துக்காட்டுவதோருவமை. எல்லார்க்கும் இனிமையைத் தருதலால் "தேனிலாவிய திருவருள்" என்றார். (௪0)

திருச்சிற்றம்பலம்.

## ௫-வது கைம்மாறு கொடுத்தல்.

அதாவது

தன்னைச் சிவபெருமானிடத்தர்ப்பித்தல்.

### கலிவிருத்தம்.

இருகையானையை யொத்திருந்தென்னுளக்
கருவையான் கண்டிலேன் கண்டதெவ்வமே
வருகவென்றுபணித்தனைவானுளோர்க்
கொருவனேகிற்றிலேன்கிற்பனுண்ணவே.

(ப - ரை) இருகையானையை ஒத்திருந்து - நான் இரண்டு கைகளையுடைய மதயானையை நிகர்த்து இருந்து, என் உள்ளக்கருவை - என் மனதிலுள்ள சோதியை, யான் கண்டிலேன் - நான் பார்த்திலேன், கண்டது - பார்த்

தது, எவ்வமே - பெருந்துன்பத்தையே, (என்னிலைமை யிவ்வாறாகவும்) வருக என்று பணித்தனை - வாவென்று அநுக்கிரகித்தாய், வான் உளோர்க்கு-தேவர்களுக்குள், ஒருவனே - ஒப்பற்றவனே, உண்ணகிற்றிலேன் - (உன்னை) அநுபவிக்கவலியில்லேன், உண்ணகிற்பன் - (விடயாதிகளை) அநுபவிக்க வலியுள்ளேன். எ - று.

(க - ரை.) நீ அடியேன் மனத்தில் எழுந்தருளியிருந்து நான் துன்பம் துன்பப்படுதற்கிரங்கி வருகவென்று திருவாக்களித்தனை, அந்தச்சுகத்தை நான் அநுபவிக்க அடைந்திலேன் என்பதாம்.

(வி - ரை.) யானையானது மதமயக்கத்தால் தன்னையும் பிறரையும் அறியாததுபோல தாமும் உலகமாயையால் தம்மையும் தம்முள்ளே எழுந்தருளியிருக்கும் தலைவனையும் உணராமையால் "இருகையானையை யொத்திருந் தென்னுளக்கருவை யான் கண்டிலேன்" என்றார். இருகை யானை என்றது, இல்பொருள் உவமை. இருகை யானை என்பதற்குப் பெரிய துதிக்கையையுடைய யானை எனினு மொக்கும். கரு என்பதற்கு கடு என்றும் பொருள் உண்மையால் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்னும் ஐந்தொழிற்கும் பொதுவாயிருப்பவன் எனினும், கரு - எனபதற்கு பிறப்பிடம் என்பதும் பொருளாதலால், எல்லாப் பொருள்களுக்கும் பிறப்பிடமாயுள்ளவன் எனினும் பொருந்தும். மாநுடச் சட்டைசாத்திக் குருமூர்த்தமா யெழுந்தருளினதைக் கருதி இறைவனை "இருகையானை" என்றருளினர் எனினுமமையும். எவ்வம்-குறை, அது குறைதற் கேதுவாகிய துன்பத்தை யுணர்த்திற்று. உண்ண என்பதை கிற்றிலேன், கிற்பன் என்னும் இரண்டனோடுங்கூட்டுக. (௪௧)

உண்டொரொண்பொருளென்றுணர்வார்க்கெலாம்
பெண்டிராணலியென்றறியொண்கிலை
தொண்டனேற்குள்ளவாவந்துதோன்றினாய்
கண்டுங்கண்டிலேனென்னகண்மாயமே.

(ப - ரை.) ஓர் ஒண்பொருள் - ஒரு அழகிய பொருளானது, உண்டு என்று - உள்ளதென்று, உணர்வார்க்கு - அறிபவர்கட்கு, எல்லாம் - எல்லாம், பெண்டிர் - பெண்ணுரு, ஆண் - ஆணுரு, அலி - பேடியுரு, என்று - என்று நிச்சயித்து, அறிய ஒண்கிலை - அறியக்கூடாம லிருக்கிறாய், தொண்டனேற்கு-அடியேனுக்கு, உள்ள ஆறு - உள்ளபடி, வந்துதோன்றினாய் - வந்து பிரத்தியட்சமாயினை, கண்டும் - (இவ்வாறு பிரத்யட்சமாகப்) பார்த்தும், கண்டிலேன்-(மீட்டும்) பார்த்திலேன், என்ன கண்மாயம்-(இது) என்ன கண் மயக்கு. எ-று.

(க - ரை.) யாவற்றிற்கும் மேலான பொருள் ஒன்றுண்டென்று அறிந்தார்க்கும் அறிதற்கரிய நீயெனக்கு உள்ளபடி யெழுந்தருளிக் காட்சி தந்தருளினாய், அவ்வாறு காட்சிகொடுத்த உன்னைக் கண்டும் காணாதவன்போல மயங்குகின்றேன், இது என்ன கண்கட்டுவித்தை என்பதாம்.

"உணர்ந்தார்க் குணர்வரியோன் றில்லைச்சிற்றம்பலத் தொருத்தன், குணர்ந் தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடைதோள், புணர்ந் தாற் புணருந்தொறும் பெரும்போகம் பின்னும் புதிதாய், மணந்தாழ் புரிகுழலா ளல்குல்போல வளர்கின்றதே." என்னும் இத்திருக்கோவையார் செய்யுளில் உணர்ந்தார்க் குணர்வரியோன் என்பதற்கு ஒருகால் தன்னை உணர்ந்தவர்கட்கு பின் உணர்தற்குக் கருவியாகிய சித்தவிருத்தியும் ஒடுங்குதலால் மீட்டுணர்வரி யோன் என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறுதல் காண்க. ஒண்பொருள் - சிறந்த பொருளெனினுமாம். உள்ள ஆறு என்பது உள்ளவாறென வீறுதொக்கு நின்றது. (சஉ)

மேலைவானவரும்மறியாததோர்
கோலமேயெனையாட்கொண்டகூத்தனே
ஞாலமேவிசும்பேயிவைவந்துபோம்
காலமேயுனையென்றுகொல்காண்பதே.

(ப-ரை.) மேலை வானவரும் - மேன்மையுடைய தேவர்களும், அறியா தது - உணரவொண்ணாததாகிய, ஓர்கோலமே - ஒரு திருவுருவே, என்னை ஆட் கொண்ட கூத்தனே - என்னை யடிமைகொண்ட நிருத்தனே, ஞாலமே - நிலமே, விசும்பே - பரவெளியே, இவை - இவைகள்யாவும், வந்து - தோன்றி, போம் - அழிதற்கிடமாகிய, காலமே - காலதத்துவமா யுள்ளவனே, உன்னை - (இத்தன்மையனாகிய) உன்னை, காண்பது - அடியேன் காணப்பெறுவது, என் றுகொல் - எக்காலமோ அறியேன். எ-று.

(க-ரை.) மேன்மையுள்ள தேவர்களும் அறிய வொண்ணாத அருளுருவ த்திருமேனிவாய்ந்த கடவுளே, உன்னை நான் காணப்பெறுவது எந்நாளோ என்பதாம்.

(வி-ரை.) முடிக்கப்படாததாகிய ஒரு காரியத்தைச் செய்து முடித்த வன் மகிழ்ச்சியால் கூத்தாடலியற்கை யாதலான், திருத்தக்கூடாத என்மனத் தைத் திருத்தி யடிமைகொள்ளப் பெற்ற பெருங்களிப்பால் இறைவன் கூத்தா டினு னென்பார், "என்னையாட்கொண்ட கூத்தனே" என்றார். ஞாலமே விசும் பே என முதலீறுகளை யெடுத்துக் கூறலால் ஒன்றின முடித்தன்னின முடித்த லென்னு முத்தியால், இடை நின்ற நீர் நெருப்புக்காற்றுகளுங் கொள்ளப் படும். மக்கள் முதலியோரினும் சிறந்தவராதலால் தேவர்களை "மேலைவானவர்" என்றார். அன்றி மேலுலகத்தில் வசிக்கும் தேவர் எனினுமாம். சாமானிய தேவ ர்களை யன்றி அவர்களிற் சிறந்த தேவர்களாகிய பிரம விஷ்ணுக்கள் என்றலு மொன்று. மேலை - முற்காலத்தில், வானவரும், மேன்மையுள்ள பிரம விட்டு ணுக்களும், என்றுங் கூறலாம். கோலம் - உருவம். என்று என்றது, என்று கொல் என்று, காண்பதன் அருமை தோன்றற்கென்க. (சங)

காணலாம்பரமேகட்கிறந்ததோர்
வாணிலாப்பொருளேயிங்கோர்பார்ப்பெனப்

பாணனேன்படிற்றாக்கையைவிட்டுனைப்
பூணுமாறறியேன்புலன்போற்றியே.

(ப - ரை.) காணல்ஆம்-கண்ணினாற் காணக்கூடியதிருவுருக்கொண்டருக் கிரகித்த, பரமே - மேலான பொருளே, கட்கு இறந்தது - அரிப்பிரமாதிகளின் கண்ணுக்குக் காணலாகாததாகிய, ஓர் - ஒப்பற்ற, வாள்நிலாபொருளே - ஒளி நிலைத்த வஸ்துவே, இங்கு - இவ்வுலகத்தில், ஓர் பார்ப்பு என - ஒரு பறவைக் குஞ்சைப்போல, பாழ்நன்ஏன் - பாழானவனாகியநான், புலன்போற்றி - சத்தாதி விஷயங்களில் மனஞ் செல்லாது தடுத்து, படிறு ஆக்கையைவிட்டு - பொய்யு டம்பைவிட்டு, உன்னை பூணும் ஆறு-(மெய்யாகிய) உன்னை யடையும் வழியை, அறியேன்-அறிந்திலேன். எ - று.

(க - ரை.) அகங்காரமமகாரங்களை விட்டவர்கட்கு கட்புலனால் அறியப் படுதலும், அவற்றைவிடாதவற்கு அறியப்படாமையும் ஆகிய இரண்டு தன்மையு முள்ள கடவுளே, அடியேன் இந்தப் பொய்யாகிய தேகத்தை விட்டு உன்னைய டையும்நெறியை அறிந்திலேன் என்பதாம்.

(வி - ரை,) கட்கு என்பதனை காணலாம் என்பதனோடும் இறந்தது என்ப தனோடும் கூட்டுக. பார்ப்பு-பறவைக் குஞ்சு. இது தனக்குப் பறக்கும் பருவம் வருதலும் கூட்டைவிட்டு மேலே பறத்தல்போல, யானும் இந்தவுடம்பை வி ட்டு மேவிடத்தானாகிய உன்னை யடையும் வகையிலேன் என்றற்கு, "இங்கோர் பார்ப்பெனப்பாணனேன் படிற்றாக்கையை விட்டுனைப் பூணுமாறறியேன்" என்ற ருளினார். அம்பலவாணன், மன்றவாணன், குன்றவாணன், என்பவற்றில் வா ழ்நன் என்பது வாணன் என, நின்றாற்போல பாழ்நன் என்பது பாணன் என நின்றது. அல்லது உனது திருப்புகழைச் சதாது திப்பவனெனினும் பொருந் தும் படிற்றாக்கை யென்றமையால் உன்னை யென்பதற்கு மெய்யாகிய வுன்னை யெனப் பொருள் கூறலாயிற்று. ஆக்கை - தோல், இரத்தம், இறைச்சி, மேதை, எலும்பு, மச்சை, சுவேதநீர் என்னும் சத்ததாதுக்களால் ஆக்கப்பட்டது. உர னென்னும் தோட்டியான் ஒரைந்துங் காத்து இறைவனை வணங்க அறியேன் என்றற்கு "உனைப்பூணுமாறறியேன் புலன் போற்றியே" என்றார். பார்ப்பு என்பது கோட்டில் வாழ்விலங்கின் பிள்ளைக்கும் பெயராதலால் ஓர்பார்ப்பென- ஒரு மர்க்கடக்குட்டிபோல என்றுரைப்பினும் பொருந்தும். மர்க்கடக்குட்டி போறுதலாவது தன்தாயையே உறுதியாகப் பற்றுவதுபோல இறைவனைப் பற்றிருத்தல். (சச)

போற்றியென்றும்புரண்டும்புகழ்ந்துநின்
றாற்றன்மிக்கவன்பாலழைக்கின்றிலேன்
ஏற்றுவந்தெதிர்தாமரைத்தாளுறும்
கூற்றமன்னதோர்கொள்கையென்கொள்கையே.

(ப - ரை) போற்றி என்றும் - நமஸ்காரமென்று வாயாற் சொல்லியும், புரண்டும் - காயத்தினுற் புரண்டும், புகழ்ந்தும்-பலவகையாகப் புகழ்ந்துரைத்தும், நின்று - அந்நிலையிற்றானே நிலைத்திருந்து, ஆற்றல்மிக்க - பலம்பொருந்திய, அன்பால் -(மனத்தின்கண்ணுள்ள) அன்பினால், அழைக்கின்றிலேன் - உன்னை யழைக்குமாற்றலில்லேன், எதிர் எற்றுவந்து - எதிர்த்து வந்து, தாமரை - தாமரை மலர்போன்ற, தாள் - உன் திருவடிகளை, உறும் - அடைந்த, கூற்றம் அன்னது - யமனை ஒத்ததாகிய, ஓர்கொள்கை - ஒருகொள்கையை யுடைமையே, என்கொள்கை - எனது கோட்பாடு. எ - று

(க - ரை.) இறைவனே! உன்னை அன்போடு அழைத்திலேன், ஆயினும் இயமனைத் திருவடியினால் * திருத்திக்கொண்டதுபோல என்னையும் திருத்திக் கொள்ளல்வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) ஆற்றல்மிக்க அன்பு என்பது-ஒருவராலும் அசைக்க ஒண்ணாத பேரன்பு. உடலுயிர்களை வேறாகப் பிரிப்பவனாதலால் இயமனுக்குக் கூற்றம் எனப் பெயருண்டாயிற்று. கூற்றம் - கூறுபடுத்தல், பிரித்தல். தாமரைத் தாளுறுங் கூற்றமென்றது. (௬௫)

கொள்ளுங்கில்லெனையன்பரிற்கூய்ப்பணி
கள்ளும்வண்டுமறாமலர்க்கொன்றையான்
நள்ளுங்கீழுளுமேலுளும்யாவுளும்
எள்ளுமெண்ணெயும்போனின்றவெந்தையே.

(ப - ரை.) கள்ளும்வண்டும் அறா-தேனும் வண்டும் நீங்காத, மலர்க்கொன்றையான்-கொன்றைமலர் மாலையை யணிந்தவனாய், நள்ளும்-நடுவிலும், கீழுளும்-கீழ்ப்பக்கத்திலும், மேலும் - மேற்பக்கத்திலும் உள்ள, யாவுளும - எல்லாப் பொருள்களினிடத்தும், எள்ளும் எண்ணெயும் போல் - எள்ளையும் அவ்வெள்ளினுள் நிறைந்த வெண்ணெயையும்போல, நின்ற - வியாபித்து நிற்கிற, எந்தையே-எமது பரமபிதாவே, கில்லெனை - உன்னை அறிந்து கொள்ளும் ஆற்றல் இல்லாத என்னையும், அன்பரின்-உன்னடியவரைக் கூவி யழைப்பதுபோல, கூய்-என்னையுங் கூவி யழைத்து, பணிகொள்ளும் - அடிமைகொள்ளும். எ - று.

* மிருகண்டமுனிவர் புத்திரனில்லாமையால் சிவபெருமானை நோக்கித் தவஞ்செய்ய, அப்பெருமான் பிரசன்னமாகி, உனக்கு ஒரு புத்திரன் உண்டாவான். அவன்பதினறு வயதுவரையில்உயிர் பிழைத்திருப்பான் என்றுவரம் தரலும், அவ்வாறே பிறந்து சிவநேசம்முதிர்ந்து சிவார்ச்சனை செய்துகொண்டிருந்த சமயத்தில் அம்மார்கண்டேயர்மேல், நமன் பாசம் வீசுதலும், சிவபிரானுக்குக் கோபம் பிறந்து அவனைக் காலாலுதைக்க, விழுந்துஉயிர் நீங்கினன். பின்புபிரமன் முதலிய தேவர்கள் சிவபிரானைத் துதித்து, அவனுக்கு உயிர்தந்தருளும்படி வேண்ட, அப்பிரான் அருளால் நமன் உயிர்பெற்று எழுந்தனன் என்பதை.

(க - ரை.) கொன்றைப் பூ மாலையைத் தரித்த இறைவனே! எள்ளும் எண்ணெயும்போல எல்லாப்பொருள்களினும் நீக்கமின்றி வியாபித்திருப்பவனே! உன்னை யடையும் வழி இன்னதென்றறியாத என்னையும் உன் அன்பரைப்போலக் கூவி அழைத்துப் பணிகொள்ளவேண்டும் என்பதாம்.

(வி-ரை) சகல ஆன்மாக்களுள்ளும் அந்தராத்மாவாக வியாபித்து நின்று போகநுகர்ச்சியைத் தருபவனென்பதை விளக்கவேண்டி, சிவபெருமானுக்குரிய பல விசேடணங்களையும் விட்டு, அவனுக்குப் போக மலராயுள்ள கொன்றை மாலையை விசேடண மாக்கி, மலர்க்கொன்றை யானென்றார். மேல், நள், கீழ் என்றது- சொர்க்க மத்ய பாதலங்களை. (௬௬)

எந்தையாயெம்பிரான்மற்றுமியாவர்க்கும்
தந்தைதாய்தம்பிரான்றனக்கஃதிலான்
முந்தியென்னுள்புகுந்தனன்யாவரும்
சிந்தையாலுமறிவருஞ்செல்வனே.

(ப - ரை.) யாவரும் - எல்லாரும், சிந்தையாலும் - மனத்தாலும், அறிவு அரு - அறிதலருமையாகிய, செல்வன் - பேராநந்தச் செல்வத்தையுடையவன், எந்தை - எமதுதந்தை, யாய் - எமதுதாய், எம்பிரான் - எம்மிறைவன், மற்றும் யாவர்க்கும் - மற்றும் யாவருக்கும், தந்தை - பிதாவும், தாய் - மாதாவும், தம்பிரான் - இறைவனுமாயிருந்து, தனக்கு அஃது இலான் - தனக்கு (தாய் தந்தை இறைவர்களையுடைமையாகிய) அதனை யில்லாதவன், முந்தி - தனக்காட்படுந்தன்மை எனக்குண்டாவதற்கு முற்பட்டு, என் உள்புகுந்தனன் - என் மனத்திற் குடியாயிருந்தனன், (ஈதொரு பெருங்கருணை யிருந்தபடியென்) எ-று.

(க - ரை.) யாவரும் மனத்தாலும் அறியவொண்ணாத இறைவன் என்மனத்தில் புகுந்தது என்ன வியப்பு என்பதாம்.

(வி - ரை.) காயம் வாக்கு என்பவற்றானேயன்றி யெனப்பொருள் தருதலால், சிந்தையாலும் என்ற வும்மை இறந்தது தழீஇய வெச்சவும்மை. தனக்காட்படும் பரிபக்குவம், எனக் குண்டாவதன் முன் என்மனத்தில் புகுந்தான் என்றற்கு, "முந்தியென்னுள் புகுந்தனன்" என்றார். இது "எழுடையான் பொழில்" என்னும் திருக்கோவையார் எ - வது செய்யுளில் "என்னை முன்னுள் ஊழுடையான்" என்பதற்கு, எனக்கு ஆட்படுந்தன்மை யுண்டாவதற்கு முன்னே என்னை ஆள்வதொரு புதிதாகிய முறைமையை யுடையான் என்ற நச்சினார்க்கினியர் உரையானுமறிக. (௬௭)

செல்வநல்குரவின்றிவிண்ணோர்புழுப்
புல்வரம்பின்றியார்க்குமரும்பொருள்

எல்லையில்கழல்கண்டும்பிரிந்தனன்
கல்வகைமனத்தேன்பட்டகட்டமே.

(ப - ரை.) செல்வம் - செல்வமும், நல்குரவு - வறுமையும், இன்றி - இல்லாமல், விண்ணோர் - தேவர்கள், புழுபுல் - புழுக்கள் புல் என்கிற, வரம்பு இன்றி - மேல்கீழ் என்கிற வரம்புகளில்லாமல், யார்க்கும் - யாவருக்கும், அருபொருள் - அருமைப்பொருளாயிருக்கு மிறைவனது, எல்லைஇல் - மேன்மைக்கோரெல்லையில்லாத, கழல் - திருவடிகளை, கண்டும் - பார்த்தும், பிரிந்தனன்-(அவற்றையடைந்துய்தலின்றி) நீங்கினேன், கல்வகைமனத்தேன்- கல்லின் வகைகளில் ஒன்று என்று சொல்லும்படியான மனத்தையுடைய யான், பட்டகட்டம் - பட்டதுன்பம், ஏ - என்ன இழிவானகாரியம். எ - று.

(க - ரை.) மேன்மைக்கோர் எல்லையில்லாத இறைவனது திருவடியைக் கண்டும், அதனைப் பிரிந்தேன், பிரிந்து நான் பட்ட துன்பம் என்ன இழிவான காரியம் என்பதாம்.

(வி - ரை.) யார்க்கும் என்றதில், உம்மை முற்றும்மை. வகை என்றது இனத்தை. கல்வகை மனத்தேன் - வன்மையாற் கல்லை நிகர்த்த மனத்தையுடையேன். கட்டமே - கஷ்டகாலமோ என்றலுமொன்று. இறைவனது திருவடி தேவர் முதல் புல் ஈறாகிய சமஸ்த ஜீவகோடிகளுக்கும் அறிதற்கு அறிதாதலால் "விண்ணோர் புழுப்புல் வரம்பின்றி யார்க்கு மரும்பொருள் எல்லையில் கழல்" என்றார். எல்லையில் என்ற விசேடணம் கழலின் பெருமையைக் குறிக்கின்றது. செல்வத்தை விண்ணோருக்கும் நல்குரவைப் புழுப்புல்லுக்கும் கூட்டுக. (௪௮)

கட்டறுத்தெனையாண்டுகண்ணாரநீ
றிட்டவன்பரொடியாவருங்காணவே
பட்டிமண்டபமேற்றினையேற்றினை
எட்டினோடிரண்டும்மறியேனையே.

(ப - ரை.) கட்டு - பாசபந்தங்களை, அறுத்து - துணிந்து, என்னைஆண்டு என்னையடிமைகொண்டு, நீறுஇட்ட - திருநீற்றைத் தரித்த, அன்பரொடு - உன்னடியாரோடு. யாவரும் - எல்லாரும், கண்ணாரக்காண - கண்ணாரக் காணும்படி, எட்டினோடு இரண்டும் அறியேனை - எட்டினோ டிரண்டின் பொருளை யறியாத என்னை, பட்டி மண்டபம் - இடமகன்ற உன் திருவோலக்கமண்டபத்தில், ஏற்றினை-ஏற்றினை, குடி ஏறச்செய்தாய்-குடியேறச்செய்தாய். எ-று.

(க -ரை.) எட்டும் இரண்டு மறியாத என்னை, உன் மெய்யடியார் முதலானோர் கண்டு மகிழும்படி ஆண்டருளி, உன் திருவோலக்க மண்டபத்தில் வீற்றிருக்கச் செய்தாய், இது என்ன வியப்பு என்பதாம்.

(வி - ரை.) கட்டு-பிறவித்தளை, கண்ணார ஆண்டு என்றியைத்து, சட்சு தீட்சையாகிய கண்ணேக்கத்தாலாண்டு என்றுரைப்பினும் பொருந்தும். "எட்டிரண்டு" என்றது அகார உகாரங்களை: இதன் விரிவெல்லாம் குருமுகத்தான் உணர்க. அன்பரெல்லாருக்கும் நீறு சிறந்தசின்னமாதலால் நீறிட்ட அன்பர் என்றார், பட்டி-கள்வன் எனப் பொருள் படுதலால், கள்வனாகிய என்னை எனவும் பொருள் கூறலாம், அன்றி, பட்டி நாய் எனப்பொருள் கொண்டு நாய் போன்ற என்னை எனக் கூறுதலுமாம். இப்பொருள் இந்நூலின் அச்சோப்பதிகம் ௬-ஆம் செய்யுளில் "நம்மையுமோர் பொருளாக்கி நாய்சிவிகை ஏற்றுவித்த" என்பதனோடு ஒருபுடை ஒத்திருத்தல் காண்க. ஏற்றினை ஏற்றினை என்னும் அடுக்கு வியப்புப்பொருளது. அடுக்கெனக் கொள்ளாது ஏற்றினை - இடபவாகனத்தை யுடையையினை யாகிய நீ, ஏற்றினை - ஏறச்செய்த, எனினுமாம். (௩௯)

அறிவனேயமுதேயடிநாயினேன்
அறிவனாகக்கொண்டோவெனையாண்டது
அறிவிலாமையன்றேகண்டதாண்டநாள்
அறிவனோவல்லனோவருளீசனே.

(ப - ரை,) அறிவனே - முற்றறிவுடையானே, அமுதே - (அன்பருடைய நாக்குக்கும் மனதுக்கும் அமிர்தமே, அடிநாயினேன் - அடிமையாகிய நாயினேனை அறிவன் ஆககொண்டோ - அறிவுடையானெனத் திருவுளத் தடைத்துத் தானோ, என்னை ஆண்டது-என்னையாட்கொண்டருளினது, கண்டது அறிவிலாமைஅன்றே - என்னிடத் திருக்கக்கண்டது அறிவின்மையன்றோ, ஆண்டநாள் - என்னை நீ யாட்கொண் டருளியநாளில், அறிவனோ அல்லனோ - அறிவுடையேனாயிருந்தேனோ அறிவிலியா யிருந்தேனோ, அருள்-கிருபை செய்வாயாக, ஈசனே - பெருஞ் செல்வத்தை யுடையானே. எ - று.

(க - ரை.) நான் உனக்கு அடிமைப்பட்டகாலத்தில் எனக்கிருந்தது அறியாமை யன்றோ, அங்ஙனமாக என்னை நீ யாண்டருளினது அறிவுடையேனாகத் திருவுளத்துட்கொண்டோ என்பதாம்.

(வி - ரை,) இறைவன் அறிவுருவனாதலால் அறிவனே யென்றும் அன்பர்க்கு அமுதம் போல்பவனாதலால் அமுதே யென்றும் அருளிச்செய்தனர். அடுத்தாரையும் அழிவில்லாதவர்களாக்கித் தானும் அழிவில்லாதவனா யிருத்தலால் அமுது என்றார் எனினும் பொருந்தும். (௪௦)

திருச்சிற்றம்பலம்.

## ரு - வது அநுபோக சுத்தி.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ஈசனேயென்னெம்மானே
யெந்தைபெருமானென்பிறவி
நாசனேநான்யாதுமொன்
றல்லாப்பொல்லாநாயான
நீசனேனையாண்டாய்க்கு
நினைக்கமாட்டேன்கண்டாயே
தேசனேயம்பலவனே
செய்வதொன்றுமறியேனே.

(ப - ரை) ஈசனே - பெருஞ்செல்வத்தை யுடையனே, என் எம்மானே-எனது தலைவனே எந்தைபெருமான் - என் தந்தையாகிய பெரியோனே, என்பிறவி - என் பிறப்பை, நாசனே - யழிக்கவல்லவனே, நான் - யான், யாதும் ஒன்று அல்லா - ஒரு சிறுபொருளுக்கு மீடாகாத, பொல்லா - தீய, நாயான - நாயாகிய, நீசனேனை - இழிவினையுடையேனை, ஆண்டாய்க்கு - ஆண்டருளின வுன்னை, நினைக்கமாட்டேன் - சிந்திக்கமாட்டேன், தேசனே - ஒளியுருவானவனே, அம்பலவனே - திருச்சிற்றம்பல முடையவனே, ஒன்றும் சிறிதும் செய்வது-செய்தற்குரியவற்றை, அறியேன் - உணர்ந்திலேன். எ - று,

(க - ரை.) இறைவனே! என் பிறவி நசிக்கும்படி என்னையாண்டருளின உன் திருவருளைக்குறித்துச் சிந்தனை செய்யேன், மேல்செய்யக் கடவதையும் அறியேன் என்பதாம். (ருக)

செய்வதறியாச்சிறுநாயேன்
செம்பொற்பாதமலர்காணாப்
பொய்யர்பெறும்பேறத்தனையும்
பெறுதற்குரியேன்பொய்யிலா
மெய்யர்வெறியார்மலர்ப்பாத
மேவக்கண்டுங்கேட்டிருந்தும்
பொய்யனேனுண்டுடுத்திங்
கிருப்பதானேன்போரேறே.

(ப-ரை) போர் ஏறே-போர்க்கு ஆண் சிங்கத்தை யொப்பவனே, செய்வது-செய்யக்கடவது, அறியா-இன்னதென்றுணராத, சிறு -சிறிய, நாயேன்-நாயினேன், செம்பொன் - செவந்தபொன்போலும் அருமையாகிய, பாதமலர் உன் -

திருவடித்தாமரைகளை, காணா - சேவிக்கப்பெறாத, பொய்யர் - பொய்யொழுக்க முடையோர், பெறும்பேறு அத்தனையும்-அடையும் பிரயோஜனங்களெல்லாவற்றையும், பெறுதற்கு உரியேன்-அடைதற்குரியனுயிருக்கின்றேன், பொய் இல்லா பொய்யற்ற, மெய்யர் - மெய்யினையுடைய வுன்னடியார், வெறிஆர் - பரிமளம் நிறைந்த, மலர் - தாமரை மலர்போன்ற, பாதம் - உன் திருவடிகளை, மேவ - பொருந்த, கண்டும் - கண்ணாரப்பார்த்தும், கேட்டிருந்தும் - செவியாரக் கேட்டிருந்தும், பொய்யனேன் நான் - பொய்யினையுடையேனாகிய நான், உண்டு - அறுசுவை யுணவுகளையுண்டும், உடுத்து - பட்டாடை முதலியவற்றை யுடுத்தும், இங்கு - இந்தப் பொய்யுலகத்தில், இருப்பதானேன் - இருக்கலாயினேன். எ-று.

(க - ரை.) செய்யவடுப்ப திதுவென்றறியாத நாயினேன் உன் திருவடியைக் காணாத பொய்யர் பெறும் பேறெல்லாம் பெறுதற்குரியேனாகி, உன் மெய்யன்பர் உன் திருவடியை யடையக்கண்டும் கேட்டும் அதனையடைய முயலாமல் பொய்யனாய் உண்டும் உடுத்தும் காலம் கழிக்கின்றேன் என்பதாம்.

(வி - ரை.) செய்வதறியா என்றாராயினும் செய்வதும் தவிர்வதும் அறியா எனப்பொருள் கொள்க, செம்பொற்பாத மலர் என்றது அடைதற்கருமை நோக்கி. பொய்யர்பெறும் பேறு - துன்பம். பொய்யர் பலர் அடையும் துன்பம் எல்லாவற்றையும் யான் ஒருவனே அடைதற்குரிய கொடியேன் என்றற்கு "பொய்யர்பெறும் பேறத்தனையும் பெறுதற்குரியேன்" என்றார். (௩உ)

போரேறேநின்பொன்னகர்வாய்
நீபோந்தருளியிருணீக்கி
வாரேறிளமென்முலையாளோ
டுடன்வந்தருளவருள்பெற்ற
சீரேறடியார்நின்பாதஞ்
சேரக்கண்டுங்கண்கெட்ட
ஊரேறாயிங்குழல்வேனோ
கொடியேனுயிர்தானுலவாதே.

(ப ரை.) போர்ஏறே - போர்செய்யுந் திறத்தினையுடைய ஆண்சிங்கம் போன்றவனே, நின் - உனது, பொன்நகர்வாய் - அழகிய சிவலோகத்தினின்றும், நீ போந்தருளி - நீ யெழுந்தருளிவந்து, வார் ஏறு - கச்சணிந்த, இளமென் முலையாளோடு உடன்வந்து - இளமையும் மென்மையுமுள்ள தனங்களையுடைய உமாதேவியோடு கூடவந்து, இருள் நீக்கி - எனது அஞ்ஞான விருளை நீக்கி, அருள - அருள்செய்ய, அருள்பெற்ற - உன் திருவருளைப்பெற்ற, சீர்ஏறு அடியார் - சிறப்பு மிகுந்த உன்னடியார், நின்பாதம் - உன் திருவடிகளை, சேரக்கண்டும் - அடைய (நான்) பார்த்தும், கண்கெட்ட - கண்ணிழந்த, ஊர் ஏறு ஆய் -

பட்டி எருதினையொத்து, கொடியேன் - கொடியவனாகிய நான், உயிர் உலவாது - உயிர் நீங்கப்பெறாமல், இங்கு உழல்வேனோ - இப்பொய்யுலகிற் சுழல்வேனோ எ - று.

(க - ரை.) இறைவனே! நீ உனது சிவலோகத்தில் நின்றும் எம்பிராட்டியோடும் இவ்விடத்தெழுந்தருளி அருள் செய்யப்பெற்ற உன் அன்பர் உன் திருவடியை அடையக்கண்டும், நான் கண்கெட்ட ஊர் திரியும் பட்டியெருதைப்போல இவ்வுலகத்தில் உழல்வேனோ, இத்தன்மையேனது உயிர் நீங்காதோ என்பதாம்.

(வி - ரை.) பொன்னகர் என்றதற்குச் சிவலோகமெனப் பொருளுரைத்தது அந்நகரத்தினுஞ் சிறந்த நகரம் வேறில்லாமையின். அருளுருவாகிய பிராட்டியோடு கூடாவழி அருள்செய்தல் இல்லாமையால் "வாரேறிளமென் முலையாளோடுடன் வந்தருள" என்றருளினர். அருள்பெற்ற சீரேறடியார் என்றமையால், சீர் ஏறுதற்குக் காரணம் அருளென்றதாயிற்று. அடியார் இறைவன் திருவடியை அடையக்கண்டும் அவர்போல அத்திருவடியையடைய முயலாமையால் "கண்கெட்ட ஊர் ஏறு" எனத்தம்மை இழித்துக் கூறினார். (௫௯)

உலவாக்காலந்தவமெய்தி
யுறுப்பும்வெறுத்திங்குனைக்காண்பான்
பலமாமுனிவர்நனிவாடப்
பாவியேனைப்பணிகொண்டாய்
மலமாக்குரம்பையிதுமாய்க்க
மாட்டேன்மணியேயுனைக்காண்பான்
அலவாநிற்குமன்பிலே
னென்கொண்டெழுகேனெம்மானே.

(ப - ரை.) உலவாக்காலம் - அளவிறந்த காலம், தவம் எய்தி - தவஞ்செய்தலை மேற்கொண்டிருந்து, உறுப்பும் வெறுத்து - (முத்தியை யடைதற்குக் கருவியாகிய) உடம்பையும் வெறுத்து, இங்கு உன்னைக்காண்பான் - இவ்விடத்தில் உன்னைச் சேவிக்கும்பொருட்டு, பல - பலராகிய, மா - பெரிய, முனிவர் - முனிவர்கள், நனிவாட - (உன் காணப்பெறாமல்) மிகவும் வாடாநிற்க, பாவியேனை - (அவ்வகையாகிய தவமுயற்சி யொன்றுமில்லாத) கொடியவனாகிய வென்னை, பணிகொண்டாய் - தடுத்தாட்கொண்டருளினை, (அதைச் சிந்தித்த) மலம் - மலசம்பந்தமுள்ள, மாகுரம்பை - பெரியசரீரமாகிய, இது - இவ்வுடலை, மாய்க்கமாட்டேன் - (தீப்பாய்தல் முதலியவற்றால்) மாய்த்துக்கொள்ள மாட்டேன், மணியே - மாணிக்கமே, உன்னைக்காண்பான் - உன்னைக் காணும்பொருட்டு, அலவாநிற்கும் - துன்பப்படுகின்ற, அன்பு இல்லேன் - அன்பில்லாத அடியேன், என் கொண்டு - (அன்பொழிய நின்ற) வேறு எந்தக் கருவியைக் கொண்டு, எழுகேன் - உயர்வேன், எம்மானே - எம்பெருமானே. எ - று.

(க - ரை.) நெடுநாள் உடலை வெறுத்து தவம்புரிந்த பல முனிவரும் தரிசிக்கப்பெறாமல் வாடாநிற்க, பாவியாகிய என்னைப் பணிகொண்டனை! அங்ஙனமாகவும் இந்த மலவுடம்பை ஒழிக்கமுயலேன், உன்னிடத்து அன்பில்லாத நான் இனி எவ்வகையால் உயர்வேன் என்பதாம்.

(வி - ரை.) உறுப்பு என்பது இங்கு உடம்பை யுணர்த்திற்று. இதனை வெறுத்தலாவது "என் பெழுந்தியங்கும் யாக்கையர்" என்ற திருமுருகாற்றுப் படையின்படி உடம்பின் எலும்பு வெளிப்பட்டுத்தோன்ற ஒறுத்தல். "சுடச் சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ் சுடச்சுட நோற்கிற்பவர்க்கு" என்பது திருக்குறள். அலவாநிற்றல் - அங்கலாய்த்தல் (துன்புறல்) முனிவர்-கடவுளை மனனம் செய்பவர். (௯௪)

மானேர்நோக்கியுமையாள்
பங்காவந்திங்காட்கொண்ட
தேனேயமுதேகரும்பின்
தெளிவேசிவனேதென்றில்லைக்
கோனேயுன்றன்றிருக்குறிப்புக்
கூடுவார்நின்கழல்கூட
ஊனார்புழுக்கூடிதுகாத்திங்
கிருப்பதானேனுடையானே.

(ப - ரை.) உடையானே - உடையவனே, மான்நேர் - மான்போன்ற, நோக்கி - நோக்கத்தை யுடையவளாகிய, உமையாள் - உமாதேவியை, பங்கா - இடதுபாகத்திலுடையவனே, இங்கு வந்து - (உன்பொன்நகர் விட்டு என் பொருட்டு) இந்த (அருவருச்கத்தக்க) உலகில் எழுந்தருளி, ஆட்கொண்ட - அடியேனை யாட்கொண்டருளின, தேனே - தேன் போல்பவனே, அமுதே - அமுதத்தை யொப்பவனே, கரும்பின் தெளிவே - கருப்பஞ்சாற்றின் தேறலை நிகர்ப்பவனே, சிவனே - மங்களகரங்களை யுண்டாக்குவோனே, தென் தில்லை கோனே - தெற்கின் கண்ணதாகிய தில்லை நகர்க்கிறைவனே, உன்றன் திருக்குறிப்புக் கூடுவார்-உன் திருவுளக்குறிப்பை அறிந்து அதற்கு இலக்காயினோர், நின்கழல் கூட - உன் திருவடியை யடையாநிற்க, ஊன் ஆர் - மாமிசம் பொருந்திய, புழுக்கூடு - புழுக்கூடாகிய, இது - இந்த வுடம்பை, இங்கு - இவ்விடத்தில், காத்திருப்பது ஆனேன் - காத்திருக்கலாயினேன். எ - று.

(க - ரை.) இறைவனே! உன் திருவுளப்பாங்கின்படி நடக்கும் அடியார்களெல்லாம் உன் திருவடியை அடையாநிற்க, நான் இந்தப்புழுக்கூண்டாகிய வுடம்பைக் காத்திருக்கிறேன் என்பதாம்.

(வி - ரை.) வந்திங் காட்கொண்ட என்றமையால் தடுத்தாட்கொண்டமை பெறப்பட்டது. தேன் கரும்பின் தெளிவு என்பவற்றிடையே அமுதுரைக்கப்பட்டது சிறப்பு நோக்கி யென்க. ஆதியில் சிதம்பரத்தில் தில்லை மரக்காடு மிகுதியாயிருந்தமையால் தில்லை எனப்பெயர் பெற்றது. (௯௫

உடையானே நின்றனையுள்கி
யுள்ளமுருகும்பெருங்காதல்
உடையாருடையாய்நின்பாதஞ்
சேரக்கண்டிங்கூர்நாயின்
கடையானேனெஞ்சுருகாதேன்
கல்லாமனத்தேன் கசியாதேன்
முடையார்புழுக்கூடிதுகாத்திங்
கிருப்பதாகமுடித்தாயே.

(ப - ரை.) உடையானே - என்னையடிமையாக வுடையவனே, நின்றனை உள்கி - உன்னைத்தியானித்து, உள்ளம் உருகும் - மனம்நெகிழ்கின்ற, பெருங் காதல் உடையார் - மிகுமன்பையுடையவர், உடையாய் - அடிமைகொண்டவனாகியவனே, நின்பாதம் - உன் திருவடியை, சேரக்கண்டு - அடையக்கண்டும், இங்கு - இவ்வுலகில், ஊர்நாயின் - ஊர்நாயைப்போல, கடையானேன் - கடையாயினேன், நெஞ்சு உருகாதேன் - மன முருகாதேன், கல்லாமனத்தேன் - கற்கவேண்டியவற்றைக் கல்லாதவன், கசியாதேன் - மனங்கனியாதேன், (ஆகிய நான்) முடைஆர் - புலால் நாற்றம் பொருந்திய, புழுக்கூடு - புழுக்கூடாகிய, இது - இத்தேகத்தை, இங்கு - இவ்விடத்தில், காத்திருப்பதாக - வளர்த்துக் கொண்டிருப்பதாக, முடித்தாயே - முடிவுசெய்தாய். எ - று.

(க - ரை.) உடையவனே! உன்னை நினைந்துருகும் அன்பர் உன் திருவடிப்பேறடைந்து வாழ்வதைக்கண்டும்,நான் இந்தவுடம்பைக் காத்திருக்கும்வண்ணம் முடிவுசெய்தாய், என்பாவமிருந்தவா றென்னை யென்பதாம்.

(வி - ரை.) கல்லாமனத்தேன் என்பதற்குக் கல்லை நிகர்த்த மனத்தையுடையேன் என்றுரைப்பினுமமையும். உன்னை நினைத்து மனம் உருகுகின்ற பேரன்புடைய அன்பர்கள் உன் திருவடியடைந்தனர். அவ்வாறாகிய அன்பு என்னிடத்தில்லாமையால் இப்புழுக்கூட்டைக் காத்திருக்கும்படி நியமித்தருளினாய் என்றற்கு "முடையார் புழுக்கூடிது காத்திங் கிருப்பதாக முடித்தாயே" என்றார். முடை - துற்கந்தம். (கசு)

முடித்தவாறுமென்றனக்கே
தக்கதேமுன்னடியாரைப்
பிடித்தவாறுஞ்சோராமற்
சோரனேனிங்கொருத்திவாய்
துடித்தவாறுந்துகிலிறைசோர்
சோர்ந்தவாறுமுகங்குறுவேர்
பொடித்தவாறுமிவையுணர்ந்து
கேடென்றனக்கேசூழ்ந்தேனே.

(ப - ரை) முடித்த ஆறும் - முடிவுசெய்த வகையும், என்றனக்கு-எனக்கு, தக்கதே - தகுந்ததே, முன் - முன்னே, அடியாரை - உன் அடியவரை, பிடித்தஆறும்-நீயேயென்றுக் கருதிப்பற்றினவகையும், சோராமல்-(அவ்வாறு) கைசோராமல் பிடித்தும், சோரனேன் - கள்ளமனத்தனாகிய நான், இங்கு-இவ்வுலகில், ஒருத்திவாய் துடித்த ஆறும் - (மாயையாகிய) ஒரு பெண்ணினது வாயானது பதைத்த விதமும், துகில் - ஆடையானது, இறை - சிறிது, சோர்ந்த ஆறும் - நெகிழ்ந்தவிதமும், முகம் குறுவேர் பொடித்த ஆறும் - முகத்தில் சிறு வெயர்வை அரும்பினவிதமும், (ஆகிய) இவை உணர்ந்து - இவற்றைக் கண்டு, என்றனக்கே - எனக்கே, கேடு - கேட்டினை, சூழ்ந்தேன் - செய்து கொண்டேன். எ - று.

(க - ரை.) நீ முடித்த விதம் எனக்குத் தக்கதே, நான் அடியவரைப்பற்றியிருந்தும், அந்நிலையிலே நில்லாமல் என்னை மாயையாகிய பெண்வருத்த அவள் வலையிற்சிக்கி வருந்தினேன், அதனால் எனக்கு நானே கெடுதியுண்டாக்கிக் கொண்டேன் என்பதாம்.

(வி - ரை.) "முன்னடியாரைப் பிடித்தவாறு" என்றது திருப்பெருந்துறையில் ஞானாசாரியருடன் போந்த அடியாரை அடைந்ததைக் குறித்தது. அவர்கள் மறைதலும் மாயை வந்து தம்மை வருத்தினமை தோன்ற இவ்வாறு கூறியருளினர். வாய் என்றது இங்கு அதரத்தை, "வாய்பவளந் துடிக்கின்ற வா" என்பது திருக்கோவையார், வாய் துடித்தல் முதலிய குறிகள் காம மிகுதியா லுண்டாவன. (௫௭)

தேனைப்பாலைக்கன்னலின்
றெளியையொளியைத்தெளிந்தார்தம்
ஊனையுருக்குமுடையானை
யும்பரானைவம்பனேன்
நானின்னடியேனீயென்னை
யாண்டாயென்றாலடியேற்குத்
தானுஞ்சிரித்தேயருளலாந்
தன்மையாமென்றன்மையே.

(ப - ரை.) தேனை - தேனை, பாலை - பாலை, கன்னலின் தெளியை - கருப்பஞ்சாற்றின் தெளிவை, ஒளியை - ஜோதிஸ்வரூபத்தை, தெளிந்தார்தம் - நித்தியானி நித்தியவஸ்து விவேகமுடையவரது, ஊனை உருக்கும் - உடலை உருகச்செய்கின்ற, உடையானை - முடிவிலாற்றலுடையவனை, உம்பர்ஆனை - சிதாஸஸ்வரூபனை (நோக்கி), வம்பனேன் - கொடியவனாகிய அடியேன் நான் நின் அடியேன் - யான் உன் அடியவன் என்றும், நீ என்னையாண்டாய் என்றால் - நீ என்னை ஆண்டவன் என்றும் சொன்னால், என் தன்மை - என்

தன்மையானது, அடியேற்கு - அடியேனைப்பார்த்து, தானும் - நீ தானும், சிரித்தருளலாம் தன்மையே ஆம் - நகைத்தற்குரிய தன்மையாகவே முடியும். எ-று.

(க - ரை.) வம்பனாகிய - நான் உன் அடியவன் என்றும், நீ என்னை ஆண்டவன் என்றும் சொன்னால், நீ நகைத்தற்கிடமாய் முடியும் என்பதாம்.

(வி - ரை.) உம்பர் - மேலிடம் எனக்கொண்டு உம்பரான் என்பதற்கு மேலிடமாகிய முத்தியுலகையுடையவன் என்றுரைத்தலுமொன்று, ஆன்-பசு உம்பர் ஆன் என்றதனால் காமதேனுவென்றுரைத்தலு மொன்று. வேண்டுபவர் வேண்டும் வண்ணம் அளித்தருள்பவனாதலால் இறைவனைக் காமதேனு வென்னக் குறையில்லை யென்க. (நு அ)

தன்மைபிறராலறியாத
    தலைவாபொல்லாநாயான
புன்மையேனையாண்டையா
    புறமேபோகவிடுவாயோ
என்னைநோக்குவார்யாரே
    யென்னான்செய்கேனெம்பெருமான்
பொன்னேதிகழுந்திருமேனி
    யெந்தாயெங்குப்புகுவேனே.

(ப - ரை.) தன்மை - உன் தன்மை இன்னதென்று, பிறரால் அறியாத - பிறரால் உணரவொண்ணாத, தலைவா - தலைவனே, பொல்லாத நாயான-பொல்லாத நாயையொத்தவனாகிய, புன்மையேனை - இழிந்தவனாகிய என்னை, ஆண்டு-ஆண்டருளி, ஐயா - ஐயனே, புறத்திலே போகவிடுவாயோ - புறத்தேபோக விடுவையோ, (விடுவாயாயின்) என்னை நோக்குவார் யாரே - என்னைக் கடாக்ஷிப்பவர் யாரோ, நான் என்செய்கேன் (வேறு ஆதரவில்லாத) - நான் என் செயக்கடவேன், எம்பெருமான் - எப்பிரானே, பொன்னே திகழும் - பொன்போலவே விளங்குகின்ற, திருமேனி - திருமேனியையுடைய, எந்தாய் - என் தந்தையே, எங்கு புகுவேன் - எவ்விடத்து அடைக்கலம் புகுவேன், எ - று.

(க - ரை.) இறைவனே! தாழ்ந்தவனாகிய என்னை அடியவனென்றெண்ணி ஆட்கொண்ட பின்னரும், ஒருக்காலவனருகனல்லவெனப்புறத்தே செல்லவிடுகிறாயோ, நீயே அப்படி செய்தால் யான் என்செய்வேன், எவ்விடத்திற் புகுவேன், என்னை நோக்குவோர் யார் என்பதாம்.

(வி - ரை.) தன்மை பிறராலறியாத தலைவனென்றதை, "மைப்படிந்த கண்ணாளுந்தானுங் கச்சிமயானத்தான்" என்னுந் திருப்பாசுரத்தில், இப்படிவனின்னிறத்தனிவ்வண். தன்மை - குணம், ஆளாது புறம்போகவிடுதல் பொருந்தும். ஆண்டு புறம்போகவிடுதல் பொருந்தாது என்றற்கு, "ஆண்டையா புறமே போகவிடுவாயோ" என்றருளினர். (நுகூ)

புகுவேனெனதேநின்பாதம்
போற்றுமடியாருண்ணின்று
நகுவேன்பண்டுதோணோக்கி
நாணமில்லாநாயினேன்
நெகுமன்பில்லைநினைக்காண
நீயாண்டருளவடியேனும்
தகுவனேயென்றன்மையே
யெந்தாயந்தோதரியேனே.

(ப - ரை.) எனதே நின்பாதம்-எனக்கேயுரியதாகிய உன் திருவடிகளில், புகுவேன் - அடைக்கலம் புகுவேன், போற்றும் - உன்னை வணங்குகின்ற, அடியாருள்நின்று - அடியார் கூட்டத்தொருவனாகவிருந்து, பண்டு - பழமையாகிய, தோள் நோக்கி - உன் திருத்தோள்களை நோக்கி, நகுவேன் - நகைத்தல் ஒன்றுமே செய்வேன், நாணம் இல்லா நாயினேன் - நாணமற்ற நாய்போன்ற அடியேன், நினைக்காண - (உள்ளபடி) உன்னைப்பார்த்தற்கு, நெகும் - மனமுருகுதற்கேதுவாகிய, அன்பு இல்லை - அன்போ சிறிதும் இல்லை, நீ யாண்டருள - நீ யாண்டருளுதற்கு, அடியேனும் தகுவனே - அடியேனும் தக்கவனுவனோ, என் தன்மையே - இது என்ன தன்மையோ, எந்தாய் - எந்தையே, அந்தோ-ஐயோ, தரியேன் - இவ்வுலகில் தரித்திரேன். எ - று.

(க - ரை.) இறைவனே! உன் திருவடியைச் சரணடைந்தவனாகிய நான் உன்னை வணங்காமல் உன் அடியார் நடுவில் கூடியிருந்து, நகைத்தல் ஒன்றுமே செய்து உண்மையன்பில்லாதவனானேன், இத்தன்மையேனையும் நீ ஆண்டருளல் தகுதியாமோ என்பதாம். (௯௦)

திருச்சிற்றம்பலம்.

## எ-வது காருணியத் திரங்கல்.

அதாவது

சிவபெருமானது வெற்றிப்பாட்டிரங்கல்.

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

தரிக்கிலேன்காயவாழ்க்கை
சங்கராபோற்றிவான
விருத்தனேபோற்றியெங்கள்
விடலையேபோற்றியொப்பில்

ஒருத்தனேபோற்றியும்பர்
தம்பிரான்போற்றிதில்லை
நிருத்தனேபோற்றியெங்க
ணின்மலாபோற்றிபோற்றி.

(ப - ரை.) காயவாழ்க்கை - இச்சரீரத்தோடு கூடிவாழும் பொய்வாழ்க்கையை, தரிக்கிலேன் - மெய்யென்றுநம்பித் தாங்ககில்லேன், சங்கரா - அன்பர்களுக்கு நிரதிசய சுகத்தை யுண்டாக்குபவனே, போற்றி - உனக்கு நமஸ்காரம், வானம் - சிதாகாயத்தில் ஆனந்த நடனஞ்செய்கின்ற, விருத்தனே - அநாதி மலமுத்தனே, (உனக்கு) போற்றி - நமஸ்காரம், எங்கள் விடலையே போற்றி - எமது மேம்பாடுடையகடவுளே (உனக்கு) நமஸ்காரம், ஒப்புஇல் ஒருத்தனே போற்றி - நிகரற்றத் தனித்தலைமைக் கடவுளே நமஸ்காரம், உம்பர் தம்பிரான் போற்றி - தேவர் பெருமானே உனக்கு நமஸ்காரம், தில்லை நிருத்தனே போற்றி - திருத்தில்லையில் நடனஞ் செய்பவனே (உனக்கு) நமஸ்காரம், எங்கள் நின்மலா - எமது மலரகிதனே, போற்றி போற்றி - (உனக்கு) நமஸ்காரம் நமஸ்காரம். எ - று.

(க - ரை.) கடவுளே ! இந்த பொய்யுடம்போடு கூடிவாழும் அநித்திய வாழ்க்கையைச் சகித்திலேன், ஆதலால் இதனை யொழித்து உன் திருவடிப்பேறடைவதாகிய நித்தியவாழ்வை யெனக்கனுக்கிரகித்தல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) சங்கரன் - சுகத்தை யுண்டாக்குவோன், சம் - சுகம், கரன் - செய்பவன், நிருத்தம் - நடனம், நின்மலன் இது வடமொழியுள் நிர்மலன் என வழங்கும் அதின் சிதைவு நின்மலன். (கூக)

போற்றியோநமச்சிவாய
புயங்கனேமயங்குகின்றேன்
போற்றியோநமச்சிவாய
புகலிடம்பிறிதொன்றில்லை
போற்றியோநமச்சிவாய
புறமெனைப்போக்கல்கண்டாய்
போற்றியோநமச்சிவாய
சயசயபோற்றிபோற்றி.

(ப - ரை.) ஓம் நமச்சிவாய - ஓம் நமச்சிவாயவென்றும் ஸ்ரீபஞ்சாட்சரப் படிவமாய் விளங்குபவனே, போற்றி - நமஸ்காரம், புயங்கனே - சர்ப்பாபரணனே, மயங்குகின்றேன் - மயங்காநின்றேன், போற்றி - நமஸ்காரம், ஓம் நமச்சிவாய - ஓம் நமச்சிவாயனே, புகல்இடம்-(அடியேன்) சென்று அடைக்கலம் புகுதற்குரிய இடம், பிறிது ஒன்று இல்லை - உனது ஸ்ரீசரணங்களே யன்றி வேறொன்றில்லை, (ஆதலால்) போற்றி - அத்திருவடிகளுக்கு நமஸ்காரம், ஓம் நமச்

சிவாய - ஓம் நமச்சிவாயனே, என்னை - அடியேனை, புறம்போக்கல் - புறத்தே விடாதே, போற்றி - நமஸ்காரம், ஓம் நமச்சிவாய - ஓம் நமச்சிவாயனே, சயசய - மிகுந்தவெற்றியடையும்படி, போற்றி போற்றி - நமஸகாரம் நமஸகாரம்.

(க - ரை.) இறைவனே! இந்தப் பொய்யுலகவாசனையால் மயங்குகின்றேன், உன்னையன்றி எனக்கு வேறு புகலிடமில்லை. ஆதலால் என்னைக் கைவிடாமல் காத்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) புயங்கன் என்பதற்குப் புயங்கம் என்னும் நிருத்தத்தை யுடையவன் எனினும் பொருந்தும். (சுஉ)

போற்றியென்போலும்பொய்யர்
　　தம்மையாட்கொள்ளும்வள்ளல்
போற்றிநின்பாதம்போற்றி
　　நாதனேபோற்றிபோற்றி
போற்றிநின்கருணைவெள்ளப்
　　புதுமதுப்புவனநீர்தீக்
காற்றியமானன்வான
　　மிருசுடர்க்கடவுளானே.

(ப - ரை.) புவனம் - பிருதுவி, நீர் அப்பு, தீ - தேயு, காற்று - வாயு, இயமானன் - ஆன்மா, வானம் - ஆகாயம், இருசுடர் - இரண்டு ஒளியுடைப் பொருள்களாகிய சூரிய சந்திரர்கள், (ஆகிய எட்டுருவாயமர்ந்திருக்கின்ற)கடவுளானே - கடவுட்டன்மை யுள்ளவனே, போற்றி - நமஸகாரம், என்போலும் - என்னையொத்த, பொய்யர்தம்மை - பொய்யன்பர்களை, ஆட்கொள்ளும் - அடிமைகொள்ளுகின்ற, வள்ளல் - உதாரசீலனே, போற்றி - நமஸகாரம், நின்பாதம் போற்றி-உன் திருவடிகளுக்கு நமஸ்காரம், நாதனே போற்றி போற்றி - தலைவனே நமஸ்காரம் நமஸ்காரம், நின்கருணை வெள்ளப்புதுமது - உனது கருணைப்பிரவாகமாகிய புதியதேனின் பொருட்டு, போற்றி - நமஸ்காரம். எ - று.

(க - ரை.) என்போலும் பொய்யரையும் ஆட்கொள்ளுகின்ற உதாரத்வமுடையகடவுளே! அட்டமூர்த்தமாக இருப்பவனே! உனக்கு நமஸ்காரம் என்பதாம்.

(வி - ரை) வள்ளல் - வரையாது கொடுப்போன், (உதாரன்) இறைவன் மெய்யர் பொய்யர் எனத் தரங் குறியாமல் எல்லாரையும் ஆட்கொள்ளுதலால் வள்ளல் என்றார். வரைதல் - நீக்குதல். இறைவனது கருணை எல்லார்க்கும் இனிமையைத் தருதலால், அதனைப் புதுமது என்றார். பஞ்சபூதம், சூரிய சந்திரர், ஆன்மா இந்த எட்டினையும் அட்டமூர்த்தம் என்பர். (சுரு)

கடவுளேபோற்றியென்னைக்
கண்டுகொண்டருளுபோற்றி
விடவுளேயுருக்கியென்னை
யாண்டிடவேண்டும்போற்றி
உடலிதுகளைந்திட்டொல்லை
யும்பர்தந்தருளுபோற்றி
சடையுளேகங்கைவைத்த
சங்கராபோற்றிபோற்றி.

(ப - ரை.) கடவுளே போற்றி - கடவுளே நமஸ்காரம், என்னைக்கண்டு கொண்டு அருள் - அடியேனது நிலைமையைப் பார்த்து மனமிரங்கி யனுக்கிரகித்தல் வேண்டும், போற்றி - நமஸ்காரம், உள் - என் மனத்தை, விட - நெகிழும்படி, உருக்கி - உருகப்பண்ணி, என்னை ஆண்டிட வேண்டும் - என்னை அடிமையாக்கிக் கோடல்வேண்டும், போற்றி-நமஸ்காரம், இது உடல் களைந்திட்டு - இந்த அருவருப்பான மலவுடம்பை நீக்கி, ஒல்லை - விரைவாக, உம்பர் - மேலாகிய மோக்ஷபதத்தை, தந்தருள் - கொடுத்தருள்வாய், போற்றி - நமஸ்காரம், சடைஉள்ளே - சிறிய சடையொன்றின் கண்ணே, கங்கைவைத்த - பெரிதாகிய கங்கா நதியை யமைத்துக்கொண்ட, சங்கரா - சுககரனே, போற்றி போற்றி - நமஸ்காரம் நமஸ்காரம். எ - று.

(க - ரை.) எம்பெருமானே ! இந்தப்பொய்யுடம்பின் தொடர்பை நீக்கி எனக்கு முத்தியைத் தந்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) கடவுள் எல்லாப் பொருள்களுக்கும் மேற்பட்டவன். கொண்டருளு, தந்தருளு என்பவற்றில் ஈற்றிலுள்ள உகரங்கள் சாரியை. (சுசு)

சங்கராபோற்றிமற்றோர்
சரணிலேன்போற்றிகோலப்
பொங்கராவல்குற்செவ்வாய்
வெண்ணகைக்கரியவாட்கண்
மங்கையோர்பங்கபோற்றி
மால்விடையூர்திபோற்றி
இங்கிவாழ்வாற்றகில்லே
னெம்பிரானிழித்திட்டேனே.

(ப் - ரை) சங்கரா - சுகத்தைக் கொடுப்பவனே, போற்றி - நமஸ்காரம், மற்று ஓர் சரண் இல்லேன் - வேறொரு புகலிடமில்லாதேன், போற்றி - நமஸ்காரம், கோலம் - அழகாகிய, பொங்கு - சீறுகின்ற, அரா - பாம்பின்படத்தை யொத்த, அல்குல் - அல்குலையும், செவ்வாய் - செவந்த வாயையும், வெள்நகை-

வெண்மையாகிய தந்தபற்களையும், கரிய - கருமையாகிய, வாள்கண் - வாள்போன்ற கண்களையும் உடைய, மங்கை - மங்கைப் பருவப்பெண்ணாகிய உமாதேவியாரை, ஒருபங்க - ஒருபாகத்தில் உடையனே, போற்றி - நமஸ்காரம், மால்விடை ஊர்தி - திருமாலாகிய இடபவாகனக்கடவுளே, போற்றி - நமஸ்காரம், எம்பிரான் - எம்பெருமானே, இங்கு - இவ்வுலகத்தில், இவ்வாழ்வு - இந்தப் பொய்யுடம்போடு கூடிவாழும் வாழ்வை, ஆற்றகில்லேன் - சகித்திலேன், இழித்திட்டேன் - இதனை யருவருத்தேன். எ - று.

(க - ரை.) சங்கரனே! மங்கைபங்கனே! மால்விடை யுடையானே! வேறோர் ஆதரவுமில்லாதவனாகிய யான், இந்தப் பொய்வாழ்வைச் சகிக்கிலேன் ஆதலால், என்னைக் கைவிடாமலாட்கொள்ளல் வேண்டும். (சுரு)

இழித்தனனென்னையானே
யெம்பிரான்போற்றிபோற்றி
பழித்திலேனுன்னையென்னை
யாளுடைப்பாதம்போற்றி
பிழைத்தவைபொறுக்கையெல்லாம்
பெரியவர்கடமைபோற்றி
ஒழித்திடிவ்வாழ்வுபோற்றி
யும்பர்நாட்டெம்பிரானே.

(ப - ரை.) எம்பிரான் - எம்பெருமானே, என்னை யானே இழித்தனன் - என்னை நானே அருவருத்தவனாய், போற்றி போற்றி - பலநமஸ்காரஞ் செய்கின்றேன், உன்னை பழித்திலேன்-உன்னை நிந்தித்திலேன், என்னை ஆள்உடை பாதம் - என்னை அடிமையாக வுடைய திருவடிகளுக்கு, போற்றி - நமஸ்காரம், பிழைத்தவை எல்லாம் - (சிறியவர் செய்த) பிழைகளெல்லாவற்றையும், பொறுக்கை - பொறுத்துக் கொள்ளுதல், பெரியவர் கடமை-பெரியோரது கடமையேயாகும் (ஆதலால்) போற்றி - நமஸ்காரம், உம்பர்நாட்டு எம்பிரானே-மேலாகிய மோக்ஷநாட்டுக்கிறைவனே, இவ்வாழ்வு ஒழித்திடு - இச்சரீர வாழ்க்கையை நீக்கிவிடவேண்டும், (அதனை வேண்டியே) போற்றி-நமஸ்காரம். எ - று.

க - ரை.) எம்பிரானே! என்னைநானே தாழ்த்துவ தன்றி உன்னை நிந்தித்திலேன், சிறியவர் செய்த குற்றங்களைப் பெரியவர் பொறுத்தல் கடமையாதலால் என் குற்றங்களைப் பொறுத்து, இந்தப் பொய் வாழ்க்கையை ஒழித்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) பொறுக்கை யெல்லாம் பெரியவர் கடமை என்றதனால் பிழைத்தல் சிறியோர் தொழிலாகக் கொள்க. உன்னை யடையாமைக்குக் காரணம் என் தீவினையே அன்றி நீ காரணமல்லை என்றற்கு "இழித்தனன் என்னை யானே பழித்திலேன் உன்னை" என்றார். (சுசு)

எம்பிரான்போற்றிவானத்
தவரவரேறுபோற்றி
கொம்பரார்மருங்குன்மங்கை
கூறவெண்ணீறபோற்றி
செம்பிரான்போற்றிதில்லைத்
திருச்சிற்றம்பலவபோற்றி
உம்பராபோற்றியென்னை
யாளுடையொருவபோற்றி.

(ப - ரை.) எம்பிரான் - எமது தலைவனே, போற்றி - நமஸ்காரம், வானத்தவர் அவர் - விண்ணுலகத் தலைவர்களாகிய அந்தப் பிரமன் விஷ்ணு முதலிய தேவர்களுக்கு, ஏறு - ஆண்சிங்கம் போல்பவனே, போற்றி - நமஸ்காரம், கொம்பர் ஆர்மருங்குல் - பூங்கொடிபோன்ற இடையையுடைய, மங்கை - உமாதேவியாரை, கூற - ஒருபங்கிலுடையானே, வெண்ணீற - திருவெண்ணீற்றை யுடையானே, போற்றி - நமஸ்காரம், செம்பிரான் போற்றி - செவ்வைக் குணமுடைய பெருமானே நமஸ்காரம், தில்லை - திருத்தில்லையின் கண்ணுள்ள, திருச்சிற்றம்பலவ - திருச்சிற்றம்பலத்தை யுடையவனே, போற்றி - நமஸ்காரம், உம்பராபோற்றி - மேலாகிய மோக்ஷநிலத்தை யுடையானே நமஸ்காரம், என்னை ஆள்உடைய ஒருவபோற்றி - என்னை யடிமையாகவுடைய ஒப்பற்றவனே நமஸ்காரம். எ - று.

(க - ரை.) தேவர்பிரானே ! உமாதேவி பாகனே ! திருவெண்ணீறுடையவனே ! செவ்விய பெருமானே ! திருச்சிற்றம்பலத்தை யுடையவனே ! முத்தியுலகத்தை யுடையவனே ! என்னை அடிமையாக வுடையவனே ! என்னைக் காத்தருளல் வேண்டும் என்பதாம்,

(வி - ரை.) ஏறு சிறந்தவன் என்னும் பொருளைக் குறிக்கவந்தது. செம்பிரான் செவந்த திருமேனியையுடையவன் எனினுமாம். (கூஎ)

ஒருவனேபோற்றியொப்பி
லப்பனேபோற்றிவானோர்
குருவனேபோற்றியெங்கள்
கோமளக்கொழுந்துபோற்றி
வருகவென்றென்னைநின்பால்
வாங்கிடவேண்டும்போற்றி
தருகநின்பாதம்போற்றி
தமியேனன்றனிமைதீர்த்தே.

(ப - ரை.) ஒருவனே-தனிமையானவனே, போற்றி - நமஸ்காரம், ஒப்பு இல் - சமானமில்லாத, அப்பனே - தந்தையே, போற்றி - நமஸ்காரம், வானோர் குருவனேபோற்றி - தேவாசிரியனேநமஸ்காரம், எங்கள் கோமளக் கொழுந்து போற்றி - எமது கோமளக்கொழுந்தே நமஸ்காரம், என்னை - அடியேனை, வருக என்று - வரக்கடவாயென்று, நின்பால் வாங்கிட வேண்டும் - உன்னிடத்திற்கு வரவழைத்துக் கொள்ளவேண்டும், போற்றி - நமஸ்காரம், தமியேனேன் தனிமைதீர்த்து - தனியேனது தனிமையையொழித்து, நின்பாதம்தருக - உன் திருவடிகளைக் கொடுத்தருள்வாயாக, போற்றி - நமஸ்காரம். எ - று.

(க - ரை.) இறைவனே! என்னை உன் பக்கல் அழைத்து உன் திருவடியை எனக்குத் தந்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) இறைவன், உயிர்களுக்கு என்றும் அழியாத தந்தையாதலால் "ஒப்பிலப்பனே" என்றார். கோமளம் - இளமை. தனிமை தீர்த்தலாவது அடியார் கூட்டத்தில் சேரவிடுதல், வானோர் குருவனே என்றதை, திருமாலிந்திரன் பிரமனுபமனியன்ற பனனந்தி செவ்வேளாதி, தபனனந்தி தருமமுதுகுரவருக்குந் தனதருளாலாசி யத்தன்மை நல்கி" யென்னு மான்றோர்வாக்கானுமுணர்க. (கூஅ)

தீர்ந்தவன்பாயவன்பர்க்
கவரினுமன்பபோற்றி
பேர்ந்துமென்பொய்ம்மையாட்கொண்
டருளிடும்பெருமைபோற்றி
வார்ந்தநஞ்சயின்றுவானோர்க்
கமுதமீவள்ளல்போற்றி
ஆர்ந்தநின்பாதநாயேற்
கருளிடவேண்டும்போற்றி.

(ப - ரை,) தீர்ந்த அன்பு ஆய அன்பர்க்கு - முழு அன்பையுடைய அன்பர்களுக்கு, அவரினும் அன்ப - அவரினும் மேம்பட்ட அன்பையுடையவனே, போற்றி - நமஸ்காரம், என் பொய்மையும் - அடியேனது பொய்மை நிலையும், பெயர்ந்து - அறவேயொழியுமாறு, ஆட்கொண்டருளிடும் பெருமை - அடிமை கொண்டருளிய உனது பெருமைக்கு, போற்றி - நமஸ்காரம், வார்ந்த - பாற்கடலில் பெருகிய, நஞ்சு - விடத்தை, அயின்று - உண்டு, வானோர்க்கு - அவ்விடத்தில் வந்திருந்த சகல தேவர்களுக்கும், அமுதம் ஈ - அக்கடலிற்றோன்றிய அமிர்தத்தைக் கொடுத்தருளிய, வள்ளல் - பரமோதாரனே, போற்றி - நமஸ்காரம், ஆர்ந்த - எவ்விடத்தும் நீக்கமற நிறைந்து நின்ற, நின்பாதம் - உன் திருவடிகளை, நாயேற்கு - நாயினுங் கடைப்பட்டவனாகிய வெனக்கு, அருளிட வேண்டும் - கிருபை செய்யவேண்டும், போற்றி - நமஸ்காரம். எ - று.

(க - ரை.) அன்பரிடத்தில் மிகுந்த அன்பு செய்பவனே! என் பொய்ம்மையறவே யொழியும் வண்ணம் என்னை ஆண்டருளினவனே, விடத்தையுண்டு

தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்தவனே ! உன் திருவடியை எனக்குத் தந் தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ள.) தீர்ந்த என்பதற்கு இருவகைப்பற்றினையும் விட்ட எனவும், அன்பாய அன்பர்க்கு என்பதற்கு அன்புருவமாகிய அடியார்களுக்கு எனவும் பொருள் கூறுதலும் பொருந்தும். அயிலல் - உண்ணல். தீமையைத் தருகிற நஞ்சைத் தானுண்டு, நன்மையைத் தருகிற அமுதத்தைத் தேவர்களுக்குக் கொடுத்தமையால் இறைவனை வள்ளல் என்றார். (சுகூ)

போற்றியிப்புவனநீர்தீக்
காலொடுவானமானாய்
போற்றியெவ்வுயிர்க்குந்தோற்ற
மாகிநீதோற்றமில்லாய்
போற்றியெல்லாவுயிர்க்கு
மீறாயீறின்மையானாய்
போற்றியைம்புலன்கணின்னைப்
புணர்கிலாப்புணர்க்கையானே.

(ப - ரை.) இப்புவனம் - இந்தப் பூமியும், நீர் - நீரும், தீ - நெருப்பும், காலொடு - காற்றுடன், வானம் - ஆகாயமும, ஆனாய் - ஆகியிருப்பவனே, போற்றி-உனக்கு நமஸ்காரம், எவ்வுயிர்க்கும்-எவ்வகைப்பட்ட வுயிர்களுக்கும், நீ - நீ, தோற்றம் ஆகி - உற்பத்திஸ்தானமாகி, தோற்றம் இல்லாய் - உனக்கு உற்பத்தி ஸ்தானமில்லாதவனே, போற்றி - நமஸ்காரம, எல்லாவுயிர்க்கும்-எவ் வகைப்பட்ட சீவராசிகளுக்கும், ஈறு ஆய் - முடிவாகி, ஈறு இன்மையானாய் - உனக்கு முடிவில்லாதிருப்பவனே, போற்றி - நமஸ்காரம், ஐம்புலன்கள்-பஞ் சேந்திரியங்கள், நின்னை - உன்னை, புணர்கிலா - அணுகப்பெறாத, புணர்க்கை யானே - மாயாதந்திரமுடையவனே, போற்றி - நமஸ்காரம். எ - று.

(க - ரை.) பஞ்சபூதஸ்வரூபமா யிருப்பவனே ! எல்லா வுயிர்களுக்கும் பிறப்பிடமாயிருப்பவனே ! பிறப்பில்லாதவனே ! எல்லாவுயிர்களுககும் இறுதி யும் உனக்கு இறுதியின்மையுமானவனே ! ஐம்புலன்களும் தொடரப் பெறாத மாயத்தையுடையவனே ! என்னைக் காத்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) இறைவன் எல்லாவுயிர்க்கும் காரணனாயிருத்தலன்றித் தனக் கொரு காரணனை யுடையனல்லாமையால், "எவ்வுயிர்க்குந் தோற்றமாகி நீ தோற்றமில்லாய்" என்றார். ஈறாயீறின்மை யாதலாவது எல்லாவுயிரும் மடி யத் தான் மடியாதிருத்தலும், அவை தோன்றுதற்குக் காரணமாயிருத்தலும். ஐம்புலன் என்றது ஐம்புலவாசையை. அவற்றை இயல்பாகவே வென்றிருப் பவனாதலால் "ஐம்புலன்கள் புணர்கிலாப் புணர்க்கையான்" என்றருளினர். புணர்ப்பு - மாயம். இதனைத் திருக்கோவையார் - க௭-ஆம் செய்யுளில், புணர்

ப்போ கனவோ என்பதற்கு, மாயமோ கனவோ எனக் கூறிய நச்சினார்க்கினியர் உரையானு மறிக. (எ0)

திருச்சிற்றம்பலம்.

## அ - வது ஆனந்தத்தழுந்தல்.

அதாவது

சிவானந்தப்பேற்றில் நிலைத்திருத்தல்.

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

புணர்ப்பதொக்கவெந்தையென்னை
யாண்டுபூணநோக்கினாய்
புணர்ப்பதன்றிதென்றபோது
நின்னொடென்னொடென்னதாம்
புணர்ப்பதாகவன்றிதாக
வன்புநின்கழற்கணே
புணர்ப்பதாகவங்கணாள
புங்கமானபோகமே.

(ப - ரை.) புணர்ப்பது ஒக்க - (ஆண்டவனோடு மாறுகொண்டு திரிகின்ற அடிமையானவனை அந்த ஆண்டவன் சதுர்வித உபாயங்களாலும் தன் அடிமையென்று தன்னோடும்) கூட்டிக்கொள்வதொப்ப, என்னை - (திருவடிக்கருகராகிய மெய்யடியார் குணங்கள் ஒன்றுமில்லாதவனாய்க் காமவெகுளி மயக்கங்களினால் பிரபஞ்சத்தை மெய்யென்று சுழல்கின்ற) என்னை, எந்தை - (கிருபாசாகரமூர்த்தியாகிய சிவபெருமானே) ஆசாரிய மூர்த்தமாய் (எழுந்தருளி வந்து), ஆண்டு - தடுத்தாட்கொண்டு, பூணநோக்கினாய் - (மெய்யடியார்கள் மேல்வைக்கும் கிருபாநோக்கத்தை) அடியேன் போதத்துக்கு உள்ளும் புறமுமா யழுந்த வைத்தருளிச் செய்தாய், இது - (அரிபிரமாதிகட்கும் கிடையாத) இந்தக் கிருபாநோக்கம், புணர்ப்பது அன்று - (ஒன்றுக்கும் பற்றாத எனக்கு) கிடைப்பது அன்று, என்றபோது - என்று கிருபையின் அருமையை அறிந்தபோது, என்னது ஆம் - என்னதாகியிருந்த சகசமலம் ஒன்றும், நின்னொடு என்னொடு - நின்னோடும் என்னை, புணர்ப்பதாக - (இரண்டற்ற அத்துவிதமாய்க்) கூட்டுவதாகவும், இது - (முன்யான் எனதாய் நின்ற பிரபஞ்சமான) இது, அன்றுஆக - இப்போது யான் எனது அன்றாகவும், அன்பு-இப்பிரபஞ்சத்தின்மேல் நின்றஅன்பு, நின்கழல் கண்ணே - சுவாமிகள் திருவடிக்கண்ணே, புணர்ப்பது ஆக - மீளாது நிற்பதாகவும் ஆயின, அம்கண்ணாள - அழகிய கண்ணாளா, புங்கம் ஆனபோக

கமே - அரிபிரமாதி போகங்களேயும் கடந்திருப்பதான சிவாநந்தபோகமே, (இந்தக் காருண்ணியத்துக்கு நாயேனால் கைம்மாறும் உண்டு கொல்லோ.) எ - று.

(க - ரை.) ஆண்டவன் தன்னோடு மாறுபட்டுத் திரிகின்ற அடிமையைச் சாமபேததான தண்டமென்னும் நான்குவித உபாயங்களாலும் தன்னடிமையென்று தன்னோடு கூட்டிக்கொள்வதுபோல, மெய்யடியார் குணங்களொன்றுமில்லாத என்னை ஆசாரிய மூர்த்தமாய் எழுந்தருளித் தடுத்தாட்கொண்டு மெய்யடியார்மீது வைக்கும் கிருபாநோக்கத்தை அடியேன் போதத்துக்கு உள்ளும் புறமுமாக வைத்தருளினை, பிரமாதிகளுக்கும் அரிய இக்கிருபா நோக்கம் அடியேனுக்குக் கிடைத்தல் அரிதென்று அதன் அருமை யறிந்தபோது எனதாயிருந்த சகசமல மொன்றும் என்னை நின்னொடு இரண்டறக் கூட்டுவதாகவும், இப்பிரபஞ்சத்தின்மேல் நின்ற அன்பு உன் திருவடிக் கண் மீளாது நிற்பதாகவும் ஆயின. அழகிய கண்ணுளனே, அரிபிரமாதி போகங்களேயும் கடந்திருக்கும் சிவானந்த போகமே, இந்தக்காருண்ணியத்துக்கு நாயேனால் செய்யப்படுவதாகிய கைம்மாறும் உண்டோ என்பதாம்.

(வி - ரை.) "ஆண்டு பூண நோக்கினாய்" என்றமையால், 'புணர்ப்பதொக்க' என்ற உவமைக்கு ஆண்டவன் அடிமை வருவிக்கப்பட்டன. பூண நோக்குதல் - போதம் பதையாதுவைத்து நோக்கல். கிருபையி னருமையை அறிந்தபோது தற்செயல் முழுதுமிறந்து சிவத்தோடு அத்துவித மானபடியினாலே "நின்னொடென்னொடு புணர்ப்பதாக" என்றார். என்னொடுஎன்ற மூன்றனுருபை என்னையென இரண்டனுருபாகக் கொள்க. மூன்றும் நான்காம் அடிகளினுள்ள புணர்ப்பதாக என்பவற்றி னீற்றில் உம்மைகளும் ஆயின என்னும் ஆக்கமும் தொக்கு நின்றன. (எக)

போகம்வேண்டிவேண்டிலேன்பு
ரந்தராதியின்பமும்
ஏசநின்கழலிணை
யலாதிலேனெனெம்பிரான்
ஆகம்விண்டுகம்பம்வந்து
குஞ்சியஞ்சலிக்கணே
ஆகவென்கைகண்கடாரை
யாறதாகவையனே.

(ப - ரை.) ஐயனே - எமது தந்தையே, என் எம்பிரான்-என்தலைவனே, ஆகம்விண்டு - மாயாசம்பந்தமாகிய விச்சரீரந்தளர்ந்து, கம்பம் வந்து - நடுக்கமுண்டாகி, என்கை குஞ்சக்கணே அஞ்சலிஆக - என் கரங்கள் சிரத்தின்மீது அஞ்சலி செய்வனவாகுக, கண்கள் தாரை ஆறு ஆக - கண்களில் நின்றும் ஒழுகுகிற நீர்த்தாரையானது நதியாகிப்பெருகுக, (இவையேயன்றி) போகம்வேண்டி-அற்பசுகாநுபவங்களை விரும்பி, புரந்தராதி இன்பமும் - இந்திராதியருடைய அநத்தியமான சுகாநுபவங்களையும், வேண்டிலேன்-ஒருக்காலும் விரும்பிலேன்,

(என்விருப்பம்) ஏக - தனிமைப்பொருளே, நின்கழல் இணை அல்லாது இலேன்- உன் திருவடிக்கண்ணே யன்றிவேறொன்றின் கண் உடையேனல்லேன். எ- று.

(க - ரை,) ஐயனே ! இந்திரன் முதலியதேவ போகங்களையும் விரும்பி லேன், உன் திருவடியை யன்றி மற்றோர் பற்றுமில்லேன், என்கைகள் உன்னை அஞ்சலி செய்யவும் என் கண்களில் நீர்த்தாரைகள் ஆற்றைப்போலப் பெருக வும் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) குஞ்சி - குடுமி. அது தன்னையுடைய சிரத்துக் காயிற்று. அஞ்சலி - கும்பிடல். தாரை - நீரொழுக்கு. புரந்தரன் - பகைவர் நகரங்களை அழிப்பவன். புரந்தராதியின்பமும் வேண்டிலேனென்றது, “அவைதாம் ஆரா வின்ப மென்றரும் பெயர் பெறினும், வாராவல்வினை வருவிக்கும்மே” என்றப டி அப்போகங்கள் இருவினைக்கீடாக வரும் பிறப்பிறப்புக்களுக் கேதுவாலின்.

ஐயநின்னதல்லதில்லை
    மற்றோர்பற்றுவஞ்சனேன்
பொய்கலந்ததல்லதில்லை
    பொய்மையேனெனெம்பிரான்
மைகலந்தகண்ணிபங்க
    வந்துநின்கழற்கணே
மெய்கலந்தவன்பரன்பெ
    னக்குமாகவேண்டுமே.

(ப - ரை) ஐய - ஐயனே, வஞ்சனேன் - வஞ்சகம் நிறைந்த மனத்தினை யுடையேனுக்கு, நின்னது அல்லது - உனது திருவடிப்பற்றே யல்லாமல், மற் றோர் பற்று இல்லை - வேறொரு பற்றுமில்லை, பொய்மையேன் - பொய்ம்மையை யுடையேன், பொய்கலந்தது அல்லது - சதாகாலமும் பொய்யோடு கூடியிருந் ததே யல்லாமல், இல்லை - மெய்யோடு கூடியிருந்ததில்லை, என் எம்பிரான்-என் னிறைவனே, மைகலந்த - அஞ்சனமெழுதப்பெற்ற, கண்ணி - கண்களை யுடைய வளாகிய உமாதேவியார் தங்கிய, பங்க - இடப்பாகத்தை யுடையவனே, நின்கழ ற்கண் வந்து - உன் திருவடிக் கண்ணே வந்து, மெய்கலந்த - உண்மையாய்க் கலந்திருந்த, அன்பர் - அன்பரது, அன்பு - அன்பையொத்த மெய்யன்பானது, எனக்கும் - ஆகவேண்டும் - அடியேனுக்கும் உண்டாதல் வேண்டும். எ - று.

(க - ரை,) ஐயனே ! உன்னையன்றி வேறொரு பற்றிலேன், யான் முழுப் பொய்யனுயினும், உன் திருவடியை யடைந்த மெய்யன்பரது அன்புபோன்ற மெ ய்யன்பு எனக்கும் உண்டாகும்படி அருள் புரிய வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) பற்று - தஞ்சம். (ஆதாரம்) முழுப்பொய்யன் என்றற்கு “பொய்கலந்ததல்ல தில்லை பொய்மையேன்” என்றார். (எரு)

வேண்டுநின்கழற்கணன்பு
　　பொய்ம்மைதீர்த்துமெய்ம்மையே
ஆண்டுகொண்டுநாயினேனை
　　யாவவென்றருளுநீ
பூண்டுகொண்டடியனேனும்
　　போற்றிபோற்றியென்றுமென்றும்
மாண்டுமாண்டுவந்துவந்து
　　மன்னநின்வணங்கவே.

(ப - ரை.) மன்ன - இறைவனே, அடியனேனும் - அடியேனும், மாண்டு மாண்டு வந்துவந்தும் - பலகால் இறந்தும் பிறந்தும் உழல்வேனாயினும், பூண்டுகொண்டு - உன் திருத்தொண்டைமேற்கொண்டு, என்றும் - எப்பொழுதும், போற்றி போற்றி என்று - நமஸ்காரம் நமஸ்காரம் என்று, நின்வணங்க - உன்னை வணங்க, நின்கழற்கண் - உன் திருவடியினிடத்தே, அன்புவேண்டும் - அன்புசெய்தல் உண்டாக வேண்டும், (ஆதலால்) பொய்மை தீர்த்து - பொய்யொழுக்கங்களை ஒழித்து, நாயினேனை - அடியேனை, மெய்ம்மையே ஆண்டுகொண்டு - உண்மையாகவே ஆட்கொண்டு, ஆவ என்று - அந்தோ வென்று இரங்கி, நீ அருள் - நீ அருள்செய்வாயாக. எ - று.

(க - ரை.) இறைவனே! நான் எத்தனைதரம் பிறந்திறந்து உழன்றாலும் உன் திருத்தொண்டை மாத்திரம் மறவாது செய்யும்படி எனக்குக் கிருபை செய்யவேண்டும் என்பதாம்.

(வி - ரை.) நின்வணங்க நின்கழற்கண் அன்புவேண்டும் என்றியைத்துக்கொள்க. ஆவ - இரக்கக்குறிப்பு. (எச)

வணங்குநின்னைமண்ணும்விண்ணும
　　வேதநான்குமோலமிட்
டுணங்குநின்னைசெய்தலுற்று
　　மற்றொருண்மையின்மையின்
வணங்கியாம்விடேங்களென்ன
　　வந்துநின்றருளுதற்
கிணங்குகொங்கைமங்கைபங்க
　　வென்கொலோநினைப்பதே.

(ப - ரை.) இணங்குகொங்கை-நெருங்கின தனங்களையுடைய, மங்கைபங்க-உமாதேவிபாகனே, நின்னை-உன்னை, மண்ணும் விண்ணும் வணங்கும் - மண்ணுலகமும் விண்ணுலகமும் தொழும், மற்றொருண்மையின் - உன்னையன்றி வேறொரு மெய்ப்பொருளில்லாமையால், வேதம்நான்கும் - சதுர்வேதங்களும், நின்னை எய்தலுற்று - உன்னைச் சரணடைய வேண்டி, ஓலமிட்டு உணங்கும் -

முறையிட்டு (அடையப் பெருமையால்) வாடி நிற்கும், (அவை அவ்வாறாயின போது) யாங்கள் வணங்கி - நாங்கள் உன்னைத்தொழுது, விடேம் என்ன-(உன் திருவடியை) விடமாட்டோம் என்றுசொல்ல, வந்துநின் றருளுதற்கு - நீவந்து எமக்குமுன்னின்றம் கிருபைசெய்தற்கு, நினைப்பது என்கொல் - நீ ஆலோசித் தற்குக்காரணம் யாதோ. எ - று.

(க - ரை.) உமாதேவி பாகனே ! மண்ணுலகி லுள்ளவர்க்கும் விண்ணுல கிலுள்ளவர்க்கும் உன்னை வணங்கா நிற்பர் நான்கு வேதங்களும் உன்னையறிய முயன்று அறியவொண்ணுமையால் இளைக்கும், அவ்வாறுனபின்பு, யாம்உன்னை வணங்கிஉன் திருவடியைவிடோம் என்றுசொல்ல, நீ வந்து எமக்கு அருள் செய்தற்கு உன் திருவுளம் யாதோ என்பதாம்.

(வி - ரை.) மண்விண் என்றது-இடவாகு பெயராய் அவற்றி லுள்ளாரை யுணர்த்தி நின்றன, உண்மைப்பொருளை உண்மையென்றது பண்பாகு பெயர், உணங்குதல் - வாடுத லெனினுமாம். (எ௭)

நினைப்பதாகசிந்தைசெல்லு
மெல்லையேயவாக்கினல்
தினைத்தனையுமாவதில்லை
சொல்லலாவகேட்பவே
அனைத்துலகுமாயநின்னை
யைம்புலன்கள்காண்கிலா
எனைத்தெனைத்தெப்புறத்த
தெந்தைபாதமெய்தவே.

(ப - ரை.) (உன்னை) சிந்தை - என்மனம், நினைப்பதாகசொல்லும்-நினைப்பதாக எழாநிற்கும், வாக்கினல் - நாவினல், எல்லை எய சொல்லல் - வரம்புண்டாகச் சொல்லுதல், தினைத்தனையும் ஆவது இல்லை - தினையளவும் பொருந்து[illegible]ல, அனைத்து உலகும் - எல்லாவுலகங்களும், கேட்ப - உன் பெருமை [illegible]னவளா யிருந்தன, ஆவ - அந்தோ, ஆயநின்னை - அத்தன்மையுடவனுகிய உன்னை ஐம்புலன்கள்காண்கிலா- (மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும்) பஞ்சேந்திரியங்களும்காணமாட்டா, (அங்ஙனமாக) எந்தைபாதம்எய்த- எந்தையாகிய உன் திருவடியையடைய, எனைத்து எனைத்தது - அது எவ்வெவ்வளவினது, எப்புறத்தது - எவ்விடத்தது. எ - று.

(க - ரை.) இறைவனே ! மனோவாக்குக்களுக்கும் எட்டாதிருக்கிற உன் திருவடியை யான் காணும் விதம் யாது என்பதாம்.

(வி - ரை.) "நினைப்பதாகசிந்தைசெல்லுமெல்லையேய வாக்கினற்,தினைத் தனையு மாவதில்லை சொல்லலாவ கேட்பவே" என்றதனல், இறைவன், மனவாக் குகளுக்கு மெட்டாதவ னென்பதை விளக்கி நின்றது. அனைத்துலகு மாயநின்

னையைம்புலன்கள் காண்கிலா என்றது - இறைவன் அண்டகோடிகளனைத்தினும் சர்வவியாபகனாய் நிறைந்திருப்பவும், அவனைப்பிரத்தியட்சமாகக் காணுமாற்றலைம்புலன்களுக் கில்லாமை, ஆணவாதிய மலத்தொடக்காலென்பதை விளக்கி நின்றது. (எசு)

எய்தலாவதென்றுநின்னை
யெம்பிரானிவ்வஞ்சனேற்
குய்தலாவதுன்கணன்றி
மற்றொருண்மையின்மையிற்
பைதலாவதென்றுபாது
காத்திரங்குபாவியேற்
கீதலாதுநின்கணொன்றும்
வண்ணமில்லையீசனே.

(ப - ரை.) எம்பிரான் - எம்பெருமானே, நின்னை - மனவாக்குக்களுக் கெட்டாத) உன்னை, எய்தலாவது - சிறியேன் அடையலாவது, என்று - எந்நாளோ, இவ்வஞ்சனேற்கு - இந்த வஞ்சகத்தையுடைய எனக்கு, உன்கண் அன்றி - உன்னிடத்துச் சரணடைந்தா லன்றி, உய்தலாவது - பிழைக்கலாவ தாகிய, மற்றொரு உண்மை இன்மையின் - வேறொரு மெய்ந்நெறி யில்லாமையால், பைதல் ஆவது என்று - இவன்தன்மை சிறுவனது தன்மையா மென்று திருவுளம் பற்றி, பாதுகாத்து இரங்கு - அடியேனைப் பாதுகாத்தற் பொருட்டு இரங்கியருள வேண்டும், பாவியேற்கு - பாவியாகிய எனக்கு, நின்கண் ஒன்றும் வண்ணம் - உன்னையடையும்வழி, ஈது அலாது - இவ்வாறு நீ திருவுளமிரங்கி யருளுதலல்லாது, இல்லை - வேறொன்றுமில்லை, ஈசனே-கடையிலாச் செல்வத்தையுடையவனே. எ - று.

(க - ரை.) ஈசனே! நான் உன்னையடைவது எந்நாளோ! எனக்கு உன்னையன்றி வேறு அடைக்கலஸ்தான மில்லாமையால், என் துன்பத்தை நோக்கி யிரங்கிக்காத்தருளல் வேண்டும். இவ்வாறு நீயே ஆட்கொண்டருளினாலன்றி, நான் உன்னை யடையும் வகையின்ன தென்றறியே னென்பதாம்.

(வி - ரை.) பைதலாவதென்று என்பதற்கு, துன்பமுண்டா மென்றெனவும் பொருள் கூறுவர். பைதல் - துன்பம். (எஎ)

ஈசனேநீயல்லதில்லை
யிங்குமங்குமென்பதும்
பேசினேனோர்பேதமின்மை
பேதையேனெனெம்பிரான்
நீசனேனையாண்டுகொண்ட
நின்மலாவொர்நின்னலால்
தேசனேயோர்தேவருண்மை
சிந்தியாதுசிந்தையே.

(ப - ரை.) ஈசனே - சர்வபூதாத்மகனே, இங்கும் அங்கும் - இகலோகத்தும் பரலோகத்தும், நீயல்லது இல்லையென்பதும் - (ஆதாரம்) உன்னையன்றி வேறொருவரும் இலர் என்பதையும், பேதையேன் - அறிவிலியாகிய நான், ஒரு பேதம் இன்மைபேசினேன் - அபேதமாகவெண்ணி விண்ணப்பித்தேன், என் எம்பிரான் - என் தலைவனே, ஈசனேனை ஆண்டுகொண்ட நின்மலா - புலையேனை யடிமைகொண்ட மலமற்றவனே, தேசனே - சோதிசொரூபனே, சிந்தை - என் மனமானது, ஒரு நின்னலால் - ஒப்பற்ற நின்னையன்றி, ஒரு தேவர் உண்மை சிந்தியாது - வேறொரு அநித்திய தேவரது நிலைமையை நினைக்க மாட்டாது. எ - று.

(க - ரை.) ஈசனே! இகத்தினும் பரத்தினும் நீயன்றி வேறொரு இறைவன் இல்லை யென்பதை வேற்றுமை யில்லாமல் எடுத்துரைத்தேன், என் மனம் உன்னையன்றி மற்றொரு தெய்வத்தை நினையாது என்பதாம்.

(வி - ரை.) இங்கு என்றது இம்மண்ணுலகத்தையும், அங்கு என்றது விண்ணுலகத்தையும் குறித்து நின்றது. ஈசனென்றதற்கு, சர்வபூதாத்மகனென்று பொருள்கொண்டமையை, "ஈசான ஸர்வ வித்யாநாம் ஈஸ்வர ஸர்வ பூதாநாம்" என்னும் வேதவாக்கானும் "எக்கலைக்கும் பூதங்களெவற்றினுக்கும்" என்னுங் காஞ்சிபுராணச் செய்யுளானு முணர்க. (எஅ)

சிந்தைசெய்கைகேள்விவாக்குச்
  சீரிலைம்புலன்களால்
முந்தையானகாலநின்னை
  யெய்திடாதமூர்க்கனேன்
வெந்தையாவிழுந்திலேனெ
  னுள்ளம்வெள்கிவிண்டிலேன்
எந்தையாயநின்னையின்ன
  மெய்தலுற்றிருப்பனே.

(ப - ரை.) ஐயா - ஐயனே, சிந்தையால் - மனத்தாலும், செய்கையால் - அதின் வழியாய் நிகழும் செய்கையாலும், கேள்வியால் - பெரியோர் சொல்லைக் கேட்பதினாலும், வாக்கால் - வாக்கினாலும், சீர்இல் - சிறப்பில்லாத, ஐம்புலன்களால் - ஐம்புலன்களினாலும், முந்தையான காலம் - முற்காலத்தில், நின்னை எய்திடாத - உன்னையடையாத, மூர்க்கனேன் - மூர்க்கனாகிய நான், வெந்து விழுந்திலேன் - வெந்து விழுந்தேனில்லை, என் உள்ளம் வெள்கி - என் மனம் நாணி, விண்டிலேன் - வாய்விட்டலறினே னில்லை, எந்தை ஆய நின்னை - எமது தந்தையாகிய உன்னை, இன்னம் - இன்னமும், எய்தலுற்று இருப்பன் - அடைய விரும்பி இருக்கிறேன். எ - று.

(க - ரை.) ஐயனே! மனமுதலியவற்றால் முற்காலத்தில் உன்னை யடையாத மூர்க்கனாகிய நான், வெந்தொழிந்தே னில்லை, என் மனம் குன்றி வாய்

விட்டலறினே னில்லை, இன்னமும் உன்னை யடைய நினைந்திருக்கின்றேன் என்பதாம்.

(வி - ரை.) ஆல் என்பதை சிந்தை முதலியவற்றீற்றோடு மொட்டுக. எய்தலுற்றிருப்பனே என்பதற்கு அடையப்பெறுவேனோ என்றுரைப்பினும் பொருந்தும். முந்தையான காலமென்றதற்கு, கீழ்ச்சென்ற அனந்த சனமங்களிலென்றும், தம்பூர்வமென்றும் பொருள் கூறலாம். (எக)

இருப்புநெஞ்சவஞ்சனேனை
யாண்டுகொண்டநின்னதாட்
கருப்புமட்டுவாய்மடுத்தெ
னைக்கலந்துபோகவும்
நெருப்புமுண்டியானுமுண்டி
ருந்ததுண்டதாயினும்
விருப்புமுண்டுநின்கணென்க
ணென்பதென்னவிச்சையே.

(ப - ரை.) இருப்பு நெஞ்சம் - இரும்புபோன்ற வலியநெஞ்சையுடைய, வஞ்சனேனை - கள்வனாகிய என்னை, ஆண்டுகொண்ட - அடிமைகொண்டருளிய, நின்னதாள் - உன் திருவடிகளாகிய, கருப்புமட்டு-கருப்பஞ்சாறு, என்னைவாய் மடுத்து - என்னைவாய் மடுத்துப் பருகி, கலந்துபோகவும்-கூடிப்பிரியவும், நெருப்பும் உண்டு-நெருப்பும் உண்டாயிருந்தது, யானும் உண்டு-நானும் இருக்கிறேன், அது இருந்தது உண்டுஆயினும் - தீப்பாய்தல் என்னும் அவ்வழக்கம் உலகத்தில் உண்டு அவ்வாறிருந்தும்;(யான் அதனைச்செய்யாமல்) என்கண் -என்னிடத்தில், நின்கண் - உன்னிடத்துச்செய்யவேண்டிய, விருப்பும் உண்டுஎன்பது-அன்பும் உண்டென்பது, என் அவிச்யையே - என் அஞ்ஞானமேயாம். எ - று.

(க - ரை) இரும்புபோலும் வலியமனத்தையுடைய நான், என்னையாண்டருளின உன் திருவடியைப் பிரிந்தும், தீப்பாய்ந்து மடிந்திலேன், இத்தன்மையேனாகிய என்னிடத்தில் உன்னிடத்திற் செய்யவேண்டிய அன்பிருக்கின்றதென்பது என்ன அஞ்ஞானம் என்பதாம்.

(வி - ரை.) இரும்பு கரும்பு என்பன இருப்புகருப்பு என நின்றது,வலித்தல்விகாரம். இருப்புநெஞ்சம் என்றதனால் இரும்பின் வன்மை நெஞ்சுக்கும் கொள்ளப்பட்டது. "நெருப்பு முண்டியானு முண்டிருந்த துண்டதாயினும்" என்றதனால் தீயில் வீழ்ந்திலேன் என்றாராயிற்று. இப்படிப்பட்ட எனக்கு உன்மீது அன்பிருக்கின்றதென்று நான் சொல்வது என் அஞ்ஞானத்தின் காரியமே என்றற்கு "விருப்பு முண்டு நின்கணென்க ணென்பதென்ன விச்சையே" என்றார். (அ0)

திருச்சிற்றம்பலம்.

## கூ-வது ஆநந்தபரவசம்.

அதாவது
நித்தியானந்தமயமாய் நிற்றல்.
கலிநிலைத்துறை.

விச்சுக்கேடுபொய்க்காகா
தென்றிங்கெனைவைத்தாய்
இச்சைக்கானாரெல்லாரும்
வந்துன்றாள்சேர்ந்தார்
அச்சத்தாலேயாழ்ந்திடு
கின்றேனாரூரெம்
பிச்சைத்தேவாவென்னான்
செய்கேன்பேசாயே.

(ப-ரை.) பொய்க்கு விச்சுக்கேடு ஆகாது என்று - பொய்யாகிய வோர் மரம் விதையின்றி நிர்மூலமாக அழியலாகாதென்று, இங்கு - இவ்வுலகத்தில், என்னை வைத்தாய் - என்னை (அதற்கு இலக்காக) வைத்தாய், இச்சைக்கு ஆனார் எல்லாரும் - உன் விருப்பத்துக் குரியராயினார் பலரும், வந்து உன் தாள் சேர்ந்தார் - வந்து உன் திருவடியை யடைந்தார்கள், அச்சத்தாலே - பிறவி அச்சமாகிய கடலில், ஆழ்ந்திடுகின்றேன் - யான் முழுகாநின்றேன், ஆரூர் - திருவாரூரிலெழுந்தருளி யிருக்கின்ற, எம்பிச்சைத்தேவா - எமது பிச்சாடநத் திருக்கோலங் கொண்டருளிய தேவனே, நான் என்செய்கேன் - அடியேன் என்ன செய்யக்கடவேன், பேசாய் - நீ சொல்லாய். எ-று.

(க-ரை.) இறைவனே! பொய்க்கு வேறொரு இடமில்லை யென்று என்னை யிங்கு வைத்தாய், உன் மெய்யன்பர் யாவரும் உன் திருவடியையடைந்தார்கள். நான் பிறவி அச்சமாகிய கடலில் மூழ்குதலன்றி வேறு என்செய்யக் கடவேன் என்பதாம்.

(வி-ரை.) வித்து என்பது விச்சு என நின்றது. விச்சுக்கேடு - வேரோடழிதல். விச்சு என்பது வித்தென்னும் பொருளதாயினு மீண்டு வேர் என்னும் பொருடோன்ற நின்றது. ஆழ்ந்திடுகின்றேன் என்றமையால் அச்சத்தைக் கடலாக்கி யுரைக்கலாயிற்று. அச்சத்தால் என்னும் மூன்றாவது ஏழாவதன் பொருளில் வந்தது. (அக)

பேசப்பட்டேனின்னடி
யாரிற்றிருநீறே
பூசப்பட்டேன்பூதல
ராலுன்னடியானென்

றேசப்பட்டேனினிப்படு
　　கின்றதமையாதால
ஆசைப்பட்டேனுட்பட்
　　டேனுன்னடியேனே.

(ப - ரை.) உன் அடியேன் - உன் தொண்டனாகிய நான், நின் அடியாரில் பேசப்பட்டேன் - உன்னடியார்களுள் ஒருவனென்று சொல்லப்பட்டேன், திருநீறு பூசப்பட்டேன் - சதாகாலமும் திருவெண்ணீற்றினால் தேகமுழுமையும் உத்தூளநம் செய்யப்பட்டேன், பூதலரால் - உலகத்தோரால், உன் அடியானென்று ஏசப்பட்டேன் - உன் அடியவனென்று இகழப்பட்டேன், இனிப்படுகின்றது அமையாதால் - இப்பொழுது படுந்துன்பம் போதாதாகையால், ஆசைப்பட்டேன் - (மேலும் நின்னை) விரும்பினேன், ஆட்பட்டேன் - உனக்கு அடிமையுமானேன். எ - று.

(க - ரை.) உன் அடியாருள் ஒருவனாகச் சொல்லப்பட்டேன், திருவெண்ணீற்றுத் தூளனமும் செய்யப்பட்டேன், இறைவனே ! உன் அடியவனென்று உலகத்தோரால் இகழப்பட்டேன், இவ்வளம் பற்றாதென்று மேலும் உனக்கு ஆசைப்பட்டேன், அடிமைப்பட்டேன், இன்னமும் யான் செய்யக்கூடியதென்னை என்பதாம்.

(வி - ரை.) இனி என்பது இப்பொழுது எனப்பொருள் படுதலை "பண்டறியேன் கூற்றென்பதனை இனி யறிந்தேன், பெண்டகையாற் பேரமர்க்கட்டு" என்னும் திருக்குறளுக்குப் பரிமேலழகர் கூறிய உரையாலும் அறிக. பூதலரால் உன்னடியானென்று ஏசப்படுதலாவது, உன்னடியாரோடு கூடி உன் திருச்சின்னமாகிய விபூதியை யணிந்தும் நான் நின் திருவருட் கிலக்காய் உன் திருவடிப்பேறடையாமல் இங்கு உழல்வதை நோக்கி இகழ்தல். (அஉ)

அடியேனல்லேன் கொல்லோ தானெனை
　　யாட்கொண்டிலை கொல்லோ
அடியாரானாரெல்லாரும்
　　வந்துன்றாள்சேர்ந்தார்
செடிசேருடலமிதுநீக்கமாட்டே
　　னெங்கள்சிவலோகா
கடியேனுன்னைக்கண்ணாரக்
　　காணுமாறுகாணேனே.

(ப - ரை.) அடியேன் அல்லேன் ஓ - நான்தொண்டனல்லனோ, தான் என்னை ஆட்கொண்டிலையோ - நீ அடியேனை அடிமை கொண்டிலையோ, அடியார்ஆனார் எல்லாரும் - உன் தொண்டரானார் எல்லாரும், வந்து உன் தாள் சேர்ந்

தார் - வந்துஉன் திருவடியை அடைந்தார்கள், செடிசேர் - பழிபாவங்களே திரண்ட, உடலம்இது - உடம்பாகிய இதனை நீக்கமாட்டேன் - நீக்கிக்கொள்ளும் ஆற்றலுடையேனல்லேன், எங்கள் சிவலோகா - எங்கள் சிவபுரனே, கடியேன் - கடிநசித்தத்தையுடைய நான், உன்னைக் கண்ணாரக்காணும் ஆறு காணேன்- உன்னைக் கண்குளிரப் பார்த்து மகிழும் உபாயத்தைக் கண்டிலேன். எ - று.

(க - ரை.) நான் உன் தொண்டனல்லேனோ, நீ யென்னையாட்கொண்டதுமில்லையோ, உன் அடியாரெல்லாரும் உன் திருவடியடையவும் நான் இந்த வுடம்பை யொழியாதிருக்கிறேன், கொடியேன் உன்னைக் காணும்வழி கண்டிலேன் என்பதாம்.

(வி - ரை.) " காமமைவென்றகண்ணோன்றில்லைப்பல்கதிரோனடைத்த, தாமரையில்லினிதழ்க்கதவந்திறந்தோதமியே, பாமரைமேகலைபற்றிச்சிலம்பொதுக்கிப்பையவே, நாமமையாமத்தென்னோவந்துவைகிநயந்ததுவே" என்னும் திருக்கோவையார் ககூச- ம் செய்யுளுரையில் நச்சினார்க்கினியர் " நாம் என்னும் முன்னிலை, உளப்பாட்டுத் தன்மை உயர்வு தோன்ற முன்னிலைக்கண் வந்தது" எனக்கூறியிருத்தல் போல, இங்கு " தானெனை யாட்கொண்டிலை கொல்லோ" என்னுந் தொடரில், தான் என்பது உயர்வுதோன்ற முன்னிலைக்கண் வந்ததாகக் கொண்டு நீ எனப்பொருள் சொல்லப்பட்டது. செடி - பாவம். கண்ணார - கண்ணிறையவெனினுமாம். ஆறு - வழி (அக)

காணுமாறுகாணேனுன்னை
யந்நாட்கண்டேனும்
பாணேபேசியென்றன்னைப்
படுத்ததென்னபரஞ்சோதி
ஆணேபெண்ணேயாரமுதே
யத்தாசெத்தேபோயினேன்
ஏணுணில்லாநாயினேனென்கொண்
டெழுகேனெம்மானே.

(ப - ரை.) உன்னை அந்நாள் கண்டேனும் - உன்னை (அரிமர்த்தன பாண்டியனிமித்தம் குதிரை வாங்கவந்த) அந்நாளில் கண்டவனாகிய நானும், காணும் ஆறு காணேன் - மீட்டும் உன்னைக் காண்பதற்குரிய வழியைக் கண்டிலேனாகி, பாணேபேசி - பயனில்லனவற்றையே பேசி, என்றன்னை - அடியேனை, படுத்தது - (இப்பிரபஞ்சவாசனையில) என்னைநானே அகப்படுத்திக்கொண்டதற்குக் காரணம், என்ன - என்ன பேதமை, பரஞ்சோதி - மேலான சுடரே, ஆணே - ஆண்வடிவே, பெண்ணே - பெண்வடிவே, ஆர் அமுதே- அரிய அமிர்தமே, அத்தா - ஐயனே, செத்தே போயினேன் - இறந்தேயொழிந்தேன், ஏண் நாண் - பெருமையாகிய நாணம், இல்லா நாயினேன் - இல்லாத நாயேன், என்கொண்டு எழுகேன் - யாது கொண்டு உயர்வேன், எம்மானே - எம்பெருமானே, எ - று.

(க - ரை.) அந்நாள் உன்னைக்கண்ட நான் இந்நாள் உன்னைக் காணும் வழி கண்டிலேன், யான் எப்படி உய்வேன் என்பதாம்.

(வி - ரை.) "அந்நாட் கண்டேனும் காணுமறு காணேன்" என்றது திருப்பெருந்துறையில் குருந்த மர நிழலில் அடியாரோடு வெளிப்பட்டு மறைந்ததை நினைத்து என்க. "தாயிற் சிறந்தன்று நாண்" என்றும், "நாணுடைமை மாந்தர் சிறப்பு" என்றும், "அணியன்றோ நாணுடைமை" என்றும், "நாணாலுயிரைத் துறப்பருயிர்ப் பொருட்டா - னாண்டுறவார் நாணாள்பவர்" என்றும். பலவிடத்தும் நாண் சிறப்பித்துக் கூறப்படுதலால் "ஏனாண்" என்றார். செத்தே போயினேன் என்பது இரக்கக்குறிப்பு. (அச)

மானேர்நோக்கியுடையாள்பங்கா
மறையீறறியாமறையோனே
தேனேயமுதேசிந்தைக்கரியாய்
சிறியேன்பிழைபொறுக்கும்
கோனேசிறிதேகொடுமைபறைந்தேன்
சிவமாநகர்குறுகப்
போனாரடியார்யானும்பொய்யும்
புறமேபோந்தோமே.

(ப - ரை) மான் நேர் நோக்கி - மானின் பார்வையையொத்த பார்வையையுடையவளாகிய, உடையாள் - பல்லாயிரகோடி யண்டங்களையு மாட்கொண்டருளிய வுமாதேவியாரது, பங்கா - பாகத்தையுடையவனே, மறை ஈறு - வேதாந்தமும், அறியா-உணரக்கூடாத, மறையோனே - அந்தணனே, தேனே-மதுவே, அமுதே - தேவாமிர்தமே, சிந்தைக்கு அரியாய் - மனத்துக்கும் வாக்குக்கும் எட்டுதலருமையானவனே, சிறியேன் பிழை - சிறியேனது குற்றத்தை, பொறுக்கும் - க்ஷமித்தருளுகின்ற, கோனே - தலைவனே, சிறிதே கொடுமை பறைந்தேன் - (உன் விஷயமாக) சில நிஷ்டூர வார்த்தைகளைச் சொல்லினேன், (அதனால்) யானும் பொய்யும் புறமே போந்தோம் - நானும் என்னிடத்துள்ள புறம்பாயினோம், அடியார் - உன்தொண்டர், சிவமாநகர் குறுகப் போனார் - சிவலோகப் பேற்றையடையப் போனார்கள். எ - று.

(க - ரை.) இறைவனே! உன் உண்மை அடியார் யாவரும் சிவபுரம் புக, நானும் பொய்யும் புறமானோம் என்பதாம்.

(வி - ரை.) மறை ஈறு அறியா என்பதற்கு - வேதங்களும் முடிவையறியாத என்றுரைத்தலுமாம். பறைதல் - சொல்லுதல். தாம் சிவலோகம் பேறடையாது புறமாயினாற்போலப் பொய்யும் புறமாயினமை தோன்ற, "யானும் பொய்யும் புறமே போந்தோம்" என்றருளினது சிவமாநகர் பொய் நடையாடாது மெய்யே நடையாடு மிட மாதலானென்க. "யானும் பொய்யும் புறமே

போந்தோம்'' என்று இத்திருப்பாட்டினும் வருந்திருப்பாட்டினும் கூறியது, "விச்சுக்கேடு பொய்க்காகா தென்றிங்கெனை வைத்தாய்'' என்றதை வலியுறுத் தற்கு. சிறிதே கொடுமை பறைந்தேன் என்றது "விச்சுக்கேடு பொய்க்காகா தென்றிங் கெனைவைத்தாய்'' "உன்னடியானென் றேசப்பட்டேன்'' "அடியே னல்லேன் கொல்லோதானென்னை யாட்கொண்டிலை கொல்லோ'' என்று தாம் கூறியதற்கு இரங்கி என்க. (அரு)

புறமேபோந்தோம்பொய்யும்
யானுமெய்யன்பு
பெறவேவல்லேனல்லா
வண்ணம்பெற்றேன்யான்
அறவேநின்னைச்சேர்ந்தவடியார்
மற்றொன்றறியாதார்
சிறவேசெய்துவழிவந்து
சிவனேநின்றாள்சேர்ந்தாரே.

(ப - ரை.) பொய்யும் யானும் புறமே போந்தோம் - பொய்யும் யானும் புறமாய்விட்டோம், மெய்யன்பு பெறவே வல்லேன் அல்லாவண்ணம் பெற் றேன் - உண்மை யன்பைப்பெறுமாற்றலைப் பெறாத வகையை யடைந்தேன், யான் அற - நான் என்னும் அகம்பாவமற்றொழிய, நின்னைச்சேர்ந்த அடியார் - உன்னை யடைந்த அடியார்கள், மற்றொன்று அறியாதார் - வேறொன்றை யறி யாதவர்களாய், சிறவேசெய்து - சிறப்பான காரியங்களையே செய்து, வழிவந்து - முறையாகவந்து, சிவனே - சிவபெருமானே, நின்தாள் சேர்ந்தார் - உன் திரு வடியை யடைந்தார்கள். எ - று.

(க - ரை.) இறைவனே ! பொய்யும் யானும் புறம்போந்தோம், உன் மெய் யடியார் உன் திருவடியை யடைந்தார் என்பதாம்.

(வி - ரை.) அற என்பதற்குப் பிறவித்தொடர்பு. அற்றொழிய எனினும் மிகுதியாக வெனினுமாம். வழிவராவிடின் தாள் சேர்தலருமை என்பது தோன்ற "வழிவந்து சிவனே நின்றாள் சேர்ந்தார்'' என்றருளினர். வழிவ ரல் - வழிபடல் எனினுமாம். (அசு)

தாராயுடையாயடியேற்
குன்றாளிணையன்பு
போராவுலகம்புக்காரடியார்
புறமேபோந்தேன்யான்

ஊராமிலைக்கக்குருட்டாமிலைத்திங்
குன்றாளிணையன்புக்
காராயடியேனயலே
மயல்கொண்டழுகேனே.

(ப - ரை.) ஊர் ஆ மிலைக்க - (கண்ணுள்ள) ஊர் பசுக்கள் (புல்லுள்ள புலங்களில்) மேய்வதற்கு வந்துகூட, குருடு ஆ மிலைத்து - (இனவொருமை யைப்பாராட்டி) குருட்டுப் பசுவும் (அவைபோப்ப) மேய்வதற்குவந்துகூடி (இருப்பதைப்போல), அடியார் - (உள்ளன்பாகிய கண்களையுடைய) உன்னன்பர்கள், போரா - மீட்டும் பிறவிக்கு வாராத, உலகம் - (அடைந்த பசுக்களைத் திருத்தி செய்து களிப்பிக்கும் புல் புலங்களையொத்த) முத்தியுலகத்துள், புக்கா - சென்று (பேரானந்த மடைந்தனர்), யான் - (அன்பாகிய கண்ணில்லாத குருட்டுப்பசுவை யொத்த) யானோ, புறம்போந்தேன் - (அவ்வாறின்றி முத்திவீட்டுக்குப்) புறமாயி னேன், (ஆயினும்) இங்கு - இவ்வுலகின்கண், உன் தாள்இணை அன்புக்கு-உன் உபயபாதங்களுக்குமேற் செய்யவேண்டுமன்புக்கு, ஆராய் - யாதுசம்பந்தத்தால், அடியேன் - தொண்டனேன், அயலே - அடியார்க்குப் புறத்தேநின்று, மயல் கொண்டு - உன்மீது விருப்பங்கொண்டு, அழுகேன்-ஆழாநின்றேன், (ஆதலால்) உடையாய் - (சர்வத்திலுஞ் சர்வசுதந்தரம்) உடையவனே, அடியேற்கு - அடி யேனுக்கு, உன் தாள் இணை அன்பு-உன் இரு பாதாம் புயங்களுக்கு மெய்யன்பு செய்யும் பேறொன்றனையேனும், தாராய் - கொடுத்தருளாய். எ - று.

(க - ரை.) இறைவனே ! அடியேன் உன்திருவடிக் கன்புசெய்யும்படித் திருவருள்சுரத்தல் வேண்டும். அடியார் முத்தியுலகமடைய, யான் புறம்போந் தழுகின்றேன், அன்றியும், ஊர்ப்பசுக்கள் மேய்தற்குவந்துகூட புல்லிருக்குமிட மறிந்துமேயுமாற்றலில்லாத குருட்டுப்பசுவும் வந்ததுபோல, அன்பர் உன்திருவ டிகளுக் கன்புசெய்ய, நானும் யாதுசம்பந்த முடையவனென்றோ அன்புசெய்ய விரும்பி யழுவது என்பதாம்.

(வி - ரை.) கண்ணுள்ள பசுக்கள் புல்லுள்ள நிலங்களில் மேயப்போக, அதே இனமாகிய கண்ணில்லாத குருட்டுப்பசுவும் அவற்றின் சாடையைக் கண்டு அதனோடு பின்செல்வதொப்ப, அன்பாகிய (உட்) கண்ணுள்ள அடியார் புல்நிலத் தையொக்கும் முத்தி வீடடைய அன்பில்லாக்குருடனாகிய யான் அவர்கள் சாய லைக்கண்டு பின்சென்று அம்முத்தி வீட்டுக்குப் புறமேயாயினேன். எந்த சம்பந் தங்கொண்டோ யானும் அன்புசெய்ய விரும்பி யழுவது அறியேன், ஆதலால் சர்வ சுதந்தரமுடைய தேவரீர் அடியேனுக்கும் உன் திருவடிக்கண் அன்பை அருளிச்செய்வாய், என்பதற்கு "ஊராமிலைக்கக் குருட்டா மிலைத்திங்குன்றாளி ணை யன்புக்கு ஆராயடியேன் அயலே மயல்கொண்டழுகேனே" என்றார். ஆராய் என்றதற்கு யாவனாகி எனினுமாம். (அஎ)

அழுகேனின்பாலன்பா
மனமாயழல்சேர்ந்த
மெழுகேயன்னார்மின்னார்
பொன்னார்கழல்கண்டு
தொழுதேயுன்னைத்தொடர்ந்தா
ரோடும்தொடராதே
பழுதேபிறந்தேனென்கொண்
டுன்னைப்பணிகேனே.

(ப - ரை.) அழல் சேர்ந்த மெழுகே அன்னார் - நெருப்பி லிட்ட மெழுகு போலுருகுகின்றவர்களாய், மின் ஆர் - ஒளிநிறைந்த, பொன் ஆர் கழல் கண்டு - பொன்போலுமழகிய உன் திருவடியைப்பார்த்து, தொழுதே உன்னைத்தொடர்ந்தாரோடும் - வணங்கி உன்னைத்தொடர்ந்து பற்றின மெய்யன்பர்களோடும், தொடராது - பின்பற்றிச்செல்லாமல், நின்பால் அன்பு ஆம் மனம் ஆய் - உன்னிடத்தன்புள்ள மனமுடையவனைப் போல, அழுகேன் - அழாநின்றேன், (ஆகலால்) பழுதே பிறந்தேன் - வீணே பிறந்தவனாகிய நான், என்கொண்டு உன்னைப் பணிகேன் - எதைக்கொண்டு உன்னை வணங்குவேன், எ - று.

(க - ரை.) இறைவனே ! நெருப்பிலிட்ட மெழுகுபோலுருகும் மனத்தினையுடைய மெய்யடியாரனைவரும் உன்னைத்தொழுது தொடர்ந்தார்கள், உன்னிடத்துச் சிறிதுமன்பில்லாத நான் என்கொண்டு உன்னைத் தொழுவேன் என்பதாம்.

(வி - ரை.) தொடர்தல் - பின்பற்றிச்செல்லுதல், அவ்வாறு பின்பற்றிச் செல்லுதலில்லாமையால் "பழுதே பிறந்தேன்" என்றும் "அன்பில்லாமையால்" என்கொண்டுன்னைப் பணிகேன், என்றும் அருளிச் செய்தனர். (அஅ)

பணிவார்பிணிதீர்த்தருளிப்
பழையவடியார்க்குன்
அணியார்பாதங்கொடுத்தி
யதுவுமரிதென்றால்
திணியார்மூங்கிலனையேன்
வினையைப்பொடியாக்கித்
தணியார்பாதம்வந்தொல்லை
தாராய்பொய்தீர்மெய்யானே.

(ப - ரை.) பொய் தீர் மெய்யானே - பொய் கலவாத மெய்யனே, பணிவார் - வணங்குபவர்களாகிய, பழைய அடியார்க்கு - பழைமையாகிய தொண்டர்களுக்கு, பிணி-பிறவித்துன்பத்தை, தீர்த்தருளி - நீக்கியருளி, உன் - உனது

அணிஆர் - அழகு பொருந்திய, பாதம் - திருவடியை, கொடுத்தி - தருகின்றாய், அதுவும் அரிது என்றால்-அவ்வாறு கொடுத்தலும் அரிதாயின், (எனக்குக் கொடுத்தல் அருமையென்பதர்க்கையமே யில்லை, ஆயினும் எனக்கு உன்னை யன்றி வேறு புகலிட மில்லாமையால்) திணி ஆர் - வலிமைபொருந்திய, மூங்கில் அனையேன் - மூங்கிலையொத்தவனாகிய எனது, வினையை - கர்மங்களை, பொடி ஆக்கி - நீறாகச்செய்து, ஒல்லைவந்து - விரைவில்வந்து, தணிஆர்பாதம் தாராய்-தண்மை பொருந்திய உன் திருவடியைக் கிருபை செய்வாய், எ - று.

(க - ரை.) இறைவனே ! உன்னிடத்து உண்மையன்புடைய மெய்யடியவர்கட்கே பிறவிப்பிணியை நீக்கி உன் திருவடியைத் தந்தருள்வது அருமையானால், வஞ்சமனத்தை யுடையவனாகிய என் வினைகளை நீறாக்கி உன் திருவடியை எனக்குத் தந்தருள்வது அருமையே, ஆயினும் எனக்கு உன்னை அன்றி வேறு துணையில்லாமையால் என்னை எவ்விதத்தினும் திருத்தி யாட்கொண்டு உன் திருவடிப் பேற்றைத் தந்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) தாபத்திரயமாகிய வெயிலால் வருந்தின உயிர்களுக்கு நிழலைச்செய்தலால், திருவடியைத் "தணியார் பாதம்" என்றார். தாபத்திரயம் - முத்தாபம், அவை - ஆதியாத்மிகம், ஆதிபௌதிகம், ஆதிதைவிகம் என்பன. மூங்கிலனையேனென்றது - எவ்வகைப்பட்ட மூங்கிலும் கோணுதலாகிய வியற்கையை யுடையனபோல, மனமுங் கோணுதலுடையேனென்பதை விளக்கற்கெனினும், மூங்கில் அதிக வுயர்வுள்ளதாயினும் இடையிடையே பல கணுக்களும் உள்ளிடத்தே, உள்ளீடு அதாவது (வயிரம்) இன்றிபோலாந் தன்மையராய் சிற்றலைப்போல யானுமோரன்பனைப் போல வெளிக்குக்காட்டி னின்றாலும் என் மனத்துள் சிறிதுமன்பிலே னென்பதை விளக்கற்கெனினுமமையும். (அக)

யானேபொய்யென்னெஞ்சும்
பொய்யென்னன்பும்பொய்
யானால்வினையேனழுதா
லுன்னைப்பெறலாமே
தேனேயமுதேகரும்பின்
றெளிவேதித்திக்கும்
மானேயருளாயடியே
னுனைவந்துறுமாறே.

(ப - ரை.) யானே பொய் - நானே பொய்மையுடையேன், என் நெஞ்சும் பொய் - என் மனமும் வஞ்சமுடையது, என் அன்பும் பொய் - என்னிடத்துண்டாகு மன்புமுழுவதும் பொய், ஆனால் - இப்படியாயின், வினையேன் - தீவினையினேன், அழுதால் - வீணேயிரங்கினால், உன்னைப் பெறலாமே - உன்னை யடையலாமோ, தேனே - மதுவே, அமுதே - அமிர்தமே, கரும்பின்தெளிவே - கருப்பஞ்சாற்றின் தேறலே, தித்திக்கும்-(அடியார்களுக்கு

இனிக்கின்ற, மானே - பெரியோனே, அடியேன் - தொண்டனேன், உன்னை வந்து உறும் ஆறு - உன்னைவந்தடைந்து துதிக்கும் வண்ணம், அருளாய் - கிருபைசெய்வாய். எ - று.

(க - ரை.) இறைவனே! நானும் என் மனமுதலியவும் பொய்ம்மையுடையனவானால், உன்னை யெப்படி யடைவேன், நான் உன்னைப் பெறும்வழியை எனக்கறிவித்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) உண்மைவடிவனாகிய சிவபெருமான் பொய்யன்பினர்க்குத் திருவருள் புரிகிலனென்பார், "யானே பொய்யென்னெஞ்சு பொய் யென்னன்பும் பொய்யானால் வினையே னழுதாலுன்னைப் பெறலாமே" யென்றருளினர். மான் - இது மஹா என்னும் வடமொழிச் சிதைவு. (கo)

---

## கo - வது ஆனந்தாதீதம்.

அதாவது

உபசாந்தநிலையினிற்றல்.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

மாறிலாதமாக்கருணைவெள்ளமே
 வந்துமுந்திநின்மலர்கொடாளிணை
வேறிலாப்பதப்பரிசுபெற்றநின்
 மெய்ம்மையன்பருன்மெய்ம்மைமேவினார்
ஈறிலாதநீயெளியையாகிவந்
 தொளிசெய்மானுடமாகநோக்கியும்
கீறிலாதநெஞ்சுடையனாயினேன்
 கடையனாயினேன்பட்டகீழ்மையே.

(ப - ரை.) மாறு இல்லாத - மாறுபடுதலில்லாத, மா - பெருமை பொருந்திய, கருணை வெள்ளமே - அருட்சாகரமே, முந்தி வந்து - முற்பட்டுவந்து, நின் - உனது, மலர்கொள் - தாமரைமலரின் அழகினைக்கொண்ட, தாள் இணை - இரண்டு திருவடியினின்றும், வேறு இலா - வேறுபடுதல் இல்லாத, பதப்பரிசு பெற்ற - பக்குவத்தையடைந்த, நின்மெய்ம்மை அன்பர் - உன் மெய்யடியார்கள், உன் மெய்ம்மை மேவினார் - உன் உண்மை நிலையை யடைந்தார்கள், ஈறு இல்லாத நீ - முடிவற்ற நீ, ஒளிசெய் மானுடமாக - ஒளி செய்கின்ற மானுடரூபமாக, எளியை ஆகிவந்து - எளியையாய் எழுந்தருளி, நோக்கியும் - என்னைக் கடாக்ஷித்தும், கீறு இல்லாத - பிளவுபடாத (உருகாத), நெஞ்சு உடைய - மனத்

தையுடைய, நாயினேன் - நாயேன், கடையன் ஆயினேன் - கடைப்பட்டவன் ஆனேன், (இங்ஙனம் நான் கடைப்பட்டதற்குக் காரணம்) பட்ட - என்னிடத்துண்டாகிய, கீழ்மையே - தீவினையேயாம். எ - று.

(க - ரை.) இறைவனே! உன் மெய்யன்பர் முந்திவந்து உன் திருவடிக்கன்புசெய்து உன் மெய் நிலையை யடைந்தார்கள். முடிவில்லாத பெரியோனாகிய நீ யெளியையாகி யெழுந்தருளி என்னைக் கடைக்கணித்தும் மனமுருகாத நான் கடைப்பட்டேன், இது என் தீவினைப்பயனேயாம் என்பதாம்.

(வி - ரை.) இறுதிக்காலத்து நிலைபெயரும் மற்றைய கடல்கள்போலாது, என்றும் ஒரு தன்மையாய் நிலைநிற்கும் அருட்கடலாதலால், "மாறிலாத மாக்கருணை வெள்ளமே" என்றருளினர். "எளியையாகி வந்தொளிசெய் மானுடமாக நோக்கியும்" என்றது திருப்பெருந்துறையில் குருமூர்த்தமா யெழுந்தருளின வரலாற்றைக் குறித்தது. மாறிலாத என்பதற்கு - ஒப்பில்லாத என்றுரைத்தலுமாம்.

இத்திருப்பதிகம் திருப்பெருந்துறையில் இறைவனுடன் வந்த சிவகணங்கள், அவனது கட்டளைப்படி அக்கினிப்பிரவேசமாகி மானுட சரீரத்தை யொழித்துப் பழையபடி சிவகணங்களாய்ச் சிவலோகத்திற் புகுந்த வரலாற்றைக் கருத்துட்கொண்டு செய்தருளியது. "நின்மெய்ம்மையன்பர் உன்மெய்ம்மை மேவினார்" என்றது சிவகணங்கள் சிவலோகம்புக்க செய்தியைக் குறிக்கின்றது. இதன் விரிவெல்லாம் இவரது புராணத்திற் கண்டுகொள்க. (௧௧)

மையிலங்குநற்கண்ணிபங்கனே
வந்தெனைப்பணிகொண்டபின்மழக்
கையிலங்குபொற்கிண்ணமென்றலா
லரியையென்றுனைக்கருதுகின்றிலேன்
மெய்யிலங்குவெண்ணீற்றுமேனியாய்
மெய்ம்மையன்பருன்மெய்ம்மைமேவினார்
பொய்யிலங்கெனைப்புகுதவிட்டுநீ
போவதோசொலாய்பொருத்தமாவதே.

(ப - ரை) மை இலங்கும் - அஞ்சனந்தீட்டப்பெற்று விளங்குகின்ற, நல் - அழகான, கண்ணி - கண்களையுடையவளாகிய உமாதேவியை, பங்கனே - இடது பாகத்திலுடையவனே, வந்து என்னை பணிகொண்டபின் - வந்து என்னையடிமைகொண்ட பின்னர், மழக்கை இலங்கு - மிருதுவாகிய கையினிடத்து விளங்குகின்ற, பொன்கிண்ணம் என்று அல்லால் - பொன்னினாற் செய்த வட்டிலென்று நினைப்பதல்லது, அரியை என்று - அருமையுடையாயென்று, உன்னை கருதுகின்றிலேன் - உன்னை நினைத்திலேன், மெய் இலங்கு - திருமேனியில் விளங்குகின்ற, வெண்ணீறுமேனியாய் - திருவெண்ணீற்றால். சண்ணித்த

அழகையுடையவனே, மெய்மை அன்பர் - உன்மெய்யடியார்கள், உன்மெய மை மேவினர் - உன் மெய்நிலையை யடைந்தார்கள், என்னை பொய்யில் புகுத விட்டு - அடியேனை இந்தப் பொய்யுலகில் இருக்கும்படிசெய்து, நீ அங்குபோவ தோ - நீ அவ்விடத்துப் போய்விடுவதுதானோ, பொருத்தமாவது - உனக்குத் தகுதியாவது, சொல்லாய் - பேசுவாயாக. எ - று.

(க - ரை) இறைவனே! நீயேஎழுந்தருளி வந்து என்னை ஆட்கொண்ட பிறகு, உன்னை எளிதாய் நினைத்தேயன்றி அரிதாய் நினைத்தேனில்லை. ஆயினு ம் உன் மெய்யடியார் உன் உண்மை நிலையையடைய, நானொருவனுமே இந்த வுலகத்தில் ஏங்கியிருக்கும்படி செய்து நீ போவது உனக்குத் தகுதியாமோ வென்பதாம்.

(வி - ரை.) மை - கருமையெனினுமாம். வந்து என்றது நீயே வலிய வந்து என்றபடி. கையிற்கிடைத்தபொருளின் மேன்மையும் கிடைத்த வெளி மையும் தோன்ற, கரதலாமலகம் என்று (உள்ளங்கை நெல்லிக்கனியென்று) சான்றோர் பலருங்கூறுதல் பெருவழக்கு, அதுபோல இவரும் பொற்கிண்ணத் தின் அருமையும் தம்கையிற் கிடைத்த வெளிமையும் தோன்றுதற்கு, "கையில ங்கு பொற்கிண்ணமென் றலாலரியை யென்றுனைக் கருதுகின்றிலேன்" என் றருளினர். (கஉ)

பொருத்தமின்மையேன்பொய்ம்மையுண்மையேன்
போதவென்றெனைப்புரிந்துநோக்கவும்
வருத்தமின்மையேன்வஞ்சமுண்மையேன்
மாண்டிலேன்மலர்க்கமலபாதனே
அரத்தமேனியாயருள்செயன்பரும்
நீயுமங்கெழுந்தருளியிங்கெனை
இருத்தினாய்முறையோவெனெம்பிரான்
வம்பனேன்வினைக்கிறுதியில்லையே.

(ப - ரை.) பொருத்தம் இன்மையேன் - நான் உன்னருட்குப் பாத்திரம ல்லாதவன், பொய்மை உண்மையேன் - பொய்மையை யுடையேன், (அங்ஙன மாகவும்) போத என்று - வரக்கடவாயென்று, என்னை - அடியேனை, புரிந்து நோக்கவும் - (நீ) கிருபை பாலித்துப் பார்க்கவும், (அப்படி நீ நோக்கி ன வுபகாரத்தை நினைத்து) வருத்தம் இன்மையேன் - வருந்துதலில்லாதேன், வஞ்சம் உண்மையேன் - வஞ்சகத்தையுடையேன், மாண்டிலேன் - செத்திலே ன், கமலமலர்பாதனே - தாமரைமலர்போன்ற திருவடியையுடையானே, அரத் தமேனியாய் - செவ்வரத்தமலர்போன்ற திருமேனியையுடையவனே, அருள் செய் - நீ யருள் செய்யப்பெற்ற, அன்பரும் - அடியார்களும், நீயும் - நீயும், அங்கு எழுந்தருளி - சிவபுரமாகிய அவ்விடத்துக்கு எழுந்தருளி, என்னை -

அடியேனை, இங்கு இருத்தினாய் - இவ்விடத்திலிருக்கவைத்தாய், முறையோ - இது உனக்கு முறைமையோ, என் எம்பிரான் - எனதுதலைவனே, வம்பனேன் வினைக்கு இறுதி இல்லையே - வம்பனேனது பாபகர்மங்களுக்கு ஒரு முடிவில்லையோ. எ - று.

(க - ரை.) இறைவனே! பொய்யனாகிய என்னை நீ கிருபைவைத்து நோக்கவும், நோக்கின வுபசாரத்தை நினைந்து நான் வருந்தி மாண்டிலேன் உன் அன்பரும் நீயும் சிவபுரத்துக் கெழுந்தருளி என்னை இவ்வுலகத்தில் இருத்துதல் உனக்கு முறைமையோ என்பதாம்.

(வி - ரை.) பொருத்தம் - தகுதி. போத என்பது-புகுத என்பதன் மரூஉ. புரிதல்-விரும்புத லெனினுமாம். மலர்க்கமலம் - மலர்தலையுடைய கமல மெனினும்மையும். அங்கு என்றது. பிரமாதி தேவர்கட்குங் கிடைத்தலருமையாகிய சிவலோகத்தை. (௯௫)

இல்லைநின்கழற்கன்பதென்கணே
        யேலமேலுநற்குழலிபங்கனே
கல்லைமென்கனியாக்குமவிச்சைகொண்
        டென்னைநின்கழற்கன்பனாக்கினாய்
எல்லையில்லைநின்கருணையெம்பிரா
        னேதுகொண்டுநானேதுசெய்யினும்
வல்லையேயெனக்கின்னுமுன்கழல்
        காட்டிமீட்கவுமறுவில்வானனே.

(ப - ரை.) நின்கழற்கு அன்பு - உன்திருவடிக்கண்ணே செய்தற்குரிய உண்மைபண்பு, என் கண் இல்லை - என்னிடத்தில் கிஞ்சிற்றுமில்லை, ஏலம் ஏலும் - மயிர்ச்சாந்தணிந்த, நல்குழலி - அழகிய கூந்தலையுடையாளாகிய உமாதேவியை, பங்கனே - பாகத்திலுடையவனே, கல்லை மென்கனிஆக்கும் விச்சை கொண்டு - மேருமலையைக் குழைபச் செய்த வித்தையினால், என்னைநின்கழற்கு அன்பன் ஆக்கினாய் - என்னையும் உன் திருவடிக் கடிமையாக்கினாய், எம்பிரான் - எம்பெருமானே, ஏதுகொண்டு நான் ஏது செய்யினும் - நான் எப்பொருள்கொண்டு யாது செய்தாலும், நின் கருணை எல்லை இல்லை - உன்பெருங்கருணைக் கோபளவில்லை (ஆதலால்), மறு இல் வானனே, களங்கமில்லாத சிதாகாயத்தையுடையவனே, இன்னும் - இன்னமும், எனக்கு - அடியேனுக்கு, உன்கழல் - உன் திருவடியை, காட்டி-காண்பித்து, மீட்கவும் வல்லை - என்னை இப்பிறவிப் பிணிப்பினின்றும் நீக்கியருளவும் வல்லாய். எ - று.

(க - ரை.) இறைவனே! எனக்கு உன்திருவடிக்கண் அன்பில்லையாகவும் கல்லைக் குழைத்த வித்தையைக்கொண்டு என்னைத் திருத்தி உன் திருவடிக்கு அன்பனாக்கினாய், ஆதலால் உன் கருணைக்கோரெல்லையில்லை என்பதாம்.

(வி - ரை.) கல்லை மென்கனியாக்கும் விச்சை - மேரு மலையை வில்லாக வளைத்த வித்தை "தெவ்வரை மெய்யெரிகாய் சிலையாண்டென்னை யாண்டுகொண்ட செவ்வரை மேனியன்" என்னும் திருக்கோவையார்க்கும் இதுவே கருத்து, இப்படி சொல்லியதனால் வலிய பொருள்களை வளைத்துப் பழகின பிறகு வன்மனத்தினனாகிய என்னை வளைத்தாண்டருளினன் எனக்கொள்க. எதுகொண்டு நான் எதுசெய்யினும் என்றது மனமுதலாகிய கருவிகளைக்கொண்டு என்ன தீமைசெய்தாலும் என்றபடி. மீட்டல்-தீ நெறியினின்றுந்திருப்புதல். வானன் - முத்தியுலகை யுடையவன் எனினுமாம். (கச)

வானநாடருமறியொணாதநீ
மறையிலீறுமுன்றொடரொணாதநீ
ஏனநாடருந்தெரியொணாதநீ
யென்னையின்னிதாயாண்டுகொண்டவா
வூனைநாடகமாடுவித்தவா
வுருகிநானுனைப்பருகவைத்தவா
ஞானநாடகமாடுவித்தவா
நையவையகத்துடையவிச்சையே.

(ப - ரை.) வானநாடரும் - விண்ணுலகத்தவராலும், அறியொணாத நீ - உணரப்படாத நீ, மறையின் ஈறும்-வேதாந்தத்தாலும், முன் - அநாதியாகவே, தொடரொணாதநீ - எட்டப்படாதநீ, ஏனநாடரும் - மற்றையண்டத்தவராலும், தெரியொணாத நீ - அறியப்படாத நீ, என்னை - அடியேனை, இன்னிதாய் - இனிதாக, ஆண்டுகொண்ட ஆறு - அடிமைகொண்ட விதமும், ஊனை-என்னுடம்பை, நாடகம் ஆடுவித்தஆறு - நாடகமாட்டுவித்த விதமும், நான் - அடியேன், உருகி - மனங்கரைந்து, உன்னை பருகவைத்த ஆறு - உன்னை யநுபவிக்கவைத்த விதமும், ஞானநாடகம் ஆடுவித்த ஆறு - (அவ்வநுபவத்துக்குக் கருவியாகிய ஞானத்தா லுண்டாகிய ஆநந்தத்தால்) நடநம் செய்வித்த விதமும், வையகத்துடை அவிச்சை - பிரபஞ்ச சம்பந்தமான அஞ்ஞானம், நைய - எனக்கு நீங்குதற்கேயாம், எ - று.

(க - ரை.) இறைவனே ! தேவர் முதலானோர்க்கும் அரியவனாகிய நீ அடியேனை ஆட்கொண்டவண்ண முதலாயினவற்றை நோக்குமிடத்தில், எனக்கு இவ்வுலக சம்பந்தமான அஞ்ஞானம் அழிதற்கேயாமென்பதாம்.

(வி - ரை.) வானநாடர் எனத் தேவரை முற்கூறியது சிறப்பு நோக்கி. ஏனநாடர் என்றது பூலோகம் பாதாளலோகம் என்பவற்றிலுள்ளாரை. வையகத்துடைய இச்சை எனப்பிரித்து உலகத்தின் மீதுள்ள ஆசை என்றுரைத்தலுமாம். (கரு)

விச்சதின்றியேவிளைவுசெய்குவாய்
விண்ணுமண்ணகமுழுதும்யாவையும்
வைச்சுவாங்குவாய்வஞ்சகப்பெரும்
புலையனேனையும்கோயில்வாயிலில்
பிச்சனாக்கினாய்பெரியவன்பருக்
குரியனாக்கினாய்தாம்வளர்த்ததோர்
நச்சுமாமரமாயினுங்கொலார்
நானுமங்ஙனேயுடையநாதனே.

(ப - ரை.) விண்ணும் - விண்ணுலக முழுதும், மண்ணக முழுதும் - மண்ணுலகமுழுதும், யாவையும் - மற்றெல்லா வுலகங்களையும், விச்சது இன்றியே விளைவுசெய்குவாய் - வித்தில்லாமலே உண்டாக்குவாய், வைச்சு-காத்து, வாங்குவாய் - அழிப்பாய், வஞ்சகம்-வஞ்சகத்தையுடைய, பெரும்புலையனேனை-பெரும்புலையனாகிய என்னை, உன் கோயில் வாயிலில்-உன்திருக்கோயில்வாயிற்படியி லுழன்றுதிரியும்படியான, பிச்சன் ஆக்கினாய் பித்தனாகச்செய்தாய், பெரிய அன்பருக்கு - உன் பேரன்புடைய தொண்டருக்கு, உரியன் ஆக்கினாய் - உரியவனாகச்செய்தாய், (உலகத்தார்) தாம்வளர்த்தது - தம்மால் வளர்க்கப்பட்டது, ஓர்நச்சுமாமரம் ஆயினும்-ஒரு நச்சுமா மரமேயானாலும், கொல்லார்-அதை வெட்டமாட்டார்கள், உடையநாதனே-என்னையாட்கொண்ட தலைவனே, நானும்-அடியேனும், அங்ஙனே - அம்மரத்தை யொப்பவனே. எ - று.

(க - ரை.) இறைவனே! சகலாண்டங்களையும் வித்தில்லாமல் சிருட்டித்துக் காத்துச் சங்கரிப்பவனே! என்னை உன் கோயில் வாயிலில் பித்தனைப்போலத்திரியச்செய்து, உன் அன்பரது திருப்பணிக்கும் உரியேனாகச் செய்தனை, உலகத்தார் தாம்வளர்த்த எட்டி மரத்தையும் வெட்டார்கள், (அதுபோல) அடியேனும் உனக்கு அத்தன்மையேன் என்பதாம்.

(வி - ரை.) "தாம் வளர்த்ததோர் நச்சுமா மரமாயினுங் கொல்லார்" என்பதற்கு உலகத்தார் என்பது எழுவாயாக வருவித்துக்கொள்ளப்பட்டது. நஞ்சு - விடம், அது நச்சு என வலித்தல் பெற்றது. நச்சுமாமரம் - எட்டிமரம். அல்லது விஷத்தன்மையுள்ள மாமரம். (கக)

உடையநாதனே,போற்றிநின்னலாற்
பற்றுமற்றெனக்காவதொன்றினி
உடையனேபணிபோற்றியும்பரார்
தம்பராபராபோற்றிபாரினும்

கடையனாயினேன்போற்றியென்பெருங்
கருணையாளனேபோற்றியென்னைநின்
அடியனாக்கினாய்போற்றியாதியு
மந்தமாயினாய்போற்றியப்பனே.

(ப - ரை.) அப்பனே - உபகார சீலனே, உடையநாதனே போற்றி - என்னையாட்கொண்ட தலைவனே உனக்கு நமஸ்காரம், நின் அல்லால் - உன்னையன்றி, எனக்கு - அடியேனுக்கு, மற்றுபற்று ஆவது ஒன்று - வேறு ஆதாரமாவதாகிய ஒரு பொருளை, இனிஉடையனோ - இனிமடையப் பெறுவேனோ, பணி - சொல்வாயாக, போற்றி - (ஆதலால் உனக்கு) நமஸ்காரம், உம்பரார்தம் பராபரா போற்றி-எல்லாத்தேவர்கட்கு மேல்பட்டமகாதேவனே நமஸ்காரம்,யாரினும் கடையன் ஆயினேன் போற்றி-நானோ எல்லாரினும் கடைப்பட்டவனாயினேன் நமஸ்காரம், என் பெருங்கருணையாளனே போற்றி - எனது பெரிய கிருபாசமுத்திரமே நமஸ்காரம், என்னை நின் அடியன் ஆக்கினாய் போற்றி - என்னை உன்தொண்டனாகச்செய்தாய் உன்பொருட்டு வணக்கம், ஆதியும் அந்தமும் ஆயினாய் போற்றி-முதலும் இறுதியும் ஆயினவனே நமஸ்காரம். எ - று

(க - ரை.) இறைவனே! உன்னையன்றி எனக்கு வேறொரு பற்றில்லை, உனக்கு வணக்கஞ் செய்கிறேன், என்னைக்காத்தருளல் வேண்டும் என்பதாம்.

(க - ரை.) உடைய என்றதற்கு சராசரப்பொருள்களனைத்தையுமுடையவெனவும் பொருள்படும். கருணையாளன் என்றதற்குக் கருணையை ஆளுதலுடையானெனவும் பொருள்படும். (கஎ)

அப்பனேயெனக்கமுதனேயா
னந்தனேயகநெகவள்ளூறுதேன்
ஒப்பனேயுனக்குரியவன்பரி
லுரியனாயுனைப்பருகநின்றதோர்
துப்பனேசுடர்முடியனேதுணை
யாளனேதொழும்பாளரெய்ப்பினில்
வைப்பனேயெனைவைப்பதோசொலாய்
நையவையகத்தெங்கண்மன்னனே.

(ப - ரை.) எனக்கு அப்பனே - எனக்குத் தந்தையே, அமுதனே - அமிர்தம் போல்பவனே, ஆநந்தனே - சுகரூபமா யிருப்பவனே, அகம்நெக - அடியேனது மனமுருகும்படி, வள் ஊறு - மிகுதியும் சுரக்கின்ற, தேன் - தேனை, ஒப்பனே - நிகர்த்திருப்பவனே, உனக்கு உரிய அன்பரில் - உனக்குரியராகிய அடியார்களைப்போல, உரியனாய் - நானும் உரிமைப் பாடுடையவனாய், உன்னைப் பருக-உன்னையநுபவிக்கும்படி, நின்றது நின்றதாகிய, ஒரு துப்பனே - ஒப்பில்

லாதஅறிவுருவனே, சுடர்முடியனே - பிரகாசியா நின்றதிருமுடியை யுடையவனே, துணையாளனே-சகாயபூதனே, தொழும்பாளர்-அடியார்களுடைய, எய்ப்பினில் - இளைத்த காலத்தில், வைப்பனே - பழைய நிட்சேபம்போல்பவனே, எங்கள் மன்னனே - எம்மரசே, வையகத்து - உலகமாயையில், என்னை நையவைப்பதோ - என்னை வருந்தும்படி வைப்பது (உனக்குத் தகுதியாமோ), சொல்லாய்-சொல்வாயாக. எ - று.

(க - ரை.) இறைவனே! என்னை உனக்கடிமையாயின பின்னும் இவ்வுலகத்தில் வைத்து வருத்துவது உன்பெருமைக்குத் தகுதியோ என்பதாம்.

(வி - ரை.) அள் ஊறு தேன் ஒப்பனே எனப்பிரித்துச் செவிகளுக்குச் சுரக்கின்ற தேனை நிகர்த்தவனே என்றலுமாம். அள்-செவி. துப்பன் என்பதற்கு உணவாயிருப்பவனெனவும் பொருள்சொல்வது மொன்று. வைப்பு - சேமித்துவைத்தபொருள். (கஅ)

மன்னவெம்பிரான்வருகவென்னனை
மாலுநான்முகத்தொருவன்யாரினும்
முன்னவெம்பிரான்வருகவென்னனை
முழுதும்யாவையுமிறுதியுற்றநாள்
பின்னவெம்பிரான்வருகவென்னனைப்
பெய்கழற்கணன்பாயெனுவினுல்
பன்னவெம்பிரான்வருகவென்னனைப்
பாவநாசநின்சீர்கள்பாடவே.

(ப - ரை.) எம்பிரான் - எம்பிரானே, மன்ன - (எக்காலு மொருதன்மைத்தாய் நான்) நிலைபெற்றிருக்க, என்னை வருக என் - என்னை வாவென்றழைத்தருள்க, மாலும் - திருமாலும், நான்முகத்து ஒருவன் - பிறமனும் ஆகிய, யாரினும் - எல்லாத்தேவரினும், முன்ன - முதல்வனே, எம்பிரான் - எமது பெருமானே, என்னை வருக என் - என்னை வாவென்றழைத்தருள்க, யாவையும் - எல்லாப்பொருள்களும், முழுதும் - அடியோடே, இறுதி உற்றநாள் - நாசமடைந்த காலத்திலும், பின்ன - பிந்தியிருப்பவனே, எம்பிரான் - எம்பிரானே, என்னை வருகஎன் - என்னை வாவென்றழைத்தருள்க, பெய்கழற்கண் - வீரக்கழலையணிந்த உன் திருவடியினிடத்து, அன்பு ஆய் - அன்புடையேனுகி, என் நாவினுல் பன்ன - என் நாவைக்கொண்டு உன் திருநாமங்களைத் துதிக்கவும், எம்பிரான்-எம்பிரானே, பாவநாச - பாபங்களை நசிப்பிப்பவனே, நின் சீர்கள் பாட-உன்பெருமைகளைப் புகழ்ந்து பாடவும், என்னை வருகஎன் - என்னை வாவென்றழையாய்.

(க - ரை.) எம்பிரானே! உன்னருகிலிருந்து உன்புகழ்களைப் பாடுதற்கு என்னை வருக வென்றருள் செய்தல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) மன்ன - தலைவனே எனினுமாம் முன்ன பின்ன என்றது - முன்னுள்ளவனே பின்னுள்ளவனே என்றபடி. இதனை, "மூப்பானிளையவன் முன்னவன் பின்னவன் என்றுந் திருவாக்கானுமுணர்க. பன்னுதல்-பலகாற் சொல்லுதல். (கக)

பாடவேண்டுநான்போற்றிநின்னையே
பாடிநைந்துநைந்துருகிநெக்குநெக்
காடவேண்டுநான்போற்றியம்பலத்
தாடுநின்கழற்போதுநாயினேன்
கூடவேண்டுநான்போற்றிப்புழுக்
கூடுநீக்கெனைப்போற்றிபொய்யெலாம்
வீடவேண்டுநான்போற்றிவீடுதந்
தருளுபோற்றிநின்மெய்யர்மெய்யனே.

(ப - ரை.) நான் நின்னையே பாடவேண்டும் - நான் உன்னையே பாடுதல் வேண்டும், போற்றி - உன்பொருட்டு நமஸ்காரம், நான் பாடி - நான்பாடாநின்று, நைந்து நைந்து உருகி - மனம் அழிந் தழிந்து கரைந்து, நெக்கு நெக்கு ஆடவேண்டும் - உடல் நெகிழ்ந்து நெகிழ்ந்து கூத்தாடவேண்டும், போற்றி - உன்பொருட்டு நமஸ்காரம், அம்பலத்து ஆடும் - தில்லையம்பலத்தில் ஆனந்த நிருத்தம் பண்ணுகிற, நின் கழல்போது-உன் திருவடித் தாமரையை, நாயினேன்-நாயேன், கூடவேண்டும் - வந்து அடைதல் வேண்டும், போற்றி - உன்பொருட்டு நமஸ்காரம், இப்புழுக்கூடு - இந்தப்புழுக் கூடாகிய சரீரத்தினின்றும், என்னை நீக்கு-என்னை நீக்கியருள வேண்டும், போற்றி - உன்பொருட்டு நமஸ்காரம், நான் - அடியேன், பொய் எல்லாம் விடவேண்டும் - பொய்யின்பம் எல்லாவற்றையும் விட்டொழிதல் வேண்டும், போற்றி உன்பொருட்டு நமஸ்காரம், நின்மெய்யர் மெய்யனே - உன் மெய்யன்பர்க்கு மெய்யா யிருப்பவனே, வீடு தந்தருளு - மோக்ஷத்தைக் கொடுத்தருள்வாயாக, போற்றி - உன்பொருட்டு நமஸ்காரம்.

(க - ரை.) இறைவனே! நான் உன்னைப் பாடுதல் முதலாயின செய்தல் வேண்டும். நீ இந்தவுடம்பை யொழித்து எனக்கு வீடுதந்தருளல் வேண்டும். அது கருதி உனக்கு வணக்கம் செய்கிறேன் என்பதாம்.

(வி - ரை.) நைந்து நைந்து நெக்கு நெக்கு என்னுமடுக்குகள் மிகுதியை யுணர்த்தி நின்றன. விடவேண்டு மென்பது - வீடவேண்டுமென நீண்டது நீட்டல் - வீடு - விடுதலையுடையது எனவே இருவகைப்பற்றையும் விட்டவர்களடையும் மோட்சஸ்தானம். (௪00)

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# நீத்தல்விண்ணப்பம்.

அதாவது

பிரபஞ்சவைராக்கியம்.

உத்தரகோசமங்கையி லருளிச்செய்யப்பட்டது.

திருச்சிற்றம்பலம்

## கட்டளைக்கலித்துறை

கடையவனேனைக்கருணையினாற்கலந்தாண்டுகொண்ட
விடையவனேவிட்டிடுதிகண்டாய்விறல்வேங்கையின்றோல்
உடையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
சடையவனேதளர்ந்தேனெம்பிரானென்னைத்தாங்கிக்கொள்ளே.

(ப - ரை.) கடையவனேனை - கடைப்பட்டவனாகிய வென்னை, கருணையினால் - மிகுந்த கிருபையினால், கலந்து - வலியவந்தடைந்து, ஆண்டுகொண்ட - அடிமைகொண்டருளிய, விடையவனே - இடபவாகனத்தின் மீது ஆரோகணிப்பவனே, விட்டிடுதி - என்னைக் கைவிடுகிறாயோ (கைவிடாது காத்தருளாய்), விறல் - வெற்றியையுடைய, வேங்கையின்தோல் - புலித்தோலை, உடையவனே - ஆடையாகத்தரித்தவனே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோச மங்கைக்கு அரசே - உத்தரகோச மங்கையென்னுந் திருப்பதிக்குத் தலைவனாயெழுந்தருளியிருப்பவனே, சடையவனே - சடாபாரத்தை யுடையவனே, எம்பிரான் - எமதுபிரானே, தளர்ந்தேன் - (விழுமளவினனாகத்) தளர்ச்சியடைந்தேன், (ஆகையால்) என்னைத் தாங்கிக்கொள் - என்னை விழவொட்டாது தாங்கிக்கொள்வாயாக. எ - று.

(க - ரை) திருவுத்தரகோச மங்கையென்னும் திவ்யக்ஷேத்திரத் திர்க்கு அரசனாயெழுந்தருளி யினிது வீற்றிருப்பவனே! கடையேனாகிய என்னை யாயா பந்தத்தினின்று அடிமையைத் தடுத்தாட்கொண்ட இடபவாகனனே! என்னைக் கைவிடுகின்றாயோ! கைவிட்டால் என்னைக் காப்பவர் ஒருவருமில்லாமையால், என்னை நீயே காப்பாற்றல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) கருணையினால் ஆண்டுகொண்ட என்றமையால், ஆண்டுகோடற்குக் காரணமாகிய நல்வினையொன்றும் புரிந்திலேன் என்றாராயிற்று. உத்தரகோசமங்கை - பாண்டி நாட்டுத் திருப்பதிகளிலொன்று. கடையேனைக்

கலந்தாண்டுகொண்டது உன் பெருங் கருணையினாலன்றே, அப்படிப்பட்ட உனக்கு என்னைத் தாங்கிக்கொள்ளுதலும் கடமையாம் என்றற்கு "கருணையினாற் கலந்தாண்டுகொண்ட விடையவனே, தளர்ந்தேன் என்னைத் தாங்கிக் கொள்ளே" என்றார். கைவிடாது காத்தருளாய் என்பது-இசையெச்சம். கண்டாய் - முன்னிலையசை. அரசு - பண்பாகுபெயர். (க)

கொள்ளேர்பிளவகலாத்தடங்கொங்கையர்கொவ்வைச்செவ்வாய்
விள்ளேனெனினும்விடுதிகண்டாய்நின்விழுத்தொழும்பின்
உள்ளேன்புறமல்லேனுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளேனொழியவுங்கண்டுகொண்டாண்டதெக்காரணமே.

(ப - ரை.) உத்தரகோசமங்கைக்கரசே - உத்தரகோசமங்கை யென்னுந் திருப்பதியை ஆட்சியாகக்கொண்டெழுந்தருளிய சிவபெருமானே, கள்ளேன் - சோரனாகிய நான், ஒழிய - உன்னை நீங்கிநிற்க, கண்டுகொண்டும் - என் நிலைமையை பார்த்திருந்தும், ஆண்டது-என்னை அடிமைகொண்டது, எக்காரணம் - எந்தக் காரணத்தைக்கொண்டோ யான் அறிந்திலேன், அதைநோக்கி) நின்விழுதொழும்பின் உள்ளேன் - மிகப் பெரிதாகிய உன் திருத்தொண்டின் கண் உளனாயினேன், புறம் அல்லேன் - அடியேன் நினக்குப் புறம்பானவனல்லேன், (ஆதலால்) ஏர் - அழகிய, கொள்பிளவு - கொள்ளின் பிளவினளவும், அகலா - விட்டு நீங்காமல் நெருங்கியிருக்கிற, தடங்கொங்கையர் - பெரிய முலைகளையுடைய மாதரது, கொவ்வைச் செவ்வாய் - கோவைக் கனிபோன்ற செவந்த அதரத்தை, விள்ளேன் எனினும் - விட்டு நீங்கேனாயினும், விடுதி-அடியேனைக் கைவிடுகிறாயோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே ! நான் மாதர்மயக்கத்திற் சிக்கி உழல்வேனாயினும் என்னைக் கைவிடுதல் உனக்கு நீதியன்றென்பதாம்.

(வி - ரை.) கொள்ளேர் பிளவகலாத் தடங்கொங்கையர் என்றது-மிகவும் நெருங்கின கொங்கைகளை யுடையர் என்றபடி. தடம் கொங்கை என்பதற்கு-மலைபோலுங் கொங்கை எனினுமாம். தடம் - மலை. கொவ்வை - முதலாகு பெயர். செவ்வாய் என்றதனால் கொவ்வைக்கனி யெனப் பொருள்கொண்டாம்.()

காருறுகண்ணியரைம்புலனாற்றங்கரைமரமாய்
வேருறுவேனைவிடுதிகண்டாய்விளங்குந்திருவா
ரூருறைவாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
வாருறுபூண்முலையாள்பங்கவென்னைவளர்ப்பவனே.

(ப - ரை.) விளங்கும் - பிரகாசிக்கின்ற, திருவாரூர் - திருவாரூரின்கண், உறைவாய் - வாசம் பண்ணுவோனே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோச மங்கைக்கு அரசே—, வார் உறு - கச்சணிந்த, பூண்முலையாள் - ஆபரண மணிந்த ஸ்தனங்களையுடைய உமாதேவியின், பங்க - இடப்பாகத்தை யுடையவனே

என்னை வளர்ப்பவனே - அடியேனை ரக்ஷிப்பவனே, கார் உறுகண்ணியர் - கரு நிறம் பொருந்திய கண்களையுடைய மாதராது, ஐம்புலன் - ஐம்புலவின்பங்களாகிய, ஆற்றங்கரை மரம்ஆய் - ஆற்றங்கரையிலுள்ள மரம் போன்று, வேர்உறுவேனை - வேருன்றிநிற்கின்ற என்னை, விடுதி - என்னை விட்டு விடுகின்றாயோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! மாதாது சுகத்தை விரும்பி, ஆற்றங்கரை மரம்போல் நிலைபற்றுழல்வேனாயினும், என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) வேர்உறுதல் - வேருன்றல். கார் - அழகெனினுமாம். உறுதல் - மிகுதலுமாம். ஆற்றங்கரை மரத்திற்கு எக்காலமும் அபாயமே யுண்டாதல்போல, மாதர்மயக்கத்திற் சிக்கி யுழல்கின்ற எனக்கும் சதாகாலமும் அபாயமேயுளதாம் என்றற்கு, "காருறு கண்ணியரைம்புல னாற்றங்கரை மரமாய்" என்றார். ஐம்புலன் என்றது-ஐம்புலவின்பங்களை. அது, "கண்டுகேட்டுண்டுயிர்த்துற் றறியுமைம்புலனும், ஒண்டொடி கண்ணேயுள" என்னுந் திருக்குறளானுமுணர்க. என்னை வளர்ப்பவனே என்றமையால் என்னைக்கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்றவாறாயிற்று. வளர்த்தல் எமது தாயாகிய உமாதேவியாரோடு கூடி, யல்லது இசையாது என்றற்கு "வாருறு பூண்முலையாள் பங்கவென்னை வளர்ப்பவனே" என்றார். (ரு)

வளர்கின்றநின் கருணைக்கையில்வாங்கவு நீங்கியிப்பால்
மிளிர்கின்றவென்னை விடுதிகண்டாய்வெண்மதிக்கொழுந்தொன்
றொளிர்கின்றநீண்முடியுத்தரகோச மங்கைக்கரசே
தெளிகின்றபொன்னுமின்னும்மன்னதோற்றச்செழுஞ்சுடரே.

(ப - ரை.) வெள் - வெள்ளிய, மதிக்கொழுந்து ஒன்று - ஓர்இளம்பிறைச்சந்திரன், ஒளிர்கின்ற - பிரகாசிக்கிற, நீள்முடி - நீண்ட சடை முடியையுடைய உத்தரகோச மங்கைக்கு அரசே, தெளிகின்ற - உருகித்தெளிந்தோடுகின்ற, பொன்னும் - பொன்னையும், மின்னும - மின்னலையும், அன்ன - ஒத்த, தோற்றம் - காட்சியையுடைய, செழுஞ்சுடரே - செழுமையாகிய சோதிஸ்வருபனே, வளர்கின்ற - விருத்தியடையாநிற்கிற, நின் - உனது, கருணைக்கையில் - கிருபையாகியகையினால், வாங்கவும் - என்னை வளைத்துப் பிடிக்கவும், நீங்கி - விலகி, இப்பால் - இந்தப் பிரபஞ்சவாழ்க்கையில், மிளிர்கின்ற - மிக்குவிளங்குகின்ற, என்னை - அடியேனை, விடுதி - கைவிடுகின்றாயோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! உன் கருணையாகிய கையைக்கொண்டு என்னை வளைக்கவும் அகப்படாமல் விலகி இந்தப் பொய்யுலகில் உழலாநின்றேனாயினும் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை,) இறைவனது கருணை எந்நாளும் குறையாமல் வளர்ந்து வருதலால் "வளர்கின்ற நின்கருணை" என்றார். நீண்முடி அரசே என இயைக்க. தெளிகின்றபொன் - உருகிக்கசண் விட்டாடும் பொன். மேனியென்றது தோற்றம் என்றமையால், பொன்னைத் திருமேனிக்கும், மின்னை வீழ்சடைக்கும் உவமையாகக் கொள்க. இதனை, "பொன்வண்ண மெவ்வண்ண மவ்வண்ண மேனிப் பொலிந்திலங்கு, மின்வண்ண மெவ்வண்ண மவ்வண்ணம் வீழ்சடை" யென்னும் சேரமான் பெருமாணாயனார் திருவாக்கானு முணர்க. (ச)

செழிகின்றதீப்புகுவிட்டிலிற்சின்மொழியாரிற்பன்னாள்
விழுகின்றவென்னைவிடுதிகண்டாய்வெறிவாயறுகால்
உழுகின்றபூமுடியுத்தரகோசமங்கைக்கரசே
வழிநின்றுநின்னருளாரமுதூட்டமறுத்தனனே.

(ப - ரை.) வெறிவாய் - மணம் வீசுகின்ற வாயையுடைய, அறுகால் உழுகின்ற - வண்டுகள் கிண்டுகின்ற, பூ - மலர்களையணிந்த, முடி - திருமுடியையுடைய, உத்தரகோச மங்கைக்கரசே—,வழிநின்று-வழியில்நின்று, நின் அருள்-உன்னருளாகிய, ஆர் அமுது - அரிய அமிர்தத்தை, ஊட்ட - நீ உண்பிக்கவும், மறுத்தனன் - அதனைத்தடுத்தேனாகி, செழிகின்ற - விருத்தி யடைகின்ற, தீ - நெருப்பினிடத்து, புகு-பிரவேசிக்கிற, விட்டிலின்-விட்டிற் பறவைபோல, சில் மொழியாரில் - திருந்தா மொழியையுடைய மாதரிடத்து, பல் நாள் - பல நாள், விழுகின்ற - வீழ்ந்து நசிக்கின்ற, என்னை -அடியேனை, விட்டிடுதி - கைவிட்டு விடுகின்றாயோ——. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோசமங்கைக்கரசனே ! நான் தீயில் வீழ்ந்து நசிக்கின்ற விட்டிற் பூச்சியைப்போல மாதர் மயக்கத்தில் வீழ்ந்து நசிக்கின்றவனும், உன் திருவருளாகிய அமிர்தத்தை நீயே பருகு விக்கவும் அதனை மறுப்பவனுமாயிருந்தாலும் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) விட்டில்-விளக்கில் விழுந்தழியும் ஓர் சிறு பறவை விசேடம். இது உருவத்தால் நசிப்பது. இதனைச் சலபம் என்றும் பதங்கம் என்றும் கூறுவர் வடநூலார். சின்மொழி - சிரம்பாமொழி. வெறி - கள் எனினுமாம். ஆறு காலுடையதாதலால் வண்டை அறுகால் என்றார். பூ என்றாரேனும் இறைவர்க்குக் கொன்றைமலர் விருப்பமாதலால் அதனையே கொள்க. "வில்வமுடன் கொன்றைமலர் சங்கரற்கு நேயம்" என்பது புட்பவிதி. வெறி வாய் பூ, அறுகாலுழுகின்ற பூ என்றியையப்பினுமாம். வழி - கெடப்புகும் தீ நெறி வழிநின்று என்றது - தீயவழியிற் செல்லவொட்டாது நின்று என்றபடி. வழிநின்று உண்பிக்க என இயையும். அமுதூட்ட மறுப்பது - என் தீவினைப்பயன் என்றற்கு "நின்னருளாரமுதூட்ட மறுத்தனன்" என்றார். எ - வியப்பு. (ரு)

மறுத்தனன்யானுன்னருளறியாமையினென்மணியே
வெறுத்தெனைநீவிட்டிடுதிகண்டாய்வினையின்றொகுதி
ஒறுத்தெனையாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
பொறுப்பரன்றேபெரியோர்சிறுநாய்கடம்பொய்யினையே.

(ப - ரை.) உத்தரகோசமங்கைக்கு அரசே - திருவுத்தரகோசமங்கைக் கரசனே, சிறுநாய்கள் தம் பொய்யினை - சிறுநாயை யொத்தவரது பொய்யொழுக்கங்களை, பெரியோர் - பெரியவர், பொறுப்பர் அன்றே - பொறுத்தருள்வாரல்லவா, யான் - நான், அறியாமையில் - அஞ்ஞானத்தால், உன் அருள் - உன் திருவருளை, மறுத்தனன் - தடுத்தேன், என் மணியே - என் மாணிக்கமே, (அதனை முன்னிட்டு) நீ என்னை வெறுத்து - நீயென்னை வெறுத்து, விட்டிடுதி - திருவருள்புரியா தொழிந்துவிடுகின்றனையோ, (மற்றென்னெனின்) வினையின் தொகுதி ஒறுத்து - என் கர்ம சமூகங்களைக் கெடுத்து, என்னை ஆண்டுகொள் - என்னை யாண்டுகொள்ள வேண்டும். எ - று.

(க - ரை.) திருவுத்தரகோசமங்கையுள்வீற்றிருந்தருளுஞ்சிவபெருமானே! எனது அறியாமையால் உன் கருணையமிர்தத்தை மறுத்தேனாயினும், என்னைக் கைவிடுதல் உனக்குத் தருமமன்று. சிறியோர்கள் செய்த பிழைகளைப் பெரியோனாகிய நீ பொறுப்பதே தகுதியென்பதாம்.

(வி - ரை.) அறியாமை - உணராமையெனினுமாம். என்வினைக் கெல்லையில்லை யென்றற்கு "வினையின்றொகுதி" என்றார். பொய் என்றது ஈண்டு குற்றத்தை விளைவித்து நின்றது. அன்று - ஏ - அசைகள். (கஅ)

பொய்யவனேனைப்பொருளெனவாண்டொன்றுபொத்திக்கொண்ட
மெய்யவனேவிட்டிடுதிகண்டாய்விடமுண்மிடற்று
மையவனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
செய்யவனேசிவனேசிறியேன்பவந்தீர்ப்பவனே.

(ப - ரை) விடம் - விஷத்தை, உண் - உண்டு, மிடற்று - கண்டத்தினிடத்தில், மையவனே - கருநிறத்தை அடையாளமாக வைத்தவனே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோசமங்கைக்கு அரசே - உத்தரகோசமங்கை யென்னும் க்ஷேத்திரத்தலைவனே, செய்யவனே நடுவு நிலையுள்ளவனே, சிவனே - மங்களகரனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே - சிறியேனது பிறவிநோயை யொழிப்பவனே, பொய்யவனேனை - பொய்யனாகிய வென்னை, பொருள் என - இவனும் ஒரு பொருட்டன்மை யுடையானென்றெண்ணி, ஆண்டு - ஆண்டருளி, ஒன்று பொத்திக்கொண்ட - என் பாபகர்மமாகிய ஒன்றினையும் மறைத்துக் கொண்ட, மெய்யவனே - உண்மையனே, விட்டிடுதி - அடியேற்குத் திருவருள்செய்யாமல் விட்டுவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! பொய்யனுகிய என்னையும் ஓர் பொருளாகவெண்ணி ஆட்கொண்ட உண்மைப்பொருளானவனே! என்னைக்கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) செய்யவனே என்பதற்குச் செம்மையாகிய நிறத்தையுடையவனே எனினும், ஒன்று பொருந்திக்கொண்ட மெய்யவனே என்பதற்கு-ஒப்பற்றதாகிய முத்தியைக் கொடாது மறைத்துக்கொண்ட மெய்யவனே எனினும் அமையும். செம்மை - நடுநிலைமை. (எ)

தீர்க்கின்றவாறென்பிழையைநின்சீரருளென்கொலென்று
வேர்க்கின்றவென்னைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
ஆர்க்கின்றதார்விடையுத்தரகோசமங்கைக்கரசே
ஈர்க்கின்றவஞ்சொடச்சம்வினையேனையிருதலையே.

(ப - ரை.) விரவார் - பகைவர், வெருவ - அஞ்சும் வண்ணம், ஆர்க்கின்ற - கர்ச்சிக்கின்ற, தார் - கிண்கிணி மாலையணிந்த, விடை - இடபவாகனத்தையுடைய, உத்தரகோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கையிலிருப்பவனே, அஞ்சொடு அச்சம் - பஞ்சேந்திரியங்களும் (அவற்றால் விளையும்) பயமும், வினையேனை - தீவினையினேனை, இருதலை - இருபுறத்தும் நின்று, ஈர்க்கின்ற - இழுக்கின்றன, (ஆகையால்) என் பிழையை - என் குற்றங்களை, நின் சீர் அருள் தீர்க்கின்ற ஆறு - உன் சிறந்த அருளானது பொறுக்கும் விதம், என் கொல் என்று - எப்படியோவென்று, வேர்க்கின்ற என்னை - (அவ்வியசனத்தால்) மனம் புழுங்குகின்ற அடியேனை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! என் குற்றங்களை உன் திருவருளானது எவ்வாறு நீக்குமோ வென்று மனம்புழுங்குகின்ற என்னை, ஐம்புலவாசையும் அச்சமும் இருபக்கத்திலும் இழுக்கின்றன, ஆதலால் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) வேர்த்தல் - தேகம் வியர்த்தல் எனினும் பொருந்தும். விரவார் - கலவாதவர், (பகைவர்). தார் - இது இடபத்துக்குச் சிறந்த ஆபரணமாதலால், "தார்விடை" என்றார். ஆர்த்தலை தாருக்காயினும் விடைக்காயினும் அடையாக்கி யுரைத்துக்கொள்க. விடை அரசே என இயைக்க. அஞ்சு - ஐந்து. (ஐம்புலவாசை). அஞ்சொடச்சம் இருபுற நின்றிழுத்தற்குக் காரணம் என்வினை யென்றற்கு, "ஈர்க்கின்ற வஞ்சொடச்சம் வினையேனை யிருதலையே" என்றார். (அ)

இருதலைக்கொள்ளியினுள்ளெறும்பொத்துநினைப்பிரிந்த
விரிதலையேனைவிடுதிகண்டாய்வியன்மூவுலகுக்
கொருதலைவாமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
பொருதலைமூவிலைவேல்வலனேந்திப்பொலிபவனே.

(ப - ரை,) வியன் - பெருமை பொருந்திய, மூவுலகுக்கு - திரிலோகங்களுக்கும், ஒரு தலைவா - தனித் தலைமைக்கடவுளே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கைப்பதிநாதனே, பொருபோர்க்குரிய, தலை - நுனியோடு கூடிய, மூவிலை - மூன்று இலை வடிவினதாகிய, வேல் - சூலத்தை, வலன் ஏந்தி - வலப்பக்கத்தில் தாங்கி, பொலிபவனே - விளங்குகின்றவனே, இருதலை கொள்ளியின் உள் - இருதலைக் கொள்ளியினுள்ளே யகப்பட்ட, எறும்பு ஒத்து - எறும்பைப்போல, நின்னை பிரிந்த - உன்னை விட்டு நீங்கின, விரிதலையேனை - அவிழ்ந்து விரிந்த தலையையுடைய என்னை, விடுதி - ஆட்கொள்ளாமல் கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! இருதலைக் கொள்ளியினுள்ளே அகப்பட்டு வருந்துகின்ற எறும்பைப்போல, உன்னை விட்டு வருந்துகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) இருதலைக்கொள்ளி - இரண்டு பக்கத்திலும் தீப்பற்றிய கொள்ளி விரிதலையேன் என்றது - தலைவனைப் பிரிந்ததனால் அலங்கோலமாய்த் திரியுமியல்புடைமையை. மூவிலை வேல் - மூந்தலைச் சூலம் (திரிசூலம்) (கூ)

பொலிகின்றநின்றாள்புகுதப்பெற்றாக்கையைப்போக்கப்பெற்று
மெலிகின்றவென்னை விடுதிகண்டாயளிதேர்விளரி
ஒலிநின்றபூம்பொழிலுத்தரகோசமங்கைக்கரசே
வலிநின்றதிண்சிலையாலெரித்தாய்புரமாறுபட்டே.

(ப - ரை.) அளி - வண்டினங்கள், தேர் - ஆராய்ந்து பாடுகின்ற, விளரி ஒலிநின்ற - விளரியிசையின் ஒலியானது இடையறாது நிலை பெற்றிருக்கிற, பூபொழில் - பூஞ்சோலைகள் சூழ்ந்த, உத்தரகோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கைக்கடவுளே, மாறுபட்டு - பகைத்து, புரம் - முப்புரங்களை, வலிநின்ற திண்சிலையால் - வலிமை நிலைத்த திடமான வில்லினால், எரித்தாய் - அழித்தவனே, பொலிகின்ற - விளங்குகின்ற, நின் தாள் - உன் திருவடிகளில், புகுதப்பெற்று - அடைக்கலமடையப் பெற்றும், ஆக்கையைப்போக்கப்பெற்று - சரீரத்தின் பயனைப்பெறாமல் விட்டு, மெலிகின்ற - இளைக்கின்ற, என்னை - அடியேனை, விடுதி - கை விடுகின்றனையோ, எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! உன் திருவடியையடைந்தும், இம்மாநுடப் பிறப்பினாலடையவேண்டும் பயனையடையாமலே, வீணாகக் காலங்கழித்து மெலியாநின்ற என்னைக் கைவிடுதல் உனக்கு நீதியன்றென்பதாம்.

(வி - ரை.) ஆக்கையைப் போக்கல் - சரீரமெடுத்ததனாலடையவேண்டும் பயனடையாமல் வீணிலே காலங்கழித்தல். அளி - வண்டு. விளரி - ஏழிசையினொன்று. "வலி நின்ற திண்சிலை" என்றார் மேருமலையே வில்லாதலால். (சo)

மாறுபட்டஞ்சென்னை வஞ்சிப்பயானுன் மணிமலர்த்தாள்
வேறுப்பட்டேனை விடுதிகண்டாய்வினையேன் மனத்தே
ஊறுமட்டே மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
நீறுபட்டேயொளிகாட்டும்பொன்மேனிநெடுந்தகையே.

(ப - ரை.) வினையேன் மனத்து - தீவினையையுடையவனாகிய வென் மனத்தின் கண், ஊறும் - சுரக்கின்ற, மட்டே - தேனே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோச மங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கையென்னும் தலத்துக் கதிபனே, நீறுபட்டு - திருவெண்ணீற்றால் பூசப்பட்டு, ஒளி காட்டும் - ஒளியைச்செய்கின்ற, பொன்மேனி - பொன்போலுந் திருமேனியை யுடைய, நெடுந்தகையே - பெருங் குணத்தையுடையவனே, அஞ்சு - ஐம்பொறிகள், மாறுபட்டு - பகைத்து, என்னை வஞ்சிப்ப - என்னை வஞ்சித்தலால், யான் - நான், உன் - உனது, மணு - விரக்கமலணிந்த, மலர் - தாமரை மலரையொத்த, தாள் - திருவடிக்கு, வேறு பட்டேனை - அயலாயினேனை, விடுதி——. எ - று.

(க - ரை.) மணி - அழகு எனினும் பொருந்தும். திருவுத்தரகோசமங்கைக் கரசனே! பஞ்சேந்திரியங்கள் என்னை வஞ்சித்தலால் உன் திருவடிகளுக் கயலானேன். ஆயினும் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) வஞ்சித்தலாவது - இன்பஞ் செய்வதுபோல விடயங்களை நெடுந்தகை - அன்மொழித்தொகை. நுகர்வித்துப் பிறவித் துன்பத்துக் குரியனாக்குதல். (கக)

நெடுந்தகநீயென்னையாட்கொள்ளயானைம்புலன்கள்கொண்டு
விடுந்தகையேனைவிடுதிகண்டாய்விரவார்வெருவ
அடுந்தகைவேல்வல்லவுத்தரகோசமங்கைக்கரசே
கடுந்தகையேனுண்ணுந்தெண்ணீரமுதப்பெருங்கடலே.

(ப - ரை.) விரவார் வெருவ - பகைவர் அஞ்சும்படி, அடுந்தகை - கொல்லுந் தன்மையுள்ள, வேல் வல்ல - வேற்போரில் வல்லவனாகிய, உத்தரகோசமங்கைக்கு அரசே-உத்தரகோச மங்கைப்பதியுள் வீற்றிருந்தருள் பவனே——, கடுந்தகையேன் - கொடிய குணத்தை யுடைவனாகிய நான், உண்ணும் - பருகுதற்குரிய, தெள் நீர் - தெளிந்த குணத்தை யுடைய, அமுதப் பெருங்கடலே - பெரிய அமிர்த சாகரமே, நெடுந்தகை - பெருங் குணத்தை யுடையோய், நீ என்னை ஆட்கொள்ள - நீ யென்னை யடிமை கொண்டருளவும், யான் - நான், ஐம்புலன்கள் கொண்டு - ஐம்புலவாசையைக் கொண்டு, விடுந்தகையேனை - (அதனால் உன்னை விடும்) இயற்கையை யுடையேனாகிய என்னை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! நீ யென்னை வலியத்தடுத் தாட்கொள்ளவும், நான் ஐம்புல நுகர்ச்சியிலாசையால் உன்னை விட்டு நீங்கு

மியல்புடையேன், ஆயினும் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம். (கஅ)

கடலினுணாய்நக்கியாங்குன்கருணைக்கடலினுள்ளம்
விடலரியேனைவிடுதிகண்டாய்விடலில்லடியார்
உடலிலமேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மடலின்மட்டேமணியேயமுதேயென்மதுவெள்ளமே.

(ப - ரை.) விடல்இல் அடியார் - உன் திருவடியை விடுதலில்லாத மெய்யடியாரது, உடல் இலமே மன்னும் - இருதயமாகிய வீட்டின்கண்ணே நிலைபெற்றிருக்கின்ற, உத்தரகோச மங்கைக் கரசே - திருவுத்தரகோச மங்கையில் வீற்றிருக்கும் பரமபதியே, மடலின் மட்டே - பூவிதழ்களில் நின்றுவழியுந்தேனே, மணியே - மாணிக்கமே, அமுதே - அமிர்தமே, என் மதுவெள்ளமே - என்மதுப்பெருக்கே, கடலினுள் - கடலில், நாய் நக்கிய ஆங்கு - நாய் நக்கினது போல, உன்கருணைக்கடலின் - உன் கிருபாசாகரத்தில், உள்ளம் - மனம், விடல் அரியேனை - விடுதலரிதாகிய வென்னை, விடுதி-கைவிடுகின்றனையோ, எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக் கரசனே! கடலில் நாய் நக்குதல் போல, உன் கருணைக் கடலில் சிறிதும் மனம் பதியாத என்னை யுபேக்ஷித்தல் உனக்குத்தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) நக்கியாங்கு என்பதில் நிலைமொழி யீற்றகரம் தொக்கது. விடலரியேன் என்பதில்-அருமை இன்மை குறித்து நின்றது. உடல் - சரீரம்; அது இங்கு மனத்துக் காயிற்று. அடியாரைப்பித் தேற்றலால் 'மதுவெள்ளமே' என்றார். மது - கள். உள்ளம் விடலரியேனை யென்றது-மனமழுந்தாத என்னை யென்றவாறு. (க௯)

வெள்ளத்துணாவற்றியாங்குன்னருள்பெற்றுத்துன்பத்தின்றும்
விள்ளக்கிலேனைவிடுதிகண்டாய்விரும்பும்மடியார்
உள்ளத்துள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
கள்ளத்துளேற்கருளாய்களியாதகளியெனக்கே.

(ப - ரை.) வெள்ளத்துள் - நீர்ப்பெருக்கின் கண்ணிருந்து கொண்டு, நா வற்றியாங்கு - நா அதைப் பருகும் வகையறியாத நாவறட்சியடைந்தாற் போல, உன் அருள்பெற்று - உன் திருவருள் பெற்றிருந்தும், துன்பத்து - துன்பத்தினின்றும், இன்றும் விள்ளக்கிலேனை - இப்பொழுதும் நீங்கும் வகை யின்னதென்றறியாத என்னை, விடுதி - கைவிடுகின்றனையோ, விரும்பும் அடியாருடைய, உள்ளத்து உள் ஆய் மன்னும் - மனத்தின்கண்ணே நிலைபெற்றிருக்கின்ற, உத்தரகோசமங்கைக்கரசே - திருவுத்தரகோச மங்கைப் பதியானே, கள்ளத்துளேன் எனக்கு - வஞ்சகத்தை யுடையேனாகிய எனக்கு, களியாதகளி அருளாய் - ஒருக்காலும் கண்டறியாத களிப்பை யருளக்கடவாய். எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக் கரசனே ! ஒருவன் நீர்ப்பெருக்கில் நின்றும் அதனைப்பருகித் தாகவிடாய்த் தணியாமல் நாவறண்டாற் போல, உன் திருவருளைப் பெற்றிருந்தும், அதனை நுகர்தற்கறியாதவனைப் துன்பத்தினின்றும் நீக்காத என்னைக்கைவிடுதல் உனக்குத் தகுதியன்று. யான் எப்போதுங்கண்டறியாத பெருங்களிப்பைத் தந்தருள்க என்பதாம்.

(வி - ரை.) களியாதகளி - என்றுங் கண்டறியாத பெருங்களிப்பு. நாவற்றியாங்கு என்பதில் நிலைமொழியீற்றகரம் தொகுத்தல். கள்ளத்துளேற்கு என்பதில் குசாரியை. உள் - மனம். (கச)

களிவந்தசிந்தையொடுன்கழல்கண்டுங்கலந்தருள
வெளிவந்திலேனைவிடுதிகண்டாய்மெய்ச்சுடருக்கெல்லாம்
ஒளிவந்தபூங்கழலுத்தரகோசமங்கைக்கரசே
எளிவந்தவெந்தைபிரானென்னையாளுடையென்னப்பனே.

(ப - ரை) மெய் - உண்மையான. சுடருக்கு எல்லாம் - ஒளி கட்கெல்லாம், ஒளிவந்த - மேலான ஒளியைத்தந்த, பூங்கழல் - அழகிய வீரகண்டையணிந்த திருவடியையுடைய, உத்தரகோச மங்கைக்கரசே - திருவுத்தர கோசமங்கைப்பதிநாதனே, எளிவந்த - எனக்கெளிதிற் கிடைத்த, எந்தைபிரான் - எமது தந்தையாகிய உபகாரகனே, என்னை ஆள் உடை என் அப்பனே - என்னையடிமையாகக்கொண்ட என்னப்பனே, களிவந்த சிந்தையொடு - மகிழ்வோடுகூடிய என்மனத்தோடு, உன்கழல் கலந்தருள கண்டும் - உன் திருவடி நீழலிற்கலந்தருளக் கண்டும், வெளிவந்திலேனை - வெளிப்படாத என்னை, விடுதி - என்னைவிடுகின்றனையோ. -எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக் கரசனே! உன் திருவடியானது என்னைக் கலந்தருளக் கண்டும் அதனை அடையும் வகையறியாத என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) சுடருக்கு எல்லாம் என்றது - முச்சுடருக்கும் என்றபடி. முச்சுடர் - சோம சூரி யாக்கினிகள். ஒளிவந்த - ஒளியிற் சிறந்த என்றலும் பொருந்தும். ஒளிவந்த அரசே என இயைக்க. பூங்கழல்-தாமரைமலர் போன்ற பாதமென்பது மொன்று. (கரு)

என்னையப்பாவஞ்சலென்பவரின்றிநின்றெய்ந்தலைந்தேன்
மின்னையொப்பாய்விட்டிடுதிகண்டாயுவமிக்கின்மெய்யே
உன்னையொப்பாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
அன்னையொப்பாயெனக்கத்தனொப்பாயென்னரும்பொருளே.

(ப - ரை.) உவமிக்கின் - உவமித்துச் சொல்லுமிடத்து, உன்னை ஒப்பாய் - உன்னைநீயே நிகர்ப்பாய், மெய்யே - இது உண்மையே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோச மங்கைக் கரசே - திருவுத்தரகோசமங்கைப் பதிநாதனே.

எனக்கு அன்னையொப்பாய் - எனக்குத் தாய்க்குச் சமானமானவனே, அத்தன் ஒப்பாய் - தந்தைக்குச் சமானமானவனே, என் அரும் பொருளே - எனக்குக் கிடைத்தற்கரிய பொருளே, என்னை - அடியேனை, அப்பா அஞ்சல் என்பவர் இன்றி நின்று - அப்பா பயப்படாதே யென்று சொல்வாரில்லாமல் நின்று, எய்த்து அலைந்தேன் - இளைத்துத் திரிந்தேன், மின்னை ஒப்பாய் - மின்னலை யொத்திருப்பவனே, விட்டிடுதி - கைவிடுகின்றனையோ (விடாதருள்புரிவாய்).

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! என்னை யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாமென்று சொல்லுபவரில்லாமல் இளைத்தலைந்தேன். ஆதலால் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) ஆன்மாக்களுக்கு அழியாத் தாய்தந்தையராவான் அம்மையப் பனுகிய சிவபெருமானுதலால், "அன்னை யொப்பாயெனக் கத்தனொப்பாய்" என்றார். "உவமிக்கின் மெய்யேயுன்னை யொப்பாய்" என்றதனால் இறைவனுக்கு நிகராவார் வேறொருவருமில்லை யென்பது பெறப்பட்டது. "தாமே தமக் கொப்பு மற்றில்லவர்" என்றார் திருக்கோவையாரினும். (சகூ)

பொருளே தமியேன்புகலிடமேநின்புகழிகழ்வார்
வெருளேயெனைவிட்டிடுதிகண்டாய்மெய்ம்மையார்விழுங்கும்
அருளேயணிபொழிலுத்தரகோசமங்கைக்கரசே
இருளேவெளியேயிகபரமாகியிருந்தவனே.

(ப - ரை.) மெய்மையார் விழுங்கும் - உண்மையன்புள்ள அடியார்களாலுண்ணப்பட்ட, அருளே - அருட்கனியே, அணிபொழில் - அழகிய சோலை சூழ்ந்த, உத்தரகோசமங்கைக்கரசே - திருவுத்தரகோச மங்கைப்பதிநாதனே, இருளே - அந்தகாரமே, வெளியே - ஒளியே, இகபரம் ஆதி இருந்தவனே - இம்மை மறுமைகளின் பயனுயிருந்தவனே, பொருளே - உண்மைப்பொருளானவனே, தமியேன் புகலிடமே - தனியனேனுக்கு அடைக்கலஸ்தானமே, நின் புகழ் இகழ்வார் - உனது கீர்த்தியை நிந்திப்பவர்களுக்கு, வெருளே - அச்சத்துக்கேதுவா யிருப்பவனே, என்னை விட்டிடுதி - அடியேனைக் கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே! எனக்குண்மைப் பொருளும் புகலிடமும் நீயே யாதலால், என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) பொருள் - சத்து (மெய்). இறைவன் இருளாயிருப்பது தன்னை அடையாதார்க் கெனவும், வெளியாயிருப்பது தன்னை அடைந்தார்க் கெனவும் பொருள் கொள்க.

இருந்தென்னையாண்டுகொள்விற்றுக்கொளொற்றிவையென்னிலல்லால்
விருந்தினனேனை விடுதிகண்டாய்மிக்கநஞ்சமுதா
அருந்தினனேமன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
மருந்தினனேபிறவிப்பிணிப்பட்டுமடங்கினர்க்கே.

(ப - ரை.) மிக்கநஞ்சு - கொடுமை மிகுந்தவிடத்தை, அமுது ஆ அருந்தினனே - அமுதாகப் புசித்தவனே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோசமங்கைக்கு அரசே - திருவுத்தரகோச மங்கைப்பதிநாதனே, பிறவிப்பிணிப்பட்டு மடங்கினர்க்கு - பிறவியாகிய நோயிலகப்பட்டு முடங்கிக் கிடந்தவர்கட்கு, மருந்தினனே - ஔஷதசருபமாயிருப்பவனே, இருந்து - என் எதிரில் எழுந்தருளியிருந்து, என்னை ஆண்டுகொள் - என்னையாட்கொள்வாய், விற்றுக்கொள் - விக்ரயஞ்செய்து கொள்வாய், (அல்லது) ஒற்றிவை - அடைமானம்வைப்பாய், என்னின் அல்லால் - என்று இவ்வாறு சொல்லுவதன்றி, (வேறு யாதுஞ்சொல்லத் தெரிந்தேனில்லை) விருந்தினனேனை-(உன்கிருபைக்கு) அந்நியனான என்னை, விடுதி-(எவ்விதத்தேனும் ஆட்கொள்ளாமல்) கைவிடுகின்றனையோ. எ-று.

(க - ரை.) திருவுத்தரகோசமங்கைக்கரசனே! என்னை யாண்டுகொள், விற்றுக்கொள், ஒற்றிவைத்துக்கொள் என்பேனன்றி வேறென் செய்யக்கடவேன், இத்தன்மையேனை கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) ஒற்றிவைத்தல் - அடைமானம் வைத்தல், விருந்தினன் - புதியன் (அயலான்). இறைவன், ஆன்மாக்களை எவ்வகையாலும் ஆளுதற்குரியன் ஆதலால் "என்னை யாண்டுகொள் விற்றுக்கொள் ஒற்றிவை" என்றார். இதனால் இறைவனது சுதந்திரத்துவம் விளங்குகின்றது. சுதந்திரத்துவம் - தன்வயத்தனாதல். இது இறைவனுடைய எண்குணங்களுள் ஒன்று.—எண்குணங்களாவன :— தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்பன. (கஅ)

மடங்கவென்வல்வினைக்காட்டைநின்மன்னருட் டீக்கொளுவும்
விடங்கவென்றன்னைவிடுதிகண்டாயென்பிறவியைவே
ரொடுங்களைந்தாண்டுகொளுத்தரகோசமங்கைக்கரசே
கொடுங்கரிக்குன்றுரித்தஞ்சுவித்தாய்வஞ்சிக்கொம்பினையே.

(ப - ரை.) உத்தரகோச மங்கைக்கரசே - உத்தரகோசமங்கைப் பதிநாதனே, கொடுங்கரிக்குன்று உரித்து - கொடுமைநிறைந்த மலைபோன்றயானையையுரித்து, வஞ்சிக்கொம்பினை அஞ்சுவித்தாய் - வஞ்சிக்கொடிபோல்பவளாகிய உமாதேவியாரையஞ்சும்படி செய்தவனே, என்னை வல்வினைக்காட்டை - எனது வலிய வினையாகிய வனத்தை, மடங்க - அழியும்படி, நின் - உனது, மன்-நிலைபெற்ற, அருள் - திருவருளென்கிற, தீகொளுவும் - நெருப்பினால் எரிக்கின்ற,

விடங்க - கட்டழகனே, என்பிறவியை - என் பிறப்பை, வேரொடும் களைந்து - வேருடன் பறித்து, ஆண்டுகொள் - என்னை யாண்டுகொள்வாயாக. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே ! என் வல்வினையாகிய காட்டை உனதருளாகிய நெருப்பாலெரிப்பவனே ! என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) கொலைமுதலிய கொடுந்தொழிலைச் செய்யுங்கால் கண்ணுறின் அஞ்சுதல் மாதர்க்கியற்கையாதலால், "கரிக்குன்றுரித்து அஞ்சுவித்தாய் வஞ்சிக்கொம்பினை" என்றார். விடங்கம் - அழகு. கொடுங்கரிக்குன்று என்றது - கஜாசுரனை. கரிக்குன்றுரித்ததாவது - பிரமனை நோக்கித் தவஞ்செய்து சிவபிரானொழிந்த மற்றொருவராலும் அழியாவரம்பெற்ற கயமுகாசுரன் என்பவன் சாதுக்களை வருத்தி வருகையில், இவனது கொடுமைக் கஞ்சிய விஷ்ணுவாகிய தேவர்களும், முனிவர்களும் காசியிற் சென்று சிவபிரானை அடைக்கலம் புகவும், அங்கும் சென்ற அக்கயமுகாசுரனைச் சிவபிரான் பிரளய காலவுருத்திர வுருவங்கொண்டு உதைத்துத் தள்ளிப் பிடரியைக் கீறித் தோலை உரித்துப் போர்வையாகக்கொண்டார் என்பதை. (௧௯)

கொம்பரில்லாக்கொடிபோலலமந்தனன்கோமளமே
வெம்புகின்றேனை விடுதிகண்டாய்விண்ணர்நண்ணுகில்லா
உம்பருள்ளாய்மன்னுமுத்தரகோசமங்கைக்கரசே
அம்பரமேநிலனேயனல்காலொடப்பானவனே.

(ப - ரை) விண்ணர் நண்ணுகில்லா - தேவர்களும் அடையப்பெறாத, உம்பர் உள்ளாய் - பரமாகாயத்திலிருப்பவனே, மன்னும் - நிலைபெற்ற, உத்தரகோச மங்கைக்கரசே - திருவுத்தரகோச மங்கைப்பதிநாதனே, அம்பரமே - ஆகாயமே நிலனே - பூமியே, அனல்காலொடு அப்பு ஆனவனே - நெருப்பு காற்று என்பவற்றோடு நீருமாயிருப்பவனே, கொம்பர் இல்லா - கொழுகொம்பில்லாத, கொடிபோல் - கொடியைப்போல, அலமந்தனன் - சுழன்றேன், கோமளமே - கோமளரூபனே, வெம்புகின்றேனை - இவ்வாறு தவிக்கின்ற என்னை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கைக்கரசனே ! கொழுகொம்பில்லாத கொடிபோலச் சுழன்று வருந்தினேன், என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி -ரை.) கொழுகொம்பு - கொடிகள்பற்றியேறிப் பந்தலிற் படர்தற்கு நடுங் கம்பு. கொம்பு கொம்பர் என்றது குற்றியலுகரப்போலி. கோமளம்-இளமையழகு, அது இங்கு அதனையுடைய இறைவனுக்காயிற்று. அலமந்தனன்-என்பதில் பகுதி-அலமா. கோமளம் இளமைச்செவ்வி, ஆங்கு அது அதனையுடையவனுக்காயிற்று. (௨௰)

ஆனைவெம்போரிற்குறுந்தூறெனப்புலனாலலைப்புண்
டேனையெந்தாய்விட்டிடுதிகண்டாய்வினையேன்மனத்துத்
தேனையும்பாலையுங்கன்னலையும்மமுதத்தையுமொத்
தூனையுமென்பினையும்முருக்காநின்றவொண்மையனே.

(ப - ரை.) வினையேன் மனத்து - தீவினையை யுடையவனாகிய எனது மனத்தின்கண், தேனையும் - தேனினையும், பாலையும் - பாலினையும், கன்னலையும் - கருப்பஞ் சாற்றையும், அமுதத்தையும் - அமுதத்தினையும், ஒத்து - நிகர்த்து (இனிமையாயிருந்து), ஊனையும் - உடம்பையும், என்பினையும் - (உடம்புக்குள்ளிருக்கிற) எலும்பையும், உருக்கா நின்ற - உருகச்செய்கின்ற, ஒண்மையனே - அழகுடையவனே, ஆனை வெம்போரில் - யானையினது வெவ்விய சண்டையில் அகப்பட்ட, குறுந்தூறு என - சிறுசெடிகள் அலைவதுபோல, புலனால் - ஐம்புலன்களால் அலைப்புண்டேனை - அலைக்கப்பட்ட என், எந்தாய் - என் எந்தையே, விட்டிடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) அடியேன், மனத்துக்குத் தேன் முதலியவற்றை ஒத்து எலும்பையும் உருகப்பண்ணுகிற தலைவனே! யானைப் போரிலகப்பட்ட சிறு செடிகளலைவதைப்போல, ஐம்புலவாசையால் அலைக்கப்பட்டவனாகிய என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம். (உக)

ஒண்மையனேதிருநீற்றையுத்தூளித்தொளிமிளிரும்
வெண்மையனேவிட்டிடுதிகண்டாய்மெய்யடியவர்கட்
கண்மையனேயென்றுஞ்சேயாய்பிறர்க்கறிதற்கரிதாம்
பெண்மையனேதொன்மையாண்மையனேயலிப்பெற்றியனே.

(ப - ரை.) ஒண்மையனே - அழகுடையானே, திருநீற்றை உத்தூளித்து - திருவெண்ணீற்றைப் பூசி (அதனால்), ஒளிமிளிரும் வெண்மையனே - ஒளி விளங்காநின்ற வெள்ளை நிறத்தையுடையவனே, மெய் அடியவர்கட்கு - மெய்யடியார்க்கு, அண்மையனே - சமீபமாயிருப்பவனே, பிறர்க்கு என்றும் சேயாய் - பிறருக்கு எக்காலத்தும் தூரமாயிருப்பவனே, அறிதற்கு அரிது ஆம் பெண்மையனே - அறிதற்கரிதாகிய பெண்மையையுடையானே, தொன்மை ஆண்மையனே - பழமையாகிய ஆண் தன்மையுடையானே, அலிப்பெற்றியனே - அலித்தன்மை யுடையானே, விட்டிடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) அழகு முதலாயினவற்றை யுடையவனே! என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) "திருநீற்றை யுத்தூளித் தொளிமிளிரும் வெண்மையனே" என்றமையால் இறைவனது இயற்கை நிறம் செம்மை யென்பது பெறப்பட்டது. "செந்நிற மேனி வெண்ணீறணிவோன்" என்பது திருக்கோவை

யார். உத்தூளித்தல் - உடம்பு முழுதும் பூசுதல். மேலைச் செய்யுளின் இறுதியில் ஒண்மையனே என்றது அமையாது இச்செய்யுளின் முதலிலும் அச்சொல்லையே எடுத்ததனால் தாம் இறைவனது அழகின் பெருக்கத்தில் அகப்பட்டமை விளங்குகின்றது. சேய்மை - தூரம். (உஉ)

பெற்றதுகொண்டுபிழையேபெருக்கிச்சுருக்குமன்பின்
வெற்றடியேனை விடுதிகண்டாய்விடிலோகெடுவேன்
மற்றடியேன்றன்னைத் தாங்குநரில்லையென்வாழ்முதலே
உற்றடியேன்மிகத்தேறிநின்றேனெனக்குள்ளவனே.

(ப - ரை.) என் வாழ்முதலே - எனது வாழ்வுக்கு முதற்பொருளே, உற்று - உன்னையடைந்து, அடியேன் மிகத்தேறி நின்றேன் - அடியேன் மிகவுந் தெளிந்து நின்றேன், எனக்கு உள்ளவனே - எனக்குள்ளிருப்பவனே, பெற்றதுகொண்டு - அருமையாகப் பெற்ற இவ்வுடம்பைக் கொண்டு, பிழையே பெருக்கி - தவறுகளையே விருத்தியடைவித்து, சுருக்கும் அன்பின் - குறைந்த அன்போடு கூடினமையால், வெற்றடியேனை - வெறுமையாகிய அடியேனை, விடுதி-கைவிடுகின்றனையோ, விடிலோ-(அப்படி) கைவிட்டாலோ, கெடுவேன்-அழிவேன், அடியேனைத் தாங்குநர்மற்று இல்லை - அடியேனைத் தாங்குவோர் வேறொருவருமில்லை. எ - று.

(க - ரை.) இறைவனே! அரிதாகப் பெற்ற இவ்வுடம்பைக் கொண்டு பிறவிக் கேதுவாகிய குற்றங்களை விருத்தியாக்கி அன்பில்லாதவனாய்த் திரிகின்றேனாயினும், என்னை ஆதரிப்போர் வேறொருவருமில்லையாதலால் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) பெற்றது - அருமையாய்க் கிடைக்கப் பெற்றது, (மானுடசரீரம்). இது கிடைத்ததனால் உய்தற்குரிய நன்னெறியை விடுத்துப் பிறவிக் கேதுவாகிய தீநெறிக்குட் சென்றுழல்கின்றனன் என்பதற்கு, "பெற்றது கொண்டு பிழையே பெருக்கி" என்றும், உனக்கன்பு செய்யாமையால் வெறுமையேன் என்றற்கு "சுருக்கு மன்பின் வெற்றடியேன்" என்றும் கூறினர். மற்று பிறிதென்னும் பொருளது. உள்ளவன் என்றது அந்தரியாமியாயிருப்பவன் என்றபடி. (உங)

உள்ளனவேநிற்கவில்லனசெய்யுமையற்றுழனி
வெள்ளனலேனை விடுதிகண்டாய்வியன்மாத்தடக்கைப்
பொள்ளனல்வேழத்துரியாய்புலனின்கட்போதலொட்டா
மெள்ளனவேமொய்க்குநெய்க்குடந்தன்னையெறும்பெனவே.

(ப - ரை,) வியன் - மிகவும், மா - பெரிய, தடம் - நீண்ட, கை - துதிக்கையின் கண், பொள்ளல் - துவாரத்தையுடைய, நல்வேழத்து உரியாய் - அழ

கிய யானையின் தோலை யுடையவனே, புலன் - ஐம்புலன்களும், நின்கண் போதல் ஒட்டா - உன்னிடத்துச் சென்றணுக வொட்டா தனவாகி, நெய்க்குடம் தன்னை எறும்பு என - நெய்க்குடத்தை எறும்பு மொய்ப்பதுபோல, மெள்ளன மொய்க்கும் - என்னை மெல்லெலன மொய்த்துக்கொள்ளா நின்றன, (ஆதலால்) உள்ளன நிற்க - உண்மையாயினவை யிருக்க, இல்லனவே செய்யும் - பொய்யாயினவற்றையே செய்கிற, மையல் துழனி வெள்ளன் - ஆசையாகிய ஒலியோடு கூடிய பெருக்கில் விழுந்தேனாகி, அல்லேனை - உனக்காளல்லேனை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை) உண்மையானவை யிருக்கப் பொய்யானவற்றையே செய்கின்றவனாயினும் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) என்றும் உண்டாதல் மெய்க்கும், இல்லையாதல் பொய்க்கும் உருவமாதலால் அவற்றை உள்ளன இல்லன என்றார். துழனியென்பது வெள்ளத்துக்குச் சாதி விசேடணம், அல் - இருள் எனினுமாம். இப்பொருள் கொள்ளுங்கால் அல்லேனை என்பதற்கு அஞ்ஞான விருளை யுடையேன் என்றுரைக்க. "நெய்க்குடந் தன்னை யெறும்பென" என்ற உவமை புலன்களால் தாம் அரிப்புண்டு வருந்துவதை விளக்கி நின்றது. (உச)

எறும்பிடைநாங்கூழெனப்புலனாலரிப்புண்டலந்த
வெறுந்தமியேனைவிடுதிகண்டாய்வெய்யகூற்றொடுங்க
உறுங்கடிப்போதவையேயுணர்வுற்றவரும்பரும்பர்
பெறும்பதமேயடியார்பெயராதபெருமையனே.

(ப - ரை.) வெய்ய - கொடிய, கூற்று - யமன், ஒடுங்க - ஒடுங்கும்படி, உறும் - அவன்மேல் வந்த, கடிப்போது அவையே - மணம் பொருந்திய தாமரை மலர்களையொத்த உன் திருவடிகளாகிய அவற்றையே, உணர்வுற்றவர் - அறிந்தவர்களாகி, உம்பர் - தேவர் பதவிகளுக்கும், உம்பர் - மேலாக, பெறும் - சொல்லப்பெற்ற, பதம் ஏய் - மோக்ஷபதத்தை அடைந்த, அடியார் - உன் அடியவரால், பெயராத - விட்டுநீங்காத, பெருமையனே - பெருமையையுடையவனே, எறும்பு இடை - பல எறும்புகட் கிடையே அகப்பட்ட, நாங்கூழ் என - பூநாகம் அரிப்புண்டு வருந்தினாற்போல, புலனால் - புலன்களினிடையே யகப்பட்டு, அரிப்புண்டு அலந்த - அரிப்புண்டு வருந்தின, வெறும் தமியேனை - பசையற்ற வென்னை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) கடவளே! அடியேன் எறும்பின் கூட்டத்தினிடையே யகப்பட்டு வருந்துகின்ற நாங்கூழ்போல, ஐம்புலன்களினிடையே யகப்பட்டு வருந்துகின்றேன், என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) நாங் கூழ் - பூநாகம். (நாகப்பூச்சி) இது மண்ணுளிருப்பதாகிய ஓர்வகைக் கிருமி. "வெய்ய கூற்றொடுங் கவுறும்" என்ற குறிப்பால் கடிப்போது திருவடியை யுணர்த்திற்று. கடி - மணம். (உரு)

பெருநீரறச்சிறுமீன் றுவண்டாங்குநினைப்பிரிந்த
வெருநீர்மையேனை விடுதிகண்டாய்வியன் கங்கைபொங்கி
வருநீர் மடுவுண்மலைச்சிறுதோணிவடிவின்வெள்ளைக்
குருநீர்மதிபொதியுஞ்சடைவானக்கொழுமணியே.

(ப - ரை.) வியன் - பெரிய, கங்கை - கங்காநதியினது, பொங்கிவரும் நீர்- பொங்கிவருகின்ற நீருள்ள, மடுவுள் - மடுவினிடத்து, மலை - தடுமாறுதலையுடைய, சிறு தோணிவடிவின் - சிறிய புணையின் வடிவம்போல, வெள்ளைக்குரு - வெண்ணிறமுள்ள, நீர் - தன்மை பொருந்திய, மதிபொதியும் - பிறைச்சந்திரன் தவழ்கின்ற, சடை - சடாபாரத்தையுடைய, வானக்கொழுமணியே - சிதாகாயத்தில் விளங்குகின்ற செழியமாணிக்கமே, பெருநீர் - மிகுந்த நீரானது, அற - வற்றிப்போக, சிறுமீன் துவண்டாங்கு - (அந்நீரிலிருந்த சிறுமீன்கள் துடித்தாற்போல, நினைப்பிரிந்த - உன்னைப்பிரிந்த, வெருநீர்மையேனை - அஞ்சமியற்கையுள்ள என்னை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) கடவுளே ! பெருநீர்வற்றிப் போதலும் அதிலிருந்த சிறுமீன்கள் துடித்தாற்போல உன்னைப்பிரிந்து துடிக்கின்றேன், என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) சிவபெருமானது சடாபாரத்திலிருக்கிற கங்கையின்மீது பிறை அணியப்பட்டிருப்பது ஒரு மடுவில் தோணிபொன்று மிதப்பதுபோலத் தோன்றுதலால் "வியன்கங்கை பொங்கிவரு நீர் மடுவுண் மலைச் சிறுதோணி வடிவின் வெள்ளைக் குருநீர் மதிபொதியும் சடை" என்றார். துவண்டாங்கு என்பதில் நிலைமொழியீற்றகரம் தொகுத்தல். வெருவும் நீர்மை என்பது வெருநீர்மை யெனத் தொக்குநின்றது. வடிவின் என்பதில் - இன் ஐந்தாவதினுருப்புப்பொருளது. (உக)

கொழுமணியேர்நகையார்கொங்கைக்குன்றிடைச்சென்றுகுன்றி
விழுமடியேனைவிடுதிகண்டாய்மெய்ம்முழுதுங்கம்பித்
தழுமடியாரிடையார்த்துவைத்தாட்கொண்டருளியென்னைக்
கழுமணியேயின்னுங்காட்டுகண்டாய்நின்புலன்கழலே.

(ப - ரை.) கழுமணியே - கழுவிய மாணிக்கமே, கொழுமணி ஏர்நகையார் - செழுமையாகிய முத்தையொத்த அழகிய பற்களையுடைய மாதரது, கொங்கைக்குன்றிடை - முலையாகிய மலைகளின்மேல், சென்று குன்றிவிழும் - போயறிவழிந்து விழுகின்ற, அடியேனை - அடியனேனை, விடுதி - கைவிடுகின்றனையோ, மெய்ம்முழுதும் கம்பித்து - உடல்முழுதும் நடுக்கி, அழும் அடியாரிடை - (ஆநந்தக்கண்ணீர்விட்டு) அழுகின்ற அடியார் நடுவில், என்னை ஆர்த்துவைத்து - என்னைச்சேர்த்துவைத்து, ஆட்கொண்டருளி - அடிமைகொண்டருளி, நின்புலன்கழல் - உனது (அடித்தார்க்கு) அறிவை உதவுகின்ற திருவடியை, இன்னும்காட்டு - இன்னமொருகால் காட்சிதந்தருளவேண்டும். எ-று.

(க - ரை.) கடவுளே! மாதர் மயக்கத்தில் அகப்பட்டு வருந்தி யழிகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்று. உன் அடியார் நடுவில் என்னைச் சேர்த்து உன் திருவடியை எனக்குக்காட்டவேண்டு மென்பதாம்.

(வி - ரை.) நகைக்கு உவமையாகப் புணர்க்கப்பட்டதனால் கொழுமணி யென்பது செழுமையாகிய முத்தென்று உரைக்கலாயிற்று. புலன் - ஞானம். ஞானத்தைத்தருதலால் "புலன்கழல்" என்றார். பொலன் கழலெனவும்பாடம்.

புலன்கடிகைப்பிக்கயானுந்திகைத்திங்கோர்பொய்ந்நெறிக்கே
விலங்குகின்றேனை விடுதிகண்டாய்விண்ணுமண்ணுமெல்லாம்
கலங்கமுந்நீர்நஞ்சமுதுசெய்தாய்கருணாகரனே
துலங்குகின்றேனடியேனுடையாயென்றொழுகுலமே.

(ப - ரை.) விண்ணும் மண்ணும் எல்லாம் - விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தருமாகிய எல்லாரும், கலங்க பயந்து - நடுங்கக்கண்டு, (அவர்களுக்கிரங்கி) முந்நீர்நஞ்சு - கடலில் பிறந்த விஷத்தை, அமுதுசெய்தாய் - அமுதுசெய்தருளினை, கருணாகரனே - கிருபைக்கிருப்பிட மானவனே, அடியேன் துலங்குகின்றேன் - அடியேனும் பிறப்பு முதலியவைகளுக்கஞ்சி நடுங்காநின்றேன், உடையாய் - உடையவனே, என்தொழுகுலமே - என் வேதியனே, புலன்கள் திகைப்பிக்க - ஐம்புலன்கள் திகைக்கச் செய்தலால், யானும் திகைத்து - நானுந்திகைத்து, இங்கு - இவ்விடத்தில், ஓர் பொய்நெறிக்கே - ஒப்பற்ற பொய்வழியிலே, விலங்குகின்றேனை - (உன்மெய்நெறியைவிட்டு) விலகிச்செல்லாநின்ற என்னை, விடுதி - கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) கடவுளே! ஐம்பிலன்கள் திகைப்பிக்கத் திகைத்து, பொய்ந்நெறிபூண்டு உன்னைவிட்டுத் திரிகின்ற என்னைக்கைவிடுதல் உனக்குத் தகுதியன்று என்பதாம்.

(வி - ரை.) கடனஞ்சையஞ்சி நடுங்கின விண்ணுலகினரும் மண்ணுலகினர் ஆகிய எல்லாரையும் அச்சந்தீர்த்ததுபோல, பிறவியாதிகளை யஞ்சி நடுங்குகின்ற என்னையும் அச்சந்தவிர்த்தருள வேண்டுமென்றற்கு, விண்ணும்மண்ணு மெல்லாம் கலங்க முந்நீர் நஞ்சு அமுதுசெய்தாய் அடியேன் துலங்குகின்றேன். என்றார். துளங்குகின்றேன் எனற்பாலது துலங்குகின்றேன் என நின்றது. திகைப்பித்தல் - பிரமிக்கப்பண்ணுதல். முந்நீர் - மூன்றநீர். அவை ஆற்றுநீர், வேற்றுநீர், ஊற்றுநீர் என்பன, இவற்றையுடைத்தாதலால் கடல்முந்நீர் எனப்பட்டது. இவ்வாறன்றி படைத்தல், காத்தல், அழித்தல். என்னு முக்குணங்களையும் உடைத்தாதலால் முந்நீர் என்பாரும் உளர். முன்னீர் எனப் பாடமோதி முற்பட்ட நீரெனக் கூறலுமாம். துளங்கல் என்பது வடநூல் மதம்பற்றி துலங்கல் என வந்தது. அன்றி எதுகை யின்பப்பொருட்டு வந்தது என்றலும் பொருந்தும். (உஅ)

குலங்களைந்தாய்களைந்தாயென்னைக்குற்றங்கொற்றச்சிலையாம்
விலங்கலெந்தாய்விட்டிடுதிகண்டாய்பொன்னின்மின்னுகொன்றை
அலங்கலந்தாமரைமேனியப்பாவொப்பிலாதவனே
மலங்களைந்தாற்சுழல்வன்றயிரிற்பொருமத்துறவே.

(ப - ரை.) பொன்னின் மின்னு - பொன்போல மின்னுகின்ற, கொன்றை அலங்கல் - கொன்றைமலர் மாலையைத்தரித்த, அம்தாமரை மேனி அப்பா - அழகிய செந்தாமரை மலர்போன்ற திருமேனியையுடைய ஐயனே, ஒப்பு இல்லாதவனே - சமானரஹிதனே, பொரும் மத்துஉற - உடைக்கின்ற மத்துப்பொருந்தின வளவில், தயிரின் - தயிர் சுழல்வதுபோல, மலங்கள் ஐந்தால் சுழல்வன் - பஞ்சமலங்களால் சுழலாகின்றேன், குலம் களைந்தாய் - (இயல்பாகவே) பாசத்தினின்றும் நீங்கினின்றவனே, என்னைக் குற்றம் களைந்தாய் - என்னைக் குற்றங் கடிந்தாண்டவனே, விலங்கல் ஆம் - மேருமலையாகிய, கொற்றச்சிலை - வெற்றி வில்லையுடைய, எந்தாய் - எந்தையே, விட்டிடுதி——. எ - று.

(க - ரை.) இறைவனே ! பஞ்சமலங்களால் மத்திட்ட தயிர்போலக் கலங்காநின்றேன். என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) விலங்கல் - மலை. கொற்றச்சிலையாம் விலங்கல் என்றமையால் மேருமலைக்காயிற்று - மேனியென்றமையால் தாமரை யென்றது செந்தாமரை மலரைக் குறித்தது. பஞ்சமலங்களாவன:—ஆணவம், கன்மம், மாயை, வைந்தவியம், திரோதாயி என்பன. (௨௯)

மத்துறுதண்டயிரிற்புலன்றீக்கதுவக்கலங்கி
வித்துறுவேனைவிடுதிகண்டாய்வெண்டலைமிலைச்சிக்
கொத்துறுபோதுமிலைந்துகுடர்நெடுமாலைசுற்றித்
தத்துறுநீறுடனாரச்செஞ் சாந்தணிசச்சையனே.

(ப - ரை.) வெள்தலை மிலைச்சி - வெண்டலைமாலைகளை யணிந்து, கொத்து - கொத்துகளாக, உறு - பொருந்தியபோது கொன்றை மலர்மாலையை, மிலைந்து - சூடி, குடர் நெடு மாலைசுற்றி - குடல்களாகிய நெடிய மாலையைச் சுற்றி, தத்துறு - பரவின, நீறுடன் - திருவெண்ணீற்றோடு, ஆர - பொருந்த, செஞ்சாந்து அணி - செஞ்சந்தனத்தை அணிந்த, சச்சையனே - எல்லாப்பொருள்களுள்ளும் சாரமா யிருப்பவனே, புலன் தீ கதுவ - ஐம்புலன்களாகிய நெருப்புப்பற்ற, மத்து உறு தண் தயிரின்கலங்கி - மத்துப் பொருந்திய குளிர்ந்த தயிரைப்போலக் கலங்கி, வித்துஉறுவேனை - (அக்கலகத்துக்கு) விதையாயிருக்கிற என்னை, விடுதி-கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) கடவுளே ! ஐம்புலனாகிய தீப்பற்ற மத்திட்ட தயிர்போலக் கலங்கி வருந்துகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்,

(வி - ரை.) சத்தை - சாரம். அது வித்தை விச்சை யென நின்றாற்போல சச்சை யென நின்றது. (௩௰)

சச்சையனேமிக்கதண்புனல்விண்கானிலநெருப்பாம்
விச்சையனேவிட்டிடுதிகண்டாய்வெளியாய்கரியாய்
பச்சையனேசெய்யமேனியனேயொண்படவரவக்
கச்சையனேகடந்தாய்தடந்தாளவடற்கரியே.

(ப - ரை.) சச்சையனே - எல்லாப் பொருள்களுள்ளும் சாரமாயிருப்பவனே, மிக்கதண்புனல் - மிக்க குளிர்ச்சியுள்ள நீரும், விண் - ஆகாயமும், கால் - காற்றும், நிலம் - பூமியும், நெருப்பு - தீயும், ஆம் - ஆகிய பஞ்சபூதவடிவாய் நிற்கின்ற, விச்சையனே - வித்தையை உடையவனே, வெளியாய்-வெள்ளியனே, கரியாய் - கரியானே, பச்சையனே - பசியனே, செய்யமேனியனே - செவந்ததிருமேனியை யுடையவனே, ஒள் - அழகிய, படம் - படத்தையுடைய, அரவம் - கரும்பாம்பாகிய, கச்சையனே-கச்சையை யுடையவனே, தடம்தாள் - பெரிய அடிகளையுடைய, அடல்கரி - வலிஅமைந்த யானையை, கடந்தாய்-வென்றவனே, விட்டிடுதி-என்னைக் கைவிடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) இறைவனே! என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) ஒருவனே பஞ்சபூதங்களாதலும், வெளியனுதலும், பசியனுதலும், செம்மையனுதலும் வியப்புக்குக் காரணமாதலால் இது ஒருவிந்தையாமென்றற்கு "விச்சையனே" என்றார். படவரவக் கச்சையனென்றது - தாருகவன முனிவர்கள் சிவபெருமானை யெதிர்த்து ஓர் யாகஞ்செய்து அந்த யாகத்தீயிலுற்பவித்த சர்ப்பங்களை யப்பெருமான்மீது ஏவ, அச்சிவபெருமான் அவற்றை ஆபரணங்களாகவும் கச்சையாகவு மணிந்தமையை. அவ்வாறணிந்த சர்ப்பங்கள் கருநிறமுடையன வென்பதை "மிடற்றில் விடமுடையீரும் மிடத்தை நக்கி, மிடற்றில் விடங்கொண்டவாறே - மிடற்றகத்து - மைத்தாமிருள்போலும் வண்ணங்கரிதாலோ வைத்தாடுறும்மார் பிற்பாம்பு" என்ற அற்புதத்திருவந்தாதியானு முணர்க. (௬௧)

அடற்கரிபோலைம்புலன்களுக்கஞ்சியழிந்தவென்னை
விடற்கரியாய்விட்டிடுதிகண்டாய்விழுத்தொண்டர்க்கல்லால்
தொடற்கரியாய்சுடர்மாமணியேசுடுதீச்சுழலக்
கடற்கரிதாயெழுநஞ்சமுதாக்குங்கறைக்கண்டனே.

(ப - ரை.) விழுதொண்டர்க்கு அல்லால் - மேன்மையாகிய உன்னடியவர்க்கே யல்லாமல், தொடற்கு அரியாய் - (பிறரால்) அணுகுதற்கரியவனே, சுடர்மாமணியே - ஒளிவிடுகின்ற பெரியமாணிக்கமே, சுடு தீ சுழல - சுடுகின்ற வடவாமுகாக்கினியுஞ் சுழலாநிற்க, கடற்கு - கடலின்கண், அரிதாய் எழும் நஞ்சு - அரிப்பிரமாதி தேவர்களும் இனி பிழைப்பதரிதென்றஞ்சும்படி உற்பவித்த விஷத்தை, அமுது ஆக்கும் - அமுதாக்கிக்கொண்டதனுல் உளதாகிய,

கறைக்கண்டனே - நீலகண்டனே, அடல்கரிபோல் - வலிமிகுந்த யானையை யொத்த, ஐம்புலன்களுக்கு அஞ்சி - பஞ்சேந்திரியங்களுக்கும் பயந்து, அழிந்த என்னை - நசித்த என்னை, விடற்கு அரியாய்-விடுதற்கு திருவுளமில்லாதவனே, விட்டிடுதி - கை விடுகின்றனையோ. எ - று.

(க - ரை.) கடவுளே! வலிய யானைகளை நிகர்த்த பஞ்சேந்திரியங்களுக் கஞ்சி யழிகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) போல் - வினைத்தொகை. அழிதல் - மனவலி குறைதல். தொண்டர்க்கல்லால் என்றமையால் தொடற்கரிதாதல் பிரதேவர்க்கென்பது பெறப்பட்டது. சுடுதீ இவ்விடத்து வடவைத் தீயெனக்கொள்க. மந்தரமலையாகிய மத்திட்டுக் கடைதலால் கடற்கணுள்ள பொருள்கள் யாவுங் கலங்கின என்றற்கு "சுடுதீச் சுழல" என்றார். கடற்கு என்னும் நான்கனுருபு ஏழனுருபின் பொருளது. அரிதாதல் - இறைவனன்றி மற்றையர் அணுகவொண்ணாதஞ்சின்மையை விளக்கின்றது. (௬௨)

கண்டதுசெய்துகருணைமட்டுப்பருகிக்களித்து
மிண்டுகின்றேனைவிடுதிகண்டாய்நின்விரைமலர்த்தாள்
பண்டுதந்தாற்போற்பணித்துப்பணிசெயக்கூவித்தென்னைக்
கொண்டெனந்தாய்களையாய்களையாயகுதுகுதுப்பே.

(ப - ரை.) கண்டது செய்து - கண்டனவெல்லாம் செய்து, கருணைமட்டு பருகி - (உன்) அருளாகிய தேனை உண்டு, களித்து - களிப்படைந்து, மிண்டுகின்றேனை - மதத்துத் திரியாநின்ற என்னை, விடுதி - கைவிடப் போகிறாய், நின் விரைமலர்தாள் - வாசனை பொருந்திய தாமரைமலர்போன்ற உனது திருவடியை, பண்டு தந்தாற்போல் - முன்னே யநுக்கிரகித்தாற்போல, பணித்து - கொடுத்தருளி, பணிசெயக் கூவித்து - உன் திருத்தொண்டு செய்ய அழைத்து, என்னைக்கொண்டு - என்னை யுனக்கே ஆள் ஆக்கிக்கொண்டு, என் எந்தாய் - என் தந்தையே, களை ஆய - குற்றங்களைச் செய்தலால் உண்டாகிய, குதுகுதுப்பு - மிகு மகிழ்ச்சியை, களையாய் - வேரறச் செய்தருள். எ - று.

(க - ரை.) இறைவனே! விரும்பினவற்றைச் செய்து மனம்போன போக்காகத் திரிகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்று. முன்னே உன் திருவடியைத் தந்தருளினாற்போல இன்றும் தந்தருளி, என்னை உன் குற்றேவலுக்கு ஆளாக்கிக்கொள்ளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) கூவுவித்து என்பது கூவித்து எனக் குறைந்து நின்றது. நெருப்புத் தணிந்து ஒரு சிறுபொறி எஞ்சி நின்றாலும், அது விருத்தியடைந்து மீட்டும் வருத்துமாதலால் வேரோடு, நீக்குக என்பதற்கு "களையாய் களையாய குதுகுதுப்பே" என்றார். குதுகுலிப்பு - மிகு மகிழ்ச்சி, அது இங்கு குதுகுதுப்பு என வந்தது. (௬௩)

குதுகுதுப்பின்றிநின்றென்குறிப்பேசெய்துநின்குறிப்பில்
விதுவிதுப்பேனைவிடுதிகண்டாய்விரையார்ந்தினிய
மதுமதுப்போன்றென்னைவாழைப்பழத்தின்மனங்கனிவித்
தெதிர்வதெப்போதுபயில்விக்கயிலைப்பரம்பரனே.

(ப - ரை.) பயில் - நெருங்கிய, வீ - மலர்ச்சோலைகளுள்ள, கயிலை-திருக் கைலையில்வாழ்கின்ற, பரம்பரனே-பழையோனே, குதுகுதுப்பு இன்றி - உன் திருவுளமகிழும்படியான நடையிலில்லாமல், நின்று - தீநெறிக்கண்நின்று, என் குறிப்பேசெய்து - என் குறிப்பின்படியே நடந்து, நின்குறிப்பில்-உன் திருவுள மகிழ்ச்சிக்கு, விதுவிதுப்பு - ஆசைப்படுகிற, எனை - உன்னை, விடுதி - கைவிடுகின்றனையோ, விரை ஆர்ந்து இனிய - மணம் நிறைந்து இனிதாயிருக்கிற, மதுமதுப்போன்று - மிகுந்த தேன்போன்று, வாழைப்பழத்தின் - வாழைப்பழத்தைப்போல, என்னை - அடியேனை, மனம் கனிவித்து-மனங்குழையப்பண்ணி, எதிர்வது - நீ பிரத்தியக்ஷமாவது, எப்போது-எக்காலம். எ - று.

(க - ரை.) திருக்கயிலைக்கிறைவனே ! என் எண்ணத்தின்படியே செய்து உன் திருவருளுக்கு ஆட்படுகிற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்று. அடியேனது மனத்தைக் குழையச்செய்து நீ யென்னைச் சந்திப்பது எந்நாளோ என்பதாம்.

(வி - ரை.) பயில் என்பதற்குச் சொல்வாய் எனவும் பொருள் கூறலாம். வீ - மலர். இது மலர்களையுடைய சோலைக்காயிற்று. இது வி எனக் குறுகி நின்றது. இதனைக் குறுக்கல் விகாரமாகக் கொள்ளாமல். வி - என்பதற்கு ஆகாயம் எனப் பொருள் கொண்டு கைலைக்கு அடையாக்கி ஆகாயத்தை அளாவிய கைலை என்றுரைப்பினும் பொருந்தும். (ருச)

பரம்பரனேநின்பழவடியாரொடுமென்படிறு
விரும்பரனேவிட்டிடுதிகண்டாய்மென்முயற்கறையின்
அரும்பரநேர்வைத்தணிந்தாய்பிறவியைவாயரவம்
பொரும்பெருமான்வினையேன்மனமஞ்சிப்பொதும்புறவே.

(ப - ரை.) மெல் - மெல்லிய, முயற்கறையின் அரும்பு-முயல்போன்றகளங்கத்தினையுடைய பிறைக்கொழுந்தையும், அர - பாம்பையும், நேர்வைத்து - சமமாக வைத்து, அணிந்தாய் - அணிந்தவனே, பெருமான் - எம்பிரானே, வினையேன் - தீவினையுடைய நான், மனம் அஞ்சி - மனம் நடுங்கி, பொதும்பு உற - புகலிடம் அடையும்படி, பிறவி - பிறப்பாகிய, ஐவாய் அரவம் - ஐந்தலைநாகம், பொரும் - சீறுகின்றது, பரம்பரனே - பழையோனே, நின்பழ அடியாரொடும்- உன் பழவடியார்களுடன், என்படிறு - என்வஞ்ச ஒழுக்கத்தையும், விரும்பு - விரும்புகின்ற, அரனே - சங்காரகர்த்தனே, விட்டிடுதி - என்னைக் கைவிடுகின்றனையோ, எ - று.

(க - ரை.) இறைவனே! பிறவியாகிய ஐந்தலை நாகம் நான் அஞ்சும்படி சீறுகின்றது, என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) முயற்கறை - முயல்வடிவாய்த் தோன்றும் களங்கம். அது இங்கு அதனையுடைய சந்திரனை உணர்த்திற்று. இளம்பிறையாதலால் அரும்பு என்றார். ஒன்றற்கொன்று பகைப்பொருள்களாகிய பாம்பையும் சந்திரனையும் விரோதமின்றி வாழும்படி சடாபாரத்தில் அணிந்திருத்தலால் இறைவனை "வெண்முயற்கறையி னரும்பரநேர் வைத்தணிந்தாய்" என்றார். பொந்து - மரப்பொந்து - அது இங்கு புகலிடத்துக் காயிற்று. (ருரு)

பொதும்புறுதீப்போற்புகைந்தெரியப்புலன்றீக்கதுவ
வெதும்புறுவேனை விடுதிகண்டாய்விரையார்நறவம்
ததும்புமந்தாரத்திற்றாரம்பயின்றுமந்தம்முரல்வண்
டதும்புங்கொழுந்தேனவிர்சடைவானத்தடலரைசே.

(ப - ரை.) விரை ஆர் நறவம் ததும்பும் - மணந்தங்கிய தேன்வழிகின்ற, மந்தாரத்தின் - மந்தாரமென்னும் விருட்சத்தில், தாரம் பயின்று - மந்த இசையைப் பாடி, அந்தம் முரல் - அழகாக சப்திக்கின்ற, வண்டு அதும்பும் - சுரும்பினங்கள் படிதற்குரிய, கொழுந்தேன் - செழுந்தேனோடு, அவிர் - விளங்குகின்ற, சடை - சடாபாரத்தையுடைய, வானத்து அடல் அரைசே - பரமாகாய மாகிய வுலகத்திற்கு வலிய அரசனே, பொதும்பு உறு தீபோல் - மரச்செறிவிற் பற்றிய நெருப்பைப்போல, புகைந்து எரி - புகைவிட்டெரிகின்ற, அப்புலன் - அந்தப்புலன்களாகிய, தீ-நெருப்புகதுவ பற்றுதலால், வெதும்புறுவேனை-சுடப்படுகின்ற என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) பரமாகாயத்திலுள்ள இறைவனே! ஐம்புலன்களாகிய நெருப்புப்பற்றியெரிய வெதும்பி அதனால் வருந்தாநின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன் றென்பதாம்.

(வி - ரை.) பொதும்பு - மரச்செறிவு, புலன் - பஞ்சேந்திரியங்கள், நறவம் - தேன் எனினுமாம். முரலுதல் - சத்தித்தல். அதும்பல் - அழுந்தல். அடல் - வெற்றி யெனினுமாம். புலன்கள் அடுத்திருக்கவும், அச்சத்தால் அப்புலன் எனச் சேய்மைச் சுட்டாற் சுட்டினார். (ருசு)

அரைசேயறியாச்சிறியேன்பிழைக்கஞ்சலென்னினல்லால்
விரைசேர்முடியாய்விடுதிகண்டாய்வெண்ணகைக்கருங்கண்
திரைசேர்மடந்தைமணந்ததிருப்பொற்பதப்புயங்கா
வரைசேர்ந்தடர்ந்தென்னவல்வினைதான்வந்தடர்வனவே.

(ப - ரை.) வெள் நகை - வெண்மையாகிய பல்வரிசையும், கருங்கண் திரை - கருங்கண்ணாகிய கடலும், சேர் - பொருந்திய, மடந்தை - உமாதேவி, மணந்த - தழுவிய, திருப்பொன்பதம் - அழகிய பொன்போன்ற திருமேனியழ

கையுடைய, புயங்கா - சர்ப்பாபரணனே, வல்வினை - வலியவினைகள், வரைசேர்ந்து - இரண்டு மலைகளொன்றாகக் கூடி, அடர்ந்து என்ன-நெருக்குதல்போல, வந்து அடர்வன-வந்து என்னைநெருக்குகின்றன, (ஆகையால்) அரைசே - அரசனே, அறியா சிறியேன் - அறியாமையை யுடைய சிறியேனது, பிழைக்கு - குற்றத்தின் பொருட்டு, அஞ்சல் என்னின் அல்லால் - நீ அஞ்சலென்றுசொன்னாலல்லது, (உய்யேன்) விரைசேர் முடியாய் - மணந்தங்கிய முடியையுடையவனே, விடுதி-கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) இறைவனே ! கொடியவினைகள் மலைகள்போல வந்து என்னை நெருக்குதலால் வருந்துகின்றேன். இத்தகையனாகிய வென்னை கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) வினை இரண்டாதலால் மலையும் இரண்டென் றுரைக்கலாயிற்று திரை - திரைதலையுடையது, இது முதனிலைத் தொழிலாகுபெயர். தாம் - அசை. (கூள)

அடர்புலனானிற்பிரிந்தஞ்சியஞ்சொனல்லாரவர்தம்
விடர்விடலேனை விடுதிகண்டாய்விரிந்தெரியும்
சுடரனையாய்சுடுகாட்டரசேதொழும்பர்க்கமுதே
தொடர்வரியாய்தமியேன்றனிநீக்குந்தனித்துணையே.

(ப - ரை ) விரிந்து எரியும் - விரிந்தெரியாநின்ற, சுடர் அனையாய் - நெருப்பை யொத்தவனே, சுடுகாட்டு அரசே - மயான நடனவேந்தே, தொழும்பர்க்கு அமுதே - தொண்டர்க்கமுதமே, தொடர்வு அரியாய் - தொடர்தற் கரியவனே, தமியேன் - தமியேனது, தனி நீக்கும் - தனிமையை நீக்குகின்ற, தனித்துணையே - ஒப்பற்றதுணையே, அடர்புலனால் - வருத்துகின்ற புலன்களால், நின்பிரிந்து அஞ்சி - உன்னைப்பிரிந்து பயந்து, அஞ்சொல் - இன் சொற்களையுடைய, நல்லார் - மாதர்களாகிய, அவர்தம் - அவர்களுடைய, விடர் விடலேனை - காட்டைவிட்டு நீங்குமாற்றலில்லாத என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) இறைவனே! புலன்களுக்குப் பயந்து உன்னை விட்டுப் பிரிந்து மாதர்மயக்கத்திற் பட்டு வருந்துகின்ற என்னைக்கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) இறைவன் முக்கரணங்களுக்கும் எட்டாதவனால் "தொடர்வரியாய்" என்றார். அடர்தல் - நெருக்குதல் எனினுமாம். விடர் - பிளப்பு, இதனைப்பெண்குறியை எனினுமாம். (கூஅ)

தனித்துணைநீநிற்கயான்றருக்கித்தலையானடந்த
வினைத்துணையேனை விடுதிகண்டாய்வினையேனுடைய
மனத்துணையேயென்றன்வாழ்முதலேயெனக்கெய்ப்பில்வைப்பே
தினைத்துணையேனும்பொறேன்றுயராக்கையின்றிண்வலையே.

(ப - ரை.) வினையேன் உடைய - வினையேனது, மனத்துணையே - உயிர்த் துணையே, என்றன் வாழ்முதலே - என் வாழ்வுக்கு முதற்காரணமே, எனக்கு

எய்ப்பில்வைப்பே - எனக்கு மெலிவுகாலத்தில் நிக்ஷேபமாயிருப்பவனே, துயர் ஆக்கையின் திண்வலை - துன்பக் குரம்பையாகிய உடம்பென்கிற திண்ணிய வலைப்பிணிப்பை, தினைத்துணையேனும் பொறேன் - இனி தினையளவாயினும் பொறுக்கமாட்டேன், தனித்துணை நீ நிற்க - ஒப்பற்ற துணையாகிய நீ யிருக்க, யான் தருக்கி - நான்கர்வித்து, தலையால் நடந்த - தலையினால் நடந்த, வினைத்துணையேனை - வினையையேதுணையாகக்கொண்டிருக்கிற என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) இறைவனே! ஒப்பற்ற துணையாகிய வுன்னைவிட்டு வினையைத் துணையாகப் பற்றியிருக்கிறேனாயினும் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்று. இந்த வுடற்சுமையைத் தாங்கமாட்டேன் என்பதாம்.

(வி - ரை.) தலையால் நடத்தல் - தலைகீழாக நடத்தல். மனத்துணை-உயிர்த்துணை. ஆக்கையின் றிண்வலை என்பதில் இன் அல்வழிச்சாரியை. "புணர்ப்போனிலனும் விசும்பும் பொருப்புந் தன்பூங்கழலின், துணர்ப்போதெனக் கணியாக்குந் தொல்லோன்" என்னுந் திருக்கோவையார் செய்யுளினும், கழலின் என்பதில் இன் இவ்வாறு வர்தலைமகாண்க. நடத்தற்குத் துணையாகிய காலிருக்கத் தலையால் நடத்தல் முடியாமைபோல, உயிர்த்துணையாகிய உன்னை விட்டு வினையைத்துணையாகப் பற்றினேன், நான் உய்வதெப்படி, என்றற்கு "தலையால் நடந்தவினைத்துணையேன்" என்றார். (நகூ)

வலைத்தலைமானன்னநோக்கியர்நோக்கின்வலையிற்பட்டு
மிலைத்தலைந்தேனைவிடுதிகண்டாய்வெண்மதியினொற்றைக்
கலைத்தலையாய்கருணாகரனேகயிலாயமென்னும்
மலைத்தலைவாமலையாண்மணவாளவென்வாழ்முதலே.

(ப - ரை.) வெண்மதியின் - வெள்ளிய சந்திரனுடைய, ஒற்றைக்கலை தலையாய் - ஒருகலையைச்சிரத்தணிந்தவனே, கருணாகரனே - கிருபாகரனே, கயிலாயம் என்னும் - கயிலாயமென்கிற, மலைத்தலைவா - மலைக்கிறைவனே, மலையாள்மணவாள - பார்வதிதேவிக்கு மணாளனே, என்வாழ்முதலே-என் வாழ்வுக்குக் காரணமானவனே, வலைத் தலைமான் அன்ன - வலையிலகப்பட்ட மானின் பார்வைபோன்ற, நோக்கியர்-மருண்ட பார்வையுடைய மாதரது, நோக்கின்-கண்களாகிய, வலையில்பட்டு - வலையிற்சிக்கி, மிலைத்து - (அவர்களோடு) கூடி, அலைந்தேனை - அலைந்த என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) இறைவனே! வலையிலகப்பட்ட மான்போன்ற பார்வையையுடைய மாதர்விருப்பத்தால் வருந்தாநின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) வலைத்தலை என்பதில் தலை ஏழனுருபு. நோக்கின் என்பதில் இன் மேலைச் செய்யுளிற் போல அல்வழிச்சாரியை. கருணாகரன் - கருணைக்குப் பிறப்பிடமாயிருப்பவன். மிலைத்தல் - பிரமித்தல். (சய)

முதலைச்செவ்வாய்ச்சியர்வேட்கைவெந்நீரிற்கடிப்பமூழ்கி
விதலைச்செய்வேனைவிடுதிகண்டாய்விடக்கூன்மிடைந்த
சிதலைச்செய்காயம்பொறேன்சிவனேமுறையோமுறையோ
திதலைச்செய்பூண்முலைமங்கைபங்காவென்சிவகதியே.

(ப - ரை.) விடக்கு புலால் - நாற்றத்தையுடைய, ஊன்மிடைந்த - மாமிசம் பொதிந்த, சிதலைச்செய்காயம் பொறேன் - பல நோய்கட்கிடமாகிய உடம்பைச்சகியேன், சிவனே - சிவபெருமானே, முறையோமுறையோ - உனக்கே அபயம் அபயம், திதலைச்செய் - தேமல் படர்ந்த, பூண் - ஆபரணமணிந்த, முலை - ஸ்தநங்களையுடைய, மங்கைபங்கா - உமாதேவிக்கு பாகமளித்தவனே, என் சிவகதியே - எனது நற்கதியே, வேட்கை வெம் நீரில் - ஆசை யென்கிற வெய்ய நீரினிடத்து, செவ்வாய்ச்சியர் - செவ்வாயையுடைய மாதர்கள் என்கிற, முதலைகடிப்ப - முதலைகள் கடிக்க, மூழ்கி - முழுகி, விதலைச்செய்வேனை - நடுங்குகின்ற என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) இறைவனே ! பல நோய்களுக்கும் இடமாயிருக்கிற இந்தச்சரீரத்தைச் சுமக்கமாட்டேன், மாதர் மயக்கத்திற் சிக்கி நடுங்குகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ணா.) வெந்நீர்-வெப்பமாகிய குணம் (தீக்குணம்) விதலை - நடுக்கம். விதலைச்செய்தல் - நடுங்குதல்என ஒருசொல்லாகக்கொள்க. திதலைச்செய் என்பதில் செய் என்பது படர்தல் என்னும் பொருளது. சிதலை - நோய். செவ்வாய்ச்சியர் வேட்கைமுதலை வெந்நீரிற்கடிப்ப எனமிறுத்தி, மாதர் வேட்கையாகிய முதலைநோவத்தோடு கடிப்ப என்றுரைத்தலுமொன்று. (சக)

கதியடியேற்குன்கழறந்தருளவுமூன்கழியா
விதியடியேனைவிடுதிகண்டாய்வெண்டலைமுழையில்
பதியுடைவாளரப்பார்த்திறைவைத்துச்சுருங்கவஞ்சி
மதிநெடுநீரிற்குளித்தொளிக்குஞ்சடைமன்னவனே.

(ப - ரை.) வெள்தலை - வெண்டலையினது, முழையில் - பள்ளத்தில், பதிஉடை - பதிந்திருத்தலையுடைய, வாள்-ஒளிபொருந்திய, அர-பாம்பானது, இறைபார்த்து - சற்றே நோக்கி, வைத்து - படம்விரித்து, சுருங்க - சுருக்கிக்கொள்ள, மதி அஞ்சி - (அதைகண்ட) சந்திரன் அஞ்சி, நெடுநீரில் குளித்து - பெரிய நீரினிடத்துமுழுகி, ஒளிக்கும் - மறைந்துகொள்கின்ற, சடை - சடாபாரத்தையுடைய, மன்னவனே - இறைவனே, அடியேற்கு - அடியேனுக்கு, உன்கழல் - உன் திருவடியின், கதி - பேற்றை, தந்தருளவும் - கொடுத்தருளவும், ஊன் கழியாவிதி - உடம்புநீங்காத ஊழையுடைய, அடியேனை விடுதி - அடியேனைக் கைவிடப்போகிறாய், எ - று.

(க - ரை.) இறைவனே! உன் திருவடியைப் புகலிடமாகப் பெற்றிருந்தும் இவ்வுடம்பின் தொடர்பு என்னைவிட்டு நீங்கவில்லை, ஆதவால் என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) கதி - ஆதரவு. விதி - ஊழ். சந்திரன் பாம்பைக் கண்டஞ்சுதல் இயற்கையாகையால் "வெண்டலை முழையிற் பதியுடைவாளரப் பார்த்திறைபைத்துச் சுருங்க வஞ்சி மதிகெடு நீரிற் குளித்தொளிக்குஞ் சடை மன்னவனே" என்றார் பை - படம். அஞ்சுதல் - விழுங்கு மென்றஞ்சுதல். பைத்துச் சுருங்குதல்-இறைவற்கஞ்சி யென்க, பதியுடை-பதிவிருத்தலையுடைய எனினும் பொருந்தும், நெடு நீர் இவ்விடத்துக் கங்கைநீர். அரா என்பது - குறியதன் கீழாக்குறுகலு மென்ற விதியா லரவென நின்றது. (சஉ)

மன்னவனே யொன்றுமாறறியாச்சிறியேன்மகிழ்ச்சி
மின்னவனேவிட்டிடுதிகண்டாய்மிக்கவேதமெய்ந்நூல்
சொன்னவனேசொற்கழிந்தவனேகழியாத்தொழும்பர்
முன்னவனேபின்னுமானவனேயிம்முழுதையுமே.

(ப - ரை.) மிக்கவேதம் - மேலாகிய வேதமென்கிற, மெய் நூல் சொன்னவனே - உண்மைநூலைத் திருவாய்மலர்ந்தருளினவனே, சொல்கழிந்தவனே - சொல்லைக்கடந்தவனே, கழியாதொழும்பர் முன்னவனே - நீங்காத தொண்டர்களுக் கெதிர்நிற்பவனே, பின்னும் இம்முழுதையும் ஆனவனே - மேலும் இவ்வுலகிலுள்ள சராசரப் பொருள்களாயும் நிற்பவனே, மன்னவனே - இறைவனே, ஒன்றும் ஆறு அறியா-உன்னையடையும் நெறியையறியாத, சிறியேன்-சிறியனேனது, மகிழ்ச்சி மின்னவனே - மனத்தின்கண் பிரகாசிப்பவனே, விட்டிடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) கடவுளே! உன்னை யடைந்துய்ய அறியாத என்னைக் கைவிடுதல் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) ஒன்றும் மாறு அறியா எனப்பிரித்து - நீ செய்த நன்றிக்குப் பிரதியுபகாரம் வேறொன்றும் செய்ய அறியாத என்றுரைத்தலுமாம். மகிழ்ச்சி மின்னவனே என்பதற்கு சந்தோடவடிவாகிய மின்னற்கொடிபோன்ற உமாதேவியை யுடையவனே என்றுரைத்தலும் பொருந்தும். மகிழ்ச்சிமின் - ஆநந்தரூபி, வேதம் மெய் நூல்-வேதமும் உண்மை நூல்களும் எனினுமாம். (சங)

முழுதயில்வேற்கண்ணியரென்னுமூரித்தழன்முழுகும்
விழுதனையேனை விடுதிகண்டாய்நின்வெறிமலர்த்தாள்
தொழுதுசெல்வானற்றொழும்பரிற்கூட்டிடுசோத்தெம்பிரான்
பழுதுசெய்வேனை விடேலுடையாயுன்னைப்பாடுவனே.

(ப - ரை.) முழுது - முழுமையும், அயில் வேல் கண்ணியர் என்னும் - கூரியவேல்போலுங் கண்களையுடைய மாதரென்கிற, மூரிசழல் முழுகும் - பெ

ருந் தீயிற்குளிக்கின்ற, விழுதனையேனை - வெண்ணெயைநிகர்த்த வென்னை, விடுதி - கைவிடப்போகிறாய், நின்வெறிமலர்த்தாள் - உன்மணந்தங்கிய தாமரைமலர்போன்ற திருவடிகளை, தொழுதுசெல்வான் - வணங்கி நடப்பதற்கு, நல்தொழும்பரில் கூட்டிடு - நல்லதொண்டரோடு சேர்த்திடுவாய், எம்பிரான் - எமது பெருமானே, சோத்தம்-(உன்பொருட்டு) அஞ்சலி, பழுதுசெய்வேனை - தவறுசெய்பவனாகிய என்னை, விடேல் - கைவிடாதே, உடையாய் - உடையவனே, உன்னைப்பாடுவன் - உன்னைப்புகழ்ந்து பாடுவேன். எ - று.

(க - ரை.) மாதர் என்னும்பெருந்தீயில் வீழ்ந்து வெண்ணெய்போலுருகுகின்ற என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்று. உன் திருவடியைத் தொழும்பொருட்டு உன் தொண்டரோடு சேர்த்தருளவேண்டும், அது கருதி உன்னை வணங்குகின்றேன் என்பதாம்.

(வி - ரை.) முழுதுஅயில் - மிகுகூர்மை. மாதரைக் கண்டால் ஆடவர் உருகுதல் இயல்பாதலால், மாதரைத் தழலாக்கியும் தம்மை வெண்ணெயாக்கியும் கூறினர். சோத்தம் - இழிந்தார் செய்யும் அஞ்சலி. அது சோத்து எனக் கடைக்குறைந்து நின்றது, இது திருக்கோவையார் கஎங-ம் செய்யுளுரையால் இனிது விளங்கும். (சச)

பாடிற்றிலேன்பணியேன்மணிநீயொளித்தாய்க்குப்பச்சூன்
வீடிற்றிலேனைவிடுதிகண்டாய்வியந்தாங்கலறித்
தேடிற்றிலேன்சிவனெவ்விடத்தானெவர்கண்டனரென்
றோடிற்றிலேன்கிடந்துள்ளுருகேனின்றுழைத்தனனே.

(ப - ரை.) ஆங்கு - அவ்விடத்து, வியந்து அலறி - வியந்தலறுநின்று, தேடிற்றிலேன் - தேடுதல் செய்திலேன், சிவன் எவ்விடத்தான் - சிவனெவ்விடத்திலுள்ளான், எவர்கண்டனர் - யாவர்பார்த்தனர், என்று ஓடிற்றிலேன் - என்று பலவிடத்தும் ஓடாநின்றிலேன், கிடந்து உள்ளுருகேன் - பூமியில் விழுந்து மனமுருகிலேன், நின்று உழைத்தனன் - நின்று வருந்தினேன், பாடிற்றிலேன் - பாடுகின்றிலேன், பணியேன் - வணங்கேன், (அங்ஙனமாகவும்) மணி நீ ஒளித்தாய்க்கு - என்னிதயத்தில் மாணிக்கம்போன்று ஒளி செய்தவுன்னையடையும்பொருட்டு, பசுஊன்வீடிற்றிலேனை - பசுந்தசைக் குரம்பையாகிய வுடம்பைவிட்டு நீங்காத என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) இறைவனே! உன்னைப்பாடுதல் முதலியவற்றைச்செய்யாமல் வருந்தாநின்றேன், என்னைக்கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) ஒளித்தாய்க்கு - மறைந்தவுன்பொருட்டு எனினுமாம். இது திருப்பெருந்துறையில் இறைவன் தம்மை விட்டு மறைந்ததைக் குறித்தது. ஊன்வீடு - மாமிசதேகம்.

உழைதருநோக்கியர்கொங்கைப்பலாப்பழத்தீயினொப்பாய்
விழைதருவேனைவிடுதிகண்டாய்விடின்வேலைநஞ்சுண்

மழைதருகண்டன் குணமிலிமானிடன் றேய்மதியன்
பழைதருமாபரனென்றென்றறைவன்பழிப்பினையே.

(ப - ரை.) உழைதரு நோக்கியர் - மான் பார்வைபோன்ற பார்வையுள்ள மாதரது, கொங்கை - ஸ்தனங்களை, பலாப்பழத்து ஈயின் ஒப்பு ஆய் - பலாப் பழத்தின்கண் வந்து மொய்க்கின்ற ஈக்களைப்போல, விழைதருவேனை - விரும்பு கின்ற என்னை, விடுதி-கைவிடப்போகிறாய், விடின் (ஒருசமயம்)-கைவிடுவையா யின், வேலை நஞ்சு உண்-கடலில்பிறந்த விஷத்தையுண்ட, மழைதரு கண்டன் என்று - நீலகண்டன் என்றும், குணமிலி என்று - குணஹீநன்என்றும், மானி டன் என்று - மானிடனென்றும், தேய் மதியன் என்று-தேய்ந்த அறிவுடையா னென்றும், பழைதரும் மாபரன் என்று - பழமையைக் கொண்டபெரியபரதேசி என்றும், என்றும் - எக்காலத்தும், பழிப்பினை - உன் பழிகளையே, அறை வன் - எடுத்துச் சொல்வேன். எ - று.

(க - ரை.) மாதரது மயக்கத்திற் சிக்கி வருந்தா நின்ற என்னைக் கை விடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) குணமிலி - குணரஹிதன் எனவும், மானிடன் - மானை இட ப்பக்கத்தி லுடையவன் எனவும், தேய்மதியன் - கலைகுறைந்த சந்திரனை யுடை யான் எனவும், பழைதரு மாபரன் - பழமையாகிய உமாதேவியின் பக்கத்தான் அல்லது பழமையாகிய பெரியமேலோன் எனவும் வேறு பொருள்கள் தோன் றின. உழைதரு மழைதரு என்பவற்றில் தரு உவமைக்கண் வந்தன. (சகூ).

பழிப்பினின்பாதப்பழந்தொழும்பெய்திவிழப்பழித்து
விழித்திருந்தேனைவிடுதிகண்டாய்வெண்மணிப்பணிலம்
கொழித்துமந்தாரமந்தாகினிநுந்தும்பந்தப்பெருமை
தழிச்சிறைநீரிற்பிறைக்கலஞ்சேர்தருதாரவனே.

(ப - ரை.) வெண்மணி - முத்துக்களை யுடைய, பணிலம் - சங்குகளை, கொழித்து - வீசி, மந்தாகினி - தெய்வத்தன்மை பொருந்திய கங்காநதியானது, மந்தாரம் நுந்தும் - மந்தார மலர்களை ஒதுக்குகின்ற, பந்தம் பெருமை தழி-அழ கின் மிகுதியைக் கொண்டு, சிறை நீரில் - கட்டப்பட்ட நீரில், பிறை கலம் சேர்தரு - பிறையானது தோணிபோற் பொருந்திய, தாரவனே - மதி மாலை யைத் தரித்தவனே, பழிப்பு இல் - நிந்தையற்ற, நின்பாதம்-உன் திருவடியின், பழந் தொழும்பு எய்தி - பழமையாகிய தொண்டு பொருந்தி, விழ - வீழ்தலால், பழித்து - பழித்துவிட்டு, விழித்திருந்தேனை - வெருட்சியோடு பார்த்திருந்த என்னை, விடுதி - கைவிடப்போகிறாய். எ - று.

(க - ரை.) கடவுளே ! குற்றமற்ற உன் திருவடித்தொண்டினை யிகழ்ந்து விழித்திருந்தவனாகிய என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதியன்றென்பதாம்.

(வி - ரை.) விழித்திருத்தல் - வெருண்டு பார்த்தல். பந்தம் - அழகு. சிறை நீர் என்றது கங்கை நீரை. (சஎ)

தாரகைபோலுந்தலைத்தலைமாலைத்தழலரப்பூண்
வீரவென்றன்னைவிடுதிகண்டாய்விடிலென்னைமிக்கார்
ஆரடியானென்னினுத்தரகோசமங்கைக்கரசின்
சீரடியாரடியானென்றுநின்னைச்சிரிப்பிப்பனே.

(ப - ரை.) தாரகைபோலும் - நக்ஷத்ரக்கூட்டம் போல, தலை - சிரசில், தலைமாலை-சிரமாலைகளையும், தழல்-விஷாக்நியையுடைய, அர-பாம்பாகிய, பூண்-ஆபரணத்தையு மணிந்த, வீர - வீரனே, என்றன்னை விடுதி - என்னைக் கைவிடப் போகிறாய், விடில் - கைவிடின், என்னை-என்னை நோக்கி, மிக்கார் - பெரியோர், ஆர் அடியான் என்னின் - நீ யாவருடைய அடியவனென்று கேட்டால், உத்தர கோசமங்கைக்கு அரசின் - உத்தரகோச மங்கைக்கிறைவனது, சீர் அடியார் அடியான் என்று - சிறப்புப் பொருந்திய அடியார்களுக்கு அடியவன் என்று சொல்லி, நின்னை சிரிப்பிப்பன் - உன்னை அவர்கள் பரிகசிக்கப் பண்ணுவேன். எ - று.

(க - ரை.) தலைமாலை முதலியவற்றைத் தரித்த இறைவனே! நீ என்னைக் காவாது கைவிடுதல் தகுதியன்று. கைவிட்டால் என்னை நோக்கி, நீ யாருடைய அடியானென்று கேட்பவர்க்கு, நான் திருவுத்தரகோச மங்கைக் கரசனது அடியார்க் கடியனென்று விடை சொல்லி, உன்னைச் சிரிக்கச் செய்வேன் என்பது.

(வி - ரை.) தழல் என்பதை வினைத்தொகை யாக்கிச் சுடுகின்ற என் றுரைத்தலுமாம். தழல் அர என்பதனை உம்மைத் தொகையாக்கி தழலையும் அரவையும் தரித்த என்றுரைத்தலுமாம். தலை மாலை, தழல், அர, இவற்றை ஆபரணமாகத் தரித்தல் வீரர் செய்கையாதலால் இவற்றை யடுத்து வீர என்றார்.

சிரிப்பிப்பன்சீறும்பிழைப்பைத்தொழும்பையுமீசற்கென்று
விரிப்பிப்பனென்னைவிடுதிகண்டாய்விடின்வெங்கரியின்
உரிப்பிச்சன்றோலுடைப்பிச்சனஞ்சூண்பிச்சனூர்ச்சுடுகாட்
டெரிபிச்சனென்னையுமாளுடைப்பிச்சனென்றேசுவனே.

(ப - ரை.) சீறும் பிழைப்பை - வெறுத்தற்குரிய இவ்வாழ்வை, சிரிப்பிப் பன் - சிரிப்பிப்பேன், தொழும்பையும் - என் தொண்டையும், ஈசற்கு என்று விரிப்பிப்பன் - ஈசனுக்கேயென்று விஸ்தரிப்பிப்பேன், என்னை விடுதி - என் னைக் கைவிடப்போகிறாய், விடின் - கைவிடின், வெங்கரியின் உரி பிச்சன் - வெவ்விய யானைத்தோலை யுடுத்த பித்தன், தோல் உடை பிச்சன்-புலித்தோல் முதலிய தோல்களை ஆடையாக வுடைய பித்தன், நஞ்சு ஊண் பிச்சன் (பாற் கடலிற்பிறந்த)-நஞ்சை யுணவாக்கிக்கொண்ட பித்தன், ஊர் சுடுகாடு எரி பிச் சன் - ஊர்ச் சுடுகாட்டக்கினியோடு பழகுகின்ற பித்தன், என்னையும் ஆள் உடைப் பிச்சன்-அடியேனையும் அடிமையாக்கியாண்டருளிய பித்தன், என்று ஏசுவன் - என்று வைவேன். எ - று.

(க - ரை.) இறைவனே ! வெறுத்தற்குரிய இப்பொய்வாழ்வை யிகழ்ந்து உன் திருத்தொண்டை விருத்திசெய்வேன், என்னைக் கைவிடுதல் உனக்குத்தகுதி யன்று. கைவிட்டால், வெங்கரியினுரிப்பிச்சன் முதலிய கடுஞ் சொற்களால் உன்னை வைவேன் என்பதாம். (சுக)

ஏசினும்யானுன்னையேத்தினுமென்பிழைக்கேகுழைந்து
வேசறுவேனைவிடுதிகண்டாய்செம்பவளவெற்பின்
தேசுடையாயென்னையாளுடையாய்சிற்றுயிர்க்கிரங்கிக்
காய்சினவாலமுண்டாயமுதுண்ணக்கடையவனே.

(ப - ரை.) செம்பவள வெற்பின் - செவந்த பவளமலைபோல, தேசு உடையாய் - ஒளி யுள்ளவனே, என்னை ஆள் உடையாய்-என்னை யடிமையாகக் கொண்டவனே, சிற்றுயிர்க்கு இரங்கி - சிறிய வுயிர்களுக் கிரங்கியருளி, கடை அவன்-(பாற்கடலைக்) கடைந்த அத்திருமால், அமுது உண்ண - அமிர்தத்தை யுண்ண, காய் - சுடுகின்ற, சினம் - கோபத்தோடு கூடிய, ஆலம் உண்டாய் - விஷத்தையுண்டவனே, யான் உன்னை ஏசினும் - நான் உன்னை வைதாலும், ஏத்தினும் - துதித்தாலும், என் பிழைக்கே குழைந்து-என் குற்றத்தின் பொருட்டே மனமுருகி, வேசறுவேனை - மெலிவேனை, விடுதி-கைவிடப்போகிறாய்.

(க - ரை.) இறைவனே ! நான் உன்னைப் புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் என் பிழையைக் குறித்தே மன முருகுகின்றேன், என்னைக் கைவிடுதல் உனக்குத் தகுதி யன்றென்பதாம்.

(வி - ரை.) கடையவனே என்றதற்கு, கீழ்ப்பட்டவனாகிய திருமால் எனினுமமையும். வேசறுதல் - துன்புறுதல். சிற்றுயிர் என்றது வேறாகிய தேவர்களையும் அசுரர்களையும். (ருO)

திருச்சிற்றம்பலம்.

---

உ

திருச்சிற்றம்பலம்.

## திருவெம்பாவைக்கருத்து.

---

ஆடிமாத முதல் மார்கழிமாத வரையும் இராத்திரியும், தைம்மாத முதல் ஆனிமாத வரையும் பகலும் ஆகத் தேவர்களுக் கொரு நாள் ஆம், சங்கார காலத்துக்குஞ் சிருட்டி காலத்துக்கும் பிரமாணமாக இந்த ஆறுமாதமும் பிரிந்து நடக்கும். மார்கழிமாதம் உதயகாலமாய்ச் சிருட்டிக் கேதுவாயிருக்கும்.

பிரபஞ்ச சிருட்டியைத் திருவுளத் தடைத்து வயிந்தவ சத்தியைச் சிருட்டிக்கத் தொடங்கும் அவதாரம் திருப்பள்ளி யெழுச்சி யென வழங்கும்.

இனி அந்தச் சுத்தமாயை நாத விந்துக்களாகவும், சாதாக்கியமாகவும், மகேசுரமாகவும், சுத்த வித்தையாகவும், அஞ்சுதலமாயிருக்கும். நாத விந்துக்களாகிய

தலங்களிலே பரமும், பரையும், அதிட்டிக்குஞ் சாதாக்கியமாகிய தலத்திலே சதாசிவமூர்த்தி யெழுந்தருளி யிருப்பர். போகாங்கங்களாகிய அணு சதாசிவர் சேவிக்கவும் இதன்கீழே ஈசுரர் கதிட்டானமாகிய மகேசுர தலத்திலே அனந்தாதி அட்ட வித்தியேசுரர் சேவிக்கவும், இதன் கீழே உருத்திரர்க் கதிட்டானமாகிய சுத்த வித்தியா தலத்திலே மந்திரேசுவரர் சேவிக்கவும், இப்படி பிரபஞ்ச அநுக்கிரக காரியமாகப் பராசத்தியிற் றோன்றிய ஞானக்கிரியைகளொத்த இச்சையே திருமேனியான சதாசிவமூர்த்தி தன் திருவருளால் அந்த மகேசுவர தத்துவத்திலே சத்தி மண்டலத்திலிருந்த மனோன்மனி சத்தியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சர்வபூத தமனியைச் சிருட்டிக்க, அந்தச் சர்வபூததமனி பெலப் பிரமதனியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி பெலவிகரணியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி காளியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி இரவுத்திரியைப் பிரேரிக்க, அந்தச் சத்தி சேட்டையைப் பிரேரிக்க, அந்தச் சத்தி வாமையைப் பிரேரிக்க, இப்படிப் பிரேரியா நிற்க நவசத்திகள் பிரேரகத்தினுல் மாயையை அதிட்டித்திருக்கிற அனந்த தேவராலே அசுத்த மாயை காரியப்பட்டுப் பிருதிவி முடிவான பிரபஞ்ச காரியம் நடவா நிற்கும்.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெம்பாவை.

---

## சத்தியை வியந்தது.

அதாவது

[பிரபஞ்ச சிருட்டிக்காதாரமாய் நின்ற அம்பிகை, சுமும்பிகை, கௌரி, கங்கை, உமை, பராசத்தி, ஆதிசத்தி, ஞானசத்தி, கிரியாசத்தி, என்னு மொன்பதின்மரை வியந் துரைத்தபடி.]

திருவண்ணுமலையிலருளிச்செய்யப்பட்டது.

[இது மனோன்மனி யென்னுஞ் சத்தி சர்வபூத தமனி யென்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்துசலாகக் கூறப்பட்டது.]

---

வெண்டளையான்வந்த
இயற்றரவிணைக் கொச்சகக்கலிப்பா.

ஆதியுமந்தமுமில்லாவரும்பெருஞ்
சோதியையாம்பாடக்கேட்டேயும்வாட்டங்கண்
மாதேவளருதியோவன்செவியோநின்செவிதான்
மாதேவன்வார்கழல்கள்வாழ்த்தியவாழ்த்தொலிபோய்

வீதிவாய்க்கேட்டலுமேவிம்மிவிம்மிமெய்ம்மறந்து
போதாரமளியின்மேனின்றும்புரண்டிங்ஙன்
ஏதேனுமாகாள்கிடந்தாளென்னேயென்னே
யீதேயெந்தோழிபரிசேலோரெம்பாவாய்.

(ப - ரை.) மாதே - பெண்ணே, ஆதியும் அந்தமும் இல்லா - முதலும் ஈறுமில்லாத, அருபெரு சோதியை - அரியபெரிய சோதீஸ்வரூபனாகிய சிவபெருமானை, யாம்பாடக்கேட்டேயும் - யாம் புகழ்ந்து பாடக்கேட்டும், வாள் - ஒளிபொருந்திய, தடம் - பெரிய, கண்வளருதியோ - கண்ணுறங்கா நின்றனையோ, நின்செவி - உன் காதுகள், வன்செவியோ - வலிய காதுகளோ, மாதேவன் - மகாதேவனுடைய, வார்கழல்கள் - நீண்ட வீரக்கழலையணிந்த திருவடிகளை, வாழ்த்தியவாழ்த்துஒலி - (அன்பர்) துதித்த துதிகளின் ஓசையை, வீதிவாய்போய் கேட்டலும் - (ஒருத்தி) தெருவில் வந்து கேட்டளவில், விம்மி விம்மி - ஏங்கி அழுது, மெய்மறந்து - உடம்பை மறந்து, ஆர் - அருமையாகிய போது அமளியின்மேல் நின்றும் - புஷ்பசயநத்தின் மீதிருந்து, புரண்டு-புரண்டு, இங்ஙன் - இவ்வாறு, ஏதேனும் ஆகாள் கிடந்தாள் - யாதொரு பொருளுமாகாமற் கிடவா நின்றாள், (அங்ஙனமாக, யாம்வந்து உன் வாயிற்படியில் நின்று சிவநாம சங்கீர்த்தநம் செய்யக்கேட்டும் எழுந்திராமல் இவ்வாறு இருத்தலாகிய) ஈதே - இது தானோ, எம் தோழி பரிசு - எமது தோழியாகிய உன் தன்மை, என்னே என்னே - இது என்ன வியப்பு என்ன வியப்பு, ஏலோரெம்பாவாய். எ - று.

(க - ரை.) மனோன்மனி யென்னுஞ்சத்தி சர்வபூததமனியென்னும் சத்தியைநோக்கி, பெண்ணே, யாம்வரும் வழியில் அன்பர் சிவநாம சங்கீர்த்தநம் செய்வதைக்கேட்ட ஒருபெண், ஆநந்தமேலீட்டால் தன் உடம்பை மறந்து தனது புட்பசயனத்தில் பொருந்தாது புரண்டு நிலத்தில் விழுந்து, ஒரு பொருட்டன்மை யில்லாதவளாகிக் கிடவாநின்றாள், அங்ஙனமாக, யாம் உன் வாயிற்படியில் வந்து நின்று சிவநாமசங்கீர்த்தநம் செய்யக்கேட்டும் எழுந்திராமல் இவ்வாறிருத்தலாகிய இது என்ன ஆச்சரியம், உன் செவி கேட்கவில்லையோ, உன் தன்மை யிதுதானோ, என்பதாம்.

(வி - ரை.) ஏலோரெம்பாவாய் என்பதை - ஏல்-ஓர்-எம்பாவாய் எனப்பிரித்து, ஏல் - யாம் சொல்வதை ஏற்றுக்கொள்வாயாக. ஓர் - ஆராய்வாயாக. எம்பாவாய் - எம்பாவைபோல்வாளே எனப் பொருளுரைத்துக் கொள்க. இவ்வாறன்றி அடிநிறைக் கவந்ததென்பாரும் உளர். இன்னும் பலவகையாயும் கூறுவர். இது மாணிக்கவாசக சுவாமிகள் திருவண்ணாமலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி அத்திருப்பதியில் வீற்றிருக்குங்காலத்தில், மார்கழி மாசம் வருதலும், மாதரெல்லாரும் திருவாதிரைக்கு முற்படப் பத்துத்தினங்களுள்ள காலத்தில் வீடுகள்தோறும் சென்று ஒருத்தியை ஒருத்தியும் பலருமாய்ச் சென்று துயிலுணர்த்திக்கொண்டு கூட்டமாகச் சென்று நீராடக்கண்டு,

அவர்கள் சொன்னதாகச் சொல்லியது. இவ்வரலாற்றை, இவரது புராணமாகிய திருவாதவூரர் புராணம், திருவம்பலச் சருக்கத்தில், ௩௯-௪௦-௪௧-ம் திருப்பாடல்களா லுணர்க.

இறைவன் உற்பத்தி நாசங்களில்லாத பரஞ்சோதி யாதலால் "ஆதியுமந்தமு மில்லாவரும் பெருஞ்சோதி" என்றார். வாள் - ஓர் ஆயுத விசேடம் எனினுமாம். வன்செவி யென்றது செவிட்டுச்செவி யென்றபடி. மாதேவன் - தேவர்களிற் சிறந்தவன். ஸ்ரீமன், மாணிக்கவாசக ஸ்வாமிகள் திருவாய் மலர்ந்தருளியதான வித் திருவாசகத்தினருமையை நோக்கிச் சிவபெருமானாதி சைவப் பிராமணச்சிறுவனாக வெழுந்தருளி அம்மாணிவாசகப் பிரபுவின் எதிரில் நின்று சுவாமிகாள், தாங்களருளிய திருவாசகமுழுமையையு மென்கையாரவெழுதி யானந்திக்க வேண்டுமென்னும் விருப்பங்கொண்டடைந்தேன், எனது எண்ணப்படி திருவருள் புரிதல்வேண்டுமென்றிரப்ப, அதைக்கேட்ட மாணிக்கவாசகப் பெருமானு மதற்கிணங்கி, அவ்வாறே வரிசையாகச்சொல்லிவரத் தானெழுதிக்கொண்டு வருகையில் இத் திருவெம்பாவையின் முதற் செய்யுளாகிய, "ஆதியுமந்தமு மில்லாவரும் பெருஞ்சோதியை" என்ற அடியைச் சொல்லுகையில், ஆதியுமந்தமுமில்லாமல் அரும்பெருஞ்சோதி யென்றெவ்வாறிருக்கக்கூடுமென்றாட்சேபிக்க அப்போது திருவாதவூர், குருவுக்குமிஞ்சின சீடனென்று சிரசிற்குட்ட, எம்பெருமானுமிய சிறுவர் அபசாரமென்று அத்திருமுறை முற்றுமெழுதி, ஈற்றில், திருச்சிற்றம்பல முடையானென்று திருக்கைச் சாத்திட்டு எழுதிய புத்தகத்தை அங்ஙனேவைத்து திடீரென மறைந்தருள உடனே திருவாதவூரர் அச்சிறுவனை நாற்புறத்துங் காணாது எழுதிய புத்தகத்தை எடுத்துப்பார்த்து அதில் கைச்சாத்திட்டிருக்கு முண்மையால் வந்தவர் நடராஜபதியென்றறிந்து அப்புத்தகத்தைச் சிரமேற்றாங்கி, ஆனந்தபரிதராய் அதைத் தில்லைவாழ்ந்தணர் வசம் ஒப்புவித்தனரெனவும், அப்புத்தகமே இப்போதும் புதுவையிலுள்ள வீரசைவமடமாகிய ஸ்ரீமத் அம்பலத்தாடுஞ் சுவாமிகள் மடாலயத்தில் பூசிக்கப்பட்டு வருவதாகவும் கர்ண பரம்பரையாய் வழங்குகின்றன. (௧)

[இது சர்வபூததமனி என்னுஞ் சத்தி பெலப்பிரமதனி என்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்துதலாகக் கூறப்பட்டது.]

பாசம்பரஞ்சோதிக்கன்பாயிராப்பகலும்
பேசும்போதெப்போதிப்போதாரமளிக்கே
நேசமும்வைத்தனையோநேரிழையாய்நேரிழையீர்
சீசியிவையுஞ்சிலவோவிளையாடி
ஏசுமிடமீதோவிண்ணோர்களேத்துதற்குக்
கூசுமலர்ப்பாதந்தந்தருளவந்தருளுந்
தேசன்சிவலோகன்றில்லைச்சிற்றம்பலத்து
ளீசனார்க்கன்பார்யாமாரேலோரெம்பாவாய்.

(ப - ரை.) நேரிழையாய் - மாதே, பரஞ்சோதிக்கு - மேலான ஒளியுருவினனாகிய சிவபெருமானுக்கு, பாசம் - ஆசையோடு, அன்புஆய் - அன்புருவாகி, இரா பகல் - இரவும் பகலும், நாம் - யாம், பேசும்போது எப்போது - அவனது மகிமையைப் புகழ்ந்து பேசுவதற்குரிய காலம் இதுவன்றி இனி எந்தக் காலம் வாய்க்கும், இ - இந்த, ஆர் - அருமையாகிய, போது அமளிக்கே - புஷ்ப சயநத்துக்கே, நேசமும் வைத்தனையோ-விருப்பமும் வைத்தனையோ, (இதுவரையும் சர்வபூத தமனியின் வார்த்தை, இனி பெலப்பிரமதனியின்வார்த்தை) நேரிழையீர் - பெண்களே, சீசி - சைசை, இவையும்-(இறைவனை வாழ்த்துதலாகிய) இச்செயல்களும், சிலவோ - அற்பமான செயல்களோ, விளையாடி - என்னோடு விளையாடி, ஏசும் இடம் - வைதற்குரிய சமயம், ஈதோ - இதுதானோ, விண்ணோர்கள் - தேவர்களும், ஏத்துதற்கு - துதித்தற்கு, கூசும் - நாணுகின்ற, மலர் - தாமரைமலர்போன்ற, பாதம் - திருவடியை, தந்தருள - (அன்பர்க்கு) கொடுத்தருள, வந்தருளும் - எழுந்தருளின, தேசன் - ஒளியுருவனும், சிவலோகன் - சிவபுரத்தையுடையவனும் ஆகிய, தில்லைச்சிற்றம்பலத்துள் ஈசனார்க்கு - திருத்தில்லைச்சிற்றம்பலத்திறைவனுக்கு, அன்புஆர் - நமது அன்பு எத்தன்மையது, யாம் ஆர் - நாம் எத்தன்மையோம், ஏலோரெம்பாவாய்——. எ - று.

(க - ரை.) சர்வபூததமனி யென்னுஞ் சத்தி, பெலப்பிரமதனி யென்னுஞ் சத்தியை எழுப்புவாளாய் வந்து நின்று, சிவபெருமானை இப்படிப்பட்ட புண்ணியகாலத்திலன்றி வேறெக்காலத்தில் யாம் துதிக்கப்போகிறோம், எழுந்திருப்பாயாக என்று கூறுதலும், எழுந்திருக்காமல் சற்றுநேரம் தாழ்ந்தமையால், சர்வபூததமனியானவள் பெலப்பிரமதனியை அழைத்து, புஷ்பசயநம் உன்னை எழுந்திருக்க வொண்ணாமல் தடுக்கின்றதோ என்ன ? பெலப்பிரமதனியானவள் சர்வபூததமனியையும் அவளோடு வந்தாரையும் நோக்கி, பெண்களே? இறைவனைக் குறித்த இந்த விஷயங்கள் அற்பமானவைகளோ ! இதற்குக் காலம் இடம் முதலியவற்றின் தூய்மை வேண்டாவோ என்ன, அதைக்கேட்ட சர்வபூததமனி முதலியோர், பெலப்பிரமதனியை நோக்கி, நன்று நன்று நீ எழுந்திருக்கச் சோம்பி இவ்வாறு கூறுகின்றனைபோலும் என்று பரிகசித்து ஏசக்கேட்ட பெலப்பிரமதனி ஏசுதற்குரிய சமயம் இதுதானோ ! அந்தத் திருக்கைலாசபதிக்கிறைவன் திருவடியைப் புகழ்தற்குத் தேவர்களும் நாணுவராயின், அவனிடத்தில் யாம் செய்யும் அன்பு எத்தன்மையது ? நாம் எத்தன்மையோம் ? என்றாள் என்பதாம்.

(வி - ரை.) அமளிக்கே நேசமும் வைத்தனையோ என்றது - அது ஒழிந்த மற்றையவற்றில் நேசம் வைத்திலை யென்றபடி. நேரிழை - திருத்தமாகச் செய்யப்பட்ட ஆபரணத்தையுடையவள். திருவடியின் அருமை பெருமைகளை விளக்குதற்கு " விண்ணோர்களேத்து தற்குக் கூசு மலர்ப்பாதம் " என்றார். பரஞ்சோதிக்கு ன்பாய் எனவும் பாடங்கொண்டு என்புருவாகி யெனப்பொருள் கூறுவாருமுளர். (உ)

[இது பெலப்பிரமதனி யென்னுஞ் சத்தி பெலவிகாரணி யென்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்துதலாகக் கூறப்பட்டது.]

முத்தன்னவெண்ணகையாய்முன்வந்தெதிரெழுந்தென்
அத்தனானந்தனமுதனென்றள்ளூறித்
தித்திக்கப்பேசுவாய்வந்துன்கடைதிறவாய்
பத்துடையீரீசன்பழவடியீர்பாங்குடையீர்
புத்தடியோம்புன்மைதீர்த்தாட்கொண்டாற்பொல்லாதோ
வெத்தோநின்னன்புடைமையெல்லோமறியோமோ
சித்தமழகியார்பாடாரோநஞ்சிவனை
யித்தனையும்வேண்டுமெமக்கேலோரெம்பாவாய்.

(ப - ரை.) முத்து அன்ன - முத்தையொத்த, வெள் - வெள்ளிய, நகையாய் - பற்களை யுடையாளே, முன் வந்து - முன்னே வந்து, எதிர் எழுந்து- எதிரில் எழுந்து நின்று, என் அத்தன் - என்தந்தை, ஆநந்தன் - இன்புருவன், அமுதன் - அமுதை யொப்பவன், என்று - என்று வாயாற்சொல்லி, அள்ளூறி- வாயூறி, தித்திக்கப்பேசுவாய் - இனிக்கப்பேசுவாய், வந்து உன்கடைதிறவாய்- எழுந்துவந்து உன் வாயிற்கதவைத் திறவாய், பத்துஉடையீர் - பத்திமையுடையீர், ஈசன்பழஅடியீர் - இறைவனது பழவடியாரே, பாங்குஉடையீர் - நல்லொழுக்கமுடையீர், புத்தடியோம்-புதிய அடியோமுடைய, புன்மைதீர்த்து - புன்மையை நீக்கி, ஆட்கொண்டால் - அடிமைகொண்டால், பொல்லாதோ - தீமையாய் முடியுமோ,(என்று சொல்ல)எத்தோ- (இதுவும் ஓர்) ஏமாற்றமோ, நின் அன்புடைமை - உன் அன்புடைமையை, எல்லோம் அறியாமோ - யாமெல்லோரும் அறியாமோ, சித்தம் அழகியார் -மனச்செம்மையுடையவர்கள், நம் சிவனைப் பாடாரோ - நமது சிவபெருமானைப் பாடார்களோ, எமக்கு இத்தனையும் வேண்டும் - எமக்கு இவ்வளவும் வேண்டப்படுவது, ஏலோரெம் பாவாய்——. எ - று.

(க - ரை.) பெலப் பிரமதனி என்னும் சத்தியும் அவளோடு வந்தவர்களும் பெலவிகரணி யென்னுஞ்சத்தியைத் துயிலுணர்த்தவந்து நின்று, யாம் வருமுன்னமே எழுந்திருந்து, சிவபிரானை அத்தன் ஆனந்தன் அமுதன் என்று கேட்பவர் செவிக்கு இனிமையுண்டாகத் துதித்துநிற்பவளே ? உன்படுக்கையை விட்டு எழுந்துவந்து கதவைத்திறப்பாயாக வென்றுசொல்ல, அந்தப் பெலவிகரணி யாம் பக்தியில்லேம், புதிய அடியேம், பாங்கிலேம், ஆதலால் பக்தியுடையீரும், பழவடியீரும், பாங்குடையீரும் ஆகிய நீங்கள் எமது இழிவு தீர்த்து ஆட்கொண்டால் உமக்குத் தீமையாமோ என்று சொல்லக்கேட்ட பெலப்பிரமதனி முதலியோர் பெலவிகரணியை அழைத்து நீ துயில்விட்டெழுதற்குச் சோம்பி இவ்வாறு சொல்லி, எம்மை ஏமாற்றுகின்றனையோ ? உன் அன்புடைமையை யாம் எல்லோரும் அறியோமோ? மனந்தூயர் சிவபெருமானைப் பாடாதிருப்பரோ ! நம்மால் விரும்பப்படுவது இறைவனது புகழேயன்றி வேறொன்றுமன்றென்று கூறினார்களென்பதாம்.

(வி - ரை.) எத்து - ஏமாற்றம். கடைதிறவாய் என்றது பெலவிகரணியை நோக்கிப் பெலப்பிரமதனியென்னுஞ் சத்தி கூறியது. பத்துடையீர் பழவடியீர், பாங்குடையீர் என்பன பெலவிகரணியின் திருவாக்காய், பெலப்பிரமதனி யென்னுஞ் சத்தியையும், அவளோடு வந்தவர்களையும் நோக்கிக்கூறியது. முன் என்பதற்கு முன் எல்லாம் எனக்கொண்டு கழிந்த வருடங்களின் மார்கழி மாசந்தோறும் எனப்பொருள் கூறலுமாம். பற்று என்பது பத்து எனவந்தது.

[இது பெலவிகரணி யென்னுஞ் சத்தி காளி என்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்துதலாகக் கூறப்பட்டது.]

ஒண்ணித்திலநகையாயின்னம்புலர்ந்தின்றோ
வண்ணக்கிளிமொழியாரெல்லாரும்வந்தாரோ
எண்ணிக்கொடுள்ளவாசொல்லுகோமவ்வளவுங்
கண்ணைத்துயின்றவமேகாலத்தைபோக்காதே
விண்ணுக்கொருமருந்தைவேதவிழுப்பொருளைக்
கண்ணுக்கினியானைப்பாடிக்கசிந்துள்ளம்
உண்ணெக்குநின்றுருகயாமாட்டோநீயேவந்
தெண்ணிக்குறையிற்றுயிலேலோரெம்பாவாய்.

(ப - ரை.) ஒள்நித்திலநகையாய் - அழகிய முத்தையொத்த பல்வரிசையுடையாளே, இன்னம் புலர்ந்தின்றோ - (உனக்கு) இன்னமும் பொழுதுவிடிந்திலதோ, வண்ணம் - அழகிய கிளிமொழியார் - எல்லாரும் கிளிமொழிபோலும் மொழியை யுடையாரெல்லாரும், வந்தாரோ - வந்தார்களோ (என்றுகேட்க) எண்ணிக்கொடு - எண்ணிக்கொண்டு, உள்ளவா சொல்லுகோம் - உள்ளபடி சொல்லுவோம், அவ்வளவும் - அதுவரையிலும், கண்ணைத் துயின்று - கண்ணுறங்கி, காலத்தை அவமேபோக்காதே - காலத்தை வீணாகக்கழிக்காதே, விண்ணுக்கு ஒரு மருந்தை - விண்ணுலகத்தார்க்கு ஒப்பற்ற அமிருதத்தை, வேத விழுப்பொருளை - வேதங்களால் சொல்லப்படுகிற மேலான பொருளை, கண்ணுக்கு இனியானை - கண்களுக் கினிமையா யிருப்பவனை, பாடி - வாயினாற் பாடி, உள்ளம் கசிந்து - மனங்குழைந்து, உள்நெக்குநின்று - மனம்நெகிழ்ந்து நின்று, உருக - உருகுவாயாக, (என்று சொல்லியபின்னும் உறங்கப்போக) யாம் மாட்டோம் - நாங்கள் அவர்களை எண்ணும் வலியில்லோம், நீயேவந்து எண்ணி - நீயேவந்து கணக்கிட்டு, குறையின் - குறைவுபடின், துயில் - சென்றுறங்கு, ஏலோரெம்பாவாய்——. எ - று.

(க - ரை.) பெலவிகரணி என்னும் சத்தி காளி என்னும் சத்தியைநோக்கி எம்மோடுகூடி, சிவநாமசங்கீர்த்தனம் செய்தற்கு இன்னும் பொழுது விடிந்திலையோ என்ன? அவள் இவளைநோக்கி என்னைமாத்திரம் துரிதப்படுத்துகின்றனையே மாதர் எல்லோரும் வந்துவிட்டனரோ என்று வினவ, அவள் எல்லாரும் வந்தனர் நீ கண்ணுறங்கிக் காலத்தை வீணேகழியாமல் சிவபெருமானைப் பாடுக என்று, சொல்லியும் உறங்கப்போகக் கண்டு, நாம் எண்ணமாட்டோம்,

நீயே எண்ணிக்கொள் குறைந்தால் மீட்டும் நீ உறங்கப்போகலாம் என்று கூறினர் என்பதாம்.

(வி - ரை.) இன்னம் புலர்ந்தின்றோ என்பது பெலவிகரணி யென்னுஞ் சத்தியின் திருவாக்கு. எல்லாரும் வந்தாரோ என்பது காளியென்னுஞ் சத்தியின் திருவாக்கு. எண்ணிக்கொடு என்பது முதல், குறையிற்றுயில் என்னுமளவும் பெலவிகரணியென்னுஞ் சத்தியின் திருவாக்கு. வண்ணம் - நிறம் எனினும் பொருந்தும். குறையிற்றுயில் என்றமையால் குறையாவிடின் எழுந்துவா என்றதாயிற்று. (ச)

[இது காளியென்னுஞ் சத்தி இரவுத்தரி யென்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்துதலாகக் கூறப்பட்டது.]

மாலறியாநான்முகனுங்காணாமலையினைநாம்
போலறிவோமென்றுள்ளபொக்கங்களேபேசும்
பாலூறுதேன்வாய்ப்படிறீகடைதிறவாய்
ஞாலமேவிண்ணேபிறவேயறிவரியான்
கோலமுநம்மையாட்கொண்டருளிக்கோதாட்டுஞ்
சீலமும்பாடிச்சிவனேசிவனேயென்
றோலமிடினுமுணராயுணராய்கா
ணேலக்குழலிபரிசேலோரெம்பாவாய்.

(பு - ரை.) மால் - திருமாலினால், அறியா - அடியைத்தேடி யறியப்படாததும், நான்முகனும் காணா - பிரமனாலும் முடியைத்தேடி யறியப்படாததுமாகிய, மலையினை - மலையுருவாய் நின்றவனை, நாம் அறிவோமென்று - நாம் உணர்வோமென்று, உள்ள பொக்கங்களே பேசும் - உளவாகிய பொய்களையே பேசுகின்ற, பால்ஊறு - பால்சுரக்கின்ற, தேன்வாய் - தேன்போலினிக்கும் அதரத்தையுடைய, படிறீ - வஞ்சகமுடையவளே, கடைதிறவாய் - வாயிற் கதவைத் திறப்பாயாக, ஞாலம் விண்பிற - மண்ணுலகும் விண்ணுலகும் பிறவும், அறிவு அரியான் - உணர்தற்கரியவனது, கோலமும் - அழகையும், நம்மை ஆட்கொண்டருளி - நம்மை அடிமை கொண்டருளி, கோதாட்டும் - சீராட்டுகின்ற, சீலமும் - மங்கள குணத்தையும், பாடி - பாடாநின்று, சிவனே சிவனே என்று - சிவபெருமானே சிவபெருமானேயென்று, ஓலம் இடினும் - முறையிடினும், உணராய் - அறியாய், உணராய் - துயிலுணர்ந்திலை, ஏலக்குழலி பரிசு - (இது தானோ) மயிர்ச்சாந்தணிந்த கூந்தலையுடைய வுனது தன்மை, ஏலோர். எ - று.

(க - ரை.) காளி என்னும் சத்தி ரௌத்திரி என்னுஞ் சத்தியை நோக்கி திருமாலும் நான்முகனும் அடியையும்முடியையுந்தேடி அறியாத மலையுருவான இறைவனை நாம் அறிவோமென்று இனிக்கப்பேசுகின்ற வஞ்சக முடையவளே இறைவனது திருக்கோலத்தையும் எம்மை அடிமைகொண்டருளிய பெருந்தன்மையையும் புகழ்ந்துபாடி, சிவனே சிவனேயென்று யாம் ஓலமிடக்கேட்டும்

துயில் எழுந்தாயில்லை. விரைவில் நித்திரைவிட்டு எழுந்துவந்து கதவைத் திறப்பாய் என்றாள் என்பதாம். மாலறியாமலே - நான் முகனுங்காணுமலே என்றியைக்க. படிறு - வஞ்சனை. கோலமும் சீலமும்பாடி என்றியைக்க. பொக்கம்-பொய்.

(வி - ரை.) மாலறியா நான்முகனுங் காணுமலை என்றது:—முன்னொரு காலத்தில் பிரம விஷ்ணுக்கள் நான் பிரமம், நான் பிரமம், என்று வாதிட்ட போது அவர்கள் இறுமாப்பை அடக்கச் சிவபெருமான் நெருப்பு மலையாய் இருவருக்கும் இடையேதோன்றி நும்மிருவரில் ஒருவர் இதன் முடியையும் மற்றொருவர் இதனடியையும் காண வல்லீரேல் அவரே முதல்வராவீர் என்றுரைக்க, பிரமன் யான் முடியைக்கண்டு வருகிறேன் என்று அன்ன உருக்கொண்டு விண்ணோக்கிப் பறந்தும், திருமால் யான் அடியைக்கண்டு வருகிறேன் என்று வராக வுருக்கொண்டு நிலங்கீண்டும் சென்று பலநாள் தேடியும் காண வலியற்றவர் ஆயினர் என்பதை. (௫)

[இது இரவுத்திரி யென்னுஞ் சத்தி சேட்டையென்னுஞ் சத்தியைத் துயிலுணர்த்துதலாகக் கூறப்பட்டது.]

மானேநீநென்னலைநாளைவந்துங்களை
நானேயெழுப்புவனென்றலுநாணுமே
போனதிசைபகராயின்னம்புலர்ந்தின்றோ
வானேநிலனேபிறவேயறிவரியான்
தானேவந்தெம்மைத்தலையளித்தாட்கொண்டருளும்
வான்வார்கழல்பாடிவந்தோர்க்குன்வாய்திறவாய்
ஊனேயுருகாயுனக்கேயுறுமெமக்கு
மேனோர்க்குந்தங்கோனைப்பாடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) மானே - பெண்ணே, நீ - நீ, நென்னல் - நேற்று, நாளை வந்து, நாளைக்குவந்து, உங்களை - உம்மை, நானே எழுப்புவன் என்றலும் - நானே துயிலுணர்த்துவேன் என்றுரைத்த சொல்லும், போனதிசை-நீ போன திக்கை, நாணுமே - நாணமல், பகராய்-சொல்லாய், இன்னம் புலர்ந்தின்றோ - இன்னமும் விடிந்தில்லையோ, வான் நிலன் பிற அறிவு அரியான்-விண்ணுலகும் மண்ணுலகும் மற்றதும் பிறவுலகங்களும் அறிதற்கருமையானவன், தானே வந்து - தானாகவே வலியவந்து, எம்மைத் தலையளித்து - எம்மைக்காத்து, ஆட்கொண்டருளும்-அடிமைகொண்டருள்கின்ற, வான்-மேலாகிய, வார்கழல் பாடி-நீண்டவீரக் கழலணிந்ததிருவடியைப் புகழ்ந்துபாடி, வந்தோர்க்கு-வந்தவர்க்கு, உன் வாய்திறவாய் - உன் வாய் திறந்தொருவார்த்தை சொல்லாதிருக்கின்றாய், ஊன் உருகாய் - உடலுருவித்திருக்கின்றாய், உனக்கே உறும் - (இவ்வொழுக்கம்) உனக்கே தகும், எமக்கும் ஏனோர்க்கும் தங்கோனைப்பாடு - எமக்கும் பிறர்க்கும் இறைவனாயுள்ள சிவபெருமானைப்பாட எழுந்திராயாக, ஏலோ——,எ-று.

(க - ரை.) இரவுச்திரி என்னும் சத்திசேட்டை என்னும் சத்தியைநோக்கி ! மாதே நீ நேற்று, எம்மிடத்தில் நாளை நானேவந்து உங்களை எழுப்புவேன் என்று சொன்னசொல் எத்திசையில்போய் ஒளித்தது சொல்லாய். இன்னமும் உனக்குப் பொழுதுவிடிந்ததில்லையோ, இறைவனது திருவடியைப் புகழ்ந்து பாடிக்கொண்டு வந்த எங்களுக்கு உன் வாய்திறந்து ஒரு வார்த்தையைச் சொல்லாதிருக்கிறாய் உடம்புருகாதிருக்கிறாய். இது உனக்கே தகும் என்று சொல்லி, மீண்டும் எம்மோடுகூடி இறைவனைப் பாட வருக என்றனள் என்பது.

(வி - ரை.) மான் - மானினது நோக்கம்போலும் நோக்கத்தை யுடையாள். நென்னல் - முன்னை நாள். இது நென்னலையென ஐகாரச் சாரியை பெற்றது. உனக்கே உறும் என்றது எமக்குத் தகாது என்றபடி. தங்கோன் என்பது ஒரு சொல்லாய்த் தலைவன் என்னும் பொருளதாய் நின்றது. (௬)

[இது சேட்டையென்னுஞ் சத்தி வாமையென்னுஞ் சத்தியைத்
துயிலுணர்த்துதலாகக் கூறப்பட்டது.]

அன்னேயிவையுஞ்சிலவோபலவமர
ருன்னற்கரியானொருவனிருஞ்சீரான்
சின்னங்கள்கேட்பச்சிவனென்றேவாய்திறப்பாய்
தென்னாவென்னாமுன்னந்தீசேர்மெழுகொப்பாய்
என்னானையென்னரையனின்னமுதென்றெல்லோமுஞ்
சொன்னோங்கேள்வெவ்வேறாயின்னந்துயிலுதியோ
வன்னெஞ்சப்பேதையர்போல்வாளாகிடத்தியா
லென்னே துயிலின்பரிசேலோரெம்பாவாய்.

(ப - ரை.) அன்னே - தாயே, இவையும் சிலவோ - இவையும் அற்பமாகுமோ, பல அமரர் - பல தேவர்கள், உன்னற்கு அரியான்-நினைத்தற்கும் அரியவன், ஒருவன் - ஒப்பில்லாதவன், இருஞ்சீரான்-பெருஞ் சிறப்பையுடையவன், (அவனது) சின்னங்கள் கேட்ப-திருச்சின்ன வொலிகள் கேட்க, சிவன் என்றே வாய்திறப்பாய் - சிவன் என்றே வாய்திறந்து பேசுவாய், தென்னா என்னா முன்னம் - தென்னவனேயென்று சொல்வதற்கு முன்பே, தீசேர்-நெருப்பைச் சேர்ந்த, மெழுகுஒப்பாய்-மெழுகை நிகர்ப்பாய், என்னானை-என்னானை, என் அரையன் - என்னரசன், இன் அமுது - இனிய அமிர்தம், என்று-என்று, எல்லோமும் வெவ்வேறாய் சொன்னோம்-யாம் எல்லாம் தனித்தனியே சொல்லித்துதித்தோம், கேள் - கேட்பாய், இன்னம் துயிலுதியோ - இன்னமும் உறங்குகின்றனையோ, வல்நெஞ்சப் பேதையர்போல் - வலிய மனத்தையுடைய அறிவிலிகள் போல, வாளாகிடத்தி-சும்மாபடுத்துறங்குகின்றனை, துயிலின் பரிசுஎன் - (உன்) உறக்கத்தின் தன்மை யிருந்தவாறென், ஏலோ——.எ - று.

(க - ரை.) சேட்டை என்னும் சத்தி வாமை என்னும் சத்தியைப்பார்த்து அம்மா ? இறைவனது திருநாம உச்சாரண முதவியவற்றைக்கேட்ட அளவில் சிவசிவவென்று வாயாற்கூறி, மனம் அனலிலிட்ட மெழுகுபோலுருகும் நீ,

இப்போது நாம் எல்லோரும் வந்துநின்று தனித்தனியே சிவநாமசங்கீர்த்தனம் செய்யக்கேட்டும் இன்னும் வன்னெஞ்சப் பேதையர்போலக் கிடந்து உறங்கு கின்றனே? உனது துயிலின் தன்மை இருந்தவாறு என்னே என்றனள்என்பதாம்

(வி - ரை.) உன்னற்கு என்பதனீற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தல். சின்னங்கள் கேட்பச்சிவனென்று வாய்திறத்தலும், தென்னா வென்னா முன்னம் தீசேர் மெழுகொத்தலும் ஆகிய குணங்களையுடையவனுக்கு, யாமெல்லாரும் என்னானை என்னரையன் இன்னமுது என்று தனித்தனி சொல்லக்கேட்டும் நீ உறங்குதல் தகாதென்றற்கு, "சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய், தென்னாவென்னா முன்னந் தீ சேர்மெழுகொப்பாய், என்னானை யென்னரையனின்ன முதென்றெல்லோ மும் சொன்னோங்கேள் வெவ்வேறாயின்னந் துயிலுதியோ" என்றாள். இது வாமைபென்னுஞ் சத்தி சுத்த மாயையைப்பிரேரிக்கிற அனந்த தேவரை ஆசரித்து அப்பால் பிரகிருதியில்விகிருதியான ஆன்மதத்துவம்நடத்தற்பொருட்டு விட்டுணுவினிடத்தில் அதிட்டிக்கிற சிவசத்தியை நோக்கி, "ஆழியா னன்புடைமையா மாறு மிவ்வாறோ" என்று பிரேரித்ததாகக்கருதியது. ஆக இப்படி நவசத்திகள்கூடி விசுவகாரியம் பண்ணுகிறதே பாட்டாய் பாடியபடி. (எ)

கோழிசிலம்பச்சிலம்புங்குருகெங்கு
மேழிலியம்பவியம்பும்வெண்சங்கெங்கும்
கேழில்பரஞ்சோதிகேழில்பரங்கருணை
கேழில்விழுப்பொருள்கள்பாடினோங்கேட்டிலையோ
வாழியீதென்னவுறக்கமோவாய்திறவா
யாழியானன்புடைமையாமாறுமிவ்வாறோ
ஊழிமுதல்வனாய்நின்றவொருவனை
யேழைபங்காளனையேபாடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) கோழிசிலம்ப - கோழிகள் கூவ, குருகு - வெவ்வேறுபட்சிகள் எங்கும் சிலம்பும் - எவ்விடத்து ஒலிக்கின்ற, எழில் இயம்ப - ஏழிசை போலச் சத்திக்க, வெண்சங்கு - வெள்ளியசங்குகள், எங்கும் இயம்பும் - எவ்விடத்தும் முழங்காநின்றன, கேழ் இல் - உவமை யில்லாத, பரஞ்சோதி-மேலாகிய ஒளியுருவமுடைய சிவபெருமானது, கேழ் இல்பரங்கருணை - ஒப்பற்ற பெருங்கருணைச் செயல்களாகிய, கேழ் இல் விழுப்பொருள்கள் - உவமையற்ற மேலானபொருள்களை, பாடினோம் கேட்டிலையோ - பாடினோம் அவற்றை நீ கேட்டாயல்லையோ, வாழி - நீவாழக்கடவை, ஈது என்ன உறக்கமோ - இது என்ன தூக்கமோ, வாய்திறவாய் - வாயைத்திறத்தல் செய்யாய், ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ - சக்கரத்தையுடைய திருமால் செய்யும் அன்புடைமை யாவதும் இப்படியேயோ, ஊழி முதல்வனாய்நின்ற ஒருவனை - ஊழித்தலைவனாகி நின்ற ஒருத்தனை, ஏழை பங்காளனை - ஏழைகள் பங்கிலிருப்பவனை, பாடு - பாடுதல் செய் ஏலோ——, எ - று.

(க - ரை.) எவ்விடத்தும் சேவல்கள் கூவாநின்றன. பலவகைப் பறவைஜாதிகளும் எழிசைபோலச் சத்தியாநின்றன. வெண்மையாகிய சங்குகள் எவ்விடத்தும் முழங்காநின்றன. இவற்றைக் கேட்டாயில்லையோ, அன்றியும், ஒப்பற்ற பேரொளியாகிய சிவபெருமானது ஒப்பற்ற பெருங்கருணையாகிய உவமையில்லாத மேலான பொருளைக் குறித்து யாம் புகழ்ந்து பாடினோம் இதனையாயினும் கேட்டாயில்லையோ, நீ வாய்திறவாமலிருக்கின்றனையே, இது என்ன உறக்கமோ யாம் அறியோம், சக்கரப் படையை யுடைய திருமால் செய்யும் அன்பும் இத்தன்மைத்தேயோ? விரைந்தெழுந்து, பிரபஞ்சத்துக்கு முதல்வனும் ஏழைபங்காளனும் ஆகிய சிவபெருமானைப்புகழ்ந்து பாடுவாயாக என்பதாம்.

(வி - ரை.) நீ செய்யும் அன்பு இத்தன்மையது ஆகையால், நீ அதிட்டித்திருக்கும் திருமால்செய்யும் அன்பும் இத்தன்மைத்தே ஆமோ என்றற்கு, "ஆழியானன்புடைமை யாமாறு மிவ்வாறோ" என்றாள். கோழி என்றது சேவலை. ஊழி பிரபஞ்சம் பல பறவைகளுங் கலந் தொலிக்கும்போது வெவ்வேறொலியாய்க்கேட்பது எழிசையுங் கலந் தொலித்தலை நிகர்ப்பதனால், "குருகு செங்குமேழிலியம்ப" என்றார். வாழி-அசை யெனினுமாம், ஏழை பங்காளன் - உமாதேவியை யொருபாகத்தினுடையவன் என்றலும் பொருந்தும் எழிசையாவன, சக்ஷமம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பன இவற்றின் முதலெழுத்துக்கள் முறையே ச - ரி - க - ம - ப - த - நி - ச.

[இது - அநாதியுள்ளவர்களுக்கெல்லாம் அநாதி யுள்ளவனுமாய் அநுபவிப்பவர்களுக்கு மென்மேலும் இன்பஞ் செய்வோனுமாய் இருக்கிற உன்னைத் தலைவனாகப்பெற்ற உன் சீரடியோமாகிய யாம் உன் தொண்டர் திருவடிகளை வணங்குதலும், அவர்களுக்கே எல்லாவகைவாலும் உரியராவதலும், அவர்களே எமக்கு நாயகராக அங்கீகரித்தலும், அவர் விரும்பிச் சொன்னபடியே அவரது ஏவற் பணிவிடை செய்தலும், இவ்விதமாக நடக்கும்படியான வரத்தை எமக்குக் கிருபை செய்வாயாயின், யாம் யாதொரு குறையும் உடையோ மல்லோம் என்று நவசத்திகளுரைத் தம்மிற் கூறப்பட்டன.]

முன்னைப்பழம்பொருட்குமுன்னைப்பழம்பொருளே
பின்னைப்புதுமைக்கும்பேர்த்துமப்பெற்றியனே
உன்னைப்பிரானாகப்பெற்றவுன்சீரடியோ
முன்னடியார்தாள்பணிவோமாங்கவர்க்கேபாங்காவோ
மன்னவரேயெங்கணவராவாரவருகந்து
சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோம்
இன்னவகையேயெமக்கெங்கோனல்குதியே
லென்னகுறையுமிலோமேலோரெம்பாவாய்.

(ப - ரை.) முன்னைப்பழம்பொருட்கும் முன்னைப்பழம் பொருளே முன்னையதாகிய பழம்பொருளுக்கும் முன்னையதாகிய பழம்பொருளே, பின்னைப்புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே - பின்னையதாகிய புதுப்பொருளுக்கும் மீட்டும் அத்தன்மையனே, உன்னைப்பிரான் ஆகப்பெற்ற-உன்னைத்தலைவனாகப்

பெற்ற, உன்சீர் அடியோம் - உன் சிறப்பையுடைய அடியோம், உன் அடியார் தாள் பணிவோம் - உன் தொண்டரது சீர்பாதங்களை வணங்குவோம், ஆங்கு அவர்க்கே பாங்கு ஆவோம் - அவ்விடத்து அவர்களுக்கே உரியவராவோம், அன்னவரே-அவர்களே, எம்கணவர் ஆவார் - எம் கொழுநராவார், அவர் உகந்து சொன்ன பரிசே - அவர் விரும்பிச் சொன்ன வண்ணமே, தொழும்பு ஆய் பணி செய்வோம் - தொண்டராய் ஏவல் செய்யக்கடவோம், இன்னவகையே - இந்த வண்ணமே, எங்கோன் - எம்மிறைவனே, எமக்கு நல் குதியேல் - எமக்குக் கிருபை புரிவையாயின், என்னகுறையும் இல்லோம் - எந்தக்குறையையு முடையோ மல்லோம். ஏலோ——எ - று.

(பழவுரை) இது அநாதியாயுள்ளவர்களுக்கெல்லாம் அநாதியாயுள்ளவனுமாய், அநுபவிப்பவர்க்கு மேன்மேலும் புதுமையான ஆநந்தத்தைக் கொடுப்பவனுமா யிருக்கிற உன்னுடைய அடியார் திருவடியைப் பணிதலும், அவர்களை ஆசரித்தலும், அவர்களையே பர்த்தாக்களாக அங்கீசரித்தலும், அவரேவற்பணி செய்தலும், யாங்கள் உரிமையாய் இந்த முறைமை யொழியாவண்ணம் பிரசாதித்தருளின், ஒரு குறைபாடும் இலோமென்று நவசத்திகளும் தம்மிற் சொல்லியது. உன்னடியார் என்றது-விஞ்ஞான கலரில் மலபக்குவராய் அணுசதாசிவர் என்னும் பேர் பெற்றிருப்பார் ஒருவகையும், அதிகாரமலத்துடனே கூடிய அனந்தாதி அட்ட வித்தியேசுரர் என்னும் பேர்பெற்றிருப்பார் ஒருவகையும், ஆணவமல சகிதராய்ச் சத்தகோடி மகாமந்திரேசுரர் என்று பேர்பெற்றிருப்பார் ஒருவகையும் ஆகவிஞ்ஞானகலர் மூன்றுவகையாம். இனி நிரை நிரையாக அணுசதாசிவர் தாள்பணிவோம், அட்டவித்தியேசுரர்க்கும் பாங்காவோம், சத்தகோடி மகாமந்திரேசுரர் எங்களுக்குப் பர்த்தாக்களாவார்கள், "சொன்னபரிசேதொழும்பாய்ப்பணிசெய்வோம்" என்பது அவர்களேவலால் அசுத்தமாயையைப்பிரேரியா நிற்போம். எ - று.

பாதாளமேழினுங்கீழ்சொற்கழிவுபாதமலர்
  போதார்புனைமுடியுமெல்லாப்பொருண்முடிவே
பேதையொருபாற்றிருமேனியொன்றல்லன்
  வேதமுதல்விண்ணோருமண்ணுந்துதித்தாலும்
ஓதவுலவாவொருதோழன்றொண்டருளன்
  கோதில்குலத்தான்றன்கோயிற்பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூரேதவன்பேராருற்றாராயலா
  ரேதவனைப்பாடும்பரிசேலோரெம்பாவாய்.

(ப - ரை.) பாதமலர் - திருவடித்தாமரை மலர்கள், பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு - அதோலோகம் ஏழினும் கீழ் என்னுஞ் சொல்லைக் கடந்து நின்றன, போது ஆர் புனைமுடியும் - பூக்கள் நிரம்பியலங்கரிக்கப்பட்ட திருமுடியும், எல்லாப்பொருள்முடிவே-எல்லாப்பொருள்களுக்கும் முடிவானதே, பேதை ஒருபால்-பெண்ணையொரு பக்கத்தமைத் திருப்பவனாதலால், திருமேனி ஒன்றல்லன் - திருவுருவையொன்றா யிருப்பவனுமல்லன், வேதமுதல் - வேதமுதலா

விண்ணோரும் மண்ணும் துதித்தாலும் - விண்ணுலகத்தவரும் மண்ணுலகத்தவரும் தோத்திரம் பண்ணினாலும், ஓத உலவா - சொல்ல அடங்காத, ஒருதோழன் - (உயிர்கட்கெல்லாம்) ஒரு உயிர்த்தோழனாயிருப்பவன், தொண்டர் உளன் - தொண்டருடைய உள்ளத்திலிருப்பவன், கோது இல் குலத்து அரன் - குற்றமில்லாத மேன்மையினையுடைய ஹரன், தன் - அவனது, கோயில்- ஆலயத்திலுள்ள, பிணாப்பிள்ளைகாள் - பெண்பிள்ளைகளே, அவன் ஊர் எது - அவனது க்ஷேத்ரம் யாது, அவர்பேர் எது - அவனது திருநாமமென்னை, உற்றார் ஆர் - (அவனுக்கு) உறவினர்யார், அயலார் ஆர் - அன்னியர் யார், அவனைப்பாடும் பரிசு எது - அவனைப்புகழும் விதம்யாது, ஏலோ —— எ - று.

(சு - ரை.) திருவடித்தாமரைமலர் பாதாளலோகம் ஏழுருக்குங் கீழாய்ச் சொல்லுதற்கு அளவுபடாததா யிருக்கும் மலர்களால் அலங்கரிக்கப் பெற்ற திருமுடியும் மேலுள்ள பொருள்க ளெல்லாவற்றிற்கும் மேலாய் முடிவிடமாயிருக்கும், திருமேனியின் ஒரு பாகத்தில் உமாதேவி வீற்றிருப்பாள் ; ஒரு வடிவா யிருப்பவனு மல்லன். வேதங்களும், விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் தோத்திரம் செய்தாலும் அந்தத் தோத்திரங்களுக்கு அடங்காதவனும், உயிர்களுக்கெல்லாம் ஒப்பற்ற நண்பனும், அடியார் மனத்தில் இருப்பவனும் ஆகிய சிவபெருமானது கோயிலில் இருக்கிற பெண்பிள்ளைகளே! அவனது திருப்பதி யாது ? அவனது திருநாமம் யாது ? அவனுக்கு உறவினர் யார் ? அவனுக்கு அயலார் யார் ? அவனைப் பாடும் விதம் யாது ? சொல்லுங்கள் என்பதாம்.

(பழவுரை) "பாதாளமேழினுங் கீழ் சொற்கழிவு பாதமலர்" என்பது எண்பதுநூறாயிரம் யோசனையான பூமியின் கனத்துக்கும் சிவஞானமன்றியே தவசு பண்ணுகிறவர்கள் சென்றிருக்கும் இடமாகிய கனிட்ட பாதாளத்துக்கும் அதன் கீழே உண்டாகிய அசுரகண்டம், சர்ப்பகண்டம், இராக்கதகண்டம், இப்படி ஒவ்வொன்று மும்மூன்று கண்டமாய் ஆடகேசுரர்க்குப் புவனமுமாயிருக்கிற ஏழு பாதாளத்துக்கும், அதின் கீழாக ரவுரவம், கும்பீபாகம், அவிசிகம் என்று சொல்லப்பட்ட மயிராச நரகமூன்றும் இவையுட்படப் பதின்மூன்று நரகம் ஒரு அடுக்காகவும், பத்துநரகம் ஒரு அடுக்காகவும், ஒன்பதுநரகம் ஒரு அடுக்காகவும் ஆக முப்பத்திரண்டு நரகமும் இவர்களைச் சூழ்ந்து சேவித்திருக்கிற நூற்றெட்டு நரகமுமாக நூற்று நாற்பது நரகமும் கூர்மாண்ட தேவரென்னும் உருத்திரர்க்குப் புவனமாயிருக்கப்பட்ட நரக புவனங்களுக்கும் கீழ் காலாக்கினி உருத்திரர் புவனம் பதினேழுகோடி யோசனையாய் அண்டகடாக மூடப்பட்ட புவனமாயிருக்கும், இப்படி சொல்லப்பட்ட பிரமாண்ட முதலாக அண்டங்களனைத்துக்கும் ஆதார பூதமாய்ச் சிவசத்தியான ஆதாரசத்திக்கும் அப்பாற சிவனுடைய பூரணத்துக்குள் எல்லைப்படுத்தி இன்னமட்டென்று சொல்லுதற்கு முடியாததலால் சொற்கழிவா யிருக்கப்பட்டது, மலர்போன்ற சீபாதமாகையாலும், "போதார் புனைமுடியு மெல்லாப் பொருண்முடிவே" என்பது, இனிப் பிருதிவியண்ட முன்சொன்ன அண்டகடாகமுதல் ஐம்பதுகோடி யோசனையுட்பட மேற் புவலோகமுதல் சிவலோக மளவாக ஏழுலோகமு மேல் அண்டகடாகமுட்பட ஐம்பதுகோடி யோசனையுமாகப் பிரமாண்டம் நூறுகோ

டியோசனை, அதற்குமேல் அதிற் பதின்மடங்கு அப்பு அண்டம், அதற்குமேல் அதிற்பதின்மடங்கு தேயு அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு வாயு அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு ஆகாயஅண்டம், அதற்குமேல் பதின்மடங்கு மன அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு புத்தி அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு ஆங்கார அண்டம், அதற்குமேல் பதின்மடங்கு குண அண்டம், அதின்மேல் நூறு மடங்கு அராக வண்டம், அதின்மேல் நூறு மடங்கு வித்தை அண்டம், அதின்மேல் நூறு மடங்கு கலையண்டம், அதின்மேல் நூறு மடங்கு நியதியண்டம், அதின்மேல் நூறு மடங்கு கால அண்டம், அதின்மேல் ஆயிரமடங்கு அசுத்தமாயை, அதின்மேல் பதினாயிரமடங்கு சுத்தமாயையிற் சுத்தவித்தை, அதற்குமேல் பதினாயிரமடங்கு மகேசுவரம், அதற்குமேல் சாதாக்கியம், அதற்குமேல் பரவிந்து, அதற்குமேல் பரநாதம், அப்பால் சிவனுடைய பூரணம் அளவு எல்லைப்படாதாதலால், எல்லாப்பொருளுக்கு முடிவுமாயிருப்பது திருமுடியாதலால், சிவபாதமுந் திருமுடியுமொருவர்க்கும் அளவுபடுத்த முடியாதாதலாலும், "பேதையொருபாற் றிருமேனி யொன்றல்லன்" என்பது முன் சொல்லப்பட்ட லோகங்களிடத்தும் அதற்குமேலுங் கீழுஞ்சத்தி சிவான்மகபூரணமாக விருக்கையாலே ஒருவடிவாய் ஏகதேசியுமாயிரான் ஆதலாலும், "வேத முதல் விண்ணோரு மண்ணுந் துதித்தாலுமோத வுலவா ஒருதோழன் றொண்டருளன்" என்பது, சதுர்வேதங்களும் பிரம விட்டுணுக்களாகிய தேவர்களும் பூமியிலுள்ளவர்களும் அளவற்ற தோத்திரம் பண்ணினாலும் அந்தத் தோத்திரத்தினு லின்னமட்டென்று அளவுபடுத்த முடியாமல் முன்சொன்ன தேவர்கள் திரட்சியாகிய வீட்டங்கள் தோன்றலுள் சாத்திரங்களைக் கிளறிக்கிளறிப் பல படப்பண்ணியுந் தெரியாதவஸ்துவை, "கோதில்குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்" என்பது உபாதிசூனியனாய் நிர்மலனாய் அரனென்னுந் திருநாமத்தையுடையவனுமா யிருக்கிற சிவனுக்கு ஆலயமான சுத்தமாயையிற் சுத்த வித்தையிலிருந்து தம்பிரானார் பணிவிடையாகப் பிரபஞ்ச காரியத்தைப் பண்ணுமவர் வாமைமுதலாகிய சிவசத்திகள். "ஏதவனூ ரேதவன்பேராருற்றா ராரயலாரேதவனைப்பாடும் பரிசேலோரெம்பாவாய்" என்பது, இப்படியே யுணர்ந்தார்க்கும் உணர்வரியோனாகிய சிவபெருமானுக்கு ஊர் எது, பேர் எது, உறவார், அடுத்தோரார், இவைகளொன்று மில்லாமையா லிந்த முறைமையுடைய சிவபெருமானைப் பாடும்வண்ண மெவ்வண்ணமோ தோழி என்றவாறு. (சo)

மொய்யார்தடம்பொய்கைபுக்குமுகேரென்னக்
கையாற்குடைந்துகுடைந்துன்கழல்பாடி
ஐயாவழியடியோம்வாழ்ந்தோங்காணாரழல்போற்
செய்யாவெண்ணீறாடிசெல்வாசிறுமருங்குல்
மையார்தடங்கண்மடந்தைமணவாளா
ஐயாநீயாட்கொண்டருளும்விளையாட்டி
னுய்வார்களுய்யும்வகையெல்லாமுய்ந்தொழிந்தோ
மெய்யாமற்காப்பாயெமையேலோரெம்பாவாய்.

(ப - ரை.) மொய் ஆர் தடம்பொய்கைபுக்கு - கூட்டமாகிய பெரிய தடங்களிற்போய், கையால் முகேர் என்ன குடைந்துகுடைந்து - கையினால் நீரைமுகேரென் றிரைத்துக் குளித்துக் குளித்து, உன்கழல்பாடி - உன்திருவடியைத்துதித்து, ஐயா-ஐயனே, வழியடியோம் வாழ்ந்தோம்-வழித்தொண்டர்களாகியநாங்கள் பிழைத்தோம், ஆர் அழல்போல் செய்யா - நிறைந்த அக்கினியைப் போலச் செம்மை நிறத்தை யுடையவனே, வெண்ணீறாடி - திருவெண்ணீற்றை யணிந்தமேனியையுடையானே, செல்வா - பெருஞ்செல்வ முடையானே, சிறுமருங்குல் - சிறியவிடையையும், மைஆர்தடம்கண் - அஞ்சனமெழுதிய பெரிய கண்களையுமுடைய மடந்தை மணவாளா - உமாதேவி நாயகனே, ஐயா - அழகனே, நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் - நீ யடிமைகொண்டருளின திருவிளையாட்டினால், உய்வார்கள் உய்யும் வகை - உய்வோராகிய அடியார்கள் உய்யும் வகையாக, எல்லாம் - எல்லாப்படியாலும், உய்ந்தொழிந்தோம் - உய்ந்தேவிட்டோம், எம்மை - எங்களை, எய்யாமல் காப்பாய் - இளைக்காதவண்ணம் காத்தருளவேண்டும், ஏலோ—— எ - று.

(க - ரை,) இறைவனே! பெரியதடாகத்தில் முழுகி உன் திருவடியைத் தோத்திரப்பண்ணி உய்ந்தோம், எங்களைக் காத்தருளல் வேண்டும் என்பதாம்.

(வி - ரை.) ஐயா என்னும் இரண்டனுள் முன்னையதில் ஐ தலைமை, பின்னையதில் ஐ அழகு. முகேர் - ஒலிக்குறிப்பு. மொய் ஆர் என்றதற்கு வண்டு கணிறைந்தவெனினுமாம். (கக)

ஆர்த்தபிறவித்துயர்கெடநாமார்த்தாடுந்
 தீர்த்தனற்றில்லைச்சிற்றம்பலத்தேதீயாடுங்
கூத்தனிவ்வானுங்குவலயமுமெல்லோமுங்
 காத்தும்படைத்துங்கரந்தும்விளையாடி
வார்த்தையும்பேசிவளைசிலம்பவார்கலைக
 ளார்ப்பரவஞ்செய்யவணிகுழன்மேல்வண்டார்ப்பப்
பூத்திகழும்பொய்கைகுடைந்துடையான்பொற்பாத
 மேத்தியிருஞ்சுனைநீராடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) ஆர்த்த - நம்மைப்பிணித்த, பிறவித்துயர்கெட-பிறவித்துன்பமொழியுமாறு, நாம் ஆர்த்து ஆடும் - நாம் களிப்பினாலாரவாரித்தாடுகின்ற, தீர்த்தன்-பரிசுத்தகுணத்தனா யிருப்பவன், நல் தில்லைச்சிற்றம்பலத்தே தீயாடும்- நல்ல தில்லைச் சிற்றம்பலத்தின்கண்ணே அனலோடாடுகின்ற, கூத்தன் - கூத்தினையுடையான், இவ்வானும் குவலயமும் எல்லோமும் - இவ்வானுலகத்தாரையும் மண்ணுலகத்தாரையும் எல்லோருமாகிய நம்மையும், காத்தும் - காப்பாற்றியும், படைத்தும் - சிருட்டித்தலைச் செய்தும், கரந்தும் - சங்கரித்தலைச் செய்தும், விளையாடி - விளையாடுதலையுடையவன், வார்த்தையும் பேசி-அவன் புகழையும் சொல்லி, வளைசிலம்ப - வளையல் ஒலிக்கவும், வார்கலைகள் ஆர்ப்பு அரவம்செய்ய - பெரியமேகலைகள் ஆரவாரித்தொலிக்கவும், அணிகுழல் மேல்

வண்டு ஆர்ப்ப - அழகிய கூந்தலின்மேல் வண்டுகள் முழங்கவும், பூ திகழும் பொய்கை குடைந்து - மலர்கள் விளங்குகின்ற பொய்கையிற் குளித்து, உடையான் பொற்பாதம் ஏத்தி - இறைவனது பொன்னடியைத் துதித்து, இருஞ்சுனை நீர் ஆடு - பெரிய சுனைநீரின்கண் மூழ்கு. ஏலோ—— எ - று.

(க - ரை.) நமது பிறவித்துன்பம் ஒழியும்படி தில்லைச் சிற்றம்பலத்தில் திருநிருத்தம் செய்வோனாகிய சிவபெருமானது திருப்புகழைப்பாடி அவன் திருவடியைத் துதித்துப் பெரிய சுனைநீரில் மூழ்குவாயாக என்பதாம். (கஉ)

பைங்குவளைக்கார்மலராற்செங்கமலப்பைம்போதா
லங்கங்குருகினத்தாற்பின்னுமரவத்தால்
தங்கண்மலங்கழுவுவார்வந்துசார்தலினா
லெங்கள்பிராட்டியுமெங்கோனும்போன்றிசைந்த
பொங்குமடுவிற்புகப்பாய்ந்துபாய்ந்துநஞ்
சங்கஞ்சிலம்பச்சிலம்புகலந்தார்ப்பக்
கொங்கைகள்பொங்கக்குடையும்புனல்பொங்கப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) பை - பசிய, குவளை கார் மலரால்-குவளையின் கரியமலர்களை யுடைமையாலும், செங்கமலப் பைம்போதால் - பசுமையாகிய செந்தாமரை மலர்களை யுடைமையாலும், அங்கு - அவ்விடத்திலுள்ள, அம் குருகு இனத்தால் - அழகிய குருகினத்தை யுடைமையாலும், பின்னும் அரவத்தால்-மேலும் அரவத்தை யுடைமையாலும், தங்கண் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்-தங்கள்மலத்தை யொழுக்க முயல்வார் வந்தடைதலாலும், எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த - எங்களுடைய பெருமாட்டியும் எங்கள் பெருமானும் போன்று இருந்த, பொங்கு மடுவில் புகப் பாய்ந்து பாய்ந்து - நீர் பொங்குகின்ற மடுவினிடத்துப் புகவீழ்ந்து வீழ்ந்து, நம் சங்கம் சிலம்ப - நமது சங்க வளையல்கள் ஒலிக்கவும், சிலம்பு கலந்து ஆர்ப்ப - சிலம்பொலியும் அதனோடு கூடியொலிக்கவும், கொங்கைகள் பொங்க - ஸ்தநங்கள்பூரிக்கவும், குடையும் புனல் பொங்க - ஆடுகின்ற நீர் பொங்கவும், பங்கயம்பூ - தாமரை மலர்கள் அடர்ந்த, புனல் - நீரினிடத்து, பாய்ந்து ஆடு - குதித்து ஆடுவாயாக, ஏலோ— எ - று.

(க - ரை.) குவளைமலர் முதலியவற்றையுடைத்தாகி, எம்பிராட்டியும் எம்பிரானும் போன்று விளங்குகின்ற பொய்கையில் சங்கவளையல் முதலானவை ஒலிக்க நீராடுவாயாக என்பதாம்.

(வி - ரை.) மடுவானது கருங்குவளைமலரையுடைத்தாதலால் எம்பிராட்டியின் திருமேனி போன்றும், செந்தாமரை மலரை யுடைத்தாதலால் எம்பிரான் திருமேனி போன்றும் இருந்தது. குருகைப் பிராட்டிக்கும் பிரானுக்கும் கொள்ளும்போது முறையே வளையல் கொக்கிறகு எனவும், மடுவுக்குக் கொள்ளும் போதுபறவைப்பொது எனவும், அரவத்தை இறைவிக்கும் இறைவனுக்கும் கொள்ளும்போது பாம்பு எனவும், மடுவுக்குக்கொள்ளும்போது ஓசைஎனவும், மலங்

கழுவுவார் வந்து சார்தலை இறைவிக்கும் இறைவனுக்கும் கொள்ளும்போது ஆன்ம அழுக்காகிய மும்மலங்களைப் போக்க வருவோராகிய அன்பர் அடைதல் என்றும், மடுவுக்குக் கொள்ளும்போது உடம்பழுக்கைப் போக்க, நினைப்பவர் வந்து அடைதல் என்றும் கொள்க.

கருங்குவளை மலரைப் பிராட்டியின் கண்ணுக்கும் இறைவன் திருமிடற்றுக்கும், செந்தாமரைமலரை இறைவியின் திருமுகத்திற்கும் உவமையாகக் கொள்ளினுமாம். பின்னும் அரவம் என்பதனை அரவம் போன்ற பின்னலைஎனவும் கொள்ளலாம். "குவளைக்களத்தம்பலவன்" என்றார் திருக்கோவையாருள்ளும், ()

காதார்குழையாடப்பைம்பூண்கலனாடக்
 கோதைகுழலாடவண்டின்குழாமாடச்
சீதப்புனலாடிச்சிற்றமபலம்பாடி
 வேதப்பொருள்பாடியப்பொருளாமாபாடிச்
சோதிதிறம்பாடிச்சூழ்கொன்றைத்தார்பாடி
 யாதிதிறம்பாடியந்தமாமாபாடிப்
பேதித்துநம்மைவளர்த்தெடுத்தபெய்வளைதன்
 பாதத்திறம்பாடியாடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) காது ஆர் குழை ஆட - செவியிற்பொருந்திய குண்டலங்கள் அசையவும், பைம்பூண் கலன்ஆட - பசும் பொன்னாலியன்ற ஆபரணங்களசையவும், கோதை குழல்ஆட - பூமாலையை அணிந்த கூந்தலசையவும், வண்டின் குழாம்ஆட - வண்டுக்கூட்டங்கள் அசையவும், சீதப்புனல் ஆடி - குளிர்ச்சியாகிய நீரில் மூழ்கி, சிற்றம்பலம்பாடி - திருச்சிற்றம்பலத்தைப் புகழ்ந்துபாடி, வேதப்பொருள்பாடி - வேதப்பொருளாகிய இறைவனைப்பாடி, அப்பொருள் ஆமாறுபாடி - இறைவன் அந்த வேதப்பொருள் ஆகும் வகையையும் பாடி, சோதி திறம் பாடி - ஒளிப்பிழம்பின் கூறுபாட்டைப்பாடி, சூழ்கொன்றைத் தார்பாடி-முடியில் வளைத்தமைக்கப்பட்ட கொன்றைப்பூமாலையைப்பாடி, ஆதி திறம்பாடி - அவனது முதலாம் தன்மையைப்பாடி, அந்தம் ஆமாறு பாடி-இறுதியாம்தன்மையையும் பாடி, பேதித்து - பிரபஞ்ச வாசனையைக் கெடுத்து, நம்மைவளர்த்தெடுத்த-எங்களை வளர்த்தெடுத்த, பெய்வளை தன் - எம்பிராட்டியது, பாதத்திறம் பாடி-ஸ்ரீபாத மஹிமையைப் பாடி, ஆடு - ஆடுவாயாக ஏலோ. எ-று.

(க - ரை.) குண்டலங்கள் முதலியவும் அசையும்படி நீராடி எம்பிரான் எம்பிராட்டி என்னும் இருவரையும் தோத்திரம் பண்ணுவாயாக என்பது. (கச)

ஓரொருகாலெம்பெருமானென்றென்றேநம்பெருமான்
 சீரொருகால்வாயோவாள்சித்தங்களிகூர
நீரொருகாலோவாநெடுந்தாரைகண்பனிப்பப் [யாள்
 பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணி

பேரரையற்கிங்ஙனேபித்தொருவராமாறு
　　மாரொருவரிவ்வண்ணமாட்கொள்ளும்வித்தகர்தாள்
வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
　　யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) ஓரொருகால்-ஒவ்வொருகால், எம்பெருமான் என்றென்றே - எம்பெருமான் என்று சொல்லாநின்றே, நம்பெருமான் - நம்மிறைவனது, சீர்-பெருமையை, ஒருகால் - ஒருகாலும், வாய் ஓவாள் - வாயாலுச்சரித்தலை நீங்காள், சித்தம் களிகூர-மனக்களிப்பு மிக, கண் - விழிகளில் நின்றும், ஒருகால்-ஒருகாலத்தும், நீர் ஓவா - நீரிடையறாத, நெடுந்தாரை பனிப்ப - நெடிய நீர்த்தாரைகளைத் துளிக்க, பார் - பூமியின்மேல் விழுந்து நின்று, ஒருகால்-ஒருசமயம், வந்தனையாள் - வந்திப்பாள், விண்ணோரைப் பணியாள் - பிற தேவர்களை வணங்காள், பேர் அரையற்கு - பெரிய இறைவன் பொருட்டு, ஒருவர் பித்து ஆம் ஆறும் - ஒருவர் பித்தரா மாறும், இங்ஙனே - இவ்வாறே, இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் ஆர் ஒருவர் - இவ்வாறு அடிமைகொள்ளும் ஞானரூபியானவர் யார் ஒருவர், தாள் - (ஆதலால் அவ்விறைவனது) திருவடியை, வார் உருவு - கச்சையுருவிச் செல்லாநின்ற, அப்பூண் முலையீர் - அத்தன்மையவான பூணணிந்த கொங்கைகளை யுடையீரே, நாம் வாயாரப் பாடி - நாம் வாயாரஸ்தோத்ரம்பண்ணி, ஏர் உருவம் - அழகும் ஒளியு முள்ள, பூ - மலர்கள்செறிந்த, புனல்-நீரில், பாய்ந்தாடு-குதித்து முழுகுதல்செய்வாம், ஏலோ —— எ - று.

(க - ரை.) ஒருகால் எம்பெருமானேயென்று இறைவனதுபெரும்புகழைச் சிறப்பிப்பாள், ஒருகால் மிகுதியாகக் கண்ணீர் சிந்துவாள், இப்படி இறைவன் பொருட்டுப் பித்தேறினர் ஒருவரு மில்லை யென்பதாம். (௧௫)

முன்னிக்கடலைச்சுருக்கியெழுந்துடையா
　　ளென்னத்திகழ்ந்தெம்மையாளுடையாளிட்டிடையின்
மின்னிப்பொலிந்தெம்பிராட்டிதிருவடிமேற்
　　பொன்னஞ்சிலம்பிற்சிலம்பித்திருப்புருவ
மென்னச்சிலைகுலவிநந்தம்மையாளுடையா
　　டன்னிற்பிரிவிலாவெங்கோமானன்பர்க்கு
முன்னியவணமக்குமுன்சுரக்குமின்னருளே
　　யென்னப்பொழியாய்மழையேலோரெம்பாவாய்.

(ப - ரை.) மழை-மேகமே, முன்-எதிரே உள்ள, இ கடலைசுருக்கி - இவ்வுவர் நீரைக்குறைத்து, எழுந்து-மேலெழுந்து, உடையாள் என்னத் திகழ்ந்து - எம்பெருமாட்டிபோல விளங்கி, எம்மை ஆள் உடையாள் - எம்மை யடிமைகளாக வுடையவளது, இட்டு இடையின் மின்னிப் பொலிந்து - சிற்றிடைபோல மின்னிப்ரகாசித்து, எம்பிராட்டி திருவடிமேல் - எம்பெருமாட்டியின் திருவடிமேலணிந்த, பொன்னஞ் சிலம்பின் சிலம்பி - பொன்னினாற் செய்யப்பட்ட சிலம்புபோலச்சப்தித்து, திருபுருவம் என்ன - அழகிய புருவம்போல, சிலை குலவி-

இந்திரதநுசு விளங்கப்பெற்று, நம்தம்மை ஆளுடையாள் தன்னின்பிரிவு இல்லா நம்மை யாளுடையாளிடத்து நின்றும் பிரிதலில்லாத, எங்கோமான்-எம்மிறைவன், அன்பர்க்கு முன்னி - அன்பர்கட்குமுந்தி, அவண்-அவ்விடத்து, நமக்கு முன் - நம்மிடத்தில், சுரக்கும் - சுரக்கின்ற, இன் அருளே என்ன - இனிய அருளேபோல, பொழியாய் - மழையைச் சொரிவாய், ஏலோ——,எ - று.

(க - ரை) மேகமே நீ கடல்நீரைப் பருகி, கறுத்தெழுந்து எம்பிராட்டி போல் விளங்கி, அவளது சிற்றிடைபோல மின்னுதல்செய்து, அவளது பாரச் சிலம்புபோல் சப்தித்து, அவளது திருப்புருவம்போல வானவில்லை யுடையையாகி, அவளைப் பிரியாத எம்பெருமானுடைய அன்பர் மீது சுரக்கின்ற திருவருள்போல நீரைப் பொழிவாயாக என்பதாம்.

(வி - ரை.) கடலைச் சுருக்குதல்-கடலைக்குறைத்தல். "நெடுங்கடலுந்தன் னீர்மை குன்றும், தடிந் தெழிலிதா னல்காதாகிவிடின்" என்னுந் திருக்குறளில்" தடிந்தெழிலி" என்பதும் இக்கருத்தே பற்றி வந்தது. நீருண்ட மேகம் கறுத்திருத்தல் இயல்பாதலால் "உடையா ளென்னத் திகழ்ந்து" என்றார். இட்டு - சிறுமை, சிலை - வில், அது இங்கு வானவில்லை யுணர்த்திற்று. (சசு)

செங்கணவன்பாற்றிசைமுகன்பாற்றேவர்கள்பா
லெங்குமிலாதவோரின்பநம்பாலதாக்
கொங்குண்கருங்குழலிநந்தம்மைக்கோதாட்டி
யிங்குநம்மில்லங்கடோறுமெழுந்தருளிச்
செங்கமலப்பொற்பாதந்தந்தருளுஞ்சேவகனை
யங்கணரசையடியோங்கட்காரமுதை
நங்கள்பெருமானைப்பாடிநலந்திகழப்
பங்கயப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்.

(ப - ரை.) கொங்குஉண் கருங்குழலி - மணந்தங்கிய கரியகூந்தலை யுடையாளே, செங்கணவன்பால் - திருமாலினிடத்தும், திசை முகன்பால் - பிரமனிடத்தும், தேவர்கள்பால் - மற்றைத் தேவர்களிடத்தும், எங்கும் மற்றெவ்விடத்தும், இல்லாதது - இல்லாததாகிய, ஓர் - ஒப்பற்ற, இன்பம் - ஆநந்தம், நம்பாலதுஆ - நம்மிடத்த தாகும்படி, நந்தம்மைக் கோதாட்டி - நம்மைச் சீராட்டி இங்கு நம் இல்லங்கள்தோறும் எழுந்தருளி - இவ்விடத்தில் நம் வீடுகள்தோ தோறும் எழுந்தருளி, செங்கமலம் - செந்தாமரை மலர்போன்ற, பொன் பாதம்- இவ்விடத்தில் நம் வீடுகள்தோறும் எழுந்தருளி,செங்கமலம் - செந்தாமரை மலர்போன்ற, பொன் பாதம் - பொன்னடியை, தந்தருளும் - கொடுத்தருள்கின்ற, சேவகனை - சேவகமுடையானை, அங்கண் அரசை - கிருபா நோக்கத்தை யுடைய இறைவனை, அடியோங்கட்கு ஆர் அமுதை - அடியோங்களுக்கு அரிய அமுது போல்வானை, நங்கள் பெருமானை - எம்பெருமானை, பாடி - பாடுதல் செய்து, நலம் திகழ - நன்மைகள் மேன்மேலுயர, பங்கயப்பூ - தாமரை மலர்கள் செறிந்த, புனல் - நீரில், பாய்ந்து ஆடு - குதித்து மூழ்குவாய், ஏலோ——எ - று.

(க - ரை.) திருமால் முதலியதேவர்கட்குங்கிடையாத இன்பத்தைஎமக்கு எளிதிற்கொடுத்தருளின இறைவனைப்புகழ்ந்துபாடிநீராடுவாயாக என்பதாம்.

(வி - ரை.) "கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்" என்கிறபடி கண்ணுக்கு அழகாவது கிருபையாதலால் அம்கண் என்பதற்கு கிருபா நோக்கம் என்று பொருளுரைக்கலாயிற்று. (கஎ)

அண்ணாமலையானடிக்கமலஞ்சென்றிறைஞ்சும்
விண்ணோர்முடியின்மணித்தொகைவீறற்றாற்போல்
கண்ணாரிரவிகதிர்வந்துகார்கரப்பத்
தண்ணாரொளிமழுங்கித்தாரகைகடாமகலப்
பெண்ணாகியாணாயலியாய்ப்பிறங்கொளிசேர்
விண்ணாகிமண்ணாகியித்தனையும்வேறாகிக்
கண்ணாரமுதமுமாய்நின்றான்கழல்பாடிப்
பெண்ணேயிப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்

(ப - ரை.) அண்ணாமலையான் - திருவண்ணாமலையானுடைய, அடிக் கமலம்-பாதாரவிந்தங்களை, சென்று-போய், இறைஞ்சும்-பணிகின்ற, விண்ணோர் முடியின் - தேவர்களுடைய முடிகளிலுள்ள, மணித் தொகை - மணிக்கூட்டங்கள், வீறு அற்றாற்போல் - ஒழிந்தாற்போல, கண் ஆர்-பெருமைமிகுந்த, இரவிகதிர் - சூரியனாகிய ஒளியுடைப் பொருள், வந்து கார்கரப்ப - வந்து மேகத்தின்கண்ணே மறையா நிற்கவும், தாரகைகள் - உடுக்கள், தண் ஆர் ஒளிமழுங்கி அகல - குளிர்ச்சி பொருந்திய பிரகாசங்குறைந்து நீங்கா நிற்கவும், பெண் ஆகி பெண்ணுருவாகி, ஆண் ஆய்-ஆணுருவாகி, அலி ஆய் - அலியுருவாகி, பிறங்கு - விளங்குகின்ற, ஒளிசேர்-ஒளிபொருந்திய, விண் ஆகி-ஆகாயமாகி, மண் ஆகி - பூமியாகி, இத்தனையும் வேறு ஆகி-இத்தனைப்பொருள்களினின்றும்வேறுபட்டு, கண் ஆர் அமுதம் ஆய் நின்றான் - பெருமை நிறைந்த அமுதமாகிநின்றவனது, கழல்-திருவடிகளை, பாடி-பாடுதல் செய்து, பெண்ணே-மாதே, இப்பூம்புனல் பாய்ந்து ஆடு - இந்தப் பொலிவாகிய நீரிற் குதித்து மூழ்குவாய். ஏலோ எ - று.

(க - ரை.) அண்ணாமலையானது திருவடியை வணங்க வந்த தேவர்களுடைய கிரீடத்திலுள்ள இரத்தினங்கள் ஒளி யிழந்தாற் போலச் சூரியன் ஒளி குறைந்து மேகத்தில் மறையாநிற்கவும், உடுக்கள் ஒளி குறைந்து நீங்கா நிற்கவும், பெண் ஆண் அலி முதற் பல வேறுருவாய் விளங்குஞ் சிவபெருமானது திருவடியைப் புகழ்ந்து இந்த நீரில்குளிப்பாயாக என்பதாம்.

(வி - ரை.) மார்கழிமாதமாகையால் "கண்ணாரிரவி கதிர்வந்துகார்கரப்ப" எனவும், விடியற்காலமாகையால் "தண்ணாரொளி மழுங்கித் தாரகைகடாமகல" என்றுங் கூறினர். அகலப்புனல் பாய்ந்தாடுக என இசைத்துக் கொள்க. (கஅ)

உங்கையிற்பிள்ளையுனக்கேயடைக்கலமென்
றங்கப்பழஞ்சொற்புதுக்குமெம்மச்சத்தால்

எங்கள்பெருமானுனக்கொன்றுரைப்போங்கே
ளெங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க
எங்கையுனக்கல்லாதெப்பணியுஞ்செய்யற்க
கங்குல்பகலெங்கண்மற்றொன்றுங்காணற்க
இங்கிப்பரிசேயெமக்கெங்கோனல்குதியே
லெங்கெழிலென்ஞாயிறமக்கேலோரெம்பாவாய்.

(ப-ரை.) உம்கையில் பிள்ளை - உமது கையிலுள்ள பிள்ளை, உனக்கே அடைக்கலம் என்ற - உனக்கே யடைக்கலமாகுமென்ற, அப்பழஞ்சொல் - அந்தப் பழமொழியை, புதுக்கும் - புதுக்குகின்ற, எம் அச்சத்தால் - எமது அச்சத்தினால், எங்கள் பெருமான் - எம்பெருமானே, உனக்கு ஒன்று உரைப்போம் கேள் - உனக்கு ஒரு செய்தி சொல்வோம் கேட்பாய், எம்கொங்கை - எம்முடைய ஸ்தனங்கள், நின் அன்பர் அல்லார் தோள்சேரற்க - உன்னடியாரல்லாதாருடைய தோள்களைத் தழுவாதொழியக் கடவன, எம்கை - எம்முடைய கைகள், உனக்கு அல்லாது-உனக்கேயன்றி,எப்பணியும் செய்யற்க-எந்தப் பணிவிடையையும் செய்யாதொழியக்கடவன, கங்குல்பகல்-இரவும்பகலும், எம்கண்-எம்முடையகண்கள், மற்றொன்றும்காணற்க - (உன்னையன்றி) வேறெந்தப் பொருளையுங் காணாதொழியக் கடவன, இங்கு - இவ்விடத்து, இப்பரிசே - இவ்வாறே, எங்கோன்-எம்மிறைவனே, எமக்கு நல்குதியேல் - எமக்குப் பிரசாதிப்பையாயின் ஞாயிறு எங்கு எழில் எமக்கு என் - சூரியன் எந்தத்திக்கில் உதித்தாலும் எமக்கென்ன பயம், ஏலோ——எ - று.

(க-ரை.) கடவுளே! எமது அவயவங்கள்யாவும் உன் திருப்பணிக் குரியவாகும்படிக் கருணை செய்வாயானால், சூரியன் திசைமாறி உதித்தாலும் எமக்கொரு குறையுமில்லை என்பதாம்.

(வி-ரை.) சூரியன் திசைமாறித் தோன்றினும் இறைவனடியார் சலங்காரென்பது தோன்ற "எங்கெழிலென் ஞாயிறு எமக்கு" என்றார் உன்னுடைமையைக் காத்தல் உனக்கேஉரியது எனப்பொருள்படும் "உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கல" என்னும் பழமொழியைப் புதுக்கலாவதுயாமும் உன்பொருளே எமது கரணங்களும் உமவே என்றல். அச்சத்தால் உரைப்போம்என இயையும்.

போற்றியருளுகநின்னாதியாம்பாதமலர்
போற்றியருளுகநின்னந்தமாஞ்செந்தளிர்கள்
போற்றியெல்லாவுயிர்க்குந்தோற்றமாம்பொற்பாதம்
போற்றியெல்லாவுயிர்க்கும்போகமாம்பூங்கழல்கள்
போற்றியெல்லாவுயிர்க்குமீறாமிணையடிகள்
போற்றிமாலுன்முகனுங்காணாதபுண்டரிகம்
போற்றியாமுய்யவாட்கொண்டருளும்பொன்மலர்கள்
போற்றியாமார்கழிநீராடேலோரெம்பாவாய்.

சிவாகமங்களையும், தோற்றுவித்து அருளியும்=வெளியிட்டருளியும், கல்லாடத்தில்=திருக்கல்லாடமென்னும் க்ஷேத்திரத்தில், இனிது=இனிதாக, நல்லாளோடு (பெண்ணினல்லாளாகிய) உமாதேவியாரோடு, கலந்தருளி= ஒருமிக்க, நயப்பு உற = யாவரும் விரும்பிவழிபடும்படி, எய்தியும் = எழுந்தருளியிருந்தும், பஞ்சப்பள்ளியில்=பஞ்சசயனமென்னும் க்ஷேத்திரத்தில், பால்=பால்போலுமினிய, மொழிதன்னொடும் = மொழியையுடையவுமாதேவியாரோடும், எஞ்சாது=குறையாயல், ஈண்டும் = நாளுக்குநாள்விருத்தியடைகின்ற, இன் அருள்=பெருங்கருணையை, விளைத்தும்=புரிந்தும், கிராதவேடமொடு=வேடவடிவுடன், கிஞ்சுகம்=மூன்முருக்கமலர் போன்ற, வாயவள்=அதரத்தினையுடைய உமாதேவியின், விராவு=ஒன்றோடொன்றுசேர்ந்திருக்கிற, நல் = அழகிய, கொங்கைத்தடம்=ஸ்தன தடத்தில், படிந்தும்=மூழ்கியும், கேவேடர் ஆகி=மீன்வலைஞராகி, கெளிறுஅது = கெளிற்றுமீன்களை, படுத்தும் = பிடித்தும், மா=பெருமை பொருந்திய, வேட்டுஆகிய=விருப்பத்தினையுடையதாகிய, ஆகமம்=ஆகமங்களை, வாங்கியும் = சடலினின்றெடுத்தும், மற்று=பின்னும், அவைதம்மை=அவ்வாகமங்களை, மகேந்திரத்துஇருந்து=மகேந்திர மலையிலிருந்து, உற்ற=தனக்குரிய, ஐம்முகங்களால்=(தற்புருஷம்) முதலிய ஐந்துதிருமுகங்களாலும், பணித்துஅருளியும்=உபதேசித்தருளியும், நந்தம்பாடியில்=நந்தம்பாடியென்னுந் திவ்யக்ஷேத்திரத்தில், நான்மறையோனாய்=நான்கு வேதாதிகாரியாகிய பிராமணோத்தமனாய், அந்தம்இல்=முடிவற்ற, ஆரியனாய்=ஆசாரியனாய், அமர்ந்தருளியும்=விளங்கியிருந்தும், வேறுவேறு உருவும்=வெவ்வேறு வடிவங்களும், வேறுவேற இயற்கையும்=வெவ்வேறுகுணங்களும், நூறுநூறு ஆயிரம்=நூறு இலட்சம், இயல்பினதாகி=வகையினையுடையதாகி, ஏறு=இடபவாகநத்தை, உடை=தனக்குரியதாகக்கொண்ட, ஈசன்=சிவபெருமான், இ= இந்த, புவனியை=பிரபஞ்சத்தை, உய்ய=உஜ்ஜீவிக்கச் செய்யும்பொருட்டு, கூறுஉடை=தனதுதேகத்திலொருபாகத்தையுடைய, மங்கையும் = உமாதேவியாரும், தானும் = தானுமாக, வந்தருளி=எழுந்தருளி, குடநாடுஅதன்மிசை= மேல்நாட்டிலிருந்து, குதிரையைக்கொண்டு=குதிரைகளையோட்டிக்கொண்டு, சதுர்பட=அழகுண்டாக, சாத்தாய்=குதிரைவீரனாய், தான் எழுந்தருளியும்= தானே எழுந்தருளிவந்தும், வேலம்புத்தூர்=திருவேலம்புத்தூரில், எறுவிட்டு அருளி=இடபாரூடனாயிருந்து, சோலம்பொலிவு=திருச்சோலப் பொலிவை, காட்டிய=காண்பித்த, கொள்கையும்=கோட்பாடும், சாந்தம்புத்தூர்=சாந்தம் புத்தூரில், வில்=வில்லினால், பொரு=போர்செய்யப்பட்ட, வேடற்கு=ஒருவேடனுக்கு, தர்ப்பணமதனில்=கண்ணாடியில், ஈந்த=காட்சிகொடுத்தருளிய, விளைவும்=பயனும், மொக்கணி=பூமிப்பிளப்பில், அருளிய=எழுந்தருளிய, முழுத்தழன்மேனி=மிகுந்த அக்கினிஸ்வரூபத்தை, அரியொடு=விஷ்ணுதேவரோடு, பிரமற்கு=பிரமதேவனும்காணும்படி, தொன்மை=முற்காலத்திலே, சொக்கதாக=களங்கமில்லாமல் (வெளிப்படையாய்) காட்டியும்=காண்பித்தும், அளவு அரிய=அவ்விருவராலு (மச்சொரூபத்தை) அளவிட்டறிதற்கு=ஒண்ணான்= எட்டாதவன், நரியை=(அடியேன்பொருட்டுக்) காட்டிலுள்ள நரிகளை, குதி

ரை ஆக்கிய=நாட்டில்வசிக்கும் பரிகளாகச்செய்த, நன்மையும்=நலமும், பாண்
டியன் தனக்கு=(அரிமர்த்தன) பாண்டியனுக்கு, பரிமாவின்=குதிரையின்பொரு
ட்டு, நீண்டு=கைநீட்டிவாங்கப்பட்ட, கனகம்=பொருள்கள், இசையப்பெறு
மல்=(திரும்பவும் கொடுப்பதற்கு) கிடைக்கப்பெறுமல், ஆண்டான்=ஆட்கொ
ண்டவனுகிய, எங்கோன்=(திருப்பெருந்துறையிலெழுந்தருளிய) எம்மிறைவ
னது, அருள்வழி=திருவருள்கிடைக்கும்வழியை, இருப்ப=(நாடித்) துதித்து
க்கொண்டிருப்ப, ஆண்டுகொண்டருள=(அதைக்கண்டு அடியேன் மனமுவக்கு
மாறு) அநுக்கிரகிக்க விரும்பி, அழகுறு=அழகுபொருந்திய, திருவடி=திருவடி
கள் வருந்த, சோதி=சோதிஸ்வரூபனான கடவுள், தூண்டு=குதிரைகளை நடத்
தவல்ல ராவுத்தனாய், தோற்றிய=எழுந்தருளிய, தொன்மையும்=பழமையும்,
அந்தணன் ஆகி=வேதியனாகி, ஆண்டுகொண்டருளி=ஆட்கொண்டருளி, இந்
திரஞாலம்=இந்திரஜாலவித்தை, காட்டிய=காண்பித்தருளிய, தன்மையும்=
இயல்பும், மதுரை=திருவாலவாய்என்கிற, பெருநல்=மிகவும் மங்களகரத்தை
யுடைய, மாநகரிருந்து=பெரியபட்டணத்திலிருந்து, குதிரைச்சேவகனுகிய=
(சௌந்தர சாமந்தனென்னும் சேனாபதியின் வேண்டுகோளுக்கிரங்கி) அட்டா
லச்சேவகனாய் வந்தருளிய, கொள்கையும்=தன்மையும், ஆங்கு அதுதன்னில்=
அம்மதுராபுரிபட்டணத்தில், அடியவட்குஆக=அடியவளாகிய (வந்தி யென்ப
வளுக்காக) பாங்காய்=முறைமையாக, மண்=மண்ணை, சுமந்து அருளிய=(வை
கையநதியை அடைக்கும்பொருட்டுச்) சுமந்த, பரிசும்=தன்மையும், உத்தரகோச
மங்கையுள்=திருவுத்தரகோச மங்கையென்னும் க்ஷேத்திரத்தில், இருந்து=
வீற்றிருந்து, வித்தகவேடம்=ஞானத் திருக்கோலம், காட்டியஇயல்பும்=காண்
பித்த தன்மையும், பூவணமதனில்=திருப்பூவணத்தில், பொலிந்து=இருந்து,
அருளி=அழகுபெறவீற்றிருந்து, தூ=பரிசுத்தமாகிய, வண்ணம்=அழகிய,
மேனி=திருமேனியை, காட்டியதொன்மையும்=காண்பித்த பழமையும், வாத
வூரினில்=திருவாதவூரில், இனிதுவந்து அருளி=இனிதாக வந்தருளி, பாதம்=
திருவடிகளிலணிந்த, சிலம்பொலி=சிலம் போசையை, காட்டிய=காண்பித்த,
பண்பும்=குணமும், திரு ஆர்=செல்வம் நிறைந்த, பெருந்துறை=திருப்பெருந்
துறைக்கு, செல்வனுகி=இறைவனாகி, கரு ஆர்=பேன்மை பொருந்திய,
சோதியுள்=ஒளியில், கரந்த=மறைந்த, கள்ளமும்=வஞ்சமும், பூவலம் அத
னில்=திருப்பூவலத்தில், இனிதுபொலிந்துஅருளி=நன்கெழுந்தருளி,
பாவம்=(அடியார்களது) கன்மங்களை, நாசமாக்கிய=கெடுத்த, பண்பும்—வித
மும், தண்ணீர்ப்பந்தல்=தண்ணீர்ப்பந்தலை, சயம்=வெற்றியை, பெற=இரா
ஜேந்திர பாண்டியனுடைய, வைத்து=வைத்து, நல்=நல்ல, நீர்ச்சேவகனு
கிய=நீர்ச்சேவகனுயிருந்த=நன்மையும்=நலமும், வெண்காடு அதனில்=திரு
வெண்காட்டில், விருந்தினனுகி=(சிறுத்தொண்டநாயனுருக்குரிய) விருந்தா
ளியாகி, குருந்தின் கீழ்=குருந்தமரநிழலில், அன்று=முற்காலத்தில், இரு
ந்த கொள்கையும்=வீற்றிருந்தருளிய தன்மையும், பட்டமங்கையில்=திருப்
பட்ட மங்கையென்னும் திவ்யக்ஷேத்திரத்தில், பாங்காய் இருந்து=அழகுடனி
ருந்து, அங்கு=அவ்விடத்தில், அட்டமாசித்தி=(அணிமாமுதலிய) எட்டுவித

சித்திகளையும்,அருளிய அதுவும்=காண்பித்தருளிய அவ்விதமும்,வேடுவன் ஆகி=வேடத் திருமேனியோடுவந்து, வேண்டுஉருகொண்டு = விரும்பியவடிவங்களையெடுத்து, காடதுதன்னில்=வனத்தில், கரந்து=ஒளித்த, வஞ்சமும்=வஞ்சகமும்,வேண்டுஉருகொண்டு=வேண்டியபடிசேனரூபங்களாய்,மெய்காட்டிட்டு=திருமேனிகாட்டி, தக்கானொருவன் = (அவ்வளவில்நில்லாமல்) தகுந்தஒற்றைச்சேவகன், ஆகியதன்மையும்=ஆனவிதமும், ஓரிஊரின்=திருவோரியூரில், உகந்து=விரும்பி, இனிதுஅருளி=இனிதாகஎழுந்தருளி, பார்=பூமியில், இரும்=சிறிய, பாலகன்ஆகிய=குழந்தைவடிவாகிய, பரிசும்=தன்மையும், பாண்டூர்தன்னில்=திருப்பாண்டூரில், ஈண்ட=(அடியார்குழாங்கள்) நெருங்க, இருந்தும்=வீற்றிருந்தருளியும், தேவூர்=திருத்தேவூரின், தென்பால்=தெற்சே, திகழ்தரு=விளங்குகின்ற, தீவில் = ஓர்தீவினில், கோஆர்கோலம் = அரசகோலம், கொண்ட=கொண்டருளிய, கொள்கையும்=கோட்பாடும், தேன் அமர்=தேன்பொருந்திய, சோலை=சோலைகளையுடைய, திருஆரூரில் = திருவாரூர்என்னும்ஸ்தலத்தில், ஞானந்தன்னை=ஞானோபதேசத்தை, நல்கிய=உபதேசித்த, நன்மையும்=நலமும், இடைமருதுஅதனில் = திருவிடைமருதூரில், ஈண்ட = அடியார்கள்சூழ, இருந்து=வீற்றிருந்து, படிமம்=பரிசுத்தமாகிய, பாதம்வைத்த = திருவடிசூட்டியருளிய, அ பரிசும்=அந்தத்தன்மையும்,ஏகம்பத்தில்=திருவேகம்பமென்னுங்காஞ்சிமாநகரில், இயல்பாய்இருந்து=சாதாரணத்திருவுருவோடிருந்து, பெண்ணொடு=உமாதேவியாரொடு, பாகமாயின=பாகம்பெற்ற,பரிசும்=தன்மையும், திருவாஞ்சியத்தில்=திருவாஞ்சியத்தின்கண் = சீர்பெற=அழகுபொருந்த, மருஆர்=வாசனைதங்கிய, குழலியொடுஇருந்து=கூந்தலையுடைய உமாதேவியாரோடுமெழுந்தருளியிருந்து=மகிழ்ந்த=சந்தோஷித்த, வண்ணமும்=விதமும், சேவகனாகி=போர்ச்சேவகனாய்வந்து, திண்=பலம்பொருந்திய, சிலை=வில்லை,ஏந்தி=தாங்கி,பலபலபாவகம்=அநேகவிதமானபாவனைகளைகாட்டியபரிசும்=காட்டியதன்மையும், கடம்பூர்தன்னில் = திருக்கடம்பூரில்,இடம்பெற=யாவரும்முத்தியுலகைப்பெறநிமித்தம், இருந்தும்=எழுந்தருளியிருந்தும், ஈங்கோய்மலையில் = திருவீங்கோய்மலையென்னுந்திருப்பதியில், எழிலதுகாட்டியும் = அழகைக்காட்டியும், ஐயாறதனில்=திருவையாற்றில், சைவனாகியும்=ஆதிசைவப்பிராமணத்திருக்கோலமாய்எழுந்தருளிவந்தனுக்கிரகித்தும், துருத்திதன்னில்=திருத்துருத்திப்பதியில், அருத்தியோடு=பேரன்புடன், இருந்தும்=வீற்றிருந்தும், திருப்பனையூரில்; திருப்பனையூரின்கண், விருப்பன்ஆகியும்=விருப்பமுடையவனாயிருந்தும், கழுமலம்அதனில்=சீர்காழிப்பதியில், காட்சிகொடுத்தும்=தரிசனந்தந்தருளியும், கழுக்குன்றுஅதனில்= திருக்கழுக்குன்றத்தில், வழாதிருந்தும்=தவறாதிருந்தும், புறம்பயம்அதனில் = திருப்புறம்பயத்தில், அறம்பல=பலதருமங்களை, அருளியும்=அருள்செய்தும், குற்றாலத்து=திருக்குற்றாலப்பதியில், குறியாய் இருந்தும்=(அகத்தியமுனிவர்வேண்டுகோளின்படி) சிவலிங்கக்குறியாய் அமைந்தும், அந்தம்இல்=முடிவில்லாத, பெருமை=பெருமையையுடைய, அழல்உரு=அக்கினிவடிவத்தை, கரந்து=மறைத்து, சுந்தரவேடத்து=அழகியவேஷத்தையுடைய, ஒரு = ஒப்பற்ற, முதல்உருகொண்டும் = முதன்மையானவடிவங்

கொண்டு, இந்திரஞாலம்போல்=இந்திரஞாலம்போல, வந்து அருளி = எழுந்தருளி, எ எவர்தன்மையும்=எவ்வெவரியற்கைகளையும், தன்வயின்படுத்து=தன்னிடத்து அடக்கி, தானே ஆகிய=தானொருவனே முழுமுதற்கடவுளாகிய, தயாபரன் =கருணையிற்சிறந்தவனும், எம்இறை=எமது தலைவனுமாகிய கடவுள், சந்திரதீபத்து=சந்திரதீபத்தில், சாத்திரன் ஆகி=சாஸ்திரபோதகனாய், அந்தரத்து இழிந்து வந்து=ஸ்ரீமகாகைலாயத்தினின்றெழுந்தருளிவந்து, அழகமர்=அழகுபொருந்திய, பாலையுள் = திருப்பாலைவனத்தில், சுந்தரத்தன்மையொடு = அழகியதிருக்கோலத்தோடு, துதைந்து=பொருந்தி, வந்து அருளியும் = எழுந்தருளிவந்தும், மந்திரம்=இரகஸ்யத்தானம், ஆம்=ஆகிய, மலை=பெரியமலையாகிய, மகேந்திர வெற்பன்=மகேந்திரமலையையுடையவன், அந்தமில்=முடிவில்லாத, பெருமை= மேன்மையையும், அருள்=கருணையையும், உடை=உடைய, அண்ணல் =பெருமையிற்சிறந்தவன், எம்தமை = எம்மை, ஆண்ட=ஆட்கொண்ட, பரிசது=தன்மையை, பகரின் = சொல்லுமிடத்து, ஆற்றல் அது=வல்லமையை, உடை= உடைய, அழகமர் = அழகமைந்த, திருஉரு = திருவடிவை, நீற்றுக்கோடி = திருநீற்றிரேகையோடு, கிமிர்ந்து = உயர்ந்து, காட்டியும் = காண்பித்தும், ஊனந்தன்னை =பிறவித்துன்பத்தை, ஒருங்கு = ஒருமிக்க, உடன் = உடனே, அறுக்கும்=ஒழிக்கின்ற, ஆனந்தமே = இன்பமே, ஆறு ஆக அருளியும் = பிரயோசனமாக வருளிச்செய்தும், மாதின் = உமாதேவிதங்கிய, கூறு உடை = இடதுபாகத்தையுடைய, மாபெருங்கருணையன் = மிகவுமுயர்ந்த கருணையை உடையவன், நாதம் = நாததத்துவமாகிய, பெரும் = பெரிய, பறை=முரசு, நவின்று = முழங்கி, கறங்கவும் = ஒலிக்கவும், அழுக்கு = மாசு, அடையாமல்=பொருந்தாமல், ஆண்டுகொண்டருள்பவன் = ஆட்கொண்டருள்வோன், கழுக்கடைதன்னை = சூலாயுதத்தை, கைகொண்டு அருளியும் = கைப்பிடித்தருளியும், மூலமாகிய = பிறவிப்பிணிக்குக் காரணமாகிய, மும்மலம்=(ஆணவம், மாயை, கன்மமென்று சொல்லப்பட்ட) மூன்று மலங்களையும், அறுக்கும் = சேதிக்கின்ற, தூய = பரிசுத்தமாகிய, மேனி = திருமேனியின், சுடர் =காந்தியை, விடு = எறிகின்ற, சோதி = ஒளிவடிவானவன், கழுநீர்மாலை = செங்கழுநீர்மலர்மாலையில், காதலன் ஆகி=விருப்பமுடையவனாகி, எல்உடைத்தாக = பொருத்தமுடைத்தாக, எழில்பெற அணிந்தும் = அழகாய்அணிந்தும், அரியொடுபிரமற்கு=பிர்ம்மவிஷ்ணுக்களுக்கு, அளவு=இத்தன்மையனென்று, அறியாதவன்=அறியப்படாதவன், பரிமாவின்மிசை=குதிரையின்மீது, பயின்றவண்ணமும்=எறிவந்த தன்மையும், மீண்டும்=மறுபடியும், வாராவழி = பிறவியையடையாத மோட்சமார்க்கத்தை, அருள்புரிபவன் = (அடியார்க்குக் கிருபைசெய்பவனாகிய) சிவபெருமான், பாண்டிநாடே=பாண்டிவளநாடே, பழம் பதியாகவும்=பழமையாய்வசிக்கும் ஸ்தலமாகக்கொண்டும், பத்திசெய்=தன்னிடதன்புவைத்துத் தொண்டுசெய்கிற, அடியரை = அடியார்களை, பரம்பரத்து= மிகவும் மேலான மோட்சவுலகத்தில், உய்ப்பவன் = வைப்பவன், உத்தரகோசமங்கை=திருவுத்தரகோசமங்கையை, ஊர் ஆ=ஊராகக்கொண்டும், ஆதிமூர்த்திகட்கு=திரிமூர்த்திகளுக்கு, அருள்புரிந்தருளிய=திருவருள்செய்தனுக்கிரகித்த,

மந்தமில்பெருமையழ லுருக்கரந்து
சுந்தரவேடத்தொருமுத லுருவுகொண்
டிந்திரஞாலம்போலவந்தருளி
யெவ்வெவர்தன்மையுந்தன்வயிற்படுத்துத்
தானேயாகியதயாபரனெம்மிறை
சந்திரதீபத்துச்சாத்திரனாகி
யந்தரத்திழிந்துவந்தழகமர்பாலையுட்
சுந்தரத்தன்மையொடுதுதைந்திருந்தருளியு
மந்திரமாமலைமகேந்திரவெற்ப
னந்தமில்பெருமையருளுடையண்ண
லெந்தமையாண்டபரிசதுபகரி
னாற்றலதுவுடையழகமர்திருவுரு
நீற்றுக்கோடிநிமிர்ந்துகாட்டியு
மூனந்தன்னையொருங்குடனறுக்கு
மானந்தம்மேயாறாவருளியு
மாதிற்கூறுடைமாப்பெருங்கருணைய
னாதப்பெரும்பறைநவின்றுகறங்கவு
மழுக்கடையாமலாண்டுகொண்டருள்பவன்
கழுக்கடைதன்னைக்கைக்கொண்டருளியு
மூலமாகியமும்மலமறுக்குந்
தூயமேனிச்சுடர்விடுசோதி
காதலனாகிக்கழுநீர்மாலை
யேலுடைத்தாகவெழில்பெறவணிந்து
மரியொடுபிரமற்களவறியாதவன்
பரிமாவின்மிசைப்பயின்றவண்ணமு
மீண்டுவாராவழியருள்புரிபவன்
பாண்டிநாடேபழம்பதியாகவும்
பத்திசெய்யடியரைப்பரம்பரத்துய்ப்பவ
னுத்தரகோசமங்கையூராகவு
மாதிமூர்த்திகட்கருள்புரிந்தருளிய
தேவதேவன்றிருப்பெயராகவு
மிருள்கடிந்தருளியவின்பவூர்தி
யருளியபெருமையருண்மலையாகவு
மெப்பெருந்தன்மையுமெவ்வெவர்திறமு

மப்பரிசதனாலாண்டுகொண்டருளி
நாயினேனை நலமலிதில்லையுட்
கோலமார்தருபொதுவினில்வருகென
வேலவென்னை யீங்கொழித்தருளி
யன்றுடன்சென்றவருள்பெறுமடியவ
ரொன்றவொன்றவுடன்கலந்தருளியு
மெய்தவந்திலாதாரெரியிற்பாயவு
மாலதுவாகிமயக்கமெய்தியும்
பூதலமதனிற்புரண்டுவீழ்ந்தலறியுங்
கால்விசைத்தோடிக்கடல்புகமண்டி
நாதநாதவென்றழுதரற்றிப்
பாதமெய்தினர்பாதமெய்தவும்
பதஞ்சலிக்கருளியபரமநாடகவென்
றிதஞ்சலிப்பெய்தநின்றேங்கினரேங்கவு
மெழில்பெறுமிமயத்தியல்புடையம்பொற்
பொலிதருபுலியூர்ப்பொதுவினினடநவில்
கனிதருசெவ்வாயுமையொடுகாளிக்
கருளியதிருமுகத்தழகுறுசிறுநகை
யிறைவனீண்டியவடியவரோடும்
பொலிதருபுலியூர்ப்புக்கினிதருளின
னொலிதருகைலையுயர்கிழவோனே.

திருச்சிற்றம்பலம்.

(ப-ரை.) தில்லை = திருத்தில்லைவனமென்கிற, மூதூர் = பழையநகரின்கண், ஆடிய, பஞ்சகிருத்திய நடனஞ் செய்தருளிய, திருவடி = திருவடியானது, பல் = பலவகைப்பட்ட, உயிர் எல்லாம் = ஆன்மகோடிகளனைத்திலுள்ளும், பயின்றனன் ஆகி = வியாபித்திருப்பவனாகி, எண் இல் = அளவிறந்த, பல்குணம் = பலநற்குணங்களோடு, எழில்பெற = அழகுபொருந்த, விளங்கி = பிரகாசித்து, மண்ணும் = பூலோகத்திலும், விண்ணும் = சுவர்க்கலோகத்திலும், வானோர்உலகும் = மற்றைத்தேவருலகத்திலும், துன்னிய = பொருந்திய, கல்வி = கல்விகளை = தோற்றியும் = உண்டாக்கியும், அழித்தும் = மறைத்தும், என்னுடை = அடியேனுடைய, இருளை = அஞ்ஞானவிருளை, ஏற = அறவே, துறந்தும் = நீக்கியும், அடியார் = தொண்டரது, உள்ளத்து = மனத்தில், அன்பு = அன்பானது, மீதூற = அதிகரிக்க, குடியாக்கொண்ட = குடியிருப்பாகக்கொண்டருளிய, கொள்கையும் = கோட்பாடும், சிறப்பும் = (அக்கொள்கையாலுண்டாகும்) புகழ்ச்சியும், மன்னும் = நிலைபெற்ற, மா = பெரிய, மகேந்திரமலையதனில் = மகேந்திரபர்வதத்திலிருந்து, சொன்ன = உபதேசித்தருளிய, ஆகமம் = (காமிகாதி யிருபத்தெட்டு)

(ப - ரை.) நின் ஆதியாம் பாதமலர் - உனது எல்லாப் (பொருள்களுக்கும்) முதன்மையாகிய பாதமலர்கள், போற்றி - எம்மால் வணங்கப்படுவனவாக, அருளுக - (அவற்றை) அருள்க, நின் அந்தம் ஆம் செந்தளிர்கள் - உனது (எல்லாப் பொருள்களுக்கும் முடிவிடமாகிய) செய்யபாதமாகிய தளிர்கள், போற்றி - எம்மால்வணங்கப்படுவனவாக, அருளுக - (அவற்றை) அருள்க, எல்லாவுயிர்க்கும் - எல்லாச் சீவர்களுக்கும், தோற்றம் ஆம் பொற்பாதம் - பிறப்பிடமாகிய பொன்னடிகள், போற்றி - எம்மால் வணங்கப்படுவனவாக, எல்லாவுயிர்க்கும் - எல்லாச் சீவர்களுக்கும், போகம்ஆம் பூங்கழல்கள் - போகரூபமாகிய பொன்னடிகள், போற்றி - எம்மால் வணங்கப் படுவனவாக, எல்லாவுயிர்க்கும் - எல்லாச் சீவர்களுக்கும், ஈறு ஆம் இணை அடிகள் - லயஸ்தானமாகிய இரண்டு திருவடிகள், போற்றி - எம்மால் வணங்கப் படுவனவாக, மால் நான்முகனும் - திருமாலும் பிரமனும், காணாத - காணவொண்ணாத, புண்டரிகம் - (உன் திருவடித்) தாமரைகள், போற்றி எம்மால் வணங்கப் படுவனவாக, யாம் உய்ய - யாம் பிழைக்கும் பொருட்டு, ஆட்கொண்டருளும் - எம்மை அடிமைகொண்டருளிய, பொன்மலர்கள் - திருவடித் தாமரைகள், போற்றி - எம்மால் வணங்கப் படுவனவாக, யாம் மார்கழி நீர் ஆடு - யாம் செய்யும் மார்கழிநீராட்டமும், போற்றி - எம்மால் வணங்கப் படுவனவாக.

(க - ரை.) எல்லாவுயிர்களும் தோன்றி யொடுங்குதல் முதலியனவுக்கிடமாகிய உன் திருவடிகளுக்கு வணக்கம் செய்கிறேன் என்பதாம்.

(வி - ரை.) போற்றியருளுக நின்னாதியாம் பாதமலர் என்பதற்கு நின் - உனது, ஆதிஆம் - எல்லாப்பொருள்களுக்கும் முதன்மையாகிய, பாதமலர் - தாமரைமலர்போன்ற திருவடிகளே, அருளுக - அருள்செய்வாயாக, போற்றி - நமஸ்காரம் எனினுமாம். மற்றத்தொடர்களுக்கும் இவ்வாறே பொருள்கொள்க. "மானான்முகனும் காணாதயாமுய்ய வாட்கொண்டருளும்" என்ற விசேடணங்களால். புண்டரிகம் என்பதும் பொன்மலர் என்பதும் திருவடியைக்குறித்தன.()

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

# திருவம்மானை.

## ஆநந்தக்களிப்பு.

அதாவது - சுகமேலீடு.

திருவண்ணாமலையில் அருளிச்செய்யப்பட்டது.

ஒப்புமைபற்றிவந்த ஆறடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

செங்கணெடுமாலுஞ் சென்றிடந்துங் காண்பரிய
பொங்குமலர்ப்பாதப் பூதலத்தே போந்தருளி

யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொண்டு
தெங்குதிரள்சோலைத்தென்னன்பெருந்துறையா
னங்கணனந்தணனாயறைகூவிவீடருளு
மங்கருணைவார்கழலேபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) செங்கண் - பசுமைதங்கிய செந்தாமரை மலர்போலுங் கண்களையுடைய, நெடுமாலும் - நெடிய விஷ்ணுவும், சென்று இடந்தும் - வராகவடிவாய்ச் சென்று நிலத்தைப் பிளந்தும், காண்பு அரிய - காணுதற்கருமையாகிய, பொங்கு - விளங்குகின்ற, மலர் - தாமரை மலர்போன்ற, பாதம் - திருவடி, பூதலத்தே - பூமியில், போந்தருளி - எழுந்தருளி, எங்கள் பிறப்பு அறுத்திட்டு - எங்கள் பிறவித்தளையைச் சேதித்து, எம் தரமும் ஆட்கொண்டு - எமது கூட்டத்தையும் அடிமைகொண்டு, தெங்கு திரள்சோலை-தென்னமரங்கள் திரண்ட சோலைசூழ்ந்த, தென் நன் - அழகும் நன்மையும் வாய்ந்த, பெருந்துறையான்-திருப்பெருந்துறையையுடையவன், அம்கண்ணன் - அழகியகிருபைக் கண்களையுடையவன், அந்தணன் ஆய் - வேதியனாய் யெழுந்தருளி, அறைகூவி வலிய அழைத்து, வீடு அருளும் - முத்திமார்க்கத்தை தந்தருள்கின்ற, அம்-அழகிய, கருணை-கருணையையுடைய, வார்கழலே - நீண்ட வீரக்கழலையணிந்த திருவடியையே, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) திருமால்வராகவுருக்கொண்டு பூமியைப்பிளந்துதேடியுங்காண்டற் கரிதாகிய திருவடி இம்மண்ணிற் படும்படி யெழுந்தருளி யெம்மையும் எம்மினத்தையும் ஆட்கொண்டு திருப்பெருந்துறையில் முத்தி வழியையும் அருள் செய்தமையால், அந்தத் திருவடிப் பெருமையையே யாம் புகழ்வோம் என்பதாம்.

(வி - ரை.) காண்பரிய வென்பதில்-காண்பு தொழிற்பெயர். அங்கணன் - அழகிய கண்களையுடையவன் எனினுமாம். அந்தணன் - அழகிய தட்பத்தினையுடையான். அங்கருணை வார்கழல் என்றார் திருவடி கருணை யுருவாதலால். அம்மானை - மகளிர் செய்யும் ஓர் விளையாட்டு. சென்று இடந்தும் என்பதனை, இடந்து சென்றும் எனமாறுக. நெடுமாலும் என்றதில் உம்மை உயர்வு சிறப்பு. (௧)

பாரார்விசும்புள்ளார்பாதாளத்தார்புறத்தா
ராராலுங்காண்டற்கரியானெமக்கெளிய
பேராளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றி
வாராவழியருளிவந்தென்னுளம்புகுந்த
வாராவமுதாயலைகடல்வாய்மீன்விசுறும்
பேராசைவாரியனைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) பாரார் - மண்ணுலகத்தவரும், விசும்பு உள்ளார் - விண்ணுலகத்தவரும், பாதாளத்தார் - பாதாளலோகத்தவரும், புறத்தார் - (இவற்றிற்கு) புறத்திலுள்ள மற்றையுலகங்களிலுள்ள வரும், (ஆகிய) ஆராலும் - எவராலும், காண்டற்கு - அறிதற்கு, அரியான் - அருமையானவன், (ஆயினும்) எமக்கு -

எங்களுக்கு, எளிய - எளிதான, பேராளன் - கீர்த்தியையுடையோன், தென்னன் பெருந்துறையான்-அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையை யுடையவன், பிச்சு எற்றி, பித்தேறச்செய்து, வாரா - மீண்டும் பிறவிநோய் வாராமைக்குக் காரணமாகிய, வழி - முத்திநெறியை, அருளி - அருள்செய்து, வந்து என் உள்ளம் புகுந்து - வந்து என் மனத்தே புகுந்து, ஆரா அமுது ஆய் - தெவிட்டாத அமிர்தமாகி, அலைகடல்வாய் - அலையா நின்ற கடலின் கண், மீன் விசிறும் - மீனின் பொருட்டு வலைவீசின, பேர் ஆசைவாரியனை - பெருங்கருணைக் கடலாயிருப்பவனை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) மண்ணுலகத்தார் விண்ணுலகத்தார் முதலிய யாவராலும் காண்டற்கரியவனும், திருப்பெருந்துறையி லெழுந்தருளி யென்னைப்பித்தேற்றினவனும், முத்திநெறியை யருளிச்செய்தவனும், வலைவீசல் முதலிய திருவிளையாடல்களைச் செய்தவனும், கருணைக்கடல்போன்றவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் எனவே மூன்றுலகத்தாரையும் குறிக்கும், அங்ஙனமாகவும் புறத்தார் என்று வேறுகூறியது யாதுக்கெனின், பகிரண்டங்களி லுள்ளாரையும் முனிவர் முதலியோரையும் தழுவிக்கோடற்கென்க. மீன்விசிறும் பேராசைவாரியனென்றது, தண்டுறைப்பாக்கத்தில் ஓர்வலைஞன் புத்திரப்பேறின்றி வருந்துகையில், ஒருநாள் சிவபெருமானிட்ட கட்டளைப்படியுமாதேவியார் ஓர்பெண்குழந்தை வடிவாய்கடற்கரையோரத்தில் புன்னைமரநீழலில் அழுதுக்கொண்டிருக்க, அதை அவ்வலைஞன் கண்டெடுத்து வளர்த்து மங்கைப்பருவம் வந்தகாலத்து,சிவபெருமானிட்டகட்டளையால் நந்திதேவரும் ஓர் சுறாமீனாகிச் சாகரத்தைக்கலக்கித்திரிகையில் அவ்வலைஞன் அம்மீனைப்பிடிப்பவர்க்குத் தன்மகளை விவாகஞ்செய்து கொடுப்பதாகச்சொல்ல, அதை சிவபெருமானறிந்து ஓர் வலைஞனாய்வந்து அம்மீனைப்பிடித்து தேவியைத்திருமணம் புரிந்தமையை. இதனைத்திருவிளையாடல்வலைவீசின படலத்தானுணர்க.()

இந்திரனும்மாலயனுமேனோரும்வானோரு
மந்தரமேநிற்கச்சிவனவனிவந்தருளி
யெந்தரமுமாட்கொண்டுதோட்கொண்டநீற்றனாய்ச்
சிந்தனையைவந்துருக்குஞ்சீரார்பெருந்துறையான்
பந்தம்பறியப்பரிமேற்கொண்டான்றந்த
வந்தமிலாவானந்தம்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) இந்திரனும் - இந்திராணிமணாளனும், மால் அயனும் - திருமாலும் பிரமனும், ஏனோரும் - மற்றையோரும், வானோரும் - தேவர்களும், அந்தரமே நிற்க - விண்ணுலகத்தே நிற்க, சிவன் - சிவபெருமான், அவனி வந்தருளி - மண்ணுலகத்தில் எழுந்தருளி, எம் தரமும் ஆட்கொண்டு - எமது கூட்டத்தையும் அடிமைகொண்டு, தோள்கொண்ட நீற்றன் ஆய் - திருத்தோளிற் பூசிய திருவெண்ணீற்றையுடையனாய், வந்து - எம்மிடத்துவந்து, சிந்தனையை உருக்கும் - மனத்தை உருகச்செய்கிற, சீர் ஆர் - சிறப்புப்பொருந்திய, பெருந்துறை

யான் - திருப்பெருந்துறையை யுடையவன், பந்தம் பறிய-பிறவித்தளையொழிய, பரி மேற்கொண்டான் - குதிரை யூர்ந்தவன், (அவன்) தந்த - கொடுத்தருளின, அந்தம் இல்லா - முடிவில்லாத, ஆநந்தம் - இன்பத்தை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) இந்திரன் முதலாகிய தேவர்களும் மற்றை முனிவர் முதலானோரும் விண்ணுலகத்தே நிற்க, எம்மை யாட்கொள்ளும் பொருட்டுப் பூவுலகத் தெழுந்தருளி, எமது மனத்தை யுருக்குகின்ற திருப்பெருந்துறையான் எமக் கருள்செய்த ஆநந்தத்தைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) பந்தம் - கட்டு, அது பிறவிக்கட்டுக்காயிற்று. பறிதல் - நழுவுதல். பரிமேற்கொண்டான் என்றது குதிரைச்சேவகனாகிக் கூடற்பதியில் எழுந்தருளின செய்தியைக் குறித்தது. இதனைத் திருவாதவூரர்புராணம் குதிரையிட்ட சருக்கத்திற்காண்க. தோட்கொண்ட நீற்றனாய்ச் சிந்தனையை வந்துருக்கும் என்றது இறைவனது திருந்தோளிலணிந்த திரு வெண்ணீற்றழகில் தமது மனம் பதிந்தமையை விளக்கற்கென்க. (ங)

வான்வந்ததேவர்களுமாலயனோடிந்திரனுங்
கானின்றுவற்றியும்புற்றெழுந்துங்காண்பரிய
தான்வந்துநாயேனைத்தாய்போற்றலையளித்திட்
டூண்வந்துரோமங்களுள்ளேயுயிர்ப்பெய்து
தேன்வந்தமுதின்றெளிவினொளிவந்த
வான்வந்தவார்கழலேபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) வான்வந்த தேவர்களும்-விண்ணுலகததிலுள்ள தேவர்களும், மால் அயனோடு இந்திரனும் - அரி பிரமர்களோடு இந்திரனும், கான் நின்று வற்றியும் - காட்டில் நின்று உலர்ந்தும், புற்றுஎழுந்தும் - தம்மீது புற்று வளர்ந்தும், காண்பு அரிய - காணுதல் அருமையாகிய, தான்வந்து - தானேவந்து, நாயேனை - நாயினேனை, தாய்போல் தலையளித்திட்டு - தாயைப்போலத் தலையளிசெய்து, ஊன் - உடம்பில், உரோமங்கள் வந்து- மயிர் சிலிர்த்து, உள்ளே உயிர்ப்பு எய்து - உள்ளே நெட்டுயிர்ப் படைதற்கேதுவாகிய, தேன்வந்து - தேன்போன்று, அமுதின் தெளிவின் - அமிர்தத்தின் தெளிவுபோல, ஒளிவந்த - ஒளியுருவா யெழுந்தருளின, வான்வந்த - மேன்மையமைந்த, வார்கழலே - நீண்ட திருவடியையே, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) தேவர்கள் முதலாயினோர் காட்டில் நின்று தவஞ்செய்தும் காண்டற்கரிதாகிய சிவபெருமான் தானே யெழுந்தருளி நாயேனைத் தலையளி செய்த பெருங்கருணையை நினைந்து புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) வான்- விண்ணுலகம். ஊன் - தசை. அதுஉடம்புக்காயிற்று. தலையளி - பேரன்பு. (ச)

கல்லாமனத்துக்கடைப்பட்டநாயேனை
வல்லாளன்றென்னன்பெருந்துறையான்பிச்சேற்றிக்

கல்லைப்பிசைந்துகனியாக்கித்தன்கருணை
வெள்ளத்தழுத்திவினைகடிந்தவேதியனைத்
தில்லைநகர்புக்குச்சிற்றம்பலமன்னு
மொல்லைவிடையானைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) கல்லாமனத்து - கற்கவேண்டிய வற்றைக் கல்லாத மனத்தை யுடைமையால், கடைப்பட்ட நாயேனை - கடையாகிய நாயினேனை, வல்லாளன் - பேராற்றலுடையான், தென்னன் பெருந்துறையான் - அழகும் நன்மையும்வாய்ந்த திருப்பெருந்துறையை யுடையவன், பிச்சு ஏற்றி-பித்தேறச்செய்து, கல்லைப்பிசைந்து கனியாக்கி - (மனமாகிய) கல்லைப்பிசைந்து பழமாகச்செய்து, தன் கருணைவெள்ளத்து அழுத்தி - தன்கருணைக்கடலில் அழுந்து வித்து, வினை கடிந்த - ஆணவாதிய வினைகளை நீக்கி யருளின, வேதியனை - அந்தணனை, தில்லை நகர்புக்கு-தில்லை நகரிற் புகுந்து, சிற்றம்பலம் மன்னும் - திருச்சிற்றம்பலத்தில் நிலைபெற்ற, ஒல்லை விடையானை - விரைவிற் செல்லுதலையுடைய இடப வாகனனை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். ஏ - று.

(க - ரை.) கல்லாமனத்தினாற் கடைப்பட்ட நாயேனைப் பிச்சேற்றிக் கல்லைக்கனிவித்தாற்போல என் மனத்தைக் குழைத்துத்தன் கருணைக்கடலில் அழுத்தி என் வினைகளைக்கடிந்தருளின இறைவனைப்பாடுவோம் என்பது.

(வி - ரை.) கல்லாமனத்துக் கடைப்பட்ட என்றமையால் கல்லாமையின் இழிவு தோன்றுகிறது. வல்லாளன் - எல்லாம் வல்லவன். வெள்ளம் - நீர்ப்பெருக்கு, அது இவ்விடத்துக் கடலுக்காயிற்று. அதினுமிக்க நீர்ப்பெருக்குடையது வேறொன்றின்மையான். கல்லைப் பிசைந்து கனியாக்குந்தன்மை எல்லாம்வல்ல தன்மை யுடையானுக்கன்றி மற்றையோர்க் கியாலாதெனற்கு. கல்லைப்பிசைந்து கனியாக்கு என்றார். தென்னன் என்றதற்குத் தென்னாட்டிலே சோமசுந்தர பாண்டியனா யெழுந்தருளி அரசாண்டவனெனினு மமையும். (௭)

கேட்டாயோதோழிகிறிசெய்தவாறொருவன்
றீட்டார்மதில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
காட்டாதனவெல்லாங்காட்டிச்சிவங்காட்டித்
தாட்டாமரைகாட்டித்தன்கருணைத்தேன்காட்டி
நாட்டார்நகைசெய்யநாமேலைவீடெய்த
வாட்டான்கொண்டாண்டவாபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) ஒருவன் - ஒருவன்,கிறிசெய்த ஆறு- மாயஞ்செய்த விதத்தை தோழி கேட்டாயோ - தோழி நீ கேட்டாயா, தீட்டு ஆர் மதில் - சித்திரித்தாலமைந்த மதில், புடைசூழ் - அயலிற் சூழப்பெற்ற, தென்னன் பெருந்துறையான் - அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந் துறையை யுடையவன், காட்டாதன எல்லாம் காட்டி - காட்டவொண்ணாத மறைப்பொருள்களெல்லாவற்றையும் காட்டி, சிவம் காட்டி-மோட்சானுபவத்தைக்காட்டி, தாள் தாமரை காட்டி - திருவடித் தாமரையைக் காட்டி, தன் கருணை தேன்காட்டி - தன்கருணையாகிய தே

னைக்காட்டி, நாட்டார் நகைசெய்ய - நாட்டிலுள்ளார் நகைக்க, நாம் மேலைவீடு எய்த - யாம் மேன்மையாகிய வீட்டினை யடைய, ஆள் தான்கொண்டு-அடிமை கொண்டு,ஆண்ட ஆறு - காத்தவிதத்தை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய்.

(க - ரை.) தோழி ! திருப்பெருந்துறையை யுடையவன், நம்மையோர் பொருளாக்கி யாட்கொண்டு நமக்குக் காட்டவொண்ணாத மறைப் பொருள்களைக் காட்டி, சிவத்தைக் காட்டி, தன் திருவடியைக் காட்டி, வீடடையச் செய்த மாய மிருந்தவாற்றைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) கிறி - மாயவித்தை. அல்லது வழியெனக்கொண்டு உய்யும் மார்க்கமெனினும் பொருந்தும். தீட்டு-மூதனிலைத் தொழிற்பெயர். நாட்டார் நகை செய்தற்குக் காரணம். தமக்கு ஆட்படுந்தன்மை யுண்டாவதற்கு முன்னே யாட்கொண்டமை.

ஓயாதேயுள்குவாருள்ளிருக்குமுள்ளானைச்
சேயானைச்சேவகனைத்தென்னன்பெருந்துறையின்
மேயானைவேதியனைமாதிருக்கும்பாதியனை
நாயானநந்தம்மையாட்கொண்டநாயகனைத்
தாயானதத்துவனைத்தானேயுலகேழு
மாயானையாள்வானைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) ஓயாதே - நீங்காதே, உள்குவார் உள் இருக்கும்-நினைப்பவரது மனத்தில் வீற்றிருக்கின்ற, உள்ளானை - திருவுள்ளமுடையவனை, சேயானை-(நினையாதவர்க்கு) தூரமாயிருப்பவனை, சேவகனை - மகாவீரனை, தென்னன் பெருந்துறையில் மேயானை - அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருப்பவனை, வேதியனை-அந்தணனை, மாது இருக்கும் பாதியனை-உமாதேவியாரிருக்கின்ற பாதியுடம்பினனை, நாய் ஆன நந்தம்மை - நாய் போன்ற நம்மை, ஆட்கொண்ட நாயகனை - அடிமைகொண்ட தலைவனை, தாய் ஆன - தாயாகிய, தத்துவனை - உண்மைப்பொருளா யிருப்பவனை, தானே - தானொருவனே, உலகு எழும் ஆயானை - ஏழுலகங்களுமா யிருப்பவனை, ஆள்வானை - ஆண்டருள்வோனை, பாடுதும் - பாடுவோம், அம்மனாய். எ - று.

(க - ரை.) இடையறாது நினைக்கின்ற அன்பரை யாட்கொள்ளுதல் முதலாயின அரிய பெரிய செயல்களை யுடையவனாகிய இறைவனைப் பாடுவோம் என்பது.

(வி - ரை.) உள் - மனம். உள்குவாருள்ளிருக்கு முள்ளானையென்றதை யடுத்துச், சேயானையென்றமையால் அங்ஙனஞ்சேயனாதல்உள்ளாதார்க்கென்பது பெறப்பட்டது,வேதியனை என்றதற்கு வேதப்பிரதிபாத்தியனையெனினுமாம்.()

பண்சுமந்தபாடற்பரிசுபடைத்தருளும்
பெண்சுமந்தபாகத்தின்பெம்மான்பெருந்துறையான்
விண்சுமந்தகீர்த்திவியன்மண்டலத்தீசன்

கண்சுமந்தநெற்றிக்கடவுள்கலிமதுரை
மண்சுமந்துகூலிகொண்டக்கோவான்மொத்துண்டு
புண்சுமந்தபொன்மேனிபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) பண்சுமந்த - பண்களைக்கொண்ட, பாடற்பரிசு - திருப்பாடல்களின் ஈகையை, படைத்தருளும்-படைத்தருளின, பெண்சுமந்த பாகத்தின்-பெண்ணைத் தாங்கிய பாகத்தையுடைய, பெம்மான் - பெருமான், பெருந்துறையான் - திருப்பெருந் துறையை யுடையவன், விண்சுமந்த - விண்ணுலகத்தினுஞ்சென்ற, கீர்த்தி - புகழையுடைய, வியன் - பெருமை வாய்ந்த, மண்டலத்து ஈசன் - மண்டலங்களுக்கு நாயகன், கண்சுமந்த நெற்றிகடவுள் - கண்ணைக்கொண்ட நெற்றியையுடைய கடவுள், (அவன்) கலிமதுரை - புகழையுடைய மதுரையில், மண் சுமந்து - (வந்தியின் பொருட்டு) மண்ணைச் சுமந்து, கூலிகொண்டு - கூலியைப் பெற்று, அ-அந்த, கோவால் - (அரிமர்த்தன பாண்டிய) ராஜனால், மொத்துண்டு - அடியுண்டு, புண்சு மந்த - புண் பட்ட, பொன்மேனி - பொன்போலுந் திருமேனியை, பாடுதும்-பாடுவோம், அம்மனாய். எ - று.

(க - ரை.) அன்பரால் பாடப்பட்ட தோத்திரங்களைப் பரிசாரப்பெற்ற உமாதேவிபங்கனும் திருப்பெருந் துறையிலுருப்பவனுமாகிய இறைவன், மதுரையில் மண்சுமக்கவந்து பாண்டியனால் பிரம்படியுண்டு புண்பட்ட பொன் மேனியைப் பாடுவோம் என்பது.

(வி - ரை.) இறைவனுக்கு மூவர் முதலிய அடியார்கள் பாடிய பாடலே பரிசாதலால் "பண்சுமந்த பாடற் பரிசுபடைத்தருளும் பெண்சுமந்த பாகத்தின் பெம்மான்" என்றருளினர். பாடற் பரிசு - பாடல்வகையெனினுமாம். மண்டலத்தீசன் என்பதற்கு மண்ணுலகத்துக்கு மீசுன் எனினுமாம். அக்கோ என்பதில் அகரம் பலரறி சுட்டு. (அ)

துண்டப்பிறையான்மறையான்பெருந்துறையான்
கொண்டபுரிநூலான்கோலமாவூர்தியான்
கண்டங்கரியான்செம்மேனியான்வெண்ணீற்ற
னண்டமுதலாயினனந்தமிலாவானந்தம்
பண்டைப்பரிசேபழவடியார்க்கீந்தருளு
மண்டம்வியப்புறுமாபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) துண்டப்பிறையான் - இளம்பிறைச் சந்திரனையுடையவன், மறையான் - வேதப்பொருளாயிருப்பவன், பெருந்துறையான் - திருப்பெருந் துறையை யுடையவன், கொண்ட புரிநூலான் - தரித்த முப்புரிநூலையுடையவன், கோலம் - அழகாகிய, ஆ ஊர்தியான் - இடபவாகனத்தை யுடையவன், கண்டம் கரியான் - கண்டம் கரியவன், செம்மேனியான் - செம்மையாகிய திருமேனியை யுடையவன், வெள் நீற்றன் - திருவெண்ணீற்றை யுடையவன், அண்டம் - உலகங்களுக்கெல்லாம், முதல் ஆயினன் - ஆதிகாரணமானவன்,

(அவன்) அந்தம் இல்லா ஆநந்தம்-முடிவில்லாத இன்பத்தை, பண்டைப்பரிசே-பழமையாகிய முறைமைப்படி, பழவடியார்க்கு - வழித்தொண்டருக்கு, ஈந்தருளும் - தந்தருளுவன், (ஆதலால் அவனது பெருஞ்சிறப்பை) அண்டம்வியப்புறுமாறு-உலகம் அதிசயிக்கும் வண்ணம், பாடுதும்-பாடுவோம், அம்மானாய். எ-று.

(க - ரை.) பிறைச்சந்திரனை யுடையவனும், வேதப்பொருளானவனும், திருப்பெருந்துறையை யுடையவனும், முப்புரிநூலை யுடையவனும், இடபவாகன முடையவனும், நீலகண்டனும், செம்மேனியனும், திருவெண்ணீற்றனும், பஞ்சபூதமயனுமாகிய இறைவன் தன்னடியார்க்குப் பேரின்பத்தைத் தந்தருளுந் தன்மையைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) துண்டம்-கண்டம். அது ஒற்றைக்கலையைக்குறித்தது, ஆ இவ்விடத்து எருதுக்காயிற்று. அந்தமிலாவானந்தம் பழவடியார்க் கீந்தருளும் என்றமையால் அடியரல்லாதார்க்கு ஈந்தருளான் என்பதும் பெறப்படும். பண்டை என்பதில் ஐ சாரியை. வியப்புறுமாறு என்பது, வியப்புறுமா என ஈறு தொக்கது.

விண்ணாளுந்தேவர்க்குமேலாயவேதியனை
மண்ணாளுமன்னவர்க்குமாண்பாகிநின்றானைத்
தண்ணார்தமிழளிக்குந்தண்பாண்டிநாட்டானைப்
பெண்ணாளும்பாகனைப்பேணுபெருந்துறையிற்
கண்ணார்கழல்காட்டிநாயேனையாட்கொண்ட
வண்ணாமலையானைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) விண் ஆளும் - விண்ணுலகத்தை யாளுகின்ற, தேவர்க்கும் - தேவர்களுக்கும், மேல் ஆய் - மேலாகிய, வேதியனை - அந்தணனை, மண் ஆளும் - மண்ணுலகத்தை யாளுகின்ற, மன்னவர்க்கும் - அரசர்களுக்கும், மாண்பு ஆகி நின்றானை - மாட்சிமைப்பட்டு நின்றவனை, தண் ஆர் - குளிர்ச்சியமைந்த, தமிழ் அளிக்கும் - தமிழை வளர்க்கிற, தண்பாண்டி நாட்டானை - தண்மையாகிய பாண்டிநாட்டை யுடையவனை, பெண் ஆளும் பாகனை - உமாதேவியாரால் ஆளப்படுகிற இடப்பாகத்தையுடையவனை, பேணு - யாவரும் விரும்புகின்ற, பெருந்துறையில் திருப்பெருந்துறையில், கண் ஆர்-பெருமைபொருந்திய, கழல் காட்டி - தன்திருவடியைக் காட்டி, நாயேனை ஆட்கொண்ட-நாயினேனையடிமை கொண்ட, அண்ணாமலையானை-திருவண்ணாமலையானை, பாடுதும்-யாம் புகழ்ந்து பாடுவோம், அம்மானாய். எ-று.

(க - ரை.) எல்லாத் தேவர்களுக்கு மேற்பட்ட அந்தணனானவனும், அரசர்க்கரசனும், பாண்டிவளநாடனும், பெண்பாகனும், திருப்பெருந்துறையிலடியேனை யாட்கொண்டவனுமாகிய சிவபெருமானைப்புகழ்ந்துபாடுவோம் என்பது.

(வி - ரை.) "விண்ணாளுந் தேவர்" என்றது பிரமன் முதலியோரை, "மண்ணாளு மன்னவர்" என்றது சக்கரவர்த்திகள் முதலியோரை. பாண்டி நாட்டானை யென்றது பாண்டியனாய் வந்ததைக்குறித்தது. பாண்டிநாட்டா னென்றது உமாதேவியார் மலயத்துவச பாண்டியன் மகளா யவதரித்துச் செங் கோல்தாங்கித் திக்குவிஜயஞ்செய்து அரிப்பிரமேந்திராதியரையுங் கீழ்ப்படுத்

த்த் திருக்கைலாயஞ்சென்று சிவபெருமானைக் கண்டவளவில், தனது மூன்று ஸ்தனங்களிலொன்று மறையவும் நாணி நிற்க, உடனே சிவபெருமான் எதிர் வந்து பெண்ணே நாம் சோமவாரதினம் நின்னை மணம்புரிய வருகிறோமென்று கட்டளையிட்டருளியபடி சோமசுந்தர பாண்டியனு யெழுந்தருளினமையை. இதனைத் திருவிளையாடல், தடாதகைப்பிராட்டியார் திருமணப்படலத்தானறிக

செப்பார்முலைபங்கன்றென்னன்பெருந்துறையான்
றப்பாமேதாளடைந்தார்நெஞ்சுருக்குந்தன்மையினு
னப்பாண்டிநாட்டைச்சிவலோகமாக்குவித்த
வப்பார்சடையப்பனானந்தவார்கழலே
யொப்பாகவொப்புவித்தவுள்ளத்தாருள்ளிருக்கு
மப்பாலைக்கப்பாலைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) செப்பு ஆர் முலைபங்கன்-செப்புப்போலுந் தனங்களையுடைய உமாதேவியைப் பாகத்திலுடையவன், தென் நன் பெருந்துறையான் - அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையை யுடையவன், தப்பாமே - தவறாமல், தாள் அடைந்தார் - தன் திருவடியை யடைந்தவரது, நெஞ்சு-மனத்தை, உருக்கும்-உருகச்செய்கிற, தன்மையினன்-தன்மையையுடையவன். அ-அந்த, பாண்டிநாட்டை - பாண்டிநாட்டினை, சிவலோகம் ஆக்குவித்த-சிவலோகமாகச் செய்வித்த, அப்பு ஆர் - கங்கைதங்கிய, சடை - சடாபாரத்தையுடைய, அப்பன் - எமது தந்தை, ஆனந்தம் - பேரின்பத்தைத் தருதற்குரிய, வார்கழலே - நீண்ட திருவடியையே, ஒப்பு ஆக-ஒப்புக்கொள்ளும் பொருளாகத் (துணிந்து) ஒப்புவித்த - (அதனிடத்து) ஒப்புவித்த, உள்ளத்தார் உள் இருக்கும்-மனத்தையுடையவராகிய அடியார்க்குள்ளே வீற்றிருக்கின்ற, அப்பாலைக்கு அப்பாலை - அப்புறத்துக்கும் அப்புறமாயிருப்பவனை, பாடுதும் - பாடுவோம். அம்மானாய்.

(க - ரை.) உமாதேவி பாகனும், திருப்பெருந்துறையை யுடையவனும், தன் திருவடியை யடைந்தவரது மனத்தை யுருகச்செய்வோனும், பாண்டிநாட்டைச் சிவலோகமாக்கினவனும், தன் திருவடியையே நினைப்பவரது மனத்திலிருப்பவனுமாகிய சிவபெருமானைப் பாடுவோம் என்பது.

(வி - ரை.) செப்பார்முலை அன்மொழித்தொகை. அப்பு - நீர். அப்பாலைக் கப்பால் என்றது மூலப்பகுதிக் கப்பாற்பட்டவன் என்றபடி. ஒப்பாக - ஈடாக எனினுமாம் : சிவலோக மாக்குவித்தஎன்றது, சிவபெருமானே பாண்டியனுயிருந்தரசுபுரிந்தருளின மையின். (கக)

மைப்பொலியுங்கண்ணிமேகண்மாலயனோடிந்திரனு
மெப்பிறவியுந்தேடவென்னையுந்தன்னின்னருளா
லிப்பிறவியாட்கொண்டினிப்பிறவாமேகாத்து
மெய்ப்பொருட்கட்டோற்றமாய்மெய்யேநிலைபேறா
யெப்பொருட்குந்தானேயாயாவைக்கும்வீடாகு
மப்பொருளாநஞ்சிவனைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) மை பொலியும் - அஞ்சநமானது விளங்குகின்ற, கண்ணி - கண்களையுடையாளே, கேள் - நீ கேட்பாயாக, மால் அயனோடு - அரி பிரமர்களோடு, இந்திரனும் - இந்திரனும், எப்பிறவியும் தேட - பற்பலப் பிறப்பினும் தேடாநிற்க, என்னையும் - (ஒன்றுக்கும் பாத்திரனல்லாத) அடியேனையும், தன் இன் அருளால் - தனது இனிய கருணையால், இப்பிறவி - இந்தப் பிறப்பில், ஆட்கொண்டு - அடிமைகொண்டு, இனி பிறவாமே காத்து - இனிப் பிறவாமல் காத்தருளி, மெய்ப்பொருள்கண் - உண்மைப் பொருளின் கண்ணே, தோற்றம் ஆய் - சாட்சிகொடுப்பதாகி, மெய்யே நிலைபேறு ஆய் - உண்மையேநிலைபேறு ஆகி, எப்பொருட்கும்-எந்தப் பொருளுக்கும், தானே ஆய் - தானொரு முதலேயாகி, யாவைக்கும் - எல்லாவற்றுக்கும், வீடு ஆகும் - முத்தி நிலையுமாகிற, அப்பொருள் ஆம் - அந்தப்பொருளாகிய, நம் சிவனை - நமது சிவபெருமானை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று

(க - ரை.) திருமால் பிரமன் இந்திரன் எத்தனைப்பிறவியெடுத்துத் தேடினுங் காணொணாத இறைவன், என்னைத் தன் இனிய அருளா லாண்டுகொண்டு இனிப்பிறவாமைக்காத்தருளினபெருங்குணத்தைப்புகழ்ந்து பாடுவோமென்பது.

(வி - ரை.) மை - கருமை யெனினுமாம். அயன் - அஜன் என்பதன் றிரிபு. பிறப்பில்லா னென்பது பொருள். இது-மங்கலம், இந்திரன் - பெருஞ்செல்வமுடையவன். அப்பொருள் என்பதில், அகரம் பல நறி சுட்டு. தமது சொல்லுக்கடங்காமையாலப்பொருள் எனச்சேய்மைச் சுட்டாற் கூறினரெனினுமாம்.

கையார்வளைசிலம்பக்காதார்குழையாட
மையார்குழல்புரளத்தேன்பாயவண்டொலிப்பச்
செய்யானைவெண்ணீறணிந்தானைச்சேர்ந்தறியாக்
கையானையெங்குஞ்செறிந்தானையன்பர்க்கு
மெய்யானையல்லாதார்க்கல்லாதவேதியனை
யையாறமர்ந்தானைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) கை ஆர் - கைகளில் அணியப்பெற்ற, வளைசிலம்ப - வளையல் ஒலிக்கவும், காது ஆர் - காதில் அணியப்பெற்ற, குழை ஆட - குண்டலங்கள் அசைவும், ஆர்மை - கருமைபொருந்திய, குழல் புரள - கூந்தல் புரளவும், தேன் பாய - (அதில்) தேன் பெருகவும், வண்டு ஒலிப்ப - (அதில்) வண்டுகள் சத்திக்கவும், செய்யானை - செந்நிறமுடையவனை, வெண்ணீறு அணிந்தானை - திருவெண்ணீற்றை அணிந்தவனை, சேர்ந்து அறியாகையானை - சேர்ந்து அறியவொண்ணாத ஒழுக்கத்தையுடையவனை, எங்கும் செறிந்தானை-எவ்விடத்தும் வியாபித்தவனை, அன்பர்க்கு மெய்யானை - அன்பர்களுக்கு உண்மைப் பொருளாயிருப்பவனை, அல்லாதார்க்கு - அன்பரல்லாதவர்க்கு, அல்லாத - அவ்வாறல்லாதிருக்கிற, வேதியனை - அந்தணனை, ஐயாறு அமர்ந்தானை - திருவையாற்றிலமர்ந்தவனை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) செந்நிற முடையவனும், திருவெண்ணீற்றனும் ஒருவராலும் அறியவொண்ணாதவனும்,வியாபகனும்;அடியார்க்கு மெய்ப்பொருளையு மல்லார்க்

குப் பொய்யானவனும், அந்தணனும் திருவையாற்றில் வீற்றிருப்பவனுமாகிய சிவபெருமானையும், கைவளைசிலம்பும், காதிற்குழையசையவும்,கூந்தல்புரளவும், அதன் கண்ணே வண்டொலிக்கவும் நின்று புகழ்ந்து பாடுவோம் என்றது.

(வி - ரை.) தேன்பாயவண்டொலிப்ப என்றதனால்-தேன் பெருகிப் பாயு மாறவாரத்தால் வண்டுகளஞ்சி யொலித்தமை பெறப்படும். கை - ஒழுக்கம், முறைமை யெனினுமாம். ஐயாறு - பஞ்சநதம். (கரு)

ஆனையாய்க்கீடமாய்மானுடராய்த்தேவரா
யேனைப்பிறவாய்ப்பிறந்திறந்தெய்த்தேனை
யூனையுநின்றுருக்கியென்வினையையோட்டுகந்து
தேனையும்பாலையுங்கன்னலையுமொத்தினிய
கோனவன்போல்வந்தென்னைத்தன்றொழும்பிற்கொண்டருளும்
வானவன்பூங்கழலேபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) ஆனை ஆய் - யானையாகியும், கீடம் ஆய் - புழுவாகியும், மானுடர் ஆய் - மனிதராகியும், தேவர் ஆய் - தேவர்களாகியும், ஏனை பிற ஆய் - மற்றுமுள்ள பிறசீவர்களாகியும்,பிறந்து-ஜனித்தும்,இறந்து-மரித்தும்,எய்த்தேனை-மெலிந்த என்னை, ஊனையும் நின்று உருக்கி - உடம்பையும் நின்றுருகச்செய்து, என்வினையை - என்வினைகளை, ஓட்டு உகந்து - ஓட்டுதலை விரும்பி, தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து - தேனினையும் திரட்டுப் பாலினையம் சருப்பஞ்சாற்றினையும் நிகர்த்து, இனிய - இனிதாகிய, கோன் அவன்போல் வந்து - தலைவனாகிய அவன்போல எழுந்தருளி, என்னை - அடியேனை, தன் தொழும்பில் கொண்டு அருளும் - தன் தொண்டருள் ஒருவனாகக் கொண்டருளிய, வானவன் - மேலோது, பூசழலே-தாமரைமலர்போலுந் திருவடியையே, பாடுதும் - பாடுவோம் அம்மானாய். எ - று.

(க - ரை.) யானை முதலாகிய எல்லாப் பிறவிகளிலும் பிறந்தும் இறந்துமிளைத்தவனாகிய என்னைத் தானேவந்தாண்டருளித் தன் தொழும்புக்குரியவனாகிக் கொண்ட இறைவனது திருவடியைப் பாடுவோம் என்பது.

(வி - ரை.) ஆனை - யானையென்பதின்மரூஉ. மாநுடர்-மநுவின்வழிவந்தவர். ஓட்டு-முதனிலைத் தொழிற்பெயர். கீடம்- புழு. ஏனைப்பிறவாய் என்றது-மற்றைநாகர் முதலாகிய பிறவுயிர்களை. பிறவுஆய் எனப் பிரித்துப் பிறப்பு ஆகியெனினுமாம். பிறவு தொழிற்பெயர். பிறத்தல் என்பது பொருள், கன்னல்-சர்க்கரை யென்றலுமாம். (சச)

சந்திரனைத்தேய்த்தருளித்தக்கன்றன்வேள்வியினி
லிந்திரனைத்தோணெரித்திட்டெச்சன்றலையரிந்
தந்தரமேசெல்லுமலர்கதிரோன்பற்றகர்த்துச்
சிந்தித்திசைதிசையேதேவர்களையோட்டுகந்த
செந்தார்ப்பொழில்புடைசூழ்தென்னன்பெருந்துறையான்
மந்தாரமாலையேபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) தக்கன் வேள்வியினில் - தக்கனது யாகத்தில், சந்திரனை தேய்த்து அருளி - சந்திரனை நிலத்திலிட்டு அரைத்தருளி, இந்திரனை தோள் நெரித்திட்டு - இந்திரனது தோள் நொறுக்கி, எச்சன் தலை அரிந்து - யாககர்த்தாவின் தலையை அறுத்து, அந்தரமே - ஆகாயத்திடத்தே, செல்லும் - செல்லுமியல்புள்ள, அலர் கதிரோன் - பரந்த கிரணங்களையுடைய சூரியனது, பல் தகர்த்து - பல்லை உடைத்து, தேவர்களை - மற்றைத் தேவர்களை, திசை திசையே சிந்தி ஓட்டு - பல திசைகளிலும் சிதறியோடவிடச்செய்து, உகந்த - விரும்பின, செந்தார் பொழில் புடைசூழ் - செவ்விய பூஞ்சோலைகள் பக்கத்தில் சூழப்பெற்ற, தென் நன் பெருந்துறையான் - அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையை யுடையவனது, மந்தார மாலையே - மந்தார மாலையையே, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ-று.

(க - ரை.) தக்கன் யாகத்திற்கு வந்திருந்த சந்திரன் முதலிய தேவர்களை அவமானப்படுத்தித் தண்டித்தருளின இறைவனது மந்தார மலர்மாலையைப்புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) எச்சன் - யாககர்த்தா. (தக்கன்) அந்தரம்-ஆகாயம். தகர்த்தல்-உடைத்தல், தார் - மலர். மந்தாரம் - ஐந்தருவி லொன்று. சந்திரனைத்தேய்த்தல் முதலியன வீரபத்திரரால் நிகழ்ந்தனவாயினும் ஒற்றுமையால் இறைவன் மேலதாயிற்று. (கடு)

ஊனாயுயிராயுணர்வாயென்னுட்கலந்து
தேனாயமுதமுமாய்த்தீங்கரும்பின்கட்டியுமாய்
வானோரறியாவழியெமக்குத்தந்தருளுந்
தேனார்மலர்க்கொன்றைச்சேவகனார்சீரொளிசே
ராணவறிவாயளவிறந்தபல்லுயிர்க்குங்
கோனாகிநின்றவாகூறுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) ஊன் ஆய் - உடலாகி, உயிர் ஆய் - அதனுள் உயிராகி, உணர்வு ஆய் - அதனுள் அறிவாகி, என் உள் கலந்து - என்னுள்ளேசேர்ந்து, தேன் ஆய் - தேனாகி, அமுதமும் ஆய் - அமிர்தமுமாகி, தீ கரும்பின் கட்டியும் ஆய் - இனிதாகிய கருப்பங்கட்டியுமாகி, வானோர் அறியா - தேவர்களும் அறியவொண்ணாத, வழி -முத்திநெறியை, எமக்கு தந்து அருளும் - எமக்குக்கொடுத்தருளின, தேன் ஆர்மலர் கொன்றை - தேன் நிரம்பின கொன்றைமலர் மாலையைத்தரித்த, சேவகனார் - மகாவீரர், சீர் ஒளி சேர் - மேன்மையாகிய ஒளிபொருந்திய, ஆணு அறிவு ஆய் - நீங்காத அறிவுருவாகி, அளவுஇறந்த- அளவுகடந்த, பல் உயிர்க்கும்-பலவுயிர்களுக்கும், கோன் ஆகி நின்ற ஆறு - இறைவனாகி நின்றவாற்றை, கூறுதும் - சொல்லுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) உடல் உயிர் உணர்வு முதலியவாகி யென்னுள்ளே யெழுந்தருளித் தேன் முதலியன போன்றினித்து, தேவர்களுமறியாத முத்திநெறியை யெ

னக்கருள்செய்த இறைவன் பல்லுயிர்க்கும் தலைவனாய் நிற்குந்திறத்தைப் புகழ்ந்துபேசுவோம் என்பது.

(வி - ரை.) ஊனுக்கு உயிரும் உயிருக்கு உணர்வும் உள்ளீடாதலால் "ஊனாயுயிராயுணர்வாய்" என்றார். தேன் கரும்பின் கட்டி யென்பவற்றிடையே அமுதம்வைக்கப்பட்டது சிறப்புநோக்கி. கரும்பின்கட்டி யென்றது, வெல்லக்கட்டியை. கற்கண்டு என்றலுமாம். ஆனாமை - நீங்காமை, கெடாமை யெனினுமாம், ஆனல் - நீங்கல். (சசு)

சூடுவேன்பூங்கொன்றைச்சூடிச்சிவன்றிரடோள்
கூடுவேன்கூடிமுயங்கிமயங்கிநின்
றூடுவேன்செவ்வாய்க்குருகுவேனுள்ளுருகித்
தேடுவேன்றேடிச்சிவன்கழலேசிந்திப்பேன்
வாடுவேன்பேர்த்துமலர்வேனனலேந்தி
யாடுவான்சேவடியேபாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) சூடுவேன் பூங்கொன்றை - பொலிவாகிய கொன்றைமலரை யணிவேன், சூடி - அணிந்து, சிவன் - சிவபெருமானது, திரள் தோள் - திரண்ட தோள்களை, கூடுவேன் - சேர்வேன், கூடி - சேர்ந்து, முயங்கி - தழுவி, மயங்கி நின்று - மயங்கி நின்று, ஊடுவேன் - பிணங்குவேன், செவ்வாய்க்கு உருகுவேன் - செவ்வாயின்பொருட்டு (மனம்) உருகுவேன், உள் உருகி தேடுவேன் - மனமுருகித் தேடுவேன் , தேடி - தேடி, சிவன்கழலே சிந்திப்பேன் - சிவபெருமானது திருவடியையே நினைப்பேன், வாடுவேன்- வாட்டமடைவேன், பேர்த்து மலர்வேன்-மீட்டும்களிப்பேன், அனல்ஏந்திஆடுவான்-மழுவேந்திநடிப்பவனது, சேவடியே - செவ்விய திருவடியையே, பாடுதும் - பாடுவோம், அம்மானாய்.

(க - ரை.) சிவபெருமானது கொன்றைமலர் மாலையைச் சூடுதல் முதலியன செய்வேன், நீயும்என்னோடு சேர்ந்தாயாயின் அவ்வளவிலமையாமையால் அவனது திருவடியைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) கொன்றை முதலாகுபெயர். முயங்குதல் - தழுவுதல். ஊடுதல் - பிணங்குதல். மலர்தல் இவ்விடத்துக் களித்தற் பொருளது. கொன்றைமலர் சூடுவேனென்றது, சிவபெருமானுக் குரியபோகமலராதலின். (கஎ)

கிளிவந்தமென்மொழியாள்கேழ்கிளரும்பாதியனை
வெளிவந்தமாலயனுங்காண்பரியவித்தகனைத்
தெளிவந்ததேறலைச்சீரார்பெருந்துறையி
லெளிவந்திருந்திரங்கியெண்ணரியவின்னருளா
லொளிவந்தென்னுள்ளத்தினுள்ளேயொளிதிகழ
வளிவந்தவந்தணனைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) கிளிவந்த மெல் மொழியாள் - கிளிமொழியின் தன்மை யமைந்த மெல்லிய சொற்களையுடையவளாகிய உமாதேவியின், கேழ் கிளரும் - ஒளி

விளங்குகின்ற, பாதியனை - பாகத்தை யுடையவனை, வெளிவந்த மால் அயனும்- (காண்போமென்று) வெளிப்பட்டுவந்த அரி பிரமர்களும், காண்பு அரிய - காணு தல் அருமையாகிய, வித்தகனை-ஞானவடிவனை, தெளிவந்த தேறலை - தெளிந்த தேனை, சீர் ஆர் பெருந்துறையில்- சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில், எளி வந்திருந்து- எளிதாய் வந்திருந்து, இரங்கி- இரக்கஞ் செய்து, எண் அரிய- நினைத்தற்கு மரிதாகிய, இன் அருளால்- தனது இனிய கருணையால், ஒளி வந்து- ஜோதிஸ்வரூபமாய் வந்து, என் உள்ளத்தின் உள்ளே - என் மனத்தினுள்ளே, ஒளி திகழ - ஒளி விளங்கும் வண்ணம், அளி வந்த - கிருபையோ டெழுந்தரு ளின, அந்தணனை - வேதியனை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) உமாதேவிபாகனும், மாலயன்காணு மகிமையுள்ளவனும், தெ ளிந்த தேன்போல்பவனும், திருப்பெருந்துறையில் எளிதாக எனக்குக்காட்சிகொ டுத்து என்மனம் புகுந்து ஒளியுருவாய்நின்று கிருபைசெய்தவனுமாகிய சிவபெ ருமானைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) கிளிவந்த என்றது - கிளிபோன்ற என்றபடி. வெளிவந்த என்றூர் தம்முளடங்காது வெளிப்பட்டு நின்மையான். மாலயனும் என்பத னும்மை உயர்வு சிறப்பு. தெளிவந்த தேறல்-தெளிந்ததேன். தெளி முதனிலைத் தொழிற்பெயர். கேழ் - நிறம். (கஅ)

முன்னானைமூவர்க்குமுற்றுமாய்முற்றுக்கும்
பின்னானைப்பிஞ்சகனைப்பேணுபெருந்துறையின்
மன்னானைவானவனைமாதியலும்பாதியனைத்
தென்னானைக்காவானைத்தென்பாண்டிநாட்டானை
யென்னானையென்னப்பனென்பார்கட்கின்னமுதை
யன்னானையம்மானைப்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) மூவர்க்கும் முன்னானை - பிரமன் விஷ்ணு உருத்திரனென் னு மும்மூர்த்திகளுக்கும் முற்பட்டவனை, முற்றும் ஆய் - எல்லாப்பொருள்க ளும் தானேயாகி, முற்றுக்கும் - முழுதுக்கும், பின்னானை - பிற்பட்டவனை, பிஞ்சகனை - பிஞ்ஞகனை, பேணு - (யாவரும்) விரும்புகிற, பெருந்துறையில்- திருப்பெருந்துறையில், மன்னானை - நிலைபெற்றவனை, வானவனை - தெய்வத் தன்மை நிரம்பினவனை, மாது இயலும் பாதியனை - உமாதேவியார் பொருந்திய பாகத்தையுடையவனை, தென் ஆனைக் காவானை - தென்திருவானைக் காவினையு டையவனை, தென்பாண்டி நாட்டானை - தென்பாண்டி நாட்டையுடையவனை என் ஆனை என் அப்பன் எனபார்கட்கு இன் அமுதை அன்னானை - என் ஆனை என் அப்பன் என்பவர்களுக்கு இனிய அமிர்தம் போல்பவனை, அம்மானை-எமது தந்தையை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை) மூவர்க்கு முற்பட்டவனும், எல்லாப்பொருள்களும் முடிந்த காலத்தும் தான் முடியாது பிற்பட்டிருப்பவனும், பிஞ்ஞகன் என்னுந் திருநாம த்தையுடையனும், திருப்பெருந்துறையில் நிலைபெற்றவனும், உமாநாயகனும்,

னைக்காவிலமர்ந்தவனும், பாண்டிநாட்டை யுடையவனும், என்னை யென் ப்பனென்று துதிப்போர்க்கு இனிய அமுதாயிருப்பவனும் ஆகிய சிவபெரு ானைப் புகழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) பிஞ்ஞகம் - ஓர்வகைத் தலைக்கோலம், அதனை யுடையனாத ால் இறைவன் பிஞ்ஞகன் எனப்பட்டான். ஆனைக்கா - சம்புகேச்சுரம். ன் - இடபம். இது உவமையாகுபெயராய் இறைவனது நித்ய யவ்வனத் தக்குறித்தது. (கக)

பெற்றிபிறர்க்கரியபெம்மான்பெருந்துறையான்
கொற்றக்குதிரையின்மேல்வந்தருளித்தன்னடியார்
குற்றங்கணீக்கிக்குணங்கொண்டுகோதாட்டிச்
சுற்றியசுற்றத்தொடர்வறுப்பான்றொல்புகழே
பற்றிப்பாசத்தைப்பற்றறநாம்பற்றுவான்
பற்றியபேரானந்தம்பாடுதுங்காணம்மானாய்.

(ப - ரை.) பெற்றி பிறர்க்கு அரிய பெம்மான் - தன் தன்மை பிறர் அறி ற்கரிதாகிய பெருமான், பெருந்துறையான் - திருப்பெருந்துறையை யுடையவ , கொற்றக் குதிரையின் மேல் வந்தருளி - வெற்றியமைந்த குதிரையின்மீதேறி யழுந்தருளி, தன் அடியார்குற்றங்கள் நீக்கி - தன்னடியவரது குற்றங்களைப் பாக்கி, குணம் கொண்டு - குணத்தை அங்கீகரித்து, கோதாட்டி - சீராட்டி, ற்றிய - சூழ்ந்த, சுற்றத் தொடர்பு - உறவினரது தொடர்பினை, அறுப்பான்- சுசெய்பவனது, தொல்புகழே பற்றி - பழமையாகிய புகழையேபற்றி, இப்பாசத் தைப் பற்றற நாம்பற்றுவான் - இந்தப்பாசத்தைப் பற்றும்படி நாம் பற்றும்பொ ட்டு, பற்றிய - பிடித்த, பேரானந்தம் - பேரின்பத்தை, பாடுதும் - பாடுவோம், அம்மானாய். எ - று.

(க - ரை.) தன்றன்மை பிறர்க்கறியவொண்ணாதவனும், திருப்பெருந் றையை யுடையவனும், மதுரைமாநகரின்கண்ணே குதிரைச்சேவகனாய் எழு தருளித் தன்னடியார் குற்றங்களை நீக்கிக் குணத்தை யங்கீகரித்து அவ்வடி ாரைச் சீராட்டி, உறவினரது தொடர்பைச் சேதிப்பவனுகிய சிவபெருமானை புகழையேபற்றி, இப்பாசத்தின் பற்றறும்படி நாம்பற்றின பேரின்பத்தைப் கழ்ந்து பாடுவோம் என்பது.

(வி - ரை.) பெற்றி - தன்மை. கொற்றம் - வெற்றி. தொடர்வு - ம்பந்தம். தொல்புகழ் - பெரும்புகழ். பற்றுவான் என்பதில், வான் வினை யச்சவிகுதி. (உ0)

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# திருப்பொற்சுண்ணம்.

## ஆநந்தமனோலயம்.

அதாவது-தானன்றி நிற்றல்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

முத்துநற்றாமம்பூமாலைதூக்கி
 முளைக்குடந்தூபநற்றீபம்வைம்மின்
சத்தியுஞ்சோமியும்பார்மகளு
 நாமகளோடுபல்லாண்டிசைமின்
சித்தியுங்கௌரியும்பார்ப்பதியுங்
 கங்கையும்வந்துகவரிகொண்மி
னத்தனையாறனம்மானைப்பாடி
 யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) நல்முத்து தாமம் - அழகிய முத்துமாலையையும், பூமாலை - பூமாலையையும், தூக்கி - தொங்கவிட்டு, முளைக்குடம் - முளைப்பாலிகையையும், தூபம் - தூபத்தையும், நல் தீபம் - சிறந்த திருவிளக்குகளையும், வைம்மின் - வையுங்கள், சத்தியும் - சத்தியும், சோமியும் - சோமியும், பார்மகளும் - நிலமகளும், நாமகளோடு - சரசுவதியோடு, பல்லாண்டு இசைமின் - திருப்பல்லாண்டு பாடுங்கள், சித்தியும்கௌரியும் பார்ப்பதியும் கங்கையும் வந்து - சித்தியும் கௌரியும் பார்வதியும் கங்கையும் வந்து, கவரிகொண்மின்-சாமரம் இரட்டுங்கள், அத்தன் எமது தந்தையும், ஐயாறன் - திருவையாற்றை யுடையவனுமாகிய, அம்மானை எமது தலைவனை, பாடி - பாடி, ஆட - ஆடுதற்பொருட்டு, பொற்சுண்ணம் திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) முத்துமாலைகளையும் பூமாலைகளையும் தொங்கவிட்டு, முளைக்குடம் முதலிய அஷ்டமங்கலங்களோடு தூபம் தீபம் இவற்றையமைத்து வையுங்கள், சத்திசோமி முதலியோர்கள்வந்து திருப்பல்லாண்டு பாடுங்கள், சித்தி கௌரிமுதலியோர்கள்வந்து கவரிவீசுங்கள், எமது தந்தையாகிய சிவபெருமானைப் பாடியாடும்பொருட்டு யாம் பொற்சுண்ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) தாமம்-மாலை. முளைக்குடம் - முளைப்பாலிகை. தூபம் சாம்ராணிமுதலிய நறும்புகை, கவரி - சாமரம். பொற்சுண்ணம் - நறுஞ்சுண்ணம். (சுதம்பப்பொடி,) இதில் பொற்பொடியுஞ் சேர்த்திடிப்பது வழக்கமாதலால் இது பொற்சுண்ணம் எனப்பட்டது. (க

பூவியல்வார்சடையெம்பிராற்குப்
பொற்றிருச்சுண்ணமிடிக்கவேண்டு
மாவின்வடுவகிரன்னகண்ணீர்
வம்மின்கள்வந்துடன்பாடுமின்கள்
கூவுமின்றொண்டர்புறநிலாமே
குனிமின்றொழுமினெங்கோனெங்கூத்தன்
றேவியுந்தானும்வந்தெம்மையாளச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) பூ இயல்-அழகுபொருந்திய, வார்சடை-நீண்டசடையையுடை, எம்பிராற்கு-எம்பிரானுக்கு, திருப்பொன் சுண்ணம் இடிக்கவேண்டும்-அழ ய கதம்பப்பொடி இடிக்கவேண்டும், மாவின் வடு வகிர் அன்ன - மாம்பிஞ்சின் ளவையொத்த, கண்ணீர் - கண்களையுடையவர்களே, வம்மின்கள் - வாருங் ள், வந்து உடன்பாடு மின்கள் - வந்து எம்முடன் கூடப்பாடுங்கள், கூவுமின் - டவுங்கள், தொண்டர் - தொண்டர்களே, புறம் நில்லாமே - வெளியே நில்லா ல், குனிமின் - நடியுங்கள், தொழுமின் - வணங்குங்கள், எங்கோன் - எமது றைவன், எம் கூத்தன் - எமது கூத்தப்பிரான், தேவியும் தானும் வந்து - தவியாரும் தானுமாக எழுந்தருளி, எம்மை ஆள - எம்மை யடிமைகொள்ளும் பாருட்டு, செம்பொன்செய் சுண்ணம் - செம்பொன்னிறமாகச் செய்யப்பட்ட ண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று,

(க - ரை.) எம்பெருமானுக்குப் பொற்சுண்ண மிடிக்கவேண்டும், மாவடு கிர்போலுங் கண்களையுடைய பெண்களே வாருங்கள், வந்து பாடுங்கள், தொ ழம்பர்களே புறமே நில்லாதுவந்து நடித்துத் தொழுதுய்யுங்கள், இறைவன் ிராட்டியோடு எழுந்தருளி யெம்மையாளும் பொருட்டுச் செம்பொற்சுண்ண டிப்போம் என்பது.

(வி - ரை.) இறைவற்குக் கொன்றைமலர் நேயமாதலால் பூ என்றது கொ றை மலரையெனக் கோடலுமாம். கூவுதல் - களிப்பால் இரைதல். குனித் ல் - கூத்தாடுதல். கூவுமின்தொண்டர் புறநிலாமே என்றதற்கு, இனிய டியார்கள் வெளியேபோய் நில்லாதபடி அழையுங்களெனினுமாம். (௨)

சுந்தரநீறணிந்துமெழுகித்
தூயபொன்சிந்திநிதிபரப்பி
யிந்திரன்கற்பகநாட்டியெங்கு
மெழிற்சுடர்வைத்துக்கொடியெடுமி
னந்தரர்கோனயன்றன்பெருமா
னாழியானாதனல்வேலன்றாதை
யெந்தரமாளுமையாள்கொழுநற்
கேய்ந்தபொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) சுந்தரம் - அழகாகிய, நீறு அணிந்து - திருவெண்ணீற்றைத் தரித்து, மெழுகி - திருமெழுக்கிட்டு, தூய பொன் சிந்தி - பரிசுத்தமாகிய பொற்பொடியைச் சிதறி, நிதிபரப்பி - நவநிதிகளைப்பரப்பி, இந்திரன் கற்பகம் நாட்டி - இந்திரனது கற்பகமரத்தை நாட்டி, எங்கும் - எவ்விடத்தும், எழில் சுடர்வைத்து - அழகாகிய தீபங்களைவைத்து, கொடி எடுமின் - கொடியைப் பிடியுங்கள், அந்தரர் கோன் - இந்திரன், அயன் - பிரமன், (இவர்களுக்கு) பெருமான் - தலைவனும், ஆழியான் நாதன் - சக்கரப் படையை யுடைய திருமாலுக்கு, நாயகனும் நல் வேலன் தாதை - அழகிய முருகக் கடவுளுக்குத் தந்தையும், எம் தரம் ஆள் - எமது இனத்தையும் ஆண்டருள்கின்ற, உமையாள் கொழுநற்கு - உமாதேவி நாயகனாகிய சிவபெருமானுக்கு, எய்ந்த-பொருந்திய, பொற்சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம்.

(க - ரை.) அழகாகிய திருநீற்றைத் தரித்துத் திருமெழுகிடுதல் முதலிய தொண்டுசெய்யுங்கள், இந்திரன் முதலியதேவர்களுக்குத் தலைவனும், முருகவேளுக்குத் தந்தையும், உமாதேவியார்க்குக் கொழுநனுமாகிய சிவபெருமானுக்குரிய பொற்சுண்ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) சிவாலயத் திருப்பணி செய்யுங்கால் நீறணிந்து செய்வது தகுதியாதலால் "சுந்தரநீறணிந்து மெழுகி" என்றார். நிதி - பலவகை மங்கல திரவியங்களெனினுமாம். அந்தரர்-ஆகாயவாசிகள். கோன்-அரசன். பாற்கடலையுடையவனெனினுமாம். வேலன் - வேற்படையை யுடையவன். (ரு)

காசணிமின்களுலக்கையெல்லாங்
காம்பணிமின்கள்கறையுரலை
நேசமுடையவடியவர்க
ணின்றுநிலாவுகவென்றுவாழ்த்தித்
தேசமெல்லாம்புகழ்ந்தாடுங்கச்சித்
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடிப்
பாசவினையைப்பறித்துநின்று
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) உலக்கை யெல்லாம் - உலக்கைகளுக் கெல்லாம், காசு அணிமின்கள் - அரதன மாலைகளை அணியுங்கள், கறையுரலை - கருங்காலி மரத்தாற் செய்யப்பட்ட உரல்களுக்கு, காம்பு அணிமின்கள்-பட்டுச்சீலையைத் தரியுங்கள், நேசம் உடைய - அன்பையுடைய, அடியவர்கள் - அடியார்கள், நின்று நிலாவுக என்று - நிலைபெற்று விளங்குகவென்று, வாழ்த்தி - துதித்து, தேசம் எல்லாம் புகழ்ந்து ஆடும் - தேசமுழுதும் புகழ்ந்து கொண்டாடுகின்ற, கச்சித் திருவேகம்பன் - திருக்கச்சித் திருவேகம்பனது, செம்பொன் கோயில்பாடி - செம்பொற் கோயிலைப்பாடி, பாசவினையை - பாசவினைகளை, பறித்து நின்று - கொய்து நின்று, பாடி - பாடி, பொற் சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) உலக்கைகளுக்கும் உரலுக்கும் ஆரதனமாலைகள் முதலிய வையணிந்தலங்கரியுங்கள், அன்பர்கள் நிலைபெற்று விளங்குக வென்று வாழ்த்தித் திருவேகம்பனது கோயிலைப் புகழ்ந்து பாடி, எமது பந்தத்துக் கேதுவாகிய வினையைச் சேதித்துப்பாடாநின்று பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) நிலாவுதல் - விளங்குதல். பாசவினை - பந்தத்துக் கேதுவாகிய வினை. (௪)

அறுகெடுப்பாரயனுமரியு
மன்றிமற்றிந்திரனோடமரர்
நறுமுறுதேவர்கணங்களெல்லா
நம்மிற்பின்பல்லதெடுக்கவொட்டோஞ்
செறிவுடைமும்மதிலெய்தவில்லி
திருவேகம்பன்செம்பொற்கோயில்பாடி
முறுவற்செவ்வாயினீர்முக்கணப்பற்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) அயனும் அரியும் அறுகு எடுப்பார் - பிரமனும் திருமாலும் குடவிளக்குமுதலியன எடுப்பவராவார், அன்றி - அவர்களன்றி, மற்று இந்திரனோடு அமரர் - மற்ற இந்திரனோடு தேவர்களும், நறுமுறு தேவகணங்கள் எல்லாம் - நல்லமுதிய தேவகணங்கள் யாவும், நம்மின் பின்பு அல்லது-நம்மினும் பின்பல்லது, எடுக்க வொட்டோம் - எடுக்கவிடோம், செறிவு உடை - நெருக்கத்தையுடைய, மும்மதில் - திரிபுரங்களை, எய்த - எய்தழித்த, வில்லி-வில்லையுடையவனாகிய, திருவேகம்பன் - திருவேகம்பனது, செம்பொற்கோயில்பாடி-செம்பொற் கோயிலைப்பாடி, முறுவல் - சந்தபந்தியோடு கூடிய, செவ்வாயினீர் - செவ்வாயையுடையவர்களே, முக்கண் அப்பற்கு ஆட - முக்கண்களையுடைய அப்பனுக்கு ஆடுதற்கு, பொற்சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) பிரமவிட்டுணுக்களன்றி மற்றையத்தேவர்கள் எம்மின் முந்தி குடவிளக்கு முதலியனவெடுக்க வொட்டோம், திரிபுராந்தகனாகிய திருவேகம்பனது கோயிலைப்புகழ்ந்து அவன் பொருட்டு யாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) அறுகு - அறுகம்புல்லெனினுமாம். மும்மதில் என்றது முப்புரங்களை. இவை இரும்பு பொன் வெள்ளி என்பவற்றானியன்றன. "இரும்புறுமாமதில் பொன்னிஞ்சி வெள்ளிப் புரிசையன்றோர், துரும்புறச்செற்ற கொற்றத்தெம்பிரான்" என்பது திருக்கோவையார். (௫)

உலக்கைபலவோச்சுவார்பெரிய
ருலகமெலாமுரல்போதாதென்றே
கலக்கவடியவர்வந்துநின்றார்
காணவுலகங்கள்போதாதென்றே

நலக்கவடியோமையாண்டுகொண்டு
நாண்மலர்ப்பாதங்கள்சூடத்தந்த
மலைக்குமருகனைப்பாடிப்பாடி
மகிழ்ந்துபொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) பெரியர் - பெரியோர், உலகமெல்லாம்-உலகமுழுதும், உரல்-உரலாகக்கொண்டமையால், போதாதென்று - உள்ளவுலக்கைகள் பற்றாதென்று, உலக்கை பல ஓச்சுவார் - பல வுலக்கைகளை வரவிடுவார், காண உலகங்கள்போதாது என்று - காண்பதற்கு உலகங்கள் பற்றாதென்று, அடியவர் - அடியார், கலக்கவந்து நின்றார் - கலக்கும்படி வந்து நின்றார்கள், நலக்க - நன்மையடைய, அடியோமை ஆண்டுகொண்டு - அடியோமை யாண்டுகொண்டருளி, நாள் மலர் - புதியதாமரை மலர்போன்ற, பாதங்கள்-திருவடிகளை, சூடத்தந்த-சூடக்கொடுத்த, மலைக்கு மருகனை-மலையரையனுக்கு மருகனை,பாடிபாடி-பலகாற் பாடி, மகிழ்ந்து - களித்து, பொற்சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று

(க - ரை.) பெரியோர் உலகமுழுதும் உரலாகக்கொண்டு அவற்றிற்கு உள்ள உலக்கைகள் பற்றாதென்று உலக்கை பலவற்றை வரவிடுவார். காண்பதற்கு உலகங்கள் பற்றாதென்னும்படி பல அடியார்கள் கூட்டமாய் வந்து நின்றார்கள். நன்மையடையும்படி அடியோமை யாண்டுகொண்டு தன் திருவடியையெமது சிரத்திற் சூட்டத்தகுந்த மலையரையனுக்கு மருகனாகிய சிவபெருமானைப் பாடிக்களித்துப் பொற்சுண்ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) ஓச்சுதல் - எறிதல். (வரவிடுதல்) நாள்-புதுமை. மலையென்றது-மலையரையனை. மலைக்கு மருகனென்றது - சிவபெருமானை மதியாது அவமதித்து யாகஞ்செய்த தக்கனுடைய பெண்ணென்றும் பெயரைமாற்றக் கருதி உமாதேவியார் இமையமலையின் சாரலிலுள்ள ஓர் பொய்கைக்கரையில் ஓர் பெண்குழந்தை வடிவங்கொண்டிருப்ப, அதை மலையரசன்கண்டு அருமையோடெடுத்து வளர்க்க வளர்ந்து வருகையில், சிவபெருமான் அம்மகவாகிய உமாதேவியைத் திருமணம் புணர்ந்தமையைக் கருதி என்க. (சு)

சூடகந்தோள்வளையார்ப்பவார்ப்பத்
தொண்டர்குழாமெழுந்தார்ப்பவார்ப்ப
நாடவர்நந்தம்மையார்ப்பவார்ப்ப
நாமுமவர்தம்மையார்ப்பவார்ப்பப்
பாடகமெல்லடியார்க்குமங்கை
பங்கினனெங்கள்பராபரனுக்
காடகமாமலையன்னகோவுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) சூடகம் தோள்வளை - கைவளைகளும் தோள்வளைகளும், ஆர்ப்ப ஆர்ப்ப - சத்திக்கச் சத்திக்க, தொண்டர் குழாம் எழுந்து ஆர்ப்ப ஆர்ப்ப- தொண்டர் கூட்டங்கள் எழுந்து சத்திக்கச் சத்திக்க, நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப - நாட்டார் நம்மை (இகழ்ந்து) ஆரவாரிகக ஆரவாரிக்க, நாமும் அவர் தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப-யாமும் அவர்களை (இகழ்ந்து) ஆரவாரிக்க ஆரவாரிக்க, பாடகம் - பாடகம், மெல் அடி - மென்மையாகிய பாதங்களில், ஆர்க்கும் - சத்திக்கிற, மங்கை - உமாதேவிக்கு, பங்கினன் - பாகந்தந்தவனாகிய, எங்கள் பராபரனுக்கு - எங்கள் பராபரனுக்கு, மா-பெரிய, ஆடகமலை அன்ன - பொன்மலையை நிகர்த்த, கோவுக்கு - இறைவனுக்கு, ஆட - ஆடும்பொருட்டு, பொற்சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) கைவளை முதலாயின சத்திக்கும்படி உமாதேவிக்கு மணாளனாகிய சிவபெருமானுக்கு நாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது,

(வி - ரை.) நாடவர் ஆர்த்தல் தம்மைப் பித்தரெனக்கருதி. தாம் ஆர்த்தல் அவரைப் பித்தரெனக் கருதி, பாடகம் - மகளிர் காலிலணியுமோராபரண விசேடம். ஆடகம் - நால்வகைப் பொன்னுள் ஒன்று. நால்வகைப் பொன்னாவன : ஆடகம், கிளிச்சிறை, சாதரூபம், சாம்புநதம் என்பன. ஆர்க்க ஆர்க்க என்னுமடுக்கு மிகுதிப்பொருளது. (எ)

வாட்டங்கண்மடமங்கைநல்லீர்
வரிவளையார்ப்பவண்கொங்கைபொங்கத்
தோட்டிருமுண்டந்துதைந்திலங்கச்
சோத்தெம்பிரானென்றுசொல்லிச்சொல்லி
நாட்கொண்டநாண்மலர்ப்பாதங்காட்டி
நாயிற்கடைப்பட்டநம்மையிம்மை
யாட்கொண்டவண்ணங்கள்பாடிப்பாடி
யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) வாள் - வாள்போன்ற, தடங்கண்- பெரியகண்களையும், மடம்- இளமையையுமுடைய, மங்கை நல்லீர்- மங்மைப்பருவப் பெண்களே, வரி வளை ஆர்ப்ப - கோடுகளுள்ள வளைகள் ஆரவாரிக்கவும், வண்கொங்கை பொங்க-வளவிய கொங்கைகள் பூரிக்கவும், தோள் திருமுண்டம் துதைந்து இலங்க - தோளும் திருமுண்டமும் நெருங்கி விளங்கவும், எம்பிரான்- எம்பிரானே, சோத்து என்று - அஞ்சலி என்று, சொல்லிச் சொல்லி- பலகாற் சொல்லி, நாள் கொண்ட - மலரும் பருவங்கொண்ட, நாள்மலர் - புதியதாமரை மலர்போன்ற, பாதம் காட்டி - திருவடியைக்காட்டி, நாயின் கடைப்பட்டநம்மை- நாயினுங் கடையாகிய நம்மை, இம்மை-இம்மையில், ஆட்கொண்ட வண்ணங்கள்-அடிமைகொண்டவிதங்களை, பாடி பாடி - பலகாற்பாடி, ஆட - ஆடுதற்கு, பொற்சுண்ணம்-திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) மங்கைமீர், வளை முதலாயின ஆரவாரிக்க இறைவன் தன் திருவடியைக்காட்டி நம்மையாட்கொண்ட விதங்களைப் புகழ்ந்து பாடி, யாம் பொற்சுண்ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) மடம் - பெண்மைக்குணம் நான்கனுள் ஒன்று. பெண்மைக் குணம் நான்காவன: நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன. முண்டம்-தலை. நாள் - பருவம். நாண்மலர்ப்பாதம் என்றதற்குத் தாமரைமலரும் நாணத்தக்க அழகையுடைய பாதமெனினுமாம். (அ)

வையகமெல்லாமுரலதாக
 மாமேருவென்னுமுலக்கைநாட்டி
மெய்யெனுமஞ்சணிறையவட்டி
 மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யதிருவடிபாடிப்பாடிச்
 செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணிதில்லைவாணனுக்கே
 யாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) வையகம் எல்லாம் உரல் ஆக - உலகமுழுதும் உரலாகக்கொண்டு, மாமேரு என்னும் உலக்கைநாட்டி - மகாமேருஎன்கிற உலக்கையை அதன்கண்ணே நட்டு, மெய்யெனும் மஞ்சள்நிறைய அட்டி - உண்மை யென்கிற மஞ்சளை நிறையப் பூசி, மேதகு - மேன்மை பொருந்திய, தென் நன் பெருந்துறையான்-அழகும் நன்மையும் வாய்ந்த திருப்பெருந்துறையை யுடையவனது, செய்ய திருவடி - செம்மையாகிய திருவடியை, பாடி பாடி - பலகாற்பாடி, செம்பொன் உலக்கை - செம்பொன்னாலமைந்த வுலக்கையை, வலக்கைபற்றி - வலக்கையிற் பிடித்து, ஐயன் - ஐயனாகிய, அணி-அழகிய, தில்லை வாணனுக்கு - திருத்தில்லையில்வாழுஞ்சிவபெருமானுக்கு, ஆட-ஆடுதற்கு, பொற்சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும்-நாம் இடிப்போம். எ - று.

(க - ரை) உலகமுழுதும் உரலாகக்கொண்டு, அதில் மகாமேருமலையென்கிற உலக்கையை நாட்டி உண்மையென்கிற மஞ்சளை நிறைய அப்பி, திருப்பெருந்துறைச் சிவபிரான் திருவடியைப்பாடி, உலக்கையை வலக்கையிற் பிடித்துத் தில்லையம்பலவாணனுக்குப் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) அட்டுதல்-அப்புதல். மே-மேன்மை. தகுதல்-பொருந்துதல். ()

முத்தணிகொங்கைகளாடவாட
 மொய்குழல்வண்டினமாடவாடச்
சித்தஞ்சிவனொடுமாடவாடச்
 செங்கயற்கண்பனியாடவாடப்
பித்தெம்பிரானொடுமாடவாடப்
 பிறவிபிறரொடுமாடவாட

வத்தன் கருணையொடாடவாட
வாடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) முத்து அணி கொங்கைகள்- முத்துவட மணிந்த கொங்கைகள், ஆட ஆட - அசைய அசையவும், மொய் குழல் வண்டு இனம் ஆட ஆட - நெருங்கிய கூந்தலிலுள்ள வண்டுகளின் கூட்டம் ஒலிசெய்யவும், சித்தம் சிவனொடும் ஆட ஆட-மனம் சிவபெருமானோடு கலந்து நிற்கவும், செய்கயல் கண்பனி ஆட ஆட- செங்கயல்போன்ற கண்களில் பனித்தல் உண்டாகஉண்டாக, பித்து எம்பிரானொடும் ஆட ஆட- என்பித்து என்பது எம்பிரானோடும் பொருந்தியிருக்கவும், பிறவி பிறரொடும்ஆட ஆட-பிறவியானதுபிறருடனே கூடி இடையறாது நிற்கவும், அத்தன் கருணையொடு ஆட ஆட-எமது தந்தையாகிய சிவபிரான் கருணையோடு கூடிவிளங்கவும், ஆட- அவன் ஆடுதற்கு, பொற்சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) எமது தந்தையாகிய சிவபெருமானதுகருணையைப் புகழ்ந்து பாடி கொங்கைகள் முதலாயினதும் அசையும்படி நாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) மொய்த்தல் - நெருக்குதல், இதனை வண்டுக்காகினுமாம் கண்களிற் செவ்வரியடர்ந்திருக்கையால் செங்கயலை யுவமை கூறினர். பிறவி பிறரொடுமாடவாட என்றமையால் நம்மிடத்துப் பிறவியுண்டாகாதிருக்க என்றாராயிற்று. ஆட ஆட என்பதற்கு அவ்வவ்விடங்களுக்கேற்ப, அசைய, ஒலிசெய்ய, கலந்து நிற்க, பொருந்தியிருக்க இடையறாது நிற்க, கூடிவிளங்கவெனப் பொருள்கொண்டாம். (கo)

மாடுநகைவாணிலாவெறிப்ப
வாய்திறந்தம்பவளந்துடிப்பப்
பாடுமினந்தம்மையாண்டவாறும்
பணிகொண்டவண்ணமும்பாடிப்பாடித்
தேடுமினெம்பெருமானைத்தேடிச்
சித்தங்களிப்பத்திகைத்துத்தேறி
யாடுமினம்பலத்தாடினானுக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) மாடு - பக்கத்தில், நகை - நகையாகிய, வாள் நிலா எறிப்ப - ஒளிபொருந்திய நிலவு வீசவும், வாய்திறந்து - வாய்மலர்ந்து, அம்பவளம் துடிப்ப - அழகாகிய பவளம்போலும் அதரம் துடிக்கவும், பாடுமின் - பாடுங்கள், நந்தம்மை ஆண்டவாறும் - நம்மை யாண்டருளினபடியையும், பணிகொண்ட வண்ணமும் - நம்மைத் தொண்டைக் கொண்டருளினபடியையும், பாடி பாடி - பலகாற்பாடி, தேடுமின் - தேடுங்கள், எம்பெருமானை தேடி - எம்பெருமானைத் தேடி, சித்தம் களிப்ப - மனங்களிக்க, திகைத்து - பிரமித்து, தேறி - தெளிந்து,

ஆடுமின் - ஆடுங்கள், அம்பலத்து - பொன்னம்பலத்தில், ஆடினானுக்கு - நடனஞ்செய்தவனுக்கு, ஆட - ஆடும்பொருட்டு, பொற்சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை) நகை நிலவெறிக்கவும், வாய்ப்பவளம் துடிக்கவும் எம்பெருமானைப் பாடுங்கள். நம்மையாட்கொண்டு நம்பணிகொண்ட விதத்தைப் புகழ்ந்து பாடி அவனைத்தேடுங்கள். மனம் களிக்கத்தெளிந்து ஆடுங்கள், பொன்னம்பலத்தில் நிருத்தஞ் செய்தவனுக்கு யாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) மாடு - பக்கம். வாள்-ஒளி. எறித்தல் - வீசுதல். துடித்தல் - பதைத்தல். அம்பலம் பொன்னம்பலத்துக் காயிற்று ஆடிடமதுவாதலான்.(கச)

மையமர்கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக்கூத்தன் றன்னை
யையனை யையர்பிரானை நம்மை
யகப்படுத்தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம்பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக்கண்ணிணைப்பொற்றொடித்தோட்
பய்யரவல்குன் மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) மை அமர் - கருமையமைந்த, கண்டனை - கண்டத்தை யுடையவனை, வானநாடர் மருந்தினை - விண்ணுலகத்தாராகிய தேவர்களுக்கு அமிர்தம்போன்றவனை, மாணிக்கக்கூத்தன் தன்னை - மாணிக்கக்கூத்தனை, ஐயனை - தேவனை, ஐயர் பிரானை -தேவர் பிரானை, நம்மை அகப்படுத்து - நம்மை உட்படுத்தி, ஆட்கொண்டு - அடிமைகொண்டு, அருமை காட்டும் -தனதருமையைப் புலப்படுத்தின, பொய்யர்தம் பொய்யனை - பொய்யர்க்குப் பொய்யா யிருப்பவனை, மெய்யர் மெய்யை - மெய்யர்க்கு மெய்யா யிருப்பவனை, போது - தாமரைமலர் போன்ற, அரி - செவ்வரிபடர்ந்த, இணை கண் - இரண்டு கண்களையும், பொன் தொடி - பொற்றொடியைத்தரித்த, இணைத்தோள் -இரண்டு தோள்களையும், அரவுபை - பாம்பின் படம்போன்ற, அல்குல் -அல்குலையும் உடைய, மடந்தை நல்லீர் - மடந்தைப்பருவத்தை யுடைய பெண்களே, பாடி-பாடி,பொற்சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) நீலகண்டனும், தேவர்க்கு அமுதமானவனும், மாணிக்கக்கூத்தனும், தேவதேவனும், நம்மையகப்படுத்தி யாட்கொண்டு தனதருமையைப்புலப்படுத்தினவனும், பொய்யர்க்குப் பொய்யனும் மெய்யர்க்கு மெய்யனும் ஆகியசிவ பெருமானைப் புகழ்ந்துபாடி, யாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) மை-கருமை. இது நஞ்சுண்டானது. மாணிக்கக்கூத்தன்-மாணிக்கம் போலுங் கூத்தன். மாணிக்கம் இறைவனுக்காதல் அவனதுகூத்துக் காதலுவமையாக்குக. பையர என்பதனை அரபை எனமாறிப் பொருளுரைக்க.()

மின்னிடைச்செந்துவர்வாய்க்கருங்கண்
வெண்ணகைப்பண்ணமர்மென்மொழியீ
ரென்னுடையாரமுதெங்களப்ப
னெம்பெருமானிமவான்மகட்குத்
தன்னுடைக்கேள்வன்மகன்றகப்பன்
றமையனெம்மையன்றாள்கள்பாடிப்
பொன்னுடைப்பூண்முலைமங்கைநல்லீர்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) மின் இடை - மின்னற்கொடிபோலும் இடையினையும், செந்துவர் வாய் - செம்பவளம்போலும் அதரத்தையும், கருங்கண் - கரியகண்களையும், வெள் நகை - வெள்ளிய பற்களையும், பண் அமர் - பண்களும் விரும்புகிற, மெல் மொழியீர் - மெல்லிய மொழியினையும் உடையபெண்களே, என்னுடை ஆர் அமுது - என்னுடைய அரிய அமிர்தம், எங்கள் அப்பன் - எமது தந்தை, எம் பெருமான் - எமது பெருமான், இமவான் மகட்கு - மலையரையன் மகளாகிய பார்வதிக்கு, தன்னுடைக்கேள்வன் - தன்னுடைய நாயகன், மகன் - மகன், தகப்பன் - தந்தை, தமையன் - தமையன், எம் ஐயன் - எங்கள் கடவுள், (அவனது) தாள்கள் பாடி - திருவடிகளைப்பாடி, பொன்னுடைப் பூண்முலை - தேமலையுடையபூண்முலைகளையுடைய, மங்கை நல்லீர் - மங்கைப்பருவப் பெண்களே, பொன் திருச்சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம்.

(க - ரை) மின்னிடை முதலிய வற்றையுடைய மங்கைமீர், எமக்கு அமுத முதலாயினவாயிருப்பவனாகிய சிவபெருமானது திருவடியைப்பாடி யாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) வாய் - ஈண்டதரத்துக் காயிற்று. பண் என்றது இந்தளம் குறிஞ்சி முதலிய பண்களை. அமர்தல் - விரும்புதல். பொன் - தேமல், பொன்னுடைப்பூண் - பொன்னாபரணம் எனினுமாம். பொன் திருச்சுண்ணம் என்பதனைத் திருப்பொற் சுண்ணம் எனமாறி உரையுரைக்க. மகன் என்றது - பராசத்தியினிடத்து சிவன் தோன்றினனென்னும் முறைமையாலும், தகப்பனென்றது, சிவபெருமானிடத்து பராசத்தியுற்பவித்தாளென்னு முறைமையாலுமென்க, இதனை, "சிவமதுசத்தியீன்றும் சத்திதான்சிவத்தையீன்றும், உவந்திருவருமேசேர்ந்தீங்குலகுயிரணைத்து மீன்று" மென்னுஞ் சிவஞானசித்தியாரானு முணர்க.()

சங்கமரற்றச்சிலம்பொலிப்பத்
தாழ்குழல்சூழ்தருமாலையாடச்
செங்கனிவாயிதழுந்துடிப்பச்
சேயிழையீர்சிவலோகம்பாடிக்
கங்கையிரைப்பவராவிரைக்குங்
கற்றைச்சடைமுடியான்கழற்கே

பொங்கியகாதலிற்கொங்கைபொங்கப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) சங்கம் அரற்ற - சங்கவளையல் ஒலிக்கவும், சிலம்பு ஒலிப்ப - பாதச்சிலம்புகள் சப்திக்கவும், தாழ் குழல்-நீண்ட கூந்தலே, சூழ்தரு - வளைந்த, மாலை ஆட-பூமாலை யானதசையவும், செங்கனிவாய் - செவந்தகொவ்வைக் கனி போன்றவாயிலுள்ள, இதழும் துடிப்ப - அதரமும் துடிக்கவும், சேயிழையீர் - செம்மையாகிய ஆபரணத்தையுடைய மாதரே, சிவலோகம்பாடி - சிவபுரத்தைப் புகழ்ந்துபாடி, கங்கைஇரைப்பய-கங்கையாறு சத்திக்க, அராஇரைக்கும் - பாம்பு கள் ஒலிக்கின்ற, கற்றை - திரட்சியாகிய, சடைமுடியான்- சடைமுடியை யுடையவனுகிய சிவபெருமானது, கழற்கு- திருவடிக்கு, பொங்கிய காதலின் - மிகுந்த விருப்பத்தால், கொங்கை பொங்க - கொங்கைகள் விம்ம, பொற்றிருச்சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) இறைவனது சிவலோகத்தைப் புகழ்ந்துபாடி, அவனது திருவடிக்கு சங்கமுதலாயின சத்திக்க யாம் பொற்சுண்ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) தாழ்குழல்சூழ்தருமாலை யென்றமையால், மாலை பூமாலையைக் குறித்தது. சிவலோகம் - சிவபுரம். பொங்குதல் - மிகுதல். (கச)

ஞானக்கரும்பின்றெளியைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப்பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்திப்
பானற்றடங்கண்மடந்தைநல்லீர்
பாடிப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) ஞானக்கரும்பின் தெளியை - ஞானமாகிய கரும்பின் தெளிவை, பாகை - சர்க்கரைப்பாகை, நாடற்கு அரிய நலத்தை- யாவராலுந் தேடுதற்கு அரிதாகிய நலத்தை, நந்தா தேனை - சுவை குன்றாத தேன்போன்றவனை, பழச்சுவை ஆயினானை - முப்பழங்களின் சுவையானவனை, சித்தம் புகுந்து - மனத்திற் புகுந்து, தித்திக்க வல்லகோனை - இனிக்க வல்ல இறைவனை, பிறப்பு அறுத்து - பிறவித்தளையைச் சேதித்து, ஆண்டுகொண்ட - ஆண்டுகொண்டருளின, கூத்தனை - கூத்தப்பிரானை, நா - நாவின்கண், தழும்புஏற - தழும்புண்டாக, வாழ்த்தி - துதித்து, பானல் - கருங்குவளை மலர்போன்ற, தடம்கண் - பெரிய கண்களையுடைய, மடந்தை நல்லீர் - பெண்களே, பாடி - பாடி, பொற்சுண்ணம்- திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை) ஞானக்கரும்பின் தெளிவு முதலானவையாயிருக்குஞ் சிவபெருமானைப் புகழ்ந்துபாடி, நாம் பொற்சுண்ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) கரும்பின் தெளி - கருப்பஞ்சாற்றின் தெளிவு. நந்துதல்-கெடுதல். முப்பழம் - வாழை, மா, பலா என்பன. (௧௫)

ஆவகைநாமும்வந்தன்பர்தம்மோ
டாட்செயும்வண்ணங்கள்பாடிவிண்மேற்
றேவர்கனாவிலுங்கண்டறியாச்
செம்மலர்ப்பாதங்கள்காட்டுஞ்செல்வச்
சேவகமேந்தியவெல்கொடியான்
சிவபெருமான்புரஞ்செற்றகொற்றச்
சேவகனாமங்கள்பாடிப்பாடிச்
செம்பொன்செய்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) ஆவகை - உய்யும்வண்ணம், நாமும் வந்து - யாமும் வந்து, அன்பர் தம்மோடு - அன்பரோடுகூடி, ஆட்செய்யும் வண்ணங்கள் - அடிமைசெய்யும் திறங்களை, பாடி-பாடி, விண்மேல் - விண்ணுலகத்திலுள்ள, தேவர் - தேவர்கள், கனாவிலும் - ஸ்வப்பனத்திலும், கண்டறியா - கண்டுணராத, செம்மலர் பாதங்கள் - செந்தாமரைமலர்போலும் திருவடிகளை, காட்டும் - (எமக்கு) காட்டுகின்ற. செல்வச்சேவகம் ஏந்திய - செல்வமாகிய வீரத்தைத் தாங்கிய, வெல்கொடியான்- வெற்றிக்கொடியை யுடையவன், சிவபெருமான்- சிவபெருமான், புரம் செற்ற - முப்புரங்களை அழித்த, கொற்றம் சேவகன் - வெற்றியையுடைய மகாவீரன், (அவனது) நாமங்கள் - திருநாமங்களை, பாடி பாடி-பலதரமும் புகழ்ந்து பாடி, செம்பொன்செய் சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும்-நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) யாமும் அன்பரோடுகூடி யாட்செயும் வண்ணத்தைப் பாடி தேவர்களுங்கனவிலுங் காண்டற்கரிய திருவடியையெமக்குக்காட்டியருளினசிவபெருமான் திருநாமத்தைப்புகழ்ந்துபாடி நாம் பொற்சுண்ணமிடிப்போம்என்பது.

(வி - ரை.) தேவர் கனாவிலுங் கண்டறியாச் செம்மலர்ப்பாதங்கள் என்றமையால், நனவிற்கண்டறியாமை சொல்லாமேயமையும். காட்டும் என வாளாகூறினமையால் எமக்கு நனவினும் கனவினுங் காட்டும் என்றதாயிற்று. (௧௬)

தேனகமாமலர்க்கொன்றைபாடிச்
சிவபுரம்பாடித்திருச்சடைமேல்
வானகமாமதிப்பிள்ளைபாடி
மால்விடைபாடிவலக்கையேந்து
மூனகமாமழுச்சூலம்பாடி
யும்பருமிம்பருமுய்யவன்று
போனகமாகநஞ்சுண்டல்பாடிப்
பொற்றிருச்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) தேன் அகம்-தேனைத் தன்னுட்கொண்ட, மா-பெருமையமைந்த, கொன்றைமலர் - கொன்றைமலர்மாலையைப், பாடி - பாடி - சிவபுரம்பாடி சிவலோகத்தைப் பாடி, திருச்சடைமேல் - அழகாகிய சடாபாரத்தின் மீதுள்ள, வான் அகம் - விண்ணுலகை யிடமாகவுடைய, மாமதிப்பிள்ளை - பெருமையமைந்த இளஞ்சந்திரனை, பாடி-பாடி, மால்விடைபாடி-பெரிய இடபத்தைப் பாடி, வலக்கை ஏந்தும்வலக்கையில் தாங்கிய, ஊன் அகம் ஆம்-மாமிசத்துக்கிடமாகிய, மழுச்சூலம்பாடி - மழுச்சூலத்தைப் பாடி, உம்பரும்-விண்ணுலகத்தாரும், இம்பரும் - மண்ணுலகத்தாரும், உய்ய - பிழைக்கும்வண்ணம், அன்று - அந்நாளில், நஞ்சு - விடத்தை, போனகமாக உண்டல் - உணவாக வுண்ணுதலை, பாடி-புகழ்ந்துபாடி, பொற்றிருச்சுண்ணம்-திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும்-நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) இறைவனது கொன்றைமலரையும், சிவபுரத்தையும், இளம்பிறையையும், இடபவாகனத்தையும், சூலம் மழு ஆகிய இவைகளையும், நஞ்சருந்தின மேன்மையையும், புகழ்ந்து பாடி, நாம் பொற்சுண்ணமிடிப்போம் என்பது

(வி - ரை.) தேன் நகு அம் எனப்பிரித்து, தேன் விளங்குகின்ற அழகிய எனினுமாம். தேன் அகம் ஆம் எனப்பிரித்து, தேனுக்கிடமாகிய என்றுரைத்தலு மமையும். ஊனகமா மழுச்சூலம் - தசையப்பியிருக்கிற மழுச்சூலம். போனகம் - உணவு. (கஎ)

அயன்றலைகொண்டுசெண்டாடல்பாடி
யருக்கனெயிறுபறித்தல்பாடிக்
கயந்தனைக்கொன்றுரிபோர்த்தல்பாடிக்
காலனைக்காலாலுதைத்தல்பாடி
யியைந்தனமுப்புரமெய்தல்பாடி
யேழையடியோமையாண்டுகொண்ட
நயந்தனைப்பாடிநின்றாடியாடி
நாதற்குச்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) அயன்தலைகொண்டு - பிரமன் சிரத்தைக்கொண்டு, செண்டு ஆடல் பாடி - பந்தாடுதலைப் பாடி, அருக்கன் எயிறு பறித்தல்பாடி - சூரியன் பல்லையுடைத்தமையைப்பாடி, கயந்தனைக்கொன்று-யானையைக்கொன்று, உரி-அதன் தோலை, போர்த்தல் - போர்த்துக்கொள்ளுதலை, பாடி - பாடி, காலனை-யமனை, காலால் உதைத்தல் பாடி - திருவடியால் உதைத்தலைப்பாடி, இயைந்தன - கூடினவாகிய, முப்புரம் - திரிபுரங்களை, எய்தல்-அம்பெய்து அழித்தலை, பாடி - பாடி, ஏழை அடியோமை - ஏழையடியேங்களை, ஆண்டுகொண்ட - ஆண்டுகொண்டருளின, நயந்தனைப் பாடி - நன்மையைப்பாடி, நின்று ஆடிஆடி-நின்று நடித்து நடித்து, நாதற்கு - இறைவனுக்கு, சுண்ணம் - திருப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) பிரமனது சிரத்தைக் கொய்தல் முதலிய வீரகுணங்களையும் ...ழையடியேங்களை யாண்டருளின எளிமைக்குணத்தையும்பாடி நாம் பொற்சுண் ...ணமிடிப்போம் என்பது.

(வி - ரை.) செண்டாடல் என்றது எளிதாயிருந்த தென்பதைக் குறிக்கி ...ன்றது. கயம் - யானை, இது கஜம் என்னும் வடமொழித்திரிபு. அயன்றலைகொண் ...டென்றது-தானே பிரமமென் றகங்கரித்த பிரமனுடையசெருக்கடக்கும்படி வை ...வ மூர்த்தியால் அவனது நடுத்தலையைக்கொய்து வரச்செய்து திருக்கரத்தில் ...பாலமாகத் தாங்கினமையை. (௪அ)

வட்டமலர்க்கொன்றைமாலைபாடி
மத்தமும்பாடிமதியும்பாடிச்
சிட்டர்கள்வாழுந்தென்றில்லைபாடிச்
சிற்றம்பலத்தெங்கள்செல்வம்பாடிக்
கட்டியமாசுணக்கச்சைபாடிக்
கங்கணம்பாடிக்கவித்தகைம்மே
லிட்டுநின்றாடுமரவம்பாடி
யீசற்குச்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) வட்டம் - வட்ட வடிவாகிய, கொன்றை மலர் மாலைபாடி - ...கொன்றைமலர் மாலையைப்பாடி, மத்தமும்பாடி - ஊமத்தமலரையும்பாடி, மதியும் ...பாடி - பிறையையும்பாடி, சிட்டர்கள் வாழும் - பெரியோர் வாழ்கின்ற, தென் தில் ...லைபாடி - தென்றில்லை நகரைப்பாடி, சிற்றம்பலத்து - திருச்சிற்றம்பலத்திலு ...ள்ள, எங்கள் செல்வம்பாடி - எமது செல்வத்தைப்பாடி, கட்டியமாசுணக் கச்சை ...பாடி - கட்டினபாம்புக்கச்சையைப்பாடி, கங்கணம்பாடி - சர்ப்பக் கங்கணத்தைப் ...பாடி, கவித்த கைமேல் இட்டு நின்று ஆடும் - மூடின கையின்மேற்கொண்டு ...நின்றாடுகின்ற, அரவம்பாடி - பாம்பைப்பாடி, ஈசற்கு - ஈசனுக்கு, சுண்ணம் - திரு ...ப்பொற்சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம். எ - று.

(க - ரை.) இறைவனது கொன்றை மலர்மாலை முதலியவற்றைப்பாடி ...நாம் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) வட்டம் மாலைக்கு விசேடணம். மாசுணம் - பாம்பு, மாசு ...ணத்தைக் கங்கணத்தோடு மியைக்க. (௪௯)

வேதமும்வேள்வியுமாயினார்க்கு
மெய்ம்மையும்பொய்ம்மையுமாயினார்க்குச்
சோதியுமாயிருளாயினார்க்குத்
துன்பமுமாயின்பமாயினார்க்குப்
பாதியுமாய்முற்றுமாயினார்க்குப்
பந்தமுமாய்வீடுமாயினாருக்

காதியுமந்தமுமாயிருக்
காடப்பொற்சுண்ணமிடித்துநாமே.

(ப - ரை.) வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு - வேதங்களும் அவற்றிற் சொல்லப்படுகிற யாகங்களும் ஆனவர்க்கு, மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்கு - மெய்யும் பொய்யும் ஆனவர்க்கு, சோதியும் ஆய் இருள் ஆயினார்க்கு - ஒளியும் இருளுமானவர்க்கு, துன்பமும் ஆய் இன்பம் ஆயினார்க்கு - துக்கமுமாகிச் சுகமும் ஆனவர்க்கு, பாதியும் ஆய் முற்றும் ஆயினார்க்கு - அரையுமாகி முழுதுமானவர்க்கு, பந்தமும் ஆய் வீடும் ஆயினாருக்கு - கட்டுமாகி வீடுமானவர்க்கு, ஆதியும் அந்தமும் ஆயினாருக்கு - முதலும் இறுதியுமானவர்க்கு, ஆட - ஆடுதற்கு, பொற்சுண்ணம் - திருப்பொற் சுண்ணத்தை, நாம் இடித்தும் - நாம் இடிப்போம், எ - று.

(க - ரை.) வேதம், வேள்வி, மெய், பொய், ஒளி, இருள், துன்பம், இன்பம், பாதி, முழுமை, பந்தம், வீடு இவைமுதலியவனைத்தும் தானேயாய் நின்ற சிவபெருமானுக்குப் பொற்சுண்ண மிடிப்போம் என்பது.

(வி - ரை.) இறைவனது தன்மை கூறுவதில் வேதஞ் சிறந்தமையின் முதலில் வேதமும் என்றும், அதனாலன்றி யாகமுதலான சற்கருமங்களின் கூறுபாடு தெரிதலருமையாதலால், அடுத்து வேள்வியும் என்றும் கூறியருளினார். மெய்ம்மையும் பொய்ம்மையுமாயினார்க்கு முதலாயின இறைவனது பரிபூர்ண வியாபகத்தை விளக்கி நின்றன.

திருச்சிற்றம்பலம்.

---

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# திருக்கோத்தும்பி.

---

சிவனோடைக்கியம்.
நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.
திருச்சிற்றம்பலம்.

பூவேறுகோனும்புரந்தரனும்பொற்பமைந்த
நாவேறுசெல்வியுநாரணனுநான்மறையு
மாவேறுசோதியும்வானவருந்தாமறியாச்
சேவேறுசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, பூ ஏறு - தாமரைப்பூவிலமர்ந்தருளிய, கோனும் - பிரமனும், புரந்தரனும் - இந்திரனும், பொற்பு அமைந்த-அழகமைந்த, நா ஏறு-(பிரமனது) நாவிலேறிய, செல்வியும் சரசுவதியும், நாரணனும்-

திருமாலும், நான் மறையும் - நான்குவேதங்களும், மா எறு - பெருமை மிகுந்த, சோதியும் - முச்சுடர்களும், வானவரும் - மற்றுமுள்ள தேவர்களும், தாம் அறியா - தாமேயறியவொண்ணாத, சே எறு - இடபமூர்ந்த, சேவடிக்கே - திருவடிக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவாய். எ - று

(க - ரை.) அரசவண்டே! நீ பிரமன், இந்திரன் முதலானோரும் அறியாத இறைவனது திருவடியிற்சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) பூ எறு என்ற விசேடணத்தால்கோன் என்பது பிரமனையுணர்த்திற்று. நா எறு என்ற விசேடணத்தால் செல்வி என்பது சரசுவதியையுணர்த்திற்று. மா எறு சோதி என்றது, சூரியசந்திராக்கினிகளை. திருவடி தாமரை மலர்போன்றிருத்தலால் வண்டுகளணுகி யூதுதற்குப்பொருத்தமுடைத்தென்பதறிக.

நானாரென்னுள்ளமார்ஞானங்களாரென்னையாரறிவார்
வானோர்பிரானென்னையாண்டிலனேன்மதிமயங்கி
யூனாருடைதலையிலுண்பலிதேரம்பலவன்
றேனார்கமலமேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ-அரச வண்டே, வானோர் பிரான் - தேவர் பெருமான், என்னை ஆண்டிலனேல் - என்னை ஆண்டருளிலனாயின், நான் ஆர் - நான் யார், என் உள்ளம் ஆர் - என் மனம் யார், ஞானங்கள் ஆர்- ஞானங்கள் யார், என்னை யார் அறிவார்-என்னை அறிபவர் யார்,(இவையாவுமில்லையாம் ஆதலால்) மதி மயங்கி - மதிமயக்கங்கொண்டு, ஊன் ஆர் - மாமிச நிறைந்த, உடைத லையில் - உடைந்த தலைப்பாத்திரத்தில், உண் - உண்ணுதற்குரிய, பலிசேர் - பிச்சையை யேற்கின்ற, அம்பலவன்-பொன்னம்பலவனது, தேன் ஆர் கமலமே- தேன் பொருந்திய தாமரை மலர்போலுந் திருவடியின் கண்ணே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவாய். எ - று.

(க - ரை.) அரசவண்டே! இறைவன் என்னையாண்டிலனாயின் நான் முதலாகிய ஒரு பொருளும் இல்லையாம், ஆதலால் அவனது திருவடியின் கண்ணே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) நானார், என்னுள்ளமார், ஞானங்களார்,என்பன வழுவமைதிகள். தேனார் கமலம்என்பது அம்பலவன் என்ற குறிப்பால் அவனது திருவடியை யுணர்த்திற்று. (உ)

தினைத்தனையுள்ளதோர்பூவினிற்றேனுண்ணாதே
நினைத்தொறுங்காண்டொறும்பேசுந்தோறுமெப்போது
மனைத்தெலும்புண்ணெகவானந்தத்தேன்சொரியுங்
குனிப்புடையானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, தினைத்தனை உள்ளது - தினையளவுள்ளதாகிய, ஓர் பூவினில் தேன் உண்ணாதே - ஒரு மலரின் தேனையுமுண்ணாது

மல், நினைதொறும் - நினைக்குந்தோறும், காண்தொறும் - பார்க்குந்தோறும், பேசும்தோறும் - பேசுந்தோறும், (ஆகிய) எப்போதும் - எக்காலத்தும், அனைத்து எலும்பு - எலும்புகளெல்லாம், உள் நெக - உள்ளேநெகிழும்வண்ணம், ஆனந்தம் தேன் சொரியும் - இன்பத்தேனைப்பொழிகின்ற, குனிப்பு உடையானுக்கே - கூத்துடையவனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவாய். எ - று.

(க - ரை) அரசவண்டே! அற்புதமாகிய பூந்தேனை யுண்ணுமல் உடலுயிர்கள் உருகும்படி இன்பத்தேனைச் சொரிகின்ற கூத்தப்பிரானது திருவடியிற் சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) தனை - அளவு, குனிப்பு - தொழிற்பெயர். (ரு)

கண்ணப்பனொப்பதோரன்பின்மைகண்டபி
னென்னப்பனென்னொப்பிலென்னையுமாட்கொண்டருளி
வண்ணப்பணித்தென்னைவாவென்றவான்கருணைச்
சுண்ணப்பொன்னீற்றற்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோத்தும்பீ - அரசவண்டே, கண்ணப்பன் ஒப்பது - திருக்கண்ணப்பதேவரை நிகர்த்ததாகிய, ஓர் அன்பின்மை கண்டபின் - ஒப்பற்ற அன்பின்மையைக்கண்ட பின்னும், என் அப்பன் - என் அப்பனாகி, என் ஒப்பு இல் - எனக்குச் சமானமில்லாத, என்னையும் - அடியேனையும், ஆட்கொண்டு அருளி - அடிமைகொண்டருளி, வண்ணப் பணித்து - சற்குருமூர்த்தமாகும்படி கட்டளையிட்டு, என்னை வா என்ற - என்னை வாவென்றழைத்த, வான் கருணை - பெருங்கருணையையுடைய, சுண்ணம் - பொடியாகிய, பொன் நீற்றற்கே - பொன்மயமாகிய திருவெண்ணீறுடையானுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை.

(க - ரை.) அரசவண்டே! கண்ணப்பன் போல அன்புடைமை யென்னிடத்தின்மை கண்டும், என்னை வாவென்றழைத்தாட்கொண்டருளின பெருங்கருணையாளனாகிய சிவபிரானுக்கே சென்று ஊதக்கடவாய் என்பது.

(வி - ரை.) தலையாய அன்பாதலால் "கண்ணப்பனொப்பதோரன்பு" என்றார். கண்ணப்பநாயனார் தன்னன்பின் முதிர்வை திருத்தொண்டர்புராணத்துள்ளும், "நில்லு கண்ணப்ப நில்லு கண்ணப்ப என அன்புடைத்தோன்றல் நில்லு கண்ணப்ப" வென்ற, கண்ணப்பநாயனார் திருமறத்துஞ் சான்க. ஒப்பு இல் என்றது, இழிவிற்றற் சமானமில்லாத என்றபடி. பொன்னீற்றனென்பதற்கு அழகிய திருவெண்ணீற்றனெனவும் பொருள் கூறுக. (சு)

அத்தேவர்தேவரவர்தேவரென்றிங்ஙன்
பொய்த்தேவுபேசிப்புலம்புகின்றபூதலத்தே
பத்தேதுமில்லாதென்பற்றறநான்பற்றிநின்ற
மெய்த்தேவர்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோத்தும்பீ - அரசவண்டே, அத்தேவர் தேவர் - அச்சுத் தேவர்களே தேவர், இவர் தேவர் ... என்று - ...

இங்ஙன் - இவ்வாறு, பொய் தேவு பேசி - பொய்த்தேவரைப் பேசி, புலம்புகின்ற - புலம்பாநின்ற, பூதலத்தே - நிலவுலகத்தின் கண்ணே, பத்து ஏதும் இல்லாது - பற்றுச் சிறிதுமின்றி, என் பற்று அற - என்பிறவிப் பற்றறற்றொழிய, நான் பற்றி நின்ற - நான் பிடித்து நின்ற, மெய் தேவர் தேவர்க்கு ஏ - மெய்யாகிய மகா தேவர்க்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! பொய்த்தேவரைப் பற்றிப் புலம்பாநின்ற உலகத்தில் பிறவிப்பற்றொழிய நான் பற்றி நின்ற மெய்த்தேவனாகிய சிவபெருமானுக்கே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) தேவு - தெய்வம். பத்து - பற்று. (௫)

வைத்தநிதிபெண்டிர்மக்கள்குலங்கல்வியென்னும்
பித்தவுலகிற்பிறப்போடிறப்பென்னுஞ்
சித்தவிகாரக்கலக்கந்தெளிவித்த
வித்தகத்தேவர்க்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, வைத்த நிதி - ஈட்டிவைத்த செல்வம், பெண்டிர் - மனைவிகள், மக்கள் - சிறுவர், குலம் - குலம், கல்வி - கல்வி, என்னும் பித்தம் - என்னும் பித்தங்கொண்ட, உலகில் - உலகத்தில், பிறப்போடு இறப்பு என்னும் - பிறப்பிறப்புக்களென்கின்ற, சித்தம் விகாரம் கலக்கம் - மனோவிகாரத்தின் கலக்கத்தை, தெளிவித்த - தெளியச்செய்த, வித்தகம் தேவர்க்கே - ஞானவடிவாகிய தேவருக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை, எ - று.

(க - ரை.) அரசவண்டே! செல்வமுதலியவற்றில் பித்தேறின உலகில், பிறவி இறவியாகிய கலக்கத்தினின்றும் என்னை நீக்கியருளின ஞானவுருவினனாகிய இறைவனுக்கே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) நிதி முதலியவற்றில் மிக்க இச்சை வைத்திருப்பதனால் உலகத்தைப் பித்தவுலகு என்றார். (௬)

சட்டோநினைக்கமனத்தமுதாஞ்சங்கரனைக்
கெட்டேன்மறப்பேனோகேடுபடாத்திருவடியை
யொட்டாதபாவித்தொழும்பரைநாமுருவறியோஞ்
சிட்டாயசிட்டற்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, சட்டோ நினைக்க - சத்தியமாக நினைக்கவே, மனத்து - நினைத்த மனத்தில், அமுது ஆம் - அமிர்தமாகின்ற, சங்கரனை - சங்கரனை, கெட்டேன் மறப்பேனோ - கெட்டேன் மறந்தொழிவேனோ, கேடுபடா - அழிவுண்டாகாத, திரு அடியை - திருவடியை, ஒட்டாத - அடையவொட்டாத, பாவி தொழும்பரை - பாவித்தொண்டரை, நாம் - யாம், உரு அறியோம் - உருவமறியோம், சிட்டாய சிட்டற்கே - மேன்மையாகிய பெரியோனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை, எ - று.

(க - ரை.) அரசவண்டே! நினைத்தலும் அமுதம்போல அம்மனத்துக் கினிமையைத் தருகின்ற சிவபெருமானை மறப்பேனே, அவன் திருவடியை யடைதற்கிணங்காத துட்டரை யாம் காணவுஞ் சகியோம். அந்த மேலோ னிடத்தே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) சட்டு என்பது, திசைச்சொல். சட்டோ நினைக்க என்பதற்கு நினைப்பின் அழிவுண்டாமோ என்றுரைப்பினுமமையும். கெட்டேன் - வியப் பிடைச்சொல். ஒட்டுதல் - சம்மதித்தல். சிட்டன் ஆய என்பது சிட்டாய வெனத் தொகுத்தது. சிட்டன் - சிஷ்டன் என்னும் வடமொழிச் சிதைவு. மேலோன் என்பது பொருள். (எ)

ஒன்றாய்முளைத்தெழுந்தெத்தனையோகவடுவிட்டு
நன்றாகவைத்தென்னைநாய்சிவிகையேற்றுவித்த
வென்றாதைதாதைக்குமெம்மனைக்குந்தம்பெருமான்
குன்றாதசெல்வற்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, ஒன்று ஆய் - ஒன்றாகி, முளைத்து எழுந்து - முளைத்தெழுந்து, எத்தனையோ கவடு விட்டு - எத்தனையோ கிளைகள் விட்டு, நன்றாக வைத்து - நன்மையுண்டாக வைத்து, நாய் சிவிகை ஏற்றுவித்த- நாய்போலும் அடியேனைச் சிவிகையி லேற்றுவித்த, என் தாதை - என் தந்தை, தாதைக்கும் - தந்தைக்கும், எம் அனைக்கும் - எமது தாய்க்கும், தம்பெருமான்- தலைவனாகிய, குன்றாத செல்வற்கே - குறையாத செல்வத்தையுடையவனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! ஒரு பொருளாயும் பல பொருளாயும் நிறைந்து விளங்குஞ் சிவபெருமானிடத்தே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) கவடு - கிளை. சிவிகை - பல்லக்கு. இறைவன் ஒன்றினுந் தோன்றாத சுயம்பு ஆகையால் ஒன்றாய் முளைத்தெழுந்து என்றும், தானின்றிப் பிரபஞ்சவிரிவு இன்மையின் எத்தனையோ கவடு விட்டு என்றும் கூறினார். (அ)

கரணங்களெல்லாங்கடந்துநின்றகறைமிடற்றன்
சரணங்களேசென்றுசார்தலுமேதானெனக்கு
மரணம்பிறப்பென்றிவையிரண்டின்மயக்கறுத்த
கருணைக்கடலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, கரணங்கள் எல்லாம் - அந்தக் கரணங்கள் எல்லாவற்றையும், கடந்து நின்ற - அப்பாற்பட்டு நின்ற, கறை மிடற்றன் - விஷந்தங்கிய கண்டனது, சரணங்களே-திருவடிகளையே, சென்று சார்தலும் - சென்றடைதலும், தான் - தான், எனக்கு - அடியேனுக்கு, மரணம் பிறப்பு என்ற - இறப்பு பிறப்பென்று சொல்லப்பட்ட, இவை இரண்டின் - இவை யிரண்டினுடைய, மயக்கு அறுத்த-மயக்கத்தைப் போக்கிய, கருணைக்கடலுக்கே, கிருபா சாகரமாயிருப்பவனுக்கே, சென்று ஊதாய்-போய் ஊதக்கடவை.

(க - ரை.) அரசவண்டே! அந்தக்கரணங்களுக் கெட்டாதவனும், என் பிறப்பிறப்புக்களை யொழித்தருளினவனுமாகிய சிவபெருமானிடத்தே சென்று ஊதக்கடவை என்பது.

(வி - ரை.) அகக்கரணம் புறக்கரணம் என்னு மிரண்டுமடங்க, "கரணங்களெல்லாம்" என்றாரெனினுமாம். அகக்கரணமாவது - மனம், புத்தி, ஆங்காரம், சித்தம் என்பன. புறக்கரணமாவது மெய்வாய், கண், மூக்கு, செவி முதலிய பஞ்சேந்திரியங்கள். கறை - விஷம். மிடறு - கண்டம். (சு)

நோயுற்றுமூத்துநானுந்துகன்றாயிங்கிருந்து
நாயுற்றசெல்வநயந்தறியாவண்ணமெல்லாந்
தாயுற்றுவந்தென்னையாண்டுகொண்டதன்கருணைத்
தேயுற்றசெல்வற்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, நோய் உற்று-நோயையடைந்து, மூத்து - முதிர்ந்து, நான் - யான், நுந்து-தாய்ப்பசுவால் தள்ளப்பட்ட,கன்றாய்-கன்றுபோல, இங்கு இருந்து - இவ்விடத்திருந்து, நாய் - நாயினேன், உற்ற செல்வம் - மிக்க செல்வத்தை, நயந்து அறியாவண்ணம் எல்லாம் - விரும்பி அறியாத விதங்களெல்லாவற்றையும் கொடுத்து, தாய் உற்று வந்து - தாய் போன்று எழுந்தருளி, என்னை - அடியேனை, ஆண்டுகொண்ட - ஆண்டுகொண்டருளின, தன்கருணை தேசு உற்ற செல்வற்கே - தட்பமாகிய கருணையென்னும் ஒளிமிகுந்த செல்வனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை, எ - று,

(க - ரை.) அரசவண்டே! பிறவிப்பிணியையடைந்து முதிர்ந்து பசுவினால் தள்ளப்பட்ட கன்றைப்போல நோய் முதலியவற்றால் வருந்துகின்ற என்னைத் தாய்போலக் கருணைசெய்தாண்டருளின இறைவனிடத்தே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) நுந்துதல் - தள்ளுதல். தேசுற்ற என்பது தேயுற்ற எனச் சகரத்துக்கு யகரம்போலியாயிற்று. செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம் என்றது,முன்னொருக்கால் நான் கண்டறியாதசெல்வத்தையெல்லாம் என்றபடி.

வன்னெஞ்சக்கள்வன்மனவலியனென்னாதே
கன்னெஞ்சுருக்கிக்கருணையினாலாண்டுகொண்ட
வன்னந்திளைக்குமணிதில்லையம்பலவன்
பொன்னங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, வல் நெஞ்சம் - வன்மையாகிய நெஞ்சினையுடைய, கள்வன் - திருடன், மன வலியன் - மனோபாவத்தாலும் வலியனே, என்னாதே - என்று நீக்காமல், கல் நெஞ்சு உருக்கி - என் கருங்கல்லை நிகர்த்த மனத்தை உருகச்செய்து, கருணையினால் - தன் பெருங்கருணை

யாக, ஆண்டுகொண்ட - ஆண்டுகொண்டருளின, வன்னம் திளைக்கும் - அழகு நிரம்பின, மணி - ரத்நமயமாகிய - தில்லையம்பலவன் - தில்லை சிற்றம்பலவனது, பொன் அம் கழலுக்கே சென்று - பொற்கழலணிந்த திருவடியிலே போய், ஊதாய் - ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! என் வலிய கல்லை நிகர்த்த மனத்தையுடையவனென்று வெறுக்காமல் என் வலிய மனத்தையுருக்கித் தன் கருணையாலாண்டுகொண்ட இறைவனிடத்தே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) மனவலியனென்பதில் மன என்பதை மன்ன வென்பதின் ஒருமெய்த்தல் விகாரமெனக் கொண்டு மிகவும் வலியன் என்றுரைப்பினுமாம். வன்னந்திளைக்கு மென்பதை, அன்னந்திளைக்குமெனக்கொண்டு அன்னமிரம் பினை வயல்சூழ்ந்த வென்பது மொன்று. நெஞ்சு என்றதை யிடமாகவும், மனம் என்றதை இடத்து நிகழ்பொருளாகவுங் கொள்க. வன்னம் - நிறம் எனினுமாம்.

நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனதுள்ளப்பிழைபொறுக்கும்பெருமையனைச்
சீயேதுமில்லாதென்செய்பணிகள்கொண்டருளுந்
தாயானவீசற்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, நாயேனை - நாயினேனை, தன் அடிகள் பாடுவித்த - தன் திருவடிகளைப் பாடச்செய்த, நாயகனை - தலைவனை, பேயேனது - பேயை நிகர்த்தவனுகிய எனது, உள்ளம் பிழை பொறுக்கும் - மனக்குற்றங்களைப் பொறுத்தருள்கின்ற, பெருமையனை - பெருமையையுடையவனை, சீ ஏதும் இல்லாது - இகழ்ச்சி சிறிதுமின்றி, என் செய்பணிகள் கொண்டருளும் - என்செய் தொண்டுகளை யேற்றருளுகின்ற, தாய் ஆன ஈசற்கே - தாய்போன்ற ஈசனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! என்னைக்கொண்டு தன்னைப் பாடுவித்துக்கொண்டவனும், என் பிழை பொறுத்து என் பணிகொண்டருள்வோனுமாகிய சிவபிரானிடத்தே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) உள்ளப்பிழை - தீயன சிந்தித்தல் முதலியன. (௧௨)

நான்றனக்கன்பின்மைநானுந்தானும்மறிவோந்
தானென்னையாட்கொண்டதெல்லாருந்தாமறிவா
ரானகருணையுமங்குற்றேதானவனே
கோனென்னைக்கூடக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, நான் - யான், தனக்கு அன்பு இன்மை - தனக்கு அன்புடையனல்லாமையை, நானும் தானும் அறிவோம் - நானும் தானுமே அறிவோம், தான் என்னை ஆட்கொண்டது - தான் என்னை ஆட்கொண்டருளினதை, எல்லாரும் தாம் அறிவார் - எல்லாரும் அறிவார்கள்

தனகருணையும் அங்கு உற்றே-உண்டாகிய கருணையும் அவ்விடத்து யிருந்தே, நான் அவனை சேரான் - நானாகிய அவனே இறைவனு யெழுந்தருளி, என்னைக் கூட - என்னைச்சேர, குளிர்ந்து ஊதாய் - குளிர்ச்சியாய் ஊதக்கடவை, எ - று,

(க - ரை.) அரசவண்டே! இறைவனிடத்து நான் அன்பிலேன் என்பதை அவனும் நானுமே யறிவோம், அவன என்னை யாட்கொண்டதை யெல்லாரு மறிவார்கள், ஆதலால் அவன் தன் கருணையால் என்னை வந்து தானே சேரும்படி ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) அன்பின்மை-அன்பில்லாமை. குளிர்ந்தூதல்-மெல்லவூதுதல்.

கருவாயுலகினுக்கப்புறமாயிப்புறத்தே
மருவார்மலர்க்குழன்மாதினொடும்வந்தருளி
அருவாய்மறைபயிலந்தணனாயாண்டுகொண்ட
திருவானதேவற்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே! உலகினுக்கு - பிரபஞ்சத்துக்கு, கரு ஆய் - பிறப்பிடமாய், அப்புறம் ஆய் - அப்பாற்பட்டதுமாகி, இ புறத்தே - இவ்விடத்தில், மரு ஆர் - மணம் நிறைந்த, மலர் - மலர்களையணிந்த, குழல் - கூந்தலையுடைய, மாதினொடும் - உமாதேவியாரோடும், வந்து அருளி - எழுந்தருளி, அரு ஆய் - அருவாகி, மறை பயில் - வேதங்களை யோதுகின்ற, அந்தணன் ஆய் - வேதியனாகி, ஆண்டுகொண்ட - என்னை ஆண்டுகொண்டருளிய, திரு ஆன தேவற்கே - அழகாகிய தேவனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! பிரபஞ்சத்துக்கு முதல்வனாகிய சிவபெருமான் எம்பெருமாட்டியோடும் இவ்விடத்து வேதியனா யெழுந்தருளி என்னை யாண்டு கொண்டமையால் அவனிடத்தே சென்று ஊதக்கடவை யென்பது.

(வி - ரை.) கரு - பிறப்பிடம். அரு - உருவமின்மை. உலகினுக்கப்புறமென்றது - பகிரண்டங்களை. (கச)

நானுமென்சிந்தையுநாயகனுக்கெவ்விடத்தோம்
தானுந்தன்றையலுந்தாழ்சடையோனாண்டிலனேல்
வானுந்திசைகளுமாகடலுமாயபிரான்
தேனுந்துசேவடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, தாழ்சடையோன் - நீண்ட சடையையுடைய சிவபெருமான், தானும் தன் தையலும் - தானும் தன் தேவியுமா யெழுந்தருளி, ஆண்டிலனேல் - ஆண்டிலனாயின், நானும் - நானும், என் சிந்தையும் - அடிமைபூண்டு மனமும், நாயகனுக்கு - எமது தலைவனுக்கு, எ இடத்தோம் - எவ்விடத்தோமாவோம், வானும் - ஆகாயமும், திசைகளும் - திசைகளும் [illegible]

கடலும் - பெரிய கடல்களும், ஆய - ஆகிய, பிரான் - உபகாரகுணமுடையோனது, தேன் உந்து - தேனைச்சொரிகின்ற, சேவடிக்கே - திருவடிகளுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ-று.

(க-ரை.) அரசவண்டே! சிவபெருமான் இறைவியோடு மெழுந்தருளி என்னையாட்கொள்ளாவிடின் நான் இறைவனுக்குரியனாகேன், ஆதலால் அவனென்னையாட்கொள்ளுமாறு அவனது திருவடியின் கண்ணே சென்று ஊதுவாயாக என்பது.

(வி-ரை.) தாழ்சடை - தொங்குகின்ற சடையெனினுமாம். (கரு)

உள்ளப்படாததிருவுருவையுள்ளுதலுங்
கள்ளப்படாதகளிவந்தவான்கருணை
வெள்ளப்பிரானெம்பிரானென்னைவேறேயாட்
கொள்ளப்பிரானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப-ரை.) கோ தும்பீ - அரசவண்டே, உள்ளப்படாத - நினைக்கவொண்ணாத, திருவுருவை - திருவுருவத்தை, உள்ளுதலும் - நினைத்தலும், கள்ளப்படாத - ஒளிக்காத, களிவந்த - களிப்புமிகுந்த, வான் கருணை வெள்ளம் - மேலாகிய கருணைப்பெருக்கை யுடையவனும், எம்பிரான் - எம்பிரானுமாகி, என்னை - அடியேனை, வேறே - வேறாகவே, ஆட்கொள் - அடிமைகொண்ட, அப்பிரானுக்கே - அந்த உபகார சீலனுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ-று.

(க-ரை) அரசவண்டே! தன் திருவுருவை நினைத்தளவில் கருணைப் பெருக்கையுடையவனாய் என்னை யடிமைகொண்ட உபகாரனுக்குச்சென்று ஊதக்கடவை யென்பது.

(வி-ரை.) உள்ளுதல் - நினைத்தல். வான் - மேன்மை. கள்ளப்படாத என்றது பொய்படாதமையை. வேறேயாட்கொள்ளலாவது, வேறு முறைமையாக ஆட்கொள்ளல்; அது இறைவனுக்கடிமையாதற்குரியபக்குவம் எனக்கு வாய்க்கு முன்னே யாட்கொள்ளல். (கசு)

பொய்யாயசெல்வத்தேபுக்கழுந்திநாடோறு
மெய்யாக்கருதிக்கிடந்தேனையாட்கொண்ட
வையாவென்னாருயிரேயம்பலவாவென்றவன்றன்
செய்யார்மலரடிக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப-ரை.) கோ தும்பீ - அரசவண்டே, பொய் ஆய - பொய்யாகிய, செல்வத்தே - செல்வத்தின்கண்ணே, புக்கு அழுந்தி - சென்றழுந்தி, நாள் தோறும் - தினந்தோறும், மெய் ஆ கருதி கிடந்தேனை - அதுவே உண்மைச்செல்வமென்றெண்ணிக்கிடந்த என்னை, ஆட்கொண்ட - அடிமைகொண்ட, ஐயா - ஐயனே, என் ஆர் உயிரே - என் அரிய வுயிரே, அம்பலவா - பொன்னம்பலவனே, என்று -

என்று துதித்து, அவன் தன் - அவனது, செய்யார் மலர் - செந்நிறம்பொருந்திய தாமரை மலர்போன்ற, அடிக்கே - திருவடிக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! பொய்ச்செல்வத்திலழுந்தி அதனை மெய்யெனக் கருதிக்கிடந்தேனை ஆட்கொண்ட ஐயனே, என் அரியவுயிரே, பொன்னம்பலவனே என்றுதித்து அவன் திருவடிக்கண்ணேசென்று ஊதக்கடவை என்பது.

(வி - ரை.) ஆருயிர் - அருமையாகிய வுயிர். பெருமை ஆசை-பேராசையென வந்தாற்போல, அருமை உயிர் ஆருயிர் என வந்தது. (கஎ)

தோலுந்துகிலுங்குழையுஞ்சுருடோடும்
பால்வெள்ளைநீறும்பசுஞ்சாந்தும்பைங்கிளியுஞ்
சூலமுந்தொக்கவளையுமுடைத்தொன்மைக்
கோலமேநோக்கிக்குளிர்ந்தூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோ தும்பீ - அரசவண்டே, தோலும் - தோலும், துகிலும் - ஆடையும், குழையும் - குண்டலமும், சுருள் தோடும் - சுருண்ட காதணியும், பால்வெள்ளை நீறும் - பால்போலும் வெண்மையாகிய திருவெண்ணீறும், பசுஞ்சாந்தும் - பசுமையாகிய சந்தனமும், பைங்கிளியும் - பசியகிளியும், சூலமும் - சூலமும், தொக்க - திரண்ட, வளையும் - வளையலும் (ஆகிய இவற்றை) உடை - உடைய, தொன்மை கோலமே நோக்கி - பழமையாகிய திருக்கோலத்தையே நோக்கி, குளிர்ந்து ஊதாய் - குளிர்ச்சியாய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! தோல், துகில், குழை, தோடு, நீறு, சாந்து, கிளி, சூலம், வளை என்பவற்றையுடைய இறைவனது திருக்கோலத்தை நோக்கி ஊதக்கடவை என்பது.

(வி - ரை.) அர்த்த நாரீச்சுர கோலங் கூறப்படுதலால் தோல்குழை நீறு முதலியவற்றை இறைவனுக்கும், துகில் தோடு பசுஞ்சாந்து முதலியவற்றை இறைவிக்கும் கொள்க. வளை, பலவாதலாற் றொக்கவளை என்றார். (கஅ)

கள்வன்கடியன்கலதியிவனென்னாதே
வள்ளல்வரவரவந்தொழிந்தானென்மனத்தே
யுள்ளத்துறுதுயரொன்றொழியாவண்ணமெல்லாந்
தெள்ளுங்கழலுக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை. கோ தும்பீ - அரசவண்டே, கள்வன் - திருடன், கடியன் - கொடியன், கலதி - மூதேவி, இவன் என்னாதே - இவனென்றிகழாமல், வள்ளல் - பரமோதாரனாகிய சிவபிரான், வர வர - நாளுக்கு நாள், என் மனத்தே வந்து ஒழிந்தான் - என் மனத்தின் கண்ணே வந்தொழிந்தான், உள்ளத்து உறு - மனத்திற் பொருந்திய, துயர் எல்லாம் - துன்பங்களெல்லாவற்றையும், ஒன்று ஒழியாவண்ணம் - ஒன்று நீங்காத வண்ணம், தெள்ளும் கழலுக்கே - தெளிந்த திருவடிக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! இவன் கள்வனாகிய கலதியென்றிகழாமல் என் மனத்தில் வந்து குடியிருந்த இறைவனது திருவடியின் கண்ணே சென்று நமது துன்பங்களை யெல்லாம் ஒன்றொழியாமற்சொல்லி ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) கலதி - சேட்டை=(மூதேவி.) (சக)

பூமேலயனோடுமாலும்புகலரிதென்
றேமாறிநிற்கவடியேனிறுமாக்க
நாய்மேற்றவிசிட்டுநன்றாய்ப்பொருட்படுத்த
தீமேனியானுக்கேசென்றூதாய்கோத்தும்பீ.

(ப - ரை.) கோத்தும்பீ - அரசவண்டே, பூமேல் அயனோடு - தாமரை மலர்மேலிருக்கின்ற பிரமனோடு, மாலும் - திருமாலும், புகல் அரிது என்று - சொல்லுதல் அரிதாமென்று, ஏமாறி நிற்க - தடுமாறி நிற்கவும், அடியேன் - தொண்டனேன், இறுமாக்க - இறுமாக்கவும், நாய் - நாய் போல்வேனை, மேல் தவிசு இட்டு - மேலாகிய ஆசனத்தில் வைத்து, நன்றாய் - நன்மையாக, பொருள்படுத்த - என்னை ஒரு பொருளாகக்கொண்ட, தீமேனியானுக்கே - நெருப்புப்போலுந் திருமேனியை யுடையவனாகிய சிவபெருமானுக்கே, சென்று ஊதாய் - போய் ஊதக்கடவை. எ - று.

(க - ரை.) அரசவண்டே! அரிபிரமர் தடுமாறவும், அடியேன் இறுமாப்படையவும், நாய்க்கு மேலான ஆசனமிட்டாற்போல அடியேனை யோர் பொருளாகக் கொண்டாண்டருளின சிவபெருமானிடத்தே சென்று ஊதுவாயாக என்பது.

(வி - ரை.) ஏமாறல்-தடுமாறல். இறுமாத்தல்-அகங்கரித்தல். தவிசு-ஆசநம்.

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

# திருத்தெள்ளேணம்.

## சிவனோடடைவு.

அதாவது சிவபெருமானோடு சென்று கூடுதல்.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

திருமாலும்பன்றியாய்ச்சென்றுணராத்திருவடியை
யுருநாமறியவோரந்தணனாயாண்டுகொண்டா
னொருநாமமோருருவமொன்றுமில்லாற்காயிரந்
திருநாமம்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) திருமாலும் - விட்டுணுவும், பன்றி ஆய் - பன்றியுருவாகி, சென்று-நிலத்தைப் பிளந்துசென்றும், உணரா - அறியாத, திருவடியை - திருவடியை, உரு நாம் அறிய-வடிவத்தோடு யாம் அறியும்வண்ணம், ஓர் அந்தணன் ஆய்-ஒருவேதியனாகிவந்து, ஆண்டுகொண்டான் - ஆண்டுகொண்டருளினவனாய், ஒரு நாமம் - ஒரு பெயர், ஓர் உருவம் - ஒரு வடிவம், (என்னும்) ஒன்றும் இல்லார்க்கு - ஒன்றுமில்லாதவனாகிய சிவபெருமானுக்கு, ஆயிரம் திருநாமம் பாடி - ஆயிரந் திருநாமங்கள் அமைத்துப்பாடி, நாம் - யாம், தெள்ளேணம் கொட்டா - தெள்ளேணம் கொட்டுவோம், எ - று.

(க - ரை.) திருமாலும் வராகவுருவாய் நிலத்தைக்கீண்டும் அறியாத திருவடியை உருவத்தோடு யாம் அறியும்வண்ணம் ஒரு வேதியனாயெழுந்தருளி எம்மையாண்டுகொண்ட நாமரூப ரகிதனாகிய சிவபெருமானுக்கு ஆயிரந் திருநாமங்களைச் சொல்லி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) திருமாலும் என்றவும்மை உயர்வுசிறப்பு. தெள்ளேணம் - மகளிர் விளையாட்டிலொன்று. கொட்டாமோ என்பதில் ஆ, ஓ, என்னும் இரண்டெதிர்மறை விகுதிகள்கூடி கொட்டுவோம் என உடன்பாட்டுப் பொருளுணர்த்தி நின்றன. (க)

திருவார்பெருந்துறைமேயபிரானென்பிறவிக்
கருவேரறுத்தபின்யாவரையுங்கண்டதில்லை
யருவாயுருவமுமாயபிரானவன்மருவுந்
திருவாரூர்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) திரு ஆர் - அழகு நிறைந்த, பெருந்துறைமேய-திருப்பெருந்துறையில் எழுந்தருளிய, பிரான் - உபகார சீலன், என் பிறவி கரு - என் பிறவிக்கு மூலமாயிருக்கிற இருவினைகளை, வேர் அறுத்தபின் - வேரறுத்த பின்னர், யாவரையும் கண்டதில்லை - ஒருவரையும் பார்த்ததில்லை, அரு ஆய் - அருவமாகி, உருவமும் ஆய - உருவமுமாயிருக்கிற, பிரான் அவன் - உபகார சீலனாகிய அவன், மருவும் - எழுந்தருளியிருக்கிற, திருவாரூர்பாடி - திருவாரூரைப்பாடி, நாம் - யாம், தெள்ளேணம் கொட்டா - தெள்ளேணம் கொட்டுவோம், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமான் என் பிறவியை வேர்களைந்த பின்னே யான் அவனையன்றி வேறொருவரையுங் கண்டதில்லை; அவன் எழுந்தருளியிருக்கிற திருவாரூர் என்னுந் திருப்பதியைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) திரு - செல்வம் எனினு மமையும். பிறவிக்கரு என்றது - நல்வினை தீவினைகளை, இருவினையும் பிறவிக்கேதுவாமென்பதை "இருள் சேரிருவினையுஞ் சேராவிறைவன், பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்னுந் திருக்குறளானுமுணர்க. (உ)

அரிக்கும்பிரமற்குமல்லா தமேதவர்கட்குந்
தெரிக்கும்படித்தன் றிநின்றசிவம்வந்துநம்மை
யுருக்கும்பணிகொள்ளுமென்பதுங்கேட்டுலகமெல்லாஞ்
சிரிக்குந்திறம்பாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) அரிக்கும் பிரமற்கும் - திருமாலுக்கும் பிரமனுக்கும், அல்லாத தேவர்கட்கும் - அவரையல்லாத மற்றைத் தேவர்களுக்கும், தெரிக்கும்படித்து அன்றி நின்ற - (இன்னபடி யென்று) தெரிவிக்கும்படியான தன்மையதல்லாமல் நின்ற, சிவம் வந்து - சிவமே வந்து, நம்மை - எம்மை, உருக்கும் பணி கொள்ளும் என்பது கேட்டு - மனமுருக்கும்படியான தொண்டுகொள்ளும் என்பதைக்கேட்டு, உலகம் எல்லாம் - உலகத்தார் எல்லாரும், சிரிக்கும் திறம்பாடி - நகைக்கும் விதத்தைப்பாடி, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) திருமாலுக்கும் பிரமனுக்கும் அறியவொண்ணாத சிவமே நம்மை மனமுருகப்பண்ணித் தொண்டுகொள்ளும் என்பதைக்கேட்டு உலகத்தாரெல்லாரும் சிரிக்கும்படியைப் பாடி யாம் தெள்ளேணம் அயர்துமோ என்பது.

(வி - ரை.) அல்லாததேவர் - இந்திரன் முதலானோர். உருக்கும் பணி கொள்ளும் என்பதற்கு மனத்தையுருகப்பண்ணும், தொண்டுகொள்ளும் என்றுரைத்தலுமாம். உலகம் என்றது உலகத்திலுள்ளாரை. தெரிவிக்குமென்பது தெரிக்குமெனத் தொக்குநின்றது. (௩)

அவமாயதேவரவகதியிலழுந்தாமே
பவமாயங்காத்தென்னையாண்டுகொண்டபரஞ்சோதி
நவமாயசெஞ்சுடர்நல்குதலுநாமொழிந்து
சிவமானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) அவம் ஆய தேவர் - வீணாகிய தேவரது, அவகதியில் அழுந்தாமே - பயனற்ற கதிகளிற் சேராமல், பவம் மாயம் காத்து - பிறவிமாயத்தைத் தடுத்து, என்னை ஆண்டுகொண்ட - என்னை அடிமைகொண்டருளின, பரஞ்சோதி - பரஞ்சுடரானது, நவம் ஆய - நூதனமாகிய, செம்மைசுடர் நல்குதலும் - செவ்விய தேஜஸை கிருபைசெய்தலும், நாம் ஒழிந்து - அச்சம் நீங்கி, சிவம் ஆன ஆறு - சிவமான விதத்தை, பாடி - பாடி, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) வீண் தெய்வங்களின் துர்க்கதிகளிற் செல்லாமல் என் பிறப்பொழித்து யாட்கொண்டருளின பரஞ்சோதி எனக்குக் கிருபைசெய்தலும் அச்சமற்றுச் சிவமான விதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) பரஞ்சோதி, செஞ்சுடர் இரண்டும் சிவபெருமானைக்குறித்ததெனக் கோடலுமாம். நாமொழிந்து என்பதற்கு நாம் என்னும் சீவத்துவம் ஒழிந்து எனினுமாம். நாம் - அச்சமெனினுமமையும். (௪)

அருமந்ததேவரயன்றிருமாற்கரியசிவ
முருவந்துபூதலத்தோருகப்பெய்தக்கொண்டருளிக்
கருவெந்துவீழக்கடைக்கணித்தென்னுளம்புகுந்த
திருவந்தவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) அருமந்த - அரிய மருந்துபோன்ற, தேவர் - தேவர்கள், அயன் - பிரமன், திருமாற்கு - திருமால் என்னும் இவர்களுக்கு, அரிய-அருமையாகிய, சிவம் - சிவமானது, உரு வந்து-உருவோடு எழுந்தருளி, பூதலத்தோர்-நிலவுலகத்தார், உகப்பு எய்த - களிப்படைய, கொண்டு அருளி - எம்மை யடிமைகொண்டருளி, கருவெந்துவீழ - என் பிறவித்தொடர் வெந்து வீழும்படி, கடைக்கணித்து - கடைக்கண்ணால் நோக்கி, என் உள்ளம் புகுந்த - என் மனத்திற்புகுந்ததனால், திருவந்த ஆறு பாடி - மேன்மையுண்டான விதத்தைப்பாடி, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) பிரம விட்டுணுக்களுக்கும் அரிதாகிய சிவபெருமான் உலகத்தார்களிக்க எம்மை யடிமைகொண்ட மேன்மையைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) அருமந்த தேவர் என்பதற்கு-அருமந்த தேவராகிய எனப்பொருள்கூறி அயன் திருமால் என்பவர்க்கு விசேடணமாக்கினுமமையும். அருமந்த, இது அருமருந்தனைய என்பதின் மரூஉ. மருந்து - அமிர்தம். வெந்துவீழ என்றமைக்கேற்ப - பிறவியைக் காடாக வுருவகித்தார். (௫)

அரையாடுநாகமசைத்தபிரானவனியின்மேல்
வரையாடுமங்கைதன்பங்கொடும்வந்தாண்டதிற
முரையாடவுள்ளொளியாடவொண்மாமலர்க்கண்களினீர்த்
திரையாடுமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) அரை - திருவரையில், ஆடும் நாகம்-படம்விரித்து ஆடுமியல்புள்ள நாகத்தை, அசைத்தபிரான்-நாணாகக் கட்டினபிரான், அவனியின்மேல்-பூமியின்மீது, வரை ஆடும் மங்கை தன் பங்கொடும் - மலைமகளாகிய உமாதேவி பாகத்தோடும், வந்து ஆண்ட - வந்தாண்டருளின, திறம் - விதத்தை, உரை ஆட - சொல்லவும், உள் ஒளி ஆட - எம்மனத்தின்கண் ஒளி விளங்கவும், ஒள்-ஒட்பமாகிய, மா மலர் கண்களில் - அழகியதாமரை மலர்போலும் கண்களில், நீர் - நீரானது, திரை ஆடும் ஆறு பாடி - அலைவீசும் விதத்தைப்பாடி, நாம் - யாம், தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) திருவரையில் பாம்பைக்கச்சையாகக் கட்டின சிவபெருமான் பூமியின்மீது உமாதேவிபாகனுயெழுந்தருளி எம்மையாண்டருளின விதத்தைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) அசைத்தல் - கட்டுதல். வரை - மலை, உரையாட என்பதற்கு சொல்தடுமாற எனினுமாம். நாகமென்றது தாருகவன முனிவர்களால் விடுக்கப்பட்ட கரும்பாம்பினை. (௬)

ஆவாவரியயனிந்திரன்வானோர்க்கரியசிவன்
வாவாவென்றென்னையும்பூதலத்தேவலித்தாண்டுகொண்டான்
பூவாரடிச்சுவடென்றலைமேற்பொறித்தலுமே
தேவானவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) ஆவா - அந்தோ, அரி - திருமால், அயன் - பிரமன், இந்திரன் - இந்திரன், வானோர்க்கு - மற்றைத் தேவர்கள் ஆகிய இவர்களுக்கு, அரிய - அருமையாகிய, சிவன் - சிவபெருமான், வாவா என்று - வருக வருகவென்று, என்னையும் - ஒன்றுக்கும் பற்றாத அடியேனையும், பூதலத்தே - இந்நிலவுலகத்தின் கண்ணே, வலித்து ஆண்டுகொண்டான் - வலியவந்து ஆட்கொண்டருளி, பூ ஆர் - தாமரை மலர்போன்ற, அடிசுவடு - திருவடிச் சுவட்டை, என் தலைமேல் - என் சிரத்தின்மீது, பொறித்தலும் - நாட்டுதலும், தே ஆன ஆறுபாடி - எனக்குத் தெய்வத்தன்மை யுண்டான விதத்தைப்பாடி, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) திருமால் பிரமன் முதலிய தேவர்களுக்குங் காணுதற் கருமையாகிய சிவபெருமான் என்னை வலியவந்தாண்டருளித் தன் திருவடியை என் சிரத்திற் சூட்டுதலும் எனக்குத் தெய்வத்தன்மையுண்டான விதத்தைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) ஆவா - இரக்கக்குறிப்பு. பொறித்தல் - பதியவைத்தல். (எ)

கறங்கோலைபோல்வதோர்காயப்பிறப்போடிறப்பென்னு
மறம்பாவமென்றிரண்டச்சந்தவிர்த்தென்னையாண்டுகொண்டான்
மறந்தேயுந்தன்கழனான்மறவாவண்ணநல்கியவத்
திறம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) கறங்கு ஓலை போல்வது - சுழலுகிற சுருளோலைபோல்வதாகிய, ஓர் - ஒப்பற்ற, காயம்பிறப்போடு - உடம்பின் தோற்றத்துடன், இறப்பு என்னும் - கேடு என்கிற, அறம் பாவம் என்ற - புண்ணியபாவம் என்கிற, இரண்டு அச்சம் தவிர்த்து - இரண்டு பயங்களையும் நீக்கி, என்னை ஆண்டு கொண்டான் - என்னை அடிமைகொண்டருளினன், மறந்தேயும் - மறந்தாயினும், தன் கழல் - அவனது திருவடியை, நான் மறவா வண்ணம்-நான் மறவாதவிதத்தை, நல்கிய - அருளிய, அதிறம் பாடல்பாடி-அந்தப் பெருங்குணத்தைப் பாடலாகப் பாடி, நாம் - யாம், தெள்ளேணங் கொட்டாமோ-தெள்ளேணம் கொட்டுவோம்.

(க - ரை.) சுருளோலைபோற் சுழல்கின்ற பிறப்பிறப்பென்னுமச்சமொழித்தென்னை யாண்டுகொண்ட சிவபிரான் தன் திருவடியை நான் மறவா வண்ணம் திருவருள்புரிந்த விதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) என்ற இரண்டு என்றிரண்டெனத் தொகுத்தது. புண்ணிய பாவங்களே பிறப்பிறப்புக்களுக்குக் காரணமாதலால் "பிறப்போ டிறப்பென்னு மறம்பாவம்" என்றார். (அ)

கன்னாருரித்தென்னவென்னையுந் தன்கருணையினாற்
பொன்னார்கழல்பணித்தாண்டபிரான்புகழ்பாடி
மின்னேர் நுடங்கிடைச்செந்துவர்வாய்வெண்ணகையீர்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) கல் - கல்லில், நார் உரித்தென்ன - நாரையுரித்தாற்போல, என்னையும் - (மனவலியனாகிய) அடியேனையும், தன் கருணையினால் - தன் கிருபையினால், பொன் ஆர் கழல் பணித்து - பொன்போலும் அருமையாகிய திருவடியை வணங்குவித்து, ஆண்ட பிரான் - ஆண்டருளின உபகாரசீலனது, புகழ் பாடி - புகழைப்பாடி, மின் நேர் - மின்னற்கொடியை நிகர்த்த, நுடங்கு இடை - துவள்கின்ற இடையினையும், செம் துவர் வாய் - செம்மையாகிய பவளம்போலும் அதரத்தையும், வெள் நகையீர் - வெள்ளிய முறுவலையுமுடைய மாதர்களே, தென்னா தென்னா என்று - தென்னா தென்னாவென்று, தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) கல்லிலே நார் உரித்தாற்போல என்னைத் தன் கருணையினால் ஆண்டுகொண்ட சிவபெருமானது பெரும்புகழைப் பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) 'கன்னாருரித்தென்ன' என்றது அரிய செயலுக்கெடுத்துக் காட்டுவதோருவமை. மின் ஏர் எனப்பிரித்து மின்னினது அழகைக்கொண்ட எனினுமாம். (க)

கனவேயுந்தேவர்கள்காண்பரியகனைகழலோன்
புனவேயனவளைத்தோளியொடும்புகுந்தருளி
நனவேயெனைப்பிடித்தாட்கொண்டவாநயந்துநெஞ்சம்
சினவேற்கணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) கனவேயும் - கனவிலாயினும், தேவர்கள் காண்பு அரிய - தேவர்கள் காணுதல் அருமையாகிய, கனை கழலோன் - சத்திக்கின்ற வீரக்கழலைத் தரித்த திருவடியையுடையவன், புனம் வேய் அன்ன - காட்டில் வளரும் மூங்கிலை நிகர்த்த, வளை - தொடியணிந்த, தோளியொடும் - தோள்களையுடையவளாகிய உமாதேவியோடும், புகுந்தருளி - எழுந்தருளி, நனவே - நனவின்கண்ணே, என்னை பிடித்து - என்னைப்பற்றி, ஆட்கொண்ட ஆறு - ஆண்டுகொண்ட விதத்தை, நெஞ்சம் நயந்து - மனத்தால் விரும்பி, சினம் வேல் கண்-கோபத்தை யுடைய வேல் போன்ற கண்களில், நீர் மல்க - நீர் நிறைய, தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) தேவர்கள் கனவினுங் காண்பதற்கரிதாகிய திருவடியையுடைய சிவபெருமான், உமாதேவியோடு நனவின்கண்ணே யெழுந்தருளி யென்னை வலிந்தாண்டுகொண்ட விதத்தை விரும்பி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) நனவு - சாக்கிராவத்தை. நயத்தல் -விரும்புதல். (௰)

கயன்மாண்டகண்ணிதன்பங்கனெனைக்கலந்தாண்டலுமே
யயன்மாண்டருவினைச்சுற்றமுமாண்டவனியின்மேன்
மயன்மாண்டுமற்றுள்ளவாசகமாண்டென்னுடைய
செயன்மாண்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) கயல் - சேற்கெண்டையைப்போன்ற, மாண்ட - மாட்சிமைப்பட்ட, கண்ணிதன் பங்கன் - கண்களையுடையவளாகிய உமாதேவிபாகன், என்னை கலந்து ஆண்டலும் - என்னை வலியவந்து கூடி ஆண்டருளுதலும், அயல்மாண்டு - அயலாரொழியப்பெற்று, அரு வினை சுற்றமும் மாண்டு - அரியவினையத்தான் வந்துகூடின உறவு அற்று, அவனியின்மேல் மயல்மாண்டு - பூமியின்மீதுள்ள ஆசாபாசங்களும் அற்று, மற்று உள்ள வாசகம் மாண்டு - மற்றுமுள்ள சொற்கள் அற்று, என்னுடைய செயல்மாண்டஆறு பாடி - என்னுடைய செய்கையும் அற்ற விதத்தைப்பாடி, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம். எ - று.

(க - ரை.) உமதேவி பங்கனுகிய சிவபிரான் என்னை வலிய வந்தாண்டருளுதலும், பகையுறவு முதலாயின வொழிந்தவிதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம் என்பது.

(வி - ரை.) சுற்றம் அடுத்து வருதலால் அயன்மை பகைமைக்காயிற்று.()

முத்திக்குழன்றுமுனிவர்குழாநனிவாட
வத்திக்கருளியடியேனையாண்டுகொண்டு
பத்திக்கடலுட்பதித்தபரஞ்சோதி
தித்திக்குமாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப - ரை.) முனிவர் குழாம் - பற்றற்ற முனிவர் கூட்டங்கள், முத்திக்கு உழன்று - மோட்சத்தின் பொருட்டு உழன்று, நனிவாட - மிகவும் வாடாநிற்க, அத்திக்கு அருளி - யானைக்கு அருள்செய்து, அடியேனை ஆண்டுகொண்டு - அடியேனையும் ஆண்டுகொண்டருளி, பத்திக்கடலுள் - பத்தியாகிய கடலில், பதித்த - அழுந்துவித்த, பரஞ்சோதி - பரஞ்சுடர், தித்திக்கும் ஆறுபாடி - எமக்கு இனிக்கும் விதத்தைப்பாடி, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் கொட்டுவோம்.

(க - ரை.) முனிவர்கள் முத்தியை விரும்பி யுழலாநிற்க, யானைக்கருளி என்னையும் ஆண்டுகொண்டருளி பத்திக்கடலுள் அழுந்துவித்த சிவபெருமான் எனக்கு இனிக்கும் விதத்தைப்பாடி நாம் தெள்ளேணம் கொட்டுவோம்என்பது.

(வி - ரை.) அத்திக்கருளினது திருவானைக்காவில். அல்லது திருக்காளத்தியிலெனினுமாம். பத்திக்கடல் என்றமையால் பதித்த என்பதற்கு அழுந்துவித்த என்றுரைக்கப்பட்டது. (க௨)

பார்பாடும்பாதாளர்பாடும்விண்ணோர்தம்பாடு
மார்பாடுஞ்சாராவகையருளியாண்டுகொண்ட

நேர்பாடல்பாடிநினைப்பரியதனிப்பெரியோன்
சீர்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) பார்பாடும் - பூலோகத்தாரிடத்தும், பாதாளர்பாடும் - பாதாள லோகத்தாரிடத்தும், விண்ணோர்பாடும் - தேவலோகத்தாரிடத்தும், ஆர் பாடும் - எவரிடத்திலும், சாராவகை - (சென்று) சேராதவகையினை, அருளி - திருவைசெய்து, ஆண்டுகொண்ட - அடிமையாக்கிக் கொண்டருளின, நேர்பு - நேர்ச்சியாகிய, ஆடல்பாடி - திருவானந்தக் கூத்தைப்பாடி, நினைப்பு - நினைப் பதற்கு, அரிய - அரிமையாகிய, தனி - நிகரற்ற, பெரியோன் - பெருமையை யுடைய சிவபெருமானது, சீர்பாடல்பாடி - அருமைப் பாக்களைப்பாடி, நாம் - யாம், தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்துமோ, எ-று.

(க-ரை.) பூலோகமுதலிய மூன்றிடத்துஞ்சென்று பிறவாமல் அடியேனை யாட்கொண்டருளின பெருங்கருணையையுடைய சிவபெருமானது திருவிளை யாடலையும், மகிமைதங்கிய பாக்களைப்பாடி நாம் தெள்ளேணம் அயர்துமோ என்பது.

(வி-ரை.) பாடு - ஏழனுருபு, "பார்பாடும் பாதாளர்பாடும் விண்ணோர்தம் பாடு மார்பாடுஞ் சாராவகையருளி" என்றது, தேவகதி, நரககதி, மக்கட்கதி என்னும் முக்கதியினுஞ்சென் றுழலாமலாண்டருளி என்றபடி. (கரு)

மாலேபிரமனேமற்றொழிந்ததேவர்களே
நூலேநுழைவரியானுண்ணியனாய்வந்தடியேன்
பாலேபுகுந்துபரிந்துருக்கும்பாவகத்தாற்
சேலேர்கண்ணீர்மல்கத்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) மாலே - விட்டுணுவும், பிரமனே - அயனும், ஒழிந்த - மற்று முள்ள, தேவர்களே - தேவர்களும், நூலே - நூல்களும், நுழைவு - மட்டுக் கிட்டுதல், அரியான் - அருமையானவன், நுண்ணியன் ஆய் - எளியவனாய், வந்து - கைலையைவிட்டெழுந்தருளி, அடியேன்பால் - அடியேன்பக்கல், புகு ந்து - வந்து, பரிந்து - அன்பின் மிகுதியால் இரங்கி, உருக்கும் - மனமுருகு கின்ற, பாவகத்தால் - (அவனது) பெருமைதங்கிய இயல்பால், சேல் - சேற் கெண்டையைப்போன்ற, ஏர் - அழகாகிய, கண் - (இரண்டு) கண்களில், நீர் - ஜலம், மல்க - ததும்ப, தெள்ளேணங்கொட்டாமோ - தெள்ளேணம் அயர்து மோ, எ-று.

(க-ரை.) விட்டுணு முதலியோருக்கும் தேடுதற்கரியோனாகிய சிவபெரு மான் அடியேன்பால் எழுந்தருளி, என் மனமுருகச்செய்த பெருங்கிருபையைக் குறித்து இருகண்களிலிருந்து ஜலம் ததும்பாநிற்க நாம் தெள்ளேணம் அயர் துமோ, என்பது.

(வி-ரை.) மாலே முதலியவற்றின் ஏகாரங்கள் எண்ணுப் பொருளென. பாவகம் - பெருங்குணம். (கருணை.) (கச)

உருகிப்பெருகியுளங்குளிரமுகந்துகொண்டு
பருகற்கினியபரங்கருணைத்தடங்கடலை
மருவித்திகழ்தென்னன்வார்கழலேநினைந்தடியோந்
திருவைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) உருகிபெருகி - உருகிப்பெருக்கமடைந்து, உள்ளம்குளிர - மனங்குளிர, முகந்துகொண்டு - மொண்டுகொண்டு, பருகற்கு-பருகுதற்கு, இனிய-இனிமையாகிய, பரங்கருணை - பெருங்கருணை, தடம்கடலை - அகண்டகடல் போல்பவனை, மருவி - சேர்ந்து, தென்னன் - அத்தென்னவனது, வார்கழலே - பெருமைதங்கிய அடிகளையே, நினைந்து - எண்ணி, அடியோம்-அடியோமுடைய, திருவைபரவி - அடையும்பாக்கியத்தைத் துதிசெய்து, நாம் - யாம், தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்ந்துமோ, எ - று.

(க-ரை.) உருகுதல்முதலியசெய்து பருகுதற் கினிதாகியும் பெருந்தகைக் கருணைக் கடலாகிய சிவபெருமானது அழகிய அடிக ளிரண்டினையே உன்னி, அடியோமுடைய அழியாப் பெருஞ்செல்வத்தைப் போற்றிசெய்து நாம் தெள்ளேணம் அயர்துமோ, என்பது.

(வி-ரை.) "கழலே நினைந்தடியோந் திருவைப்பரவி" என்றமையால் கழலை நினைத்தற்குக் காரணம் திருவென்றாயிற்று. திரு - புண்ணியம். (கரு)

புத்தன்புரந்தராதியயன்மால்போற்றிசெயும்
பித்தன்பெருந்துறைமேயபிரான்பிறப்பறுத்த
வத்தனணிதில்லையம்பலவனருட்கழல்கள்
சித்தம்புகுந்தவாதெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) புத்தன் - எப்போதும் புதுமையை யுடையவன், புரந்தர் - தேவர்கோனாகிய இந்திரன், ஆதிய - (ஆகிய) தேவரும், அயன் - பிரமதேவனும், மால் — திருமாலும், போற்றிசெயும் வணங்கி துதிசெய்கின்ற, பித்தன் - பிச்சுபிடித்தவன், பெருந்துறை-திருப்பெருந் துறையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தின் கண்ணே, மேய — கருணைகூர்ந்து எழுந்தருளிய, பிரான் - (அடியவர்கள் துயர்தனை வேறறக் களைந்து இரக்ஷிக்கும்) உபகாரசீலன், பிறப்பு - (எமது) பிறவித்தளையை, அறுத்த - சேதித்த, அத்தன் - (பெருங் கருணைக்கடலாகிய) எமது தந்தை, அணி - பலவித ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட, தில்லை அம்பலவன் - திருத்தில்லை அம்பலப்பதியை யுடையவன், அருள் கழல்கள்-அருளுருவமாகிய திருவடிகள், சித்தம் புகுந்து ஆறு - எம்மனம் புகுந்த விதத்தைக் குறித்து, தெள்ளேணம் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்துமோ, எ - று.

(க-ரை.) இந்திரன் முதலிய யாவரும் வணங்குகின்றவனும், திவ்விய க்ஷேத்திரமாகிய திருப்பெருந்துறையை உடையவனும், எமது பிறப்பையொழித்த அத்தனும், திருச்சிற்றம்பலப் பதியையுடையவனும் ஆகிய சிவபெருமானது அருளாகிய திருவடிகள் எமது மனத்திற்புகுந்த விதத்தையுன்னி, நாம் தெள்ளேணம் அயர்துமோ, என்பது.

(வி-ரை.) புத்தன்-புதுமை என்னும் பண்புப்பெயரடியாகப்பிறந்தபெயர்.

உவலைச்சமயங்களொவ்வாதசாத்திரமாஞ்
சவலைக்கடலுளனாய்க்கிடந்துதடுமாறுங்
கவலைக்கெடுத்துக்கழலிணைகடந்தருளுஞ்
செயலைப்பரவிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) உவலை - பொய்யாகிய, சமயங்கள் - சமயங்களும், ஒவ்வாத - ஒன்றுக் கொன்று பொருத்தமில்லாத, சாத்திரம் - சாத்திரங்களும், ஆம் - ஆகிய, சவலை கடல் உளன் ஆய் கிடந்து - மெலிவுக்குக் காரணமாகிய கடலுட்பட்டவனாகிக் கிடந்து, தடுமாறும் - தத்தளிக்கின்ற, கவலை-பலவித கவலையை, கெடுத்து - அதோகதப் படுத்தி, கழல் இணைகள் தந்து - திவ்விய இரண்டு திருப்பாதங்களையுங் கொடுத்து, அருளும் - தந்தருளுகிற, செயலை - (சிவபெருமானது கிருபாநோக்கத்தின்) செயல்களை, பரவி - (உள்ளன்போடு) போற்றி செய்து, நாம் - யாம், தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்துமோ, எ - று.

(க-ரை.) பொய்ச்சமயமுதலிய கடலு ளழுந்தித் தடுமாறுகின்ற சிந்தையை விலக்கி, தன் அருமைத் திருவடிக ளிரண்டையும் எனக்குக் கொடுத்தருளின சிவபெருமானது திருவருட் பெருஞ்செயலைத் துதித்து நாம் தெள்ளேணம் அயர்துமோ, என்பது.

(வி-ரை.) உவலை - பொய். கவல் - கவற்சி. (௧௭)

வான்கெட்டுமாருதமாய்ந்தழனீர்மண்கெடினுந்
தான்கெட்டலின்றிச்சலிப்பறியாத்தன்மையனுக்
கூன்கெட்டுயிர்கெட்டுணர்வுகெட்டெனுள்ளமும்போய்
நான்கெட்டவாபாடித்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) வான் - ஆகாயமானது, கெட்டு - ஜீரணித்து, மாருதம் - வாயு, மாய்ந்து - அழிந்து, அழல் நீர் - அக்கினியும் ஜலமும், மண் - பூமியும், கெடினும் - அழிந்தாலும், தான் கெட்டல் இன்றி - தான் அழிதலின்றி, சலிப்பு அறியா - சலித்தலைத் தெரியாத, தன்மையனுக்கு - தன்மையை யுடையானுக்கு, ஊன்கெட்டு - திரேகம் அழிந்து, உயிர்கெட்டு - ஆவியொழிந்து, உணர்வு கெட்டு - அறிவழிந்து, என் உள்ளமும் போய் - எனது மனதும் அழிந்து,

நான் கெட்ட - நானும் கெட்ட, ஆறுபாடி - விதத்தைச்செப்பி, தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்துமோ, எ - று.

(க-ரை.) ஆகாயமுதலிய பஞ்ச பூதங்களும் அழிந்த காலத்தும் தான் என்றும் அழியா திருப்பவனுகிய சிவபெருமான் பொருட்டு, என் ஊனுயிர்முதலிய யாவும் அழியப்பெற்ற விதங்களைச்சொல்லி நாம் தெள்ளேணம் அயர்துமோ.

(வி-ரை.) மண்முதலிய நான்கு பூதங்களினும் ஆகாயம் சிறந்தமைப்பற்றி, "வான்" என முதற்கணமைத்தார். நான் என்றது அகங்காரத்தை. (கஅ)

விண்ணோர்முழுமுதல்பாதாளத்தார்வித்து
மண்ணோர்மருந்தயன்மாலுடையவைப்படியோம்
கண்ணாரவந்துநின்றான்கருணைக்கழல்பாடித்
தென்னாதென்னாவென்றுதெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) விண்ணோர் முழுமுதல் - தேவர்கட்கு முழுமுதலோன், பாதாளத்தார்வித்து - பாதாள லோகத்தார்க்கு விதையா யிருப்பவன், மண்ணோர் மருந்து - பூலோகத்தார்க்கு அவுடதமா யிருப்பவன், அயன் - பிரமனும், மால் - விட்டுணுவும், உடைய - தமக்கெனவுடைய, வைப்பு - பொக்கிஷமா யிருப்பவன், அடியோம் கண் ஆர் - அடியேன் இரு கண்களாற் பார்க்க, வந்து நின்றான் - எதிரே அன்புகூர்ந்து நின்றனன், (ஆதலால்) கருணை கழல்பாடி - அவனது பெருங்கருணை வடிவாகிய இரண்டு திருவடிகளையும் துதிசெய்து. தென்னாதென்னா என்று - தென்னா தென்னா வென்று புகழ்ந்து, தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்துமோ, எ - று.

(க-ரை.) தேவர் முதலானோர்க்கு முதல்வனும், பிரம விட்டுணுக்களுக்குப் பொக்கிஷம் போல்பவனும், எமது கட்புலனாய் வந்து நின்றவனும் ஆகிய சிவபெருமானது இரண்டு திருத் தாளிணைப் போற்றி நாம் தெள்ளேணம் அயர்துமோ, என்பது.

(வி-ரை.) முழுமுதல், வித்து, மருந்து, வைப்பு என்று சொல்லப் படுவனாகிய சிவபெருமான் முதற்காரண மென்பதை விளக்க வெழுந்தன. (கக)

குலம்பாடிக்கொக்கிறகும்பாடிக்கோல்வளையா
ணலம்பாடிநஞ்சுண்டவாபாடிநாடோறு
மலம்பார்புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
சிலம்பாடல்பாடிநாந்தெள்ளேணங்கொட்டாமோ.

(ப-ரை.) குலம்பாடி - குலத்தின் மேன்மையைப் புகழ்ந்து, கொக்கு இறகும்பாடி - கொக்கிறகையும் புகழ்ந்து, கோல்வளையாள் - நவமணிகளு மிழைத்த அழகிய வளையல்களை யுடையவளாகிய உமையவளின், நலம்பாடி - நலத்தினைப் புகழ்ந்து, நஞ்சு விஷத்தினை, உண்ட - உட்கொண்ட, ஆறுபாடி -

விதத்தைப் புகழ்ந்து, நாள்தோறும் - தினே தினே, அலம்பு ஆர்புனல் - ஒலித்தலையும் நிறைவையையுமுடைய நீர் ஓடை சூழ்ந்த, தில்லை அம்பலத்தே ஆடுகின்ற - தில்லை யம்பலத்தின் கண்ணே ஆநந்தக் கூத்தாடுகின்ற, சிலம்பு ஆடல் பாடி - சிலம்பு ஆடலைப் புகழ்ந்து, நாம் - யாம், தெள்ளேணங் கொட்டாமோ - தெள்ளேணம் அயர்துமோ, எ - று.

(க-ரை.) இறைவனாகிய பரமசிவனது மேன்மை தங்கிய குணத்தினை நாடோறும் அன்பின் மிகுதியால் புகழ்ந்து துதிசெய்து நாம் தெள்ளேணம் அயர்துமோ, என்பது.

(வி-ரை.) பாடி - புகழ்ந்து. அலம்பு - முதனிலைத் தொழிற் பெயர். ஆடுகின்ற - அடியார்கள் உஜ்ஜீவிக்கும் பொருட்டுத் திருநடனஞ் செய்கின்ற. (உ௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

## திருச்சாழல் பாடிய வரலாறின் சுருக்கம்.

விபூதி ருத்திராக்க தாரணராய்ச்சிவபத்தி, சிவனடியார் பத்திகளிற்சிறந்த ஓர் முதிய தபசியானவர் பூலோகத்தின் கண்ணுள்ள எல்லாத் திவ்ய சிவஸ்தலங்களைத் தரிசிக்க அதி ஆவல் கொண்டவராய்ச் சென்று ஆங்காங்குள்ள சிவ தலங்களைத் தரிசித்துவரும் மார்க்கத்தில் சோழநாட்டிலுள்ள தில்லைமாநகரைக் கண்டு தரிசித்து, பிறகு ஈழநாடடைந்து தான் இருக்குமிடந்தோறும் பொன்னம்பலம் வாழ்க என்று சொல்லிவரும்நாளில், அந்நாட்டிலுள்ள புத்தர் இத்தபசியின் செய்தியை அரசனுக்கு அறிவிக்க, அவ்வரசன் இத்தபசியை வரவழைத்து, நீர் பொன்னம்பலம் என்று சொல்வதற்குக் காரணம் என்னென்று சீற்றத்தால் கேட்க, தபசியானவர் ஏ! அரசனே! சோழநாட்டில் சிதம்பரம் என்னும் ஒரு சிவஸ்தலம் உண்டு; அது முன்னே தில்லைவனம் என்று சொல்லப்பட்டிருந்தது. அதில் உமாதேவியார் காணும்படி சபாநாயகர் நிருத்தம் செய்வார்; மநுநீதிச் சக்கிரவர்த்தியின் திருக்குமாரனாகிய இரணியவன்மனுடைய தேகத்திலிருந்த பெருங்குட்ட ரோகமானது தண்ணிடத்தில் மூழ்கினவுடனே நீங்கின சிவகங்கை என்னும் ஒரு தீர்த்தவிசேடமும் அத்தலத்தில் உண்டு; அத்தீர்த்தத்தில் மூழ்கினவர்கள் மறுபடியும் பிறவார்கள். அத்தலத்தில் வந்து சிவபெருமானைத் திரிகரண சுத்தியுடன் வணங்கி, ஒருதரம் பொன்னம்பலம் என்று சொன்னால் ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை இருபத்தோராயிரத்தறுநூறு தரம் சொல்வதற்கு நிகராகும் என்றார். அரசனுக்கு அருகே இருந்து கேட்டிருந்த

புத்தகுருவானவன் அதிகோபாவேசத்தோடு ஏ ! பாஷாண்டியே ! சற்று கவனிப்பாயாக. பிடகாகமம் மூன்றும் சொன்ன தலைவனல்லாமல் வேறு ஓர் தெய்வமுண்டோ ! என்று அதட்டி, அத்தில்லை நகருக்குப் போய் வாதிட்டுவென்று அத்தலத்தை எமது புத்ததேவனுடைய கோயிலாகும்படி மூன்றுதினத்தில் செய்கிறேனென்று சிவிகையிலேறி தன் அடியார் கூட்டத்துடன் சிதம்பரத்துக்குப்போனான். புத்த அரசனும் தன் புதல்விக்கு முன்னமேயிருந்த ஊமைத்தன்மையை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று நினைத்துத் தன் சேனைகளுடன் சிதம்பரத்தை யடைந்தான். இந்தப் புத்தராசன் வருவதற்கு முன்னே வந்த புத்தகுருவானவன் பரமசிவனது ஆலயத்தில் ஓர் மண்டபத்தில் வந்திருந்தான். பிறகு வந்த புத்த அரசனும் அவனை வணங்கித்துதித்து அவனுடனிருந்தான். இவர்கள் வந்திருப்பதை அவ்விடத்துக் கோயிற் பணிவிடை செய்பவர்கள் கண்டு, புத்தனே ! எமது கடவுளுடைய ஆலயத்தைவிட்டுச் சீக்கிரம் ஓடிப்போவாய் என்று சொன்னார்கள். புத்தகுருவானவன் யாம்போவதில்லை, எங்கள் புத்தனே தெய்வம் வேறு தெய்வமில்லை யென்று நிலைநாட்ட வந்தோம் என்றான். இதைக்கேட்ட பணிவிடைக்காரர்கள் ஈதென்ன விபத்து என்று விரைந்துபோய்த் தில்லை மூவாயிரவர்க்கும் பரிகலத்தார்க்கும் இத்தகையசெய்தியைத் தெரிவித்தார்கள். அவர்கள் உடனே ஓலை எழுதியனுப்பி சோழராசனையும், சில அறிவிலுயர்ந்த வேதியர்களையும், தபோதனர்களையும், கலைஞானியர்களையும், வரவழைத்து அங்கு கூட்டமிட்டார்கள். அன்று இரவில் எல்லாருடைய கனவிலும் சபாநாயகர் சென்று நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சவேண்டாம், நமது தில்லை நகரத்து எல்லையின்கண் வந்திருக்கும் திருவாதவூரனென்னும் மாணிக்கவாசகனை இங்கு வரவழைத்தால் அவன் வந்து அப்புத்தரை வாது செய்து வெல்லுவான் என்று வாக்களித்து மறைந்தவுடனே, தில்லை மூவாயிரவரும் விழித்துக்கொண்டு, சபாநாயகர் சொன்னபடியே மாணிக்கவாசகரைக் கண்டு இச்செய்தியாவையும் தெரிவித்த உடனே பௌத்தர்கள் இருந்த மண்டபத்தில் வந்து அவர்களைப்பார்க்க விருப்பமில்லாதவராய்த் திரைபோடுவித்துக் கொண்டு, ஆசனத்திலெழுந்தருளியிருந்து அப்புத்தகுருவை வாதில்வென்று, அப்புத்தர்களெல்லோரையும் ஊமைகளாகும்படி செய்ய, அதுகண்ட ஈழதேசத்தரசன் வியப்புற்று மாணிக்கவாசகரை நோக்கி பேசிக்கொண்டிருந்த புத்தர்களை ஊமைகளாகச்செய்தீர், ஊமையாயிருக்கிற என் புதல்வியைப் பேசும்படி செய்வீராகில் நானும் உமக்கு அடிமையாவேன் என்று சொல்ல, அவ்வாறே அவளை அழைப்பித்து அருகே இருத்திக்கொண்டு பெண்ணே ! இந்தப்புத்தன் பேசுகிற தர்க்கங்களுக்கெல்லாம் நீயே விடைசொல்லக் கடவாய் என்றார். அவ்வாறே அவளும் விடைசொன்னாள். அவ்வினுவிடை மங்கையர் செய்யும் திருச்சாழல் விளையாட்டாக மாணிக்கவாசகர் பாடலாகச்செய்தருளினார்.

திருச்சிற்றம்பலம்.

சம்பூரணம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருச்சாழல்.

சிவனுடையகாருணியம்.

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூசுவதும்வெண்ணீறுபூண்பதுவும்பொங்கரவம்
பேசுவதுந்திருவாயான்மறைபோலுங்காணேடீ
பூசுவதும்பேசுவதும்பூண்பதுவுங்கொண்டென்னை
யீசனவனெவ்வுயிர்க்குமியல்பானான்சாழலோ.

(ப-ரை.) பூசுவதும் வெண்ணீறு - திருமேனியிற் பூசிக்கோள்வதும் அழகிய வெண்ணீறு, பூண்பதுவும் - திருமேனியிற் றரிப்பதுவும், பொங்கு - சீறுகின்ற, அரவம் - பாம்பு, திருவாயால் பேசுவதும் - அழகிய வாயினாற் சொல்வதும், மறைபோலும் - வேதம்போலும், காணேடீ - தோன்றேனடி !

(ஊ-பொ-உ-ம்) பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டு - வெண்ணீறு பூசுவதையும், சொல்வதையும், அரவம் பூண்பதையும் கொண்டதனால், என்னை - யாது பயன் ! ஈசன் அவன் - ஜெகதீசனாகிய அவன், எவ்வுயிர்க்கும்- எவ்வகைப்பட்ட ஜீவராசிகட்கும், இயல்பு ஆனான் - இயற்கனவே இதஞ்செய்பவனா யிருக்கிறான், சாழலோ—,எ-று.

(க-ரை.) சாழல் - மக்களின் திருவிளையாட்டினொன்று. இது ஈழநாட்டரசனது வாய்பேசா ஊமைப்பெண்ணை வாய்திறக்கப் பேசுவித்தபோது மறுமொழிசொல்லியது. காணேடீ என்பது புத்தன் வினா. சாழலோ என்பது ஊமைப்பெண் விடை.

என்னப்பனெம்பிரானெல்லார்க்குந்தானீசன்
துன்னம்பெய்கோவணமாக்கொள்ளுமதுவென்னேடீ
மன்னுகலைதுன்னுபொருண்மறைநான்கேவான்சரடாத்
தன்னையேகோவணமாச்சாத்தினன்காண்சாழலோ.

(ப-ரை.) என்னப்பன் - எனதுதந்தை, எம்பிரான் - எனதுபிரான், எல்லார்க்கும் - யாவருக்கும், தான் - தானே, ஈசன்-ஜெகதீசனாயிருப்பவன், (அப்

டேர்க்கொற்ற பரமன்) துன்னம்-தைத்த துணியை, பெய்கோவணம் ஆ-உடுப்பதற்குக் கோவணமாக, கொள்ளுமது - ஏற்றுக்கொள்ளுகின்ற தன்மை, என்னேடீ - யாதேடி!

(ஊ-பெ-உ-ம்) மன்னுகலை - நிலைபெற்றோங்குங் கலைகளும், துன்னு - பெருமை தங்கிய, பொருள்-பலவித பொருள்களடங்கின, மறைநான்கு-வேதங்கள் நான்கும், வான் சரடு ஆ - மேன்பாடு பொருந்திய சரடாக, தன்னையே-அதனையே, கோவணம் ஆ சாத்தினன் - கோவணமாகத்தரித்துக்கொண்டருளினன் - சாழலோ—,எ-று.

(வி-ரை.) துன்னம் - தைத்தல். (உ

கோயில்சுடுகாடுகொல்புலித்தோனல்லாடை
தாயுமிலிதந்தையிலிதான்றனியன்காணேடி
தாயுமிலிதந்தையிலிதான்றனியனாயிடினுங்
காயிலுலகனைத்துங்கற்பொடிகாண்சாழலோ.

(ப-ரை.) கோயில் - (இறைவனாகிய பரமசிவனுக்கு) வாசத்தலமாயிருப்பது, சுடுகாடு-சுடலை, நல் ஆடை-மேன்மை தங்கிய ஆடையாயிருப்பது,கொல்-கொல்லப்படுகின்ற, புலிதோல் - (ஊன் நீங்கிய) புலியின் தோல், தாயும்-(தன்னைப்) பெற்றதாயும், இலி - இல்லாதவன், தந்தை - பிதாவும், இலி - இல்லாதவன், தான் - தான், தனியன் - (ஏகவஸ்துவாய்) தனியே இருப்பவன், காணேடீ - பாரேடீ!

(ஊள-பெ-உ-ம்.) தாயும்தந்தையும் இலி-(அவ்வாறு) மாதாபிதாக்களையும் இல்லாதவனாய், தான் தனியன் ஆயிடினும் - தான்வேறொரு சகாயமில்லாதவனாயினும், காயின் - (அவன்) ஒருகாலத்திற் கோபித்தால், உலகு அனைத்தும்-யாவத்து உலகங்களும், கற்பொடி - கற்றூளாய் விடும் சாழலோ, எ-று.

(வி - ரை.) தாயும் என்ற உம்மை தந்தை என்பதனோடு சேர்க்கப்பட்டது. காயில் - கோபித்தல். (ஙு)

அயனையநங்கனையந்தகனைச்சந்திரனை
வயனங்கண்மாயாவடுச்செய்தான்காணேடீ
நயனங்கண்மூன்றுடையநாயகனே தண்டித்தாற்
சயமன்றோவானவர்க்குத்தாழ்குழலாய்சாழலோ.

(ப-ரை.) அயனை - பிரமனையும், அநங்கனை - (கருப்பு வில்லோனாகிய) மன்மதனையும், அந்தகனை - (தென்திசையோனாகிய) யமனையும், சந்திரனை - சந்திரனையும், வயனங்கள் மாயா - (யாதொரு) வகைகள் கெடாத, வடுசெய்தான் - (என்நாளு மிருக்க) வடுவுண்டாக்கினன், காணேடீ - பாரேடீ!

(ஊ-பெ-உ-ம்) நயனங்கள் மூன்று உடைய - மூன்று நேத்திரங்களு முடைய, நாயகனே - தலைவனு யிருப்பவனே, தண்டித்தால் - கண்டித்தால், வானவர்க்கு - தேவர்களுக்கு, சயம் அன்றே - (அவை) வெற்றியல்லவோ! தார்குழலாய் சாழலோ—, எ - று.

(வி-ரை.) வயனம் - வகை. வடு - தழும்பு. சயம் - வெற்றி. வானவர் - தேவர். (தெய்வலோகத்தில் வாசம்செய்வோர்.) (சு)

தக்கனையுமெச்சனையுந்தலையறுத்துத்தேவர்கணந்
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்ததுதானென்னேடீ
தொக்கனவந்தவர்தம்மைத்தொலைத்தருளியருள்கொடுத்தங்
கெச்சனுக்குமிகைத்தலைமற்றருளினன்காண்சாழலோ.

(ப-ரை) தக்கனையும் - தக்கனையும், எச்சனையும் - யாக கர்த்தாவையும், தலை அறுத்து - தலையைக்கொய்து, தொக்கன - சேர்ந்த, தேவர்கணம் - தேவர்கூட்டங்களாய், வந்தவர் தம்மை - வந்து சேர்ந்தவர்களை, தொலைத்தது - அதோகதப்படுத்தினது, என்னேடீ - யாது காரணமடீ ?

(ஊ-பெ-உ-ம்) தொக்கன வந்தவர் தம்மை - (அவ்வாறு) சேர்ந்து வந்த வர்களை, தொலைத்து - அழித்து, அருளி - அருளி, அருள் கொடுத்து - (அப் பேர்க் கொற்றவர்களுக்குக்) கிருபையைச்செய்து, அங்கு - அவ்விடத்தில், எச்சனுக்கு - யாககர்த்தாவுக்கு, மிகைத்தலை அருளினன் - மீளவும் ஆட்டுச்சிர சைக்கொடுத்தான், சாழலோ—, எ - று.

(வி - ரை.) தக்கன் - தக்ஷன் என்னும் வடமொழித்திரிபு. தொலைத்தல் - அழித்தல். மிகைத்தலை என்றது ஆட்டின் தலையை. (ரு)

அலரவனுமாலவனுமறியாமேயழலுருவாய்
நிலமுதற்கீழண்டமுறநின்றதுதானென்னேடீ
நிலமுதற்கீழண்டமுறநின்றிலனேலிருவருந்தஞ்
சலமுகத்தாலாங்காரந்தவிரார்காண்சாழலோ.

(ப - ரை) அலரவனும் - பிரமதேவனும், மாலவனும்-விட்டுணுவும், அறி யாமே - அறியாமல் மயங்க, அழல் - அக்கினி, உரு ஆய் - சொரூபமாகி, கீழ் நிலமுதல் - பாதாளலோக முதலாக, அண்டம் உற-ஆகாயத்தைப்பொருந்தும் படி, நின்றதுதான் - மட்டுப்படாமல் நின்றதற்குக்காரணம், என்னேடீ - அது எதன்பொருட்டடீ ?

(ஊ-பெ-உ-ம்.) கீழ் நில முதல் - அதலசுதலபாதாளமுதலாக, அண்டம் உற - ஆகாயம் வரையிற்றேடும்படி, நின்றிலனேல் - நின்றிலனாயின், இருவ ரும் - இருவர்களும், தம் சலமுகத்தால் - தமது சோபமாகிய வாயினால், ஆங்

காரம் - (தாம் தாம் பெரியவனென்று வாதிட்டுக்கொண்ட) அகங்காரத்தை, தவிரார் - விடார், சாழலோ—, எ - று.

(வி - ரை.) அலர் - மலர். அலரவன் - தாமரைமலரை ஆசனமாகக்கொண்ட பிரமதேவன். சலம் - கோபம். (சு)

மலைமகளையொருபாகம்வைத்தலுமேமற்றொருத்தி
சலமுகத்தாலவன்சடையிற்பாயுமதுவென்னேடீ
சலமுகத்தாலவன்சடையிற்பாய்ந்திலளேற்றரணியெல்லாம்
பிலமுகத்தேபுகப்பாய்ந்துபெருங்கேடாஞ்சாழலோ.

(ப - ரை.) மலைமகளை - பார்வதியை, ஒருபாகம் - ஒருபக்கம், வைத்தலும்-அமைத்தலும், மற்றொருத்தி - வேறொருத்தியாகிய கங்கையை, சலமுகத்தால் - நீருருவத்தோடு, அவன் சடையில்-அப்பரமசிவன் சடைமுடியில், பாயுமது - பாய்வது, என்னேடீ - யாதுகாரணமடி ?

(ஊ-பெ-உ-ம்.) சலமுகத்தால் - ஜல உருவத்தோடு, அவன் சடையில் பாய்ந்திலளேல் - அப்பரமசிவத்தின் சடைமுடியில் பாய்ந்திலளாயின், தரணியெல்லாம் - பூலோகமெல்லாம், பிலமுகத்தே - பாதளத்தின்கண்ணே, புகப் பாய்ந்து - உட்புகும்படி பாய்ந்து, பெருங்கேடு ஆம் - பொல்லாக்கேட்டை விளைவிக்கும், சாழலோ—, எ - று.

(வி - ரை.) சலம்-நீர். முகம்-இவ்விடத்தில் உருவுக்காயிற்று. அவன்சடையிற்பாயும் என்ற குறிப்பால் மற்றொருத்தி என்றது கங்காதேவியைக்குறித்தது.

கோலாலமாகிக்குரைகடல்வாயன்றெழுந்த
வாலாலமுண்டானவன்சதுர் தானென்னேடீ
யாலாலமுண்டிலனேலன்றயன்மாலுள்ளிட்ட
மேலாயதேவரெல்லாம்வீடுவர்காண்சாழலோ.

(ப - ரை.) கோலாலம் ஆகி - கோலாகலம் ஆகி, குரைகடல் வாய் - சப்திக்கின்ற கடலினிடத்தில், அன்று - அக்காலத்திலுண்டாகிய, ஆலாலம் - ஆலகாலவிடத்தை, உண்டான்-உட்கொண்டான், அவன் சதுர் - அப்பரமசிவனது சூது, என்னேடீ - எதுகாரணமேடீ ?

(ஊ-பெ-உ-ம்.) ஆலாலம் உண்டிலனேல் - (அந்நாளிலெழுந்த) ஆலகாலவிடத்தை உட்கொள்ளாவிடின், அன்று - அச்சமயத்தில், அயன் - பிரமன், மால் - விட்டுணு, உள்ளிட்ட - அவ்விருவர்களுள்ளடங்கிய, மேலாய-மேன்மைதங்கிய, தேவர் எல்லாம் - எல்லாத்தேவர்களும், வீடுவர் - மாண்டுபோவார்கள், சாழலோ—, எ - று.

(வி - ரை.) கோலாகலம் - கோலாலம் எனத்தொகுத்தது. இதற்குப் பேரொலி என்றும் பொருள். குரைத்தல் - சப்தித்தல். ஆலாலம் எனத்தொகுத்தது. வீடுதல் - மடிதல். (அ)

தென்பாலுகந்தாடுந்தில்லைச்சிற்றம்பலவன்
பெண்பாலுகந்தான்பெரும்பித்தன்காணேடீ
பெண்பாலுகந்திலனேற்பேதாயிருநிலத்தோர்
விண்பாலியோகெய்திவீடுவர்காண்சாழலோ.

(ப - ரை.) தென்பால் - தென்றிசையில், உகந்து - விரும்பி, ஆடும் - திருநடனம் செய்கின்ற, தில்லைச்சிற்றம்பலவன் - திருச்சிற்றம்பலத்தான், பெண்பால் - பெண்பாகத்தை, உகந்தான் - இச்சித்தான், பெரும்பித்தன் - இவன் பெரியபித்தனனது, காணேடீ! யாதுந்தோன்றேனடீ.

(ஊ-பெ-உ-ம்.) பெண்பால் - பெண்பாகத்தை, உகந்திலனேல் - விருப்பமில்லானாயின், இருநிலத்தோர் - இருநிலத்தோர்கள், பேதுஆய் - பேதமைத் தன்மையுடையராகி, இயோகு-யோகத்தை, எய்தி - பெற்று, விண்பால்-மேலுலகத்தை, வீடுவர் - அடையப்பெறுவர், சாழலோ—, எ - று.

(வி - ரை.) பால் - இடம், இது திக்குக்காயிற்று. பேதாய் என்பதை விளியாக்கி அறிவிலானே எனப்பொருளுரைப்பினுமாம். (க)

தானந்தமில்லான்றனையடைந்தநாயேனை
யானந்தவெள்ளத்தழுத்துவித்தான்காணேடீ
யானந்தவெள்ளத்தழுத்துவித்ததிருவடிகள்
வானுந்துதேவர்கட்கோர்வான்பொருள்காண்சாழலோ.

(ப - ரை.) தான் அந்தம் இல்லான் - தான்முடிவில்லாதவன், தன்னை அடைந்த நாயேனை - தன்னையடைந்த அடிமையை, ஆனந்த வெள்ளத்து-பேரின்பக்கடலில், அழுத்துவித்தான் - அழுந்தச்செய்தான், காணேடீ - யாதுந்தோனேனடீ?

(ஊ-பெ-உ-ம்.) ஆனந்தவெள்ளத்து - பேரின்ப வாழ்வில், அழுத்துவித்த - அழுந்தச்செய்த, திருவடிகள் - திருப்பாதங்கள், வான்உந்து - விண்ணுலகத்தின் கண்ணே வாழாநின்ற, தேவர்கட்கு - தேவர்களுக்கு, ஓர் - ஒரு, வான் பொருள் - வானுலகத்துக்கு மேன்மைதங்கிய பொருளாகும், சாழலோ—, எ - று.

(வி - ரை.) வெள்ளம்-அதிநீர்ப்பெருக்கு, இது இங்குகடலுக்காயிற்று. ()

நங்காயிதென்னதவநரம்போடெலும்பணிந்து
கங்காளந்தோண்மேலேகாதலித்தான்காணேடீ
கங்காளமாமாகேள்காலாந்தரத்திருவர்
தங்காலஞ்செய்யத்தரித்தனன்காண்சாழலோ.

(ப - ரை.) நங்காய் - ஏ பெண்ணே? நரம்போடு-நரம்புகளோடு, எலும்பு-அணிந்த - என்பையுந் தரித்து, தோள்மேலே - புயத்தின்மேலே, கங்காளம்

கங்காளத்தை, காதலித்தான் - (வைக்க) இச்சித்தான், இது என்னதவம் - ஈது ஏதுதவமோ ! காணேடீ - தோணேனடீ !

(ஊ-பெ-உ-ம்.) கங்காளம் - கங்காளம், ஆம் - வந்தடைந்த, ஆறுகேள் - விபரத்தைக்கேள், காலாந்தரத்து - காலபேதத்தால், இருவர் - பிரமவிட்டுணுக் களிருவரும், தம்காலம் செய்ய - தமது காலத்தை முற்றுவிக்க, தரித்தனன் - தரித்துக்கொண்டான், சாழலோ—, எ - று.

(வி - ரை.) நங்கை என்னும் உயர்திணைப் பெண்பாற்பெயர் ஈறுதிரிந்து விளியாயிற்று. கங்காளம் தசையொழிந்த உடலின் முழுவெலும்பு. இருவர் என்றது பிரமவிட்டுணுக்களை. (கக)

காளுர்புலித்தோ லுடைதலையூண்காடுபதி
யானலவனுக்கிங்காட்படுவாராரேடீ
யானுலுங்கேளாயயனுந்திருமாலும்
வானுடர்கோவும்வழியடியார்சாழலோ.

(ப - ரை.) கான் - காட்டகத்தின் கண்ணே, ஆர்-வாழ்ந்து ஜீவியாநின்ற, புலிதோல் உடை - புலியின்தோலே ஆடையும், தலை - தலையோடே, ஊண் - கலமும், காடு - சுடுகாடே, பதி - இருக்க இடமும், ஆனல் - ஆயின், அவனுக்கு - அத்தன்மையனுக்கு, இங்கு - இவ்விடத்தில், ஆட்படுவார் ஆர் - அடிமை பூண்டுதொண்டு செய்பவர் யாவர், ஏடி - என்னேடீ ?

(ஊ-பெ-உ-ம்.) ஆனாலும் கேளாய் - (அவ்வாறு) ஆயினும் கேட்பாயாக, அயனும் - பிரமனும், திருமாலும் - விட்டுணுவும், வான் நாடர் - தேவலோகத்தாருக்கு, கோவும் - அரசனாகிய தேவேந்திரனும், வழியடியார்-வழித்தொண்டு செய்பவராவர்—, எ - று.

(வி - ரை.) கான் - காடு. உடை-ஆடை. ஊண் - உணவு. அது இங்ஙனே உண்கலத்துக்காயிற்று. பதி - இடம். இடுகாடு சுடுகாடு என்னுமிரண்டு மடங்கக் காடு என்றார். (கஉ)

மலையரையன்பொற்பாவைவாணுதலாள்பெண்டிருவை
யுலகறியத்தீவேட்டானென்னுமதுவென்னேடீ
யுலகறியத்தீவேளாதொழிந்தனனேனுலகனைத்துங்
கலைநவின்றபொருள்களெல்லாங்கலங்கிடுங்காண்சாழலோ.

(ப - ரை.) மலை அரையன் - மலையரசனது, பொற்பாவை - பொற்பாவை போல்பவளும், வாணுதலாள் - பிரகாசம் பொருந்திய நெற்றியையுடையவளுமாகிய, பெண்திருவை - பெண்களுக்குட் சிறந்தவளாகிய உமாதேவியை, உலகு அறிய - உலகத்தார் யாவரும் அறியும்படி, தீவேட்டான் என்னுமது - தீமுன்னர் வேட்டனன் என்பது, என்னேடீ - யாதோடீ !

(ஊ-பெ-உ-ம்.) உலகு அறிய - உலகத்தார் அறியும்படி, தீவேளாது ஒழிந்தனன் எல் - தீமுன்னர் வேளாதொழிந்தனனாயின், உலகு அனைத்தும் - உலகமுழுமையும், கலைநவின்ற - சாத்திரஞ்சொன்ன, பொருள்கள் எல்லாம் - எல்லா அர்த்தங்களும், கலங்கிடும் - கலங்கிப்போம், சாழலோ—, எ - று.

(வி - ரை.) அரையன் - அரசன், திரு - இங்குசிறந்தவளென்னும் பொருளது. வேட்டல் - மணஞ்செய்தல். (௧௩)

தேன்புக்கதண்பணைசூழ்தில்லைச்சிற்றம்பலவன்
றான்புக்குநட்டம்பயிலுமதுவென்னேடீ
தான்புக்குநட்டம்பயின்றிலனேற்றரணியெல்லா
மூன்புக்கவேற்காளிக்கூட்டாங்காண்சாழலோ.

(ப - ரை.) தேன் - மதுரம், புக்க - பாய்கிற, தண் - குளிர்ச்சியாகிய, பணைசூழ் - வயல்கள் சூழ்ந்த, தில்லைச்சிற்றம்பலவன்-திருச்சிற்றம்பலத்தான், தான் புகுந்து - தானேபுகுந்து, நட்டம் பயிலுமது - நாட்டியம் செய்வது, என்னேடீ - யாதுக்கோடீ ?

(ஊ-பெ-உ-ம்.) தான் புக்கு நட்டம் பயின்றிலனேல் - தான்புகுந்து திருநடனஞ்செய்யானாயின், தரணி எல்லாம்-பூமிமுழுதும், ஊன்புக்கவேல்காளி - ஊன்பொரிந்திய வேற்படையையுடைய மாகாளிக்கு, ஊட்டு ஆம் - தின்னும் பொருளாகும், சாழலோ—, எ - று.

(வி - ரை.) புகுதல் - இங்கு பாய்தல் என்னும் பொருள். நடம் என்பது நட்டம் எனவிரித்தல் பெற்றது. ஊன் - தசை. (௧௪)

கடகரியும்பரிமாவுந்தேறுமுகந்தேறாதே
யிடபமுகந்தேறியவாறெனக்கறியவியம்பேடி
தடமதில்களவைமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாய்த்தாங்கினான்றிருமால்காண்சாழலோ.

(ப - ரை.) கடம் கரியும் - மதயானையையும், பரிமாவும்-குதிரையையும் உவந்து - விரும்பி, ஏறாதே - அவைகளின்மேல் ஏறாமல், இடபம்-இடபத்தை, உவந்து ஏறிய ஆறு-விரும்பி ஏறினவிதத்தை, அறிய-தெரியும்படி, எனக்கு - எந்தனுக்கு, இயம்பேடீ - தெரியச்சொல்வாயடீ !

(ஊ-பெ-உ-ம்.) தடம் மதில்கள்-அதிபெரிய மதில்களாகிய, அவைமூன்றும்-அவைமூன்றையும், தழல் எரித்த அந்நாளில் - அக்கினியினால் நீறாக்கின அக்காலத்தில், திருமால் - விட்டுணுவானவன், இடபம் அது ஆய் - இரிஷப வாகனமாகி, தாங்கினான் - சுமந்தான், சாழலோ—, எ - று.

(வி - ரை.) கடம் - மதம். பரிமா - இருபெயரொட்டு. (௧௫)

நன்றாகநால்வர்க்குநான்மறையினுட்பொருளை
யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தான்காணேடீ
யன்றாலின்கீழிருந்தங்கறமுரைத்தானாயிடினுங்
கொன்றான்காண்புரமூன்றுங்கூட்டோடேசாழலோ.

(ப - ரை.) நன்று ஆக - நன்மையையுண்டாக்க, நால்வர்க்கும் - சநகாதி முதலிய நால்வருக்கும், நான்மறையின் - நான்குவேதத்தின், உட்பொருளை - இரகசியார்த்தப் பொருளை, அன்று - அக்காலத்தில், ஆலின்கீழ் - வடவிருட்சத்தின் அடியில், இருந்து - அன்புகூர்ந்தெழுந்தருளியிருந்து, அங்கு - அத்திருப்பதியின் கண்ணே, அறம் உரைத்தான் - முத்திநெறி மார்க்கத்தைப் போதித்தருளினான், காணேடீ - இதில் ஒன்றுந் தோன்றேனடீ !

(ஊ-பெ-உ-ம்.) அன்று - அந்நாளில், ஆலின் கீழிருந்து - ஆலமரத்தின் அடியிலிருந்து, அங்கு - அவ்விடத்து, அறம் உரைத்தான் ஆயிடினும் - முத்திநெறி மார்க்கத்தைப் போதித்தருளினானாயினும், புரம் மூன்றும் - முப்புறங்களையும், கூட்டோடே கொன்றான் - வேரோடு அழித்தான், சாழலோ —, எ - று.

(வி-ரை.) கொன்று - இங்கு அழித்தலைக் குறித்தது. (கசு)

அம்பலத்தேகூத்தாடியமுதுசெயப்பலிதிரியு
நம்பனையுந்தேவனென்றுநண்ணுமதுவென்னேடீ
நம்பனையுமாமாசேனான்மறைகடாமறியா
வெம்பெருமானீசாவென்றேத்தினகாண்சாழலோ.

(ப-ரை.) அம்பலத்தே - அம்பலத்தின் கண்ணே, கூத்தாடி - ஆநந்தக் கூத்தாடி, அமுதுசெய - திருவமுது செய்தற்கு, பலி திரியும் - பலிக்கு உழலா நின்ற, நம்பனையும் - சிவபெருமானையும், தேவன் என்று - தேவாதி தேவனென்று, நண்ணுமது - அப்பெயர் அவனை அடைவது, என்னேடீ, எதுக்கடீ !

(ஊ-பெ-உ-ம்.) ஆம் ஆறு கேள் - இவ்விதமாக ஆகும் விந்தையைக் கேட்பாயாக, நம்பனையும் - சிவபெருமானையும், நான்மறைகள் - வேதங்கள் நான்கும், அறியா - தேடுதற்கு அறியாதவனாகி, எம்பெருமான் - எமது பெருமானே ! ஈசா - ஜகதீசனே ! என்று - என்று புகழ்ந்து, ஏத்தின - வாயாரத் துதித்தன, சாழலோ —, எ - று.

(வி-ரை.) அம்பலம் - பொது. பலி - பிச்சை. (கஎ)

சலமுடையசலந்தரன்றனுடறடிந்தநல்லாழி
நலமுடையநாரணற்கன்றருளியவாறென்னேடீ
நலமுடையநாரணன்றனயனமிடந்தரனடிக்கீ
ழலராகவிடவாழியருளினன்காண்சாழலோ.

(ப-ரை.) சலம் உடைய - தணியாக்கோபத்தை யுடைய, சலந்தரன் - சலந்தரனது, உடல் - தேகத்தை, தடிந்த - கொய்த, நல் ஆழி - பெருமைதங்கிய சக்கரப்படையை, நலம் உடைய நாரணற்கு - நன்மையையுடைய ஸ்ரீமந் நாராயணனுக்கு, அன்று - அக்காலத்தில், அருளிய ஆறு - கிருபைசெய்த விதம், என்னேடீ - எதுக்கடீ ?

(ஊ-பெ-உ-ம்) நலம் உடைய நாரணன் - நன்மையை யுடைய ஸ்ரீமந் நாராயணன், தன் நயனம் இடந்து - தனது திருக்கண்ணைத்தோண்டி, அரன் அடி கீழ் - சிவபெருமானது திருவடியின்கீழ், அலர் ஆக - மலராக, இட - வைக்க, ஆழி - சக்கரப்படையை, அருளினன் - (உள்ளங் குளிர்ந்து) கிருபை செய்து கொடுத்தான், சாழலோ—, எ - று.

(வி-ரை.) சலந்தரன் - ஓர் அசுரன். (கஅ)

அம்பரமாம்புள்ளித்தோலாலாலமாரமுத
மெம்பெருமானுண்டசதுரெனக்கறியவியம்பேடீ
யெம்பெருமானேதுடுத்தங்கேதமுதுசெய்திடினுந்
தம்பெருமைதானறியாத்தன்மையன்காண்சாழலோ.

(ப-ரை.) புள்ளிதோல் - புள்ளியமைந்த புலித்தோலை, அம்பரம் ஆம் - உடுக்க ஆடையாகும், ஆலாலம் - ஆலகாலவிடத்தை, எம்பெருமான் - எம் பெருமானவன், ஆர் அமுதம் உண்ட சதுர் - (அதை) அரிய அமிர்தமாக உட்கொண்ட சூதை, எனக்கு - எந்தனுக்கு, அறிய - விசிதமாய்த் தெரியும்படி, இயம்பேடீ - சொல்வாயேடீ ?

(ஊ-பெ-உ-ம்.) எம் பெருமான் - என் இறைவனாகிய சிவபெருமான், ஏது உடுத்து - எதனைத்தரித்து, ஏது அமுது செய்திடினும் - எதனை அமுதாகப் புசித்தாலும், தன்பெருமை - தனது பெருமையை, தான் அறியா தன்மையன் - தானே அறியாததன்மையை யுடையவன், சாழலோ—, எ - று.

(வி-ரை) புள்ளி - பொறி. புள்ளித்தோல் என்றது புலித்தோலை. மான் தோல் எனினுமாம். (கசு)

அருந்தவருக்காலின்கீழறமுதலாநான்கனையு
மிருந்தவருக்கருளுமதுவெனக்கறியவியம்பேடீ
யருந்தவருக்கறமுதனான்கன்றருளிச்செய்திலனேற்
றிருந்தவருக்குலகியற்கைதெரியாகாண்சாழலோ.

(ப-ரை.) அருந்தவருக்கு - அருமையான தவத்தினையுடையராகிய சனகாதியர்க்கு, ஆலின் கீழ் இருந்து - ஆலமரத்தடியில் வீற்றிருந்து, அறம் முதல் ஆம் - தருமமுதலாகிய நான்கு புருஷார்த்தங்களையும், அவருக்கு - அந்நால்வர்களுக்கு, அருளுமது - போதித்த அவ்வகையினைகளை, எனக்கு அறிய - எந்தனுக்குத் தெரியும்படி, இயம்பேடீ - சொல்லேடீ ?

(ஊ-பெ-உ-ம்.) அருந்தவருக்கு - அரியதாகிய தவத்தினையுடையார்க்கு, அறம்முதல்நான்கு - தருமமுதலாகிய நான்கு பொருள்களையும், அன்று - அக்காலத்தில், அருளிச்செய்திலனேல் - அருளிச்செய்யாவிடின், திருந்து - திருந்திய, அவருக்கு - அந்நால்வருக்கு, உலகு இயற்கை - உலகநடைக்கைகள், தெரியா - தெரியப்படமாட்டா, சாழலோ—, எ - று.

(வி - ரை.) தவர் - தவத்தினையுடையவர். அறமுதலா நான்கு - அறம், பொருள், இன்பம், வீடு என்பன. உலகியற்கை - லோகாசாரவழக்கம். (உ௦)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பூவல்லி.

மாயாவிசயநீக்குதல்.

நாலடித்தரவுகொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

இணையார் திருவடியென் றலைமேல்வைத்தலுமே
துணையானசுற்றங்களத்தனையுந் துறந்தொழிந்தே
னணையார் புனற்றில்லையம்பலத்தேயாடுகின்ற
புணையாளன்சீர்பாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப-ரை.) இணை ஆர் திருவடி - தனக்குத்தானே ஒப்பாயிருக்கிற அழகிய பாதத்தை, என் தலைமேல் - என் சிரசின்மீது, வைத்தலும் - பொருந்த வைத்தலும், துணை ஆன - உதவியாகிய, சுத்தங்கள் அத்தனையும் — எல்லா உறவினரையும், துறந்து — அவர்களைவிட்டு, ஒழிந்தேன்—விலகினேன், அணை ஆர் புனல் - அணைகட்டிய நீர் சூழ்ந்த, தில்லை அம்பலத்தே - தில்லையம்பலத்தின்கண்ணே, ஆடுகின்ற — திருநடனம் செய்கின்ற, புணையாளன் - (பிறவிக்கடலைத்) தவிர்ப்பதற்குத் தோணியைப்போல்பவனது, சீர்பாடி - சிறப்பைப் பாடி, பூவல்லி - அல்லிப்பூவை, கொய்யாமோ - கொய்துமோ—, எ - று.

(க-ரை.) சிவபெருமான் தன் அழகிய பாதங்கள் இரண்டையும் என்சிர மீது வைத்தலால் யான் பற்றில்லாதவ ளானேன், ஆதலால் அவனது பெருமையைப் பாடிப் பூவல்லிகொய்யாமோ, என்பது.

(வி - ரை.) இது அல்லிமலர் கொய்யாநின்ற பெண்களை நோக்கிச்செப்பியது. இணை ஆர் திருவடி - இரண்டு திருவடி யெனினும் அமையும். புணை - மரக்கலம். (க)

எந்தையெந்தாய்சுற்றமற்றுமெல்லாமென் னுடைய
பந்தமறுத்தென்னையாண்டுகொண்டபாண்டிப்பிரா
னந்தவிடைமருதிலானந்தத்தேனிருந்த
பொந்தைப்பரவிநாம்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) எந்தை - எமது பிதா, எம் தாய் - எமதுதாய், சுற்றம் - எமது உறவினர், மற்றும் எல்லாம் - மற்றுமுள்ள எல்லாமும், என்னுடைய பந்தம் - என்பிறவித்தளையை, அறுத்து - வேரறக்களைந்து, என்னை - அடியேனை, ஆண்டுகொண்ட - அடிமை கொண்டாண்டருளின, பாண்டிப்பிரான் - பாண்டிப்பிரானே, அந்தம் - அழகுபொருந்திய, இடைமருதில் - திருவிடைமருதூ ரென்னும் க்ஷேத்திரத்தின் கண்ணே, ஆனந்தத்தேன் இருந்த - பரமானந்தத்தேனிருந்த, பொந்தை - பொந்தைபோல்பவனாகிய சிவபெருமானை, பரவி - போற்றிசெய்து, யாம் பூவல்லிகொய்யாமோ - யாம் அல்லிப்பூவைக்கொய்துமோ—, எ - று.

(க - ரை.) எமக்குத் தாய்தந்தை முதலிய எல்லாம், என்பிறவித்தளையை யறுத்தப் பாண்டிபிரானே யாதலால், திருவிடைமருதூரிற்சென்று அவனை உள்ளன்போடு துதித்துப் பூவல்லிக்கொய்துமோ என்பது.

(வி - ரை.) எந்தை - என்தந்தை யென்பதன் மரூஉ. என்தாய் என்பதும் அதுபோல என்தாய் என்பதன் மரூஉ. (உ)

நாயிற்கடைப்பட்டநம்மையுமோர்பொருட்படுத்துத்
தாயிற்பெரிதுந்தயாவுடையதம்பெருமான்
மாயப்பிறப்பறுத்தாண்டானென்வல்வினையின்
வாயிற்பொடியட்டிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) நாயின் - நாயினும், கடைப்பட்ட - கடையான, நம்மையும் - எம்மையும், ஓர் பொருள் படுத்து - ஒருபொருளாக்கி, தாயிற்பெருதும் - மாதாவினுஞ்சிறந்த, தயாவுடைய - இரக்கமுடைய, தம்பெருமான்-தம்பிரான், மாயப் பிறப்பு அறுத்து - மாயப் பிறவித் தளையைக் களைந்து, ஆண்டான் - அடிமை கொண்டாண்டருளினான், (ஆதலால்) என்வல்வினையின் வாயில் - எனது கொடிய தீவினையினது வாயில், பொடி அட்டி - புழுதியைப்போட்டு, பூவல்லிகொய்யாமோ - அல்லிப்பூவைக் கொய்துமோ—, எ - று.

(க - ரை.) நாயினுங்கடையேனாகிய நம்மையும் ஓர் பொருளாக்கித் தாயினுங் கிருபைசெய்த சிவபெருமான், எமது பிறப்பை நீக்கினன். ஆதலால் எனது கொடிய வினையின் வாயில் மண்ணைவெட்டிப்போட்டுப் பூவல்லிகொய்துமோ.

(வி - ரை.) தயா என்னும் வடமொழி திரியாது நின்றது. (ங.)

பண்பட்டதில்லைப்பதிக்கரசைப்பரவாதே
யெண்பட்டதக்கனருக்கனெச்சனிந்துவனல்
விண்பட்டபூதப்படைவீரபத்திரராற்
புண்பட்டவாபாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) பண்பட்ட-பெருமை தங்கிய, தில்லைப்பதிக்கு அரசை-தில்லையம்பலப்பதிக்கு அரசனாகிய சிவபெருமானை, பரவாதே-துதிசெய்யாமல், எண்பட்ட - மதிப்பமைந்த, தக்கன் - தக்கனும், அருக்கன் - இரவியும், எச்சன் - யாககர்த்தாவும், இந்து - சந்திரனும், அனல்-அக்கினிதேவனும், விண்பட்ட - ஆகாயத்தையளாவிய, பூதப்படை - பூதப்படைகளையுடைய, வீரபத்திரரால் - வீரபத்திரரால், புண்பட்ட ஆறுபாடி-காயப்பட்ட விபரத்தைச்சொல்லி, பூவல்லிகொய்யாமோ - அல்லிப்பூவைக் கொய்துமோ—, எ - று.

(க - ரை.) சிவபெருமானை தக்கன் முதலியனோர் போற்றிசெய்யாமையால், வீரப்பிரதாபத்தைப் பெற்ற வீரபத்திரரால் மதிப்பிழந்த வரலாற்றைப் பாடிப் பூவல்லிக்கொய்துமோ என்பது.

(வி - ரை.) எண் - மதிப்பு. (ச)

தேனாடுகொன்றைசடைக்கணிந்தசிவபெருமா
னூனாடிநாடிவந்துள்புகுந்தானுலகர்முன்னே
நானாடியாடிநின்றோலமிடநடம்பயிலும்
வானாடர்கோவுக்கேபூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) தேன் ஆடு - தேன் பொழிகின்ற, கொன்றை - கொன்றைப் பூவை, சடைக்கு அணிந்த – சடாபாரத்திற் றரித்த, சிவபெருமான் - (கருணைக்கடலாகிய) சிவபெருமானானவன், ஊன் நாடி – மானுட தேகமெடுத்து, நாடிவந்து - (அன்பின் மிகுதியால்) தேடிவந்து, உலகர் முன்னே – உலகத்தில் வாழா நின்ற) மாநிடர்க் கெதிரில், உள் புகுந்தான் – என் மனத்தினிடத்தே புகுந்தான், நான் நாடி ஆடி - நான் (அப்பரமசிவனைத்) தேடி ஆடி, நின்று ஓலம் இட - (தனியே) நின்று முறையிட, நடம்பயிலும் - திருநடனஞ் செய்கின்ற, வான் நாடர் - விண்ணுலகத்தார்க்கு, கோவுக்கே - தலைவனாகிய சிவபெருமான் பொருட்டாகவே, பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) தேவர்கட்குத் தலைவனாகிய சிவபெருமான் பூலோகத்தார்க்கெதிரே மனித ருருவெடுத்து வந்து என்மனத்திற் புகுந்தான், அவன் நிமித்தம் பூவல்லிக் கொய்துமோ, என்பது.

(வி - ரை.) கொன்றை முதலாகுபெயர். ஊன் தேகம். பயிலல் - செய்தல். (௭)

எரிமூன்றுதேவர்க்கிரங்கியருள்செய்தருளிச்
சிரமூன்றறத்தன்றிருப்புருவநெரித்தருளி
யுருமூன்றுமாகியுணர்வரிதாமொருவனுமே
புரமூன்றெரித்தவாபூவல்லிகொய்யாமோ.

(ப - ரை) எரி - அக்கினிபோல் எரிகின்ற, மூன்று தேவர்க்கு - திரிமூர்த்திகளுக்கும், இரங்கி - மனமிரங்கி, அருள் செய்து - கிருபைசெய்து, மூன்று சிரம் அற - தலைகள் மூன்றும் அற்று விழும்படி, தன் - தனது, திருப்புருவம் - அழகிய புருவம், நெரித்தருளி - நெரிக்கின அளவில், உரு மூன்றும் ஆகி-அம்மூன்று உருவமும் தானேயாகி, உணர்வு அரிது ஆம் - தெரிந்துகொள்வதர்க்கு அரிதாகிய, ஒருவனுமே - ஒருவனே, புரம் மூன்று எரித்த ஆறு - திரிபுரங்களையும் எரிந்து விழச் செய்த அற்புதத்தைப்பாடி, பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) முச்சுடர்களுக்கு மிரங்கி மூன்று சிரசுகளும் அற்றுவிழத் திருப்புருவம் நெரித்து மூன்றுருவாகி யாரு மறியாவண்ணம் நிற்கின்ற சிவபெருமான் திரிபுரத்தை நீருக்கிய ஆற்றலைப் பாடிப் பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) புரம் - முப்புரம். (௮)

வணங்கத்தலைவைத்துவார்கழல்வாய்வாழ்த்தவைத்
திணங்கத்தன்சீரடியார்கூட்டமும்வைத்தெம்பெருமா
னணங்கொடணிதில்லையம்பலத்தேயாடுகின்ற
குணங்கூரப்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) வார் - நீண்ட, கழல் - திருவடியை, வணங்க - வணக்கஞ் செய்தற்கு, தலைவைத்து - சிரசையமைத்து, வாழ்த்த - போற்றிசெய்தற்கு, வாய்வைத்து — வாயை அமைத்து, இணங்க - சேர்தற்கு, தன் சீர் அடியார் - தன் பெருமையுள்ள அடியவர்கள், கூட்டமும் வைத்து — கூட்டத்தையும் சேர்த்து, எம்பெருமான் - எமது பெருமானவன், அணங்கொடு - தெய்வத்தன்மைபோடு, அணி-அழகு பொருந்திய, தில்லை அம்பலத்தே ஆடுகின்ற- தில்லையம்பலத்தில் திருநடநஞ் செய்கின்ற, குணம் - பெருநிதிகுணத்தை, கூரப்பாடி - அன்பின் மிகுதியாற்பாடி, நாம் — யாம், பூவல்லிகொய்யாமோ, —, எ - று.

(க - ரை.) தன்னை வணக்கஞ்செய்யத் தலையையும், வாழ்த்த வாயையும், அடியார் கூட்டத்தைச் சேரத்தன்மையையும் எனக்கமைத்ததினுல், அம்பலத்தில் ஆடுகின்ற சிவபெருமானது பெருங்குணத்தைப்பாடி நாம் பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) அணங்கு - தேவர்களாடுங்கூத்து எனினுமாம். அணி - பெருமை. கூர் - மிகுதி. (எ)

நெறிசெய்தருளித்தன்சீரடியார்பொன்னடிக்கே
குறிசெய்துகொண்டென்னையாண்டபிரான்குணம்பரவி
முறிசெய்துநம்மைமுழுதுடற்றும்பழவினையைக்
கிறிசெய்தவாபாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) நெறி-நன்மார்க்கத்தை, செய்தருளி-செவ்வைப்படுத்தி, தன் - தன்னுடைய, சீர் - அருமை தங்கிய, அடியார் - தொண்டர்களுடைய, பொன் அடிக்கே - பொன்போலும் பிரகாசிக்கின்ற திருப்பாதத்திற்க்கே, குறிசெய்து கொண்டு - இலக்காக்கிக்கொண்டு, என்னை - அடியேனை, ஆண்டு அருளின - ஆட்கொண்டு கிருபைசெய்த, பிரான் - சிவபிரானது, குணம் - பெருங் குணத்தை, பரவி - போற்றி, நம்மை - அடியேனை, முறிசெய்து - அடிமையாக்கி, முழுது - முற்றும், உடற்றும் - வருத்துகின்ற, பழவினையை - தொன்மையாகிய வினையை, கிறிசெய்த - இல்லையாக்கின, ஆறுபாடி - விதத்தைச்சொல்லி, பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) நன்னெறியைக்காட்டி தன்னடியார் திருவடிக்கென்னை அடிமைப்படுத்தி ஆண்டருளின எம்பெருமானது பெருங்குணத்தைப் புகழ்ந்து என் பழவினையைக் கிருபைசெய்து ஒழித்தவிதத்தைப்பாடி பூவல்லிக்கொய்து மோ, என்பது.

(வி - ரை.) நெறி - நல்வழி. குணம் - தயாகுணம். முறி - அடிமை. உடற்றல் - வருத்தல். கிறி - பொய். (அ)

பன்னாட்பரவிப்பணிசெய்யப்பாதமல
ரென்னாகந்துன்னவைத்தபெரியோனெழிற்சுடராய்க்
கன்னாருரித்தென்னையாண்டுகொண்டான்கழலிணைகள்
பொன்னானவாபாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) பல்நாள் - பலதினமும், பரவி-போற்றிசெய்து, பணிசெய்ய - பணிவிடைசெய்ய, பாதம் மலர் - தாமரை ஒற்ற (தன்) திருப்பாதத்தை, என் ஆகம்-என் உள்ளத்தில், துன்னவைத்த-புதைய வைத்தருளின, பெரியோன் - அளவிற்கெட்டாத பெரியோன், எழில் - அழகையுடைய, சுடர் ஆய்-அக்கினி சோதி உருவாகி, கல் நார் - கல்லில் நாரை, உரித்து - உரித்து, என்னை - அடியேனை, ஆண்டுகொண்டான் - தொண்டனென்று ஆட்கொண்டருளினவன், கழல் இணைகள் - (இரண்டு) திருப்பாதங்கள், பொன் ஆன-பொன்னைப்போல் அருமையான, ஆறுபாடி - விதத்தைப்பாடி, பூவல்லிகொய்யாமோ—, எ - று.

(க - ரை.) எந்நாளும் போற்றிப் பணிசெய்யத் தன் திருவடி அடியேன் மனத்திற்பொருந்த அழுத்திவைத்து, கல்லைப்போன்ற மனதைக்கரைத்து

என்னை ஆட்கொண்டருளின பெருங்கருணைக்கடலாகிய சிவபெருமானது திருவடி பொன்றனவற்றைப்பாடி, பூவல்லிக் கொய்துமோ, என்பது.

(வி - ரை.) ஆகம் - மார்பு. இது இடவாகுபெயராய் மனத்தை யுணர்த்திற்று. ஆனவாறு என்பது ஆனவா என ஈறுதொகுத்ததென்றறியவும். (கூ)

பேராசையாமிந்தப்பிண்டமறப்பெருந்துறையான்
சீரார்திருவடியென்றலைமேல்வைத்தபிரான்
காரார்கடனஞ்சையுண்டுகந்தகாபாலி
போரார்புரம்பாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) பெருந்துறையான் - பெருமை தங்கிய திருப்பெருந்துறை யென்னும் திவ்ய க்ஷேத்திரத்தையுடையவன், பேர் ஆசை ஆம் - அதிக ஆசை உண்டாதற் கிடமாகிய, இந்த பிண்டம் அற - இந்த ஊனோடுகூடி வாழும் வாழ்வு தொலையும் வண்ணம், சீர் ஆர் - மகிமைபொருந்திய, திருவடி - தன் திருவடியை, என் தலைமேல் வைத்த - அடியேன் முடியின்மீது வைத்த, பிரான் - தயாள குணமுள்ளவன், கார் ஆர் - கரு நிறமுள்ள, கடல் நஞ்சை - திருப்பாற் கடலினின்று உண்டாகிய விஷத்தை, உண்டு உகந்த - [தாம்] உட்கொண்டு ஆநந்தித்த, காபாலி - கபாலத்தைக் கரத்திலேந்திய சிவபெருமான், [அவனது] போர் ஆர் - உயுத்தத்துக்கு இலக்காயிருந்த, புரம் - திரிபுரங்களின் மதில்களைக் குறித்து, பாடி - வாயாறத் துதித்து; பூவல்லிகொய்யாமோ —, எ - று.

(க - ரை.) இப்பிறவி நீங்கும் வண்ணம் என் முடிமீது தன்தாளைவைத்தருளின ஜீவதயாபர மூர்த்தியாகிய சிவபெருமான் திரிபுரதகனஞ்செய்த அர்ப்புதத்தைக் குறித்துப் பாடிப் பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) காரார் என்னும் விசேடம் நஞ்சுக்குக்கொள்க. காபாலி - கபாலத்தைக் கரத்தில் தாங்கின பரமசிவன். (கo)

பாலுமமுதமுந்தேனுடனும்பராபரமாய்க்
கோலங்குளிர்ந்துள்ளங்கொண்டபிரான்குரைகழல்கண்
ஞாலம்பரவுவார்நன்னெறியாமந்நெறியே
போலும்புகழ்பாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) தேனுடன் - தேனுடன், பாலும் அமுதமும் ஆம் - பாலும் அமிர்தமும்போன்ற, பராபரமாய்-[யாவராலுங்காணப்படாத] பராபரவஸ்துவாகி, கோலம் குளிர்ந்து - திருக்கோலங்கொண்டெழுந்தருளி வந்து, உள்ளம் கொண்ட - [அடியேன்] மனத்தைக்கிரகித்த, பிரான் - [யாவரிடத்தும்] உபகாரகுணமுள்ளவனுகிய சிவபெருமானது, குரை - சப்திக்கின்ற, கழல்கள் - வீரக்கழலணிந்தத் திருவடிகளை, ஞாலம்-பூலோகத்தின் கண்ணே, பரவுவார் - போற்றிசெய்பவர்களுடைய, நல்நெறி ஆம்-நன்மார்க்கவழியாகிய, அந்நெறியே

போலும் - அந் நன் மார்க்கத்தையே போல்கின்ற, புகழ் பாடி - புகழினைப் பாடி, பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) பால்தேன் முதலியவைக் கலந்ததுபோல மதுரித்து என் மனதைக் கொள்ளைகொண்ட சிவபெருமானது புகழைப்பாடிபூவல்லிக்கொய்து மோ—, என்பது.

(வி - ரை.) குழைத்தல் - சத்தித்தல். கோலங்குளிர்ந்து என்றது கட்கினியனுதலைக் குறித்தது. (கக)

வானவன்மாலயன்மற்றுமுள்ளதேவர்கட்கும்
கோனவனாய்நின்றுகூடலிலாக்குணக்குறியோ
னானநெடுங்கடலாலாலமமுதுசெய்யப்
போனகமானவாபூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) வானவன் - தேவேந்திரன், மால், விட்டுணு, அயன் - பிரமதேவன், மற்றும் உள்ள தேவர்கட்கும் - இதர தேவர்கட்கும், கோனவனாய் நின்று - அரசனாய் நின்று, கூடல் இல்லா - கூடுதலில்லாத, குணக்குறியோன்- குணக்குறிகளை யுடையவன், நெடுங்கடல் ஆன - நெடிய கடலிலுண்டான, ஆலாலம் - ஆலகால விஷத்தை, அமுது செய்ய - பருக, [அது] போனகம் ஆன ஆறு - உணவாகக்கொண்ட விதத்தைக் குறித்து, பூவல்லிகொய்யாமோ —, எ - று.

(க - ரை.) இந்திராதிய தேவர்கட்கு இறைவனாகிய சிவபெருமான் விஷத்தை உண்டவரலாற்றைக் குறித்து, பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) கோ என்பது னகரச்சாரியைப் பெற்றுக் கோன் என நின்றது. போனகம் - உணவு. (கஉ)

அன்றாலநீழற்கீழருமறைகடானருளி
நன்றாகவானவர்மாமுனிவர்நாடோறு
நின்றாரவேத்துநிறைகழலோன்புனைகொன்றைப்
பொன்றாதுபாடிநாம்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) அன்று - அந்நாளில், ஆல நீழற்கீழ் - ஆலமரத்தின் நிழலிலிருந்து, அருமறைகள் அருளி - அருமையாகிய வேதப்பொருள்களை அருளிச் செய்து, நன்றாக - நன்மையாக, வானவர் - தேவர்களும், மாமுனிவர் — மகிமை பெற்ற தவமுனிவரும், நாள் தோறும் நின்று - தினந்தோறும் நின்று, ஆர ஏத்தும் — நிரம்பத்துதிக்கின்ற, நிறை கழலோன் - [துதித்தற்குரிய குணங்கள்] நிறைந்த திருவடியை யுடையவனாகிய சிவபெருமான், புனை - தரிக்கின்ற, கொன்றை - கொன்றைப் பூவை, பொன்றாது பாடி - குறையாமற் பாடி, நாம் - யாம், பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) அந்நாளில் நால்வர்க்கும் ஆலின்கீழிருந்து அறமுரைத்து, முனிவர் முதலியோரால் புகழப்பட்ட திருவடியையுடைய சிவபெருமானது கொன்றைமலரைப் புகழ்ந்து பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) பொன் தாது எனப்பிரித்துப் பொன்போலும் மகரந்தம் என்றுரைத்தலுமாம். (கரு)

படமாகவென்னுள்ளேதன்னிணைப்போதவையளித்திங்
கிடமாகக்கொண்டிருந்தேகம்பமேயபிரான்
றடமார்மதிற்றில்லையம்பலமேதானிடமா
நடமாடுமாபாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) என் உள்ளே - என்மதியினிடத்தே, படம் ஆக - படம்போன்ற, தன் - தனது, இணைப்போது அவை - தாமரைமலர்போன்ற இரண்டு திருவடிகளை, அளித்து - கிருபைசெய்து கொடுத்து, இங்கு-இத்தலத்தையே, இடம் ஆகக்கொண்டு-வாசத்தலமாகக்கொண்டு, இருந்து-எழுந்தருளி இருந்து, ஏகம்பம்மேவிய-திருவேகம்பத்திலும் உறைகின்ற, பிரான் - சிவபிரான், தடம் ஆர் மதில் - பெருமைதங்கிய மதில்கள் சூழ்ந்த, தில்லை அம்பலத்தே - தில்லையம்பலமென்னும் சிதம்பரத்தின் கண்ணே, நடம் ஆடும் - திருநடனஞ்செய்யுங் காக்ஷியின், ஆறுபாடி-விதத்தைப் புகழ்ந்து, பூவல்லிகொய்யாமோ—, எ-று.

(க - ரை.) என் மனத்தில் யாவராலுங் காணுதற்கரிதாகிய தன் திவ்விய பொற்பாதங்களைப் படம்போலமைத்து இடங்கொண்டு, ஸ்ரீகாஞ்சிமாநகரத்தில் திருக்கோலங்கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான், தில்லைச்சிதம்பரத்தை யிருப்பிடமாக்கி நடனமாடும் அற்புதக்காக்ஷியைப்பாடி பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) படம் - சித்திரம். ஏகம்பம்-ஸ்ரீகாஞ்சிப்பதி எனினுமாம். ()

அங்கியருக்கனிராவணனந்தகன்கூற்றன்
செங்கணரியயனிந்திரனுஞ்சந்திரனும்
பங்கமிறக்கனுமெச்சனுந்தம்பரிசழியப்
பொங்கியசீர்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) அங்கி-அக்கினிதேவனும், அருக்கன்-சூரியன், இராவணன் - இலங்கைக்கதிபனாகிய இராவணனும், அந்தகன் கூற்றன்-உயிரை நீக்கி உடலை அழிப்பவனாகிய இயமனும், செங்கண் அரி-செவந்ததாமரைப்போன்ற நேத்திரங்களை உடைய விட்டுணும், அயன் - பிரமதேவனும், இந்திரனும் - தேவேந்திரனும், சந்திரனும் - சந்திரனும், பங்கம் இல் தக்கனும் - பங்கமில்லாத தக்கனும், எச்சனும் - எச்சனும், தம்பரிசு அழிய - தத்தமது எண்ணங்கள் அழியும் வண்ணம், பொங்கிய - [மிகக்] கோபித்த, சீர் - பெருமையை, பாடி - போற்றிசெய்து பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) அக்கினிதேவன் முதலாயினோர் பெருமை கெடும் வண்ணம் கோபித்த சிறப்பைப்பாடி பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) அங்கி - அக்நி என்னும் வடமொழிச்சிறப்பு. கூற்றன் - உடலின் உயிர்களைப் பிரிப்பவன். (கடு)

திண்போர்விடையான்சிவபுரத்தார்போரேறு
மண்பான்மதுரையிற்பிட்டமுதுசெய்தருளித்
தண்டாலேபாண்டியன்றன்னைப்பணிகொண்ட
புண்பாடல்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) திண் - பலம்பொருந்திய, போர் - யுத்தத்தொழிலையுடைய, விடையான் - இரஷபவாகனத்தையுடையவன், சிவபுரத்தார்-சிவபுரத்தாருக்கு, போரேறு - ஆண்சிங்கத்தை யொற்ற சிவபெருமான், மண்பால்-பூலோகத்தில், மதுரையில் - மதுரைப்பதி எனும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண்ணே, பிட்டு - [வணிகஞ்செய்யும்கிழவியின்] பிட்டினை, அமுதுசெய்தருளி - ஓர்வித விளையாட்டைக்காட்டி அமுதாக உட்கொண்டருளி, தண்டாலே-[பாண்டியன்] பிரம்பாலே, பாண்டியன் - அம்மதுரைக்கரசன், தன்னை பணிகொண்ட - தன்னை வேலைகொண்ட, புண்பாடல்பாடி - புண்ணைக்குறித்த பாடலைப்பாடி, நாம் - யாம், பூவல்லிகொய்யாமோ—, எ - று.

(க - ரை.) எவ்வுயிர்களையும் காக்க வல்லவனாகிய சிவபெருமான் வந்தியென்னுங் கிழவியினன்பை யாவருக்கும் வெளிப்படுத்துநிமித்தம், பாண்டியன் பிரம்படி யேற்ற அற்புதத்தைக் குறித்துப் பாடி பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) ஏறு சிறந்தவன் என்னும் பொருளது. தண்டு இங்கு பிரம்புக்காயிற்று. (கசு)

முன்னாயமாலயனும்வானவருந்தானவரும்
பொன்னார்திருவடிதாமறியார்போற்றுவதே
யென்னாகமுள்புகுந்தாண்டுகொண்டானிலங்கணியாம்
பன்னாகம்பாடிநாம்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) முன் ஆய - முதன்மையாகிய, மால்-விட்டுணுவும், அயனும்-பிரமனும், வானவரும் - தேவர்களும், தானவரும் - அசுரர்களும், பொன் ஆர்-பொன்னைப்போல் பிரகாசிக்கின்ற, திருவடி - அழகிய திருவடியை, அறியார் - தாங்கள் அறியாதவராய், போற்றுவதே - துதித்து வணங்குவதே, [அவர்கள் செய்கை அங்ஙனமாக] என் ஆகம் - என் மனத்தினிடத்தே, உள் புகுந்து - உட்புகுந்து, ஆண்டுகொண்டான் - [என்னை அடிமையாக்கி] ஆண்டு கொண்டவனாகிய சிவபெருமானது, இலங்கு அணி ஆம் - பிரகாசிக்கின்ற

[திரு] ஆபரணமாகிய, பல் நாகம் - பலவித நாகங்களையும், பாடி - [ஆடிப்] பாடி, நாம் - யாம், பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) மாலயன் முதலியோர்கள் அறியப்படாத திருவடியையுடையவன், என் மனத்திற் புகுந்து என்னை ஆண்டுகொண்டருளினான், [ஆகையால்] அச்சிவபெருமானது நாகாபரணத்தைப் புகழ்ந்து பூவல்லி கொய்துமோ—, எ - று.

(வி - ரை.) முன் - முன்னூர்தன்மை. முதன்மை. (கஎ)

சீரார்திருவடித்திண்சிலம்புசிலம்பொலிக்கே
யாராதவாசையதாயடியேனகமகிழத்
தேரார்ந்தவீதிப்பெருதுறையான்றிருநடஞ்செய்
பேரானந்தம்பாடிப்பூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) சீர் ஆர் - சிறப்பை யமைந்த, திருவடி - திருவடியில் தரிக்கப் பெற்ற, திண் சிலம்பு - திண்ணிய சிலம்புகள், சிலம்பு - சத்திக்கின்ற, ஒலிக்கே - சத்தத்திற்கே, ஆராத ஆசையதாய் - வெறுக்காத விருப்பங்கொண்டு, அடியேன் அகம் மகிழ - அடியேனது மனம் சந்தோஷிக்க, தேர் ஆர்ந்த வீதி - தேர்கள் நிறைந்த தெருக்களோடு கூடிய, பெரு துறையான் - திருப்பெருந்துறையை யுடையவன், திரு நடம் செய் - திருநடனத்தைச் செய்கிறதாலுண்டாகிய, பேரானந்தம்பாடி - பேரின்பத்தைப்பாடி, பூவல்லி கொய்யாமோ—.

(க - ரை.) சிவபெருமான் தன் திருவடிச் சிலம்பொலிக்கே அடியேனது உள்ளங்களிக்கும் வண்ணம் திருநடனஞ் செய்கின்ற பேரின்பவரலாற்றைப் பாடி பூவல்லிக் கொய்துமோ, என்பது.

(வி - ரை.) சிலம்புதல் - ஒலித்தல். (கஅ)

அத்தியுரித்ததுபோர்த்தருளும்பெருந்துறையான்
பித்தவடிவுகொண்டிவ்வுலகிற்பிள்ளையுமாம்
முத்திமுழுமுதலுத்தரகோசமங்கைவள்ளல்
புத்திபுகுந்தவாபூவல்லிகொய்யாமோ.

(ப - ரை.) அத்தி உரித்து - (மத) யானையையுரித்து, அது போர்த்தருளும் - [அத்] தோலைப் போர்த்தருளின, பெருந்துறையான் - திருப் பெருந்துறையையுடையவன், பித்த வடிவுகொண்டு - பித்தனாகவும் உருக்கொண்டு, இவ்வுலகில் பிள்ளையும் ஆய் - இவ்வுலகத்தில் சிறுகுழந்தையுமாகி, முத்தி முழுமுதல் - முத்திக்கு முழுமுதல்வன், உத்தரகோசமங்கை வள்ளல் - திரு உத்தரகோச மங்கையிலெழுந்தருளியவள்ளல், [அவன்] புத்தி புகுந்த ஆறு - என் புத்தியில் நுழைந்தவிதத்தைப்பற்றி, பூவல்லி கொய்யாமோ—, எ - று.

(க - ரை.) யானைத்தோலை யுரித்துப் போர்த்துப் பித்தவேடங்கொண்ட உத்தரகோசமங்கை வள்ளலாகிய சிவபெருமான் என் மனத்திற் புகுந்த விதத்தைப்பாடி பூவல்லிக்கொய்துமோ, என்பது.

(வி - ரை.) அத்தி ஹஸ்தி என்னும் வடமொழித்திருபு, "இவ்வுலகிற் பிள்ளையுமாம்" என்றது வரங்கோரினூர் சிலர்க்குப் புதல்வன்போல நடித்தமையைக்குறித்தது. (கக)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவுந்தியார்.

ஞானவெற்றி.

கலித்தாழிசை.

திருச்சிற்றம்பலம்.

வளைந்ததுவில்லுவிளைந்ததுபூச
லுளைந்தனமுப்புரமுந்தீபற
வொருங்குடன்வெந்தவாறுந்தீபற.

(ப - ரை.) வில் - தநுர், வளைந்தது - வளைந்தது, பூசல் - போர், விளைந்தது-விளைந்தது, முப்புரம் - திருபுரங்கள், உளைந்தன - வருந்தின, உந்தீபற- ஒருங்கு - ஒன்றாய், உடன் வெந்த ஆறு - உடனே வெந்த விதத்தைக்குறித்., உந்தீபற—, எ - று.

(க - ரை.) இறைவனது வில்வளைந்தது, போர்விளைந்தது, திருபுரங்கள் வருந்தின, ஒருமிக்க வெந்ததைக்குறித்து, உந்தீபற, என்பது.

(வி - ரை.) உந்தி பறத்தல் - மகளிர் விளையாட்டில் ஒன்று, வில்வளைந்தது என்றதனால் வளைதலின் அருமை தோற்றிற்று என்னை. மலை வில்லாதல் என்க.

ஈரம்புகண்டிலமேகம்பர்தங்கையி
லோரம்பேமுப்புரமுந்தீபற
வொன்றும்பெருமிகையுந்தீபற.

(ப - ரை.) ஏகம்பர் கையில் - ஸ்ரீ ஏகாம்பரநாதர் திருக்கரத்தில், ஈரம்பு கண்டிலம் - இரண்டு அம்பைக் காண்கிலேம், ஓர் அம்பே - [அவர் திருக்கரத்திற் காணப்பட்டது] ஓரம்பே யாம், [அங்ஙன மிருக்க] முப்புரம் - முப்புரங்களுள், ஒன்றும் - ஒருபுரம் அழியாதிருந்தால், பெருமிகை - [அது] பெருங் கெடுதியாம், உந்தீபற—, எ - று.

(க - ரை.) பரமசிவன் திருக்கரத்தில் இருந்தது ஓர் பாணமே ஒழிய இருபாணம் அன்று, [அவ்விதம்] திரிபுரங்களுள் ஒன்றாயினும் பயந்து நின்றவனல்ல, உந்தீபற, என்பது.

(வி - ரை.) ஒன்றும் - ஒரு அம்பும் எனினும் அமையும். மிகை - கெடுதி. (உ)

தச்சுவிடுத்தலுந்தாமடியிட்டது
மச்சுமுறிந்ததென்றுந்தீபற
வழிந்தனமுப்புறமுந்தீபற.

(ப - ரை.) தாம் அடியிட்டதும் - [அன்று] தாம் திருவடியை வைத்தேறுதலும், தச்சு விடுத்தலும் - தச்சத்தொழில் விடுதலும், அச்சு முறிந்தது என்று - [இரதம்] அச்சு சேதப்பட்டதென்றும், உந்தீபற—, அழிந்தன முப்புரமும் - அம் முப்புரங்கள் நீறாயின என்று, உந்தீபற—, எ - று.

(க - ரை.) பரமசிவன் தன் திருவடியை வைத்து ஏறுதலும், இரதத்தின் அச்சுமுறிந்து ஒடிந்ததென்றும், திரிபுரங்கள் நசித்தன வென்றும் உந்தீபற, என்பது.

(வி - ரை.) தச்சு - தச்சன் செய்யும் தொழில். அச்சு - பண்டியுள் இருப்பு. (௩)

உய்யவல்லாரொருமூவரைக்காவல்கொண்
டெய்யவல்லானுக்கேயுந்தீபற
விளமுலைபங்கனென்றுந்தீபற.

(ப - ரை.) உய்யவல்லார் - ஜீவிக்க வல்லவராகிய, ஒரு மூவரை - மூன்று அசுரரையும், காவல்கொண்டு - சிறையிலிட்டு, எய்ய - அம்பு எய்ய, வல்லானுக்கே - எல்லா மகிமையு முடையவனுக்கே, உந்தீபற—, இளமுலை பங்கன் என்று - இளமைதங்கிய ஸ்தனத்தை யுடைய பராசத்தியின் பாகனென்றும், உந்தீபற—, எ - று.

(க - ரை.) ஜீவிக்கவல்லவராகிய மூன்று அசுரரையும் சிறைப்படுத்தி, பாணம் பொழிய வல்லவனாகிய சிவபெருமானைக்குறித்து, உந்தீபற, என்பது.

(வி - ரை.) உய்தல் - உயிர்ப்பித்தல். ஒரு மூவர் என்றது திரிபுரமெறித்த காலத்தில் இறவாமல் தப்பித்தோடிப்போன மூன்று அசுரரை. (ச)

சாடியவேள்விசரிந்திடத்தேவர்க
ளோடியவாபாடியுந்தீபற
உருத்திரநாதனுக்குந்தீபற.

(ப - ரை.) சாடிய - சாடின, வேள்வி - யாகம், சரிந்திட - கெடுக்கவே, தேவர்கள் - தேவர்கள், ஓடி - ஓடின, ஆறு பாடி - விபரத்தைச்செப்பி, உந்தீபற—, உருத்திர நாதனுக்கு - உருத்திரர்களுக்குத் தலைவனு யிருப்பவனுக்கு, உந்தீபற—, எ - று.

(க - ரை.) யாகம் அழிதலும், தேவர்கள் பயந்து ஓடின வகையைக்குறித்தும், உருத்திரநாதனைக் குறித்தும், உந்திபற, என்பது.

(வி - ரை.) சாடுதல் - அடித்தல். சரிதல் - அழிதல். உருத்திரநாதன் - உருத்திரர்களுக்கரசன். (ரு)

ஆவாதிருமாலவிப்பாகங்கொண்டன்று
சாவாதிருந்தானென்றுந்தீபற
சதுர்முகன்றாதையென்றுந்தீபற.

(ப - ரை.) ஆவா - அச்சோ! திருமால் - விட்டுணு, அவி பாகம் கொண்டு - தேவர் உணவில் [தான்] பங்குபெற்றுக்கொண்டு, அன்று - அக்காலத்தில், சாவாது - செற்றுப்போகாமல், இருந்தான் என்று - உயிர்ப்பித்தானென்று, உந்தீபற—, சதுர்முகன்தாதை என்று - நான் முகனுகிய பிரமனுக்குப் பிதாவென்று, உந்தீபற—, எ - று.

(க - ரை.) விட்டுணு அன்று அவிர்ப்பாகம் பெற்று உட்கொண்டதினுல் இறவாதிருந்ததைக் குறித்து, உந்தீபற, என்பது.

(வி - ரை.) ஆவா! வியப்புக்குறிப்பு. அவி - தேவர் உணவு. அவிர்ப்பாகம் - தேவருணவின் கூறு. (சு)

வெய்யவனங்கிவிழுங்கத்திரட்டிய
கையைத்தறித்தானென்றுந்தீபற
கலங்கிற்றுவேள்வியென்றுந்தீபற.

(ப - ரை.) வெய்யவன் - துட்டனுகிய, அங்கி - அக்கினிதேவன், விழுங்க - உட்கொள்ளும்படி, திரட்டிய - ஒன்ருகச்சேர்த்த, கையை - கரங்களை, தறித்தான் என்று - கொய்தானென்று, உந்தீபற—, வேள்வி - யாகம், கலங்கிற்றென்று - நிலைதடுமாறிற்றென்று, உந்தீபற—, எ - று.

(க - ரை.) அக்கினி தேவன் உட்கொள்ளச் சேர்த்தக் கரங்களைக் கொய்தானென்றும், அப்படிக் கொய்தலும் யாகசாலை கலங்கியது என்றும்,உந்தீபற, என்பது.

(வி - ரை.) வெய்யவன் என்பதற்கு வெம்மை பகுதி. (எ)

பார்ப்பதியைப்பகைசாற்றியதக்கனைப்
பார்ப்பதென்னேயேடியுந்தீபற
பனைமுலைபாகனுக்குந்தீபற.

(ப - ரை.) பார்ப்பதியை - பார்வதியை, பகை - விரோதத்தை, சாற்றிய - சொல்லிய, தக்கனை - தக்கனை, பார்ப்பது - கண்ணோட்டமிடுவது, என்னே யடி - ஏதுக்கடீ, உந்தீபற—, பனை முலை - பருத்த கொங்கைகளையுடைய உமாதேவியின், பாகனுக்கு - பங்கனுக்கு, உந்தீபற—, எ - று.

(க - ரை.) உமயவளை பகைத்துப் பேசின தக்கனைக் கண்ணோட்டஞ் செய்வது சிவபிரானுக்கு ஒத்த காரியமல்ல என்றும், உந்தீபற, என்பது.

(வி - ரை.) பர்வதம் - கிரி. பார்வதி - கிரிமகள். இது பார்ப்பதி எனத் திரிந்தது. பகைசாற்றுதலாவது - நிந்தித்தல். (அ)

புரந்தரனாரொருபூங்குயிலாகி
மரந்தனிலேறினாருந்தீபற
வானவர்கோனென்றேயுந்தீபற.

(ப - ரை.) புரந்தரனார் - தேவேந்திரனார், ஒரு பூ குயில் ஆகி - ஒரு பொலிவாகிய குயிலுருவாகி, மரந்தனில் ஏறினார் - மரத்தின்மேலேறினார், உந்தீபற—, வானவர் கோன் என்றே - தேவர்கட்கரசனென்றே, உந்தீபற—, எ - று.

(க - ரை.) தேவர்கோன் ஓர் குயில் வடிவாய் மரத்திலேறினான் என்று, உந்தீபற, என்பது.

(வி - ரை.) பூங்குயில் - அழகுபொருந்திய குயில் எனினுமாம். பூ - அழகு. வானவர் - விண்ணுலகத்துள்ளார். (கூ)

வெஞ்சினவேள்விவியாத்திரனார்தலை
துஞ்சினவாபாடியுந்தீபற
தொடர்ந்தபிறப்பறவுந்தீபற.

(ப - ரை.) வெஞ்சினம் - கொடிய கோபத்தினையுடைய, வேள்வி வியாத்திரனார் - யாக குருவின், தலை துஞ்சின - சிரசு விழுந்த, ஆறு பாடி - விபரத்தைச்சொல்லி, உந்தீபற—, தொடர்ந்த பிறப்பு அற - பின்பற்றும் பிறவிகள் அற்றொழியும்படி பாடி, உந்தீபற—, எ - று.

(க - ரை.) வெவ்விய கோபத்தையுடைய யாக குருவின் சிரசு அற்று விழுந்த செய்தியை, நமது பிறவித்தொடர்பு அற்றுவிழும்படி பாடி உந்தீபற, என்பது.

(வி - ரை.) வேள்வி வியாத்திரனார் - யாக குரு. துஞ்சுதல் - கெடுதல். தொடர்தல் - பற்றுதல். (க0)

ஆட்டின்றலையைவிதிக்குத்தலையாகக்
கூட்டியவாபாடியுந்தீபற
கொங்கைகுலுங்கநின்றுந்தீபற.

(ப - ரை.) ஆட்டின் - மேடத்தின், தலையை - சிரத்தை, விதிக்கு தலையாக தக்கனுக்குச் சிரமாக, கூட்டிய - சேர்ப்பித்த, ஆறுபாடி - விபரத்தைச் சொல்லி, உந்தீபற—, கொங்கை - தனங்கள், குலுங்க-குலுங்கும்படி, நின்று - நின்று, உந்தீபற—, எ - று.

(க - ரை.) தக்கன் தன் சிரசிழந்த பின், ஆட்டின் சிரசைப்பொருந்தின விதத்தைச்சொல்லி, உந்தீபற, என்பது.

(வி - ரை.) தக்கனுக்குப் பிதா பிரமனானதால் தக்கனை விதி என்றார். இவன் தலையற்று வீழ்தலும் அதனை ஒரு பெரும்பூதம் விழுங்கிவிட்டதனால் ஆட்டின் சிரசைச் சேர்த்து ஒட்டலாயிற்று. (கக)

உண்ணப்புகுந்தபகனொளித்தோடாமே
கண்ணைப்பறித்தவாறுந்தீபற
கருக்கெடநாமெலாமுந்தீபற.

(ப - ரை.) உண்ணப்புகுந்த - அவிர்ப்பாகத்தை யுண்ணவந்த, பகன் - சூரியனானவன், ஒளித்து - பதுங்கி, ஓடாமே - ஓடாவகை, கண்ணை - [அவனது] நேத்திரத்தை, பறித்த ஆறும் - பிடிங்கின விதத்தைக் குறித்தும், உந்தீபற—, நாம் எல்லாம் - நாம் யாவரும், கரு கெட பிறப்பு ஒழிய, உந்தீபற—, எ - று.

(க - ரை.) அவிர்ப்பாகம் உண்ணவந்த சூரியன் ஒளித்து செல்லாத வகை, அவனது கண்ணைப்பிடிங்கின காரணத்தைப் பற்றியும், நமது பிறப்பு அற்று ஒழியும் பொருட்டும், உந்தீபற, என்பது.

(வி - ரை.) பகன் - பன்னிரண்டு சூரியருள் ஒருவன். கரு-பிறவி. (கஉ)

நாமகணாசிசிரம்பிரமன்படச்
சோமன்முகனெரித்துந்தீபற
தொல்லைவினைகெடவுந்தீபற.

(ப - ரை.) நாமகள் - கலைமகள், நாசிபட - மூக்கு அறுபட, பிரமன் - பிரமதேவன், சிரம் அறுபட - தலை அறுபட, சோமன் - சந்திரன், முகன் நெரித்து - முகத்தைத் தேய்த்தும், உந்தீபற—, தொல்லை-பழைய, வினை கெட-வினையொழிய, உந்தீபற—, எ - று.

(க - ரை.) கலைமகளின்மூக்கும் பிரமன் தலையும் அறுபட்ட செய்தியையும், சந்திரனது முகம் தேய்க்கப்பட்ட சேதியையும் குறித்து, நமதுதொல்வினை கெடும்படி, உந்தீபற, என்பது.

(வி - ரை.) நாமகள் - கலைவாணி. நெரித்தல் - தேய்த்தல். (கங)

நான்மறையோனுமகத்தியமான்படப்
போம்வழிதேடுமாறுந்தீபற
புரந்தரன்வேள்வியிலுந்தீபற.

(ப - ரை.) நான் மறையோனும் - பிரமனும், அகத்து - உள்ளிருக்கும், இயமான்பட - உயிர் அழியவே, வேள்வியில் - [அந்த] யாகத்தில், புரந்தரன் - தேவேந்திரன், போம்வழி - போகும்வழி, தேடுமாறு – [காண] தேடும் விபரத்தைக் குறித்து, உந்தீபற—, எ - று.

(க - ரை.) பிரமன் உயிர் அழியவே, தேவேந்திரன் யாகத்தை நீங்கி தப்பியோடும் பாதையைத்தேடின விதத்தைக் குறித்து, உந்தீபற, என்பது.

(வி - ரை.) நான்மறை யோனும் என்ற உம்மை உயர்வு சிறப்பு. இயமான் - உயிர். படுதல் - கெடுதல். (கச)

சூரியனார்தொண்டைவாயினிற்பற்களை
வாரிநெரித்தவாறுந்தீபற
மயங்கிற்றுவேள்வியென்றுந்தீபற.

(ப - ரை.) சூரியனார் - சூரியனுடைய, தொண்டை வாயினில் - கோவைக்கனிபோல் அழகினை வாய்ந்த வாயிலுள்ள, பற்களை - தந்தங்களை, வாரி நெரித்த ஆறும் - வாரி நெரித்த விபரத்தைக் குறித்தும், உந்தீபற—, வேள்வி-யாகசாலை, மயங்கிற்று என்று - கலங்கிற்றென்று, உந்தீபற—, எ - று.

(க - ரை.) சூரியனுடைய வாயின் தந்தங்கள் உதிர்ந்த விதத்தைப் பற்றியும், யாகசாலை கலங்கினதைக் குறித்தும், உந்தீபற, என்பது.

(வி - ரை.) சூரியனார் என்பதில் ஆர் விகுதி இழித்தற்கண் வந்தது. நெரித்தல் - தகர்த்தல். (கரு)

தக்கனாரன்றேதலையிழந்தார்தக்கன்
மக்களைச்சூழநின்றுந்தீபற
மடிந்ததுவேள்வியென்றுந்தீபற.

(ப - ரை.) தக்கனார் - தக்கனனவர், அன்றே - அந்த யாகஞ்செய்தகாலத்திலே, தலை இழந்தார் - சிரமிழந்தார், தக்கன் - தக்கனனவன், மக்களை - மக்களோடு, சூழநின்றும் - சூழ்ந்துநின்றும், உந்தீபற—, வேள்வி - யாகசாலை, மடிந்தது என்றும் - பாழாகினதென்றும், உந்தீபற—, எ - று.

(க - ரை.) தக்கன் தன் மக்களோடு சூழ்ந்திருக்கப்பட்டிருந்தும், சிரசும் யாகமும் அழிந்தது என்று, உந்தீபற, என்பது.

(வி - ரை.) தக்கன் தன் சிரமிழந்ததையும், யாகசாலை அழிந்ததையும் பார்க்குமிடத்து, மக்களிருந்தும் தக்கனையும் யாகத்தையும் காக்கவல்லமை இலர் என்பது தோன்றுகின்றது. (கசு)

பாலகனார்க்கன்றுபாற்கடலீந்திட்ட
கோலச்சடையற்கேயுந்தீபற
குமரன்றன்றாதைக்கேயுந்தீபற.

(வி - ரை.) பாலகனார்க்கு - சிறுகுழந்தைக்கு, அன்று - உதரக்கனல் எழுந்த அச்சமயத்தில், பாற்கடல் ஈந்திட்ட - திருப்பாற்கடலைக் கிருபை செய்து கொடுத்திட்ட, கோலம் - திருக்கோலத்தையுடைய, சடையற்கே - சடைமுடியையுடைய பரமசிவன் பொருட்டே, உந்தீபற—, குமரன்-குமாரன், தன் தாதைக்கே - தன்பிதாவாகிய சிவபெருமானுக்கே, உந்தீபற—, எ - று.

(க - ரை.) முந்நாளில் ஒரு குழந்தைக்கு உதரக்கனல் எழுந்த காலத்தில் அன்பு கூர்ந்து பாற்கடலைக் கொடுத்தவனாகிய பரமசிவனைக்குறித்தும், குமரனது பிதாவாகிய சிவபெருமானுக்கும், உந்தீபற, என்பது.

(வி - ரை.) பாலகன் - சிறுகுழவி. இவன் கௌதமமுனி புத்திரன். பாற்கடல் ஈந்திட்ட என்றது அப்பாலகன் பசியினால் வருந்தி அழுதகாலத்து சிவபெருமான் அவன் பசி தணிய உண்ணும்பொருட்டுத் திருப்பாற்கடலை ஏவியதைக் குறித்தது. (கஎ)

நல்லமலரின்மேனான்முகனார்தலை
யொல்லையரிந்ததென்றுந்தீபற
வுகிராலரிந்ததென்றுந்தீபற.

(ப - ரை.) நல்ல - நன்மையான, மலரின்மேல் - தாமரை புட்பத்தின் மேல் இருக்கின்ற, நான்முகனார்தலை - பிரமன் தலையானது, ஒல்லை - சீக்கிரத்தில், அரிந்தது என்றும் - கொய்யப்பட்டது என்றும், உந்தீபற—, உகிரால் - விரலில் நகத்தால், அரிந்தது என்று - அரியப்பட்டதென்றும், உந்தீபற—.

(க - ரை.) தாமரைமலரை ஆசனமாகக்கொண்ட பிரமன் சிரசை அதி சீக்கிரத்தில் விரலின் நகத்தால் அரியப்பட்டதென்று, உந்தீபற, என்பது.

(வி - ரை.) மலர்களுள் சிறந்திருத்தலால் தாமரைமலரை நல்ல மலரென்றார். ஒல்லை - விரைவு. அரிதல் - கொய்தல். உகிர் - நகம். (கஅ)

தேரைநிறுத்திமலையெடுத்தான்சிர
மீரைந்துமிற்றவாறுந்தீபற
விருபதுமிற்றதென்றுந்தீபற.

(ப - ரை.) தேரை - இரதத்தை, நிறுத்தி - நிறுத்திவைத்து, மலை-கைலையங்கிரியை, எடுத்தான் - தூக்கின இராவணேஸ்வரனது, சிரம் ஈர் ஐந்தும் - [அவன்] தலை பத்தும், இற்ற ஆறு - நெரிந்த காரணத்தைக் குறித்து, உந்தீபற—, இருபதும் இற்றது என்றும்-இருபது புயமும் நெரிந்த தென்றும், உந்தீபற—, எ - று.

(க - ரை.) செல்லா நின்ற இரதத்தை நிறுத்தி இராவணன் கைலையைத் தூக்க, அவன் பத்து தலைகளும் இருபது தோட்களும் நெரிந்த விதத்தைப் பற்றி, உந்தீபற, என்பது.

(வி - ரை.) எடுத்தல் - தூக்குதல். சிரம் ஈரைந்து என்றமையால் அதற்கொக்க இருபதும் என்றது தோட்கள் இருபதையையும் குறித்தது எனக்கொள்க. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தோணேக்கம்.

## பிரபஞ்ச சுத்தி.

[பிரபஞ்ச சுத்தி என்பது ஆன்மாக்களைச் சுத்திகரித்தல்.]

நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

பூத்தாரும்பொய்கைப்புனலிதுவேயெனக்கருதிப்
பேய்த்தேர்முகக்குறும்பேதைகுணமாகாமே
தீர்த்தாய்திகழ்தில்லையம்பலத்தேதிருநடஞ்செய்
கூத்தவுன்சேவடிகூடும்வண்ணந்தோணேக்கம்.

(ப - ரை.) பூத்து ஆரும்-பலவித புட்பங்களைப் பூத்து நிரம்பி இருக்கிற, பொய்கைப்புனல் - தடாகநீர், இதுவே - இதுதான், எனக்கருதி - என்று எண்ணி, பேய்த்தேர் - கானல்நீரை, முகக்குறும் - மொள்ளத் தொடங்குகின்ற, பேதைகுணம் ஆகாமே-பேதைமைகுணம் எனக்கு உண்டாகாமல், தீர்த்தாய் - [அறியாத்தன்மையை] விலக்கினேய், திகழ் - பிரகாசிக்கின்ற, தில்லை அம்பலத்தே - திருச்சிற்றம்பலத்தின் கண்ணே, திருநடம் செய் - திருக்கூத்துச் செய்கின்ற, கூத்தா - கூத்தை யுடையவனே, உன் சேவடி - உன் அருமை தங்கிய திருத்தாளை, கூடும் வண்ணம் - சேரும் விதம், தோணேக்கம்—, எ-று

(க - ரை.) கானல் நீரைத் தடாக நீரென எண்ணி அதனைப் பானம் பண்ண நினைக்கிற பேதையர்போ லாகாமல் என் அறியாத்தன்மையை விலக்

கினே, ஆதலால், திருச்சிற்றம்பலத்தின் கண்ணே ஆநந்தக் கூத்தாடுகின்ற பரம் பொருளே! உன் திருவடியை யடையும் விதத்தைப்பற்றி யாம் தோணோக்க மாடுவோம், என்பது.

(வி - ரை.) பொய்கை - தடாகம், பேய்த்தேர் - கானல்நீர், தோணோக்கம் - மக்களின் விளையாட்டி லொன்று. (க)

என்றும்பிறந்திறந்தாழாமேயாண்டுகொண்டான்
கன்றால்விளவெறிந்தான்பிரமன்காண்பரிய
குன்றாதசீர்த்தில்லையம்பலவன்குணம்பரவித்
துன்றார்குழலினீர்தோணோக்கமாடாமோ.

(ப - ரை.) என்றும் - எந்நாளும், பிறந்து இறந்து - பிறப்பு இறப்பும், ஆழாமே - [அப்] பிறவிக்கடலில் உழன்று அழுந்தாமல், ஆண்டுகொண்டான் - [என்னை அடிமையாக] ஆண்டுகொண்டவனும், கன்றால் - கன்றைக்கொண்டு, விளவு எறிந்தான் - விளாங்கனியை எறிந்த திருமாலும், பிரமன் பிரமதேவனும், காண்பரிய - [என்பவர்கள்] காணுதற் கருமையாகிய, குன்றாதசீர் - குறைபடாத சிறப்பு வாய்ந்த, தில்லை யம்பலவன் - தில்லை யம்பலத்தை யுடையவனாகிய சிவபெருமானது, குணம் பரவி - அருமை குணத்தைத் துதித்து, துன்று ஆர் - நெருக்கம் பொருந்திய, குழலினீர் - கூந்தலை யுடையீர், தோணோக்க மாடாமோ—, எ - று.

(க - ரை.) என்னைப் பிறவிக்கடலில் ஆழாமல் எந்நாளும் ஆண்டுகொண்டவனும், அரிபிரமாதிகள் காணொணாதவனுமாகிய தில்லை யம்பலவனது மங்கள குணங்களைப் புகழ்ந்து தோணோக்க மாடுவோம், என்பது.

(வி - ரை.) பிறந்திறந் தாழாமே என்றமையால் பிறப்பினை ஒருகடலும், இறப்பினை ஒருகடலுமாகக்கொள்க. துவாபர யுகத்தில் கிருஷ்ணாவதாரத்தில் கன்றால் விளவெறிந்ததைக் குறிப்பிட்டது. (உ)

பொருட்பற்றிச்செய்கின்றபூசனைகள்போல்விளங்கச்
செருப்புற்றசீரடிவாய்க்கலசமூனமுதம்
விருப்புற்றுவேடனார்சேடறியமெய்குளிர்ந்தங்
கருட்பெற்றுநின்றவாதோணோக்கமாடாமோ.

(ப - ரை.) பொருள் பற்றிசெய்கின்ற - பொருளைச் செலவிட்டுச் செய்கின்ற, பூசனைகள்போல் விளங்க - பூசைகள் போல் தோற்றவும், செருப்பு உற்ற - பாதரக்ஷைத்தரித்த, சீர் அடி - சிறப்புற்ற பாதத்தையும், வாய்க்கலசம்—கலசத்தை ஒத்த வாயினிடம், ஊன் அமுதம் - மாமிசமாகிய அமிர்தத்தையும், விருப்பு உற்று - [உள்ளன்புடன்] விரும்பி, வேடனார் - [போதப்பி நாட்டுக்கு இளவரசனாகிய திண்ணனெனும்] திருக்கண்ணப்ப தேவரது, சேடு - மகிமை

யை, அறிய-[உலகோர்] அறியும்படியாகவும், மெய்குளிர்ந்து-தேகம் குளிர்ந்து, அங்கு - அங்ஙனமே, அருள் பெற்று நின்ற ஆறு - கருணையைப் பெற்று நின்ற விதத்தைக் குறித்து, தோணோக்கம் ஆடாமோ—, எ - று.

(க - ரை.) பூசனைக்குரிய பற்பல பொருள்களைக் கொண்டு செய்கிற பூசைபோலப் பிரகாசிக்கும்படி கண்ணப்பநாயனுர் [மஞ்சனம் தங்கிய சொர்ண முகி ஆற்றுநீரை வாயிலிடமாகக்கொண்டு அபிஷேகம் செய்தும், உருசிபார்த்து பரமனுக்கு ஊட்டிவைத்தும்] இறைவனது திருவருளைப்பெற்று விளங்கின வரலாற்றைக் குறித்துத் தோணோக்கமாடுவோம், என்பது.

(வி - ரை.) கலசம் - குடம், பொருள் - பூசைக்குரிய பொருள்கள். வேடனுர் என்பதில் ஆர் விகுதி திண்ணனுரது உயர்வைக் குறித்து. சேடு - பெருமை. (௩)

கற்போலுநெஞ்சங்கசிந்துருகக்கருணையினு
னிற்பானைப்போலவென்னெஞ்சினுள்ளேபுகுந்தருளி
நற்பாற்படுத்தென்னைநாடறியத்தானிங்ஙன்
சொற்பாலதானவாதோணோக்கமாடாமோ.

(ப - ரை.) கல்போலும் - கல்லை ஒற்ற, நெஞ்சம் - மனமானது, கசிந்து உருக - [நெக்குண்டு] கசிந்து உருகும்படி, கருணையினுல் - கிருபா நோக்கத்தினுல், நிற்பானைப்போல - நிற்பவனைப்போல், என் நெஞ்சினுள்ளே - என் இருதயத்தினுள்ளே, புகுந்தருளி-உட்புகுந்தருளி, நற்பால்படுத்து-நற்பதவியி லிருக்கவைத்து, என்னை-அடியேனை, நாடு அறிய-நாட்டிலுள்ளார் [அன்பின் மிகுதியால்] அறியும்படி, தான் - தான், இங்ஙன் - இப்படி, சொற்பாலது ஆனவாறு-சொல்லின்பாற் பட்டதான விதத்தைக் குறித்து, தோணோக்க மாடாமோ—, எ - று.

(க - ரை.) இறைவனுனவன் கல்லை நிகர்த்த மனமானது கசிந்துருகும்படி என்னுட் புகுந்து என்னை நன்மார்க்கத்தி லிருத்தி, பூலோகத்தாரறியத் தான் புகழ்பெற்ற வரலாற்றைக்குறித்துத் தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) பால் - பகுதி. நாடு என்றது நாட்டிலுள்ளாரை. சொல் - புகழ். (௪)

நிலநீர்நெருப்புயிர்நீள்விசும்புநிலாப்பகலோன்
புலனுயமைந்தனேடெண்வகையாய்ப்புணர்ந்துநின்று
னுலகேழெனத்திசைபத்தெனத்தானெருவனுமே
பலவாகிநின்றவாதோணோக்கமாடாமோ.

(ப - ரை.) நிலம் - மண், நீர் - ஜலம், நெருப்பு - அக்கினி, உயிர் - காற்று, நீள் - நீண்ட, விசும்பு - ஆகாயம், நிலா - சந்திரன், பகலோன் - சூரியன்,

புலன் ஆய மைந்தனோடு-புலன்களாய் யமைத்ததோடு, எண்வகையாய் – எட்டு விதமாய், புணர்ந்து நின்றான் - சேர்ந்து நின்றான், உலகு ஏழ் என - உலகம் ஏழு எனச் சொல்லவும், திசை-திக்கு, பத்து பத்து என்று சொல்லவும், தான் ஒருவனுமே - தான் ஒருவனே, பல ஆகி நின்ற ஆறு - பல பொருளாய் நின்ற விதத்தைக் குறித்து, தோணோக்கம் ஆடாமோ—, எ - று.

(க - ரை.) மண் முதலாகிய எண் [8] மூர்த்த மாகவும், சப்த உலகங்களாகவும், இறைவ னொருவனே எங்கும் வியாபித்து நின்ற செய்தியைக் குறித்துத் தோணோக்க மாடுவோம், என்பது.

(வி - ரை.) பகலை யுண்டாக்குவோனாதலால் சூரியனைப் பகவோன் என்றார். மைந்தன் – புருடன். (ஆன்மா) (௫)

புத்தன்முதலாயபுல்லறிவிற்பல்சமயந்
தத்தமதங்களிற்றட்டுளுப்புப்பட்டுநிற்கச்
சித்தஞ்சிவமாக்கிச்செய்தனவேதவமாக்கு
மத்தன்கருணையினாற்றோணோக்கமாடாமோ.

(ப - ரை.) புத்தன் முதல் ஆய - புத்தன் முதலாகிய, புல் அறிவில் – அற்ப புத்தியையுடைய, பல் சமயம் - பல சமய வாதிகளும், தத்தம் மதங்களில் தத்தமது மதங்களிலே, தட்டுளுப்புப்பட்டு - தடுமாற்ற மடைந்து, நிற்க - நிற்க, சித்தம் - என்மனதை, சிவம் ஆக்கி - சிவமாக்கி, செய்தனவே தவம் ஆக்கும் - செய்தவற்றையே தவமாக்குகின்ற, அத்தன் - கடவுளினுடைய, கருணையினால் - பெருங்கருணையால், தோணோக்கம் ஆடாமோ—, எ – று.

(க - ரை.) புத்தன் முதலாகிய பல சமய வாதிகளும் தமது அறியாமையால் தத்தம் மதங்களில் தடுமாறி நிற்க, இறைவன் தன் கருணையால் என் மனத்தைச் சிவ உருவாக்கி, என் செய் தொழிகள் யாவையும் தவத்தொழில்களாகத் திருவுளம் பற்றினதைக் குறித்துத் தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.] சமயம் - மதம், தட்டுளுப்பு - தடுமாற்றம். (௬)

தீதில்லைமாணிசிவகருமஞ்சிதைத்தானைச்
சாதியும்வேதியன்றாதைதனைத்தாளிரண்டுஞ்
சேதிப்பவீசன்றிருவருளாற்றேவர்தொழப்
பாதகமேசோறுபற்றினவாதோணோக்கம்.

(ப - ரை.) தீது இல்லை – கெடுதியில்லை, மாணி-பிரமசாரியின், சிவகருமம் – சிவகருமத்தை, சிதைத்தானை - ஒழித்தவனை, சாதியும் - சாதியாலும், வேதியன் - பிராமணன், தாதைதனை - தந்தையை, தாள் இரண்டும் சேதிப்ப- கால்கள் இரண்டையும் வெட்ட, ஈசன் திருவருளால் - சிவபெருமானது திருவருளினால், தேவர் தொழ - தேவர் வணங்க, பாதகமே-பாவத்தையே, சோறு பற்றின் ஆறு - புண்ணியமாகக் கொண்ட விதத்தைப்பற்றி, தோணோக்கம்—, எ - று.

(க - ரை.) பிரமசாரியாகிய தண்டியடிகள் தாம் செய்த சிவகருமத்தைக் கெடுக்க வந்த தந்தையின் கால்களிரண்டையும் வெட்ட, வெட்டின அப்பாகத்தையே புண்ணியமாகக்கொண்டு அவர்க்குச் சிவகதியைத் தந்தருளினதைக் குறித்துத் தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) மணி - பிரமசாரி. சிவகருமம் - சிவபூசை முதலி நற்கருமம். சோறு - இங்கு புண்ணியத்தைக் குறித்து. (௭)

மானமழிந்தோமதிமறந்தோமங்கைநல்லீர்
வானந்தொழுந்தென்னன்வார்கழலேநினைந்தடியோ
மானந்தக்கூத்தனருள்பெறினுமவ்வணமே
யானந்தமாகிநின்றுடாமோதோணோக்கம்.

(ப - ரை.) மங்கைநல்லீர் - பெண்களே, மானம் - மானாபிமானம், அழிந்தோம் - கெட்டோம், மதிமறந்தோம் - புத்தி மறந்தோம், வானம் தொழும்- வானுடர் வணங்குகின்ற, தென்னன் - தென்னனது, வார்கழலே - நீண்ட திருவடிகளையே, நினைந்து - எண்ணி, அடியோம் - அடியோங்கள், ஆனந்தக் கூத்தன் - அநந்தக்கூத்தனது, அருள் பெறின் - அருளடைந்தால், நாம்-யாம், அவ்வணமே - அவ்வாறாகவே, ஆனந்தம் ஆகி நின்று - இன்பவடிவாகிநின்று, தோணோக்க மாடாமோ—, எ - று.

(க - ரை.) பெண்களே! தென்னனது திருவடியை நினைந்து மான முதலியவற்றை இழந்தோம் [ஆனதால்] ஆநந்த நடனஞ் செய்வோனாகிய சிவபெருமானது திருவருளைப் பெற்றால் இன்ப உருவாய் நின்று தோணோக்க மாடுவோம், என்பது.

(உ - ரை.) மானம் - பெருமை, வெட்கம் என்று மையும். (அ)

எண்ணுடைமூவரிராக்கதர்களெரிபிழைத்துக்
கண்ணுதலெந்தைகடைத்தலைமுன்நின்றதற்பி
னெண்ணிலியிந்திரரெத்தனையோபிரமர்களு
மண்மிசைமால்பலர்மாண்டனர்காண்டோணோக்கம்.

(ப - ரை.) எண் உடை - மதியினை யுடைய, மூவர் இராக்கதர் - மூன்று அசுரர்கள், எரிபிழைத்து-தீயைத்தப்பி, கண்ணுதல் - நெற்றிக்கண்ணையுடைய, எந்தை - எந்தந்தையாகிய சிவபிரானது, கடைத்தலைமுன் - கடைத்தலையில், நின்றதற்பின் - நின்றபிறகு, எண் இலி - அளவிலிகளாகிய, இந்திரர் - இந்திரரும், எத்தனையோ பிரமர்களும் - எத்தனையோ பிரமாக்களும், மால் பலர் - திருமால்கள் பலரும், மண்மிசை - மண்ணின்மீது, மாண்டனர் - மடிந்தார்கள், தோணோக்கம்—, எ - று.

(க - ரை.) மூன்று அவுணர்கள் யாகத்துக்குத் தப்பி ஓடிச் சிவபெருமானது கடைவாயிற் படியில் நின்ற பிறகு, எண்ணுதற்கரிய இந்திரன் முதலாயினோர் இறந்தார்கள் என்னும் செய்தியைக் குறித்துத் தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) எண் - மதிப்பு. மூவர் இராக்கதர் என்பது அன்றுயாகம் அழித்தகாலத்து பதுங்கியோடிய மூன்று அசுரர்கள். எரி - நெரிப்பு. கடைத்தலை - கடைவாயில். (க)

பங்கயமாயிரம்பூவினிலோர்பூக்குறையத்
தங்கணிடந்தரன்சேவடிமேற்சாத்தலுமே
சங்கரனெம்பிரான்சக்கரமாற்கருளியவா
றெங்கும்பரவிநாந்தோணோக்கமாடாமோ.

(ப - ரை.) ஆயிரம் பங்கயம் பூவில் - ஆயிரந் தாமரை மலர்களில், ஓர் - ஒரு, பூ - அத்தாமரைப் புட்பம், குறைய - குறைவுபடவுங் கண்ட, தம் கண் - தமது திருக்கண்ணை, இடந்து - தோண்டி, அரன் - சிவபெருமானது, சேவடி மேல், திருவடியில், சாத்தலும் - சாத்தித்துதிக்கவும், சங்கரன் - சர்வசங்கரனாகிய, எம்பிரான் - எமது பிரானான சிவபெருமான், மாற்கு - [அவ்வாறு பூசித் துதிக்கா நின்ற] திருமாலுக்கு, சக்கரம் - சக்கரப்படையை, அருளிய ஆறு-[அன்பின் மிகுதியாற்] கொடுத்தருளிய வரலாற்றை, நாம் எங்கும்பரவி - நாம் எவ்விடத்தும் சென்று, தோணோக்கமாடாமோ—, எ - று.

(க - ரை.) திருமால் ஆயிரம் தாமரை மலரைக்கொண்டு சிவபெருமானை அன்பின் மிகுதியால் அருச்சிக்குங் காலையில், அம்மலர்களில் ஓர் மலர் குறையக் கண்டு தன் கண்ணைப்பறித்து அருச்சிக்க, இறைவன் மகிழ்ந்து அம்மாலுக்குச் சக்கராயுதம் அருளின மகிமையைப் புகழ்ந்து தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) பங்கயம் - சேற்றில் முளைப்பது. பங்கம் - சேறு. ஜம் - பிறப்பது. வடமொழியில் ஜகரம் யகரமாகத் திருந்தது. இடத்தில் - தோண்டுதல். பரவி என்பதற்கு பரவச்செய்து என்பது. (கய)

காமனுடலுயிர்காலன்பற்காய்கதிரோ
னுமகணுசிசிரம்பிரமன்கரமெரியைச்
சோமன்கலைதலைதக்கனையுமெச்சனையுந்
தூய்மைகள்செய்தவாதோணோக்கமாடாமோ.

(ப - ரை.) காமன் உடல் - [இரதிமகிழ்ந்த] மன்மனது தேகத்தையும், காலன் - யமனது, உயிர் - ஆவியையும், காய் கதிரோன் - அக்கினிச்சுவாலைகளையுடைய சூரியனது, பல் - பற்களையும், நாமகள் நாசி - சரஸ்வதியின் மூக்கையும், பிரமன் சிரம் - பிரமனது தலையையும், எரியை - அக்கினி தேவ

னது, கரம் - கையையும், சோமன் - சந்திரனது, கலை - கலையையும், தக்கனை யும் எச்சனையும் தலை-தக்கன் எச்சன் என்பவருடைய சிரசையையும், தூய்மை கள் செய்து ஆறு - பரிசுத்தமாக்கின வரலாற்றை நினைத்து, தோணோக்கமா டாமோ—எ - று.

(க - ரை) மன்மதன் சரீரத்தையும், யமனுயிரையும், சூரியன் பல்லை யும், சரசுவதி மூக்கையும், பிரமன் தலையையும், அக்கினிதேவன் கையையும், சந்திரன் கலையையும், தக்கன் எச்சன் இருவருடைய சிரசுகளையும், பரிசுத்த மாக்கின விதத்தைப்பற்றித் தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) கலை - கண்டம். [கூறு] தூய்மை செய்தல் - இல்லை ஆக்குதல். (கக)

பிரமனரியென்றிருவருந்தம்பேதைமையாற்
பரமியாம்பரமமென்றவர்கள்பதைப்பொடுங்க
வரனாரழலுருவாயங்கேயளவிறந்து
பரமாகிநின்றவாதோணோக்கமாடாமோ.

(ப - ரை.) பிரமன் அரி என்ற - பிரமன் திருமால் என்று சொல்லப் பட்ட, இருவரும் - இருவர்களும், தம் பேதைமையால் - தமது அறியாமையி னல், யாம் பரம் யாம் பரம் - யாம்பரம் யாம்பரம், என்றவர்கள் - என்று சண்டை செய்தவர்களுடைய, பதைப்பு ஒடுங்க - அப்பதட்டம் அடங்கும் வண்ணம், அரனார் - சிவபெருமானர், அழல் உரு ஆய் - அக்கினி உருவமாகி, அங்கே - அவ்விடத்தே, அளவு இறந்து - அளவு கடந்து, பரம் ஆகி நின்ற ஆறு - பரம்பொருளாகி நின்ற வரலாற்றைச் சொல்லி, தோணோக்க மாடா வோம்—, எ - று.

(க - ரை.) பிரமவிட்டுணுக்கள் யாம் பெரியோம் யாம் பெரியோம் என்று வாதிட்டபோது, அவ்விருக்கிடையே அக்கினி சொரூபமாய் எழுந்து நின்ற சிவபிரானது வரலாற்றைக்குறித்து தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) பரம் - மேலான பொருள். பதைப்பு - வாய்துடிப்பு. அழலு ருவா யங்கே யளவிறந்து என்பது இக் கலியுகத்துக்கு மலையுருவாய் நின்ற தென் றறிக. (கஉ)

ஏழைத்தொழும்பனேனெத்தனையோகாலமெல்லாம்
பாழுக்கிறைத்தேன்பரம்பரனைப்பணியாதே
யூழிமுதற்சிந்தாதநன்மணிவந்தென்பிறவித்
தாழைப்பறித்தவாதோணோக்கமாடாமோ.

(ப - ரை.) ஏழைத்தொழும்பனே - ஏழைத் தொண்டனேன், எத்தனை யோ காலம் எல்லாம் - எத்தனையோகால் முழுதும், பரம்பரனை - பரம்பொரு

ளானே, பணியாதே-துதித்து வணங்காமல், பாழுக்கு இறைத்தேன் - பாழாக்கி இறைத்துவிட்டேன், ஊழிமுதல் - ஊழி முதலான காலத்தும், சிந்தாத-அழியாத, நல்மணி - பெருமை தங்கிய மாணிக்கம்போல் பவனுகிய சிவபெருமான், வந்து - (கிருபை கூர்ந்து) எழுந்தருளி வந்து, என் பிறவி - என் பிறப்பினது, தாழை - அடிவேரை, பறித்து ஆறு - களைந்த வரலாற்றைக் குறித்து தோணோக்க மாடாமோ—, எ - று.

(க - ரை.) [அந்தோ!] ஏழைத்தொண்டனுகிய நான் நெடுங்காலம் சிவபெருமானைத் துதிக்காமல் உழன்று கெட்டேன்! ஆயினும் அப் பரமசிவன் தானே அத் திருப்பெருந்துறையின் கண்ணே ஆண்டி உருவத்தோடு எழுந்தருளி வந்து, என் பிறவி மூளையைக் களைந்த விதத்தைக் குறித்துத் தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) பாழுக்கிறைத்தல் - பாழ்நிலத்துக் கிறைத்தல், அது இங்கு வீணுக் குழைத்தல் என்னும் பொருள் குறித்து வந்தது. பரம்பரம்-மேலோரின் மேலோனுக, தனக்குமேல் ஒரு கடவுளில்லாதவனென்பது கருத்து. ஊழி - ஊழிகாலம் [யுகமுடிவு காலம்.] தாழ் - தாள் [அடி] வேர் என்பது பொருள். (கங)

உரைமாண்டவுள்ளொளியுத்தமன்வந்துளம்புகலுங்
கரைமாண்டகாமப்பெருங்கடலைக்கடத்தலுமே
யிரைமாண்டவிந்திரியப்பறவையிரிந்தோடத்
துரைமாண்டவாபாடித்தோணோக்கமாடாமோ.

(ப - ரை.) உரைமாண்ட - சொல்லிறந்த, உள் ஒளி - உள்ளொளியாகி, உத்தமன் - உத்தமனுகிய சிவபெருமான், வந்து - [கிருபையுடன்] எழுந்தருளி வந்து, உள்ளம் - என் மனத்தினிடம், புகலும் - புகுதலும், கரைமாண்ட - கரையில்லாத, பெரு - பெரிய, காமக்கடலை - காமாந்தக்கடலை, கடத்தும் - அதை - விட்டுத் தாண்டுதலும், இரைமாண்ட-இரையற்ற, இந்திரியப் பறவை- இந்திரியங்களாகிய பறவைகள், இருந்து ஓட - பயந்திருந்து ஓட, துரைமாண்ட ஆறு பாடி - இடமற்ற வரலாற்றைச் சொல்லி, தோணோக்க மாடாமோ, எ - று.

(க - ரை.) மனம் வாக்குக் கெட்டாதவனுகிய ஜகதீசன் என் மனத்தினிடத்தே புகுதலும், அதனல் யான் காமாந்த கடலைக் கடந்தேன், அவ்வாறு கடத்தலும் இந்திரியப் பறவைகள் ஓட இடமற்ற விதத்தைப்பாடி தோணோக்கம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) மாளல் நான்கும் - அறுதல் என்னும் பொருளன, இந்திரியம் - பொறி. துரை - துறை. [இடம்] இரை என்றது இங்கு புலன்களை. [விடயங்களை, விடையானுபவத்திற் தலைப்பட்டதென்பது பொருள். (கச)

திருச்சிற்றம்பலம்.

வ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பொன்னூசல்.

## அருட்சுத்தி.

[அருட்சுத்தி என்பது அருளோடே கூடுதல்.]

ஒப்புமைப்பற்றிவந்த

ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பா.

திருச்சிற்றம்பலம்.

சீரார்பவளங்கான்முத்தங்கயிறாக
வேராரும்பொற்பலகையேறியினிதமர்ந்து
நாராயணனறியாநாண்மலர்த்தாணாயடியேற்
கூராகத்தந்தருளுமுத்தரகோசமங்கை
யாராவமுதினருட்டாளிணைபாடிப்
போரார்வேற்கண்மடவீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) சீர் - சிறப்பு, ஆர் - பொருந்திய, பவளம் - பவளத்தையே, கால் ஆக - கால்களாகவும், முத்தம் - முத்துமாலையே, கயிறு ஆக - கயிறாகவுங் கொண்ட, ஏர் - அழகு, ஆரும் - பொருந்திய, பொன்-பொன்னினாற் செய்த, பலகை ஏறி - பலகையின்மேலேறி, இனிது அமர்ந்து - இனிதாக எழுந்தருளி இருந்து, நாயடியேற்கு, - நாயினுங் கடையேனாகிய அடியேனுக்கு, நாராயணன் அறியா - திருமாலுந் தேடுதற்கரியதாகிய, நாள் மலர் தாள் - புதிதாகிய தாமரை மலர்போலும் பிரகாசிக்கின்ற (இரண்டு) திருவடிகளை, ஊர் ஆக - நாடாக, தந்தருளும்-அருமையோடு கொடுத்தருளுகின்ற, உத்தரகோசமங்கை - திருவுத்தரகோசமங்கையி லெழுந்தருளியுள்ள, ஆரா அமுதின் - யாவர்க்கும் தெவிட்டாத அமிர்தம்போல்பவனாகிய சிவபெருமானது, அருள் தாள் இணை பாடி - அருளைக் கொடுக்கின்ற இரண்டு திருவடிகளைப் புகழ்ந்து பாடி, போர் ஆர் - போர்த்தொழி லமைந்த, வேல்கண்-வேலைப்போன்ற கண்களையுடைய, மடவீர் - பெண்களே, பொன் ஊசல் ஆடாமோ—, எ - று.

(க - ரை.) பவளக்கால் முதலிய உறுப்புகளைக்கொண்ட பொற் பலகையி லேறி யமர்ந்து, தன் திருவடியை அடியேனுக்குத் தந்தருளினமையால், அத்திருவடியைப் புகழ்ந்துப் பாடி பொன்னூசல் யாம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) திருவடி-அருள்வடிவாதலால் அருட்டாள் என்றார். இணை - இரண்டு. மடவீர் - மடமைப்பண்படியாகப் பிறந்த முன்னிலைப்பெயர். (க)

மூன்றங்கிலங்குநயநத்தன்மூவாத
வான்றங்குதேவர்களுங்காணாமலரடிக
டேன்றங்கித்தித்தித்தமுதூறித்தான்றெளிந்தங்
கூன்றங்கிநின்றுருக்குமுத்தரகோசமங்கைக்
கோன்றங்கிடைமருதுபாடிக்குலமஞ்ஞை
போன்றங்கனநடையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) மூன்று - மூன்றாக, அங்கு - அவ்விடத்தே, இலங்கு - பிரகாசியாநின்ற, நயநத்தன் - திருக்கண்களை யுடைய சிவபெருமானது, வான்தங்கு தேவர்களும் - விண்ணுலகத்தில் தங்கி வாழாநின்றதேவர்களும், காணா - காணக்கூடாத, மலர் அடிகள் - தாமரைப்போன்ற, [திவ்ய] திருவடிகள், தேன் தங்கி - தேனின் சுவையிருந்து, தித்தித்து - மதுரித்து, அமுது ஊறி - அமிர்தம்போல ஊறி, தெளிந்து — தேர்ச்சியடைந்து, அங்கு - அவ்விதமாக, ஊன்தங்கி நின்று - உடம்பினிடத்தில் தங்கியிருந்து, உருக்கும்- உருக்குகின்ற, உத்தரகோச மங்கை கோன் - திருவுத்தரகோச மங்கைக்கு அரசனாயிருக்கும் தலைவன், தங்கு - தங்கி இரா நின்ற, இடை மருது - திருவிடை மருதூரை, பாடி - வாயாரப் பாடி, குலம் மஞ்ஞைபோன்று - மேன்மையாகிய மயில் போன்று, அங்கு - அவ்வாறே, அன்ன நடையீர் - அன்னப்பக்ஷியின் நடையை யுடைய மாதரீர், பொன்னூசல் ஆடாமோ—, எ - று.

(க - ரை.) சோமசூரியாக்கினிகளாகிய திருநேத்திரங்களை யுடையவனும், உத்தரகோச மங்கைக்கு அரசனும் ஆகிய சிவபெருமானது திருவிடைமருதூரென்னும் திவ்ய க்ஷேத்திரத்தைப் பாடி பொன்னூசல் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) நயநம் - கண், வடமொழி. மூவாத என்னும் எதிர்மறைப் பெயரெச்சத்தில் பகுதி மூ. ஊன் - உடம்பு. அது இங்கு மனத்தைக்குறித்ததாகக் கொள்க. (உ)

முன்னீறுமாதியுமில்லான்முனிவர்குழாம்
பன்னூறுகோடியிமையோர்கடாநிற்பத்
தன்னீறெனக்கருளித்தன்கருணைவெள்ளத்து
மன்னூறமன்னுமணியுத்தரகோசமங்கை
மின்னேறுமாடவியன்மாளிகைபாடிப்
பொன்னேறுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) முன் - நினைக்கின்ற, ஈறும் ஆதியும் இல்லான் - இறுதியும் முதலும் இல்லாதவனுகிய சிவபெருமான், பல் நூறு கோடி - பற்பல நூறு கோடித் தொகையினராகிய, முனிவர் குழாம் - முனிவர் கூட்டங்களும், இமையோர்கள் - இமைகொட்டா தேவர்களும், நிற்ப - நிற்க, தன் நீறு - தனது திருவெண்ணீற்றை, எனக்கு அருளி - எனக்குக் கொடுத்தருளிச்செய்து, தன்கருணை வெள்ளத்து - தன் கருணைப் பெருக்கத்தோடு, மன் ஊற மன்னும் - தன் மகிமை வளர நிலைபெற்ற, மணி - அழகிய, உத்தரகோசமங்கை - திருவுத்தரகோச மங்கையிலுள்ள, மின் எறும் மாடம்-மின்னலைப்போல் பிரகாசிக்கின்ற மேல் மாடங்களை யுடைய, வியன்மாளிகை பாடி-பெருமை யமைந்த திருமாளிகையைப் பாடி, பொன் எறு - தேமல் படர்ந்த, பூண் - ஆபரணங்களையணிந்த, முலையீர் - தனங்களை யுடைய பெண்காள், பொன்னூசலாடாமோ—, எ - று.

(க - ரை.) முடிவு முதல் இல்லாதவனுகிய சிவபெருமானது திருவுத்தரகோச மங்கைப் பதியிலிருக்கும் மாடமாளிகைகளைப் பாடிப் பொன்னூசல், யாம் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) முன்னல் - நினைத்தல். பன்னூறு கோடி என்றது கணக்கற்ற கோடி. பொன்னேறு பூண் என்பதற்கு பொன்னுபரணம் என்று உரைத்தலும் பொருந்தும். (ரு)

நஞ்சமர்கண்டத்தனண்டத்தவர்நாதன்
மஞ்சுதோய்மாடமணியுத்தரகோசமங்கை
யஞ்சொலாடன்னேடுங்கூடியடியவர்க
ணெஞ்சுளேநின்றமுதமூறிக்கருணைசெய்து
துஞ்சல்பிறப்பறுப்பான்றூயபுகழ்பாடிப்
புஞ்சமார்வெள்வளையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) நஞ்சு அமர் கண்டத்தன் - விட மமர்ந்த திருக் கண்டத்தை யுடையவன், அண்டத்தவர்நாதன் - தேவ லோகத்தார்க்கு இறைவன், மஞ்சு தோய் - கருத்த மேகங்களை தவழுகின்ற, மாடம் - மேன்மாடங்களை யுடைய, மணி - அழகு வாய்ந்த, உத்தரகோச மங்கை - திருவுத்தரகோச மங்கையில், அம்சொல்லாளோடும் கூடி - இன்ப மொழியாளாகிய உமாதேவியோடு சேர்ந்து, அடியவர்கள் நெஞ்சுளே நின்று - அடியவரது மனத்துளே கூடி யிருந்து, அமுதம் ஊறி - அமிர்தம் சுரந்து, கருணை செய்து - கிருபைசெய்து, துஞ்சல்- இறத்தல், பிறப்பு அறுப்பான் - [மறுபடியும்] பிறத்தல்களைச் சேதிப்பவன், [அக்கொற்றவனது]தூய புகழ்பாடி-பரிசுத்தமாகிய புகழைப்பாடி, புஞ்சம் ஆர்-தொகுதியாகப் பொருந்திய, வெள்வளையீர்-வெள்வளையை யுடையபெண்காள், பொன்னூசலாடாமோ—, எ - று.

(க - ரை.) விடகண்டனும், தேவர் பிரானும், உத்தரகோச மங்கையில் உமாதேவியாரோடு எழுந்தருளி அடியவர்கள் மனத்தில் நின்று அவர்களுடைய

இறப்புப் பிறப்புகளை ஒழிப்பவனுமாகிய சிவபெருமானது திருப்புகழைப் பாடி, பொன்னூசல் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) அமர்தல் - தங்குதல். அண்டம் - விண்ணுலகம். அம் - இவ்விடத்து இனிமையை யுணர்த்திற்று. வெள்வளை - சங்குவளையல். (௪)

ஆணோவலியோவரிவையோவென்றிருவர்
காணாக்கடவுள்கருணையினாற்றேவர்குழா
நாணாமேயுய்யவாட்கொண்டருளிநஞ்சுதனை
யூணாகவுண்டருளுமுத்தரகோசமங்கைக்
கோணார்பிறைச்சென்னிக்கூத்தன்குணம்பரவிப்
பூணார்வனமுலையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) ஆணோ - ஆண்தானோ, அலியோ - பேடுதானோ, அரிவையோ - பெண்தானோ, என்று - எனச் சந்தேகித்து, இருவர்காணா - பிரம விட்டுணுக்களாகிய இருவர் தேடியும் காணப்படாத, கடவுள் - கடவுளும், கருணையினால் - பெருங் கருணையினால், தேவர் குழாம் - தேவர்கள் கூட்டம், நாணாமே உய்ய - யாதொரு பயமில்லாமல் பிழைக்கும்படி, ஆட்கொண்டருளி- [அவர்களை] அடிமை கொண்டருளி, நஞ்சுதனை - விஷத்தை, ஊண் ஆக - உணவாக, உண்டருளும் - உட்கொண்டருளின, உத்தரகோச மங்கை - திருவுத்தரகோச மங்கையிலுள்ள, கோண் ஆர் பிறை - வளைவுள்ள [மூன்றாம் பிறைச் சந்திரனை] யணிந்த, சென்னி - சடாபாரத்தை யுடைய, கூத்தன் - கூத்தனுமாகிய சிவபெருமானது, குணம் பரவி - குணத்தைத் துதித்து, பூண் ஆர் - [திரு] ஆபரணம் நிறைந்த, வளம்-மிகு அழகாகிய, முலையீர் - [இரண்டு] தனங்களை யுடையீர், பொன்னூசல் ஆடாமோ—, எ - று.

(க - ரை.) ஆண் பெண் அலியெனத் துணிந்தறிய வொண்ணாதவனும், உத்தரகோச மங்கைக் கரசனுமாகிய சிவபெருமானது நற்குணங்களைப் புகழ்ந்து யாம் பொன்னூசல் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) நாணுதல் - அஞ்சுதல் என்னும் பொருளைக் குறித்து. நஞ்சு - விஷம். உண் - உண்ணப்படுவது. கோண் - கோணல். வளைவு. (ரு)

மாதாடுபாகத்தனுத்தரகோசமங்கைத்
தாதாடுகொன்றைச்சடையானடியாருட்
கோதாட்டிநாயேனையாட்கொண்டென்றொல்பிறவித்
தீதோடாவண்ணந்திகழப்பிறப்பறுப்பான்
காதாடுகுண்டலங்கள்பாடிக்கசிந்தன்பாற்
போதாடுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) மாது ஆடு பாகத்தன் - மங்கையை ஓர் பாகம் வைத்த பங்கன், உத்தரகோச மங்கை - திருவுத்தரகோச மங்கையில் உள்ள, தாது ஆடு - மக

ந்தப் பொடிகளை யுடைய, கொன்றை சடையான் - கொன்றைப் பூமாலையை அணிந்த சடைமுடியை யுடையவன், அடியார் உள் - தன் திருத்தொண்டர்கட்குள்ளே, நாயேனை - நாயினுங் கடையேனை, கோதாட்டி - சீர்படுத்தி, ஆட்கொண்டு - அடிமை கொண்டு, என் தொல் பிறவி தீது - எனது பழைய பிறவித் துன்பங்கள், ஓடா வண்ணம் - பெருகா வண்ணம், திகழ - நான் விளங்கும்படி, பிறப்பு அறுப்பான் - பிறவித் தளையைச் சேதிப்பவன், [அவனது] காது ஆடு குண்டலங்கள் பாடி - காதில் அசைந்து ஆடாநின்ற குண்டலங்களைப் பாடி, அன்பால் கசிந்து - அன்பினாற் கசிந்துருகி, போது ஆடு பூண்முலையீர் - தாமரை அரும்புகள்போல ஆடாநின்ற திரு வாபரணங்களைத் தரித்த தனங்களை யுடையீர், பொன்னூச லாடாமோ—, எ - று.

(க - ரை.) உமாதேவிபங்கனும் திருவுத்தரகோச மங்கைக் கிறைவனும், நாயேனை யாட்கொண்டு என் பிறவித்தளையை யறுப்பவனும் ஆகிய சிவபெருமானது காதில் அசையாநின்ற குண்டலங்களைப் புகழ்ந்து பாடி நாம் பொன்னூசல் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) மாது - பெண். இங்கு உமாதேவியைக் குறித்து. ஓடுதல் - நீட்டித்தல். போது - பேரரும்பு. (௬)

உன்னற்கரியதிருவுத்தரகோசமங்கை
மன்னிப்பொலிந்திருந்தமாமறையோன்றன்புகழே
பன்னிப்பணிந்திறைஞ்சப்பாவங்கள்பற்றறுப்பா
னன்னத்தின்மேலேறியாடுமணிமயில்போ
லென்னத்தனென்னையுமாட்கொண்டானெழில்பாடிப்
பொன்னொத்தபூண்முலையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) உன்னற்கு அரிய - எண்ணுதற் கரிதாகிய, திருவுத்தரகோச மங்கை - திருவுத்தரகோச மங்கையில், மன்னி - நிலைபெற்று, பொலிந்திருந்த - பொலிவு பெற்றிருந்த, மா மறையோன் - பெருமையுள்ள வேதியன், தன்புகழே - தனது கீர்த்தியையே, பன்னி - சொல்லி, பணிந்து இறைஞ்ச - தாழ்ந்து வணங்க, பாவங்கள் - பாவங்களை, பற்று அறுப்பான் - பற்றறுப்பவன், அன்னத்தின்மேல் ஏறி ஆடும் - அன்னத்தின்மீது ஏறி ஆடாநின்ற, அணி மயில்போல் - அழகையுடைய மயில் போன்ற, என் அத்தன் - என் தந்தை, என்னையும் - [ஒன்றுக்கும் பற்றாத] சிறுவனையும், ஆட்கொண்டான் - அடிமை கொண்டவன், [அவனது] எழில்பாடி - அழகைப்பாடி, பொன் ஒத்த - திருமகளை நிகர்த்த, பூண் முலையீர் - ஆபரண மணிந்த தனங்களை யுடையீர், பொன்னூசல் ஆடாமோ—, எ - று.

(க - ரை.) திருவுத்தரகோச மங்கையில் எழுந்தருளிய வேதியனும், தன் புகழைச் சொல்லி வணங்கவும், பாவங்களை பற்றறுப்பவனும், என்னை அடிமைகொண்டவனும் ஆகிய சிவபெருமானது அழகைப் புகழ்ந்துபாடி நாம் பொன்னூசல் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) பொலிதல் - விளங்குதல். பொன்னொத்த - தேமல்படர்ந்தது எனினுமாம். (எ)

கோலவரைக்குடுமிவந்துகுவலயத்துச்
சாலவமுதுண்டுதாழ்கடலின்மீதெழுந்து
ஞாலமிகப்பரிமேற்கொண்டுநமையாண்டான்
சீலந்திகழுந்திருவுத்தரகோசமங்கை
மாலுக்கரியானைவாயாரநாம்பாடிப்
பூலித்தகங்குழைந்துபொன்னூசலாடாமோ.

(ப - ரை.) கோலம் - அழகாகிய, வரைக்குடுமிவந்து - மலையினுச்சியினின்று வந்து, குவலயத்து - பூலோகத்தில், சால அமுது உண்டு - மிக்க அமிர்த முண்டு, தாழ்கடலின் மீது எழுந்து - ஆழ்ந்த கடலின்மேல் எழுந்து, ஞாலம் மிக - பூலோகத்திற் பரவ, பரிமேற் கொண்டு - குதிரையின்மேல் ஆரோகணித்து, நமை ஆண்டான் - நம்மை யாண்டருளினவனது, சீலம் திகழும் - குணம் பிரகாசிக்கின்ற, திருவுத்தர கோசமங்கை - திருவுத்தர கோச மங்கையுள்ள, மாலுக்கு அரியானை - திருமாலுக்கும் அரியவனை, நாம் வாயார பாடி - நாம் வாய்நிரம்பப்பாடி, பூலித்து - பூரித்து, அகம் குழைந்து - மனங்குழைந்து, பொன்னூசலாடாமோ—, எ - று.

(க - ரை.) மலைச் சிகரங்களில் பிறந்து பூமியில்வந்து மிகுதியாக வுணவையுண்டு, கடல்மேல் எழுந்து உலகத்தில் பரவக் குதிரையின்மேற் கொண்டு நம்மை யாண்டருளினவனாகிய திருவுத்தரகோசமங்கைக் கிறைவனை வாயார நாம் பாடிப் பொன்னூசலாடுவோம், என்பது.

(வி - ரை.) அமுது - உணவு. கடலின் - கடல்போல எனினுமாம். பூலித்தல் - பூரித்தல். [உடல் புளகித்தல்.] (அ)

தெங்குலவுசோலைத்திருவுத்தரகோசமங்கை
தங்குலவுசோதித்தனியுருவம்வந்தருளி
யெங்கள்பிறப்பறுத்திட்டெந்தரமுமாட்கொள்வான்
பங்குலவுகோதையுந்தானும்பணிகொண்ட
கொங்குலவுகொன்றைச்சடையான்குணம்பரவிப்
பொங்குலவுபூண்முலையீர்பொன்னூசலாடாமோ.

(ப - ரை.) உலவு - விருத்தியடையாநின்ற, தெங்கு சோலை - தென்னஞ்சோலைகள் சூழ்ந்த, திருவுத்தரகோச மங்கை - திருவுத்தரகோச மங்கையில், தங்கு - தங்கிய, உலவு - விளங்குகிற, தனி - நிகரற்ற, சோதி உருவம் - ஒளி உருவமானது, எங்கள் பிறப்பு அறுத்திட்டு - எமது பிறவித்தளையைக் கொய்து, எம் தரமும் - எங்கள் இனத்தையும், ஆட்கொள்வான் - அடிமை கொள்பவன், பங்கு உலவு-வாமபாகத்தில் சோதிமயமா யிருக்கும்,கோதையும்-

பரமேஸ்வரியும், தானும் - தானுமாக, வந்தருளி-எழுந்தருளி, பணிகொண்ட - எனை ஆளாக்கிக்கொண்ட, நொங்கு உலகு-வாசனை பொருந்திய, கொன்றை - கொன்றை மலர் மாலையைத் தரித்த, சடையான்-[திருச்]சடை முடியை யுடையவனுகிய சிவபெருமானது, குணம் - மங்கள குணங்களை, பரவி - புகழ்ந்து, பொங்கு உலகு - பிரகாசம் பொருந்திய, பூண் முலையீர்-ஆபரணங்களை அணியாநின்ற தனங்களை யுடையீர், பொன்னூசலாடாமோ—, எ - று.

(க - ரை.) திரு வுத்தரகோச மங்கையில் எழுந்தருளி யிருக்கிற சோதி யுருவன் வந்து எமது பிறவின்தளையைக் களைந்தொழித்து, எம்மினத்தை ஆட்கொள்வானுயினன், ஆதலால் அவனது கல்யாணக் குணங்களைப் புகழ்ந்து நாம் பொன்னூசல் ஆடுவோம், என்பது.

(வி - ரை.) கோதை - பூமாலையைத் தரித்த பெண். பங்குலவு கோதை என்பதனுல் பரமேஸ்வரி என்றுரைக்க லாயிற்று. பொங்கு - முதனிலைத் தொழிற் பெயர். (கூ)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவண்ணப்பத்து.

## ஆத்தும பூரணம்.

[ஆத்தும பூரணம் என்பது ஆன்மா சிவனுடனே நிறைதல்.]

### கலிவிருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

வேதமொழியர்வெண்ணீற்றர்செம்மேனியர்
நாதப்பறையின ரன்னேயென்னும்
நாதப்பறையினர்நான்முகன்மாலுக்கு
நாதரிந்நாதனு ரன்னேயென்னும்.

(ப - ரை.) வேதமொழியர் - சதுர் வேதங்களாகிய மொழியை யுடையவர், வெள் நீற்றர் - திருவெண்ணீற்றை யுடையவர், செம்மேனியர் - செவப்பு நிறமாகிய திருமேனியை யுடையவர், நாதப் பறையினர் - சப்தத்தை ஒலிக்கா நின்ற பறையை யுடையவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

நாதப்பறையினர் - சப்திக்கா நின்ற பறையை யுடையவர், நான் முகன் அன்னவாகனத்தோனாகிய பிரமனுக்கும், மாலுக்கும் - கெருட வாகனத்தோனாகிய திருமாலுக்கும், நாதர் - முதன்மையா யிருப்பவர், இ நாதர் - இத் தலைவரே, அன்னே என்றும் - அன்னே என்பள், எ - று.

(க - ரை.) வேத மொழியை யுடையவரும், என்றும் [மாமகிமையைத் தரா நின்ற] திரு வெண்ணீற்றை யுடையவரும், செந்தாமரை மலர் போன்ற செவந்த திருமேனியை யுடையவரும், சப்தம் பொருந்திய பறையை யுடையவருமா யிருக்கின்ற இறைவர் பிரம விட்டுணுக்களுக்குந் தலைவரா யிருக்கின்றனர், அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) நாதம் - நாததத்துவம். இது ஒரு பெண் தன் தாய்க்குச் சொல்லியதுபோல. (க)

கண்ணஞ்சனத்தர்கருணைக்கடலின
ருண்ணின்றுருக்குவரன்னேயென்னு
முண்ணின்றுருக்கியுலப்பிலாவானந்தக்
கண்ணீர்தருவராலன்னேயென்னும்.

(ப - ரை.) கண் அஞ்சனத்தார் - மைதீட்டிய [திருக்] கண்களை யுடையவர், கருணை கடலினர் - கருணைக்கடலா யிருப்பவர், உள் நின்று - மனத்தினுள்ளே குடி புகுந்திருந்து, உருக்குவர் - கரையைச் செய்குவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

உள் நின்று உருக்கி - மனத்தினுள்ளே குடிபுகுந்திருந்து உருக்கி, உலப்பு இல்லா - கெடுதல் இல்லாத, ஆநந்த கண்ணீர் - பேரின்ப வாரியை, தருவர் - அழியாமல் இருக்கக் கொடுப்பர், அன்னே என்பள்—, எ - று.

(க - ரை.) அஞ்ஞனந் தீட்டிய கண்ணை யுடையவரும், யாவரிடத்தும் கருணைக் கடலா யிருப்பவருமாகிய தலைவர், என் மனத்தி னிடத்தே நிலைபெற்றோங்கி அதனைக் கரைத்து எக்காலமும் அழிவில்லாப் பேரானந்தக் கண்ணீரைத் தருவர், அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) அஞ்ஞனம் - மை, கருமையுமாம். கடலினர் - இங்கு பரமசிவத்தைக் குறிப்பிட்டது. உள் - மனம். உலப்பு - உலத்தல், கெடுத்தல். ()

நித்தமணாளர்நிரம்பவழகியர்
சித்தத்திருப்பராலன்னேயென்னுஞ்

சித்தத்திருப்பவர்தென்னென்பெருந்துறை
யத்தரானந்தராலன்னேயென்னும்.

(ப - ரை.) நித்தம் - எப்பொழுதும், மணுளர் - மணவாளர், நிரம்ப அழகியர் - பேரருளைத் தராநின்ற பேரழகை யுடையவர், சித்தத்து - மனத்திடத்தே, இருப்பர் - பொருந்தி இருப்பார், அன்னே என்பள்,—

சித்தத்து இருப்பவர் - மனத்தினுள் இருப்பவர், தென்னன் பெருந்துறை அத்தர் - தென்னன் பெருந்துறையி லெழுந்தருளிய கடவுளே, ஆநந்தர் - [அவர்] பேரின்ப உருவா யிருப்பவர், அன்னே என்னும் - அன்னே என்பவள், எ - று.

(க - ரை.) என்றும் அழிவில்லா மணுளரும், அதி அழகை யுடையவருமாகிய இறைவர் என் மனத்தினுள் இருப்பவர், இப்பேர்க்கொற்ற அவர் திருப்பெருந்துறையி லெழுந்தருளி இருக்கும் கடவுளாக்கும். இதன்றியும் இன்பவுருவா யிருப்பவர், அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) நித்தம் - எந்நாளும் உண்டாயிருத்தல். சித்தம் - மனது. ()

ஆடரப்பூணுடைத்தோல்பொடிப்பூசிற்றோர்
வேடமிருந்தவாறன்னேயென்னும்
வேடமிருந்தவாகண்டுகண்டென்னுள்ளம்
வாடுமிதுவென்னேயன்னேயென்னும்.

(ப - ரை.) ஆடு அர பூண்ட - படம் விரித்துத் திருத்தாண்டகஞ் செய்யும் பாம்பு ஆபரணம், தோல் உடை - புலித்தோல் ஆடை, பூசிற்று பொடி - தேக முழுதும் பூசப்பட்டது திருவெண்ணீறு, ஓர் வேடம் இருந்த ஆறு - [இவரது] ஒப்பற்ற வேஷதாரியா யிருந்தவிதம் எதுக்கோ! அன்னே என்னும் - அன்னே என்பவள்,—

வேடம் இருந்த ஆறு - வேஷதாரியைப்போ லிருந்த விதத்தை, கண்டு கண்டு - பார்த்து பார்த்து, என் உள்ளம் வாடும் - என் மனம் மிக வாடுகின்றது, இது என்னே - இது யாதோ! அன்னே என்னும் - அன்னே என்பள், எ - று.

(க - ரை,) இறைவனுகிய பரமசிவனுக்கு ஆபரணமா யிருப்பது சற்பம், இடையில் உடையாருப்பது புலித்தோல், தேக முழுமையும் தரிப்பது வெண்ணீறு, இவரது வேடம் இருந்த விதம் ஈது என்! அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) ஆடரம் — சீறி படத்தை எடுத்தாடுகின்ற பாம்பு. தோல் எனவாளா கூறினமையால் புலித்தோல், யானைத்தோல் என்னும் இரண்டுங் கொள்ளப்படும். (௬)

நீண்டகரத்தர்நெறிதருகுஞ்சியர்
பாண்டிநன்னாடராலன்னேயென்னும்
பாண்டிநன்னாடர்பரந்தெழுசிந்தையை
யாண்டன்புசெய்வராலன்னேயென்னும்.

(ப - ரை.) நீண்ட - நீளமாகிய, கரத்தர் - கையினை யுடையவர், நெறி தரு குஞ்சியர் - அடர்ந்த சடையை யுடையவர், நல் - நலம் பெற்ற, பாண்டி நாடர் - பாண்டி நாட்டை யுடையவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

நல்பாண்டி நாடர் - நல்ல பாண்டி நாட்டை யுடையவர், பரந்து எழு சிந்தையை - எங்கும் பரவி எழுந்த மனத்தை, ஆண்டு அன்பு செய்வர் - ஆண்டு அன்பு செய்வார், அன்னே என்னும் - அன்னே என்பள், எ - று.

(க - ரை.) நீண்ட கரத்தை யுடையவரும், நெறித்த சடையை யுடையவரும், பாண்டி நாட்டை யுடையவருமாகிய கடவுள் பரவி எழுகின்ற என் மனத்தைத் தடுத்து என்னை ஆண்டு அன்பு செய்வார், அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) குஞ்சி - சடை, சிகையுமாம். பரந்து எழுசிந்தை — எங்கும் வியாபித்து எழுந்தோடுகின்ற மனம். ஆண்டு என்றது தடுத்து என்னும் பொருளது. அன்பு செய்தல் - கிருபை செய்தல். (௫)

உன்னற்கரியசீருத்தரமங்கையர்
மன்னுவதென்னெஞ்சிலன்னேயென்னு
மன்னுவதென்னெஞ்சின்மாலயன்காண்கிலா
ரென்னவதிசயமன்னேயென்னும்.

(ப - ரை.) உன்னற்கு அரிய - எண்ணுதற்கு அரிதாகிய, சீர் - பெருமை தங்கிய, உத்தர மங்கையர் - திரு வுத்தரகோச மங்கையை யுடையவர், மன்னுவது - நிலைபெற் றோங்குவது, என் நெஞ்சில் - என்னுடைய மனதிலே, அன்னே என்றும் - அன்னே என்பள்,—

மன்னுவது என் நெஞ்சில் - நிலைபெற் றோங்குவது என் மனத்தில், மால் - திருமாலும், அயன் - பிரமனும், காண்கிலார் - பார்த்தறியார், என்ன அதிசயம் - ஈது யாது புதுமையோ! அன்னே என்னும் - அன்னே என்பள், எ - று.

(க - ரை.) என்னுடைய மனத்தி னிடத்தே உத்தரகோச மங்கைக் கிறைவராகிய சிவபெருமான் நிலைபெற் றிருப்பதை, அரி அயன் காணா திருத்தல் என்ன ஆச்சரியம்! அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) உன்னல் - எண்ணுதல், நினைத்தல். உத்தரகோச மங்கையர் என்பது உத்தர மங்கையர் எனக் குறைந்து வந்தது. மன்னுதல் - நிலை பெறுதல். (சு)

வெள்ளைக்கலிங்கத்தர்வெண்டிருமுண்டத்தர்
பள்ளிக்குப்பாயத்தரன்னேயென்னும்
பள்ளிக்குப்பாயத்தர்பாய்பரிமேல்கொண்டென்
னுள்ளங்கவர்வாரலன்னேயென்னும்.

(ப - ரை.) வெள்ளை கலிங்கத்தர், வெண்பட்டாடையை இடையிலுடைபவர், வெள் திருமுண்டத்தர் - அழகாகிய வெண் தலையையுடையவர், பள்ளிக்குப் பாயத்தர் - [ஆநந்த] யோக நித்திரையாகிய மேற் போர்வையையுடையவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

பள்ளி குப்பாயத்தர் - யோகாநந்த நித்திரையாகிய மேற் போர்வையையுடையவர், பாய்பரி மேல்கொண்டு - அதி வேகமாய்த் தாண்டி செல்லாநின்ற அஸ்வத்தின் மேலேறிவந்து, என் உள்ளம் கரவர் - எனது முழுமனதை [அன்று] கொள்ளை கொண்டவர், அன்னே என்னும் - அன்னே என்பள், எ - று.

(க - ரை.) வெண் பட்டாடையை யுடையவரும், வெண் தலையை யுடையவரும், யோகாநந்தநித்திரையாகியமேற்போர்வையை யுடையவருமாகிய பரமசிவன் அதிவேகத்தை யுடைய குதிரைமே லேறிவந்து என்னுடைய மனத்தைக் கவர்கின்றார், அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) வெள் - வெண்மை. கலிங்கம் - பட்டாடை. வெண்டிருமுண்டம் - நகுவெண்டலை. குப்பாயம் - மேற்போர்வை. கவர்வர் - கிரிகிப்பர். (எ)

தாளியறுகினர்சந்தனச்சாந்தின
ராளெம்மையாள்வாரலன்னேயென்னு
மாளெம்மையாளுமடிகளார்தங்கையிற்
றாளமிருந்தவாறன்னேயென்னும்.

(ப - ரை.) தாளி - ஓர்விதக்கொடி, அறுகினர் - அறுகம் புல்லையுடையவர், சந்தனச் சாந்தினர் - நன் மணமுள்ள சந்தனக் குழம்பையுடையவர், எம்மை - எங்களை, ஆள்பவர் - அடிமையாளாகக் கொண்டு ஆளுபவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

எம்மை ஆள் ஆளும் - எங்களை அடிமையாளாக ஆளுகின்ற, அடிகளார் கையில் - அடியார்களின் கரத்தில், தாளம் இருந்த ஆறு - திருத்தாளம் வைத்திருந்த வரலாறு என்னை ! அன்னே என்பள்—, எ - று.

(க - ரை.) தாளியையம், அறுகையையு முடையவரும், சந்தனக்கலவியை யுடையவரும் ஆகிய தலைவராகிய சிவபெருமான் எம்மை ஆளுடைமையாகக் கொண்டு ஆண்டருளினர், அப்பேர்க்கொற்றவர் கையில் திருத்தாளம் இருந்தவாறென் ! அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) தாளி - ஓர்வித கொடி. அறுகு - அறுகம்புல். சந்தனச் சாந்து - களபகஸ்தூரி முதலியெனச் சேர்ந்த சந்தனக்குழம்பு. (அ)

தையலோர்பங்கினர்தாபதவேடத்த
ரையம்புகுவராலன்னேயென்னு
மையம்புகுந்தவர்போதலுமென்னுள்ள
நையுமிதுவென்னேயன்னேயென்னும்.

(ப - ரை.) தையல் - உமாதேவியை, ஓர் பங்கினர் - ஒரு பாகத்தில் வைத்திருப்பவர், தாபத வேடத்தர் - தபவேடத்தை யுடையவர், ஐயம் புகுவர் - பிச்சை எடுப்பவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

ஐயம் புகுந்தவர்போலும் - பிச்சை எடுக்கப்புகுந்தவர் ஆனாலும், என் உள்ளம் நையும் - என்னுடைய முழு மனம் மெலியா நின்றது, இது என்னே- இது யாதுகாரணமோ ! அன்னே என்னும் - அன்னே என்பள்,— எ - று.

(க - ரை.) உமயவளை வாமபாகத்தில் வைத்திருப்பவரும், தவவேடமுடையவரு மாகிய சிவபெருமான், பிச்சை எடுப்பவரானாலும், அவர் மறைந்து போதலும் என்மனம் வருத்துதலும், என்ன புதுமையோ ! அன்னே என்பது.

(வி - ரை.) தையல் - பெண். இங்கு பரமேஸ்வரியைக் குறித்து. தாபத வேடம் - தவ வேடம். (கூ)

கொன்றைமதியமுங்கூவிளமத்தமுந்
துன்றியசென்னியரன்னேயென்னுந்
துன்றியசென்னியின்மத்தமுன்மத்தமே
இன்றெனக்கானவாறன்னேயென்னும்.

(ப - ரை.) கொன்றை மதியமும் – கொன்றை மலரோடு கூடிய மூன்றாம் பிறையையும், கூவிளம் மத்தமும் - வில்வ பத்திரத்தோடு ஊமத்த மலரையும், துன்றிய-அமைந்த, சென்னியர்-சடாபாரத்தை யுடையவர், அன்னே என்னும் - அன்னே என்பள்,—

துன்றிய - பொருந்திய, சென்னியில் மத்தமே - திருச்சடையி லுள்ள ஊமத்த மலரே, இன்று – இப்பொழுது, எனக்கு - எந்தனுக்கு, உன் மத்தம் ஆன ஆறு - உன் மத்தத்துக்குக் காரணமானவாறு என்னை ! அன்னே என்னும் - அன்னே என்பள், எ - று.

(க - ரை.) கொன்றைப் பூமாலை, [மூன்றும்] பிறை, வில்வம், மத்தம், இவைகளைத் தரித்திராநின்ற சிரத்தை யுடைய இறைவனது மத்தம் பூ எனக்கு உன் மத்தை உண்டாக்குகின்றது, அன்னே என்பாள், என்பது.

(வி - ரை.) மத்தம் - ஊமத்தம். உள் மத்தம் - மயக்கம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குயிற்பத்து.

## ஆத்தும விரக்கம்.

[ஆத்தும விரக்கம் என்பது சிவனைக் கண்டிறங்குதல்.]

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

கீதமினியகுயிலேகேட்டியேலெங்கள்பெருமான்
மாதமிரண்டும்வினவிற்பாதாளமேழினுக்கப்பாற்
சோதிமணிமுடிசொல்லிற்சொல்லிறந்துநின்றதொன்மை
யாதிகுணமொன்றுமில்லானந்தமிலான்வரக்கூவாய்.

(ப - ரை.) கீதம் - கீத மொழியினும், இனிய - இனிதான, குயிலே - கோகிலமே? கேட்டியேல் - சற்று ஊக்கம் வைத்து கேட்பாயாயின், எங்கள் பெருமான் - எமது சிவபெருமானது, பாதம் இரண்டும் - அப் பரமன் தாள் இரண்டையும் பற்றி, வினவின் - கேட்பாயானல், [அதுகள்] பாதாளம் எழினுக்கு அப்பால் - அதல சுதல பாதாளமென்னும் லோகங்கள் எழினுக்கும் அப்பால் ஊடுருவப்பட்டன, சோதி மணி - பிரகாசியா நின்ற மாணிக்கத்தை யுடைய, முடி சொல்லின் - இரத்தின மகுடத்தைக் குறித்துச் சொன்னல், [அது] சொல் இறந்து நின்ற – வாக்குக்கு எட்டாநின்ற, தொன்மை - பழமை யா யிருக்கும், ஆதி குணம் - முதற்குணம் ஆகிய, [இவற்றின்] ஒன்றும் இல்

லான் - யாதொன்றும் இல்லாதவன், அந்தம் இல்லான் - இறுதி யில்லாதவன், வர - வரும்படி, கூவாய் - அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) காதுக்கு இனிமையைத் தாராநின்ற இசையைப் பாடுகின்ற குயிலே? பாதளம் எழுக்கும் அதீதப்பட்ட திருவடிகளையும், சொல்லுக்கு எட்டாநின்ற திருமுடியையும் உடையவரும், பழமை முதலிய குணங்கள் ஒன்றும் இல்லாதவரும், முடிவில்லாதவரும் ஆகிய சிவபெருமான் வரும் வண்ணம் நீ அன்புடன் அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) தொன்மையாதி குணமொன்று மில்லான் என்பதக்கு பழமை முதலியன குணங்கள் சிறிதும் இல்லாதவன் என்று உரைத்தலும் பொருந்தி இருப்பது குயிலை நோக்கிச் சொல்லியது. (௧)

ஏர்தருமேழுலகேத்தவெவ்வுருவுந்தன்னுருவா
யார்கலிசூழ்தென்னிலங்கையழகமர்வண்டோதரிக்கு
பேரருளின்பமளித்தபெருந்துறைமேயபிரானைச்
சீரியவாயாற்குயிலேதென்பாண்டிநாடனைக்கூவாய்.

(ப - ரை.) ஏர் தரும்-அழகைத் தருகின்ற, ஏழுலகு - ஏழுலகத்தாரும், ஏத்த - போற்றி செய்ய, எவ்வுருவு - எவ்வித வுருவும், தன் உருவாய் - தனதுருவாகி, ஆர் கலி சூழ் - கடலால் சூழப்பட்ட, தென் இலங்கை - தென் பாரிசத்தி லிருக்கும் இலங்கைப் பட்டணத்தில், அழகு அமர் வண்டோதரிக்கு - அழகில் மிகுந்த வண்டோதரிக்கு, பேரருள் — தனது பெருமைதங்கிய கருணையினால், இன்பம் அளித்த - பரம இன்பத்தைக் கொடுத்த, பெருந்துறைமேயபிரானை - திருப் பெருந்துறையி லெழுந்தருளி யிருக்கின்ற உபகார குணமுள்ளவனை, தென் பாண்டி நாடானை - தென்பாண்டி நாடானை, குயிலே - கோகிலமே ? சீரிய வாயால் - சிறப்புப் பொருந்திய உன் வாயினால், கூவாய் - அன்புடன் அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) குயிலே ! ஏழுலோகமும் துதிக்கும்படி எவ்வுருவும் தன்னுருவாய், தென்னி லங்கையில் வண்டோதிரிக்குத் தன் பெருங்கருணையால் இன்பங்கொடுத்தத் திருப்பெருந்துறைப் பெருமானைக் கூவி அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) ஆர்கலி - கடல். வண்டோதரி — இராக்ஷச மங்கையர்க்கரசி அதாவது இராவணன் மனைவி. சீரிய - சிறப்புப்பொருந்திய. (உ)

நீலவுருவிற்குயிலேநீண்மணிமாடநிலாவுங்
கோலவழகிற்றிகழுங்கொடிமங்கையுள்ளுறைகோயிற்
சீலம்பெரிதுமினியதிருவுத்தரகோசமங்கை
ஞாலம்விளங்கவிருந்தநாயகனைவரக்கூவாய்.

(ப - ரை.) நீல உருவின் - நீல நிறத்தையுடைய, குயிலே - கோகிலமே? நீள் - பெருமை தங்கிய, மணி - ஒன்பது நவரத்தினங்களு ளொன்றாகிய மாணிக்கம்போல் துலங்கும், மாடம் நிலாவும் - மாடமாளிகைகள் விளங்குகின்ற, கோலம் அழகின்-பேரழகோடுகூடிய, திகழும்-ஜொலிக்கா நின்ற, கொடி மங்கை - பூங்கொடிபோல் இடையையுடைய பெண்கள், உள் உறை கோயில் - உள்ளே வாழ்கின்ற கோயிலின், சீலம் பெரிதும் இனிய - குணத்தால் மிகவும் இனிமையாகிய, திருவுத்தரகோசமங்கை - திருவுத்தரகோச மங்கையில், ஞாலம் - பூலோகம், விளங்க - பிரகாசிக்கும்படி, இருந்த-எழுந்தருளியிருந்த, நாயகனை - இறைவனாகிய சிவபெருமானை, வர - வரும்படி, கூவாய்-நீ அன்புகூர்ந்து அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) உரு - நிறம். சீலம் - குணம். கோலம் - அழகு, இவ்விரண்டும் கூடிப்பேரழகு என்னும் பொருள்பட்டன. கொடி மங்கை - கொடியிடையுடைய திருமகள், எனினுமாம். (௩)

தேன்பழச்சோலைபயிலுஞ்சிறுகுயிலேயிதுகேணீ
வான்பழித்திம்மண்புகுந்துமனிதரையாட்கொண்டவள்ள
லூன்பழித்துள்ளம்புகுந்தென்னுணர்வதுவாயவொருத்தன்
மான்பழித்தாண்டமென்னோக்கிமணாளனைநீவரக்கூவாய்.

(ப - ரை.) தேன் - தேன்போன்ற, பழம் சோலை பயிலும் - இனிமையாகிய பலவித தீங்கனிகளைக் கொடுக்கா நின்ற சோலைகளில் சஞ்சரிக்கிற, சிறு குயிலே - சிறிய குயிலே? இது - இதனை, நீ கேள் நீ கவனமிட்டுக் கேட்பாயாக, வான் - விண்ணுலகத்தை, பழித்து - வெட்கும்படி செய்து, இம் மண் - இப்பூலோகத்தில் எழுந்தருளி, மனிதரை-மானிடரை, ஆட்கொண்ட - அடிமை செய்துகொண்ட, வள்ளல் - வரையாது கொடுப்போனாகிய சிவபெருமான், ஊன் பழித்து - மாமிசத்தை யுடைய திரேகத்தைப் பழித்து, உள்ளம் புகுந்து - என்மனத்திற் புகுந்து, என் - என்னுடைய, உணர்வு ஆய, அறிவுருவாகிய, ஒருத்தன் - ஒப்பற்றவன், மான் பழித்து - மானினது நோக்கத்தைப்பழித்து, ஆண்ட - அடிமைகொண்ட, மெல் நோக்கி - மேன்மைதங்கிய கருணைபொழியும் பார்வையை யுடையவளாகிய உமாதேவிக்கு, மணாளனை - மணவாளனாகிய சிவபெருமானை, வர - வரும்படி, நீ கூவாய் - நீ அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) தேனைப்பொழியா நின்ற பற்பல தீங்கனியையுடைய சோலையில் வாழ்கின்ற குயிலே? விண்ணுலகத்தை இகழ்ந்து, இம்மண்ணுலகத்தில் எழுந்தருளி வந்து மனிதரை யாட்கொண்ட உதார குணமுடைய சீலனும், என்மனத்திற் புகுந்து என் அறிவுருவமாகிய நிகரில்லாதவனும், உமாதேவிக்கு மணாளனுமாகிய சிவபெருமானை நீ கூவி அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) பயிலுதல் - சஞ்சரித்தல். வள்ளல் - உதாரகுண முள்ளவன், வரயாது - கொடுப்போன். மான் என்றது மானினது நோக்கத்தைக் குறித்தது. (ச)

சுந்தரத்தின்பக்குயிலேசூழ்சுடர்ஞாயிறுபோல
வந்தரத்தேநின்றிழிந்திங்கடியவராசையறுப்பான்
முந்துநடுவுமுடிவுமாகியமூவரறியாச்
சிந்துரச்சேவடியானைச்சேவகனைவரக்கூவாய்

(ப - ரை.) சுந்தரத்து - அழகினால், இன்பம் - இன்பத்தைத் தருகின்ற குயிலே - கோகிலமே? சூழ் - சூழப்பட்ட, சுடர் - கிரணங்களையுடைய, ஞாயிறு போல - கதிரோனைப்போல, அந்தரத்தே நின்று - பரமாகாயத்தினின்று, இழிந்து — [யாவரையும்] இரட்சிக்க இரங்கி, இங்கு - இங்குள்ள, அடியவர் - தொண்டர்களுடைய, ஆசை - [மூவாசையாகிய] குற்றத்தை, அறுப்பான் -பற்றறக்களைபவனாகிய, முந்தும் - ஆதியும், நடுவும் - இடையும், முடிவும் - அந்தமும், ஆகிய - ஆன, மூவர் அறியா - மூவருமறியாத, சிந்துரம் - மிகவும் செம்மையாகிய, சேவடியானை - திருவடியை யுடையவனை, சேவகனை - நிகரற்ற வீராதி வீரனை, வர - வரும்படி, நீ கூவாய் - நீ அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) அழகு மிக்கவாய்ந்த குயிலே? சூரியன்போல ஆகாயத்தினிடத்தே நின்று இங்கு இறங்கிவந்து தொண்டர்களது குற்றத்தை அறுப்பவனும், ஆதியும் நடுவும் இறுதியு மில்லாதவனாகியும், மூவராலும் அறிய வொண்ணாத செவந்த திருவடியை யுடையவனுமாகிய சிவபெருமானை நீ அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) சுந்தரம் - அழகு. ஞாயிறு - சூரியன். அந்தரம் - ஆகாயம். ஆசு - குற்றம், சிந்துரம் - செகப்பு. (ரு)

இன்பந்தருவன்குயிலேயேழுலகும்முழுதாளி
யன்பனமுதளித்தூறுமானந்தன்வான்வந்ததேவ
னன்பொன்மணிச்சுவடொத்தநற்பரிமேல்வருவானைக்
கொம்பின்மிழற்றுங்குயிலேகோகழிநாதனைக்கூவாய்.

(ப - ரை.) குயிலே - கோகிலமே? இன்பம் தருவன் - உனக்கு மிக்க இன்பத்தைச் செய்வேன், எழ் உலகும் - எழுலகத்தையும், முழுது ஆளி - முற்றும் ஆளுவோன், அன்பன் - எல்லாரிடத்தும் பேரின்ப முடையவன், அமுது அளித்து ஊறும் - அமிர்தத்தைக் கொடுத்தூறுகின்ற, ஆநந்தன்-இன்ப சொரூபன், வான்வந்த தேவன் - விண்ணினின்று எழுந்தருளி வந்த பரமசிவன் நல் - நல்ல, பொன்மணி - பொன்மணி யென்பவற்றின், சுவடு ஒத்த - தழும்பு போல்வனவாகிய புள்ளிகள் உள்ள, நல் - நன்மையான, பரிமேல்-குதிரையின் மீது, வருவானை - வந்தவனை, கோகழி நாதனை - திருவாவடுதுறையி லெழுந்

தருளிய தலைவனை, கொம்பில் - மரத்தின் கொம்பிலிருந்து, மிழற்றும் குயிலே - மதலைச் சொற்கள்போல் குழறிப் பேசாநின்ற கோகிலமே, கூவாய் - அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) குயிலே? உனக்கு இன்பத்தை வுண்டாக்குவேன், குதிரைச் சேவகனாக வந்த இறைவனை நீ அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) ஆளி - ஆள்வோன். சுவடு தழும்பு, இங்கு புள்ளிகளை யுணர்த்திற்று. மிழற்றுதல் - குழறிப் பேசுதல். [நிரம்பாமென்னும் சொல்லைச் சொல்லுதல்] சோகழி நாதன் - திருவாவடுதுறை க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளிய சிவபெருமான். (சு)

உன்னையுகப்பன்குயிலேயுன்றுணைத்தோழியுமாவன்
பொன்னையழித்தநன்மேனிப்புகழிற்றிகழுமழகன்
மன்னன்பரிமிசைவந்தவள்ளல்பெருந்துறைமேய
தென்னவன்சேரலன்சோழன்சீர்ப்புயங்கன்வரக்கூவாய்.

(ப - ரை.) உன்னை - உன்னை, உகப்பன் - ஆசைப்படுவேன், குயிலே - கோகிலமே? உன் - உனக்கு, துணை - ஒற்றைத் துணையாகிய, தோழியும் ஆவன் - சேடியு மாவேன், பொன்னை அழித்த - பொன்னை வென்ற, நல் - நல்ல, திரு மேனி - அழகிய மேனியினாலும், புகழின் - கீர்த்தியினாலும், திகழும் - பிரகாசிக்கா நின்ற, அழகன் - அழகை யுடையவன், மன்னன் - தேவர் முதலியவர்க்கும் அரசன், பரிமிசை வந்த வள்ளல் - குதிரை ஏறி சவாரி செய்துகொண்டு வந்த வள்ளல், பெருந்துறை மேய - திருப் பெருந்துறையில் [குரு மூர்த்தமாய்] எழுந்தருளிய, தென்னவன் - பாண்டியன், சேரலன் - சேரன், சோழன் - சோழன், சீர் - சிறப்பமைந்த, புயங்கன் - அரவாபரணந் தரித்து ஓர் விதக் கூத்தை யுடைய சிவபெருமான், வர - வரும்பொருட்டு, கூவாய் - அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) குயிலே? உன்னை மிக்க விரும்புவேன், உனக்கொற்ற தோழியு மாவேன், பொன் நிறத்தை வென்ற திரு மேனியை யுடைய அழகனும், குதிரை ஏறி வந்த வள்ளலும், திருப் பெருந்துறையி லெழுந்தருளிய பெருமானுமாகிய இறைவனை நீ அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) பொன்னைப் பழித்த என்றது பொன்னினு மிக்க ஒளியுள்ள என்றபடி. பரிமிசை வந்த வள்ளல் என்றது குதிரை ஏறி பாண்டியன் முதலியனோர் மகிழ வந்த இறைவன். புயங்கன் - புயங்கம் என்னும் கூத்தை யுடையவன். (எ)

வாவிங்கேநீகுயிற்பிள்ளாய்மாலொடுநான்முகன்றேடி
யோவியவருன்னிநிற்பவொண்டழல்விண்பிளந்தோங்கி

மேவியன்றண்டங்கடந்துவிரிசுடராய்நின்றமெய்யன்
றாவிவரும்பரிப்பாகன்றாழ்சடையோன்வரக்கூவாய்.

(ப-ரை.) குயில் பிள்ளாய் - குயிற் பிள்ளையே? நீ இங்கே வா - நீ இவ்விடத்திற்கு வருவாயாக, மாலொடு - விட்டுணுவோடு, நான் முகன் - பிரமனும், தேடி - முதலிற் றேடுதலைச் செய்தும், [காணப் பெறாமையின்] ஓவி - [அத் தேடுந் தொழிலினின்று] நீங்கி, அவர் - அவ் விருவரும், உன்னி நிற்ப - [கரங்களைச் சிரமேற் கொண்டு] தியானித்து நிற்க, ஒள் - ஒளி பொருந்திய, தழல் - அக்கினி, விண் பிளந்து ஓங்கி ஓங்கி - ஆகாயத்தைப் பிளந்து ஊடுருவி உயர்ந்து, மேவி - பொருந்திய, அன்று - அக்காலத்தில், அண்டம் - விண்ணுலகங்க ளெல்லாவற்றையும், கடந்து - தாண்டி, விரிசுடர் ஆய்நின்ற - விரிந்த சோதியாய் எழுந்து நின்ற, மெய்யன் - திரு மேனியை யுடையவன், தாவி வரும் - பாண்டிநாட் டெல்லையைத் தாவி வராநின்ற, பரி - குதிரைகளுக்கு, பாகன் - எஜமானு யிருந்தவன், தாழ் சடையோன் - நீண்ட சடாபாரத்தை யுடையவன், வர - வரும்படி, கூவாய் - அழைப்பாய்—, எ - று.

(க-ரை.) குயில் பிள்ளாய்? என் அருகே வா? பிரம விட்டுணு இருவர் தேடிக் காணாமையால் மென்மேலுந் தேடுதலை யொழித்து நிற்க, அவ் விருவர் இடையே அக்கினி சொரூபமாய் நிமிர்ந்து நின்றவனும், பாண்டியன் முதல் யாவரும் மகிழ குதிரைப் பாகனுமாய் வந்த சிவபெருமானை நீ அழைப்பாய், என்பது.

(வி-ரை.) குயிற் பிள்ளை - சிறு குஞ்சி. [குயிற் குஞ்சு] உன்னி நிற்ப - அலுத்து நின்ற. சுடராய் - அக்கினி சொரூபமாய். தாழ் சடையோன் - நீண்டு தொங்குகின்ற சடை முடியையுடைய சிவபெருமான். பரிபாகன் - குதிரைத் தலைவன், [இறைவன்]. (அ)

காருடைப்பொன்றிகழ்மேனிக்கடிபொழில்வாழுங்குயிலே
சீருடைச்செங்கமலத்திற்றிகழுருவாகியசெல்வன்
பாரிடைப்பாதங்கள்காட்டிப்பாசமறுத்தெனையாண்ட
வாருடையம்பொனின்மேனிமுதினைநீவரக்கூவாய்.

(ப-ரை.) கார் நிறை - கரு நிறத்தை யுடைய, பொன் - பொன்போல், திகழ் - பிரகாசிக்கின்ற, மேனி - திருமேனியையு முடைய, கடி பொழில் - பல வித வாசனை பொருந்திய சோலையில், வாழும் - வாழாநின்ற, குயிலே - கோகிலமே? சீர் உடை - சிறப்பினை யுடைய, செம் — செவந்த, கமலத்தின் - தாமரை மலர் போல, திகழ் - விளங்குகின்ற, உரு ஆகிய - திரு மேனியை யுடைய, செல்வன் - அதி செல்வத்தை யுடையவன், பாரிடை - [இப்] பூமியின் மீது, பாதங்கள் காட்டி - [மோக்ஷத்தைத் தராநின்ற] தன் திருவடிகளைக் காட்டி, பாசம் அறுத்து - பாசபந்த மாய்கையைச் சேதித்து, என்னை ஆண்ட-

என்னை அடிமைகொண் டாண்டருளின, ஆர் உடை - ஆத்திப் பூமாலையை யுடைய, அம் - அழகிய, பொனின் மேனி - பொன் போன்ற திருமேனியை யுடைய, அமுதினை - அமிர்தம் போல்பவனை, வர - [இங்கு] வரும்படி, நீ கூவாய் - நீ அன்புடன் அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) கருநிறப் பொன்போல விளங்குகின்ற உடம்பை யுடைய குயிலே? சிறந்த செந்தாமரை மலர்போல பிரகாசிக்கின்ற, திருவுருவத்தை யுடைய செல்வனும், இவ்வுலகத்தில் தன் திருவடியைக்காட்டி என் பாசத்தைச் சேதித்து, என்னை ஆண்டருளின பொன் மேனியனுமாகிய சிவபெருமானை, நீ அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) காருடைப் பொன் - கருநிறத்தை யுடைய பொன். கடி - விளக்கம் எனினு மமையும். ஆர் உடை என்பதற்கு அருமையையுடைய என் றுரைத்தலுமாம். (௯)

கொந்தணவும்பொழிற்சோலைக்கூங்குயிலேயிதுகேணீ
யந்தணனாகிவந்திங்கேயழகியசேவடிகாட்டி
யெந்தமராமிவனென்றிங்கென்னையுமாட்கொண்டருளுஞ்
செந்தழல்போற்றிருமேனித்தேவர்பிரான்வரக்கூவாய்.

(ப - ரை.) கொந்து அணவும் - பூங்கொத்துகள் பொருந்திய, பொழில் சோலை - பெருமையமைந்த சோலையில், கூவும் குயிலே - பாடாநின்ற குயிலே? நீ இதுகேள் - நீ இதனைக் கேட்பாயாக, இங்கே - இவ்வுலகில், அந்தணன் ஆகிவந்து - வேதிய னுருவாகவந்து, அழகிய சேவடி காட்டி - அழகிய செவந்த திருவடிகளைக் காட்டி, எம் தமர் ஆம் - எமது அன்பரில் ஒருவனாகும், இவன் என்று - இவனே என்று, இங்கு - இவ்விடத்தில், என்னையும் ஆட்கொண்டருளும் - என்னையும் அடிமைகொண்டருளின, செம்தழல்போல் திருமேனி - செந்தீயை நிகர்த்த அழகிய மேனியையுடைய, தேவர் பிரான் - தேவர் பெருமான், வர - வரும்படி கூவாய் - அழைப்பாய்—, எ - று.

(க - ரை.) பூங் கொத்துக்கள் நிறைந்த சோலையிலுள்ள குயிலே! இவ்வுலகத்தில் ஓர் அந்தண வுருவாய்வந்து தன் அழகிய திருவடியைக் காட்டி, என்னையும் ஆட் கொண்டருளிய செந்தழல் போலுந் திருமேனியையுடைய சிவபெருமானை நீ அழைப்பாயாக, என்பது.

(வி - ரை.) அணவுதல் - பொருந்துதல். கூவும் என்பது இடையில் வகர வுகரம் கெட்டுக் கூம் என வந்தது. என்னையும் என்ற வும்மை இழிவு சிறப்பு. (க0)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருத்தசாங்கம்.

## அடிமை கொண்ட முறைமை.

[அடிமைகொண்டமுறைமை என்பது பத்தடையாளம்]

நேரிசை வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

ஏராரிளங்கிளியேயெங்கள்பெருந்துறைக்கோன்
சீரார்திருநாமந்தேர்ந்துரையா—யாரூரன்
செம்பெருமான்வெண்மலரான்பாற்கடலான்செப்புவபோ
லெம்பெருமான்றேவர்பிரானென்று.

(ப - ரை.) ஏர் ஆர் - அழகுவாய்ந்த, இளமை கிளியே - இளங்கிளியே? எங்கள் - எம்முடைய, பெருந் துறைக்கோன் - திருப்பெருந் துறைக்கு அரசாகிய சிவபெருமானது, சீர் ஆர் - சிறப்புப் பொருந்திய, திருநாமம் - பலவித அழகிய நாமங்களை, தேர்ந்து - ஆராய்ந்து, [அவனது திருநாமங்களை என்னென்று தேர்ந்துரைப்பேனின்] ஆரூரன் - திருவாரூரனே! செம்பெருமான் - செம்மையாகிய திருமேனியை யுடைய பெருமானே! வெண்மலரான் - வெண்டாமரை மலரை ஆசநமாக வுடைய பிரமனும், பால்கடலான் - திருப்பாற்கடலையுடைய திருமாலும், செப்புவபோல் - சொல்லுவன போல, எம்பெருமான் - எம்பெருமானே! தேவர் பிரான் - தேவர் பிரானே! என்று - என்று சொல்லி, உரையாய் - சொல்வாயாக, எ - று.

(க - ரை.) கிளியே? எமது திருப்பெருந்துறைப் பெருமானது திருநாமங்களை மனத்தி னிடத்தே நன்கு மதித்து ஆராய்ந்து சொல்வாயாக, அப்பேர்க்கொற்ற இறைவனது திருநாமங்கள் எவை எனில், ஆரூரன், செம்பெருமான், எம்பெருமான், தேவர் பிரான், என்பவைகளே, என்பது.

(வி - ரை.) நாமம் பால்பகா அஃறிணைப் பெயர், [சாதி ஒருமையுமாம்.] ஆரூரன், செம்பெருமான், எம்பெருமான், தேவர் பிரான், என்பன அண்மை விளிகளாதலால் இயல்பாயின. வெண் மலரான் - வெண் தாமரை மலரை ஆசனமாகவுடைய பிரமதேவன். (க)

ஏதமிலா வின்சொன் மரகதமேயேழ்பொழிற்கு
நாதனமையாளுடையா னுடுரையாய்—காதலவர்க்
கன்பாண்டுமீளா வருள்புரிவா னுடென்றுந்
தென்பாண்டிநாடேதெளி.

(ப - ரை.) ஏதம் - குற்றம், இல் - இல்லாத. இன்சொல் - மதுரத்தை ஒற்ற சொல்லையுடைய, மரகதமே - மரகதம்போலுங் கிள்ளையே? ஏழ் பொழிற்கும் - ஏழுலகத்துக்கும், நாதன் - தலைவன், நம்மை - எம்மை, ஆள் உடையான்-அடிமையாக்கிக் கொண்டவனாகிய சிவபெருமானது, நாடு - திருப்பதியை, உரையாய் - புகல்வாயாக, காதலவர்க்கு - அன்பர்க்கு, அன் ஆண்டு - பெருங்கருணையோடு ஆட்கொண்டு, மீளா - மறு ஜென்மத்துக்கு மீண்டும் வாராதபடி, அருள் புரிவான் - கிருபை செய்வோனது, நாடு - திரு நாடானது, என்றும் - எக்காலமும், தென்பாண்டி நாடே - தென்பாண்டி நாடேயாம், தெளி - இதனை ஓர்ந்து தெளிவாயாக, எ - று.

(க - ரை.) இன்ப மொழியையுடைய கிளியே? எழுலகுக்கும் நாயகனும், நம்மை அடிமை ஆளாக வுடையவனுமாகிய சிவபிரானது நாட்டைச் சொல்வாயாக, அவனது நாடு யாதென ஆராய்ந்து கேட்கில், தன் அன்பர்கட்கு மீளாக்கதியைத் தந்தருளுகின்ற அவ்விறைவனது நாடாவது தென்பாண்டிய நாடே யாம், என்பது.

(வி - ரை.) மரகதம் - பச்சை. அது பச்சை நிறத்தை யுடைய கிளியை புணர்த்தலால் ஆகுபெயர். இதனைப் பண்பாகு பெயராக வாயினும் உவமையாகு பெயராக வாயினும் கொள்க. (உ)

தாதாடுபூஞ்சோலைத்தத்தாய்நமையாளு
மாதாடும்பாகத்தன் வாழ்பதியென்—கோதாட்டிப்
பத்தரெல்லாம்பார்மேற்சிவபுரம்போற்கொண்டாடு
முத்தரகோசமங்கையூர்.

(ப - ரை.) தாது ஆடு - மகரந்தப்பொடியை வீசா நின்ற, பூ - மலர்களையுடைய, சோலை - சோலையிலிருக்கும், தத்தாய் - கிள்ளையே? நமை ஆளும் - நம்மை ஆண்டருள் கின்ற, மாது ஆளும் பாகத்தன் - உமாதேவியால் ஆளப்படுகின்ற பாகத்தை யுடையவன், வாழ்பதி என் - வாழ்கின்ற ஊர் எது என்று சொல்வாயாக, [அவ்வூர் ஏதெனின்] பத்தர் எல்லாம் - பத்தர் எல்லாரும், பார்மேல் - பூமியின்கண்ணுள்ள, சிவபுரம் போல - சிவபுரம்போல, கோ

தாட்டி - சிராட்டி, கொண்டாடும் - கொண்டாடுகின்ற, உத்தரகோசமங்கை - திருவுத்தரகோச மங்கையே, ஊர் - அவரது ஊராம்—, எ - று.

(க - ரை.) பூஞ்சோலையில் களித்து வாழ்கின்ற கிளியே? சிவபெருமானது ஊரைச் சொல்வாயாக. அவரது ஊர் யாதெனில்? தொண்டரெல்லாம் இப் பூலோகத்தில் சிவபுரம்போலக் கொண்டாடுகின்ற திரு வுத்தரகோச மங்கையே யாம், என்பது.

(வி - ரை.) தாது - மகரந்தம். தத்தை - கிளி. அது ஈறுதிரிந்து தத்தாய் என விளியாயிற்று. என் - என்று சொல். (௩)

செய்யவாய்ப்பஞ்சிறகிற்செல்வீ நஞ்சிந்தைசே
ரையன்பெருந்துறையானாறுரையாய்—தையலாய்
வான்வந்தசிந்தைமலங்கழுவவந்திழியு
மானந்தங்காணுடையானாறு.

(ப - ரை.) செய்ய - செவந்த, வாய் - வாயினையும், பஞ் சிறகின் - பசுமையாகிய சிறகினையு முடைய, செல்வீ - செல்வியே? நம் - நம்முடைய, சிந்தை சேர்-மனத்திற்சேர்ந்த, ஐயன் - என் தாதையாகிய, பெருந்துறையான்-திருப் பெருந்துறை யென்னும் திவ்விய க்ஷேத்திரத்தை யுடையவனது, ஆறு உரையாய் - நதியைச் சொல்வாயாக, [அந்நதி யாதெனில்] தையலாய் - பெண்ணே? வான் வந்த சிந்தை - பெருமையை யமைந்த மனத்தினது, மலம் கழுவ - மலத்தைப்பரிசுத்த மாக்க, வந்து இழியும் - வந்து இறங்குகின்ற, ஆநந்தம்-பேராநந்தமே, உடையான் ஆறு-உடையவனது நதியே ஆகும்—, எ - று.

(க - ரை.) செவந்த வாயையும், பசுமை நிறமாகிய சிறகையு முடைய கிளியே? திருப் பெருந்துறையி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானது ஆற்றைச் சொல்லுவாயாக, அவனது ஆறு யாதெனில், அடியார்களது மனமாசை யொழிக்க வந்து இறங்கின ஆநந்தமே அவனது ஆறுவது, என்பது.

(வி - ரை.) வாய் என்பது - மூக்கை. செல்வீ - புதல்வி. தையலாய் என்றதனால் பெண் கிளி என்பது பெறப்பட்டது. ஆநந்தம் - ஆநந்த வெள்ளம். (௪)

கிஞ்சுகவாயஞ்சுகமேகேடில்பெருந்துறைக்கோன்
மஞ்சன்மருவுமலைபகராய்—நெஞ்சத்
திருளகலவாள்வீசியின்பமருமுத்தி
யருளுமலையென்பதுகாணுய்ந்து.

(ப - ரை.) கிஞ்சுகம் - முருக்கம்பூப் போன்ற, வாய் - வாயை யுடைய, அம் - அழகமர்ந்த, சுகமே - தத்தையே ? கேடு இல் - எக்காலமும் அழிவில்

லாத, பெருந்துறைக் கோன் - திவ்விய க்ஷேத்திரமாகிய திருப்பெருந்துறைக்கு அரசனாகிய, மஞ்சன் - [யாராலும் மதிக்கப் பெற்ற] அழகுடையவன், மருவும் - [எழுந்தருளி யிருந்து] வாசம் செய்கின்ற, மலை பகராய் - [திரு] மலையைச் சொல்வாயாக, [அம் மலை யாதெனின்] ஆய்ந்து - ஆராய்ந்து, நெஞ்சத்து இருள் அகல - மனத்தின் கண்ணதாகிய அஞ்ஞான மென்னும் இருள் நீங்க, வாள் வீசி - ஒளி வீசி, இன்பு அமரும் - இன்ப மமைந்த, முத்தி - மோக்ஷ வீட்டை, அருளும் - அருளைத்தராநின்ற, மலை என்பது காண் ஆய்ந்து - மலை யென்று சொல்லப்படுவதே ஆராய்ந்து பார்ப்பாயாக—, எ - று.

(க - ரை.) முருக்கம் பூப்போன்ற வாயை யுடைய கிள்ளையே? என்றும் அழிவில்லாத் திருப் பெருந்துறையில் வாழ்கின்ற சிவ பெருமானது மலையைச் சொல்வாயாக, அப்பேர்க் கொற்றவனது மலை யாதெனின், மன மிருளொழிய பிரகாசத்தை வீசி முத்தி வீட்டைக்கொடுக்கின்ற மலையே அவனது மலையாம், என்பது.

(வி - ரை.) சுகம் - கிளி. மஞ்சு - அழகு. பகர்தல் - சொல்லுதல். இருள் - அஞ்ஞான இருள். வாள் - ஒளி. (௫)

இப்பாடேவந்தியம்புகூடுபுகலென்கிளியே
யொப்பாடாச்சீருடைய னூர்வதென்னே—யெப்போதுந்
தேன்புரையுஞ்சிந்தையராய்த்தெய்வப்பெண்ணேத்திசைப்ப
வான்புரவியூருமகிழ்ந்து.

(ப - ரை.) என் கிளியே - என் னாசைக் குகந்த கிள்ளையே? கூடுபுகல் - கூட்டிற் புகுதற்கு முன்பே, இப்பாடே - இவ்விடத்தே, வந்து - கிட்டி வந்து, இயம்பு - சொல்லுவாயாக, ஒப்பு ஆடா - உவமை நடை யாடாத, சீர் உடையான் - சிறப்பை யுடையவனாகிய சிவபெருமான், ஊர்வது என் — ஏறி நடத்துவது யாது அதனைச் சொல்வாயாக, (அவ்வாறு ஏறி நடத்துதல் யாதெனின்) எப்போதும் - எந்நாளும், தேன்புரையும் - தேனை நிகர்க்கின்ற, சிந்தையராய் - மனத்தை யுடையவராய், தெய்வப் பெண் ஏத்து இசைப்ப - தெய்வ லோகத்தில் வாழாநின்ற அரம்பயர் முதலிய பெண்கள் ஜெயாவிஜீபவா என்று வாழ்த்துச் சொல்ல, வான் புரவி - ஆகாயமாகிய புரவியை, மகிழ்ந்து ஊரும் - சந்தோஷித்து நடத்துவர்—, எ - று.

(க - ரை.) என் ஆசைக்குகந்த கிளியே? நீவாசம் செய்யும் கூடு புகாமல் இவ்விடத்தே வந்து நிகரற்ற சிவபெருமானது வாகனத்தைப் புகல்வாயாக. அவன் ஏறி நடத்தும் வாகனமானது யாதெனின், ஆகாயமே அவனது ஊர்தியாம், என்பது.

(வி - ரை.) பாடு - இடம், பக்கம் எனினுமாம். ஊர்தல் - நடத்துதல், செலுத்துதல். புரைதல் - நிகர்த்தல். இசைத்தல் - சொல்லுதல், விளம்பு

தல் எனினு மமையும். வான் - ஆகாயம். இங்கு சிதாகாயத்தை உணர்த் திற்று. (௬)

கோற்றேன்மொழிக்கிள்ளாய்கோதில்பெருந்துறைக்கோன்
மாற்றாரைவெல்லும்படைபகரா—யேற்றா
ரழுக்கடையாநெஞ்சுருகமும்மலங்கள்பாயுங்
கழுக்கடைகாண்கைக்கொள்படை.

(ப - ரை.) கோல் - கொம்பிற்கட்டிய, தேன்மொழி - தேனைப்போன்ற மொழியை யுடைய, கிள்ளாய் - கிள்ளையே? கோது - குற்றம், இல் - இல்லாத, பெருந் துறைக்கோன் - திருப்பெருந் துறைக்கு அரசனாகிய சிவபெருமான், மாற்றாரை வெல்லும் - பகைவரை வெல்லுகின்ற, படை - ஆயுதத்தை, பகராய் - சொல்வாயாக, [அப்படை யாதெனின்] ஏற்றார்-எதிர்ந்தவருடைய, அழுக்கு அடையா - மலமடையாத, நெஞ்சத்து - மனத்தி னிடத்தில், மும் மலங்கள் பாயும் - ஆணவ முதலிய மும் மலங்களைப் பாயாநின்ற, கழுக்கடை-சூலமே, கைக்கொள் படை - [அப் பரமசிவன்] கையிற் றாங்கும் படையாம்—, எ - று.

(க - ரை.) தேன் மொழியை யுடைய கிளியே? திருப் பெருந்துறைக்குத் தலைவனாகிய சிவபெருமான் கையில் தாங்கிக்கொண் டிருக்கும் ஆயுதத்தைச் சொல்வாயாக, அவனது படை யாதெனின், பரிசுத்தமான மன முருகும்படி மும்மலங்களை அழிக்கின்ற சூலமே அவனது படையாம், என்பது.

(வி - ரை.) மாற்றார் - பகைவர். படை - ஆயுதம். மும்மலமாவது ஆணவம், கன்மம், மாயை. பாயும் என்பதற்கு - அறவே நீக்கு மென்பது பொருள். கழுக்கடை - சூலம். (௭)

இன்பான்மொழிக்கிள்ளாயெங்கள்பெருந்துறைக்கோன்
முன்பான்முழங்குமுரசியம்பா—யன்பாற்
பிறவிப்பகைகலங்கப்பேரின்பத்தோங்கும்
பருமிக்கநாதப்பறை.

(ப - ரை.) இன் - இனிய, பால் - அமிர்தம் போன்ற, மொழி - மொழியினை யுடைய, கிள்ளாய் - கிள்ளையே? எங்கள்-எமது, பெருந்துறைக்கோன் - திருப் பெருந்துறை யென்னும் திவ்விய க்ஷேத்திரத்துக்கு அரசனாய் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானது, முன்பால் — சந்நிதிக்கு முன்பாக, முழங்கும் - சத்திக்கின்ற, முரசு - முரசை, இயம்பாய் - சொல்வாயாக, [அம் முரசு யாதெனின்] அன்பால் - ஆசையால், பிறவிப் பகை - பிறவியாகிய பகைவன், கலங்க - சித்தம் கலங்கும்படி, பேரின்பத்து ஓங்கும் - பேரானந்தத்தோ டுயர்ந்த, பருமிக்க - பெருமை மிகுந்த, நாதப்பறை - நாதமாகிய பறையேயாம்—, என்றவாறு.

(க - ரை.) அமிர்தம் போன்ற மொழியை யுடைய கிள்ளையே? திருப்பெருந்துறை என்னும் க்ஷேத்திரத்தின் கண் ணெழுந்தருளி யிருக்கும் எங்கள் சிவபெருமானது திருச் சந்நிதிமுன் சத்திக்கின்ற முரசைச் சொல்வாயாக, [அம்முரசு யாதெனின்] பிறவிப் பகை கலங்கும்படி பேரானந்தத்தோடுயர்ந்த நாதமாகிய பறையேயாம், என்பது.

(வி - ரை.) கோன் - அரசன். இங்கு தேவர் முதலிய யாவர்கட்கும் முதற் பொருளாய் நிற்றலைப் பற்றி கோன் எனச் சொல்லப்பட்டது. முரசு - பேரிகை. நாதம் - நாததத்துவம். (அ)

ஆயமொழிக்கிள்ளாயள்ளூறுமன்பர்பான்
மேயபெருந்துறையான்மெய்த்தாரென்—றீயவினை
நாளுமணுகாவண்ணநாயேனையாளுடையான்
றாளியறுகாமுவந்ததார்.

(ப - ரை.) ஆய மொழி - நன்மை தின்மை இரண்டினையும் ஆராய்ந்த சொல்லினை யுடைய, கிள்ளாய் - கிள்ளையே? அள்ளூறும் அன்பர்பால் - அள்ளூறுகின்ற அன்பரிடத்து, மேய - பொருந்திய, பெருந்துறையான் - திருப்பெருந்துறையை யுடையவனது, மெய் - உண்மையாகிய, தார் - மாலை, என் - என்னுதி, [அம்மாலை யாதெனின்] தீய - கொடிதாகிய, வினை - வினைகள், நாளும் - எப்போதும், அணுகா வண்ணம் - தொடரா வண்ணம், என்னை - நாயினுங் கடையேனுமாகிய அடியேனை, ஆள் உடையான் - ஆளுதலுடைய சிவபெருமான், உவந்த -விரும்பி யணிந்த, தார் - தாளி, அறுகும் ஆம் - அறுகு மென்பவைகளேயாம், எ - று.

(க - ரை.) நல்வினை தீவினை இவ்விரண்டினையும் ஆராய்ந்த மொழியை யுடைய கிள்ளையே? திருப்பெருந்துறையி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானது மாலையைச் சொல்வாயாக, அவனது மாலை யாதெனின், தாளியும் அறுகுமேயாம், என்பது.

(வி - ரை.) ஆயமொழி - ஆராய்ந்த குற்றமற்றமொழி, அன்றியும், ஆயம் கூட்டம் எனினும் பொருந்தும் இதமாகிய மொழி எனினுமாம். அள்ளூறுதல்- என்புருகுதல். தார் - மாலை. (கூ)

சோலைப்பசுங்கிளியேதூநீர்ப்பெருந்துறைக்கோன்
கோலம்பொலியுங்கொடிகூறாய்—சாலவு
மேதிலார்துண்ணென்னமேல்விளங்கியேர்காட்டுங்
கோதிலாவேறுங்கொடி.

(ப - ரை.) சோலை - சோலையில் வாழ்கின்ற, பசுங்கிளியே - பசுங்கிள்ளையே? தூ - பரிசுத்தமான, நீர்-குணங்களையுடைய, பெருந்துறைக்கோன் - திருப்பெருந்துறைக்கு அரசனாகிய சிவபெருமானது, கோலம் - அழகு, பொலியும்-மிகுந்த, கொடி - துவசத்தை, கூறாய்-சொல்லாய், [அக்கொடியாதெனில்]

சாலவும் - மிகவும், ஏதிலார் - பகைவர், துண்ணென்ன - பயப்படும்படி, மேல் விளங்கி - மேலாய் விளங்கி, ஏர் - காட்டும் அழகைச்செய்கின்ற, கோது - குற்றம், இல் - இல்லாத, ஏறு - இரஷபமே, கொடி ஆம் - துவசக் கொடியுமாம், எ - று.

(க - ரை.) சோலையில் வாழ்கின்ற பசுங்கிளியே? திருப்பெருந்துறைக் குத் தலைவனாய் எழுந்தருளி யிருக்கும் இறைவனது கொடியைச் சொல்வாயாக, அவனது கொடியாதெனின், விரோதிகள் பயப்படும்படி உயர்த்தப்பட்டு அழகைச் செய்கின்ற இரஷபக் கொடியே அவனது கொடியாம், என்பது.

(வி - ரை.) தூ - பரிசுத்தம். நீர் - [பெருங்] குணம். தூநீர் - பரிசுத்தமாகிய நீர் வளமிக்க வெனினும் பொருந்தும். கோலம் - அழகு. துண்ணெனல் - அச்சக்குறிப்பு. ஏறு - இடபம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பள்ளியெழுச்சி.

## திரோதான சுத்தி.

[திரோதான சுத்தி என்பது ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலம் நீக்குதல்.]

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

போற்றியென்வாழ்முதலாகியபொருளே
புலர்ந்ததுபூங்கழற்கிணைதுணைமலர்கொண்
டேற்றிநின்றிருமுகத்தெமக்கருண்மலரு
மெழினகைகொண்டுநின்றிருவடிதொழுகோஞ்
சேற்றிதழ்க்கமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யேற்றுயர்கொடியுடையாயெனையுடையா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) போற்றி - நமஸ்காரம், என் - என்னுடைய, வாழ்முதல் ஆகிய - வாழ்வுக்கு முதற்காரணமாகிய, பொருளே - [என்றும் பிறப்பிறப்பில்லாப்] பொருளே, புலர்ந்தது - போது விடிந்தது, இணை - இணையில்லாத, பூ - அழகு வாய்ந்த, கழற்கு - சிலம்பணிந்த திருவடிக்கு, துணை-ஒப்புமைவாய்ந்த, மலர் - மேன்பாடான புட்பங்களை, கொண்டு - கொண்டு, ஏற்றி - அன்புடன் துதித்து, நின் - உமது, திரு முகத்து-அழகிய முகத்தில், எமக்கு - எனக்கு, அருள் - அருளுடன், மலரும் - மலர்கின்ற, எழில் - அழகிய, நகை கொண்டு-முறுவலைப் பற்றுகக் கொண்டு, நின் - உமது, திருவடி - திருத்தாளை, தொழுகோம் - தொழுது நிற்கின்றோம், சேற்று - சேற்றின் கண், இதழ் - இதழ்களையுடைய, கமலங்கள் - தாமரை மலர்கள், மலரும் - விரிகின்ற, தண் - குளிர்ச்சி பொருந்திய, வயல் சூழ் - வயல்கள் சூழ்ந்த, திருப் பெருந்துறை - திருப்பெருந்துறையின்கண்ணே, உறை - எழுந்தருளி வாழாநின்ற, சிவபெருமானே - சிவ பிரானே! உயர் - உயர்ந்த, ஏற்று கொடி உடையாய் - இரவுஷபக் கொடியை யுடையவனே! என்னை - எந்தனை, உடையாய் - ஆட்கொண்டுடையவனே! எம்பெருமான் - எம்பெருமானே! பள்ளி - திருச் சயநத்தை விட்டு, எழுந்தருளாய் - எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) திருப் பெருந்துறையி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே? போது விடிந்தது, தாமரை மலர்களைக் கொண்டு உமது திருவடியை அர்ச்சித்துத் தொழாநின்றோம், [ஆனதால்] நீர் திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக, என்பது.

(வி - ரை.) புலர்தல் - பொழுது விடிதல். ஏத்தி என்பது ஏற்றி யென்றாயிற்று. அன்றி, ஏற்றி என்பதற்கு ஏறப்பண்ணி எனினுமாம். நகை கொண்டு என்பது இங்கு சந்தோடத்தைக் கொண்டு எனினு மமையும். திருப்பள்ளி எழுந்தருளலாவது [உமா மகேஸ்வரியுடன்] திருசயனத்தினின்று எழுந்திருத்தல். பள்ளி - சயநம். (க)

அருணனிந்திரன் றிசையணுகினனிருள்போ
யகன்றதுவுதயநின்மலர்த்திருமுகத்தின்
கருணையின்சூரியனெழவெழநயனக்
கடிமலர்மலரமற்றண்ணலங்கண்ணாந்
திரணிரையறுபதமுரல்வனவிவையோர்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யருணிதிதரவருமான்ந்தமலையே
யலைகடலேபள்ளியெழுந்தருளாயே

(ப - ரை.) அருணன் - சூரியன், இந்திரன் திசை அணுகினன் - கீழ்த் திசையை அடைந்தான், [அது எவ்வாறெனில்] இருள் - உலகத்தைப் போ

ர்வையாக மூடியிருந்த இருளானது, போய் அகன்றது - முழுதும் பற்றறநீங்கிற்று, உதயம் - உதித்தலையுடைய, நின் - உமது, மலர் - தாமரை மலர் போன்ற, திரு முகத்தின் - அழகிய முகார விம்பத்தில், சூரியன் கருணையின்- கருணையாகிய சூரியன், எழ எழ - முறையே உதித்தலும், நயனம் - கண்களாகிய, கடி மலர் - வாசனை பொருந்திய மலர்கள், மலர - புட்பிக்க, அண்ணல் அம் கண் ஆம் - பெருமை பொருந்திய அழகிய [பெண்களது] கண் போல்கின்ற, திரள் நிரை - கூட்ட வரிசையாகிய, அறுபதம் - வண்டுகள், முரல்வன - சத்திக்காநின்ற, இவை - இவற்றை, ஓர் - ஆராய்ந்து அறியக் கடவை, திருப் பெருந்துறை உறை - திருப் பெருந்துறையில் வந்து வாழ்கின்ற, சிவ பெருமானே - சிவபிரானே ! அருள் நிதி - அருட்பெருஞ் செல்வத்தை, தர வரும் - [அன்பு கூர்ந்து] கொடுக்க வருகின்ற, ஆநந்த மலையே - இன்பமாகிய கைலைக் கரசே ! அலை கடலே - அசையாநின்ற பேராநந்த சாகரமே! பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளி விட்டு எழுந் தருள்வாயாக, எ - று.

(க - ரை.) திருப் பெருந்துறையி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே ? சூரியோதயமானதால் இருள் நீங்கி தாமரை மலர்கள் விரிந்தன, வண்டொலித்தல் முதலிய காரியங்கள் நிகழாநின்றன, ஆதலால் நீர் திருப்பள்ளி விட்டு எழுந்தருள்வீராக, என்பது.

(வி - ரை.) சூரியன் கீழ்த்திசை யணுகுதல், இருள் நீங்குதல், வண்டுகள் மலர்களில் மொய்த்து ஆரவாரித்தல் முதலியவை பொழுது விடிந்ததற் குரிய குறிகளாதலால் இவ்வாறு கூறலாயிற்று. கருணையோடு கூடிய கண் மலர் என்றற்கு, “ கருணையின் சூரிய னெழுவெழ நயனக் கடிமலர் மலர ” என்றார். கண் ஆம் என்பதற்கு மாதர் கண் போல்கின்ற எனினுமாம். வண்டுக்கு ஆறு கால்கள் இருப்பதால் அறுபதம் எனப்பட்டது. நிதி - பலவகைத் திரவியங்கள் என்றலுமாம். நிதி தருதற்கு மலையுரிய தாதலால், “அருணிதி தர வரு மானந்த மலையே” என்றார். (உ)

கூவினபூங்குயில்கூவினகோழி
குருகுகளியம்பினவியம்பினசங்க
மோவினதாரகையொளியொளியுதயத்
தொருப்படுகின்றதுவிருப்பொடுநபக்குத்
தேவநற்செறிகழற்றாளிணைகாட்டாய்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யாவருமறிவரியாயெமக்கெளியா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) பூங்குயில் - அழகிய குயில்கள், கூவின - கூவின, கோழி - சேவல்கள், கூவின - கொக்கரித்துக் கூவின, குருகுகள் இயம்பின - பறவை

கள் ஒலித்தன, சங்கம் இயம்பின - சங்குகள் முழங்கின, தாரகை ஒளி ஒவின- நட்சத்திரங்கள் பிரகாசம் நீங்கின, ஒளி - பிரகாசமானது, உதயத்து - உதய காலத்தில், ஒருப்படுகின்றது - தோன்றுகின்றது - தேவ - தேவனே? நமக்கு- எமக்கு, விருப்பொடு - ஆசையுடன், நல் - சிறந்த, செழ்கழல் - நெருங்கிய வீரக் கழல்களை யணிந்த, தாள் இணை காட்டாய் - திருவடித்துணையை காட்டி அருளாய், திருப் பெருந்துறை சிவபெருமானே - திருப் பெருந்துறையில் வாழும் சிவபெருமானே? யாவரும் - எவர்களாலும், அறிவு அரியா - காணுதற்கு அரிதானவனே! எம்பெருமான் - எம்பிரானே! பள்ளி எழுந்தருளாய் - திருப் பள்ளியினின்று எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) குயில்கள் கூவின, கோழிகள் கூவின; பலவித பறவைகள் சத்தித்தன, சூரியனும் கீழ்த்திசையில் உதித்தான், வானத்தி லுள்ள நட்சத்தி ரங்களின் ஒளி மழுங்கின, [ஆனதால்] உன் திருவடியை யாம் கண்டு சேவிக்க நீ திருப்பள்ளிவிட் டெழுந்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) கோழி யென்றது இவ்விடத்து சேவலுக்காயிற்று, குருகு- பறவைப்பொது. உடு - நட்சத்திரங்கள். யாவரு மறிவரியா யெமக்கெளியா யென்றது - வேதாதிகட்கும், அரிப்பிரமாதிகட்கும் எட்டாதவன், அன்பு சிறிது மில்லாத எளியேன்பால் அன்புவைத் தெளிமையாய் நின்ற பெருங்கரு ணைத்திறத்தைப் புகழ்ந்தபடி. (௩)

இன்னிசைவீணையரியாழினரொருபா
 லிருக்கொடுதோத்திரமியம்பினரொருபாற்
றுன்னியபிணைமலர்க்கையினரொருபாற்
 றொழுகையரழுகையர்துவள்கையரொருபாற்
சென்னியிலஞ்சலிகூப்பினரொருபாற்
 றிருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யென்னையுமாண்டுகொண்டின்னருள்புரியு
 மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) இன் இசை வீணையர் - இனிய இசையுள்ள வீணையை யுடை யவரும், யாழினர் - யாழை யுடையவரும், ஒரு பால் - ஒரு பக்கத்திலும், இருக் கொடு - வேதங்களோடு, தோத்திரம் இயம்பினர் - வெவ்வேறு தோத்திரங்க ளைச் செய்பவர், ஒரு பால் - ஒரு பக்கத்திலும், துன்னிய-நெருங்கிய, பிணை - தொடுக்கப்பட்ட, மலர்க்கையினர் - மலர் மாலையை யேந்திய கையினை யுடைய வர், ஒருபால் - ஒரு பக்கத்திலும், தொழுகையர் - தொழுவோரும், அழுகை யர் - பேரானந்தக் கண்ணீரை விட்டு அழுவோரும், [தன்னைத் தான் மறந்து] துவள்கையர் - துவள்வோரும், ஒரு பால் - ஒரு பக்கத்திலும், சென்னியில் - சிரசின்மேல், அஞ்சலி கூப்பினர் ஒருபால் - அஞ்சலியாகக் கூப்பினவர் ஒரு

பக்கத்திலும் நிறைந்து நின்றார்கள், திருப் பெருந்துறை உறை சிவபெருமானே - திருப் பெருந்துறைப் பதியில் வசிக்கும் சிவபெருமானே, என்னையும் ஆண்டுகொண்டு - அடியேனையும் ஆட்கொண்டு, இன் அருள் புரியும் - இனிய திரு அருள் புரிகின்ற, எம்பெருமான் - எம்பிரானே, பள்ளி எழுந்தருளாய் - திருப் பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) வீணை, யாழ், வாத்தியக்காரர், வேத முதலானவற்றைக் கொண்டு தோத்திரஞ் செய்வோர், பூமாலை யேந்தியகையினை யுடையவர், தலை வணங்கிக் கூப்பின கையினையுடையவர் முதலாகிய எல்லாரும் வந்திருக்கிறார்கள், நீ திருப்பள்ளி யெழுந்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) பலவகை வாத்தியங்களினுஞ் சிறந்தன வீணையாழ் என்பனவாதலால் "இன்னிசைவீணையரியாழினர்" என அவற்றை முதற்கண் வைத்தும் இன் என விசேடித்தும் கூறினர். வீணையர் யாழினர் என்றது கந்தருவரை எனினுமாம். துவள்கை - துவளல். (௪)

பூதங்கடோறுநின்றாயெனினல்லால்
போக்கிலன்வரவிலனெனநினைப்புலவோர்
கீதங்கள்பாடுதலாடுதலல்லால்
கேட்டறியோமுனைக்கண்டறிவாரைச்
சீதங்கொள்வயற்றிருப்பெருந்துறைமன்னா
சிந்தனைக்கும்மரியாயெங்கண்முன்வந்
தேதங்களறுத்தெம்மையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) பூதங்கள்தோறும் - எல்லாப்பூதங்களிலும், நின்றாய் எனின் அல்லால் - நிலைத்திருக்கிறா யென்றுரைப்பி னல்லது, போக்கு இலன் - போக்கில்லாதவன் என்று, நின்னை - உன்னை, புலவோர் - அறிவுடையோர், கீதங்கள் பாடுதலும் ஆடுதல் அல்லால் - கீதங்கள் பாடுதலும் திருக்கூத்தாடுதலும் அல்லாமல், உன்னை கண்டு - உன்னைப் பார்த்து, அறிவாரை - அறிந்து கொள்பவர்களை, கேட்டு அறியோம் - காதாரக் கேட்டு மறியோம், சீதம் கொள்வயல் - குளிர்ச்சியைக்கொண்ட வயல் சூழ்ந்த, திருப்பெருந்துறை மன்னா - திருப்பெருந்துறைக் கரசனே! சிந்தனைக்கும் - மனதில் எண்ணுதற்கும், அரியாய் - அரிதானவனே! எம் - எங்கள், கண்முன் வந்து - கண்களிரண்டும் பார்க்க எதிரேவந்து, ஏதங்கள் அறுத்து - குற்றங்களைக் களைந்து, எம்மை ஆண்டு - எம்மை ஆட்கொண்டருளி, அருள் புரியும் - அருள் செய்கின்ற, எம்பெருமான் - எம்பெருமானே! பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியை விட்டெழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) எல்லாப் பூதங்களிலும் நிறைந்து நின்றவன், போக்கு வரவு அற்றவன் என்று அறிஞர் உன்னைக் கீதங்களால் பாடிக்களித்தாடுவதல்லாமல் உன்னைக் கண்டறிவாரைக் கேட்டுமறியோம், திருப்பெருந்துறைக் கரசே! எமது பிறவித்துயரறுத்து, அடிமைகொண்டருளவல்ல எம் பெருமானே! நீ திருப்பள்ளியைவிட் டெழுந்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) பூதங்கள் என்றது இந்த உயிர்களை. போக்கு - போதல். வரவு - வருதல். புலவர் - அறிஞர். பாடுதல், ஆடுதல்களுக்கு ஒற்றுமை உண்மையால் "பாடுத லாடுதல்" என்றார். சீதம் - குளிர்ச்சி. எம்பெரு மான் - அண்மை விளியாதலால் இயல்பாயிற்று. (௬)

பப்பறவீட்டிருந்துணருநின்னடியார்
பந்தனைவந்தறுத்தாரவர்பலரு
மைப்புறுகண்ணியர்மானுடத்தியல்பின்
வணங்குகின்றாரணங்கின்மணவாளா
செப்புறுகமலங்கண்மலருந்தண்வயல்சூழ்
திருப்பெருந்துறையுறைசிவபெருமானே
யிப்பிறப்பறுத்தெமையாண்டருள்புரியு
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) பப்பு அற - மனப்பரப்பில்லா தொழிய, வீட்டு இருந்து - மோக்ஷ நிலத்தி லிருந்து, உணரும் — உள்ளவாறு உணர்கின்ற, நின் அடியார் - உன் அடியாராய், பந்தனை - பிறவிக் கட்டையை, அறுத்தார் - சேதித்தவ ராகிய, பலரும் - யாவரும், மைப்பு உறு கண்ணியர் - மிக்க கறுமை தங்கிய இரு கண்களை யுடைய மாதரும், மானுடத்து இயல்பின் - மானுட தேகமோடு வந்து, வணங்குகின்றார் - தொழுது நின்றார், அணங்கன் மணவாளா - உமா தேவியாருக்கு மணவாளனே! செப்பு உறு கமலங்கள் - யாவராலும் புகழ் கின்ற தாமரைகள், மலரும் - பூத்தற்கிடமாகிய, தண் வயல் சூழ் - குளிர்ச்சி பொருந்திய வயல் சூழ்ந்த, திருப் பெருந்துறை உறை சிவபெருமானே - திருப் பெருந்துறையி லெழுந்தருளிய பெம்மானே! இ - இந்த, பிறப்பு அறுத்து - பிறவித் தளையைக் கொய்து, எம்மை - எங்களை, ஆண்டு அருள் புரியும் - அடி மைகளாகக்கொண்டு அருள் செய்கின்ற, எம்பெருமான் - எம்பெருமானே! பள்ளி எழுந்தருளாய் - திருப் பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) திருப் பெருந்துறைக் கிறைவனுகிய சிவபெருமானே! உன் அடியார் முதலியயாவரும் அன்பு கூர்ந்து வந்து வணங்கா நின்றனர், ஆதலால் நீ திருப்பள்ளி எழுந்தருளல் வேண்டும், என்பது.

(வி - ரை.) பப்பு - ஒப்பு எனினுமாம். வீடு - துறவு எனினுமாம். [விடு தல்] மானுடத் தியல்பின் வணங்குகின்றார் என்றதாயிற்று. மைப்புறு கண் ணியர் என்றது தெய்வப் பெண்களை. அணங்கு - தெய்வப் பெண் பொதுப்

பெயராயினும் இவ்விடத்து உமாதேவியை யுணர்த்திற்று. செப்பு - வள்ளம் எனினுமாம். சேப்பு என்பது செப்பு எனக் குறிகிற்றெனக் கொண்டு செம்மை மிக்க எனினு மமையும். (௬)

அதுபழச்சுவையெனவமுதெனவறிதற்
கரிதெனவெளிதெனவமரருமறியா
ரிதுவவன்றிருவுருவிவனவனெனவே
யெங்களையாண்டுகொண்டிங்கெழுந்தருளு
மதுவளர்பொழிற்றிருவுத்தரகோச
மங்கையுள்ளாய்திருப்பெருந்துறைமன்னா
வெதுவெமைப்பணிகொளுமாறதுகேட்போ
மெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) அது - அந்தப் பொருள், பழச்சுவை என - முக்கனிகளின் சுவை யெனவும், அமுது என - அமுதெனவும், அறிதற்கு அரிது என - அறிதற் கரிதெனவும், எளிது என - எளிதெனவும், அமரரும் அறியார் - தேவரு மறியார்கள், [அங்ஙனமாக] இது அவன் திருவுரு - இது அவனது திருவுருவம், இவன் அவன் - இவனே யவன், எனவே - என்று சொல்லும்படியாகவே, எங்களை ஆண்டுகொண்டு - எங்களை யாண்டுகொண்டு, இங்கு எழுந்தருளும் - இவ்விடத் தெழுந்தருளிய, மதுவளர் பொழில் - தேன் பெருகுகின்ற சோலை சூழ்ந்த, திரு வுத்தரகோச மங்கை உள்ளாய் - திரு உத்தரகோச மங்கையில் எழுந்தருளியிருப்பவனே! திருப் பெருந்துறை மன்னா - திருப் பெருந்துறைக் கிறைவனே! எம்மை - எங்களை, பணி கொள்ளும் ஆறு எது - ஆட்கொள்ளும் விபரம் யாது, அது கேட்போம் - அதனைக் கேட்டருள்வோம், எம் பெருமான் - எமது பெருமானே! பள்ளி எழுந்தருள்வாய் - திருப்பள்ளி விட்டு எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) திருப் பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! தேவர்களாலும் அறியப்படாத உன்னை யாம் அறிந்துய்யும்படி எம்மை யாண்டு கொண்டு திரு வுத்தரகோச மங்கையில் எழுந்தருளிய இறைவனே! எம்மை ஆட்கொள்ளும் வழியாது, சொல்லுவாயாக என்று வினவுவோம், நீ திருப் பள்ளிவிட் டெழுந்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) முக்கனி என்றது வாழை, பலா, மா என்று மூன்று கனிகளைக் குறித்தது. (௭)

முந்தியமுதனடுவிறுதியுமானாய்
மூவருமறிகிலரியாவர்மற்றறிவார்
பந்தணைவிரலியுநீயுநின்னடியார்
பழங்குடிறொறுமெழுந்தருளியபரனே

செந்தழல்புரைதிருமேனியுங்காட்டித்
திருப்பெருந்துறையுறைகோயிலுங்காட்டி
யந்தணனவதுங்காட்டிவந்தாண்டா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) முந்திய - முற்பட்ட, முதல் நடு இறுதியும் ஆனாய் - முதலிடை கடைகளு மாயினை, மூவரும் - திரிமூர்த்திகளும், அறிகிலர் - அறியுமாற்றலிலர், மற்று அறிவார் யாவர் - வேறு அறிபவர்யாவர், பந்து அணை விரலியும் நீயும் - உமாதேவியும் நீயுமாக, இன் - இனிய, அடியார் - அடியார்களுடைய, பழங்குடில் தோறும் - பழமையாகிய வீடுகள்தோறும், எழுந்தருளிய பரனே - எழுந்தருளின பரமனே! செந்தழல் புரை - செவந்த நெருப்பை ஒத்த, திருமேனியும் காட்டி - அழகிய திரேகத்தையும் காட்டி, திருப்பெருந் துறை உறை - திருப்பெருந்துறையில் வசிக்கின்ற, கோயிலும் காட்டி - திருச்சந்நிதியையுங் காண்பித்து, அந்தணன் ஆவது ஆண்டாய் - அன்புடன் வந்து அடிமைகொண்டாண்டருளினை, ஆர் அமுதே - அரிய அமிர்தமே! பள்ளி எழுந்தருளாய் - திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) முதல் நடு இறுதிகளானாய், மூவரும் அறியமாட்டார், வேறு யாவர் உன்னை அறியவல்லார், உமாதேவியும் நீயுமாக அடியார்கள் மனைதோறும் எழுந்தருளினவனே! செவந்த நெருப்புப்போன்ற திருமேனியையும், திருப்பெருந்துறையிற் கோயிலையும், வேதியனாக வந்ததையும் காட்டி எங்களையாண்டருளின அரிய அமிர்தமே! நீ திருப்பள்ளியெழுந்தருளவேண்டும், என்பது.

(வி - ரை.) மூவர் என்றது திரிமூர்த்திகளை. பந்தணை விரலி - பந்து பொருந்திய விரலை யுடையவள். பந்து - திரட்சி யெனினுமாம். இப்பொருட்குத் திரட்சியாகிய விரல்களையுடையவள் என்க. பழங்குடில் என்றது - தொன்று தொட்டுவந்த மெய்யடியார்களது இல்லரங்களை, அல்லது அவரது மனமாகிய வீடு எனினும் பொருந்தும். (அ)

விண்ணகத்தேவருநண்ணவுமாட்டா
விழுப்பொருளேயுனதொழுப்படியோங்கள்
மண்ணகத்தேவந்துவாழச்செய்தானே
வண்டிருப்பெருந்துறையாய்வழியடியோம்
கண்ணகத்தேநின்றுகளிதருதேனே
கடலமுதேகரும்பேவிரும்படியா
ரெண்ணகத்தாயுலகுக்குயிரானா
யெம்பெருமான்பள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) விண்ணகம் தேவரும் - விண்ணிடத்துள்ள தேவர்களும், நண்ணவும் மாட்டா - அடையவும் ஒண்ணாத, விழுப்பொருளே - மேலாகிய பரம்பொருளே, உன் - உன்னுடைய, தொழும்பு அடியோங்கள் - தொண்டைச்செய்கிற அடியேங்களை, மண்ணகத்தே வந்து வாழச்செய்தானே - மண்ணிடத் தெழுந்தருளி வாழ் வித்தவனே! வள் - வளமாகிய, திருப்பெருந்துறையாய் - திருப்பெருந்துறையி லுள்ளவனே! வழியடியோம் - வழியடியோமாகிய எம்முடைய, கண்ணகத்தே நின்று - கண்ணிடத்தே நின்று - களி தரு தேனே - களிப்பைத் தருகின்ற தேனே! கடல் அமுதே - பாற் கடலுள் தோன்றிய அமிர்தமே! கரும்பே - கரும்பின் சுவையே! விரும்பு அடியார் - விரும்புகின்ற அன்பரது, எண்ணகத்தாய் - மனத்தி லிருப்பவனே! உலகுக்கு உலகு ஆனாய் - உலகிற்கோ ருலகானவனே! எம்பெருமான்-எம்பெருமானே! பள்ளி யெழுந்தருளாயே - திருப் பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) தேவர்களும் அணுகவு மொண்ணாத மேலாகிய பொருளே! உன் தொண்டராகிய யாம் வாழும் பொருட்டு இம் மண்ணுலகில் எழுந்தருளினவனே! திருப் பெருந்துறையானே! எமது கண் களிக்க வருந் தேனே! அமுதே! கரும்பின் சுவையே! அடியார் மனத்திருப்பவனே! உலகுக் குலகாயிருப்பவனே! நீ திருப்பள்ளி எழுந்தருளவேண்டும், என்பது.

(வி - ரை.) தொழும்பு - தொழுப்பு என வலித்தல் பெற்றது. வழியடிமை - வமிச பரம்பரையான அடிமை. உலகுக் குலகாதலாவது எல்லா உலகுக்குந் தானிடமா யிருத்தல். (௬)

புவனியிற்போய்ப்பிறவாமையினாளும்
போக்குகின்றோமவமேயிந்தப்பூமி
சிவனுய்யக்கொள்கின்றவாறென்றுநோக்கித்
திருப்பெருந்துறையுறைவாய்திருமாலா
மவன்விருப்பெய்தவுமலரவனாசைப்
படவுநின்னலர்ந்தமெய்க்கருணையுநீயு
மவனியிற்புகுந்தெமையாட்கொள்ளவல்லா
யாரமுதேபள்ளியெழுந்தருளாயே.

(ப - ரை.) திருப்பெருந்துறை யுறைவாய் - திருப்பெருந்துறை என்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் வாழ்பவனே, திருமால் ஆம் அவன் - திருமாலாகிய அவன், புவனியில் போய்ப் பிறவாமையின் - பூமியிற் சென்று பிறவாமையினால், நாம் - யாம், அவமே - வீணாகவே, நாள் போக்குகின்றோம் - நாள் கழிக்கின்றோம், இந்தப் பூமி - இந்தப் பூமியை, சிவன் - சிவபெருமான், உய்யக்கொள்கின்ற ஆறு என்று நோக்கி - யாவரையும் உய்யக்கொள்ளும் இடமென்று பார்த்து, விருப்பு எய்தவும் - விருப்பத்தை யடையவும், மலரவன் ஆசைப்படவும் - பிரமனும் [அவ்வாறே] ஆசைப்படவும், நின் - உனது, அலர்

ந்த - பரந்த, மெய்க் கருணையும் நீயும் - உண்மையாகிய கருணையும் நீயுமாக, அவனில் புகுந்து - பூமியி லெழுந்தருளி, எம்மை ஆட்கொள்ள வல்லாய் - எங்களை யாட்கொள்ள வல்லானே, ஆர் அமுதே - அரிய அமுதமே, பள்ளி யெழுந்தருளாய் - திருப்பள்ளியை விட்டு எழுந்தருள்வாயாக, எ - று.

(க - ரை.) இறைவனே? திருமாலும், பிரமனும் நாம் பூமியிற் போய்ப் பிறவாமையால் வீணே காலங் கழிக்கின்றோம், இறைவன் ஆன்மாக்களை உய்யக்கொள்ளு மிடம் இந்தப் பூமியே ஆருமென்று நோக்கி ஆசைப்படா நிற்க. பூமியி லெழுந்தருளி எம்மை யாட்கொள்ள வல்லவனே, நீ திருப்பள்ளி எழுந்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) கருணையும் நீயும் என்றது இறைவன் எப்பொழுதும் கருணையோடு கூடியே யிருப்பன் என்பதை வற்புறுத்தற்கென்க. அலர்ந்த மெய்க் கருணை யென்றதனால் மிகப் பெரியதும் ஒரு காலத்தும் அழியாததும் ஆகிய கருணை யென்றாராயிற்று. இப்பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறென்று நோக்கு என்றது அரிப்பிரமாதி தேவர்களும் மற்றுமுள்ள ஆன்ம கோடிகளும் மோட்சாநுபவம் பெற நாடிவந்து பிறந்தற் கிடமாயுள்ளது இக் கரும பூமியே யாதலின். (க0)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கோயின்மூத்த திருப்பதிகம்.

சிவாநந்தத்தில் திகைப்பு.

[சிவாநந்தத்தில் திகைப்பு
என்பது சிவாநந்த மளவறுக்கொண்ணுமை]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

உடையாளுன் றனடுவிருக்கு
முடையாணடுவுணீயிருத்தி
யடியேனடுவுளிருவீரு
மிருப்பதா னலடியேனு

னடியார்நடுவுளிருக்குமரு
ளைப்புரியாய்பொன்னம்பலத்தெம்
முடியாமுதலேயென்கருத்து
முடியும்வண்ணமுன்னின்றே.

(ப - ரை.) உடையாள் - எல்லா மேன்பாட்டையு முடைய உமையவள், உன்றன்நடு இருக்கும் - உன்னிடையே யிருப்பள், உடையாள் நடுவுள்-உமையவளிடையே, நீ இருத்தி - நீ யிருக்கின்றனை, அடியேன் நடுவுள் - அடியேனிடையே, இருவீரும் இருப்பது ஆனல் - நீங்கள் இருவரும் அன்போடு எழுந்தருளி யிருப்பதாயின், பொன்னம்பலத்து - பொற்சபையி லிருக்கிற, எம்முடியாமுதலே - எமது முடிவற்ற முதற்பொருளே, என்கருத்து முடியும் வண்ணம் - அடியேனது எண்ணம் முடியும்படி, முன்நின்று-என்னெதிரே நின்று, அடியேன் - அடியனேன், உன் அடியார் நடுவுள் இருக்கும் - உன்னடியாரிடையே யிருத்தற்குரிய, அருளைப் புரியாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) பொன்னம் பலவனே ? உடையவள் உன்னிடையே இருப்பள், நீ அவ்வுடையவ ளிடையே யிருப்பாய். நீங்கள் இருவீரும் அடியேனிடையிருப்பது மெய்யாயின், நான் உன்னடியாரிடை யிருக்கும்படி அருள்செய்து, என் கருத்தை முற்றுவிக்க வேண்டும், என்பது.

(வி - ரை.) உடையாள் - எல்லாவற்றையு முடையவள். நடு என்றது இருதய கமலத்தை. அடியார் நடு என்ற விடத்து இடையே யென்பது பொருள். முடியா முதலென்றது அந்த மில்லாதவ னாதலின். (க)

முன்னின்றாண்டாயெனை முன்ன
மியானுமதுவேமுயல்வுற்றுப்
பின்னின்றேவல்செய்கின்றேன்
பிற்பட்டொழிந்தேன்பெம்மானே
யென்னின்றருளிவரநின்று
போந்திடென்னாவிடிலடியா
ருன்னின்றிவனாரென்னாரோ
பொன்னம்பலக்கூத்துகந்தானே.

(ப - ரை.) முன்னம் - முன்னே, என்னை - அடியேனை, முன்னின்று ஆண்டாய் - எதிரில் நின்று ஆட்கொண் டருளினை, யானும் - அடியேனும், அதுவே முயல்வுற்று - அதனையே முயன்று, பின்னின்று ஏவல் செய்கின்றேன் - பின்னே நின்று ஏவல் செய்யா நின்றேன், பிற்பட்டு ஒழிந்தேன் - அதிலும் பிறகிட்டொழிந்தேன், பெம்மானே - பெருமானே, என - என்னை, இன்று - இப்பொழுது, அருள் இவர நின்று - உனது திரு அருள் பற்றுமாறு நின்று, போந்திடு என்னாவிடில் - வாவென்றருளா விடின், அடியார் - உன்

னடியவர், உன் நின்று - உன்னெதிர் நின்று, இவன் ஆர் என்றோ - [உன் அருளுக்குரிய னல்லாத) இவன் யாரென்று கேளாரோ, பொன்னம்பலக் கூத்து உகந்தானே - பொற்சபையில் நடிக்கும் ஆனந்தக் கூத்தை விரும்பின வனே, எ - று.

(க - ரை.) பொன்னம்பலக் கூத்தனே ? முன்னின்று என்னை யாண் டருளினை, யானும் அதுபற்றியே பின்னின்றேவல் செய்கின்றேன், அதிலும் பிறகிட்டேன், ஆயினும் என்னை உன்னருளால் வாவென்றழையா விடின், அடியார் இவன் யாரென்று உன்னைக் கேளாரோ, என்பது.

(வி - ரை.) முன்னம் என்றது - திருப்பெருந்துறையி லெழுந்தருளி ஆட்கொண்ட காலத்தை. அதுவோன்றது - அடிமைத் திறத்தை. உள் நின்று என்றது - உனக்கெதி ரெனப் பொருள்படும். (உ)

உகந்தானேயன்புடையடிமைக்
குருகாவுள்ளத்துணர்விலியேன்
சகந்தானறியமுறையிட்டாற்
றக்கவாறன்றென்றோரோ
மகந்தான்செய்துவழிவந்தார்
வாழவாழ்ந்தாயடியேற்குன்
முகந்தான்றாராவிடின்முடிவேன்
பொன்னம்பலத்தெம்முழுமுதலே.

(ப - ரை.) அன்பு உடை அடிமைக்கு - அன்புள்ள அடிமைத் திறத்தை, உகந்தானே - ஏற்றுக் கொண்டவனே, உருகா உள்ளத்து - கரையா மனத் தையுடைய, உணர்வு இலியேன் - அறிவில்லாதவனாகிய நான், சகந்தான் அறிய - உலகமறியும்படி, முறையிட்டால் - முறையிட்டுக் கொண்டால், தக்க வாறு அன்று என்றோரோ - இது தக்கவழி யல்லவென்று சொல்லாரோ, மகந் தான் செய்து - யாகம் செய்து, வழி வந்தார் - வழிப்பட்டு வந்தவர், வாழ - வாழும்படி, வாழ்ந்தாய் - வாழ்ந்தனை, அடியேற்கு - அடியேனுக்கு, உன் - உனது, முகந்தான் தாராவிடின் - முகத்தைக்கொடாவிடின், முடிவேன் - இறந்து படுவேன்; பொன்னம்பலத்து-பொற்சபையிலுள்ள, எம்முழு முதலே- எம்முழு முதற்பொருளே, எ - று.

(க - ரை.) பொன்னம்பலவனே ? அன்போடு செய்யுந் தொண்டினுக்கு மகிழ்ந்தவனே, மனவுருக்க மில்லாத அடியேன் உலகறிய முறையிட்டால், இது தகாதென்று சொல்லார்களோ, வேள்வி முதலான நற்கருமங்கள்செய்து வழிவந்தவர் வாழும்படி எழுந்தருளி யிருந்தனை, நீ யெனக்கு முகந்தாராவிடின் யான் இறந்து படுவேன், என்பது.

(வி - ரை.) என் மனமுருகிலேன் அறிவிலேன் என்றற்கு, "உருகா வுள்ளத் துணர்விலியேன்" என்றார். சகம் - உலகு இதற்கு தோன்றியழியு மியல் புடையது என்பது பொருள். முடிதல் - இறத்தல். முகந்தரல் - திருவருள் புரிதல். (௩)

முழுமுதலேயைம்புலனுக்கு
மூவர்க்குமென்றனக்கும்
வழிமுதலேநின்பழவடியார்
திரள்வான்குழுமிக்
கெழுமுதலேயருடந்திருக்க
விரங்குங்கொல்லோவென்
றழுமதுவேயன்றிமற்றென்
செய்கேன்பொன்னம்பலத்தரைசே.

(ப - ரை.) முழுமுதலே - முழுமுதற் பொருளே? ஐம்புலனுக்கும் - பஞ்சேந்திரியங் களுக்கும், மூவர்க்கும் - மூவருக்கும், என்றனக்கும் - எனக்கும், வழிமுதலே - நன்னெறிக்கண் முதற்பொருளா யிருப்பவனே, நின்பழ அடியார் திரள் - உன் பழவடியார் திருக்கூட்டமும், வான்-விண்ணுலகமும், குழுமி - கூட்டங்கூடி, கெழு - பொருந்துகின்ற, முதலே - முதல்வனே, அருள் தந்து இருக்க - அருள் புரிந்திருக்க, இரங்குங் கொல்லோ என்று - இரங்குமோ வென்று, அழும் அதுவே யன்றி - அழுவதே யல்லது, மற்றென் செய்கேன் - வேறென் செய்ய வல்லேன், பொன்னம்பலத் தரசே - பொற்சபா நாயகனே, எ - று.

(க - ரை.) கனக சபாபதியே! முழுமுதற் பொருளே! ஐம்புலன் முதலானவைகட்கும் காரணனே! இறைவன் எப்பொழுது நமக் கருள்புரிய இரங்குவனோ வென்று அழுதலேயன்றி, யான் வேறென் செய்யக்கடவேன், என்பது.

(வி - ரை.) முழுமுதலென்றது இறைவனுக்கு மேலொரு கடவுளில்லையாதலின். மூவரென்றது அரிப்பிரமேந்திரர்களை. வான் என்றது இடவாகு பெயராய் மேலுலக வாசிகளுக்கு விளக்குகின்றது. (௪)

அரைசேபொன்னம்பலத்தாடு
மமுதேயென்றுன்னருளேநோக்கி
இரைதேர்கொக்கொத்திரவுபக
லேசற்றிருந்தேவேசற்றேன்
கரைசேரடியார்களிசிறப்பக்
காட்சிகொடுத்துன்னடியேன்பாற்
பிரைசேர்பாலினெய்போலப்
பேசாதிருந்தாலேசாரோ.

(ப - ரை.) அரைசே - அரசனே ? பொன்னம்பலத்து ஆடும் அமுதே - சிற்சபையில் நடிக்கின்ற அமிர்தம்போன்றவனே, என்று - என்று துதித்து, உன் அருள் நோக்கி - உன் திருவருளை வஞ்சித்து, இரைதேர் கொக்கு ஒத்து- உணவைத் தேடுகின்ற கொக்குப்போன்று, இரவு பகல் - இரவும் பகலும், ஏசற்று இருந்து - துக்கித்திருந்து, வேசற்றேன் - இளைத்தேன், கரைசேர் - [பிறவிக் கடலைக்கடந்து] முத்திக்கரையை யடைந்த, அடியார்-உன்னடியவர், களிசிறப்ப - களிப்பு மிகும்படி, காட்சி கொடுத்து - காட்சிகொடுத்தருளி, உன் அடியேன் பால் - உன்னடியேனாகிய என்னிடத்தில், பிரைசேர் பாலில் நெய் போல - பிரையிட்ட பாலின்கண்ணுள்ள நெய்போல, பேசாது இருந்தால் - மவுனமாய் பேசாமலிருந்தால், ஏசாரோ - உலகத்தார் வையாரோ, எ - று.

(க - ரை.) அரைசே ? பொன்னம்பலத்தில் நடிக்கு மமுதே யென்று துதித்து உனது திருவருளை நாடியிருந்து இளைத்தேன், உன் அடியார் களிப்புமிகுந்திருக்க அவர்களுக்குக் காட்சி கொடுத்து, அடியேனிடத்தில் மறைந்திருந்தால் உன்னை உலகத்தார் வையாரோ, என்பது.

(வி - ரை.) இரைதேர் கொக்கு ஒத்து என்றது - கொக்கானது, ஓடுமீனோடி யுறுமீன் வருமளவும், வாடியிருக்குமாங் கொக்கு என்றபடி. உன்னருள்வாய்க்கும் பொருட்டுப் பொறிபுலன்கள் யாவும் வாடியிருந்தமையைக் குறிப்பித்தது. வேசறுதல் - மெலிதல். (௫)

ஏசாநிற்பரென்னையுனக்
  கடியானென்றுபிறரெல்லாம்
பேசாநிற்பரியான்றானும்
  பேணாநிற்பேனின்னருளே
தேசாநேசர்சூழ்ந்திருக்குந்
  திருவோலக்கஞ்சேவிக்க
ஈசாபொன்னம்பலத்தாடு
  மெந்தாயினித்தானிரங்காயே.

(ப - ரை.) ஏசா நிற்பர் - வையாநிற்பர், என்னை - அடியேனை, உனக்கு அடியான் என்று - உனக்கடியவனென்று, பிறர் எல்லாம் - அயலாரெல்லாரும், பேசா நிற்பர் - சொல்லா நிற்பர்கள், யான் தானும் - அடியேனும், நின் அருளே பேணா நிற்பேன் - உன் னருளையே விரும்பா நிற்பேன், தேசா - ஒளியுருவானவனே, நேசர் சூழ்ந்திருக்கும் - அன்பர் சூழாநின்று சூழ்ந்திருக்கிற, திருவோலக்கம் சேவிக்க - உன் திருவோலக்கத்தைச் சேவிக்க, ஈசா - ஈசனே, பொன்னம்பலத்து ஆடும் - பொற்சபையில் நடிக்கின்ற, எந்தாய் - எந்தையே, இனித்தான் இரங்காய் - இனியாயினு மிரங்கி யருள்வாயாக, எ - று.

(க - ரை.) பொன்னம்பலத் தாடுகின்ற எந்தையே ! என்னை வைவார் சிலரும் உன் னடியவனென்று சொல்லுவார் சிலருமா யிருக்கின்றனர், யாரெப்

படி யிகழினும் புகழினும் யான் உன்னருளையே விரும்பா நின்றேன். இனி யாயினும் உன்னன்பர் சேவிக்கும் திருவோலக்கத்தை நான் சேவிக்கும்படி இரங்கி யருளவேண்டும், என்பது.

(வி - ரை.) ஏசல் - இகழ்தலெனினுமாம். திருவோலக்கம் - திருக்கோலம். ஈசன் - சர்வாத்மாக்களினும் நிறைந்துள்ளவன், அல்லது சர்வ வித்தியாகாரணனு யுள்ளவ னெனினுமாம். (௬)

இரங்குநமக்கம்பலக்கூத்த
னென்றென்றேமாந்திருப்பேனை
யருங்கற்பனைகற்பித்தாண்டா
யாள்வாரிலிமாடாவேனோ
நெருங்குமடியார்களுநீயு
நின்றுநிலாவிவிளையாடு
மருங்கேசார்ந்துவரவெங்கள்
வாழ்வேவாவென்றருளாயே.

(ப - ரை.) நமக்கு - நம் பொருட்டுக்கு, அம்பலக் கூத்தன் - பொது நடஞ் செய்வோன், இரங்கும் - இரங்குவன், என்றென்று - என்று பலகாற் கூறி, ஏமாந்திருப்பேனை - (இரங்காமையால்) திகைத்திருக்கும் அடியேனை, அரு - இதுவரையில் இல்லாத, கற்பனை - ஒரு புதிய ஏற்பாட்டை, கற்பித்து - ஏற்படுத்தி, ஆண்டாய் - ஆண்டருளினை, ஆள்வார் இலி - காப்பாற்றுவாரில்லாத, மாடு ஆவேனோ - மாட்டுக்கு நிகராவேனோ, நெருங்கும் - நெருங்கிய, அடியார்களும் நீயும் - அடியவர்களும் நீயும், நின்று நிலாவி - நின்று விளங்கி, விளையாடும் - விளையாடுகின்ற, மருங்கே சார்ந்துவர - பக்கத்திலே யானுஞ் சேர்ந்து வரும்படி, எங்கள் வாழ்வே - எமது செல்வமே, வா என்று அருளாய் - என்னை வாவென் றருள் செய்வாய், எ - று.

(க - ரை.) பொன்னம்பலத்தாடும் இறைவன் நமக் கிரங்குவனென்று ஏமாந்திருக்கிற என்னை, இதுவரையில் இல்லாத புதிய கற்பனை யொன்றை யுண்டாக்கி ஆண்டருளினை, நான் ஆள்வாரில்லாத மாடுபோ லாவேனோ, உன்னடியார்களும் நீயும் நின்று விளையாடு மிடத்தின் பக்கத்தில் சேர்ந்து வரும்படி, என்னை வாவென் றழைத்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) அருங்கற்பனை யென்பதில் அருமை அருங்கேடன் என்பதிற்போல இன்மை குறித்து நின்றது. கற்பனை - கற்பித்தல். (இல்லாததை யுண்டு பண்ணுதல்) அருங் கற்பனை கற்பித்தாளுதலாவது - தனக் காட்படுந் தன்மை எனக் குண்டாவதன்முன்னே ஆட்கொள்ளுதல். ஆள்வாரிலி மாடு - பட்டி மாடு. தன்னிச்சையோடு திரியும் மாடு. (௭)

அருளாதொழிந்தாலடியேனை
யஞ்சேலென்பாராரிங்குப்
பொருளாவென்னைப்புகுந்தாண்ட
பொன்னேபொன்னம்பலக்கூத்தா
மருளார்மனத்தோடுனைப்பிரிந்து
வருந்துவேனைவாவென்றுன்
றெருளார்கூட்டங்காட்டாயேற்
செத்தேபோனாற்சிரியாரோ.

(ப - ரை.) அருளாது ஒழிந்தால்-திருவருள் புரியாதொழிந்தனை யாயின், அடியேனை - அடியனேனை, இங்கு - இவ்வுலகில், அஞ்சேல் என்பார் - பயப்படாதே என்பவர், ஆர் - யாவர், (ஒருவரு மில்லை) என்னைப் பொருளா-என்னையொரு பொருளாகக் கொண்டு, புகுந்து ஆண்ட - வலியவந் தாண்டருளின, பொன்னே - சுவர்ணமே, பொன்னம்பலக் கூத்தா - பொற்சபையில் நடிப்பவனே, மருள் ஆர் மனத்தோடு - மயக்கம் பொருந்திய மனத்துடன், உன்னைப் பிரிந்து வருந்துவேனை - உன்னை நீங்கி வருந்தாநின்ற என்னை, வாவென்று-வாவென் றழைத்து, உன் - உனது, தெருள் ஆர் - தெளிவு பொருந்திய, கூட்டம் - அன்பர் கூட்டத்தை, காட்டாயேல் - காட்டா தொழிந்தால், செத்தே போனால் - [அடியேன்] இறந்தேபோனால், சிரியாரோ - உலகத்தார் நகையாரோ; எ - று.

(க - ரை.) பொன்னம்பலக் கூத்தனே! நீ அடியேனுக்குக் கிருபை செய்யா தொழிந்தால், அஞ்சாதே யென்பவர் ஒருவரு மில்லை யாதலால், மருண்ட மனத்தோடு உன்னைப் பிரிந்து வருந்துவேனை வாவென் றழைத்து தெளிவை யுடைய உன் அன்பர் கூட்டத்தைக் காட்டாவிடில் யான் சாவேன், [அவ்வாறு] யான்செத்தால் நாட்டி லுள்ளவர் நகையாரோ, என்பது.

(வி - ரை.) தெருளார் என்ற விசேடணத்தால் கூட்டம் அடியார் கூட்டத்தை யுணர்த்திற்று. தெருள் - ஞானம். மருள் - மயக்கம். செத்தே போனாற் சிரியாரோ வென்றது நல்லவன் பிறப்பிறப்புக்க ளற்றவனா யிருந்தும், ஒருகாலத்தேனும் அடிமையென் றுட்கொண்ட ஒருவனைச் சாவும்படி விட்டது நீதியன்றென்று எண்ணியென்க. (அ)

சிரிப்பார்களிப்பார்தேனிப்பார்
திரண்டுதிரண்டுன்றிருவார்த்தை
விரிப்பார்கேட்பார்மெச்சுவார்
வெவ்வேறிருந்துன்றிருநாமந்

தரிப்பார்பொன்னம்பலத்தாடுந்
தலைவாவென்பாரவர்முன்னே
நரிப்பாய்நாயேனிருப்பேனோ
நம்பீயினித்தானல்காயே.

(ப - ரை.) சிரிப்பார் - சிரிப்பவரும், களிப்பார் - களிப்பவரும், தேனிப்பார் - தியானிப்பவருமாய், திரண்டு திரண்டு - கூடிக் கூடி, உன் திருவார்த்தை - உன் திருப்புகழை, விரிப்பார் - விஸ்தரிப்பவரும், கேட்பார் - கேட்பவரும், மெச்சுவார் - மெய்ச்சுவாரும், வெவ்வேறு இருந்து - தனித்தனி இருந்து, உன் திருநாமம் தரிப்பார் - உன் திரு நாமத்தைத் தரிப்பவரும், பொன்னம்பலத்து ஆடும் - பொற்சபையின்கண்ணே நிருத்தஞ் செய்கின்ற, தலைவா என்பார் - இறைவா வென்பவருமாகிய, அவர் முன்னே - அவர்களுக் கெதிரில், நரிப்பு ஆய் - இகழ்தற் குரியேனாகி, நாயேன் இருப்பேனோ - நாயினே னிருப்பேனோ, நம்பீ - கல்யாணகுண பூர்ணனே, இனித் தான் நல்காயே - இனியேனுங் கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) பொன்னம்பலத்தி லாடுகின்ற இறைவனே ! உன் அன்பர் சிரித்தல் முதலான காரியங்களைச் செய்து களித்திருப்பார், அவர்களுக் கெதிரில் இகழ்தற் குரியவனாகிய நாயேனிருக்கலாமோ, மங்கள குணங்கள் நிறைந்தவனே, இனியாயினும் கிருபை செய்வாயாக, என்பது.

(வி - ரை.) தேனித்தல் - தியானித்த லின்மரூஉ. விரித்தல் - பல பல காரணங்களாகத் துதித்தல். மெய்ச்சுதல் - கொண்டாடல். திருமைந்தறப்பார் என்றது - திரு நாமோச்சாரணஞ் செய்வரென்றும் பொருளது. நரிப்பு - இகழ்வு. நம்பீ என்றது நம்பி எனக் குறுகியது அண்மை விளியாதலின். (கூ)

நல்காதொழியானமக்கென்றுன்
ஞமம்பிதற்றிநயனநீர்
மல்காவாழ்த்தாவாய்குழறு
வணங்காமனத்தானினைந்துருகிப்
பல்காலுன்னைப்பாவித்துப்
பரவிப்பொன்னம்பலமென்றே
யொல்காநிற்குமுயிர்க்கிரங்கி
யருளாயென்னையுடையானே.

(ப - ரை.) நமக்கு நல்காதொழியான் என்று - நமக்கருள் புரியாதொழியானென்று துணிந்து, உன் நாமம் பிதற்றி - உன் திருநாமங்களைப் பலகாற் சொல்லி, நயனம் - கண்களில், நீர்மல்கா - நீரை நிறைத்து, வாழ்த்தா - வாழ்த்தி, வாய்குழறு - வாய்குழறி, வணங்கா-வணங்கி, மனத்தால் நினைந்து உருகி - மனத்தினால் நினைத்துருகி, பல்கால் உன்னைப் பாவித்து - பலகாலு முன்னைப்

பாவனைசெய்து, பரவி - துதித்து, பொன்னம்பலம் என்றே ஒல்காநிற்கும் உயிர்க்கு - பொன்னம்பலமென்றே வாடாநிற்கும் என் உயிர்க்கு, இரங்கி அருளாய் - இரங்கி யருள்வாயாக, என்னை உடையானே - என்னை ஆளாக வுடையவனே, எ - று.

(க - ரை) இறைவன் நமக்குக் கிருபைசெய்யா தொழியான் என்று உன் திருநாமங்களைப் பலகாற்சொல்லி, கண்ணீர் மல்குதல் முதலிய செயல்களைச் செய்து தளரா நிற்கிற என்னுயிர்க் கிரங்கி யருளவேண்டும், என்பது.

(வி - ரை.) பாவித்தல் - சிந்தித்தல். நல்கல் - தளரல். பிதற்றி என்றது ஆனந்த மேலீட்டால் பரவசப்பட்டுத் தியானித்தமையை. உயர்க்கிரங்கி என்றது சுகதுக்கங்களை யனுபவத்திற் குரியது ஆன்மாவேயென்றுஞ் சித்தாந்த மரபானென்க. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கோயிற்றிருப்பதிகம்.

## அனுபோக விலக்கணம்.

[அதாவது சிவாநுபூதிக் கடையாளம்]

### ஆசிரிய விருத்தம்.

திருச்சிற்றம்பலம்.

மாறிநின்றென்னை மயக்கிடும்வஞ்சப்
புலனைந்தின்வழியடைத்தமுதே
யூறிநின்றென்னுள்ளெழுபரஞ்சோதி
யுள்ளவாகாணவந்தருளாய்
தேறலின்றெளிவேசிவபெருமானே
திருப்பெருந்துறையுறைசிவனே
யீறிலாப்பதங்களியாவையுங்கடந்த
வின்பமேயென்னுடையன்பே.

(ப - ரை.) மாறி நின்று - பகை கொண்டு நின்று, என்னை மயக்கிடும் - அடியேனை மயங்கச் செய்கிற, வஞ்சப்புலன் ஐந்தின் - வஞ்சனையைக் கொண்ட இந்திரியங்கள் ஐந்தினுடைய, வழி அடைத்து - வாயில்களைத் தடுத்து, அமுதே ஊறி நின்று - அமுதமே சுறந்து நின்று, என் உள் எழுபரஞ்சோதி - என் மனத்தின்கண் குடியா யமர்ந்து விளங்குகிற மேலான ஒளியே, உள்ள வாறு காண - நான் உன்னை உள்ளபடியே கண்டு தரிசிக்கும் பொருட்டு, வந்தருளாய் - எழுந்தருள்வாயாக, தேறலின் தெளிவே - கொம்பிற்கட்டிய தேனினதுதெளிவே, சிவபெருமானே - சிவபிரானே, திருப்பெருந் துறையுறை சிவனே - திருப்பெருந் துறையில் வாழ்கின்ற சிவனே, ஈறு இல்லா - அந்த மில்லாத, பதங்கள் யாவையும் கடந்த - பதவிக ளெல்லாவற்றையுங் கடந்து நின்ற, இன்பமே - ஆநந்தமே, என்னுடை அன்பே - என்னுடைய அன்புருவமே, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! என்னைப் பகைத்து மயக்குகின்ற ஐம்புலன்களின் வழியை யடைத்து, உள்ளவாறு உன்னை நான் வணங்கும்படி எழுந்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) வஞ்சப்புலங்களைந்தின் வழியை யடைத்து என்றது மனத்தைப் பஞ்சேந்திரியங்களின் வழியே செல்லவொட்டாது தடுத்து என்றபடி. மேன்மை அல்லது நித்தியம். உள்ளவாறு என்பது உள்ளவா வென நின்றது கடைக்குறை. (௧)

அன்பினாலடியேனாவியோடாக்கை
யாநந்தமாய்க்கசிந்துருக
வென்பரமல்லாவின்னருடந்தா
யானிதற்கிலனோர்கைம்மாறு
முன்புமாய்ப்பின்புமுழுதுமாய்ப்பரந்த
முத்தனேமுடிவிலாமுதலே
தென்பெருந்துறையாய்சிவபெருமானே
சீருடைச்சிவபுரத்தரைசே.

(ப - ரை.) அன்பினால் - அன்பின் மிகுதியால், அடியேன் - அடியேனது, ஆவியோடு - உயிரோடு, ஆக்கை - உடம்பும், ஆநந்தமாய் - இன்ப வடிவாகி, கசிந்து உருக - கரைந்துருகும்படி, என் பரம் அல்லா - என் தகுதிக்குப் பொருத்தமில்லாத, இன் அருள் தந்தாய் - இனிய திருவருளைச் செய்தனை, இதற்கு - இந்த நன்றிக்கு, யான் - நான், ஓர் கைம்மாறு இலன் - யாதொரு பிரதியுபகாரமு முடையவனல்லன், முன்புமாய் - முன்னுமாகி, பின்பும் - பின்னும், முழுதுமாய் - முழுவதுமாகி, பரந்த - வியாபித்த, முத்தனே - பாசவி முக்தனே, முடிவு இல்லா - முடிதலில்லாத, முதலே - முதல்வனே,

தென் பெருந் துறையாய் - தென் திருப் பெருந்துறைப்பதியை யுடையானே, சிவபெருமானே-சிவபிரானே, சீர் உடை சிவபுரத்து அரைசே - சிறப்புப் பொருந்திய சிவபுரத்துக் கிறைவனே, எ - று.

(க - ரை.) முன்பின் என்பவைகளாகி, முழுதுமாகி வியாபித்து நின்ற பாசவி முக்தனே, முடிவில்லாத முதல்வனே, திருப்பெருந் துறையானே, சிவபுரத் தரசனே, அன்பின் மிகுதியால் அடியேனது உயிருடம்புகள் இன்ப உருவாகிக் கசிந்துருகும்படி என் தகுதிக்குப் பொருத்தமில்லாத இனிய அருளைத் தந்தாய், இதற்கு யான் செய்யவேண்டிய கைம்மாறு ஒன்றுமில்லை, என்பது.

(வி - ரை.) பரம் - பாரம் இது தாங்கற் கருமை யென்பதைக் குறித்து. முத்தன் - மலரஹிதன். முன்புமாய்ப் பின்னு முழுதுமாய் என்றது இறைவனது அநாதித் தன்மையையும் சர்வ வியாபகத் தன்மையையும் விளக்கி நின்றது. (உ)

அரைசனேயன்பர்க்கடியனேனுடைய
வப்பனேயாவியோடாக்கை
புரைபுரைகனியப்புகுந்துநின்றுருக்கிப்
பொய்யிருள்கடிந்தமெய்ச்சுடரே
திரைபொராமன்னுமமுதத்தெண்கடலே
திருப்பெருந்துறையுறைசிவனே
யுரையுணர்விறந்துநின்றுணர்வதோருணர்வே
யானுன்னையுரைக்குமாறுணர்த்தே.

(ப - ரை.) அன்பர்க்கு அரைசனே - அடியவர்க்குத் தலைவனே, அடியனேனுடைய அப்பனே - அடியேனுடைய ஐயனே, ஆவியோடு ஆக்கை — என்து உயிருமுடம்பும், புரைபுரைகனிய - மயிர்க்கால்கள் தோறும் கனியும்படி, புகுந்து நின்று உருக்கி - புகுந்து நின்றுருகப் பண்ணி, பொய் இருள் கடிந்த - பொய்யாகிய அஞ்ஞான அந்தகாரத்தை நீக்கின, மெய்ச்சுடரே - உண்மையாகிய ஒளியே, திரைபொரா — அலைகள்மோதி, மன்னும் - நிலைபெற்ற, அமுதத் தெண்கடலே - தெளிவாகிய அமிர்த சாகரமே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறைப் பதியில் விளங்கும் சிவபெருமானே, உணர்வு - சொல்லும் அறிவும், இறந்து நின்று - கடந்து நின்று, உணர்வது - அறியத் தகுவதாகிய, ஓர் உணர்வே - ஒப்பற்ற அறிவே, யான் - நான், உன்னை உரைக்குமாறு - உன்னைப் புகழ்ந்துரைக்கும்படி, உணர்த்து - அறிவுறுத்துவாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே, நான் உன்னைப்புகழும்படி எனக்கு அறிவுறுத்த வேண்டும், என்பது.

(வி - ரை) புரை - தொளை. பொரா செய்யாவென்றும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். அரசு - அரைசு எனப் போலியாயிற்று. (௩)

உணர்ந்தமாமுனிவரும்பரோடொழிந்தா
ருணர்வுக்குந்தெரிவரும்பொருளே
யிணங்கிலியெல்லாவுயிர்கட்குமுயிரே
யெனைப்பிறப்பறுக்குமெம்மருந்தே
திணிந்ததோரிருளிற்றெளிந்ததூவெளியே
திருப்பெருந்துறையுறைசிவனே
குணங்கடாமில்லாவின்பமேயுன்னைக்
குறுகினேற்கினியென்னகுறையே.

(ப - ரை.) உணர்ந்த - எல்லா நூல்களையும் சந்தேகவிபரீதங்களறக் கற்றறிந்த, மாமுனிவர்-பெரிய முனிவரும், உம்பரோடு-தேவருடன், ஒழிந்தார் - ஒழிந்து நின்றவர்களுடைய, உணர்வுக்கும் - அறிவுக்கும், தெரிவு அரும்பொருளே - தெரிதற் கருமையாகிய பொருளே, இணங்கு இலி - ஒப்பிலாதவனே, எல்லா வுயிர்கட்கும் உயிரே - எல்லாச் சீவர்களுக்குள்ளும் உயிரா யிருப்பவனே, என்னை - அடியேனது, பிறப்பு அறுக்கும் - பிறவிப் பிணியைச் சேதிக்கிற, எம்மருந்தே - எமது மருந்தே, திணிந்தது - நெருங்கினதாகிய, ஓர் இருளில் - ஒப்பற்ற இருளின்கண், தெளிந்த - தெளிவடைந்த, தூவெளியே - பரிசுத்தமாகிய ஒளியே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறைப் பெருமானே, குணங்கள் தாம் இல்லா - குணங்கள் இல்லாத, இன்பமே - ஆநந்தமே, உன்னைக் குறுகினேற்கு-உன்னையடைந்த எனக்கு, இனி என்ன குறை- இனியென்ன குறையுளது, எ - று.

(க - ரை.) முனிவர் தேவர் முதலியோரும் உணர்தற்கரிய பொருளே, எல்லா வுயிர்களுக்கும் உயிரா யிருப்பவனே, என் பிறவிப்பிணியை யொழிக்கு மருந்தே, வலிய அஞ்ஞான விருளை யழிக்கின்ற ஒளியே, திருப்பெருந்துறைச் சிவபெருமானே, குணரகிதமான ஆநந்தமே, உன்னைச்சேர்ந்த எனக்கு என்ன குறையுளது, என்பது.

(வி - ரை.) இறைவன் "உணர்ந்தார்க் குணர்வரியோன்" ஆதலால், "உணர்ந்த மாமுனிவரும்பரோ டொழிந்தா ருணர்வுக்குந் தெரிவரும்பொருளே" என்றார். இறைவனது பெருங்கருணையா லன்றி நீக்கப்படாமையால் அஞ்ஞானத்தைத் "திணிந்ததோ ரிருள்" என்றார். இணங்கு - ஒப்பு. திணிதல்-நெருங்குதல். (௪)

குறைவிலாநிறைவேகோதிலாவமுதே
யீறிலாக்கொழுஞ்சுடர்க்குன்றே
மறையுமாய்மறையின்பொருளுமாய்வந்தென்
மனத்திடைமன்னியமன்னே

சிறைபெறுநீர்போற்சிந்தைவாய்ப்பாயுந்
திருப்பெருந்துறையுறைசிவனே
இறைவனேநீயென்னுடலிடங்கொண்டா
யினியுன்னையென்னிரக்கேனே.

(ப - ரை.) குறைவு இல்லா நிறைவே - குறைவற்ற பரிபூரணமே, கோது இல்லா அமுதே - குற்றமற்ற அமிர்தமே, ஈறு இல்லா - முடிவில்லாத, கொழுஞ்சுடர்க் குன்றே - செழுமையாகிய மலைபோன்ற ஒளி வடிவமே, மறையுமாய் - வேதமுமாகி, மறையின் பொருளுமாய் - வேதத்தின் பொருளுமாகி, வந்து - வந்து, என்மனத்திடை - என்மனத்தின்கண், மன்னிய-நிலைபெற்ற, மன்னே-இறைவனே, சிறைபெறு நீர்போல்-கரையுற்ற நீர்போல், சிந்தைவாய்-என்மனத்தின்கண், பாயும் - பாயாநின்ற, திருப்பெருந் துறையுறை சிவனே-திருப்பெருந்துறைத் தலைவனே, இறைவனே - யவர்க்கு மிறைவனே, நீ - நீ, என் உடலிடம் கொண்டாய் - என்னுடம்பை யிடமாகக் கொண்டனை, இனி - இனி, உன்னை - நின்னை, என் இரக்கேன் -யாது இரத்தற் குரியேன், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறை இறைவனே! நீ என்னுடம்பையே இடமாகக் கொண்டாய், இனி நான் உன்னை என்ன பொருளை யிரக்கக்கடவேன், என்பது.

(வி - ரை.) சிறை - காவல், இது ஈண்டு நீருக்குக் காவலாயுள்ள கரையைக் குறித்து நின்றது. சிந்தை வாய் என்றதில் வாய் ஏழனுருபு. பெறு ஈறு கெட்ட எதிர் மறைப்பெயரெச்சம். (ரு)

இரந்திரந்துருகவென்மனத்துள்ளே
யெழுகின்றசோதியேயிமையோர்
சிரந்தனிற்பொலியுங்கமலச்சேவடியாய்
திருப்பெருந்துறையுறைசிவனே
நிரந்தவாகாயாநீர்நிலந்தீகா
லாயவையல்லையாயாங்கே
கரந்ததோருருவேகளித்தனனுன்னைக்
கண்ணுறக்கண்டுகொண்டின்றே.

(ப - ரை.) இரந்து இரந்து உருக - வேண்டி வேண்டி யுருகும்படி, என் மனத்துள்ளே - அடியேன் மனத்தினுள், எழுகின்ற சோதியே - எழுகின்ற ஒளியே, இமையோர் சிரந்தனில் பொலியும் — தேவர்களுடைய சிரத்தின்மேல் விளங்குகின்ற, கமலம் — தாமரை மலர்போன்ற, சேவடியாய் - திருவடியை யுடையவனே, திருப்பெருந் துறையுறை சிவனே-- திருப்பெருந்துறைச் சிவ பெருமானே, நிரந்த - வரிசைப்பட வைக்கப்பட்ட, ஆகாயம் - ஆகாசமும், நீர் - நீரும், நிலம் - பூமியும், தீ - நெருப்பும், கால் - காற்றும், ஆய் - ஆகி,

அவை அல்லையாய் - அவைகளல்லையாகி, ஆங்கே - அவ்வாறே, கரந்தது - ஒளித்ததாகிய, ஓர் உருவே - ஓருருவமே, இன்று - இப்பொழுது, உன்னை - நின்னை, கண்ணுறக் கண்டுகொண்டு - கண்ணாரக் கண்டு, களித்தனன் - மகிழ்ந்தேன், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! இன்று உன்னைக் கண்ணாரக் கண்டு களித்தேன், என்பது.

(வி - ரை.) இரந்திரந்து என்பதர்க்குப் பலகாலு மிரந்த தென்னும் பொருளது. நிறைந்த வென்பது நிரந்ததென வெதுகைநோக்கித் திரிந்து நின்றது. இறைவன் திருவடியைத் தேவர்கள் தம் சிரத்திற் சூடி வணங்குதலால், "இமையோர் சிரந்தனிற் பொலியுங் கமலச் சேவடியாய்" என்றார். (௬)

இன்றெனக்கருளியிருள்கடிந்துள்ளத்
தெழுகின்றஞாயிறேபோன்று
நின்றநின்றன்மைநினைப்பறநினைந்தே
னீயலாற்பிறிதுமற்றின்மை
சென்றுசென்றணுவாய்த்தேய்ந்துதேய்ந்தொன்றுந்
திருப்பெருந்துறையுறைசிவனே
யொன்றுநீயல்லையன்றியொன்றில்லை
யாருன்னையறியகிற்பாரே.

(ப - ரை.) இன்று - இப்பொழுது, எனக்கு அருளி - அடியேனுக் கருள் புரிந்து, இருள் கடிந்து - அஞ்ஞான இருளைப்போக்கி, உள்ளத்து எழுகின்ற - மனத்தின் கண்ணே உதிக்கின்ற, ஞாயிறேபோன்று நின்ற - சூரியனையே யொத்து நின்ற, நின் தன்மை - உன் பெருந்தன்மையை, நினைப்பு அற நினைந்தேன் - நினையாமல் நினைந்தேன், நீ அல்லால் பிறிது இன்மை - நீயன்றி வேறு பொருளில்லையாக, சென்று சென்று - போய்ப்போய், அணு ஆய்த்தேய்ந்து தேய்ந்து - அணு ரூபமாகித் தேய்ந்து தேய்ந்து, ஒன்று ஆம் - ஒரு ரூபமாகின்ற, திருப்பெருந் துறையுறை சிவனே - திருப்பெருந்துறைச் சிவபெருமானே, ஒன்றும் நீ யல்லை - ஒருபொருளும் நீயல்லை, அன்றி - நீயன்றி, ஒன்று இல்லை - ஒருபொருளு மில்லை, உனை அறியகிற்பார் யார் - உன்னை யறிய வல்லவர் யாவர், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! இப்போது அடியேனுடைய அஞ்ஞான விருளைப் போக்கி உன் பெருங் குணத்தை நினைந்தேன். நீயல்லால் வேறொரு பொருளில்லை, ஆனதால், உன் சொரூபத்தை யறிய வல்லவர் இங்கு யாவர், என்பது.

(வி - ரை.) அஞ்ஞானம் - இருளடைந்த ஞானம். ஞாயிறு - சூரியன். நினைத்தல் - உன்னுதல். (௭)

பார்பதமண்டமனைத்துமாய்முளைத்துப்
பரந்ததோர்படரொளிப்பரப்பே
நீருறுதீயேநினைவதேலரிய
நின்மலாநின்னருள்வெள்ளச்
சீருறுசிந்தையெழுந்ததோர்தேனே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாருறவெனக்கிங்காரயலுள்ளா
ரானந்தமாக்குமென்சோதி.

(ப - ரை.) பார் - பூமியும், அண்டம் அனைத்தும் - ஆகாய முழுதும், பதம் - உன் திருப்பாதம், ஆய் - எங்குமாகி, முளைத்து - வியாபித்து, பரந்து - எவ்விடமும் பரந்து, ஓர் - ஒன்ருய், படர் ஒளிப்பரப்பே - பரந்த ஒளிப்பரப்பே, நீர் உறு தீயே - நீரோடு கூடிய நெருப்பே, நினைவதேல் - நினைப்பதாஞல், அரிய - [அந்த நினைப்புக்கும்] அரிய, நின்மலா - மலரகிதனே, நின் - உனது, அருள் வெள்ளம் - அருட் பெருக்கின், சீர் உறு - சிறப்பமைந்த, சிந்தை - மனத்தின்கண், எழுந்தது - உண்டாகிய, ஓர் தேனே - ஒப்பற்ற தேனே, திருப்பெருந் துறையுறை சிவனே - திருப்பெருந் துறைப்பதித் தலைவனே, எனக்கு - அடியேனுக்கு, இங்கு - இவ்விடத்தில், உறவு ஆர் - உறவாயிருப்பவர் யார், அயல் உள்ளார் - அயலாரா யிருப்பவர், [ஆர் - யார்,] ஆனந்தம் ஆக்கும் - எனக்கு இன்பத்தை யுண்டாக்குகின்ற, என் சோதி - என்னொளியுடைப் பொருளே, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! உன்னை யடைந்த எனக்கு உறவு பகை என்பவை யில்லை, என்பது.

(வி - ரை.) பத மென்றதற்கு பதவியெனலும் பொருந்தும். (அ)

சோதியாய்த்தோன்றுமுருவமேயருவா
மொருவனேசொல்லுதற்கரிய
வாதியேநடுவேயந்தமேபந்த
மறுக்குமானந்தமாகடலே

அறிஞர்காள்! இத் திருவாசகத்தில் 40-வது பாரத்தில் பேஜ் நெம்பர்கள் ௩௧௩, ௩௧௪, ௩௧௫, ௩௧௬, ௩௧௭, ௩௧௮, ௩௧௯, ௩௨0 இருக்க வேண்டியதற்கு மாருக ௩0௫, ௩0௬, ௩0௭, ௩0௮, ௩0௯, ௨௧0, ௩௧௧, ௩௧௨ ஆகவும், 41-வதுபாரத்தில் பேஜ் நெம்பர்கள் ௩௨௧, ௩௨௨, ௩௨௩, ௩௨௪, ௩௨௫, ௩௨௬, ௩௨௭, ௩௨௮ - நெம்பர்களுக்கு மாருக ௩௧௩, ௩௧௪, ௩௧௫, ௩௧௬, ௩௧௭, ௩௧௮, ௩௧௯, ௩௨0 - ஆக மாறி யிருப்பவைகளைக் கண்டு சந்தேகங் கொள்ளற்க.

தீதிலாநன்மைத்திருவருட்குன்றே
திருப்பெருந்துறையுறைசிவனே
யாதுநீபோவதோர்வகையெனக்கருளாய்
வந்துநின்னிணையடிதந்தே.

(ப - ரை.) சோதியாய்த் தோன்றும் உருவமே - ஒளியாய்க் காணப்படு கின்ற உருவே, அருவம் ஆம் ஒருவனே - அருவமாயிருக்கிற வொருத்தனே, சொல்லுதற்கு அரிய ஆதியே - சொல்லுதற் கருமையாகிய முதற்பொருளே, நடுவே - இடையே, அந்தமே - முடிவே, பந்தம் அறுக்கும் - பிறவித் தளை யைச் சேதிக்கின்ற, மா ஆனந்தம் கடலே - பெரிய இன்பக் கடலே, தீது இல்லா நன்மை - தீமை கலவாத நன்மையை யுடைய, திருவருள் குன்றே - திருவருண் மலையே, திருப்பெருந் துறையுறை சிவனே - திருப்பெருந்துறையி லிருக்கும் சிவபெருமானே, நீ போவது ஓர்வகையாது - நீ யென்னைவிட்டு நீங்கும் வகையெது, [ஒன்றுமில்லை] எனக்கு - அடியேனுக்கு, வந்து - வந்து, நின் இணை அடிதந்து - உன் இரண்டு திருவடிகளைக் கொடுத்து, அருளாய் - அருள் புரியவேண்டும், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! என்னை விட்டு நீ பிரியும் வகை யில்லை, ஆதலால், நீ உன் திருவடியை அடியேனுக்குக்கொடுத்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) இறைவனது திருவருள் எப்பொழுதும் சலித்தலில்லாமையால் " திருவருட்குன்றே " என்றார். உருவம் - வடிவம். அருவம் - வடிவமின்மை. பந்தம் - கட்டு. (௬)

தந்ததுன்றன்னைக்கொண்டதென்றன்னைச்
சங்கராவார்கொலோசதுர
ரந்தமொன்றில்லாவானந்தம்பெற்றே
னியாதுநீபெற்றதொன்றென்பால்
சிந்தையேகோயில்கொண்டவெம்பெருமான்
றிருப்பெருந்துறையுறைசிவனே
யெந்தையேயீசாவுடலிடங்கொண்டா
யானிதற்கிலனோர்கைம்மாறே.

(ப - ரை.) தந்தது - எனக்குக் கொடுத்தது, உன்றன்னை - உன்னை, கொண்டது - அதற்குப் பிரதியாக என்னிடத் தேற்றுக்கொண்டதோ, என்றன்னை - அடியேனை, சங்கரா - சங்கரனே, சதுரர் ஆர் - [நம் மிருவரில்] சதுரப்பாடுள்ளார் யாவர், அந்தம் ஒன்று இல்லா - முடிவென்பது சிறிது மில்லாத, ஆனந்தம் பெற்றேன் - பேரின்ப மடைந்தேன், நீ என்பால் பெற்றது ஒன்று யாது - நீ யென்னிடத்துப் பெற்றுக்கொண்டதோர் பொருள் யாது, [ஒன்றுமில்லை.] சிந்தையே - என் மனத்தையே, கோயில் கொண்ட - திருக்

கோயிலாகக் கொண்டெழுந்தருளின, எம்பெருமான் - எம்பிரானே, திருப்பெருந்துறையுறை சிவனே - திருப்பெருந்துறைச் சிவபெருமானே, எந்தையே- எமது தந்தையே, ஈசா - ஈசனே, உடலிடம் கொண்டாய் - என்னுடம்பையே இடமாகக் கொண்டாய், இதற்கு - இந்த நன்றிக்கு, யான் ஒரு கைம்மாறு இலன் - நான் செய்ய அடுப்பதாகிய ஒரு பதிலுபகாரத்தைச் செய்ய உடையேனல்லேன்; எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! உன்னை யெனக்குக் கொடுத்து என்னை நீ வாங்கிக்கொண்டனை, நம்மிருவரில் சதுரர் யார், உன்னால் நான் பெற்றது முடிவற்ற இன்பம்! என்னால் நீ பெற்றது யாது? எந்தையே! நீ யென்னுட லிடங்கொண்டதற்கு யான், என்ன கைம்மாறு செய்வேன், என்பது.

(வி - ரை.) அறச் சிறிய பொருளாகிய என்னைக்கொண்டு, அறப்பெரிய பொருளாகிய உன்னை யெனக்குத் தந்தமையால், நானே சதுரன் என்பது தோன்ற, "தந்ததுன் றன்னைக் கொண்டதென் றென்னைச் சங்கரா வார்கொலோ சதுரர்" என்றார். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

---

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# செத்திலாப்பத்து.

சிவானந்தமளவறுக்கொணாமை.

[அதாவது சிவானந்தமனுகிச் செயிக்கப்படாமை.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

பொய்யனேனகநெகப்புகுந்தமுதூறும்
புதுமலர்க்கழலிணையடிபிரிந்துங்
கையனேனின்னுஞ்செத்திலேனந்தோ
விழித்திருந்துள்ளக்கருத்தினையிழந்தே
னையனேயரசேயருட்பெருங்கடலே
யத்தனேயயன்மாற்கறியொண்ணுச்
செய்யமேனியனேசெய்வகையறியேன்
றிருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளி யிருக்குஞ் சிவபெருமானே, பொய்யனேன் - உண்மையற்றவனு கிய வெனது, அகம் நெக - மனம் நெகிழும்படி, புகுந்து - அதின்கண் பிரவே சித்து, ஊறும் - அமுதம் சுரக்கின்ற, புது - அன்றலர்ந்த, மலர் - தாமரை மலரையொத்த, கழல் - வீரகண்டையைத் தரித்த, இணையடி பிரிந்தும் - இரண்டு திருவடிகளைப் பிரிந்தும், கையனேன் - அற்பத் தன்மையையுடைய நான், இன்னும் செத்திலேன் - இன்னும் இறந்திலேன், அந்தோ - ஐயோ ! விழித்திருந்து - விழித்திருந்தும், உள்ளக்கருத்தினை இழந்தேன் - மனக்கருத் தை யிழந்து விட்டேன், ஐயனே-ஐயா ! அரசனே - அரசனே ! அருட்பெருங் கடலே - பெரிய கிருபாசமுத்திரமே ! அத்தனே - எமது தந்தையே ! அயன் மால்கு - பிரம விட்டுணுக்களுக்கும், அறியவொண்ணு - உணரவொண்ணுத, செய்யமேனியனே [பவளம்போற்] செவந்த திருமேனியை யுடையானே, செய்வகை அறியேன் - செய்யவேண்டியவிதம் இன்னதென்றறிந்திலேன்.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே ! பொய்யனேனது மனம் நெக்குருகும்படி புகுந்து அமிர்தம்போலச் சுரக்கின்ற உன் திருவடியைப் பிரிந்தும், பிரிவாற்றுமையால் இன்னும் இறந்திலேன், விழித்திருந்தும் மனக் கருத்தினை யிழந்தேன், இனிச்செய்யும் வகையின்ன தென்றறிந்திலேன், என் பது.

(வி - ரை.) கை - சிறுமை, அது இங்கு அற்பத்தன்மையை யுணர்த்தி நின்றது. அகம் — அகனெனப் போலியாயிற்று. புதுமலர்க் கழலென்றது - இறைவனது திருவடி. விரிதல் குவிதலின்றி சதாவிகசிதம் கொண்ட மலர் போல்வ தாகலின். (௭)

புற்றுமாய்மரமாய்ப்புனல்காலே
யுண்டியாயண்டவாணரும்பிறரும்
வற்றியாருநின்மலரடிகாணு
மன்னவென்னையோர்வார்த்தையுட்படுத்துப்
பற்றினுய்பதையேன்மனமிகவுருகேன்
பரிகிலேன்பரியாவுடறன்னைச்
செற்றிலேனின்னுந்திரிதருகின்றேன்
றிருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந் துறை யென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண்ணெழுந்தருளிய சிவபெருமானே ! புற் றும் ஆய்-புற்றுருவாகியும், மரம் ஆய்-மரவடிவாகியும், புனல்காலே உண்டியாய்- நீரையும் காற்றையுமே ஆகாரமாகக் கொண்டு, அண்டவாணரும்-தேவர்களும், பிறரும்-மற்றையரும், வற்றி - [தவஞ்செய்து] உடல் குறைந்து, யாரும்-ஒருவ

ரும்,நின்மலர் அடி-உன் தாமரை மலர்போலுந்திருவடிகளை, காணு-காண வொண்ணாத, மன்ன - இறைவனே, என்னை-அடியேனை, ஓர்வார்த்தை யுட்படுத்து-ஒரு வார்த்தையி லகப்படுத்தி, பற்றினாய் - பற்றிக்கொண்டனை, [அதை நினைத்து] பதையேன் - மனம் பதைக்கிலேன், மனம் மிகவுருகேன் - மனமானது மிகவும் உருகப்பெற்றிலேன், பரிகிலேன்-அன்பு செய்திலேன், பரியா உடல் தன்னை - அன்பு செய்யப் பெறாதவுடம்பை, செற்றிலேன் - வெறுத்திலேன், இன்னும் திரிதருகின்றேன் - இன்னமும் திரியா நின்றேன், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! தேவர் முதலியோர் அருந்தவஞ் செய்தும் உன் திருவடியைக் கண்டிலர், அப்படியிருக்க, என்னை ஒரு வார்த்தையா லகப்படுத்திச் சேர்த்துக்கொண்டனை, அதுபற்றி நான் பதைத்தல் முதலியன செய்யாது இன்னும் உழலாநின்றேன், என்பது.

(வி - ரை.) புற்று ஆய் என்பது புற்றிடங்கொண்ட பரமசிவ மென்றலு மொக்கும். வற்றுதல் - குறைதல். ஓர் வார்த்தை என்றது மணப்பந்திலில் அடிமைப் பத்திரத்தைக் காண்பித்து. (உ)

புலையனேனையும்பொருளெனநினைந்துன்
    னருள்புரிந்தனைபுரிதலுங்களித்துத்
தலையினானடந்தேன்விடைப்பாகா
    சங்கராவெண்ணில்வானவர்க்கெல்லாம்
நிலையனேயலைநீர்விடமுண்ட
    நித்தனேயடையார்புரமெரித்த
சிலையனேயெனைச்செத்திடப்பணிவாய்
    திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) திருப்பெருந் துறைமேவிய சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே, புலையனேனையும் - கடையனாகிய என்னையும், பொருள் என நினைந்து - ஒரு பொருளாக மதித்து, உன் அருள் புரிந்தனை - உன்னருள் செய்தனை, புரிதலும் - அவ்வாறு செய்தலும், களித்து - களிப்படைந்து, தலையினால் நடந்தேன் - தலையாலே நடந்தேன், விடைப்பாகா-இடப வாகனனே, சங்கரா - சங்கரனே, எண் இல் வானவர்க்கு எல்லாம் - எண்ணிறந்த தேவர்களுக் கெல்லாம், நிலையனே - நிலையிடமா யுள்ளவனே, அலைநீர் விடம் உண்ட - அலைகளை யுடைய கடலிற் பிறந்த நஞ்சை யருந்தின, நித்தனே - சாசுவதனே, அடையார் புரம் எரித்த - பகைவரது திரிபுரத்தை நீறாக்கின, சிலையனே வில்லையுடையானே, என்னை - அடியேனை, செத்திடப் பணியாய் - சாவப் பணிக்கவேண்டும், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! புலையனேனையும் ஓர் பொருளாக மதித்து உன்னருள் செய்தனை, செய்தலும் களிப்படைந்து தலை

கீழாக நடந்தேன், இனியாயினும் அடியேனை இறக்கும்படி கட்டளையிடவேண்டும், என்பது.

(வி - ரை.) புலையன் - நீசன். தலையினால் நடத்தல் - தலை கீழாக நடத்தல். அலைநீர் விடம் என்றது, விஷமானது திருப்பாற்கடலில் பிறந்ததாதலின் பாற்கடலென்றது நீர்க்கடலென்றது இனம் பற்றிய அடை. (௩)

அன்பராகிமற்றருந்தவமுயல்வா
ரயனுமாலுமற்றழலுறுமெழுகா
மென்பராய்நினைவாரெனைப்பலர்
நிற்கவிங்கெனையெற்றினுக்காண்டாய்
வன்பராய்முருடொக்குமென்சிந்தை
மரக்கணென்செவியிரும்பினும்வலிது
தென்பராய்த்துறையாய்சிவலோகா
திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) தென்பராய்த் துறையாய் - தென்பராய்த்துறையை யுடையானே, சிவலோகா - சிவபுரத்தானே, திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! அன்பர் ஆகி - அன்புடையவராகி, அரு - செய்தற் கரிய, தவம் முயல்வார் - தவஞ்செய்பவராகிய, அயனும் மாலும் - பிரமனும் திருமாலும், அழல் உறும் மெழுகு ஆம்-நெருப்பைச் சேர்ந்த மெழுகுபோன்ற, என்பர் ஆய் - எலும்பை யுடையவராய், நினைவார் - நினைப்பவராகிய, எனைப்பலர் - வேறு பலரும், நிற்க - நிற்கச்செய்தே, இங்கு - இவ்விடத்து, என்னை - அடியேனை, எற்றினுக்கு ஆண்டாய் - யாதுக்கு ஆண்டருளினை, என் சிந்தை - என் மனமானது, வன்பராய் முருடு ஒக்கும் - வலிய பராய்க் கட்டையை நிகர்க்கும், மரக்கண் - [என் கண்] மரக்கணுவை நிகர்க்கும், என் செவி இரும்பினும் வலிது - என் செவி இரும்பினும் வலிதாயிருக்கின்றது, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! உன்னிடத்து அன்புடையராகிப் பிரமனும், திருமாலும், பிறரும் என்புருகி நிற்க, இங்கு அன்பு முதலிய வொன்று மில்லாத என்னை யாதுகாரணமாக ஆண்டருளினை? என் மனம் பராய்க்கட்டைபோல வலிது, என் கண் மரக்கண்ணை நிகர்க்கும், என் செவி இரும்பினும் வலிது, என்பது.

(வி - ரை.) என்பர் - எலும்பை யுடையவர், அதாவது எலும்பேயன்றித் தசை முதலியவை இல்லாதவர் என்க. பராய் - ஓர் மரம், இது வன்மையிற் சிறந்ததாதலால் "வன்பராய்" என்றார். முருடு - கட்டை, அல்லது வலிய பருத்த அறையினை யுடைய கட்டையெனினுமாம். (௪)

ஆட்டுத்தேவர்தம்விதியொழித்தன்பா
லையனேயென்றுன்னருள்வழியிருப்பே
னாட்டுத்தேவருநாடரும்பொருளே
நாதனேயுனைப்பிரிவுறுவருளைக்
காட்டித்தேவநின்கழலிணைகாட்டிக்
காயமாயத்தைக்கழித்தருள்செய்யாய்
சேட்டைத்தேவர்தந்தேவர்பிரானே
திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) சேடு ஐதேவர் தம் தேவர் பிரானே - பெருமையும் அழகு முள்ள தேவ தேவருக்கும் தலைவனே, திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே, ஆட்டுத் தேவர் தம்விதி ஒழித்து - பொய்த்தேவர்களுடைய கட்டளையை யொழித்து, அன்பால் - அன்பினால், ஐயனே என்று - ஐயாவென்று, உன் அருள்வழி யிருப்பேன் - உன்னருணெறியி லிருப்பேன், நாட்டுத் தேவரும் - பூசுரராகிய பிரம வித்துக்களும், நாடு அருபொருளே - நாடுதற்கரிதாகிய பொருளே, நாதனே - இறைவனே, உன்னைப் பிரிவுறு அருளை - உன்னை விட்டு நீங்காத திருவருளை, காட்டி-காட்டி, தேவ - தேவனே, நின் கழல் இணைகாட்டி - உன்னிணை யடி. காட்டி, காயமாயத்தைக் கழித்து - சரீரமாகிய மாயப்பொருளைக் கழித்து, அருள் செய்யாய் - அருள் புரியவேண்டும், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே ! பொய்த் தேவரது தொடர்ப்பை விட்டு, ஐயனேயென்று உன் அருள்வழியி லிருப்பேன், ஆதலால் உன்னைப் பிரியாமலிருக்கக் கிருபைசெய்து, உன் திருவடியைக் காட்டி, இப் பொய்யுடம்பை யொழித்தருள வேண்டும், என்பது.

(வி - ரை.) ஆட்டு - விளையாட்டு, அஃதாவது பொய்யென்றபடி. ஆட்டுத்தேவர் - பிரமனாதியர். விதி யொழித்தலாவது - பிறப்பு முதலியவற்றினின்று நீங்குதல். சேட்டைத் தேவர் - இந்திராதி தேவர்கள். நாட்டுத் தேவரென்றது - சைவ வேதியர்களை. (கு)

அறுக்கிலேனுடலுணிபடத்தீப்புக்
கார்கிலேன்றிருவருள்வகையறியேன்
பொறுக்கிலேனுடல்போக்கிடங்காணேன்
போற்றிபோற்றியென்போர்விடைப்பாகா
விறக்கிலேனுனைப்பிரிந்தினிதிருக்க
வென்செய்கேனிதுசெய்கவென்றருளாய்
சிறைக்கணேபுனனிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) சிறைக்கண்ணே - கரையின் கண்ணே, புனல் - நீர், நிலவியநிலை பெற்ற, வயல்சூழ் - வயல் சூழ்ந்த, திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையில் வீற்றிருக்கும் சிவபெருமானே, உன்னைப் பிரிந்து-உன்னைப் பிரிதலால், உடல் - உடம்பு, துணிபட - துண்டுக ளாம்படி, அறுக்கிலேன் - சேதித்திலேன், தீப்புக்கு ஆர்கிலேன் - தீ புகுந்திருக்கிலேன், திருவருள் வகை அறியேன் - திருவருளின் வகையையு மின்னதென் றுணர்ந்திலேன், உடல் பொறுக்கிலேன்-உடம்பைத் தாங்கிலேன், போக்கிடம் காணேன் - போமிடமுங் கண்டிலேன், போற்றி போற்றி - நமஸ்காரம் நமஸ்காரம், என்போர் விடைப்பாகா - என்போர்க்குரிய இடப வாகநனே, இறக்கிலேன் - இறக்கின்றிலேன், இனிது இருக்க-சுகமா யிருத்தற்கு, என் செய்வேன்-யாது உபாயம் செய்யக் கடவேன், இது செய்க என்று அருளாய் - இதனைச் செய்யென்று நியமித் தருள்வாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! என் உடம்பைத் துண்டுகளாக அறுக்கிலேன், நெருப்பில் வீழ்கிலேன், வேறு போக்கிடங் காணேன், இறந்திலேன், சுகமாயிருத்தற்கு என்ன உபாயம் செய்வேன், இன்னது செய்கவெனக் கட்டளை யிட்டருள்வாயாக, என்பது.

(வி - ரை.) துணி - துண்டு. சிறை - கரைகோலின இடம். (காவல்) அறுக்கிலேன், பொறுக்கிலேன், இறக்கிலேன் என்பவைகளி லுள்ளகில் துணிவுப் பொருள் விகுதி. (௬)

மாயனேமறிகடல்விடமுண்ட
வானவாமணிகண்டத்தெம்பமுதே
நாயினேனுனைநினையவுமாட்டே
னமச்சிவாயவென்றுன்னடிபணியாப்
பேயனாகிலும்பெருநெறிகாட்டாய்
பிறைகுலாஞ்சடைப்பிஞ்ஞகனேயோ
சேயனாகினின்றலறுவதழகோ
திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையிலெழுந்தருளிய சிவபெருமானே, மாயனே - மகா மாயையென்னுஞ் சத்தியையுடையவனே, மறி - அலைகள் மடங்கி விழுகின்ற, கடல் - கடலின் கட்டோன்றிய, விடம் - விஷத்தை, உண்ட - உட்கொண்டருளின, வானவா - தேவனே, மணிகண்டத்து - நீலகண்டத்தை யுடைய, எம் அமுதே - எம் அமிர்தமே, நாயினேன் - நாயேன், உன்னை நினையவுமாட்டேன் - உன்னை நினைக்கவுமாட்டேன், நமச்சிவாய என்று - நமச்சிவாயவென்று, உன் அடி பணியா - உன் திருவடியை வணங்காத, பேயனாகிலும் - பேயனே யாயினும், பெருநெறி காட்டாய் - முத்திநெறியைக் காட்டுவாயாக, பிறை குலாம்-பிறை

விளங்குகின்ற, சடை - சடையை யுடைய, பிஞ்ஞகனே - தலைக்கோலத்தை யுடையவனே, ஒ - ஒ ! சேயன் ஆகி நின்று - குழந்தையை யொத்து நின்று, அலறுவது அழகோ - நான் அலறுவது அழகாமோ ! எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே ! நாயேன் உன்னை நினைக்கவுமாட்டேன், நமச்சிவாயவென்று உன் திருவடியை வணங்காத பேயனேயாயினும் பெருநெறியைக் காட்டவேண்டும். குழந்தைபோல நின்று நான் அலறுவது அழகாமோ, என்பது.

(வி - ரை.) மாயனென்றது - சத்திவல்ல னாதலின். மணி - நீல ரத்தினம்போன்ற வெனினுமாம். பெருநெறி என்றமையின் முத்தி மார்க்கமெனப் பொருள் கூறப்பட்டது. (எ)

போதுசேரயன்பொருகடற்கிடந்தோன்
புரந்தராதிகணிற்கமற்றென்னைக்
கோதுமாட்டிநின்குரைகழல்காட்டிக்
குறிக்கொள்கென்றுநின்றொண்டரிற்கூட்டா
யாதுசெய்வதென்றிருந்தனன்மருந்தே
யடியனேனிடர்ப்படுவதுமினிதோ
சீதவார்புனனிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) சீதம் - குளிர்ச்சி பொருந்திய, வார் புனல் - பெரும் புனல், நிலவிய - நிலைபெற்ற, வயல் சூழ் - வயல் சூழ்ந்த, திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறைப் பெம்மானே ! போதுசேர் அயன் - தாமரைப் பூவைச் சேர்ந்த பிரமனும், பொருகடல் கிடந்தோன் - அலைகள் மோதுகின்ற திருப்பாற் கடலிற் றுயின்றோருளுகிய திருமாலும், புரந்தராதிகள் - இந்திரன் முதலிய தேவர்களும், நிற்க - இருக்க, என்னை - அடியேனை, கோதுமாட்டி - குற்றங்களை மாள்வித்து, நின் குரைகழல் காட்டி - உன் ஒலிக்கின்ற வீரக் கழலை யணிந்த திருவடியைக் காட்டி, குறிக்கொள்க என்று - கடைபிடிப்பாயென்று, நின் தொண்டரின் கூட்டாய் - உன் தொண்டரொடு சேர்ப்பாயாக, யாது செய்வது என்று - யாது செய்யத்தக்கது என்று, இருந்தனன் - இருந்தேன், மருந்தே - அமிர்தமே ! அடியனேன் - அடியேன், இடர்ப்படுவதும் - துன்பப்படுவதும், இனிதோ - உனக்கு அழகாமோ ! எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே ! பிரமன் திருமால் முதலானோரிருக்க, என் குற்றங்களை யொழித்து, எனக்கு உன் திருவடியைக் காட்டி, இதனை உறுதியாய்ப் பற்றென்று உன் தொண்டரோடு கூட்டவேண்டும், அடியேன் துன்புறுவது உனக்கினிதா யிருக்கின்றதோ ! என்பது.

(வி - ரை.) போது, என்றதற்கு அயன் என்ற விசேடத்தால் தாமரை மலர் எனப்பொருள் கொண்டாம். குறிக்கொள்ளல் - உறுதியாகப் பற்றுதல். கோதுமாட்டி என்றதை - கோதும் ஆட்டியெனப் பிரித்துச் சீராட்டியெனப் பொருள் கொள்வாருமுளர். (அ)

ஞாலமிந்திரனுன்முகன்வானவர்
நிற்கமற்றெனைநயந்தினிதாண்டாய்
காலனாருயிர்கொண்டபூங்கழலாய்
கங்கையாயங்கிதங்கியகையாய்
மாலுமோலமிட்டலறுமம்மலர்க்கே
மரக்கணேனையும்வந்திடப்பணியாய்
சேலுநீலமுநிலவியவயல்சூழ்
திருப்பெருந்துறைமேவியசிவனே.

(ப - ரை.) சேலும் - சேல்மீன்களும், நீலமும்-நீலப்பூக்களும், நிலவிய- நிலைபெற்ற, வயல்சூழ் - வயல் சூழ்ந்த, திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையில் மேவும் சிவபெருமானே! ஞாலம்-உலகமும், இந்திரன் - தேவர்கோனும், நான்முகன் - பிரமனும், வானவர் - தேவர்களும், நிற்க - நிற்கச்செய்தே, என்னை நயந்து - அடியேனை விரும்பி, இனிது ஆண்டாய் - இனிதாக ஆண்டருளினை, காலன் - யமனது, ஆர் உயிர்கொண்ட - அரிய உயிரைக் கவர்ந்த, பூங்கழலாய் - தாமரைப் பூப்போலுந் திருவடியையுடையவனே ! கங்கையாய் - கங்கையை யுடையவனே ! அங்கிதங்கிய கையாய்-மழுவேந்திய கையையுடையானே, மாலும் - திருமாலும், ஓலம் இட்டு - [அறியாமல்] முறையிட்டு, அலறும் - அலறுதற்குரிய, அம்மலர்க்கே - அந்தப் பாததாமரைக்கே, மரக்கணேனையும் - மரக்கண்போன்ற கண்ணையுடைய என்னையும், வந்திடப் பணியாய் - வந்திடும்படிப் பணித்தருளாய், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே! இந்திராதியரிருக்க, என்னை விரும்பி வந்து ஆண்டருளினை, திருமாலும் அறியாத அந்தத் திருவடியை அடையும்படி எனக்குக் கிருபை செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) கங்கையாய் என்பதனை - கம் கையாய் எனப்பிரித்து, பிரமகபாலத்தை யேந்திய கையை யுடையவனே யெனினும், நகுவெண்டலையை யேந்திய கையை யுடையவனே யெனினுமாம். மரக்கண்ண னென்றதற்கு மரம்போலும் வலிய கண்களை யுடையவனெனினும் பொருந்தும். (௯)

அளித்துவந்தெனக்காவவென்றருளி
யச்சந்தீர்த்தநின்னருட்பெருங்கடலிற்
றிளைத்துந்தேக்கியும்பருகியுமுருகேன்
றிருப்பெருந்துறைமேவியசிவனே

வளைக்கையானொடுமலரவனறியா
வானவாமலைமாதொருபாகா
களிப்பெலாமிகக்கலங்கிடுகின்றேன்
கயிலைமாமலைமேவியகடலே.

(ப – ரை.) திருப்பெருந்துறை மேவிய சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே ! எனக்கு - அடியேனுக்கு, அளித்து வந்து - கிருபை செய்து வந்து, ஆவ என்று அருளி – ஐயோவென் றிரங்கி யருளி, அச்சம் தீர்த்த - பயந் தவிர்த்த, நின் அருட்பெருங் கடலில் - உன் னருளாகிய பெரிய கடலினிடத்து, திளைத்தும் - முழுகியும், தேக்கியும் - அநுபவம் நிறையப் பெற்றும், பருகியும் - உண்டும், உருகேன் - [இன்னமும் மனம்] உருகாதவனுனேன், வளைக்கையானொடும் - சங்கை யேந்தின கையானுகிய திருமாலோடு, மலரவன் - பிரமனும், அறியா - அறியவொண்ணுத, வானவா - தேவனே! மலைமாது - மலைமகளை, ஒருபாகா - ஒரு பாகத்தி லுடையானே! களிப்பு எல்லாம் மிக - [குணம்செல்வம் கல்வி முதலிய] களிப்பெல்லாம் அதிகரித்தலால், கலங்கிடுகின்றேன் - மனங் கலங்காநின்றேன், கயிலைமா மலைமேவிய - பெரிய கைலாய மலையின்கண் ணெழுந்தருளி யிருக்கிற, கடலே - கருணைக் கடலே ! எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைச் சிவபெருமானே ! கருணைசெய்துவந்து எனக்கிரங்கி, என் அச்சத்தை நீக்கின உன்னருட்கடலில் மூழ்கியும் தேக்கெறிந்தும் உருகமாட்டேன், என் மனமகிழ்ச்சி யெல்லாம் நிலைகலங்கின, உன்னையன்றி எனக்கு வேறு புகலிடமில்லை, என்பது.

(வி – ரை.) ஆவா என்பது ஆவ எனக் குறுகிநின்றது. வளை - பாஞ்சசந்நியமெனும் சங்கு. அது பாஞ்சசன் என்னு மிராக்கதனது கழுத்தெலும் பினு லமைந்த தாதலின் பாஞ்சசந்நிய மெனப்பட்டது. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அடைக்கலப்பத்து.

பக்குவநிண்ணயம்.

[அதாவது இறைவனுந் தானும் வித்தும் அங்குரமும்போல வென்றல்.]

திருச்சிற்றம்பலம்.

கலவைப்பாட்டு.

செழுக்கமலத்திரளனநின்சேவடிசேர்ந்தமைந்த
பழுத்தமனத்தடியருடன்போயினர்யான்பாவியேன்
புழுக்கணுடைப்புன்குரம்பைப்பொல்லாக்கல்விஞானமிலா
வழுக்குமனத்தடியேனுடையாயுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - எல்லாப்பொருள்களுந் தானு யுள்ளவனே! செழு - செழுமையாகிய, கமலத்திரள் அன்ன - தாமரை மலர்க் குவியலை நிகர்த்த, நின்சேவடி சேர்ந்து அமைந்த – உன் திருவடியை யடைந்தமைந்த, பழுத்த மனத்து அடியர் - கனிந்த மனத்தை யுடைய அடியார்கள், உடன் போயினர் - உன்னுடன் சென்றார்கள், யான் பாவியேன் - நான் பாவியேனு யினேன், [அன்றியும்] புழுக்கண் உடை - புழுக்கள் தமக்கிடமாக உடைய, புன் குரம்பை - புல்லிய வுடம்பையும், கல்வி ஞானம் இல்லா - கல்வி ஞானங் கள் சிறிது மில்லாத, பொல்லா - பொல்லாத, அழுக்கு மனத்து - களங்க மாகிய மனத்தையு முடைய, அடியேன் - அடியனேன், உன் அடைக்கலம் - உனக் கடைக்கலப்பொருள், எ - று.

(க - ரை.) இறைவனே! தாமரை மலர்போன்ற உன் திருவடியைச் சேர்ந்த அடியார் உன்னோடு சென்றார்கள், பாவியேனாகிய நானும் உன் அடைக் கலமே, என்பது.

(வி - ரை.) புழுக்கள் நுடை எனப் பிரித்து புழுக்கள் நெளிகின்ற என் றுரைப்பினுமாம். நுடைதல் - நெளிதல். குரம்பை - கூடு. அது இங்கு உடம்பைக் குறித்தது. பழுத்த மனத்தடியர் என்றது திருப்பெருந்துறையில்

குருமூர்த்தமா யெழுந்தருளின சிவபெருமானோடு வந்த சிவ கணங்களே. உடன்போயினர் என்றது அவர்கள் நெருப்பிற் புகுந்து மறைந்தமையை. (க)

வெறுப்பனவேசெய்யுமென்சிறுமையைநின்பெருமையினாற்
பொறுப்பவனேயராப்பூண்பவனேபொங்குகங்கைசடைச்
செறுப்பவனேநின்றிருவருளாலென்பிறவியைவே
ரறுப்பவனேயுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - இறைவனே ! வெறுப்பனவே செய்யும் - வெறுக்கத் தக்கவைகளாகிய தீமைகளையே செய்கின்ற, என் சிறுமையை - எனது இழிவை, நின் பெருமையினால் - உன் பெருங் குணத்தால், பொறுப்பவனே - பொறுத் தருள்பவனே, அரா பூண்பவனே-பாம்பை யணிவோனே, பொங்கு - பெருகுகின்ற, கங்கை - கங்கையை, சடை - சடையின்கண், செறுப்பவனே - அடக்குவோனே, நின் திருவருளால் - உன் திருவருளாகிய வாளால், என் பிறவியை - என் பிறவியாகிய மரத்தை, வேர் அறுப்பவனே - வேரோ டறுப்பவனே, அடியேன் - அடியனேன், உன் அடைக்கலம் - உன்னடைக்கலப் பொருள், எ - று.

(க - ரை.) இறைவனே ! தீமைகளையே செய்கின்ற என் இழிவை உன் பெருங்குணத்தால் பொறுப்பவனே, சர்ப்பாபரணனே, கங்கைச் சடையனே, உன் திருவருளென்னும் வாளால் என் பிறவியை வேரறுப்பவனே ! அடியேன் உன் அடைக்கலம், என்பது.

(வி - ரை.) யாவரும் வெறுத்தலால் தீமைகளை வெறுப்பன என்றார். என் பிறவியை வேரறுப்பவனே என்றதனால் திருவருளை வாளாக்கி யுரைக்கப் பட்டது. செறுத்தல் - அடக்குதல். (உ)

பெரும்பெருமானென்பிறவியைவேரறுத்துப்பெரும்பிச்சுத்
தரும்பெருமான்சதுரப்பெருமானென்மனத்தினுள்ளே
வரும்பெருமான்மலரோனெடுமாலறியாமனின்ற
வரும்பெருமானுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - இறைவனே ! பெரும் பெருமான் - பெரிய பெருமானே, என் பிறவியை - அடியேனது பிறப்பை, வேர் அறுத்து - வேரோடறுத்து, பெரும்பிச்சு-உன்மீதிருக்க பெரிய பைத்தியத்தை, தரும் பெருமான் - எனக்குத் தரும் பெருமானே ! சதுரப் பெருமான் - சதுரதையை யுடைய பெருமானே ! என் மனத்தினுள்ளே - என் சித்தத்தினுள்ளே, வரும் பெருமான் - வருகின்ற பெருமானே ! மலரோன் நெடுமால் - பிரமனும் விட்டுணுவும், அறியாமல் நின்ற - அறியவொண்ணாமல் நின்ற, அரும் பெருமான் - அரிய பெருமானே ! அடியேன் உன் அடைக்கலம் - அடியேன் உன் அடைக்கலப் பொருள், எ - று.

(க - ரை.) இறைவனே! பெரிய பெருமானும், என் பிறவியை வேரறுத்து எனக்குப் பெரும்பித்தேற்றும் பெருமானும், பிரம விட்டுணுக்கள் அறியவொண்ணுமல் நின்ற அரும்பெருமானும் ஆகிய தலைவனே! அடியேன் உன் அடைக்கலம், என்பது.

(வி - ரை.) தேவர்கட் கெல்லாம் மேலான மகாதேவனுதலின் பெரும் பெருமானென்ருர். பிச்சு - பித்து என்பதன் திரிபு. (௩)

பொழிகின்றதுன்பப்புயல்வெள்ளத்திநின்கழற்புணைகொண்
டிழிகின்றவன்பர்களேறினர்வான்யானிடர்க்கடல்வாய்ச்
சுழிசென்றுமாதர்த்திரைபொரக்காமச்சுறவெறிய
வழிகின்றனனுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய்-யாவுமுடைய இறைவனே! பொழிகின்ற-சொரிகின்ற, துன்பம்-துன்பமாகிய, புயல் - மழையினு லுண்டாகிய, வெள்ளத்தில்-பெருக்கில், நின் கழல் - உன் திருவடியாகிய, புணை கொண்டு - தெப்பத்தைக் கொண்டு, இழிகின்ற - இறங்குகின்ற, அன்பர்கள் - அடியார்கள், வான் ஏறினர் - பரமாகாயத்தில் ஏறினுர்கள், யான் - அடியேன், இடர்க்கடல்வாய் - துன்பக்கடலினிடத்து, சுழி சென்று - சுழித்துக்கொண்டு போய், மாதர்த் திரைபொர - மாதர்களாகிய அலைகள் மோத, காமச்சுறவு எறிய - காமமாகிய சுறாமீன் எறிதலால், அழிகின்றனன் - நசியாநின்றேன், அடியேன் உன் அடைக்கலம் - அடியனேன் உன் அடைக்கலப்பொருள், எ - று.

(க - ரை.) இறைவனே! துன்பப்பெருக்கில் உன் திருவடியாகிய புணையைப் பற்றிக்கொண் டிறங்கின அன்பர் வானேறினர், நான் துன்பப்பெருக்கின் சுழியி லகப்பட்டு, மாதராகிய அலை மோத, காமமாகிய மகரமீன் எறிய அழியாநின்றேன், அடியேன் உன் அடைக்கலம், என்பது.

(வி - ரை.) வான் என்றது முத்தியுலகை. புயல் - மேகம், அது மேகத்தாற் பெய்யப்படும் நீர்மேனின்றது. (௪)

சுருள்புரிகூழையர்சூழலிற்பட்டுன்றிறமறந்திங்
கிருள்புரியாக்கையிலேகிடந்தெய்த்தனன்மைத்தடங்கண்
வெருள்புரிமானன்னநோக்கிதன்பங்கவிண்ணோர்பெருமா
னருள்புரியாயுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - யாவும் உடைய இறைவனே! சுருள்புரி கூழையர் - சுருண்டு கட்டப்பட்ட கூந்தலை யுடைய மாதரது, சூழலில் பட்டு - கபடத்தி லகப்பட்டு, உன் திறம் மறந்து - உன் திறத்தை மறந்து, இங்கு - இவ்விடத்து, இருள் புரி - அஞ்ஞானுந்தகாரத்தை யுண்டாக்குகின்ற, யாக்கையிலே கிடந்து - சரீரத்தில் தங்கி, எய்த்தனன் - இளைத்தேன், மை - அஞ்சன

மெழுதி, தடம் - விசாலமான, கண் - கண்களையும், வெருள்புரி - அச்சத்தை யடைந்த, மான் - மானினது, அன்ன - பார்வையைப் போன்ற, நோக்கி - நோக்கத்தினையு முடைய உமாதேவியின், பங்க - ஒரு பாகத்தில் இருப்பவனே! விண்ணோர் பெருமான் - தேவர்களுக்கெல்லாந் தலைவனே! அருள் புரியாய் - [என்னை ஆதரிக்க] அருள் விருப்பங் கொள்வாயாக, அடியேன் - அடியனேன், உன் - நின் (சேவடிக்கு), அடைக்கலம் - அடைக்கலப் பொருள், எ - று.

(க - ரை.) எல்லா வஸ்துவுக்கும் இறைவனாகிய சிவபெருமானே! மாதர் வஞ்சனையிற் சிக்கி, உன்னை மறந்து, இவ்வுடம்பிற் கிடந்து இளைத்தேன், ஆதலால், இனியாயினும் உன் திருவருள் சேவடியை அருள்புரிய வேண்டும், என்பது.

(வி - ரை.) சுருள்புரி கூழையர் என்பதற்கு சுருளாகச் செய்யப்பட்ட கூந்தலை யுடையவர் என்றுரைத்தலும் பொருந்தும். சுருள் - மாதர் ஐவகை மயிர்முடியி னொன்று, அது பின்னே செருகப்படுவது. ஐவகை மயிர் முடியாவன - முடி, கொண்டை, சுருள், குழல், பனிச்சை என்பன. (௫)

மாழைமைப்பாவியகண்ணியர்வன்மத்திடவுடைந்து
தாழியைப்பாவுதயிர்போற்றளர்ந்தேன்றடமலர்த்தாள்
வாழியெப்போதுவந்தெந்நாள்வணங்குவன்வல்வினையே
னாழியப்பாவுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - யாவும் உடைய இறைவனே! மாழை - மாம்பிஞ்சின் பிளவை யொத்து, மை பரவிய - அஞ்சனம் பரவிய, கண்ணியர் - கண்களை யுடைய மாதர், வல்மத்து - வலிய மதத்தை, இட - இடுதலும், உடைந்து - சிதைந்து, தாழியைப் பாவு - தாழியிற் பரவிய, தயிர்போல் - தயிரைப்போல், தளர்ந்தேன் - தளர்ச்சி யடைந்தேன், தடமலர் - பெருமை பொருந்திய தாமரை மலர்போன்ற, தாள் - திருவடிகளை, வல்வினையேன் - வலிய பாவத்தை யுடையேன், எப்போது - எப்பொழுது, வந்து - நான் வந்து, எந்நாள் - எக்காலத்து, வணங்குவன் - உன் திருவடியை வணங்கப்பெறுவேன், ஆழி அப்பா - கருணைக் கடலாகிய எமது தந்தையே! வாழி - நீ வாழ்வாயாக, அடியேன் - அடியனேன், உன் - நினது திருவடிக்கு, அடைக்கலம் - அடைக்கலப்பொருள், எ - று.

(க - ரை.) எல்லா வத்துவுக்கும் இறைவனாகிய சிவபெருமானே! மாதர் மத்திட்டுக் கடையச் சிதறி மிடாவில் பரவிச் சுழலாநின்ற தயிர்போலச் சுழன்று தளர்ந்தேன், இனி எக்காலம் வந்து உன் திருவடியை வணங்குவேன்? அடியேன் உன் திருவடிக்கு அடைக்கலம், என்பது.

(வி - ரை.) மாழை - மா. அது இங்குக் கண்ணுக்கு வுமையாகப் புணர்க்கப்பட்டமையால் வடுவைக் குறித்தது. வினை இங்குப் பாவத்துக்

காயிற்று. தடமலர் - தாமரை மலர். தாள் - திருவடிகள். வாழி - வாழ்க வெனினுமாம். (௬)

மின்கணினார்நுடங்குமிடையார்வெகுளிவலையிலகப்பட்டுப்
புன்கணனாய்ப்புரள்வேனைப்புரளாமற்புகுந்தருளி
யென்கணிலேயமுதூறித்தித்தித்தென்பிழைக்கிரங்கு
மங்கணனேயுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - யாவும் உடைய இறைவனே, மின்கணினார் - மின்னுகின்ற கண்களை யுடையவரும், நுடங்கும் - துவள்கின்ற, இடையார் - இடையை யுடையவருமாகிய மாதரது, வெகுளி வலையில் - கோவமாகிய வலையில், அகப்பட்டு - சிக்கிக்கொண்டு, புன் கணன் ஆய் - துன்பத்தை யுடையேனாய், புரள்வேனை - புரளா நின்ற என்னை, புரளாமல் - [அவ்வாறு] புரளா வண்ணம், புகுந்தருளி - வலியவந் தருள் செய்து, என் கணில் - என்னிடத்தில், அமுது ஊறி - அமிர்தம் சுரந்து, தித்தித்து - இனித்து, என் - அடியேனது, பிழைக்கு - குற்றங்களுக்காக, இரங்கும் - [அடியேன் மீதில்] அன்பு வைக்கின்ற, அம் கணனே - கிருபைக் கண்ணனே, அடியேன் - அடியனேன், உன் - நினது திருவடிக்கு, அடைக்கலம் - அடைக்கலப் பொருள், எ - று.

(க - ரை.) எல்லாப் பொருளுக்கும் இறைவனாகிய சிவபெருமானே! மாதர் வசத்தி லகப்பட்டுத் துன்பப்படுகிற, என்னைத் துன்பத்தை யொழித்து ஆண்டருளி, என் பிழைக் கிரங்காநின்ற கிருபாநோக்க முடையவனே! அடியேன் உன் திருவடிக்கு அடைக்கலம், என்பது.

(வி - ரை.) நுடங்கல் - அசைதல். புன்கண் - துன்பம். கண்ணிலென்றது கணில் என நின்றது இடைக்குறை. அங்கணன் - அழகிய கண்களை யுடையவ னெனினுமாம். (௭)

மாவடுவகிரன்னகண்ணிபங்காநின்மலரடிக்கே
கூவிடுவாய்கும்பிக்கேயிடுவாய்நின்குறிப்பறியேன்
பாவிடையாடுகுழல்போற்கரந்துபரந்ததுள்ள
மாகெடுவேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - யாவையு முடைய இறைவனே! மாவடு - மாவடுவின், வகிர் அன்ன - பிளவை யொத்த, கண்ணி - கண்களை யுடைய உமாதேவியின், பங்கா - பங்கனே! நின் - தேவரீருடைய, மலர் அடிக்கே - மலர்த்தாளுக்கே, கூவிடுவாய் - அழைத்துக்கொள்வாயாக, [அன்றி] கும்பிக்கே - பெருத்த நரகத்தினில், இடுவாய் - தள்ளக்கடவாய், [இவ்விரண்டில்] நின் - தேவரீருடைய, குறிப்பு - திருவுளக் குறிப்பை, அறியேன் - யானறிந்திலேன், பா இடை ஆடு - இழையினிடத் தாடுகின்ற, குழல்போல் - மூங்கிற் குழல்போல, உள்ளம் - என் மனமானது, கரந்து - மறைந்து, பரந்தது - பர

வியது, ஆ - ஐயோ! கெடுவேன் - யான் கெடுவேன், அடியேன் - அடியனேன், உன் - நினது திருவடிக்கு, அடைக்கலம் - அடைக்கலப்பொருள், எ - று.

(க - ரை.) யாவற்றுக்கும் முதற்காரணப் பொருளாய் இருக்கும் இறைவனே! மாவடு வகிர்போலுங் கண்களையுடைய உமாதேவி பங்கனே! நாயினுங் கடையேனாகிய என்னை உன் திருவடிக்கீழ் சேர்த்துக்கொள், [அன்றி] என்னை நரகுக்கு ஆளாக்கு, உன் திருவுளக்குறிப்பை முற்றும் நான் அறிந்தேனில்லை, நூற்பாவின்கண் ஆடுகின்ற மூங்கின் குழல்போல என் மனம் அலையாநின்றது ; ஆதலால், அடியேன் உன் அடைக்கலம், என்பது.

(வி - ரை.) பா - நூற்பா. குழல் - நெய்வோருடைய கருவிகளி லொன்று. குழலுக்குள் மறையும் பாவைப்போல என் மனம் விடய விச்சையில் மறைந் துழலாநின்றது என்றசுருத்து, "பாவிடையாடு குழல்போற் கரந்து பரந்ததுள்ளம்" என்றார். கும்பி - நரகம். (அ)

பிறிவறியாவன்பர்நின்னருட்பெய்கழற்றாளிணைக்கீழ்
மறிவறியாச்செல்வம்வந்துபெற்றாருன்னை வந்திப்பதோர்
நெறியறியேனின்னையேயறியேனின்னையேயறியு
மறிவறியேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - யாவும் உடைய இறைவனே! பிறிவு - தேவரை விட்டு நீங்குதற்கு, அறியா - [யாதொரு தன்மையும்] அறியாத, அன்பர் - தேவரீருடைய தொண்டர்கள், நின் அருள் - உன்னருளால், பெய்கழல் - கழலை யணிந்த, தாள் - தேவரீருடைய திருவடியின், இணைக்கீழ் - இணைகளின் கீழ், வந்து - [உவந்து] வந்து, மறிவு அறியா - நசித்தலறியாத, செல்வம் - பெரும் பாக்கியத்தை, பெற்றார் — அடைந்தார்கள், [யானோ] உன்னை - தேவரை, வந்திப்பது - வாழ்த்துதலாகிய, ஓர் - [நல்வழியாகிய] ஒரு, நெறி அறியேன் - நெறியை அறிந்திலேன், நின்னையே - தேவரீரையும், அறியேன் - [இத்தன்மைய னென்று] அறிந்திலேன், நின்னையே - தேவரீரையே, அறியும் - அறிகின்ற, அறிவு அறியேன் - ஞானத்தையு முணர்ந்திலேன், [ஆயினும்] அடியேன் - அடியனேன், உன் - நினது திருவடிக்கு, அடைக்கலம் - அடைக்கலப் பொருள், எ - று.

(க - ரை.) எல்லா வஸ்துக்களுக்கும் இறைவனாகிய சிவபெருமானே! உன்னைப் பிறியாத அன்பர் உன் திருவடியைப் பெற்று முத்திச் செல்வத்தையும் அடைந்தார்கள், நானும் அவ்வாறடைய உன்னைப் புகழும் வழி யறியேன், உன்னையு மறியேன், உன்னை யறியும் அறிவுமில்லேன்! ஆயினும், அடியேன் உன் அடைக்கலம், என்பது.

(வி - ரை.) மறிவு - தடைபடல், மறிவு அறியாச் செல்வம் என்றமையின் முத்திச்செல்வமெனக் கூறப்பட்டது. (௯)

வழங்குகின்றாய்க்குன்னருளாரமுதத்தைவாரிக்கொண்டு
விழுங்குகின்றேன் விக்கினேன் வினையேனென்விதியின்மையால்
தழங்கருந்தேனன்ன தண்ணீர்பருகத்தந்துய்யக்கொள்ளா
யழுங்குகின்றேனுடையாயடியேனுன்னடைக்கலமே.

(ப - ரை.) உடையாய் - யாவும் உடைய இறைவனே! வழங்குகின்றாய்க்கு - [அன்பர் வேண்டியவெல்லாம் ஒருங்கே தருகின்ற] உன்னை யடைதற் பொருட்டு, உன் - தேவரீருடைய, அருள் - திருவருளாகிய, ஆர் அமுதத்தை - அரிய அமிர்தத்தை, வாரிக்கொண்டு - அள்ளிக்கொண்டு, விழுங்குகின்றேன் - விழுங்கா நின்றேனாய், விக்கினேன் - [விம்மி விம்மி] விக்கினேன், வினையேன் - [வாயினாற் சொல்லப்படாத] தீவினையை யுடையேனாகிய நான், என் - அடியேனுடைய, விதியின்மையால் - நல்லூழில்லாமையால், தழங்கு - ஒலிக்கின்ற, அரு - அருமையாகிய, தேன் அன்ன - தேனை யொத்த, தண்ணீர் - குளிர்ச்சி பொரிந்திய நீரை, பருகத்தந்து - யான் உட்கொள்ளக் கொடுத்து, உய்யக்கொள்வாய் - உன் திருவடிக்கு ஆளாகக் கொள்வாயாக, அழுங்குகின்றேன்—அலையாநின்றேன், அடியேன் - அடியனேன், உன்-நினது திருவடிக்கு, அடைக்கலம் - அடைக்கலப் பொருள், எ - று.

(க - ரை.) எல்லா வஸ்துக்களுக்கும் இறைவனாகிய சிவபெருமானே! உன் அருளாகிய அமிர்தத்தை தேவரீர் கொடுக்க, அடியேன் அள்ளியுண்டு நல்லூழின்மையால் விக்கி வருந்துகின்றேன், ஆதலால் எனக்குத் தண்ணீரைக் கொடுத்து தேவரீருக்கு அடிமையாகக் கொண்டருளவேண்டும், அடியேன் உன் அடைக்கலம், என்பது.

(வி - ரை.) விக்குதல் - தண்ணீர் முதலியவை யுண்ணும்போது தடைபடல். தண்ணீர் - தண்ணிய குணம், அதாவது கிருபைக்குணம். விதி என்றது - ஊழினை. (௧0)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# ஆசைப்பத்து.

## ஆத்துமவிலக்கணம்.

[அதாவது ஆன்மரூபத்தை யறிதல்.]

திருச்சிற்றம்பலம்.

### ஆசிரியவிருத்தம்.

கருடக்கொடியோன்காணமாட்டாக்கழற்சேவடியென்னும்
பொருளைத்தந்திங்கென்னையாண்டபொல்லாமணியேயோ
விருளைத்துரந்திட்டிங்கேவாவென்றங்கேகூவு
மருளைப்பெறுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) கருடக்கொடியோன் - கருடக்கொடியை யுடையவனாகிய திருமாலும், காணமாட்டா - அறியவொண்ணாத, கழல் - வீரக்கழலை யணிந்த, சேவடியென்னும் - உன் திருவடியென்கிற, பொருளை - பாக்கியத்தை, தந்து - கொடுத்து, இங்கு - இவ்விடத்தில், என்னை - அடியேனை, யாண்ட - ஆண்டருளின, பொல்லா மணியே - தொளைபடாத மாணிக்கமே, ஓ - ஆ! இருளைத் துரந்திட்டு - [என் அவிச்சையாகிய] அந்தகாரத்தை யோட்டி, இங்கே - [அடியேனாகிய எனை] என்னிடத்தில், வாவென்று - வருவாயாக வென்று, அங்கே - தேவரீரிடத்திலே, கூவும் - அழைக்கின்ற, அருளைப் பெறுவான் - உன்னருளை யடைவதற்கு, ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடிவிரும்பினேன், அம்மானே - எனது தந்தையே! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அம்மானே! கருட வாகனத்தைதையும், கொடியையு முடைய திருமாலும் காணவொண்ணாத திருவடி யென்னும் பொருளை எனக்குக் கொடுத்து என்னை யாண்டருளின பொல்லா மணியே! எனது அஞ்ஞான விருளைப் போக்கி என்னிடம் குடிபுக இங்குவா வென்று உன்னிடத்துக் கழைக்கும்படியான உன் அருளைப் பெறுவதற்கே மிகு ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) கருடன் என்பதற்குச் சிறகுகளைக் கொண்டு பறப்பவன் என்றும், பாம்பைத் தின்பவன் என்றும் இருவகையாகப் பொருள் கூறுவர்

வடநூலார். கருடக்கொடியோன் என்பதனீற்றி லுயர்வு சிறப்பும்மை தொக்கது. கண்டாய் - முன்னிலை யசை யிடைச்சொல். (௧)

மொய்ப்பாலநரம்புகயிறாகமூளையென்புதோல்போர்த்த
குப்பாயம்புக்கிருக்ககில்லேன்கூவிக்கொள்ளாய்கோவேயோ
வெப்பாலவர்க்குமப்பாலாமென்னாரமுதேயோ
வப்பாகாணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) மொய் - நெருங்கிய, பால் நரம்பு - வெள்ளிய நரம்புகள், கயிறு ஆக - கயிறுகளாகக் கட்டி, மூளை யென்பு - மூளை எலும்பு தோல் என்பவைகளால், போர்த்த - மூடப்பட்டிருக்கிற, குப்பாயம் - சட்டையில், புக்கு இருக்க கில்லேன் - புகுந்திருக்கிலேன், [ஆதலால்] கூவிக்கொள்ளாய் - அழைத்துக் கொள்வாயாக, கோவே - இறைவனே, ஓ - ஆ ! எப்பாலவர்க்கும் - எவ்வகையாருக்கும், அப்பாலாம் - அப்பாற்பட்டவனாகிய, என் ஆர் அமுதே - என்னரிய அமிர்தமே, ஓ - ஆ ! அப்பா - அப்பனே! காண - உன்னைக் காணும் பொருட்டு, ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே எனது தந்தையே ! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அம்மானே ! நரம்பு முதலானவற்றால் செய்யப்பட்ட இந்த உடம்பிற் றங்கி யிருக்கமாட்டேன், என்னை அழைத்துக் கொள்ளவேண்டும், எவ்வகைப் பெருமை யுடையார்க்கும் அறியவொண்ணாத ஆரமுதே ! அப்பனே ! தேவரீரைக் காண ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) குப்பாயம் - மேற்போர்வை. மொய்ப்பு - நெருக்கம். எப்பாலவர் என்றது அரிப்பிரமாதி தேவர்களே யாயினு மென்றபடி. (௨)

சீவார்ந்தீமொய்த்தழுக்கொடுதிரியுஞ்சிறுகுடிலிதுசிதையக்
கூவாய்கோவேகூத்தாகாத்தாட்கொள்ளுங்குருமணியே
தேவாதேவர்க்கரியானேசிவனேசிறிதென்முகநோக்கி
யாவாவென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) சீவார்ந்து - சீயொழுகி, ஈமொய்த்து - ஈக்கள் மொய்த்து, அழுக்கொடு திரியும் - மலங்களுடன் கூடித் திரிகின்ற, சிறு குடில் - சிறு வீடாகிய, இது - இந்த உடம்பு, சிதைய - நசிக்க, கூவாய் - அழைத்திடாய், கோவே - இறைவனே ! கூத்தா - கூத்தனே ! காத்து - அடியேனைப் பாது காத்து, ஆட்கொள்ளும் - தேவரீருக்கு அடிமையாகக் கொள்ளும், குருமணியே - நாயக மணியே! தேவா - தேவனே! தேவர்க்கு அரியானே - தேவர்கட் கருமையானவனே ! சிவனே - சிவபெருமானே ! சிறிது - சற்று, என் - அடியேனுடைய, முகம் - முகத்தினை, நோக்கி - பார்த்து, ஆவா வென்ன - நீ ஐயோ வென்று மனமிரங்க, ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே - எனது தந்தையே ! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அம்மானே! சீயொழுகி, ஈக்கள் மொய்த்து மலங்களுடன் கூடித் திரிகின்ற இந்த உடம்பழிய என்னை நீ அழைத்துக்கொள்ள வேண்டும், நீ என் முகத்தைப் பார்த்து ஐயோவென் றிரங்கும்படி ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) சீவார்ந்தீமொய்த் தழுக்கொடு திரியுஞ் சிறுகுடி லென்றமையின் தேக மெனப்பொருள் தந்தது. குருமணி - ஆசார்ய ரத்தன மெனினுமாம். ஆவா - ஐயோ. (௩)

மிடைந்தெலும்பூத்தைமிக்கழுக்கூறல்வீறிலிநடைக்கூடந்
தொடர்ந்தெனைநலியத்துயருறுகின்றேன்*சோத்தமெம்பெருமா
னுடைந்துநைந்துருகியுன்னொளிநோக்கியுன்றிருமலர்ப்பாத [னே
மடைந்துநின்றிடுவானாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) எலும்பு - எலும்பும், ஊத்தை - ஊத்தையும், மிடைந்து - நெருங்கிய, அழுக்கு ஊறல் மிக்கு - அழுக்கூறல் மிகுந்து, வீறு இலி - மேன்மை யில்லாததாகிய, நடைக்கூட்டம் - நடைவீடு, தொடர்ந்து - பற்றி, என்னை நலிய - என்னை வருத்த, துயர் உறுகின்றேன் - துன்ப மடையாநின்றேன், சோத்தம் - அஞ்சலி, எம்பெருமானே - எம்மிறைவனே! உடைந்து - மனம் நெகிழ்ந்து, நைந்து உருகி - கனிந்துருகி, உன் - தேவரீருடைய, ஒளி - சுயம்பிரகாசத்தை, நோக்கி - பார்த்து, உன் - தேவரீருடைய, திருமலர்ப் பாதம் - அழகிய மலர்ப்பதத்தை, அடைந்து - சேர்ந்து, நின்றிடுவான் - இருக்கும் பொருட்டு, ஆசைப்பட்டு - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே - எனது தந்தையே! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அம்மானே! இந்த உடம்பு என்னைத் தொடர்ந்து வருத்துதலால் வருந்தாநின்றேன். உனக்கு நமஸ்காரம்! மனம் நெகிழ்ந் துருகி உன்னொளியை நோக்கி உன் திருவடியை யடைந்து நிற்க ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) நடைகூடமென்றது மிடைந்தெலும்பூத்தை மிக்கழுக்கூறல் வீறிலி என்ற விசேடத்தால், உடலினைக் குறித்து நின்றது. ஊறல் - ஊறு நைந்தல் - கனிந்தல். (௪)

அளிபுண்ணகத்துப்புறந்தோன்மூடியடியேனுடையாக்கை
புளியம்பழமொத்திருந்தேனிருந்தும்விடையாய்பொடியாடீ
யெளிவந்தென்னையாண்டுகொண்டவென்னாரமுதேயோ
வளியேனென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) அகத்து அளிபுண் - உட்புறத்தே அளிந்த புண்போல்வது, புறம் தோல் மூடி - புறத்தே தோலால் மூடப்பட்டிருப்பது, [ஆதலால்] அடி

* சோத்தம் - இழிந்தோர் செய்யும் அஞ்சலி.

யேனுடைய - அடியனேனுடைய, யாக்கை - உடம்போடு, புளியம்பழம் - புளியம் பழத்தை, ஒத்து - சேர்ந்து, இருந்தேன் - இருந்தேன், இருந்தும் - அப்படி யிருந்தும், விடையாய் - இடபவாகனனே! பொடியாடீ - திருவெண் பொடியை பூசுவோனே! எளி வந்து - எளிதாக [அடியேனிடத்திற்கு] வந்து, என்னை - அடியேனை, ஆண்டுகொண்ட - அடிமையாக்கிக் கொண்டருளின, என் - எளியேனுடைய, ஆர் அமுதே - அரிய அமிர்தமே! ஓ - ஆ! அளியேன் - எளியவனென்று, என்ன - கண்டோர் [பலவாறு] சொல்லும்படி, ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே-எனது தந்தையே! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அன்னையையொற்ற தந்தையே? இந்த உடம்பினை அருவருத்துப் புளியம்பழம்போன்று பிரிந்தே யிருந்தேன். அதை நோக்காது நோக்கி நீ எளிதாக வந்து என்னை ஆண்டருளின என் ஆர் அமுதே! நான் உன்னால் காக்கப்படுதற் குரியவனாகிய எளியவன் என்று, கண்டோர் சொல்ல ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) புளியம்பழ மொத்திருத்தலாவது - புளியும் ஓடும் பற்றின்றி யிருத்தல்போல, உடம்போடு பற்றின்றி யிருத்தல். அவ்வாறு இருந்தும் எளியனென்ன என்றியைத்துக்கொள்க. அளிதல் - கனிதல். யாக்கை என்றது மகா மாயையென்னுஞ் சத்தியால் கட்டப்படுவது. [உடல்.] (௯)

எய்த்தேனுயேனினியிங்கிருக்ககில்லேனிவ்வாழ்க்கை
வைத்தாய்வாங்காய்வானோரறியாமலர்ச்சேவடியானே
முத்தாவுன்றன்முகவொளிநோக்கிமுறுவன்னகைகாண
வத்தாசாலவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) எய்த்தேன் - இளைத்தேன், நாயேன் - அடியேன், இனி - இனிமேல், இங்கு - இவ்விடத்தில், இருக்ககில்லேன் - நான் இருக்க மாட்டேன், இவ்வாழ்க்கை - இந்தப் பொய்வாழ்க்கையில், வைத்தாய் - அடியேனை வைத்துவிட்டனை, வாங்காய் - [அதினின்று என்னை] எடாதிருக்கின்றனை, வானோர் - தேவர்கள், அறியா - அறிவதற்கு சாத்தியப்படாத, மலர் சேவடியானே - தாமரை மலர்போலுந் திருவடியை யுடையானே! முத்தா - முத்தனே, உன்றன் - தேவரீருடைய, முகவொளி - தேஜோன்மயானந்த முகத்தை, நோக்கி - பார்த்து, முறுவல் நகை - பஃலொளியும், காண - காணும் பொருட்டு, அத்தா - எந்தையே! சால ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே - எனது தந்தையே! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள தந்தையே! அடியேன் இளைத்தேன், இனி இங்கு இருக்கிலேன், இந்தப் பொய் வாழ்க்கையினின்றும் என்னை நீக்க வேண்டும், தேவர்களும் அறியவொண்ணாத திருவடியை யுடையவனே! தேவ

ரீருடைய முக வொளியையும், உன் திருப் புன்னகையையுங் காண ஆசைப் பட்டேன், என்பது.

(வி - ரை.) இவ்வாழ்க்கை வைத்தாய் வாங்காய் என்றது தன்னை இவ் வாழ்க்கையிற் புகுவித்த இறைவனே! அதினின்றும் விடுவிக்க வல்லவ னென்று கருதியென்க. முத்தன் - மலநீக்க முடையவன். (சு)

பாரோர்விண்ணோர்பரவியேத்தும்பரனேபரஞ்சோதீ
வாராய்வாராவுலகந்தந்துவந்தாட்கொள்வானே
பேராயிரமும்பரவித்திரிந்தெம்பெருமானெனவேத்த
வாராவமுதேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) பாரோர் - பூமியிலுள்ளாரும், விண்ணோர் - விண்ணுலகி லுள்ளாரும், பரவி யேத்தும் - வழிபட்டுத் துதிக்கின்ற, பரனே - மேலான வனே! பரஞ்சோதீ - மேலான சோதி மயமானவனே! வாராய் - [அடியே னிடத்திற்கு] வருவாயாக, வாரா - [மீட்டும் பிறவிக்கு] வாராமைக்குக் காரணமாகிய, உலகம் தந்து - முத்தி யுலகைக் கொடுத்து, வந்து - கிருபை செய்து வந்து, ஆட்கொள்வானே - அடிமைகொண் டருள்வோனே! பேர் ஆயிரமும் - உன் திருநாமங்க ளாயிரத்தையும், பரவித் திரிந்து - துதித்துத் திரிந்து, எம்பெருமான் என - எமது பெருமான் என்று, ஏத்த - தோத்திரம் பண்ணுதற்கு, ஆரா அமுதே - தெவிட்டாத அமிர்தமே! ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே - எனது தந்தையே! எ—று.

(க - ரை.) மண்ணுலகத்தாரும், விண்ணுலகத்தாரும் வழிபட்டுத் துதிக்கின்ற மேலோனே! முத்தி யுலகைத் தந்து வந்தாட்கொள்வோனே! உன் திருநாமங்க ளாயிரத்தையும் உச்சரித்து, எம்பெருமானே யென்று துதிக்க ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) முத்தி யுலகம் புகுந்தவர் அங்கு நின்று மீளார்; ஆதலால், அதனை வாரா உலகம் என்றும், இறைவனாகிய இவ்வமுதத்தை யனுபவிக்குந் தோறும் புதிதாகவே தோன்று மாகையால் "ஆராவமுதே" என்றும் கூறினார். ஆசை - விருப்பு, [இச்சை] (எ)

கையாற்றொழுதுன்கழற்சேவடிகள்கழுமத்தழுவிக்கொண்
டெய்யாதென்றன்றலைமேல்வைத்தெம்பெருமான்பெருமானென்
றையாவென்றன்வாயாலரற்றியழல்சேர்மெழுகொப்ப
வையாற்றரசேயாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) உன் - தேவரீருடைய, கழல் - வீரக்கழல்களை யணிந்த திருவடிகளை, கையால் தொழுது - அடியேனுடைய இரண்டு கைகளையுங் கூப்பி வணங்கி, கழுமத் தழுவிக்கொண்டு - பொருந்தத் தழுவிக்கொண்டு, எய்யாது - இளைக்காமல், என்றன் - அடியேனுடைய, தலைமேல் - சிரசின்மேல், வைத்து - வைத்த, எம்பெருமான் பெருமான் என்று - எம்மிறைவனே! இறைவனே!

யென்று, ஐயா - ஐயனே! என்றன் வாயால் - அடியேனுடைய வாயினால், அரற்றி - கூச்சலிட்டு, அழல் சேர் - நெருப்பைச் சேர்ந்த, மெழுகு ஒப்ப - மெழுகை நிகர்க்கும்படி, ஐயாற்று - திருவையாற்றுக்கு, அரசே - அரசனே! ஆசைப்பட்டேன் - மிகு அன்போடு கூடி விரும்பினேன், அம்மானே - எனது தந்தையே! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அம்மானே! உன் திருவடியைக் கையால் தழுவிக்கொண்டும், அடியேனுடைய சிரசின்மேல் வைத்துக்கொண்டும், எம்பெருமானே! ஐயனே! என்று கூச்சலிட்டு, தீயைச் சேர்ந்த மெழுகை நிகர்த்துருக ஆசைப்பட்டேன், என்பது,

(வி - ரை.) தொழுதல் - வணங்குதல். கழல் - வீரகண்டாமணி. கழுமல் - பொருந்தல். அரற்றல் - கூவல். ஐயாறு - பஞ்சநதி க்ஷேத்திரம். அதாவது [திருவையாறு] அழல் சேர் மெழுகு என்றது நெருப்பிலிட்ட மெழுகான துருகுவதுபோல் மனமுருகி என்றபடி. (அ)

செடியாராக்கைத்திறமறவீசிச்சிவபுரநகர்புக்குக்
கடியார்சோதிகண்டுகொண்டென்கண்ணிணைகளிகூரப்
படிதானில்லாப்பரம்பரனேயுன்பழவடியார்கூட்ட
மடியேன்காணவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) செடி ஆர் - குற்றம் பொருந்திய, ஆக்கைத்திறம் - உடம்பின் தன்மையை, அற வீசி - அறவெறிந்து; சிவபுரநகர்புக்கு - சிவபுரமாகிய நகரத்திற் பிரவேசித்து, கடி ஆர் சோதி கண்டுகொண்டு - விளக்கமாகிய ஒளியைக்கண்டு கொண்டு, என்கண் இணை களிகூர - என்னிரு கண்களும் களிப்பு மிகும்படி, படிதான் இல்லா-ஒப்பில்லாத, பராபரனே! பரம்பரனே, உன்பழ அடியார் கூட்டம்-உன் பழவடியார் கூட்டத்தை, அடியேன் காண-அடியேன் காணும்பொருட்டு, ஆசைப்பட்டேன் அம்மானே - மிகு அன்போடுகூடி விரும்பினேன் என்தந்தையே! எ - று.

(க - ரை.) அம்மானே! குற்றம் நிறைந்த இந்த வுடம்பின் தொடர்பைப் பற்றற வெறிந்து, சிவநகரிற் புகுந்து, விளக்கமாகிய ஒளியைக் கண்டுகொண்டு என் இரண்டு கண்களும் களிகூரவும், உன் பழவடியார் கூட்டத்தைக் காணவும் அடியேன் ஆசைப்பட்டேன், என்பது.

(வி - ரை.) களிகூரக் காண என இயையும். ஆக்கை - இதுயாக்கையென்பதன் மரூஉ. யாக்கையன்றது - மகா மாயையென்பதொரு சத்தி, கன்மவசத்துக் கேடாகப் பூவின்மணத்தைக் காற்றுகொடுவந் தறிவிக்குமாறு போலக் கன்மங்களுக்கான வநுபோகக் கருத்தை யவத்தாகாலத்திலே யுண்டாக்கிக் கரு விற்குகவந்த ஆன்மாவைச் சுக்கில சுரோணிதங்களிலே கூட்டிக் கட்டுவித்ததாகிய சரீரத்தை. யாக்கை-கட்டுதல். (கூ)

வெஞ்சேலனையகண்ணார்தம்வெகுளிவலையிலகப்பட்டு
நைஞ்சேனாயேன்ஞானச்சுடரேநானோர்துணைகாணேன்
பஞ்சேரடியாள்பாகத்தொருவாபவளத்திருவாயா
லஞ்சேலென்னவாசைப்பட்டேன்கண்டாயம்மானே.

(ப - ரை.) வெம் சேல் அனைய - இன்பத்தைத் தருகிற [அழகாகிய] சேற்கண்டையை யொத்த, கண்ணார் - கண்களையுடைய மாதரது, வெகுளியில் அகப்பட்டு - கோவமாகிய வலையிற் சிக்கி, நாயேன் நைஞ்சேன் - நாயினேன் நைந்தேன், ஞானச்சுடரே - ஞான சூரியனே ! நான் ஓர் துணைகாணேன் - நானொரு சகாயத்தையுங் கண்டிலேன் ! பஞ்சு - செம்பஞ்சூட்டிய, ஏர் - அழகிய, அடியாள் - பாதத்தை உடையாளாகிய உமாதேவியின், பாகத்து - பங்கினையுடைய, ஒருவா - ஒப்பற்றவனே! பவளத்திருவாயால் - பவளம் போன்ற உன் திருவாயினால், அஞ்சேல் என்ன - நீ என்னை யாதொன்றுக்கும் பயப்படாதே என்று சொல்ல, ஆசைப்பட்டேன் மிக-அன்போடுகூடி விரும்பினேன், அம்மானே - எனது தந்தையே ! எ - று.

(க - ரை.) எனது அன்புள்ள அம்மானே ! மாதரது வெகுளி வலையிலகப்பட்டு நாயினேன் நைந்தேன், ஞானசூரியனே ! உமாதேவிபங்கனே ! நான் ஒரு துணையையுங் காணேன், ஆதலால், உன்பவளத் திருவாயால் அஞ்ச வேண்டாமென்று நீ சொல்லும்படி நான் ஆசைப்பட்டேன் தந்தையே ! என்பது.

(வி - ரை.) நைந்தே னென்றது - நைஞ்சேனெனத்திரிந்து நின்றது. வெகுளி - கோபம். பஞ்சேரடி என்றது - செம்பஞ்சிக்குழம்பணிந்த அழகிய சேவடி என்பதாம். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அதிசயப்பத்து.

## முத்தியிலக்கணம்.

[அதாவது மோட்சத்தி னடையாளம்.]

திருச்சிற்றம்பலம்.

### ஆசிரியவிருத்தம்.

வைப்புமாடென்றுமாணிக்கத்தொளியென்றுமனத்திடையுருகாதே
செப்புநேர்முலைமடவரலியர்தங்கடிறத்திடைநைவேனை
யொப்பிலாதனவுவமனிலிறந்தனவொண்மலர்த்திருப்பாதத்
தப்பனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) வைப்பு மாடு என்றும்-[நமக்கு] இடமும் செல்வமுமாமென்றும், மாணிக்கத்து ஒளி யென்றும் - மாணிக்கத்தின் ஒளியாமென்றும், மனத்திடை - மனத்தின்கண், உருகாதே - [இறைவனை நினைத்து] உருகாமல், செப்பு நேர் முலை - செப்புக்கொப்பாகிய தனங்களையுடைய, மடவரலியர் தங்கள் திறத்திடை - மாதர்களுடைய விஷயத்தில், நைவேனை - வருந்துகின்ற என்னை, ஒப்பில்லாதன - ஒப்பற்றனவும், உவமனில் இறந்தன - [வலிந்து சொல்லினும்] உவமிக்கப்படு பொருள்களினின்றும் கடந்தனவும் ஆகிய, ஒள் - அழகுள்ள, மலர் - தாமரை மலர்போன்ற, திருப்பாதத்து - திருவடியை யுடைய, அப்பன் - எமது தந்தையாகிய சிவபெருமான், ஆண்டு - [அடியேனை] ஆட்கொண்டு, தன் - தேவரீருடைய, அடியரில் - அன்பர்களுடன், கூட்டிய - சேர்த்துக்கொண்ட, அதிசயம் - புதுமையை, கண்டாம் - கண்டோம், எ - று.

(க - ரை.) எமக்கு இடம் செல்வம் முதலியவையா யிருப்பவன் சிவ பெருமானே யென்று மனத்தி லெண்ணி யுருகாமல், மாதர் வஞ்சனையி லகப் பட்டு வருந்துகின்றவனாகிய என்னை, உவமை யில்லாத திருவடியை யுடைய எமது தந்தையாகிய இறைவன் ஆண்டுகொண்டு தன்னடியார் கூட்டத்திற் சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) வைப்பு என்றதற்கு நிக்ஷேபமெனினு மமையும். நிக்ஷேபம் - புதையல். மடவரல் - மடப்பத்தினது வரலாற்றினை யுடையவள். மடம் - அறியாமை. (க)

நீதியாவனயாவையுநினைக்கிலேனினைப்பவரொடுங்கூடே
னேதமேபிறந்திறந்துழல்வேன்றனையென்னடியானென்று
பாதிமாதொடுங்கூடியபரம்பரனிரந்தரமாய்நின்ற
வாதியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) நீதி ஆவன - நீதியாயிருப்பன, யாவையும் - எவற்றையும், நினைக்கிலேன் - நினையேன், நினைப்பவரொடும் - [தேவரீருடைய ஞான நீதியை] நினைப்பவர்களோடும், கூடேன் - சேரேன், ஏதமே - துன்பமனுபவித்தற் பொருட்டே, பிறந்து இறந்து - பிறந்தும் இறந்தும், உழல்வேன் தன்னை - உழலாநின்ற அடியேனை, என் - [இவன்] எனது, அடியான் என்று - தொண்டனென்று, பாதிமாதொடும் கூடிய - பாதி திருமேனி பெண்ணுடன் கூடியிருக்கப்பட்ட, பரம்பரன் — மகாதேவன், நிரந்தரமாய் - எக்காலத்தும் அழிவின்றி, நின்ற - நிலைத்திருந்த, ஆதி - முதல்வன், ஆண்டு - ஆண்டருளி, தன் அடியரிற் - தேவரீருடைய தொண்டரோடு, கூட்டிய - சேர்த்த, அதிசயம் கண்டாம் - அதிசயத்தைக் கண்டோம், எ - று.

(க - ரை.) நீதியாயிருப்பனவற்றை நினையேன், அவற்றை நினைப்பவர்களோடுங் கூடேன், துன்பத்துக்கே யாளாகிப் பிறந் திறந் துழல்வேன், இப்படிப்பட்ட என்னை இறைவன் தன்னடியானெனக்கொண்டு ஆண்டருளித் தன் அடியார்களோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) நீதி — நியாயம். ஏதம் - குற்றமெனினு மமையும். நிரந்தரம் - நிர் அந்தரம், அதாவது முடிவில்லாமை. பரம்பரன் - மேலான கடவுள், அல்லது தேவதேவன். (௨)

முன்னையென்னுடைவல்வினைபோயிடமுக்கணதுடையெந்தை
தன்னையாவருமறிவதர்கரியவனெளியவனடியார்க்குப்
பொன்னைவென்றதோர்புரிசடைமுடிதனிலிளமதியதுவைத்த
வன்னையாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) முன்னை - பழைமையாயுள்ள, என்னுடைய - அடியேனுடைய, வல்வினை போயிட - வலியவினை நசிக்கும்படி, முக்கண் உடை - மூன்று கண்களை யுடைய, எந்தை - எமது தந்தை, தன்னை - தேவரீரை, யாவரும் - தேவர்க ளெல்லாரும், அறிவதற்கு அரியவன் - அறிதற் கருமையானவன், [அங்ஙனமாயினும்] அடியார்க்கு - தன் னடியார்களுக்கு, எளியவன் - எளியனாயிருப்பவன், பொன்னை வென்றது - சுவர்ண காந்தியை வென்றதாகிய, ஓர் — ஒப்பற்ற, புரி - கட்டப்பட்ட, சடைமுடிதனில் - சடைமுடியின் கண், இளமதி வைத்த - இளம் பிறையைச் செருகின, அன்னை - எமது தாய் போன்றவனாகிய சிவபெருமான், ஆண்டு - ஆண்டருளி, தன் - தேவரீருடைய, அடியரில் - அடியார்களுள், கூட்டிய - சேர்த்த, அதிசயங் கண்டாம் - அதிசயத்தைப் பார்த்தோம், எ - று.

(க - ரை.) நான் கீழ்ச்சென்ற அனந்த சனனங்களிற் செய்த வலிய வினைகள் ஒழியும்படி முக்கண்ணுடைய எந்தையும், யாவரும் அறிதற் கரியவனும், அடியார்க் கெளியவனும், சடைமுடியின் கண் இளம் பிறையை வைத்த எம்மன்னைபோல்பவனும் ஆகிய சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) இறைவனருளினாலன்றி யொழித்த லருமை நோக்கி வினையை "வல்வினை" என்றார். ஆன்மாக்களுக்கு அழியாத் தந்தையா யிருப்பவன் இறைவனாதலால் "எந்தை" என்றும், "அன்னை" என்றும் கூறினர். அரியது - அருமையானது. (௫)

பித்தனென்றெனையுலகவர்பகர்வதோர்காரணமிதுகேளீ
ரொத்துச்சென்றுதன்றிருவருட்கூடிடுமுபாயமதறியாமே
செத்துப்போயருநரகிடைவீழ்வதற்கொருப்படுகின்றேனை
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) கேளீர் - கேட்பீராக, ஒத்து - மன மிசைந்து, சென்று - போய், தன் - தேவரீருடைய, திருவருள் - திருவருளை, கூடிடும் - பெறுதற்குரிய, உபாயம் அறியாமே - உபாயத்தை யுணராமல், செத்துப்போய் - [யாக்கையின் பயனாகிய முத்தியை யடையாமல்] இறந்துபோய், அரு-[சகித்தற்கு] அரிய, நரகிடை - நரகத்தில், வீழ்வதற்கு - விழுந்து வருந்துவதற்கு, ஒருப்படுகின்றேனை - இசையா நின்ற என்னை, அத்தன் - எமது தந்தையாகிய சிவபெருமான், ஆண்டு - ஆண்டருளி, தன் - தேவரீருடைய, அடியரின் - அடியாரோடு, கூட்டிய - சேர்த்த, அதிசயம் கண்டாமே - அதிசயத்தைக் கண்டோமன்றே, இது - இதுவே, என்னை - அடியேனை, உலகவர் - உலகத்தார், பித்தன் என்று - பைத்தியங் கொண்டவனென்று, பகர்வது - சொல்லுவதற்கு, ஓர் காரணம் - ஒரு காரணமா யிருந்தது, எ - று.

(க - ரை.) இறைவன் தனது திருவருளை யடைதற்குரிய உபாயத்தை யறியாமல் வீணாயிறந்து நரகத்தில் வீழ்வதற்கு மனமொத்திருந்த என்னை அங்ஙனம்வீழாதபடி தடுத்தாட்கொண்டு தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோமல்லவா! இதுதான் உலகத்தார் என்னைப் பித்தனென்று சொல்லுவதற்குக் காரணமா யிருந்தது, என்பது.

(வி - ரை.) இறைவனுக்கடிமைப்பட்ட மெய்யடியார்க்கு வேடம் குணம் முதலியவை மாறுபடுத லியல்பாதலால், இறைவன் தம்மை ஆட்கொண்டமையே உலகத்தார் தம்மைப் பித்தனென்று சொல்லுதற்குக் காரணம் என்றற்கு, "பித்தனென்றெனை யுலகவர் பகர்வதோர் காரணமிது" என்றார்.

இதனை, * திருவாதவூரர் புராணத்துள் திருப்பெருந்துறைச் சருக்கத்தில் 78, 79, 80 இச் செய்யுட்களை இங்ஙனம், இப்பேஜ் புட்நோட்டில் உணர்க. (௪)

பரவுவாரவர்பாடுசென்றணைகிலேன்பன்மலர்பறித்தேற்றேன்
குரவுவார்குழலார்திறத்தேநின்றுகுடிகெடுகின்றேனை
யிரவுநின்றெரியாடியவெம்மிறையெரிசடைமிளிர்கின்ற
வரவனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) பரவுவார் - இறைவனைத் துதிசெய்பவராகிய, அவர்பாடு - அவ்வன்பர்களிடத்தில், சென்று - போய், அணைகிலேன் - சேர்கிலேன், பல் மலர் - பலவகை மலர்களை, பறித்து - கொய்து அர்ச்சித்து, ஏத்தேன் - துதியேன், குரவு - குராமலரை யணிந்த, வார் - நீண்ட, குழலார்—கூந்தலை யுடைய பெண்கள், திறத்தே - வசப்பட்டு, நின்று - நின்று, குடிகெடுகின்றேனை - அடியோடு கெடுகின்ற என்னை, இரவு நின்று - சர்வ சங்கார காலமாகிய இடையாமத்தில் நின்று, எரியாடிய - அழலோடாடிய, எம்மிறை - எம்மிறைவன், எரிசடை - விளங்குகின்ற சடையின் கண், மிளிர்கின்ற — பிரகாசியா நின்ற, அரவன் - சர்ப்பத்தை யுடையவன், ஆண்டு - ஆண்டருளி, தன் அடியரில் - தேவரீருடைய அன்பர்களோடு, கூட்டிய - சேர்த்துக்கொண்ட, அதிசயங் கண்டாம் - அதிசயத்தைப் பார்த்தோம், எ - று.

(க - ரை.) இறைவனை வழிபடுகின்ற அடியாரிடத்துச் சென்று சேர்கிலேன், பலமலர்களைப் பறித்து அருச்சித்துத் துதியேன், மாதர் மயலிற் சிக்கிக் குடிகெடா நின்ற என்னை சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

---

* தம்பெருமுதல்வர்சொல்லுந்தகுமொழிப்படியேயுள்ள
செம்பொருளியாவுமன்பின்றிறத்துளார்தொலைத்தபின்ன
ரம்பரனளித்தஞானமருந்தினையருந்திப்பாச
வெம்பிணியகற்றுமிந்தவித்தகர்முத்தரானார்.

திருத்திகழ்கவிகைக்கீழுஞ்சிறந்தபொற்சிவிகைமேலும்
வரத்திருமேவுதானைமன்னவனென்னவந்தா
ருருத்தெரியாதநீறுங்கோவணவுடையுங்குஞ்சி
விரித்துளசிரமுங்கண்ணீர்மிகப்பொழிவிழியுமானார்.

அன்புடனேக்கிநிற்பரழுவர்கைதொழுவர்வீழ்வ
ரின்புறவெழுவர்பின்பாலேகுவரிரங்கிமீள்வர்
நன்பகற்கங்குல்காணார்ஞானநல்லறிவேகொண்டு
கொன்புனைபித்தர்பாலர்பிசாசர்தங்கொள்கையானார்.

(வி - ரை.) பன்மலர் - பலவகைமலர். அவை கோட்டுப்பூ, கொடிப்பூ, நீர்ப்பூ, நிலப்பூ என்பன. குரவு - நறுமணம் எனினுமாம். குடிகெடுதல் - குடும்பத்தோடு நசித்தல். பாடு - இடம். இரவு - இராத்திரி, அது சர்வசங்கார காலத்துக்காயிற்று. (௫)

எண்ணிலேன்றிருநாமவஞ்செழுத்துமென்னேழைமைபதனாலே
நண்ணிலேன்கலைஞானிகடம்மொடுநல்வினைநயவாதே
மண்ணிலேபிறந்திறந்துமண்ணாவதற்கொருப்படுகின்றேனை
யண்ணலாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) என் - அடியேனது, ஏழைமையதனாலே - அறியாமையினாலே, திருநாமம் - இறைவன் திருநாமமாகிய, அஞ்செழுத்தும் - பஞ்சாக்ஷரத்தினையும், எண்ணிலேன் - நினைந்திலேன், கலைஞானிகள் - நூல்களை யுணர்ந்த ஞானிகள், தம்மொடு - கூட்டத்தோடு, நண்ணிலேன் - சேர்ந்திலேன், நல்வினை - முத்திக்கேதுவாகிய சற்கருமத்தை, நயவாதே - விரும்பாமலே, மண்ணிலே - பூமியிலே, பிறந்து - ஜந்மித்து, இறந்து - மரித்து, மண் ஆவதற்கு - மண்ணாய்ப் போவதற்கு, ஒருப்படுகின்றேனை-இசையா நின்ற என்னை, அண்ணல் - பெரியோனாகிய சிவபிரான், ஆண்டு - ஆண்டருளி, தன் அடியரில் - தேவரீருடைய அடியாரோடு, கூட்டிய - சேர்த்த, அதிசயங் கண்டாம் - அதிசயத்தைப் பார்த்தோம் எ - று.

(க - ரை.) இறைவனது திருநாமமாகிய ஐந்தெழுத்தையும் என் அறியாமையால் நினைத்திலேன், அன்பரோடும் சேர்ந்திலேன், சற்கருமங்களை விரும்பாமல் இவ்வுலகத்திற் பிறந்திறந்து மண்ணாவதற்கு இசைகின்ற என்னை, பெரியோனாகிய சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) ஐந்தெழுத்தெண்ணல் - ஸ்ரீ பஞ்சாட்சர செபம் பண்ணுதல். கலைஞானிக ளென்றது - சாஸ்திர விசாரணையால் முதிர்ந்த பரம ஞானிகளை. ஒருப்படுதல் - சம்மதித்தல். (௬)

பொத்தையூன்சுவர்புழுப்பொதிந்துளுத்தசும்பொழுகியபொய்க்கூரை
யித்தைமெய்யெனக்கருதிநின்றிடர்க்கடற்சுழித்தலைப்படுவேனை
முத்துமாமணிமாணிக்கவயிரத்தபவளத்தின்முழுச்சோதி
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) பொத்தை ஊன் சுவர் - துவாரங்களையுடைய மாமிசச்சுவர், புழுப்பொதிந்து - புழுக்கள் பொருந்தி, உளுத்து - சிதைந்து, அசும்பு ஒழுகிய- நிணநீர் கசிந்தொழுகா நின்ற, பொய்க்கூரை - பொய்யாகிய கூரைவீடு, இத்தை - இதனை, மெய்யெனக் கருதிநின்று - மெய்யென்று நினைத்து நின்று, இடர்க்கடல் - துன்பக்கடலின், சுழித்தலை - சுழியின்கண், படுவேனை-சிக்கிக்

கிடப்பவனுகிய வென்னை, முத்து - முத்தினுடையவும், மாமணி - பெருமை கொண்ட ரத்நத்தினுடையவும், மாணிக்கம்-மாணிக்கத்தி னுடையவும், வயிரத்த - வயிரத்தினுடையவும், பவளத்தின் - பவளத்தினுடையவும், முழுச்சோதி - முழுவொளியையுடைய, அத்தன் - எமதுதந்தை, ஆண்டு - ஆண்டருளி, தன் அடியரிற்கூட்டிய - தன்னடியாரோடு சேர்த்த, அதிசயம்கண்டாம்- அதிசயத்தைப் பார்த்தோம், எ - று.

(க - ரை.) இந்தப்பொய்யுடம்பை மெய்யென நினைத்து துன்பக்கடலில் அழுந்தின என்னை, எமது தந்தையாகிய சிவபெருமான் ஆண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) பொத்தை - பருத்தது எனினுமாம். முத்து வயிரம் என்பவற்றின் ஒளியைத் திருவெண்ணீற்றி னொளிக்கும், மாமணி மாணிக்கம்பவளம் என்பவற்றினொளியைத் திருமேனியி னொளிக்கும் உவமையாக்குக. உளுத்தல் — நசித்தல். அசும்பு - கசிவு. (எ)

நீக்கிமுன்னெனைத்தன்னொடுநிலாவகைகுரம்பையிற்புகப்பெய்து
நோக்கிநுண்ணியநொடியனசொற்செய்துநுகமின்றிவிளாக்கைத்துத்
தூக்கிமுன்செய்தபொய்யறத்துகளறுத்தெழுதருசுடர்ச்சோதி
யாக்கியாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) முன் - முன்னே, தன்னொடு நில்லாவகை - தன்னுடன் சேர்ந்திராவண்ணம், என்னை நீக்கி-என்னைப்பிரித்து, குரம்பையில் புகசெய்து- [இந்தச்சரீரமாகிய] சிறு குடிலில் புகுத்தி, நோக்கி - [பரிபக்குவகாலத்தைப்] பார்த்து, நுண்ணிய - நுட்பமாகிய, நொடியன சொல்செய்து - நொடியளவிற் சொல்லப்படுவதாகிய ஒரு சொல்லையெனக் கறிவுறுத்தி, நுகம் இன்றி - நுகத்தடியில்லாமலே, விளாக்கைத்து - பூட்டி, தூக்கி - பிறவிக்கடலினின்று மேலெடுத்து, முன்செய்த - முன்னே செய்த, பொய் அற - வீண்காரியங்கள் அற்றொழியுமாறு, துகள் அறுத்து - குற்றங்களைச் சேதித்து, எழுதரு - எழுகின்ற சுடர் - காந்தியையுடைய, சோதி - ஒளியுருவனுகிய இறைவன், ஆக்கி - என்னையோர் பொருளாக்கி, ஆண்டு - ஆண்டருளி, தன் அடியரிற்கூட்டிய அதிசயம் கண்டாம்-தன்னடியாரோடு சேர்த்த அதிசயத்தைப் பார்த்தோம்.

(க - ரை.) என்னை ஆதியிற் பிரிவித்து, இந்த வுடம்பிற்புகுத்தி, பரிபாககாலம் பார்த்து ஒரு சொல்லைச்சொல்லி என் பிறவித்துன்பங்களைப்போக்கி யாண்டருளித் தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) நுண்ணிய நொடியன சொற்செய்து என்றது குருமுகத்தாலறிதற்குரிய உபதேசமொழியை. குரம்பை கூடு. அது இங்கு உடம்புக்காயிற்று. (அ)

உற்றவாக்கையினுறுபொருணறுமலரெழுதருநாற்றம்போற்
பற்றலாவதோர்நிலையிலாப்பரம்பொருளப்பொருள்பாராதே
பெற்றவாபெற்றபயனதுநுகர்ந்திடும்பித்தர்சொற்றெளியாமே
யத்தனாண்டுதன்னடியரிற்கூட்டியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) உற்ற - வினைவசத்தால் பொருந்திய, ஆக்கையின் உறுபொருள் - சரீரத்திலுள்ள பொருளானது, நறுமலர் - நல்லமலரின்கண், எழுதரு- உண்டாகின்ற, நாற்றம்போல் - நறுமணம்போல, பற்றலாவது ஓர் நிலை - பற்றப்படுவதாகிய ஓர் தன்மை, இல்லா - இல்லாத, பரம்பொருள் - மேலாகிய பொருளேயாம், அப்பொருள் - அந்தப்பொருளாகிய இறைவனை, பாராதே - நோக்காமல், பெற்றவாறு பெற்ற பயன் - தமது வினைக்கீடாகத் தாம் அடைய வேண்டிய வழியாக அடைந்த சுகதுக்கங்களாகிய பயனை, நுகர்ந்திடும் - அநுபவிக்கின்ற, பித்தர்சொல் தெளியாமே - அறிவிலிகளாகிய பித்தர்களுடைய சொல்லை நான் நம்பாதிருக்க, அத்தன் - எமது தந்தையாகிய சிவபிரான், ஆண்டு - என்னை ஆண்டருளி, தன் அடியரிற்கூட்டிய அதிசயம் கண்டாம் - தன் அடியாரோடு சேர்த்த அதிசயத்தைப் பார்த்தோம், எ - று.

(க - ரை.) பூவில் மணம்போல இந்தச் சரீரத்திலுள்ள மனோவாக்குக் காயங்களுக் கெட்டாத இறைவனை நோக்காமல் இம்மைப்பயனையே நுகரும் பித்தர் சொல்லை நான் நம்பாதிருக்கும்படி, என்னை யாண்டருளித் தன் அடியரோடு சேர்த்த அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) பற்றலாவதோர் நிலையிலாப்பரம்பொருள் - மனோவாக்குக் காயங்களுக் கெட்டாத மேலாகிய பொருள். பெற்றவாறு - பெற்றவாவென ஈறுதொக்கது. பித்தரென்றது - பரவசப்பட்டு நின்ற அடியார்களை. (௧)

இருடிணிந்தெழுந்திட்டதோர்வல்வினைச்சிறுகுடிலிதுவித்தைப்
பொருளெனக்களித்தருநரகத்திடைவிழப்புகுகின்றேனைத்
தெருளுமும்மதினொடிவரையிடிதரச்சினப்பதத்தொடுசெந்தீ
யருளுமெய்ந்நெறிபொய்ந்நெறிநீக்கியவதிசயங்கண்டாமே.

(ப - ரை.) இருள் திணிந்து - அஞ்ஞான விருள் மிகுந்து, எழுந்திட்ட - எழுந்ததாகிய, ஓர் - ஒப்பற்ற, வல்வினை - வலிய வினைகளா லாகிய, சிறு குடில் இது - சிறு குடில் இதுவாகும், இத்தை - இதனை, பொருள் என - மெய்ப்பொருளெனக் கொண்டு, களித்து - மகிழ்ந்து, அரு - [துன்பம் சகித்தற்கு] அரிய, நரகத்திடை - நரகத்தில், விழப்புகுகின்றேனை - விழப்போகின்ற என்னை, தெருளும் - யாவராலும் தெளியப்பட்ட, மும்மதில் - மும்மதில்கள், நொடிவரை - நொடியளவில், இடிதர - தகர்ந்துபோம்படி, சினப்பதத்தொடு - கோவக்குறியொடு, செந்தீ அருளும் - செந்தீயையும் அருள் செய்த, மெய்ந்நெறி - உண்மை நெறி யுடையவனாகிய இறைவன், பொய்ந்

நெறி - [அடியேனுடைய] பொய்ந்நெறியை, நீக்கிய - தடுத்தாண்டுகொண்ட, அதிசயம் கண்டாம் – அதிசயத்தைப் பார்த்தோம், எ - று.

(க - ரை.) அஞ்ஞான விருள் செறிந்து வலிய வினைகளா லெடுக்கப் பட்ட இந்தப் பொய்யுடம்பை மெய்யாகக் கருதிக் களித்து நரகுக்காளாகிய என்னை, திரிபுராந்தகனாகிய சிவபெருமான் பொய்ந்நெறியினின்று நீக்கி யாண் டருளின அதிசயத்தைக் கண்டோம், என்பது.

(வி - ரை.) இருள் என்றது ஆனாதியே மூடப்பட்டு நின்ற ஆணவாதிய மல விருளை. சினப்பதமென்றதில் பதம் - கோவக்குறிப்பை யுணர்த்தி நின் றது. செக்கீ யருளுமென்ற குறிப்பால் சிவபெருமானை யுணர்த்தி நின்றது.()

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# புணர்ச்சிப்பத்து.

## அத்துவிதவிலக்கணம்.

[அதாவது ஒன்றுமல்ல விரண்டுமல்ல வென்பது.]

திருச்சிற்றம்பலம்.

---

### ஆசிரியவிருத்தம்.

சுடர்பொற்குன்றைத்தோளாமுத்தை
வாளாதொழும்புகந்து
கடைபட்டேனையாண்டுகொண்ட
கருணாலயனைக்கருமால்பிரமன்
றடைபட்டின்னுஞ்சாரமாட்டாத்
தன்னைத்தந்தவென்னாரமுதைப்
புடைபட்டிருப்பதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே,

(ப - ரை.) சுடர் - விளக்குகின்ற, பொற் குன்றை - பொன்னையொத்த மலையை, தோளாமுத்தை - தொளையிடப்படாத முத்தை, வாளா - வீணாக, தொழும்பு - என் தொண்டை, உகந்து - ஏற்றுக்கொண்டு, கடைபட்டேனை - கடையான வென்னை, ஆண்டுகொண்ட - ஆட்கொண்டருளின, கருணாலயனை - கருணைக்குப் பிறப்பிடமானவனை, கருமால் - கரு நிறத்தையுடைய திருமாலும், பிரமன் - பிரமனும், தடைபட்டு - தடை செய்யப்பட்டு, இன்னும் சாரமாட்டா - இன்னமும் தேடி யடையவொண்ணாத, தன்னை - தேவரீருடைய திருவடிகளை, தந்த - அடியேனுக்குக் கொடுத்த, என் - என்னுடைய, ஆர் அமுதை - அரிய அமிர்தத்தை, புடைபட்டிருப்பது - அணுகியிருப்பது, என் - அடியேனுடைய, பொல்லா மணியை - முழுமணியை, புணர்ந்து - சேர்ந்து, என்றுகொல்லோ - என்றோ, எ - று.

(க - ரை.) எனக்குப் பொன்மலை முதலானவைபோலப் பெரும்பயனாயிருக்குஞ் சிவபிரானை நான் சேர்ந்து அவனுக் கருகிலிருப்பது எந்நாளோ! என்பது.

(வி - ரை.) சலியா நிலைமையனாதலாலும், எல்லா வுலகத்தாராலும், புகழப்படுவோனாதலாலும், அளக்கலாகாத அளவினனாதலாலும் என்றும், அடுத்தார்க்குப் பலவளங்களைத் தந்து காப்போனாதலாலும், இறைவனை "சுடர் பொற்குன்று" என்றார். தோளா முத்து - தொளைக்கப்படாத முத்து. தோளுதல் - தொளைத்தல். அன்றித் தொள்ளல் தொளைத்தலெனக்கொண்டு இதுவே நீண்டு தோளலாயிற்றெனினுமாம். பொள்ளாமணி - தொளைக்கப் படாத மணி என வந்தது. (௧)

ஆற்றகில்லேனடியேனரசே
யவனிதலத்தைம்புலனாய
சேற்றிலழுந்தாச்சிந்தைசெய்து
சிவனெம்பெருமானென்றேத்தி
யூற்றுமணற்போனெக்குநெக்குள்ளே
யுருகியோலமிட்டுப்
போற்றிநிற்பதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) அரசே - திருக்கயிலாயத்தி லெழுந்தருளி யிருக்கும் வேந்தே? அடியேன் - அடியனேன், அவனிதலத்து - பூமியில், ஐம்புலன் ஆய - பஞ்சேந்திரியங்களாகிய, சேற்றில் அழுந்த - சேற்றில் மூழ்க, ஆற்றகில்லேன் - பொறுக்க முடிகிலேன், [ஆதலால்] சிந்தை செய்து - உன்னைத் துதிசெய்து, சிவன் - பரமசிவனே! எம்பெருமான் - எனது பெருமானே! என்று ஏத்தி - என்று வாயாரத் துதித்து, ஊற்று மணல்போல் - ஊற்றின் மணல்போல,

நெக்கு நெக்கு - நெளித்து நெளித்து, உள்ளே உருகி - மனதினுள் ளுருகி, ஓலம் இட்டு - முறையமிட்டு, என் - அடியேனுடைய, பொல்லாமணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - அடைந்து, போற்றி நிற்பது - துதித்து நிற்பது, என்று கொல்லோ - என்நாளோ! எ - று.

(க - ரை.) கயிலைக் கரசே? இப்பூலோகத்தின்கண் பஞ்சேந்திரியச் சேற்றில் ஆழ்ந்த ஆற்றலாகினேன், சிவனே! எம்பெருமானே! என்று முறையிட்டு ஊற்று மணல்போல மனம் நெகிழ்ந் துருகி உன்னைச் சேர்ந்து துதித்து நிற்பது எக்காலமோ, என்பது.

(வி - ரை.) ஆற்றல் - ஆற்றாமை. ஐம்புலன் - பஞ்சேந்திரியங்கள். அதாவது [சத்த, பரிச, ரூப, ரச, கந்தங்கள்] ஓலம் - முறை. பொல்லா மணி - பழுதுபடா மாணிக்கம். (உ)

நீண்டமாலுமயனும்வெருவ
நீண்டநெருப்பைவிருப்பிலேனை
யாண்டுகொண்டவென்னாரமுதை
யள்ளூறுள்ளத்தடியார்முன்
வேண்டுந்தனையும்வாய்விட்டலறி
விரையார்மலர்தூவிப்
பூண்டுகிடப்பதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) நீண்ட மாலும் - நெடியோனாகிய விட்டுணுவும், அயனும் - பிரமனும், வெருவ - அஞ்ச, நீண்ட - வானத்தை அளாவி நின்ற, நெருப்பை - அக்கினியை, விருப்பு - தன்னிடத்து ஆசை, இல்லேன் - இல்லாதவனாகிய என்னை, ஆண்டுகொண்ட - அடிமையாக்கி ஆண்டுகொண்டருளின, என் - அடியேனுடைய, ஆர் - அரிதாகிய, அமுதை - அமிர்தத்தை, அள்ளூறு - நெருக்குகின்ற, உள்ளத்து - மனத்தினுடைய, அடியார் - அடியவர்களாகிய திருக்கூட்டத்திற்கு, முன் - முன்னே, வேண்டுந்தனையும் - வேண்டுமளவும், வாய்விட்டு அலறி - வாய்விட்டரற்றி, விரை ஆர் - வாசனை பொருந்திய மலர்களை, தூவி - [சிரசுமுதற் பாதம்வரையிற்] றூவி, என் - அடியேனுடைய, பொல்லா மணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - அடைந்து, பூண்டு கிடப்பது - உன்னைச் சேர்ந்து இருப்பது, என்று கொல்லோ - எக்காலமோ! எ - று.

(க - ரை.) அரி அயன் அஞ்சும்படி ஓங்கி நின்ற அக்கினிமலையும், அன்பில்லாத என்னை அடிமையாக ஆண்டுகொண்டவனும் ஆகிய சிவபெருமானை மலர்களால் அர்ச்சித்துத் தாழ்ந்து கிடப்பது எக்காலமோ! எ - று.

(வி - ரை.) நீண்டமால் - திருவிக்கிரமன். வெருவ - பயப்பட. அள்- நெருங்குதல். தூவி - புரோக்ஷித்து. (௩)

அல்லிக்கமலத்தயனுமாலு
மல்லாதவருமமரர்கோனுஞ்
சொல்லிப்பரவுநாமத்தானைச்
சொல்லும்பொருளுமிறந்தசுடரை
நெல்லிக்கனியைத்தேனைப்பாலை
நிறையின்னமுதையமுதின்சுவையைப்
புல்லிப்புணர்வதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே

(ப - ரை.) அல்லி - அகவிதழ்களை யுடைய, கமலத்து - தாமரை மலரி லுள்ள, அயனும் - பிரமதேவனும், மாலும் - விட்டுணுவும், அல்லாதவரும் - இதர தேவரும், அமரர் கோனும் - தேவர்கட்கு அரசனாகிய இந்திரனும், சொல்லி - [தம் தம் வாயாற்] சொல்லி, பரவும் - போற்றி எற்றுகின்ற, நாமத் தானை - திருநாமத்தை யுடையவனை, சொல்லும் பொருளும் - சொல்லையும் பொருளையும், இறந்த - கடந்த, சுடரை - பரஞ்சோதியை, நெல்லி கனியை - நெல்லிப்பழத்தை, தேனை - தேனை, பாலை - பாலை, நிறை - நிறைந்த, இன் - இனிமையாகிய, அமுதை - அமிர்தத்தை, அமுதின் சுவையை - அமிர்தத்தின் உருசியை, என் - என்னுடைய, பொல்லா மணியை - தொளைபடா மாணிக் கத்தை, புணர்ந்து - சேர்ந்து, புல்லி - நெருங்கி, புணர்வது - இருகரத்தால் தழுவுவது, என்று கொல்லோ - என்றோ! எ - று.

(க - ரை.) பிரமனும், விட்டுணுவும், இந்திரனும், மற்றுமுள்ள தேவர்க ளும் புகழ்கின்ற பல திருநாமங்களை யுடையவனும், சொற்பொருட்களைக் கடந் தவனும், அமுது முதலியவற்றின் அருட்சுவையா யுள்ளவனும் ஆகிய சிவ பெருமானைக் கிட்டித் தழுவுவது எந்நாளோ! என்பது.

(வி - ரை.) சொல்லும் பொருளு மிறத்தலாவது - சொல்லுக்கும் பொ ருளுக்கும் அளவுக்கு எட்டாது நிற்றல். நெல்லிக்கனி - நாவுக்கு ஆரோக்கி யத்தைத் தரும் நற்கனி. புல்லுதல் - நெருங்குதல். கொல்லோ என்பது வியப்பக் குறி. (௪)

திகழத்திகழுமடியுமுடியுங்
காண்பான்கீழ்மேலயனுமாலு
மகழப்பறந்துங்காணமாட்டா
வம்மானிம்மாநிலமுழுது

நிகழப்பணிகொண்டென்னையாட்கொண்
டாவாவென்றநீர்மையெல்லாம்
புகழப்பெறுவதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) திகழத் திகழும் - மிக்க விளங்குகின்ற, அடியும் - பாதங்கள் இரண்டையும், முடியும் - திருமுடியையும், காண்பான் - தேடிக் காணும் பொருட்டு, கீழ் - கீழுலகங்களும், மேல்-மேலுலகங்களும், மாலும் அயனும் - [தாம் தாம் பெரியவனென்று வாதிட்டு நின்ற] விட்டுணுவும் பிரமனும், அகழ பறந்தும் - உட்சென்று கிண்டியும் மேனோக்கி பறந்தும், காணமாட்டா - [அவ்விருவராலும்] கண்டு பிடிக்கபபடாத, அம்மான் - அப்பேர்க்கொற்ற பெரியோனாகிய சிவபெருமான், இ - இந்த, மா நிலம் முழுதும் - பெரிதாகிய பூலோக முழுதும், நிகழ - தோன்ற, பணிகொண்டு - அடிமை செய்து கொண்டு, என்னை - அடியேனை ஆளாக்கிக்கொண்டருளி, ஆவா என்ற - அந்தோ என்றிரங்கின, நீர்மை எல்லாம் - குணங்களெல்லாவற்றையும், என் - எனது, பொல்லாமணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - இரு கரத்தால் சேர்ந்து, புகழ பெறுவது - புகழை அடைவது, என்றுகொல்லோ- எந்த நேரமோ! எ - று.

(க - ரை.) தாம் தாம் பெரியவனென்று வீணில் வாதிட்டுக்கொண்ட பிரம விட்டுணுக்களால் எங்குந் தேடிக் காணப்படாமல் திகைத்து நிற்கும்படி செய்த சிவபெருமான் இவ்வுலக முழுதும் தெரியும் பொருட்டு என்னையும் மதித்து ஆட்கொண்ட நற்குணங்க ளெல்லாவற்றையும் நான் மனதாறப் புகழப்பெருவது எந்நாளோ ! என்பது.

(வி - ரை.) காண்பான் - பானீற்றுச் செயவெனெச்சம். அகழ்தல் - மண்ணைத் தோண்டுதல். அம் - அழகு. மான் - திருக்கரத்தில் மானைத் தாங்கும் பரமசிவனைக் குறித்தது. ஆவா என்றது ஆச்சரியத்தைக் காட்டியது. நீர்மை - குணம். (ரு)

பரிந்துவந்துபரமானந்தம்
பண்டேயடியேற்கருள்செய்யப்
பிரிந்துபோந்துபெருமாநிலத்தி
லருமாலுற்றேனென்றென்று
சொரிந்தகண்ணீர்சொரியவுண்ணீ
ருரோமஞ்சிலிர்ப்பவுகந்தன்பாய்ப்
புரிந்துநிற்பதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) பரிந்து வந்து - மிகு அன்புடன் வந்து, பண்டே - முன்னமே, அடியேற்கு - அடியேனுக்கு, பரம ஆநந்தம் - அதிமேன்பாட்டான இன்பத்தை, அருள் செய்ய - கிருபை செய்ய, பிரிந்து போந்து - பிரிந்து வந்து, பெரு - பெரிய, மா நிலத்தி - நிலவுலகத்தில், அருமால் - அருமையாகிய மயக்கத்தை, உற்றேன் - அடைந்தேன், என்று என்று - என்று சொல்லி, சொரிந்த - தாரைதாரையாய்ப் பொழிந்த, கண்ணீர் சோரிய - கண்ணீர் ஒழுகின படியே இருக்க, உள் நீர் - மனத்தின் அன்பினால், உரோமம் சிலிர்ப்ப - மயிர் சிலிர்க்க, அன்பாய் விரும்பி - அன்புருவாய் விரும்பி, என் - எனது, பொல்லா மணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - சேர்ந்து, புரிந்து நிற்பது - என்றும் நீங்காமல் விசுவாசித்து நிற்பது, என்று கொல்லோ - என்று தானோ! எ - று.

(க - ரை.) யாவரும் காணுதற்கரிதாகிய சிவபெருமான் அதி விசுவாசத்துடன் எழுந்தருளி வந்து முன்னமே அடியேனுக்குப் பேரின்பத்தைக் கிருபை செய்ய, அதனைப் பிரிந்து இப்பூமியில் வந்து மிக்க மயக்கத்தை யடைந்தேனென்று கண்ணீர் ததும்பி ஒழுகவும், உரோமம் சிலிர்ப்பவும், அன்பு கொண்டு அப் பரமசிவனை நான் ஆசை மிகுதியால் நிற்பது எந்நாளோ! என்பது.

(வி - ரை.) பரிதல் - ஆசைக்கொள்ளுதல். பரமாநந்தம் - இங்கு பேரின்ப வீடு எனினும் ஒக்கும். மால் - மயக்கம். சிலிர்ப்பல் - தளிர்த்தல். புரிதல் - விரும்புதல். (௬)

நினையப்பிறருக்கரியநெருப்பை
 நீரைக்காலைநிலனைவிசும்பைத்
தனையொப்பாரையில்லாத்தனியை
 நோக்கித்தழைத்துத்தழுத்தகண்டங்
கனையக்கண்ணீரருவிபாயக்
 கையுங்கூப்பிக்கடிமலராற்
புனையப்பெறுவதென்றுகொல்லோவென்
 பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) பிறருக்கும் - அன்னியருக்கும், நினைய அரிய - எண்ணுதற்கரிதாகிய, நெருப்பை - சுடரினை, நீரை - ஜலத்தை, காலை-காற்றை, நிலனை - மண்ணை, விசும்பை - ஆகாயத்தை, தன்னை - தேவர்களுக்கு, ஒப்பாரை - ஒப்புவமை, இல்லா தனியை - இல்லாத ஏகவஸ்துவை, நோக்கி - பார்த்து, தழைத்து - சந்தோஷித்து, தழுத்த - தழுதழுத்த, கண்டம் கனைய - கண்டம் கதுத்தலுண்டாக, கண்ணீர் - விழியினின்று, அருவிபாய - அருவிபோல் பாயாநிற்க, கையும் - கரங்களையும், கூப்பி - குவித்து, கடிமலரால் - வாசனை பொருந்திய புட்பங்களால், புனைய - அலங்கரிக்க, பெறுவது - செய்வது,

ன் - அடியேனுடைய, பொல்லாமணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - [அன்பின் மிகுதியால்] சேர்ந்து, என்று கொல்லோ - எந்நாளோ! எ - று.

(க - ரை.) தில்லைச் சிதம்பரத்தின் கண்ணே எழுந்தருளிச் சகல ஆன்மாக்களைக் காக்கா நின்ற இறைவனை நோக்கித் தழுதழுத்தக் கண்டம் கனைத்தல், கண்ணீர் அருவிபோல் பாய்தல் முதலாய குறிகளோடு நின்று உன்னைப் புட்பங்களால் அலங்கரிக்கப்படுவது எந்த விநாடியோ! என்பது.

(வி - ரை.) அரிய - இங்கு பெரிய என்று பொருள். கால் - காற்று. நிலம் - மண். விசும்பு - ஆகாயம். தனி - ஏகம். கடி மலர் - மணம் பொருந்திய புட்பம். (எ)

நெக்குநெக்குள்ளுருகியுருகி
நின்றுமிருந்துங்கிடந்துமெழுந்து
நக்குமழுதுந்தொழுதும்வாழ்த்தி
நானாவிதத்தாற்கூற்றுநவிற்றிச்
செக்கர்போலுந்திருமேனித்
திகழநோக்கிச்சிலிர்சிலிர்த்துப்
புக்குநிற்பதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) நெக்கு நெக்கு - நெளிந்து நெளிந்து, உள் உருகி உருகி நின்றும் - மனம் உருகி உருகி நின்றும், இருந்தும் - நின்று இருந்தும், கிடந்தும் - தாழக்கிடந்தும், எழுந்தும் - எழுந்தும், நக்கும் - சிரித்தும், அழுதும் - மனம் வெதும்பி அழுதும், தொழுதும் - அன்புடன் வணங்கியும், வாழ்த்தி - போற்றி செய்து, நானாவிதத்தால் - பலவிதமாக, கூத்து நவிற்றி - கூத்தாடுதல் செய்து, செக்கர்போலும் - செவந்த நிறம்போலும், திருமேனி - அழகிய மேனியை, திகழ நோக்கி - விளங்கப்பார்த்து, சிலிர்சிலிர்த்து — சிலிர்சிலிர்த்து, என் - என்னுடைய, பொல்லா மணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - சேர்ந்து, புக்கு நிற்பது - புகுந்து நிற்பது, என்று கொல்லோ - எக்காலமோ! எ - று.

(க - ரை.) பரமசிவனது திருமேனியைப் பார்த்து மனநெகிழ்ச்சி மனமுருகுதல் முதலாய நற்குணங்களைப் பெற்று அவனைச் சரணாகதி என்று அடைந்து நிற்பது எந்நாளோ! என்பது.

(வி - ரை.) நெக்குதல் - நெளிக்குதல். இருத்தல் - உட்கார்ந்திருத்தல். நக்கு - இங்ஙனம் பேரானந்தச் சிரிப்பு. செக்கர் - செவந்த நிறத்தினையுடையவர். நவிற்றல் - செய்தல். (அ)

தாதாய்மூவேழுலகுக்குந்
தாயேநாயேன்றனையாண்ட
பேதாய்பிறவிப்பிணிக்கோர்மருந்தே
பெருந்தேன்பில்கவெப்போது
மேதாமணியேயென்றென்றேத்தி
யிரவும்பகலுமெழிலார்பாதம்
போதாய்ந்தணைவதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) மூவேழ் உலகுக்கும் - இருபத்தோ ருலகங்களுக்கும், தாதாய் - பிதாவே! தாயே - அன்னையே! நாயேன் தன்னை - நாயினுங்கடைப்பட்ட அடிமையை, ஆண்டபேதாய் - ஆட்கொண்ட அறிவிலுயர்ந்தவனே! பிறவிப்பிணிக்கு - பிறப்பென்னும் பெரும் நோய்க்கு, ஓர் மருந்தே - அரும் பொருளான ஓர் அவுடதமே! பெருந்தேன் - மிக்கதேனானது, பில்க - சிந்தி ஒழுக, எப்போதும் - எந்நாளும், மேதா - ஞானமுள்ள, மணியே - மாசிலா மணியே! என்றென்று - இவ்வாறு பலவித நற்பெயரால், ஏத்தி - சொல்லிப் புகழ்ந்து துதித்து, இரவும்பகலும் - இரவினும் பகலினும், எழில் ஆர் - அழகு வாய்ந்த, பாதம்போது - திவ்யத் திருவடித் தாமரைமலரை, ஆய்ந்து - யாதொன்றுமில்லாமல் ஆராய்ந்து, அணைவது - பொருந்தச்செய்வது, என் - எனது, பொல்லாமணியை - தொளைபடா மாணிக்கத்தை, புணர்வது - சேர்ந்திருப்பது, என்று கொல்லோ - எக்காலமோ! எ - று.

(க - ரை.) மூவேழுலகுக்கும் தந்தை தாயாயிருப்பவனாகிய இறைவனே நாயேனை ஆண்டவனே! பிறவிப்பிணிக்கு மருந்தே! அறிவுருவாகிய மாசிலா மணியே! என்று மனம்பூரிக்கத் துதித்து, இரவும்பகலும் சிவபெருமானது திருவடித் தாமரையை நான் சேர்வது எந்நாளோ! என்பது.

(வி - ரை.) தாதை என்பது ஈறுதிரிந்து விளியாயிற்று. மேதாமணி வடநூன் முடிபு. இரவும் பகலும் என்றது ஓர் நாள் முழுதும். (௬)

காப்பாய்படைப்பாய்கரப்பாய்முழுதுங்
கண்ணோர்விசும்பின்விண்ணோர்க்கெல்லா
மூப்பாய்மூவாமுதலாய்நின்ற
முதல்வாமுன்னேயென்னையாண்ட
பார்ப்பானேயெம்பரமாவென்று
பாடிப்பாடிப்பணிந்துபாதப்
பூப்போதணைவதென்றுகொல்லோவென்
பொல்லாமணியைப்புணர்ந்தே.

(ப - ரை.) முழுதும் - முழுமையும், காப்பாய் - யாவையும் காவல்செய்வாய், படைப்பாய் - யாவையும் உண்டுபண்ணுவாய், கரப்பாய் - யாவத்து வத்துவையும் மறைப்பாய், கண் ஆர் விசும்பின்-இடம் நிறைந்த ஆகாயத்திலுள்ள, விண்ணோர்க்கு எல்லாம் - விண்ணுலகத்தாராகிய தேவர்கட்கெல்லாம், மூப்பாய் - பெரியோனே! மூவா முதல் ஆய் நின்ற முதல்வா-முதிராத முதலாகி நிலைபெற்ற முதல்வனே! முன்னே என்னை ஆண்ட - முன்னம் அடியேனை அடிமைகொண்டாண்டருளின, பார்ப்பானே-வேதமுதல்வனாகிய வேதியனே! எம்பரமா என்று-எமது பரமனே என்று, பாடி பாடி - பாக்களால் பாடிப்பாடி, பணிந்து - தலைவணங்கி, பாதம் - [உன் திவ்ய] திருவடியை, பூ - அழகாகிய, போது- தாமரைமலரை, என் - எனது, பொல்லாமணி தொளைபடா மாணிக்கத்தை, புணர்ந்து - சேர்ந்து, அணைவது - அடையப்பெறுவது, என்று கொல்லோ - எந்நாளோ! [மகாதேவா] எ - று.

(க - ரை.) எல்லாவற்றையும் காத்தல், படைத்தல், கரத்தல் முதலிய செயப்பாட்டையுடையவனும், விண்ணுலகத்தில் வாழாநின்ற எல்லாத் தேவர்கட்கும் முதல்வனா யிருப்பவனும், முன்னம் நாயினுங் கடையேனாகிய அடியேனையும் ஒருபொருட்டாய் எண்ணி அடிமைகொண்டருளின் வேத முதல்வனே! அருஞ்சொற்களால் உன்னைப் பாக்களால் துதித்துத் தலைவணங்கி உன்னுடைய திருவடித்தாமரை மலரை நான் அடையப்பெறுவது எந்நாளோ என்தாய்! என்பது.

(வி - ரை.) காத்தல் - காப்பாத்துதல். படைத்தல் - உண்டாக்குதல். கரத்தல் - மறைத்தல். அது இங்கு சங்காரத்தை யுணர்த்திற்று. கண் - பெருமையுமாம். வேதமுதலாகிய எப்பொருட்கும் வித்துபோல் நிற்பவன் சிவபெருமானாகையால், இங்ஙனம், வேதியனே என்று கூறினார். (௧0)

திருச்சிற்றம்பலம்.

(வி - ரை.) வம்பன் - வீணன். மணி - மாமணி. பற்று - ஆசை. ஒருவன் - ஏகவஸ்துவா யிருப்பவன். ஊடுருகுதல் - அளவைக் கடந்து உரு விப்போதல், உம்பர் - தேவர். இருவர் - இங்கு அரி பிரமர்க்காயிற்று. (௨)

பாடிமால்புகழும்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேடிநீயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யூடுவதுன்னோடுவப்பதுமுன்னை
யுணர்த்துவதுனக்கெனக்குறிதி
வாடினேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) மால் - விட்டுணு, பாடி புகழும் - வேதவாக்கால் போற்றிப் புகழும்படியான, பாதம் ஏ அல்லால் - [யாவராலுங் காணப்பெறாத] உன்திரு வடியே அல்லது, நான் - ஏழையாகிய யான், மற்று பற்று இலேன்-வேறொருவன் றின்மேல் விருப்பமுடையவ னல்லேன், தேடி நீ ஆண்டாய் - [அங்ஙனம் யாதொன்றின் பேரில் பற்றிலாதவனென் றறிந்து என்னை] நீயே மனம் வைத்து நாடிவந்து ஆண்டருளினை, சிவபுரத்து அரசே-திருக்கயிலாயத்துக்கு அரசனு யிருப்பவனே! திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந் துறை யென்னும் க்ஷேத்திரத்தின்கண் வைபவமிகுதியால் எழுந்தருளியிருக் கும் சிவபெருமானே! ஊடுவது உன்னோடு - யான் பிணங்குவது உந்தனோ டே, உவப்பதும் உன்னை - யான் உவப்பதும் உன்னையே, உணர்த்துவதும் உனக்கு-யான் தெரியப்பட விண்ணப்பம் செய்வதும் உனக்கே, எனக்கு - எந் தனுக்கு, உறுதி - உறுதிப்பொருளினின்றும், வாடினேன் - விடுபட்டு மனந் தடுமாறினேன், [ஆனதால்] இங்கு வாழ்கிலேன் - இங்கு ஒருபோதும் வாழ நினைக்கிலேன், வருக என்று - வருவாய் வருவாயென்று, அருள் - கிருபை, புரியாய் - செய்வாயாக, எ - று.

(க - ரை.) யாவற்று ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டுத் திருப் பெருந்துறையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! உன்னை யன்றி வே றொரு பற்றில்லை, ஆனதால் இப்பூலோகத்தில் ஒருக்காலும் வாழ எண்ணங் கொண்டிலேன், ஆனது பற்றி நீ என்னை வா வா என்று அழைத்துக்கொள்ள வேண்டும், என்பது.

(வி - ரை.) பாடி - பாக்களால் புகழ்தல். ஊடுதல் - பிணங்குதல். உவத்தல் - விரும்புதல். உறுதி - உண்மை. (௩)

வல்லைவாளரக்கர்புரமெரித்தானே
மற்றுநான்பற்றிலேன்கண்டாய்

தில்லைவாழ்கூத்தாசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெல்லைமூவுலகுமுருவியன்றிருவர்
காணுநாளாதியீறின்மை
வல்லையாய்வளர்ந்தாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) வல்லை - சீக்கிரத்தில், வாள் – வாட்கையாகிய, அரக்கர் - அசுரராது, புரம் - திரிபுரங்களை, எரித்தானே - நீறாகச்செய்தவனே ! நான் - யான், மற்று பற்று இலேன் - வேறொரு பற்றுமுடையவனல்லேன், தில்லை - திருத்தில்லையில், வாழ் - வாழாநின்ற, கூத்தா - திருநடனக்கொழுந்தே ! சிவ புரத்து அரசே - சிவபுரத்துக்கு வேந்தே, திருப்பெருந்துறை - திருப்பெருந் துறையில், உறை - வாழ்கின்ற, சிவனே - சிவபெருமானே ! மூவுலகும் - மூன்றுலகத்து, எல்லை – வரம்பை, உருவி–கடந்து, அன்று - அக்காலத்தில், இருவர் - பிரம விட்டுணுக்கள், காணும் நாள் - பார்க்கப்புகுந்தினத்தில், ஆதி ஈறு இன்மை - முதலிறுதியின்மையில், வல்லையாய்-மகா சமர்த்தனாகி, வளர்ந் தாய் - வளர்ந்தவனே ! வாழ்கிலேன் - இவ்வுலகில் வாழ நினைக்கேன், வருக என்று - வருவாய் என்று, அருள் புரியாய் – கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைக் கரசே ! எனக்கு உன்னை யல்லால் வேறொரு பற்றில்லை, அந்தோ ! இப்பூலோகத்தில் வாழ எண்ணமுடையவ னல்லேன், ஆனதால் என்னை நீ வாவா என்று அழைத்துக்கொள்ளவேண்டும், என்பது.

(வி - ரை.) வல்லை - விரைவு. [சீக்கிரம்] எல்லை - வரம்பு. மூவுலகு - மூன்றுலகு. ஆதி - முதல். ஈறு - கடை. அரக்கராவார்-வித்துன்மாலி, தாரு காட்சன், கமலாட்சன் முதலிய திரிபுராதியர்கள். (ச)

பண்ணினேர்மொழியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திண்ணமேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யெண்ணமேயுடல்வாய்மூக்கொடுசெவிகண்
ணென்றிவைநின்கணேவைத்து
மண்ணின்மேலடியேன்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) பண்ணின் - பண்களினும், ஏர் அழகுவாய்ந்த, மொழியாள்- சொற்களை யுடையவளாகிய உமாதேவியின், பங்க - பங்கவனே ! நீ அல்லால்-

உன்னை அல்லாமல், நான் - யான், மற்றுபற்று இலேன் - வேறொரு பற்றுடையே னல்லேன், திண்ணமே ஆண்டாய் - உண்மையாகவே ஆண்டருளினை, சிவபுரத்து அரசே - சிவபுரத்துக்கு வேந்தனே! திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! எண்ணம் - எனது நினைப்பு, உடல் - திரேகம், வாய் - வாய், மூக்கொடு - நாசியோடு, செவிகண் - செவிகண்கள், என்ற இவை - என்று சொல்லப்பட்ட இவைகளை, நின்கண் ஏ வைத்து - உன்னிடத்தே வைத்து, மண்ணின்மேல் - பூலோகத்தின் மீது, அடியேன் - உன் ஊழியனாகிய யான், வாழ்கிலேன் - வாழ நினைக்கேன், [ஆகையால்] வருக என்று - வருவாய் என்று, அருள்புரியாய் - அருள்செய்வாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! எனக்கோ உன்னை யன்றி வேறொரு பற்றில்லை, இவ்வுலகின்கண் வாழ நினைக்கேன், ஆனதால், நீ என்னை வாவென் றழைத்துக்கொள்ளவேண்டும், என்பது.

(வி - ரை.) பண் - பா. திண்ணம் - உண்மை, [சத்தியம்.] எண்ணம் - நினைப்பு. வாழ்கிலேன் - உயிர் வைத்து வாழப்பொருந்தேன் என்றது. என்ற இவை என்பது என்றிவை என ஈறு தொகுத்தலாயிற்று. (௫)

பஞ்சின்மெல்லடியாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செஞ்சவேயாண்டாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யஞ்சினேனாயேனாண்டுநீயளித்த
வருளினைமருளினான்மறந்த
வஞ்சனேனிங்குவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) பஞ்சின் - பஞ்சினும், மெல் - மிருதுவாகிய, அடியாள் - பாதங்களை யுடையவளாகிய உமாதேவியின், பங்க - பங்கனே, நீ அல்லால் - உன்னை யல்லாமல், நான் - யான், மற்று பற்று இலேன் - வேறொரு பற்று உடையேனல்லேன், செஞ்சவே - மிக்க சுகமாகவே, ஆண்டாய் - என்னை ஆட்கொண்டருளினை, சிவபுரத்து அரசே - சிவபுரத்துக்குத் தலைவனே, திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! நாயேன் - [நாயினுங் கடையனாகிய] அடியேன், அஞ்சினேன் - பயந்தேன், நீ ஆண்டு - நீ என்னை ஆண்டுகொண்டருளின, அளித்த அருளினை - பரம கிருபையை, மருளினால் மறந்த - புத்தி மயக்கத்தால் மறந்த, வஞ்சனேன் - பொல்லா வஞ்சகனாகிய நான், இங்கு வாழ்கிலேன் - இவ்வுலகத்தில் வாழ நினைக்கேன், வருக என்று - வருவாய் என்று, அருள் புரியாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) பஞ்சினும் மிருதுவாகிய பாதங்களை யுடைய உமாதேவியின் பங்கனே! எனக்கோ உன்னையன்றி வேறொரு பற்றில்லை, ஆனதால் இப் பூலோகத்தில் வாழ எண்ணங்கொள்ளேன், என்னை நீ வாவென் றழைத்துக் கொள்ளவேண்டும், என்பது.

(வி - ரை) பஞ்சின் - பஞ்சுபோல எனினுமாம். அடியாள் என்றது இங்ஙனம் இரண்டு திருப்பாதங்களை யுடைய பார்வதியைக் குறித்து. அஞ்சுதல் - பயப்படுதல். மருள் - மயக்கம். (௬)

பருதிவாழொளியாய்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
திருவுயர்கோலச்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
கருணையேநோக்கிக்கசிந்துளமுருகிக்
கலந்துநான்வாழுமாறறியா
மருளனேனுலகில்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) பருதிவாழ் - சூரியனைப்போல் பிரகாசிக்கின்ற, ஒளியாய் - ஜோதியை யுடைய சிவபெருமானே! பாதமே - யாவராலுங் காணுகின்ற உன் திருவடி, அல்லால் - அன்றி, நான் - நாயினுங் கடையேனாகிய யான், மற்று - வேறொரு, பற்று - பற்றுதலை, இலேன் - உடையேனல்லேன், திரு - செல்வத்தால், உயர் - பெருமை பெற்ற, கோலம் - அழகாகிய, சிவபுரத்து அரசே - சிவலோக நாதனே, திருப்பெருந்துறை - திருப்பெருந்துறை யென்னும் க்ஷேத்திரத்தின்கண்ணே, உறை - எழுந்தருளி வாழ்பவனாகிய, சிவனே- [யாவரிடத்தும் காருண்யமுள்ள] சிவபெருமானே! கருணையே நோக்கி - உன் பெருங் குணத்தையே நோக்கி, உள்ளம் - ஏழையேன் மனம், கசிந்து உருகி - கசிந்துருகி, கலந்து - [உன் திருவோலக்கத்தில்] கூடி, வாழும் - பேரின்பக் கடலில் மூழ்கி வாழும், ஆறு - விதத்தை, அறியா-தெரிந்துகொள்ளாத, மருளனேன் - பெரும் மருட்சியை யுடையேனாகிய நான், உலகில் - பூலோகத்தில், வாழ்கிலேன் - ஒருபோதும் வாழ இச்சிக்கேன், [ஆனதால்] வருக என்று - வருவாயென்று, அருள் புரியாய் - திருவாக்களிப்பாயாக, எ-று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! அடியேனாகிய எனக்கு உன் திருப்பாதமன்றி வேறோரு பற்றில்லை, உன்னுடைய பெருங்கருணையையே நினைந்து மனங்கசிந் துருகி உனைக்கலந்து உனதிட்டமே யிருந்து வாழும் வழியை யறியாத மருளனாகிய யான் இப்பூலோகத்தில் வாழ நினைக்கேன், [ஆகையால்] என்னை நீ வருவாயென்று அன்பு கூர்ந்து அழைத்துக்கொண்டருள வேண்டும், என்பது.

(வி - ரை.) பரு - சூரியன் எனினும் ஆம். திரு - செல்வம். கோலம் - அழகு. உளம் - மனம். மருளல் - மயக்கல். (எ)

பந்தணைவிரலாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செந்தழல்போல்வாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
யந்தமிலமுதேயரும்பெரும்பொருளே
யாரமுதேயடியேனை
வந்துயவாண்டாய்வாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) பந்து அணை - பந்து பொருந்திய, விரலாள் - விரலினை யுடையவளாகிய உமாதேவியின், பங்க - பங்கனே ! நீ அல்லால் - உன்னை யன்றி, நான் - யான், மற்று - வேறொரு, பற்று - ஆசை இலேன் - உடையவனல்லேன், செந்தழல்போல்வாய் - செம்மையாகிய அக்கினியைப்போல்பவனே ! சிவபுரத்து அரசே - சிவலோக நாதனே ! திருப்பெருந்துறை உறை சிவனே - திருப்பெருந்துறையி லெழுந்தருளி யிருப்பவனே ! அந்தம் இல் - முடிவில்லாத, அமுதே - தேவாமிர்தமே ! அரு பெரு பொருளே - அருமை தங்கிய பேரம்பலப் பொருளே ! ஆர் அமுதே - அரிய அமிர்தமே ! வந்து - நீயே[குருமூர்த்தமாய்கயிலையைவிட்டெழுந்தருளி என்முன்]வந்து, அடியேனை - அடிமையை, ஆண்டாய் - [யாவரு மறிய] ஆண்டருளினை, [ஆனதால்] வாழ்கிலேன் - இங்கு ஒருக்காலும் வாழ மனமுடையவனல்லேன், வருக என்று - வருவாய் என்று, அருள் புரியாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) பந்து பொருந்திய விரலினை யுடையவளாகிய உமாதேவியின் பங்கனே ! எனக்கு உன்னையன்றி வேறொரு ஆசையில்லை, [ஆனதால்] இவ்வுலகில் வாழ எண்ணமுடையவ னல்லேன், நீ என்னை வாவென் றழைத்துக்கொள்ளவேண்டும், என்பது.

(வி - ரை.) பந்து - திரட்சி எனினுமாம். அந்தம் - முடிவு. உய்ய என்பது உய என நின்றது, இது இடைக்குறை. (அ)

பாவநாசாவுன்பாதமேயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
தேவர்தந்தேவேசிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
மூவுலகுருவவிருவர்கீழ்மேலாய்
முழங்கழலாய்நிமிர்ந்தானே

மாவுரியானேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) பாவ நாசா - [பாபநாசவென்னும் க்ஷேத்திரத்தி லெழுந்தருளி யாவருடைய பாபங்களைப் போக்க வல்லவனுகிய] பாபநாசனே! நான் - அடியேனுகிய யான், மற்று பற்று இலேன் - வேறொருபற்றும் உடையே னல்லேன், தேவர் தேவே - எல்லாத் தேவர்க்கும் தேவனு யிருப்பவனே! சிவ புரத்து அரசே - சிவலோகத்துக்கு வேந்தனே! திருப்பெரும் துறை உறை சிவனே - திருப்பெருந் துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! மூவுலகு உருவ - மூன்றுலகங்களும் ஊடுருவும்படி, இருவர் - பிரமவிட்டுணுக்களாகிய இருவரும், கீழ் மேல் ஆ - பூமியும் ஆகாயமுமாக, முழங்கு - கொழுந்துவிட்டு ஒலிக்கின்ற, அழல் ஆய் - அக்கினி உருவாகி, நிமிர்ந்தோனே - வளர்ந்தவனே! மா உரியானே-யானைத்தோலைப் போர்வையாக உடையவனே! வாழ்கிலேன் - இப்பூவுலகின்கண் வாழ மனமுடையவ னல்லேன், [ஆகையால்] வருக என்று வாவென்று, அருள் புரியாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) பாபநாசத்தி லெழுந்தருளிய பெம்மானே! அடியேனுக்கு உன்னை யன்றி வேறொருபற்றில்லை, இவ்வுலகிலும் வாழ எண்ணமுடையவ னல்லேன், [ஆதலால்] என்னை நீ வாவென்று அழைத்துக்கொள்ளவேண்டும், என்பது.

(வி - ரை.) பாவநாசன் - யாவருடைய பாவங்களை நசிக்கப்பண்ணு வோன். கீழ்மேல் என்றது பூமி ஆகாயம் எனினுமாம். மா - புலி. யானை என்பது துட்டனுகிய கயாசுரனென்னும் அசுரன். (௬)

பழுதிறொல்புகழாள்பங்கநீயல்லாற்
பற்றுநான்மற்றிலேன்கண்டாய்
செழுமதியணிந்தாய்சிவபுரத்தரசே
திருப்பெருந்துறையுறைசிவனே
தொழுவனோபிறரைத்துதிப்பனோவெனக்கோர்
துணையெனநினைவனோசொல்லாய்
மழவிடையானேவாழ்கிலேன்கண்டாய்
வருகவென்றருள்புரியாயே.

(ப - ரை.) பழுது இல் - யாதொருகுற்ற மில்லாத, தொல் - பழமையாகிய, புகழாள் - யாவராலும் புகழப்பெற்றவளாகிய உமாதேவியின், பங்க - பங்கனே! நீ அல்லால் - உன்னை யன்றி, நான் - யான், மற்று பற்று இலேன் - வேறொரு பற்றுமுடையனல்லேன், செழுமதி அணிந்தாய் - செழுமை தங்கிய மூன்றாம்பிறைச் சந்திரனை யணிந்தவனே! சிவபுரத்து அரசே - சிவபுரத்துக்கு வேந்தனே! திருப்பெருந்துறை உறை சிவனே! திருப்பெருந்

துறையி லெழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே! பிறரை - அன்னியரை, தொழுவனே - வணங்குவேனே, துதிப்பனே - துதிப்பேனே, எனக்கு - அடியேனுக்கு, ஓர் துணையென - ஒற்ற துணையென்று, நினைவனே - என் மனதில் நினைப்பேனே, சொல்லாய் - சற்றுச் சொல்வாயாக, மழவு விடையானே- இளமையாகிய இடப வாகனத்தை யுடையவனே! வாழ்கிலேன் - இங்ஙனம் ஒருபோதும் வாழத்துணியேன், [ஆகையால்] வருக என்று - வருவாயென்று, அருள் புரியாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! எனக்கு உன்னையன்றி உற்றதுணை வேறு இல்லை, மேலும் இவ்வுலகில் வாழவும் பொருந்தேன் [ஆனதால்] என்னை நீ வாவென் றழைத்துக்கொள்ளவேண்டும், என்பது.

(வி - ரை.) பழுது - குற்றம். மதி - சந்திரன். அது இங்கு பிறைக் காயிற்று. மழவு - இளமை. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம.

# அருட்பத்து.

## மகாமாயாசுத்தி.

[மகாமாயாசுத்தி என்பது மாயையைச் சுத்திபண்ணுதல்.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

சோதியேசுடரேசூழொளிவிளக்கே
சுரிகுழற்பணைமுலைமடந்தை
பாதியேபரனேபால்கொள்வெண்ணீற்றாய்
பங்கயத்தயனுமாலறியா
நீதியேசெல்வத்திருப்பெருந்துறையி
னிறைமலர்க்குருந்தமேவியசீ
ராதியேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) சோதியே - சோதியே! சுடரே - சுடரே! சூழ் ஒளி - சூழ்ந்த ஒளியை யுடைய, விளக்கே - தீபமே! சுரி குழல் - சுருண்ட கூந்தலையும், பணை முலை - பருத்த தனங்களையும் உடைய, மடந்தை - உமாதேவியின், பாதியே — அர்த்தநாரீசனே! பரனே - யாவர்க்கும் மேலானவனே! பால் கொள் - பாலினது நிறத்தைக்கொண்ட, வெள் நீற்றாய் — திருவெண்ணீற்றை யுடையவனே! பங்கயத்து அயனும் - தாமரைமலரை ஆசனமாக வுடைய பிரமனும், மாலும் - திருமாலும், அறியா - அறியவொண்ணாத, நீதியே - மாநீதிமானே! செல்வம் - செல்வப்பெருக்குள்ள, திருப்பெருந்துறையில் - திருப்பெருந்துறை என்னும் திவ்யக்ஷேத்திரத்தின்கண், நிறை மலர் - நிறைந்த மலர்களை யுடைய, குருந்தம் - குருந்த மரத்தடியின் கண், மேவிய - பொருந்திய, சீர் - சிறப்பமைந்த, ஆதியே - முதல்வனே! அடியேன் - அடியனேனை, ஆதரித்து அழைத்தால் - மிக்க அன்பு செய்து அழைத்தால், அதெந்துவே என்று - அஞ்சற்கவென்று, அருளாய் - திருவாய்மலர்ந் தருள்செய்வாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! தொண்டனாகிய உன் அடியேன் விரும்பி அழைத்தால் யாதொன்றுக்கும் பயப்படாதே என்று அருள் செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) சுரிகுழல் - சுருண்ட கூந்தல். பணைத்தல் - பருத்தல். அயனும் என்ற உம்மையை மாலுக்கும் கூட்டுக. அதெந்து - யதெந்து என்பதன் மருவு. இது அஞ்சாதே யென்னும் பொருளது. என்ன - யாரென்றுரைப்பினும் அமையும். (க)

நிருத்தனேநிமலாநீற்றனேநெற்றிக்
கண்ணனேவிண்ணுளோர்பிரானே
யொருத்தனேயுன்னையோலமிட்டலறி
யுலகெலாந்தேடியுங்காணேன்
றிருத்தமாம்பொய்கைத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருத்தனேயடியேனுதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) நிருத்தனே - திருக்கூத்துப்பிரானே! நிமலா - நிர்மலனே! நீற்றனே - திருவெண்ணீற்றை யுடையவனே! நெற்றிக் கண்ணனே - நெற்றிக் கண்ணை யுடையவனே! விண்ணுளோர் பிரானே - தேவர் பிரானே! ஒருத்தனே - நிகரற்றவனே! உன்னை - உந்தனுக்கு, ஓலமிட்டு-முறையிட்டு, அலறி - அலறுநின்று, உலகு எல்லாம் - எல்லா வுலகங்களும், தேடியும் - காணத்தேடியும், காணேன் - பார்த்தறிகிலேன், திருத்தம் ஆம் பொய்கை - மகாசுத்தமாகிய தடாகத்தை யுடைய, திருப்பெருந்துறையில் - திருப்பெருந்துறை

யின் கண், செழுமலர் - செழுமைத்தங்கிய மலர்களை யுடைய, குருந்தம் - [திருக்] குருந்தமரத்தின், மேவிய - அதனடியில் பொருந்திய, சீர் - சிறப்பமைந்த, அருத்தனே - செல்வனே, அடியேன் - தொண்டனாகிய யான், ஆதரித்து அழைத்தால்-மிக்க அன்புடன் அழைத்தால், அஞ்சேல் அதெந்துவே என்று-பயப்படாதே என்று, அருளாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) திருப்பெருந் துறையின்கண் இருக்கும் குருந்தமரத்தி னடியின்கீ ழெழுந்தருளிய சிவபெருமானே ! அடியேன் விருப்புற்று அழைத்தால் அஞ்சாதே என்று கிருபை செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) நிருத்தம் - கூத்து. நிமலன் - மலரகிதன். பொய்கை - தாமரைத் தடாகம். அருத்தம் - செல்வம். (உ)

எங்கணாயகனேயென்னுயிர்த்தலைவா
வேலவார்குழலிமாரிருவர்
தங்கணாயகனே தக்கநற்காமன்
றனதுடறழலெழவிழித்த
செங்கணாயகனே திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரங்கணாவடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) எங்கள் - எங்களுடைய, நாயகனே - நாதனே ! என் - என்னுடைய, உயிர் தலைவனே - ஆன்ம நாயகனே ! ஏலம் - மயிர்ச்சாந்தணிந்த, வார் - நீண்ட, குழலிமார் - கூந்தலை யுடையவராகிய, இருவர் தங்கள் - இரண்டு தேவிமார்க்கும், நாயகனே - நாதனே ! தக்க - தகுதியாகிய, நல் - அழகமைந்த, காமன் - மன்மதன், தனது-தன்னுடைய, உடல் - தேகம், நீறு எழ - துகளா யெழும்பும்படி, விழித்த - திறந்த, செம் கண் - செம்மையாகிய நெருப்புக்கண்ணை யுடைய, நாயகனே - தலைவனே ! திருப்பெருந்துறையில் - திருப்பெருந் துறையின்கண், செழுமலர் - செழுமையாகிய மலர்களை யுடைய, குருந்தம் - குருந்தமரத்தை, மேவிய - அடைந்த, சீர் - சிறப்புப் பொருந்திய, அம் கணா - கிருபையுடை கண்ணனே ! அடியேன் - அடியனேன், ஆதரித்து - அன்புகூர்ந்து, அழைத்தால் - கூப்பிட்டால், அதெந்துவே என்று - அஞ்சாதே என்று, அருளாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) ஒருதேவியை வாமபாகத்திலும், மற்றொருதேவியை சடாபாரத்தில் வைத்தவனும், திருப்பெருந் துறையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளிய இறைவனே ! உன் தொண்டனாகிய அடியேன் அன்பின் மிகுதியால் வருந்தி யழைத்தால், அஞ்சாதே என்று அருள் செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) நாதன் - தலைவன். இருவர் - கங்கையும், மலைமங்கையும். [அதாவது] கங்காதேவியையும் பரமேஸ்வரியையும் குறிப்பிட்டது. நெருப்புக்கண்ணுதலால் செங்கண் என்றார். (௩)

கமலநான்முகனுங்கார்முகினிறத்துக்
  கண்ணனுநண்ணுதற்கரிய
விமலனேயெமக்குவெளிப்படாயென்ன
  வியன்றழல்வெளிப்பட்டவெந்தாய்
திமிலநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
  செழுமலர்க்குருந்தமேவியசீ
ரமலனேயடியேனாதரித்தழைத்தா
  லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) கமலம் - தாமரை மலரை ஆசனமாகக்கொண்டு வாழ்கின்ற, நான்முகனும் - சதுர்முகப் பிரமனும், கார்முகில் நிறத்து - கார்கால மேக நிறத்தை யுடைய, கண்ணனும் - பரமசிவனைத் திருக்கண்ணால் பூசித்துச் சக்ரப்படையைக் கரத்தில் தாங்கியிராநின்ற திருமாலும், நண்ணுதற்கு - உன்னி அடைவதற்கு, அரிய - அரிதாகிய, விமலனே - மலரகிதனே! எமக்கு - எம் பொருட்டு, வெளிப்பட்டாய் - வெளிப்பட்டாயாக என்று, என்ன - என்று வேண்ட, வியன் தழல் - பெரிய அக்கினி உருவாகி, வெளிப்பட்ட - [பிரம விட்டுணுக்கள் காண] வெளிப்பட்ட, எந்தாய் - எனது தந்தையே! திமிலம் - பேரொலியை யுடைய, நான்மறை சேர் - நான்கு வேதங்களும் கூடிய, திருப்பெருந்துறையில் - திருப்பெருந்துறையின்கண், செழுமலர் - மிகச் செழுமையாகிய மலர்களை யுடைய, குருந்தம் - குருந்தமரத்தினடியில், மேவிய - அமர்ந்த, சீர் - சிறப்பமைந்த, அமலனே - மலமுத்தனே, அடியேன் - அடியனேன், ஆதரித்து - அன்புகொண்டு, அழைத்தால் - கூப்பிட்டால், அதெந்துவே - பயப்படதே, என்று - எனவே, அருளாய் - கிருபைசெய்வாயாக, எ - று.

(க - ரை.) பிரம விட்டுணுவும் காணுதற் கரிதாகியவனும், திருப்பெருந்துறையி லெழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபெருமானே! நான் உன்னோடு கூடி உய்யும்பொருட்டு விரும்பி அழைத்தால் அஞ்சாதேயென்று கிருபை செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) கமலம் - தாமரை, கார் முகில் என்றது நீலமேகத்தையொற்ற மேகம். தழல் - அக்கினி. விமலன் என்பதில் வி எதிர்மறையாய் இன்மைப்பொருள் தரும் உபசருக்கம். (௪)

துடிகொணேரிடையாள்சுரிகுழன்மடந்தை
  துணைமுலைக்கண்கடோய்சுவடு

பொடிகொள்வான்றழலிற்புள்ளிபோலிரண்டு
 பொங்கொளிதங்குமார்பின்னே
செடிகொள்வான்பொழில்சூழ்திருப்பெருந்துறையிற்
 செழுமலர்க்குருந்தமேவியசீ
ரடிகளேயடியேனாதரித்தழைத்தா
 லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) துடிகொள் - உடுக்கையின் உருவமைந்த, நேர் இடையாள் - நேர்மை தங்கிய இடையை யுடையவளாகிய, சுரிகுழல் - சுருண்ட கூந்தலை யுடைய, மடந்தை - உமாதேவியின், துணை - இரண்டாகிய, முலைக்கண்கள் - ஸ்தனங்கள், தோய் - அழுந்தின, சுவடு - தழும்புகள், பொடிகொள் - சாம்பரைக் கொண்ட, வான் தழலில் - பெரிய அக்கினியின்மீதுள்ள, இரண்டு புள்ளிபோல் - இரண்டு பொறிகள்போல, பொங்கு - பிரகாசிக்கின்ற, ஒளி தங்கும் — ஜொலிக்கின்ற, மார்பினனே - அழகிய மார்பினை யுடையவனே! செடிகொள்வான் பொழில்சூழ் - பிரகாசமும் மேன்பாட்டையையு முடைய சோலைகள் சூழப்பட்ட, திருப்பெருந்துறையில் - திருப்பெருந் துறையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண், செழுமலர் - செழுமை தங்கிய மலர்களை யுடைய, குருந்தம் மேவிய - குருந்தமரத்தடியி லெழுந்தருளிய, சீர் - சிறப்புடைய, அடிகளே - திருப்பாதங்களை யுடைய சிவபிரானே! அடியேன் - உனக்குத் தொண்டுபூண் டொழுகாநின்ற யான், ஆதரித்து - அன்பு செய்து, அழைத்தால் - கூவிக் கூப்பிட்டால், அதெந்துவே - பயப்படாதே, என்று - என்று சொல்லி, அருளாய்-கிருபைசெய்வாயாக, எ — று.

(க - ரை.) சுருண்டகூந்தலையும் சிறந்த இடையையு முடைய உமாதேவியை வாமபாகத்தில் வைத்திருக்கும் சிவபெருமானே! தொண்டனாகிய யான் அன்புகூர்ந்து உன்னை அழைத்தால், பயப்படாதே என்று கிருபை செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) துடி - உடுக்கை. சுரித்தல் - சுருண்டல். துணை - இரண்டு. மார்பினனே - இங்கு பரமசிவனைக் குறித்து. செடி - இங்ஙனம் சோலையைக் குறித்து. சீர் அடிகள் - சிறப்பு வாய்ந்த திருவடிகளை யுடைய சிவபெருமானைக் குறித்து. (௫)

துப்பனேதூயாய்தூயவெண்ணீறு
 துதைந்தெழுதுளங்கொளிவயிரத்
தொப்பனேயுன்னையுள்குவார்மனத்தி
 னுறுசுவையளிக்குமாரமுதே
செப்பமாமறைசேர்திருப்பெருந்துறையிற்
 செழுமலர்க்குருந்தமேவியசீ

ரப்பனேயடியேனுதரித்தழைத்தா
லஞ்சலென்றருளாயே.

(ப - ரை.) துய்யனே - பவளநிறம்போல்பவனே! தூயாய் - பரிசுத்த மானவனே! தூய வெள் நீறு - பரிசுத்தமாகிய திருவெண்ணீறு, படிந்து மேற்படிந்து, எழு - தோன்றுகின்ற, துளங்கு - பிரகாசமாகிய, ஒளி - ஜோதியையுடைய, வயிரத்து - வயிரத்துக்கு, ஒப்பனே-சமானமானவனே! உன்னை உள்குவார் - அன்பின் மிகுதியால் நினைப்பவரது, மனத்தில் - மனதினிடத்தில், உறு - மிக்க, சுவை - உருசியை, அளிக்கும் - கொடுக்கின்ற, ஆர் - அமுதே - அருமையாகிய அமிர்தமே, செப்பம் ஆம் - செப்பமாகிய, மறைசேர் - நான்கு வேதங்களும் சேர்ந்த, திருப்பெருந்துறையில் - திருப்பெருந்துறை யென்னும் க்ஷேத்திரத்தின்கண், செழுமலர் - செழுமையாகிய புட்பங்களையுடைய, குருந்தம் மேவிய - குருந்தமரத்தின்கணெழுந்தருளிய, சீர் - சிறப்பமைந்த, அப்பனே-பெருமையோடு ஆதரித்த எனது தந்தையே, அடியேன் அடிமை, ஆதரித்து அழைத்தால், அன்புசெய்து அழைத்தால், அஞ்சேல் - அஞ்சேல், என்று - என்றுசொல்லி, அருளாய் - அருள்செய்வாயாக, எ - று.

(க - ரை.) திருவெண்ணீற்றைத் தரித்துத் திருப்பெருந்துறையின்கண் இருக்கும் குருந்த மரத்தினடியிலெழுந்தருளிய சிவபெருமானே! அடியேன் உன்னை விரும்பி அழைத்தால் அஞ்சாதே யென்று அருள்செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) துப்பு - அறிவெனினுமாம். துணையென்றலும் ஒன்று. உள்குதல் - நினைத்தல். (௬)

மெய்யனேவிகிர்தாமேருவேவில்லா
மேவலர்புரங்கண்மூன்றெரித்த
கையனேகாலாற்காலனைக்காய்ந்த
கடுந்தழற்பிழம்பன்னமேனிச்
செய்யனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரையனேயடியேனுதரித்தழைத்தா
லஞ்சலென்றருளாயே.

(ப - ரை.) மெய்யனே - தொண்டர்களிடத்து மெய்ப்பொருளாயிருப்பவனே! விகிர்தா - அஞ்ஞானிகளிடத்து பொய்யா யிருப்பவனே! மேருவே - மேருமலையையே, வில் ஆ - வில்லாகக்கொண்டு, மேவலர் - பகைவர்களாகிய அசுரர்களது, புரங்கள் மூன்று - முப்புரத்தையும், எரித்து - சிறித்து எரித்து சாம்பராக்கின, கையனே - இருகையை யுடையவனே! காலால் - திருப்பாதத்தால், காலனை யமனைக்கோபித்து, கடுதழல் பிழம்பு அன்னமேனி செய்யனே-

வேகமாகிய தீத்திரள்போன்ற திருமேனியில் செந்நிறமமைந்தவனே ! செல்வம் - பலவித செல்வங்களும் பொருந்திய, திருப்பெருந்துறையில் - திருப்பெருந்துறையின்கண், செழுமலர் - செழுமையாகிய புட்பங்களை யுடைய, குருந்தம் மேவிய - குருந்தமரத் தடியில் எழுந்தருளிய, சீர் - பெருமைதங்கிய, ஐயனே - கருணைக்கடவுளே ! அடியேன் ஆதரித்து அழைத்தால் - எழையாகிய யான் அன்பு செய்து அழைத்தால், அதெந்துவே - அஞ்சற்கவென்று, அருளாய் - கிருபைசெய்வாயாக, எ - று.

(க - ரை.) தொண்டர்களிடத்து என்றும் அன்புகூர்ந் திருப்பவனும், மேருமலையை வில்லாகக் கொண்டு கரத்திற் றாங்கி பகைவர்களது முப்புரத்தைச் சிறித்தெறித்தவனும், திருப்பெருந் துறையின்கண் குருந்தமரத்தடியின் கீழ் எழுந்தருளி யிருக்கும் ஆகிய சிவபெருமானே ! அடியேன் அன்புகூர்ந்து அழைத்தால் அஞ்சாதே என்று அருள்செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) விகிர்தம் - பொய். மேவலர் - பகைஞர். காய்தல் - கோபித்தல் சீர் - பெருமை. (எ)

முத்தனேமுதல்வாமுக்கணாமுனிவா
மொட்டறாமலர்ப்பறித்திறைஞ்சிப்
பத்தியாய்நினைந்துபரவுவார்தமக்குப்
பரகதிகொடுத்தருள்செய்யுஞ்
சித்தனேசெல்வத்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரத்தனேயடியேனாதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) முத்தனே - [இயற்கனவே மலபந்த பாசத்தைக் களைந்து முத்திபேற்றை அளிக்கும்] முத்தையனே ! முதல்வா - [யாவருக்கும்] முதல்வனே ! முக்கணா - நெற்றிக்கண்ணொடு மூன்றுகண்களை யுடையவனே ! முனிவா - முனிவனே ! மொட்டு அறு - முகிழ்த்தன்மை நீங்காத, மலர் - புட்பங்களை, பறித்து இறைஞ்சி - பறித்து அருச்சித்துத் தொழுது, பத்தியாய் - பக்தியாய், நினைந்து - உன் பாதத்தை நினைந்து, பரவுவார் தமக்கு - நல்வழிபடுவோர்க்கு, பரகதி - முக்தியை, கொடுத்து - தந்து, அருள் செய்யும் - கிருபை செய்கின்ற, சித்தனே - சித்தனே ! செல்வனே-பேரானந்தச்செல்வத்தையுடையவனே ! திருப்பெருந் துறையில்-திருப்பெருந் துறையின்கண், செழு-செழுமையாகிய, மலர் - புட்பங்களை யுடைய, குருந்தம் - குருந்தமரத்தி னிழலில், மேவிய - குருமூர்த்தமாய் எழுந்தருளிய, சீர் - சிறப்பமைந்த, அத்தனே-எமது தந்தையே! அடியேன் - உன் தொண்டனாகிய நான், ஆதரித்து - அன்பு செய்து, அழைத்தால் - அழைத்தால், அதெந்துவே - அஞ்சாதே, என்று - என்றுசொல்லி, அருளாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) மூன்று கண்களை யுடைய முதல்வனும், சிறப்புவாய்ந்த திருப்பெருந் துறையின்கண் குருந்தமரத்தி னடியில் குருமூர்த்தமாய் எழுந்தருளி யிருக்கும் சிவபெருமானே! அடியேனாகிய யான் அன்புகூர்ந்து அழைத்தால், பயப்படாதே என்று அருள் செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) முத்தன் - மலரகிதன், பாசரகிதன். பரவுதல் - வழிபடுதல். செல்வம் - பொக்கிஷம், பண்டாரம், பொருள். அத்தன் - தந்தை. ()

மருளனேன்மனத்தைமயக்கறநோக்கி
மறுமையோடிம்மையுங்கெடுத்த
பொருளனேபுனிதாபொங்குவாளரவங்
கங்கைநீர்தங்குசெஞ்சடையாய்
தெருளுநான்மறைசேர்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரருளனேயடியேனுதரித்தழைத்தா
லதெந்துவேயென்றருளாயே.

(ப - ரை.) மருளனேன் - மருட்சியை யுடையவனாகிய, மனத்தை - என் மனதை, மயக்கு அற - ஆசாபாசம் என்னும் மயக்கம் அற்று ஒழிய, நோக்கி - பார்த்து, மறுமையோடு இன்மையும் - மறுமையுடனே இன்மையையும், கெடுத்த - சேதித்தருளின, பொருளனே - பெருஞ்செல்வ முடையவனே! புனிதா - பரிசுத்தனே! பொங்கு - பொங்கி சீறுகின்ற, வாள் - பிரகாசத்தையுடைய, அரவம் - சர்ப்பமும், கங்கைநீர் - கங்காதேவியும், தங்கு - பொருந்திய, செம் சடையாய் - செஞ்சடையை யுடைய சிவபெருமானே! தெருளும் - தெளிந்த, நான்மறை - நான்கு வேதங்களும், சேர் - சேர்ந்த, திருப்பெருந்துறையில் - திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண், செழு - நிறைந்த, மலர் - மலர்களை யுடைய, குருந்தம் - குருந்தமரத்தி னிழலில், மேவிய - எழுந்தருளிய, சீர் - சிறப்புவாய்ந்த, அருளனே - அருளுடையவனே! அடியேன் - அடிமைத்தொண்டனாகிய யான், ஆதரித்து - அன்பு செய்து, அழைத்தால் - அபயமென்று அழைத்தால், அதெந்துவே - பயப்படாதே, என்று - எனச் சொல்லி, அருளாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) மருமையோடு இம்மையும் சேதித்தவனும், திருப்பெருந்துறையின் கண் குருந்தமரத்தி னிழலில் குருமூர்த்தமாய் எழுந்திருப்பவனுமாகிய சிவபெருமானே! மருட்சியை யுடைய யான் உன்னை விரும்பி யழைத்தால் அஞ்சாதே என்று அபைய வாக்கு தரவேண்டும், என்பது.

(வி - ரை.) மருளன் - மருட்சி யுடையவன். அறத்தல் - ஒழுத்தல். கங்கைநீர் - பரமசிவன் சடையில் தங்கியிருக்கும் கங்காதேவியைக் குறித்து.

மறுமை - மறுபிறப்பு. இம்மை - இப்பிறப்பு. பொருளனே என்றது - அழியாப்பொருளை யுடையவனாகிய சிவபெருமானைக் குறித்து. (கூ)

திருந்துவார்பொழிற்சூழ்திருப்பெருந்துறையிற்
செழுமலர்க்குருந்தமேவியசீ
ரிருந்தவாறெண்ணியேசறுநினைந்திட்
டென்னுடையெம்பிரானென்றென்
றருந்தவாநினைந்தேயாதரித்தழைத்தா
லலைகடலதனுளேநின்று
பொருந்தவாகயிலைபுகுநெறியிதுகாண்
போதராயென்றருளாயே.

(ப - ரை.) திருந்து - மிகு திருத்தமாகிய, வார் - நீண்ட, பொழில்சூழ் - சோலை அடர்ந்த, திருப்பெருந் துறையில் - திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண், செழுமலர்-செழுமையாகிய புட்பங்களை யுடைய, குருந்தம் - குருந்தமரத்தி னிழலில், மேவிய - எழுந்தருளிய, சீர் - சிறப்போடு கூடி, இருந்த ஆறு - இருந்த விதத்தை, எண்ணி - உன்னி, ஏசறு - ஏசற்று, நினைந்திட்டு - நினைந்து, என்னுடை எம்பிரான் - என்னுடைய ஆத்ம தலைவனாகிய சிவபிரானே! என்று என்று - என்று பலகால் வாயால் சொல்லி, அருந்து - அநுபவிக்கும், அவா - அவாவினால், நினைந்து - மனமுருகக் கருதி, ஆதரித்து - அன்பு கூர்ந்து, அழைத்தால் - கூப்பிட்டால், அலைகடல் - அலைகளை வீசாநின்ற கடலுக்கு, உள் ஏ நின்று - அதனுள் ளடங்கி பூலோகத்தினின்று, பொருந்தவா-என்னைச் சேர வருவாயாக, கயிலை - நீ எழுந்தருளி யிருக்கும் கயிலாயத்தை, புகும் - சேரும்படியாகிய, நெறி இது - வழி இதுதான், போதராய் என்று - சீக்கிரம் வருவாயென்று, அருளாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) இறைவனே! நீ திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் குருந்தமரத்தி னடியில் குருமூர்த்தமாய் இருந்த வைபோகத்தை யெண்ணி, எம்பெருமானே என்று அழைத்தால், பிறவிக்கடலினின்று வெளிவந்து கயிலையை யடையும் வழியிதுவே, நீ வாராய் என்று அருள்செய்ய வேண்டும், என்பது.

(வி - ரை.) திருந்தல் - செப்பமாதல், அருந்தவா - அருமையாகிய தவவேட முடையவனே எனினும். ஆதரித்தல் - அன்பு செய்தல். நெறி - நல்வழி. (கo)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருக்கழுக்குன்றப்பதிகம்.

## சற்குருதரிசனம்.

[சற்குரு தரிசனம் என்பது பசுத்துவங் கெட்டவிடம்.]

திருச்சிற்றம்பலம்.

### ஆசிரியவிருத்தம்.

பிணக்கிலாதப்பெருந் துறைப்பெரு
மானுன்னுமங்கள்பேசுவார்க்
கிணக்கிலாததோரின்பமேவருந்
துன்பமேதுடைத்தெம்பிரா
னுணக்கிலாததோர்வித்துமேல்விளை
யாமலென்வினையொத்தபின்
கணக்கிலாதிருக்கோலநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) பிணக்கு இல்லாத - யாதொரு மாறுபாடில்லாத, பெருந்துறை - திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் குருமூர்த்தமாய் எழுந்தருளிய, பெருமான் - சிவபெருமானாகிய, உன் நாமங்கள் - தேவரீருடைய பல திருநாமங்களை, பேசுவார்க்கு - சொல்லுவோர்க்கு, இணக்கு இல்லாதது - உவமை யில்லாததாகிய, ஓர் - ஒப்பற்ற, இன்பமே - ஆநந்த சொரூபமே! வரும் - உண்டாகின்ற, துன்பம் - பாபக்கிருத்தியங்களை, துடைத்து - நீக்கி, எம்பிரான் - எம்பிரானே! உணக்கு-யாதொருகெடுதல், இல்லாதது-இல்லாததாகிய, ஓர் - ஒப்பற்ற, வித்து - பிறவி வித்தானது, மேல் விளையாமல் - இனிவிளையாமல், என் வினை-அடியேனுடைய இருவினைகள், ஒத்தபின்-தீர்ந்தபின், கணக்கு இல்லா - அளவில்லாத, திருக்கோலம் - உமாதேவியாரோடு உன் திருக்கோலத்தை, நீ - தேவரீர், கழுக்குன்றிலே வந்து-திருக்கழுக்குன்றிலே எழுந்தருளிவந்து, காட்டினாய்-தரிசனஞ்செய்யக்காட்டி யருளினாய், எ-று.

(க - ரை.) திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் குருமூர்த்தமாய் எழுந்தருளிய சிவபெருமானே! என் இருவினை தீர்ந்தபின்பு, திருக்கழுக்குன்றில் உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய், என்பது.

(வி - ரை.) பிணக்கு - மாறுபாடு. இணக்கு - ஒப்பு. உணக்கு - கெடுதி. வித்து - இங்கு பிறவி வித்து. கோலம் - காக்ஷி. (க)

பிட்டுநேர்படமண்சுமந்த
பெருந்துறைபெரும்பித்தனே
சட்டநேர்படவந்திலாத
சழக்கனேனுனைச்சார்ந்திலேன்
சிட்டனேசிவலோகனேசிறு
நாயினுங்கடையாயவெங்
கட்டனேனையுமாட்கொள்வான்வந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) பிட்டு நேர்பட - [மதுரை க்ஷேத்திரத்தில் வசிக்கா நின்ற வந்தி என்னும் கிழவியின்] பிட்டினைப்பெற, மண்சுமந்த - [வைகைக்கரையின் பெருக்கத்தைப் பங்குபடி அடைக்கும் பொருட்டுச் சிரசின்மீது] மண்ணைச் சுமந்த, பெருந்துறை - திருப்பெருந் துறையென்னும் திவ்விய க்ஷேத்திரத்தின்கண் குருந்தமரத்தினடியி லெழுந்தருளிய, பெரும் பித்தனே-பெரிய பிச்சுடையவனே! சட்டம் நேர்பட - உன் கட்டளைக்கிணங்க, வந்திலாத - போற்றிசெய்யாத, சழக்கனேன் - [உன் சொரூபம் இன்னதென்று] அறியப் படாதவனாகிய யான், உன்னை - தேவரீரை, சார்ந்திலேன் - அடையப்பெற்றிலேன், சிட்டனே - யாவர்க்கும் பெரியோனே, சிவ லோகனே - சிவபுரத்தை யுடையவனே, சிறு நாயினும் - சிற்றறிவுடைய சிறு நாயினுக்கும், கடை ஆய - கடைப்பட்ட, வெம் - கொரமாகிய, கட்டனேனையும் - துன்பத்தை யுடையேனாகிய என்னையும், ஆட்கொள்வான் - அடிமைகொண் டாட்கொண்டருள, கழுக்குன்றிலே - திருக்கழுக்குன்றிலே, வந்து - எழுந்தருளி வந்து, காட்டினாய் - [இருவராலும் மற்றவர்களாலும் காணப்படாத] உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய், எ - று.

(க - ரை.) வந்தி யென்னும் பிட்டு வாணிச்சிக்காகத் தலையின் மீது கூடையோடு மண்ணைச் சுமந்தவனும், திருப்பெருந் துறையின்கண் எழுந்தருளியவனுமாகிய சிவபெருமானே! உன் கட்டளைக்கு இணங்கி வராத என்னையும் அடிமை கொள்ளும் பொருட்டுத் திருக்கழுக்குன்றில் யாவராலுங்காணப் படாத உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய், என்பது.

(வி - ரை.) சட்டம் - வேதசிவாகமாதிகளின் இரகசியம். சழக்கு - பிழை, (குற்றம்.) சார்தல் - அடைதல். சிட்டன் - பெரியவன். கடை - இறுதி. கட்டம் - துன்பம். (உ)

மலங்கிலேன்கண்ணினீரைமாற்றி
மலங்கெடுத்தபெருந்துறை
விலங்கினேன்வினைக்கேடனேனினி
மேல்விளைவதறிந்திலே
னிலங்குகின்றநின்சேவடிக
ளிரண்டும்வைப்பிடமின்றியே
கலங்கினேன்கலங்காமலேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) நீ - நீ, மலங்கினேன் - மனங் கலங்கினவனாகிய எனது, கண்ணில் - கண்களில், நீரை - ஜலத்தை, மாற்றி-கையால் துடைத்து, மலம் கெடுத்த - எனது மும்மலங்களையும் கொய்த, பெருந்துறை - திருப்பெருந்துறையென்னும் பதியை, விலங்கினேன் - அதைவிட்டு நீங்கினேன், வினை - இருவினைகளாகிய, கேடனேன் - கெடுதியை யுடையேன், இனிமேல் — இதற்குமேல், விளைவது - வருவதை, அறிந்திலேன் - யாதும் தெரிந்தேனில்லை, இலங்குகின்ற - பிரகாசிக்கின்ற, நின் - உன்னுடைய, சேவடிகள் இரண்டும் - திருவடிக ளிரண்டும், வைப்பு - வைத்தற்குரித்தாகிய, இடம் இன்றி - இடம் இல்லாமல், கலங்கினேன் - மனம் கலங்கினேன், கலங்காமல்-[அவ்வாறு] கலங்காவண்ணம், கழுக்குன்றிலே வந்து - திருக்கழுக்குன்றிலிடம் வந்து, காட்டினாய் - உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய், எ - று.

(க - ரை.) என் மும் மலங்களையும் கொய்த திருப்பெருந்துறைக்கு இறைவனாகியசிவபெருமானே! திருப்பெருந்துறையை நீங்கினேன், இனிமேல் விளைவதையும் தெரிந்துகொள்ளாமலும் உன் திருவடிகளை யமைக்க இடம் இல்லாமல் கலங்கி வாடினேன், அவ்வாறு இனி கலங்காமல் நீ திருக்கழுக்குன்றத்தில் அன்பின் மிகுதியால் வந்து உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய், என்பது.

(வி - ரை.) மலங்குதல் - கலங்குதல். மலம் - மும்மலங்கள். விலங்கல்-விலகல், விளைதல் - உண்டாதல். இலங்கல் - பிரகாசித்தல். காட்டுதல் - தோன்றச்செய்தல். (௫)

பூணொணாதொரன்புபூண்டு
பொருந்திநாடொறும்போற்றவு
நாணொணாதொர்நாணமெய்தி
நடுக்கடலுளழுந்திநான்
பேணொணாதபெருந்துறைப்பெருந்
தோணிபற்றியுகைத்தலுங்

காணொணாத்திருக்கோலநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) பூணொணாதது - அடைதலொண்ணாததாகிய, ஓர் - ஒப்பற்ற, அன்பு பூண்டு - ஆசையைப்பெற்று, நாள்தோறும் - தினப்பிரதிதினமும், பொருந்தி - இருந்து, போற்றவும் - போற்றி செய்குதற்கும், நாண் ஒணாதது - வெட்கப் படாததாகிய, ஓர் - ஒப்பற்ற, நாணம் எய்தி - நாணத்தை யடைந்து, [அதனால்] நடுக்கடலுள் - [பிறவியாகிய] கடலின் நடுவே, நான் அழுந்தி - நான் முழுகி, பேணொணாத - விரும்புதற்கு அரிதாகிய, பெருந்துறை - திருப்பெருந்துறையாகிய, பெரு - பெரிய, தோணி - மரக்கலத்தை, பற்றி - பிடித்து, உகைத்தலும் - செலுத்தலும், நீ - நீ, கழுக்குன்றிலே வந்து - திருக்கழுக்குன்றின்மேல் எழுந்தருளி வந்து, காணொணா - யாவராலும் பார்க்க வொண்ணாத, திருக்கோலம் - அழகிய உன்கோலத்தை, காட்டினாய் - காண்பித்தாய், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே ! உன்னை அன்புசெய்து வணங்க நாணிப்பிறவிக்கடலி லழுந்திப் பெருந்துறையென்கின்ற பெருந்தோணியைப் பற்றிச் செலுத்தலும், நீ திருக்கழுக்குன்றில் வந்து அடியேனாகிய எனக்கு உன்திருக்கோலத்தைக் காட்டிக் கடாக்ஷித்தருளினாய், என்பது.

(வி - ரை.) பூணொணதொரன்பு - பேரானந்த அன்பு. போற்றல் - துதித்தல். நாணொணல் - வெட்கமடைதல். உகைத்தல் - செலுத்தல். கோலம் - வைபோகம். (ச)

கோலமேனிவராகமேகுண
மாம்பெருந்துறைக்கொண்டலே
சீலமேதுமறிந்திலாதவென்
சிந்தைவைத்தசிகாமணி
ஞாலமேகரியாகநானுனை
நச்சிநச்சிடவந்திடுங்
காலமேயுனையோதநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) கோலம் - அழகாகிய, மேனி - திருமேனியை யுடைய, வராகமே - மலையே ! குணம் ஆம் - மங்களகுணங்களோடு கூடிய, பெருந்துறை கொண்டலே - திருப்பெருந்துறையிலுள்ள மேகமே! சீலம் - நல்லொழுக்கம், ஏதும் அறிந்திலாத - கிஞ்சித்தேனும் தெரிந்திலாத, என் - என்னுடைய, சிந்தை - மனத்தை, வைத்த - அமைத்தருளின, சிகாமணி - சிரோமணியே!

ஞாலமே - உலகத்தாரே, கரி ஆக - சாக்ஷியாக, நான்-யான், உன்னை - உந்தனை, நச்சி நச்சிட - மிகவும் விரும்ப, வந்திடும் காலமே - நேரிடுகின்ற நாளிலே, உன்னை ஓத - உன்னைத் துதிக்கும்படி, நீ - நீ, கழுக்குன்றில் - திருக்கழுக் குன்றிலே, வந்து -[கைலையைவிட்டு]வந்து, காட்டினாய் - உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! சிறிதும் உணர்ந்திலாத யான் உன்னைத் தேடித் துதிக்க, நீ திருக்கழுக்குன்றில் உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய், என்பது.

(வி - ரை.) கொண்டலே என்றது எல்லாப்பதத்தினும் மேலதாகிய சிறந்த முத்திப்பதத்தையும் வரையாது கொடுக்கும் உதாரகுண சீலனாதலால் என்க. கரி - சாக்ஷி. காலம் - நாள். ஓதல் - தெரிவித்தல். (ரு)

பேதமில்லதொர்கற்பளித்த
பெருந்துறைப்பெருவெள்ளமே
யேதமேபலபேசநீயெனை
யேதிலார்முனமென்செய்தாய்
சாதல்சாதல்பொல்லாமையற்ற
தனிச்சரண்சரணாமெனக்
காதலாலுனையோதநீவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) பேதம் - வேறுபாடு, இல்லது - இல்லாததாகிய, ஓர் - நிகரற்ற, கற்பு - பெருங்கல்வியை, அளித்த - கொடுத்த, பெருந்துறை - திருப்பெருந்துறையி லுள்ள, பெரு வெள்ளமே - பெரிய ஆநந்தக்கடலே ! ஏதம் - குற்றங்கள், பல பேச - பலவற்றாலும் எடுத்து பேச, ஏதிலார்-அன்னியர்க்கு, முன்னம் - எதிரில், நீ - நீ, என்னை - எந்தனை, செய்தாய் - யாது செய்தனை? சாதல் சாதல் - இறத்தல் என்கின்ற, பொல்லாமை அற்ற - யாதொரு பொல்லாங்குமில்லாத, தனி - ஒப்பற்ற, சரண் - உன் திருவடியே, சரண் ஆம் எனஎனக் கடைக்கல மாகுமென்று, காதலால் - அதி விருப்பத்றோடு, உன்னை - தேவரீரை, ஓத - புகழ்ந்து துதிக்க, நீ - நீ, கழுக்குன்றிலே - திருக்கழுக்குன்றிலே, வந்து - உவந்து வந்து, காட்டினாய் - உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய், எ - று.

(க - ரை.) யாதொரு வேறுபாடில்லாத பெருங் கல்வியைப் போதித்த தயாபர மூர்த்தியாகிய திருப்பெருந்துறைக் கிறைவனே! உன் திருவடியே எனக்குப் புகலிடமாதலால், உன்னை உள்ளன்புடன் துதிக்க, நீ திருக்கழுக்குன்றில் உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய், என்பது.

(வி - ரை.) பேதம் - வேறுபாடு. கற்பு - கல்வி. ஏதம் - குற்றம். ஏதிலார் - அன்னியர். சாதல் - இறத்தல். சரண் - தாள். காதல் - ஆசை. ()

இயக்கிமாரறுபத்துநால்வரை
யெண்குணஞ்செய்தவீசனே
மயக்கமாயதொர்மும்மலப்பழ
வல்வினைக்குளழுந்தவுந்
துயக்கறுத்தெனையாண்டுகொண்டுநின்
றாய்மலர்க்கழறந்தெனைக்
கயக்கவைத்தடியார்முனேவந்து
காட்டினாய்கழுக்குன்றிலே.

(ப - ரை.) இயக்கிமார் - இயக்கிமாராகிய, அறுபத்துநால்வரை - அறு பத்துநான்குபேர்க்கு, எண்குணம் - எட்டுகுணங்களை, செய்த - பெறச்செய்த, ஈசனே - ஜகதீசனே! மயக்கம் - மயக்கத்தால், ஆயது - உண்டாவதாகிய, ஓர் - ஒப்பற்ற, மும்மலம் - மும்மலத் தொடர்பாகிய, பழ - பழமையாகிய, வல்வினைக்குள்-கொடியபாசபந்த மென்னும் வினையாகிய கடலுக்குள், அழுந்த வும்-நான்அழுந்தாநிற்கவும், துயக்கு-என்சோர்வையை, அறுத்து-சேதித்து,என் னை-அடியேனை, ஆண்டுகொண்டு - அடிமையாளாக்கிக்கொண்டருளின, நின் - உனது, தூ - பரிசுத்தமாகிய, மலர் - தாமரை மலர்போன்ற, கழல் - திருவடி யை, தந்து - கொடுத்தருளி, என்னை - அடியேனை, கயக்கவைத்த - மெலிய வைத்த, அடியார் - அடியார்களுக்கு, முன்னே - முன்பாக, கழுக்குன்றிலே - திருக்கழுக்குன்றிலே, வந்து - உவந்து வந்து, காட்டினாய் - உன் திருக்கோ லத்தைக் காட்டி யருளினாய், எ - று.

(க - ரை.) தொண்டர்களாகிய அறுபத்துநான்கு பேர்களுக்கு எண் குணத்தைப் பெறச்செய்த ஈசனும், திருப்பெருந் துறையில் எழுந்தருளியவ னுமாகிய சிவபெருமானே! மயக்கத்துக் கேதுவாகிய மும்மல வாசனையி லழுந்தாநிற்கவும், என்னுடைய சோகத்தைக் கெடுத்து உன் திருவடியைத் தந்து, அடியார்க் கெதிரில் எழுந்தருளித் திருக்கழுக்குன்றில் உன் திருக்கோ லத்தைக் காட்டி யருளினாய், என்பது.

(வி - ரை.) இயக்கி - செலுத்தி யென்னெச்சம். எண்குணம் - அட் டமாசித்தி. வினைக்குளழுந்தவும் என்றது இருவினைக் கடலென்னும் பாச பந்தத்தில் ஆழாமல் இருத்தல் எனவும். துயக்கு - சோர்வு. மலர் - இங்கு தாமரைமலரைக் குறித்து. கயக்குதல் - மெலிக்குதல். (எ)

திருச்சிற்றம்பலம்.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# கண்டபத்து.

## பரமாநந்த நிருத்ததரிசனம்.

திருச்சிற்றம்பலம்.

### கொச்சகக்கலிப்பா.

இந்திரியவயமயங்கியிறப்பதற்கேகாரணமா
யந்தரமேதிரிந்துபோயருநரகில்வீழ்வேற்குச்
சிந்தைதனைத்தெளிவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வந்தமிலாவானந்தமணிகொடில்லைகண்டேனே.

(ப - ரை.) இந்திரியவயம் - பஞ்சேந்திரிய வயத்தால், மயங்கி - மதி மயக்க மடைந்து, இறப்பதற்கே காரணமாய் - சாதலுக்கே முதற்காரணமாகி, அந்தரமே திரிந்து - பலவாறு வேறுபட்டே திரிந்து, போய் - சென்று, அருநரகில் வீழ்வேற்கு - அரிதாகிய நரகத்தில் வீழ்வேனாகிய எனக்கு, சிந்தை தன்னை - மனத்தை, தெளிவித்து - பளிங்குபோல் தெளிவித்து, சிவம் ஆக்கி - சிவமாக்கி, என்னை ஆண்ட - என்னை அண்டருளிய, அந்தம் இல்லா - முடிவில்லாத, ஆநந்தம் - ஆநந்தத் திருவுருவை, அணிகொள் - அழகைக் கொண்ட, தில்லை கண்டேன் - தில்லை யம்பலத்தில் கண்டேன்! எ - று.

(க - ரை.) இந்திரிய சேட்டையில் வசப்பட்டு இறப்பதற் கேதுவாக வேறுபட்டுத் திரிந்து அரிய நரகில் வீழ்வேனாகிய எனது சிந்தையைத் தெளிவித்துச் சிவமாக்கி யாண்டருளின இன்ப வுருவைத் தில்லைப்பதியில் கண்டேன்! என்பது.

(வி - ரை.) இந்திரியம் - பஞ்சேந்திரியங்கள். வயம் - வசம். அந்தரம் - வேறுபாடு. சிந்தித்தல் - எண்ணுதல். அந்தம் - முடிவு. (௧)

வினைப்பிறவியென்கின்றவேதனையிலகப்பட்டுத்
தனைச்சிறிதுநினையாதேதளர்வெய்திக்கிடப்பேனை

யெனைப்பெரிதுமாட்கொண்டென்பிறப்பறுத்தவிணையிலியை
யனைத்துலகுந்தொழுந்தில்லையம்பலத்தேகண்டேனே.

(ப - ரை.) வினைப்பிறவி - வினையினாலுண்டாகிய பிறவி, என்கிற - என்று சொல்லப்பட்ட, வேதனையில் - உபத்திரத்தில், அகப்பட்டு - சிக்கி, தன்னை - தேவரீரை, சிறிதும் - கிஞ்சிற்றேனும், நினையாதே - எண்ணாமல், தளர்வு - தளர்ச்சியை, எய்து - பெற்று, கிடப்பேனை - உழலாநின்று கிடக்கின்றவனாகிய, என்னை - அடியேனை, பெரிது - பெருமையோடு, ஆட்கொண்டு - அடிமைகொண்டு, என் - என்னுடைய, பிறப்பு - பிறவித்தளையை, அறுத்த - சேதித்த, இணை இலியை - ஒப்புவமை இல்லாத சிவபெருமானை, அனைத்தும் - எல்லாம், உலகும் - உலகங்களும், தொழும் - ஏற்றித் துதிக்கா நிற்கின்ற, தில்லை அம்பலத்து - சிதம்பரத்தின்கண் இராநின்ற அம்பலத்தில், கண்டேன் - கண்களால் பார்த்தேன் ! எ - று.

(க - ரை.) பிறவித் துன்பக்கடலில் அகப்பட்டுத் தன்னைச் சற்றேனும் நினையாமல் வீணில் தளர்ந்து உழலுகின்ற என்னை யாட்கொண்டு என் பிறவியை யொழித்த இணையில்லாதவராகிய சிவபெருமானை சிதம்பரத்தின்கண் இராநின்ற அம்பலத்தில் கண்டேன் ! என்பது.

(வி - ரை.) பிறவிக்குக் காரணம் வினையாதலால் "வினைப்பிறவி" என்றார். வேதனை - தொல்லை. இணை இலி - ஒப்புவமை இல்லாத. (உ)

உருத்தெரியாக்காலத்தேயுள்புகுந்தென்னுளமன்னிக்
கருத்திருத்தியூன்புக்குக்கருணையினாலாண்டுகொண்ட
திருத்துருத்திமேயானைத்தித்திக்குஞ்சிவபதத்தை
யருத்தியினாயடியேனணிகொடில்லைகண்டேனே.

(ப - ரை.) உரு - உருவு, தெரியா - அறியாத, காலத்தே - நாளிலே, உள் புகுந்து - உள்ளேபுகுந்து, என் உளம் - என்மனத்தில், மன்னி - நிலைபெற்று, கருதிருத்தி - பிறப்பைத் திருத்தி, ஊன் புக்கு - உடம்பிற்புகுந்து, கருணையினால் - தன்பெருங் கருணையினால், ஆண்டு கொண்ட - அடிமையாக்கி ஆண்டுகொண்டருளின, திருத்துருத்தி மேயானை - திருத்துருத்தியென்னும் க்ஷேத்திரத்தின் கண் எழுந்தருளி யிருப்பவனை, தித்திக்கும் - இனிக்கின்ற, சிவபதத்தை-சிவசாயுச்சிய பதத்தை, அருத்தியினால்-ஆசையால், நாயடியேன்- நாயினுங் கடையேனாகிய யான், அணிகொள் - அழகுவாய்ந்த, தில்லை - தில்லையம்பலத்தின்கண், கண்டேன் - பார்த்தேன் ! எ - று.

(க - ரை.) யாதொன்று மறியாத இளமைப் பருவத்திலே [எனைத்தேடி] என்னுள்ளத்திற் புகுந்து நிலைபெற்று என்பிறவியைக் கெடுத்துத் தன் கருணையினால் என்னை யாண்டுகொண்ட இறைவனை நான் தில்லையம்பலத்தில் கண்டேன் ! என்பது.

(வி - ரை.) கரு - பிறவி. ஊன். மாமிசம். திருத்துருத்தி - ஓர் க்ஷேத்திரம். அருத்தி - ஆசை. (நூ)

கல்லாதபுல்லறிவிற்கடைப்பட்டநாயேனை
வல்லாளனுய்வந்துவனப்பெய்தியிருக்கும்வண்ணம்
பல்லோருங்காணவென்றன்பசுபாசமறுத்தானை
யெல்லோருமிறைஞ்சுதில்லையம்பலத்தேகண்டேனே.

(ப - ரை.) கல்லாத - யாதொன்றும் வாசியாத, புல் அறிவின் - அற்ப புத்தியினால், கடை பட்ட - கடையனாகிய, நாயேனை - நாயினேனை, வல்லாளனாய்வந்து - வல்லவனாக வந்து, வனப்பு - அழகு, எய்தி - பெற்று, இருக்கும் வண்ணம் - இருக்கும்வாறு, பல்லோரும் காண - பலரும் காணும்படி, என்றன் - என்னுடைய, பசு பாசம் - பசுபாசங்களை, அறுத்தானை - சேதித்தவனை, எல்லோரும் - யாவரும், இறைஞ்சு - வந்துவணங்குகின்ற, தில்லை அம்பலத்தே - தில்லையம் பலத்தின்கண், கண்டேன், பார்த்தேன்! எ - று.

(க - ரை.) யாதொன்றும் கற்றறியாத புல்லறிவினால் கடைப்பட்டவனாகிய என்னை, எல்லாருங்காண வந்து என்பசுபாசத்தை யறுத்தருளின இறைவனைத் தில்லைப்பதியில் கண்டேன்! என்பது.

(வி - ரை.) புல்லறிவுக்குக்காரணம் கல்லாமை யாதலால், "கல்லாத புல்லறிவின்" என்றார். வனப்பு - அழகு. இறைஞ்சுதல் - வணங்குதல். காணல் - பார்த்தல். (சு)

சாதிகுலம்பிறப்பென்னுஞ்சுழிப்பட்டுத்தடுமாறு
மாதமிலிநாயேனையல்லலறுத்தாட்கொண்டு
பேதைகுணம்பிறருருவம்யானெனதென்னுரைமாய்த்துக்
கோதிலமுதானானைக்குலாவுதில்லைகண்டேனே.

(ப - ரை.) சாதி குலம் பிறப்பு என்னும் - சாதிகுலம் பிறவி என்கிற, சுழி பட்டு - அச்சுழியிலகப்பட்டு, தடுமாறும் - தடுமாறுகின்ற, ஆதம் - யாதொரு ஒத்தாசையும், இலி - இல்லாதவனாகிய, நாயேனை - நாயினுங் கடைப்பட்ட அடியேனை, அல்லல் - பிறவித்துன்பத்தை, அறுத்து - களைந்து, ஆட்கொண்டு - அடிமைகொண்டு, பேதை குணம் - அறியாத்தன்மையுள்ள குணத்தையும், பிறர் - அன்னியர், உருவம் - வடிவத்தையும், யான் எனது என் உரை - யான் எனது என்னுஞ் சொல்லையும், மாய்த்து - கெடுப்பித்து, கோது இல் - குற்றமற்ற, அமுது - அமிர்தமாக, ஆனானை - ஆயினானை, குலாவு - யாவராலுங் கொண்டாடப்பட்ட, தில்லை - தில்லைப்பதியில், கண்டேன் - கண்குளிரப் பார்த்தேன்! எ - று.

(க - ரை.) சாதி குலம்பிறப்பு என்கிற வலையிலகப்பட்டுத் தடுமாறி ஆதரவில்லாத என்னைக் கரையேற்றி ஆட்கொண்டு, என்பேதமை முதலான

வற்றைக்கெடுத்து, எனக்கமுதம்போல இனிதா யிருப்பவனைத் தில்லைப்பதியில் கண்டேன் ! என்பது.

(வி - ரை.) சுழித்தல் - எழுச்சி. ஆதம் - ஆதரவு. உரை - சொல். கோது - குற்றம். (௫)

பிறவிதனையறமாற்றிப்பிணிமூப்பென்றிவையிரண்டு
முறவினொடுமொழியச்சென்றுலகுடையவொருமுதலைச்
செறிபொழில்சூழ்தில்லைநகர்த்திருச்சிற்றம்பலமன்னி
மறையவரும்வானவரும்வணங்கிடநான்கண்டேனே.

(ப - ரை.) பிறவிதன்னை - பிறவியை, அற மாற்றி – வேரற ஒழித்து, பிணி மூப்பு - நோய் முதுமைப்பருவம், என்று - என்று சொல்லப்பட்ட, இவை இரண்டும் - இவைகள் இரண்டும், உறவினொடும் - உறவினரோடும், ஒழிய - ஒழிய, சென்று - போய், உலகு உடைய - உலகத்தை யுடைய, ஒரு முதலை - ஒப்பற்ற முதல்வனை, செறி - நெருங்கிய, பொழில் - சோலை, சூழ் - சூழ்ந்த, தில்லை நகர் - தில்லைமா நகரில், திருச்சிற்றம்பலம் - திருச்சிற்றம்பலத்தில், மன்னி – நிலைபெற்று, மறையவரும் - பூசுரரும், வானவரும் - சுரரும், வணங்கிட - தொழுதிட, நான் - யான், கண்டேன் - பார்த்தேன்! எ- று.

(க - ரை.) பிறவியைக் கொய்து பிணிமூப்புக்களைப் பற்றற நீக்கின உலக காரணனைத் தில்லை யம்பலத்தில் வேதியர் முதலானோர் ஜயாவிஜீபவா என்று போற்றிசெய்து வணங்க நான் கண்டேன் ! என்பது.

(வி - ரை.) அற - முழுதும். மூப்பு - முதுமை. உறவு - இனம். முதல் - பண்பாகு பெயர். செறி - அடர்ந்த. (௬)

பத்திமையும்பரிசுமிலாப்பசுபாசமறுத்தருளிப்
பித்தனிவனெனவென்னையாக்குவித்துப்பேராமே
சித்தமெனுந்திண்கயிற்ருற்றிருப்பாதங்கட்டுவித்த
வித்தகனார்விளையாடல்விளங்குதில்லைகண்டேனே.

(ப – ரை.) பத்திமையும் - பக்தி செய்தற்றன்மையும், பரிசும் - [அதற்கேற்ற] நல்லொழுக்கமும், இலா - இல்லாதவனாகிய என், பசுபாசம்-பசுபாசங்களை, அறுத்தருளி - கொய்தருளி, இவன் பித்தன் என - இவன் பித்தன் என்று கண்டோர் சொல்லும்வாறு, என்னை-எந்தனை, ஆக்குவித்து - செய்து, பேராமே - பெயராமல், சித்தம் எனும் - மனம் என்கிற, திண்கயிற்றால் - பலம் பொருந்திய கயிற்றால், திருப்பாதம் – திருவடியை, கட்டுவித்து-பிணிப்பித்த, வித்தகனார் – ஞான உருவினராகிய சிவபெருமானது, விளையாடல் - திருவிளையாடலை, விளங்கு - ஜோதிபோல் விளங்குகின்ற, தில்லை - தில்லையம்பலத்தில், கண்டேன் - கண்களால் பார்த்தேன் ! எ - று.

(க - ரை.) பத்தி முதலியவை இல்லாத எனது பசுபாசத்தைக்கொய்து, என்னை பித்தனுக்கி மனக்கயிற்றால் தன் திருவடியைக் கட்டுவித்த இறைவனது விளையாடலைத் தில்லைப்பதியிற் கண்டேன் ! என்பது.

(வி - ரை.) பத்திமை - பக்தியின் தன்மை. பரிசு - ஒழுக்கம். திண் - வலிமை. பேர்தல் - நிலைபெயர்தல். (எ)

அளவிலாப்பாவகத்தாலமுக்குண்டிங்கறிவின்றி
விளைவொன்றுமறியாதேவெறுவியனாய்க்கிடப்பேனுக்
களவிலாவானந்தமளித்தென்னையாண்டானைக்
களவிலாவானவருந்தொழுந்தில்லைகண்டேனே.

(ப - ரை.) அளவு இல்லா பாவகத்தால் - கணக்கற்ற எண்ணங்களால், அமுக்கு உண்டு - அழுத்தப்பட்டு, இங்கு - இப்பூலோகத்தில், அறிவு இன்றி - புத்தி இல்லாமல், விளைவு ஒன்றும் - மேல்விளைவனவற்றை யாதொன்றும், அறியாதே-சிறிதும் தெரியாமல், வெறுவியனாய் கிடப்பேனுக்கு - வெறுமையனாய் கிடப்பவனாகிய எனக்கு, அளவு இலா-அளவற்ற, ஆநந்தம் அளித்து - பேராநந்தத்தைக் கொடுத்து, என்னை - அடியேனை, ஆண்டானை - ஆண்டருளினவனை, களவு இலா - களவற்ற, வானவரும் - தேவர்களும், தொழும் - வணங்குகின்ற, தில்லை - தில்லைப்பதியில், கண்டேன் - (அம்பலத்தில்) பார்த்தேன்! எ - று.

(க - ரை.) கணக்கற்ற எண்ணங்களாகிய பெருங்கடலி லழுந்திகிடப்பவனாகிய எனக்கு, எல்லை இல்லாத இன்பத்தைக் கொடுத்து என்னை ஆண்டருளினவனைத் தில்லையம்பலத்தில் பார்த்தேன் ! என்பது.

(வி - ரை.) பாவகம் - எண்ணம். வெறுவியன் - வீணன். அளித்தல் - கொடுத்தல். ஆண்டானை என்றது பரமசிவனைக் குறித்து. (அ)

பாங்கினொடுபரிசொன்றுமறியாதநாயேனை
யோங்கியுளத்தொளிவளரவுலப்பிலாவன்பருளி
வாங்கிவினைமலமறுத்துவான்கருணைதந்தானை
நான்குமறைபயிறில்லையம்பலத்தேகண்டேனே.

(ப - ரை.) பாங்கினொடு - முறையோடு கூடிய, பரிசு - குணங்களை, ஒன்றும் - யாதொன்றும், அறியாத - தெரியாத, நாயேனை - நாயினேனை, உள்ளத்து - மனத்தில், ஒளி - பிரகாசம், ஓங்கி வளர - ஓங்கி உயர, உலப்பு இலா - கெடுதலில்லாத, அன்பு - அன்பினை, அருளி - கிருபை செய்து, வினை வாங்கி - வினைகளை விலக்கி, மலம் அறுத்து - மலத்தைச் சேதித்து, வான்கருணை தந்தானை - தனது மேலதாயக் கருணையைக் கொடுத்தவனை, நான்குமறை - நான்கு வேதங்களும், பயில் - பழகுகிற, தில்லை யம்ப

லத்தே - தில்லையம்பலத்தில், கண்டேன் - கண்களால் பார்த்து ஆநந்தங் கொண்டேன்! எ - று.

(க - ரை.) நன் நடக்கை முதலியவையில்லாத எனக்கு, பேரன்பினைக் கொடுத்து மும்மலத்தையுங் கெடுத்துக் கருணைசெய்தவனைத் தில்லையம்பலத்தில் கண்டேன்! என்பது.

(வி - ரை.) பாங்கு - முறைமை. பரிசு - வணக்கம். உவப்பு - கெடுதி. மறை - வேதம். (௯)

பூதங்களைந்தாகிப்புலனாகிப்பொருளாகிப்
பேதங்களனைத்துமாய்ப்பேதமிலாப்பெருமையனைக்
கேதங்கள்கெடுத்தாண்டகிளரொளியைமரகதத்தை
வேதங்கடொழுதேத்தும்விளங்குதில்லைகண்டேனே.

(ப - ரை.) பூதங்கள் ஐந்து ஆகி - பஞ்சபூதங்களாகி, புலன் ஆகி - ஐம்புலன்களாகி, பொருள் ஆகி - எல்லாப்பொருள்களுமாகி, பேதங்கள் அனைத்தும் ஆய் - பேதா பேதங்கள் யாவுமாகி, பேதம் இலா - வேறுபாடில்லாத, பெருமையனை - கீர்த்தியையுடையவனை, கேதங்கள் - எமது துன்பங்களை, கெடுத்து ஆண்ட - அழித்து எம்மை ஆண்டருளின, கிளர் ஒளியை - மிகு பிரகாசிக்கும் ஜோதியனை, மரகதத்தை - மரகதமணியை, வேதங்கள் - நான்குவேதங்களும், தொழுது - பேரன்புடன் வணங்கி, ஏத்தும் - துதிக்காநின்ற, விளங்கு - பிரகாசிக்கின்ற, தில்லை - தில்லையம்பலத்தில், கண்டேன் - பார்த்தேன்! எ - று.

(க - ரை.) பூதங்கள் முதலானவையாகி எங்கும் நின்றவனும், எனது பிறவித்துன்பத்தைக் கெடுத்தாண்டவனும் ஆகிய நடராஜப்பெருமானைத் திருச்சிற்றம் பலப்பதியில் என் கண்குளிரப் பார்த்தேன்! என்பது.

(வி - ரை.) பேதம் - வேறுபாடு. கேதம் - துன்பம். கிளர் - மிகு. மரகதம் - பச்சை. (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# பிரார்த்தனைப் பத்து.

## சேகமுத்து.

[சேகமுத்து என்பது ஆன்மாக்களுக்கு முத்திநிச்சயம் பண்ணுதல்.]

திருச்சிற்றம்பலம்.

### ஆசிரியவிருத்தம்.

கலந்துநின்னடியாரோடன்று
வாளாகளித்திருந்தேன்
புலர்ந்துபோனகாலங்கள்
புகுந்துநின்றதிடர்பின்னா
ளுலர்ந்துபோனேனுடையானே
யுலவாவின்பச்சுடர்காண்பா
னலந்துபோனேனருள்செய்யா
யார்வங்கூரவடியேற்கே.

(ப - ரை.) அன்று - அந்நாளில், நின் அடியாரோடு கலந்து - உன் அடியாருடன் கூடிச்சேர்ந்து, வாளா - சும்மா, களித்திருந்தேன் - களிப்படைந்திருந்தேன், காலங்கள் புலர்ந்து போன - [அந்தோ!] நாட்கள் கழிந்து போயின, பின்னாள் - பிற்காலத்தில், இடர் புகுந்து நின்றது - துன்பம் புக்கு நின்றது, உடையானே - யாவும் உடையவனே! உலர்ந்து போனேன் - வீணில் வாடிப்போனேன், உலவா இன்பம் - கெடாத இன்பத்தைத் தருகிற, சுடர் சோதியை, காண்பான் - காணும்பொருட்டு, அலந்துபோனேன் - அங்குமிங்குமோடி துன்பப்பட்டுப்போனேன், அடியேற்கு - அடியேனுக்கு, ஆர்வம் கூர [மென்மேலும்] அன்பு மிகும்படி, அருள்செய்யாய் - கிருபை செய்வாயாக, எ - று.

(க - ரை.) அந்நாளில் உன்னடியாரோடு சேர்ந்து சந்தோஷித்திருந்தேன், இந்நாளில் துன்பமென்னும் நோய் புகுந்து நின்றது, இனிமேலாகிலும் உன்மீது அன்பு மிகும்படி அடியேனுக்கு அருள்செய்வாயாக, என்பது.

(வி - ரை.) கலத்தல் - கூடுதல். களித்து - சந்தோஷித்து. புலர்தல் - கழிதல். உலத்தல் - கெடுதல். அலத்தல் - வருந்தல். ஆர்வம் - அன்பு. (க)

அடியார்சிலருன்னருள்பெற்று
ரார்வங்கூரயானவமே
முடையார்பிணத்தின்முடிவின்றி
முனிவாலடியேன்மூக்கின்றேன்
கடியேனுடையகடுவினையைக்
களைந்துன்கருணைக்கடல்பொங்க
வுடையாயடியேனுள்ளத்தே
யோவாதுருகவருளாயே.

(ப - ரை.) அடியார் சிலர் - உன் தொண்டர்களிற் சிலர், ஆர்வம் கூர - உன்னிடத்து அன்பின் மிகுதலால், உன் அருள்பெற்றார் - உன் பேரருளைப் பெற்றார்கள், யான் - நான், முடை ஆர் பிணத்தின் - புலால் நாற்றம் பொருந்திய பிசாசம்போல, முடிவின்றி - முடிவில்லாம், முனிவால் - கோவத்தால், அடியேன் - அடியனேன், அவமே - பயனில்லாமலே, மூக்கின்றேன் - முதிராநின்றேன், கடியேனுடைய - கடுமையை யுடையேனது, கடுவினையை - பொல்லா வினைகளை, களைந்து - விலக்கி, அடியேன் உள்ளத்து - அடியேனது மனத்தில், உன் - உன்னுடைய, கருணைக்கடல் பொங்க - கருணையாகிய கடல் பொங்கவும், ஓவாது உருக - அம்மனமானது இடையறாது உருகவும், அருளாய் - அருள் செய்வாயாக, உடையாய் - யாவும் உடையவனே! எ - று.

(க - ரை.) உன்னிடத் தன்பின் மிகுதியால் அடியார் சிலர் உன்னருள் பெற்றார், அன்பில்லாத நானோ பேய்போல மூத்துழலாநின்றேன், இறைவனே! பிறவி என்னும் வினையைக் களைந்து, உன்னிடத்து அன்பு மிகும்படி [அடிமைத்தொண்டனாகிய] அடியேனுக்கு அருள் செய்வாயாக, என்பது.

(வி - ரை.) முடை - புலால் நாற்றம். பிணம் - உடம்பெனினுமாம். முனிதல் - கோபித்தல். கடு - கொடிய. (உ)

அருளாரமுதப்பெருங்கடல்வா
யடியாரெல்லாம்புக்கழுந்த
விருளாராக்கையிதுபொறுத்தே
யெய்த்தேன்கண்டாயெம்மானே
மருளார்மனத்தோருன்மத்தன்
வருமாலென்றிங்கெனைகண்டார்
வெருளாவண்ணமெய்யன்பை
யுடையாய்பெறநான்வேண்டுமே.

(ப - ரை.) அருள் - திருவருளாகிய, ஆர் - அரிய, அமுதம் - அமிர்தத் தானியன்ற பெருங் கடல்வாய் - பெரிய கடலினிடத்து, அடியார் எல்லாம் - உன் அடியவரெல்லாரும், புக்கு அழுந்த - போய் மூழ்க, இருள் ஆர் - [நானோ] அஞ்ஞானமாகிய இருள்நிறைந்த, ஆக்கை - உடம்பாகிய, இது - இதை, பொருந்து - சுமந்து, எய்த்தேன் - வீணில் இளைத்தேன், எம்மானே - எம்பெருமானே! மருள் - மருட்சி, ஆர் - நிறைந்த, மனத்து - மனத்தையுடைய, ஓர் - ஒரு, உன் மத்தன் - உன் மத்தனானவன், வரும் என்று - வருகின்றானென்று, இங்கு - இப்பூலோகத்தில், என்னைக் கண்டார் - என்னைப் பார்த்த யாவரும், வெருளாவண்ணம் — அஞ்சாத வகை, நான் — அடியேனாகிய யான், மெய்யன்பை - மெய்யன்பினை, பெறவேண்டும் - அடையவேண்டும், உடையாய் - யாவும் உடையவனே! எ - று.

(க - ரை.) இறைவனே! உன் அருட்கடலில் அடியாரெல்லாம் மூழ்க, யான் இவ்வுடம்பைத் தாங்கி இளைத்தேன், உன்னிடத்து மெய்யன்பை எனக்கருள் செய்வாயாக, என்பது.

(வி - ரை.) இருள் - அஞ்ஞான இருள். இங்கு ஒன்றுந் தோன்றாது மறைத்ததால் அஞ்ஞானத்தை இருள் என்றார். மருள் - மருட்சி. வெருளல் - அஞ்சுதல், அன்பு — அசை. (ரு)

வேண்டும்வேண்டுமெய்யடியாருள்ளே
　　விரும்பியெனையருளா
லாண்டாயடியேனிடர்களைந்த
　　வமுதேயருமாமணிமுத்தே
தூண்டாவிளக்கின்சுடரனையாய்
　　தொண்டனேற்குமுண்டாங்கொல்
வேண்டாதொன்றும்வேண்டாது
　　மிக்கவன்பேமேவுதலே.

(ப - ரை.) வேண்டும் வேண்டும் - வேண்டுமென்று பலகால் விரும்புகிற, மெய் - உண்மையுள்ள, அடியார் - அடியார்களுக்கு, உள்ளே - இடையே, என்னை - ஏழையாகிய அடியேனை, விரும்பி - விருப்புற்று, ஆண்டாய் - ஆண்டருளினையாகி, அடியேன் - அடியேனது, இடர் களைந்த — துன்பத்தை விலக்கின, அமுதே - அமிர்தமே! அரு - அருமையாகிய, மாமணி - மாணிக்கமே! முத்தே - முத்தமே! தூண்டொணு விளக்கின் - தூண்டா விளக்கினுடைய, சுடர் அனையாய் - பிரகாசத்தை நிகர்த்தவனே! வேண்டாது - இச்சிக்கப்படாததாகிய, ஒன்றும் வேண்டாது-ஒரு பொருளையும் இச்சிக்காமல், மிக்க- அதி, அன்பே மேவுதல் - அன்பினையே பொருந்துதல், தொண்டனேற்கும் - தொழும்பனேனுக்கும், உண்டாம் கொல்-[அவ்வன்பு] உண்டாகுமோ! எ—று.

(க - ரை.) இறைவனே! யாதொரு பொருளையும் விரும்பாமல் உன்னிடத் தன்பே எந்தனுக்கு உண்டாகும்படி நேரிடுவதாகிய ஒரு காலமுமுண்டோ! என்பது.

(வி - ரை.) இடர் - துன்பம். நவமணிகளுள் முத்துச் சிறந்தமையின் அருமாமணியாகிய முத்தெனக் கொள்ளினு மமையும். மேவுதல் - பொருந்துதல் என அமையும். (௪)

மேவுமுன் றனடியாருள்விரும்பி
யானுமெய்ம்மையே
காவிசேருங்கயற்கண்ணாள்பங்கா
வுன்றன்கருணையினாற்
பாவியேற்குமுண்டாமோபர
மானந்தப்பழங்கடல்சேர்ந்
தாவியாக்கையானெனதென்
றியாதுமின்றியறுதலே.

(ப - ரை.) மேவும் - பொருந்திய, உன்றன் - தேவரீருடைய, அடியாருள் - அடியார் இடையே, யானும் - பேதையாகிய நானும், மெய்ம்மையே விரும்பி - உண்மையாகவே இச்சித்து, காவி சேரும் - நீல மலரின் தன்மையமைந்த, கயல் கண்ணாள் - சேற்கண்ணாளாகிய உமாதேவியின், பங்கா - பாகனே! உன்றன் - உன்னுடைய, கருணையினால் - கிருபையினால், பரமானந்தம் - பேரின்பமாகிய, பழங்கடல் சேர்ந்து - பழமையாகிய கடலை யடைந்து, ஆவி - உயிர், யாக்கை - உடம்பு என்பவைகளை, யான் - நான், எனது என்ற - என் சொந்தமென்று சொல்லப்பட்ட, யாதும் - யாவும், இன்றி - இல்லாமல், அறுதல் — அற்று ஒழிதல், பாவி ஏற்கும் - பாவியாகிய எனக்கும், உண்டாமோ - [அப்பேரின்ப வாழ்வு] உண்டாகுமோ! எ - று.

(க - ரை.) இறைவனே! பாவியேனுக்கும் உன் பரமானந்தக்கடலில் மூழ்கி யானெனதென்றும் செருக்கறுதல் உண்டாமோ! என்பது.

(வி - ரை.) காவி - நீலப்பூ. கயற்கண்ணாள் என்றது பார்வதியைக் குறித்து. ஆவியாக்கை என்றது உடலும் உயிரும். (ரு)

அறவேபெற்றார்நின்னன்ப
ரந்தமின்றியகநெகவும்
புறமேகிடந்துபுலைநாயேன்
புலம்புகின்றேனுடையானே
பெறவேவேண்டுமெய்யன்பு
பேராவொழியாப்பிரிவில்லா

மறவாநினையாவளவிலா
மாளாவின்பமாகடலே.

(ப - ரை.) உடையானே - யாவும் உடையவனே! பேரா - நிலை பெயராததும், ஒழியா - அழியாததும், பிரிவு - பிரிவு, இல்லா - இல்லாததும், மறவா - மறவாததும், நினையா - எண்ணாததும், அளவு இலா - அளவற்றதும், மாளா - குறையாததும் ஆகிய, இன்பம் - பேராநந்தமாகிய, மாகடலே - பெருங்கருணைக்கடலே! நின் அன்பர் - உன் அன்பர்கள், அறபெற்றார் - மேற்கூறியவற்றை நீங்கப்பெற்றார்கள், [அதுவுமன்றி] அகம் நெகவும் - மனம் நெகிழவும் [பெற்றார்கள்,] [அங்ஙனமாக] புலை நாயேன் - புலை நாயினேன், புறமே கிடந்து - புறத்தே கிடந்துழன்று, புலம்புகின்றேன் - வெம்பிப் புலம்பாநின்றேன், மெய் அன்பு - [யான்] மெய்யன்பை, பெறவேண்டும்-பெறுதல் வேண்டும், எ - று.

(க - ரை.) இறைவனே! உன் அன்பர் அகநெகிழப்பெற்றார்கள், யான் புறமே கிடந்து தனியே புலம்புகின்றேன், இனியேனும் அடியேனாகிய எனக்கு உன்னிடத் தன்புண்டாகும்படி கருணை செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) அறவே பெற்றார்-பற்று அறவே பெற்றாராகிய எனினுமாம். அறவு - பற்றறுதி. அகம் - மனம். (சு)

கடலேயனையவானந்தங்கண்டா
ரெல்லாங்கவர்ந்துண்ண
விடரேபெருக்கியேசற்றிங்கிருத்த
லழகோவடிநாயே
னுடையாய்நீயேயருளுதியென்றுணர்த்தா
தொழிந்தேகழிந்தொழிந்தேன்
சுடராரருளாலிருணீங்கச்சோதி
யினித்தான்றுணியாயே.

(ப - ரை.) கடலே அனைய - கடலையே நிகர்த்த, ஆனந்தம் - இன்பத்தை, கண்டார் எல்லாம் - உன்னைக் கண்டவரெல்லாரும், கவர்ந்து உண்ண - பெற்று அநுபவியாநிற்க, அடி நாயேன் - அடிமையாகிய நாயினேன், இடரே பெருக்கி - பெருந் துன்பத்தையே பெருகச் செய்து, ஏசற்று - மிகு துக்கித்து, இங்கு - இவ்வுலகத்தில், இருத்தல் - ஜீவித்திருப்பது, அழகோ உடையாய் - இது அழகாமோ யாவும் உடையவனே! நீயே அருளுதி என்று - நீயே அருள்செய்யக் கடவையென்று கருதி, உணர்த்தாது ஒழிந்து - உனக்குத் தெரிவிக்காதொழிந்து, கழிந்தொழிந்தேன்-காலத்தைக் கழித்து உன்னைப்பிரிந்தொழிந்தேன், சோதி - பரஞ்சோதியே! ஆர் அருள் சுடரால் - அரிய உன் அருட்

சுடரினால், இருள் நீங்க - என் அஞ்ஞான இருள் நீங்கும்படி, இனித்தான் - இனியாயினும், துணியாய்-உன் திருவுளத்தில் நிச்சயித்தல்வேண்டும், எ - று.

(க - ரை.) இறைவனே! உன்னருட்கடலைக் கண்டாரெல்லாரும் அதில் மூழ்கிக் கவர்ந்துண்ணு நிற்க, துன்பத்தைப் பெருக்கி யான் இளைத்திருப்பது அழகாமோ! அந்தோ! இனியாயினும் உனது அருட்சுடரால் எனது அஞ்ஞான இருள் நீங்கும்படி நீ திருவுளம் பற்றவேண்டும், என்பது.

(வி - ரை.) கவர்தல் - பெறுதல். இடர் - துன்பம். வெசற்றல் - துக்கித்தல். கழித்தல் - இங்கு பிரித்தல் எனினுமாம். (எ)

துணியாவுருகாவருள்பெருகத்தோன்றுந்
தொண்டரிடைப்புகுந்து
திணியார்மூங்கிற்சிந்தையேன்
சிவனேநின்றுதேய்கின்றே
னணியாரடியாருனக்குள்ள
வன்புந்தாராயருளளியத்
தணியாதொல்லைவந்தருளித்
தளிர்ப்பொற்பாதந்தாராயே.

(ப - ரை.) சிவனே - சிவபிரானே! துணியா - யாவும் விட்டுத்துணிந்து, உருகா - மனம் உருகி, அருள் பெருக - உன் திரு அருள் பெருகும்படி, தோன்றும் - தோன்று நின்ற, தொண்டர் இடைபுகுந்து - தொழும்பரிடையே உட்புகுந்து, திணி ஆர் - வலிமை பொருந்திய, மூங்கில் - மூங்கில்போன்ற, சிந்தையேன் - மனத்தை யுடையேன், நின்று தேய்கின்றேன் - நின்று மெலியா நின்றேன், அணி ஆர் - அழகு பொருந்திய, அடியார் - உன்தொண்டர்கள், உனக்கு உள்ள அன்பும் தாராய் - உனக்குச் செய்கின்ற அன்பையும் எனக்குக் கொடுப்பாய், அருள் அளிய — அருள் கனிய, தணியாது - தாழ்க்காமல், ஒல்லை வந்தருளி - விரைவில் எழுந்தருளிவந்து, தளிர் - தளிர்போன்ற, பொன் பாதம் தாராய் - உன்பொன்னடியையும் கொடுப்பாய், [இங்ஙனமாயின் யான் எவ்வாறுய்வேன்] எ - று.

(க - ரை.) இறைவனே! உன் மெய்யன்பரிடையே புகுந்து நின்று, வன்னெஞ்சனாகிய நான் தேயாநின்றேன், உன்னிடத் தன்பு செய்யவும், எனக்குக் கருணை செய்யாய், உன் திருவடியையும் தாராய், யான் எவ்வாறுய்வேன், என்பது.

(வி - ரை.) திணி - திண்மை. துணியா, உருகா-என்பனசெய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சங்கள். (அ)

தாராவருளொன்றின்றியே
　　தந்தாயென்றுன்றமரெல்லா
மாராநின்றாரடியேனு
　　மயலார்போலவயர்வேனோ
சீராரருளாற்சிந்தனையைத்
　　திருத்தியாண்டசிவலோகா
பேரானந்தம்பேராமை
　　வைக்கவேண்டும்பெருமானே.

(ப - ரை.) தாரா அருள் - தரவொண்ணாத உன் அருளை, ஒன்று இன்றி தந்தாய் என்று - முழுதும் தந்தனை யென்று, உன் தமர் எல்லாம் - உன் அடியார் எல்லாரும், ஆரா நின்றார் - அநுபவியா நின்றார்கள், அடியேனும் - அடியனேனும், அயலார்போல - அன்னியரைப்போல, அயர்வேனோ - துன்பத்தை யனுபவிப்பேனோ, சீர் ஆர் - சிறப்பினையுடைய, உன் அருளால் - உன்பெருங் கருணையால், சிந்தனையை திருத்தி - என்மனத்தைச் சீர்திருத்தி, ஆண்ட - என்னை ஆண்டருளின, சிவலோகா - சிவபுரத்தானே! பெருமானே-பெருமை யுடையானே! பேர் ஆனந்தம்-பேரின்பமானது, பேராமை - நிலைபெயராமல், வைக்கவேண்டும் - வைத்துக்காத்தல் வேண்டும், எ - று.

(க - ரை.) இறைவனே! உன்னருள் முழுதும் தந்தாயென்று உன்னடியா ரெல்லாரும் அநுபவியா நின்றார்கள், அடியேன் ஒருவன் மாத்திரம் அயலார்போல அயர்வேனோ! என்மனத்தைத் திருத்தி யாண்டருளினவனே! பேரின்பம் நிலைபெயராமல் என்னிடத்தருள் செய்யவேண்டும், என்பது.

(வி - ரை.) தாராவருள் - தரவொண்ணாத அருள். [அருமையாகிய அருள்] தமர் - அடியார். (௯)

மானேர்பங்காவந்திப்பார்
　　மதுரக்கனியேமனநெகா
நானேர்தோளாச்சுரையொத்தா
　　னம்பியித்தால்வாழ்ந்தாயே
யூனேபுகுந்தவுனையுணர்ந்தே
　　யுருகிப்பெருகுமுள்ளத்தைக்
கோனேயருளுங்காலந்தான்
　　கொடியேற்கென்றோகூடுவதே.

(ப - ரை.) மான் ஓர் பங்கா - மானை ஒரு பாகத்தில் உடையவனே! வந்திப்பார் மதுரக்கனியே - வாழ்த்துவாராகிய அன்பர்க்கு மதுரமாகிய கனி போல்பவனே! மனம் நெகா - மனம் நெகிழாமல், நான் ஓர் தோளா சுரை

ஒத்தால் - நான் ஒரு தொளைக்காத சுரையை நிகர்த்தால், நம்பி - நம்பீ, இத்தால் - இதனால், வாழ்ந்தாயே - வாழ்ந்துவிட்டாயோ, ஊனே புகுந்த - உடலில் புகுந்த, உன்னை உணர்ந்து - உன்னை இன்னவிதமென்றறிந்து, உருகி - உருகி, பெருகு - [உருகுதலே] பெருகப்பெற்ற, உள்ளத்தை - மனத்தை, கோனே - இறைவனே! அருளும் காலம் - நீ யருள்செய்யும் காலமானது, கொடியேற்கு - கொடியனேனுக்கு, கூடுவது என்றோ - கூடுவது எந்நாளோ, எ-று.

(க - ரை.) இறைவனே! உன்னை யறிந்து உருகும்படியான மனத்தை அடியேற் கருளுங்காலம் எக்காலமோ, என்பது.

(வி - ரை.) வந்திப்பார் மதுரக்கனியே யென்றமையால் வந்தியாதார்க்குக் கைக்குங்கனி யென்றதாயிற்று. (௧0)

கூடிக்கூடியுன்னடியார்
குனிப்பார்சிரிப்பார்களிப்பாரா
வாடிவாடிவழியற்றேன்
வற்றன்மரம்போனிற்பேனோ
வூடியூடியுடையாயொடுகலந்
துள்ளுருகிப்பெருகிநெக்
காடியாடியானந்தமதுவே
யாகவருள்கலந்தே.

(க - ரை.) உன் அடியார் - தேவரீருடைய அடியார்கள், கூடிகூடி - சேர்ந்து சேர்ந்து, குனிப்பார் - கூத்தாடுவோரும், சிரிப்பார் - சிரிப்பவரும், களிப்பார் – களிப்பவரும், ஆ - ஆகிநின்ற, வாடி வாடி - வதங்கி வதங்கி, வழி அற்றேன் - வழியற்றவனாகிய நான், வற்றல் மரம்போல் - உலர்ந்த மரம் போல, நிற்பேனோ - நிற்பேனோ! உடையாயொடும் - உடையவனாகிய உன்னோடும், ஊடி ஊடி - நான் பிணங்கிப் பிணங்கி, கலந்து - கூடி, உள் உருகி - மனமுருகி, பெருகி - பெருகி, நெக்கு - நெகிழ்ந்து, ஆடி ஆடி - கூத்தாடிக் கூத்தாடி, ஆநந்தமதுவேயாக - இன்ப வுருவே யாகும்வண்ணம், கலந்து அருள் - என்னைக் கலந்து அருள்செய்வாயாக, எ - று.

(க - ரை.) இறைவனே! உன்னடியார் திரண்டுத் திரண்டு கூத்தாடுதல் முதலியவற்றைச் செய்யாநிற்க, நானொருவன் மாத்திரம் வாடி, வற்றல் மரம்போல நிற்பேனோ! நான் உன்னைக் கலந்து மனமுருகி ஆநந்த வுருவமாம் படி யருள் செய்வாயாக, என்பது.

(வி - ரை.) களிப்பாராக என்பது களிப்பாரா என ஈறு தொகுத்தது. வற்றல் மரம் - உலர்ந்த மரம். ஊடுதல் - பிணங்குதல். (௧௧)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# குழைத்தபத்து.

## ஆத்துமநிவேதனம்.

திருச்சிற்றம்பலம்.

### ஆசிரியவிருத்தம்.

குழைத்தாற்பண்டைக்கொடுவினைநோய்
காவாயுடையாய்கொடுவினையே
னுழைத்தானுறுதியுண்டோதா
னுமையாள்கணவாவெனையாள்வாய்
பிழைத்தாற்பொறுக்கவேண்டாவோ
பிறைசேர்சடையாய்முறையோவென்
றழைத்தாலருளாதொழிவதே
யம்மானேயுன்னடியேற்கே.

(ப - ரை.) பண்டை - முன்னாளிற் செய்த, கொடுவினை நோய் - கொடிய வினைகளும் அவற்றா லுண்டாகும் நோய்களும், குழைத்தால் - என்னை மெலிவித்தால், காவாய் - என்னைக் காத்தருள்வாயாக, உடையாய் - யாவும் உடையவனே! கொடு வினையேன் - கொடிய பாவத்தை யுடைய நான், உழைத்தால் - வருந்தினால், உறுதி உண்டோ - (அதனால் உனக்கு ஒரு) நன்மை யுண்டோ, உமையாள் கணவா - உமாதேவிக்குக் கொழுநனே! என்னை ஆள்வாய் - என்னை யாள்வாயாக, பிழைத்தால் - பிழை செய்தால், பொறுக்க வேண்டாவோ - [அதனை] பொறுத்துக்கொள்ள வேண்டாமோ, பிறைசேர் - பிறை தங்கிய, சடையாய் - சடையை யுடையவனே! முறையோ என்று அழைத்தால் - முறையோ வென்று கூவினால், அம்மானே - எனது தந்தையே! உன் அடியேற்கு - உன் அடியேனுக்கு, அருளாது ஒழிவதே - அருள் செய்யா தொழிவதோ! [உனக்குத் தகுதியாவது] எ - று.

(க - ரை.) இறைவனே! கொடுவினை நோய் என்னை வருத்தினால் அடியேனைக் காத்தருளவேண்டும், அடியேன் வருந்தினால் உனக்குறுதியோ, யாம் பிழைசெய்தால் நீ பொறுக்க வேண்டாமோ, யாம் முறையிட்டழைத்தால் நீ யருளாதொழிவதுதானோ உனக்குத் தகுதியாவது, என்பது.

(வி - ரை.) குழைத்தல் - மெலிவித்தல். கா - காப்பாற்றல். உறுதி - நன்மை. பிறை - சந்திரன். (க)

அடியேனல்லலெல்லாமுன்
 னகலவாண்டாயென்றிருந்தேன்
கொடியேரிடையாள்கூறுவெங்
 கோவேயாவாவென்றருளிச்
செடிசேருடலைச்சிதையாத
 தெத்துக்கெங்கள்சிவலோகா
வுடையாய்கூவிப்பணிகொள்ளா
 தொறுத்தாலொன்றும்போதுமே.

(ப - ரை.) அடியேன் - அடியேனுடைய, அல்லல் எல்லாம் - துன்பங்கள் எல்லாவற்றையும், அகல - பற்றற நீங்கும்படி, முன் ஆண்டாய் - ஆதியில் ஆண்டருளினாய், என்று இருந்தேன் - என்று அன்புடன் கருதியிருந்தேன், கொடி ஏர் இடையாள் - கொடிபோலும் அழகிய இடையை யுடையவளாகிய உமாதேவியின், கூறு - பங்கனே! எம் கோவே - எமது இறைவனே! ஆவா என்று - ஐயோ என்று, அருளி-மனமிரங்கிக் கிருபைசெய்து, செடிசேர்-வினை சேர்ந்த, உடலை - உடம்பை, சிதையாதது - கொந்தி யழிக்காததும், எங்கள் சிவலோகா - எங்கள் சிவலோகநாதனே! உடையாய் - யாவுமுடையவனே! கூவி பணிகொள்ளாது - அழைத்துப் பணிகொள்ளாமல், ஒறுத்தால்-வருத்தினால், ஒன்றுமே போதும் - அவ்வொறுத்தல் ஒன்றுமே அடியேனுக்கு அமையும், எ - று.

(க - ரை.) இறைவனே! அடியேனது துன்பமுழுதும் நீங்கும்படி முன்னே யென்னை யாண்டுகொண்டா யென்றிருந்தேன், எனக்கிரங்கி இந்த வுடம்பை யழிக்காதது யாதுக்கு, என்னைக் கூவிப்பணிகொள்ளாது வருத்தினால் அதுவேயமையும், என்பது.

(வி - ரை.) கொடி - பூங்கொடி. செடி - பாவம். எதுக்கு என்பது எத்துக்கு என மிக்குவந்தது. ஒறுத்தல் - வருத்துதல். (உ)

ஒன்றும்போதாநாயேனை
 யுய்யக்கொண்டநின்கருணை
யின்றேயின்றிப்போய்த்தோதா
 னேழைபங்காவெங்கோவே

குன்றேயனையகுற்றங்கள்
குணமாமென்றேநீகொண்டா
லென்றான்கெட்டதிரங்கிடா
யெண்டோண்முக்கணெம்மானே.

(ப - ரை.) ஒன்றும் போதா நாயேனை - ஒன்றுக்கும் பற்றாத நாயினேனை, உய்யக்கொண்ட - ஜீவிக்கக் கொண்டருளின, நின் கருணை - உன்பெருங் கருணையானது, இன்று இன்றி போய்த்தோ - இன்றேடு இல்லாது போய் விட்டதோ! ஏழை பங்கா - ஏழை பங்கனே! எம் கோவே - எம்பிறைவனே! குன்று அனைய குற்றங்கள் - மலையை நிகர்த்த பெருங்குற்றங்களையும், குணம் ஆம் என்று நீ கொண்டால் - குணமாமென்று நீ யேற்றுக்கொண்டால், என் தான் கெட்டது - உனக்கு யாது காரியந்தான் கெட்டுப்போயிற்று, [ஆன தால்] இரங்கிடாய் - [நீசற்று] இரங்கி யருளாய், எண் தோள் - எட்டுப்புயங் களையும், முக்கண் - மூன்று கண்களையும் உடைய, எம்மானே - எம்பெரி யோனே! எ - று.

(க - ரை.) இறைவனே! ஒன்றுக்கும் பற்றாத நாயேனை முன்னே யாண் டருளின வுன் கருணை இப்பொழுது இல்லாமற் போயிற்றோ! என் குற்றங் கள் குன்றை நிகர்த்திருப்பினும் அவற்றைக் குணமென்று நீ கொண்டால் உனக்கென்ன கெடுதி, என்மீதிரக்கஞ்[சற்று] செய்தருளவேண்டும், என்பது.

(வி - ரை.) போது - பற்று. போயிற்றோ என்பது போய்த்தோ என வந்தது. குன்று - மலை. குணம் - நன்மை. (௩)

மானேர்நோக்கிமணவாளா
மன்னேநின்சீர்மறப்பித்திவ்
வூனேபுகவென்றனைநூக்கி
யுழலப்பண்ணுவித்திட்டா
யானாலடியேனறியாமை
யறிந்துநீயேயருள்செய்து
கோனேகூவிக்கொள்ளுநா
ளென்றென்றுன்னைக்கூறுவதே.

(ப - ரை.) மான் - மானினது, நேர் - நோக்கத்தை, நோக்கி - யொத்த வளாகிய உமாதேவிக்கு, மணவாளா - மணாளனே! மன்னே - இறைவனே! நின் சீர் - உன் மேன்மையை, மறப்பித்து - மறக்கப்பண்ணி, இ ஊன் ஏ - இவ்வுடம்பின்கண்ணே, புகு - புக, என்றனை நூக்கி - என்னைத் தள்ளி, உழலப் பண்ணுவித்திட்டாய் - உழலச் செய்வித்தாய், ஆனால் - ஆயின், அடி யேன் - அடியேனுடைய, அறியாமை அறிந்து - பேதமையை உணர்ந்து,

நீயே அருள் செய்து - நீயே யருள்பண்ணி, கோனே - தலைவனே! கூவிக் கொள்ளும் நாள் - என்னை அழைத்துக்கொள்ளும் தினம், என்று என்று - எத்தினமோ வென்று தான், உன்னைக் கூறுவது - யான் உன்னைப் புகழ்வது, எ - று.

(க - ரை.) இறைவனே! உன்னை மறக்கப் பண்ணி இவ்வுடம்பிற் புகுத்தி யுழலச்செய்தனை யாகுல் அடியேனது அறியாமையை யறிந்து நீயே யென்னைக் கூவிக்கொள்ளுங் காலம் எக்காலமோ என்று எப்பொழுது உன்னைப் புகழ்வது, என்பது.

(வி - ரை.) மான் ஏர் எனவும் பிரித்து மானினது நோக்கம்போல அழகாகிய என்றும் பொருளுரைக்கலாம். நூக்கல் - தள்ளல். கூவுதல் - இங்ஙனம் அழைக்குதல். (ச)

கூறுநாவேமுதலாகக்
கூறுங்கரணமெல்லாநீ
தேறும்வகைநீதிகைப்புநீ
தீமைநன்மைமுழுதுநீ
வேறோர்பரிசிங்கொன்றில்லை
மெய்ம்மையுன்னைவிரித்துரைக்கிற்
றேறும்வகையென்சிவலோகா
திகைத்தாற்றேற்றவேண்டாவோ.

(ப - ரை.) கூறும் - (உன்னைப்) புகழ்கின்ற, நாவே முதல் ஆக - நாவையே முதலாகக்கொண்டு, கூறும் - சொல்லுகிற, கரணம் எல்லாம் - கரணங்களெல்லாம், நீ - நீயே, தேறும் வகை நீ - தெளியும் விதம் நீயே, திகைப்பு நீ - திகைத்தலும் நீயே, தீமை நன்மை முழுதும் நீ - தீமை நன்மைகள் என்கிற எல்லாம் நீயே, இங்கு - இவ்விடத்தில், வேறு ஓர் பரிசு - வேறொரு வகை, ஒன்று இல்லை-ஒன்றேனும் இல்லை, மெய்ம்மை-உண்மையாக, உன்னை விரித்து உரைக்கின்-உன்னை விரித்துச் சொல்லப்புகின், தேறும் வகை என் - தெளியும் விதம் யாது? சிவலோகா - சிவலோகனே! திகைத்தால் - யாம் [தடுமாறி] திகைத்தால், தேற்றவேண்டாவோ - எம்மைத் தெளிவிக்க வேண்டாமோ, எ - று.

(க - ரை.) இறைவனே! எல்லாவத்துக்களும் நீயாகவே யிருந்தால், நான் தேறித்தெளியும் வழி யாது? நான் [அவ்வாறு] திகைத்தால் என்னைத் தேற்ற வேண்டாமோ, என்பது.

(வி - ரை.) நா - நாக்கு. திகைத்தல் - மயங்கல், [பிரமித்தல்] பரிசு - வகை. விரித்தல் - பிரித்தல். (ரு)

வேண்டத்தக்கதறிவோய்நீ
வேண்டமுழுதுந்தருவோய்நீ
வேண்டுமயன்மாற்கரியோய்நீ
வேண்டியென்னைப்பணிகொண்டாய்
வேண்டிநீயாதருள்செய்தா
யானுமதுவேவேண்டினல்லால்
வேண்டும்பரிசொன்றுண்டென்னி
லதுவுமுன்றன்விருப்பன்றே.

(ப - ரை.) வேண்டத்தக்கது - [ஆன்மான்கள்] தேவையென்றதற்குரியன, அறிவோய் - இன்னதென்று அறிபவன் நீ - நீயே, வேண்ட - [அவ்வாறு] அவர்கள் விரும்புதலும், முழுதும் - [வேண்டப்படுவன] யாவற்றையும், தருவோய் - தருபவன், நீ - நீயே, வேண்டும் - [உன்னை] துதித்துப் பிரார்த்திக்கின்ற, அயன் மாற்கு - பிரம விட்டுணுக்களுக்கும், அரியோய் - காணுதற்கரிதானவனும், நீ - நீயே, [அவ்வாறுள்ள பெருமையையுடைய நீ] வேண்டி - மிகவும் விருப்புற்று, என்னை - அடியேனை, பணிகொண்டாய், அடிமையாளாக்கிக்கொண்டாய், வேண்டி - விரும்பி, நீ - நீதான், யாது அருள்செய்தாய்- [என்னை] எந்த மார்க்கத்திலிருக்க அருள் புரிந்தனையோ! யானும் - அடியேனும், அதுவேவேண்டின் - [உன் எண்ணமாகிய] அதனையே விரும்புதல், அல்லால் - அல்லாமல், வேண்டும் பரிசு - ஆசைப்படும் பரிசு, ஒன்று உளது- ஒருவத்துவு இருக்கிறதென்று, என்னில் - என்று சொலில், அதுவும் - அதுவும், உன்றன் - உன்னுடைய, விருப்பு - ஆசை, அன்றே - அல்லவோ! எ-று.

(க - ரை.) இறைவனே! விரும்பத்தக்கதை அறிதல் முதலாயின நற்குணங்களை யுடைய நீ விரும்பி யெதனை அருள்செய்வையோ, அதனையே அடியேனும் விரும்புவதன்றி வேறொன்றில்லை, அவ்வாறு நான் விரும்பினும் அவ்விருப்பமும் உன்னுடைய விருப்பமேயாம், என்பது.

(வி - ரை.) பணிதல் - அடிமை செய்தல். பரிசு - தன்மை, பரிசில் எனினுமாம். அருள் - கிருபை. (சு)

அன்றேயென்றனுவியு
முடலுமுடைமையெல்லாமுங்
குன்றேயனையாயென்னையாட்
கொண்டபோதேகொண்டிலையோ
வின்றோரிடையூறெனக்குண்டோ
வெண்டோண்முக்கணெம்மானே
நன்றேசெய்வாய்பிழைசெய்வாய்
நானோவிதற்குநாயகமே.

(ப - ரை.) அன்றே - அத்தினமே, என்றன் - என்னுடைய, ஆவியும் - உயிரையும், உடலும் - உடலையும், உடைமை - பொருளையும், எல்லாமும் - யாவற்றும், குன்று - மலையை, அனையாய் - நிகர்த்த சிவபெருமானே! என்னை - அடியேனை, ஆட்கொண்டபோதே - [குருமூர்த்தமாய் எழுந்தருளிவந்து] அடிமை செய்தாட்கொண்ட பொழுதே, கொண்டிலையோ - [என்னை] ஏற்றுக்கொள்ள வில்லையோ! [அங்ஙனமாக] இன்று - இப்பொழுது, எனக்கு - [தொண்டு பூண்டொழுகா நின்ற] அடியேனுக்கு, ஓர் இடை ஊறு உண்டோ- ஒரு ஆக்ஷேபனையு முண்டோ! எண் - எட்டு, தோள்-புஜங்களையும், முக்கண் - மூன்று கண்களையும் உடைய, எம்மானே - என் தந்தையே! நன்றே - நலத்தினையே, செய்வாய் - அருள்செய்யக்கடவை, பிழை - கொடிய தீமையோ செய்வாய் – செய்யக்கடவை, இதற்கு - இப்பேர்க்கொற்றக் காரியத்துக்கு, நாயகம் - தலைவனாகிய காரணகர்த்தன், நானோ - யாந்தானோ! எ - று.

(க - ரை.) இறைவனே! நீ என்னிடத்தில் அன்புகூர்ந்து திருப்பெருந்துறை யென்னும் பதியில் குருந்தமரத்தின் நிழலில் குருமூர்த்தமாய் எழுந்தருளிவந்து என்னை யாட்கொண்ட போதே, என் உடல், பொருள், ஆவி இம்மூன்றினையும் ஏற்றுக்கொண்டனை யல்லவா! அதனால் இன்று எனக்குத் தடையுண்டோ! நீ நன்மைசெய்தாலும் தீமைசெய்தாலும் உன்னைக்கேட்போர் ஒருவருமில்லை, என்பது.

(வி - ரை.) அன்று-என்றது திருப்பெருந்துறையில் குருந்த மரத்தினடியில் குருமூர்த்தமாய் எழுந்தருளி ஆட்கொண்டகாலத்தைக் குறித்து. இடையூறு - தடை. நாயகம் - பண்பாகுபெயர். (எ)

நாயிற்கடையாநாயேனை
நயந்துநீயேயாட்கொண்டாய்
மாயப்பிறவியுன்வசமே
வைத்திட்டிருக்குமதுவன்றி
யாயக்கடவேனானோதா
னென்னதோவிங்கதிகாரங்
காயத்திடுவாயுன்னுடைய
கழற்கீழ்வைப்பாய்கண்ணுதலே.

(ப - ரை.) நாயின் கடை ஆம் - நாயினும் கடைப்பட்டவனாகிய, நாயேனை - நாயினேனை, நயந்து - விரும்பி, நீயே ஆட்கொண்டாய் - நீயே வலிய வந்து அடிமைகொண்டு ஆளாக்கிக்கொண்டாய், மாயப்பிறவி - இம் மாயப்பிறப்பு, உன்வசமே - உன் வசத்திலேயே, வைத்திட்டிருக்கும் - வைத்திருப்பது, அது அன்றி - அது அல்லாமல், ஆயக்கடவேன் - ஆராயக் கடவேன், நானோதான் - நாந்தானோ, இங்கு - இவ்விடத்தில், அதிகாரம் - [நடத்

தும்] அதிகாரம், என்னதோ - என்னுடையதோ! காயத்து-இந்த வுடம்பில், இடுவாய் - வைப்பாய், உன்னுடைய கழல் - உன் திருப்பாதத் தடியில், கீழ் வைப்பாய் - கீழேவைத்து ஆள்வாய், கண்ணுதலே - நெற்றிக் கண்ணை யுடைய சிவபெருமானே! எ - று.

(க - ரை.) நெற்றிக் கண்ணை யுடைய சிவபெருமானே! நாயினுங் கடைப்பட்ட நாயினேனை எக்காரணத்தையோ உட்கொண்டு நீயே விரும்பி வந்து ஆளாக்கிக்கொண்டனை, மாயப் பிறவியும் உன் வசத்ததே, என்னை இவ்வுடம்பில் இட்டாலும், உன் திருவடிக்கு ஆளாக்கிவிட்டாலும் முழு சம்மதமே, என்பது.

(வி - ரை.) நயத்தல் - விரும்புதல். வசம் - பக்ஷம். அதிகாரம் - ஆளுகை. ஆய்தல் - ஆராய்தல். (அ)

கண்ணார்நுதலோய்கழலிணைகள்
கண்டேன்கண்கள்களிகூர
வெண்ணாதிரவும்பகலுநா
னவையேயெண்ணுமதுவல்லான்
மண்மேல்யாக்கைவிடுமாறும்
வந்துன்கழற்கேபுகுமாறு
மண்ணாவெண்ணக்கடவேனோ
வடிமைசாலவழகுடைத்தே.

(ப-ரை.) கண் ஆர் நுதலோய் - நெற்றிக் கண்ணை யுடையவனே! கண்கள் களிகூர - என் கண்களினின்று ஆநந்தக்கண்ணீர் பெருகும்படி, கழல் இணைகள் - உன் இரண்டு திருத்தாட்களையும், கண்டேன் - ஆநந்தத்தோடு பார்த்தேன், எண்ணாது - யாதொன்றையும் நினையாமல், இரவும் பகலும் - இரவினும் பகலினும், நான்-யான், அவையே-அத்திருப்பாதங்களையே, எண்ணும் அது அல்லால்-நினைப்பது அல்லாது, மண்மேல் - இப்பூமியின் மீது, யாக்கை விடும் ஆறும் - சரீரம் விட்டு நீங்குமாற்றையும், வந்து - உவந்து வந்து, உன் கழற்கே - உன் திருவடியின்கண்ணே, புகும் ஆறும் - சேருமாற்றையும், அண்ணா - தாதையே! அடிமை - உன்தொண்டனேன், எண்ணக்கடவேனோ - நினைக்கக்கடவேனோ, [அவ்வாறு நினைத்தல்] சால - மிகவும், அழகு உடைத்து - அழகுடையது, எ - று.

(க - ரை.) நெற்றிக்கண்ணை யுடைய எம்பெருமானே! அடியேன் என் கண்களினின்று ஆநந்தக் கண்ணீர் பெருகும்படி உன் இரண்டு திருவடிகளையும் மிக்க பேராநந்தத்தோடு பார்த்தேன், இரவும் பகலும் யாதொன்றும் நினையாமல் அத்திருப்பாதங்களையே யெண்ணுவதல்லாமல், வேறு நினைத்தேனில்லை,

[ஆதலால்] இப்புவிமீது இச்சரீரம் என்னைவிடு மாற்றையும், உன் திருவடியின் கண்ணே சேருமாற்றையும் நினைக்கக்கடவேனோ! [அவ்வாறு நினைத்தல்] இதுவும் ஓர் வியப்புடையது, என்பது.

(வி - ரை.) கண்ணார் நுதலோய் - கண்ணமைந்த நெற்றியை யுடையானே. அடிமை - பண்பாகு பெயர். (௯)

அழகேபுரிந்திட்டடிநாயே
னரற்றுகின்றேனுடையானே
திகழாநின்றதிருமேனி
காட்டியென்னைப்பணிகொண்டாய்
புகழேபெரியபதமெனக்குப்
புராணநீதந்தருளாதே
குழகாகோலமறையோனே
கோனேயென்னைக்குழைத்தாயே.

(ப - ரை.) அழகே - உன் அழகையே, புரிந்திட்டு - பார்க்க விரும்பி, அடி நாயேன் - உன் தொண்டனாகிய நாயினேன், அரற்றுகின்றேன் - கண்ணீர் விட்டு அழாநின்றேன், திகழாநின்ற - பிரகாசிக்காநின்ற, திருமேனி காட்டி - அழகிய உருவத்தைக் காட்டி, என்னை - அடியேனை, பணிகொண்டாய் - தொண்டு செய்ய ஆளாக்கிக்கொண்டாய், புகழ் பெரிய - பெருமை வாய்ந்த கீர்த்தியை யுடையவனே! பதம் - உன் திருவடியை, புராண - புராதனனே! நீ - நீ, தந்தருளாதே - கொடுத்தருளாமல், குழகா - சிவபெருமானே! கோலம் - அழகுவாய்ந்த, மறையோனே - வேதியனாய் வந்த தேவனே! கோனே - இறைவனே! என்னை - எந்தனை, குழைத்தாயே - மனங்குழையச் செய்தனையே! எ - று.

(க - ரை.) இறைவனே! உன்னழகைக்காண விரும்பியே அடியேன் அரற்று கின்றேன், விளங்குகின்ற உன் திருமேனியைக் காட்டி யென்னைப் பணிகொண்டனை, உன் திருவடியை யெனக்குத் தந்தருளாமல் என்னை மனங் குழைத்தாயே, என்பது.

(வி - ரை.) புரிதல் - விரும்புதல். பதம் - திருவடி, பதவியெனினுமாம். புராணன் - பழமையோன். குழகன் - அழகன். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# உயிருண்ணிப்பத்து.

## சிவாநந்தமேலிடுதல்.

[சிவாநந்தமேலிடுதல் என்பது நேயமேலிடுதல்.]

திருச்சிற்றம்பலம்.

### கலிவிருத்தம்.

பைந்நாப்படவரவேரல்குலுமைபாகமதாயென்
மெய்ந்நாடொறும்பிரியாவினைக்கேடாவிடைப்பாகா
செந்நாவலர்பரசும்புகழ்த்திருப்பெருந்துறையுறைவா
யெந்நாட்களித்தெந்நாளிறுமாக்கேனினியானே.

(ப - ரை.) பை நா - பசிய நாவையும், படம் - படத்தையும் உடைய, அரவு - பாம்புபோன்ற, ஏர் - அழகுவாய்ந்த, அல்குல் - அல்குலை யுடைய, உமைபாகமதாய் - உமாதேவி பாகத்தை யுடைத்தாகி, என் - எனது, மெய் - மனத்தை, நாள்தொறும் பிரியா - தினந்தோறும் நீங்காத, வினைக்கேடா - வினைக்கேடனே! விடைப்பாகா - இடபமூர்வோனே! செந்நாவலர்-செவ்விய நாவலர்கள், பரசும் - துதிக்கின்ற, புகழ் - புகழினை யுடைய, திருப்பெருந் துறை உறைவாய் - திருப்பெருந்துறையில் வாழ்வோனே! இனி - இனி, யான் - நான், எந்நாள் களித்து — எந்தக்காலத்தில் (சுவாநுபோகத்தில்) களித்து, எந்நாள் இருமாக்கேன் - எந்தக் காலத்தில் இறுமாந்திருப்பேன், எ - று.

(க - ரை.) உமாதேவி பாகனாய் என் மனத்தில் என்றும் பிரியாதிருக்கிற பாவநாசனே! இடபவாகநனே! அறிஞர் புகழும்படியான திருப்பெருந் துறையில் எழுந்தருளி யிருப்பனே! இனி நான் எந்தக்காலத்தில் உன்னருள் பெற்று இறுமாந்திருப்பேனோ! என்பது.

(வி - ரை.) நா, படம் என்பவற்றீற்றில் எண்ணும்மைகள் தொக்கன. மெய் என்றது இங்கு மனத்தைக் குறித்தது. செந்நாவலர் - செவ்விய நாவன்மை யுள்ளவர். [அறிஞர்] இவர் முத்தமிழ் விரகர் முதலாயினோர். இறுமா

ப்பு - திருவருள் பெற்றதனு லுண்டாகுஞ் செருக்கு. வினைக்கேடன் என்றது மெய்யன்பரின் பஞ்சபாசத்தை நசிப்பித் தாட்கொள்ளும் பேரருளாளனென்றும் பொருளது. (௧)

நானாரடியணைவானொருநாய்க்குத்தவிசிட்டிங்
கூனாருடல்புகுந்தானுயிர்கலந்தானுளம்பிரியான்
றேனார்சடைமுடியான்மன்னுதிருப்பெருந்துறையுறைவான்
வானோர்களுமறியாததோர்வளமீந்தனனெனக்கே.

(ப - ரை.) அடி அணைவான்-[நின்] திருவடியை யடையவன், நான் ஆர்-நான்யார்? ஒரு நாய்க்கு - ஒரு நாயனையேனுக்கு, தவிசு இட்டு - ஆசநமிட்டு, இங்கு - இவ்விடத்தில், ஊன் ஆர்-எனது மாமிசம் நிறைந்த, உடல் புகுந்தான்-உடம்பிற் புகுந்தவனாகி, உயிர் கலந்தான் - உயிரோடு கலந்து, உள்ளம் பிரியான் - என் மனத்தை விட்டு நீங்காதவனாயிருந்து, எனக்கு - அடியேனுக்கு, வானோர்களும் அறியாதது - தேவர்களும் அறியவொண்ணாததாகிய, ஓர் வளம் ஈந்தனன் - [ஒப்பற்ற பேராநந்த முத்திச்] செல்வத்தைக் கொடுத்தருளினன், [அவன் யாவனெனின்] தேன் ஆர் - வண்டுகள் நிறைந்த, சடைமுடியான் - சடைமுடியை யுடையவனாய், மன்னு - நிலைபெற்ற, திருப்பெருந்துறை உறைவான் - திருப்பெருந்துறையில் வாழ்வோனாகிய சிவபெருமான், எ - று.

(க - ரை.) திருவடியை யடைதற்கு நான் என்ன தகுதியை யுடையேன், அப்படி யிருக்க, என்னுள்ளே புகுந்து உயிரிற்கலந்து என் மனத்தினின்றும் நீங்காதவனாயிருக்கிற திருப்பெருந்துறை யிறைவன், தேவர்களும் அறியாத ஒப்பற்ற செல்வத்தைக் கொடுத்தருளினன், என்பது.

(வி - ரை.) நானார் என்றது ஒருரிமையு மில்லேன் என்றபடி. அணைவான் என்பதில் வான் எதிர்கால வினையெச்சவிகுதி. புகுந்தான் - கலந்தான் என்பன முற்றெச்சங்கள். தேன் - கொன்றைமலர்த் தேன் எனினுமாம். வளம் என்றது முத்திச் செல்வத்தை. (௨)

எனைநானென்பதறியேன்பகலிரவாவதுமறியேன்
மனவாசகங்கடந்தானெனைமத்தோன்மத்தனாக்கிச்
சினமால்விடையுடையான்மன்னுதிருப்பெருந்துறையுறையும்
பனவனெனைச்செய்தபடிறறியேன்பரஞ்சுடரே.

(ப - ரை.) எனை நான் என்பது - என்னை யான் என்பதை, அறியேன் - அறிந்திலேன், பகல் இரவு ஆவதும் - பகல் இரவு என்பவைகளையும், அறியேன் - அறிந்திலேன், [அங்ஙனமாக] மனவாசகம் கடந்தான் - மனம் வாக்கு என்பவற்றைக் கடந்தவனும், சினம் மால் விடை உடையான் - கோவத்தை வாய்ந்த திருமாலாகிய இடபத்தையுடையவனும், மன்னு - நிலைபெற்ற, திருப்பெருந்துறை உறையும் - திருப்பெருந்துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்

கண் வாழ்கின்ற, பனவன் - வேதியனும், பரஞ்சுடர் - பரஞ்சோதியும் ஆகிய சிவபெருமான், என்னை - அடியேனை, மத்தோன்மத்தன் ஆக்கி - மிகு களிப் புடையோனாக, எனை செய்த - அடியேனைச்செய்த, படிறு அறியேன் - வஞ்ச கத்தை அறிந்திலேன் ! எ - று.

(க - ரை.) யான் இத்தன்மையேனென் றறியாத என்னைத் திருப்பெ ருந்துறை யிறைவன் மதோன்மத்தனாக்கி வஞ்சித்த வகையை யறிந்திலேன், என்பது.

(வி - ரை.) எனை என்றது ஆன்ம சோருபத்தை. "எனைநா னென் பதறியேன்" என்றது தேகத்தை நான் என்பதை அறிந்திலேன் என்றபடி. 'மனவாசகங் கடந்தான்" என்றாராயினும். இனம் பற்றியும் பன்மை பற்றி யும் எஞ்சி நின்ற காயத்தையுஞ் சேர்த்து முக்கரணங்களுக்கும் எட்டாதவன் என்றுரைத்துக்கொள்க. (ரு)

வினைக்கேடருமுளரோ
பிறர்சொல்லீர்வியனுலகி
லெனைத்தான்புகுந்தாண்டா
னெனதென்பின்புரையுருக்கிப்
பினைத்தான்புகுந்தெல்லே
பெருந்துறையிலுறைபெம்மான்
மனத்தான்கண்ணினகத்தான்
மருமாற்றத்திடையானே.

(ப - ரை.) என்னை - அடியேனை, தான் - தானே, புகுந்து - எழுந்த ருளி, ஆண்டான் - என்னை ஆண்டுகொண்டான், எனது என்பின் புரை உருக் கி - எனது என்பின் உட்டுளைகளையும் உருகச்செய்து, பின்னை புகுந்து - மே லும் வந்து, பெருந்துறையில் உறை பெம்மான் - திருப்பெருந்துறையில் வாழ் கின்ற பெருமான், மனத்தான் - என் மனத்தினிடத்தினன், கண்ணின் அகத் தான் - கண்ணினிடத்தினன், மற்றும் - பின்னும், மாற்றத்திடையான் - சொல்லி னிடத்தினன், [இவன்போல] வியன் உலகில் - பெரிய வுலகின்கண், வினைக்கேடரும் - வினைக்கேடர்களும், பிறர் உளரோ - பிறர் உளராவரோ, சொல்லீர் - [உலகத்தாரே] சொல்லுங்கள், எ - று.

(க - ரை.) உலகத்தாரே ? திருப்பெருந்துறை யிறைவன், எனது என் புருகச்செய்து என் மனத்திலும் கண்ணிலும் சொல்லிலும் இருக்கிறான், இவ னைப்போலப் பாவநாசர் உலகத்தில் உளரோ ! சொல்லுங்கள், என்பது.

(வி - ரை.) வினைக்கேடர் - வினையைக்கெடுப்பவர். எல்லே - வியப் பிடைச்சொல். உளர் - இருப்பர். (சு)

பற்றாங்கவையற்றீர்
பற்றும்பற்றாங்கதுபற்றி
நற்றாங்கதியடைவோ
மெனிற்கெடுவீரோடிவம்மின்
றெற்றார்சடைமுடியான்மன்னு
திருப்பெருந்துறையிறைசீர்
கற்றாங்கவன்கழல்பேணினரொடுங்
கூடுமின்கலந்தே.

(ப - ரை.) பற்று அவை அற்றீர் - பற்றுக்களாகிய அவைகளை அற்றவர்களாய், பற்றும் - பற்றுதற்குரிய, பற்று - பற்றாகிய, அது - அதனை, பற்றி - பிடித்து, நற்று ஆம் கதி - நல்லதாகிய கதியை, அடைவோம் எனின் - அடைவோமென்பீராயின், கெடுவீர் - கெடுவீர்களே, ஓடிவம்மின் - ஓடிவாருங்கள், தென்று ஆர் - அழகினை யுடையதாகிய, சடை முடியான் - அரிய சடைமுடியை யுடையவனும், மன்னு - நிலைபெற்ற, திருப்பெருந்துறை யிறை - திருப்பெருந்துறைக்கு இறைவனும் ஆகிய சிவபெருமானது, சீர்-புகழையே, கற்று - சொல்லக் கற்று, ஆங்கு - அவ்வாறே, அவன் கழல் - அவன் திருவடியையே, பேணினரொடும் - விரும்பினவராகிய அடியாரோடும், கலந்து கூடுமின் - கலந்து சேருங்கள் எ - று.

(க - ரை.) விடவேண்டிய ஆசாபாசத்தைப் பற்றைவிட்டுப் பற்றவேண்டிய பற்றைப்பற்றி உய்ய எண்ணுவீராயின், விரைந்து வந்து திருப்பெருந்துறை யிறைவனது புகழைப் பேசக்கற்று அவனடியாரோடு கூடி வாழுங்கள், என்பது.

(வி - ரை.) பற்று இரண்டுடன் முன்னையது பிரபஞ்சப்பற்று. பின்னையது இறைவன் பற்று. "பற்றுக பற்றற்றான் பற்றினைப் பற்றைப், பற்றுக பற்று விடற்கு" என்றார் தேவரும். நன்று – நற்று என வலித்தல் பெற்றது. தென் - அழகு. தெற்று - அழகை யுடையது. கலந்து கூடுதல் - இடையறாது கலந்திருத்தல். (௭)

கடலின்றிரையதுபோல்வரு
கலக்கமலமறுத்தென்
னுடலுமெனதுயிரும்
புகுந்தொழியாவண்ணநிறைந்தான்
சுடருஞ்சுடர்மதிசூடிய
திருப்பெருந்துறையுறையும்
படருஞ்சடைமகுடத்தெங்கள்
பரன்றான்செய்தபடிறே.

(ப - ரை.) கடலின் - திருப்பாற்கடலின், திரைபோல்வரு - திரைகள் போல பின்பற்றி வருகின்ற, கலக்கம் – கலங்குதற் கேதுவாகிய, மலம் - மும் மலங்களையும், அறுத்து - பற்றறச் சேதித்து, என் - என்னுடைய, உடலும் - திரேகத்தினும், எனது - என், உயிரும் - உயிரினும், புகுந்து - உட்குடியிருக்கப் புகுந்து, ஒழியா வண்ணம் - என்றும் நீங்காவண்ணம், நிறைந்தான் - சதா வியாபித்திருந்தனன், சுடரும் - பிரகாசிக்கின்ற, சுடர் - ஜோதியை யுடைய, மதி - சந்திரனை, சூடிய - சடையிற் றரித்துக்கொண்ட, திருப்பெருந்துறை உறையும் - திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்தின்கண் எழுந்தருளி வாழ்கின்ற, படரும் - விரிந்த, சடை மகுடத்து - சடா மகுடத்தை யுடைய, எங்கள் - எமது, பரன் - மேலோனாகிய சிவபெருமான், செய்த - உண்டாக்கிய, படிறு - பெரு வஞ்சனை, [இருந்தவிதம் என்னை !] எ - று.

(க - ரை.) திருப்பாற்கடலின் அலைகள்போல ஒன்றன்பின் ஒன்றாக இடையறாது வருகின்ற என் கலக்கத்துக்குக் காரணமாகிய மலங்களை யொழித்து, என் உடலுயிர்களிற் புகுந்து இடையற நிறைந்து நின்ற திருப்பெருந் துறைக் கிறைவனாகிய சிவபெருமான் என்னைச் செய்த வஞ்சக மிருந்தவாறென்னை ! என்பது.

(வி - ரை.) திரை - முதனிலைத் தொழிலாகு பெயர். மகுடம் - முடி. படிறு - வஞ்சகம். (சு)

வேண்டேன்புகழ்வேண்டேன்செல்வம்
  வேண்டேன்மண்ணும்விண்ணும்
வேண்டேன்பிறப்பிறப்புச்சிவம்
  வேண்டார்தமைநாளுந்
தீண்டேன்சென்றுசேர்ந்தேன்மன்னு
  திருப்பெருந்துறையிறைதான்
பூண்டேன்புறம்போகேனினிப்
  புறம்போகலொட்டேனே.

(ப - ரை.) புகழ் - கீர்த்தியை, வேண்டேன் - விரும்பேன், செல்வம் திரவியத்தை, வேண்டேன் - விரும்பேன், மண்ணும் - பூமியையும், விண்ணும் - ஆகாயத்தையும், வேண்டேன் - விரும்பேன், பிறப்பு - பிறத்த... இறப்பு - இறத்தலையும், வேண்டேன் - விரும்பேன், சிவம் - பரம... வேண்டார் தம்மை - பூசித்து விரும்பாதவர்களை, நாளும் - எப்போ... டேன் - தொடேன், மன்னு - நிலைபெற்ற, திருப்பெருந்துறை - திருப்பெருந் துறையென்னும் திவ்ய க்ஷேத்திரத்திற்கு, இறை - சிவஞான வைபோகனது, தாள் - திவ்ய திருவடியை, சென்று - போய், சேர்ந்தேன் - பக்கல் அடைந்தேன் ஆகி, பூண்டேன் - [அன்பைப்] போர்வையாகப் போர்த்துக்கொண்

டேன், இனி - இனிமேல், புறம்போகேன் - அப்புறம்போக இச்சிக்கேன், புறம் - [தாமரை மலர்போன்ற அழகிய திருவடியை] புறத்தே, போகல் ஒட்டேன் - போகவும் விடமாட்டேன், எ - று.

(க - ரை.) கீர்த்தி, செல்வம் முதலிய யாவையும் விரும்பேன், பரமசிவத்தை விரும்பாத பேதையர்களை ஒருபோதும் தொடேன், திருப்பெருந்துறையி லெழுந்தருளிய இறைவனது திருவடியை அடைந்தேன், ஆதலால் அப்பேர்க்கொற்றவனது திருவடியை எங்கும் போகவொட்டேன், என்பது.

(வி - ரை.) "தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார் - தோன்றலிற் தோன்றாமை நன்று," எனச் சிறப்பித்துக் கூறப்படுதலால் புகழை - முன்வைத்தார். தாள் - திருவடி. (எ)

கோற்றேனெனக்கென்கோ
குரைகடல்வாயமுதென்கோ
வாற்றேனெங்களரனே
யருமருந்தேயெனதரசே
சேற்றார்வயல்புடைசூழ்தரு
திருப்பெருந்துறையுறையு
நீற்றார்தருதிருமேனி
நின்மலனேயுனையானே.

(ப - ரை.) எங்கள் - எங்களுடைய, அரனே - சிவபெருமானே! அருமருந்தே - அறிதற் கரிய அவுடதமே! எனது - என்னுடைய, அரசே - இராஜாதி இராஜனே! சேற்று ஆர் - சேடை நிறைந்த, வயல் - கழனிகள், புடைசூழ் தரு - நாற்பக்களிலுஞ் சூழப்பட்ட, திருப்பெருந்துறை - திருப்பெருந்துறை க்ஷேத்திரத்தில், உறையும் - எழுந்தருளி வாழாநின்ற, நீற்று ஆர் தரு - திருவெண்ணீற்றால் பூசிய, திருமேனி - அழகிய மேனியை யுடைய, நின்மலனே - நிர்மல சொரூபனே! உன்னை - உன்னை, யான் - நான், எனக்கு - அடியேனுக்கு, கோல்தேன் என்கோ - கொம்பில் கட்டிய தேன் எனக்கேனோ? குரை - சப்திக்கின்ற, கடல்வாய் - திருப்பாற்கடலிற் றோன்றிய, அமுது என்கோ - அமிர்தம் எனக்கேனோ! [அங்ஙனமாயின்] ஆற்றேன் - உன்னை பிரிந்து தனியாயிருக்க யான் சகிக்கேன், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! உன்னைக் கொம்பிற் கட்டிய தேன் என்பேனோ, திருப்பாற்கடலி லுண்டாகிய அமிர்தம் என்பேனோ, யான் யாதென்றுதான் சொல்வேன், இனி உன்னைப் பிரிந்து இருக்க மனந்தாளேன், என்பது.

(வி - ரை.) கோற்றேன் - கொம்பில் கட்டிய தேன். குரைத்தல் - சப்தித்தல். அரன் - சங்கார கர்த்தன், மருந்து என்றது - பிறவிப் பிணிக்கு அவுடதம் என்றபடி. மேனி - உடம்பு. நின்மலன் - மலரகிதன். (அ)

எச்சம்மறிவேனானெனக்
　　கிருக்கின்றதையறியே
னச்சோவெங்களரனே
　　யருமருந்தேயெனதமுதே
செச்சைமலர்புரைமேனியன்
　　றிருப்பெருந்துறையுறைவா
னிச்சமெனநெஞ்சின்மன்னி
　　யானாகிநின்றானே.

(ப - ரை.) எச்சம் - [இறைவன்] குறைகளை, அறிவேன் நான் - தெரிவேனாகிய நான், எனக்கு - எந்தனுக்கு, இருக்கின்றதை - இருப்பதை, அறியேன் - தெரிந்தேனில்லை, அச்சோ - [ஈது] அதிசயம், எங்கள் - எங்களுடைய, அரன் - சிவபெருமான், அருமருந்து - மிக அருமையாகிய திருமருந்து, எனது - என்னுடைய, அமுது - அமிர்தமே ! செச்சை மலர் - வெட்சி மலரை, புரை - நிகர்த்த, மேனியன் - திருமேனியை யுடையவன், திருப்பெருந்துறை - திருப்பெருந்துறையின்கண், உறைவான் - வந்து வாசஞ்செய்வோன், [அவன்] நிச்சம் - தினந்தோறும், என் - என்னுடைய, நெஞ்சில் - மனத்தினிடத்தே, மன்னி - நிலைபெற்று, யான் ஆகிநின்றான் - நானேயாகி நின்றனன், எ - று.

(க - ரை.) சிவபெருமானது குறைகளை யறிவேனாகிய நான் என்னிடத்தி லிருக்கும் குற்றங்களை யறியேன், அப்படியிருக்க திருப்பெருந்துறையி லெழுந்தருளிய இறைவன் என் மனத்தினிடத்தே யிடையறாமல் என்றும் நிலைபெற்று நானேயாய் நின்றனன், என்பது.

(வி - ரை.) இறைவனிடத்துக் குறை - தமக்கருள் செய்யாமை முதலியன. எமக் கிருக்கின்றது என்றது தம்மிடத்துள்ள குறை. அதாவது அவைகளை வழிபடாமை. அரனே - மருந்தே அமுதே என்பவற்றின் ஏற்றேகாரங்கள் அசைகள். புரைகள் - நிகர்த்தல். யானாகி நின்றான் என்றது வேற்றுமை யின்றி நிற்றலை. (க)

வான்பாவியவுலகத்தவர்
　　தவமேசெயவவமே
யூன்பாவியவுடலைச்சுமந்
　　தடவிமரமானேன்
றேன்பாய்மலர்க்கொன்றைமன்னு
　　திருப்பெருந்துறையுறைவாய்
நான்பாவியனானாலுனை
　　நல்காயெனலாமே.

(ப - ரை.) வான் பாவிய - ஆகாயத்தின் கண்ணுள்ள, உலகத்தார் - உலகத்தவர்களாகிய தேவர்களும், தவமே செய்ய - தவத்தினையே செய்யா நிற்க, அவமே - வீணே, ஊன் பாவிய - மாமிசம் சேர்ந்த, உடலை-உடம்பை, சுமந்து - [சுமைத்தாங்கிப்போற்] றுங்கி, அடவி-காட்டின்கண், மரம் ஆனேன்- [வளர்ந்தோங்கி யிராநின்ற ஒதிய] மரமானேன், தேன் - தேனானது, பாய் - [பெருகிப்] பாயாநின்ற, கொன்றைமலர் - கொன்றைப்பூவை, மன்னு - நிலை பெற்ற, திருப்பெருந்துறை - திருப்பெருந்துறையென்னும் பதியில், உறையாய் - [ஆநந்தத்தோடுங் கூடி] வாழ்பவனே! நான் - யான், பாவியன் ஆனால்- பாவியேயாயினும், உன்னை - உன்னை, நல்காய் - கொடுத்தருளாய், எனல் ஆமோ - என்று சொல்லக்கூடுமோ! எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறையி லெழுந்தருளிய சிவபெருமானே! தேவர்களும் உன்னைக் காணும்பொருட்டுத் தவஞ்செய்யாநிற்க, இங்கு இந்தப் பொய்யுடம்பைச் சுமந்து காட்டு மரமாயினேன், நான் பாவியாயிருப்பினும் என் தவறுகளைப்பொறுத்து உன்னை யெனக்குத் தந்தருளலே தகுதி, என்பது.

(வி - ரை.) வான்பாவிய உலகத்தவர் என்பதற்கு - மேன்மை பொருந்திய உயர்ந்தோர் என்றலும் பொருந்தும். தவமே என்பதில் ஏகாரம் தேற்றம் அன்றிப் பிரிநிலை. எலும்பு நரம்பு முதலியவற்றினும் சதை மிக்கிருத்தலால் உடலை "ஊன்பாவிய வுடல்" என்றார். அடவி மரம் - பயனிலுக்கு எடுத்துக் காட்டுவதோர் உவமை. ஆமே என்னும் ஏகாரம் வினாவாய் எதிர்மறைப் பொருளைத்தந்து நின்றது. (௧0)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அச்சப்பத்து.

## ஆனந்தமுறுதல்

[ஆனந்தமுறுதல் என்பது நேயத்திலே ஒன்று பட்டுச் சிக்கென அழுந்தல்.]

திருச்சிற்றம்பலம்.

### ஆசிரியவிருத்தம்.

புற்றில்வாளரவுமஞ்சேன்பொய்யர்தம்மெய்யுமஞ்சேன்
கற்றைவார்சடையெம்மண்ணல்கண்ணுதல்பாதநண்ணி
மற்றுமோர்தெய்வந்தன்னையுண்டெனநினைந்தெம்பெம்மாற்
கற்றிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) புற்று - புற்றை, இல் - வீடாக வுடைய, வாள் அரவும் - ஜொலிக்கின்ற பாம்பையும், அஞ்சேன்-[பார்த்து] பயப்படேன், பொய்யர் தம்- பொய்யர்களுடைய, மெய்யும் – உண்மை வார்த்தைகளையும், அஞ்சேன் - [கேட்டுப்] பயப்படேன், கற்றை வார் - திரட்சியாகிய நீண்ட, சடை - சடை முடியை யுடைய, எம் - எமது, அண்ணல் - [யாவருக்கும்] பெரியோனாகிய, கண்ணுதல் - நெத்திக் கண்ணை யுடைய சிவபெருமானது, பாதம் - திருவடியை, நண்ணி – சேர்ந்தும், மற்றும் - வேறு, ஓர் தெய்வம் - ஓர் கடவுளும், உண்டு - இருக்கிறது, என - என்று, நினைந்து - எண்ணி, எம்பெம்மான் – எம் பெருமானை, கற்றிலாதவரை - கற்றறிவில்லாதவரை, கண்டால் - காணில், நாம் - நாம், அஞ்சும் ஆறு - பயப்படும் வகையாயிராநின்றது, எ - று.

(க - ரை.) புற்றை வீடாகக் கொண்டிருக்கும் பாம்பு முதலியவற்றிற்குப் பயப்படேன், ஆயினும் திருச்சிற்றம்பலவர் திருவடியை யடைந்தும், வேறு தெய்வங்களை உண்மையென்று நினைந்து எம்மிறைவனைக் கல்லாதவரைக் காணில் நாம் அஞ்சும்படியா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) பூலோகத்தின்கண் பயத்தைக்கொடுக்கின்ற பொருள்கள் பலவற்றுள்ளும் சிறந்தது பாம்பாதலால் "புற்றில்வாளரவு மஞ்சேன்" என அதனை முன்வைத்தார். 'பாம்பைக்கண்டால் படையும்நடுங்கும்" எனப் பழமொழியு முண்டு. எம் மெம்மான் கற்றிலாதவர் - எம்மிறைவனது புகழைக் கல்லாதவர். அம்ம - உரை யசையிடைச் சொல். அஞ்சேன் என்றது தம்மை யாம் அஞ்சுமாறு என்றது தம்மோடொப்பாரையும் தழுவி என்க. (க)

வெருவரேன்வேட்கைவந்தால்வினைக்கடல்கொளினுமஞ்சே
னிருவரான்மாறுகாணுமெம்பிரான்றம்பிரானுந்
திருவுருவன்றிமற்றோர்தேவரெத்தேவரென்ன
வருவராதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) வேட்கை - காமவிச்சை, வந்தால் - மிகுந்து தொடர்ந்தால், வெருவரேன் - பயப்படேன், வினைக்கடல் - வினைக்கடலானது, கொளினும்- என்னைச் சூழ்ந்துகொண்டாலும், அஞ்சேன் - அஞ்சமாட்டேன், இருவரால் - பிரம விட்டுணுக்களாகிய இருவராலே, மாறு காணு - வேறுபட்டுக் காணப்படாத, எம்பிரான் - எமது பிரான், தம்பிரான் - தமது பிரான், [அவனது] ஆர் - அருமையாகிய, திரு உரு அன்றி - அழகிய வடிவையே பார்த்து ஆனந்திப்பதல்லது, மற்றோர் தேவர் - ஏனையோராகிய தேவர்கள், எத்தேவர் என்ன - என்ன தேவர்களென்று, அருவராதவரை - அருவருக்காதவர்களை, கண்டால் - பார்க்கின், நாம் - யாம், அஞ்சும் ஆறு - அஞ்சும்வகையா யிராநின்றது, எ - று.

(க - ரை.) ஆசை, வினை என்பவைகட்குப் பயப்படேன், ஆயினும் பிரம விட்டுணுக்களால் பார்க்கப்படாத எம்மிறைவரது திருவடிவத்தைக் கண்டு களித்தலன்றி, பிற தெய்வங்களைக் கண்டு இவர் எத்தன்மையாகிய தேவர் என்றிகழ்ந்து அருவருக்காதவரைப் பார்த்தால் யாம் அஞ்சும்படியா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) வேட்கை காம இச்சை எனினுமாம். மாறு காணு என்றது குறிப்பால் இருவர் என்னும் குறிப்புச் சொல் பிரம விட்டுணுக்களை யுணர்த்திற்று. மற்றோர் தேவர் – பிறசமயத்தாருடைய தேவர் எனினுமாம்.()

வன்புலால்வேலுமஞ்சேன்வளைக்கையார்கடைக்கணஞ்சே
னென்பெலாமுருகநோக்கியம்பலத்தாடுகின்ற
வென்பொலாமணியையேத்தியினிதருள்பருகமாட்டா
வன்பிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப – ரை.) வல் - வலிய, புலால் - புலால் தங்கிய, வேலும் – வேற்படையையும், அஞ்சேன் - [கண்டு] பயப்படேன், வளை - வளையலை யுடைய, கையர் -கரங்களை யுடையாராகிய மாதரது, கடைகண் - கடைக்கண்களையும்,

அஞ்சேன்-[பார்த்து] பயப்படேன், நோக்கி-அன்பர் பார்த்து, என்பு எல்லாம்-தமது எலும்புக ளெல்லாம், உருக - உருகும்படி, அம்பலத்து - திருச்சிற்றம்பலத்தின்கண், ஆடுகின்ற - அடியார் மகிழ திருநடனம் செய்கின்ற, என் - எனது, பொல்லாமணியை - பொள்ளாமணியை, ஏத்தி - துதித்து, அருள் - அவனது அருளமுதத்தை, இனிது - இனிதாக, பருகமாட்டா - பருகமாட்டாத, அன்பு இலாதவரை - ஆசையற்றவர்களை, கண்டால் - பார்த்தால், நாம் - யாம், அஞ்சும் ஆறு - பயப்படும்வகையா யிராநின்றது, எ - று.

(க - ரை.) வேற்படை முதலியவற்றிற்கும் அஞ்சேன், ஆயினும் பொன்னம்பலத்தி லாடுகின்ற பரமசிவனைத் துதித்து, அவனது அருளைப் பருகமாட்டாத அன்பிலிகளைக் காணில் யாம் அஞ்சும்படியா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) வன்புலால் என்ற விசேடணத்தால் வேல் என்றது ஓர் ஆயுத விசேடத்தை யுணர்த்திற்று. "கூம்பலங்கைத் தலத்தன்பரென் பூடுருகக் குனிக்கும், பாம்பலங்காரப்பரன்" ஆதலால், "என்பெலா முருகநோக்கி யம்பலத்தாடுகின்ற வென்பொலாமணி" என்றார். (ரு)

கிளியனார்கிளவியஞ்சேனவர்கிறிமுறுவலஞ்சேன்
வெளியநீறாடுமேனிவேதியன்பாதநண்ணித்
துளியுலாங்கண்ணராகித்தொழுதழுதுள்ளநெக்கிங்
களியிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) கிளி - அஞ்சுகத்தை, அன்னார் - [நிகர்த்த] பெண்களது, கிளவி-[எவ்வித] வார்த்தையையும், அஞ்சேன்-[கேட்டுப்] பயப்படேன், அவர் அம்மாதரது, கிறி - வஞ்சகத்தோடு கூடிய, முறுவல் - சிரிப்பையையும், அஞ்சேன் - பயப்படேன், வெளியா-வெண்ணிறமுடைய, நீறு ஆடும் - திருநீற்றில் மூழ்கிய, மேனி - திருமேனியை யுடைய, வேதியன் - அந்தணனாகவந்த சிவபெருமான், பாதம் நண்ணி - திருவடியை யடைந்து, துளி - நீர்த்துளிகள், உலாம் - உதிர்க்கின்ற, கண்ணர் ஆகி - கண்களையுடையவர்களாய், தொழுது வணங்கி, அழுது - [விம்மி] அழுது; உள்ளம் - மனமானது, நெக்கு - நெகிழ்ந்து, இங்கு - இவ்விடத்தில், அளி - கனிவு, இலாதவரை - இல்லாதவரை, கண்டால் - பார்க்கில், நாம் - யாம், அஞ்சும் ஆறு - பயப்படும் வகையாயிராநின்றது, எ - று.

(க - ரை.) மாதர் சொல்முதலிய வற்றிக்கு அஞ்சேன், ஆயினும் இறைவனது திருவடியை யடைந்து கண்ணீர் துளிக்கத்தொழுது அழுது மனம் நெகிழ்ந்து கனியாதவரைக் கண்டால், யாம் அஞ்சும்படியா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) மாதரது மொழி - நகைமுதலியவை அறிவைமயக்கித் தீவினைக்காளாக்குதலால், அவற்றிற் கஞ்சுதலாயிருக்க, அவற்றையும் அஞ்சேன்

என்றற்கு. "கிளியனூர் கிளவியஞ்சேனவர் கிறிமுறுவலஞ்சேன்" என்றூர். வேதியன் - வேதப்பிரதிபாத்தியன் என்றுரைத்தலும் பொருந்தும். ஆளி - முதனிலைத் தொழிப்பெயர். (ரு)

பிணியெலாம்வரினுமஞ்சேன்பிறப்பினேடிறப்புமஞ்சேன்
றுணிநிலாவணியினுன்றன்றெழும்பரோடழுந்தியம்மா
றிணிநிலம்பிளந்துங்காணுச்சேவடிபரவிவெண்ணீ
றணிகிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) பிணி - வியாதிகள், எல்லாம் - யாவும், வரினும் - வந்தடைந்தாலும், அஞ்சேன் - பயப்படேன், பிறப்பினெடு - பிறப்புடனே, இறப்பும் - இறத்தலையும், அஞ்சேன் - பயப்படேன், துணி நிலா - துண்டப்பிறையாகிய, அணியினுன் தன் - ஆபரணத்தை யுடையவனுகிய சிவபெருமானது, தொழும்பரோடு - தொண்டரோடு, அழுந்தி - பொருந்தி, அ - அந்த, மால் - திருமால், திணிநிலம் - வலிமைதங்கிய பூமியை, பிளந்தும் - பிளந்தும், காணு - பார்க்கப்படாத, சேவடி - திருவடியை, பரவி - துதித்து, வேண்ணீறு - திருவெண்ணீற்றை, அணிகிலாதவரை - அணியாதவரை, கண்டால் - பார்க்கில், நாம் - நாம், அஞ்சும் ஆறு - பயப்படும் வகையாயிரா நின்றது, எ-று.

(க - ரை.) வியாதிகளெல்லாம் ஒன்றாய்க்கூடி என்னை வருத்தஞ்செய்யவந்தாலும் சற்றேனும் பயப்படேன், பிறப்பிறப்புகளுக்கும் பயப்படேன், ஆயினும் சந்திரனைத் திருமுடியிற் றரித்திருக்கானின்றவனுகிய இறைவனது அன்பரோடுசேர்ந்து, திருமால் பூமியைப் பிளந்துங் காணுத அவனது திருவடியை வழிபட்டு, அவனது திருவெண்ணீற்றை அணியாதவரைக் காணில் யாம் அஞ்சும் வகையாயிரா நின்றது, என்பது.

(வி - ரை.) பிணி - நோய். பிறப்பினேடிறப்பு என்றது என்றுஞ் சாகாத் தன்மையைக் குறித்து. துணிநிலா — சந்திரகண்டம். மலை, மரம், உயிர்த்தொகை முதலிய எல்லாப் பொருள்களையும் தாங்கும் வண்மையுடைமையால் பூமியைத் "திணிநிலம்" என்றூர். (௬)

வாளுலாமெரியுமஞ்சேன்வரைபுரண்டிடினுமஞ்சேன்
றோளுலாநீற்றனேற்றன்சொற்பதங்கடந்தவப்பன்
றாளதாமரைகளேத்திதடமலர்புனைந்துநையு
மாளலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) வாள் - ஜுவாலையை, உலாம் - வீசுகின்ற, எரியும் - நெருப்பையும், அஞ்சேன் - [கண்டு] பயப்படேன், வரை - மலையானது, புரண்டிடினும் - புரண்டுமேல் விழுந்தாலும், அஞ்சேன் - பயப்படேன், தோள் - [இரண்டு] தோட்களில், உலாம் - விளங்குகின்ற, நீற்றன் - திருவெண்ணீறுடை

யவன், ஏற்றன் - இரஷபவாகனத்தை யுடையவன், சொல் - சொல்லின், பதம் கடந்த - அளவைக்கடந்த, அப்பன் - பிதா, [அவனது] தாள் - திருவடியின், தாமரைகள் - தாமரை மலர்களை, ஏத்தி-துதித்து, தடம்மலர் புனைந்து - பெருமைதங்கிய மலர்களால் அலங்கரித்து, நையும் - மனமுருகுகின்ற, ஆள் - அடிமை, அல்லாதவரை - இல்லாதவரை, கண்டால் - பார்க்கில், நாம் — யாம், அஞ்சும் ஆறு - அஞ்சும் வகையாயிரா நின்றது, என்பது.

(க - ரை.) அக்கினிக்கும் பயப்படேன், பெருமலைபுரண்டு மேல்வீழினும் அஞ்சேன், ஆயினும் திருவெண்ணீற்றை யணிந்ததிருத் தோளனும், சொல்லளவைக்கடந்த எமது தந்தையும் ஆகிய சிவபெருமானது பாததாமரையைத்துதித்து, அப்பூர்தங்களை அரிய மலர்களால் அலங்கரித்துமனமுருகி நிற்கின்ற அடிமைத்திறமுடைய ரல்லாதவரைக் கண்டால், யாம் ஒரு போதும் அஞ்சும்படியாயிரா நின்றது, என்பது.

(வி - ரை.) வாள் - பிரகாசம். உலா - ஜொலித்தல். ஏற்றுதல் - இங்கு இடபத்தை வாகனமாக நடத்துதலைக்குறித்து. தாள் என்பதில் அகரச்சாரியை. (சு)

தகைவிலாப்பழியுமஞ்சேன்சாதலைமுன்னமஞ்சேன்
புகைமுகந்தெரிகைவீசிப்பொலிந்தவம்பலத்துளாடு
முகைநகைக்கொன்றைமாலைமுன்னவன்பாதமேத்தி
யகநெகாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) தகைவு இலா - தடுத்தற்கரிய, பழியும் - பழியையும், அஞ்சேன் - பயப்படேன், சாதலை - இறத்தலை, முன்னம் - முதலில், அஞ்சேன் - பயப்படேன், புகை முகந்த-புகையைக்கொண்ட, எரி - தீயை, கைவீசி - கரத்தைக்கொண்டு வீசி, பொலிந்த - விளங்காநின்ற, அம்பலத்துள் - பொன்னம்பலத்தில் ஆடும் - திருநடனம் செய்கின்ற, முகை - மூகையாகிய, நகை - ஒளியோடுகூடிய, கொன்றைமாலை - கொன்றைப் பூமாலையை அணிந்த, முன்னவன் - முதல்வனது, பாதம் - திருவடியை, ஏத்தி - பூசித்து, அகம் - மனம், நெகாதவரை - நெகிழாதவரை, கண்டால் - பார்த்தால், நாம் - யாம், அஞ்சும் ஆறு — பயப்படும்வகையா யிராநின்றது, எ - று.

(க - ரை.) தடுத்தற்கு அரிய பெரும்பழிக்கும் பயப்படேன், சாவுக்கும் பயப்படேன், ஆயினும், நெருப்பைக் கையிலேந்தி திருச்சிற்றம்பலத்தின்கண் நடனமாடுகின்ற முதற்கடவுளர் ஆகிய சிவபெருமானது திருவடியைத்துதித்து மனம் நெகிழாதவரைப் பார்த்தால், யாம் பயப்படும் வகையா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) தகைவிலாப்பழி - பெரும்பழி. முகந்த எரி — முகந்தெரி என அகரந்தொகுத்தலாயிற்று. எரி என்றது தாருகாவன முனிவர்கள் விடுத்த மழுப்படையை. முகை - மொட்டு. [பேரரும்பு.] (எ)

தறிசெறிகளிறுமஞ்சேன்றழல்விழியுழுவையஞ்சேன்
வேறிகமழ்சடையனப்பன்விண்ணவர்நண்ணமாட்டாச்
செறிதருகழல்களேத்திச்சிறந்தினிதிருக்கமாட்டா
வறிவிலாதவரைக்கண்டாலம்மநாமஞ்சுமாறே.

(ப - ரை.) தறிசெறி - கட்டுத்தறியில் கட்டப்படுகிற, களிறும் - யானையையும், அஞ்சேன் - பயப்படேன், தழல்விழி - நெருப்புப்போலும் கண்களையுடைய, உழுவை - புலியையும், அஞ்சேன் - பார்த்து பயப்படேன், வெறி கமழ் - மணம் வீசுகின்ற, சடையான் - சடாபாரத்தை யுடையவன், அப்பன் - எனதையன், [அவனது] விண்ணவர் - தேவர்களும், நண்ணமாட்டா-நண்ண வொண்ணாத, செறிதரு - நெருங்கிய, கழல்கள் - திருவடிகளை, ஏத்தி - துதித்து, சிறந்து - சிறப்படைந்து, இனிது இருக்கமாட்டா - இனிதாயிருக்கமாட்டாத, அறிவில்லாதவரை கண்டால் - புத்தி யில்லாதவரைக் காணின், நாம் அஞ்சும் ஆறு - நாம் பயப்படும் வகையா யிராநின்றது, எ - று.

(க - ரை.) யானை, புலி என்னும் துஷ்ட மிருகங்களுக்கும் பயப்படேன் ஆயினும், எமது தந்தையாகிய சிவபெருமானது திருவடியைத் துதித்து மேன்மையடைந் திருக்கமாட்டாத அறிவிலிகளைக் கண்டால் யாம் அஞ்சும் படியாயிரா நின்றது, என்பது.

(வி - ரை.) "தறிசெறிகளின்" "தழல்விழியுழுவை" என்றதனால் அவற்றின் கொடுமை விளங்கியவாறு காண்க. (அ)

மஞ்சுலாமுருமுமஞ்சேன்மன்னரோடுறவுமஞ்சே
னஞ்சமேயமுதமாக்குநம்பிரானெம்பிரானாய்ச்
செஞ்சவேயாண்டுகொண்டான்றிருமுண்டந்தீட்டமாட்டா
தஞ்சுவாரவரைக்கண்டாலம்மாநாமஞ்சுமாறே.

(ப - ரை.) மஞ்சு - கார்மேகத்தில், உலாம் - [அதனிடத்தே] உலாவுகின்ற, உருமும் - இடிக்கும், அஞ்சேன் - பய்ப்படேன், மன்னரோடு -[தேச] அரசருடைய, உறவும் - நட்பையும், அஞ்சேன் - பயப்படேன், நஞ்சமே - [திருப்பாற்கடலி லுண்டாகிய] விஷத்தையே, அமுதம் - அமிர்தமாக, ஆக்கும் - ஏற்றுக்கொண்ட, நம் - நம்முடைய, பிரான் - பிரான், எம்பிரான் ஆய்- எம்பெருமானாகி, செஞ்சவே - சிறப்பாகவே, ஆண்டுகொண்டான் - அடிமையாக்கிக்கொண்டருளினவன், [அவனது] திரு - திருநீறாகிய அருமைச் செல்வத்தை, முண்டம் - [தமது] நெற்றியில், தீட்டமாட்டாது - பூசிக்கமாட்டாமல், அஞ்சுவார் - அஞ்சிப் பயப்படுவாராகிய, அவரை - அப்பேர்க்கொற்றவர்களை, கண்டால் - பார்த்துவிட்டால், நாம் - யாம், அஞ்சும் ஆறு - பயப்படும் வகையா யிராநின்றது, எ - று.

(க - ரை.) இடிக்கும் பயப்படேன், மன்னருறவுக்கு மிச்சித்து பயப்படேன், ஆயினும் திருப்பாற்கடலி லுண்டாகிய நஞ்சத்தையே அமிர்தமாக்கிக்

கொண்டவனும், எம்மை யினிதா யாண்டுகொண்டவனும் ஆகிய இறைவனது செல்வமாகிய திருவெண்ணீற்றைத் தமது நெற்றியில் தரித்தற் கஞ்சுவோரைக் கண்டால் யாம் அஞ்சும்படியா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) உரும் - இடி. இறைவற்கு விபூதி உருத்திராக்கம், யானைத் தோல், தலைமாலை முதலியவே செல்வமாதலால், விபூதியைத் திரு என்றார். "பதம் பரவைக்கு வருந்துபிராற்குப் பசுமயின்மேல் — கதம் பரவைக்கு வரச் சுற்று கட்செவிக் கங்கணற்குச் - சிதம்பரவைக்கு முதுகுன்ற வாணற்குச் செல்வமெல்லாம் - மதம்பரவைக்கு நிகர்கரித்தோறலை மாலைகளே" எனப் பிற அறிஞர் கூறுதலுங் காண்க. செஞ்சவே என்றது இங்கு சிறப்புக்காயிற்று. முண்டம் - நெற்றி. (கூ)

கோணிலாவாளியஞ்சேன்கூற்றுவன்சீற்றமஞ்சே
னீணிலாவணியினானைநினைந்துநைந்துருகிநெக்கு
வாணிலாங்கண்கள்சோரவாழ்த்திநின்றேத்தமாட்டா
வாணலாதவரைக்கண்டாலம்பநாமஞ்சுமாறே.

(ப - ரை.) கோண் - கோணுதல், இலா - இல்லாத, வாளி - பாணத்தை, அஞ்சேன் - [கண்டு] பயப்படேன், கூற்றுவன் - [தென்திசைக் கதிபனாகிய] இயமனது, சீற்றம் - கோபத்தை, அஞ்சேன் - [கண்டு] பயப்படேன், நீள் — நீண்ட, நிலா - நிலவாகிய, அணியினானை - [திரு] ஆபரணத்தை யுடையவனை, நினைந்து - எண்ணி, நைந்து - வருந்தி, உருகி-உருகாநின்று, நெக்கு - நெகிழ்ந்து, ஒளி - பிரகாசமானது, நிலாம் - நிலைபெற்றிருக்கிற, கண்கள் - இரு கண்களில், சோர - ஜலமானது ஒழுக, வாழ்த்தி - வாழ்த்தி, நின்று - இருந்து, ஏத்தமாட்டா - துதிக்கமாட்டாத, ஆண் - ஆண்மைத்தன்மை யுடையவர், அலாதவரை - இல்லாதவரை, கண்டால் - பார்க்கில், நாம் - யாம், அஞ்சும் ஆறு - அஞ்சும்வகையா யிராநின்றது, எ - று.

(க - ரை.) அம்புக்கும் பயப்படேன், இயமனது கோவத்துக்கும் பயப்படேன் ஆயினும் சந்திரசேகரனாகிய சிவபெருமானை நினைந்து மனங்கரைந்துருகிக் கண்களில் நீரொழுக நின்று வாழ்த்தித் துதிக்கமாட்டாத ஆண்மையில்லாதவரைக் கண்டால் யாம் பயப்படும்வகையா யிராநின்றது, என்பது.

(வி - ரை.) கோண் - முதனிலைத் தொழிற்பெயர். நிலா - சந்திரன். வாணிலாம் கண்கள்சோர என்பதை - வாள் நில் ஆம் கண்கள்சோர எனப் பிரித்து, ஒளி - நிலைபெற்ற நீரானது கண்களில் ஒழுக என்றுரைப்பினும் அமையும். இறைவனாகிய பரம்பொருளை வழிபடுதலினுஞ் சிறந்த ஆண்மையின்மையாலால் அவ்வழிபா டில்லாதாரை "ஆணலாதவர்" என்றார். (கo)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்பாண்டிப்பதிகம்.

## சிவாநந்தவிளைவு.

[சிவாநந்தவிளைவு என்பது சுகமேலீடு.]

திருச்சிற்றம்பலம்.

கட்டளைக்கலித்துறை.

பருவரைமங்கைதன்பங்கரைப்பாண்டியற்காரமுதா
மொருவரையொன்றுமிலாதவரைக்கழற்போதிறைஞ்சித்
தெரிவரநின்றுருக்கிப்பரிமேற்கொண்டசேவகனா
ரொருவரையன்றியுருவறியாதென்றனுள்ளமதே.

(ப - ரை.) பரு - பெரிய, வரை - மலையரையனது, மங்கை - புதல்வியாகிய உமாதேவியின், பங்கரை - பாகராகிய பரமசிவனை, பாண்டியற்கு - மதுரைப்பதிக் கரசனுக்கு, ஆர் அமுது ஆம் - சொல்லுதற் கரிய அமிர்தமாகிய, ஒருவரை - ஒருத்தரை, ஒன்றும் - யாதொன்றையும், இலாதவரை - உடையர் அல்லாதாரை, கழல்போது - திருவடித் தாமரை மலரை, இறைஞ்சி - தொழுது, தெரிவர - காணும்படி, நின்று - நின்றிருந்து, உருக்கி - மனத்தையுருகச் செய்து, பரிமேற்கொண்ட - [என்னிமித்தம்] குதிரையின்மீது ஆரோகணித்துக்கொண்டு, சேவகனார் - மஹா வீர சூரராகிய, ஒருவரை-[அப்பேர்க்கொற்ற] ஒருவரை, அன்றி - தவிர, என்றன் - என்னுடைய, உள்ளம் - மனமானது, உரு - அன்னிய தெய்வங்களின் வடிவையும், அறியாது - தெரியாது, எ - று.

(க - ரை.) மலையரையனது புதல்வியாகிய உமாமகேஸ்வரியின் பாகரும், குறிகுண முதலிய யாவுமில்லாதவரும், எனக்காக பாண்டியன் முதலாயினோர் கண்டு மகிழும்வாறு குதிரையின் மீது ஆரோகணித்து வரும் அக்கோலத்தைக் கண்டோர் மனமுருகப் பண்ணினவருமாகிய சிவபெருமானையன்றி, என்னுடையமனமானது மற்றொரு தேவரை உருவறியமாட்டாது, என்பது.

(வி - ரை.) பருவரை என்றது இங்கு இமயமலையைக் குறித்தது. ஒன்றும் என்பதற்கு ஹேயகுணங்கள் சிறிதும் என்றுரைப்பினும் பொருந்தும். உருவறியாது என்றது வேறொரு உருவமாகிய தேவர்களைப் பார்க்கவும் மனம் சகியாது என்றபடி. சிவபெருமான் யாவரும் பார்க்கக் குதிரையேறி மஹா வீரராக வந்தமையால் சேவகனென்று கூறினர். (க)

சதுரைமறந்தறிமால்கொள்வர்சார்ந்தவர்சாற்றிச்சொன்னேங்
கதிரைமறைத்தன்னசோதிகழுக்கடைகைப்பிடித்துக்
குதிரையின்மேல்வந்துகூடிடுமேற்குடிகேடுகண்டீர்
மதுரையர்மன்னன்மறுபிறப்போடமறித்திடுமே.

(ப - ரை.) சார்ந்தவர் - அடைந்து ஈடுபட்டவர், சதுரமறந்து - தமது திறத்தை மறந்து, அறிமால் கொள்வர் - அறிமயக்கம் கொள்வர், சாற்றி சொன்னேம் - பறையறைந்து சொன்னேம், கதிரை-சூரியனை, மறைத்தன்ன-மறைத்தாற் போன்ற ஒளியானது, கழுக்கடை - ஈட்டியை, கைப்பிடித்து - கரத்திற் பிடித்து, குதிரையின்மேல் வந்து கூடிடுமேல் — குதிரையின்மேல் எழுந்தருளி வந்து கலந்திடின், குடிகேடு - நமது குடிக்குக்கெடுதியாம், மதுரையர் மன்னன்-மதுராபுரியார்க்கு அரசனாகிய பாண்டியனது,மறுபிறப்போட மறித்திடும் - மறுபிறப்பையோட்டி மீண்டுவாராதபடி தடுக்கும், எ - று.

(க - ரை.) யாவராலுங் காணப்படாத இறைவனைச் சேர்ந்தவர்கள் தமது சதுரப்பாட்டை மறந்து அறிவுமயங்கப் பெறுவர், பறையறைந்து சொல்லினேம், சூரியனை மறைத்தாற்போன்ற ஒளியானது ஈட்டியைக் கையிற் பிடித்து, குதிரையின்மீ தேறிவந்து எம்மைக் கூடுமாயின், நமது குடிக்குக் கெடுதியுண்டாம், மதுராபுரிக் கரசனாகிய பாண்டியனது மறுபிறவி வந்தடையாதபடி தடுக்கும், என்பது.

(வி - ரை.) இறைவனது அழகில் ஈடுபட்டவர் தம் மறிவை யிழந்து நிற்பராதலால், "சதுரை மறந்தறிமால் கொள்வர் சார்ந்தவர்" என்றார். கதிரை மறைத்தன்ன சோதி என்றது இறைவன் திருமேனியானைத் தோலால்மறைக் கப்பட்டிருத்தலால் என்க. "மதயானை யீருரியூடே மறைந்து மழைமறைத்த உதயாதிபனென நின்றோர்" என்றார் பிறரும். கழுக்கடையென்றது இவ்விடத்து ஈட்டியையே யுணர்த்திற்று. குதிரைச் சேவகர் கைப்பிடித்து வருவது அதுவேயாகலான். (உ)

நீறின்பவெள்ளத்துணிந்திக்குளிக்கின்றநெஞ்சங்கொண்டீர்
பாரின்பவெள்ளங்கொளப்பரிமேற்கொண்டபாண்டியனா [டார்
ரோரின்பவெள்ளத்துருக்கொண்டுதொண்டரையுள்ளங்கொண்
பேரின்பவெள்ளத்துட்பெய்கழலேசென்றுபேணுமினே.

(ப - ரை.) நீர் - நீங்கள், இன்ப வெள்ளத்துள் - ஆநந்தப்பெருக்கில், நீந்திக்குளிக்கின்ற - நீந்திக்குளிக்கவேண்டுமென்கிற, நெஞ்சம் கொண்டீர் - மனத்தில் மிகு விருப்புடையீர், பார் - பூமியிலுள்ளா ரெல்லாரையும், இன்ப வெள்ளம் கொள்ள - ஆநந்தப்பெருக்கானது கொண்டு செல்லும் வண்ணம், பரிமேற்கொண்ட பாண்டியனார் - குதிரைமேற்கொண்ட சோமசுந்தரக்கடவுள், ஓர் - நிகரற்ற, இன்ப வெள்ளத்து உருக்கொண்டு - ஆநந்தப்பெருக்கி னுருவங்கொண்டு, தொண்டரை - தொழும்பரை, உள்ளம் கொண்டார் - மனங்கவர்ந்தார், பேரின்ப வெள்ளத்துள் சென்று - பேரானந்தக் கடலின் பெருக்கினுள்ளும் சென்று, பெய்கழலே பேணுமின் - வீரக்கழலணிந்த திருவடியே விரும்புங்கள், எ - று.

(க - ரை.) பேரின்பப் பெருக்கிற் குளிக்கவேண்டுமென்னும் எண்ண முள்ளவர்களே ! ஆநந்த வெள்ளமானது உலகத்தை யெல்லாம் கவர்ந்து செல்லும்படி குதிரைமேற்கொண்டு வந்த சோமசுந்தர பாண்டியனார் தம் தொழும்பரை மனங்கவர்ந்தார், ஆதலால் நீங்கள் பேரின்பப் பெருக்கில் அகப் பட்டாலும் அவ்விறைவனது திருவடியாகிய மரக்கலத்தை யாதவராகப் பற்றுங் கள், என்பது.

(வி - ரை.) சோமசுந்தரப் பாண்டியனென்று திருநாமம் பூண்ட இறைவன் குதிரைச் சேவகனுப் எழுந்தருளின திருக்கோலம் கண்டோர்க்கு மிகுந்த இன்ப மளித்தது என்றதற்கு, " பாரின்ப வெள்ளங்கொளப் பரிமேற்கொண்ட பாண்டியனார் " என்றூர். (ரு)

செறியும்பிறவிக்குநல்லவர்செல்லன்மின்றென்னனன்னாட்
டிறைவன்கிளர்கின்றகாலமிக்காலமெக்காலத்துள்ளு
மறிவொண்கதிர்வாளுறைகழித்தானந்தமாக்கடவி
றெறியும்பிறப்பையெதிர்ந்தார்புரளவிருநிலத்தே.

(ப - ரை.) தென்னன் - பாண்டியனது, நல்நாட்டு - நலமை வாய்ந்த நாட்டின்கண், செறியும் - அடர்ந்த, பிறவிக்கு - பிறப்புக்கு, நல்லவர் - நன்மையுடையோர் ஒருவரும், செல்லல்மின் - செல்லாதீர்கள், இக்காலம் - இந்தக்காலம், இறைவன் கிளர்கின்ற காலம் - இறைவனுகிய சிவபெருமான், [அரசு செய்து] விளங்குகின்ற காலமாயிராநின்றது, எக்காலத்துள்ளும் - எந்தக் காலத்திலும், அறிவு - ஞானமாகிய, ஒள் - ஒள்ளிய, கதிர் - சூரியனது ஒளியுள்ள, வாள் - வாட்படையை, உறைகழித்து-உறைநீக்கி, ஆநந்தம் மாகடவி - இன்பமாகிய குதிரையைச் செலுத்தி, இருநிலத்து - பெரிய நிலவுலகத்தில், பிறப்பை எதிர்த்தார் புரள - பிறவியை எதிர்ந்தவர் புரளும்படி, எறியும் - வீசுவன், எ - று.

(க - ரை.) நல்லொழுக்கம் யாவுந்தெரிந்த அறிவாளர்களே ? நீங்கள் பாண்டி நன்னாட்டில் பிறவா தொழிவீர்களாக, ஏனெனின் சோமசுந்தரப்

பாண்டியனாகிய இறைவன் அந்நாட்டில் அரசாட்சி செலுத்துங் காலமிதுவாதலால், அவன் பிறவியை எதிர்த்தவர் யாவரும் புரளும்படி ஆநந்தப்பரியைச் செலுத்தி வந்து ஞான வாளால் எறியாநின்றான் ஆதலால், என்பது.

(வி - ரை.) செறியும் பிறவியென்றது - மிக்க பிறவி யென்றபடி. நல்லவர் முன்னிலைக்கண்வந்தது. அறிவொண் குற்றியலுகரப்புணர்ச்சி பெற்றது. உறை என்றது இவ்விடத்து மலமறைப்பை. ஆநந்தம் - பேரின்பம். இவ்வுலகம் விசாலமுள்ளதாதலின் இங்கு இருநிலம் என்று கூறினார். (ச)

காலமுண்டாகவேகாதல்செய்துய்மின்கருதரிய
ஞாலமுண்டானொடுநான்முகன்வானவர்நண்ணரிய
வாலமுண்டானெங்கள்பாண்டிப்பிரான்றன்னடியவர்க்கு
* மூலபண்டாரம்வழங்குகின்றான்வந்துமுந்துமினே.

(ப - ரை.) காலம் - காலமானது, உண்டாக - உண்டாயிருக்க, காதல் செய்து - இறைவனாகிய பரமசிவனுக்கு அன்போடு தொண்டு செய்து, உய்மின் - இறத்தலை நீக்கி ஜீவியுங்கள், கருது - எண்ணுதற்கு, அரிய – அரிதாகிய, ஞாலம் - இப் பூலோகத்தை, உண்டானொடும் - உட்கொண்டு தன் வயிற்றினிடம் வைத்திருப்பவனாகிய மஹா விட்டுணுவோடும், நான்முகன் – தாமரை மலரை ஆசனமாகக் கொண்ட பிரமதேவனும், வானவர் – வானுலகத்திலுள்ள இதர தேவர்களும், நண் - அடைதற்கும், அரிய - அருமையாகிய, ஆலம் - [திருப்பாற்கடலினின் றுண்டாகிய] ஆலகால விஷத்தை, உண்டான் - [அஞ்சாது] அமுதாகக் கொண்டவன், எங்கள் - எங்களது, பாண்டிப்பிரான் - பாண்டிநாட்டுக்குச் [சோமசுந்தரக்கடவுளாக எழுந்தருளிய] பெருமான், தன் - தன்னுடைய, அடியவர்க்கு - தொண்டர்களுக்கு, மூலபண்டாரம் - புராதன பொக்கிஷத்தை, வழங்குகின்றான் – [தாதாவாய் ஓர் நாமமுந் தரித்து] கொடுக்கின்றான், [ஆனதால்] வந்து - [அங்கு] வந்து, முந்துமின் - [அவ்வத்துவை யடைய] முந்திக்கொள்ளுங்கள், எ - று.

(க - ரை.) பாண்டிப்பிரானாகிய இறைவனுக்குச் சீக்கிரத்தில் அன்போடு தொண்டு செய்து என்றும் இறவாம லிருக்கும்பொருட்டு அவனது மூலதனத்தை யடைந்து உய்யுங்கள். திருமால் பிரமன் முதலாயினோர்க்கும் கிட்டுதற்கு அரிதாகிய நஞ்சை அமுது செய்தவனாகிய பாண்டிப்பிரான், தன்னுடைய தொண்டர்கட்கு மூலபொக்கிஷமென்னு மழிவிலாத் தனத்தை கொடுக்காநின்றான், ஆதலால் அத்தனத்தைப்பெறுதற்கு நீங்கள் முந்துங்கள்,என்பது.

(வி - ரை.) காலமுண்டாக என்றது விரைவாக என்றபடி. கருதரிய ஆலம் - நண்ணரிய ஆலம் எனக் கூட்டுக. நண்ணல் - கிட்டுதல். பாண்டிப்பிரான் - சோமசுந்தரக் கடவுள். (ரு)

* மூலபண்டாரம் - முத்திச் செல்வம்.

ஈண்டியமாயாவிருள்கெடவெப்பொருளும்விளங்கத்
தூண்டியசோதியைமீனவனுஞ்சொல்லவல்லனல்லன்
வேண்டியபோதேவிலக்கிலைவாய்தல்விரும்புமின்றாள்
பாண்டியனாரருள்செய்கின்றமுத்திப்பரிசிதுவே.

(ப - ரை.) ஈண்டிய - அடர்ந்த, மாயா - ஒழியாத, இருள் — [அஞ்ஞானமென்னும்] இருளானது, கெட - சேதிக்கவும், எப்பொருளும் - எவ்விஷயமும், விளங்க - தெரியவும், தூண்டிய - தூண்டப்பட்ட, சோதியை - [என்றும் ஞானத்தைத் தராநின்ற] சோதியை, மீனவனும்-மீன்கொடியை யுடைய பாண்டியனும், சொல்ல - [அவனது புகழைச்] சொல்லுதற்கு, வல்லன் – சமர்த்த முடையவன், அல்லன் - அல்லாதவன், வேண்டியபோதே - ஆசைப்பட்டு விரும்பினபோதே, விலக்கு இலை - [கொடுக்கத்] தடையில்லை, தாள் - திருவடி பேற்றை, வாய்தல் - [அதை] அடைய, விரும்புமின் - ஆசைப்படுங்கள், பாண்டியனார் — சோமசுந்தரக் கடவுள், அருள் செய்கின்ற - கிருபை செய்கின்ற, முத்திபரசு - மூத்திதரும் மார்க்கம், இதுவே - இதுவேயாம், எ - று.

(க - ரை.) மாயையாகிய இருளொழியத் தூண்டிய ஒளியுருவாகிய சிவபெருமானைப் பாண்டியனும் புகழ வல்லவன், ஆதலால் நீங்கள் விரும்பினால் அவ்வாறு விரும்பும் பொருளை யடையத் தடையில்லை, இப்போதே இறைவன் திருவடிப்பேற்றை விரும்புங்கள், அவன் அருள் செய்கின்ற முத்தித்திறம் இதுவேயாம், என்பது.

(க - ரை.) கெடுதற்கரிய மிக்க விருள் என்றதற்கு "ஈண்டிய மாயா விருள்" என்றார். "மாயா விருள் கெட" "எப்பொருளும் விளங்க" என்றதனால் சோதி ஞானவொளியைக் குறித்து. மீனவன் என்றது மச்சக்கொடியோனாகிய பாண்டிய ராஜனைக் குறித்து. (சு)

மாயவனப்பரிமேல்கோண்டுமற்றவர்கைக்கொளலும்
போயறுமிப்பிறப்பென்னும்பகைகள்புகுந்தவருக்
காயவரும்பெருஞ்சீருடைத்தன்னருளேயருளுஞ்
சேயநெடுங்கொடைத்தென்னவன்சேவடிசேர்மின்களே.

(ப - ரை.) மாய - மகா மாயமாகிய, வனப்பரிமேல் - காட்டினிடம் வாழாநின்ற அசுவத்தின்மேல், கொண்டு - [ஆரோகணித்துக்] கொண்டு வந்து, அவர் - அச்சிவபெருமான், கை - திருக்கரத்தில், கொளலும் - [பிடித்துக் கொள்ளுதலும், இப்பிறப்பு - இப்பிறவித்தளை, என்னும் - என்று சொல்லப்படுகிற, பகைகள் - பகைகளானது, போய் அறும் - பற்றில்லாமல் அற்றுப் போம், [ஆதலால்] புகுந்தவருக்கு — அப்பரமசிவனது அன்பை யடைந்தவருக்கு, ஆய — உண்டாகிய, அரு - பெருமையைத் தராநின்ற, பெரு - பெரிய,

சீர் உடை - சிறப்பை யுடைய, தன் - தன்னுடைய, அருளே - அருளென்னும் செல்வத்தையே, அருளும் - கிருபை செய்து கொடுக்காநின்ற, சேய் நெடு கொடை - மிக்கப் பெரிய கொடையாகவும் உடைய, தென்னவன் - பாண்டிப்பிரானுகிய சோமசுந்தரக் கடவுளினது, சேவடி - [முத்திவீட்டைத் தருகின்ற] திருவடிகளை, சேர்மின்கள் - அடையுங்கள், எ - று.

(க - ரை.) தன்னை யடைந்தவருக்கு அருட்செல்வத்தைக் கொடுக்கின்ற இறைவனுகிய சோமசுந்தரக் கடவுளினது திருவடியை அடையச் சென்று சேருங்கள், அவன் குதிரை வீரனுய்வந்து நம்மை ஏற்றுக்கொள்ளுதலும் நம்முடைய பிறவிப் பகைகள் அற்றொழியும், என்பது.

(வி - ரை.) நரியாகிய பரியாதலால் "மாயவனப்பரி" என்றார். வனம் - அழகு. அருள் - முத்திச்செல்வம். (எ)

அழிவின்றிநின்றதோரானந்தவெள்ளத்திடையழுத்திக்
கழிவில்கருணையைக்காட்டிக்கடியவினையகற்றிப்
பழமலம்பற்றறுத்தாண்டவன்பாண்டிப்பெரும்பதமே
முழுதுலகுந்தருவான்கொடையேசென்றுமுந்துமினே.

(ப - ரை.) அழிவு இன்றி - சேதமில்லாது, நின்றது - நின்றதாகிய, ஓர் - ஒப்பற்ற, ஆநந்தவெள்ளத்திடை - இன்பசாகரப் பெருக்கில், அழுத்தி - அழுந்தச்செய்து, கழுவு இல் - தள்ளுதலில்லாத, கருணையை காட்டி - சுகராவின்பத்தைக் காட்டி, கடிய - கொடிதாகிய, வினை - மலசம்பந்த இருவினைகளை, அகற்றி - விலக்கி, பழமலம் - தொன்மையாகிய மலங்களை, பற்றறுத்து - வேறறக்களைந்து, ஆண்டவன் - (கிருபைசெய்து) ஆண்டருளினவனுகிய, பரமசிவன், பாண்டிப் பெரும்பதமே - பாண்டிநாட்டுப் பெரும்பதமொன்றை மாத்திரந்தானே, முழுது உலகும் - உலகமுழுதும், தருவான் - கொடுப்பான், சென்று - போய், முந்துமின் - முந்துங்கள், எ - று.

(க - ரை.) அழிவற்ற இன்பப்பெருக்கில் அழுந்து வித்து, நீங்காத தன் பெருங் கருணையைக்காட்டி, கொடிய வினையை பற்றற நீக்கி, மலப்பற்றறுத் தாண்ட இறைவன் பாண்டிப் பதம் ஒன்றேயல்ல, உலகமுழுதும் கொடுப்பன், ஆதலால் அவன் கொடையையே முந்துங்கள், என்பது.

(வி - ரை.) இறைவனுக்குக் கருணையெக்காலத்தும் உண்டென்றற்கு. "கழிவில்கருணை" என்றார். (அ)

விரவியதீவினைமேலைப்பிறப்புமுந்நீர்கடக்கப்
பரவியவன்பனையென்புருக்கும்பரம்பாண்டியனர்
புரவியின்மேல்வரப்புந்திகொளப்பட்டபூங்கொடியார்
மரவியன்மேல்கொண்டுதம்மையுந்தாமறியார்மறந்தே.

(ப - ரை.) விரவிய - சேர்ந்த, தீ - கெடுதலுடைய, வினை - வினைகளா லுண்டாகிய, முந்நீர்கடக்க - [துக்க] சாகரத்தைக்கடக்க, பரவிய - வழிபட்ட, அன்பரை - அடியார்களை, என்பு - எலும்பை, உருக்கும் - உருக்குகின்ற, பரம்- மேலான, பாண்டியனார் - பாண்டிப்பிரானாகிய சோமசுந்தரக் கடவுள், புரவி யின்மேல் - குதிரையின்மீது, வர - வருவதைக்கண்டு, புந்தி - அறிவானது, கொளப்பட்ட - கோள்பட்ட, பூங்கொடியார் - பூங்கொடியையொற்ற இடை யழகையுடைய பெண்கள், மர இயல்-மரத்தின் செய்கையை, மேல்கொண்டு - மேற்கொண்டு, மறந்து - மதிமயங்கி, தம்மையும் - தங்களையே, தாம் தாங்கள், அறியார் - தெரிந்திலர், எ - று.

(க - ரை.) வினையின்சேட்டையா லுண்டாகிய பிறவிக்கடலை நீங்கும் பொருட்டுத் தம்மை தொண்டுபட்ட அடியவரை என்புருகச்செய்கிற பாண் டியநாட்டுக் கரசனாகிய சோமசுந்தரக்கடவுள் குதிரையின்மே லாரோகணித்து வரப்பார்த்து தமது அறிவிழந்த பெண்கள் தங்களுக்குத் தாங்களறியாமல் மதிமயங்கித் திகைத்து மரம்போல நின்றார்கள், என்பது.

(வி - ரை.) தீவினை யென்றது நல்வினைக்கு மறுதலையையன்று. மா கொடிய வினைகள் என்றபடி. விரவிய என்றதனானே இருவினையென்பது புல னாயிற்று. நல்வினை தீவினையென்னு மிரண்டும் ஆன்மகோடிகளுக்குப் பிறவி யைத் தருதற்கண், பொன் விலங்கும் இருப்புவிலங்கும்போல ஒரு நிகரனவா மாதலின், "விரவிய தீவினை" என்றார். (சு)

கூற்றைவென்றாங்கைவர்கோக்களையும்வென்றிருந்தழகால்
வீற்றிருந்தான்பெருந்தேவியுந்தானுமோர்மீனவன்பா
லேற்றுவந்தாருயிருண்டதிறலொற்றைச்சேவகனே
தேற்றமிலாதவர்சேவடிசிக்கெனச்சேர்மின்களே.

(ப - ரை.) கூற்றை - யமனை, வென்று - ஜயித்து, அங்கு - அவ்விடத் தில், ஐவர் - ஐம்புலன்களாகிய, கோக்களையும் - அரசர்களையும், வென்று இருந்து - ஜயித்திருந்து, அழகால் - யாவராலும் புகழும்படி அழகோடு, வீற் றிருந்தான் - எழுந்தருளி யிருந்தான், [எவ்விடத்தே யென்றாராய்ந்து கேட் கில்]பெருந்தேவியும்- உமாமகேஸ்வரியும், தானும் - தானுமாக, ஓர் - நிகரற்ற, மீனவன்பால் - மச்சக்கொடியை யுடைய பாண்டியனிடத்தில், [அவ்வாறு வீற் றிருந்தவன் யாரெனில்] எற்று வந்தார் - பகைத்து வந்தவருடைய, உயிர் - ஆவியை, உண்ட - வாங்கின, திறல் பலத்தையொற்ற, ஒற்றை சேவகனே - ஒப்பற்றமகா வீரனே, [ஆதலால்] தேற்றம் இலாதவர்-தெளிதல் இல்லாத வர்கள், சேவடி - அவன் திருவடியையே, சிக்கென சேர்மின் - உறுதியாகச் சேர்ந்துகொள்ளுங்கள், எ - று.

(க - ரை.) இறைவனாகிய சோமசுந்தரக்கடவுள் யமனையும் ஐம்புலன் களையும் வென்று, அடியார்கள் பார்க்க அழகாகத் தானும் தேவியுமாகப் பாண்

டியணிடத்தில் வீற்றிருந்தான், [ஆதலால்] அவன் திருவடியை உறுதியாகப் பற்றுங்கள், என்பது.

(வி - ரை.) கூற்றன் - யமன். வென்றல் - ஜயித்தல். ஐவர் என்றது ஐம்புலன்களைக் குறித்து. ஆங்கு - அசை யெனினுமாம். (௧0)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பிடித்தபத்து.

முத்திக்கலப்புரைத்தல்.

[முத்திக்கலப்புரைத்தல் என்பது முற்றுமுள்ள ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தைச் சொல்லியது.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

உம்பர்கட்காசேயொழிவறநிறைந்த
யோகமேயூற்றையேன்றனக்கு
வம்பெனப்பழுத்தென்குடிமுழுதாண்டு
வாழ்வறவாழ்வித்தமருந்தே
செம்பொருட்டுணிவேசீருடைக்கழலே
செல்வமேசிவபெருமானே
யெம்பொருட்டுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) உம்பர்கட்கு-விண்ணுலகத்தாராகிய தேவர்கட்கு, அரசே - இராஜாதி இராஜனே! ஒழிவு அற - எவ்விடத்தும் நீங்குதலில்லாது வியாபித்த, யோகமே - பலனே, ஊத்தையேன் - மலசம்பந்த அழுக்குடம்புடையேனாகிய, தனக்கு - அடியேனுக்கு, வம்பு என - ஆச்சரியமென்று புகலும்படி, பழுத்து - மிகக்கனிந்து, என்குடி - அடியேனது குடிமுழுமையும், ஆண்டு -

ஆண்டருளி, வாழ்வு அற - [திரேகத்தோடு கூடிவாழும்] வாழ்க்கை பற்றறும் படி, வாழ்வித்த - [சிவலோகப் பேற்றையடைந்து] வாழும்படிசெய்த, மருந்தே - தேவா அமிர்தமே, செம்பொருள் துணிவே - பரிசுத்தமாகிய சாத்திரப் பொருளின் துணிவே, சீர் உடை - சிறப்பையுடைய, கழலே - முத்திகொடுக்கும் திருப்பாதத்தை யுடையவனே! செல்வமே - எமது நிறந்தரமுள்ள ஐசுவரியமே! சிவபெருமானே - சிவபெருமானே! எம் பொருட்டு - எம்பால், உன்னை சிக்கென - உன்னை கெட்டியாக, பிடித்தேன் - நழுகவிடாமற் பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - நீ எவ்விடத்துக்கு, எழுந்தருளுவது - எழுந்துபோவது, எ - று.

(க - ரை.) விண்ணுலகத்தில் வாழாநின்ற தேவர் முதலிய யாவருக்கும் இராசனே! எவ்விடத்தும் நீங்குதலில்லாது நிறைந்தவனே! என்னையும் ஓர் பொருளாகக் கொண்டு மதித்து என் மீதிரங்கி எனது குடிமுழுது மாண்டருளிச் சிவலோகப்பதவியைத் தந்தருளிய அமிர்தமே! செவ்விய சாத்திரப்பொருளின் துணிவே! சிவபிரானே! உன்னை உறுதியாய் நம்பி பற்றினேன், இனிமேல் நீ எவ்விடத்திற்கு எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) உம்பர் - விண்ணுலகத்தார், அது இடவாகுபெயரால் அவ்விடத்திலுள்ள தேவர்களுக்காயிற்று. வாழ் அற என்றது - பிறத்தலற என்றபடி. யாவத்து நூல்களும் புகழ்ந்து போற்றுவது இறைவனது பெருமையையே யாதலால் "செம்பொருட்டுணிவே" என்றார். ஊத்தை - மலமெனினுமொக்கும். கழல் - திருவடி. பிடித்தல் - பற்றுதல். சிக்கு - உறுதி. (க)

விடைவிடா துகந்தவிண்ணவர்கோவே
வினையனே னுடையமெய்ப்பொருளே
முடைவிடா தடியேன்மூத்தறமண்ணாய்
முழுப்புழுக்குரம்பையிற்கிடந்து
கடைபடா வண்ணங்காத்தெனையாண்ட
கடவுளேகருணைமாகடலே
யிடைவிடா துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) விடை - இடபவாகனனே! விடாது - என்றும் விட்டு விடாமல், உகந்த - விரும்பின, விண்ணுலகர் கோவே - விண்ணுலகத்தார்க்கிறைவனே! வினையனேன் உடைய - வினையேனது, மெய்ப்பொருளே - உண்மைப்பொருளே! முடை விடாது - புலால் நாற்றத்தை யுடைய தேகத்தை விடாமல், அடியேன் - தொண்டனேன், மூத்து - முதிர்ந்து, அறமண் ஆய் - மிகவும் மண்ணாகி, முழுபுழுகு குரம்பையில் - நிறந்த கிருமிகளுள்ள உடம்பில், கிடந்து - இருந்து, கடைபடா வண்ணம் - உழலாவண்ணம், என்னை -

அடியேனை, காத்து - காப்பாத்தி, ஆண்ட - தடுத்தாண்ட, கடவுளே - யாவர்க்கும் கடவுளே! கருணைமாகடலே - கிருபையைத் தருகின்ற பெருங்கடலே! இடை விடாது - இடைவிடாமல், உன்னை - தேவரீரை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்தில், எழுந்தருளுவது - எழுந்துபோவது, எ - று.

(க ரை.) சூலம், மான், மழு, கபால முதலிய யாவும் கரத்திற் றாங்கி இடபத்தை வாகனமாகக் கொண்ட நாதனே! தேவர்க் கரசனே! அடியேனாகிய எனக்கு உண்மைப்பொருளாய் இருப்பவனே! இம்மாமிடப் பிறப்பில் கிடந்து உழலாவண்ணம் என்னைத் தடுத்தாண்டருளின கருணாநிதியே! இடைவிடாமல் உன்னை நான் பலமாகப் பற்றினேன், ஆதலால் நீ இனி எவ்விடத்திற்கு எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) விடை - இடபம். மெய்ப்பொருள் - உண்மைப்பொருள். அதாவது என்றும் அழியாப்பொருள். முடை - புலால் நாற்றம். கிடத்தல்- இருத்தல். கடைபடல் - உழலல். சிவபெருமான் யாவரிடத்தும் கருணை கூர்ந்திருத்தலால், இங்ஙனம் "கருணைமா கடலே" என்று கூறினர். சிக்கு - உருதி. (உ)

அம்மையேயப்பாவொப்பிலாமணியே
யன்பினில்விளைந்தவாரமுதே
பொய்ம்மையேபெருக்கிப்பொழுதினைச்சுருக்கும்
புழுத்தலைப்புலையனேன்றனக்குச்
செம்மையேயாயசிவபதமளித்த
செல்வமேசிவபெருமானே
யிம்மையேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) அம்மையே - எனையீன்ற தாயே! அப்பா - என் தந்தையே! ஒப்பு இலா - நிகரில்லாத, மணியே - பிரகாசம்போன்ற மாணிக்கமெ! அன்பில் - பெருமை தங்கிய ஆசையென்னுங் கடலில், விளைந்த - உண்டாகிய, ஆர் அமுதே-இருவரால் காணக்கிட்டாத அமிர்தமே! பொய்ம்மை ஏ பெருக்கி- பொய்யையே வளர்த்து, பொழுதினை - காலத்தை, சுருக்கும் - குறைக்கின்ற, புழுத்து அலை - புழுத்தலைகின்ற, புலையனேன் தனக்கு - அசேதனமுடையனேனுக்கு, செம்மை ஆய் - செவ்வையாகிய, சிவபதம் - சிவலோக பதவியை, அளித்த - ஈன்றருளிய, செல்வமே - எனது ஐசுவரியமே! சிவபெருமானே - சிவபெருமானே! உன்னை - உந்தனை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - விடாமல் பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்து, எழுந்தருளுவது - போகுவது, எ - று.

(க - ரை.) என்னைப் பெற்றெடுத்த அன்னைபோல்பவனே ! தந்தையைப் போல்பவனே ! ஒப்புவமை யில்லாத மாணிக்கமே ! அன்பென்னும் கடலி லுண்டான அமிர்தமே ! பொய்யையே மெய்ப்பொருளாகக் கருதி விருத்தி செய்து காலங்கழிக்கின்ற நாயினுங் கடையேனுக்குச் சிவலோக பதத்தைக் கொடுத்தச் செல்வக் களஞ்சியமே ! இப்பூலோகத்தில் உன்னைப் பலமாகப் பற்றினேன், ஆனதால் இனிமேல் எங்கு எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) சிவபெருமான் ஈன்ற அன்னை தந்தையைப்போல் கிருபாநோக்க முள்ளவராதலால் " அம்மையே யப்பா " என்று கூறினர். விளைந்த ஆரமுதே என்றதற்கேற்ப அன்பைக் கடலாக்கி யுரைக்கலாயிற்று. பொய்ம்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கலாவது - பொய் வியாபாரங்களைச் செய்து அதனல் வரும் ஊதியத்தை யுண்டு வாணாளைக் கழித்தல். (ரு)

அருளுடைச்சுடரேயளிந்ததோர்கனியே
பெருந்திறலருந்தவர்க்கரசே
பொருளுடைக்கலையேபுகழ்ச்சியைக்கடந்த
போகமேயோகத்தின்பொலிவே
தெருளிடத்தடியார்சிந்தையுட்புகுந்த
செல்வமேசிவபெருமானே
யிருளிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) அருள் உடை - கிருபையை யுடையை, சுடரே - சோதியே ! அளிந்தது - கனிந்ததாகிய, ஓர் கனியே - நிகரற்றப் பழமே ! பெருந்திறல் - பேராற்றலையுடைய, அருந்தவர்க்கு - அருமையாகிய தபோபலத்தை யுடையோர்க்கு, அரசே - அரசனே ! பொருள் – செல்வச் சிறப்பை, உடை - உடைய, கலையே - சாத்திரமே ! புகச்சியை - சிறப்பை, கடந்த - ஒழித்த, போகமே - பேரின்ப வாரியே! யோகத்தின் - யோகத்தினது, பொலிவே - அழகே ! தெருள் இடத்து - தெளிவாகிய இடத்தை யுடைய, அடியார் - அடியவர்களது, சிந்தையுள் - மனத்தில், புகுந்த - உட்புகுந்த, செல்வமே - ஐசுவரியமே ! சிவபெருமானே – சிவபெருமானே ! இருள் - [அஞ்ஞானமாகிய] இருள், இடத்து - செறிந்த இப்பூலோகத்தில், உன்னை - உந்தனை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - பற்றினேன், இனி - இனிமேல், எங்கு-எவ்விடத்து, எழுந்தருளுவது - நீ எழுந்தருள்வது, எ - று.

(க - ரை.) அருட்பெருஞ்சோதியே ! ஒப்பற்ற கனியே ! தபசிகட்கிறைவனே ! வேதாகமங்களில் சிறப்பமைந்த சாத்திர உருவாயிருப்பவனே ! பெருமைக் கடங்காத பேரின்பமே ! யோகப் பொலிவே ! யாவும் தெளிந்த ஞானிகள் மனத்தின்கண் குடிகொண்டிருக்கும். பெருஞ் செல்வமே ! அஞ்ஞான

மென்னும் இருள் சூழ்ந்த இவ்வுலகத்தில், உன்னை உள்ளன்போடு உறுதியாய்ப் பிடித்தேன், ஆகையால் இனிமேல் நீ எவ்விடம் எழுந்தருள்வது, என்பது.

(வி - ரை.) அருள் - கிருபை. சுடர் - ஜோதி. சிந்தை - மனது. புகுதல் - உள் செல்லல். செல்வம் - ஐசுவரியம். அன்பர்க்கு அளிந்த பழம் போல் நன்மையைத் தருதலால் "அளிந்ததோர் கனியே" என்றார். சாபாநுக் கிரகங்களைச் செய்ய வல்லராதலால் தவமுடையோரை "பெருந்திறலருந்தவர்" என்றார். (௬)

ஒப்புனக்கில்லாவொருவனேயடியே
னுள்ளத்துளொளிர்கின்றவொளியே
மெய்ப்பதமறியாவீறிலியேற்கு
விழுமியதளித்ததோரன்பே
செப்புதற்கரியசெழுஞ்சுடர்மூர்த்தி
செல்வமேசிவபெருமானே
யெய்ப்பிடத்துன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) ஒப்பு - நிகர், உனக்கு - உந்தனுக்கு, இல்லா - இல்லாத, ஒருவனே - ஏகனே! அடியேன் - தொண்டுபூண் டொழுகாநின்ற அடிமையின் உள்ளத்துள் - மனத்தில், ஒளிர்கின்ற - பிரகாசிக்கின்ற, ஒளியே - ஜோதியே! மெய் — உண்மையான, பதம் - முத்திதரும் பதவியை, அறியா - தெரிந்து கொள்ளாத, வீறு - மேன்பாடு, இலியேற்கு — இல்லாதவனாகிய எனக்கு, விழுமியது - யாவராலும் மதிக்கப்பெற்றப் பதத்தை, அளித்தது - தந்ததாகிய, ஓர் - நிகரற்ற, அன்பே - என்னுருயிர்க் கன்பே! செப்புதற்கு - யாவராலும் புகழுதற்கு, அரிய - அரிதாகிய, செழு — செழுமையை யுடைய, சுடர் — ஒளிதங்கிய, மூர்த்தி - புண்ணிய மூர்த்தியே! எய்ப்பு - இளைத்து, இடத்து - இடத்தில், உன்னை-தேவரீரை, சிக்கென - கெட்டியாய், பிடித்தேன்-பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்துக்கு, எழுந்தருளுவது - போவது, எ - று.

(க - ரை) இருவரால் காணுதற் கரிதானவனும், யாவராலும் மதிக்கப்பெற்ற இறைவனே! நாயினுங் கடையேனாகிய அடியேனது உள்ளத்தில் விளங்கும் பரஞ்சோதியே! மெய்ப்பொருளாகிய பதத்தை அறிந்துகொள்ளாதச் சடையனேனுக்குச் சிறந்த முத்திபதத்தைக் கொடுத்த அன்புருவமே! சொல்லுதற்கு அரிய ஜகச்சோதியே! நான் களைத்த இடத்தில் உன்னைப் பலமாகப் பற்றினேன், ஆதலால், இனிமேல் நீ எங்கே எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) மெய் - உண்மை. இலியேல் - இல்லாமல். பதம் இங்கு சிவபதம் என்றுணர்க. பிடித்தல் - பற்றல். விழுமியது என்றது முத்திப்பேற்றை. இன்னதினும் என்னுது வாளா விழுமியது என்றமையால், முத்தியினும் மேலானது ஒன்றில்லை எனப்பொருளாயிற்று. "சிறப்பினுஞ் செல்வமுமீனு மறத்தினூஉங், காக்கமெவனோ வுயிர்க்கு" என்னுந் திருக்குறளில் சிறப்பு என்பது இப்பொருட்டாதலைப் பரிமேலழகர் உரையால் அறிக. (௪)

அறவையேன்மனமேகோயிலாக்கொண்டாண்
டளவிலாவானந்தமருளிப்
பிறவிவேரறுத்தென்குடிமுழுதாண்ட
பிஞ்ஞகாபெரியவெம்பொருளே
திறவிலேகண்டகாட்சியேயடியேன்
செல்வமேசிவபெருமானே
யிறவிலேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) அறவையேன் - திக்கற்றவனாகிய என், மனமே - மனத்தையே, கோயில் ஆ - சந்நிதியாக, கொண்டு - ஏற்படுத்திக்கொண்டு, ஆண்டு - கிருபை செய்தருளி, அளவு - எண்ணிக்கைக்கு, இலா - இல்லாத, ஆநந்தம் - பேரின்பமாகிய இன்பசுகத்தை, அருளி - கொடுத்தருளிச்செய்து, பிறவி - பிறத்தலின், வேர் - வேரை, அறுத்து - சேதித்து, என் - என்னுடைய, குடி முழுது - குலமுழுமையும், ஆண்ட - ஆட்கொண்டருளின, பிஞ்ஞகா - பிஞ்ஞகனே! பெரிய - மிகுதியாகிய, எம் - என்னுடைய, பொருளே - என்றென்றைக்கும் அழிவிலாப் பொக்கிஷமே! திறவிலே - பயிரங்கமாய், கண்ட - பார்க்கப்பட்ட, காட்சியே - கண்காட்சியே! அடியேன் - அடிமையினது, செல்வமே - ஐசுவரியமே! சிவபெருமானே - சிவலோக நாதனே! இறவிலே - இறுதியிலே, உன்னை - உன்னை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - கைப்பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்து, எழுந்தருளுவது - எழுந்துபோவது, எ - று.

(க - ரை.) அறுதியாகிய என்மனத்தையே கோயிலாகக் கொண்டு எழுந்தருளிவந்து, என்னை ஆதரித்து ஆண்டு நிறைகடந்த இன்பசுகத்தைக் கொடுத்து, மாயப்பிறவியை வேரோடுகளைந்து, என் குடிமுழுதும் கொத்தடிமையாக்கிக் கொண்டருளின சிவபெருமானே! எமக்கு என்றும் அழிவில்லாப் பெருஞ் செல்வமே! பயிரங்கமாகப் பார்க்கப்பட்ட கண்காட்சியே! கடைசியாக உன்னை உறுதியாய்ப் பற்றினேன்; ஆனதால் இனிமேல் நீ எவ்விடத்து எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) அறவை - கதியற்றவன். கோயில் - சந்நதி. அறுத்தல் - கொய்தல். செல்வம் - நிதி. (௫)

பாசவேரறுக்கும்பழம்பொருடன்னைப்
பற்றுமாறடியனேற்கருளிப்
பூசனையுகந்தென்சிந்தையுட்புகுந்து
பூங்கழல்காட்டியபொருளே
தேசுடைவிளக்கேசெழுஞ்சுடர்மூர்த்தீ
செல்வமேசிவபெருமானே
யீசனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை) பாசவேர் - பாசபந்தத்தின் வேரை, அறுக்கும்-கொய்கின்ற, பழம்பொருள் தன்னை - தொன்மையாகிய பொருளை, பற்றும் ஆறு - பிடிக்கும் நேர்மையை, அடியனேற்கு - தொண்டனாகிய எனக்கு, அருளி - தெரியும்படி கிருபை செய்து, பூசனை உகந்து - என் போற்றுதலையை விரும்பி, என் - என்னுடைய, சிந்தையுள் - மனத்தில், புகுந்து - உட்புகுந்து, பூ - தாமரை மலரை ஒற்ற, கழல் - பொற்பாதத்தை, காட்டிய - [பரிபூரண கிருபையால்] காண்பித்த, பொருளே - [என்றும் அழிவிலாக்] களஞ்சியமே! தேசு உடை - சுயம்பிரகாசத்தை யுடைய, விளக்கே - [எப்போதும் அணையாத] தீபமே! செழு - செழுமையாகிய, சுடர் - ஒளியுருவான, மூர்த்தீ - தயாபர மூர்த்தியே! செல்வமே - எனது ஐசுவரியமே! சிவபெருமானே - சிவபிரானே! ஈசனே - ஜகதீசனே! உன்னை - தேவரீரை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - [மனமென்னும் கயிற்றால்] இறுகப்பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்து, எழுந்தருளுவது - எழுந்துபோவது, எ - று.

(க - ரை.) பாசபந்தத்தின் வேரைக் கொய்தற்குரிய பழமையாகிய பொருளை யடைதற்பொருட்டு அவ்வழியை அடியேனுக்குக் காண்பித்து என்னுடைய பூசனையை நீ அன்புடன் ஏற்றுக்கொண்டதல்லாமல், என் மனத்திலிடத்தே குடிபுகுந்து இருவராலும் மற்றவராலுங் காணக்கிடையாத திவ்விய திருவடியைக் காண்பித்துக்கொடுத்தச் செல்வமே! ஒளியுள்ள தீபத்தின் ஒளியே! ஒளியுருவமே! உன்னைக் கெட்டியாய்ப் பற்றினேன், ஆதலால் நீ இனிமேல் எவ்விடம் எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) பாசம் - பாசபந்தம். அருளல் - கொடுத்தல். பூசனை - ஆராதனை. பூ - இங்கு தாமரை மலரைக் குறித்து. தேசு - அழகு. ஈசன் என்று மழிவிலாப் பெருஞ்செல்வத்தை யுடைய ஜகதீசன். (எ)

அத்தனேயண்டரண்டமாய்நின்ற
வாதியேயாதுமீறில்லாச்
சித்தனேபத்தர்சிக்கெனப்பிடித்த
செல்வமேசிவபெருமானே

பித்தனேயெல்லாவுயிருமாய்த்தழைத்துப்
பிழைத்தவையல்லையாய்நிற்கு
மெத்தனேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) அத்தனே - [என்றும் பிறப்பிறப்பிலாக்] கடவுளே! அண்டர் - பூலோகத்தாரும், அண்டம் - எல்லா உலகங்களும், ஆய் நின்ற - உண்டாகி நின்ற, ஆதியே - முதற்கடவுளே! யாதும் - சிறிதும், ஈறு - முடிவு, இல்லா - இல்லாத, சித்தனே - பேரறிவுருவனே! பத்தர் - பத்தர்களை, சிக்கென - உறுதியாக, பிடித்த - பற்றின, செல்வமே - பெரும் பாக்கியமே! சிவபெருமானே - சிவபிரானே! பித்தனே - பித்துபோலிருப்பவனே! எல்லா - யாவத்து, உயிரும் - ஜீவராசிகளும், ஆய் - ஆகி, தழைத்து - செழித்து, பிழைத்து - தப்பி, அவை - அவைகள், அல்லை ஆய் - அல்லையாகியும், நிற்கும் - நிற்கின்ற, எத்தனே - வஞ்சக முடையவனே! உன்னை - உந்தனை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - பற்றினேன், இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்து, எழுந்தருளுவது - போவது, எ - று.

(க - ரை.) ஆக்கலழித்தல் முதலிய குணங்களை யுடைய கடவுளே! உலகமும், உலகத்துயிர்களுமான முதல்வனே! முடிவு சொல்லப்படாத அறிவுருவனே! பத்தர்களை உறுதியாய்ப் பிடித்தச் செல்வமே! சிவபிரானே! பித்தனே! எல்லா ஜீவராசிகளுமாகி அவைக ளல்லவுமாயிருக்கும் தந்திரவாதியே! உன்னைக் கெட்டியாய்ப் பற்றினேன், இனிமேல் நீ எவ்விடத்துச் செல்வது, என்பது.

(வி - ரை.) அண்டம் என்பவற்று ஈற்றில் எண்ணும்மைகள் தொக்கன. ஈறு - முடிவு. தழைத்தல் - செழித்தல். பிழைத்தல் - ஜீவித்தல். எல்லா வுயிருமாயிருந்தும் அவற்றுக்கு அயலாயிருத்தல் ஓர் உபாயமாதலால் "எத்தனே" என்றார். (அ)

பானினைந்தூட்டுந்தாயினுஞ்சாலப்
பரிந்துநீபாவியேனுடைய
வூனினையுருக்கியுள்ளொளிபெருக்கி
யுலப்பிலாவானந்தமாய
தேனினைச்சொரிந்துபுறம்புறந்திரிந்த
செல்வமேசிவபெருமானே
யானுனைத்தொடர்ந்துசிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) நினைந்து - [உண்டு வெகு காலமாயிற்றென்று] எண்ணி, பால் - [மக்களுக்குப்] பாலை, ஊட்டும் - உண்பிக்கின்ற, தாயினும் - பெற்றவ

ளினும், நீ - நீ, சால - மிகவும், பரிந்து - [கிருபையோடு] இரங்கி, பாவியேனுடைய - [நிராதரவற்ற] பாவியாகிய எனது, ஊனினை - தேகத்தை, உருக்கி - [அனலிலிட்ட மெழுகைப்போல்] உருகச்செய்து, உள் - [என்] மனத்தினிடத்தே, ஒளி - [ஞான] சோதியை, பெருக்கி - பெருகச்செய்து, உலப்பு - சேதம், இலா - இல்லாத, ஆனந்தம் ஆய - பேரின்பமாகிய, தேனினை - மதுரத்தை, சொரிந்து - ஊத்தி, புறம் புறம் திரிந்த - அப்புறமிப்புறமாக [யாதொன்றும் தெறியாதவர்போல்] திரிந்த, செல்வமே - எனது [அழிவில்லா ஐசுவரியமே! சிவபெருமானே - சிவலோக நாதனே! யான் - நான், உன்னை - தேவரீரை, தொடர்ந்து - பின்பற்றி, சிக்கென - கெட்டியாய், பிடித்தேன் - பற்றினேன், [ஆனதால்] இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்து, எழுந்தருளுவது - எழுந்துபோவது, எ - று.

(க - ரை.) ஈன்றெடுத்த மாதாவினும் மிக்கக் கருணை யுடையவனே! நீ [அதனிலும் மேலாக] மிக்க இரங்கி ஊன்பொருந்திய தேகத்தை அனலிலிட்ட மெழுகுபோல் உருகச்செய்து எனதுள்ளத்தில் உன் [ஞான] ஜோதியைப் பெருகச்செய்து பேரானந்தத்தைத் தருகின்ற மதுரத்தைப் பொழிந்த அழியாச் செல்வமே! சிவபெருமானே! அடியேனுகிய நான் உன்னைப் பின் தொடர்ந்து கெட்டியாய்ப் பற்றினேன், ஆனதால் இனிமேல் நீ எவ்விடமெழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) இறைவனுகிய பரமசிவம் எல்லாச் சீவராசிகட்குப் பெற்ற மாதாவினுஞ் சிறந்த தயவுடையவன் என்றற்கு, "பாலினைந்தூட்டுந் தாயினுஞ் சாலப்பரிந்து" என்றார். ஊன் - சதை, மாமிசம். உள்ளொளி என்றது-ஞானப்பிரகாசம். (௬)

புன்புலால்யாக்கைபுரைபுரைகனியப்
பொன்னெடுங்கோயிலாப்புகுந்தென்
னென்பெலாமுருக்கியெளியையாயாண்ட
வீசனேமாசிலாமணியே
துன்பமேபிறப்பேயிறப்பொடுமயக்காந்
தொடக்கெலாமறுத்தநற்சோதீ
யின்பமேயுன்னைச்சிக்கெனப்பிடித்தே
னெங்கெழுந்தருளுவதினியே.

(ப - ரை.) புன் - மிருதுவாகிய, புலால் - ஊனோடு கூடிய, யாக்கை - [இவ்] உடம்பை, புரை புரை - புரைகள்தோறும், கனிய - அளிய, பொன் - பொன் நிறத்தை யொற்ற, நெடு-உயர்ந்த, கோயில் ஆ - சந்நிதியாகக்கொண்டு, புகுந்து - உட்புகுந்து, என் - என்னுடைய, என்பு - எஃபு, எல்லாம் - யாவும்,

உருக்கி - உருகச்செய்து, எளியை ஆய் - [யாருமற்ற] ஏழையைப்போல் எழுந்தருளிவந்து, ஆண்ட - என்னையும் மதித்து அடிமையாளாக்கிக் கொண்டு ஆண்டுகொண்டருளின, ஈசனே - ஜகதீசனே! மாசு [யாதொரு] குற்றம், இலா - இல்லாத, மணியே - [மகிமைபெற்ற] மாணிக்கமே! துன்பம் - வருத்தம், பிறப்பு - பிறவி, இறப்பொடு - சாகுதலோடு, மயக்கு ஆம் - மயக்கமுமாகின்ற, தொடக்கு-தொடர்பு, எல்லாம் - யாவற்றையும், அறுத்த - கொய்த, நல் - நன்மையைத் தருகின்ற, சோதீ - சுயம்பிரகாசமே! இன்பமே - ஆநந்த வுருவே! உன்னை - தேவரீரை, சிக்கென - உறுதியாக, பிடித்தேன் - [விடாமல்] பற்றினேன், [ஆதலால்] இனி - இனிமேல், எங்கு - எவ்விடத்து, எழுந்தருளுவது - எழுந்துபோவது, எ - று.

(க - ரை.) மாமிச முதலியதோடுங் கூடிய என் உடம்பை இருப்பிடமாகக்கொண்டு உட்புகுந்து என்புருகச்செய்து அடியேனாகிய என்னை இலேசாக ஆண்டருளின ஜகதீசனே! களங்கமற்ற மாணிக்கமே! துன்பத்தைத் தருகின்ற பிறப்பிறப்புத்தொடர்ச்சியாவையும் ஒழித்தருளின பரஞ்சுடரே! ஆநந்தவுருவே! உன்னை இங்கு உறுதியாகப் பிடித்தேன், இனிமேல், நீ எவ்விடத்து எழுந்தருளுவது, என்பது.

(வி - ரை.) சற்று நேரத்தி லழியும் செயற்கையுடைய தாகையால் உடம்பை "புன்புலால் யாக்கை" என்றார். மாசு - குற்றம். தொடக்கு-கட்டு. அறுத்தல் - சேதித்தல். (சo)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவேசறவு.

## சுட்டொழிதல்.

[சுட்டொழிதல் என்பது தன்செயலற நிற்றல்.]

திருச்சிற்றம்பலம்.

### கொச்சகக்கலிப்பா.

இரும்புதருமனத்தேனையீர்த்தீர்த்தென்னென்புருக்கிக்
கரும்புதருசுவையெனக்குக்காட்டினையுன்கழலிணைக
ளொருங்குதிரையுலவுசடையானேநரிகளெல்லாம்
பெருங்குதிரையாக்கியவாறன்றேயுன்பேரருளே.

(ப - ரை.) இரும்பு தரு - இரும்புபோன்ற, மனத்தேனை - கொடிய மனத்தை யுடையவனாகிய அடியேனை, ஈர்த்து ஈர்த்து - அலக்கழித்து அலக் கழித் திழுத்து, என் - என்னுடைய, என்பு - என்புகள், உருக்கி - உருகும் படிச் செய்து, கரும்பு தருசுவை - கரும்பின் மதுரம்போன்ற இனிமையாகிய உருசியையுடைய, உன் - உன்னுடைய, கழல் இணைகள்-திருப்பாதங்களிரண் டையும், எனக்கு - அடியேனுக்கு, காட்டினை - கிருபைசெய்து காட்டியருளினை, ஒருங்கு - ஒன்றாய், திரை உலவு - [கங்காதேவியின்] அலைகள் எங்கும் உலாவுகின்ற, சடையானே - சடைமுடியை உடையானே! நரிகள்-சம்புகள், எல்லாம் - யாவற்றையும், பெரு - மிகு அழகையொற்ற பெரிய, குதிரை - அஸ்வங்களாக, ஆக்கிய ஆறு - உண்டாக்கியவிதம், [என்ன ஆச்சரியம்] உன்- இது உன்னுடைய, பேர் அருள் - மகத்தாகிய அருட்செய்கையின் காரியமே ஆம், எ - று.

(ச - ரை.) இரும்புவலியை யொற்றக் கொடிய நெஞ்சையுடைய அடியேனை வலியவந்து என்னைப்பிடித்து என்னுடைய என்பை யுருகச்செய்து [யாவராலுங் காணப்படாத] உன்திருவடியை யென்கண் குளிரக் காண்பித்

தருளினை, கங்கையைச் சடாபாரத்தில் தரித்தக் கங்காதரனே ! காட்டில் வாழாநின்ற நரிகளைக் குதிரைகளாக்கிக் கொடுத்தனை யல்லவா? இது என்ன ஆச்சரியமான காக்ஷி, என்பது.

(வி - ரை.) இரும்புதரு என்பதில் தரு உவமை யுருபு. இறைவனாகிய கங்காதரனது திருவடி அன்பர்களுக்குக் கரும்புபோல இன்பத்தைத் தருதலால், "கரும்பு தருசுவை யெனக்குக்காட்டினை யுன்கழலிணைகள்" என்றார். அன்று ஏ - அசைகள். (க)

பண்ணார்ந்தமொழிமங்கைபங்காநின்னாளானார்க்
குண்ணார்ந்தவாரமுதேயுடையானேயடியேனை
மண்ணார்ந்தபிறப்பறுத்திட்டாள்வாய்நீவாவென்னக்
கண்ணாரவுய்ந்தவாறன்றேயுன்கழல்கண்டே.

(ப - ரை.) பண் - பாட்டினிசையைப் போல, ஆர்ந்த - அமர்ந்த, மொழி-வார்த்தையை யுடைய, மங்கை - வாமபாகத்தி லமைந்த ஜகதீஸ்வரியின், பங்கா - பங்கனே ! நின் ஆள் - உன் அடிமையாளாக, ஆனார்க்கு - ஆனவர்க்கு, உண் - உட்கொள்வதற்கு, ஆர்ந்த - கிடைத்தற்கரிய, ஆர் அமுதே - அரிதாகிய அமிர்தமே ! உடையானே-சகல பாக்கியத்தையு முடையவனே ! அடியேனை - உன் தொண்டனேனை, மண் ஆர்ந்த - இப்பூவுலகத்தில் ஜனித்த, பிறப்பு அறுத்திட்டு - இப் பிறவித்தளையைக் கொய்திட்டு, ஆள்வாய் நீ-ஆண்டுகொள்வோனாகிய நீ, வா என்ன - வருகவென, உன் - உன்னுடைய, கழல் - பொற்பாதத்தை, கண்டு - கண்ணாரப் பார்த்து, உய்ந்த ஆறு - அடியேன் ஜீவித்த விதம் என்ன ஆச்சரியம் ! எ - று.

(க - ரை.) யாவர்க்கும் கிடைத்தற் கரிதாகியவனும், சகல பாக்கியத்தையு முடையவனும், உமாதேவியை வாமபாகத்தில் வைத்தவனுமாகிய அர்த்தனாரீசனே ! உன் அடியார்க்கு அமிர்தமாயிருப்பவனே ! அடியேனுடைய பிறவித்தளையை வேரறக் களைந்து ஆள்பவனாகிய நீ என்னைக் கூப்பிடுதலும், இருவராலும் இன்னும் மற்றவர்களாலும் காணுதற் கரிய உன் திருவடியைக் கண்ணாரக் கண்டு நான் ஜீவித்த விதம் ஈதென்ன ஆச்சரியம் ! என்பது.

(வி - ரை.) இன்பமொழி என்றற்கு, "பண்ணார்ந்த மொழி" என்றார். மங்கை என்றது இங்ஙனம் உமையவளைக் குறித்து. (உ)

ஆதமிலியான்பிறப்பிறப்பென்னுமருநரகி
லார்தருமின்றியேயழுந்துவேற்காவாவென்
றேதமலிநஞ்சுண்டவுடையானேயடியேற்குன்
பாதமலர்காட்டியவாறன்றேயெம்பரம்பரனே.

(ப - ரை.) ஆதம் - யாதொருவர் ஒத்தாசை, இலி - இல்லாதவனாகிய, யான் - அடியேன், பிறப்பு இறப்பு - பிறத்தலும் இறத்தலும், என்னும்-என்று

சொல்லப்படுகின்ற, அரு நரகில் - மா நரகத்தில், ஆர் தமரும் - தமரொருவரும், இன்றியே - இல்லாமலே, அழுந்துவேற்கு - மூழ்கின்றவனாகிய எனக்கு, ஆவா - ஐயோ ! என்று - என்று, ஓதம்மலி நஞ்சு உண்ட - கடலிலுண்டாகிய விஷத்தை அமிர்தமாக உட்கொண்ட, உடையானே - பெருங்கீர்த்தியை யுடையவனே ! அடியேற்கு - தொண்டனாகிய அடிமைக்கு, உன் - உன்னுடைய, பாதமலர்-திருத்தாளின் மலரை, காட்டிய - காண்பித்த, ஆறு-விபரம், அன்றே - அன்றோ, எம் - என்னுடைய, பரம்பரனே - மேலோர்க்கு மேலானவனே ! எ - று.

(க - ரை.) திக்கற்றவனாய்ப் பிறப்பிறப்பென்னும் கொடிய நரகில் ஆழ்ந்துகின்ற அடியேனுக்கு ஐயோ ! என்று மனமிரங்கி உன் திருவடித் தாமரைமலரைக் காண்பித்த விபரம் என்ன ஆச்சரியம், என்பது,

(வி - ரை.) ஆதம் - ஆதாரம். ஆதாரமென்பது ஆதமென நின்றது செய்யுள் விகாரம். நரகு - நரகம், அழுந்தல் - புதைந்தல்.　(கூ)

பச்சைத்தாளரவாட்டிபடர்சடையாய்பாதமல
ருச்சத்தார்பெருமானேயடியேனையுய்யக்கொண்
டெச்சத்தார்சிறுதெய்வமேத்தாதேயச்சோவென்
சித்தத்தாறுய்ந்தவாறன்றேயுன்றிறநினைந்தே.

(ப - ரை.) பச்சை - பச்சை நிறத்தை யொத்த, தாலு - நாவினுடைய, அரவு - சர்ப்பத்தை, ஆட்டி - யாவருங் காண அசைப்பவனே ! படர் - விரிந்த, சடையாய் - திருச்சடையை யுடையவனே ! உச்சத்து ஆர் - மகிமையோடு வாய்ந்த, பாத மலர் - திருவடித் தாமரை மலரை யுடைய, பெருமானே - பெருங்கீர்த்தியை யுடைய பெம்மானே ! அடியேனை - உன் தொண்டனேனை, உய்ய - நற்கதி யடைந்து ஜீவிக்கும் வண்ணம், கொண்டு - தடுத்தாட்கொண்டு, எச்சத்து ஆர் - குறைபாட்டுள்ள, சிறுதெய்வம் - சில்லரை தெய்வங்களை, ஏத்தாதே - [என் தலைவணங்கி கைகூப்பித்] துதிசெய்யாமல், உன் - உன்னுடைய, திறன் - [சர்வ] வல்லபத்தின் தன்மையை, நினைந்து - எண்ணுதுமெண்ணி, என்-எனது, சித்தத்து ஆறு - எண்ணத்தின்படியே, உய்ந்த ஆறு-பிழைத்த விதம், அச்சோ அன்றே - வியப்பன்றோ ! எ - று.

(க - ரை.) பச்சை நிறத்தோடுங் கூடிய நாவைப்படைத்த பாம்பை யசைப்பவனும், விரிந்த திருச்சடையை யுடையவனும், புகழுப்பெற்றத் திருவடித் தாமரைமலரை யுடையவனுமாகிய இறைவனே ! சொல்லப்படுகின்ற தாழ்ந்த தெய்வங்களை நான் போற்றி செய்யாதபடி உனது மகிமையையே எண்ணி பிழைத்த விதம் என்ன ஆச்சரியம் ! என்பது.

(வி - ரை.) பச்சை என்றது பஞ்சவர்னத்தி லொன்று. தாலு அர என்பது - தாலரவெனக் குற்றுகர விதியால் புணர்ந்தது. உய்தல் - பிழைத்தல்.

எச்சத்தார் - தேவர் எனினுமாம். திறன் - தன்மை. அந்தோ வியப்புச் சொல். (௪)

கற்றறியேன்கலைஞானங்கசிந்துருகேனுயிடினு
மற்றறியேன்பிறதெய்வம்வாக்கியலால்வார்கழல்வந்
துற்றிறுமாந்திருந்தேனெம்பெருமானேயடியேற்குப்
பொற்றவிசுநாய்க்கிடுமாறன்றேநின்பொன்னருளே.

(ப - ரை.) கலை - கல்வினையையும், ஞானம் - ஞானத்தைத் தராநின்ற நல்லொழுக்கத்தையும், கற்றறியேன் - வாசித்தறியா நின்றேன், கசிந்து-மனம் நைந்து, உருகேன் - உருகிலேன், ஆயிடினும் - அவ்வாறாஞலும், வாக்கு - வாக்கினது, இயலால் - இயற்கையால், பிற - அன்னிய, தெய்வம் - தெய்வங்களை, அறியேன் - தலைவணங்கியும் கையாற்றொழுது மறியேன், வார் - [உன்] நெடிய, கழல் - திருவடியை, வந்து - [அதி ஆவலுடன்] வந்து, உற்று-சேர்ந்து, இறுமாந்து - உன்னைத்தவிர வேறொருவரையும் மதிக்காமல், இருந்தேன் - நின்னையே கதியென வெண்ணி யிருந்தேன், எம்பெருமானே - எம்பிரானாகிய தந்தையே! அடியேற்கு - நின் தொண்டனாகிய எனக்கு, நின் - உன்னுடைய, பொன் - அழகிய, அருள் - கிருபைவந்தவிதம், நாய்க்கு - சுவானத்திற்கு, பொன் தவிசு - சொர்ன பீடத்தை, இடும் ஆறு - கொடுத்தவிதம் போல்வது, அன்றே - அல்லவா ! எ - று.

(க - ரை.) கல்வி முதலிய ஞானங்களை வாசித்தவனல்லேன், மனம் கசிந்துருகேன், இதன்றியில், அன்னிய தெய்வத்தை தலைவணங்கி வாயார வாழ்த்தியறியேன், உன் அழகிய திருவடிப்பேற்றால் வேறொன்றையும் மதிக்காமல் இறுமாந்திருந்தேன், இத்தன்மையை யுடைய அடியேன் மீது நினைத்தற்கரிய உன்பேறருளைக் கிருபைசெய்த காக்ஷியைப் பார்க்குமிடத்து நாய்க்குச்சொர்ன பீடம் கிடைத்ததுபோ லன்றோ ! என்பது.

(வி - ரை.) கலை - கல்வி. ஞானம் - நூல். பிறதெய்வம் என்றது பிறப்பிறப்பிர்க் குட்பட்ட சிறு தெய்வங்களைக் குறித்து. இதனை மணவாள மாமுனியின் ஆன்றோர் திருவாக்காலும் உணர்க. யாரையும் மதிக்காமல் உன்மத்தனைப்போல் இருத்தலை "இறுமாந்து" என்று கூறினர். (ரு)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நஞ்சாயதுயர்கூரநடுங்குவேனின்னருளா
லுய்ஞ்சேனெம்பெருமானேயுடையானேயடியேனை
யஞ்சேலென்றாண்டவாறன்றேயம்பலத்தமுதே.

(ப - ரை.) பஞ்சு ஆய-பஞ்சினும் மிருதுவாகிய, அடி-பாதத்தை யுடைய, மடவார் - பெண்களது, கடைக்கண்ணால் - கடைக்கண் பார்வையால், இடர்பட்டு - அவர்கள் மாய்கையிற் சிக்கித் துன்பப்பட்டு, நஞ்சு ஆய - விஷத்

தைப்போன்ற, துயர் கூர - துன்பப் பெருக்கால், நடுங்குவேன் - நடுங்குவேனாகிய அடியேன், நின் அருளால் - உன் கிருபாநோக்கத்தால், உய்ஞ்சேன் - [அம்மாய்கையினின்று தப்பிப்] பிழைத்து ஜீவித்தேன், எம்பெருமானே - எமது பிரானே ! உடையானே - யாவையுமுடைய தலைவனே ! அம்பலத்து - திருச்சிற்றம் பலத்திலுள்ள, அமுதே - அரிய அமிர்தமே ! அடியேனை - தொண்டனாகிய என்னை, அஞ்சேல் என்று - யாதொன்றுக்கும் பயப்படாதே யென்று, ஆண்ட ஆறு - ஆண்டுகொண்டருளின விதம் [இது நல்லவழகே !] எ - று.

(க - ரை.) மாயைப்போன்ற பெண்களது கடைக்கண்பார்வையால் துன்பமடைந்து நடுநடுங்குகின்ற அடியேன் உன்பெருங் கருணையென்னும் பேருதவியினால் தப்பிப்பிழைத்தேன், ஆனது பற்றி, நாயினுங் கடையனேனை இனி யாதொன்றுக்கும் பயப்படாதே என்று நீ கிருபைசெய்து ஆண்டருளினவிந்தை என்ன விந்தை ! என்பது.

(வி - ரை.) அடி - பாதம். [கால்] "பண்டறியேன் கூற்றென்பதனை யினியறிந்தேன் பெண்டகையாற் பேரமர்க்கட்டு" என்றும், "கண்டாருயி ருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப் பேதைக்கமர்த்தனகண்" என்றும் மேலோர் கூறுதலால், "மடவார் கடைக்கண்ணு விடர்ப்பட்டு நஞ்சாயதுயர் கூர நடுங்குவேன்" என்றார். அம்பலம் - தில்லையம்பலத்தைக் குறித்து. [யாது மில்லை எனினுமமையும்.] (சூ)

என்பாலைப்பிறப்பறுத்திங்கிமையவர்க்குமறியவொண்ணாத்
தென்பாலைத்திருப்பெருந்துறையுறையுஞ்சிவபெருமா
னன்பாநீயகநெகவேபுகுந்தருளியாட்கொண்ட
தென்பாலேநோக்கியவாறன்றேயெம்பெருமானே.

(ப - ரை.) என்பால் - என்பொருட்டேற்பட்ட, பிறப்பு - பிறவித்தளையை, அறுத்து - கொய்து, இங்கு - இவ்விடத்தில், இமையவர்க்கும் - விண்ணுலகத்தாராகிய தேவர்களுக்கும், அறியவொண்ணு-தெரிந்துகொள்ளக்கூடாத, தென்பால் - தெற்குத் திசையிலுள்ள, திருப்பெருந்துறை-திருப்பெருந்துறையென்னும் க்ஷேத்திரத்தின் கண்ணே, உறையும் - எழுந்தருளி வாழாநின்ற, சிவபெருமான் - சிவபெருமானே ! அன்பால் - [என்பொருட்டு உனக்குள்ள] ஆசையினால், நீ - நீ, அகம்நெக - என்னுடைய மனமானது நெகிழும்படி, புகுந்து - உட்புகுந்து, அருளி - கிருபையோடு, ஆட்கொண்டது - அடிமையாளாக ஆட்கொண்டருளினது, என்பாலே - என்னிடத்தே, நோக்கிய ஆறு - நீ கிருபாநோக்கம் வைத்தபடியேயாம் ! [ஈதென்ன ஆச்சரியம் எம் இறைவனே] ! எ - று.

(க - ரை.) என்பாற் பட்டப் பிறவித்தளையைக் கொய்தவனும், இவ்விடத்தில் தேவர்களுக்கும் காணக்கிடைக்காதவனும், திருப்பெருந்துறையி

லெழுந்தருளி யிருப்பவனுமாகிய சிவபெருமானே! அடியேனை அன்பின்மிகுதியால் அடிமைகொண்டு ஆண்டு கொண்டருளினது என்மீது நீ அருள்நோக்கம் வைத்தபடியேயாம், ஈதென்ன ஆச்சரியம், என்பது.

(வி - ரை.) என்பாலை, தென்பாலை என்பவற்றில் ஐ சாரியை. சிவபெருமான் அண்மை விளி. தேவர் இமையவர் என்றது மங்கலழகு. நோக்கல் - பார்த்தல். (எ)

மூத்தானேமூவா தமுதலானேமுடிவில்லா
வோத்தானேபொருளானேயுண்மையுமாயின்மையுமாய்ப்
பூத்தானேபுகுந்திங்குப்புரள்வேனைக்கருணையினாற்
பேர்த்தேநீயாண்டவாறன்றேயெம்பெருமானே.

(ப - ரை.) மூத்தானே - [யாவர்க்கும்] பெரியவனே! மூவாத முதலானே - முதிராத முதல்வனே! முடிவு இல்லா-முடிவு இல்லாத, ஓத்தானே - வேதப்பிரதி பாத்தியனே! பொருளானே - வேதப்பொருளா யுள்ளவனே! உண்மையும் ஆய் - உண்மையாயும், இன்மையும் ஆய் - இனிமையுமாகிய, பூத்தானே - பூரித்து எழுந்தவனே! இங்கு - இப்புவியின்கண், புரள்வேனை - புரண்டு உழல்பவனாகிய அடியேனை, கருணையினால் - கிருபா நோக்கத்தால், புகுந்து - எழுந்தருளி, பேர்த்து - என்னிலையைப் பேர்த்து, நீ ஆண்ட ஆறு - என்னை நீ ஆட்கொண்டருளினவிதம், இருந்தவாறு இதுவும் அழகே! எ - று.

(க - ரை.) யாவர்க்கும் பெரியோனே! மூவாத முதல்வனே! முடிவில்லா வேதப்பிரதி பாத்தியனே! உண்மை சுகங்களாயிருப்பவனே! இப்பூலோகத்தி லுழன்று புரள்வேனாகிய என்னை உன் கிருபாநோக்கத்தால் அடிமைகொண் டாண்டருளின் காரணம் என்ன ஆச்சரியம்! என்பது.

(வி - ரை.) முதுமைப்பருவமும் இளமைப்பருவமும் சிவ பெருமான் உடையனல்லேனாகையால், "மூத்தானே மூவாத முதலானே" என்று கூறினர். பூலோகத்தில் சதமென்று வாழும் நாளில் நீதானே வலியவந்து என்றற்கு 'பூத்தானே புகுந்து" என்று கூறினார். பூத்தல் - பூரித்தல். (அ)

மருவினியமலர்ப்பாதமனத்தில்வளர்ந்துள்ளுருகத்
தெருவுதொறுமிகவலறிச்சிவபெருமானென்றேத்திப்
பருகியநின்பரங்கருணைத்தடங்கடலிற்படிவாமா
றருளெனக்கிங்கிடைமருதேயிடங்கொண்டவம்மானே.

(ப - ரை.) மரு இனிய - மனத்தினால் இனிதாகிய, மலர் - தாமரைப் புட்பம்போன்ற, பாதம் - உன் திருவடிக ளிரண்டும், மனத்தில்-என் உள்ளத்தில், வளர்ந்து - பரவி, உள் - உள்ளே, உருக - உருகச்செய்து, தெருவு தோறும் - வீதி வீதியாக, மிக - மிக்க, சிவபெருமான் என்று - சிவபெருமானே என்று, அலறி - வாய்விட்டலறி, ஏத்தி - துதித்து, பருகிய - சொல்

லிய, நின் - உனது, பரங்கருணை - பெருங்கருணையாகிய, தடம் - விசாலம் பொருந்திய, கடலின் - திருப்பாற்கடலின்கண், படிவு ஆம் ஆறு - சேரும் வண்ணம், இங்கு - இவ்விடத்தே, எனக்கு - அடியேனுக்கு, அருள் - கிருபை செய்வாயாக, இடைமருதே - திருவிடைமருதூரென்னும் திவ்யக்ஷேத்திரத்தையே, இடம் - இருந்து வாசம்பண்ண இடமாக, கொண்ட - ஏற்றுக்கொண்ட, அம்மானே - எனது தந்தையே! எ - று.

(க - ரை.) திருவிடைமருதூரி லெழுந்தருளிய என் தந்தையே! தாமரைப் புட்பம்போலு முடைய உன் திருவடிகள் அடியேனது உள்ளத்திற்றங்கியுள்ளுருக்க, வீதிகடோறும் வாய்விட்டலறிச்சிவசங்கரா என்று துதித்து, உன் பெருங்கருணைக் கடலில் அழுந்தச் செய்தருளவேண்டும், என்பது.

(வி - ரை.) மருவினிய என்பதற்கு-அன்பர் அடைதற் கினிமையாயிருக்கிற எனினுமாம். பருகிய - செப்பிய வென்னும் வாய்பாட்டெச்சம். இது படிவாமாறு என்பதின் முதனிலையோடு முடிந்தது. இடம் - இங்கு வாசஞ் செய்யும் பதி. (க)

நானேயோ தவஞ்செய்தேன்சிவாயநமவெனப்பெற்றேன்
றேனாயின்னமுதமுமாய்த்தித்திக்குஞ்சிவபெருமான்
றானேவந்தெனதுள்ளம்புகுந்தடியேற்கருள்செய்தா
னூனாருமுயிர்வாழ்க்கையொறுத்தன்றேவெறுத்திடவே.

(ப - ரை.) தேன் ஆய் - தேனையொற்ற, இன் - இனிமையாகிய, அமுதம் ஆய் - அமிர்தம்போலும், தித்திக்கும் - தித்திக்கின்ற, சிவபெருமான் - சிவபெருமானானவன், தானே வந்து - தானே வலிய கைலையைவிட்டெழுந்தருளி வந்து, எனது - என்னுடைய, உள்ளம் - மனத்தினிடத்தே, புகுந்து - உட்புகுந்து, ஊன் - உடம்போடு, ஆரும் - பொருந்திய, உயிர் - உயிர், வாழ்க்கை - வாழ்க்கையை, ஒறுத்து - மிகவும், வெறுத்திட - வெறுத்து நீக்கும்வண்ணம், அடியேற்கு - தொண்டனேனுக்கு, அருள் - கிருபையை, செய்தான் - [மிகவு மன்போடு] புரிந்தான், [இவ்வாறாக உமாதேவியை யிடப் பாகத்தில் வைத்திருப்பவனாகிய சிவபெருமான் கிருபை செய்தமையால்] சிவாயநமஃ என - ஸ்ரீ பஞ்சாட்சரத் தியானஞ் செய்யும்படி, பெற்றேன் - சுதந்தரக்காரனாயினேன், [ஆதலால்] நானேயோதவம் - நான்தானே இப் பெரும்பேற்றினை யடையத் தக்கத் தவம், செய்தேன்-செய்தவனாயினேன்—, சிவாயநமஃ எனப்பெற்றேன், எ - று.

(க - ரை.) தேனின் சுவை முதலியவைபோல பேரானந்த இன்பத்தைத் தருகின்ற சிவபெருமான் கயிலையை விட்டுத்தானே எழுந்தருளி வந்து தொண்டனேனாகிய என் மனத்தினிடம் புகுந்து, கடலின் திரைகள்போல்பவனாகிய இப்பிறவியை இனி வேண்டாதபடி அடியேனுக்குக் கிருபைசெய்தாண்டான், இத்தன்மையாக சிவபெருமான் எனக்கு அருள் செய்தமையால் ஸ்ரீ பஞ்சாட்

சர எழுத்தாகிய ந ம சி வா ய ந மஃ என்னும் நாமத்தைத் தியானிக்கத்தக்க நற்பேற்றை யடையச் செய்தவனுயினேன், என்பது.

(வி - ரை.) தேனுய் அமுதமுமாய் என்பவற்றில் ஆய் உவம வுருபு. ஒறுத்தல் உண்டி சுருங்கல் முதலியவற்றால் வருத்துதல் எனினுமாம். உள்ளம் - மனம். வெறுத்தல் - வேண்டாமை. (௧0)

திருச்சிற்றம்பலம்.

---

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்புலம்பல்.

## சிவாநந்தமிடி.

[சிவாநந்தமிடி என்பது சிவாநந்தம் பெறுவிச்சை.]

திருச்சிற்றம்பலம்.

### கொச்சகக் கலிப்பா.

பூங்கமலத்தயனொடுமாலறியாதநெறியானே
கோங்கலர்சேர்குவிமுலையாள்கூறுவெண்ணீறுடி
யோங்கெயில்சூழ்திருவாரூருடையானேயடியேனின்
பூங்கழல்களவையல்லாதெவையாதும்புகழேனே.

(ப - ரை.) பூ - அழகிய, கமலத்து - தாமரை மலரை யாசனமாக வுடைய, அயனொடு - பிரமனோடு, மால் - விட்டுணுவும், அறியாத - [அடி முடியும் தேடியும்] அறியவொண்ணாத, நெறியானே - நன்மார்க்க வழியை யுடையவனே ! கோங்கு அலர் - கோங்குமரத்தின் மலரினரும்பை, சேர் - நிகரொத்த, குவி - குவிந்த, முலையாள் - இருதனங்களை யுடையவளாகிய உமையவளின், கூறு - பங்குடையவனே ! வெண்ணீறு - திருவெண்ணீற்றை, ஆடி - தேகமுழுதும் அணிபவனே ! ஓங்கு - வான மளாவிய, எயில் - திருமதில்கள், சூழ் - நான்கு பக்கங்களும் மதில்கள் சூழ்ந்திருக்கப்பட்ட, திரு - அழகோடுங் கூடிய, ஆரூர் உடையானே - [திரு] ஆரூரை யுடையவனே ! அடியேன் -

தொண்டனாகிய நான், நின் - உன்னுடைய, பூ - புட்பத்தினா லலங்கரிக்கப்பட்ட, கழல்கள் - திருவடிகள், அவையல்லாது - அத்திருவடிகளன்றி, எவை-வேறு எவற்றையும், யாதும் - சிறிதேனும், புகழேன் - கனவிலும் புகழ்ந்து போற்றேன், எ - று.

(க - ரை.) தாமரை மலரிலுள்ள பிரமனோடு திருமாலும் அடிமுடியு மறியவொண்ணாத நெறியவனும், உமாதேவியின் பங்கனும், தேகமுழுதும் வெண்ணீறு அணிபவனும், நாற்பக்கங்களிலும் மதில்கள் சூழப்பட்ட திருவாரூரை யுடையவனுமாகிய சிவபெருமானே ! தொண்டனாகிய அடியேன் உன் திருவடியன்றி வேறொன்றையும் புகழ நினைக்கேன், என்பது.

(வி - ரை.) பூ - பொலியுமெனினு மொக்கும். அயன் - அஜன் என்னும் வடமொழித்திரிபு. கோங்கு - ஓர்வித மரம். சேர் என்றது இங்கு நிகர்த்தது என்றும் பொருந்தும். ஆடுதல் - பூசுதல். (சு)

சடையானே தழலாடீ தயங்குமூவிலைச்சூலப்
படையானேபரஞ்சோதீபசுபதீமழவெள்ளை
விடையானேவிரிபொழில்சூழ்பெருந்துறையாயடியேனா
னுடையானேயுனையல்லாதுறுதுணைமற்றறியேனே.

(ப - ரை.) சடையானே - சென்னியில் ஜடாபாரத்தை யுடையவனே ! தழலாடீ - அழலாடுவோனே ! தயங்கும் - ஜொலிக்கின்ற, மூவிலை - மூன்று இலைகளைப்போன்ற, சூலப்படையானே-சூலப்படையை கரத்திற் றாங்காநின்ற சிவபெருமானே ! பரஞ்சோதீ - ஏக வஸ்துவாயிருக்கும் பரஞ்சுடரே ! பசுபதீ-சகல ஆன்மாக்களுக்குத் தலைவனாகிய சிவபெருமானே ! மழவு - சேங்கன்றை யொத்த, வெள்ளை - வெண்ணிறம்பொருந்திய, விடையானே - இரஷபத்தை வாகனமாகக் கொண்ட இறைவனே ! விரி - விசாலம் பொருந்திய, பொழில் சூழ் - சோலை சூழ்ந்த, பெருந்துறையாய் - திருப்பெருந்துறை யென்னும் பதியை யுடையவனே ! அடியேன் நான் - தொண்டனேனாகிய யான், மற்று-வேறு, உறுதுணை - உற்ற ஆதரவு, அறியேன் - தெரிந்தே னில்லை, எ - று.

(க - ரை. திருப்பெருந் துறையி லெழுந்தருளிய சிவாநுபோகனே ! சூலப்படை முதலிய யாவுமுடையானே ! உன்துணை யல்லாது வேறு உற்ற துணை யெங்கு சென்று தேடினும் கண்டேனில்லை, என்பது.

(வி - ரை.) சடை - முடி. தழலாடி - தழலோடாடி. தயங்கல் - இங்கு ஜொலித்தல். பசுபதீ - சகலவான்மாக்களுக்குத் தலைவனாயிருப்பவன். விடை-இடபம். மற்று - வேறு. (உ)

உற்றாரையான்வேண்டேனூர்வேண்டேன்பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன்கற்பனவுமினியமையும்

குற்றாலத்தமர்ந்துறையுங்கூத்தாவுன்குரைகழற்கே
கற்றாவின்மனம்போலக்கசிந்துருகவேண்டுவனே.

(ப - ரை.) யான் - நானே, உற்றாரை - பந்துக்களை, வேண்டேன் - [அவ்வுறவினர்களோடு கூடி வாழ] இச்சிக்கேன், ஊர் - ஊரில் [குடியிருக்க] வேண்டேன் - இச்சிக்கேன், பேர் - பேரையும், வேண்டேன் - [அடைய] விரும்பேன், யான் - [நாயினுங்கடையேனாகிய] நான், கற்றாரை - [ஆகம முதலிய சகலசாத்திரங்] கற்றோர்களை, வேண்டேன் -[அடைந்திருக்க]விரும்பேன், [ஆதலால்] இனி - இனிமேல், கற்பனவும் - கற்றுக்கொள்ளப்படுவன யாவும், அமையும் - [இத்துடன்] போதும் போதும், குற்றாலத்து - திருக்குற்றாலமென்னும் க்ஷேத்திரத்தில், அமர்ந்து - (கயிலாயத்தை விட்டெழுந்தருளி வந்து) அமர்ந்து, உறையும் - (ஜீவகாருண்யமுடைய நற்குணத்துடன்) வாழ்கின்ற, கூத்தா - கூத்தப்பிரானே! உன் - தேவரீருடைய, குரை - சப்திக்கின்ற, கழற்கே - ஜயவீரகண்டாமணி யணிந்தத் திருப்பாதத்துக்கே, கற்றாவின் - கன்றையுடைய பசுவைப்போல, கசிந்து - மனங்கசிந்து, உருக - உருகும்படி, வேண்டுவன் - [உள்ளன்புடன்] இச்சிப்பேன், எ - று.

(க - ரை.) திருக்குற்றாலமென்னும் திவ்யப்பதியி லெழுந்தருளிய சிவபெருமானே! அடியேனாகிய யானே என் உறவினர் முதலிய யாவையும் இச்சிக்கேன், [ஆனால் எதை யிச்சிப்பேனெனில்] உன் திருவடிப்பேற்றை யடையுமாறே கன்றை யிழந்த பசுவைப்போலக் கனிந்துருக இச்சிப்பேன், என்பது.

(வி - ரை.) உற்றார் - உறவினர். கற்றார் - கல்வியிற் சிறந்தவர். குரைதல் - வினைத்தொகை நிலைக்களத்துப் பிறந்த அன்மொழித் தொகை. கன்று ஆ என்பது கற்றா என வலித்தலாயிற்று. ஆகவே கன்றை யுடைய பொருள்.()

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# குலாப்பத்து.

அநுபவம் இடையறுமை.
[அநுபவம் இடையறுமை என்பது விட்டுப்பற்றுமல் ஒருதன்மையாயது.]

திருச்சிற்றம்பலம்.

கொச்சகக்கலிப்பா.

ஓடுங்கவந்தியுமேயுறவென்றிட்டுள்கசிந்து
தேடும்பொருளுஞ்சிவன்கழலேயெனத்தெளிந்து
கூடுமுயிருங்குமண்டையிடக்குனித்தடியே
னாடுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(ப - ரை.) ஓடும்-ஒட்டையும், கவந்தியுமே-கோவணத்தையும், உறவு-சம்மந்தம், என்றிட்டு - எனச்சொல்லித் துணிந்து, உள்கசிந்து - உள்ளங் கசிந்து, தெளிந்து - தேர்ச்சியடைந்து, தேடும் - எங்கும் தேடுகின்ற, பொருள்-என்றும் சலனமில்லாப்பொருள், [யாதெனின்] சிவன் - பரமசிவனது, கழலே - திருப்பாதங்களே, என-சந்தேகமறத் தேர்ச்சியடைந்து, கூடும்-திரேகமும், உயிரும்-ஆவியும், என-என்று, குமண்டையிடக் குனித்து-ஓர் வித நடை நடித்து, அடியேன் - தொண்டனாகிய யான், ஆடும் - திருநடனம் செய்கின்ற, குலா - [யாவராலும் துதிக்கப்பட்டு] விளங்குகின்ற, தில்லை - சிதம்பரத்தை, ஆண்டானை- [அப்பதியை] ஆள்பவனாகிய நடராஜனை, கொண்டு அன்று-அன்புடன் [கிட்டி] பிடித்தேன், எ - று.

(க - ரை.) திருவோட்டையும் கௌபீனத்தையும் உறவெனத் துணிந்து, ஆராய்தற்குரிய பொருளும், நடராஜப்பெருமான் திருவடியே யென்று தேர்ச்சியடைந்து, உடலும் ஆவியும் மிக்கத் தெவிட்டும்வாறு நடித்து, யாவராலும் மதிக்கப்பட்டு விளங்குகின்ற சிதம்பரத்தை யாள்பவனாகிய நடராஜப் பெருமானை, அடியேனாகிய நான் கிட்டிப் பிடித்தேன், எ - று.

(வி - ரை.) ஓடு - இங்கு விண்ணோர்க்குரிய பாத்திரம். "விமலர் தந்த வோடு" என்று ஆன்றோர் கூறினர். உள் - மனம். கழல் - [வீர கண்டா மணி யணிந்த] பாதம். குமண்டை - ஓர்வித நடனமென்பாரு முளர். தில்லை - தில்லைவனம் என்னும் சிதம்பரம். (௧)

துடியேரிடுகிடைத்தூய்மொழியார்தோணசையாற்
செடியேறுதீமைகளெத்தனையுஞ்செய்திடினு
முடியேன்பிறவேனெனைத்தாண்முயங்குவித்த
வடியேன்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(ப - ரை.) துடி - உடுக்கையைப்போன்ற, ஏர் - அழகுடைய, இடுகு - அடக்கமுடைய, இடை - இடையினையும், தூ - மதுரம்போன்ற இனிய, மொழியார் - சொற்களையும் உடைய பெண்களது, தோள் - தோளை, நசையால் - [சேரவேண்டிய] ஆசையால், செடி - பாவம், ஏறு - மிஞ்சுதற் கேதுவாகிய, தீமைகள் - தீவினைகள், எத்தனையும் - கணக்கற்று, செய்திடினும் - செய்தாலும், அடியேன் - ஊழியனாகிய யான், முடியேன் - சாகேன், பிறவேன் - இனி ஜனன மெடுக்கேன், [ஆனதால்] என்னை - அடியேனை, தன் தாள் - தனது ஒப்பற்ற திருவடியை, முயங்குவித்த - சேர்ப்பித்த, குலாத் தில்லை - யாவராலும் துதிக்கப்பெற்று விளங்குகின்ற சிதம்பரத்தை, ஆண்டானை - யாவருங்காண எழுந்தருளி யாள்பவனை, கொண்டு அன்று - உண்மையோடு கிட்டிப்பிடித்தேன், எ - று.

(க - ரை.) உடுக்கைபோன்ற இடையையும், இனியமொழிகளால் மயக்கும் பெண்களது தோளைத் தழுவவேண்டுமென்னும் அன்பால் அடியேன் கணக்கற்ற தீமைச் செய்கைகள் செய்திடினும், தொண்டனேனது பிறப்பிறப்புத் தளைகளைப் பற்றறக் கொய்து, தன் திருவடி நீழலின் சேர்ப்பித்தவனும், யாவராலும் துதிக்கப்பெற்று அதி மேன்மை பெற்று விளங்காநின்ற தில்லைப் பதியை யாள்பவனாகிய பொன்னம்பலவனை உண்மையோடு கிட்டிப் பிடித்தேன், என்பது.

(வி - ரை.) துடி - உடுக்கை. ஏர் - இங்கு அழகுக்காயிற்று. இடுகு - சுருங்கல். நசை - ஆசை, அன்பு, விருப்பு. செடி - தீங்கு. முடி - தலை. முயங்குவித்தல் - தழுவுவித்தல். (௨)

என்புள்ளுருக்கியிருவினையையீடழித்துத்
துன்பங்களைந்துதுவந்துவங்கடேய்மைசெய்து
முன்புள்ளவற்றைமுழுதழியவுள்புகுந்த
வன்பின்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(ப - ரை.) என்பு உள் - அடியேனது எலும்புக்குள்ளும், உருக்கி - உருகப்பண்ணி, இருவினை - மலசம்பந்தமான இருவினைகளின், ஈடு - மேன்பாட்

டை, அழித்து - சேதித்து, துன்பம் - [அவ்விருவினையினால் வரும்] துயர்தனை, களைந்து - ஒழித்து, துவந்துகள் - [அவற்றின்] தொடர்புகளை, தூய்மை - பரிசுத்தமாக, செய்து - சீர்படுத்தி, முன்பு - அதற்குமுன்னம், உள்ளவற்றை - இருப்பனவற்றை, முழுது - முழுதும், அழிய - பாழாக்க, உள் - அடியேன் மனத்தினுள், புகுந்த - பிரவேசித்த, அன்பின் - விருப்பத்தையுடைய, குலாத்தில்லை - யாவராலும் துதிக்கப்பெற்றுப் புகழ்கின்ற சிதம்பரத்தை, ஆண்டானை - [தொழும்பர்கள் காண எழுந்தருளி வந்தாள்பவனாகிய] நடராஜ மூர்த்தியை, கொண்டு அன்று - உண்மையோடு கிட்டிப்பிடித்தேன், எ - று.

(க - ரை) அடியேனது என்புக்குள் புகுந்துருகப் பண்ணி, மலசம்பந்தமான இருவினைகளை வேரறக்களைந்து பற்றுக்களையொழித்து இனிமேல் வரக்கடவனவாகிய துன்பங்கள் யாவும் பாழாகும்படி, என் உள்ளத்திற் புகுந்திருக்கும் சிதம்பரத்தை யாண்டானாகிய நடராஜ மூர்த்தியைக் கைப்பற்றினேன், என்பது.

(வி - ரை.) இருவினை - மலசம்பந்தவினைகள். அழித்தல் - சேதித்தல். த்வந்தீவம் என்னும் வடமொழி துவந்துவம் எனவந்து நின்றது. தூ - பரிசுத்தம். முன்புள்ளவற்றை என்றது இனிமேல் வரக்கடவனவாகியபலவிததுன்பங்களைக் குறித்து. (௩)

குறியுநெறியுங்குணமுமிலார்குழாங்கடமைப்
பிறியுமனத்தார்பிறிவரியபெற்றியனைச்
செறியுங்கருத்திலுருத்தமுதாஞ்சிவபதத்தை
யறியுங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(ப - ரை.) குறியும் - நல்ல அடையாளமும், நெறியும் - நன்மார்க்கமும், குணமும் - நற்குணமும், இலார் - [யாவும்] இல்லாதவரும், குழாங்கள் தம்மை [மனைவி மக்கள்முதலிய] ஆசாபாச கூட்டங்களை, பிறியும் - வேறுபடுத்துகிற, மனத்தார் - மனத்தை யுடையவருமாகிய தொழும்பர்கள், பிறிவு - தன்னை விட்டு நீங்குதல், அரிய - அருமையாகிய, பெற்றியனை - [அவ்விதத்] தன்மையையுடையவனை, செறியும் - கிட்டின, கருத்தில் - எண்ணத்தில், உருத்து - உருக்கொண்டு, அமுது ஆம் - தேவாமிர்தம் போல்பனவாகிய, சிவபதத்தை - சிவாநுயோகத்தை, அறியும் - பேரறிவாளரால் தெரிந்துக்கொள்ளப்படுகின்ற, குலாத்தில்லை - [அறிஞர்களால் புகழப்பட்டுத்] துதிக்கின்ற தில்லையம்பலப்பதியை, ஆண்டானை - [அரசுசெய்து ஆள்பவனாகிய நடராஜமூர்த்தியை, கொண்டு அன்று - உறுதியாகக் கிட்டிப்பற்றினேன், எ - று.

(க - ரை.) அடையாள முதலிய யாவுமில்லாதவரும், மனைவி மக்கள் முதலாய ஆசாபாசக் கூட்டத்தைத் துறந்தவருமாகிய தொழும்பர்கள் தன்னை விட்டு நீங்குதற் கரிதாகிய தன்மையை யுடையவனை, துன்பப்படுகின்ற உள்

பசுபாசங்களிற் சிறிதேனும் உடையோமல்லோம் எனச் சந்தோஷித்து ஆரவாரித்தற்குக் காரணமானக் குலாத்தில்லை யாண்டானைக் கிட்டிப்பற்றினேன், என்பது.

(ப - ரை.) தோளெரிய மிதிக்குந்திருவடி என்றமையால், மதிக்குந் திறலுடைய வல்லரக்கன் என்றது கயிலையங்கிரியைப் பேர்த்தெடுத்து வந்து தன் பட்டினமாகிய இலங்காபுரியில் வைத்து பூசிக்க எண்ணங்கொண்ட இராவணனைக்குறித்து. கதித்தல் - பெருக்கல். பசு - ஆசாபாசச் சம்பந்தத்தைக் குறித்து. பாசம் - ஆணவாதியமலம். (எ)

இடக்குங்கருமுருட்*டேனப்பின்கானகத்தே
நடக்குந்திருவடியென்றலைமேனட்டமையாற்
கடக்குந்திறலைவர்கண்டகர்தம்வல்லாட்டை
யடக்குங்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(க - ரை.) இடக்கும் - [ஒருவர்க்கும் பயப்படாமல்] மிகு துன்பஞ் செய்கின்ற, கரு - கருத்த நிறமுடைய, முருட்டு - துட்டத்தனத்தைச் செய்யும், ஏனம் - ஓர் பன்றியின், பின் - பிறகே, கானகத்து - காட்டினிடத்தே, நடக்கும் - வருத்தப்பட்டு நடந்த, திருவடி - [பிரம விட்டுணுக்களால் காணப்படாத] உன் திருப்பாதத்தை, என் - தொண்டனாகிய அடியேனது, தலைமேல் - தலையின்மேல், நட்டமையால் - [என்னையும் ஓர் பொருட்டா யெண்ணி] வைத்தமையால், கடக்கும்-ஜெயிக்கின்ற, திறல்-வல்லமையையுடைய, ஐவர் - பஞ்ச பொறிகளாகிய, கண்டகர் - தீயோர்களுடைய, வல் - கொடிதாகிய, ஆட்டை - துன்பத்துக்கேதுவாகிய விளையாட்டை, அடக்கும் - மிஞ்சவிடாமல் அடக்கி யாள்கின்ற, குலாத்தில்லை-யாவராலும் துதிக்கப்படா நின்ற தில்லைப்பதியை, ஆண்டானை - ஆள்பவனாகிய நடராஜமூர்த்தியை, கொண்டு அன்று - மிகு அன்புடன் கிட்டிப் பிடித்தேன், எ - று.

(க - ரை.) யாவர்க்கும் வயப்படாமல் கொடிய தீங்கு செய்கின்ற கரு நிறத்தை யொத்தத் துட்டப்பன்றியைக் காட்டினிடம் பின்தொடர்ந்து சென்ற தேவரீருடைய திருவடியை [அடியேனை ஆட்கொள்ளும் பொருட்டு] என் சிரசின் மீது வைத்தவனும், யாவரையும் நற்கதிக்குப் போகாவண்ணம் கொடு

* துவாபரயுகத்தில் ஸ்ரீ-கண்ணனவதாரத்தில் பாண்டுவின்மக்களைவர்களை வணங்காமுடியோன் வஞ்சனையால் 13-வருஷவனவாசஞ்செய்கின்ற காலத்தில் நடுப்பிறந்தோனாகிய அருச்சுனன் தன் பகைவர்களை வெல்லு நிமித்தம் பாசுபதாஸ்திரம் பெறுவதற்கு ஸ்ரீ-கைலையங்கிரியை யடைந்து பரமனைக்குறித்து அகோரதவஞ்செய்ய, அத்தவத்தைச் சோதிக்கும் வண்ணம் ஓர் பன்றியை விட்டு தானும் அதன்பின் வேடுவனாக அக்கானகத்தில் நடந்துவந்த பரஞ்சோதியை "ஏனப்பின் கானகத்தே நடக்குந் திருவடி" யென்று அக்கருத்தை யமைத்து இங்கு கூறினர்.

மையையே செய்கின்ற பஞ்ச பொறிகளுடைய கொடிய செய்கைகளை யடக்கி யாண்டவனும், குலாத்தில்லையை யாண்டவனுமாகிய நடராஜ மூர்த்தியை, அன்புடன் கிட்டிப் பற்றினேன், என்பது.

(வி - ரை,) இடக்கு - துன்பம். எனத்துப்பின் என்பது எனப்பின் என அத்துச்சாரியை குறைந்து வந்தது. ஏனம் - வராகம், பன்றி. கடத்தல் - [இங்கு] வெல்லுதல். திறல் - வல்லமை ஐவர் - பஞ்ச பொறிகள். வல் - கொடிய. ஆட்டு - துன்பத்தொழில். (அ)

பாழ்ச்செய்விளாவிப்பயனிலியாய்க்கிடப்பேற்குக்
கீழ்ச்செய்தவத்தாற்கிழியீடுநேர்பட்டுத்
தாட்செய்யதாமரைச்சைவனுக்கென்புன்றலையா
லாட்செய்குலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(ப - ரை.) பாழ் - உதவியற்றதாகிய, செய் - கழனியில், விளாவி-சேர்ந்து, பயன் - யாதொரு உபயோகமும், இலி ஆய் - உண்டாகாமற்போமாகில், கிடப்பேற்கு - அவ்வாறு வீணிற் கிடக்கின்ற அடியேனுக்கு, கீழ் - முன் ஜனனத்தில், செய் - செய்த, தவத்தால் - தபோபலத்தினால், கிழியீடு - என்று மழியா நிதிப் பொதியைக் கொடுத்து, நேர்பட்டு - அந்நிதி கிடைத்து, தாள் - திருவடியாகிய, செய்யதாமரை - செந்தாமரை மலரை யுடைய, சைவனுக்கு - [சைவ ஆகமங்கள் தெரிந்த] சைவனாகிய, என் - எனது, புன் - சிறிய, தலையால் - சிரத்தினால், ஆட்செய்த - தொண்டு செய்ய, குலாத்தில்லை - யாவராலும் துதித்துப் பூசிக்கப்பட்டத் தில்லைப்பதியை, ஆண்டானை - ஆள்பவனாகிய நடராஜமூர்த்தியை, கொண்டு அன்று - அன்புடன் கிட்டிப் பற்றினேன், எ - று.

(க - ரை.) யாதொன்றும் விளைவில்லா நிலத்திற் சேர்ந்து வீணுக்கே கிடக்கின்ற அடியேனுக்கு, முற்பிறப்பிற் செய்த தவத்தால் பொற்கிழிபோலக் கிடைத்து, அடியேனை அடிமைகொண்டு ஆண்டுகொள்ளு நிமித்தம், கயிலையை விட்டெழுந்தருளி திருப்பெருந் துறையின்கண் குருந்தமரத்தி னடியின்கீழ் சைவப் பிராமணன்போல விற்றிருந்த சிவபெருமானது திருவடித் தாமரைக்கு என் சிற்றறிவையுடைய அடியேனது தலையால் அடிமைசெய்தற் கிடமாகிய குலாத்தில்லை யாண்டானைக் கிட்டி யன்புடன் பற்றினேன், என்பது.

(வி - ரை.) பாழ்ச்செய் - விளைவிட்டுச் சாவியாய்ப்போன நிலம். கிழி-திரவியப்பொதி, நிதிப்பொதி. சைவன் என்றது - இங்கு தம்மை அடிமை கொண்டு ஆண்டுகொள்ளும் வண்ணம் சிவ சின்னங்களோடு கூடிய பிராமணனாக எழுந்தருளிய சிவபிரானை, அல்லது சிவபெருமானை அனாதி சைவனென ஆகமங்கள் கூறலினெனினும் பொருந்தும். புன் - சிறிய. ஆண்டானை என்றது-இங்கு சிவபெருமானைக்குறித்தது. (கூ)

கொம்மைவரிமுலைக்கொம்பனையாள்கூறனுக்குச்
செம்மைமனத்தாற்றிருப்பணிகள்செய்வேனுக்
கிம்மைதரும்பயனித்தனையுமீங்கொழிக்கு
மம்மைகுலாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே.

(ப - ரை.) கொம்மை - அழகோடுங்கூடி, வரி — தேமற்படர்ந்த, முலை- கொங்கைகளை யுடைய, கொம்பு - புட்பிக்கும் கொம்பினைப் போன்றவளாகிய, அனையாள் - உமாதேவியின், கூறனுக்கு-பாதியாயமைந்த சிவபெருமானுக்கு, செம்மை — களங்கமற்ற, மனத்தால் - மனத்தினல், திருப்பணிகள் - திருத் தொண்டுகள், செய்வேனுக்கு - செய்பவனுக்கு, இம்மை — இச்செனனத்தி லுண்டாகின்ற, தரும் பயன் - கொடுக்கின்ற பயன், இத்தனையும் - இவ்வள வையும், ஈங்கு - இவ்விடத்தே, ஒழிக்கும் - தவிர்க்கின்ற, அம்மை - தாயி னுங் கிருபை யுடையவனாகிய, குலாத்தில்லை - யாவராலும் துதித்துப் போற்ற நின்ற சிவ சிதம்பரத்தை, ஆண்டானை - ஏகபோகமாய் ஆள்பவனாகிய நட ராஜ மூர்த்தியை, கொண்டு அன்று - அன்புடன் கிட்டிப் பற்றினேன், எ - று.

(க - ரை.) திரட்சியோடுங் கூடிய தேமற்படர்ந்த கொங்கைகளை யுடைய உமாதேவியின் கூறனாகிய சிவபெருமானுக்கு, மாசிலாக் குணத்தி னல் திருப்பணிச் செய்வேனாகிய அடியேனுக்கு, இப்பிறப்பி லுண்டாகிற சுக துக்கங்களாகிய இருவித பயன்களைக் களைகின்றவனும், தாயினும் மிக்க அன்புடையவனும், குலாத்தில்லை யாண்டவனுமாகிய நடராஜப் பிரபுவை என் சித்தங் களிக்குமாறு கிட்டிப் பற்றினேன், என்பது.

(வி - ரை.) "கூறன்" என்ற குறிப்பால், "கொம்மை வரிமுலைக் கொம் பனையாள்" என்றது உமாமஹேஸ்வரியைக் குறித்து. கூறன் - அர்த்தனா ரீஸன். பணி - வேலை. ஒழித்தல் - நீக்குதல். பயன் - பிரயோசனம். எல்லா வுயிர்களினிடத்துத் தாயினும் மிக்க வன்புடைய தயாபரமூர்த்தியாகை யால் பரமசிவனை இங்கு "அம்மை" என்று கூறினர். (௧௦)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# அற்புதப்பத்து.

அநுபவம்ஆற்ருமை.

[அநுபவம்ஆற்ருமை என்பது அநுபவமுற்றுதல் பொருமை விம்முதல்.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

மையலாயிந்தமண்ணிடைவாழ்வெனுமாழியுளகப்பட்டுத்
தையலாரெனுஞ்சுழித்தலைப்பட்டுநான்றலைதடுமாருமே
பொய்யெலாம்விடத்திருவருடந்துதன்பொன்னடியிணைகாட்டி
மெய்யனுய்வெளிகாட்டிமுன்னின்றதோரற்புதம்விளம்பேனே.

(ப - ரை.) மையல் ஆய் - உன் மத்தனுகி, இந்த மண்ணிடைவாழ்வு - இப்பூலோகத்தின் வாழ்வு, என்னும் - என்று சொல்லப்படுகின்ற, ஆழி உள் - சாகரத்தினுள், சிக்கப்பட்டு - அகப்பட்டுக்கொண்டு, தையலார் எனும்-பெண்களென்கின்ற, சுழித்தலைப்பட்டு - மோகாந்தவலையிற் சிக்கி, நான் - அடியேனுகிய யான், தலைதடுமாருமே - [அம் மாய்கை வலையிற்சிக்குண்டு] தடுமாருமல், பொய் எலாம் விட-பொய்மைகள் யாவையும்விட்டு, பொன்-சொர்னம்போன்ற, அடி இணை - தன் திருவடிகளிரண்டையும், காட்டி - [என் இரண்டுகண்களினின்று ஆநந்த நீர் பெருகும்படிக்குக்] காண்பித்து, மெய்யன் ஆய் - உண்மையையுடையவனுய், வெளிகாட்டி - [அடியேனை] யாவர்க்கும் வெளிப்படையாய்க் காண்பித்து, முன் நின்றது - எதிரே நின்றதாகிய, ஓர் - நிகற்ற, அற்புதம் - அற்புதத்தை, விளம்பேன் - என்னென்று சொல்லிக்களிப்பேன்! எ-று.

(க - ரை.) தொண்டனுகிய அடியேன் உன்மத்தனைப்போல் மதிமயக்கங்கொண்டு இப்பூலோகவாழ்வென்கிறசாகரத்திலும் பெண்களென்னும்மோகவலையிலுமீடுபெட்டு அடியேன் உழன்று தடுமாருமல், சிவபெருமானுகிய இறைவன் அடியேனது பொய்ச் செய்கைகள் யாவும் பற்றறக் கிருபைசெய்து, பிரம

விட்டுணுக்களாலும் காணுதற்கரிதாகிய தன் இரண்டு திருப்பாதங்களைக்காண் பித்து, மெய்யனாய் அடியேன்முன்னே வெளிப்படையாக உன் திருக்கோலத் துடன் எழுந்துவந்து நின்ற அற்புதத்தைச் சொல்ல வல்லமை யுடையேனல் லேன், என்பது.

(வி - ரை.) மையலார்-[மைதீட்டிய கண்களையுடைய] பெண்கள். மண் ணிடைவாழ்வு – பூலோக வாழ்வு. ஆழமுடையதாதலால் கடலை ஆழி எனப் பட்டது. தையலார் - கைபுனையப்பட்டவர். சுழி - மாய்கை. தடுமாறல் - திகைத்தல். விடுத்தல் - விலக்குதல். அற்புதம் - ஆச்சரியம். (க)

ஏய்ந்தமாமலரிட்டுமுட்டா தேதோரியல்பொடும்வணங்காதே
சாந்தமார்முலைத்தையனல்லாரொடுந்தலைதடுமாறுகிப்
போந்தியான்றுயர்புகாவணமருள்செய்துபொற்கழலிணைகாட்டி
வேந்தனாய்வெளியேயென்முனின்றதோரற்புதம்விளம்பேனே.

(ப – ரை.) ஏய்ந்த - [பூசனைக்கு] ஒப்புற்ற, மா – அழகுடைய, மலர் - புட்பங்களைக் கொண்டு, இட்டு - சாத்தி, முட்டாதது - முட்டாததாகிய, ஓர் - நிகரற்ற, இயல்பொடும் - முறைமையோடும், வணங்காது - தன்னைப் போற்றா மல், சாந்தம் ஆர் - சந்தனக் குழம்பால் பூசப்பெற்ற, முலை - கொங்கைகளை யுடைய, தையல் நல்லாரொடும் - அழகை வாய்ந்த பெண்களோடு சேர்ந்து, தலைதடுமாறு ஆகி - [சிற்றின்ப விடயத்தால்] தலைதடுமாற்றங்கொண்டு, யான் போந்து - அடியேன் [அப்பெண்களிடம்] சென்று, துயர் - [அம்மோகத்தி னால் [வராநின்ற] துன்பத்தில், புகாவண்ணம் - புகுந்துழலாதபடி, அருள் - [இறைவனாகிய சிவபெருமான்] கிருபைசெய்து, பொன் - பொன் நிறத்தை யொற்ற, கழல் இணை [உன் இரண்டு] திருவடிகளை, காட்டி-காண்பித்து, வேந் தன் ஆய்-இராஜாதி யிராஜனாகி, வெளியே-வெளிப்படையாகவே, என்-எனது, முன் - [கண்களின்] முன்னே, நின்றது - [இடபவாகனத்தின்மே லாரோக ணித்து நின்றதாகிய, ஓர் - நிகரற்ற, அற்புதம் - ஆச்சரியத்தை, விளம்பேன் - என்னென்று சொல்லிக் களிப்பேன்! எ - று.

(க – ரை.) இறைவனாகிய சிவபெருமானை, நன்நாற்றமுள்ள மலர்களால் அதிபக்தியுடன் அருச்சித்து வணங்காமல், மோக இச்சையைத் தராநின்ற மாதர்களின் விருப்பத்தால் சேரும்பொருட்டு தலை தடுமாறித் துன்பமடையா நின்ற தொழும்பனாகிய எனக்கு, சிவபெருமானாகிய இறைவன் அப்பெருந்துன் பக் கடலினின் றுண்டாகும் வினைகளைக் களைந்தொழித்துத் தன் திருவடியைக் காண்பித்து, அடியேனுக் கெதிரே திருக்கோலத்துடன் வெளிப்பட்டுத் தரி சனங் கொடுத்த வதிசயத்தை யென்னென்று சொல்லிக் களிப்பேன், என்பது.

(வி - ரை.) "ஏய்ந்தமலர்" என்றது இறைவனாகிய பரமசிவனுக்கு ஒப்பு வமை வாய்ந்த அழகிய மலர் என்றபடி. முட்டாததோரியல்பு-மாசற்றநெறி.

இயல்பு - முறைமை. சாந்து - இங்கு சந்தனத்தைக் குறித்து. அருள் - கிருபை. எல்லாத் தேவர் முதலியவர்க்கும் முதற்கடவுளா யிருப்பதால் அப்பரமசிவனை "வேந்தன்" என்று கூறினார். (உ)

நடித்துமண்ணிடைப்பொய்யினைப்பலசெய்துநானெனதெனுமாயக்
கடித்தவாயிலேநின்றுமுன்வினைமிகக்கழறியேதிரிவேனைப்
பிடித்துமுன்னின்றப்பெருமறைதேடியவரும்பொருளடியேனை
யடித்தடித்துவக்காரமுன்றீற்றியவற்புதமறியேனே.

(ப - ரை.) மண் இடை - இப்புவியின்கண், நடித்து-நடலைவாழ்வெய்து, பல - பற்பல, பொய்யினை - பொய்யேர்ப்பாட்டுகளை, செய்து - புரிந்து, நான் எனது எனும் - நான் எனது என்று சொல்லப்படுகின்ற அகங்காரத்தை,மாயம்-மாயப் பாம்புகள், கடித்தவாயிலே - கடித்தக்குறியில், நின்று - இருந்து, முன்-முற்பிறப்பில், வினை - [செய்த] வினைகளாகிய விஷம், மிக - பெருகுதலால், கழறி ஏ - பலவிடத்திலும் ஏங்கிப் புலம்பி, திரிவேனை - [உன் மத்தனைப் போல்] உழல்கின்றவனாகிய அடியேனை, பிடித்து - கைப்பற்றி, முன் நின்று - அடியேன் எதிராக நின்று, அ - அந்த, பெருமறை - பெரிய வேதங்களும், தேடிய - அறிதற்கரிய, அரும்பொருள் - அருமையாகிய பொருள், அடியேனை - தொழும்பனேனை, அடித்து அடித்து - அடித்தடித்து, அக்காரம் - சர்க்கரைக்கட்டியை, முன் - [அடியேனை ஆட்கொண்ட] அந்நாளில், தீற்றிய-[உண்ண] ஊட்டின, அற்புதம் - அதிசயத்தை, அறியேன் - [அக்காரணத்தைத்] தெரிந்தேனில்லை ! எ - று.

(க - ரை.) இப் பூலோகத்தில் பொய்ச்செய்கைகள் அனேகவற்றைச் செய்து, நான் எனது என்கின்ற அகங்கார மமகாரங்களாகிய அரவங்கள் தீண்டிய வாயினின்று முற்பிறப்பில் செய்த வினைப்பயனாகிய விஷம் ஏற, அவ்விஷ மயக்கத்தினால் உன் மத்தனைப்போல அழுது திரிகிற அடியேனை, சிவபெருமானாகிய இறைவன் தனது பெருங் கருணையினால் நாயினுங்கடையேனாகிய என்னைக் கைப்பற்றி அடித்தடித்துச் சிவபோகமாகிய சக்கரைக் கட்டியை எனக்குப் புகட்டிய அதிசயத்தை யின்னதென்று சொல்ல வல்லேனல்லேன், என்பது.

(வி - ரை.) கடித்தவென்னுங் குறிப்பால் மாயாமாயத்தைப் பாம்பாக்கியும், வினையை விஷமாக்கியும் இங்ஙனம் உரைக்கலாயிற்று. கழறல் - புலம்பல். பிடித்தல் - பற்றல். அக்காரம் - சர்க்கரை. முன் என்றது - மணப்பந்தலில் தடுத்தாட்கொண்ட நாளைக்குறித்தது. (ஙு)

பொருந்துமிப்பிறப்பிறப்பிவைநினையாதுபொய்களேபுகன்றுபோய்க்
கருங்குழலினார்கண்களாலேறுண்டுகலங்கியேகிடப்பேனைத்
திருந்துசேவடிச்சிலம்பவைசிலம்பிடத்திருவொடுமகலாதே
யருந்துணைவனாயாண்டுகொண்டருளியவற்புதமறியேனே.

(ப - ரை.) பொருந்தும் - அமைந்த, இ - இந்த, பிறப்பு - பிறத்தலும், இறப்பு - இறத்தலும், இவை-இவைகளாகிய இவ்விரண்டினையும், நினையாது - எண்ணுமல், பொய்களே - பொய்களேயே, புகன்று - எந்நாளுஞ் சொல்லி, போய் - சென்று, கரு - கரிய, குழலினர் - கூந்தலையுடையவர்களாகிய பெண்களது, கண்களால் - கண்களாகிய வாட்களால், எறுண்டு - உதறப்பட்டு, கலங்கி - பயந்து, கிடப்பேனை - கிடக்கின்ற அடியேனை, திருந்து - ஒழுங்காகிய, சேவடி - திருவடிகளில், சிலம்பு - தரிக்கப்பட்ட சிலம்புகளாகிய, அவை-அவைகளை, சிலம்பிட-சப்திக்க, திருவொடும் - உமையவளோடும், அகலாது-என்றும் நீங்காமல், அரு - அருமையாகிய, துணைவனாய்-எஜமானனாகி, ஆண்டு கொண்டருளிய - தொழும்பனாகிய அடியேனை அடிமையாக்கிக் கொண்டாண்டருளின, அற்புதம் - ஆச்சரியத்தை, அறியேன் - தெரிந்துசொல்ல வல்லனல்லேன்! எ - று.

(க - ரை.) யாவருக்கும் அமைக்கப்படா நின்ற இப்பிறப்பிறப்புத்துன்பங்களை எண்ணுமல், கரிய கூந்தலையுடைய பெண்கள் கண்களிலகப்பட்ட தொழும்பனே னாகிய என்னை, யாவர்க்கும் இறைவனாகிய சிவபெருமான் உமாதேவியாரோடும் எழுந்தருளிவந்து ஆட்கொண்டருளின அதிசயத்தை வாயினிடமாகச் சொல்லத்தோன்றே னில்லை! என்பது.

(வி - ரை.) பொருந்தல் - அமைந்தல். பிறப்பிறப்புத் துன்பங்களைப் பிறப்பிறப்பென்றே கழிந்தார், அத்துன்பங்களுக்குப் பயந்து. சேவடி - திருவடி. அணிதல் - தரித்தல். திரு - இங்கு உமையவளைக் குறித்து. அகலல் - நீங்குதல். வானவர் தானவர் முதலியவர்க்கும் தலைமை பூண்டவனாகிய சிவபெருமானை - இங்கு "துணைவனாய்" என்று கூறினர். (௪)

மாடுஞ்சுற்றமுமற்றுளபோகமுமங்கையர்தம்மோடுங்
கூடியங்குளகுணங்களாலேறுண்டுகுலாவியேதிரிவேனை
வீடுதந்தென்றன்வெந்தொழில்வீட்டிடமென்மலர்க்கழல்காட்டி
யாடுவித்தெனதகம்புகுந்தாண்டதோரற்புதமறியேனே.

(ப - ரை.) மாடும் - பொருளும், சுற்றமும் - உறவும், மற்று உள்ள - இன்னு மிருக்கப்பட்ட, போகமும் - செல்வமாகிய போகங்களும், மங்கையர் தம்மோடும் - பெண்களோடும், கூடி - சேர்ந்து, அங்கு - அவ்விடத்தில், உள்ள - இருக்கப்பட்ட, குணங்களால் - குணங்களினுல், எறுண்டு - எறியப்பட்டு, குலாவி - [சந்தோட மிகுதியால்] கொண்டாடி, திரிவேனை - திரியா நின்ற அடியேனுக்கு,வீடுதந்து, முத்திவீடுகொடுக்க, என்றன்-அடியேனுடைய, வெந்தொழில்-தீஞ்செயல்களை, வீட்டிட - அழிக்க, மெல் - மிருதுவாகிய, மலர் - தாமரை மலர்போன்ற, கழல்-[இருவராலும் காணுதற்கரிய] திருவடியை, காட்டி - காண்பித்து, ஆடுவித்து - ஆட்டிவைத்து, எனது - என்னுடைய, அகம் -

மனத்தின்கண், புகுந்து - உட்புகுந்து, ஆண்டது - கிருபைசெய்து ஆண்டருளினதாகிய, ஓர் - ஒப்பற்ற, அற்புதம் - ஆச்சரியத்தை, அறியேன் - தெரிகிலேன் ! எ - று.

(க - ரை.) பொருள் முதலியவற்றின் பேராசையில் தாக்குண்டுழலாநின்ற அடியேனை, அவ்வாசையினின்றும் விடுவித்துத் தன் திருவடியைக்காட்டி அடியேனது கொடுமைகளை யொழித்து என் மனத்தினிடம் புகுந்து தொண்டனேனை ஆட்கொண்டருளின அதிசயத்தைச் செப்ப அறிந்தேனில்லை, என்பது.

(வி - ரை.) மாடு - இங்கு பொருளைக் குறித்து. சுற்றம் - உறவு. போகம் - இங்கு முத்திச்செல்வம். குலாவுதல் - கொண்டாடுதல். வீடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். அகம் - மனம். ஓர் - ஒப்பு. (௫)

வணங்குமிப்பிறப்பிறப்பிவைநினையாதுமங்கையர் தம்மோடும்
பிணைந்துவாயிதழ்ப்பெருவெள்ளத்தழுந்திநான்பித்தனாய்த்திரிவேனைக்
குணங்களுங்குறிகளுமிலாக்குணக்கடல்கோமளத்தொடுங்கூடி
யணைந்துவந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே.

(ப - ரை.) வணங்கும் - சூழ்ந்துகொள்ளுகின்ற, இ - இந்த, பிறப்பு - பிறப்பும், இறப்பு - இறப்பும், இவை - இவைகளை, நினையாமல் - எண்ணாமல், மங்கையர் - பெண்கள், தம்மோடும் - தங்களோடும், பிணைந்து - கைகலந்து, வாய்-வாயினது, இதழ்-இதழினிலுண்டாகிய அமிர்தத்தை, பெரு-மிகு, வெள்ளத்து - [இன்ப] வெள்ளத்தில், நான் - [நாயினுங் கடையேனாகிய] யான், அழுந்தி - [அவ்விச்சையால்] அழுந்தப்பட்டு, பித்தன் ஆய் - பித்து பிடித்தவன் போல், திரிவேனை - [அங்குமிங்கும் அனாதியாய்த்] திரிகின்ற அடிமையை, குணங்களும் - எண்ணங்களும், குறிகளும் - குறிப்புகளுமாகிய, இலா - [இவைகள்] இல்லாத, குணக்கடல் - பெருங்குணக்கடலாகிய சிவபெருமான், கோமளத்தொடும் - இளமைச் செல்வியாகிய உமாதேவியாரோடும், கூடி - ஒன்று சேர்ந்து, அணைந்துவந்து - தழுவாநின்று வந்து, என்னை - அடியேனை, ஆண்டுகொண்டருளின - அடிமையாளாக்கிக் கொண்டருளின, அற்புதம் - அற்புதச் செயலை, அறியேன் - யாதொன்றுந் தெரிந்தேனில்லை ! எ - று.

(க - ரை.) சூழப்பட்டு வருத்தத்தைத் தருகின்ற இப்பிறப்பிறப்பின் தொலையாத் துன்பங்களை எண்ணிப் பாராமல் மாதர்களின் இன்ப வெள்ளத்திலழுந்தப்பட்டுக் காம பித்தனாகிய அடியேனை, பரமசிவனாகிய இறைவன் இளமைச் செல்வியாகிய உமாதேவியாரோடும் எழுந்தருளிவந்து அடிமைக்குத் திருக்கோலங் காட்டி யாண்டருளின அற்புதக் காட்சியைச் சொல்லத் தெரிந்தேனில்லை, என்பது.

(வி - ரை.) வணங்குதல் - இங்கு சூழ்தல். பிணைத்தல் - கட்டல். வாயிதழ் என்றது. அதராதமிர்தத்தை "பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழி

வாலெயிலூறிய நீர்" என்று கூறினார் பெருநாவலரும். அழுந்தல் – முழுகல். கோமளம் - இங்கு இளமை தங்கிய உமாதேவியாரைக் குறித்து. அணைதல் - தழுவுதல். (சு)

இப்பிறப்பினிலிணைமலர்கொய்துநானியல்பொடஞ்செழுத்தோதித்
தப்பிலாதுபொற்கழல்கடக்கிடாதுநான்றடமுலையார்தங்கண்
மைப்புலாங்கண்ணாலேறுண்டுகிடப்பேனைமலரடியிணைகாட்டி
யப்பனென்னைவந்தாண்டுகொண்டருளியவற்புதமறியேனே.

(ப - ரை.) இ - இந்த, பிறப்பினில் - பிறவியில், இணைமலர் கொய்து - மாலை கட்டுதற்குரிய நன் மலர்களைப் பறித்து, நான் - அடியேன், இயல்பொடு- வழியோடு, அஞ்சு எழுத்து - ஸ்ரீ பஞ்சாட்சர எழுத்தாகிய "ந ம சி வா ய" என்று, ஓதி - [அம்மந்திரத்தால்] துதி செய்து, தப்பு - குற்றம், இலாது - இல்லாமல், பொன் - அழகிய, கழல்களுக்கு - திவ்ய பாதங்களுக்கு, இடாமல் - அணியாமல், நான் - தொண்டனேனாகிய யான், தடம் - குன்றுபோன்ற, முலையார் தங்கள் - கொங்கைகளை யுடையவராகிய பெண்களது, மைப்பு - கறுப்பு மை, உலாம் - தீட்டிய, கண்ணால் - இருகண்களால், ஏறுண்டு - எறியுண்டு, கிடப்பேனை - அம்மாய்கையிற் சிக்கி யுழன்று கிடக்கின்ற அடியேனை, மலர் - தாமரை மலர்போன்ற, அடி இணை - [இருவரால் தேடியுங் காணப்படாத] திருவடி இணையை, காட்டி – அடிமையாகிய எனக்குக் காண்பித்து, அப்பன் - அடியேனைப்பெற்றெடுத்தவனினும் அதி யன்புள்ளவனாகிய சிவபெருமான், வந்து-திருப்பெருந் துறையின்கண் குருந்தமரத்தி னடியில் குருமூர்த்தமா யெழுந்தருளி வந்து, ஆண்டுகொண்டருளிய - ஆட்கொண்டாதரித்த, அற்புதம்-அதிசயத்தை, அறியேன் - [செப்ப வகை] அறிந்தேனில்லை ! எ – று.

(க - ரை.) இம்மானிடப் பிறப்பில் நன் மலர்களைக் கொய்து, ஸ்ரீ பஞ்சாக்ஷர செபத்துடனே தேவரீர் திருவடியில் அருச்சித்துத் துதிக்காமல், மை தீட்டிய மாதர்களின் மாயவலையி லகப்பட்டு மதிமயங்கி கிடக்கின்ற தொண்டனேனை, என்னைப்பெற்று வளர்த்து அன்புடன் பாராட்டிய தந்தையினும் மேலோனாகிய சிவபெருமான், தானேசிவகிரியை விட்டு எழுந்தருளி குருமூர்த்தமாய் வந்து "சிவஞானத்தைப்" போதித்து ஆட்கொண்ட அற்புதக்காக்ஷியை நாவாற்சொல்ல அறிந்தேனில்லை ! என்பது.

(வி - ரை.) இணைத்தல் - தொடுத்தல். இணை - தனக்குத்தானே சமானமான எனினுமாம். அஞ்செழுத்து - ஸ்ரீ-பஞ்சாக்ஷரமந்திரம். அதாவது ந ம சி வா ய எனும் திருவெழுத்தைக் குறித்து - மைப்பு - தொழிற்பெயர். [கறுத்தல்] அடி - திருவடி. (எ)

ஊசலாட்டுமிவ்வுடலுயிராயினவிருவினையறுத்தென்னை
யோசையாலுணர்வார்க்குணர்வரியவனுணர்வுதந்தொளியாக்கிப்

பாசமானவைபற்றறுத்துயர்ந்ததன்பரம்பெருங்கருணையா
லாசைதீர்த்தடியாரடிக்கூட்டியவற்புதமறியேனே.

(ப - ரை.) ஊசல் ஆட்டும் - கீழ்மேலாக ஆட்டுகின்ற, இவ்வுடல் - இவ்வுடம்பு, உயிர் ஆயின - உயிர் என்பவைகளுக்கு மூகாந்தரமான, இருவினை - [மலசம்பந்த இருவினைகளை, அறுத்து - கொய்து, என்னை - அடியேனை, ஓசையால் - சத்தத்தினால், உணர்வார்க்கு - அறிபவர்க்கும், உணர்வு - தெரிந்து கொள்வதற்கும், அறிய்வன் - அரிதாகியவன், உணர்வு தந்து - புத்தியை ஈந்து, ஒளி ஆக்கி - பிரகாச வுருவாக்கி, பாசமானவை - பாசங்களா யுள்ளவற்றை, பற்று அறுத்து - பற்றைச் சேதித்து, உயர்ந்த - பெருமைதங்கிய, தன் - தனது, பரம் - மேலதாகிய, பெருங்கருணையால் - கிருபா நோக்கத்தினால், ஆசை - ஆசையை, தீர்த்து - விலக்கி, அடியார் - [உன்] அடியார்களுடைய, அடி - திருவடிகளில், கூட்டிய - சேர்ப்பித்த, அற்புதம்-அதிசயத்தை, அறியேன் - அடியேன் நாவால்சொல்ல அறிந்தேனில்லை ! எ - று.

(க - ரை.) சிவபெருமானாகிய இறைவன் இத்தப் பிறப்புக்குச் காரணமாகிய இருவித மலசம்பந்தங்களை பற்றறக்களைந்து அடியேனை ஜோதியுருவாக்கி, என் பாசத்தைச் சேதித்து, தனது பெருங் கருணையால் தேவரீரது தொண்டர்கள் கூட்டத்தில் சேர்ப்பித்த அதிசயத்தைச் செப்பச் சற்று மறிந்தேனில்லை, என்பது.

(வி - ரை.) ஊசல் ஆட்டுதல் - மேலுங்கீழுமாக்குதல். அறுத்தல் - சேதித்தல். இருவினை - நல்வினை தீவினைகளிவ்விரண்டுமே பிறவிக் கேதுவாகலின் அவற்றை யொழித்தென்றார். ஓசை - சத்தப்பிரமாணம், சந்தித்தல். கருணை - கிருபை. அடியார் - இங்கு திருக்கூட்டத்தைக் குறித்து. (அ)

பொச்சையான்விப்பிறவியிற்கிடந்துநான்புழுத்தலைநாய்போல
விச்சையாயினவேழையர்க்கேசெய்தங்கிணங்கியேதிரிவேனை
யிச்சகத்தரியயனுமெட்டாததன்விரைமலர்க்கழல்காட்டி
யச்சனென்னையுமாண்டுகொண்டருளியவற்புதமறியேனே.

(ப - ரை.) பொச்சை ஆன - காட்டைப்போன்ற, இ - இந்த, பிறவியிக்- பிறவிக்கடலில், கிடந்து - உழன்று, நான் - அடியேன், புழுத்து - பாழாகி, அலை - அலைச்சல்படுகின்ற, நாய்போல - நாயைப்போல, ஏழையர்க்கே - பெண்களுக்கே, இச்சை ஆயின - அம்மாதர் விரும்பும்படியான இன்பச் செயல்களையே, செய்து - அடியேனும் செய்து, அங்கு - அவ்விடத்தே, இணங்கி - அவர்க ளிச்சைப்படியே இசைந்து, திரிவேனை - விகாரம் பிடித்தவன்போல் அலைகின்றவனாகிய அடியேனை, இ - இந்த, சகத்து - பூமியில், அரி - விட்டுணுவும், அயனும் - பிரமதேவனும், எட்டாத - காணவொண்ணாத, தன் - தேவரீரது, விரை மலர் - நன் நாற்றமுள்ள தாமரைமலர் போன்ற, கழல் - அரிய

திருவடியை, காட்டி – அடியேனுக்குக் காட்டி, அச்சன் – அடியேனது தந்தையாகிய சிவபெருமான், என்னையும் – அடியேனையும் ஓர்பொருட்படுத்தி, ஆண்டுகொண்டருளிய – தொண்டு செய்தற்கு அடிமையாளாக்கிக் கொண்டருளின, அற்புதம் – ஆச்சரியத்தை, அறியேன் – அக்குறிப்பை யறிந்தேனில்லை, எ–று.

(க – ரை.) காட்டைப்போன்ற இப் பிறவிக்கடலில் அழுந்தி கிடந்து வீணில் புழுத்தலைகின்ற நாயைப்போலக் கெட்டலைந்து, பெண்களிச்சையின் படியே அடியேனும் ஒப்பி ஒழுகிக்கெடுகின்ற தொண்டனேனை, சிவபெருமானாகிய இறைவன் பிரம விட்டுணுக்களால் காணுதற் கரிய தனது திருவடியைக் காண்பித்து வேறுவழியிற் செல்ல ஒட்டாமல் என்னையும் ஓர் பொருட்டாயெண்ணி, ஆண்டுகொண்டருளின ஆச்சரியத்தைச் செப்ப அறிந்தேனில்லை, என்பது.

(வி – ரை.) கடலின் அலைகளைப்போல் மாறி மாறி வருகின்ற இப்பிறவியை "பொச்சையான விப்பிறவி" என்று கூறினர். பொச்சை – காடு. (வனம்.) பலவிதத் துர்க்குணமுடைய மாதர்களை – இங்கு ஏழையோர்க்கு என்று கூறினர். இணங்குதல் – இசைதல். அச்சன் – இங்கு சிவபெருமானைக் குறித்து. (கூ)

செறியுமிப்பிறப்பிறப்பிவைநினையாதுசெறிகுழலார்செய்யுங்
கிறியுங்கீழ்மையுங்கெண்டையங்கண்களுமுன்னியேகிடப்பேனை
யிறைவனெம்பிரானெல்லையில்லாததன்னிணைமலர்க்கழல்காட்டி
யறிவுதந்தெனையாண்டுகொண்டருளியவற்புதமறியேனே.

(ப – ரை.) செறியும் – அடர்ந்த, இ – இந்த, பிறப்பு இறப்பு – பிறப்பிறப்புகளாகிய, இவை – இவ்விரண்டையும், நினையாது – எண்ணிப் பாராமல், செறி – அடர்ந்த, குழலார் – கூந்தலை யுடையவராகிய பெண்கள், செய்யும் – செய்கின்ற, கிறியும் – பொய்ச் செய்கைகளையும், கீழ்மையும் – தகாத காரியங்களையும், கெண்டை – சேற்கெண்டை மீன்போன்ற, அம் – அழகிய, கண்களும் – கண்களையும், உன்னி – அவைகளை நினைந்து, கிடப்பேனை – பாழாகிக் கிடக்கின்ற அடியேனை, இறைவன் – தலைவனாகிய, எம்பிரான் – எம்பெருமான், எல்லை இல்லாத – நிகரற்ற, தன் – தன்னுடைய, இணை–தாமரை மலர்போன்ற இரண்டு, கழல் – யாவராலுங் காணுதற்கரிய திருவடியை, காட்டி – அடியேனுக்குக் கடாக்ஷித்து, அறிவு – நற்புத்தியை, தந்து – கிருபையுடன் கொடுத்து, என்னை – அடியேனை, ஆண்டருளின – ஆட்கொண்டருளின, அற்புதம் – ஆச்சரியத்தை, அறியேன் – எந்நாவினால் சொல்லவல்லே னல்லேன்! எ – று.

(க – ரை.) இப்பிறப்பிறப்புத் துன்பங்களைச் சற்றேனும் எண்ணமல் பெண்களின் பெரும் மாய்கையிற் சிக்கியுழல்வேனாகிய அடியேனைச் சிவபெருமான்

தனது பெருங்கருணையினல் தன் திருவடியை அடியேன் கண்முன்காட்டி நல்லறிவைக்கொடுத்து எவ்விடத்திற்குஞ் செல்லவொட்டாமல் ஆண்டருளின ஆச்சரியத்தைச் சொல்ல அறிந்தேனில்லை, என்பது.

(வி - ரை.) செறிதல் - நெருங்குதல், இவை என்றது - இங்கு பிறப்பிறத்தலைக்குறித்து. கிறி - பொய். கீழ்மை - தாழ்மை. அம் - அழகு. எல்லை - வரம்பு. இணை - இரண்டு. (கo)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சென்னிப்பத்து.

சிவ விளைவு.

[சிவ விளைவு என்பது சிவனுக்கு நிச்சயப்படுதல்.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

தேவதேவன்மெய்ச்சேவகன்றென்பெருந்துறைநாயகன்
மூவராலுமறியொணுமுதலாயவானந்தமூர்த்தியான்
யாவராயினுமன்பரன்றியறியொணுமலர்ச்சோதியான்
றூயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிச்சுடருமே.

(ப - ரை.) தேவதேவன் - தேவாதி தேவன், மெய்-உண்மையையுடைய, சேவகன் - மஹாதீரவீரன், தென்திருப்பெருந்துறை - அழகியதிருப்பெருந்துறை யென்னும் க்ஷேத்திரத்திற்கு, நாயகன் - எஜமானன், மூவராலும் - திருமூர்த்திகளாகிய பிரமன், விட்டுணு, உருத்திரனிவர்களாலும், அறியொணு - தெரிந்துகொள்ளப்படாத, முதல் ஆய - தலைவனுகிய, ஆநந்தம் - பேராநந்தத்தை வகித்த, மூர்த்தியான்-கிருபா மூர்த்தியாகிய பரமசிவன், யாவர் ஆயினும்- எவர்களாயினும், அன்பர் - தொழும்பர், அன்றி - அல்லது, அறியொணு- அறி

யப்படாத, மலர் - எங்கும் வியாபித்திருக்கும், சோதியான்-ஒளியுருவானவன், [அவ்வாறுடையவனது] தூய - பரிசுத்தமோடு, மா-பெருமைதங்கிய, மலர் - தாமரைமலரையொத்த, சேவடிகண், திருவடியின்கண்ணே, நம்-எம்முடைய, சென்னி - தலையானது, மன்னி - பொருந்தியிருந்து, சுட்ரும் - பிரகாசித்து விளங்கா நிற்கும், எ - று.

(க - ரை.) விண்ணுலகத்தில் வாழாநின்றதேவர்கட்குத் தேவோத்தமனும், சுத்தவீரத்தன்மையையுடையவனும், மகிமை பொருந்திய திருப்பெருந்துறைத்தலைவனும், பிரமன், விட்டுணு, உருத்திரன் இம்மூவராலும் அறியவொண்ணாத பேரின்பவடிவனும், யாவர்க்கு முதல்வனும், தொழும்பரன்றி மற்றேனையோர்க்கு அறியப்படாத ஜோதியுருவனும் ஆகிய சிவபெருமானது திருவடியில் அடியேனது சிரசு என்றும் பொருந்தி விளங்கா நிற்கும், என்பது.

(வி - ரை.) தேவ தேவன் என்றது - இந்திராதி முதலிய தேவர்கட்கும் தேவோத்தமன் என்று குறித்தது. மூவர் என்றது-படைத்தல் காத்தல் அழித்தல் இம்முத்தொழில்களைச் செய்யும் பிரமன், விட்டுணு, உருத்திரன். மலர் - இங்கு மெங்கும் இருப்பவனென்று பொருள். சுடர் - பிரகாசம். (க)

* அட்டமூர்த்தியழகனின்னமுதாயவானந்தவெள்ளத்தான்
சிட்டன்மெய்ச்சிவலோகநாயகன்றென்பெருந்துறைச்சேவகன்
மட்டுவார்குழன்மங்கையாளையோர்பாகம்வைத்தவழகன்றன்
வட்டமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே.

(ப - ரை.) அட்டமூர்த்தி - எண்மூர்த்தியாகியும், அழகன்-அழகையுடையவன், இன் - இன்மையாகிய, அமுது ஆய - தேவாமிர்தமாகிய, ஆனந்தவெள்ளத்தான் - பேரின்பப்பெருக்கையுடையவன், சிட்டன் - யாவருக்கும் பெரியோன், மெய்-உண்மையாக, சிவலோகம்-சிவபுரத்துக்கு, நாயகன்-இறைவன், தென் - அழகோடுங்கூடிய, பெருந்துறை - திருப்பெருந்துறையென்னும் திவ்விய க்ஷேத்திரத்திலெழுந்தருளியிருக்கும், சேவகன்-வீரத்தன்மையையுடைய சேவகன், மட்டு - கைக்கடங்காததும் தேன் பொருந்திய, வார்-நீண்ட, குழல்-கூந்தலையுடைய, மங்கையாளை - இளமைப்பருவத்தினை வாய்ந்தவளாகிய உமாதேவியை, ஓர் - ஒரு, பாகம் - பக்கம், வைத்த - அமைத்துக்கொண்ட, அழகன்-அழகைப்பொருந்தியவன், (இதுவுமன்றி) வட்டம் ஆம்-[கோணலில்லா], வட்டவடிவாகிய, மலர் - தாமரைமலர்போல் பவனுகிய, சேவடிகண் - திருவடியின்கண்ணே, நம் - அடியேனது, சென்னி - தலையானது, மன்னி-அழுந்தி, மலரும் - விரியா நிற்கும், எ - று.

* அட்ட மூர்த்தியாவன :—பஞ்சபூதங்களும், சந்திரனும், சூரியனும், ஆன்மாவும் ஆகிய இவையென்றுணர்க.

(க-ரை.) எண் வடிவாயுள்ளவனும், இனிய தேவாமிர்தம் போன்றவனும் இன்பக்கடலின் பெருக்காயிருப்பவனும், யாவர்க்கும் மேலானவனும், சிவலோகத்துக்கரசனும், திருப்பெருந்துறையென்னும் க்ஷேத்திரத்துக்குத் தலைவனும், உமாதேவியின் பங்கனும் ஆகிய சிவபெருமானது திவ்யதிருவடியில் அடியேனது சிரசானது அழுந்தி விளங்கா நின்றது, என்பது.

(வி-ரை.) அட்டம் - எட்டு. மூர்த்தம் - உருவம் (வடிவு.) வெள்ளம் - ஆநந்தப்பெருக்கு. சிட்டன் - பெரியவன். தென்-அழகு, மங்கையாள் - இங்கு உமாதேவியைக்குறித்து. (உ)

நங்கைமீரெனைநோக்குமின்னங்களு நாதனம்பணிகொண்டவன்
றெங்குசோலைகள்சூழ்பெருந்துறைமேயசேவகனாயகன் [கொள்வான்
மங்கைமார்கையில்வளையுங்கொண்டெம்முயிருங்கொண்டெம்பணி
பொங்குமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிப்பொலியுமே.

(ப-ரை.) நங்கைமீர் - பெண்களே ? எனை - தொழும்பனேனாகிய அடியேனை, நோக்குமின் - கிஞ்சிற்று கண்ணுற்பாருங்கள், நங்கள்-எங்கள், நாதன் - தலைவன், நம் - அடியேனையும், பணிகொண்டான்-ஒரு பொருட்டாயெண்ணித் தொண்டனாக்கிக்கொண்டவன், [யாரெனில்] தெங்கு- தென்னமரங்கள், சோலைகள் - சோலைகள், சூழ் - சூழ்ந்த, பெருந்துறை - திருப்பெருந்துறை க்ஷேத்திரத்தில், மேய - எழுந்தருளிவீற்றிருக்கும், சேவகன் - வீரன், நயாகன் - தலைவன், மங்கைமார் - பெண்களது, கையில் - கரத்திலுள்ள, வளையும் கொண்டு - வளையலையுங்கொண்டு, எம் - அடியேனது, உயிரும் - ஆவியையும், கொண்டு - பெற்றும், எம் - அடியேனை, பணி-தொண்டை, கொள்வான்-கொள்பவன், (அவனது) பொங்கு - பிரகாசிக்கின்ற, மா - மணமும் அழகிய, மலர்-தாமரைமலர்போன்ற, சேவடிகண்-திருவடியின்கண், நம் - அடியேனது, சென்னி - தலையானது, மன்னி - அழுந்தி, பொலியும் - விளங்கும், எ - று.

(க-ரை.) பெண்களே ? எங்கள் தலைவனும், எம்மைத்தொண்டனாக்கிக் கொண்டவனும், திவ்யக்ஷேத்திரமாகிய திருப்பெருந்துறைக்கு வீரனுமாகிய சிவபெருமான் மாதர்கள் கைவளையலையும், அடியேன் உயிரையுங்கொண்டு என்னையும் பணியாளாகக்கொள்பவன், அவ்வாறு நற்குணமுடையவனது திருவடியில் அடிமைத்தொண்டு பூண்டொழுகும் எனது சிரசானது பொருந்தி விளங்கா நிற்கும், என்பது.

(வி-ரை.) நங்கை - பேதமைக்குணங்கள் நிரம்பப்பெற்றவள். திருபுரத்தைத்தகனஞ்செய்ய மகாவீரனாய் எழுந்த சிவபெருமானை இங்கு "சேவகன்" என்று கூறினர். பொங்குதல் இங்கு விளங்குதல். மா - அழகு. (ந.)

பத்தர்சூழப்பராபரன்பாரில்வந்துபார்ப்பானெனச்
சித்தர்சூழச்சிவபிரான்றில்லைமூதூர்நடஞ்செய்வா
னெத்தனுகிவந்தில்புகுந்தெமையாளுங்கொண்டெம்பணிகொள்வான்
வைத்தமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே.

(ப-ரை.) பத்தர் சூழ-தொண்டர்கள் சூழ்ந்த, அ-அந்த, பராபரன்-(பிறப் பிறப்பில்லாதவனும் ஆதியந்த மில்லாதவனும் ஆகிய) சிவபெருமான், பார்ப் பான் என-பிராமணனென்னும்படி, பாரில் - பூலோகத்தில், வந்து - அத்திரு க்கோலத்துடன் எழுந்தருளி, சித்தர்-சித்தர்கள், சூழ்-சூழ்ந்த, அ - அப்பேர்க் கொற்ற! சிவபிரான் - சிவபெருமான், தில்லை - திருத்தில்லையாகிய, மூதூர் - புராதனப்பதியின்கண், நடம் - திருநடனம், செய்வான் - நடிப்பவன், எத்தன் ஆகி - வஞ்சகனுக, வந்து - (யாதொன்றுந் தெரியாதவன்போல) வந்து, இல் - அடியேன் குடியேறி யிருந்தவீட்டின் கண், புகுந்து - உட்பிரவேசித்து, எமை - அடிமையாகிய என்னையும், ஆளும் கொண்டு - எங்கள்குடும்பமுழுமை யும் அடிமையாட்களாகவும் கொண்டு, [பிறகு] எம்-எனது, பணி - வேலையை யும், கொள்வான் - ஏற்றுக்கொள்வோன், [அவ்வாறு பெருமையையுடையவ னது] மா - பெருமைதங்கிய, மலர் வைத்த-புட்பத்தைப்போல வைக்கப்பட்ட, சேவடிகண் - திருவடியின்கண்ணே, நம் - எனது, சென்னி - தலையானது, மன்னி - பொருந்தி, மலரும் - மலராநிற்கும், எ - று.

(க - ரை.) தொண்டர்களாற்சூழப்பட்டவனும், பிராமணத்திருக்கோலத் துடன் இப்புவியின்கண்ணே யெழுந்தருளிவந்து சித்தர்குழாங்களால் சூழப் பட்டவனும், சிதம்பரத்தின்கண்ணே திருச்சிற்றம்பலத்தில் யாவருங்காணத் திருநடனஞ்செய்பனும், யாதொன்றுந் தெரிந்திலான்போல் என் வீடேறி யுட் புகுந்து பலருமறிய ஓர் புராதன முறிச்சீட்டைக் காண்பித்து எங்கள் குடும்ப முழுமையும், அடியேனையும் பணியாள்களாக்கிக்கொண்டவனும் ஆகிய சிவ பெருமானது திருவடியில் அடியேனது சிரசானது பொருந்தி விளங்கா நிற்கும், என்பது.

(வி - ரை.) பத்தர் - அன்பர். சித்தர் - அறிஞர். [ஞானியர்.] பராபரன்- பிறப்பிறப்பில்லாச் சிவபெருமான். சிவபெருமான் பிராமணவடிவுகொண்டு திருப்பெருந்துறையில் குருந்தமரத்தடியில் எழுந்தருளியிருந்தமையால் "பார்ப்பான்" என்று அருமையாய்க் கூறினர். எத்தன் - வஞ்சகன். (ச)

தாயவாழ்க்கையைமெய்யென்றெண்ணிமதித்திடாவகைநல்கினுன்
வேயதோளுமைபங்கனெங்கடிருப்பெருந்துறைமேவினுன்
காயத்துள்ளமுதூறவூறநீகண்டுகொள்ளென்றுகாட்டிய
சேயமாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே.

(ப - ரை.) மாய - வீணேபாழாகும், வாழ்க்கையை-உலகவாழ்வை, மெய் என்று -என்று மழியா வாழ்வென்று, எண்ணி-மனத்தின்கண்ணினைத்து, மதித்திடாவகை - எப்போதும் நினைக்காவண்ணம், நல்கினன் - கிருபைசெய் தாண்டவன், [யாரெனில் ?] வேயதோள் - மூங்கிலின் பாவனையையுடையவனாகிய புஜங்களையுடைய, உமை - பார்ப்பதியின், பங்கன் - ஓர்பாகத்தையுடையவன், எங்கள் - அடியோங்களது, திருப்பெருந்துறை - திருப்பெருந்துறையென்னும் பதியில், மேவினன் - [யாவருடைய அஞ்ஞானவிருளைப் போக்கடித்து மெஞ்ஞானத்தையருள்செய்ய] எழுந்தருளினவன், ஊறை ஊறை - மேலு மேலும், காயத்துள் - திரேகத்தினுள், அமுது - தேவாமிர்தமாக, கண்டுகொள் என்று - இதனைத் தெரிந்துகொள்ளென்று, காட்டிய - கடாக்ஷித்த, சேய - செழுமையாகிய, மா மலர் - அழகோடுங்கூடிய தாமரை மலர்போல்பனவாகிய, சேவடிகண் - திருவடியின்கண்ணே, நம் - எனது, சென்னி - தலையானது, மன்னி - பொருந்தி, திகழும் - விளங்கும், எ - று.

(க - ரை.) இம்மாயவாழ்வாகிய இப்பூலோகத்தின் வாழ்க்கையை யுண்மையென்றெண்ணிப் பாழாகாமற்படி அடியேனுக்கு நற்புத்தியைப்புகட்டி வைத்தவனும், உமாதேவின் பாகனும், திருப்பெருந்துறைக்கிறைவனுமாகிய சிவபெருமானது திருவடியில் தொழும்பனேனாகிய எனது சிரசானது பொருந்தி விளங்காநிற்கும், என்பது.

(வி - ரை.) மாயவாழ்க்கை - அழியும்வாழ்க்கை. மதித்தல் - எண்ணுதல். நல்குதல் - செய்குதல். தோள் - புஜம், புயம். வேய் - மூங்கில். சேய என்பதற்கு பகுதி செம்மை. (ரு)

சித்தமேபுகுந்தெம்மையாட்கொண்டுதீவினைகெடுத்துய்யலாம்
பத்திதந்துதன்பொற்கழற்கணேபன்மலர்கொய்துசேர்த்தலு
முத்திதந்திந்தமூவுலகுக்குமப்புறத்தெமைவைத்திடு
மத்தன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே.

(ப - ரை.) சித்தம் - என்மனத்தினிடத்தே, புகுந்து - உட்புகுந்து, எம்மை - அடியேனை, ஆட்கொண்டு-அடிமையாளாக்கிக்கொண்டு, தீ-கொடிய, வினை - இருவினைகளையும், கெடுத்து - பற்றறக்களைந்து, உய்யல் ஆம் - [என்றும் அழியாது] வாழ்ந்திருக்க, பத்திதந்து - பக்தியைக்கொடுத்து, தன் - தன்னுடைய, பொன்-சொர்ணம்போற்பிரகாசிக்காநின்ற, கழல்கண் - திருவடியினிடத்தே, பல் - பலவித, மலர் - மலர்களை, கொய்து சேர்த்தலும்-கொய்தெடுத்து அர்ச்சித்தலும், முத்தி - மோட்சவீட்டை, தந்து - கொடுத்து, இ - இந்த, மூவுலகத்துக்கும் - மூன்றுலகத்துக்கும், அப்புறத்து - அப்பாலுமாகிய சிவலோகத்தில், எமை - அடியேனை, வைத்திடும் - வைத்துக்காக்கின்ற,

அத்தன் - அடிமையினது தந்தையாகிய சிவபெருமானது, மா - பெருமைதங்கிய, மலர் - தாமரைமலர்போன்ற, சேவடிகண் - திருவடியினிடத்தில், நம் - அடியேனது, சென்னி - சிரசானது, மன்னி - பொருந்தி, மலரும் - மலராநிற்கும், எ - று.

(க-ரை.) அடியேனது மனத்திநுட்புகுந்து அடிமையை ஓர் பொருட்டாயெண்ணி யாட்கொண்டு என் பொல்லாத் தீவினையை யொழித்து, என்று மழியாமல் ஜீவித்துவாழும் வழியாகிய பக்திமார்க்கத்தைத் தெரியக் கிருபைசெய்து, பொன்போன்ற தன் திருவடியில் புட்பம் அர்ச்சித்தலும், முத்திவீட்டைத்தந்து இம்மூன்றுலகங்களுக்கும் மேலதாகிய மோட்ச சாம்ப்ராச்சியத்தில் அடியேனை வைத்த தந்தையாகிய சிவபெருமானது திருவடியில் என் சிரசானது என்றும் பொருந்தி விளங்காநிற்கும், என்பது.

(வி - ரை.) யாம் தேவர்பெருமான் திருவடியிற் சாற்றினது புட்பம், அப்புட்பத்திற்கீடாக அச்சிவபெருமான் நமக்குக் கொடுத்தது மேலாகிய சிவபதம், அக்காரணத்தால் இறைவனை பித்தனென்றற்கு "தன் பொற்கழற்கணே பன்மலர்கொய்து சேர்த்தலு முத்திதந்திந்த மூவுலகுக்கு மப்புறத்தெமைவைத்திடு மத்தன்" என்று கூறினர். கழல் - திருவடி. அத்தன் - தந்தை. சென்னி - சிரசு. (சு)

பிறவியென்னுமிக்கடலைநீந்தத்தன்பேரருடந்தருளினு
னறவையென்றடியார்கடங்களருட்குழாம்புகவிட்டுநல்
லுறவுசெய்தெனையுய்யக்கொண்டபிரான்றனுண்மைப்பெருக்கமாந்
திறமைகாட்டியசேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே.

(ப - ரை.) பிறவி - பிறப்பு, என்னும் - என்றுசொல்லப்படுகின்ற, இ-இக்கொடிய, கடலை - துன்பக்கடலை, நீந்த - தாண்டுதற்கு, தன் - தன்னுடைய, பேர் - மகத்தாகிய, அருள்தந்து - பேரருளைக்கொடுத்து, அருளினன் - கிருபைசெய்தான், [அவ்வாறு குணமுடையவனுரெனில்] அறவை என்று, என்னையாரு மற்றவனென்று, அடியார் தங்கள் - அடியவருடைய, அருள் குழாம் - அருட்கூட்டத்தில், புகவிட்டு - சேர்ந்திருக்கும்படி, விடுத்து நல் - நன்மார்க்கத்தைத்தராநின்ற, உறவுசெய்து - நட்புறவாகச்செய்து, எனை-அடியேனை, உய்யக்கொண்ட - எந்நாளும் ஜீவித்திருக்கக் கிருபைசெய்த, பிரான் - உபகார குணமுடையவனுகிய சிவபெருமான், [அவனது] உண்மை-மெய்யின், பெருக்கம் ஆம் - மிகுதியாகிய, திறமை - முழுவல்லமையை, காட்டிய - காண்பித்தருளின, சேவடிக்கண் - செவந்த திருப்பாதத்தில், நம் - அடியேனது, சென்னி-தலையானது, மன்னி - பொருந்தி, திகழும் - பிரகாசிக்கும், எ - று.

(க - ரை.) பிறப்பென்னும் கடலைத்தாண்டுதற்கு பேரருள்தந்து கிருபை செய்தனுவம், திக்கற்றவனென்றெண்ணித் தனது அடியார்கூட்டத்திற் சேர்ப்பித்து அவ்வடியார்களுடன் உறவுசெய்வித்து என்னை யெந்நாளும் உய்ந்துய்யும்படி ஆண்டுகொண்டருளின சிவபெருமானது திருவடியில் அடியேனது சிரசானது பொருந்தி விளங்காநின்றது, எ - று.

(வி - ரை.) பிறவியைக்கடலென்றதனுல் பேரருளைப் புணை யென்னலாயிற்று. அறவை - திக்கற்ற, அநாதை என்றும் பொருந்தும். யாவரையும் துறந்து தனிமையாயிருத்தலைப்பற்றித் தன்னை, "அறவை" என்று கூறினுர். குழாம் - திருக்கூட்டம். (எ)

புழுவினுற்பொதிந்திடுகுரம்பையிற்பொய்தனையொழிவித்திடு
மெழில்கொள்சோதியெம்மீசனெம்பிரானென்னுடையப்பனென்றென்று
தொழுதகையினராகித்தூய்மலர்க்கண்கணீர்மல்குந்தொண்டர்க்கு
வழுவிலாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னிமலருமே.

(ப - ரை.) புழுவினுல் - கிருமிகளால், பொதிந்திடு - பொருந்தப்பட்ட, குரம்பையில் - கூட்டில், பொய்தனை-பொய்யை, ஒழிவித்திடும் - ஒழிவிக்கிற, எழில்கொள் - மிகு அழகோடுங்கூடிய, சோதி - ஒளியையுடைய, எம் - என்னுடைய, ஈசன் - ஜகதீசன், எம்பிரான்-எமது பெருமான், என் உடை - அடியேனைப்பெற்றவனுகிய, அப்பன் - தந்தை, என்று என்று - பலவாறு நாவினுற் புகழ்ந்து துதித்து, தொழுதகையினர் ஆகி - வணங்குகின்ற கையையுடையவனுகி, தூ - பரிசுத்தமாகிய, மலர் - தாமரைமலர்போன்ற, கண்கண் - நேற்றிரங்களினின்று, நீர் - ஜலம், மல்கும் - சிந்துகின்ற, தொண்டர்க்கு - தொழும்பர்களுக்கு, வழுவு - தவறுதல், இலா-இல்லாத, மலர் - தாமரைமலர்போன்ற, சேவடிக்கண் - திருவடியின்கண்ணே, நம் - அடியேனது, சென்னி - தலையானது, மன்னி - பொருந்தி, மலரும் - மலராநிற்கும், எ - று.

(க - ரை.) கிருமிக்கூடாகிய இவ்வுடம்பின் பொய்யெண்ணங்களைநீக்கிக் கிருபைசெய்கின்ற எம்பெருமானென்றும், என்னப்பனென்றும், தேஜோமயன் என்றும், ஜகதீசனென்றும், பலநாமங்களால் துதித்துத்தொழுத கையினராய் நின்று கண்ணீர்ததும்புகின்ற மெய்யன்பருக்குத் தவருமல் மோட்சவீட்டையடைய கிருபைசெய்கின்ற இறைவனது திருவடியில் எமது சிரசானது பொருந்தி விளங்காநிற்கும், என்பது.

(வி - ரை,) புழு - கிருமி. புழுவினுர் பொதிந்திடு குரம்பை என்றது- உடம்பைக் குறிப்பிட்டார். குரம்பை - கூடு. எழில்-அழகு. தூ - பரிசுத்தம். வழு - தவறுதல். வழுவிலா - மோட்சவீட்டைத் தருதலில் தவறுதலில்லாதது என்றும் பொருந்தும். (அ)

வம்பனாய்த்திரிவேனைவாவென்றுவல்வினைப்பகைமாய்த்திடு
மும்பரானுலகூடறுத்தப்புறத்தனாய்நின்றவெம்பிரா
னன்பரானவர்க்கருளிமெய்யடியார்கட்கின்பந்தழைத்திடுஞ்
செம்பொன்மாமலர்ச்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே.

(ப - ரை.) வம்பன் ஆய் - வீண்வார்த்தைப்பேசி, திரிவேனை - எங்கும் அலைச்சல்பட்டுத்திரிகின்ற அடியேனை, வா என்று - தன்னிடத்தில் இருக்க வருகவென்று, வல்-கொடிய, வினைபகை-வினையென்று சொல்லப்படும் பகையை, மாய்த்திடும் - சேதிக்கின்ற, உம்பரான் - மேலானவன், உலகு ஊடு அறுத்து - உலகங்களை யூடறுத்துப்போய், அப்புறத்தனாய் - அப்பாற்பட்டவனாகி, நின்ற - நிற்கின்ற, எம்பிரான் - எமது சிவபெருமான், அன்பர் ஆனவர்க்கு- உள்ளன்புள்ள தொழும்பரானவர்க்கு, அருளி - என்றும் வாழக்கிருபைசெய்து, மெய் - உண்மையான, அடியார்க்கு - தொண்டர்கட்கு, இன்பம்-பேரின்பம், தழைத்திடும் - செழிக்கப்பெற்ற, செம்பொன் - செவந்தபொன்போன்ற, மா - அழகாகிய, மலர் - தாமரைமலர்போன்ற, சேவடிக்கண் - திருவடியின் கண்ணே, நம் - அடியேனது, சென்னி - தலையானது, மன்னி - பொருந்தி, திகழும் - பிரகாசிக்கும், எ - று.

(க - ரை.) வீண்வார்த்தையாடி அலைச்சல்பட்டு அங்கு மிங்கு மெங்கும் திரியாநிற்கும் அடியேனை யெங்கும் செல்லொணாமல் இங்ஙனேவாவென்று அழைத்து என்கொடிய வினைப்பகையைச்சேதிக்கின்றவனும், யாவர்கரும் மேலோனுர், எல்லாவுலகங்களையும் ஊடுறுவி நின்றவனுமாகிய சிவபெருமானது திருவடியில் அடியேனது சிரசானது பொருந்தி பிரகாசியாநின்றது, என்பது.

(வி - ரை.) உம்பர் - மேல்வீடு. உம்பரான் - மேலாகிய மோட்சவீட்டையுடையவன், உலகூடறுத்துப்புறத்தனாய் நின்றது - சர்வசங்காரகாலத்தில் பிரம விட்டுணுக்களுக்கு மத்தியில் [ திருவண்ணாமலையில் அக்கினிசொரூபமாய் எழுந்து நின்றதைக்குறித்தெனினும் பொருந்தும். திகழல் - பிரகாசித்தல். ()

முத்தனைமுதற்சோதியைமுக்கணப்பனைமுதல்வித்தினைச்
சித்தனைச்சிவலோகனைத்திருநாமம்பாடித்திரிதரும்
பத்தர்காளிங்கேவம்மினீருங்கள்பாசந்தீரப்பணிமினோ
சித்தமார்தருஞ்சேவடிக்கணஞ்சென்னிமன்னித்திகழுமே.

(ப - ரை.) முத்தனை - பாசவிமுத்தனை, முதல் - யாவர்க்கும் முதலோனாகிய, சோதியை - ஒளியை, முக்கண்-மூன்று கண்களையுடைய, அப்பனை- எனது தந்தையை, முதல்-ஆதியாகிய, வித்தினை - வித்தை, சித்தனை - மெய்யன்பர்களின் சித்தமாகிய மனத்திற்குடிகொண்டு வாசமாயிருப்பவனை, சிவ

லோகனை - [சிவபுரமாகிய ஸ்ரீ-மகா கைலாயத்தில் திருக்கோலத்துடன் யாவருந்தொழ எழுந்தருளியிருப்பவனாகிய] சிவபிரானை, திருநாமம் - பலவித நாமங்களால், பாடி - துதிசெய்து, திரிதரும் - ஆநந்த சாகரத்தில் மூழ்கித்திரிகின்ற, பத்தர்காள் - தொண்டர்களே? இங்கே - இவ்விடத்தே, வம்மின் - சற்றுவாருங்கள், நீர்-(அவ்வாறு வந்த) நீங்கள், உங்கள்-உங்களுடைய, பாசம்-பாசமானது, தீர - ஒழிய, பணிமின்-தலைவணங்கி தொண்டுசெய்யுங்கள், சித்தம் ஆர் - அறிவுருவனாகிய சிவபெருமான், தரும் - சொரிக்கின்ற, சேவடிக்கண் - திருவடியின்கண்ணே, நம் - அடியேனது, சென்னி - தலையானது, மன்னி - பொருந்தி, திகழும் - என்றும் விளங்கா நிற்கும், எ - று.

(க-ரை.) முத்தனே! என்றும், முழுமுதற்சோதியே! என்றும், முக்கண்ணனே! என்றும், முதல் வித்தே! என்றும், சித்தனே! என்றும், சிவலோகநாதனே! என்றும், பலவித திருநாமங்களால் பாடிப்புகழ்ந்து திரியாநின்ற பக்தசிரோன்மணிகளே? இங்ஙனேவந்து அப்பேர்க்கொற்ற இறைவனை உங்களதுபாசபந்த மறும்படி திருத்தொண்டுசெய்யுங்கள், அவனது திருவடியில் அடியேனுடைய சிரசானது பொருந்தி விளங்கா நிற்கும், என்பது.

(வி-ரை.) முத்தன் - பாச நீக்கமுள்ளவன். முதற்சோதியென்றது - முச்சுடர்கட்குங் காரணமாகிய ஒளியென்றபடி. முதல்வித்து - பிரபஞ்சத்துக்கு முதற்காரணமாய் நிற்கும் சிவபெருமான். சித்தன் - அறியுருவானவன். நாமம்-பெயர். பணி - வேலை, தொண்டு. (க0)

திருச்சிற்றம்பலம்.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவார்த்தை.

அறிவித்தன்புறுதல்.

[அறித்தன்புறுதல் என்பது உன்னால் அறியப்படாத துரைக்க அறியென்றது.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

மாதிவர்பாகன்மறைபயின்ற
வாசகன்மாமலர்மேயசோதி
கோதில்பரங்கருணையடியார்
குலாவுநீதிகுணமாகநல்கும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்
புண்ணியன்மண்ணிடைவந்திழிந்
தாதிப்பிரமம்வெளிப்படுத்த
வருளறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) மாது இவர் - பெண்களையொத்த, பாகன் - கூரன், மறை - மகா வேதங்களில், பயின்ற - பழகியுழன்ற, வாசகன்- உருமையான மொழியினன், மா-பெருமைபொருந்திய, மலர்-(தொழும்பரது இருதயமாகிய) தாமரை மலரில், மேய - (எந்நாளும்) வாசஞ்செய்பவன், சோதி - ஒளியுருவன், கோது-யாதொரு குற்றமும், இல் - இல்லாதவன், பரம் - மேலதாகிய, கருணை - அருள்வடிவானவன், குணம் ஆக - (இவ்வித) நற்குணங்களைக்கொண்டு, நல்கும் - கிருபைசெய்கின்ற, போது அலர் - பேரரும்புகள் விரியாநின்ற, சோலை - புட்பச்சோலை சூழ்ந்த, பெருந்துறை - திருப்பெருந்துறை யென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய, எம் - அடியேனது, புண்ணியன் - (அடியார்களது மலசம்பந்தங்களையொழிக்கும்) புண்ணிய வுருவினன், (அப்பேர்க்கொற்றவன்)

மண்ணிடை - பூலோகத்தின்கண், இழிந்து - கைலையைவிட்டிறங்கி, வந்து - [அப்பதியிலன்புடன்] இருந்து, ஆதி - முதன்மையாகிய, பிரமம் - ப்ரம்மப் பொருளை, வெளிப்படுத்த - (யாவருமறிய) வெளிப்படுத்திய, அருள் - அருளின தன்மையை, அறிவார் - தெரியும் வல்லமையை யுடையவர், எம்பிரான் - எமது சிவபிரான், ஆவார் - (அவரே) ஆவர், எ - று.

(க - ரை.) மங்கைப் பங்கனும், யாவராலு மெளிதிற்றெறிந்துகொள்ளக்கூடாத மகாவேதம் பயின்றவனும், தொழும்பரது இருதயமெனுந்தாமரையி லெழுந்தருளி யிருப்பவனும், பெருங்கருணையை யுடையவனும், நற்றிகளைக் குணமாய்க்கொண்டாள்கின்ற திருப்பெருந்துறை யென்னும் க்ஷேத்திரத்தி லெழுந்தருளிய புண்ணிய மூர்த்தியுமாகிய சிவபெருமான் கைலையை விட்டு இம்மண்ணுலகில் வந்து முதற் பிரமத்தை யடியேனுக்கு வெளிப்படுத்தி யறிவித்த பெருங்கருணையை யறியவல்லவர் எம்பிரான்மா ராவர், என்பது.

(வி - ரை.) மாது - இங்கு உமாதேவியைக்குறித்து. இவர்தல்-ஏறுதல். அது இங்கு தங்குதற்குப்பொருளாயிற்று. கோது - குற்றம். வேதம் இறைவனது வாக்காதலால் "மறைபயின்ற வாசகன்" என்று கூறினர். ஆதி - முதல். (க)

மாலயன்வானவர்கோனும்வந்து
வணங்கவவர்க்கருள்செய்தவீசன்
ஞாலமதனிடைவந்திழிந்து
நன்னெறிகாட்டிநலந்திகழுங்
கோலமணியணிமாடநீடு
குலாவுமிடைவைமடநல்லாட்குச்
சீலமிகக்கருணையளிக்குந்
திறமறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) மால்-விட்டுணுவும், அயன்-பிரமனும், வானவர் - தேவர்கட்கு, கோனும் - அரசனாகிய இந்திரனும், வந்து வணங்க-தலைவணங்கி வந்துதொழ, அவர்க்கு - (அவ்வாறு தொழுத) அவர்களுக்கு, அருள் - கிருபையை, செய்த - (தக்கவாறு) வரமீந்த, ஈசன்-ஜெகதீசன், ஞாலம் அதனிடை - இப்பூவுலகத்தில், இழிந்து-சிவகிரியினின்று இறங்கி, வந்து - (உகந்து) வந்து, நல் - நன்மார்க்கமடையும், நெறி - வழியை, காட்டி - கிருபையுடன் காண்பித்து, நலம் - நன்மையை, திகழும் - விளங்குகின்ற, கோலம் - அழகுவாய்ந்த, மணி - நவரத்தின மணிகளால், அணி - ஜோடிக்கப்பட்ட, மாடம் - திருமாளிகைகள், நீடு - நீண்ட, குலாவும் - பிரகாசிக்கின்ற, இடைவை - திருவிடை மருதூரென்னும் பதியில், மட - ஓர் பேதமைதங்கிய, நல்லாட்கு - பெண்ணுக்கு,

சீலம் - நல்லொழுக்கம், மிக-மிகும்படி, கருணை - பெருங்கருணையை, அளிக்கும் - செய்தருளிய, திறம் - வல்லமையை, அறிவார் - தெரிந்துகொள்பவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - ஆவர், எ - று.

(க - ரை.) விட்டுணுவும், பிரமனும், தேவேந்திரனும் வந்து அன்புடன் துதிசெய்து வணங்க அவர்கள்விருப்பத்தின்படிக்கு அருள்செய்த இறைவன், கைலயங்கிரியை விட்டெழுந்தருளி யிப்பூலோகத்தின்கண்வந்து ஆன்மாக்களுக்கு நன்னெறியைக் காண்பித்து, திருவிடை மருதூரென்னும் திவ்ய க்ஷேத்திரத்தில் வாழாநின்ற ஒருபெண்ணுக்கு நல்லொழுக்கம் பெருகும்படிக்கருள்செய்த விபரத்தை யறிபவர் எம்பிரான்மா ராவர், என்பது.

(வி - ரை.) அயன் - பிரமன். வானவர்கோனும் என்ற உம்மையை மால் அயன் என்பவற்றீற்றிலுங்கூட்டுக. இழிந்து வந்து என்றது சிவபெருமான் ஆன்மாக்களை யிரட்சிக்கும் பொருட்டு கைலயினின்று இப்பூவுலகில் எழுந்தருளிவந்ததைக்குறித்து. மாடம் - மாளிகை. இடை மருது என்பது இடைவையெனமரூஉ வாயிற்று. திறல் - வல்லமை. (உ)

அணிமுடியாதியமரர்கோமா
ஞனந்தக்கூத்தனாறுசமயம்
பணிவகைசெய்து*படவதேறிப்
பாரொடுவிண்ணும்பரவியேத்தப்
பிணிகெடநல்கும்பெருந்துறையெம்
பேரருளாளன்பெண்பாலுகந்து
மணிவலைகொண்டுவான்மீன்விசிறும்
வகையறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) அணி - பலவித திருவாபரணங்களால் அலங்கரிக்கப்பட்ட, முடி - திருமுடியை யுடைய, ஆதி - முதல்வனாகிய எப்பெம்மானே! அமரர் கோமான் - தேவாதிதேவனே! ஆநந்தக்கூத்தன்-யாவருக்கும் பேரின்பத்தைத்தருந் திருநடனஞ்செய்கின்ற நடராஜமூர்த்தியே! அறுசமயர் - சட் சமயங்களும், (இவ்வாறாக) பணிவகை - துதிசெய்யும் விதம், செய்து - கிருபைசெய்து, படவது ஏறி - தோணியின் மீதேறி, பாரொடு - மண்ணுலகத்தாரோடும், விண்ணும் - ஆகாயத்தினிடம் வசிக்காநின்ற தேவர்முதலியவர்களும், பரவி - வழிபட்டு, ஏத்த - போற்றிசெய்ய, பிணி - நரை மூப்புச் சாக்காடு முதலியன, கெட - அழியும்படி, நல்கும் - கிருபைசெய்த, பெருந்துறை -

* சிவபெருமான் வலைவீசி மீன்பிடித்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்தில் "வலைவீசின படலத்தில்" விசிதமாய்க்காண்க.

திருப்பெருந்துறையென்னும்பதியில் எழுந்தருளிய, எம் பேர் ஆளாளன் - அடியேனது பேரருளாளனாகிய சிவபெருமான், பெண்பால்-உமாதேவியின்பக் கலிருக்க, உகந்து - விரும்பி, மணி - அழகாகிய, வலை - வலையை கையிற் பிடித்து, வான் - மேலதாகிய, மீன் - மச்சங்களை, விசிறும் - (அவ்வலையை) வீசிப்பிடித்த, வகை - அவ்வற்புதச்செயலை, அறிவார் - தெரிந்துகொள்பவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - ஆவர், எ - று.

(க - ரை.) அலங்கரிக்கப்பட்டத் திருமுகமையுடைய முதற்கடவுளான பெருமானும், ஆநந்தக் கூத்தனும், சட்சமயங்களும் பணிசெய்வோனும், பெண்பாகனும் படவேறி யாவரும் மெச்சத்தக்க சிவலையை வீசி மீன்களைப்பிடித்த வற்புதச்செயலை அறிபவர் எம்பிரான்மா ராவர், என்பது.

(வி - ரை.) அணிதல் - அலங்கரித்தல், (சோடித்தல்.) காண்போர்க்கு இன்பத்தைக்கொடுக்கும் திருநடனமுடைய பரமசிவனை "அநந்தக்கூத்தன்" என்றும் கூறினர். இதுவன்றி ஆனந்தத்தாற்கூத்தாடுவோனாகிய நடராஜமூர்த்தி, என்றும்பொருள். படவு - தெப்பம். உகந்து - இச்சித்து, (விரும்பி.) வகை - விதம். (௩.)

வேடுருவாகிமகேந்திரத்து
மிகுகுறைவானவர்வந்துதன்னைத்
தேடவிருந்தசிவபெருமான்
சிந்தனைசெய்தடியோங்களுய்ய
வாடலமர்ந்த*பரிமாவேறி
யையன்பெருந்துறையாதியந்நா
ளேடர்களையெங்குமாண்டுகொண்ட
வியல்பறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) வேடு உரு ஆகி - வேடனுருக்கொண்டு, மகேந்திரத்து - மகேந்திர மலைச்சாரலில், மிகு - அதிக, குறை - குறைகளையுடைய, வானவர் - மேலுலகத்தார்கள், வந்து - அதிவினயத்துடன் உவந்து வந்து, தன்னை - தேவரீரை, தேட - தேடிக்காணும்படி, இருந்த - கிருபையுடன் எழுந்தருளியிருந்த, சிவபெருமான்-பிறப்பிறப்பில்லாச்) சிவபிரான், அடியோங்கள்-தொண்டனாகியயான், உய்ய-(துயரத்தினின்று நீங்கி) ஜீவிக்கும்விதம், சிந்தனைசெய்து - தீர்க்கயோசனைசெய்து, ஆடல் அமர்ந்த - ஜெயமடையத்தக்க, பரிமா ஏறி - யாவருங்கண்டு களித்தடியேன் துயரைநீக்கி அடிமைகொள்ள) குதிரையேறி,

* சிவசாம்பசிவ மூர்த்தியாகிய இறைவன்காட்டு நரிகளைக் குதிரைகளாக்கி ஏறிவந்தவரலாற்றைத்திருவிளையாடற் புராணத்தில் "நரிபரியாக்கிய படலத்திற்" காண்க.

ஐயன் - ஐயனாகிய சிவபெருமான், பெருந்துறை - திருப்பெருந்துறையென்னும்பதிக்கு, ஆதி - முதற்கடவுளாகிய சிவபெருமான், அ - அந்த, நாள்-தினத்தில், எடர்களை - தொழும்பர்களை, எங்கும் - எவ்விடத்தும், ஆண்டுகொண்ட- ஆட்கொண்டருளின, இயல்பு - செய்கையை, அறிவார் - அறிந்துகொள்பவர், எம்பிரான் - எம்பெருமான்மார், ஆவார் - ஆவர், எ - று.

(க - ரை.) மேலுலகத்தாராகிய தேவர்கள் முதலிய யாவருங்காண மகேந்திரகிரியில் வேடுவவுருக்கொண்டுவந்து, தங்கள் குறைகளைச் சொல்லித்தேடும்படி யெழுந்தருளியிருந்த சிவபிரான், தொண்டனாகிய அடியேன் நற்பதவியிலிருந்துய்யும்படிச்சிந்தித்து, அன்றுபாண்டியனால் அடைந்த துன்பத்தைத் தடுக்கக் காட்டு நரியைப்பரியாக்கி யேறிவந்து அன்பனாகிய அடியேனை யாட்கொண்டவகையை யறிபவர் எம்பிரான்மா ராவார், எ-பது.

(வி - ரை.) வானவர் - தேவர்கள். தேடல் - கண்டுபிடித்தல். உய்தல் - பிழைத்தல். ஆடல் இங்கு வெற்றியைக்குறித்து. (ச)

வந்திமையோர்கள்வணங்கியேத்த
மாக்கருணைக்கடலாயடியார்
பந்தனைவிண்டறநல்குமெங்கள்
பரமன்பெருந்துறையாதியந்நா
ளுந்துதிரைக்கடலைக்கடந்தன்
றோங்குமதிலிலங்கையதனிற்
பந்தணைமெல்விரலாட்கருளும்
பரிசறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) இமையோர்கள் - கண்ணிமைக்கொட்டா தேவர்கள், வந்து - உம்மைக்கிட்டிவந்து, வணங்கி - உள்ளன்போடு தொழுது, எத்த - துதிசெய்ய, மா - பெருமைதங்கிய, கருணை - கிருபையையுடைய, கடல் - எங்கும் நிறைந்த சிவசங்கரன், அடியார் - மெய்யடியார்களது, பந்தனை - பாசபந்த சம்பந்தங்களை, விண்டு - விட்டு, அற - ஒழியும்படி, நல்கும் - கிருபைசெய்யும், எங்கள் - அடியேனுடைய, பரமன் - பராபரவத்துவான பரமசிவன், பெருந்துறை - திருப்பெருந்துறையென்னும் பதிக்கு, ஆதி - முதற் கடவுளாகிய சிவபெருமான், அ - அந்த, நாள் - நாளில், உந்து - பெருமைதங்கிய, திரை - அலைகளையுடைய, கடலை - சாகரத்தை, கடந்து - கடந்துசென்ற இறைவன், அன்று - அந்நாளில், ஓங்கும் - ஆகாயத்தையளாவிய, மதில் மதில்களையுடைய, இலங்கை அதனில் - இலங்காபட்டினத்தில், பந்து அணை-பந்தைப்போன்ற, மெல் - மிருதுவாகிய, விரலாட்கு - விரல்களையுடைய வண்டோத

ரிக்கு, அருளும் - கிருபைசெய்த, பரிசு - விதம், அறிவார் - தெரிபவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - ஆவர், எ - று.

(க - ரை.) கண்ணிமைக்கொட்டாத் தேவர்கள் உன்னைத்தேடிவந்தன்புடன் வணங்கிப்போற்றிசெய்ய, அதற்கிறங்கி, தொண்டர்களது பாசபந்தம் அற்றொழியும்படிக்குக் கிருபைசெய்த மேலோனும், திருப்பெருந்துறைக்கு இறைவனுமாகிய சிவபெருமான், கடலைக்கடந்துபோய் இலங்கையில் வசிக்கா நின்ற வண்டோதரியென்னும் இராக்ஷதப்பெண்பாலுக்கு அருள்செய்த காக்ஷியை யறிபவர் எம்பிரான்மா ராவார், என்பது.

(வி - ரை.) இமை - கண்ணிமை. ஏத்தல் - துதித்தல். பந்தம் - பாசபந்தம். நல்குதல் - கொடுக்குதல், ஈகுதல். கடத்தல் - செல்லுதல், தாண்டுதல், இலங்கை யென்றகுறிப்பால் பந்தணை மெல்விரலாள் என்றது வண்டோதரி யென்னும் இராக்ஷசியைக்குறித்துணற்றிற்று. (ரு)

வேவத்திரிபுரஞ்செற்றவில்லி
வேடுவனாய்க்கடிநாய்கள்சூழ
வேவற்செயல்செய்யுந்தேவர்முன்னே
யெம்பெருமான்றானியங்குகாட்டி
லேவுண்ட*பன்றிக்கிரங்கியீச
னெந்தைபெருந்துறையாதியன்று
கேவலங்கேழலாய்ப்பால்கொடுத்த
கிடப்பறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) திரிபுரம் - முப்புரமும், வேவ - வேகும்படி, செற்ற - அழித்த, வில்லி - வில்லையுடையவனாகிய பரமசிவன், வேடுவன் ஆய் - வேடுவனாகி, கடி - அதிவேகத்தையுடைய, நாய்கள்-சுவானங்கள், சூழ-சூழ்ந்துவர, ஏவல்-ஏவற்றொழில்களை, செயல்செய்யும் - அன்புடன் செய்கின்ற, தேவர்முன்னே-தேவர்களுக்கெதிராக, எம்பெருமான்-எம்பெருமானான சிவபிரான், இயங்கு - பலவித மிருகங்கள் சஞ்சரிக்கின்ற, காட்டில் - காட்டினிடத்தே, ஏ உண்டபன்றிக்கு-அம்புதைத்துக்கிடந்தபன்றிக்கு, இரங்கி-மன மிரங்கிய, ஈசன் - ஜெகதீசன், எந்தை - எமது தலைவன், பெருந்துறை-திருப்பெருந்துறையென்னும் பதிக்கு, ஆதி - முதற்கடவுளாகிய சிவபெருமான், அன்று - அக்காலத்தில், கேவலம் - அற்பமாகிய, கேழல் - (ஓர்) பன்றியைப்போல் ஆய் - உருக்கொ

* பன்றிக்குட்டிகளுக் கிரங்கிப் பால்கொடுத்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணத்தில் பன்றிக்குட்டிகளுக்குப் பாற்கொடுத்த படலத்திற்கண்டு கொள்க.

ண்டு, பால் கொடுத்த - (அத்தாயிழந்தவப்பன்றிக் குட்டிகளுக்கு) பாலூட்டிய, இடப்பு - அவ்வற்புதச்செயலை, அறிவார் - தெரிபவர், எம்பிரான் - எம்பிரான் மார், ஆவார் - ஆவர், எ - று.

(க-ரை.) திரிபுராந்தகனாகிய சிவபெருமான் வேடுவவுருக்கொண்டு பணிவிடை செய்யுந்தேவர்களுக்கெதிரில்பலமிருகங்கள் வாழாநின்ற காட்டினிடத்தில் அம்புதைத்து மாண்ட பன்றிக்கிரங்கிப் பசிப்பிணியால் வருந்தியழுத சிறுபன்றிக்குட்டிகளுக்குத் தான் ஓர் பன்றிவடிவங்கொண்டு அக்குட்டிகளின் பசியைப் பாலூட்டித்தவிர்த்த வற்புதச்செயலை யறிபவர் எம்பிரான்மாராவார், என்பது.

(வி - ரை.) செற்றல் - அழித்தல். கடி - அச்சம். ஏவல் - திருப்பணி. உண்டல் - இங்குபடுதல். ஆதி - பிரதமம். கேழல் - பன்றி. (சு)

நாதமுடையதோர்நற்கமலப்
போதினினண்ணியநன்னுதலா
ரோதிப்பணிந்தலர்தூவியேத்த
வொளிவளர்சோதியெபமீசன்மன்னும்
போதலர்சோலைப்பெருந்துறையெம்
புண்ணியன்மண்ணிடைவந்துதோன்றிப்
பேதங்கெடுத்தருள்செய்பெருமை
யறியவல்லாரெம்பிரானாவரே.

(ப - ரை.) நாதம் - நாதம் அலது ஓசையை, உடைய - உடையதாகிய; ஓர் - நிகரற்ற, நல் - நல்ல, கமலபோதினில் - தாமரைப்பூவில், நண்ணிய - பொருந்திய, நல் - அழகுவாய்ந்த, நுதலார் - நெற்றியையுடைய சரசுவதியானவள், ஓதி - பலவிதத்திலும் தேவரீரைப் புகழ்ந்துரைத்து, பணிந்து - தாழ்ந்து கைகூப்பிவணங்கி, அலர் - மலர்களை, தூவி - அருச்சித்து, ஏத்த - துதிக்க, ஒளிவளர் - பிரகாசம் பொருந்திய, சோதி - சோதிசொரூபனாகிய, எம் - எனது, ஈசன் - ஜகதீசன், மன்னும் - நிலைபெற்ற, போது - பேர் அரும்புகள், அலர் - மலர்கின்ற, சோலை - சோலைகள் சூழப்பட்ட, பெருந்துறை - திருப்பெருந் துறைப்பதியிலுள்ள, எம் - எனது, புண்ணியன் - கிருபாமூர்த்தியாகிய இறைவன், மண் இடை - புலோகத்தின்கண், வந்து - (கைலையைவிட்டு எழுந்தருளிவந்துதோன்றி, பேதம் - பேதா பேதங்களை, கெடுத்து-சேதித்து, அருள் - கிருபை, செய் - செய்த, பெருமை - வைபவத்தை, அறியவல்லார் - தெரிந்து கொள்ளும் வல்லமையுடையவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - ஆவர், எ - று.

(க - ரை.) நற்றாமரைப்பூவில் வாசஞ்செய்கின்ற சரசுவதியானவள், வாழ்த்தி வணங்கி நன்மலர்களைத்தூவித் துதிசெய்ய, அவள்பொருட்டுச் சிவபெமான் பூமியில் வந்து அவளுடைய வேறுபாட்டைக்கெடுத்து, அவளுக்குக் கிருபைசெய்த பெருமையை அறிபவர் எம்பிரான்மா ராவர், என்பது.

(வி - ரை.) நாதம் - ஓசை. கமலப்போதினினண்ணிய நன்னுதலார் என்ற குறிப்பால் திருமகளையும் சரசுவதியையும் குறிப்பிடலாயிற்று. அலர்தல் - மலர்தல். பேதம் - வேறுபாடு. (எ)

பூவலர்கொன்றையமாலைமார்பன்
போருகிர்வன்புலிகொன்றவீரன்
மாதுநல்லாளுமைமங்கைபங்கன்
வண்பொழில்சூழ்தென்பெருந்துறைக்கோ
னேதில்பெரும்புகழெங்களீச
னிருங்கடல்வாணற்குத்தீயிற்றோன்று
மோவியமங்கையர்தோள்புணரு
முருவறிவாரெம்பிரானுவாரே.

(ப - ரை.) பூ - புட்பங்கள், அலர் - விரியாநின்ற, அம் - அழகிய, கொன்றையமாலை - கொன்றைமாலையைத்தறித்த, மார்பன் - திருமார்பினையுடையவன், போர் - உயித்தத்தொழிலுக்குரிய, உகிர் - நாகங்களையுடைய, வல் - கொடிய, புலி - புலியை, கொன்ற - சாகடித்த, வீரன் - ஜயவீரனாகிய பரமசிவன், மாது - பெண்களில், நல்லாள் - சிறப்புப்பொருந்தினவளாகிய, உமைமங்கை- உமையவளென்றுதிருநாமம் தரித்த பெண்ணின், பங்கன் - கூறன், வண் - வளப்பம் பொருந்திய, பொழில் - சோலைகள், சூழ் - சூழ்ந்த, தென் - அழகுபெற்றிருக்கும், பெருந்துறை - திருப்பெருந் துறையென்னும் பதிக்கு, கோன் - அரசனாகிய சிவபெருமான், ஏதம் - யாதொருகுற்றம், இல்-இல்லாத, பெரு - மிகுந்த, புகழன் - கீர்த்தியையுடைய (சிவபெருமான்), எங்கள் - அடியேனது, ஈசன் - ஜகதீசன், இரு - விசாலமான, கடல் - சமுத்திரத்தையுடைய, வாணற்கு - வருணனுக்கு, தீயில் - நெருப்பில், தோன்றும் - உண்டாகிய, ஓவியம் - சித்திரம்போன்ற, மங்கையர் - மாதருடைய, தோள் - தோள்களை, புணரும் - தழுவிச்சேருகின்ற, உரு - உருவத்தினிலக்ஷணத்தின், அறிவார் - தெரிபவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - ஆவர், எ . று.

(க - ரை.) பெருந்தீயிற்றோன்றிய பெண்களை வருணனைத்தழுவச்செய்த விதத்தை யறிபவர் எம்பிரான்மா ராவார், என்பது.

(வி - ரை.) உகிர் - நகம். வீரன் - பலத்தையுடையவன். வல்புலி என்றது தாருகாவனத்து இருஷிகள் செய்த யாகத்திற்றோன்றிய புலியைக் குறித்து. ஏதம் - குற்றம். ஓவியம் - சித்திரம், படம்.

தூவெள்ளைநீறணியெம்பெருமான்
சோதிமகேந்திரநாதன்வந்து
தேவர்தொழும்பதம்வைத்தவீசன்
றென்னன்பெருந்துறையாளியன்று
காதல்பெருகக்கருணைகாட்டித்
தன்கழல்காட்டிக்கசிந்துருகக்
கேதங்கெடுத்தென்னையாண்டருளுங்
கிடப்பறிவாரெப்பிரானுவாரே.

(ப - ரை.) தூ - பரிசுத்தமாகிய, வெள்ளை - வெண்ணிறமுள்ள, நீறு - நீற்றை, அணி - தரித்த, எம்பெருமான் - எமது சதாசிவமூர்த்தி, சோதி - சோதியுருவாகிய, மகேந்திர நாதன் - மகேந்திரத்தலைவன், வந்து தேவர்கள்- தேவர்கள்வந்து, தொழும்-வணங்குகின்ற, பதம் - தன்திருவடியை, வைத்த - இம்மண்ணின்மீது வைத்த, ஈசன் - ஜகதீசன், தென்னன் - தென்னவன், பெருந்துறை - திருப்பெருந்துறையை, ஆளி-அரசாள் வோனுகிய சிவபெருமான், அன்று - அக்காலத்தில், காதல் - ஆசையானது, பெருக - அதிகரிக்க, கருணை-கிருபாகடாச்சத்தை, காட்டி-காண்பித்து, தன் - தேவரீரது, கழல்- திருவடியை, காட்டி - காண்பித்து, கசிந்து உருக - கசிந்துருகும் வண்ணம், கேதம் - பிறவித்துன்பத்தை, கெடுத்து - சேதித்து, என்னை - அடியேனை, ஆண்டருளும் - அடிமை கொண்டாண்டருளின, கிடப்பு - அற்புதச்செயலை, அறிவார் - அறிபவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - ஆவர், எ - று.

(க - ரை.) பரிசுத்தமாகிய வெண்ணீற்றையணிந்த சிவபெருமானும், தேவர்தொழும் திருப்பாதங்களையுமுடைய இறைவனும் ஆகிய கருணாகரக்கடவுள் பூலோகத்தில் அடியேனுக்காகத் திருப்பெருந்துறைப் பதியிலெழுந்தருளி அந்நாளில் கிருபைசெய்து தன் திருவடியைக்காட்டிட என்மனதானது கசிந்துருகும்படி என் பிறவித்துன்பங்களைச்சேதித்து அடியேனையடிமையாக்கியாண்டருளின செயலை அறிபவர் எம்பிரான்மா ராவர், என்பது.

(வி - ரை.) தூ - பரிசுத்தம். சோதி-ஒளி. ஆளி என்பதில் இகரவிகுதி. காதல் - ஆசை. கருணை - கிருபை. கேதம் - துன்பம். கேதம் என்றது வடசொல். (கூ)

அங்கணனெங்களமரர்பெம்மா
னடியார்க்கமுதனவனிவந்த
வெங்கள்பிரானிரும்பாசந்தீர
விகபரமாயதோரின்பமெய்தச்

*சங்கங்கவர்ந்துவண்சாத்தினோடுஞ்
சதுரன்பெருந்துறையாளியன்று
மங்கையர்மல்குமதுரைசேர்ந்த
வகையறிவாரெம்பிரானாவாரே.

(ப - ரை.) அம் - அழகிய, கணன் - கண்களையுடையவன், எங்கள் - எமது, அமரர்பெம்மான் - தேவர் பெருமான், அடியார்க்கு - தொழும்பர்கட்கு, அமுதன் - தேவாமிர்தம்போல்வன், அவனி - பூலோகத்தில், வந்த - எழுந்தருளிகாக்கவந்த, எங்கள் - எமது, பிரான் - சிவபெருமான், இரு - இருவித, பாசம் - பிறப்பிறப்பென்னும் பாசபந்தம், தீர - நீங்கவும், இகபரம் ஆயது - இகபரங்களாகிய, ஓர் - நிகரற்ற, இன்பம் - பேரின்பம், எய்த - உண்டாகதாகவும், சங்கம் - வளையலை, கவர்ந்து - எடுத்து, வண்சாத்தினோடும் - தோண்மேல்தாங்கிய தலையணியோடும், சதுரன்-சதுரதையுடையவன், பெருந்துறை-திருப்பெருந்துறைப்பதியை, ஆளி-அரசனாகி ஆளுதலையுடையவன், அன்று-அந்நாளில், மங்கையர் - பெண்கள், மல்கும் - நிறைந்த, மதுரை சேர்ந்த - மதுரைப்பதியையடைந்த, வகை - விபரத்தை, அறிவார் - தெரிபவர், எம்பிரான் - எம்பிரான்மார், ஆவார் - அவர், எ - று.

(க - ரை.) திருப்பெருந்துறைப் பதியிலெழுந்தருளிய சிவபெருமான் வளையலைத்தோண்மேற்றாங்கி, மங்கையர் நிறைந்த மதுரைமாபதியிலெழுந்தருளிய திருவிளையாட்டின் வரலாற்றை அறிபவர் எம்பிரான்மா ராவர், என்பது.

(வி - ரை.) அம் கணன் - கிருபாநோக்கமுடைய கண்களையுடைய சிவபெருமான். இகபரம் - இம்மை மறுமைகள். சாத்து - தலைக்கோலம். சங்கம் - வளையல். ஆளி - அரசாள்பவன். வகை - விதம்.

திருச்சிற்றம்பலம்.

* சிவபெருமான் சங்கமெடுத்து வந்தவரலாற்றைத் திருவிளையாடற் புராணத்தில் வளையல் விற்ற படலத்தில் விசிதமாய்க்காண்க.

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# எண்ணப்பதிகம்.

ஒழியாவின்பத்துவகை.

[ஒழியாவின்பத்துவகை என்பது தேகமுதலாகிய ஆசையை யறுத்தல்.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

பாருருவாயபிறப்பறவேண்டும்
பத்திமையும்பெறவேண்டுஞ்
சீருருவாயசிவபெருமானே
செங்கமலமலர்போ
லாருருவாயவென்னாரமுதே
யுன்னடியவர்தொகைநடுவே
யோருருவாய்நின்றிருவருள்காட்டி
யென்னையுமுய்யக்கொண்டருளே.

(ப - ரை.) பார் - மண்ணில், உரு ஆய - உருவாகின, பிறப்பு - பிறவித்தளை, அற வேண்டும் - அற்றொழிய வேண்டும், பத்திமையும் - உன்னிடத்திலன்புசெய்யும் பக்தியையும், பெறவேண்டும் - என்றுமடையவேண்டும், (ஆகையால்) சீர் - பெருமைவாய்ந்த, உரு ஆய - உருவத்தை வகித்த, சிவபெருமானே - சிவபிரானே! செம் - செவந்த, கமலம் - தாமரை, மலர்போல் - புட்பத்தைப்போன்ற, ஆர் - அரிய, உரு ஆய - உருவாகிய, என் - அடியேனது, ஆர் - அரிய, அமுதே - தேவாமிர்தம் போன்ற இறைவனே! உன் - தேவரீருடைய, அடியவர் - அடியார்கள், தொகை - கூட்டத்தின், நடுவே - இடையே, ஓர் உரு ஆய் - நிகரற்றவுருவமாகி, நின் - உன்னுடைய, திருஅருள் - திருவருளை, காட்டி - அடியேனுக்குக்காண்பித்து, என்னையும் - தொழும்பனேனையும், உய்ய - என்றும் அழியாமல் ஜீவிக்க, கொண்டருள் - என்னையாட்கொண்டருள்வாயாக, எ - று.

(க - ரை.) சீர்மைவாய்ந்த எம்பெருமானே! அரிய தேவாமிர்தம்போன்றகருணைக்கடலே! அடிமையின் பிறவி|யற்றொழியவேண்டும், நான் தேவரீரிடத்து என்றும் நீங்காமல் அன்புடன் தொண்டு செய்தலையும் அடையவேண்டும், (இதுவன்றி) உன்னடியார் கூட்டத்தின் நடுவில் என்றும் விலகாமலிருக்கக்கிருபைசெய்து ஆட்கொண்டருளவேண்டும், என்பது.

(வி - ரை.) பார் - என்றது எல்லாவுலகங்களையுங் குறித்து. பத்திமை - பத்தி. செம் - செவந்த. அடியவர் - தொழும்பர். என்னையும் என்ற உம்மை இழிவு சிறப்பு. (க)

உரியேனல்லேனுனக்கடிமை
யுன்னைப்பிரிந்திங்கொருபொழுதுந்
தரியேனாயேனின்னதென்
றறியேன்சங்கராகருணையினாற்
பெரியோனொருவன்கண்டுகொளென்றுன்
பெய்கழலடிகாட்டிப்
பிரியேனென்றென்றருளியவருளும்
பொய்யோவெங்கள்பெருமானே.

(ப - ரை.) உனக்கு - தேவரீருக்கு, அடிமை - தொண்டனாகிய அடியேன், உரியேன் - தகுதியானவன், அல்லேன் - இல்லேன், உன்னை - தேவரீரை, பிரிந்து - விட்டு நீங்கி, இங்கு - இவ்விடத்து, ஒருபொழுதும் - சற்றுநேரமும், தரியேன் - தரித்திலேன், நாயேன் - நாயினுங்கடையனாகிய யான், இன்னது என்று - இன்னகாரணமென்று, அறியேன்-தெரிகிலேன், சங்கரா - சிவ சங்கரனே! கருணையினால் - கருணை வாக்கால், பெரியோன் ஒருவன் - யானே முதற் கடவுளாகிய ஒருவனென்று, கண்டு கொள் - என்னைத் தெரிந்துகொள்ளக்கடவாய், என்று - என, உன் - உன்னுடைய, பெய்கழல் - வீரக்கழலையணிந்த, அடி காட்டி - உன் திருவடியைக்காட்டி, பிரியேன் என்று என்று - எந்நாளும் பிரியேனென்று சொல்லி, அருளிய-வரந்தந்த, அருளும்- கிருபைசெய்தருளியவாக்கும், பொய்யோ - பொய் மொழிதானோ! எங்கள் - எமது, பெருமானே - சிவபெருமானே! எ - று.

(க - ரை.) தேவரீராகிய சிவபெருமானே! உனக்கு அடிமைத்தொழில் புரிய உரியனல்லேன், (ஆயினும் யான் அவ்விதமிருக்கின்) தேவரீரைப்பிரிந்து எவ்விடத்துஞ் சிறிது காலங்கூட வாழத்தரிக்கேன், இவைகளுக்குக்காரணமும் தெரிந்தேனில்லை. என்றும் நாமே பெரியவன், என்னைக்கண்டுகொள்ளென்று உன் திருவடியைக்காண்பித்துப் பிரியேனென்று நீ சொல்லியருளிய வாக்கும் பொய்த்துப் போச்சோ! எ - று.

(வி - ரை.) கருணை - கிருபை. ஒருபொழுதும் என்றது சிறிது காலங் கூட என்றபடி. (உ)

என்பேயுருகநின்னருளளித்துன்
னிணைமலரடிகாட்டி
முன்பேயென்னையாண்டுகொண்ட
முனிவாமுனிவர்முழுமுதலே
யின்பேயருளியெனையுருக்கி
யுயிருண்கின்றவெம்மானே
நண்பேயருளாயென்னுயிர்
நாதாநின்னருணாணுமே.

(ப - ரை) என்பு - எலும்புகள், உருக - உருகும்படி, நின் - தேவரீரது, அருள் - கிருபையை, அளித்து - ஈந்து, உன் - தேவரீருடைய, இணைமலர் - இருதாமரை மலர்போன்ற, அடி - பாதங்களை, காட்டி - காண்பித்து, முன்பே - முன்னமே, என்னை - நாயினுங்கடையேனாகிய அடியேனை, ஆண்டு கொண்ட - அடிமையாளாக வாண்டு கொண்டருளின, முனிவா - முனிவனே! முனிவர் - முனிவர்கட்கு, முழுமுதலே - முழுமுதலானவத்துவே! இன்பு - பேரானந்தத்தையே, அருளி - ஈந்து, என்னை - அடியேனை, உருக்கி - உருகச் செய்து, உயிர் - ஆவியை, உண்கின்ற - பருகுகின்ற, எம்மானே - எனதிறைவனே! என் - அடியேனது, உயிர் - உயிர்க்கு, நாதா-தலைவனே! நின் - உன்னுடைய, அருள் - கிருபையை, நாணுமே - கூசாமல், நண்பே - (உன்) பேரின்ப நட்பையே, அருளாய் - என்றென்று மிருக்க அருள் செய்வாயாக, எ-று.

(க - ரை.) தொண்டனாகிய அடியேனது என்புருகச்செய்து என்னை முன்னமே யாண்டுகொண்டருளின முதல்வனே! முழுமுதலான வத்துவே! இன்பத்தைத் தந்து என்னுயிரைக் கவர்ந்த எம்பெருமானே! உன் அருள் கூசாதபடி என்றென்றும் உன்னிடத்தன்பு செய்தலையே எனக் கருள்செய்ய வேண்டும், என்பது.

(வி - ரை.) முன்பேயென்றது மணப்பந்தலில் யாவருங்காண குருமூர்த்தமா யெழுந்தருளி வந்து ஓர் சாசனத்தைக் சாட்டித்தடுத்தாட்கொண்ட காலத்தைக்குறித்து. (ந)

பத்திலனேனும்பணிந்திலனேனுமுன்
னுயர்ந்தபைங்கழல்காணப்
பித்திலனேனும்பிதற்றிலனேனும்
பிறப்பறுப்பாயெம்பெருமானே

முத்தனையானேமணியனையானே
முதல்வனேமுறையோவென்
றெத்தனையானும்யான்றொடர்ந்துன்னை
யினிப்பிரிந்தாற்றேனே.

(ப - ரை.) பத்து இலனேனும் - யாதொரு பற்றிலேனாயினும், பணிந்திலனேனும் - தேவரீரைத் தொழுதிலேனாயினும், முன் - முந்தி, உயர்ந்த - யாவராலுமதிக்கக்கூடாத, பைங்கழல் - அழகிய திருவடியை, காண-காணும் பொருட்டு, பித்திலனேனும் - பித்துடையனேனும், பிதத்திலனேனும் - கண்டபடியுளர்கிலனேனும், பிறப்பு அறுப்பாய் - இனிவரும் என் பிறவித்தளையைச் சேதிப்பாயாக, எம் பெருமானே - எம் பெரியோனே! முத்து அனையானே - முத்தை நிகர்த்தவனே! மணி அனையானே-அழகை நிகர்த்தவனே! முதல்வனே - எல்லா தேவர்கட்கும் முதன்மையானவனே! முறையோ என்று - முறையோவென்று, எத்தனையானும் - எவ்வளவானும், யான் தொடர்ந்து - நான் பின்பற்றி, உன்னை - தேவரீரை, இனி பிரிந்து ஆற்றேன்-இனியொரு காலமும் (உன்னைப்) பிரிந்து சகித்துவாழேன், எ - று.

(க - ரை.) எம்பெருமானே! நான் உன்னைப் பற்றிலேனாயினும், பணிந்திலேனாயினும், உன் திருவடியைக் காணவேண்டுமென்னும் பித்திலேனாயினும், உன் புகழையே பிதற்றித் திரிகிலேனாயினும், அடியேனது பிறவியையொழித்தருளவேண்டும், யான் சிறிது நேரமாயினும் உன்னை விட்டுப் பிரிந்திருக்க லாற்றேன், என்பது.

(வி - ரை.) பத்து - பற்று. பிதற்றல் - பலகாற் பேசல். வெண்ணீற்றை யணிந்திருக்கையால் "முத்தனையானே" என்றும், செந்நிறமேனியனாகையால் "மணியனையானே" என்றும் கூறினர். (ச)

காணுமதொழிந்தேனின்றிருப்பாதங்
கண்டுகண்களிகூரப்
பேணுமதொழிந்தேன்பிதற்றுமதொழிந்தேன்
பின்னையெம்பெருமானே
தாணுவேயழிந்தேனின்னினைந்துருகுந்
தன்மையென்புன்மைகளாற்
காணுமதொழிந்தேனீயினிவரினுங்
காணவுநாணுவனே.

(ப - ரை.) நின் - தேவரீரது, திரு - அழகிய, பாதம் - அடியை, காணுமது - கண்டுகொள்வதை, ஒழிந்தேன் - நினைப்பற்று ஒழித்தேன், கண்டு - உனது கோலத்தைப்பார்த்து, கண்களிகூர - கண்கள் சந்தோஷிப்பிக்க,

பேணுமது - விரும்புவதை, ஒழிந்தேன் - விலக்கினேன், பிதற்றுமது - பலவாறு பிதற்றுவதை, ஒழிந்தேன் - ஒழித்தேன், பின்னை - இதுவன்றி, எம்பெருமானே - என் சிவபெருமானே ! தாணுவே - (யாதொன்றுக்கும்) சலித்தலில்லாத தயாபரமூர்த்தியே ! நின் - தேவரீரை, நினைந்து - எண்ணி, உருகும் - மெழுகுபோலுருகுகின்ற தன்மையை, அழிந்தேன் - ஒழித்தேன், என்- என்னுடைய, புன்மைகளால் - புன்மைகளாலே, காணுமது - கண்டுகொள்வதை, ஒழிந்தேன் - ஒழித்தேன், நீ - தேவரீரே, இனிவரினும் - இனிமேல்வந்தாலும், காணவும் - காண்பதற்கும், நாணுவன் - தேவரீரைக்காணக்கூசுவேன், எ - று.

(க - ரை.) எனது சிவபெருமானே ! உன்திருவடியைக் காண்கிலேன், அப்படிக்குக் கண்டும் கண்களிகூர விரும்பேன், பிதற்றலேன், உன்னை நினைந்துருகுந்தன்மையுமில்லேன், இனி நீயே என்னிடம் வலிய வந்தாலும் தொண்டனாகிய அடியேன் உன்னைக்காணக்கூசுவேன், என்பது.

(வி - ரை.) களித்தல் - ஆசைப்படல். பேணுதல்-விரும்புதல். தாணு- யாதொன்றுக்கும் சலித்தலில்லாத சிவபெருமான். நாணுதல் - வெட்கமடைதல். காணல் - பார்த்தல். (ரு)

பாற்றிருநீற்றெம்பரமனைப்பரங்
கருணையோடுமெதிர்ந்து
தோற்றிமெய்யடியார்க்கருட்டுறையளிக்குஞ்
சோதியைநீதியிலேன்
போற்றியென்னமுதேயெனநினைந்தேத்திப்
புகழ்ந்தழைத்தலறியென்னுள்ளே
யாற்றுவனாகவுடையவனேயெனை
யாவவென்றருளாயே.

(ப - ரை.) பால் - வெளுத்த, திரு - அழகிய, நீற்று-விபூதியையணிந்த, எம் - எமது, பரமனை - சிவபிரானை, பரம் - மேலதாகிய, கருணையோடும்-கிருபையோடும், எதிர்ந்து - எதிரே, தோற்றி - காணப்பட்டு, மெய் - நன்னெறியினுண்மையையுடைய, அடியார்க்கு - தொண்டர்களுக்கு, அருள் துறை-அருட்டுறையை, அளிக்கும் - கிருபைசெய்கின்ற, சோதியை - ஒளியை, நீதி இலேன் - யாதொரு நீதியறியாதவநான், போற்றி - துதிசெய்து, என் - அடியேனுடைய, அமுதே-அமிர்தமே, என-என்று சொல்லி, நினைந்து - எண்ணி, எத்தி- துதிசெய்து, புகழ்ந்து - வாயாரப்புகழ்ந்து, அழைத்து - கூவி, அலறி- எங்கும் அலறி, என் - அடியேனுடைய, உள்ளே - மனத்தினிடத்தே, ஆற்றுவன் ஆக - ஆற்றப்படுவேனாக, உடையவனே-யாவும் உடையவனே ! என்னை- அடியேனை, ஆவ - அந்தோ! என்று - என்று சொல்லி, அருளாய் - மனமிரங்கி கிருபைசெய்வாயாக, எ - று.

(க - ரை.) திருவெண்ணீற்றை யணியுமேலோனாகிய சிவபெருமானும், அடியார்க்கெதிரே தோன்றி யருள்செய்வோனுமாகிய தேவரீரை வணங்கி வாழ்த்திப் புகழ்ந்தழைத்தலையறிந்தும், என்னுள்ளே தணிந்து குடிபுகுந்திருப் போனுமாகிய சிவபெருமான், அந்தோ! என்று மனமிரங்கி கிருபைசெய்ய வேண்டும், என்பது.

(வி - ரை.) பால் - வெண்மை. நீறு - விபூதி. ஆற்றுதல் - சகிக்குதல். ஆவ - இரக்கக்குறிப்பு. (சு)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

---

# யாத்திரைப்பத்து.

அநுபவாதீதமுரைத்தல்.

[அநுபவாதீதமுறைத்தல் என்பது அநுபவத்திலதீதப்பட்டுப் போனதைத் தெரிவித்தல்.]

---

திருச்சிற்றம்பலம்.

---

ஆசிரியவிருத்தம்.

பூவார்சென்னிமன்னனெம்புயங்கப்பெருமான்சிறியோமை
யோவாதுள்ளங்கலந்துணர்வாயுருக்கும்வெள்ளக்கருணையினா
லாவாவென்னப்பட்டன்பாய்யாட்பட்டீர்வந்தொருப்படுமின்
போவோங்காலம்வந்ததுகாண்பொய்விட்டுடையான்கழல்புகவே.

(ப - ரை.) பூ - (கொன்றை) மலர், ஆர் - பொருந்திய, சென்னி - சிரத்தையுடைய, மன்னன் - யாவருக்கும் தலைவன், எம் - அடியேனது, புயங்கப் பெருமான் - ஓர் வித வர்ப்புதக்கூத்தையுடைய சிவபெருமான், சிறியோமை - சிறியவர்களாகிய எங்களை, ஓவாது - (என்றும்) நீங்சாமல், உள்ளம் - மனத்தினிடத்தே, கலந்து - சேர்ந்து, உணர்வு ஆய் - அறிவுருவாகி, உருக்கும் - உருகச்செய்கின்ற, வெள்ளக்கருணையினால் - கருணைப்பெருக்கால், ஆவா - அந்

தோ ! என்னப்பட்டு - என்று சொல்லப்பட்டு, அன்பாய் - ஆசையாகி, ஆட்பட்டீர் - தொண்டுபட்டீர், வந்து - (அப்பரமசிவன் பக்கல்) வந்து, ஒருப்படுமின் - ஒருப்பட்டுங்கள், பொய் விட்டு - அழிகின்ற தேகத்தைவிட்டு, உடையான் - யாவும் உடைய சிவபெருமானது, கழல் - திருவடியை, புக - சேர்ந்துவாழ, காலம் - நற்சமயம், வந்தது - நேர்ந்தது, போவோம் - யாவரும் செல்லுவோம், எ - று.

(க - ரை.) மணம் வீசாநின்ற கொன்றை மலரையணிந்த நடராஜப்பெருமான் சிறியோங்களை யென்றும் நீங்காதுள்ளத்திற் கலந்து அறிவுருவாகி மனத்தை உருகச்செய்கின்ற பெருங்கருணையினால் ஐயோ ! என்றிரங்கி அருளப்பட்டு, அன்போடு அப்பரமசிவனுக்குத் தொண்டுபட்டவர்களே ? இப்பொய்யுடலைவிட்டு யாவுமுடைய இறைவனது திருவடியை அடையுங்காலம் சமீபித்தது, ஆகையால் நீங்களெல்லீரும் ஆவலுடன் வந்து வழிப்பட யாவரும் வாருங்கள் போவோம், என்பது.

(வி - ரை.) பூ - என்றது இங்கு சிவபெருமானுக்குகந்த கொன்றைமலரைக்குறித்து. புயங்கம் - ஓர்வித நடனம். (இத்திரு நடனத்தையே யுடையவனாதலால் இறைவனுக்குப் "புயங்கப் பெருமானென்னும்" திருநாமம்வந்தது. இதன்றி புயங்கம் - பாம்பு, இப்பாம்பையும் திருவாபரணமாகத்தரித்திருப்பவனாகையால் இப்பெயர் வந்ததெனினு மொக்கும். ஆவா - இரக்கக்குறிப்பு. பொய்விட்டு - அழியும் உடம்பையொழித்து. காலம் - நாள். (க)

புகவேவேண்டாபுலன்களினீர்புயங்கப்பெருமான்பூங்கழல்கண்
மிகவேநினைமின்மிக்கவெல்லாம்வேண்டாபோகவிடுமின்க
ணகவேஞாலத்துள்புகுந்துநாயேயனையநமையாண்ட
தகவேயுடையான்றனைச்சாரத்தளராதிருப்பார்தாந்தாமே.

(ப - ரை.) நக - (அடியார்கள்) சிரிக்க, ஞாலத்துள் - இப்பூலோகத்தின்கண்ணே, புகுந்து - கைலையங்கிரியைவிட்டெழுந்தருளி) வந்து, நாயே அனைய - நாயினுங்கடையனேனை நிகர்த்த, நம்மை - தொழும்பனேனாகிய) அடியேனை, ஆண்ட - பாசபந்தத்தில் சிக்குண்டுழலாமல் தடுத்தாண்ட, தகவு உடையான்றனை - மேம்பாட்டினையுடையவனாகிய சிவபெருமானை, சார - (என்றென்றுங்கிட்டி) சேர, தளராதிருப்பீர் - மனந்தளர்ச்சியடையாமல் முயன்றிருப்பீர்கள், நீர் - நீங்கள்யாவரும், புலன்களின் - சப்தாதிகளாகிய பஞ்சேந்திரியங்களில், புக - பேராசை கொண்டு நுழைய, வேண்டா - வேண்டுவதில்லை, புயங்கம் - ஓர்வித திருநடனத்தையுடைய, பெருமான் - சிவபெருமானது, பூ - தாமரைமலர்போன்ற, கழல்கள் - யாவராலுங் காணொணாத்திருவடிகளை, மிக - மென்மேலும் உறுதியாக, நினைமின் - (வேறொருசிந்தனையிலால்) மகிழினையுங்கள், மிக்க - மிகுதியாக, எல்லாம் - மற்றைய யாவத்துப்பொரு

ள்களையும், வேண்டா - இச்சியாமல், போக - பற்றற, விடுமின் - விட்டுவிடுங்கள், எ - று.

(க-ரை.) தொழும்பர்கள் சிரிக்க கயிலையைவிட்டு இப்பூலோகத்திலெழுந்தருளிவந்து நாயினுங்கடையனேனாகிய அடியேனை மாயவலையிற் சிக்குண்டுழலாவண்ணம் தடுத்துத் தனதாளாக்கிக்கொண்ட சிவபெருமானைச்சேர விரும்புபவர்களே ! நீங்கள் யாவரும் சப்தாதிகளின் ஆசையிற்புக இச்சை கொள்ளவேண்டாம், (எதை விரும்பவேண்டுமெனில்?) புயங்கப்பெருமானுடைய திருவடியையே யடைய விரும்புங்கள், மற்று யாவத் பொருள்களையும் பற்றற விட்டு விடுங்கள், என்பது.

(வி - ரை.) ஞாலம் - பூமி. எல்லாப்பொருள்களைத்தக்கபடியுடையவன் சிவபெருமானகையால், இங்கு "தகவேயுடையான்" என்று கூறினர். புலன்கள் - பஞ்சேந்திரியங்கள், (அவை சப்தாதிகள்.) நகுதல் - சிரித்தல், தகவு - தகுதி, (கிருபை.) பூ - இங்கு தாமரைமலரைக்குறித்து. நினைத்தல் - எண்ணுதல். (உ)

தாமேதமக்குச்சுற்றமுந்தாமேதமக்குவிதிவகையும்
யாமாரெமதார்பாசமாரென்னமாயமிவைபோகக்
கோமான்பண்டைத்தொண்டரொடுமவன்றன்குறிப்பேகுறிக்கொண்டு
போமாறமைமின்பொய்நீக்கிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே.

(ப - ரை) தமக்கு - (பரமசிவனாகிய தமக்கு, சுற்றமும் - உறவும், தாமே தாமே - தனக்குத்தாமே, தமக்கு - தமக்கு, விதிவகையும் - சகலவிதி முறையும், தாமே - (சிவபெருமானாகிய) தாமே ஒருவராவர், (அவ்வாறிருக்க) யாம் ஆர் - நாம் யார் ? எமது ஆர் - எமது சொந்த மென்பர் ஆர் ? பாசம் ஆர் - பாச சம்பந்தமுடையவர்யார் ? என்ன மாயம்-ஈதென்ன பிரபஞ்ச மாய மாயிரானின்றது ! இவைபோக- இவைகள்யாவும் போனாற் போகட்டும், கோமான் - இறைவனாகிய சிவபெருமானது, பண்டை - புராதன, தொண்டரொடும் - (பணிசெய்யும்) தொழும்பரோடும், அவன் தன் - (அப்பேர்க்கொற்ற) சிவபெருமானது, குறிப்பே குறிக்கொண்டு - திருவுள்ளக்குறிப்புகளையே உண்மைப் பொருளாகக் கடைப்பிடித்து, பொய் - வீணேயழியும் உடம்பை, நீக்கி - விடுதலைசெய்து, புயங்கன் - ஓர்வித திருநடனத்தையுடைய நடராஜப்பெருமான், ஆள்வான் - தொண்டனாகிய அடியேனை ஆட்கொள்பவன், (அவனது) பொன் அடிக்கே - பொன்னினும் மிக்கப்பிரகாசம் போன்ற திருவடியின்கண்ணே, போம் ஆறு - சென்று அடையும் வண்ணம், அமைமின் - அமையுங்கள், எ - று.

(க - ரை.) நாயினுங்கடையேனாகிய அடியேனுக்கு உறவு முதலிய எல்லா சம்பந்தமும் சிவபெருமானே யாவர், (அவ்வாறிருக்க) யாம் ஆர் !

எமது ஆர் ! பாசமென்பது ஆர் ! இவைகளெல்லாம் என்ன விபரீதமாயம் !!! (இவையும்போக) இறைவனாகிய பரமசிவனது பழய தொண்டரோடும் அவனது திருவுளக்குறிப்பையே யுண்மைப் பொருளாகக்கொண்டு, வீணேபாழ்படும் உடம்பை விட்டுப் புயங்கப்பெருமான் பொன்போன்ற திருவடியை யடையப்போகும்படி யமையுங்கள், என்பது.

(வி - ரை.) தமக்கு என்றது எமக்கு என்று பொருள். தாமே என்றது சிவபெருமானாகிய இறைவர் தாமே என்று பொருள். பொய் - இங்கு வீணே யழியும் உடம்பைக்குறித்து. (௩)

அடியாரானீரெல்லீருமகலவிடுமின் விளையாட்டைக்
கடிசேரடியேவந்தடைந்துகடைக்கொண்டிருமின் றிருக்குறிப்பைச்
செடிசேருடலைச்செலநீக்கிச்சிவலோகத்தேநமைவைப்பான்
பொடிசேர்மேனிப்புயங்கன் றன் பூவார்கழற்கேபுகவிடுமே.

(ப - ரை.) அடியார் ஆனீர் - (சிவபெருமானுக்குத்) தொண்டர்களான நீங்கள், எல்லீரும் - யாவரும், விளையாட்டை - வீணேவாய் பேசி விளையாட்டுச்செய்கைகளை, அகல விடு மின் - கண்டிப்பாய் விட்டுவிடுங்கள், கடிசேர் - வாசனைபொருந்திய, அடியே - (இருவராலும் இன்னுமற்றவராலும் எளிதிற் காணப்படாத) இறைவனது திருவடிகளையே, வந்து-கிட்டிவந்து, அடைந்து- (என்றும் நீங்காமல்) சேர்ந்து, திருக்குறிப்பை - அவனது எண்ணத்தை, கடைக்கொண்டு - உறுதியாகப்பற்றிக்கொண்டு, இரு மின் - வீற்றிருங்கள், (இவ்வாறாக வீற்றிருப்பீராயின்) பொடி சேர் - திருவெண்ணீறு பூசப்பட்ட, மேனி - அழகிய மேனியை யுடைய, புயங்கன் - புயங்க நடனத்தையுடைய நடராஜப்பெருமான், செடி சேர் - பாபம் சேர்ந்த, உடலை - திரேகத்தை, செல்ல - போகும்படி, நீக்கி - அகற்றி, சிவலோகத்தே - சிவலோகத்தின்கண்ணே, நம்மை - எம்மை, வைப்பான் - நான்காம்பதவியில் இருத்துவான், (இதன்றியில்) தன் - தன்னுடைய, பூ ஆர் - தாமரைமலர்போலுமுடைய, கழற்கே, திருவடியின்கண்ணே, புகவிடும் - புகும்படிசெய்வான், எ - று.

(க - ரை.) சிவனடியாராகிய நீங்கள் எல்லோரும் பொய்ச்செய்கைகளை, நீக்கி பெருமானாகிய இறைவனது தாமரைமலரால் சாற்றப்பட்ட திருவடிகளையே வந்தடைந்து உறுதியாய் விடாமற் பற்றியிருங்கள், அவ்வாறு பற்றினால், அவன் இனிவரும் பிறப்பிறப்பில்லாமற் செய்து சிவலோகத்தில் தனது திருவடி நீழலின்கண்ணே புகும்படிச் செய்வான், என்பது.

(வி - ரை.) விளையாட்டு - இங்ஙனம் பொய் என்னும் பொருளைத் தந்தது. அன்பு மிகுந்த தொண்டரிடு மலர்களின் மனந்தங்கியிருத்தலால், சிவபெருமானது திருவடியைக் "கடிசேரடி" என்று கூறினர். நீக்கல் - அகற்றல். கடைக்கொண்டு - கடைப்பிடித்து. (௪)

விடுமின்வெகுளிவேட்கைநோய்மிகவோர்காலமினியில்லை
யுடையானடிக்கீழ்ப்பெருஞ்சாத்தோடுடன்போவதற்கேயொருப்படுமி
னடைவோநாம்போய்ச்சிவபுரத்துளணியார்கதவதடையாமே
புடைபட்டுருகிப்போற்றுவோம்புயங்கனாள்வான்புகழ்களையே.

(ப - ரை.) வெகுளி - கோவத்தையும், வேட்கைநோய் - ஆசைநோயை யும், விடுமின் - விட்டுவிடுங்கள், மிகவு ஓர் - மிகுதியாகிய ஒரு, காலம் - நமக்குக்காலம், இனி இல்லை - இனிமேல்கிடையாது, உடையான்-யாவும் உடைய சிவபெருமானது, அடிக்கீழ்-திருவடியின்கீழே, பெருஞ்சாத்தோடு - பெருந் திருவிழாவோடு, உடன்-சேர்ந்து, போவதற்கே-செல்வதற்கே, ஒருப்படுமின்-ஒன்று சேருங்கள், நாம் - யாம், போய் - சென்று, சிவபுரத்துள் - சிவலோகத்துள், அடைவோம்-அடைந்துவாழ்வோம், அணி-அழகு, ஆர் - பொருந்திய, கதவு - கதவை, அடையாமே - அடைக்காமல், புடைபட்டு - அக்கதவின்பக்கலிருந்து, உருகி - அப்பரமசிவனை நினைந்து மனமுருகி, புகழ்களையே-கீர்த்தியையே, போற்றுவோம் - எந்நாளுந் துதிசெய்வோம், (அவ்வாறு துதிசெய்வோமானால்) புயங்கன் - புயங்கப்பெருமான், ஆள்வான் - நம் யாவரையும் அடிமை கொண்டாள்வான், எ - று

(க - ரை.) கோவம் மூவாசை யென்பவற்றைச் சற்றேனும் நினையாமல் விடுங்கள், அவ்வாறு யாவையும் விடுவதற்குச் சமயம் இதுவேயன்றி வேறொரு சமயங்கிட்டாது, எல்லாப்பொருளையும் வைத்திருப்பவனாகிய சிவபெருமானது திருவடிக்கீழ்ப்போயிருத்தற்கே ஒருப்படுங்கள், சிவலோகத்துக்கதவு திறக்கப்பட்டிருக்கும்போதே, நாம் அங்ஙனேசென்று இறைவன் பக்கத்திலிருந்து மனமுருகி அவனது பெரும்புகழைப் பாக்களாற் பாடித்துதிப்போம், என்பது.

(வி - ரை.) வெகுளி - வெறுப்பு, (கோபம்.) வேட்கை - விருப்பு, இவைகள் உயிர்கட்குத் துன்பத்தைத் தருதற்கேது வாகையால் இவற்றை "நோய்" என்று கூறினர், சாத்து - திருவிழா. புயங்கன் - திருநடனத்திற்றேர்ச்சியடைந்த நடராஜப்பெருமானைக்குறித்து. (ரு)

புகழ்மின்றொழுமின்பூப்புனைமின்புயங்கன்றாளேபுந்திவைத்திட்
டிகழ்மினெல்லாவல்லலையுமினியோரிடையூறடையாமே
திகழுஞ்சீரார்சிவபுரத்துச்சென்றுசிவன்றாள்வணங்கிநா
நிகழுமடியார்முன்சென்றுநெஞ்சமுருகிநிற்போமே.

(ப - ரை.) புயங்கன் - ஓர்விதத் திருநடனத்தையுடைய பெருமானது, தாளே - [யாவராலுங்காணப்படாத] திருவடியையே, புகழ்மின் - [வாயாரப்] புகழுங்கள், தொழுமின் - [தலைவணங்கி கைகூப்பித்] தொழுங்கள், [இத

ன்றி] பூ - மணம்பொருந்திய கொன்றைமலர்களால், புனைமின் - அலங்கரியுங்கள், புந்தி - [அவரவர்] மனதில், வைத்திட்டு - [அப்பரமசிவனை] வைத்து, எல்லா - யாவத்து, அல்லலையும் - துன்பங்களையும், இகழ்மின் - இகழ்ந்துதள்ளுங்கள், [அவ்வாறு நீக்கில்] இனி - இனிமேல், ஓர் - ஒரு, இடையூறு - [பல்வகைத] இடையூறுகளும், அடையாமே - [ஒருபோதும்] அணுகாமல், திகழும் - பிரகாசிக்கின்ற, சீர் - பெருமை, ஆர் - வாய்ந்த, சிவபுரத்து - சிவலோகத்தில், சென்று - [யாவரும்] போய், சிவன்-சிவபெருமான், தாள் - எளிதிற்காணுந்திருவடியை, வணங்கி-தொழுது, நாம்-யாவரும், நிகழும் - அச்சிவலோகத்தில் என்றும் வாழாநின்ற, அடியார் - தொழும்பர்கள், முன்-[அவர்கள்] முன்பாக, சென்று - போயிருந்து, நெஞ்சம் - [நமது] மனம், உருகி - உருகும்படி, நிற்போம் - அங்ஙனேபோற்றி நிற்போம், எ - று.

(க - ரை.) அடியார்களே? புயங்கப் பெருமானது திருவடியையே தொழுது புகழுங்கள், இறைவனுக்குப் போக மலராகிய தாமரைப்புட்பத்தால் அலங்கரியுங்கள், அப்பரமசிவனது திருவுருவை மனதிலிருத்தி யெல்லாத்துன்பங்களையும் பற்றறவொழியுங்கள், [அவ்வாறு ஒழிக்கில்] இனிமேல்யாதொரு துன்பமும் அணுகாவண்ணம் சிவலோகமடைந்து இறைவனது திருவடியை வணங்கி அவனடியார்முன் போய்நின்று மனமுருகி நிற்போம், என்பது.

(வி - ரை.) புயங்கம்-பாம்பு, ஓர்வித திருநடனம், புனைதல்-அலங்காரஞ்செய்தல். புந்தி - இங்குமனத்தைக்குறித்து. அல்லல் - தொல்லை. இகழ்தல்-இங்கு விடுதல், நிகழ்தல் - வாழ்தல், அடியார் என்றது - சிவலோகத்தில் எந்நாளும் இருப்பவர். அங்கு - என்றது சிவலோகத்தைக் குறித்து. (கூ)

நிற்பார்நிற்கநில்லாவுலகினில்லோமினிநாஞ்செல்வோமே
பொற்பாலொப்பாந்திருமேனிப்புயங்கனாள்வான்பொன்னடிக்கே
நிற்பீரெல்லாந்தாழாதேநிற்கும்பரிசேயொருப்படுமின்
பிற்பானின்றுபேழ்கணித்தாற்பெறுதற்கரியன்பெருமானே.

(ப - ரை.) நிற்பார் - நிற்பவர்கள், நிற்க - நிற்க, நில்லா - என்றும் நிலையில்லாத, உலகில் - பூலோகத்தில், நில்லோம்-இருந்துவாழப் பொருந்தோம், [ஆகையால்] இனி - இனிமேல், நாம் - யாம், செல்வோம் - அவ்விடமே எந்நாளுமிருந்து வாழப்போவோம், பொற்பால் - அழகிய திருவெண்ணீறுபூசிய, ஒப்பு ஆம் - [தனக்குத்தானே] ஒப்புமைவாய்ந்த, திருமேனி - அழகிய மேனியையுடைய, புயங்கன் - புயங்கப்பெருமான், ஆள்வான் - யாவரையும் ஆள்பவனது, பொன் - பிரகாசமுள்ள, அடிக்கே-திருவடியினருகே, எல்லாரும்-யாவரும், நிற்பீர் - விருப்புடன் கிட்டிநிற்பீர்கள், தாழாதே-தாழ்மையடையாமல், நிற்கும் - நிற்கின்ற, பரிசே - தன்மைக்கே, ஒப்பிடுமின் - ஒப்புக்கொடுங்கள்,

பின்பால் - பின்பக்கத்தில், நின்று - நின்றிருந்து, பேழ்கணித்தால் - பேதமைத்தன்மையினால் விழித்தால், பெருமான் - சிவபெருமானை, பெறுதற்கு - அடைதற்கு, அரியன் - தெரியப்படாதவன், எ - று.

(க - ரை.) இப்பொய் யுலகத்திலிருந்து வாழவிருப்ப முடையவர்கள் இருக்கட்டும்; இனி யான் ஒருக்காலமுமிருந்து வாழப்பொருந்தேன், அச்சிவலோகத்திலிருந்து எந்நாளும் வாழச்செல்வேன், [ஆனதால்] புயங்கப்பெருமானது திருவடிப்பேற்றுக்கே விருப்பமடைந்து நிற்பவர்களாகியநீங்கள் எல்லோரும் தாமதிக்காமல் வந்து ஒருப்படுங்கள், அவ்வாறு செய்யாமல் பின்னிட்டு நின்று பேயர்களைப்போல் விழித்தால், இறைவன் நாம் காணக்கூடாதவனாயிருப்பான், என்பது.

(வி-ரை.) நில்லாவுலகு - அழியுமுலகு. அழகிய திருவெண்ணீற்றைத்தரித்தத்திருமேனியை "பொற்பாலொப்பாந் திருமேனி" என்று அன்புடன் கூறினார், பேழ்கணித்தல் - யாதும் தோன்றாமல் விழித்தல். (எ)

பெருமான்பேரானந்தத்துப்பிரியாதிருக்கப்பெற்றீர்கா
ளருமாலுற்றுப்பின்னைநீரம்மாவழுங்கியரற்றாதே
திருமாமணிசேர்திருக்கதவந்திறந்தபோதேசிவபுரத்துத்
திருமாலறியாத்திருப்புயங்கன்றிருத்தாள்சென்றுசேர்வோமே.

(ப - ரை.) பெருமான் - சிவபெருமானது, பேர் - மிகு, இன்பத்து - இன்பசுகத்தின்கண், பிரியாது - என்றும் நீங்காமல், இருக்க - இருந்துவாழ, பெற்றீர்கள் - [அப்பேற்றை] அடைந்தீர்கள், அருமால் உற்று - சொல்லுதற்கரிய மயக்கங்கொண்டு, பின்னை - பிறகு, நீர் - எல்லோரும், அழுங்கி - பெருந்துன்பப்பட்டு, அரற்றாதே - தாறுமாறாகப் பிதற்றாமல், திரு - அழகோடு, மா - மகத்தாகிய, மணி - நவமணிகள், சேர் - பொருந்தியிழைக்கப்பட்ட, திருக்கதவம் - [மோக்ஷவீட்டின்] கதவு, திறந்தபோதே - திறந்திருக்கும்போதே, சிவபுரத்து - சிவலோகத்தில், திருமால் - பிறப்பிறப்புள்ள விட்டுணுவுங்கூட, அறியா - [இறைவனது திருவடியை] யறியவொண்ணாத, திருப்புயங்கன் - [யாவராலும் நடிக்கக் கூடாத திருநடனத்தையுடைய] நடராஜனது, திருத்தாள் - அழகியதிருவடியை, சென்று - களிப்புடன்போய், சேர்வோம் - [எந்நாளுமிருந்து வாழ] அடைவோம், எ - று.

(க - ரை.) இறைவனது பேரின்பத்தினின்றும் நீங்காதிருக்கப்பெற்றவர்களே? நீங்கள் யாவரும் அரியமயக்கமடைந்து துன்புற்றரற்றாமல் சிவபுரத்து திருக்கதவு திறந்திருக்கும்போதே யாம் எல்லோரும் சென்று பிறப்பிறப்புடைய திருமாலுந்தேடுதெற்கரிய புயங்கப்பெருமான் திருவடியைச் சேர்வோம், என்பது.

(வி - ரை.) பெறல் - அடைதல். மால் - மயக்கம். அழுங்குதல் - துன்புறுதல். திருமாமணி - மிக்கவழகும் பெருமையுமுள்ள நவமணிகள் தாள் - திருவடி. (அ)

சேரக்கருதிச்சிந்தனையைத்திருந்தவைத்துச்சிந்திமின்
போரிற்பொலியும்வேற்கண்ணாள்பங்கன்புயங்கனருளமுத
மாரப்பருகியாராதவார்வங்கூரவழுந்துவீர்
போரப்புரிமின்சிவன்கழற்கேபொய்யிற்கிடந்துபுரளாதே.

(ப - ரை.) சேர் - சிவபெருமானது திருவடியையே அடைய, கருதி - நினைந்து, சிந்தனையை - மனத்தை, திருந்த - திருந்தும்படி, வைத்து - செய்துவைத்து, சிந்திமின்-நினையுங்கள், போரில் - சண்டைத்தொழிலே, பொலியும் - ஆரவாரிக்கின்ற, வேல்-வேல்போன்ற, கண்ணாள்-திருக்கண்களையுடையவளாகிய உமாதேவியின், பங்கன் - ஓர்பாகன், புயங்கன் - பாம்பைத்தரித்து ஓர்விதத்திருக் கூத்தினையுடையவனாகிய இறைவன், அருள் - பேரருளாகிய, அமுதம்-தேவாமிர்தத்தை, ஆர் பருகி - மிகப்பருகி, ஆராத - தெவிட்டாத, ஆர்வம் - ஆசை, கூர - மென்மேலும் பெருக, அழுந்துவீர் - அவ்வித ஆசையென்னு கடலில் மூழ்குவீர்கள், பொய்யில் - அழியுமுலகத்தில், கிடந்து - வாழ்ந்திருந்து, புரளாது - உழலாமல், சிவன் - பரமசிவனது, கழற்கே - திருவடிக்கண்ணே, போர - மிகவும், புரிமின் - அன்புடன் தொண்டு செய்யுங்கள், எ - று.

(க - ரை.) சிவபெருமானது திருவடியையே அடையக்கருதி, மனத்தைத்திருத்திக்கொள்ளுங்கள், அப்பேர்க்கொற்றவனது அருளாகிய தேவாமிர்தத்தைப்பருகி, இப்பாழுலகிற்கிடந்துழலாமல் அவனது திவ்வியபொற்பாதத்துக்கே அன்புடன் தொண்டுசெய்யுங்கள், என்பது.

(வி - ரை.) கருதல் - எண்ணுதல். உமாதேவியின்கண்கள் வேலைப்போலிருப்பதால், "வேற்கண்ணாள்" என்று கூறினார். ஆர்தல் - நிறைதல், தெவிட்டல். ஆர்வம் - அன்பு, ஆசை. கூர்தல் - மிகுதல், போர - மேன்மேலும். புரிதல் - இங்குதொண்டு செயவிரும்புதல், (அன்புசெய்தல்). (கூ)

புரள்வார்தொழுவார்புகழ்வாராயின்றேவந்தாளாகாதீர்
மருள்வீர்பின்னைமதிப்பாரார்மதியுட்கலங்கிமயங்குவீர்
தெருள்வீராகிலிதுசெய்மின்சிவலோகக்கோன்றிருப்புயங்க
னருளார்பெறுவாரகலிடத்தேயந்தோவந்தோவந்தோவே.

(ப - ரை.) புரள்வார் - (புவிமீதுவீழ்ந்து) புரளுவார்கள், தொழுவார் - (குலைவணங்கி கைகூப்பித்) தொழுவார்கள், புகழ்வார் - இறைவனது குணதி

சயங்களைப்புகழ்ந்துபேசுவார்கள், ஆய் - ஆகி - இன்றே - இத்தினமே, வந்து - கிட்டி வந்து, ஆள் - அடிமை ஆளாக, ஆகாதீர் - ஆகாதவர்களே? மருள்வீர் - வீணே மதிமயக்கங்கொண்டு அலைவீர்கள், பின்னை - பிறகு, மதிப்பார் - உங்களை மதிப்பவர்கள், ஆர் - யாரோ! மதி உள் - மனத்தினுள்ளே, கலங்கி - (ஒன்றேனுந் தெரியாமற்) கலக்கமடைந்து, மயங்குவீர் - வீணுக்கேமயங்குவீர்கள், தெருள்வீர் - (அம்மயக்கம் நிவர்த்தியாகும்படித்) தெளிந்து, ஆகில் - ஆவீர்களானல், இது - இதனை, செய்மின் - (நற்கதியடையச்) செய்யுங்கள். [ஏனெனிலோ] சிவலோகக்கோன் - சிவபுரத்துக்குத் தலைவனும், திரு - அழகிய, புயங்கன் - சர்ப்பாபரணத்தையுடையவனுமாகிய நடராஜப்பெருமானது, அருள் - கிருபையை, அகல் இடத்து - அகன்ற இப்பூலோகத்தின் கண்ணே, ஆர்பெறுவார் - யாவர் அடைவார், (யாவருமடையார்) அந்தோ அந்தோ அந்தோ - ஆச்சரியம்! ஆச்சரியம்! ஆச்சரியம்! எ - று.

(க - ரை.) ஸ்மரணை தப்பிப்புரண்டும், தொழுதும், இறைவனது நற்குணத்தைப் புகழ்ந்தும், இத்தினமே கிட்டிவந்து ஆளாகாதவர்களே? பிறகு வீணில் மயங்குவீர்கள், உங்களை மதிப்பவர்கள் எங்குமொருவருமில்லை, அவ்வாறிலாமல் நீங்க ளம்மயக்கத்தினின்று தெளிவீர்களாகில் இதனைச்செய்யுங்கள், திருப்புயங்கப் பெருமானது அருளைப்பெறுவோர் இப்பூலோகத்திலொருவருமில்லை, அந்தோ!!! என்பது.

(வி - ரை.) இன்று - இத்தினம். ஆள் - இங்கு அடிமையாள். மருளல் - மயங்கல். தெருளல் - தெளிதல். அகலிடம் - இங்கு ஒருசொல்லாகக் கொண்டு பூமி என்றுரைத்தலும் பொருந்தும். (கo)

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# திருப்படையெழுச்சி.

## பிரபஞ்சப்போர்.

[பிரபஞ்சப்போர் என்பது மலவிளைவற்றது].

திருச்சிற்றம்பலம்.

### கலிவிருத்தம்.

ஞானவாளேந்துமையர்நாதப்பறையறைமின்
மானமாவேறுமையர்மதிவெண்குடைகவிமி
ஞனநீற்றுக்கவசமடையப்புகுமின்கள்
வானவூர்கொள்வோநாமாயப்படைவாராமே.

(ப - ரை.) ஞானவாள் - ஞானத்தைத்தக்கட்டி தராநின்ற வாட்படையை, ஏந்தும் - (கையில்) தாங்காநின்ற, ஐயர் - ஐயனாகிய சிவபெருமானது, நாதப்பறை - நாதமாகிய மேளத்தை, அறைமின் - கொட்டுங்கள், மானம் - பெருமைதங்கிய, மா - யானைமீது, ஏறும் - அரோகணித்துப் பவனிவருகின்ற, ஐயர் - ஐயனான சிவபெருமானது, மதி - பூர்ணச்சந்திரன்போன்ற, வெண்குடை - வெண்பட்டுக்கொடையை, கவிமின் - கவியுங்கள், ஆன - என்றும் நன்மையைத்தராநின்ற, நீற்று - திருவெண்ணீற்று, கவசம் - கவசத்தில், அடைய - சேர, புகுமின்கள் - நுழைந்து கொள்ளுங்கள், (இம்மார்க்கத்தை யனுசரிப்பீராயின்) நாம் - யாம், மாயப்படை - மாயச்சேனைகள், வாராமே - [என்றுமே] வாராதபடி, வானவூர் - மோட்சவீட்டை, கொள்வோம் - யாதொரு தடையிலாமலடைவோம், எ - று.

(க - ரை.) ஞானவாளைக்கரத்திற் றாங்குகின்ற இறைவனாகிய பரமசிவ [illegible] பறையைக் கொட்டுங்கள், யானையேறிபவனிவருபவனாகிய சிவ [illegible] (என்றி) திருவெண்ணீற் [illegible] ற்புகுந்து கொள்ளுங்கள், இவ்வாறுகசம்செயதால, எந்நாளு

மாயப்படையானது நம்மை யணுகாமல் முத்திவீட்டைக் கைக்கொள்வோம், என்பது.

(வி - ரை.) ஐயர் இரண்டையும் அண்மை விளிகளாக்கினும் பொருந்தும். இப்பொருட்டு எந்தும் எறும் என்பவற்றிற்கு எந்துங்கள் எறுங்கள் என முன்னிலை யேவல்வினை முற்றாகப் பொருளுரைத்துக்கொள்க. நாதம் - ஓசை. வானவூர் - மோட்சவீடு. (க)

தொண்டர்காடூசிசெல்லீர்பத்தர்காள்சூழப்போகி
ரொண்டிறல்யோகிகளேபேரணியுந்தீர்க
டிண்டிறற்சித்தர்களேகடைக்கூழைசென்மின்க
ளண்டர்நாடாள்வோநாமல்லற்படைவாராமே.

(ப - ரை.) தொண்டர்காள் - தொழும்பர்களே? தூசி - கொடிப்படையாக, செல்லீர் - போங்கள், பத்தர்காள் - சிவபத்தர்களே? சூழப்போகிர் - (இறைவனைச்) சேர்ந்துபோங்கள், ஒண் - ஒளிபொருந்தி, திறல் - வல்லமையமைந்த, யோகிகளே-யோகீஸ்வரர்களே? பேரணி - பெரும்படைவகுப்பாக, உந்தீர்கள் - நடவுங்கள், திண்திறல் - பெருவலியமைந்த, சித்தர்களே - சித்தர்குழாங்களே? கடைக்கூழை - பின்புற அணியாகவும், செல்மின்கள் - செல்லுங்கள், (இவ்வாறு செய்வீரேல்) நாம் - யாம், அல்லல் - பலவிதத் துன்பமாகிய, படை - சேனைகள், வாராமே - இனிவாராமல் ஜயித்து, அண்டர்நாடு - மோட்ச உலகத்தை, ஆள்வோம் - என்றென்றும் ஆளப்பெறுவோம், எ - று.

(க - ரை.) தொண்டர்களே? நீங்களெல்லோரும் கொடிப்படையாய்ச் செல்லுங்கள், பத்தர்களே? நீங்கள் எல்லோரும் இறைவனைச் சூழச்செல்லுங்கள், மாயோகிகளே? நீங்கள் எல்லோரும்பெரும்படைவகுப்பாகச்செல்லுங்கள், சித்தர்குழாங்களே? நீங்கள் எல்லோரும் பின்னணியாய்ச் செல்லுங்கள், (இவ்வாறு செய்வீர்களாகில்) துன்பத்தைத் தருகின்ற மாயப்படையாவும் நம்மையணுகாமல் வென்று முத்தியுலகையாளப் பெறுவோம், என்பது.

(வி - ரை.) திறல் - வலிமை. தூசி - முற்படை. கடைக்கூழை - பின்னணி. அண்டர் நாடு - மோட்சவீடு. (உ)

திருச்சிற்றம்பலம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவெண்பா.

அணைந்தோர் தன்மை.

[அணைந்தோர்தன்மை என்பது பரிசவேதிபோல என்றது.]

திருச்சிற்றம்பலம்.

நேரிசைவெண்பா.

வெய்யவினையிரண்டும்வெந்தகலமெய்யுருகிப்
பொய்யும்பொடியாகாதென்செய்கேன்—செய்ய
திருவார்பெருந்துறையான்றேனுந்துசெந்தீ
மருவாதிருந்தேன்மனத்து.

(ப - ரை.) செய்ய - செம்மையாக, திரு-செல்வம், ஆர் - பொருந்திய, பெருந்துறையான் - திருப்பெருந்துறையெனும் பதியையுடையவன், தேன் - மதுரம், உந்து - சொரிகின்ற, செந்தீ - செந்தீயை நிகர்க்கத் திருமேனியை, மருவாது - (நலமடையப்) பொருந்தாமல், இருந்தேன் - (வீணேகாலங்கழித்) திருந்தேன், (அவ்வாறிருந்தமையால்) மனது - மனத்தில், வெய்ய - கொடிதாகிய, வினை இரண்டும் - இரண்டுவினைகளும், வெந்து அகல-வெந்து ஒழிய, மெய் - தேகம், உருகி - உருகி, பொய்யும் - பொய்ச்செய்கைகள், பொடியாகாது-நீறாகாது, என் செய்கேன் - யாது செய்வேன், எ - று.

(க - ரை) திருப்பெருந்துறைப்பதியை யாள்பவனாகிய இறைவனது திருமேனியை நினையாமல் என் மனத்தில் பொல்லாவினைகளிரண்டும் வெந்து ஒழிய, உடலுருகிப் பொய் நடைகளும் நீறாகாவிடில், இனி யென் செய்யக்கடவேன், என்பது.

(வி - ரை.) செய்ய - இங்குசெம்மை திரு - செல்வம் எனினும்பொருந்தும். செந்தீ - செந்தீயை ஒற்றத்திருமேனி. தேனுந்து செந்தீ - தேன்பொழிகின்ற செந்தீயெனினும் பொருந்தும். வினை இரண்டும் பிறத்தலுக்கேதுவாயிருத்தலால் "வெய்யவினை யிரண்டும்" என்று கூறினார். பொடி - நீறு. (௧)

ஆர்க்கோவரற்றுகோவாடுகோபாடுகோ
பார்க்கோபரம்பரனேயென்செய்கேன்—தீர்ப்பரிய
வானந்தமாலேற்றுமத்தன்பெருந்துறையான்
றானென்பாராரொருவர்தாழ்ந்து.

(ப - ரை.) தாழ்ந்து - வணங்கி, தீர்ப்பு - நீக்குதற்கு, அரிய - அரிதாகிய, ஆநந்தம் பேரின்பத்தைத் தருகின்ற, மால் - மயக்கத்தை, ஏற்றும்-உண்டாக்குகின்ற, அத்தன் - அடியேனது தந்தை, பெருந்துறையான் - திருப்பெருந்துறைப்பதியை யுடைய சிவபெருமான், என்பார் - எனச்சொல்லப்படுவோர்கள், ஆர்ஒருவர் - யாரொருவர் இருக்கிறார்கள், (அந்தோ!) ஒருவருமில்லையே!) ஆர்க்கோ - ஆரவாரிக்கோ, அரற்றுகோ - பலகாற் பேசவோ, ஆடுகோ - பேராநந்தக்களிப்புடன்கூத்தாடவோ, பாடுகோ - பலபாக்களாற் புகழ்ந்து துதிக்கவோ, பரம்பரனே - யாவருக்கும் மேலோனாகிய சிவபெருமானே, என் - யாது, செய்கேன் - செய்யத்துணிவேன், எ - று.

(க - ரை.) தாழ்ந்து நின்று அடியேனுக்குஇன்பமயக்கத்தை மிகச்செய்கின்ற எமது தந்தையினும் மேலதாகியவனும், திருப்பெருந்துறைப்பதியையுடையவனுமாகிய சிவபெருமானே யென்று சொல்லுவோர் ஒருவருமில்லையே, அந்தோ ! யானொருவனுமேயிருந்து ஆரவாரித்தல் முதலியவற்றைச்செய்வவோ, யாது செய்யத்துணிவேன், என்பது.

(வி - ரை.) ஆர்த்தல் - ஆரவாரித்தல், அரற்றல் - பலகாற்பேசல். ஆடுதல் - ஆநந்தக்களிப்பாற் கூத்தாடுதல். பாடுதல் - புகழ்ந்து பாக்களாற் றுதித்தல். (உ)

செய்தபிழையறியேன்சேவடியேகைதொழுதே
யுய்யும்வகையினுயிர்ப்பறியேன்—வையத்
திருந்துறையுள்வேல்படுத்தேன்சிந்தனைக்கேகோத்தான்
பெருந்துறையின்மேயபிரான்.

(ப - ரை.) வையத்து - இப் பூலோகத்தில், இருந்து - கிருபையோடு எழுந்தருளியிருந்து, உறையுள் - தேவரீரதுஇடுப்பிலிருக்கும் உறையிலுள்ள, வேல் - வேலை, படுத்து - சீக்கிரமெடுத்து, என் - அடியேனது, சிந்தனைக்கே-மனத்திலுள்ளே, கோத்தான் - அழுத்தினன், (அப்பேர்க்கொற்றவனாரெனில்) பெருந்துறையில் - திருப்பெருந்துறைப் பதியின்கண், மேயபிரான் - எழுந்தருளிய சிவபெருமான், செய்த - தெரிந்துசெய்த, பிழை-தப்பிதத்தை, அறியேன் - (அக்காரணத்தைச்) சற்றுமறிந்தேனில்லை, சேவடியே - திருவடியையே, கை - கையினால், தொழுது - (வணக்கத்துடன்) தொழுது, உய்யும்-

பிழைக்கும், வகையின் - வகையால், உயிர்ப்பு - பிழைக்கும் வகையை, அறியேன் - தெரியேன், எ - று.

(க - ரை.) கயிலையைவிட்டு இப்பூலோகத்தில்திருப்பெருந்துறைப்பதியிலெழுந்தருளிய சிவபெருமான், தன் அறையிலிருக்கும் வேலாயுதத்தை யென் மனத்தினுள் பிரயோகித்தான், இதற்குக்காரணமாக அடியேன் செய்ததீங்கை அறிந்தேனில்லை! (அவ்வாறிருந்தும்) அவனது திருவடியையேகைதொழுதுகடைத்தேறும் வகையோடு உயிர்வாழ்தலையும் அறிந்தேனில்லை, என்பது.

(வி - ரை.) வையம் - உலகம். இருந்து என்பது இங்கு கயிலையைவிட்டு திருப்பெருந்துறைப் பதியிலெழுந்தருளியிருந்ததைக்குறித்து, உய்தல் - கடைத்தேறல், உயிர்ப்பு - உயிர்வாழ்தல். (௩).

முன்னை வினையிரண்டும்வே ரறுத்துமுன் னின்றான்
பின்னைப்பிறப்பறுக்கும்பேராளன் —றென்னன்
பெருந்துறையின் மேயபெருங்கருணையாளன்
வருந்துயரந்தீர்க்குமருந்து.

(ப - ரை.) முன்னை - முன்ஜனனத்தில், வினை இரண்டும் - தெரிந்தும் தெரியாமற்) செய்த (நல்வினை தீவினைக) ளிரண்டையும், வேர் - அவைகளினது வேரை, அறுத்து - முழுதுமறுத்து, முன்-அடியேன் எதிரே, நின்றான்- (என்னையாட்கொண்டு அடிமையாக்கிக்கொள்ள) அன்புடனெதிரேநின்றவனும், பின்னை - இனிவரும், பிறப்பு - பிறவித்தளையை, அறுக்கும் - சேதிக்கின்ற, பேர் ஆளன் - பெருமையையுடையவனும், தென்னன்-தென்னனும், பெருந் துறையில் - திருப்பெருந்துறைப்பதியில், மேய-எழுந்தருளியிருந்த, பெரு- மிகு, கருணை ஆளன் -கிருபாநோக்கத்தையுடையவனுமாகிய சிவபெருமான், வரும் - மென்மேலும் வரும், துயரம் - துன்பங்களை, தீர்க்கும் - விலக்குகின்ற, மருந்து - அவுடதமான வயித்தியனவன், எ - று.

(க - ரை,) முற்பிறப்பிற்செய்த வினைகளிரண்டையும், வேரறக்களைபவனும், இனிவரும் பிறவிகளைச் சேதிப்பனும், திருபெருந்துறைப்பதியில் எழுந்தருளியிருப்பவனுமாகியமருந்தீசன், மென்மேலும்வரக்கடவதாகிய பிறப்பையும் அறுக்கின்றவனாய் என்னெதிரே நின்றான், என்பது.

(வி - ரை.) நல்வினை தீவினைகளை இங்கு முன்வினை யிரண்டும் என்று கூறினார். வேர் - வினைகளின் வேர், பேர் - நாமம். (௪)

அறையோவறிவார்க்கனைத்துலகுமீன்ற
மறையோனுமாலுமால்கொள்ளு —மிறையோன்
பெருந்துறையுண்மேயபெருமான்பிரியா
திருந்துறையுமென்னெஞ்சத்தின்று.

(ப - ரை.) அனைத்து - யாவத்து, உலகும் - உலகங்களையும், ஈன்ற - உண்டாக்கிய, மறையோனும் - (தாமரைமலரை ஆசனமாகக்கொண்டு வீற்றிருக்கும்) பிரமதேவனும், மாலும் - (கருடவாகனத்தையுடையவனுமாகிய) விட்டுணுவும், மால் - (காண) விருப்பம், கொள்ளும் - கொள்ளுகின்ற, இறையோன் - இறைவனுகியதலைவன், பெருந்துறை உள் - திருப்பெருந்துறைப்பதியின்கண்ணே, மேய - எழுந்தருளிய, பெருமான் - சிவபெருமான், பிரியாதிருந்து - அடியேனை விட்டுப் பிரியாமலிருந்து, இன்று - இந்தினம், என் - எனது, நெஞ்சத்து - மனத்திலுள்ளே, உறையும் - வாழ்வான், (ஆனதால்) அறிவார்க்கு - தெரிபவர்க்கு, அறையோ - முறைமையோ, எ - று.

(க - ரை.) தாமரை மலரை ஆசனமாகக்கொண்ட பிரமனும், கருடவாகனத்தையுடைய விட்டுணுவும் பார்க்க மயங்குதற்குக் காரணமான இறைவனும், திருப்பெருந் துறைப்பதியிலெழுந்தருளிய சிவபெருமானுகிய தலைவன் அடியேன் மனத்திற் பிரியாதிருக்கின்ருன், என்பது.

(வி - ரை.) எல்லா உலக முதலியவைகளையும் படைக்கும் தொழிலையுடையவனுதலால் பிரமனை அனைத்துலகுமீன்ற மறையோன் என்று கூறினுர். மால் - மயக்கம். பிரியாமை - நீங்காமை. அறை - முறைமை. (ரு)

பித்தென்னையேற்றும் பிறப்பறுக்கும்பேச்சரிதா
மத்தமேயாக்கும்வந்தென்மனத்தை—யத்தன்
பெருந்துறையாளுட்கொண்டுபேரருளாலேநோக்கு
மருந்திறவாப்பேரின்பம்வந்து.

(ப - ரை.) அத்தன் - எனது தந்தை, பெருந்துறையான் - திருப்பெருந்துறைப்பதியையுடையவன், ஆள் - அடியேனை அடிமையாக, கொண்டு - ஏற்றுக்கொண்டு, பேரருளால் - பெருங்கருணையால், நோக்கும் - கிருபைக்கண்ணுற்பார்க்கின்ற, மருந்து - பிறவிப்பிணிக்கு அவுடதமாயிருப்பவன், (அவ்வாருற்ற சிவபெருமான்) வந்து - இவ்விடத்து என்னெதிரே யெழுந்தருளிவந்து, என்னை - அடியேனை, பித்து - அன்பென்னுமயக்கத்தை, ஏற்றும் - உண்டாக்குவான், பிறப்பு - இனிபிறக்குந்தன்மையை, அறுக்கும் - சேதித்தொழிப்பான், (ஆகிய அப்பேர்க்கொற்றவன்) வந்து - அன்புடன் கிட்டியெழுந்தருளி, என் - என்னுடைய, மனத்தை - எண்ணத்தை, பேச்சு - யாதொன்றையும் சொல்லுதற்கு, அரிது ஆம் - அருமையாகிய, மத்தம் - (அடியேனை) உன் மத்தனுக, ஆக்கும் - செய்வான், எ - று.

(க - ரை.) எனது தந்தையும், அடியேனை யன்று தடுத்தாட்கொண்டு தன்பெருங்கருணையினுல் பார்க்கின்ற தேவாமிருதமாயிருக்கின்றவனுமாகிய பெருமான், இவ்விடத்தெழுந்தருளிதன்னிடத்தில் எக்காலமும் எனக்குப்பிரி

ாவன்பை யேற்றுவான், ஈதன்றி, எனது பிறவித்தளையைச் சேதித்துத்தள்
;வான், மனதைவேறோரிடத்திற்செல்லவொட்டாமல் என்னை உன்மத்தனு
தவான், என்பது.

(வி - ரை.) அத்தன் - தந்தை. மருந்து - தேவாமிர்தம். வந்து என்
)து - இங்குவலியவந்து என்றபடி. ஆக்கல் - படைத்தல். (சு)

வாராவழியருளிவந்தெனக்குமாறின்றி
யாராவமுதாயமைந்தன்றே—சீரார்
திருத்தென்பெருந்துறையானென்சிந்தைமேய
வொருத்தன்பெருக்குமொளி.

(ப - ரை.) வாராவழி - இனிமென்மேலும் பிறந்துவாராத முத்திநெறி
யை, அருளி - அருளிச்செய்து, வந்து - அடியேனைக் கிட்டிவந்து, எனக்கு -
எந்தனுக்கு, மாறு இன்றி - என்னால் யாதொரு கைம்மாறின்றி, ஆரா - தெவி
ட்டாத, அமுது ஆய் - அமிர்தமாக, அமைந்தன்று - உண்டானது, (யாதெனி
லோ) சீர் - சிறப்பு, ஆர் - வாய்ந்த, தென் - அழகுடைய, திருப்பெருந்துறை
யான் - திருப்பெருந்துறைப்பதியையுடையனானவன், என் - அடியேனது,
சிந்தை - மனத்தினிடத்தே, மேல் - எழுந்தருளியிருக்கின்ற, ஒருத்தன் - ஒப்
பற்ற ஒருவன், (அச்சிவபெருமான்) பெருக்கும் - மிகுதியாகச்செய்கின்ற,
ஒளி - ஞானஜோதியேயாம், எ-று.

(க - ரை.) நிகரற்றத்திருப்பெருந்துறைப்பதியிலெழுந்தருளியிருப்பவ
னாகிய சிவபெருமான் இனி பிறவிக்குவாராத முத்திவழியை அருளிச்செய்து,
தெவிட்டாத தேவாமிர்தமா யமைந்தது, என்பது.

(வி - ரை.) வாராவழி-இனி பிறவிக்கு வாராமைக்குக் காரணமாகியமோ
ட்சவழி. மாறு இன்றி என்பதற்கு - அடியேனால் யாதொரு கைம்மாறின்றி
என்றுரைப்பினும் பொருந்தும். ஒருத்தன் - இங்கு நிகரற்ற சிவபெருமான்.()

யாவர்க்குமேலாமளவிலாச்சீருடையான்
யாவர்க்குங்கீழாமடியேனை—யாவரும்
பெற்றறியாவின்பத்துள்வைத்தாய்க்கென்னெம்பெருமான்
மற்றறியேன்செய்யும்வகை.

(ப - ரை.) யாவர்க்கும் - யாவர்க்கும், மேலாம் - மேலதாகிய, அளவு
இலா - இவ்வள வென்றில்லாத சீர், சிறப்பை, உடையான் - உடையவ
னும், யாவர்க்கும் - மானிடர்முதலிய யாவர்க்கும், கீழ் ஆம் - தாழ்ந்தவனாகிய,
அடியேனை - தொழும்பனேனை, யாவரும் - அனைவரும், பெற்று - அடைந்து,
அறியா - அறியப்படாத, இன்பத்துள் - பேரானந்தத்தில், வைத்தாய்க்கு - அடி

பேனை வைத்தவனுமாகிய தேவரீருக்கு, என் - அடியேனது, எம்பெருமான்- எம்பிரானாகியதலைவனே ? (உனக்கு) செய்யும் - பதில் உபகாரம் செய்யும், வகை - மூகாந்தரம், அறியேன் - யாதொன்றுந் தெரிந்தேனில்லை ! எ - று.

(க - ரை.) யாவர்க்கும் சிறந்தவனும், தாழ்ந்தவனுமாகிய அடியேனை யார்க்குங் கிடைப்பதற்கரிதாகிய பேரானந்தக் கடலில் வைத்தவனுமாகிய உனக்கு (இந்நன்றியறிந்து) கைம்மாறு தக்கபடி செய்யும் வகையைச் சற்றேனும், அறிந்தேனில்லை ! என்பது.

(வி - ரை.) இறைவனாகிய சிவபெருமான் மேலதாயதற்கு எல்லையென்றும், தாம் கீழ்மையதாயதற்கு எல்லையென்றும் தெரிவித்தற்கு "யாவர்க்கு மேலாமளவிலாச் சீருடையான்" என்றும், "யாவர்க்குங் கீழாமடியேன்" என்றும் அன்புடன் கூறினார். பெற்றறியாவின்பம் என்றது முற்பிறப்பிலுங்கண்டறியாத பேரின்பம் என்றபடி. கைம்மாறு - பிரதியுபகாரம். (அ)

மூவருமுப்பத்துமூவருமற்றொழிந்த
தேவருங்காணாச்சிவபெருமான் —மாவேறி
வையகத்தேவந்திழிந்தவார்கழல்கள்வந்திக்க
மெய்யகத்தேயின்பமிகும்.

(ப - ரை.) மூவரும்-(படைத்தல், காத்தல், அழித்தல் என்னு முத்தொழிற்குங்காரண கர்த்தர்களாகிய) பிரம விட்டுணு உருத்திரர்களும், முப்பத்து மூவரும் - முப்பத்துமுக்கோடிதேவர்களும், ஒழிந்த - கடந்த, தேவரும் - தேவர்களும், காணா - பார்ப்பதற்கரிதாகிய, சிவபெருமான் - சிவபிரான், வையத்தே - இப்பூலோகத்தின்கண்ணே, வந்து - கிருபைசெய்து வந்து, இழிந்த - இறங்கி, மா - (அடியேன்பொருட்டு) குதிரை, ஏறி - ஏறி வந்தவனாகிய இறைவனது வார் - நெடிய, கழல்கள் - திருவடிகளை, வந்திக்க - வணங்கின, மெய் அகத்தே - உண்மையாகிய அடியேனது மனத்தின்கண்ணே, இன்பம் - ஆநந்தம், மிகும் - பெருகும், எ - று.

(க - ரை.) முத்தொழிலையுடைய மும்மூர்த்திகள் முதலான தேவர்களும் காண்பதற்கரிதாகிய சிவபெருமான் குதிரையேறி இவ்வையகத்தே வந்திறங்கின திருவடிகளையென்றும் வணங்கில் அடியேனது மனத்தில் ஆனந்தமானது எந்நிமிஷமும் நீங்காமல் நிற்கும், என்பது.

(வி - ரை.) மூவர் - என்றது படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிற்கும் காரணர்களாகிய பிரம விட்டுணு உருத்திரர்கள். முப்பத்து மூவர் என்றது ஆதித்தர்-கஉ, அச்சுவனிகள்-உ, உருத்திரர்கள், கக, வசுக்கள்-அ, இவர்கள் ஒழிந்ததேவர்-இந்திரன் முதலிய மற்றையத் தேவர்கள். வந்தித்தல் - புகழ்தல். (கூ)

இருந்தென்னையாண்டானிணையடியேசிந்தித்
திருந்திரந்துகொண்ணெஞ்சேயெல்லாந்—தருங்காண்
பெருந்துறையின்மேயபெருங்கருணையாளன்
மருந்துருவாயென்மனத்தேவந்து.

(ப - ரை.) நெஞ்சே - ஏ மனமே? பெருந்துறையில் - திருப்பெருந் துறைப்பதியில், மேய - (அன்புடன்) எழுந்தருளிய, பெரு - மிகு, கருணை - கிருபையையுடைய, ஆளன் - சிவபெருமான், மருந்து-தேவாமிர்த, உரு ஆய்- உருவாகி, என் - அடியேனது, மனத்தே - மனதில், வந்து இருந்து - வந்து குடியாயிருந்து, என்னை-அடிமையாகிய என்னை, ஆண்டான் - பணியாளாகக் கொண்டாண்டருளினன், (ஆனதால் அவனது) இணை - இரண்டு, அடியே - திருவடிகளையே, சிந்தித்து - நினைத்துக்கொண்டு, இருந்து - சதா இருந்து, எல்லாம் - (உனக்கு இனிவேண்டுவென) எல்லா அழியாப்பொருள் யாவை யும், இரந்து - வேண்டி பிரார்த்தித்து, கொள் - பெற்றுக்கொள், (அவ்வாறு அன்புடன் கேழ்க்கில்) தரும் - (தடையின்றித்) தந்தருளுவன், எ - று.

(க - ரை.) ஏ மனமே? அடியேனைத் தடுத்தாண்டு கொண்டருளினவ னும், திருப்பெருந்துறைப் பதியிலெழுந்தருளியவனுமாகிய சிவபெருமானது திருவடியைச் சிந்தித்திருந்து தாழ்மையோடு இரநது கொள்வாயாயின், நீ வே ண்டுவன யாவற்றையும் சிவபெருமான் யாதொரு தடையின்றிகொடுத்தேயரு ளுவான், என்பது.

(வி - ரை.) நெஞ்சு - மனம். எல்லாம் தரும் என்றது - இந்திரன் முத லிய இறையவர் பதங்கள் முதல், முத்திப்பதம் அளவாயுள்ள எல்லாப்பதங்க ளையும் கொடுப்பன் என்றபடி. (௧௦)

இன்பம்பெருக்கியிருளகற்றியெஞ்ஞான்றுந்
துன்பந்தொடர்வறுத்துச்சோதியா—யன்பமைத்துச்
சீரார்பெருந்துறையானென்னுடையசிந்தையே
யூராகக்கொண்டானுவந்து.

(ப - ரை.) சீர் - சிறப்பு, ஆர் - பொருந்திய, திருப்பெருந்துறையான் - திருப்பெருந் துறைப்பதியையுடையவன், இன்பம் - பேரின்பத்தை, பெருக் கி - மிகப் பெருகச்செய்து, இருள் - (அஞ்ஞானமாகிய) இருளை, எஞ்ஞான் றும் - (இனி) எக்காலமும், துன்பம் - பிறவித்துன்ப முதலியவற்றின், தொ டர்பு - (நம்மை) சாயலைப்போல் தொடர்ந்து வருதலை, அறுத்து - (கண்டிப் பாய்ச்) சேதித்து, சோதி ஆய் - ஒளியுருவாகி, அன்பு - பேரன்பினை, அமை த்து - நிறைத்து, என்னுடைய - அடியேன், சிந்தையே - மனத்தையே,

உவந்து - விரும்பி, ஊர் ஆக - இருப்பதற்கு இடமாக, கொண்டான் - எழுந்தருளியிருந்தான், எ - று.

(க - ரை.) சிறப்புப்பொருந்திய திருப்பெருந் துறைப்பதியிலெழுந்தருளிய சிவபெருமான், அடியேனுக்குப் பேரின்பத்தைப் பெருகச்செய்து, அஞ்ஞானமாகிய இருளைச்சேதித்து, துன்பத்தைப் பற்றறுத்து, ஜோதியுருவாய் என் மனத்தையே தான் குடியிருக்க ஊராகக்கொண்டு எழுந்தருளியிருந்தான், என்பது.

(வி - ரை) இன்பம் - பேரின்பம், இருள் - அஞ்ஞானமாகிய விருள். தொடர்வு - பற்று. அன்பு - பேரன்பு. (கக)

திருச்சிற்றம்பலம்.

---

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# பண்டாயநான்மறை.

அநுபவத்துக்குக் கைம்மாறின்மையுரைத்தல்.

[அநுபவத்துச்குக் கைம்மாறின்மையுரைத்தல் என்பது இவ்வாறிரட்சிக்கப்பட்ட ஆசாரியர்க்குப் பதில் கைம்மாறில்லையென்றது.]

திருச்சிற்றம்பலம்.

நேரிசைவெண்பா.

பண்டாயநான்மறையும்பாலணுகாமாலயனுங்
கண்டாருமில்லைக்கடையேனைத்—தொண்டாகக்
கொண்டருளுங்கோகழியெங்கோமாற்குநெஞ்சமே
யுண்டாமோகைம்மாறுரை.

(ப - ரை.) நெஞ்சமே - ஏ மனமே? பண்டு - புராதனம், ஆய - ஆகிய, நான்மறையும் - நான்குவேதங்களும், பால் - தன்பால், அணுகா - கிட்டிநெருங்கக்கூடாத, மால் - விட்டுணுவும், அயனும் - பிரமனும், கண்டாரும் - பார்த்தவர்கள், இல்லை - இலை, (அவ்வாறிருக்க) கடையேனை - நாயினுங்கடைப்

பட்ட அடியேனாகிய என்னை, தொண்டு ஆக - அடிமையாளாக, கொண்டருளும் - ஏற்றருளுகின்ற, கோகழிக்கி - திருவாவடுதுறைப் பதியையுடையவனாகிய, எம் - எனது, கோமாற்கு - தலைவனுக்கு, கைம்மாறு - பதில்செய்யும் உபகாரம், உண்டாமோ - உளதாமோ ! உரை - சற்று சொல்வாயாக, எ - று.

(க - ரை.) ஏ மனமே? பரமசிவனை நான்கு வேதங்களாலும், திருமாலும், பிரமனும் தன்னைக்காணக்கூடாதிருக்க அப்பேர்க்கொற்றச் சிவபெருமான், நாயினுங்கடையேனாகிய என்னையும் ஓர் பொருட்டாகமதித்து அடிமையாகக் கொண்டருளினதற்கு யாம் செய்தற்குரிய பதிலுபகாரம் ஒன்றுளதோ! நீ சற்று சொல்வாயாக, என்பது.

(வி - ரை.) வேதம் அநாதியானமையால் "பண்டாய நான்மறை" என்று கூறினார். கோகழி - திருவாவடுதுறை, கோமான் - பரமசிவன், கைம்மாறு - பதில் உதவி. (க)

உள்ளமலமூன்று மாயவுகுபெருந்தேன்
வெள்ளந்தரு பரியின்மேல்வந்த—வள்ளன்
மருவும்பெருந்துறையைவாழ்த்துமின்கள்வாழ்த்தக்
கருவுங்கெடும்பிறவிக்காடு.

(ப - ரை.) உள்ள - உளதாகிய, மலம் - (ஆணவம் மாயை காமியம் ஆகிய) மலங்கள், மூன்றும் - அம் மூன்றும், மாய - பாழாக்க, உகு - சிந்துகின்ற, பெரும் - பெரிய, தேன் - இன்பத்தேன், வெள்ளம் - பெருக்கை, தரும் - தருகின்ற, பரியின்மேல் - குதிரையின்மீது, வந்த - கிருபைசெய்துவந்த, வள்ளல் - கொடையாளியாகிய சிவபெருமான், மருவும் - எழுந்தருளியிருக்கிற, பெருந்துறையை - திருப்பெருந்துறைப்பதியை, வாழ்த்துமின்கள் - பாக்களால் துதிசெய்யுங்கள், வாழ்த்த - அவ்வாறு வாழ்த்தினால், பிறவிக்காடு - நமது பிறப்பென்னுங் காடானது, கருவும் - வேருடனே, கெடும் - இனிவாராமல் அழியும், எ - று.

(க - ரை. நமது மும்மலங்கள் யாவும் அற்று நீங்கும்படி பேரின்பப் பெருக்கத்தைக்கொடுத்து குதிரையேறிவந்த வள்ளலாகிய கிருபாமூர்த்தியாகிய சிவபெருமானது திருப்பெருந்துறைப்பதியை சதாவாழ்த்துங்கள், அவ்வாறு வாழ்த்தினால் உங்களது பிறவிக்காடானது பற்றற அற்று ஒழியும், என்பது.

(வி - ரை.) மலம் - மும்மலம் அதாவது:—ஆணவம், மாயை, காமியம். வள்ளல் - கொடையாளி. (உ)

காட்டகத்துவேடன்கடலில்வலைவாண
ஞட்டிற்பரிப்பாகனம்வினையை—வீட்டி
யருளும்பெருந்துறையானங்கமலபாத
மருளுங்கெடநெஞ்சேவாழ்த்து.

(ப-ரை.) நெஞ்சே-ஏ மனமே? காட்டகத்து-காட்டின்கண்ணே வாழா நின்ற, வேடன் - வேடனாகியும், கடலில்-சமுத்திரத்தின்கண், வலைவாணன்-[மீன்பிடித்து ஜீவிக்கும்] வலையனைப்போலும், நாட்டில் - நாட்டின்கண், பரிப்பாகன் - [வாழும்] குதிரைச்சேவகனாகியும், நம்-நமது, வினை - தீவினைகளை, வீட்டி - சேதித்து, அருளும் - [நமக்குக்] கிருபைசெய்கின்ற, பெருந்துறையான் - திருப்பெருந்துறைப்பதியையுடைய சிவபெருமானது, அம் - அழகாகிய, கமலம் - தாமரைமலர்போன்ற, பாதம் - திருவடியை, மருளும் - நமது பிறவிமயக்கமும், கெட - கெட்டொழியும்படி, வாழ்த்து - நீ துதிசெய்வாயாக, எ - று.

(க - ரை.) ஏ நெஞ்சமே? நமது பிறவிமயக்கம் அற்றொழியும்படிக்கு காட்டின்கண் சஞ்சரிக்கும் வேடனைப்போலும், கடலில் வலைவீசி மீன்பிடித்து ஜீவிக்கும் வலையனைப்போலும், நாட்டில் வாழும்குதிரைச்சேவகனைப் போலும், நமது கோடியவினைகளை யொழித்தருளுபவனும், திருப்பெருந்துறைப்பதியை யுடையவனுமாகிய சிவபெருமானது அழகிய பாத தாமரைகளை வாழ்த்துவாயாக, என்பது.

(வி - ரை.) பரிப்பாகன் - குதிரைச்சேவகன். வீட்டுதல் - அழித்தல். வலைவாணன் - வலைவீசிவாழ்பவன், அம்-அழகு. வாழ்த்தல்-துதித்தல். (ரு)

வாழ்ந்தார்களாவாரும்வல்வினையைமாய்ப்பாருந்
தாழ்ந்துலகமேத்தத்தகுவாருஞ்—சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சியேத்துந்திருவார்பெருந்துறையை
நன்றிறைஞ்சியேத்துநமர்.

(ப - ரை.) வாழ்ந்தார்கள் - பேரின்பவாழ்வுக்குரிய, ஆவாரும்-எல்லோரும், வல் - கொடிதாகிய, வினையை - வினைகளை, மாய்ப்பாரும் - சேதிப்போரும், உலகம் - உலகத்தின்கண் வாழ்பவர், தாழ்ந்து - தலைவணங்கி, ஏத்த - [பணிந்து] துதிக்க, தகுவாரும் - தகுதியையுடையோரும், [அவ்வாறு துதிப்பதைப் பெறுபவன் யாரெனில்?] அமரர் - தேவர்கள், சூழ்ந்து - கூடி, சென்று - போய், இறைஞ்சி - பணிந்து, ஏத்தும் - போற்றிசெய்கின்ற, திரு ஆர் - அழகுவாய்ந்த, பெருந்துறை-திருப்பெருந்துறைப்பதியை, நன்று-செவ்வையாக, இறைஞ்சி - பணிந்து, ஏத்தும் - துதிக்கின்ற, நமர் - நம்மவர்களேயாவர், எ - று.

(க - ரை.) தேவர்கள் பெறவேண்டியவற்றைப் பெறுவதற்குவந்துவண ங்கித் துதிக்காநின்ற திருப்பெருந்துறைப்பதியை வணங்கித்துதிக்கின்ற நம்மவர்ளே ? பேராநந்தவாழ்வுக்குரியவரும், கொடிதாகிய வினைகளைக்கெடுப்பவரும் உலகத்தார் துதிக்குந் தகுதியையுள்ளவரும் அவரே ஆவர், என்பது.

(வி - ரை.) வாழ்ந்தார்கள் - பேரின்பவெள்ளத்தில் வாழ்பவர்கள். வல்-கொடிய. தாழ்தல் - வணங்குதல். அமரர் - இறவாதவர். இது மங்கலவழக்கு. ஏத்தல் - துதித்தல். தன்னைப்போன்ற அடியார்களை "நமர்" என்று கூறினர்.

நண்ணிப்பெருந்துறையைநம்மிடர்கள்போயகல
வெண்ணியெழுகோகழிக்கரசைப்—பண்ணின்
மொழியாளோடுத்தரகோசமங்கைமன்னிக்
கழியாதிருந்தவனைக்காண்.

(ப - ரை.) நெஞ்சமே - ஏ மனமே ? நம் - நம்முடைய, இடர்கள் - [எல்லாத்] துன்பங்கள், போய் அகல - ஒழிந்து போகும் வண்ணம், பெருந்துறையை - திருப்பெருந்துறைப்பதியை, நண்ண - சேர்ந்து, கோகழிக்கு-திருவாவடுதுறைப்பதிக்கு, அரசை-நாதனை, எண்ணி-நினைந்து நினைந்து, எழு - எழுந்திருப்பாயாக, பண்ணின் - பண்ணிசையைப்போலும், மொழியாளோடு - சொல்லையுடையவளாகிய உமாதேவியோடும், உத்தரகோசமங்கை - உத்தரகோசமங்கைப் பதியின்கண், மன்னி - நிலைபெற்று, கழியாது - என்றும் நீங்காமல், இருந்தவனை - எழுந்தருளியிருக்கும் பரமசிவனை, காண் - பார்ப்பாயாக, எ - று.

(க-ரை.) ஏ மனமே ? நமது கொடிய வினைகள் விலகிப்போகும் வண்ணம் யாவராலுந் துதிக்கப்பெறுந்திருப்பெருந்துறைப்பதியையடைந்து திருவாவடிதுறைப்பதியிலெழுந்தருளியிருக்கும் சிவபெருமானை அன்புடன் வணங்கியெழுந்திருப்பாயாக [இதன்றியில்] உமாதேவியாரோடும் திருவுத்தர கோசமங்கைப்பதியில் நிலைபெற்றிருக்கும் இறைவனைக்கண்டுய்வாயாக, என்பது.

(வி - ரை.) நெஞ்சம் - மனம். நம்மிடர்கள் என்றது நமது எல்லாப் பலவிததுன்பங்கள் என்றபடி. நண்ணல் - அடைதல், பண் - பா, பாட்டு.(ரு)

காணுங்கரணங்களெல்லாம்பேரின்பமெனப்
பேணுமடியார்பிறப்பகலக்—காணும்
பெரியானைநெஞ்சேபெருந்துறையிலென்றும்
பிரியானைவாயாரப்பேசு.

(ப - ரை.) நெஞ்சே - ஏ மனமே ? காணும் - தோற்றப்படுகிற, கரணங்கள் - கருவிகள், எல்லாம் - யாவும், பேரின்பம், பேராநந்தவுருவு, என - ஆக நிற்க, வேணும் - இச்சைப்படுகின்ற, அடியார் - அடியார்களது, பிறப்பு - பிற

வித்தளையானது, அகல - நீங்கும்படி, காணும் - நோக்குகின்ற, பெரியானை - யாவர்க்கும் பெரியோனாகவும், பெருந் துறையில் - திருப்பெருந் துறைப்பதியில், என்றும் - எக்காலமும், பிரியானை - நீங்காமலிருப்பவனாகிய சிவபெருமானை, வாயார - வாய்நிறம்ப, பேசு - புகழ்ந் துரைப்பாயாக, எ - று.

(க - ரை.) எ மனமே ? பார்க்கப்படுகின்ற கருவிகள் எல்லாம் பேரின்ப வடிவாகவேகாண்கின்ற அடியார்களுடைய பிறவித்தளை நீங்கும்படி கிருபையோடுபார்க்கின்ற பெரியோனும், திருப்பெருந் துறைப்பதியை எந்நாளும் நீங்காதவனும் ஆகிய சிவபெருமானை நீ வாயார வாழ்த்துவாயாக, என்பது.

(வி - ரை.) காணல் - பார்த்தல். கரணம் - கருவி. காணும் பெரியானை என்றதில் காணல் கருணை நோக்கம்வைத்தல். (சு)

பேசும்பொருளுக்கிலக்கிதமாம்பேச்சிறந்த
மாசின் மணியின்மணிவார்த்தை—பேசிப்
பெருந்துறையேயென்றுபிறப்பறுத்தேனல்ல
மருந்தினடியென்மனத்தேவைத்து.

(ப - ரை.) பேசும் - பேசுகின்ற, பொருளுக்கு, பொருள்களுக்கு, இலக்கு - குறியாய், இதம் ஆம் - இதமுமாகின்ற, பேச்சு - வார்த்தை, இறந்த - அற்ற, மாசு - யாதொரு குற்றம், இல் - இல்லாத, மணியின் - மணியைப் போன்ற சிவபிரானது, மணி - அழகோடுங்கூடிய, வார்த்தை - அமிர்தம் சொரியும் வார்த்தைகளை, பேசி - சொல்லி; திருப்பெருந் துறையே - திருப்பெருந் துறைப்பதியி லெழுந்தருளியிருக்கும் சிவபெருமானே! என்று-என்று, நல்ல-பெருமையைத்தருகின்ற, மருந்தின் - மருந்தின்போல் பவனது, அடி - [இருவராலுங் காணப்படாத்] திருவடியை, என் - என்னுடைய, மனத்தே - மனத்தில், வைத்து - இருந்து, பிறப்பு - பிறவித்தளையை, அறுத்தேன் - சேதித்துத் தள்ளினேன், எ - று.

(க - ரை.) குறித்துப் பேசுகின்ற பொருள்களுக்கு இலக்காயும், இதமாயுமிருக்கின்ற மாசிலாமணியாகிய சிவபெருமானது திருவார்த்தையைச் சொல்லி, திருப்பெருந்துறையே! என்று பலவாறு புகழ்ந்து, சிறந்த அவுடதம் போல்பவனது திருவடியை அடியேனது மனத்தில் இருத்தி என் பிறவிப் பிணியை உண்மையாக ஒழித்தேன், என்பது.

(வி - ரை.) இலக்கு - குறி. [லக்ஷ்யம்] இதம் - இனிமை. மணி - அழகு. வார்த்தை - சொர்கள். [சிவபெருமானது புகழையெடுத்துச் சதாபேசும் வார்த்தை.] (எ)

திருச்சிற்றம்பலம்.

———

௨

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருப்படையாட்சி.

பிரபஞ்சத்தில் சிவ உபாதியொழித்தல்.

[பிரபஞ்சத்தில் சிவ உபாதி யொழித்தல் என்பது கிரியாசூனியம்.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

கண்களிரண்டுமவன் கழல்கண்டுகளிப்பனவாகாதே
காரிகையார்கடம்வாழ்விலென்வாழ்வுகடைப்படுமாகாதே
மண்களில்வந்துபிறந்திடுமாறுமறந்திடுமாகாதே
மாலறியாமலர்ப்பாதமிரண்டும் வணங்குதுமாகாதே
பண்களிகூர்தருபாடலொடாடல்பயின்றிடுமாகாதே
பாண்டிநன்னாடுடையான்படையாட்சிகள்பாடுதுமாகாதே
விண்களிகூர்வதோர்வேதகம்வந்துவெளிப்படுமாகாதே
மீன்வலைவீசியகானவன்வந்துவெளிப்படுமாயிடிலே.

(ப - ரை.) மீன் - மீனைப்பிடிக்க, வலை - வலையை, வீசிய - வீசின, கானவன் - வலைஞனாகிய சிவபெருமான், வந்து-இங்கு எழுந்தருளிவந்து, வெளிப்படுமாயிடில்-பார்க்கவெளிப்பட்டுத்தோன்றுவானாயின், கண்கள் இரண்டும் - அடியேனது இரண்டுகண்களும், அவன் - அச்சிவபெருமான், கழல் - திருவடியை, கண்டு - பார்த்து, களிப்பன - சந்தோஷப்படல், ஆகாது - கூடாது, காரிகையார்கள் - மாதர்களின், தம் - தங்களது, வாழ்வில் - வாழ்வைப் பார்க்கிலும், என் - அடியேனுடைய, வாழ்வு - வாழ்க்கையானது, கடைப்படும்-கடைப்படுதலும், ஆகாது - கூடாது, மால் - திருமால், அறியா - தேடி யுங்கிடைக்காத, மலர் - தாமரைமலர்போன்ற, பாதம் இரண்டும் - திருவடிகளிரண்டையும், வணங்குதும் - தொழுது விணங்குவதும், ஆகாது - கூடாது, விண் - இசைகளின், களி-சந்தோஷம், கூர்தரு - மிகுந்த, பாடலொடு - பாக்களோடு, ஆடல் - ஆநந்தத்தினால் கூத்தாடலும், பயன்றிடும் - அப்பரம சிவனைக்கூடிநேசிப்பதும், ஆகாது - கூடாது; நல் - பெருமைவாய்ந்த, பாண்டிநாடு - பாண்டி

ாட்டை, உடையான் - உடையவனாகிய சிவபெருமானது, படையாட்சிகள் - படையாட்சிகளை, பாடுதும் - பாடுவதும், ஆகாது - கூடாது, விண்-விண்ணுலகத்திலிருந்து, களிகூர்வது - சந்தோஷிகுதற்குக் காரணமாகிய, ஓர்-ஒரு, வேதகம் - வேற்றுமை, வந்து-வந்து, வெளிப்படும்-வெளிப்படுதல், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) இறைவனாகிய பரமசிவனைக் கண்டபிறகு வேறொரு இச்சையும் வாராது, என்பது.

(வி - ரை.) வீசுதல் - எறிதல். களிப்பன-சந்தோஷிக்குந் தொழில்கள். கடைப்படுதலும் என்பது கடைப்படும் எனக்குறைந்து வந்தது. இது தொகுத்தலின்பாற்படும், மறந்திடும் முதலியவற்றிற்கும் இவ்வாறே கண்டு கொள்க. சிறப்பிடம் பன்மை நோக்கி "மண்களில்" எனப்பன்மை கூறினர். வேதகம்-வேறுபடுதல். இதுவேறுபடுத்தற்குரிய பொருளாகிய சிவபெருமானுக் காயிறு. வேறுபடுத்தலென்பது ஆன்மாக்களுடைய சீவத்துவத்தை மாற்றிச்சிவத்துவத்தைக் கிருபைசெய்தல். மெய்யன்பர் என்பது இறைவனாகிய சிவபிரானைக் கண்டபின் வேறொரு விவகாரங்களில் பிரவேசிக்கார் என்று திருப்படையாட்சியின் கருத்து. (க)

ன்றினொடொன் றுமோரைந்தினொடைந்துமுயிர்ப்பதுமாகாதே
யுன்னடியாரடியாரடியோமெனவுய்ந்தனவாகாதே
ன்றைநினைந்தெழுதாயெனவந்தகணக்கதுவாகாதே
காரணமாகுமனாதிகுணங்கள்கருத்தறுமாகாதே
ன்றிதுதிதெனவந்தநடுக்கநடந்தனவாகாதே
நாமுமேலாமடியாருடனேசெலநண்ணுதுமாகாதே
யன்றுமெனன்புநிறைந்தபராவமுதெய்துவதாகாதே
யேறுடையானெனையாளுடைநாயகனென்னுள்புகுந்திடிலே.

(ப - ரை.) ஏறு - இடபவாகனத்தை, உடையான் - உடையவனும், ன்னை - அடியேனை, ஆள் - பணியாளாக, உடை-உடையவனுமாகிய சிவபெமான், என் - என்னுடைய, உள் - மனத்தினுள்ளே, புகுந்திடில் - பிரவேசித்து விட்டால், ஒன்றினொடு ஒன்றும் - ஒன்றோடொன்றும், ஓர் ஐந்தினொடுந்தும் - ஒரு ஐந்தோடு மைந்தும், உயிர்ப்பதும்-ஜீவித்திருத்தலும், ஆகாது - டாது, உன் [தேவரீராகிய] உன்னுடைய, அடியார் அடியார் - அடியாரடியர்க்கு, அடியோம் - அடியோங்கள், என - என்று சொல்லி, உய்ந்தன-உய்ந்னவையும், ஆகாது - கூடாது, கன்றை - கன்றினை, நினைந்து - [பாலூட்ட] னைந்து, எழு - எழுந்த, தாய் என - தாய்ப்பசுவைப்போல, வந்த-கிட்டிவந்த, ணக்கது - தன்மையும், ஆகாது-கூடாது, காரணம் ஆகும் - முகாந்தரமாகிய,

அநாதி - புராதன, குணங்கள் - குணங்கள், கருத்து - எண்ணத்தில், உறும்-பொருந்துதலும், ஆகாது-கூடாது, இது நன்று-இதுநல்லது, இது தீது-இது கொடியது, என - என்று, வந்த - தோன்றிய, நடுக்கம் - நடுக்கமானது, நடந்தன - தொடர்ந்தவையும், ஆகாது - கூடாது, நாமும் - யாமும், எல்லாம்-யாவத்து, அடியாருடனே - அடியார்களோடும், செல்ல - [தொடர்ந்து] போக, நண்ணுதும் - மனத்திலெண்ணுதலும், ஆகாது-கூடாது, என்றும் - எக்காலமும், என் - அடியேனது, அன்பு - அன்புருவாய், நிறைந்த - நிறைந்த, பராவமுது - மேன்பாட்டையுடைய அமிர்தம், எய்துவது - கிடைப்பதும், ஆகாது-கூடாது, எ - று.

(க - ரை.) இடபவாகனனாகிய சிவபெருமான் என்மனத்தினுட் புகுந்துவிட்டால் வேறு யாதொரு விவகாரங்களும் நடக்கமாட்டாது, என்பது.

(வி - ரை.) நாயகன் - தலைவனாகிய சிவபெருமான். ஒன்றினொடு ஒன்று-சிவசீவர்கள். ஐந்தினொடு ஐந்து - தசேந்திரியங்கள் (க0) நடுக்கம் - சலநம். பரவமுது - பராவமுது என நீட்டல் பெற்றது. (உ)

பந்தவிகாரகுணங்கள்பறிந்துமறிந்திடுமாகாதே
பாவனையாயகருத்தினில்வந்தபராவமுதாகாதே
யந்தமிலாதவகண்டமுநம்முளகப்படுமாகாதே
யாதிமுதற்பரமாயபரஞ்சுடரண்ணுவதாகாதே
செந்துவர்வாய்மடவாரிடரானவைசிந்திடுமாகாதே
சேலனகண்களவன்றிருமேனிதிளைப்பனவாகாதே
யிந்திரஞாலவிடர்ப்பிறவித்துயரேகுவதாகாதே
யென்னுடைநாயகனாகியவீசனெதிர்ப்படுமாயிடிலே.

(ப - ரை.) என்னுடை - அடியேனது, நாயகன் ஆகிய - எஜமானாகிய, ஈசன் - ஜகதீசன், எதிர் - என் எதிரே, படுமாயிடில் - தோன்றுவானாயின், பந்த - பிறவித்தளைக் கேதுவாகிய, விகாரகுணங்கள் - பயித்தியகுணங்கள், பறிந்துமறிந்திடும் - வெளிப்பட்டு மீளுதலும், ஆகாது - கூடாது, கருத்தினில்வந்த - எண்ணங்களுண்டாகிற மனத்தினிடத்தில், பாவனை ஆய-பாவனைபோற்றோன்றின, பரா - சிறப்புவாய்ந்த, அமுது - அமிர்தம், ஆகாது - கூடாது, அந்தம் - முடிவு, இலாத - இல்லாத, அகண்டமும் - விரிந்தபொருளும், நம்முன் - நமது எதிரே, அகப்படும் - தோன்றப்படுதலும், ஆகாது - கூடாது, ஆதிமுதல் - ஆதிமுதல்வனாகிய, பரம் ஆய பரம் - மேலோனாகிய பரஞ்சுடர் [illegible] அண்ணுவது - நம்மைக்கிட்டி அணுகுவதும், ஆகாது-கூடாது, செம் - செவ்விய, துவர்வாய் - பவளம்போன்ற வாயினையுடைய, மடவார் - பெண்களது, இடர் - பலவித துன்பங்கள், ஆனவை - ஆகியயாவும், சிந்திடும்-

கெடுவதும், ஆகாது - கூடாது, சேல் அன்ன - சேற்கண்டையைப்போன்ற, கண்கள் - வயனங்கள், அவன் - அப்பரமசிவனது, திருமேனி-திருமேனியை, திளைப்பன - அனுபவிப்பனவும், ஆகாது - கூடாது, இந்திரஞாலம் - இந்திரசாலம் போன்ற, இடர் - பலவிதத்துன்பத்துக் கிடமாகிய, பிறவித்துயர்-பிறவித்துக்கம், ஏகுவது - ஒழிந்துபோகுதலும், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) அடியேனது இறைவனாகிய சிவபெருமான் என் எதிர்ப்பட்டுவிட்டால், வேறு யாதோரு விவகாரங்களும் நிகழலாகாது, என்பது.

(வி - ரை.) பந்தம் - பிறவிக்கட்டு. விகாரகுணங்கள் -ஆன்மாவுக்குவிபரீதத்தை உண்டாக்கப்படுவனவாகிய துற்குணங்கள். அகண்டம் - கண்டிக்கப்படாதவத்து. துவர் - பவளம். இந்திரசாலம் - இந்திரஞாலம் எனவந்தது இடைப்போலி. ஏகுதல் - ஒழிதல். (உ)

என்னணியார்முலையாகமளைந்துடனின்புறுமாகாதே
யெல்லையின்மாக்கருணைக்கடலின்றினிதாடுதுமாகாதே
நன்மணிநாதமுழங்கியெனுள்ளுறநண்ணுவதாகாதே
நாதனணித்திருநீற்றினைநித்தலுநண்ணுவதாகாதே
மன்னியவன்பரிலென்பணிமுந்துறவைகுவதாகாதே
மாமறையும்மறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
யின்னியற்செங்கழுநீர்மலரென்றலையெய்துவதாகாதே
என்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே.

(ப - ரை.) என்னை - அடியேனை, உடை-ஆளடிமையாகவுடைய, பெருமான் - சிவபெருமான், அருள் - எமக்கருட்செய்கின்ற, ஈசன் - ஜகதீசன், எழுந்தருளப்பெறில் - என்னைக் கிட்டிவந்தெழுந்தருளப் பெற்றால், என் - என்னுடைய, அணி - அழகு, ஆர் - பொருந்திய, முலை - தனங்கள், ஆகம் அளைந்து - இறைவனாகிய சிவபெருமானது திருமார்போடு பொருந்தி, உடன் இன்பு உறும், இன்பசுகத்தைக் கொடுத்தலும், ஆகாது - கூடாது, எல்லை - வரம்பு, இல் - இல்லாத, மா - பெரிய, கருணைக்கடல்-கிருபாசமுத்திரத்தில், இன்று - இத்தினம், இனிது - விருப்புற்று, ஆடுதும் - மூழ்குவதும், ஆகாது- கூடாது, நல் - சிறப்புடைய, நாதம் - சத்தமானது, முழங்கி - சத்தித்து, என்-என்னுடைய, உள் - மனத்தினுள், உற-பொருந்த, நண்ணுதும்-அடைவதும், ஆகாது - கூடாது, நாதன் - தலைவனாகிய சிவபெருமானது, அணி - அழகாகிய, திருநீற்றினை - திருவெண்ணீற்றை, நித்தலும் - தினே தினே, நண்ணுவதும் - [பஞ்சாட்சரமந்திரத்தைச் ஜபித்துப்] பூசுவதும், ஆகாது - கூடாது, மன்னிய - நிலைபெற்ற, அன்பர் இல்-அன்பரினும், என்-எனது பணி- திருத்தொண்டானது, முந்துற-முன்னாக, வைகுவது-நிற்றுவதும், ஆகாது-

கூடாது, மா - பெருமைதங்கிய, மறையும்-[நான்கு] வேதங்களும், அறியா-தெரிந்துகொள்ளப்படாத, மலர்-தாமரைமலர்போன்ற, பாதம்-[இருவருங்காணுத்] திருவடிகளை, வணங்குதும்-வணங்கிதொழுவதும், ஆகாது -கூடாது, இன் - இனிமையைத்தரும், இயல் - குணத்தையுடைய, செங்கழுநீர் மலர் - திருவடியின்தாமரை மலரை, என் - எனது, தலை - சிரசின்மீது, எய்துவது - பொருந்தவைப்பதும், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) எம்மிறைவனாகிய சிவபெருமான் என் மனத்தின்கண்ணே யெழுந்தருளப்பெற்றால் வேறொருவிஷயங்களும் எம்மிடத்துச் சற்றேனும் நிகழலாகாது, என்பது.

(வி - ரை.) கருணைக்கடல் - பேரருட்கடல். ஆகம் - மால். நாதம் - நாதத்துவம். பணி-தொண்டு. முந்துறல்-முன்றோன்றல். செங்கழுநீர் மலர்-இவ்விடத்தில் தாமரையைக் குறிக்கலாயிற்று. (ச)

மண்ணினின்மாயைமதித்துவகுத்தமயக்கறுமாகாதே
வானவருமறியாமலர்ப்பாதம்வணங்குதுமாகாதே
கண்ணிலிகாலமனைத்தினும்வந்தகலக்கறுமாகாதே
காதல்செயுமடியார்மனமின்றுகளித்திடுமாகாதே
பெண்ணலியாணெனநாமெனவந்தபிணக்கறுமாகாதே
பேரறியாதவனேகபவங்கள்பிழைத்தனவாகாதே
யெண்ணிலியர்கியசித்திகள்வந்தெனையெய்துவதாகாதே
யென்னையுடைப்பெருமானருளீசனெழுந்தருளப்பெறிலே.

(ப - ரை.) என்னை - அடியேனை, உடை - அடிமையாளாகவுடைய, பெருமான் - சிவபெருமான், அருள் - அடியேனுக்கு அருள்செய்கின்ற, ஈசன் - ஜகதீசன், எழுந்தருள - என் எதிரில்வர, பெறில் - பெற்றால், மண்ணினில்-பூலோகத்தின்கண், மாயை - மாயையாய், மதித்து - எண்ணி, வகுத்த - பிறிக்கப்பட்ட, மயக்கு - மயக்கமானது, அறும் - அற்றுநீங்குதலும் ஆகாது - கூடாது, வானவரும் - வானுலகத்தில் வாழும் தேவர்களும், அறியா - காணவொண்ணுத, மலர் - தாமரைப் புட்பம்போலுமுடைய, பாதம் - திருவடியை, வணங்குதும் - வணங்கிதொழுவதும், ஆகாது - கூடாது, கண் இலி-எண்ணுதற்கருமையாகிய, காலம் அனைத்தும் - அனேககாலமாய், வந்த-வாய்ந்த, கலக்கு - பெருங்கலக்கமானது, அறும் - அற்றொழிதலும், ஆகாது - கூடாது, காதல் - அன்புடன், செய்யும் - தொண்டுசெய்யாநின்ற, அடியார் - [உன்] தொண்டர்கள், மனம் - மனமானது, இன்று - இத்தினம், களித்திடும் - சந்தோஷித்தலும், ஆகாது-கூடாது, பெண் - பெண்ணைப்போல், அலி ஆண் - ஆண்பேடி, என - என்று சொல்லவும், நாம் என - நாமென்று சொல்லவும்,

வந்த - ஏர்ப்பட்ட, பிணக்கு - வழக்கானது, அறும் - அற்றுநீங்குதலும் - ஆகாது - கூடாது, பேர் - நாமங்களை, அறியாத - அறியப்படாத அனேகபவங்கள் - கணக்கற்றப் பிறவிகளினின்றும், பிழைத்தன - நீங்கிப்பிழைத்தலும், ஆகாது - கூடாது, மண்இலி ஆகிய - கணக்கற்றனவாகிய, சித்திகள் - சித்துகள் - என்னை - அடியேனை, வந்து - தொடர்ந்துவந்து, எய்துவது - பற்றுவதும், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) அடியேனை அடிமையாளாகக்கொண்ட இறைவனாகிய சிவபெருமான் என்கண்முன் எழுந்தருளப் பெற்றால், வேறுவிஷயங்கள் யாவும் எம்மிடத்து நிற்கலாகாது, என்பது.

(வி - ரை.) மதித்தல் - நினைத்தல். அறுதல் - அற்றொழிதல். எண்ணுதற்கரிதாயக் கலக்கமானது அனேக ஜனனத்திற் காலாகாலமாய் வருதலைப் பற்றி "கண்ணிலிகால மனைத்தினும் வந்தகலக்கம்" என்று கூறினார். வானவர் - விண்ணோர்கள். கண் - முதனிலைத் தொழிற்பெயர். காதல் - அன்பு. அலி-பேடி. எய்தல் - அடைதல். (ரு)

பொன்னியலுந்திருமேனிவெண்ணீறுபொலிந்திடுமாகாதே
பூமழைமாதவர்கைகள்குவிந்துபொழிந்திடுமாகாதே
மின்னியனுண்ணிடையார்கள்கருத்துவெளிப்படுமாகாதே
வீணைமுரன்றெழுமோசையிலின்பமிகுத்திடுமாகாதே
தன்னடியாரடியென்றலைமீதுதழைப்பனவாகாதே
தானடியோமுடனேயுயவந்துதலைப்படுமாகாதே
யின்னியமெங்குநிறைந்தினிதாகவியம்பிடுமாகாதே
யென்னைமுனாளுடையீசனெனத்தனெழுந்தருளப்பெறிலே.

(ப - ரை.) என்னை - அடியேனை, முன் - ஆதியில், ஆள் - அடிமையாளாக, உடை - பெற்ற, ஈசன் - ஜகதீசனும், என் - எனது, அத்தன் - தந்தையுமாகிய சிவபெருமான், எழுந்தருள - அடியேன் எதிரில், பெறில் - [வரப்] பெற்றால், பொன் - பசும்பொன்னின்நிறம், இயலும்-அமைந்த, திருமேனி-அழகிய மேனியில், வெண்ணீறு - திருவெண்ணீறு, பொலிந்திடும் - பூசிவிளங்குதலும், ஆகாது-கூடாது, மாதவர்-பெரியதபோதனர்களுடைய, கைகள்-கரங்களானவை, குவிந்து - சேர்த்து, பூ - புட்பத்தால், மழை - மழையைப் போல், பொழிந்திடும்-பொழிந்திடுதலும்,ஆகாது-கூடாது, மின் இயல் - மின்னலின் தன்மைவாய்ந்த, நுண் - நுட்பமாகிய, இடையார் - இடைப்பினையுடையவராகிய மாதரது, கருத்து - எண்ணம், வெளிப்படும் - வெளிப்படுதலும், ஆகாது - கூடாது, வீணை - யாழியானது, முரன்று-சப்திக்குதலால், எழும்-உண்டாகின்ற, ஓசையில் - ஓசையில், இன்பம் - சந்தோஷம், மிகுத்திடும் -

பெறுகுதலும், ஆகாது-கூடாது, தன் - தேவரீ, அடியார் - திருத்தொண்டர்களுடைய, அடி - பாதங்கள், என் - அடியேனது, தலைமீது-சிரசின்மீது, தழைப்பன-பொருந்தச்செய்தலும், ஆகாது-கூடாத, அடியோம் - அடியோங்கள், உடனே - இப்போதே, உய - ஜீவிக்கும்பொருட்டு, தான் - தேவரீரே, வந்து - எழுந்தருளிவந்து, தலைப்படும் - சேர்தலும், ஆகாது - கூடாது, எங்கும் - எல்லாவிடத்தும், இன் இயம்-[கேட்பதற்கு] இனியவாத்தியங்கள், நிறைந்து - நிறைந்து, இனிதாக - இன்பமாக, இயம்பிடும் - சப்தித்தலும், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) அடியேனை ஆதியில் அடிமைத்தொண்டு செய்ய ஆளாகவுடைய இறைவனாகிய சிவபெருமான், என் எதிரே யெழுந்தருளப்பெற்றால் வேறு சிந்தனைகள் சிறிதேனும் அடியேனிடத்து நிகழலாகாது, என்பது.

(வி - ரை.) முன் என்றது ஆதியில்தடுத்தாட்கொண்ட நாளைக்குறித்து. நீறு - விபூதி. மாதவர் - தவத்தில் மேலோர். குவித்தல் - சேர்த்தல். மின்னியல் - மின்னற்கொடி போலத்துவளுநலைக்குறித்து. முரல்ல் - ஓசைப்படுதல். தலைப்படுதல் - சேர்ந்தல். இன்னியம்-ஓர்வார்த்தையாகக் கொள்ளினும்பொருந்தும். (சு)

சொல்லியலாதெழு தூமணியோசைசுவைதருமாகாதே
 துண்ணெனவென் னுளமன்னியசோதிதொடர்ந்தெழுமாகாதே
பல்லியல்பாயபரப்பறவந்தபராபரமாகாதே
 பண்டறியாதபரானுபவங்கள்பரந்தெழுமாகாதே
வில்லியனன்னுதலார்மயலின்றுவிளைந்திடுமாகாதே
 விண்ணவருமறியாதவிழுப்பொருளிப்பொருளாகாதே
யெல்லையிலாதனவெண்குணமானவையெய்திடுமாகாதே
 யிந்துசிகாமணியெங்களையாளவெழுந்தருளப்பெறிலே.

(ப - ரை.) இந்து - [சந்திரனைச் சடாபாரத்திற்றரித்த] சந்திரசேகரனாகிய, சிகாமணி-[அழகுடைய] மாணிக்கம், எங்களை-எங்கள் குடும்ப முழுமையும், ஆள-ஆண்டருளம்பொருட்டு, எழுந்தருள-எதிரே எழுந்தருள, பெறில் - பெற்றால், சொல் - செப்புதற்கு, இயலாத - முடியாதவண்ணம், எழு - [அதனால்] உண்டாகின்ற, தூ-பரிசுத்தமான, மணி - மணியின், ஓசை - சப்தத்தின், சுவை - இன்பத்தை, தரும் - கொடுத்தலும், ஆகாது - கூடாது, துண்ணென-துரிதமாக, என் - அடியேனது, உள்ளம் - எண்ணத்தில் - மன்னிய - நிலைபெற்ற, சோதி-பிரகாசம், தொடர்ந்து - பின்தொடர்ந்து, எழும்-உண்டாகுதலும், ஆகாது - கூடாது, பல் - பலவகை, இயல்பு ஆய - இயல்வையுடைய, பரப்பு - விடயநுகர்ச்சியானது, அற - அற்றொழியும்படி வெ

ழுந்தருளின, பராபரம் - பராபரமும், ஆகாது - கூடாது, பண்டு - முன்ஜநநத்தில், அறியாத - தெரிந்து கொள்ளப்படாத, பரம் - பராபரவத்துவின் உண்மைப்பொருளின், அநுபவங்கள் - அநுபோகமானவைகளானது, பரந்து - விரைந்து, எழும் - எழுதலும், ஆகாது-கூடாது, வில்-வில்லை, இயல் - ஒத்த, நல் - அழகிய, நுதலார் - நெற்றியையுடைய பெண்களினது, மயல் - மோகமானது, இன்று - இத்தினம், விளைந்திடும் - வருதலும், ஆகாது - கூடாது, விண்ணவரும்-தேவர் முதலியயாவரும், அறியாத - தெரிந்து கொள்ளாத, விழு - மேலான, பொருள் - பரம்பொருள், இ-இந்த, பொருள் - பரம்பொருளும், ஆகாது - கூடாது, எல்லை-வரம்பு, இலாதன-ஒன்றுமில்லாதவனாகிய, எண்குணம் - எண்குணங்கள், ஆனவை - ஆகியதும், எய்திடும் - அடைந்திடுதலும், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) சந்திரசேகரனாகிய எம்மிறைவன் எம்மை யடிமைகொண்டு ஆளும் பொருட்டு எதிரில் தோன்றப்பெற்றால், வேறொரு விஷயங்கள் சிறிதேனும் எம்மிடத்து நிகழலாகாது, என்பது.

(வி - ரை.) இந்து - சந்திரன். இயலல் - இசைதல். பரப்பு - விடயநுகர்ச்சியில் விரைவு. பல் - பலகால், அறல் - ஒழிதல், எண்குணம் - தன்வயத்தனாதல், பரிசுத்தவுடம்பினனாதல், இயற்கையிலறிவினனாதல், முழுது முணர்தல், இயற்கெனவே பாசங்கணீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, இதனைவடநூலார் முறையே, சுவதந்திரத்துவம், விசுத்ததேகம், நிராமயான்மா, சருவஞ்ஞத்துவம், அநாதிபோதம், அலுப்தசத்தி, அநந்தசத்தி, திருப்தி என்பார். பண்டு-இங்குமுன்ஜநநத்தைக் குறித்து. (எ)

சங்குதிரண்டுமுரன்றெழுமோசைதழைப்பனவாகாதே
சாதிவிடாதகுணங்களம்மோடுசலித்திடுமாகாதே
யங்கிதுநன்றிதுநன்றெனுமாயையடங்கிடுமாகாதே
யாசையெலாமடியாரடியோமெனுமத்தனையாகாதே
செங்கயலொண்கண்மடந்தையர்சிந்தைதிளைப்பனவாகாதே
சேரடியார்கள்சிவானுபவங்கடெரிந்திடுமாகாதே
யெங்குநிறைந்தமுதூறுபரஞ்சுடரெய்துவதாகாதே
யீறறியாமறையோனெனையாளவெழுந்தருளப்பெறிலே.

(ப - ரை.) ஈறு - இவ்வளவே முடிவென்று, அறியா - தெரிந்து கொள்ளப்படாத, மறையோன் - வேதியனாகவந்த சிவபெருமான், என்னை - அடியேனை, ஆள - தொண்டனாக்கியாண்டருளும் பொருட்டு, எழுந்தருள - நேரிலெழுந்தருள, பெறில் - அடைவேனாகில், சங்கு-சங்குகள், திரண்டு-சேர்ந்து,

மூரன்று - சத்தித்து, எழும் - உண்டாகின்ற, ஓசை - ஓசையானது, தழைப்பன - மிகப்பெறுகுதலும், ஆகாது - கூடாது, சாதி - குலத்தைப்பற்றி, விடாத-விட்டுவிடாத, குணங்கள்-குணங்களும், நம்மோடு - நம்முடனே, சலித்திடும் - சலித்திடுதலும், ஆகாத-கூடாத, அங்கு - சிவலோகத்தில், இது நன்று - ஈது நன்மை நன்மை, எனும்மாயை - என்று சொல்லப்படுகின்ற மகா மாயையானது, அடங்கிடும் - அடங்கிவிடுதலும், ஆகாது - கூடாது, எலாம் - யாவற்று வகையாலும், அடியார் - அடியார்க்கு, அடியோம் - அடியேன், எனும் - என்று சொல்லுகின்ற, ஆசை - விருப்பும், அத்தனை-சிறிதேனும், ஆகாது - கூடாது, செம்-செவ்விய, கயல்-கயல் மீன்போன்ற, ஒண்-ஒப்பற்ற, கண் - கண்களையுடைய, மடந்தையர் - மாதர்களது, சிந்தை - மனமானது, திளைப்பன - நுகர்வனவும், ஆகாது - கூடாது, சீர் - பெருமையையுடைய, அடியார்கள் - தொண்டர்கள், சிவாநுபவங்கள் - சிவபோகவநுபவங்களை, தெரிந்திடும்-தெரிந்துகொள்ளுதலும், ஆகாது-கூடாது, எங்கும் - எவ்விடத்தும், நிறைந்து - குறைபடாமல் நிறைந்து, அமுது - அமிர்தமானது, ஊறு - சுரக்கின்ற, பரஞ்சுடர் - பரஞ்சோதியானது, எய்துவது - அடியேனுக்குக் கிடைப்பதும், ஆகாது - கூடாது, எ - று.

(க - ரை.) தனது முகிவை யாவராலும் காணக்கூடாத இறைவனாகிய சிவபெருமான் அடியேனை ஆளும்பொருட்டு எதிரே யெழுந்தருளப்பெறில், வேறு விவகாரங்கள் சிறிதேனும் அடியேனிடத்து நிகழ்ந்து பொருந்தாது, என்பது.

(வி - ரை.) "சங்குதிரண்டுமூரன்றெழுமோசை" என்றது இடைபிங்கலைகளையடைக்கிச் சுழிமுனையைத் திறந்துபோன விடத்து, அங்ஙனே கேட்கப்படுகின்ற இறைவனாகிய பரமசிவனது திருநடனச் சிலம்போசையைக் குறித்து. இதைப்போன்ற சிலவிஷயநுட்பங்களை அநுபவஞானர்த்த குருமுகத்தால்தெரியப்பட வேண்டியிருப்பதலால், இங்ஙனம் விரித்துரைக்கப் படவில்லை. (அ)

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# ஆனந்தமாலை.

## சிவானுபவவிருப்பம்.

[சிவானுபவ விருப்பம் என்பது சிவாநந்த மேலீட்டில் கிரியாசத்தி யழிவுரைத்தல்.]

திருச்சிற்றம்பலம்.

ஆசிரியவிருத்தம்.

மின்னேரனையபூங்கழல்களடைந்தார்கடந்தார்வியனுலகம்
பொன்னேரனையமலர்கொண்டுபோற்றாநின்றாரமரரெல்லாங்
கன்னேரனையமனக்கடையாய்க்கழிப்புண்டவலக்கடல்வீழ்ந்த
வென்னேரனையேனினியுன்னைக்கூடும்வண்ணமியம்பாயே.

(ப - ரை.) மின் ஏர் - மின்னலின் அழகை, அனைய - ஒத்த, பூ - தாமரைமலர்போன்ற, கழல்கள் - திருவடிகளை, அடைந்தார் - சேர்ந்தோர்கள், வியன் - பெரிதாகிய, உலகம் - உலகத்தின்கண்ணுள்ள மாய்கையை, கடந்தார் - வெற்றிபெற்று ஒழிந்தார்கள், அமரர் - தேவலோகத்தார், எல்லாம் - யாவரும், பொன் ஏர்-பொன்னைப்போன்ற அழகை, அனைய - ஒத்த, மலர் - தாமரைமலரை, கொண்டு-கரத்திலெடுத்து, போற்றாநின்றார், அருச்சியா நின்றார்கள், [அவ்வாறாகில்] கல்நேர் - கல்லை, அனைய - நிகர்த்த, மனம் - மனத்தையுடைய, கடையாய் - கீழ்ப்பட்ட கடையனாகி, கழிப்பு உண்டு - ஒழிக்கப்பட்டு, அவலம் - துன்பப்பெருக் கென்னும், கடல் - சாகரத்தில், வீழ்ந்த - விழுந்த, என்நேர் அனையேன் - என்னை நானே நிகர்த்தவனாகிய நான், இனி - இனிமேல், உன்னை - தேவரீரை, கூடும்- அடைந்துவாழும், வண்ணம் - விபரம், இயம்பாய் - அன்புகூர்ந்து சொல்லாய், எ - று.

(க - ரை.) இறைவனாகிய சிவபெருமானே? தேவரீர் திருவடியையடைந்தவர்கள், தேவலோகத்தில் வாழும் பிரமவிட்டுணு முதலிய தேவர்களும் தாமரைமலர்களால் அருச்சித்து தேவரீரை வணங்காநின்றார்கள், [அவ்வாறி

ருக்க] கல்மனத்தையுடையவனும் நாயினும் கடைப்பட்டவனுமாகிய அடியேன் இப்பெருந்துன்ப சாகரத்திலுழன்று அழுந்துவேனாகியயான் இனி உந்தனைக்கூடும் விதம் சற்றுப்புகல்வாயாக, என்பது.

(வி - ரை.) மின்னேரனைய என்பதை மின் - நேர் - அனைய எனப்பிரித்து மின்னலை நிகர்த்த அத் தன்மைந்தாகிய என்று சொல்லினும் பொருந்தும், சிவபெருமானுக்கு தாமரைமலர் விசேடவிருப்பமாதலால், இங்ஙனம் "பூ" என்றுரைத்தார். பொன்னேரனைய என்பதற்கும் இவ்வாறேயுரைக்கலாம். கடை - கீழ்ப்பட்ட. அவலம் - துன்பம். என்னேரனையேன் என்றது தாழ்மையினால் தனக்குத்தானே ஒப்பவன் என்றபடி. இயம்பல் - சொல்லல். (க)

என்னாலறியாப்பதந்தந்தாயான்றறியாதேகெட்டே
னுன்னாலொன்றுங்குறைவில்லையுடையாயடிமைக்காரென்பேன்
பன்னாளுன்னைப்பணிந்தேத்தும்பழையவடியரொடுங்கூடா
தென்னாயகமேபிற்பட்டிங்கிருந்தேனோய்க்குவிருந்தாயே.

(ப - ரை.) என்னால் - அடியேனால், அறியா - காணப்படாத, பதம் - [முத்திவீட்டிவிருக்க] இடத்தை, தந்தாய் - [அடியேன்மீது அன்புவைத்துக்] கொடுத்தாய், யான் - அடியேன், அது அப்பெருமையை, அறியாதே - தெரிந்துகொள்ளாமலே, கெட்டேன் - [வீணே] பாழாகினேன், [அவ்வாறிருக்க] உன்னால் - தேவரீரால், ஒன்றும் - யாதொன்றும், குறைவு - குறைபாடு, இல்லை - [சிறிதேனும்] இல்லை, உடையாய் - [எப்பாக்கியத்தையும்] பெற்றிருப்பவனே? அடிமைக்கு - [தொண்டனாகிய] அடியேனுக்கு, யார் - தேவரீரைவிட எவர்கள், இருக்கிறார்கள் - [உதவிசெய்ய] இருக்கிறவர்கள், என்பேன் - என்றுசொல்வேன்! பல் - அனேக, நாள் - அடியேனைத்தடுத்தாட்கொண்டநாளாக, உன்னை - தேவரீரை, பணிந்து - [கைகூப்பித்தலை] வணங்கி, ஏத்தும் - போற்றிசெய்கின்ற, பழைய - புராதன, அடியாரொடும் - தொண்டர்களோடும், கூடாது - சேர்ந்துவாழாமல், என் - அடியேனது, நாயகமே - நாயனாகிய சிவபெருமானே! பிற்பட்டு - பிறகிட்டு, இங்கு - இங்ஙனே, நோய்க்கு - பலவித ஆழ்வினைகளுக்கு, விருந்தாய் - விருந்தாகி, இருந்தேன் - வீணே கெட்டிருந்துவிட்டேன், எ - று.

(க - ரை.) அடியேனால் தெரிந்து கொள்ளப்படாத இருப்பிடமாகிய முத்திவீட்டைக் கிருபைசெய்துகொடுத்தாய், [அவ்வாறீய்ந்ததை] அடியேனதனைச் சற்றேனும்அறியாமல் வீணேகெட்டேன், தேவரீரின்மீது சிறிதேனும் குற்றமில்லை எல்லாபாக்கியத்தையுமுடையவனே! தொண்டனாகிய அடியேனுக்கு உற்றவுதவியாவர்? ஒருவரையுங் கண்டிலேன்! எக்காலமும் தேவரீரைவணங்கிபோற்றுகின்ற புராதன அடியாரோடும் சேர்ந்து வாழாமல் சிவபெருமானே! நோய்களுக்கு உணவாக இங்ஙனே வீணே இருந்தேன், என்பது.

(வி - ரை.) அறியாமல் - தெரியாமல். பதம் - முத்திவீடு. (பதவி.) ஒன்றும் என்றது இங்கு சிறிதேனும் என்றபடி. பழைய - புராதன. (உ)

சீலமின்றிநோன்பின்றிச்செறிவேயின்றியறிவின்றித்
தோலின்பாவைக்கூத்தாட்டாய்ச்சுழன்றுவிழுந்துகிடப்பேனை
மாலுங்காட்டிவழிகாட்டிவாராவுலகநெறியேறக்
கோலங்காட்டியாண்டானைக்கொடியேனென்றேகூடுவதே.

(ப - ரை.) சீலம் - நல் நடக்கை, இன்றி - இல்லாமல், நோன்பு - விரதம், இன்றி - இல்லாமல், செறிவு - தாழ்மை, 'இன்றி - இல்லாமல், அறிவு - புத்தி, இன்றி - இல்லாமல், தோலின் - தோலினாற்செய்த, பாவை - பதுமையானது, கூத்தாட்டு ஆய் - நாட்டியஞ்செய்வதுபோல, சுழன்று - எங்குஞ் சுழன்று, விழுந்துகிடப்பேனை - வீழ்ந்துகிடக்கின்ற அடியேனை, மாலும் - தன்னிடத்தேவிருப்பமும், காட்டி - உண்டாக்கி, வழிகாட்டி - நன்னெறியைக் காண்பித்து, வாரா உலகத்தில் - முத்தியுலகத்தில், நெறி - முறையாய், ஏற - ஏறும்படி, ஆண்டானை - அடிமையாளாக்கிக் கொண்டாண்டருளினவனை, கொடியேன் - கொடியேனாகிய அடியேன், கூடுவது-தேவரீரது திருவடியின் நிழலில் அடைவது, என்றே - எத்தினமோ ! எ - று.

(க - ரை.) நல் நடக்கை, நோன்பு, அடக்கம் முதலியவைகளில்லாமல் தோலினாற் செய்த பதுமையைப்போல் கூத்தாடும் தன்மையாய் வீணே சுழன்று விழுந்து கிடக்கின்ற அடியேனை,தன்னை சதாவிரும்பும்படி செய்து, நன்மார்க்கத்தையுங் காட்டிமோக்ஷவீட்டி லேறும்படித் தனது திருக்கோலத்தையுங் காண்பித்து, அடியேனை ஆண்டருளின சிவபெருமானை கொடியேன் சென்று சேருவது எத்தினமோ ! என்பது.

(வி - ரை.) சீலம் - நன்நடக்கை, ஒழுக்கம். நோன்பு - விரதம், தோலின்பாவை - தோலினாற்செய்தபதுமை. வழி - நெறி. (ந)

கெடுவேன்கெடுமாகெடுகின்றேன்கேடிலாதாய்பழிகொண்டாய்
படுவேன்படுவதெல்லாநான்பட்டாற்பின்னைப்பயனென்னே
கொடுமாநரகத்தழுந்தாமேகாத்தாட்கொள்ளுங்குருமணியே
நடுவாய்நில்லாதொழிந்தக்காலென்றேவெங்கணாயகமே.

(ப - ரை.) கெடுவேன் - வீணே பாழாகின்றேன், கெடுமா - கெட்டுப் போகும் விதமாக, கெடுகின்றேன்-பாழாய்ப் போகின்றேன், கேடு-யாதொரு குற்றமும், இலாதாய் - இல்லாதவனாகிய சிவபெருமானே ? பழி-(நீ) நிந்தனையை, கொண்டாய் - ஏற்றுக்கொண்டாய் ! படுவேன் - துன்பப்படுவேன், படுவது - இனி அனுபவிக்கவேண்டிய, எல்லாம் - யாவத்தும், நான் - அடியேன், பட்டால் - அத்துயர்தனை யடைந்தால், பின்னை - இனி, பயன்-வரும்பிரயோ

சனம், என்னே - யாதோ ! (ஆனதால்) கொடுமா - ரௌரவாதி, நரகத்து - நரகத்தில், அழுந்தாமே - வீழ்ந்துழலாவண்ணம், காத்து - இது தருணம் காப்பாற்றி, ஆட்கொள்ளும் - ஆட்கொள்ளுகின்ற, குருமணியே-குருமூர்த்தமாய் எழுந்தருளிவந்த மாசிலாமணியே ! நடு ஆய் - பொதுநிலையாய், நில்லாது-(நீ) நிற்காமல், ஒழிந்தால் - எங்ஙனமாயினும் சென்றால், எங்கள் - எமது, நாயகமே - தலைவனே ! நன்றே - உன்பெருமைக்குப் புகழாகுமோ ! எ - று.

(க - ரை.) என்றும் அழிவில்லாதவனாகிய சிவாநந்தமே ! அடியேன் வீணே கெடுகின்றேன் ! யான் துயரப்பட்டால் தேவரீருக்குச் சிறிதேனும் பயனுண்டோ ! கொடிய நரகத்தில் வீழ்ந்துழலாமல் கடையனேனைக் காப்பாற்றி யாண்டருள்கின்ற மாசிலாமணி யீசனே ! தேவரீர் பொதுத்தன்மையை யொழித்தால், அது உன் கீர்த்திக்குப் புகழாமோ ! என்பது.

(வி - ரை.) படுதல்-இங்ஙனம் அடைதலைக்குறித்து. கெடுமாகெடுதல்-நவறாமல் அழிதல். கொடு - கொடியது. தன்னை ஆட்கொள்ளநிமித்தம் அன்று திருப்பெருந்துறையின் கண்ணே குருந்தமரத்தினடியிற் குருமூர்த்தமாய் எழுந்தருளினதைப்பற்றி “குருமணி” என்று கூறினார். நடுவாய் நிற்றல் - வேறுபாற் சென்று நிற்காமல் நடு நிலையாய் நிற்குதல். (ச)

---

தாயாய்முலையைத்தருவானேதாராதொழிந்தாற்சவலையாய்
நாயேன்கழிந்துபோவேனோநம்பியினித்தானல்குதியே
தாயேயென்றுன்றாளடைந்தேன்றயாநீயென்பாலில்லையே
நாயேனடிமையுடனாகவாண்டாய்நான்றான்வேண்டாவோ.

(ப - ரை.) தாயாய் - தேவரீர் அன்னையாகி, முலையை - ஸ்தன்னியத்தினுன்று, தருவானே - பசிக்குப்பால் கொடுப்பவனே ! தாராது - அவ்வாறு கொடாமல், ஒழிந்தால் - நீங்கியிருந்தால், சவலை ஆய் - மெலிந்த எந்துங் குழந்தையைப்போல், நாயேன் - நாயினுங்கடைப்பட்ட அடியேன், கழிந்து -அழிந்து, போவேனோ - வீணே போய் விடுவேனோ! நம்பி - இறைவனாகிய சிவபெருமானே ! இனித்தான் - இனிமேலாயினும், நல்குதியே - கிருபை செய்வையோ ! தாயே - என்னைப் பெற்றெடுத்த அன்னையைப்போன்ற சிவபெருமானே ! என்று - பலகாற் புகழ்ந்து, உன் - தேவரீரது, தாள் - திருவடியை, அடைந்தேன் - கிட்டிச் சேர்ந்தேன், நீ - கருணாகரமூர்த்தியே! என்பால்-அடியேன் பொருட்டு, தயா - காருண்யம், இல்லையே - இல்லையோ ! நாயேன் - நாயினுங்கடைப்பட்ட அடியேனது, அடிமை - தொண்டின் வல்லமையையும், உடன் ஆக -ஒன்றுசேர, ஆண்டாய் . ஆண்டருளினாய், நான்தான் - நான்மாத்திரம், வேண்டாவோ - வேண்டாமோ, எ - று.

(க - ரை.) ஈன்றதாயைப்போல் வந்து ஸ்தனத்தை காட்டி யூட்டும் சிவ பெருமானே? தேவரீர் அவ்வாறுவந்தும் அமிர்தம்போன்ற பதத்தைக்கொடா தொழிந்தால், அடியேன் மெலிந்த குழந்தையாய் அழிந்து போகலாமா? இனி மேலாயினும் கிருபைசெய்ய வேண்டும், அன்னையே என்று தேவரீர் திருவடி யையடைந்தேன். ஆதலால், உமக்கு அடியேன்மீது தயையில்லையோ ! யான் உமக்கு வேண்டாவோ ! என்பது.

(வி-ரை) சவலை - தளர்ச்சியுள்ள சிசு. நல்குதல்-அருட்செய்தல். நான் தான் என்றது நான் எனக்குறித்து. (ரு)

கோவேயருளவேண்டாவோகொடியேன்கெடவேயமையுமே
யாவாவென்னுவிடிலென்னையஞ்சேலென்பாராரோதான்
சாவாரெல்லாமென்னளவோதக்கவாரன்றென்னாரே
தேவேதில்லைநடமாடதிகைத்தேனினித்தான்றேற்றாயே.

(ப - ரை.) கோவே - நடராசப்பெருமானே ! அருளவேண்டாவோ - நீ அடியேனுக்குக் கிருபை செய்யவேண்டாமோ, கொடியேன் - கொடியேனா கியயான், கெட - அனியாயமாய் கெட்டுப்போக, அமையுமே - அமையுமோ ? ஆவா - ஐயோ ! என்னுவிடின் - (தேவரீர்) என்று சொல்லியிரக்கங்கொள்ளா விடின், அஞ்சேல் - (யாதொன்றுக்கும்) பயப்படாதே, என்பார் - என்றுசொ ல்பவர், ஆரோ - (உம்மைவிட) எவருளரோ ! சவார் - இறப்போர், எல்லாம் - யாவரும், என் - அடியேன்பொருட்டு, அளவோ - ஆகவோ, தக்க - இது தகு தியாகிய, ஆர் அன்று - நன்மார்க்கமென்று, என்னாரோ - ஓர்மொழியுரையா ரோ ! தேவே-தேவாதி தேவனே ! தில்லைநடம் ஆட-சிதம்பரத்தின்கண்ணே அம்பலத்தில் திருநடஞ் செய்கின்ற நடராஜப்பெருமானே ! திகைத்தேன் - யாதொன்றுந்தோன்றாமல் மதியமயங்கினேன் ! [ஆதலால்] இனித்தான் - இனிமேலாயினும், தேற்றாய் - அடியேனைத் தெளிவிப்பாயாக, எ - று.

(க - ரை.) இறைவனாகிய சிவபெருமானே ? நீ அடிமையின் கருத்தறி ந்து அருட்செய்ய வேண்டாமோ! கொடியேனாகிய பாவிகெடில் உன் திருவுள ப்பாங்குக்குத் தகுதியோ! நீயே என்பொருட் டிரங்காவிடில் யார் என்னைக்கி ட்டி வந்து பயப்படாதே என்று சொல்பவர் ! நானோ வீணே மயங்கினேன், இனியாகிலும் அடியேனைத் தெளிவிப்பாயாக, என்பது.

(வி - ரை.) கோ என்பது-இங்குயாவர்க்கும் இறைவனாகிய பரமசிவன். அமையுமே என்பதில் ஈற்றேகாரம்வினா. அளவு - பங்கு. திகைத்தல் - மயங் குதல். (சு)

நரியைக்குதிரைப்பரியாக்கிஞாலமெல்லாநிகழ்வித்துப்
பெரியதென்னன்மதுரையெல்லாம்பிச்சதேற்றும்பெருந்துறையா
யரியபொருளேயவநாசியப்பாபாண்டிவெள்ளமே
தெரியவரியபரஞ்சோதிசெய்வதொன்றுமறியேனே.

(ப - ரை.) நரியை - காட்டில் வாழாநின்ற நரிகளை, பரிகுதிரை ஆக்கி- வாகனமாகத்தாங்குகின்ற குதிரையாக்கி, ஞாலம் - உலகம், எல்லாம் - எங்கணும், நிகழ்வித்து - உலாவச்செய்து, பெரிய - பெரிதாகிய, தென்னன் - பாண்டியனது, மதுரை - மதுரைப்பதி, எல்லாம் - முழுதும், பிச்சு - பயித்தியம்போல், ஏற்றும் - செய்தருளிய, பெருந்துறையாய் - திருப்பெருந்துறைப்பதியையுடைய சிவபெருமானே ! அரிய - யாவர்க்கு மரிதாகிய, பொருளே - பொக்கிஷமே ! அவநாசி - அவிநாசிப்பதியி லெழுந்தருளி யிருக்கும், அப்பா - என் அப்பனே ! பாண்டி - மதுரைப்பதிக்கு, வெள்ளமே - பேரின்பப்பெருக்கே ! தெரிய-காணுதற்கு, அரிய - அருமையாகிய, பரஞ்சோதி - பரஞ்யோதிவே ! செய்வது-தேவரீருக்குச் செய்தற்குரியதை, ஒன்றும் - யாதொன்றும், அறியேன் - சிறிதேனும் தெரிந்தேனில்லை, எ - று.

(க - ரை.) காட்டு நரிகளைக் குதிரைகளாகச்செய்து, பூலோகமுழுதும் பாவச்செய்து மதுரைமா நகரத்தார்க் கெல்லாம் பித்தைப்போன்ற வியப்பையுண்டாக்கின திருப்பெருந் துறைப்பதியையுடைய சிவபெருமானே ! காணுதற்கரிய பொருளே! அவிநாசிப்பதியி லெழுந்தருளியிருக்கும் என் அப்பனே! பாண்டிவெள்ளமே! காணக்கூடாத மேலான ஜோதியே! தேவரீருக்குச் செய்தற்குரியகாரியத்தைச் சிறிதேனும் அறிந்தேனில்லை ! என்பது.

(வி - ரை.) பரி - முதனிலைத் தொழிலாகுபெயர். அவநாசி என்பது ஓர் திவ்யக்ஷேத்திரத்தின் நாமதேயம். (எ)

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்.

# அச்சோப்பதிகம்.

அநுபவவழியறியாமை.
[அநுபவ வழியறியாமை என்பது அநுபவத்ததிசயர்,]

திருச்சிற்றம்பலம்.

கலிவிருத்தம்.

முத்திநெறியறியா தமூர்க்கரொடுமுயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப்பழவினைகள்பாறும்வண்ணஞ்
சித்தமலமறுவித்துச்சிவமாக்கியெனையாண்ட
வத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) முத்தி - முத்திவீட்டின், நெறி - வழியை, அறியாத - தெரியாத, மூர்க்கரொடு-அறிவீனர்களுடன், முயல்வேனை - சேர்ந்து திரிவேனாகிய எனக்கு, பத்தி - உன்பொருட்டு பத்தியோடிருக்கும், நெறி-மார்க்கத்தை, அறிவித்து-தெரிவித்து, பழ-புராதனமாகிய, வினைகள் - வினைகளை, பாறும்-நீங்கும், வண்ணம் - விதம், சித்தம் - மனத்தினது, மலம் - களங்கத்தை, அறுவித்து - அறும்படி கிருபைசெய்து, சிவம் ஆக்கி - சிவமாச்கி, என்னை - அடியேனை, ஆண்ட - தொண்டனுக்கிக் கொண்டருளின, அத்தன்-எனதுதாதையாகிய கருணாகடவுள், எனக்கு - எந்தனுக்கு, அருளின - கிருபைசெய்த, ஆறு - விதம், ஆர் - எவர், பெறுவார் - அதையடைதற்குரியவர், அச்சோ-இது என்ன ஆச்சரியம்! எ - று.

(க - ரை.) முத்திவீட்டின் வழியை யறியாத மூர்க்கரோடு சேர்ந்துதிரிகின்ற அடியேனுக்குப் பத்திமார்க்கத்தைத் தெரிவித்து, எனது தொன்மையாகிய வினைகள் நீங்கும் விதமும், மனத்தின்களங்கமும் ஒழியச்செய்து, சிவமாக்கி யென்னையாண்டருளின எந்தன் தந்தையாகிய சிவபெருமான், அடியேனுக்கு அருள்செய்த விதம் இனியாவர் அடைவர், இது ஆச்சரியம், என்பது.

(வி - ரை.) முத்தி - மோட்சம். நெறி - வழி. மூர்க்கர்-[யாதொன்றுந் தேரியாத] மூடர்கள். பத்தி -அன்பு. பாறல் - ஓடல். பாறல் - வியங்கோண் முற்று. அச்சோ - இரக்கச்சொல். (க)

நெறியல்லாநெறிதன்னைநெறியாகநினைவேனைச்
சிறுநெறிகள்சேராமேதிருவருளேசேரும்வண்ணங்
குறியொன்றுமில்லாதகூத்தன்றன்கூத்தையெனக்
கறியும்வண்ணமருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) நெறி - மார்க்கம், அல்லா - இல்லாத, நெறி - வழியை, நெறி ஆக - தக்கவழியென்று, நினைவேனை - எண்ணுகின்ற அடியேனை, சிறு - சிறிய, நெறிகள் - வழிகளை, சேராமே - பற்றாமல், திரு - அழகாகிய, அருளே - அருளையே, சேரும் - அடையும், வண்ணம் - விதம், குறி - அடையாளம், ஒன்றும் - யாதொன்றும், இல்லாத - இருக்காத, கூத்தன் - நடராஜப்பிரபுவினது, கூத்தை - நடனத்தை, எனக்கு - அடியேனுக்கு, அறியும் - தெரிந்து கொள்ளும், வண்ணம் - விதத்தை, அருளிய - கிருபைசெய்த, ஆறு - விபரத்தை, ஆர் - எவர், பெறுவார் - பெறுதற்குரியர், அச்சோ - (இது என்ன) ஆச்சரியம், எ - று.

(க - ரை.) மார்க்கமில்லாத மார்க்கத்தை நன்மார்க்கமென்று நினைக்கின்ற அடியேனை அற்பமார்க்கங்களிற் சேராமல் திருவருளையே அடையும்படி நடராஜப்பெருமான் தனது திருநடனத்தை அடியேனுக்கு அறிவித்ததுபோல அறிவிக்கப்பெறுவோர் யாவர் உளர்! இது ஆச்சரியம்! என்பது.

(வி - ரை.) நெறி அல்லா நெறி என்பது கொடிய வழி. சிறு நெறி என்பது அன்னிய சமயமார்க்கம். குறி - அடையாளம். கூத்தன் - இங்கு நடராஜப்பெருமானைக்குறித்து. (உ)

பொய்யெல்லாமெய்யென்றுபுணர்முலையார்போகத்தே
மையலுறக்கடவேனைமாளாமேகாத்தருளித்
தையலிடங்கொண்டபிரான்றன்கழலேசேரும்வண்ண
மையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) பொய் - அழியும் பதார்த்தங்கள், எல்லாம் - யாவும், மெய் - அழியாப்பொருள்கள், என்று - சந்தோஷித்து எண்ணி, புணர்முலையார் - நெருங்கிய இருதனங்களையுடையமாதரது, போகத்தே - சிற்றின்பத்தின்கண்ணே, மையல் - மாய்கையில், உறக்கெடுவேனை - வீணே மிகக்கெடுவேனாகிய அடியேனை, மாளாமே - (அதனால் உழன்று) சாகாமல், காத்தருளி - கிருபையுடன் காத்தருளி-தையல்-பார்ப்பதியை, இடம்கொண்ட - வாமபாகத்திற்கொண்ட, பிரான் - சிவபிரான், ஐயன் - ஐயன், தன் - தனது, கழலே - திருவடிகளையே, சேரும் - அடைந்து வாழும், வண்ணம் - விதம், எனக்கு - அடியேனுக்கு, அருளிய - கிருபைசெய்த, ஆறு - விதம், ஆர் - எவர், பெறுவார் - பெறுதற்குரியர், அச்சோ - (இது என்ன) ஆச்சரியம், எ - று.

(க - ரை.) வீணில் அழியும் பொருள்களெல்லாம் அழியாப்பொருளெனமதித்து மாதர்களது மோகவலையிற்சிக்கி பிறகு மாய்கின்ற அடியேனைக்சாந்தருளி, யாவராலுங் காணுதற்கரிய தனது திருவடியையே சேரும்வண்ணம் இறைவனாகிய நடராஜப்பெருமான் எனக்குக்கிருபைசெய்தது போல அருள் செய்யப் பெறுவோர் யாவர் பெறுதற்குரியவர், இது ஆச்சரியம்! என்பது.

(வி - ரை.) பொய்-இங்கு அழியும்பொருளைக்குறித்து. மெய் பொருள்-சுகானந்தவாழ்வு. மாளாமல் - சாகாமல். புணர்தல் - நெருங்குதல். போகம் - சுகம். கழல் - திருவடி. (ரு)

மண்ணதனிற்பிறந்தெய்த்துமாண்டுவிழக்கடவேனை
யெண்ணமிலாவன்பருளியென்னையாண்டிட்டென்னையுந்தன்
சுண்ணவெண்ணீறணிவித்துத் தூய்நெறியேசேரும்வண்ண
மண்ணலெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) மண்ணதனில் - இப்பூலோகத்தின்கண்ணே; பிறந்து - ஜென்மித்து, எய்த்து - இளைத்து, மாண்டு - மடிந்து, விழக்கடவேனை - விழப்போகின்ற அடியேனை, எண்ணம் இலா - கணக்கற்ற, அன்பு - பேரன்பை, அருளி - கிருபைசெய்து, என்னையும் - அடியேனையும், தன் - தேவரீரது, சுண்ண - பொடிபோன்ற, வெண்ணீறு - திருவெண்ணீற்றை, அணிவித்து - திரேகமுழுதும் தரிக்கச்செய்து, தூ-களங்கமற்ற, நெறியே-மார்க்கத்தையே, சேரும் வண்ணம்-அடைந்துவாழும் விதம், அண்ணல் - யாவர்க்கும் பெரியோனாகிய சிவபெருமான், எனக்கு - அடியேனுக்கு, அருளிய - கிருபை செய்த, ஆறு - விதம், ஆர் - எவர், பெறுவார் - அடைதற்குரியவர், அச்சோ - (இது என்ன) ஆச்சரியம்! எ - று.

(க - ரை.) இப்பூலோகத்தின்கண்பிறந்து வீணே இளைத்து மாண்டொழியக்கடவேனாகிய அடியேனைச் சிவபெருமான் தனது திருவெண்ணீற்றையணியும்படிச்செய்து,நன்னெறியை யடையச்செய்தருளினது போல இனி யார் அருட்செய்யப்பெறுவோர், ஆச்சரியம்! என்பது.

(வி - ரை.) மண் என்றது பூலோகத்தைக்குறித்து. எண்ணம் - அளவு. சுண்ணம் - பொடி. தூநெறி - குற்றமற்றவழி. (சு)

பஞ்சாயவடிமடவார்கடைக்கண்ணாலிடர்ப்பட்டு
நெஞ்சாயதுயர்கூரநிற்பேனுன்னருள்பெற்றே
னுய்ஞ்சேனானுடையானேயடியேனைவருகவென்
றஞ்சேலென்றருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) பஞ்சு - இலவம்பஞ்சு, ஆய - போல்வனவாகிய, அடி - இரண்டுபொதங்களையுடைய, மடவார்-பெண்களது, கடைக்கண்ணால் - கடைக்கண்ணின் பார்வையினால், இடர் - துன்பமென்னும் வலையில், பட்டு - அகப்பட்டு, நெஞ்சு ஆய - மனத்திலுண்டாகிய, துயர்-துன்பமானது, கூர - பெருகும்படி, நிற்பேன் - நிற்கின்றவனாகிய அடியேன், உன் - தேவரீரது, அருள் - கிருபையை, பெற்றேன் - அடைந்தபடியால், நான் - யான், உய்ஞ்சேன் - பிழைத்தேன், உடையானே - எப்பாக்கியங்களையு முடையவனாகிய சிவபெருமானே! அடியேனை - தொழும்பனேனை, வருக - கிட்டிவருவாய், என்றும் - என்றென்றைக்கும், அஞ்சேல்-(இனியாதொன்றுக்கும்) பயப்படவேண்டாமென்று! அருளிய - கிருபைசெய்த, ஆறு - விதம், ஆர் - யாவர், பெறுவார் - அடைதற்குரியவர்! (ஒருவருமில்லை) அச்சோ-(இது என்ன) ஆச்சரியம்! எ-று.

(க - ரை.) மிருதுவாகிய இருபாதங்களையுடைய மாதர்களது கடைப்பார்வையிலகப்பட்டுத் துன்புற்றுமனம் வருந்தப்போகிற அடியேன் தேவரீர் அருள்பெற்றுப் பிழைத்தன்றி, இனி யாதொன்றுக்கும் பயப்படாதே என்னைக் கிட்டிவருவாயென்றும் அருள்செய்ததுபோல, (அவ்விதக்கிருபையை) யடைந்து உய்பவர்யாவர்! ஒருவருமில்லை, இது ஒன்ன ஆச்சரியம்! என்பது.

(வி - ரை.) இடர் - துன்பம். உய்ஞ்சல்-பிழைத்தல். மடவார் -மடமை தங்கிய மாதர்கள். அஞ்சுதல்-பயப்படுதல். அருள்-கிருபை. (ரு)

வெந்துவிழுமுடற்பிறவிமெய்யென்றுவினைபெருக்கிக்
கொந்துகுழற்கோல்வளையார்குவிமுலைமேல்வீழ்வேனைப்
பந்தமறுத்தெனையாண்டுபரிசறவென்றுரிசுமறுத்
தந்தமெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) வெந்து - வீணே அழிந்து, விழும் - நீறாய்ப்போகின்ற, உடல் - உடம்பினது, பிறவி - பிறத்தலை, மெய் என்று - நிச்சயமென்று, வினை - வினைகளை, பெருக்கி - மிகப்பெருகச்செய்து, கொந்து - பூக்கொத்தணிந்த, குழல் - கூந்தலையுடைய, கோல் வளையார் - அழகியவளையல்களையணியும்மாதர்களது, குவி - குவிந்த, முலை - ஸ்தனத்தின், மேல் - மீது, வீழ்வேனை-இச்சையையுடைய அடியேனை, பந்தம் - அவ்வாசர்பாசபந்தத்தை, அறுத்து - கொய்து, என்னை - அநாதியாகிய அடிமையை, ஆண்டு - தடுத்தாண்டருளி, பரசு - அக்குணமானது, அற - அற்றொழியும்படி, என் - அடியேனது, துரிசும் - அவ்வாருள்ள குற்றத்தையும், அறுத்து - சேதித்து, அந்தம் - வேதமுடிவான பொருளை, எனக்கு- அடியேனுக்கு, அருளிய- அருள்செய்த,ஆறு -விதம், ஆர் - எவர், பெறுவார்-அடைவார்கள்! அச்சோ-(இதென்ன) ஆச்சரியம்!

(க - ரை.) வீணே வெந்தொழிதற்குரிய இவ்வுடம்பின் தோற்றத்தை மெயென்று மழியாமலிருக்கு மென்றெண்ணி, வினைகளைப்பெருக்கி மாதர்களின்

தனங்களின்மீது இப்பாழ் மனத்தின் தூண்டுகோலால் விழப்போவேனாகிய அடியேனை, அப்பந்தமானது எனைத்தொடாமல் சேதித்து ஆண்டுகொண்டு, எனது பெருங்குற்றங்களைக்களைந்து முடிவான பொருளை யருட்செய்தது போல அருள்செய்யப் பெறுவோர் யாவருளர்! என்பது.

(வி - ரை.) உடற்பிறவி - இங்கு உடம்போடு பொருந்தி பிறக்கும் பிறப்பு எனினுமமையும். கொத்து என்றது கொந்து என மெலித்தல் பெற்றது. பரிசு - குணம். துரிசு - குற்றம். அந்தம் - வேதமுடிவான பொருள். (சு)

தையலார்மையலிலே தாழ்ந்துவிழக்கடவேனைப்
பையவேகொடுபோந்துபாசமெனுந்தாழுருவி
யுய்யுநெறிகாட்டுவித்திட்டோங்காரத்துட்பொருளை
யையனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) தையலார் - மாதர்களது, மையலிலே - மோகமயக்கத்திலே, தாழ்ந்து - அவர்கட்குத்தாழ்ந்து, விழக்கடவேனை - விழக்கடவேனாகிய அடியேனை, பையவே - மெல்லவே, கொடுபோந்து-கைபிடித்துவந்து, பாசம் என்னும் - பாசமென்கின்ற, தாழ் உருவி - கதவுக்கிடுந்தாழ்க்கோலை வாங்கி, உய்யும்-சதாபிழைத்திருக்கும், நெறி-நன்மார்க்கத்தை, காட்டு வித்திட்டு-காண்பித்து, ஓங்காரத்து - பிரணவத்தின், உட்பொருளை - இரகசியார்த்தப் பொருளை, ஐயன் - ஐயனாகிய சிவபெருமான், எனக்கு - அடியேனுக்கு, அருளிய - கிருபைசெய்த, ஆறு - வண்ணம், ஆர் - யாவர், பெறுவார் - பெறுதற்குறியவர்! அச்சோ - (இது என்ன) ஆச்சரியம்! எ - று.

(க - ரை.) மாதர்களின் இச்சையென்னும் கடலில்வீழ்ந்து அழுந்துவேனாகிய அடியேனை, மெல்லெனக்கொடுவந்து பாசத்தாளை நீக்கி, எந்நாளும் உய்யும் வழியைக்காண்பித்து, பிரணவப்பொருளை இறைவனாகிய சிவபெருமான் அடியேனுக் கருள்செய்ததுபோல,அவ்வருள் செய்யப்பெறுவோர் யாவர்! என்பது.

(வி - ரை.) மையல் - சிற்றின்பமயக்கம். பைய - மெல்லென. உருவல் - வாங்கல். உட்பொருள் - இரகசியார்த்தப்பொருள். ஐயன்-இங்கு சிவபெருமானைக் குறித்து. (எ)

சாதல்பிறப்பென்னுந்தடஞ்சுழியிற்றடுமாறிக்
காதலின்மிக்கணியிழையார்கலவியிலே விழுவேனை
மாதொருகூறுடையபிரான்றன்கழலேசேரும்வண்ண
மாதியெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) சாதல் - இறப்பு, பிறப்பு - பிறப்பு, என்றும் - என்றுசொல்லப் படுகின்ற, தடம் சுழியில் - பெருஞ்சுழலிற்சிக்கி, தடுமாறி - தடுமாற்றம

டைந்து, காதலின்-பேராசையில், மிக்கு - மிகுதியாகி, அணி இழையார்-திரு வாபரணங்களையுடைய மாதரது, கலவியிலே-சையோகத்திலே, விழுவேனை - விழப்போகின்ற அடியேனை, மாது-பார்வதியை,ஒருகூறு - ஓர்பக்கம், உடைய பிரான் - உடைத்தாகிய சிவபெருமான், ஆதி - யாவர்க்கும் முதல்வன், தன்-தனது, கழலே - திருவடியையே, சேரும் - அடைந்து, வண்ணம் - வாழும் விதம் எனக்கு - அடியேனுக்கு, அருளிய ஆறு - கிருபைசெய்த விதம், ஆர்-யாவர், பெறுவார் - பெறுதற்குரியவர் ! அச்சோ - (இது என்ன) ஆச்சரியம் !

(க - ரை.) பிறப்பிறப்பென்கிற பெருங்கடலின் சுழியிற் சிக்குண்டுதடு மாறி சிற்றின்ப மதிகரித்து மாதரது கலவியில் விழப்போகின்ற அடியேனை பெண்பாகனுகிய சிவபெருமான் தனது திருவடியைச் சேர்ந்து உய்யும் விதம் எனக்கு அருள் செய்ததுபோல இனி யாவர் அருள்செய்யப்பொறுவார் !

(வி - ரை.) அணியிழையார் - திருவாபரணமணிந்த பெண்கள். கலவி-சேர்தல், (புணர்ச்சி) கூறு - பாகம். (அ)

செம்மைநலமறியாதசிதடரொடுந்திரிவேனை
மும்மைமலமறுவித்துமுதலாயமுதல்வன்றா
னம்மையுமோர்பொருளாக்கிநாய்சிவிகையேற்றுவித்த
வம்மையெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) செம்மை - நன்மையாகிய, நலம்-நன்மார்க்கத்தை, அறியாத - தெரியாத, சிதடரொடும் - மூடர்களோடும், திரிவேனை - சேர்ந்து திரிகின்ற வனுகிய அடியேனை, மும்மை மலம் - மும்மலங்களையும், அறுவித்து - அறப்பண்ணி, முதல் ஆய - முற்பொருளாகிய, முதல்வன் - யாவர்க்குந்தலைவன், நம்மையும் - அடியேனையும், ஓர் - ஒரு, பொருள் ஆக்கி - மதித்து, நாய் - நாயினுங்கடையேனுகிய அடியேனை, சிவிகை-சிவிகையில், ஏற்றுவித்த-ஏறச்செய்த, அம்மை - அழகை, எனக்கு - அடியேனுக்கு, அருளிய ஆறு - கிருபைசெய்தவிதம், ஆர் - யாவர், பெறுவார்-பெறுதற்குரியவர் ! அச்சோ-(இது என்ன) ஆச்சரியம் ! எ - று.

(க - ரை.) நன்மையாகிய நன்னெறியை அறியாத அறிவிலாக் கீழ்மக்களோடு சேர்ந்து திரிகின்ற அடியேனை, இறைவனுகிய சிவபெருமான் என்னையும் ஓர்பொருட்படுத்தி எனது மும்மலங்களையும் சேதித்து, நாயைசிவிகையிலேற்றிவைத்ததுபோல் உயர்ந்த பதவியை எனக்குக் கொடுத்தருள் செய்து ஆண்டருளினவாறுயாவர் அருள்செய்யப்பெறுவர் ! அச்சோ ! என்பது.

(வி - ரை.) செம்மை நலம் என்றது-மிகுநலம் என்றபடி. சிதடர்-மூடர். அம்மை - இங்கு முத்தி வீட்டைக்குறித்து. (௯)

* செத்திடமும்பிறந்திடமுஞ்சாகாமலிருந்திடமு
மித்துணையுமறியாதாரறியுமறிவெவ்வறிவோ
வொத்தநிலத்தொத்தபொருளொருபொருளின்பெரும்பயனை
யத்தனெனக்கருளியவாறார்பெறுவாரச்சோவே.

(ப - ரை.) செத்திடமும் - சாதற் கேதுவாயுள்ள தன்மையும், பிறந்திடமும் - பிறத்தற் கேதுவாயுள்ள தன்மையும், சாகாமல் - இறத்தலுக் கேதுவற்ற, இருந்திடமும் - தன்மையும், இத்துணையும் - (ஆகிய) இத்தகையவற்றையும், அறியாதார் - தெரியாத தன்மையையடைந்தவர், அறியும் - (உத்தமர்) தெருந்துகொள்ளத்தகுந்த, அறிவு - (அம்மெய்) அறிவு, எவ்வறிவோ - எத்தன்மையானவறிவோ, ஒத்த - யாவருங்கூடிவாழும்படியான, நிலத்து - இப்பூலோகத்தின்கண்ணே, ஒத்த - சேர்ந்து வந்த, பொருள் - யாவராலுந் தெரிந்து கொள்ளப்படாத பொருள், ஒருபொருளின் - அத்தகைய உபதேசப் பொருளின், பெரும் பயனை - அதனது அரிய அனுபவப்பயனை, அத்தன் - (திருப்பெருந்துறையின்கண் குருந்த மரத்தினடியிலெழுந்தருளிய சிவபெருமானாகிய) எனது தந்தை, எனக்கு - (தொண்டனாகிய) அடியேனுக்கு, அருளிய - கிருபைசெய்து உபதேசித்த, ஆறு-வண்ணம், ஆர் - (இனி எவர்) பெறுவார் - பெறுதற்குரியவர்! அச்சோ - (இது என்ன) ஆச்சரியம்! எ - று.

(க. ரை,) திவ்விய க்ஷேத்திரமாகிய திருப்பெருந்துறைப்பதியின்கண் குருந்த மரத்தினடியின்கீழ் குருமூர்த்தமா யெழுந்தருளியிருந்து அடியேனது பிறப்பிறப்பென்னுந் தளையைச் சேதித்து அடிமையாக்கி நிருவிகற்ப சமாதி நிலையினிலிருக்கச்செய்து, அப்பொருளினுண்மையை அடியேனுக்கு உபதேசித்தருளிய வண்ணம், இனியாவர் செய்யப்பெறுவர் (இது என்ன) ஆச்சரியம்! என்பது.

(வி - ரை.) செத்திட முதலியன நிருவிகற்ப சமாதியிலிருந்த அவசரம். அறியுமறிவு என்பது - தற்போதமுள்ளிடாது அருட்போதத்தாலறிந்தவறிவு. ஒத்த நிலமாவது - சகலகேவல மற்றவிடம். ஒருபொருள் என்பது - ஆசாரியர் கிருபையுட னுபதேசித்தவுண்மைப் பொருள். இத்தகைய வுபதேசித்தனவாகியவத்தின் அனுபவ வுண்மையினை யவரவரே யறிவாரல்லது வேறு ஒருவர் அறியாரென்பார். அப்பொருளின் பெரும்பயனை—ஆர் பெறுவார்! இது அச்சரியம் என்று கூறினார். (௧௦)

திருவாசகம் மூலமும் உரையும் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

* இத்திருப்பாடலைப் புராதன ஏட்டுப் பிரதியிலிருக்கக் கண்டெடுத்துச் சேர்த்தச்சிடப்பட்டது. இதை வெள்ளிப்பாட லென்பார் சிலர்.